Tamil Hymns

An eBook of Tamil Hymns

TAMIL HYMNS

An eBook Of Tamil Hymns

www.TamilHymns.com

Tamil Hymns

INDEX

1. அக்கினி அக்கினி எழுப்புதல்
2. அகிலத்தையும் ஆகாயத்தையும்
3. அகோர கஸ்தி பட்டோராய்
4. அகோர காற்றடித்ததே
5. அக்கினி அபிஷேகம் ஈந்திடும்
6. அக்கினி காற்றே தேற்றரவாளனே
7. அக்கினி நெருப்பாய் இறங்கி வாரும்
8. அக்கினியின் தேவன்
9. அசட்டை பண்ணாதே அவித்து
10. அசதிக்கொள்ளாதிருங்கள்
11. அசைவாடும் ஆவியே
12. அஞ்சாதிரு என் நெஞ்சமே
13. அடிமை நான் ஆண்டவரே என்னை
14. அடைக்கலப் பாறையான இயேசுவே
15. அடியார் வேண்டல் கேளும் இயேசுவே
16. அடியேன் மனது வாக்கும்
17. அடைக்கலமே உமதடிமை நானே
18. அடைக்கலம் அடைக்கலமே இயேசுநாதா
19. அதி சீக்கிரத்தில் நீங்கிவிடும்
20. அதிமங்கல காரணனே
21. அதிகாலை இயேசு வந்து
22. அதிகாலை தினம் தேடியே
23. அதிகாலை நேரம் (அரசாளும் தெய்வம்)
24. அதிகாலை ஸ்தோத்திர பலி
25. அதிகாலையிலுமைத் தேடுவேன் முழு
26. அதிகாலையில் உம் திருமுகம் தேடி
27. அதிகாலையில் சூரியனை பார்க்கையிலே
28. அதிகாலையில் பாலனை தேடி
29. அதிசயங்கள் செய்கிறவர் நம்
30. அதிசயங்களை எல்லா இடமும் செய்யும்
31. அதிசயமான ஒளிமய நாடாம்
32. அதிசயம் அற்புதம் உம் மகா அன்பு
33. அதிசயம் செய்வார் தேவன்
34. அதிசீக்கிரத்தில் நீங்கிவிடும்
35. அதோ ஓர் ஜீவ வாசலே
36. அத்திமரம் துளிர் விடாமற் போனாலும்
37. அத்திமரம் போல் எத்தனை பேர்கள்
38. அந்தகார வல்லமைகளை
39. அந்த நாள் இன்ப இன்ப இன்ப நாள்
40. அந்த நாள் நெருங்கிடுதே
41. அந்தப்பக்கம் என்னை அழைக்கிறார்கள்
42. அந்தோ கல்வாரியில் அருமை
43. அநந்த கோடி கூட்டத்தார்
44. அநாதி சிநேகத்தால்
45. அநாதி ஸ்நேகம்
46. அநாதி (அனாதி) தேவன் உன் அடைக்கலமே
47. அநாதி (அனாதி)யான கர்த்தரே
48. அந்த நாள் பாக்கிய நாள்
49. அபிஷேக நாதா
50. அப்பா தயாள குணாநந்த
51. அப்பா அல்பா ஒமெகா புகழ்
52. அப்பா உந்தன் பாதம்
53. அப்பா உம் கிருபைகளால்
54. அப்பா உம் சமுகத்தில் எப்போதும்
55. அப்பா உம்மை நேசிக்கிறேன்
56. அப்பா என்னை முழுவதும் அர்ப்பணி
57. அப்பா நான் உம்மைப் பார்க்கிறேன்
58. அப்பா இயேசு நீங்க வந்தால்
59. அப்பா பிதாவே அன்பான தேவா
60. அப்பா பிதாவே கொஞ்சம் பாருங்க
61. அப்பா வீட்டில் எப்போதும்
62. அப்பானு கூப்பிடத்தான் ஆசை
63. அபிஷேகம் என் தலைமேலே
64. அபிஷேகியும் தேவா அபிஷேகியும்
65. அமர்ந்திருப்பேன் அருகினிலே
66. அமலா தயாபரா அருள்கூர் ஐயா
67. அமைதி அன்பின் ஸ்வாமியே
68. அரசனைக் காணமலிருப்போமோ
69. அரணும் கோட்டையும்
70. அரியணையில் ராஜாவாக வாழ்பவரே
71. அரியணையில் வீற்றிருப்பவரே உமக்கே
72. அரபிக்கடல் வற்றினாலும்
73. அருவிகள் ஆயிரமாய்
74. அருளின் ஒளியைக் கண்டார்

Tamil Hymns

75. அருளே பொருளே ஆரணமே
76. அருள் ஏராமாய் பெய்யும்
77. அருள் நிறைந்தவர்
78. அருள் மாரி எங்குமாக
79. அருள்நாதா நம்பி வந்தேன்
80. அரூபியே அரூப சொரூபியே எமை
81. அர்ப்பணிக்கின்றேன்
82. அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்
83. அலங்கார வாசலாலே
84. அலையாலையாய் பாய்ந்து வரும்
85. அல்லேலுயா தேவ பிரசன்னம்
86. அல்லேலூயா அல்லேலூயா என்
87. அல்லேலூயா இப்போது போர்
88. அல்லேலூயா அல்லேலூயா
89. அல்லேலூயா ஆ மாந்தரே
90. அல்லேலூயா ஆனந்தமே
91. அல்லேலூயா என் ஆத்துமாவே
92. அல்லேலூயா கர்த்தரையே
93. அல்லேலூயா துதி உமக்கே
94. அல்லேலூயா துதிமகிமை
95. அல்லேலூயா கீதம் பாடுவேன்
96. அல்லேலூயா நமதாண்டவரை
97. அல்லேலூயா பாடுவோம்
98. அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
99. அல்லேலூயா தேவனுக்கே
100. அவரே என்னை என்றும் காண்பவர்
101. அவர் எந்தன் சங்கீதமானவர்
102. அவர் அற்புதமானவரே
103. அவர் அற்புதர் என்றனரே
104. அழகானவர்
105. அழகாய் நிற்கும் யார் இவர்கள்
106. அழிந்து போகின்ற ஆத்துமாக்களை
107. அழைக்கிறார் அழைக்கிறார் அன்பாய்
108. அழைக்கிறார் அழைக்கிறார் இதோ
109. அழைத்தீரே இயேசுவே
110. அழைத்தீரே ஏசுவே
111. அழைப்பின் குரல் கேட்டேன்
112. அள்ள அள்ள குறையாத அன்பு
113. அறுப்பு மிகுதி ராஜாவே
114. அறுவடையோ மிகுதி ஆட்களோ
115. அற்ப வாழ்வை வாஞ்சியாமல்
116. அற்புத அன்பிதே பொற்பரன் இயேசுவே
117. அற்புத இயேசு ராஜனே உத்தம
118. அற்புத நட்சத்திரம்
119. அற்புத ஜீவியம்
120. அற்புதங்கள் செய்பவர்
121. அற்புதர் அற்புதர் அற்புதர் அற்புதர்
122. அனந்த ஞான சொரூபா
123. அனுக்ரக வார்த்தையோடே
124. அனுதினமும் உன்னில் நான் வளர்ந்திடவே
125. அனுப்பும் தேவா உம் ஆவியினை
126. அனைத்து சமயத்து மெய்ப்பொருள்
127. அனைத்தையும் அருளிடும்
128. அனைத்தையும் செய்து முடிக்கும்
129. அன்பர் இயேசுவின் அன்புஅது
130. அன்பரின் நேசம் பெரிதே
131. அன்பான இயேசு என்னைத் தொட்டாரே
132. அன்பரென் நேசரே உம்மண்டையில்
133. அன்பில் என்னை பரிசுத்தனாக்க
134. அன்பினால் படைத்தேன்
135. அன்பின் உருவம் ஆண்டவர்
136. அன்பின் சமூகமே இறை
137. அன்பின் தெய்வம் இயேசு ஆறுதல்
138. அன்பின் தெய்வமே என்னை
139. அன்பின் தேவன் இயேசு
140. அன்பின் தேவன் ஏசு
141. அன்பின் தேவன் ஆண்டவர்
142. அன்பின் முகத்தை அன்று நான் கண்டேன்
143. அன்பின் ஆண்டவரே
144. அன்பின் தேவ நற்கருணையிலே
145. அன்பின் தேவன் இயேசு
146. அன்பு கூருவேன் இன்னும் அதிகமாய்
147. அன்பு கூருவோம்
148. அன்புருவாம் எம் ஆண்டவா
149. அன்புள்ள இயேசையா
150. அன்புள்ள நேசர் இயேசு எனக்கெ
151. அன்பே அன்பே அன்பே
152. அன்பே என் இயேசுவே ஆருயிரே
153. அன்பே கல்வாரி அன்பே
154. அன்பே பிரதானம்
155. அன்பே விடாமல் சேர்த்துக் கொண்டீர்
156. அன்போடு எம்மைப் போஷிக்கும்
157. அன்று ஒரு நாளில் இயேசு பசியாய் வந்தார்
158. அன்னை அன்பிலும் விலை

Tamil Hymns

159. ஆ அம்பர உம்பர மும் புகழுந்திரு
160. ஆ இயேசுவே நான் பூமியில்
161. ஆ இயேசுவே உம்மாலே
162. ஆ இயேசுவே நீர்
163. ஆ இன்ப இல்லமே
164. ஆ என்னில் நூறு வாயும் நாவும்
165. ஆ கர்த்தாவே உம் கிரியை
166. ஆகமங்கள் புகழ் வேதா நமோ நமோ
167. ஆ கர்த்தாவே தாழ்மையாக
168. ஆகாதது எதுவுமில்ல உம்மால்
169. ஆ சகோதரர் ஒன்றாய்
170. ஆ பாக்கிய தெய்வ பக்தரே
171. ஆ மேசியாவே வாரும்
172. ஆச்சரியமே அதிசயமே ஆண்டவர்
173. ஆசீர்வதிக்கும் இயேசு உன்னை
174. ஆசீர்வதிக்கும் இயேசு நம்மை
175. ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்தம் மிகவே
176. ஆசீர்வாத மழை பொழியும் தேவா
177. ஆசை மணாளனே ஆமேன்
178. ஆட்கொண்ட தெய்வம் திருப்பாதம் அமர்ந்து
179. ஆணிகள் பாய்ந்த கரங்களை
180. ஆண்டவரே ஆராதனை ஆவியோடு
181. ஆண்டவரே உம் பாதம் சரணடைந்தேன்
182. ஆண்டவரை எக்காலமும் போற்றிடுவேன்
183. ஆண்டவரே என் ஆண்டவரே
184. ஆண்டவர் ஆளுகை செய்கின்றார்
185. ஆண்டவர் எனக்காய் யாவையும்
186. ஆண்டவர் நம் இயேசுவை ஆயிரம்
187. ஆண்டவர் படைத்த வெற்றியின் நாளிது
188. ஆண்டவா மேலோகில்
189. ஆண்டவா பிரசன்னமாகி
190. ஆதாரம் நீ தான் ஐயா என்துரையே
191. ஆதாரம் நீர் தான் ஐயா
192. ஆதித் திரு வார்த்தை திவ்விய
193. ஆதிபன் பிறந்தார் அமலாதிபன் பிறந்தனரே
194. ஆதிபிதாக் குமாரன் ஆவி திரியேகர்க்கு
195. ஆதியாகமம் யாத்திராகமம்
196. ஆதியில் வார்த்தையாக இருந்த
197. ஆதியில் இருளை
198. ஆதியும் அந்தமுமானவரே அல்பா ஒமெகா
199. ஆதியும் அந்தமுமானவரே அதிசயமானவரே
200. ஆதியும் நீரே அந்தமும் நீரே மாறிடா
201. ஆத்தும ஆதாயம் செய்குவோமே
202. ஆத்துமமே என் முழு உள்ளமே
203. ஆத்மாக்களுக்காய் செலவு பண்ணவும்
204. ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய் நேசரை
205. ஆத்துமாவே நீ துதித்திடுவாய்
206. ஆத்துமாவே ஸ்தோத்தரி முழு
207. ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றதே
208. ஆத்துமாக்கள் மேய்ப்பரே
209. ஆத்மமே உன் ஆண்டவரின்
210. ஆபிரகாம் தேவன் ஈசாக்கின் தேவன்
211. ஆபிரகாமின் தேவன் ஈசாக்கின் தேவன்
212. ஆபிரகாமின் தேவனே
213. ஆபிரகாமை ஆசீர்வதித்த ஆண்டவா
214. ஆமென் அல்லேலூயா மகத்துவத்
215. ஆயன் இயேசு கூட இருக்க எனக்கு
216. ஆயிரம் நாவுகள் இருந்தாலும் போதாது
217. ஆயிரம் நாவுகள் போதாதே
218. ஆயிரம் ஆயிரம் பாடல்களை
219. ஆயிரம் ஆண்டுகள் கழிந்தாலும்
220. ஆயிரம் வருட அரசாட்சியே
221. ஆயிரம் ஸதோத்திரமே
222. ஆராதனை ஆராதனை அப்பா என்
223. ஆராதனை ஆராதனை அல்லேலூயா
224. ஆராதனை ஆராதனை ஆவியோடு
225. ஆரவாரம் ஆர்ப்பாட்டம்
226. ஆராதனை ஆராதனை துதி
227. ஆராதனை ஆராதனை வல்லவரே
228. ஆராதனை இந்த வேளை ஆண்டவரை
229. ஆராதனை உமக்குத்தான் அப்பா அப்பா
230. ஆராதனை சுகம் தரும்
231. ஆராதனை செய்கின்றேன் என் இயேசப்பா
232. ஆராதனை செய்கின்றோம் உம்மை
233. ஆராதனை செய்யும் நேரம்
234. ஆராதனை தேவனே ஆராதனை இயேசுவே
235. ஆராதனை நாயகன் நீரே
236. ஆராதனை நாயகரே உம்மை
237. ஆராதனைக்கு தகுதியான தெய்வம்
238. ஆராதனைக்குரியவரே அபிஷேக
239. ஆராதனைக்குரியவரே உம்மை
240. ஆராதிக்க உம்மிடம் வந்தேன்
241. ஆராதிக்க உம்மை ஆராதிக்க இன்று
242. ஆராதிக்கக் கூடினோம் ஆர்ப்பரித்துப் பாடி

Tamil Hymns

243. ஆராதிக்க தெரிந்தெடுத்தீர் கிருபையாக
244. ஆராதிக்க வெட்கப்படமாட்டேன்
245. ஆராதிக்கிறேன் கும்பிட்டாராதிக்கிறேன்
246. ஆராதிக்கின்றோம் உம்மை ஆராதிக்கின்
247. ஆராதனைக்குள் வாசம் செய்யும்
248. ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்
249. ஆராதிப்பேன் ஆராதிப்பேன்
250. ஆராதிப்பேன் நான் ஆத்ம மணாளன் என்
251. ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன் ஆனந்த
252. ஆராதிப்பேன் நான் பாடல் பாடி ஆட்டம் ஆடி
253. ஆராதிப்போம் இயேசுராஜனை
254. ஆராய்ந்து பாரும் கர்த்தரே
255. ஆராரோ பாடுங்கள்
256. ஆரிரரோ சொல்லிப் பாடுங்கள்
257. ஆரிரோ பாலகா
258. ஆரிவர் ஆராரோ கண்மணி
259. ஆரோக்கியம் ஆரோக்கியம்
260. ஆர் இவர் ஆராரோ
261. ஆர் இவர் ஆரோ ஆர் இவர் ஆரோ
262. ஆர்ப்பரிப்போம் நல்
263. ஆவலாய் இருக்கின்றார் கருணைகாட்ட
264. ஆவி உடல் பொருள் அத்தனையும்
265. ஆவி அனலுள்ளதாய் அவியாமல்
266. ஆவியான எங்கள் அன்பு தெய்வமே
267. ஆவியானவரே அன்பின் ஆவியானவரே
268. ஆவியானவரே அன்பு நேசரே
269. ஆவியானவரே அனலாய் இறங்கிடுமே
270. ஆவியானவரே ஆவியானவரே பரிசுத்த
271. ஆவியானவரே உம்மை வாஞ்சிக்கிறேன்
272. ஆவியானவர் அச்சாரமாய் எனக்குள்
273. ஆவியை அருளுமே சுவாமீ
274. ஆவியை மழைபோலே யூற்றும்
275. ஆவியோடும் உண்மையோடும் ஆண்டவரை
276. ஆழ்ந்த சேற்றினில் அகப்பட்ட
277. ஆளுகை செய்பவரே அபிஷேகம் தருபவரே
278. ஆளுகை செய்யும் ஆவியானவரே
279. ஆறுதலின் தெய்வமே உம்முடைய
280. ஆறுதலின் மகனாம்
281. ஆனந்த கீதங்கள்
282. ஆனந்த கீதங்கள் பாடுங்கள் வாழ்த்துங்கள்
283. ஆனந்த துதி ஒலி கேட்கும்
284. ஆனந்தபாடல்கள் பாடிடுவேன்
285. ஆனந்த பாடல்கள் பாடிடுவேன் ஆர்ப்பரித்து
286. ஆனந்த மகிழ்ச்சி அப்பா சமூகத்தில்
287. ஆனந்த மழையில் என் இதயம் நனைய
288. ஆனந்தமாக அன்பரைப் பாடுவேன்
289. ஆனந்தமாய் இன்பக் கானான் ஏகிடுவேன்
290. ஆனந்தமாய் நம் தேவனை கீதங்கள்
291. ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே
292. ஆனந்தமே பரமானந்தமே
293. ஆனந்தமே ஜெயா ஜெயா
294. ஆனந்தம் எனக்கு கிடைத்தது
295. ஆனந்தம் கொள்ளுவேன் அன்பர் இயேசுவில்
296. ஆனந்தம் பொங்கிடும் நன்னாளிது
297. ஆல்பா ஒமேகா ஆதி அந்தமே
298. ஆஹா என்ன இன்பம் பரலோக இன்பம்
299. இகத்தின் துக்கம் துன்பம்
300. இகபரமதிலே அகபரன் அவரை
301. இகமனுதேவா நமஸ்கரிப்பேன்
302. இசைமழையில்
303. இடுக்கமான வாசல் வழியே
304. இடைவிடா நன்றி உமக்குத்தானே
305. இணையில்லா நாமம் இயேசுவின் நாமம்
306. இதயங்கள் மகிழட்டும்
307. இதயம் நன்றியுடன்
308. இத்தரை மாந்தரே நித்திரை தெளிவீர்
309. இது அதிசயமே எனக்கானந்தமே
310. இது உலர்ந்த எலும்புகள் உயிர்
311. இது சிந்திக்கும் காலம்
312. இதுவரை செய்த செயல்களுக்காக
313. இதுவரை நடத்தி குறைவின்றி காத்து
314. இது விதைக்கின்ற காலமல்லவா
315. இதோ ஒரு திறந்த வாசல்
316. இதோ மனுஷரின் மத்தியில்
317. இந்த அருள் காலத்தில்
318. இந்த ஆண்டின் நன்மை யாவும்
319. இந்தக் கல்லின் மேல் இயேசு கிறிஸ்து
320. இந்த நாளை நான் சமர்ப்பிப்பேன்
321. இந்த மங்களம் செழிக்கவே
322. இந்த மண்ணில் வந்து மன்னன் இயேசு
323. இந்த மட்டும் காத்த எங்கள் தேவனுக்கு
324. இந்த மட்டும் காத்த எபிநேசரே
325. இந்தியாவில் இயேசு நாமம் இன்றே
326. இந்தியாவில் இயேசு நாமம் முழங்கட்டுமே

Tamil Hymns

327. இந்தியாவை அரசாளும் இயேசுவே
328. இந்நாளில் இயேசுநாதர் உயிர்த்தார்
329. இந்நாள் ரட்சிப்புக் கேற்ற நல் நாள்
330. இப்போ நாம் பெத்லெகேம்
331. இமைப்பொழுதும் என்னை கைவிடமாட்டீர்
332. இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்
333. இம்மட்டும் கைவிடா தேவன்
334. இம்மட்டும் ஜீவன் தந்த
335. இம்மானுவேலின் இரத்தத்தால்
336. இயேசப்பா உங்க நாமத்தில்
337. இயேசப்பா உம்மைத் தேடி வந்தேனே
338. இயேசப்பா நானும் வருகிறேன்
339. இயேசு அழைக்கிறார்
340. இயேசு அற்புதமானவரே
341. இயேசு இன்பமானவர் இயேசு
342. இயேசு எனக்கு ஜீவன் தந்தாரே
343. இயேசு எங்கள் மேய்ப்பர் கண்ணீர்
344. இயேசு எந்தன் மேய்ப்பர்
345. இயேசு எந்தன் நேசரே கண்டேன் வேத
346. இயேசு எந்தன் வாழ்வின்
347. இயேசு என் அஸ்திபாரம்
348. இயேசு என் பரிகாரி இன்ப இயேசு
349. இயேசு என் வாழ்வினில் இன்பம்
350. இயேசு என் வாழ்வில் வந்ததினால்
351. இயேசு என் தலைவர் ஜீவனின் அதிபர்
352. இயேசு என்தன் நேசரே
353. இயேசு என்ற திருநாமத்திற்கு
354. இயேசு என்னில் வந்தார் என்
355. இயேசு என்னும் நாமத்தில்
356. இயேசு என்னோடு இருப்பத நெனைச்சிட்டா
357. இயேசு கற்பித்தார்
358. இயேசு கிறிஸ்து ஆண்டவர்
359. இயேசுகிறிஸ்து என் ஜீவன்
360. இயேசு கிறிஸ்து மாறாதவரே
361. இயேசு கிறிஸ்துவின் அன்பு
362. இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்
363. இயேசு கிறிஸ்துவின் நாமமிதே
364. இயேசு கூட வருவார் எல்லாவித
365. இயேசு சுமந்து கொண்டாரே நான்
366. இயேசு தானே அதிசய தெய்வம்
367. இயேசு திருநாமம் ஈய உயர்
368. இயேசு நம்மோடு இன்று ஆனந்தம்
369. இயேசு நல்லவர் இயேசு வல்லவர்
370. இயேசு நல்லவர் இயேசு வல்லவர்
371. இயேசு நல்லவர் நம் இயேசு பெரியவர்
372. இயேசு நாதா எந்தன் நேசா
373. இயேசு நாமமே ஜெய நாமமே
374. இயேசு நாமம் உயர்த்திடுவோம்
375. இயேசு நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம்
376. இயேசு நாமம் எந்தன் வாழ்வில் போதுமே
377. இயேசு நாமம் சொல்ல சொல்ல
378. இயேசு நாமம் போற்றித் துதி அல்லேலூயா
379. இயேசு நான் நிற்கும் கன்மலையே
380. இயேசு நீங்க இருக்கையிலே
381. இயேசு நேசிக்கிறார்
382. இயேசு நேசிக்கிறார் அவர்
383. இயேசு பாதம் எனக்குப் போதும்
384. இயேசு பாலனாய் பிறந்தார்
385. இயேசு பாலகா என்
386. இயேசு பிறந்தாரே எந்தன் உள்ளத்திலே
387. இயேசு பிறந்தார் பெத்தலகேம் ஊரிலே
388. இயேசு பெரியவர் நம் இயேசு பெரியவர்
389. இயேசு போதுமே எனக்கு போதுமே
390. இயேசு போதுமே என்னை நேசிக்க
391. இயேசு மகாராஜனே
392. இயேசு மானிடனாய் பிறந்தார்
393. இயேசு ரட்சகர் பெயரைச் சொன்னால்
394. இயேசு இரட்சகரின் பிறந்த நாள் இதுவே
395. இயேசு ராசா எனை ஆளும் நேசா
396. இயேசு ராஜனின் திருவடிக்கு
397. இயேசு ராஜனே நேசிக்கிறேன் உம்மையே
398. இயேசு ராஜா உம் இதயத் துடிப்பை
399. இயேசு ராஜா உம் நாமத்தை
400. இயேசு ராஜா ஏழை என் உள்ளம்
401. இயேசு ராஜா நன்றி என்று சொல்லுகிறேன்
402. இயேசு ராஜா முன்னே செல்கிறார்
403. இயேசு ராஜா வந்திருக்கிறார்
404. இயேசு இராஜனே
405. இயேசு ஜீவன் தந்தாரே பாவத்தை
406. இயேசு வாழ்வு கொடுக்கிறார்
407. இயேசுவாலே பிடிக்கப்பட்டவன்
408. இயேசுவின் அன்பினை அறிவித்திட
409. இயேசுவின் அன்பை தியானிக்கையில்
410. இயேசுவின் இரண்டாம் வருகை

411. இயேசுவின் இரத்தத்தாலும் தேவனின்
412. இயேசுவின் கரங்களைப் பற்றிக்
413. இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு
414. இயேசுவின் கைகள் காக்க
415. இயேசுவின் சமூகம் எத்தனை ஆனந்தம்
416. இயேசுவின் சிந்தையை தரிப்போம்
417. இயேசுவின் நாமத்தில் நாம் கூடிடும்
418. இயேசுவின் நாமத்தினால் ஒரு அற்புதம்
419. இயேசுவின் நாமமே கிறிஸ்தேசுவின்
420. இயேசுவின் நாமமே திருநாமம்
421. இயேசுவின் நாமம் அதிசயமா
422. இயேசுவின் நாமம் அன்பின் நாமம்
423. இயேசுவின் நாமம் எல்லாவற்றிற்கும்
424. இயேசுவின் நாமம் இனிதான நாமம்
425. இயேசுவின் நாமம் ஓங்கிடவே நேசமுடன்
426. இயேசுவின் பிள்ளைகள் நாங்கள்
427. இயேசுவின் பின்னால் நான் செல்வேன்
428. இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்
429. இயேசுவின் மார்பினில் சாருவேனே
430. இயேசுவின் வாக்கு நித்தியமாமே
431. இயேசுவின் ரத்தம் வல்லமையுள்ளது
432. இயேசுவுக்காய் தொண்டு செய்திடவே
433. இயேசுவுக்கு சொந்தமான பிள்ளைகள்
434. இயேசுவுக்கே ஒப்புவித்தேன் யாவையும்
435. இயேசுவே ஆண்டவர் இயேசுவே
436. இயேசுவே ஆண்டவர்
437. இயேசுவே உந்தன் மாசில்லா இரத்தம்
438. இயேசுவே உம் அருகினிலே
439. இயேசுவே உம்மை உயர்த்திடுவேன்
440. இயேசுவே உம்மைப்போலாக வாஞ்சிக்குதே
441. இயேசுவே உம் நாமத்தினால்
442. இயேசுவே உம்மை தியானித்தால்
443. இயேசுவே உம்மை பாடுவேன்
444. இயேசுவே உம்மையல்லாமல்
445. இயேசுவே ஒளி வீசும்
446. இயேசுவே கல்வாரியில் என்னை
447. இயேசுவே கிருபாசனப்பதியே
448. இயேசுவே தாவீதின் குமாரனே
449. இயேசுவே என் பிரியமே
450. இயேசுவே என் தெய்வமே
451. இயேசுவே தேவன் என் அன்பரே
452. இயேசுவே வழி சத்தியம் ஜீவன்
453. இயேசுவே நீர் என்னை விட்டால்
454. இயேசுவை நம்பிப் பற்றிக் கொண்டேன்
455. இயேசுவை நம்பி விசுவாசிப்பவன்
456. இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை
457. இயேசுவை நம்பு
458. இயேசுவை நாம் எங்கே காணலாம்
459. இயேசுவை நோக்கிடு நோக்கிப் பார்த்திடு
460. இயேசுவைப் பின்பற்றும் மனிதர்கள் யார்
461. இயேசுவைப்போல் அழகுள்ளோர்
462. இயேசுவைப்போல் என்னை மாற்றும்
463. இயேசுவைப் போல் ஒரு தெய்வம் இல்லை
464. இயேசுவையே துதிசெய் நீ மனமே
465. இரக்கங்களின் தகப்பன் இயேசு
466. இரக்கமுள்ள மீட்பரே
467. இரக்கம் நிறைந்த தெய்வமே
468. இரங்குமே என் இயேசுவே இரக்கத்தின்
469. இரங்கும் இரங்கும் கருணைவாரி
470. இரட்சணிய கொம்பு இயேசு எந்தன்
471. இரட்சண்யம் மகிமை துதிகனம் வல்லமை
472. இரட்சா பெருமானே பாரும்
473. இரட்டிப்பான நன்மைகள் தந்திட
474. இரண்டாயிரம் ஆண்டு ஆகியும்
475. இரத்தக் கோட்டைக்குள்ளே
476. இரத்தத்தால் ஜெயம்
477. இரத்தத்தினாலே கழுவப்பட்டேன்
478. இரத்தம் காயம் குத்தும்
479. இரத்தம் ஜெயம் இரத்தம் ஜெயம்
480. இராமுழுதும் பிரயாசப்பட்டேன்
481. இராஜா உம் பிரசன்னம் போதுமையா
482. இராஜா உம் மாளிகையில்
483. இராஜா உம்மைப் பார்க்கணும்
484. இராஜா நீர் செய்த நன்மைகள்
485. இராஜாதி இராஜன்
486. இராஜாதி இராஜாவைக் கொண்டாடுவோம்
487. இருதயம் இயேசுவின் சிங்காசனம்
488. இருள் சூழ்ந்த லோகத்தில்
489. இருள் சூழும் காலம் இனி வருதே
490. இல்ல இல்ல இல்ல இல்ல இல்ல
491. இவரே பெருமான்
492. இளமையை இயேசுவுக்குப் பரிசாக்குவோம்
493. இளைப்பாறுதல் ஈந்திடும் நாடே
494. இவ்வந்தி நேரத்தில் எங்கே

495. இவ்வுலக மக்களிலே அன்பு
496. இளைஞர் நேசா அன்பரே
497. இறந்தோரை வாழவைக்கும் வல்லவர்
498. இறைவனை நம்பியிருக்கிறேன்
499. இறைவனே என்னைக் காக்கின்றார்
500. இனிமை இனிமை இது இனிமை
501. இனியும் உம்மோடு கிட்டிச் சேர
502. இன்ப இயேசு ராஜாவை நான்
503. இன்ப இயேசு
504. இன்ப இயேசுவின் இணையில்லா
505. இன்ப கீதம் துன்ப நேரம்
506. இன்ப நதியே தென்றலே காற்றே
507. இன்பமிதே பேரின்பமிதே இயேசு
508. இன்பம் தந்திடும் இயேசு பிறந்தார்
509. இன்று கண்ட எகிப்தியனை
510. இன்று கிறிஸ்து எழுந்தார்
511. இன்று முதல் நான் உன்னை ஆசீர்வதிப்பேன்
512. இன்றும் என்றும் மாறிடாத இயேசுவே
513. இன்று வரை என்னை நடத்தினீர்
514. இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய்
515. இன்னமும் தாமதமேன் இன்பச்
516. இன்னும் நான் அழியல இன்னும்
517. இன்னோர் ஆண்டு முற்றுமாய்
518. இஸ்ரவேல் என்னும் நாட்டினிலே
519. இஸ்ரவேல் என் ஜனமே என்றும்
520. இஸ்ரவேலின் சேனைகளின் முன் நடந்த
521. இஸ்ரவேலின் துதிகளில் வாசம் செய்யும்
522. இஸ்ரவேலின் துதிகளுக்குள்
523. இஸ்ரவேலின் துதிகள் வாசம்
524. இஸ்ரவேலின் தேவனை
525. இஸ்ரவேலின் ராஜாவே
526. இஸ்ரவேலின் ஜெயபெலமே எங்கள்
527. இஸ்ரவேலே உன்னை காக்கும் தேவன்
528. இஸ்ரவேலே உன்னை எப்படிக்
529. இஸ்ரவேலே கர்த்தரை நம்பு
530. இஸ்ரவேலே பயப்படாதே
531. ஈசாயின் அடி மரமே
532. ஈனலோகத்தில் இயேசு ஏன் பிறந்தார்
533. உங்க ஆவியை அனுப்புங்க
534. உகந்த காணிக்கையாய்
535. உங்க ஊழியம் நான் ஏன் கலங்கணும்
536. உங்க கிருபைதான் என்னை தாங்குகின்றது
537. உங்க நேசம் பெரியது
538. உங்க முகத்தைப் பார்க்கணுமே இயேசையா
539. உங்க வசனம் மனமகிழ்ச்சியா
540. உங்களைப் படைத்தவர் சருவ
541. உங்களையே உங்களையே இயேசு
542. உங்கள் மீது கண்கள் வைத்து
543. உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்
544. உச்சித மோட்ச பட்டணம் போக
545. உடலைக்கொடு உள்ளத்தைக் கொடு
546. உண்மையாய் உம்மை நேசிக்க
547. உதவி வரும் கன்மலை நோக்கிப்
548. உதறித் தள்ளு தூக்கி எறிந்திடு
549. உத்தமமாய் முன் செல்ல
550. உந்தன் ஆசி தாரும்
551. உந்தன் ஆவி எந்தன் உள்ளம்
552. உந்தன் ஆவியை நீர் ஊற்றும்
553. உந்தன் ஏக்கம் விருப்பம் எல்லாம்
554. உந்தன் கிருபைதான் என்னை வாழ
555. உந்தன் சித்தம் போல் நடத்தும்
556. உந்தன் சிநேக வாக்குகள்
557. உந்தன் சுயமதியே நெறி என்று
558. உந்தன் தழும்புகள் என் ஆரோக்கியம்
559. உந்தன் துணையிவரே என்றும்
560. உந்தன் நாமத்தில் எல்லாம் கூடும்
561. உந்தன் நாமம் மேன்மை போல்
562. உந்தன் பிரசன்னத்தால் வழி நடத்தும்
563. உந்தன் வல்லமையால்
564. உமக்காகத் தானே ஐயா
565. உமக்குப் பிரியமானதைச் செய்ய
566. உமக்கு மகிமை தருகிறோம்
567. உம் அருள் பெற இயேசுவே
568. உம் அவதாரம் பாரினில்
569. உம் அன்பால் என்னை நிரப்பும்
570. உம் அன்பு ஒன்றே போதும் யேசப்பா
571. உம் இரத்தமே உம் இரத்தமே சுத்தம்
572. உம் கிருபை தான் என்னைக் கண்டது
573. உம் உண்மை பெரிதே
574. உம் சமூகத்தை வாஞ்சிக்கிறேன்
575. உம் சமூகமே என் பாக்கியமே
576. உம் சமூகம் வந்து நிற்கிறேன் நான்
577. உம் சார்பினில் நடத்தும்
578. உம் சித்தம் செய்வது தான்

Tamil Hymns

579. உம் சித்தம் போல் என்னை என்றும்
580. உம் நாமம் உயரணுமே
581. உம் நாமம் சொல்ல சொல்ல
582. உம் நாமம் பாடணுமே ராஜா
583. உம் நாமம் வாழ்க ராஜா
584. உம் பாதம் பணிந்தேன்
585. உம் பிரசன்னம் நாடி வந்தேன்
586. உம் பிரசன்னம் என்ன ஆனந்தம்
587. உம் பீடத்தை சுற்றி சுற்றி
588. உன் புகழைப் பாடுவது என்
589. உம் ராஜ்யம் வருங்காலை கர்த்தரே
590. உம்மண்டை தேவனே நான் சேரட்டும்
591. உம்மண்டை கர்த்தரே
592. உம்மாலே எல்லாம் கூடும்
593. உம்மாலே தான் என் இயேசுவே
594. உம்மாலே நான் ஒரு சேனைக்குள்
595. உம்மாலே நான் ஒரு சேனைக்குள்
596. உம்மால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை
597. உம்மில் நான் வாழ்கிறேன்
598. உம்முன்னே எனக்கு நிறைவான மகிழ்ச்சி
599. உம்மை அப்பான்னு கூப்பிடத்தான் ஆசை
600. உம்மை அல்லாமல் எனக்கு யாருமுண்டு
601. உம்மை ஆராதிக்க கூடினோம் நல்லவரே
602. உம்மை ஆராதிக்க கூடினோம்
603. உம்மை ஆராதிக்கின்றோம்
604. உம்மை ஆராதிப்பதே என் ஆசை
605. உம்மை உயர்த்தி உயர்த்தி
606. உம்மை உயர்த்திடுவேன் உம்மை
607. உம்மை உயர்த்திடுவேன் (மேலே மேலே)
608. உம்மை என்றும் துதிப்பேன் உள்ளளவும்
609. உம்மைத்தானே நான் முழுஉள்ளத்தோடு
610. உம்மைத்தான் நான் பார்க்கின்றேன்
611. உம்மை துதிப்பேன் நான் உம்மை
612. உம்மை துதிக்கனுமே உம்மை பாடனுமே
613. உம்மை நம்பி உந்தன் பாதம்
614. உம்மை நம்பியிருக்கிறேன் இயேசுவே
615. உம்மை நம்பி வந்தேன் நான் வெட்கப்படல
616. உம்மை நாடித் தேடும் மனிதர்
617. உம்மை நான் போற்றுகிறேன் இறைவா
618. உம்மை நினைக்கும் போதெல்லாம்
619. உம்மை நேசிக்கிறேன் என் இயேசுவே
620. உம்மை நோக்கிப் பார்க்கின்றேன்
621. உம்மை பாடாத நாட்களும் இல்லையே
622. உம்மை பாடாத நாவும்
623. உம்மை பாடாமல் யாரை நான் பாடுவேன்
624. உம்மைப் பிரிந்து வாழ முடியாதையா
625. உம்மை புகழ்ந்து பாடுவது நல்லது
626. உம்மை போல நல்ல தேவன்
627. உம்மைப் போல இந்த உலகிலே
628. உம்மை போல யாருண்டு நன்மை
629. உம்மைப்போல் மாறிட உலகம்
630. உம்மைப் போல் யாருண்டுஎந்தன்
631. உம்மை போற்றி பாடுவோம்
632. உம்மைத் துதிக்கிறோம்
633. உம்மைத் துதிப்பேன்
634. உம்மை மகிமைப் படுத்துகிறேன்
635. உம்மை மறவேன் நான்
636. உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு
637. உம்மையே நம்பியுள்ளோமே
638. உம்மையே நம்புவேன் உண்மையாய்
639. உம்மையே நம்பி வந்த எனக்கு
640. உம்மையே நான் நேசிப்பேன்
641. உம்மோடு செலவிடும் ஒவ்வொரு நிமிடமும்
642. உம்மோடு இருக்கணுமே ஐயா
643. உம்மோடு இருப்பதுதான்
644. உயரமும் உன்னதமுமான
645. உயிரினும் மேலானது
646. உயர்த்துவார் உயர்த்துவார் இயேசு
647. உயிருள்ள திருப்பலியாய்
648. உயிருள்ள நாளெல்லாம் உம்மைப்
649. உயிரோடு எழுந்த இயேசுவே
650. உயிரோடு எழுந்தவரே
651. உயிர்த்தெழுந்தாரே
652. உருகாயோ நெஞ்சமே
653. உருகாதோ நெஞ்சம் அவர்தானே
654. உலகத்தில் இருப்பவனிலும் உங்களில்
655. உலகத்தை வென்று இயேசு உயிர்த்தார்
656. உலகமெல்லாம் எனக்காதாயம் என
657. உலகம் தந்திடும் அன்பு மாயையே
658. உலகம் தராத அன்பை
659. உலகில் பாவப் பாரத்தால் சோரும்
660. உலகில் வந்தார் தெய்வ சுதன்
661. உலகின் வாஞ்சையான
662. உலகின் இரட்சகரே உன்னத குமாரனே

Tamil Hymns

663. உலகின் ஒளியே இயேசுவே அகிலம்
664. உலகின் ஒளியே வாழ்க உயிர்ப்பிக்கும்
665. உலகோர் உன்னைப் பகைத்தாலும்
666. உலர்ந்த எலும்புகள் உயிர்பெற்று எழ
667. உள்ளத்தில் அவர்பால்
668. உள்ளத்தின் மகிழ்ச்சி நீர்தானையா
669. உள்ளமெல்லாம் உருகுதையோ
670. உள்ளம் ஆனந்த கீதத்திலே
671. உள்ளம் எல்லாம் உருகுதய்யா உந்தன்
672. உறக்கம் தெளிவோம்
673. உறைவிடமாய் தெரிந்து கொண்டு
674. உனக்காய் மரித்தேன்
675. உனக்கும் எனக்கும் தேவன் தந்த
676. உனக்குள்ளே இருக்கின்ற உன்
677. உனக்கொத்தாசை வரும் நல் உயர்
678. உனக்கொரு நண்பன் இல்லை என்று
679. உனக்கொருவர் இருக்கிறார் உன்னை
680. உன் தருணம் இதுவென்று உணர்ந்திடுவாய்
681. உன் வாசல் திற சீயோனே
682. உன் வெட்கத்திற்கு பதிலாக
683. உன் நெஞ்சிலே உண்டான விசாரங்களை
684. உன்றன் சுயமதியே
685. உன்னத ஆவியை உந்தனின் பக்தர்க்கு
686. உன்னத சாலேமே என்
687. உன்னத தேவன் உன்னுடன் இருக்க
688. உன்னத தேவன் உன்னை
689. உன்னத தேவன் என்னோடு இருக்க
690. உன்னத தேவனுக்கே மகிமை உலகில்
691. உன்னத தேவனே என் இயேசு ராஜனே
692. உன்னதத்தின் ஆவியை உந்தன்
693. உன்னதத்தின் தூதர்களே
694. உன்னதப் பரமண்டலங்களில் வசிக்கும்
695. உன்னதமானவர் மறைவினிலே
696. உன்னதமானவரின் உயர்
697. உன்னதமானவரின் உயர் மறைவிலிருக்கிறவன்
698. உன்னதம் ஆழம் எங்கேயும்
699. உன்னதரே உம் பாதுகாப்பில் வாழ்கின்றேன்
700. உன்னதரே என் நேசரே உமது
701. உன்னத வீட்டை சீக்கிரம் சென்று
702. உம்மில் பழுது ஒன்றுமில்லை
703. உன்னை அதிசயம் காணச் செய்வேன்
704. உன்னை வாலாக்காமல் இயேசு
705. உன்னை காக்கிறவர் உறங்கார்
706. உன்னைக் காண்கிறார் உன்
707. உன்னைப் பாடாத நாளெல்லாம் வீணே
708. உன்னைத்தான் கேட்கிறேன்
709. உன்னையும் என்னையும்
710. உன்னையே வெறுத்துவிட்டால்
711. ஊதும் தெய்வாவியை புத்துயிர் நிரம்ப
712. ஊற்றப்பட வேண்டுமே உன்னதத்தின் ஆவி
713. ஊற்றிடுமே உம் வல்லமையை
714. ஊற்றுண்ட பாரிமள தைலம்
715. ஊற்றுத் தண்ணீரே எந்தன்
716. ஊற்றுங்கைய்யா பெருமழையாக
717. எக்காலத்தும் கர்த்தர் இயேசுவை
718. எக்காலமும் நான் துதிப்பேன்
719. எக்காள சத்தம் வானில் தொனித்திடவே
720. எக்காள தொனியோடு மானிடரே வாரீர்
721. எக்காளம் ஊதிடுவோம்
722. எகிப்திலிருந்து கானானுக்கு
723. எங்களுக்குள்ளே வாசம் செய்யும்
724. எங்கள் ஆராதனைக்குரியவரே
725. எங்கள் தரிசனத்தை எங்கள் ஊழியத்தில்
726. எங்கள் தேவன் வல்லவரே
727. எங்கள் பிதாவே இயேசு இரட்சகரே
728. எங்கள் ஜெபங்கள் தூபம் போல
729. எங்கு போகிறீர் இயேசு தெய்வமே
730. எங்குமுள்ளோர் யாரும்
731. எங்கும் நிறைந்த தெய்வமே
732. எங்கும் புகழ் யேசு
733. எங்கே சுமந்து போகிறீர்
734. எங்கே ஓடுவேன் பாதகன் ஆனேன்
735. எண்ணி எண்ணி துதிசெய்வாய்
736. எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் தேவா
737. எண்ணில் அடங்கா ஸ்தோத்திரம்
738. எண்ணெய் பூசி காயங்கள் ஆற்றியே
739. எதை நினைத்தும் நீ கலங்காதே மகனே
740. எதைக்குறித்தும் கலக்கம் இல்லப்பா
741. எதையும் தாங்கும் ஓர் இதயம் தாரும்
742. எத்தனை திரள் என் பாவம்
743. எத்தனை நன்மைகள் எனக்குச்
744. எத்தனை நாவால் துதிப்பேன்
745. எத்தனை நன்மை எத்தனை இன்பம்

Tamil Hymns

746. எத்தனை நாவால் பாடுவேன்
747. எத்தனை நாட்கள் செல்லும் இயேசுவின்
748. எத்தனையோ நாமங்கள் தேவனே
749. எந்த நிலையில் நான் இருந்தாலும்
750. எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
751. எந்தன் அன்புள்ள ஆண்டவர்
752. எந்தன் ஆத்துமா உம்மை நாடுது
753. எந்தன் ஆத்துமாவே கர்த்தரை துதி
754. எந்தன் ஆத்ம நேசரே
755. எந்தன் இதய கானம் என்றும் உன்னைப்
756. எந்தன் இயேசு உன்னதத்தில்
757. எந்தன் இயேசு எந்நாளும் என்னை
758. எந்தன் இயேசு எனக்கு நல்லவர்
759. எந்தன் இயேசு கைவிடமாட்டார்
760. எந்தன் யேசு சொந்த யேசு
761. எந்தன் இயேசு வல்லவர்
762. எந்தன் இயேசுவின் அன்பதையே
763. எந்தன் இயேசையா
764. எந்தன் உள்ளத்தில் புது உணர்வு
765. எந்தன் உள்ளம் தங்கும்
766. எந்தன் உள்ளம் புதுக்கவியாலே
767. எந்தன் கர்த்தாவே உம்மை
768. எந்தன் கன்மலை ஆனவரே
769. எந்தன் கோட்டை எந்தன் தஞ்சம்
770. எந்தன் சமுகம் முன்னே செல்லும்
771. எந்தன் தேவனால்
772. எந்தன் மறைவிடமே உமக்கு
773. எந்தன் நண்பனே அட எந்தன் நண்பனே
774. எந்தன் நாவில் புதுப்பாட்டு
775. எந்தன் நெஞ்சமெல்லாம் நன்றி
776. எந்தன் நேசர் இயேசு நாதா
777. எந்தன் வாஞ்சை நீரல்லோ
778. எந்தன் விஸ்வாச ஜீவியத்தில்
779. எந்தன் ஜீவனிலும் மா அருமை
780. என்தன் ஜீவன் இயேசுவே
781. எந்தன் ஜெபவேளை உமைத்தேடி வந்தேன்
782. எந்தன்தந்தை இயேசுவே எனக்காய்
783. எந்நாளுமே துதிப்பாய்
784. எப்பக்கத்திலும் முன்னும் என் பின்னும்
785. எப்படி நான் பாடுவேன்
786. எப்படிப் பாடுவேன் நான்
787. எப்படிப் பாடுவேன் நானே
788. எப்பொழுதும் எவ்வேளையும்
789. எப்போதும் என் முன்னே
790. எப்பொழுது உம் சந்நிதியில்
791. எம் உயர்ந்த வாசஸ்தலமதுவே
792. எரிகோ கோட்டை விழுகுதே
793. எரிகோ நகர் வீதியிலே கள்ளர்
794. எருசலேம் என் ஆலயம் ஆசித்த
795. எலியாவின் தேவன் நம் தேவன்
796. எலியாவின் பலிபீடத்தில்
797. எலியாவின் நாட்கள் இதுவே
798. எல்லா நாமத்திற்க்கும் மிக மேலான
799. எல்லா மகிமைக்கும் பாத்திரரே எல்லா
800. எல்லாமே முடிந்தது என்று (முடிந்ததென்று)
801. எல்லாம் என் இயேசுவே எல்லாம் அவரே
802. எல்லாம் இயேசுவே எனக்கெல்லாமேசுவே
803. எல்லாம் நீரே எல்லாம் நீரே
804. எல்லாம் நீர் தானே இயேசு ராஜனே
805. எல்லாருக்கும் மா உன்னதர்
806. எல்லையில்லா உந்தன் அன்பால்
807. எல்லையற்ற அன்பினாலே என்னை
808. எல்லோரும் கூடியே சங்கீதம் பாடியே
809. எல்ஷடாய் எந்தன் துணை நீரே
810. எல்ஷடாய் என்ற நாமம் உடையவர்
811. எவ்வண்ணமாக கர்த்தரே
812. எழுந்தார் இறைவன்
813. எழுந்து பெத்தேலுக்கு போ
814. எழுப்புதல் அனுப்பும்
815. எழுப்புதல் என் தேசத்திலே என் கண்கள்
816. எழுப்புதலின் நேரமல்லோ இது
817. எழுப்புதலின் வாசனை எங்கும் வீசட்டும்
818. எழுப்புதலே எங்கள் வாஞ்சை
819. எனக்காய் கருதுவார் என்னை போஷிப்பார்
820. எனக்கின்பம் ஏதெனக் கேளு
821. எனக்காய் ஜீவன் விட்டவரே
822. எனக்கு உம்ம விட்டாயாரும் இல்லப்பா
823. எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம்
824. எனக்கேன் இனி பயமே எந்தன்
825. எனக்கொத்தாசை வரும்
826. எனக்கொரு ஆசையுண்டு
827. எனக்கொரு நேசர் உண்டு
828. எனது உள்ளம் யாருக்கு தெரியும்
829. எனது கர்த்தரின் ராஜரீக நாள்

Tamil Hymns

830. எனது தலைவன் இயேசுராஜன்
831. எனது மணவாளனே என் இதய ஏக்கமே
832. என் அருள் நாதா இயேசுவே
833. என் அன்பரே என் இன்பமே
834. என் அன்பே என் அன்பே என்
835. என் ஆத்தும நேச மேய்ப்பரே
836. என் ஆத்தும நேசர் இயேசுவை
837. என் ஆத்துமாவே கர்த்தரைத் துதி
838. என் ஆத்துமாவே நீ கர்த்தரை ஸ்தோத்தரி
839. என் ஆத்ம நேசரும் நீரே எனக்காக
840. என் ஆத்துமா பாடும்
841. என் ஆத்துமாவும் சரீரமும்
842. என் ஆவி ஆன்மா தேகமும்
843. என் இதயம் யாருக்கு தெரியும்
844. என் இயேசு உன்னைத் தேடுகிறார்
845. என் இயேசு ராஜா ஸ்தோத்திரம்
846. என் இயேசு ராஜாவுக்கே எந்நாளும்
847. என் இயேசு ராஜா சாரோனின் ரோஜா
848. என் இயேசுவால் ஆகாத தொன்றுண்டோ
849. என் இயேசுவே உம்மை அல்லால்
850. என் இயேசுவே நான் என்றும்
851. என் இன்பம் துன்ப நேரம்
852. என் உயிரான இயேசு
853. என் உயிரான உயிரான உயிரான இயேசு
854. என் உயிரே ஆண்டவரைப் போற்று
855. என் உயிரே என் பெலனே
856. என் உள் உறுப்புகள் உண்டாக்கியவர்
857. என் உள்ளமே இளைப்பாறிடு
858. என் உள்ளம் ஏங்குதே உம் அன்பிற்காகவே
859. என் உள்ளம் தேவன்பால்
860. என் ஓசை கேட்கின்றதா இயேசையா
861. என் கிருபை உனக்கு போதும்
862. என் கை உயர்த்தி உம்மை துதித்திடு
863. என் சித்தமல்ல உம் சித்தம் நாதா
864. என் சிறுமையை கண்ணோக்கி பார்த்தவர்
865. என் தகப்பன் நீர்தானையா
866. என் தாயின் கருவிலே நான் உருவான
867. என் தெய்வம் இயேசு
868. என் தேடல் நீ என் தெய்வமே
869. என் தேவன் என் பெலனே அவர்
870. என் தேவன் என் வெளிச்சம்
871. என் தேவனே என் இயேசுவே
872. என் தேவனாகிய கர்த்தாவே
873. என் தேவா உம்மை பாடுவேன் இனி
874. என் தேவைகளை நீர் பார்த்துக் கொள்வீர்
875. என் நம்பிக்கையே உமக்கு
876. என் நெஞ்சமே நீ மோட்சத்தை
877. என் நெஞ்சம் நொந்து காயத்தால்
878. என் நேசர் என்னுடையவர்
879. என் நேசர் நீர்தானையா
880. என் நேசர் வெள்ளைப் போளச் செண்டு
881. என் நேசருக்குப் புதுப்பாடல் பாடுவேன்
882. என் நேசரேசுவை நான் என்றும் பாடுவேன்
883. என் பரலோக ராஜாவிற்கு முன்பாக
884. என் பாவங்கள் என் இயேசு
885. என் பாத்திரம் நிரம்பி நிரம்பி வழிகின்றது
886. என் பாவம் தீர்ந்த நாளையே
887. என் பெலன் இயேசுவுக்கே
888. என் பெலனாகிய கர்த்தாவே
889. என் பெலனாகிய கர்த்தாவே நான்
890. என் மீட்பர் ரத்தம் சிந்தினார்
891. என் மீட்பர் இரத்தம் சிந்தினார்
892. என் மீட்பரே என் இரட்சகா
893. என் மீட்பர் உயிரோடிருக்கையிலே
894. என் மீட்பர் உயிரோடுண்டு
895. என் மீட்பர் என் நேசர் சந்நிதியில்
896. என் மீட்பர் கிறிஸ்து பிறந்தார்
897. என் மீட்பர் சென்ற பாதையில்
898. என் முடிவுக்கு விடிவு நீரே
899. என் முன்னே மேய்ப்பர் போகிறார்
900. என் மேய்ப்பர் நீர்தானையா
901. என் மேய்ப்பராய் இயேசு இருக்கின்ற
902. என் மேய்ப்பரே இயேசையா
903. என் வாழ்வில் இயேசுவே
904. என் வாழ்க்கையெல்லாம் உம்
905. என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம்
906. என் வாழ்வினை மாற்றிடும்
907. என் யேசுவே
908. என் ஜனமே மனந்திரும்பு
909. என் ஜீவன் உம்மிலே
910. என் ஜீவன் நீர் தானே என்
911. என் ஜெபத்தை கேட்கிறார்
912. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்
913. என்றும் ஆனந்தம்என் இயேசு தருகிறார்

914. என்றும் கர்த்தாவுடன் நான் கூடி வாழுவேன்
915. என்றைக்கு காண்பேனோ என் ஏசு தேவா
916. என்றென்றும் ஜீவிப்போர்
917. என்தன் ஆத்ம நேசரே
918. என்ன என் ஆனந்தம்
919. என்ன சுகம் ஆஹா என்ன சுகம்
920. என்னதான் ஆனாலென்ன
921. என்ன தியாகம் என் கல்வாரி நாயகா
922. என்ன நடந்தாலும் யார் கைவிட்டாலும்
923. என்ன பாக்கியம்
924. என்னதான் ஆனால் என்ன
925. என்ன வந்தாலும் நம்பிடுவேனே
926. என்னண்டை வந்திடாயோ
927. என்னப்பா செய்யணும் நான்
928. என்னில் என்ன கண்டீர் என்னை நேசிக்க
929. என்னிலே அன்பு கூர்ந்தீரே
930. என்னை அழைத்தவர் உண்மையுள்ளவர்
931. என்னை ஆட்கொண்ட இயேசு
932. என்னை ஆனந்த தைலத்தால்
933. என்னை உண்டாக்கிய என்
934. என்னை உம் கையில்
935. என்னை கண்டவரே
936. என்னைக் கண்டார் இயேசு
937. என்னைக் காக்கும் கேடகமே
938. என்னைக் காக்கவும் பரலோகம்
939. என்னை சுமப்பதனால் இறைவா
940. என்னைத் தேடி இயேசு வந்தார்
941. என்னை நடத்திடும் தேவன் என்னோடு
942. என்னை நடத்தும் இயேசு நாதா
943. என்னை நிரப்பும் இயேசு தெய்வமே
944. என்னை நேசிக்கின்றாயா
945. என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்
946. என்னை பெலப்படுத்தும் இயேசுவாலே
947. என்னைப் பெலப்படுத்தும்
948. என்னை பெலப்படுத்தும் கிறிஸ்துவினால்
949. என்னை மறவா இயேசு நாதா
950. என்னை மறவாதவரே என்னில்
951. என்னை வல்லடிக்கு நீக்கி உம்
952. என்னை வாழவைக்கும் அன்பு தெய்வமே
953. என்னை வெறுமையாக்கினேன்
954. என்னையே அற்பணித்தேன் இயேசுவே
955. என்னோடு நீ பேச வந்தாய் என்
956. என்னோடு கூட சேர்ந்து அவரை
957. என்னோடு பேசும் இயேசுவே
958. என்னோடிரும் மா நேச கர்த்தரே
959. என்னை ஜெனிப்பித்தவரும் நீர்தானே
960. எஜமானனே என் இயேசு ராஜனே
961. எஜமானனே எஜமானனே
962. ஏசுவையே துதிசெய்
963. ஏதாவது ஏதாவது ஏதாவது செய்யவேண்டும்
964. ஏதேனில் ஆதி மணம்
965. ஏதுக்கழுகிறாய் நீ
966. ஏலோகிம் ஏலோகிம் எங்கும்
967. ஏழைகளின் பெலனே எளியவரின்
968. ஏழை மனுவுருவை எடுத்த
969. ஏழைக்கு பங்காளராம்
970. ஏறுகின்றார் தள்ளாடி
971. ஏற்றுக்கொண்டருளுமே தேவா
972. ஏன் இந்தப் பாடுகள் உமக்கு
973. ஏன் மகனே (மகளே) இன்னும்
974. ஐயரே நீர் தங்கும் என்னிடம்
975. ஐயனே உமது திருவடிகளுக்கே
976. ஐயா உமது சித்தம் ஆகிடவே
977. ஐயா உம்திரு நாமம்
978. ஐயையா நான் வந்தேன்
979. ஐயையா நான் ஒரு மாபாவி
980. ஐயையா நான் பாவி
981. ஐயா நீரன்று அன்னா காய்பாவின் வீட்டில்
982. ஒப்பற்ற என் செல்வமே ஓ எந்தன்
983. ஒப்பிட முடியாத தெய்வமே
984. ஒப்பில்லா திரு இரா
985. ஒப்பில்லாத திவ்விய அன்பே
986. ஒப்புக் கொடுத்தீர் ஐயா உம்மையே
987. ஒப்புவிக்கிறேன்
988. ஒப்புவித்தேன் ஐயனே உம் சித்தம்
989. ஒரு குற்றம் கூட செய்யாத ஒரே ஒரு
990. ஒரு கோடி ஸ்தோத்திரங்கள் ஏறெடுப்போமா
991. ஒரு தாய் தேற்றுவது போல்
992. ஒருநாள் வருவார் இராஜாதி இராஜன்
993. ஒருநாளும் வீணாகாது
994. ஒரு மருந்தரும் குருமருந்து
995. ஒருபோதும் மறவாத
996. ஒருவாராய் சாவாமையுள்ளவரே
997. ஒருவராய் பெரிய அதிசயம்

998. ஒருவரும் சேரா ஒளியினில் வாசம்
999. ஒரு வார்த்தை சொல்லும் கர்த்தாவே
1000. ஒவ்வொரு நாட்களிலும் பிரியாமல்
1001. ஒளி தரும் கண்கள் சுடர்
1002. ஒளிதரும் தீபங்கள் சுடர்
1003. ஒன்று கூடி ஆராதிப்போம் இயேசு
1004. ஒன்றுமில்லை நான்
1005. ஓ என் இயேசுவின் தோட்டத்திலே
1006. ஓ எந்தன் உள்ளம் நீர் வந்ததால்
1007. ஓ தேவனுக்கு மகிமை தூக்கி எடுத்தார்
1008. ஓ மனிதனே நீ எங்கே போகின்றாய்
1009. ஓசன்னா உன்னதத்தில் ஓசன்னா
1010. ஓசன்னா பாடுவோம் ஏசுவின் தாசரே
1011. ஓசன்னா கீதம் பாடிடுவேன்
1012. ஓசன்னா பாடி பாடி நேசரை தேடி
1013. ஓசன்னா பாடுவோம் இயேசுவின்
1014. ஓசன்னா பாலர் பாடும்
1015. ஓசன்னா ஓசன்னா
1016. ஓ பெத்லெகேமே சிற்றூரே
1017. ஓடு ஓடு ஓடு ஓடு ஓடிக்கொண்டிரு
1018. ஓயாமல் துதிபோம் காலமெல்லாம்
1019. ஓர் முறை விட்டு மும்முறை
1020. கடந்து வந்த பாதைகளை திரும்பி
1021. கடவுள் உனக்கு வாழ்வு தந்தார்
1022. கடல் கொந்தளித்துப் பொங்க
1023. கடினமானது உமக்கு எதுவுமில்லை
1024. கடும் புயலிலே என்னைக் காத்தவரே
1025. கடைசி நாட்களிலே
1026. கட்டும் கர்த்தாவே நீர்
1027. கட்டடம் கட்டிடும்
1028. கட்டப்பட்ட மனிதரெல்லாம்
1029. கட்டிப்பிடித்தேன் உந்தன் பாதத்தை
1030. கண் கலங்காமல் காத்தீரய்யா
1031. கண்களை ஏறெடுப்பேன்
1032. கண்களை ஏறெடுப்பேன் என் கண்களை
1033. கண்களை பதிய வைப்போம்
1034. கண்கள் பன்னீர் தரும்
1035. கண்டேண் கண்டேண் என்
1036. கண்டேன் கல்வாரியின் காட்சி
1037. கண்டேனே உம் தூய அன்பை
1038. கண்டேனென் கண்குளிர
1039. கண்ணீரால் நன்றி சொல்கிறேன்
1040. கண்ணோக்கி பார்த்த தேவா
1041. கண்மணி நீ கண்வளராய்
1042. கண்மணி போல் காக்கும் இயேசு
1043. கதிரவன் எழுகின்ற காலையில்
1044. கந்தை துணிகளில் தவழ்ந்திடும் பாலன்
1045. கதிரவன் தோன்றும் காலையிதே
1046. கரம்பற்றி நடந்திடுவேன் கர்த்தர்
1047. கரம் பிடித்து உன்னை என்றும்
1048. கரம் பிடித்து வழிநடத்தும் கர்த்தரை
1049. கரம் பிடித்தென்னை வழி நடத்தும்
1050. கருணையின் நாதா எந்தன் இயேசு
1051. கரையோர கடலலை சத்தம்
1052. கர்த்தர் அன்பே தூய அன்பே
1053. கர்த்தர் ஆவி என்னில் அசைவாடும்போது
1054. கர்த்தர் இயேசு வருகிறார் நீ
1055. கர்த்தர் உயிர்த்தெழுந்தார்
1056. கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்
1057. கர்த்தர் உன்னதங்களிலே
1058. கர்த்தர் உன்னதரே மகிமையில்
1059. கர்த்தர் உன்னை மேன்மையாக
1060. கர்த்தர் எனக்காய் யாவையும்செய்து
1061. கர்த்தர் எனக்காக யாவையும் செய்வாரே
1062. கர்த்தர் என் பக்கமாகில்
1063. கர்த்தர் என் நம்பிக்கை துருகமானவர்
1064. கர்த்தர் என் பெலனானார் அவரே
1065. கர்த்தர் என் பெலனும் என் கீதமும்
1066. கர்த்தர் என் மேய்ப்பர் நான் தாழ்ச்சி
1067. கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறாரே
1068. கர்த்தர் என் மேய்ப்பரானவர் நான்
1069. கர்த்தர் என் மேய்ப்பர் அதினாலே
1070. கர்த்தர் என்னை விசாரிப்பவர்
1071. கர்த்தர் கரம் என் மேலங்க கடுகளவு
1072. கர்த்தர் கிருபை என்றுமுள்ளது
1073. கர்த்தர் செய்ய நினைத்தது ஒன்றும்
1074. கர்த்தர் சொல்ல ஆகுமே
1075. கர்த்தர் சொல்ல ஆகுமே கர்த்தர்
1076. கர்த்தர் துயர் தொனியாய்
1077. கர்த்தர் தேவன் என்னிலே வாசம்
1078. கர்த்தர் நம்மை நடத்திய வழிகள்
1079. கர்த்தர் நல்லவர் அவர் கிருபை
1080. கர்த்தர் நல்லவர் துதியுங்கள் அவர்
1081. கர்த்தர் நல்லவர் ருசித்து பாருங்கள்

Tamil Hymns

1082. கர்த்தர் நல்லவர் ருசித்து பாருங்கள்
1083. கர்த்தர் நாமம் என் புகலிடமே
1084. கர்த்தர் பெரியவர் அவர் நமது
1085. கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு
1086. கர்த்தரிலும் தம் வல்லமையிலும்
1087. கர்த்தரின் கை குறுகவில்லை
1088. கர்த்தரின் சத்தம் வல்லமையுள்ளது
1089. கர்த்தரின் நாள் நெருங்கிடுதே
1090. கர்த்தரின் பந்தியில் வா
1091. கர்த்தரின் மாம்சம் வந்துட் கொள்ளுங்கள்
1092. கர்த்தரின் வருகை நெருங்கிடுதே
1093. கர்த்தருக்குக் காத்திருப்போர் யாரும்
1094. கர்த்தருக்கு நாம் புதுப்பாட்டு துதியுடன்
1095. கர்த்தருக்குள் களிகூர்ந்து மகிழ்கிறேன்
1096. கர்த்தரை எக்காலமும் ஸ்தோத்திரித்து
1097. கர்த்தரை என்றும் நம்பிக்கையாக
1098. கர்த்தரைத் துதித்து அவரின் நாமத்தை
1099. கர்த்தரை துதிப்பதும் கீர்த்தனம்
1100. கர்த்தரை துதிப்பேன் என் தேவனை
1101. கர்த்தரையே துதிப்பேன்
1102. கர்த்தரை துதியுங்கள்
1103. கர்த்தரை தேடின நாட்களெல்லாம்
1104. கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்
1105. கர்த்தரை நம்பினோர் பேறுபெற்றோர்
1106. கர்த்தரையே நம்பிடும் தேவ ஜனமே
1107. கர்த்தனே எம் துணையானீர்
1108. கர்த்தா நீர் வசிக்கும்
1109. கர்த்தாவின் அற்புதச் செய்கை
1110. கர்த்தாவின் தாசரே
1111. கர்த்தாவின் ஜனமே கைத்தாளமுடனே
1112. கர்த்தாவே உம் கிருபை எவ்வளவு
1113. கர்த்தாவே உம்மை போற்றுகிறேன்
1114. கர்த்தாவே உமது கூடாரத்தில்
1115. கர்த்தாவே என் பெலனே
1116. கர்த்தாவே தேவர்களில் உமக்கொ
1117. கர்த்தாவே நீரே எந்தன் தேவனல்லோ
1118. கர்த்தாவே நீர் என்னைத் தேற்றும்
1119. கர்த்தாவே நீர் மாட்சிமை நிறைந்தவரே
1120. கர்த்தாவே யுகயுகமாய்
1121. கர்த்தாவை நல்ல பக்தியாலே
1122. கலங்காதே என் நெஞ்சமே
1123. கலங்காதே கலங்காதே கர்த்தர்
1124. கலங்காதே திகையாதே கர்த்தர்
1125. கலங்காதே மகனே கலங்காதே
1126. கலங்கின நேரங்களில் கைதூக்கி
1127. கலிலேயா என்ற ஊரில் இயேசு
1128. கல்யாணமாம் கல்யாணம் கானா
1129. கல்வாரி அன்பு மாற்றினதென்னை
1130. கல்வாரி அன்பை எண்ணிடும்
1131. கல்வாரி இரத்தம் எனக்காக சிந்தி
1132. கல்வாரி சிநேகம் கரைத்திடும் என்னை
1133. கல்வாரி குருசண்டை
1134. கல்வாரி சிலுவை நாதா
1135. கல்வாரி மாமலை ஓரம்
1136. கல்வாரி மாமலைமேல்
1137. கல்வாரியில் தொங்குகின்றார்
1138. கல்வாரியின் கருணையிதே
1139. கல்வாரியே கல்வாரியே ஒப்பற்ற
1140. கல்வாரியே கவாரியே கருணையின்
1141. கவலைப்படாதீர் என்றும் கவலைப்படாதீர்
1142. கவலை கொள்ளாதிருங்கள்
1143. களிகூருவோம் கர்த்தர் நம் பட்சமே
1144. களிப்புடன் கூடுவோம் கர்த்தரை
1145. கனத்திற்கும் மகிமைக்கும் பாத்திரரே
1146. கறைகள் நீங்கிட
1147. கறையேறி உமதண்டை
1148. கன்மலை மீது என் கால்கள்
1149. கன்மலை மீதென் கால் நிறுத்தி
1150. கன்னித்தாய் மரியாள்
1151. கன்னி பெற்ற பாலனே
1152. காக்கும் கரங்கள் உண்டெனக்கு
1153. காக்கும் தெய்வம் இயேசு இருக்க
1154. காணிக்கை தந்தோம் கர்த்தாவே
1155. காணாத ஆட்டின் பின்னே கர்த்தர்
1156. காணாமல் போன என்னை நல்
1157. காப்பார் உன்னைக் காப்பார்
1158. காரிருளில் என் நேச தீபமே
1159. காரிருள் வேளையில் கடும் குளிர்
1160. காலத்தின் அருமையை அறிந்து
1161. காலந்தோறும் தயவாக
1162. காலமே தேவனைத் தேடு
1163. காலமே உம்மைத் தேடுவேன்
1164. காலமோ செல்லுதே வாலிபம்
1165. காலம் இனி செல்லாது ஒரு காசு

1166. காலம் உமது கரத்தில் தேவா
1167. காலம் கடந்திடும் முன்னர்
1168. காலம் பனிக்காலம்
1169. காலையில் தேவனைத் தேடிடுவோம்
1170. காலையும் மாலையும்
1171. கால் மிதிக்கும் தேசமெல்லாம் என்
1172. காற்று வீசுதே தேசத்தின் மேலே
1173. காவியம் பாடிடுவேன்
1174. கானம் பாடியே வாழ்த்தின வான
1175. கானான் என்பது வளமுள்ள நாடு
1176. கிஞ்சிதமும் நெஞ்சே அஞ்சிடாதே
1177. கிதியோன் நீ கிதியோன் நீ
1178. கிருபை இரக்கம் நிறைந்தவோர்
1179. கிருபை எம்மைச் சூழ்ந்து கொள்ளும்
1180. கிருபை கிருபை நம் தேவனின்
1181. கிருபை தாரும் தேவனே
1182. கிருபை புரிந்தெனை ஆள்
1183. கிருபை மேலானதே
1184. கிருபை வேண்டும் நாதா
1185. கிருபையால் நிலை நிற்கின்றோம்
1186. கிருபையிதே தேவ கிருபையிதே
1187. கிருபையே உன்னை இந்நாள்
1188. கிறிஸ்தவனை DISTURB பண்ணாதே
1189. கிருபையே கிருபையே ஒப்பில்லா
1190. கிறிஸ்தவ இல்லறமே
1191. கிறிஸ்துவின் அடைக்கலத்தில்
1192. கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு
1193. கிறிஸ்துவின் சேனை வீரர்கள்
1194. கிறிஸ்துவின் சாயல் தரித்திட
1195. கிறிஸ்மஸ் நாளிதே எல்லோரும்
1196. கிறிஸ்தவ ஜீவியம் சௌ பாக்கிய ஜீவியம்
1197. கிறிஸ்துவின் சுவிசேஷகர்
1198. கிறிஸ்துவின் வீரர் நாம்
1199. கிறிஸ்தோரே எல்லாரும்
1200. கீதம் கீதம் ஜெய ஜெய கீதம்
1201. கீழாக்காமல் உன்னை மேலாக்கியே
1202. குணப்படு பாவி
1203. குணம் இங்கித வடிவாய் உயர்
1204. குதூகலம் கொண்டாட்டமே
1205. குதூகலம் நிறைந்த நன்னாள்
1206. கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்
1207. குயவனே உம் கையில் களிமண் நான்
1208. குயவனே குயவனே படைப்பின்
1209. குருசினில் தொங்கியே
1210. குருசின்மேல் குருசின்மேல் காண்கின்ற
1211. குற்றம் நீங்கக் கழுவினீரே
1212. கூடாதது ஒன்றுமில்லையே
1213. கூடி மீட்பர் நாமத்தில்
1214. கூடுமே எல்லாம் கூடுமே
1215. கூர் ஆணி தேகம் பாய
1216. கெம்பீரமாகவே சங்கீதம் பாடுவோம்
1217. கேரூபீன் சேராபீன்கள் ஓய்வின்றி
1218. கேள் ஜென்மித்த ராயர்க்கே
1219. கைதட்டி பாடி மகிழ்ந்திருப்போம்
1220. கொண்டாடு கொண்டாடு
1221. கொண்டாடுவோம் நாம் கொண்டாடுவோம்
1222. கொண்டாடுவோம் நாம் கொண்டாடுவோம்
1223. கொந்தளிக்கும் லோக வாழ்வில்
1224. கொல்கொதா மலைமேல்
1225. கொல்கொதா மலை மீதிலே சிலுவை
1226. கொல்கதா மேட்டினிலே
1227. கொல்கொதா மேட்டினிலே
1228. கொல்கதா கொலைமரம்
1229. கொல்கொதாவே கொலை மரமே
1230. கோடாகோடி ஸ்தோத்திரம் ஏறெடுப்போம்
1231. கோடானுகோடி சிறியோர்
1232. கோணலும் மாறுபாடுமான உலகத்தில்
1233. சகல ஜனங்களே கைகொட்டி தேவனை
1234. சங்கரிப்பேன் சங்கரிப்பேன் சாத்தானின்
1235. சகோதரர்கள் ஒருமித்துச் சஞ்சரிப்பது
1236. சத்தம் கேட்டு சித்தம் செய்ய
1237. சத்தாய் நிஷ்களமாய்
1238. சத்திய தேவனின் பூரண வாழ்வை
1239. சத்திய வேதத்தைத் தினம் தியானி
1240. சத்திய வேதம் பக்தரின் கீதம்
1241. சந்தோஷ கீதம் என்னில் பொங்குதே
1242. சந்தோஷமாயிருங்க எப்பொழுதும்
1243. சந்தோஷம் என்னுள் சந்தோஷம்
1244. சந்தோஷம் சந்தோஷம் சந்தோஷமே
1245. சந்தோஷம் பொங்குதே
1246. சாந்த இயேசு ஸ்வாமீ
1247. சபை எக்காலும் நிற்குமே
1248. சபையின் அஸ்திபாரம்
1249. சபையே இன்று வானத்தை

1250. சபையோரே எல்லோரும் கர்த்தரைத்
1251. சப்தமாய் பாடி சத்துருவை
1252. சமயமிது நல்ல சமயம் உமதாவி
1253. சமாதானம் ஓதும் ஏசுகிறிஸ்து
1254. சமாதானம் வேண்டுமா ஜெபம்
1255. சமாதானம் நல்கும் நாமம் இயேசு நாமமே
1256. சரணம் ஐயா தேவனே சர்வ வல்ல
1257. சரணம் சரணம் அனந்தா
1258. சரணம் சரணம் சரணம் சரணம்
1259. சரணம் நம்பினேன் இயேசு நாதா
1260. சருவ வலிமை கிருபைகள் மிகுந்த
1261. சருவ லோகாதிபா நமஸ்காரம்
1262. சர்வ அங்கதகனபலி
1263. சர்வ சிருஷ்டிக்கும் எஜமானார் நீரே
1264. சர்வ சிருஷ்டிக்கும் எஜமானும் நீரே
1265. சர்வ வல்லவர் என் சொந்தமானர்
1266. சாட்சிகள் இயேசுவின் சாட்சிகள்
1267. சாத்தானுக்கு சவால் விடும் சந்ததி நாங்க
1268. சாரோனின் ராஜா இவர்
1269. சாரோனின் ரோஜா இவர் பரிபூரண
1270. சாரோனின் ரோஜாவே சாலேமின்
1271. சாரோனின் ரோஜா பள்ளத்தாக்கின் லீலி
1272. சாரோனின் ரோஜாவே
1273. சாலேமின் ராசா சங்கையின் ராசா
1274. சிங்கக் குட்டிகள் பட்டினி கிடக்கும்
1275. சிங்காசனத்தில் வீற்றிருக்கும்
1276. சிங்கார மாளிகையில்
1277. சிலுவை ஏன் அவர்க்கு
1278. சிலுவை சுமந்த உருவம்
1279. சிலுவை திரு சிலுவை
1280. சிலுவை நாதர் இயேசுவின்
1281. சிலுவையில் தொங்கும் இயேசுவைப்பார்
1282. சிலுவையில் நிழலில் அனுதினம் அடியான்
1283. சிலுவையில் அறையுண்ட மேசியா
1284. சிலுவையே நல்மரமே
1285. சிலுவையைப் பற்றி நின்று
1286. சிலுவையை சுமந்தும்மை
1287. சிலுவை சுமந்தோனாக இயேசு உம்மைப்
1288. சிலுவையோ அன்பின் சிகரம்
1289. சின்ன பரதேசி மோட்சம்
1290. சின்ன சின்ன ஜீவ வண்டி
1291. சின்னஞ் சிட்டுக் குருவியே
1292. சின்னஞ்சிறு சுதனே என்னரும் தவமே
1293. சின்னஞ்சிறு குழந்தை
1294. சீயோனிலே என் திட அஸ்திபாரம்
1295. சீயோனில் வாசம் செய்யும்
1296. சீயோன் தேசமதில் சேர்ந்தென்றும்
1297. சீயோன் மணவாளன் நேசர்
1298. சீரேசு பாலன் ஜெயமனு வேலன்
1299. சீர் அடைதருணம் இதறி மனமே
1300. சீர் இயேசு நாதனுக்கு
1301. சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம்
1302. சீர்திரியேக வஸ்தே நமோ நமோ
1303. சீர்மிகு வான்புவி தேவா
1304. சுகம் உண்டு பெலன் உண்டு
1305. சுகம் தரவேண்டும் யேகோவா
1306. சுகம் பெலன் எனக்குள்ளே பாய்ந்து
1307. சுத்த ஆவீ என்னில் தங்கும்
1308. சுத்தம் பண்ணப்படாத தேசமே
1309. சுந்தரப் பரம தேவ மைந்தன்
1310. சுமந்து காக்கும் இயேசுவிடம்
1311. சுய அதிகாரா சுந்தரக் குமாரா
1312. சூரியன் அஸ்தமித்திருண்டிடும் வேளையில்
1313. சூரியன் மறைந்து அந்தகாரம் சூழ்ந்தது
1314. செடியே திராட்சைச் செடியே
1315. சேராபீன் தூதர்கள் போற்றிடும்
1316. சேர் ஐயா எளியேன்
1317. சேற்றிலிருந்து தூக்கினார்
1318. சேனைகளாய் எழும்பிடுவோம்
1319. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்
1320. சேனைகளின் தேவன் நம்மோடு
1321. சேனைகளின் கர்த்தர் நல்லவரே
1322. சேனையதிபன் நம் கர்த்தருக்கே
1323. சேனையின் கர்த்தா
1324. சொன்னபடி உயிர்த்தெழுந்தார்
1325. சொந்தம் என்று சொல்லிக் கொள்ள
1326. சொல்லரும் மெய்ஞ்ஞானரே
1327. சோராதே என் மனமே
1328. சோர்ந்து போகாதே என் நண்பனே
1329. சோர்ந்து போகாதே மனமே
1330. சோர்வான ஆவியை நீக்கும்
1331. ஞான நாதா வானம் பூமி
1332. தகப்பனே தந்தையே தலைநிமிரச்
1333. தடுக்கி விழுந்தோரை தாங்குகிறீர்

1334. தண்ணீர்கள் கடக்கும்போது என்னோடு
1335. தந்தானைத் துதிப்போமே
1336. தந்தேன் என்னை இயேசுவே
1337. தந்தை சுதன் ஆவியே
1338. தந்தை தன் சிறு பாலனை
1339. தந்தையின் பிரகாசமாகி
1340. தம் கிருபை பெரிதல்லோ
1341. தம்மண்டை வந்த பாலரை
1342. தயாள இயேசு தேவரீர்
1343. தருணமே
1344. தளர்ந்து போன கைகளை திடப்படுத்துங்கள்
1345. தனிமையின் பாதையில்
1346. தாங்கட்டுமே உம் கிருபை தேவனே
1347. தாகமுள்ளவன் மேல் தண்ணீரை
1348. தாசரே இத்தரணியை அன்பாய்
1349. தாயினும் மேலாய் என்மேல்
1350. தாயின் மடியில் குழந்தை போல
1351. தாயைப் போல தேற்றினீரே நன்றி
1352. தாய்மடியில் தவழுகின்ற குழந்தையைப்
1353. தாய் மறந்தாலும் நீர் மறப்பதில்லையே
1354. தாரகமே பசிதாகத்துடன் உம்மிடம்
1355. தாவீதின் ஊரிலே
1356. தாவீதின் கோத்திரனே
1357. தாவீதைப் போல நடனமாடி
1358. தாவீதை போல் நடனம் ஆடி
1359. திக்கற்ற பிள்ளைகளுக்கு சகாயர்
1360. திவ்ய அன்பின் சத்தத்தை இரட்சகா
1361. திராட்சை செடியே இயேசு ராஜா
1362. திரி முதல் கிருபாசனனே சரணம்
1363. திருக்கரத்தால் தாங்கி என்னை
1364. திருப்தியாக்கி நடத்திடுவார்
1365. திவ்விய பாலன் பிறந்தீரே
1366. திருப்பாதம் சேராமல் இருப்பேனோ
1367. திருப்பாதம் நம்பி வந்தேன்
1368. தீய மனதை மாற்ற வாரும்
1369. தீயோர் சொல்வதைக் கேளாமல்
1370. தீராத தாகத்தால்
1371. தீவினை செய்யாதே
1372. துணை என்றும் இயேசு தேவா
1373. துக்க பாரத்தால் இளைத்து
1374. துக்கம் கொண்டாட வாருமே
1375. துக்கம் திகிள் இருள் சூழ
1376. துங்கனில் ஒதுங்குவோன்
1377. துதி அல்லேலூயா பாடுவோம்
1378. துதி எடுத்தால் சாத்தான் ஓடுவான்
1379. துதி செய் நீ மனமே துதிகளைப் படியே
1380. துதி செய்யும் வேளை
1381. துதி துதி என் மனமே துதிகளின்
1382. துதிகளில் வாசம் செய்யும் எங்கள்
1383. துதிகளின் பாத்திரனே துதிதனை
1384. துதிகளின் மத்தியில் வாசம்
1385. துதி பாடுவாய் நெஞ்சமே
1386. துதி மகிமை கனம் வல்லமை
1387. துதி கனம் செலுத்துகிறோம் திரியேக
1388. துதி கனம் மகிமை எல்லாம்
1389. துதி கீதங்களால் புகழ்வேன்
1390. துதி கீதமே பாடியே வாழ்த்தி
1391. துதிக்க துதிக்க இன்பம் பெருகுதே
1392. துதிக்கிறோம் தேவனே உம் நாமமதையே
1393. துதிக்கிறோம் உம்மை வல்ல பிதாவே
1394. துதிக்குப் பாத்திரரே எந்தன்
1395. துதி தங்கிய பரமண்டல சுவிசேடக
1396. துதி துதி என் மனமேதுதிகளில்
1397. துதித்திடு என் உள்ளமே ஸ்தோத்திரி
1398. துதித்திடுவேன் முழு இதயத்தோடு
1399. துதித்திடுவோம் நம் இயேசு பரனை
1400. துதித்துப் பாடிட பாத்திரமே
1401. துதிபலியை செலுத்த வந்தோம்
1402. துதிப்பதே என் தகுதியல்லோ
1403. துதிப்பேன் இயேசுவின் பாதம்
1404. துதிப்பேன் உம்மை துதிப்பேன்
1405. துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்
1406. துதிப்போம் அல்லேலூயா பாடி
1407. துதிப்போம் இயேசுவை துதிப்போம்
1408. துதியின் ஆடை அணிந்து துயரம்
1409. துதியின் சத்தத்தோடு ஆராதிப்போம்
1410. துதியுங்கள் தேவனை
1411. துதியுங்கள் நம் தேவனை
1412. துயரத்தில் கூப்பிட்டேன்
1413. துயருற்ற வேந்தரே
1414. துள்ளுதையா உம்நாமம் சொல்ல சொல்ல
1415. துன்பமா துயரமா
1416. துன்பமான வேளையில் இன்பமான
1417. தூங்காமல் ஜெபிக்கும் வரம் தாங்கப்பா

1418. துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக்
1419. தூதாக்கள் விண்ணில் பாடிய
1420. தூபம் போல் என் ஜெபங்கள்
1421. தூய ஆவியானவர் இறங்கும்
1422. தூய தூய தூயா
1423. தூய பந்தி சேர்ந்த கைகள்
1424. தூயர் ராஜா எண்ணிறந்த
1425. தூயாதி தூயவரே
1426. தூரம் சென்று போனீரோ உம்மை
1427. தூய்மை பெற நாடு
1428. தெய்வ ஆசீர்வாதத்தோடே
1429. தெய்வ ஆட்டுக்குட்டியே
1430. தெய்வ ஆவியே
1431. தெய்வ கிருபையைத் தேட
1432. தெய்வமே இயேசுவே உம்மைத்
1433. தெய்வத்தின் சந்நிதானம் என்
1434. தெய்வத்துவத்தின் பரிபூரணம்
1435. தெய்வன்பின் வெள்ளமே
1436. தெய்வன்புக்காக உன்னதக்
1437. தெய்வாட்டுக் குட்டிக்கு பன்
1438. தெய்வாவி மனவாசராய்
1439. தெய்வீகக் கூடாரமே என்
1440. தேசத்தார்கள் யாரும் வந்து
1441. தேசத்தின் எழுப்புதலை
1442. தேசத்தை சுதந்தரிக்கப் புறப்படு
1443. தேசமே தேசமே பயப்படாதே
1444. தேசமே பயப்படாதே மகிழ்ந்து
1445. தேடி இயேசு வந்தார்
1446. தேடிவந்த தெய்வம் இயேசு
1447. தேவ கிருபை ஆசீர்வாதம்
1448. தேவ கிருபை என்றுமுள்ளதே
1449. தேவ சாயல் ஆக மாறி
1450. தேவ சித்தம் நிறைவேற
1451. தேவ தேவனே இயேசு ராஜனே
1452. தேவ தேவனைத் துதித்திடுவோம்
1453. தேவ பாலன் பிறந்தீரே
1454. தேவ பிதா எந்தன் மேய்ப்பன்
1455. தேவ பிரசன்னமே
1456. தேவலோக கானமே
1457. தேவ ஜனமே மகிழ்ந்து களிகூறு
1458. தேவசாயல் ஆக மாறி
1459. தேவசேனை வானமீது
1460. தேவரீர் நீர் சகலமும் செய்ய வல்லவர்
1461. தேவனுக்கே மகிமை தெய்வத்திற்கே
1462. தேவனே ஆராதிக்கின்றேன் தெய்வமே
1463. தேவனே உம்மை நான் ஆராதிப்பேன்
1464. தேவனே என் தேவா
1465. தேவனே என்னைத் தருகிறேன்
1466. தேவனே நான் உமதண்டையில்
1467. தேவனே நீர் தூரமாய் இருப்பது போல
1468. தேவனை உயர்த்தித் துதியுங்கள்
1469. தேவனைத் துதிப்பதும் கீர்த்தனம்
1470. தேவன் அருளிய சொல்லி முடியா
1471. தேவன் ஆராதனைக்குரியவரே
1472. தேவன் தங்கும் உள்ளம் அது
1473. தேவன் தேடும் மனிதன் தேசத்தில்
1474. தேவன் தந்த திருச் சபையே
1475. தேவன் நமக்கு அடைக்கலம் பெலனும்
1476. தேவன் நம் அடைக்கலமும் பெலனும்
1477. தேவன் வருகின்றார் வேகம் இறங்கி
1478. தேவன் வாழ்ந்திடும் ஆலயத்தினில்
1479. தேவனின் ஆலயமே பரிசுத்த ஆலயமே
1480. தேவனின் நாமத்திற்கே
1481. தேவ ஜனமே பாடி துதிப்போம் தேவ
1482. தேவப் பிதா எந்தன் மேய்ப்பன்
1483. தேவா இரக்கம் இல்லையோ
1484. தேவா உந்தன் சமூகம் தெளிதேனிலும்
1485. தேவா உம் சமுகமே எனது பிரியமே
1486. தேவா உம் சாட்சி நான்
1487. தேவா உம் நாமத்தை
1488. தேவா உம்மை நான் நம்புவேன்
1489. தேவா உம்மைப் பாடும் நேரம்
1490. தேவா என்னை ஆசீர்வதியும்
1491. தேவா சரணம் கர்த்தா சரணம்
1492. தேவாதி தேவன் என் சொந்தமானார்
1493. தேவாதி தேவன் இராஜாதி ராஜன்
1494. தேவாதி தேவனே பெத்தலை ஊரினிலே
1495. தேவா நான் எதினால் விசேஷித்தவன்
1496. தேவா பிரசன்னம் தாருமே
1497. தேவை நிறைந்தவர் இயேசு தேவா
1498. தேனிலும் இனிமையே இயேசுவின்
1499. தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம்
1500. தொடும் என் கண்களையே
1501. தொட்டு சுகமாக்குமையா இயேசுவே

Tamil Hymns

1502. தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்
1503. தொழுகிறோம் எங்கள் பிதாவே
1504. தோத்திர பாத்திரனே தேவா
1505. தோத்திரப் பண்டிகை ஆசரிப்போமே
1506. தோத்திரம் கிருபை கூர் ஐயா
1507. தோத்திரம் இயேசுநாதா
1508. தோத்திரம் செய்வேனே
1509. தோத்திரம் துதி பாத்திரா
1510. தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
1511. நடந்ததெல்லாம் நன்மைக்கே நன்மைக்கே
1512. நடனமாடி ஸ்தோத்தரிப்பேன் நாதா
1513. நடுக்குளிர் காலம்
1514. நமக்கொரு தகப்பன் உண்டு
1515. நமக்கொரு பாலகன் பிறந்தார்
1516. நமக்கோர் பாலகன்
1517. நமது இயேசு கர்த்தரென்று
1518. நமது இயேசு கிறிஸ்துவின் நாமம்
1519. நமஸ்காரம் தேவனே
1520. நம் இயேசு கிறிஸ்துவினாலே
1521. நம் இயேசு நல்லவர் ஒருபோதும்
1522. நம் இயேசுவைப் புகழ்ந்திடுவோம்
1523. நம் கர்த்தர் நல்லவர் நாம்
1524. நம் தேவன் அன்புள்ளவர் நம்
1525. நம் தேவனைத் துதித்துப்பாடி
1526. நம் நேசரை அங்கே சந்திப்போம்
1527. நம்பத்தக்க தகப்பனே
1528. நம்பாதே நம்பாதே நண்பர்களை நம்பாதே
1529. நம்பிக்கை நங்கூரம்
1530. நம்பிக்கைக்குஉரியவரே நம்பிவந்தேன்
1531. நம்பிக்கையினால் நீ வாழ்வு பெறுவாய்
1532. நம்பிக்கையும் நீர் தானே நங்கூரமும்
1533. நம்பி வந்த மனிதர்க்கெல்லாம்
1534. நம்பி வந்தேன் இயேசுவே என்னை
1535. நம்பிவந்தேன் மேசியா நான்
1536. நம்புவேன் இயேசுவை நம்புவேன்
1537. நரம்பு கூட இயேசுவுக்கு நன்றி சொல்லுது
1538. நரர்க்காய் மாண்ட இயேசுவே
1539. நல் மீட்பரே இந்நேரத்தில்
1540. நல் மீட்பர் இயேசு நாமமே
1541. நல் மீட்பர் பட்சம் நில்லும்
1542. நல் மேய்ப்பன் இவரே இயேசு
1543. நல்ல சமாரியன் இயேசு என்னைத்
1544. நல்ல செய்தி இயேசுவை
1545. நல்ல நண்பன் இயேசு என்னை
1546. நல்ல தேவனே ஞான ஜீவனே
1547. நல்ல போர்ச் சேவகனாய்
1548. நல்லதையே நான் சொல்லவும் செய்யவும்
1549. நல்லவரே இயேசு தேவா
1550. நல்லவரே என் இயேசுவே
1551. நல்லாவி ஊற்றும் தேவா
1552. நள்ளிரவில் மா தெளிவாய்
1553. நள்ளி ராவினில் மாட்டுத் தொழுவமதில்
1554. நற்கருணை நாதனே
1555. நற்செய்தி மேசியா இதோ
1556. நன்மைகள் செய்த நல்லவரே இயேசு
1557. நன்மைகளின் நாயகனே
1558. நன்றி என்று சொல்லுகிறோம் நாதா
1559. நன்றி என்று சொல்லுவோம்
1560. நன்றி சொல்லாமல் இருக்கவே முடியாது
1561. நன்றி சொல்லி பாடுவேன்
1562. நன்றி சொல்லி உம்மை பாட வந்தோம்
1563. நன்றி சொல்லிட வேண்டும்
1564. நன்றி சொல்லுகிறோம் நாதா
1565. நன்றி சொல்லி பாடுவேன் துதி
1566. நன்றி நன்றி இயேசு ராஜா
1567. நன்றி நன்றி இயேசுவே
1568. நன்றி நன்றி என்று நன்றி நன்றி என்று
1569. நன்றி நன்றி நன்றி என்று துதிக்கிறேன்
1570. நன்றி நன்றி நன்றி என்று நாள்தோறும்
1571. நன்றி நன்றி நன்றி ஐயா
1572. நன்றி நன்றி நன்றி சொல்லி பாடுவேன்
1573. நன்றி நன்றி நன்றி என்று சொல்லி
1574. நன்றி நிறைந்த இதயத்தோடு
1575. நன்றி நிறைந்த உள்ளத்தோடு
1576. நன்றி பலி நன்றி பலி
1577. நன்றிபலி நன்றிபலி நல்லவரே
1578. நன்றிப்பலிபீடம் கட்டுவோம்
1579. நன்றியால் துதி பாடு
1580. நன்றியால் பாடிடுவோம்
1581. நாங்கள் பாவப் பாரத்தால்
1582. நன்றியோடு அவர் வாசல் நுழைவோம்
1583. நன்றியோடு நல்ல தேவா
1584. நாங்கள் ஆராதிக்கும் எங்கள் தேவன்
1585. நாடும் துறைமுகம் சேர்ந்து மகிழ

1586. நாதா நாதா நாத இந்த ஜீவியமே
1587. நாமே திருச்சபை கிறிஸ்துவின் திருஉடல்
1588. நாம் ஆராதிக்கும் தேவன் நல்லவர்
1589. நாம் ஆராதிக்கும் தேவன் அவர்
1590. நாம் இடைவிடாமல் ஆராதிக்கும்
1591. நாம் நித்திரை செய்து விழித்தோம்
1592. நாதா உம்திருக் கரத்தில்
1593. நாதா ஜீவன் சுகம் தந்தீர்
1594. நாளைய தினத்தைக் குறித்து
1595. நாற்பது நாள் ராப் பகல்
1596. நானும் என் வீட்டாரும் உம்மையே
1597. நானும் என் வீட்டாருமோவென்றால்
1598. நானே வழி நானே சத்தியம்
1599. நான் அனாதை என்று அழுதேன்
1600. நான் ஆராதிக்க வேறொரு
1601. நான் ஆராதிக்கும் இயேசு நல்லவர்
1602. நான் இயேசுவின் படையில் யுத்த
1603. நான் இயேசுவின் பிள்ளை பயமே
1604. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
1605. நான் உம்மை உறுதியாக
1606. நான் உம்மை மறந்தாலும்
1607. நான் உம்மைப் பற்றி இரட்சகா
1608. நான் உயிரோடிருக்கும் நாளெல்லாம்
1609. நான் உனக்கு துணை நிற்கிறேன்
1610. நான் உனக்கு போதித்து
1611. நான் உன்னைவிட்டு விலகுவதில்லை
1612. நான் எதற்காக பிடிக்கபட்டேனோ
1613. நான் என் நேசருடையவன் என் நேசர்
1614. நான் என்னைத் தந்தேனே இன்று
1615. நான் ஒரு பாவி நான் ஒரு பாவி
1616. நான் ஒருபோதும் உன்னை
1617. நான் சுகமானேன்
1618. நான் நடந்து வந்த பாதைகள்
1619. நான் நானாகவே வந்திருக்கிறேன்
1620. நான் நிற்பதும் நிர்முலமாகாததும்
1621. நான் நினைப்பதற்கும் வேண்டுவதற்கும்
1622. நான் நேசிக்கும் தேவன் இயேசு
1623. நான் பயப்படும் நாளினிலே கர்த்தரை
1624. நான் பாட வருவீர் ஐயா
1625. நான் பாடும் கானங்களால்
1626. நான் பாடி மகிழும் நேரம்
1627. நான் பாவச் சேற்றினிலே
1628. நான் பாவிதான் ஆனாலும் நீர்
1629. நான் பிரமித்து நின்று பேரன்பின்
1630. நான் மன்னிப்படைய நீர் தண்டிக்கப்பட்டீர்
1631. நான் வித்தியாசமானவன்
1632. நிகரே இல்லாத சர்வேசா
1633. நிச்சயமாகவே முடிவு உண்டு
1634. நிமிஷங்கள் வாழ்க்கையின் நிமிஷங்கள்
1635. நித்தம் நித்தம் உம்மை நான்
1636. நித்தம் முயல் மனமே
1637. நித்திய இராஜா நிர்மல நாதா
1638. நித்திய நித்தியமாய் உம் நேம்
1639. நிரப்புங்கப்பா நிரப்புங்கப்பா என்
1640. நிரப்பும் என்னைத் துதியால்
1641. நிர்ப்பந்தமான பாவியாய்
1642. நிலையானவர் மறவாதவர் வார்த்தை
1643. நிலையில்லா உலகம் இது
1644. நிலையில்லா உலகு நிஜமில்லா உறவு
1645. நிறைவான ஆவியானவரே
1646. நினைவு கூறும் தெய்வமே நன்றி
1647. நீ இல்லாத நாளெல்லாம்
1648. நீ குருசில் மாண்ட கிறிஸ்துவை
1649. நீ ஒளியாகும் என் பாதைக்கு
1650. நீ செஞ்ச நன்மையெல்லாம்
1651. நீ மலைமேல் உள்ள பட்டணம்
1652. நீங்க போதும் இயேசப்பா
1653. நீங்க மட்டும் இல்லாதிருந்தால்
1654. நீங்க மட்டும் போதும் இயேசப்பா
1655. நீங்கிற்றே நீங்கிற்றே நீங்கிற்றே
1656. நீங்காத என் நேசரே உம் நாமம்
1657. நீங்காத பாவம் நீங்காததேனோ
1658. நீதிமான் நான் நீதிமான் நான்
1659. நீதியாமோ நீர் சொல்லும் ஓய்
1660. நீதியில் நிலைத்திருந்து உம்
1661. நீதியின் சூரியனே என்னில்
1662. நீயுனக்குச் சொந்தமல்லவே
1663. நீயின்றி வேறேது சொந்தம் உன்
1664. நீயே நிரந்தரம்
1665. நீயே எனது ஒளி
1666. நீரன்றி வேறில்லை ஐயா எல்லாமே
1667. நீரின்றி வாழ்வேது இறைவா
1668. நீரே எந்தன் கன்மலை நான்
1669. நீரே எல்லாம் நீரே எல்லாம் நீரே

1670. நீரே என் தஞ்சம்
1671. நீரே என் வழி நீரே என் சத்தியம்
1672. நீரே போதும் நீரே போதும் நீரே
1673. நீரேயல்லாமல் என் வாழ்வில் யாருண்டு
1674. நீரோடையை மான் வாஞ்சித்து
1675. நீர் எங்கள் மீட்பர் நீர் எங்கள் நேசர்
1676. நீர் எந்தன் இயேசு ராஜாவே
1677. நீர் எந்தன் மறைவிடம்
1678. நீர் எனக்கு போதும்
1679. நீர் என் சொந்தம் நீர் என் பக்கம்
1680. நீர் என்னை காண்கின்ற தேவனே
1681. நீர் என்னோடு இருக்கும்போது
1682. நீர் ஒருவர் மட்டும் இயேசுவே
1683. நீர் செய்த நன்மைகளை நினைக்கிறேன்
1684. நீர் சொன்னதை செய்பவர் சொல்லாததை
1685. நீர் சொன்னால் போதும் செய்வேன்
1686. நீர் தந்த இந்த வாழ்வை
1687. நீர் தந்த நன்மை யாவையும்
1688. நீர் தந்த நாளும் ஓய்ந்ததே
1689. நீர் திறந்தால் அடைப்பவன் இல்லை
1690. நீர் நல்லவர் என்பதில் சந்தேகமில்லை
1691. நீர் நீரே பெரியவர் நீர் ஒருவர் நீரே
1692. நீர் மாத்ரம் இல்லையென்றால்
1693. நீர் மாத்ரம் எனக்கு
1694. நீர் வல்லவர் மா வல்லவர்
1695. நீர் வாரும் கர்த்தாவே
1696. நீர் வாழ்கவே இயேசுவே நேசரே
1697. நீர் ஜீவ அப்பம் பஞ்சத்தில்
1698. நீர்தான் என் தஞ்சமே நீர்தான் என்
1699. நீயேகோவாயீரே தந்தையாம்
1700. நிலவும் தூங்கும் மலரும் தூங்கும்
1701. நெஞ்சத்திலே தூய்மையுண்டோ
1702. நெஞ்சமே கெத்சேமனேக்கு
1703. நெஞ்சமே தள்ளாடி நொந்து
1704. நெஞ்சமே வீணாய் சோர்ந்து போகாதே
1705. நெஞ்சமே நீ ஏன் கலங்குகிறாய்
1706. நெஞ்சே நீ கலங்காதே
1707. நெருக்கடி வேலைளில் பதிலளித்து
1708. நேசரின் பாதம் அமர்ந்து நான்
1709. நேசரே உம் திருபாதம்
1710. நேசிக்கிறேன் உம்மைத்தானே ஐயா
1711. நேசிக்கும் நேசர் இயேசு உன்னை
1712. நேற்றும் இன்றும் நாளை என்றும்
1713. நோக்காதே நீ நோக்காதே
1714. பகலோன் கதிர்போலுமே இயேசுவின்
1715. பகல் நேரப் பாடல் நீரே இரவெல்லாம்
1716. பக்தருடன் பாடுவேன்
1717. பக்தரே வாரும்
1718. பசுமையான புல்வெளியில் படுக்க
1719. பண்டிகை நாள் மகிழ் கொண்டாடுவோம்
1720. பசுத்தோல் போர்த்திய புலியா நீ
1721. படகோ படகு கடலிலே படகு
1722. படைத்தவர் உன்னை கைவிடமாட்டார்
1723. பட்டைய கௌப்புவேன் பாய்ந்து
1724. பயத்தோடும் பக்தியோடும்
1725. பயந்து கர்த்தரின் பக்தி வழியில்
1726. பயப்படமாட்டேன் நான் பயப்படமாட்டேன்
1727. பயப்படாதே சிறு மந்தையே
1728. பயப்படாதே பாரிலிப்போதே
1729. பயமில்லை பயமில்லையே ஜெயம்
1730. பயமில்லையே பயமில்லையே
1731. பரத்திலேயிருந்துதான்
1732. பரத்தின் ஜோதியே
1733. பரத்துக்கேறு முன்னமே
1734. பரம அழைப்பின் பந்தய பொருளுக்காய்
1735. பரம குயவனே என்னை வனையுமே
1736. பரமண்டலத்திலுள்ள
1737. பரம எருசலேமே
1738. பரலோக தந்தையே பரலோக தந்தையே
1739. பரலோக தேவனே உம்மை ஆராதனை
1740. பரலோக தேவனே
1741. பரலோகத்தின் பிதாவே உமது
1742. பரலோகத்திலிருந்து வந்திடுவார்
1743. பரலோகந்தான் என் பேச்சு
1744. பரலோகமே உம்மைத் துதிப்பதால்
1745. பரலோகமே என் சொந்தமே
1746. பரலோக எம் தந்தையே உந்தனின் நாமமே
1747. பரலோகம் என்னை அழைக்கின்றது
1748. பரலோக கார்மேகமே பரிசுத்த
1749. பரனே உம் திருமுகம் காண
1750. பரனே திருக்கடைக்கண் பாராயோ
1751. பரிசுத்த ஆவியே பக்தர்கள் துணையாளரே
1752. பரிசுத்த தேவன் நீரே
1753. பரிசுத்த பூமியில் நாம் நிற்கிறோம்

Tamil Hymns

1754. பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா
1755. பரிசுத்தராம் தேவமைந்தன் பிறந்த
1756. பரிசுத்தர் கூட்டம் நடுவில் ஜொலித்திடும்
1757. பரிசுத்தர் பரிசுத்தர் இயேசுவே
1758. பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே
1759. பரிசுத்தரே உம்மை ஆராதிப்பேன்
1760. பரிசுத்தரே எங்கள் இயேசு தேவா
1761. பரிசுத்தரே பரிசுத்தரே பரலோக ராஜாவே
1762. பரிசுத்தாவி எங்கள் மீதிலே பொழியும்
1763. பரிசுத்தர் அவர் நாமம்
1764. பரிசுத்தாவி நீர் வாரும்
1765. பரிதி தூங்கிட பாதிரா நேரத்தில்
1766. பார் முன்னணை ஒன்றில்
1767. பார் முன்னணையில்
1768. பலமும் அல்ல பராக்கிரமும் அல்ல
1769. பலன் கொடுப்பீர் நல்ல பலன் கொடுப்பீர்
1770. பலிபீடத்தில் என்னைப் பரனே
1771. பலிபீடத்தில் வைத்தேன் என்னை
1772. பலியிடு துதி பலியிடு வலி
1773. பவனி செல்கின்றார் ராசா
1774. பள்ளங்களெல்லாம் நிரம்பிட வேண்டும்
1775. பனித்துளி போல் பொழிகிறதே
1776. பனி தூவிடும் இரவில்
1777. பனி போல பெய்யும் பரிசுத்தரே
1778. பாக்கியமே பெரும் சிலாக்கியமே
1779. பாடாத ராகங்கள் பாடும்
1780. பாடல்களால் உம்மை நான் துதிக்க
1781. பாடித் துதி மனமே பரனைக்
1782. பாடி புகழ்வேன் நான் ஆடி மகிழ்வேன்
1783. பாடினால் பாடுவேன் இயேசு பாலனை
1784. பாடும் பாடல் இயேசுவுக்காக
1785. பாடுவேன் என்றும் என் இயேசுவின்
1786. பாடுவேன் பரவசமாகுவேன்
1787. பாடுவோம் நம் தேவனே புதுப்பாடல்
1788. பாடுவோம் மகிழ்வோம் கொண்டாடுவோம்
1789. பாதகன் என் வினைதீர்
1790. பாதம் ஒன்றே வேண்டும்
1791. பாதம் பணிகின்றோம் உந்தன்
1792. பாதம் போற்றியே பணிந்திடுவேன்
1793. பாதம் வந்தனமே வரப்பிர
1794. பாதை காட்டும் மா யெகோவா
1795. பாதை தெரியாத ஆட்டைப் போல
1796. பாதைக்கு தீபமாமே
1797. பாரத தேசத்தின் ராஜா நீரே
1798. பாரச் சிலுவையினை தோளில் சுமக்கும்
1799. பாரீர் அருணோதயம் போல்
1800. பாரீர் கெத்சமனே
1801. பார் போற்றும் வேந்தன்
1802. பாலரே ஓர் நேசர் உண்டு
1803. பாலர் ஞாயிறிது பாசமாய் வாரும்
1804. பாலைவனமாய் இருந்த எங்களை
1805. பாவ சஞ்சலத்தை நீக்க
1806. பாவ நாசர் பட்ட காயம்
1807. பாவ தோஷம் நீக்கிட
1808. பாவங்கள் போக்கவே சாபங்கள் நீக்கவே
1809. பாவ மன்னிப்பின் நிச்சயத்தை
1810. பாவத்தின் பலன் நரகம் நரகம்
1811. பாவத்தின் பாரத்தினால் தவித்திடும்
1812. பாவம் பிரவேசியாய்
1813. பாவங்கள் போக்கவே சாபங்கள்
1814. பாவம் பெருகுதே பாரும் பரன்
1815. பாவி நீ ஓடி வா
1816. பாவி உன் மீட்பர் கரிசனையாய்
1817. பாவிக்கு புகலிடம் இயேசு இரட்சகர்
1818. பாவி நான் உந்தன் கிருபை தான்
1819. பாவி நான் என்ன செய்வேன் கோவே
1820. பாவி நான் கிருபை காட்டும்
1821. பாவிக்காய் மரித்த இயேசு
1822. பாவிக்கு நேசராரே
1823. பாவியாகவே வாறேன் பாவம் போக்கும்
1824. பாவீ கேள் உன் ஆண்டவர்
1825. பிசாசனவன் தோற்றுப்போனவன்
1826. பிதா சுதன் ஆவியே
1827. பிதாவின் ஆவியானவரே என்னை
1828. பிதாவே ஆராதிக்கின்றோம்
1829. பிதாவே எங்களை கல்வாரியில்
1830. பிதாவே பலம் ஈந்திடும்
1831. பிதாவே நன்றி சொல்கிறோம்
1832. பிதாவே போற்றி குமாரன் போற்றி
1833. பிரதான தூதன் எக்காளம் முழங்க
1834. பிரசன்னம் தாரும் தேவனே
1835. பிரசன்னம் தாரும் பிரசன்னம்
1836. பிராண நாதா என்னில் வைத்ததாம்
1837. பிரவேசிப்பேன்

Tamil Hymns

1838. பிரியமானவனே உன் ஆத்துமா
1839. பிறந்தார் ஓர் பாலகன்
1840. பிறந்தார் பிறந்தார் கிறிஸ்து பிறந்தார்
1841. பிறந்தார் பிறந்தார் வானவர்
1842. பிறந்தார் பிறந்தார் பிறந்தார்
1843. பிளவுண்ட மலையே
1844. பின்மாரி பெய்யட்டும் பின்மாரி
1845. பின்மாரி முன்மாரி ஊற்றுமே தேவா
1846. பின் செல்வேன் என் மீட்பரே
1847. புகழும் வேண்டாமே பெயரும் வேண்டாமே
1848. புகழ்கின்றோம் உம்மையே புகழ்கின்றோம்
1849. புதிய கிருபை அளித்திடுமே அனுதின
1850. புதிய நாளுக்குள் என்னை நடத்தும்
1851. புதிய பாடல் பாடி பாடி இயேசு
1852. புதிய வாழ்வு தரும் புனித ஆவியே
1853. புது கிருபை அளித்திடுமே புகலிடமும்
1854. புத்தம் புதிய பாடல் தந்தார் நித்தம்
1855. புத்திக் கெட்டாத அன்பின்
1856. புத்தியாய் நடந்து வாருங்கள்
1857. பூமிக்கொரு புனிதம்
1858. பூமிமீது ஊர்கள் தம்மில்
1859. பூமியின் குடிகளே எல்லோரும் பாடுங்கள்
1860. பூமியின் குடிகளே
1861. பூமியின் குடிகளே கர்த்தரை கெம்பீரமாய்
1862. பூமியின் குடிகளே வாருங்கள் கர்த்தரை
1863. பூமியின் மனிதர்களே மன்னவனை
1864. பூரண அழகுள்ளவரே
1865. பூரண வாழ்க்கையே
1866. பூர்வ பிரமாணத்தை
1867. பூலோகத்தாரே யாவரும்
1868. பூவின் நற்கந்தம்
1869. பெத்தலையில் பிறந்தவரை
1870. பெத்லகேம் ஊரோரம் சத்திரத்தை நாடி
1871. பெத்லகேம் நட்சத்திரம் மின்னுதே
1872. பெத்லகேம் யாத்திரை சென்றே
1873. பெந்தெகொஸ்தே அனுபவம் தாருமே
1874. பெராக்காவில் கூடுவோம்
1875. பெரிய காரியம் செய்திடுவாய்
1876. பெரியவர் எனக்குள்ளே மிகவும்
1877. பெரியவரே ஆராதனை உயர்ந்தவரே
1878. பெருகப்பண்ணுவேன் என்று
1879. பெற்றோர் உன்னை மறந்தாலும்
1880. பெலமுள்ள நகரமாம் இயேசுவண்டை
1881. பெலனில்லா நேரத்தில் புதுபெலன்
1882. பெலன் ஒன்றும் இல்லை தேவா
1883. பெலவீனத்தில் பெலன் நீரே
1884. பெலனே ஆயனே
1885. பேசு சபையே பேசு
1886. பேசும் பேசும் ஜெபம் செய்யும்
1887. பேசும் தெய்வம் நீர் பேசாத
1888. பேரன்பர் இயேசு நிற்கிறார்
1889. பேரின்பம் பேரின்பம் உண்டாம்
1890. பேரின்ப நதியே தாகத்தைத் தீர்த்திட
1891. பேயின் கோஷ்டம் ஊரின் தீழ்ப்பு
1892. பொங்கிவரும் அருள் மனிதரை மாற்றிடுதே
1893. பொங்கி வழியும் தேவ கிருபை
1894. பொருட்கள் மேல கண்ணு போச்சுனா
1895. பொன்னகர் இன்பத்தைப் பெற்றிடுவோம்
1896. பொன்னான இயேசுவை புண்ணிய
1897. பொன்னகர் பயணம் போகும்
1898. பொன்னான நேரம் வெண் பனி தூவும்
1899. போதகர் வந்து விட்டார்
1900. போதுமானவரே புதுமையானவரே
1901. போராடும் என் நெஞ்சமே புகலிடம்
1902. போவாஸ் போவாஸ்
1903. போற்றிடு ஆன்மமே
1904. போற்றிடுவேன் என் இயேசுவையே
1905. போற்றித் துதிப்போம்
1906. போற்றும் போற்றும்
1907. போற்றுவோம் போற்றுவோம்
1908. போற்றுவோமே போற்றுவோமே
1909. போஷிப்பவர் நீரே பாதுகாப்பு நீரே
1910. மகளே சீயோன் மகிழ்ச்சியாலே ஆரிப்பரி
1911. மகனே உன் நெஞ்செனக்குத் தாராயோ
1912. மகா மேன்மையும் அருமையுமான
1913. மகிபனையே அனுதினமே
1914. மகிமை உமக்கன்றோ
1915. மகிமைக்கும் கனத்திற்கும் பாத்திரரே
1916. மகிமை தேசமே எந்தனின் சொந்தமே
1917. மகிமை மாட்சிமை நிறைந்தவரே
1918. மகிமை மேல் மகிமை அடைந்திடுவேன்
1919. மகிமையடையும் இயேசு ராஜனே
1920. மகிமையான பரலோகம் இருக்கையிலே நீ
1921. மகிமையின் தேவனே

Tamil Hymns

1922. மகிமையின் நம்பிக்கையே
1923. மகிமையின் ராஜனே மகத்துவ
1924. மகிமையின் ராஜா மகிமையோடு
1925. மகிழ் கர்த்தாவின் மந்தையே
1926. மகிழ் மகிழ் மந்தையே
1927. மகிழ்ச்சி பண்டிகை கண்டோம்
1928. மகிழ்ச்சியோடு துதிக்கிறோம் மனம்
1929. மகிழ்ந்து களிகூறுங்கள்
1930. மகிழ்ந்து களிகூரு மகனே(ளே)
1931. மகிழ்வோம் மகிழ்வோம்
1932. மங்கள கீதங்கள் பாடிடுவோம்
1933. மங்களம் செழிக்க கிருபை அருளும்
1934. மங்களம் மங்களம் மங்களமே
1935. மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
1936. மணவாளன் கர்த்தர் இயேசு
1937. மண்ணோரை மீட்டிடவே பாரில்
1938. மதுரகீதம் பாடிடுவோம்
1939. மந்தையில் சேரா ஆடுகளே
1940. மரணமே உன் கூர் எங்கே
1941. மரித்தாரே என் ஆண்டவர்
1942. மரித்த இயேசு உயிர்த்து விட்டார்
1943. மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்
1944. மரிப்பாயே ஒரு நாள்
1945. மலரே மலரே
1946. மலைகளெல்லாம் வழிகளாக்குவார்
1947. மலைமா நதியோ
1948. மலைமேல் ஏறி வந்தேன் தகப்பனே
1949. மலைமேல் ஏறுவோம் மரங்களை
1950. மறந்திடாதே நீ
1951. மறவாதே மனமே தேவ சுதனை
1952. மறவார் இயேசு மறவார்
1953. மனதுருகும் தெய்வமே இயேசையா
1954. மனமிரங்கும் தெய்வம் இயேசு
1955. மனமே மகிழ்ந்திடு தினமே ஆர்ப்பரி
1956. மனம் சுத்தி சுத்தி வருதே தானா
1957. மனம் மகிழ்ந்து தினம் புகழ்ந்து
1958. மன்னவா மீட்க வந்த ஜோதியே
1959. மன்னிப்பு அருளும் மாபெரும் அரசே
1960. மன்னுயிர்க்காகத் தன்னுயிர் விடுக்க
1961. மாசில்லாத் தேவ புத்திரன்
1962. மாட்சிமையே தொழுகிறோம்
1963. மாட்சி போரை போரின் ஓய்வை
1964. மாட்சிமை நிறைந்தவரே
1965. மாட்டுத் தொழுவில் கந்தை பொதிந்து
1966. மா தயவே தேவ தயவே
1967. மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம்
1968. மா தூய ஆவி
1969. மாமலை மீதினில் போதகம் கூறும்
1970. மாயையான இந்த உலகினிலே
1971. மாரநாதா இயேசு நாதா
1972. மாலையில் துதிப்போம் மகிழ்வுடனே
1973. மாறாத நல் விசுவாசம் பரன்
1974. மாறிடாதோர் நேச மீட்பர்
1975. மாறிடா எம் மா நேசரே
1976. மாறிடும் எல்லாம் மாறிடும்
1977. மாற்றும் என்னை உந்தன் சாயலாய்
1978. மாற்றீர் என் கவலை
1979. மானிட உருவில் அவதரித்த
1980. மானிடரே போற்றுங்களே
1981. மாநில ஜோதியிவர் கிறிஸ்தேசுவே
1982. மான்கள் நீரோடை வாஞ்சித்து
1983. மான்கள் நீரோடை வாஞ்சிப்பது
1984. மின்னும் வெள்ளங்கி பூண்டு
1985. மீட்பர் இயேசு குருசில் தொங்கினாரே
1986. மீட்பரே உம்மைப் பின் செல்ல
1987. முகமலர்ந்து கொடுப்பவரை கர்த்தர்
1988. முடிவில்லா நித்திய ஜீவனை
1989. முடியாது முடியாது
1990. முடியாதென்று மனம் தளராதே
1991. முதலாவது தேவ இராஜ்யம்
1992. முழங்காலில் நின்று ஜெபிக்க ஆசை
1993. முள்முடி சூடிய ஆண்டவர்
1994. முள்முடி பாரமோ தேவனே
1995. முள்ளுள்ள புதர்
1996. முள்ளுகளுக்குள் ரோஜா மலர் நீரே
1997. முன்னோரின் தெய்வமாம்
1998. மூலைக் கல் கிறிஸ்துவே
1999. மெய் பக்தரே நீர் விழித்தெழும்பும்
2000. மெய் ஜோதியாம் நல் மீட்பரே
2001. மெய்த்தேவனைத் துதி பெருநன்மை
2002. மேக மீதினில் வேகமுடன்
2003. மேகங்கள் நடுவே வழிபிறக்கும்
2004. மேகமே மகிமையின் மேகமே
2005. மேசியா இயேசு ராஜா

2006. மேசியாதான் பொறந்தாச்சு
2007. மேசியாவே மேசியாவே
2008. மேய்ப்பரை வெட்ட ஒனாய்
2009. மேலோக வெற்றி சபையும்
2010. மோட்ச யாத்திரை செல்கின்றோம்
2011. யாக்கோபென்னும் சிறு பூச்சியே
2012. யாக்கோபென்னும் சிறுபூச்சியே பயப்படாதே
2013. யாக்கோபே நீ வேரூன்றுவாய்
2014. யாக்கோபை போல நான்
2015. யாரிலும் மேலான அன்பர்
2016. யாருக்காய் வாழ்கிறாய் நீ
2017. யாருக்குத் தெரியும் உந்தனின் அழைப்பு
2018. யாருண்டு நாதா என்னை விசாரிக்க
2019. யாரை நான் புகழுவேன்
2020. யார் உன்னை மறந்தாலும்
2021. யார் என்னை பிரிக்க கூடும்
2022. யார் என்னை கைவிட்டாலும்
2023. யார் பிடிக்க முடியும் என்
2024. யார் பிரிக்க முடியும் நாதா
2025. யார் யாரோ வாழ்விலே
2026. யார் வேண்டும் நாதா நீரல்லவோ
2027. யுத்தம் செய்வோம் வாரும் கிறிஸ்து
2028. யூத ராஜசிங்கம் உயிர்த்தெழுந்தார்
2029. யூதாவின் இராஜசிங்கம் நீரே
2030. யெஷீவா யெஷீவா என்ற நாமம்
2031. யேகோவா தேவனே யேகோவா
2032. யேகோவா தேவனுக்கு ஆயிரம் நாமங்கள்
2033. யேகோவா ரூவா என் நல்ல மேய்ப்பன்
2034. யேகோவா ஷாலோம் அல்லேலூயா
2035. யெகோவா நிசியே எங்கள் ஜெயக்
2036. யெகோவாயீரே தந்தையாம் தெய்வம்
2037. யெகோவாயீரே நீர் என் தேவனாம்
2038. யேசு நசரையினதிபதியே
2039. யேசுவே என்னுடன் நீ பேசு
2040. யோசனையில் பெரியவரே
2041. யோர்தான் நதியோரம் திகையாதே
2042. யோர்தான் விட்டேறி மனுஷ
2043. ரட்சா பெருமானே பாரும்
2044. ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்
2045. ராச ராச பிதா
2046. ராசாதி ராசன் யேசு யேசு மகா ராசன்
2047. ராயர் மூவர் கீழ்தேசம்
2048. ராஜ ராஜனே தேவ தேவனே
2049. ராஜன் தாவீதூரிலுள்ள
2050. ராஜன் தாவீதின் ஊரினிலே
2051. ராஜன் பாலன் பிறந்தனரே
2052. ராஜா உம் பிரச்னனம் போதுமையா
2053. ராஜாதி ராஜாவாக அரசாளும் தெய்வமே
2054. ராஜாதி ராஜாவைக் கொண்டாடுவோம்
2055. ராஜா வருகிறார் எந்தன் நேசர் வருகிறார்
2056. ரொம்ப ரொம்ப நல்லவரு எங்கள்
2057. ரோஜாப்பூ வாசமலர்கள் நாம்
2058. லேசான காரியம் உமக்கது லேசான
2059. லேவியரே ஆசாரியரே ஆனந்தமாய்
2060. வதியை தேடி ஓடாதே அது
2061. வந்தருளும் தூய ஆவியே
2062. வந்தருள் இவ்வாலயத்தில்
2063. வந்தனம் வந்தனமே
2064. வந்தாளுமே எந்நாளுமே
2065. வரவேணும் எனதரசே
2066. வரவேண்டும் தேவ ஆவியே
2067. வருத்தப்பட்டு பாரம் சுமக்கும் நண்பனே
2068. வருவாய் தருணமிதுவே
2069. வருவார் விழித்திருங்கள்
2070. வருஷப் பிறப்பாம் இன்று
2071. வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை
2072. வல்லமை தாருமே பெலவீனன்
2073. வல்லமை தாரும் தேவா
2074. வல்லமை தேவனே சர்வ சிருஷ்டியின்
2075. வல்லமை தேவா வந்திறங்க
2076. வல்லமை தேவை தேவா
2077. வல்லமை வல்லமை ஆவியே
2078. வல்லமையின் ஆவியானவர்
2079. வழி சொன்னவர் வழியுமானவர்
2080. வழி நடத்தும் வல்ல தேவன்
2081. வழியும் நீரே ஒளியும் நீரே ஜீவனும்
2082. வழியைக் கர்த்தருக்குக் கொடுத்துவிடு
2083. வழிப்போக்கர் எங்கே போறீர்
2084. வறண்ட நிலம் தண்ணீருக்காய்
2085. வற்றாத நீரூற்று பொலிருப்பாய்
2086. வனாந்திர யாத்திரையில் களைத்து நான்
2087. வா என்றழைக்கும் தெய்வ சத்தம்
2088. வா பாவீ மலைத்து நில்லாதே வா
2089. வா எங்கள் ஸ்வாமி வா இந்த நேரத்திலே

Tamil Hymns

2090. வாக்களித்த அனைத்தையும் என்
2091. வாக்குப்பண்ணினவர் மாறிடார்
2092. வாக்குறைத்தவரே நீர் உண்மையுள்ளவரே
2093. வாசலண்டை நின்று ஆசையாய் தட்டும்
2094. வாஞ்சைப்பட்ட இயேசுவே அல்லேலூயா
2095. வாதையுற்ற மீட்பரே
2096. வாதை உந்தன் கூடாரத்தை
2097. வாரா வினை வந்தாலும்
2098. வாருங்கள் என் நேசரே
2099. வாரும் தூய ஆவியே
2100. வாரும் தெய்வ ஆவி வாரும்
2101. வாரும் நாம் எல்லோரும் கூடி
2102. வாரும் தேவா வான சேனைகளுடனே
2103. வாரும் வாரும் மகத்துவ தேவனே
2104. வாருமையா போதகரே
2105. வாலிபன் தன் வழியை எதனால்
2106. வாலிபர்தமக்கூண் அதுவாகும்
2107. வாழ்க எம் தேசமே
2108. வாழ்த்துகிறேன் இயேசு ராஜா
2109. வாழ்த்துகிறோம் வணங்குகிறோம்
2110. வாழ்ந்தாலும் உம்மோடு தான்
2111. வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி
2112. வாழ்வின் முதன்மை இயேசுவுக்கே
2113. வானங்களே மகிழ்ந்து பாடுங்கள்
2114. வானத்தின் வாசலும் திறந்திட
2115. வான தூதர் சேனைகள்
2116. வான பராபரனே
2117. வான மண்டல பொல்லாத சேனைகள்
2118. வானம் திறந்து வல்லமையாக
2119. வானம் மீதிலே என் மன்னன் வருவார்
2120. வானம் போற்றும் உயிர்த்தெழுந்த கர்த்தரை
2121. வானமும் பூமியும் மாறிடினும்
2122. வான ஜோதியாய் இலங்கி
2123. வானம் பூமியோ பராபரன்
2124. வானம் வாழ்த்தட்டும் வையம்
2125. வானாதி வானங்களில்
2126. வானாதி வானவர் நம் இயேசுவை
2127. வானில் காகளம் முழங்கிடவே
2128. வான் புகழ் வல்ல
2129. வான் புறாவே எங்கள் மீது வந்தமர்ந்திடும்
2130. வான் வெள்ளி பிரகாசிக்குதே
2131. வான் நிலவே நீ வா வா
2132. வானோர் ராஜன் பிறந்தார் பிறந்தார்
2133. விசுவாச கப்பல் ஒன்று செல்கின்றது
2134. விசுவாசத்தாலே நாமும் பிழைப்போம்
2135. விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்
2136. விசுவாசியின் காதில்பட
2137. விடியற்காலத்து வெள்ளியே தோன்றி
2138. விடுதலை நாயகன் வெற்றியைத் தருகிறார்
2139. விடுதலை விடுதலை விடுதலை எனக்கு
2140. விடுதலை விடுதலை விடுதலை பெற்றேன்
2141. விண் தூதர் வானில் தோன்றியே
2142. விண் போகும் பாதை தூரமாம்
2143. விண் மண்ணை ஆளும் கர்த்தரே
2144. விண் வாசஸ்தலமாம்
2145. விண்தூதர் போற்றும் வேந்தனே
2146. விண்ணக மேகம் இறங்கணும்
2147. விண்ணக காற்றே நீ என்னை
2148. விண்ணப்பத்தைக் கேட்பவரே என்
2149. விண்ணிலும் மண்ணிலும் உம்மைத்தவிர
2150. விண்ணிலும் மண்ணிலும்
2151. விண்ணில் ஓர் நட்சத்திரம்
2152. விண்ணோர் மகிழ்ந்து பாடும் பாடல்
2153. விண்ணோர்கள் போற்றும் ஆண்டவா
2154. விண்மணி பொன்மணி வித்தக மணியே
2155. விதைப்பும் அறுப்புமே
2156. விந்தை கிறிஸ்தேசு ராசா
2157. விந்தை கிறிஸ்தேசு ராஜா
2158. விருந்து வைப்போமே நல்ல விருந்து
2159. விருந்தைச் சேருமேன்
2160. விழுகுது விழுகுது எரிகோ கோட்டை
2161. விளைந்த பலனை அறுப்பாரில்லை
2162. வினை சூழா திந்த இரவினில்
2163. விஸ்வாசத்தோடு சாட்சி பாகர்ந்தே
2164. வீராதி வீரர் இயேசு சேனை நாங்கள்
2165. வீணையே ஒலித்திடு
2166. வெட்கப்பட்டுப் போவதில்லை
2167. வெள்ளங்கி பூண்டு மாட்சியாய்
2168. வெள்ளை அங்கிகள் தரித்த
2169. வெற்றிக்கொடி பிடித்திடுவோம்
2170. வென்றனரே நம் இயேசு பரன்
2171. வேத புத்தகமே
2172. வேலைக்காரன் கண்கள்
2173. வேறு ஒரு ஆசை இல்ல இயேசு ராஜா

Tamil Hymns

2174. வேறு ஜென்மம் வேணும்
2175. வைகரையில் (காலை நேரம்) உமக்காக
2176. வையகந்தன்னை நடுத்தீர்க்க இயேசு
2177. ஸ்தோத்திரபலி ஸ்தோத்திர பலி
2178. ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே அப்பா
2179. ஸ்தோத்திரம் இயேசு நாதா உமக்கென்றும்
2180. ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை
2181. ஸ்தோத்திரம் பாடிப் போற்றுவேன்
2182. ஸ்தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
2183. ஸ்தோதிரம் செய்வேனே இரட்சகனை
2184. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் இயேசுவுக்கே
2185. ஸ்தோத்தரிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்
2186. ஜகநாதா குருபரநாதா
2187. ஜாதிகளே எல்லோரும் கர்த்தரை
2188. ஜீவத் தண்ணீர் ஊறும் ஊற்றிலே
2189. ஜீவ கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்
2190. ஜீவத்தண்ணீரே ஆவியானவரே
2191. ஜீவ தேவன் வல்லவர் அதிசயம்
2192. ஜீவ வசனங் கூறுவோம்
2193. ஜீவ நதியே எந்தன் உள்ளத்தில்
2194. ஜீவனின் ஊற்றாமே இயேசு பரன்
2195. ஜீவனின் பெலனே
2196. ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும்
2197. ஜீவனுள்ள தேவனே உம்மைத்
2198. ஜீவனுள்ள தேவனே வாரும்
2199. ஜீவனுள்ள நாட்களெல்லாம்
2200. ஜீவனை விட தேவனை நேசிக்கணும்
2201. ஜீவனை பார்க்கிலும் உம் கிருபை
2202. ஜீவன் தந்தீர் உம்மை ஆராதிக்க
2203. ஜீவன் பெலன் சுகம் பாரில்
2204. ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்
2205. ஜெப ஆவி ஊற்றி ஜெபிக்க செய்யும்
2206. ஜெப ஆவி ஊற்றுமையா
2207. ஜெப ஆவி என்னில் ஊற்றும் தேவா
2208. ஜெப சிந்தை எனில் தாரும்
2209. ஜெபத்தின் ஆவலை
2210. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
2211. ஜெபமே ஜெயம் ஜெபம் ஜெயம்
2212. ஜெபமே என் வாழ்வில் செயலாக மாற
2213. ஜெபம் கேட்டீரையா
2214. ஜெபம் கேளும் பதில் தாரும்
2215. ஜெபம் செய்திடுவோம் கண்ணீர்
2216. ஜெபிக்கும் வாஞ்சை எனக்குத் தாரும்
2217. ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு
2218. ஜெயம் ஜெயம் அல்லேலூயா
2219. ஜெயம் உண்டு என்றும் ஜெயம் உண்டு
2220. ஜெயம் ஜெயம் ஜெயம் ஜெயம்
2221. ஜெயித்தாரே ஜெயித்தாரே இயேசு
2222. ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு

1. அக்கினி அக்கினி எழுப்புதல்

அக்கினி அக்கினி எழுப்புதல்
தந்திடும் அக்கினி
அக்கினி அபிஷேகம் தேவா
இப்போ ஊற்றிடுமே

1. பெந்தெகொஸ்தே நாளில் இறங்கிய
பரிசுத்த அக்கினி
இந்த வேளையிலே எங்கள்
மீதே இறங்கட்டுமே

2. மேல்வீட்டறையிலே நிரப்பிய
பரலோக அக்கினி
இந்த வேளையிலே எங்கள்
மீதே இறங்கட்டுமே

3. உன்னத பெலத்தினாலே
எம்மை இடைக்கட்டும் அக்கினி
எங்கள் தேசத்திலே பற்றிப்
பிடித்து பரவட்டுமே

2. அகிலத்தையும் ஆகாயத்தையும்

**அகிலத்தையும் ஆகாயத்தையும்
உந்தன் வல்ல பராக்கிரமத்தாலே
ஆண்டவரே நீர் சிருஷ்டித்தீரே
உந்தன் நல்ல கரத்தினாலே**

**ஆகாதது ஒன்றுமில்லை உம்மால்
ஆகாதது ஒன்றுமில்லை
சர்வ வல்லவரே கனமகிமைக்கு
பாத்திரரே ஆகாதது என்று
ஏதுமில்லை உம்மால்
ஆகாதது ஒன்றுமில்லை**

3. அகோர கஸ்தி பட்டோராய்

1. அகோர கஸ்தி பட்டோராய்
வதைந்து வாடி நொந்து,
குரூர ஆணி தைத்தோராய்
தலையைச் சாய்த்துக்கொண்டு,
மரிக்கிறார் மா நிந்தையாய்!
துன்மார்க்கர் சாகும் வண்ணமாய்
மரித்த இவர் யாவர்?

2. சமஸ்தமும் மா வடிவாய்
சிஷ்டித்து ஆண்டுவந்த,
எக்காலமும் விடாமையாய்
விண்ணோரால் துதிபெற்ற
மா தெய்வ மைந்தன் இவரோ?
இவ்வண்ணம் துன்பப்பட்டாரோ
பிதாவின் திவ்விய மைந்தன்?

3. அநாதி ஜோதி நரனாய்
பூலோகத்தில் ஜென்மித்து,
அரூபி ரூபி தயவாய்
என் கோலத்தை எடுத்து,
மெய்யான பலியாய் மாண்டார்
நிறைந்த மீட்புண்டாக்கினார்
என் ரட்சகர், என் நாதர்.

4. அகோர காற்றடித்ததே

1. அகோர காற்றடித்ததே,
ஆ! சீஷர் தத்தளித்தாரே;
நீரோ நல் நித்திரையிலே
அமர்ந்தீர்.

2. மடிந்தோம்! எம்மை ரட்சிப்பீர்!
எழும்பும் என்க, தேவரீர்;
காற்றை அதட்டிப் பேசினீர்
அமரு.

3. அட்சணமே அடங்கிற்றே
காற்று கடல் - சிசு போலே;
அலைகள் கீழ்ப்படிந்ததே
உம் சித்தம்.

4. துக்க சாகர கோஷ்டத்தில்
ஓங்கு துயர் அடைகையில்
பேசுவீர் ஆற உள்ளத்தில்
அமரு.

5. அக்கினி அபிஷேகம் ஈந்திடும்

அக்கினி அபிஷேகம் ஈந்திடும்
தேவ ஆவியால் நிறைத்திடும்
தேவா தேவா இக்கணமே ஈந்திடும்

1. பரமன் இயேசுவை நிறைத்தீரே
பரிசுத்த ஆவியால் நிறைத்திடும்
உந்தன் சீஷருக்களித்தீரெ
அன்பின் அபிஷேகம் ஈந்திடும்

2. சிம்சோன் கிதியோனை நிறைத்தீரே
கர்த்தரின் வல்லமையால் நிறைத்திடும்
தீர்க்கன் எலிசாவுக் களித்தீரே
இரட்டிப்பின் வரங்களால் நிறைத்திடும்

3. மீட்பர் இயேசுவின் வருகையிலே
நானும் அவரைப் போல் இருக்கவே
மீட்பின் நாளுக்கு முத்திரையாய்
பரிசுத்த ஆவியால் நிறைத்திடும்

4. அன்பர் இயேசுவின் நாமத்திலே
வன் துயர் பேய் பிணி நீங்கவே
அற்புதம் அடையாளம் நிகழ்ந்திடவே
பொற்பரன் ஆவியால் நிறைத்திடும்

5. வானில் இயேசு வருகையிலே
நானும் மறுரூபம் ஆகவே
எந்தன் சாயல் மாறிடவே
மைந்தன் ஆவியால் நிறைத்திடும்

Tamil Hymns

6. அக்கினி காற்றே தேற்றரவாளனே

அக்கினி காற்றே தேற்றரவாளனே
பேரின்ப நதியில் தாகம்
தீர்த்திடும் ஜீவநதியே
ஜீவநதியே என்னில் பாய்ந்து செல்லுமே

வறண்ட நிலத்தில் ஆறுகள் ஓடும்
பாலைவனங்கள் செழிப்பாய் மாறும்
கண்ணீரின் பள்ளத்தாக்குகள் மாறுமே

காடியை போல கசந்திடும் வாழ்க்கை
மதுரமாக மாற்றிடுவாரே
துன்பத்தின் பாதையில் நடக்கின்ற போதும்
பாதையின் வெளிச்சம் அவரே அவரே

7. அக்கினி நெருப்பாய் இறங்கி வாரும்

அக்கினி நெருப்பாய் இறங்கி வாரும்
அபிஷேகம் தந்து வழிநடத்தும் (2)

1. முட்செடி நடுவே தோன்றினீரே
மோசேயை அழைத்து பேசினீரே (2)
எகிப்து தேசத்திற்குக் கூட்டிச் சென்றீரே - (2)
எங்களை நிரப்பிப் பயன்படுத்தும் இன்று (2)
அக்கினி நெருப்பாய் இறங்கி வாரும்

2. எலியாவின் ஜெபத்திற்கு பதில் தந்தீரே
இறங்கி வந்தீர் அக்கினியாய் (2)
இருந்த அனைத்தையும் சுட்டெரித்தீரே - (2)
எங்களின் குற்றங்களை எரித்து விடும் - (2)

3. ஏசாயா நாவை தொட்டது போல
எங்களின் நாவைத் தொட்டருளும் (2)
யாரை நான் அனுப்புவேன் என்று சொன்னீரே - (2)
எங்களை அனுப்பும் தேசத்திற்கு - (2)

4. அக்கினி மயமான நாவுகளாக
அப்போஸ்தலர் மேலே இறங்கி வந்தீரே (2)
அன்னிய மொழியை பேச வைத்தீரே - (2)
ஆவியின் வரங்களால் நிரப்பினீரே - (2)

5. இரவு நேரத்தில் நெருப்புத் தூணாய்
இஸ்ரவேல் ஜனங்களை நடத்தினீரே - (2)
இருண்ட உலகத்தில் உம் சித்தம் செய்திட - (2)
எங்களை நிரப்பும் ஆவியினால் - (2)

Tamil Hymns

8. அக்கினியின் தேவன்

அக்கினியின் தேவன்
எனக்குள்ளே இருக்கிறார்
சர்வ வல்ல தேவன்
எனக்குள்ளே இருக்கிறார் - 2

கலங்கமாட்டேன்
நான் கலங்கமாட்டேன்
வெற்றி எனக்குத்தான் - 2

1. எலியாவின் தேவனே
எனக்குள்ளே இருக்கிறார்
எலிசாவின் தேவனே
எனக்குள்ளே இருக்கிறார் - கலங்க

2. சாத்தானின் சூழ்ச்சி எல்லாம்
இந்த அபிஷேகம் முறிக்குமே – கலங்க

3. என் பாத்திரம் அபிஷேகத்தால்
ரம்பி வழியுமே – கலங்க

9. அசட்டை பண்ணாதே அவித்து

அசட்டை பண்ணாதே அவித்து விடாதே
ஆவியானவர் உனக்குள்ளே
அனல்மூட்டு எரிய விடு
கர்த்தர் மகிமை உன்மேல் உதித்தது
காரிருள் மத்தியில் நித்திய வெளிச்சம் நீ
எழுந்து ஒளி வீசு
நித்திய வெளிச்சம் நீ

1. ஆவியில் நிறைந்து அந்நிய பாஷை
அனுதினம் நீ பேசினால்
வல்லமை வெளிப்படும்
வரங்கள் செயல்படும்

அசட்டை பண்ணாதே அசதியாயிராதே

2. திருவசனம் நீ தினம் தினம் வாசி
சப்தமாய் அறிக்கையிடு
பெருகிடும் உன் ஊற்று
அது நதியாய் பாய்ந்திடும்

3. வெளிச்சம் தேடி அதிகாரக் கூட்டம்
வேகமாய் வருவார்கள் – உன்
(உன்) கண்கள் அதைக் காணும்
(உன்) இதயம் அகமகிழும்

4. நன்றிப்பாடல் ஸ்தோத்திர கீதம்
நாள்தோறும் நீ பாடினால்
கட்டுக்கள் உடைந்திடும்
கதவுகள் திறந்திடும்

5. கேதாரின் ஆடுகள் நெபாயோத்தின் கடாக்கள்
பலிபீடத்தில் ஏறும்
மகிமையின் தேவாலயம்
மகிமைப்படுத்துவேன்

6. சின்னவன் ஆயிரம் சிறியவன்
பலத்த தேசமாய் மாறிடுவான்
துரிதமாய்ச் செய்திடுவார்
ஏற்றகாலத்திலே – கர்த்தர்

10. அசதிக்கொள்ளாதிருங்கள்

அசதிக்கொள்ளாதிருங்கள்
ஜாக்கிறரதையாயிருங்கள்

ஆவியிலே என்றும் அனலாயிருங்கள்
கர்த்தருக்கு தினம் ஊழியம்செய்யுங்கள்
ஜெபத்திலே தினம் உறுதியாயிருங்கள்
உபத்திரவத்தில் என்றும் பொறுமையாயிருங்கள்

மணவாளன் வருகிறார் ஆயத்தப்படுங்கள்
புத்தியுள்ள கன்னிகையைப் போல் இருங்கள்
அவர் வரும் நாழிகையை அறியாதிருக்கையில்
எப்போதுமே என்றும் விழிப்பாயிருங்கள்

கெர்ச்சிக்கும் சிங்கம் போல சுற்றும் சத்துருவை
விசுவாசத்தில் என்றும் எதிர்த்துநில்லுங்கள்
தெளிந்த புத்தியுடன் விழித்திருங்கள்
என்றும் வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள்

மாமிசத்தில் என்றும் வாழாதிருங்கள்
ஆவியின் கனிக்கேற்ப்ப நடந்துக்கொள்ளுங்கள்
சர்வாயுதவர்க்கத்தை தரித்துக்கொள்ளுங்கள்
சத்துருவின் செயல்களை எதிர்த்துநில்லுங்கள்

11. அசைவாடும் ஆவியே

அசைவாடும் ஆவியே
தூய்மையின் ஆவியே
இடம் அசைய உள்ளம் நிரம்ப
இறங்கி வாருமே

1. பெலனடைய நிரப்பிடுமே
பெலத்தின் ஆவியே
கனமடைய ஊற்றிடுமே
ஞானத்தின் ஆவியே --- அசைவாடும்

2. தேற்றிடுமே உள்ளங்களை
இயேசுவின் நாமத்தினால்
ஆற்றிடுமே காயங்களை
அபிஷேக தைலத்தினால் --- அசைவாடும்

3. துடைத்திடுமே கண்ணீரெல்லாம்
கிருபையின் பொற்கரத்தால்
நிறைந்திடுமே ஆனந்தத்தால்
மகிழ்வுடன் துதித்திடவே --- அசைவாடும்

4. அலங்கரியும் வரங்களினால்
எழும்பி ஜொலித்திடவே-தந்திடுமே
கனிகளையும் நிறைவாக இப்பொழுதே

12. அஞ்சாதிரு என் நெஞ்சமே

1. அஞ்சாதிரு, என் நெஞ்சமே,
உன் கர்த்தர் துன்ப நாளிலே
கண்பார்ப்போம் என்கிறார்;
இக்கட்டில் திகையாதிரு,
தகுந்த துணை உனக்கு
தப்பாமல் செய்குவார்.

2. தாவீதும் யோபும் யோசேப்பும்
அநேக நீதிமான்களும்
உன்னிலும் வெகுவாய்
கஸ்தி அடைந்தும், பக்தியில்
வேரூன்றி ஏற்ற வேளையில்
வாழ்ந்தார்கள் பூர்த்தியாய்.

3. கருத்தாய் தெய்வ தயவை
எப்போதும் நம்பும் பிள்ளையை
சகாயர் மறவார்;
மெய்பக்தி உன்னில் வேர்கொண்டால்
இரக்கமான கரத்தால்
அணைத்து பாலிப்பார்.

4. என் நெஞ்சமே, மகிழ்ந்திருபேய், லோகம்
துன்பம் உனக்கு பொல்லாப்புச் செய்யாதே
இம்மானுவேல் உன் கன்மலை அவர்மேல்
வைத்த நம்பிக்கை அபத்தம் ஆகாதே.

13. அடிமை நான் ஆண்டவரே என்னை

அடிமை நான் ஆண்டவரே - என்னை
ஆட்கொள்ளும் என் தெய்வமே
தெய்வமே தெய்வமே
அடிமை நான் ஆட்கொள்ளும்

1. என் உடல் உமக்குச் சொந்தம் -இதில்
எந்நாளும் வாசம் செய்யும்

2. உலக இன்பமெல்லாம் - நான்
உதறித் தள்ளி விட்டேன்

3. பெருமை செல்வமெல்லாம் - இனி
வெறுமை என்றுணர்ந்தேன்

4. வாழ்வது நானல்ல - என்னில்
இயேசு வாழ்கின்றீர்

5. என் பாவம் மன்னித்தருளும் - உம்
இரத்தத்தால் கழுவிவிடும்

6. முள்முடி எனக்காக - ஐயா
கசையடி எனக்காக

7. என் பாவம் சுமந்து கொண்டீர் - என்
நோய்கள் ஏற்றுக் கொண்டீர்

14. அடைக்கலப் பாறையான இயேசுவே

அடைக்கலப் பாறையான இயேசுவே
அறனும் கோட்டையும் ஆன இயேசுவே (2)
நீரே எனது வலிமை நீரே எனது பெருமை
நீரே எனது வாழ்வு இயேசையா (2)

1. தாயின் வயிற்றினிலே பாதுகாப்ப
நீயல்லோ ஆண்டவரே
பிறப்பிலும் வாழ்விலும் நீரே
எனக்கு ஆதாரம் நீயல்லவோ
எந்தன் ஆதாரம் நீயல்லவோ

2. போகும் வழியை விசாலமாக்கி
என் எல்லையைப் பெரிதாக்கினீர்
உயரமான இடத்திலே என்னை நிறுத்தி
மாண்புறச் செய்கின்றீரே
என்னை மாண்புறச் செய்கின்றீரே

15. அடியார் வேண்டல் கேளும் இயேசுவே

1. அடியார் வேண்டல் கேளும், இயேசுவே
உம் பாதம் சேர்ந்தோம் தாசர் இந்நாளே
நல் வீட்டைக் கட்ட நீரே வருவீர்,
உம் ஆசி தேடி வந்தோம் நாங்களே.

2. எங்கள் நல் வீட்டில் நீரே தங்குவீர்
பந்தியில் நீரும் கூட அமர்வீர்.
எங்கள் நற்பேச்சில் நீரும் மகிழ்வீர்,
எங்கள் துன்பத்தை இன்பமாக்குவீர்.

3. பாலனாய் வந்த இயேசு ரட்சகா,
எம் பாலர் முகம் பாரும், நாயகா
தெய்வ கிருபை நற்குணம் நற்செயல்
யாவிலும் இவர் ஓங்கச் செய்வீரே.

4. வாலிபர் நெறி தவறாமலும்,
ஈனர் இழிஞரைச் சேராமலும்,
ஞானமாய் வாழ்ந்து சீலமுடனே
நல் சேவை செய்ய நீர் அருள்வீரே.

5. மூத்தோர் முதியோர் யாரையும் அன்பாய்
காரும், உம் பலம் ஆறுதல் தாரும்
நோயுற்றோர் பலவீனர் யாரையும்
தளர்ச்சி தீர்த்துத் தாபரித்திடும்.

6. எம் வீட்டை இந்நாள் பிரிந்து சென்று
எங்கெங்கோ தங்கும் எல்லாப்பேரையும்
அன்பாய் அணைத்து ஆதரித்திடும்
அவரைக் காத்து அல்லும் பகலும்.

7. ஆண்டாண்டாய் எங்கள் வீடு வளர,
ஆவியில் அன்பில் என்றும் பெருக,
எங்கள் நல் நாட்டில் இன்ப இல்லங்கள்
இயேசுவின் வீடாய் என்றும் பொலிக.

16. அடியேன் மனது வாக்கும்

1. அடியேன் மனது வாக்கும் கொடிய நடத்தையுமே
ஆவியால் சீர்ப்படுத்தும் ஸ்வாமீ!

2. உமக்கே யான் சொந்தம் தீயோர் தமக் கந்நியனாய்ப்போக
உதவும் எளியேனுக்கென் ஸ்வாமீ!

3. அன்பின் வடிவே! பாவத் துன்பம் இல்லாமல் வாழ
அடைந்தேன் உமை யான் சேரும் ஸ்வாமீ!

4. நீரே எனக்கு வேண்டும் தாரணி முற்றும் வேண்டாம்
நீசனை ஆட் கொள்ளும் என் ஸ்வாமீ!

5. பூமியில் வசித்தும் நீர் தாமே எனது வாஞ்;சை
புகலிடம் அளியும் என் ஸ்வாமீ!

6. சஞ்சல மேதெனக்கு? பஞ்சம் படைகளேது?
தஞ்சம் நீர் தாம் எனக்கென் ஸ்வாமீ!

7. விண்ணி லோரிடமும் யான் மண்ணுலகை வெறுக்க
மெய்த் தவமும் தாரும் என் ஸ்வாமீ!

17. அடைக்கலமே உமதடிமை நானே

அடைக்கலமே உமதடிமை நானே
ஆர்ப்பரிப்பேனே அகமகிழ்ந்தே
கர்த்தர் நீர் செய்த நன்மைகளையே
நித்தம் நித்தம் நான் நினைப்பேனே

1. அளவற்ற அன்பினால் அணைப்பவரே
எண்ணற்ற நன்மையால் நிறைப்பவரே
மாசில்லாத நேசரே மகிமைப் பிரதாபா
பாசத்தால் உம் பாதம் பற்றிடுவேனே --- ஆ

2. கர்த்தரே உம் செய்கைகள் பெரியவைகளே
சுத்தரே உம் செயல்கள் மகத்துவமானதே
நித்தியரே உம் நியாயங்கள் என்றும் நிற்குமே
பக்தரின் பேரின்ப பாக்கியமிதே --- ஆ

3. என்னை என்றும் போதித்து நடத்துபவரே
கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுபவரே
நடக்கும் வழிதனைக் காட்டுபவரே
நம்பி வந்தோனைக் கிருபை சூழ்ந்துக்கொள்ளுதே --- ஆ

4. கரம் பற்றி நடத்தும் கர்த்தர் நீரல்லோ
கூப்பிட்ட என்னை குணமாக்கினீரல்லோ
குழியில் விழாதபடி காத்துக்கொண்டீரே
அழுகையைக் களிப்பாக மாற்றி விட்டீரே --- ஆ

5. பாவங்களைப் பாராதென்னைப் பற்றிக் கொண்டீரே
சாபங்களை நீக்கி சுத்த உள்ளம் தந்தீரே
இரட்சணியத்தின் சந்தோஷத்தை திரும்பத் தந்தீரே
உற்சாக ஆவி என்னைத் தாங்கச் செய்தீரே --- ஆ

18. அடைக்கலம் அடைக்கலமே இயேசுநாதா

அடைக்கலம் அடைக்கலமே, இயேசு நாதா, உன்
அடைக்கலம் அடைக்கலமே!

திடனற்றுப் பெலனற்றுன் அடியுற்றழும் ஏழைக்கு --- அடைக்கலம்

1. ஆசையோடு பாவமதில் அலைந்து திரிந்தேனே,
அன்புள்ள பிதா உனை விட்டகன்று பிரிந்தேனே;
மோசமதை யேயலால் மற்றொன்றையும் காணாமலே
தோஷமோடு சேர்ந்தனன் துரத்திடாது சேர்த்தருள்! ---அடைக்கலம்

2. கட்டுப்படாக் காயமதின் கெட்ட ரணம் போலவே
மட்டுப்படாப் பாவமதில் மயங்கி உறங்கினேன்;
கெட்டவனே போவெனக் கிளத்தினும் நியாயமே,
கிட்டிவந்தலறும் ஏழை கெஞ்சுதல் கேளய்யனே! --- அடைக்கலம்

3. சிந்திய உதிரமதும் ஐந்து திருக்காயமும்
நொந்துருகெனதுமனச் சஞ்சலமகற்றிடும்;
பந்தமிகும் பாவி என்றன் கெஞ்சிடுங் கரத்தினை
எந்தவிதமுந் தள்ளாமல் இரங்கிடு மையனே! --- அடைக்கலம்

4. என்னிடத்தில் வருவோரை எந்தவிதமும் தள்ளேன்
என்று சொன்ன வாக்கதனில் எனக்கும் பங்கில்லையோ
அன்றுனது பக்கமதில் ஆகியிருந்த கள்ளனுக்கு
இன்றுபர தீசிலிருப்பா யென்றுரைத்தா யல்லவோ? --- அடைக்கலம்

19. அதி சீக்கிரத்தில் நீங்கிவிடும்

அதி சீக்கிரத்தில் நீங்கிவிடும்
இந்த லேசான உபத்திரவம்

சோர்ந்து போகாதே - நீ

1. உள்ளார்ந்த மனிதன் நாளுக்கு நாள்
புதிதாக்க படுகின்ற நேரமிது --- சோர்ந்து

2. ஈடு இணையில்லா மகிமை
இதனால் நமக்கு வந்திடுமே --- சோர்ந்து

3. காண்கின்ற உலகம் தேடவில்லை
காணாதப் பரலோகம் நாடுகிறோம் --- சோர்ந்து

4. கிறிஸ்துவின் பொருட்டு நெருக்கப்பட்டால்
பாக்கியம் நமக்கு பாக்கியமே --- சோர்ந்து

5. மன்னவன் இயேசு வருகையிலே
மகிழ்ந்து நாமும் களிகூருவோம் --- சோர்ந்து

6. மகிமையின் தேவ ஆவிதாமே
மண்ணான நமக்குள் வாழ்கின்றார் --- சோர்ந்து

Tamil Hymns

20. அதிமங்கல காரணனே

அதி-மங்கல காரணனே, துதி-தங்கிய பூரணனே, நரர்
வாழ விண் துறந்தோர் ஏழையாய்ப் பிறந்த
வண்மையே தாரணனே!
சரணங்கள்

1. மதி-மங்கின எங்களுக்கும்,
திதி-சிங்கினர் தங்களுக்கும்
உனின் மாட்சியும் திவ்விய காட்சியும்
தோன்றிடவையாய் துங்கவனே --- அதி-மங்கல

2. முடி-மன்னர்கள் மேடையும்,
மிகு-உன்னத வீட்டையும் நீங்கி
மாட்டிடையே பிறந் தாட்டிடையர் தொழ,
வந்தனையோ தரையில்? --- அதி-மங்கல

3. தீய-பேய்த்திரள் ஓடுதற்கும்,
உம்பர்-வாய்த்திரள் பாடுதற்கும், உனைப்
பின்பற்றுவோர் முற்றும் துன்பற்று வாழ்வதற்கும்
பெற்ற நற்கோலம் இதோ? --- அதி-மங்கல

21. அதிகாலை இயேசு வந்து

1. அதிகாலை இயேசு வந்து
கதவண்டை தினம் நின்று
தட்டித் தமக்குத் திறந்து
இடம் தரக் கேட்கிறார்.

2. உம்மை நாங்கள் களிப்பாக
வாழ்த்தி: நேசரே, அன்பாக
எங்களண்டை சேர்வீராக
என்று வேண்டிக்கொள்ளுவோம்.

3. தினம் எங்களை நடத்தி,
சத்துருக்களைத் துரத்தி,
எங்கள் மனதை எழுப்பி,
நல்ல மேய்ப்பராயிரும்.

4. தாழ்ச்சி நாங்கள் அடையாமல்,
நம்பிக்கையில் தளராமல்
நிற்க எங்களுக்கோயாமல்
நல்ல மேய்ச்சல் அருளும்.

5. ஆமேன், கேட்டது கிடைக்கும்
இயேசு இன்றும் என்றென்றைக்கும்
நம்மைக் காப்பார் அவர் கைக்கும்
எல்லாம் ஒப்புவிக்கிறோம்.

22. அதிகாலை தினம் தேடியே

அதிகாலை தினம் தேடியே
உம் முகத்தினில் விழித்திடுவேன்
புதுக் கிருபை அதைத் தேடியே
உம் பாதத்தில் அமர்ந்திடுவேன்

ஆனந்தம் பேரின்பம் என்
அன்பரின் பாதத்திலே
ராஜா அல்லேலூயா-என்
தேவா அல்லேலூயா

1. கரங்களை விரித்து கர்த்தரைப் பார்த்து
காலையில் பணிந்திடுவேன்
கவலையை மறந்து மகிழ்வுடன் இருந்து
மகிமையை செலுத்திடுவேன் - பாதத்திலே
முகம் பரித்து முத்தங்கள் செய்திடுவேன்

2. கதிரவன் வரும் முன் கர்த்தரை தேட
கண்களும் விழித்திடுதே - உம் மனம்
குளிர என் மனம் பாட ஆயத்தமாகிடுதே
உம் வசனம் தியானித்திட
என் உள்ளம் காத்திடுதே

3. கண்ணிமை நேரம் உம்மை
மறவாமல் கருத்தாய் நினைத்திடவே
கனிவாய் இரங்கி கருனை ஈந்து
கரத்தால் அணைதிடுமே
நாள் முழுவதும் வல்லமையால்
நிதமும் நனைத்திடுமே

Tamil Hymns

23. அதிகாலை நேரம் (அரசாளும் தெய்வம்)

அப்பா உம் பாதம் ஆர்வமாய் வந்திருக்கிறேன்
உம் நாமம் சொல்லி ஓய்வின்றிப் பாடி
உள்ளம் மகிழ்ந்திருப்பேன்

1. கூக்குரல் கேட்பவரே நன்றி நன்றி ஐயா
குறைகளைத் தீர்ப்பவரே நன்றி நன்றி ஐயா

2. பெலனே கன்மலையே
பெரியவரே என் உயிரே

3. நினைவெல்லாம் அறிபவரே
நிம்மதி தருபவரே

4. நலன்தரும் நல்மருந்தே
நன்மைகளின் ஊற்றே

5. மரணத்தை ஜெயித்தவரே நன்றி நன்றி ஐயா
மன்னா பொழிந்தவரே நன்றி நன்றி ஐயா

6. விண்ணப்பம் கேட்பவரே
கண்ணீர் துடைப்பவரே

24. அதிகாலை ஸ்தோத்திர பலி

அப்பா அப்பா உங்களுக்குத் தான்
ஆராதனை ஸ்தோத்திர பலி
அப்பா அப்பா உங்களுக்குத் தான் - 2

1. எபிநேசர் எபிநேசர் இதுவரை உதவி செய்தீர்
இதுவரை உதவி செய்தீர் எபிநேசர் எபிநேசர்

2. பரிசுத்தர் பரிசுத்தர் பரலோக ராஜாவே
பரலோக ராஜாவே பரிசுத்தர் பரிசுத்தர்

3. எல்ஷடாய் எல்ஷடாய் எல்லாம் வல்லவரே
எல்லாம் வல்லவரே எல்ஷடாய் எல்ஷடாய்

4. எல்ரோயி எல்ரோயி என்னை காண்பவரே
என்னை காண்பவரே எல்ரோயி எல்ரோயி

5. யேகோவா யீரே எல்லாம் பார்த்துக் கொள்வீர்
எல்லாம் பார்த்துக் கொள்வீர் யேகோவா யீரே

6. அதிசய தெய்வமே ஆலோசனை கர்த்தரே
ஆலோசனை கர்த்தரே அதிசய தெய்வமே

7. யேகோவா ஷம்மா எங்களோடு இருப்பவரே
எங்களோடு இருப்பவரே யேகோவா ஷம்மா

8. யேகோவா ஷாலோம் சாமாதானம் தருகிறீர்
சாமாதானம் தருகிறீர் யேகோவா ஷாலோம்

9. யேகோவா நிசியே எந்நாளும் வெற்றி தருவீர்
எந்நாளும் வெற்றி தருவீர் யேகோவா நிசியே

10. யேகோவா ர◌ஃப்பா சுகம் தரும் தெய்வம்
சுகம் தரும் தெய்வம் யேகோவா ர◌ஃப்பா

Tamil Hymns

25. அதிகாலையிலுமைத் தேடுவேன் முழு

அதிகாலையிலுமைத் தேடுவேன் முழு மனதாலே
தேவாசீர் வாதம் பெற நாடுவேன் ஜெப தபத்தாலே

இதுகாறும் காத்த தந்தை நீரே;
இனிமேலும் காத்தருள் செய்வீரே,
பதிவாக உம்மிலே நான் நிலைக்கவே,
பத்திரமாய் எனை உத்தமனாக்கிடும், தேவே! --- அதிகாலை

1. போனராமுழுவதும் பாதுகாத்தருளின போதா!
எப்போதும் எங்களுடனிருப்பதாய் உரைத்த நல் நாதா!
ஈனப்பாவிக் கேதுதுணை லோகிலுண்டு பொற்பாதா?
எனக்கான ஈசனே! வான ராசனே!
இந்த நாளிலும் ஒரு பந்தமில்லாமல் காரும் நீதா! --- அதிகாலை

2. பலசோதனைகளால் சூழ்ந்துநான் கலங்கிடும்போது
தப்பாது நின்கிருபை தாங்கிட வேணும் அப்போது,
விலகாது என்சமூகம் என்ற வாக்கில் தவறேது?
விசுவாசங் கொண்டு மெய்ப் பாசமூண்டிட
விக்கினம் யாவிலும் வெற்றி காணுவேன் மலைவேது? --- அதிகாலை

3. நரர்யாவர்க்குமுற்ற நண்பனாய் நடந்திட வையே!
தீநாவின் பாவமற நன்மைகள் மொழிந்திடச் செய்யே!
பரலோக ஆவியைநல் மாரி போலெனிலே பெய்யே!
புகழார நாதனே! வேத போதனே!
பூரணமாய் உனைப் போற்றுவேன், தினந் தினம் மெய்யே! --- அதிகாலை

Tamil Hymns

26. அதிகாலையில் உம் திருமுகம் தேடி

அதிகாலையில் உம் திருமுகம் தேடி
அர்ப்பணித்தேன் என்னையே
ஆராதனை துதி ஸ்தோத்திரங்கள்
அப்பனே உமக்குத் தந்னே
ஆராதனை ஆராதனை
அன்பர் இயேசு ராஜனுக்கே
ஆவியான தேவனுக்கே

அன்பு நேசரே உம் திருமுகம் தேடி
அர்ப்பணித்தேன் என்னையே

1. இந்தநாளின் ஒவ்வொரு நிமிடமும்
உந்தன் நினைவால் நிரம்ப வேண்டும்
என் வாயின் வார்த்தை எல்லாம்
பிறர் காயம் ஆற்ற வேண்டும்

2. உந்தன் ஏக்கம் விருப்பம் எல்லாம்
என் இதயத்துடிப்பாக மாற்றும்
என் ஜீவ நாட்கள் எல்லாம்
ஜெப வீரன் என்று எழுதும்

3. சுவிசேஷ பாரம் ஒன்றே
என் சுமையாக மாற வேண்டும்
என் தேச எல்லையெங்கும்
உம் நாமம் சொல்ல வேண்டும்

4. உமக்குகந்த தூயபலியாய்
இந்த உடலை ஒப்புக்கொடுத்தேன்
ஆட்கொண்டு என்னை நடத்தும்
அபிஷேகத்தாலே நிரப்பும்

27. அதிகாலையில் சூரியனை

1. அதிகாலையில் சூரியனை பார்க்கையிலே
என் தேவன் உறங்காதவர் என்று நான் அறிவேன்
நான் குருவிகள் குரலை கேட்கையில் என் தேவனும் கேட்கிறார்
என் பயமறிவார் கண்ணீர் காண்பார் அழுகையும் துடைத்திடுவார்

2. எனக்கொரு தேவன் உண்டு
அவர் என்னை காண்கின்றார் - அவர்
என்றென்றும் என்னை காண்கின்றார்
என்னை காண்கின்றார்

3. எல்ரோயீ எனை காணும் தேவனே - (2)
(என்னை காணும் தேவன்)
எல்ரோயீ எனை காணும் தேவனே - (2)
(என்னை காண்கின்ற தேவன்)

4. மேகம் கடப்பதை காண்கையில் நான் மனதில் ஜெபிக்கின்றேன்
இந்த உலகத்தின் மாயைகள் என்னை மேற்கொள்ளக் கூடாது
நதிகள் புரள்வதை காண்கையில் நான் எதற்கும் அஞ்சிடேன்
அவர் அன்பு என்றும் மாறாது என்றும் நமக்குண்டு

28. அதிகாலையில் பாலனை தேடி

அதிகாலையில் பாலனை தேடி
செல்வோம் நாம் யாவரும் கூடி
அந்த மாட்டையும் குடில் நாடி
தேவ பாலனை பணிந்திட வாரீர்
வாரீர் வாரீர் வாரீர்
நாம் செல்வோம்

1. அன்னைமா மரியின் மடிமேலே
மன்னன் மகவாகவே தோன்ற
விண் தூதர்கள் பாடல்கள் பாட
விரைவாக நாம் செல்வோம் கேட்க --- அதி

2. மந்தை ஆயர்கள் யாவரும் அங்கே
அந்த மன்னவன் முன்னிலை நின்றே
தம் கந்தை குளிர்ந்திட போற்றும்
நல்ல காட்சியை கண்டிட வாரீர் --- அதி

29. அதிசயங்கள் செய்கிறவர் நம்

அதிசயங்கள் செய்கிறவர் நம்
அருகில் இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர் என்றும்
நமக்குள் வசிக்கிறார்

1. தண்ணீரை ரத்தமாய் மாற்றினார் அதிசயம்
வெறும் தண்ணீரை திராட்சை ரசமாய்
மாற்றினார் அதிசயம்

2. செங்கடலை இரண்டாக பிரித்திட்டார் அதிசயம்
புயல் காற்றைத் தம் ஆணையாலே
அடக்கினார் அதிசயம்

3. குருடருக்கும் செவிடருக்கும் சுகம் தந்தார் அதிசயம்
ஒரு சொல்லாலே மரித்தோரை
எழுப்பினார் அதிசயம்

4. பாவியான என்னையும் உயர்த்தினார் அதிசயம்
ஏழை என்மீதும் நேசக்கரம்
நீட்டினார் அதிசயம்

30. அதிசயங்களை எல்லா இடமும் செய்யும்

1. அதிசயங்களை எல்லா இடமும் செய்யும்
கர்த்தாவை, வாக்கினால் இருதயத்திலேயும்
துதியுங்கள்; அவர் நாம் ஜென்மித்த நாளே
முதல் இம்மட்டுக்கும் இரக்கம் செய்தாரே.

2. நர தயாபரர் முடிய ஆதரித்து,
நற்சமாதானத்தால் மகிழ்ச்சியை அளித்து,
தயையை நம்முட மேல் வைத்தெந்நேரமும்
ரட்சித்து, தீமையை எல்லாம் விலக்கவும்.

3. உன்னதமாகிய விண்மண்டலத்திலுள்ள,
மாறாத உண்மையும் தயையும் அன்புள்ள
பிதா சுதனுக்கும் திவ்விய ஆவிக்கும்
எத்தேச காலமும் துதி உண்டாகவும்.

31. அதிசயமான ஒளிமய நாடாம்

அதிசயமான ஒளிமய நாடாம்
நேசரின் நாடாம் - நான்
வாஞ்சிக்கும் நாடாம் -என்

1. பாவம் இல்லாத நாடு
ஒரு சாபமும் காணா நாடு
நித்திய மகிழ்ச்சி ஓயாத கீதம்
உன்னதத்தில் ஓசன்னா அல்லேலூயா

2. சந்திர சூரியன் இல்லை
ஆனால் இருள் ஏதும் காணவில்லை
தேவ குமாரன் ஜோதியில் ஜோதி
நித்திய வெளிச்சமாவார் - என்றும் பகல்

3. விதவிதக் கொள்கை இல்லை
பலப் பிரிவுள்ள பலகை இல்லை
ஒரே ஒரு குடும்பம் ஒரே ஒரு தலைவர்
எங்குமே அன்பு மயம் - அன்புள்ளோர் செல்லும்

4. பிரச்சனை ஏதும் இல்லை
வீண் குழப்பங்கள் ஒன்றும் இல்லை
மொழி , நிறம் , ஜாதி பற்று உடையோர்
எவருமே அங்கு இல்லை

5. கடைத்தெரு ஏதும் இல்லை
தொழிற்சாலைகள் ஒன்றும் இல்லை
தரித்திரர் , செல்வர் ,சிறியவர் , பெரியோர்
ஆகிய சிறப்பும் இல்லை - எல்லாம் சமம்

6. பல பலத் திட்டம் இல்லை - ஆளும்
சட்டங்கள் ஏதுமில்லை
காவல் துறையில்லை, கண்டிப்பும் இல்லை
மனிதனின் ஆட்சி இல்லை - பேரானந்தம்

7. இயேசுவின் இரத்தத்தினால் - பாவம்
கழுவினால் செல்லலாமே
இத்தனை பெரிய சிலாக்கியம் இழப்போர்
பூமியில் எவரும் வேண்டாம் - இன்றே வாரீர்

Tamil Hymns

32. அதிசயம் அற்புதம் உம் மகா அன்பு

அதிசயம் அற்புதம் உம் மகா அன்பு
சிலுவையில் உம் கிருபையை கண்டேன்
உம் அழகினை என் வாழ்வினில் புரிய இயலாது
நீர் மகிமையும் அழகுமானவர்

அழகே அன்புகூருவேன் அழகே ஆராதிப்பேன்
அழகே என்னாத்மா உம்மைப் பாடும் (2)

1. உம் மகிமையின் வல்லமை பூமி எங்கிலும்
உம் கிரியைகள் இவ்வுலகு காணுதே
உம் மாட்சிமையின் அழகினால் என் ஆத்மா பாடுமே
நீர் சிறந்தவர் அற்புதமானவர்

அழகே அன்புகூருவேன் அழகே ஆராதிப்பேன்
அழகே என்னாத்மா உம்மைப் பாடும் (2)

2. உம் அற்புதத்தை கான செய்தீர்
உம் அன்பினால் கவர்ந்தீர்
இவ்வுலகிலே உம்மைப் போல் அழகில்லை (2)

அழகே அன்புகூருவேன் அழகே ஆராதிப்பேன்
அழகே என்னாத்மா உம்மைப் பாடும் (2)

Athisayam Arputham um maghaa anbu
Siluvaiyil um kirubaiyai kandaen
Um azhaginai en vaazhvinil puriya iyalaadhu
Neer magimaiyum azhagumaanavar

Azhage anbukooruven azhage aaraadhipaen
Azhage enaathmaa ummai paadum (2)

1. Um magimaiyin vallamai boomi engilum
Um kiriyaigal ivvulagu kaanudhae
Um maatchimaiyin azhaginaal en aathmaa paadumae
Neer Sirandhavar arpudhamaanavar

Azhage anbu kooruven azhage aaraadhipaen
Azhage enaathmaa ummai paadum (2)

2. Um arppudhaththai kaana seidheer
Um anbinaal kavarndheer
Ivvulagilae ummai paol azhagillai (2)

33. அதிசயம் செய்வார் தேவன்

1. அதிசயம் செய்வார் தேவன்
அற்புதம் செய்வார் இயேசு
ஆண்டவர் வாக்கை நம்பு
நிச்சயம் வாழ்வு உண்டு

வெட்கப்பட்டுப் போவதில்லை (4)

2. இழந்ததைத் திரும்ப தருவார்
தேசம் தன் பலனைக் கொடுக்கும்
கர்த்தர் நன்மை அருள்வார்
என்றும் துதித்திடுவாய் --- வெட்கப்பட்டு

3. களங்கள் தானியத்தால் நிரம்பும்
எண்ணெயும் ரசமும் வழியும்
வஸ்துக்கள் நிரம்பிய வீடும்
தோட்டங்கள் துரவுகள் தருவார் --- வெட்கப்பட்டு

4. தேவனின் வாக்கை நம்பு
திரும்பப் பெற்றுக் கொள்வாய்
உன்னதர் உன்னோடு உண்டு
திருப்தியாக வாழ்வாய் --- வெட்கப்பட்டு

தடைகள் தகர்ந்து போகும் (4)
ஆண்டவர் வாக்கு பலிக்கும் (4)

Tamil Hymns

34. அதிசீக்கிரத்தில் நீங்கிவிடும்

இந்த லேசான உபத்திரவம்
சோர்ந்து போகாதே - நீ

1. உள்ளார்ந்த மனிதன் நாளுக்கு நாள்
புதிதாக்க படுகின்ற நேரமிது

2. ஈடு இணையில்லா மகிமை
இதனால் நமக்கு வந்திடுமே

3. காண்கின்ற உலகம் தேடவில்லை
காணாதப் பரலோகம் நாடுகிறோம்

4. கிறிஸ்துவின் பொருட்டு நெருக்கப்பட்டால்
பாக்கியம் நமக்கு பாக்கியமே

5. மன்னவன் இயேசு வருகையிலே
மகிழ்ந்து நாமும் களிகூருவோம்

6. மகிமையின் தேவ ஆவிதாமே
மண்ணான நமக்குள் வாழ்கின்றார்

35. அதோ ஓர் ஜீவ வாசலே

1. அதோ! ஓர் ஜீவ வாசலே!
அவ்வாசலில் ஓர் ஜோதி
எப்போதும் வீசுகின்றதே,
மங்காத அருள்ஜோதி.

ஆ! ஆழ்ந்த அன்பு இதுவே!
அவ்வாசல் திறவுண்டதே!
பாரேன்! பாரேன்!
பார்! திறவுண்டதே.

2. அவ்வாசலுள் பிரவேசிப்போர்
கண்டடைவார் மெய்வாழ்வும்
கீழோர், மேலோர்,இல்லோர்,உள்ளோர்,
எத்தேச ஜாதியாரும்.

3. அஞ்சாமல் அண்டிச் சேருவோம்,
அவ்வாசலில் உட்செல்வோம்;
எப்பாவம் துன்பும் நீங்கிப்போம்,
கர்த்தாவைத் துதிசெய்வோம்.

36. அத்திமரம் துளிர் விடாமற் போனாலும்

அத்திமரம் துளிர் விடாமற் போனாலும்
திராட்சச்செடி பழம் கொடாமற் போனாலும்

1. ஒலிவமரம் பலனற்றுப் போனாலும்
வயல்களிலே தானியம் இன்றிப் போனாலும்

2.மந்தையிலே முதலற்றுப் போனாலும்
தொழுவத்திலே மாடுகளின்றிப் போனாலும்

3. நதிகளிலே தண்ணீர் வற்றிப் போனாலும்
நாவறண்டு நான் மயங்கி வீழ்ந்தாலும்
உடலழிந்து உயிர் பிரிந்து போனாலும்

4. வீட்டினிலே பணமின்றி போனாலும்
நிந்தனையும் துன்பங்களும் வந்தாலும்
தீமையான பொய்மொழி சொன்னாலும்

37. அத்திமரம் போல் எத்தனை பேர்கள்

அத்திமரம் போல் எத்தனை பேர்கள் வாழுகிறார்கள்?
தினம் அர்த்தமில்லாமல் கர்த்தர் இல்லாமல் வாழுகிறார்கள்?

1. பார்க்க பார்க்க அழகாய் இருந்தது அத்திமரம்
இயேசு ஆசையோடு கனியைத் தேடினார் ஏமாற்றம்
இப்படித்தானே மனிதர்கள், வாழும் வாழ்க்கை பல வேஷம்

2. மனிதனை மட்டும் நம்புவதாலே பயனில்லை ஆனால்
இறைவனை மட்டும் நம்பிடுவாய் துன்பமில்லை
கவலைகள் எல்லாம் போக்கிடுவார், கண்ணீர் எல்லாம் துடைத்திடுவார்.

3. ஊருக்குள்ளே உத்தமர் போல் நடிப்பார்கள்
ஆனால் உண்மையிலே அத்தி மரம் போல் இருப்பார்கள்
பேசுவதெல்லாம் வேதங்கள், போடுவதெல்லாம் வேஷங்கள்

4. ஊருக்கு எல்லாம் உபதேசங்கள் செய்தாலும்
வெறும் புகழுக்காக தான தர்மம் செய்தாலும்
அன்பு அதிலே இல்லையென்றால், வாழ்ந்து என்ன லாபம் தான்

Tamil Hymns

38. அந்தகார வல்லமைகளை

1. அந்தகார வல்லமைகளை
தேவ பெலத்தால் முறியடிப்பேன்
இயேசுவின் இரத்தம் எந்தன் பாதுகாவல்
பயமில்லை வெற்றி எனக்கே - என்றும் (2)

போராயுதம் தரிப்பேன்
போர் செய்வேன், ஜெயம் பெறுவேன்

2. சேனைகளின் கர்த்தர் நாமத்தில்
பெரும் மதில்களைத் தாண்டிடுவேன் (2)
ஆகாய மண்டல லோகாதிபதிகள்
நடுங்கியே மறைந்திடுவான் - பயந்து

3. சர்ப்பங்களை மிதித்திடவும்
பெருந் தேள்களை நசுக்கிடவும்
அதிகாரமுண்டு, வல்லமையுண்டு
தோல்வியில்லை ஜெயமெனக்கே என்றும்

4. வெள்ளம்போல் சாத்தான் வந்தாலும்
தூய ஆவியாலே கொடியேற்றுவேன் (2)
ஆவியின் பட்டயம் வேதத்தின் வசனம்
சாத்தானை வீழ்த்திடுமே - வஞ்சக

39. அந்த நாள் இன்ப இன்ப இன்ப நாள்

அந்த நாள் இன்ப இன்ப இன்ப நாள்
எங்கள் இயேசு ராஜன்
வானில் தோன்றும் நாள்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

1. இந்தப் பூமி வெந்துருகி சாம்பலாகுமே
சிந்தித்து மனந்திரும்பி அவரை அண்டிக்கொள்
விரைவுடன் ஓடி வா விண்ணிலே சேரவே
வேகமாய் வேகமாய் வேகமாய்

2. கஷ்டம் நஷ்டம் பட்டபாடு பறந்து போகுமே
பஞ்சம் பசி தாகமுமே மறைந்து போகுமே
வாதை நோய் துன்பமும் வருத்தங்கள்
யாவுமே நீங்குமே நீங்குமே நீங்குமே

3. ஆட்டுக்குட்டி பின்னே போவார் பாட்டு பாடுவார்
பரவசங்கள் சூழ்ந்து மிக ஆட்டம் ஆடுவார்
ஆனந்தம் என்றுமே ஆர்ப்பரிப்போம்
அவரையே ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்

4. புதிய வானம் புதிய பூமி தோன்றும் நாளிலே
நித்ய காலம் நாமுமங்கே வாழ்வோமென்றுமே
தூதர்கள் யாவரும் சேவைகள் புரிவாரே
என்றுமே என்றுமே என்றென்றுமே

5. பாவமற்ற பரிசுத்தரின் ராஜ்யமதிலே
பாலகர்கள் போல நாமும் பார்க்கப்படுவோமே
பாலுடன் தேனுமாய் பழரசம் பாங்குடன்
பருகுவோம் பருகுவோம் பருகுவோம்

Tamil Hymns

40. அந்த நாள் நெருங்கிடுதே

1. அந்த நாள் நெருங்கிடுதே
ஆயத்தமாகியே பறந்திடுவோம்
இந்த வனாந்திர யாத்திரை முடித்து
இயேசுவுடன் நிதம் வாழ்ந்திடுவோம்

2. திருடனைப்போல் அவர் வருகை
தீவிரமாய் மிக நெருங்கிடுதே
ஆயத்தமில்லா அவனியில் உள்ளோர்
அழுது புலம்பி கதறுவாரே -தேவன்

3. இருள் சூழும் வேளை நெருங்கிடுதே
இனி வரும்காலமோ நமக்கு இல்லை
பூரணமாக கடந்திடுவோம்நாம்
பரனோடு நித்தியம் வாழ்ந்திடுவோம்

4. மணவாளன் தட்டும் குரல் கேட்டு
மகிமையில் நாமும் சேர்ந்திடுவோம்
பரிசுத்த ஆவியின் நிறைவுடன் வாழ்ந்து
பரமனின் இராஜ்ஜியம் சேர்ந்திடுவோம்

5. நினையா வேளையில் வந்திடுவார்
நித்திரை மயக்கம் களைந்திடுவோம்
நீதியின் இராஜனை முகமுகமாய்
நாம் நித்தியமாக தரிசிப்போமே

41. அந்தப்பக்கம் என்னை அழைக்கிறார்கள்

அந்தப்பக்கம் என்னை அழைக்கிறார்கள்
இந்தப்பக்கம் என்னை இழுக்கிறார்கள்
மாய்மால வாழ்க்கை வாழ்கிறேன்

1. Sunday Morning என்றால் வேஷமிடும் நேரம்
நீதிமான்கள் என்று காட்டிக்கொள்ளும் நேரம் நேரம்
மற்ற நாளில் எல்லாம் பாவம் தலை தூக்கும்
இஷ்டம் போல வாழ்க்கை வேறு
திசை பறந்திடுமே .. ஹே ஹே ஹே ஹே
மாய்மால வாழ்க்கை வாழ்கிறேன்

2. எந்தன் பக்தி காட்ட Prayer Meeting செல்வேன்
நோய்கள் பேய்கள் ஓட்ட நீண்ட ஜெபம் செய்வேன் செய்வேன்
ஆவியின் வரங்கள் அனைத்தும் பெற்றுள்ளேனே
ஆவியின் கனிகள் என்னவென்று தெரியாதே
மாய்மால வாழ்க்கை வாழ்கிறேன்

3. ஆலயத்தில் நான் தான் பரிசுத்தத்தின் எல்லை
Mary Martha கூட என்னைப் போல இல்லை இல்லை
ஏதோ அவ்வப்போது பாவம் செய்வதுண்டு
யாரும் அறியாத மாய்மால வாழ்க்கை ஒன்று
மாய்மால வாழ்க்கை வாழ்கிறேன்

4. காலங்காலமாக Christians நாங்க
மாதம் தவறாமல் காணிக்கைகள் போடுறோங்க
மற்றபடி கிறிஸ்து யாரென்று தெரியாதே
நித்யம் சத்யம் எல்லாம் எனக்கு புரியாதே
மாய்மால வாழ்க்கை வாழ்கிறேன்

5. மக்கள் என்னை கண்டால் ஸ்தோத்திரம் சொல்வதுண்டு
நல்ல பிள்ளை என்று Certificate எனக்குண்டு
உண்மை நிலை என்ன அவர்கள் அறியாரே
உள்ளுக்குள்ளே நானே அழகான கல்லறையே
மாய்மால வாழ்க்கை வாழ்கிறேன்

42. அந்தோ கல்வாரியில் அருமை

அந்தோ கல்வாரியில்
அருமை இரட்சகரே
சிறுமை அடைந்தே தொங்கினார்

1. மகிமை மாட்சிமை மறந்திழந்தோராய்
கொடுமை குருசைத் தெரிந்தெடுத்தாரே
மாயலோகத்தோ டழியாது யான்
தூய கல்வாரியின் அன்பை அண்டிடவே

2. அழகுமில்லை சௌந்தரியமில்லை
அந்தக் கேடுற்றார் எந்தனை மீட்க
பல நிந்தைகள் சுமந்தாலுமே
பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே

3. முளின் முடியும் செவ்வங்கி அணிந்தும்
கால் கரங்கள் ஆணிகள் பாய்ந்தும்
குருதி வடிந்தவர் தொங்கினார்
வருந்தி மடிவோரையும் மீட்டிடவே

4. அதிசயம் இது இயேசுவின் நாமம்
அதினும் இன்பம் அன்பரின் தியானம்
அதை எண்ணியே நிதம் வாழ்வேன்
அவர் பாதையே நான் தொடர்ந்தேகிடவே

5. சிலுவைக் காட்சியை கண்டு முன்னேறி
சேவையே புரிவேன் ஜீவனும் வைத்தே
என்னைச் சேர்ந்திட வருவே னென்றார்
என்றும் உண்மையுடன் நம்பி வாழ்ந்திடுவேன்

Tamil Hymns

43. அநந்த கோடி கூட்டத்தார்

1. அநந்த கோடி கூட்டத்தார்
ஆனந்த கீதம் பாடியே,
பண் இசைப்பார் வெண் உடையார்
தெய்வாசனம் முன்னே.
விண்வேந்தர் தயை போக்கிற்றே
மண் மாந்தர் பாவம் நோவுமே;
மேலோகிலே நீர் நோக்குவீர்
உம் நாதர் மாட்சியே.
பாடற்ற பக்தர் சேனையே,
கேடோய்ந்து தூதரோடுமே
பண் மீட்டுவீர்; விண் நாதர்தாம்
தம் வார்த்தை நல்குவார்.

2. மா தாழ்வாய் வாழ்ந்தீர் பாரினில்,
கோதற்ற வெண்மை அணிந்தீர்;
உம் நீதிக்காய் நம் நாதரே
பொற் கிரீடம் சூட்டுவார்;
பூலோக வாழ்வின் கண்ணீரை
மேலோகில் ஸ்வாமி நீக்கினார்;
போம் திகிலும்; உம் மீட்பரின்
நல் மார்பில் சாய்குசீர்
விண் வீட்டினில் மா பந்தியை
மாண் வேந்தரோடு அடைந்தீர்;
நீர் பெற்றீரே பேர் வாழ்வுமே
கர்த்தாவோடென்றுமே.

3. ஆ, வீரர் சூரர் சேனையே,
மா தீரச் செய்கை ஆற்றினீர்,
நீர் சகித்தீர், நீர் ஜெயித்தீர்
நீர் வாழ்க, பக்தரே!
மண் மாந்தர் கீர்த்தி இகழ்ந்தீர்,
விண் வேந்தரோடும் சிலுவை
நீர் சுமந்தீர், நீர் அறுப்பீர்
உம் கண்ணீர் பலனே.
மெய் மணவாட்டி, போற்றுவாய்!
வையகமே முழங்குவாய்!
எம் ஸ்வாமியே, என்றென்றுமே
உம் ஸ்தோத்ரம் ஏறுமே

Tamil Hymns

44. அநாதி சிநேகத்தால்

1. அநாதி சிநேகத்தால்
என்னை நேசித்தீரைய்யா
காருண்யத்தினால்
என்னை இழுத்துக் கொண்டீரே

உங்க அன்பு பெரியது
உங்க இரக்கம் பெரியது
உங்க கிருபை பெரியது
உங்க தயவு பெரியது

2. அனாதையாய் அலைந்த
என்னை தேடி வந்தீரே
அன்பு காட்டி அரவணைத்து
காத்துக் கொண்டீரே - உங்க

3. நிலையில்லாதா உலகத்தில்
அலைந்தேனய்யா
நிகரில்லாத இயேசுவே
அனைத்துக் கொண்டீரே - உங்க

4. தாயின் கருவில் தோன்றுமுன்னே
தெரிந்துக் கொண்டீரே
தாயைப் போல ஆற்றி தேற்றி
அரவணைத்தீரே - உங்க

5. நடத்தி வந்த பாதைகளை
நினைக்கும் போதெல்லாம்
கண்ணீரோடு நன்றி சொல்லி
துதிக்கிறேனைய்யா - உங்க

6. கர்த்தர் செய்ய நினைத்தது
தடைபடவில்லை
சகலத்தையும் நன்மையாக
செய்து முடித்தீரே - உங்க

45. அநாதி ஸ்நேகம்

அநாதி ஸ்நேகம் - (3)
எங்கள் இயேசுவின் ஸ்நேகம்

பரத்தை விட்டு இறங்கி வந்த ஸ்நேகம்
பரலோக மகிமை துறந்து வந்த ஸ்நேகம்
எல்லா ஸ்நேகத்திலும் மகா மேலான ஸ்நேகம் - (2)

1. மறுதலித்த பேதுருவை மனம் திரும்ப செய்த ஸ்நேகம்
காட்டி கொடுத்த யூதாசை கன்னத்தில் அறைந்திடாமல்
ஸ்நேகிதனே என்றழைத்தை ஸ்நேகம்

அது மேலான ஸ்நேகம்,
எங்கள் இயேசுவின் ஸ்நேகம்

2. கண் இழந்த பெலன் இழந்த சிம்சோனையும் நினைத்த ஸ்நேகம்
நினிவேக்குப் போகாமல் திசை மாறி ஓடிய
யோனாவைப் பயன்படுத்திய ஸ்நேகம்
அது மேலான ஸ்நேகம், எங்கள் இயேசுவின் ஸ்நேகம் --- அநாதி

Tamil Hymns

46. அநாதி (அனாதி) தேவன் உன் அடைக்கலமே

அனாதி தேவன் உன் அடைக்கலமே
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே

இந்த தேவன் என்றென்றுமுள்ள
சதா காலமும் நமது தேவன்
மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்

1. காருண்யத்தாலே இழுத்துக் கொண்டார்
தூய தேவ அன்பே
இவ்வனாந்திரத்தில் நயங்காட்டி உன்னை
இனிதாய் வருந்தி அழைத்தார்

2. கானகப் பாதை காரிருளில்
தூய தேவ ஒளியே
அழுகை நிறைந்த பள்ளத்தாக்குகளை
அரும் நீரூற்றாய் மாற்றினாரே

3. கிருபை கூர்ந்து மனதுருகும்
தூய தேவ அன்பே
உன் சமாதானத்தின் உடன்படிக்கைகளை
உண்மையாய் கர்த்தர் காத்துக்கொள்வார்

4. வறண்ட வாழ்க்கை செழித்திடுதே
தூய தேவ அருளால்
நித்திய மகிழ்ச்சி தலைமேல் இருக்கும்
சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போம்

5. ஆனந்தம்பாடி திரும்பியே வா
தூய தேவ பெலத்தால்
சீயோன் பர்வதம் உன்னைச் சேர்த்திடுவார்
சத்தம் மகிழ்ச்சி அடைவாய்

Tamil Hymns

47. அநாதி (அனாதி) யான கர்த்தரே

1. அநாதியான கர்த்தரே,
தெய்வீக ஆசனத்திலே
வானங்களுக்கு மேலாய் நீர்
மகிமையோடிருக்கிறீர்.

2. பிரதான தூதர் உம்முன்னே
தம் முகம் பாதம் மூடியே
சாஷ்டாங்கமாகப் பணிவார்,
'நீர் தூய தூயர்' என்னுவார்.

3. அப்படியானால், தூசியும்
சாம்பலுமான நாங்களும்
எவ்வாறு உம்மை அண்டுவோம்?
எவ்விதமாய் ஆராதிப்போம்?

4. நீரோ உயர்ந்த வானத்தில்,
நாங்களோ தாழ்ந்த பூமியில்
இருப்பதால், வணங்குவோம்,
மா பயத்தோடு சேருவோம்.

48. அந்த நாள் பாக்கிய நாள்

அந்த நாள் பாக்கிய நாள் - நான் மீட்கப்பட்ட
அந்த நாள் பாக்கிய நாள்

அந்தநாள் ஆனந்தநாள், அருமை இரட்சகரென்னை
அன்போடழைத்தெனது அசுத்தங்கள் நீக்கின நாள் --- அந்

1. அன்றே எனக்குப் பேதித்தார் - அவர் வழியில்
அநுதினம் செல்லக் கற்பித்தார்;
என்றும் அவர்மேல் சார்ந்தே இன்ப ஜீவியம் செய்ய
ஏவினார் என் இரட்சகர், எங்கும் எடுத்துரைப்பேனே --- அந்த

2. என்றனை அன்றே இழுத்தார்- தமதன்பினால்
இசைவாய்த் தம்முடன் இணைத்தார்;
சொந்தம் நான் அவருக்குச் சொந்தம் அவர் எனக்கு,
இந்த உறுதிபண்ணி இனிய ஐக்கியம் பெற்றேன் --- அந்த

3. ஆறுதல்களால் நிறைந்தேன் - அளவில்லாத
ஆசிகளினால் மகிழ்ந்தேன்;
தாறுமாறான உள்ளம் மாறுதலை யடைந்து
மாறாத யேசுவினில் மகிமையாய்த் தங்கப் பெற்றேன் --- அந்த

4. அந்நாளில் வாக்குப் பண்ணினேன் - உறுதியாக
எந்நாளும் நான் புதுப்பிப்பேன்;
சொன்ன இவ்வாக்கை நிதம், சுத்தமாய் நிறைவேற்ற
உன்னத பலம் தாராய், என்னையாட்கொண்ட தேவா --- அந்த

Tamil Hymns

49. அபிஷேக நாதா

அபிஷேக நாதா அனல் மூட்டும்
தேவா ஆருயிர் அன்பரே

1. அன்னிய பாஷைகள் இன்றே தாருமே
ஆவியில் ஜெபித்திட என்மேல் வாருமே

2. ரகசியம் பேசிட கிருபை தாருமே
சத்திய ஆவியாய் என்மேல் வாருமே

3. தேசத்தைக் கலக்கிட திடனைத் தாருமே
திறப்பிலே நின்றிட பெலனாய் வாருமே

4. பரிந்து பேசிட ஆத்ம பாரம் தாருமே
பரிசுத்தமாகிட தினம் என்மேல் வாருமே

5. சாத்தானை ஜெயித்திட சத்துவம் தாருமே
சாட்சியாய் வாழ்ந்திட என்மேல் வாருமே

6. அக்கினி அபிஷேகம் இன்றே தாருமே
சுடராய் பிரகாசிக்க என்மேல் வாருமே

50. அப்பா தயாள குணாநந்த

1. அப்பா, தயாள குணாநந்த மோனந்த வேதா, பொல்லா
இப்பாரில் காய்பாமுன் ஏகினீரே, ஏசுநாதா?

2. குற்றம் சுமத்தப் பொய்ச் சாட்சிகளைத் தேடினாரோ? - அந்தச்
செற்றலர் எல்லாம் திரண்டேகமாய்க் கூடினாரோ?

3. கன்னம் அதைத்ததோ? கண்கள் சிவந்தவோ? சுவாமீ - பொறி
மின்னிக் கலங்கி, விசனம் உற்றீரோ, நன் னேமி?

4. மெய்யான சாட்சி இட்டையனே, சொன்ன உம் மீதே - தீயர்
பொய்யான சாட்சி இரட்டையோ, சுமத்தினார் தீதே

5. என் கட்டை நீக்கி ஈடேற்ற வாதைக்குள்ளானீரோ? - உம்மைப்
பின் கட்டாய்க் கட்டி, பிலாத்திடங் கொண்டு போனாரோ?

6. இத்தனை பாடுகள் நீர் பட்ட தென்கொடும் பாவமே, என்றன்
கர்த்தனே, உன் மீதில் வந்ததையோ, தேவ கோபமே?

7. நீர்பட்ட பாட்டைப்போல், ஆர் பட்டுத்தாங்குவார், தேவே? - பல
கார்பட்ட நெஞ்சமும் சீர்பட்டுப் போகுமே, கோவே

51. அப்பா அல்பா ஒமெகா புகழ்

அப்பா அல்பா ஒமெகா
புகழ் உமக்கே எப்போதும்

தொடக்கமும் முடிவும் நீரே
துதிக்குப் பாத்திரரே - அப்பா

1. பரிசுத்த வாழ்வு நான் வாழ
பிரித்தீரே பிறக்கும் முன்னாலே

புகழ் உமக்கே புகழ் உமக்கே (2) -தொடக்க

2. மறுபடி பிறக்கச் செய்தீரே
கிருபையால் இரட்சித்தீரே

3. உம் அன்பை ஊற்றினீர் என்னில்
உன்னத அபிஷேகத்தாலே

4. இரக்கத்தில் செல்வந்தர் நீரே
இதயத்தில் தீபமானீரே

5. இறை இயேசு அரசுக்குள் அழைத்தீர்
இருளின் ஆட்சியைக் கலைத்தீர்

52. அப்பா உந்தன் பாதம்

அப்பா உந்தன் பாதம்
அமர்ந்திருக்கும் நேரம் - அன்பாலே
உள்ளம் பொங்குதே - உந்தன்

1. பாவம் சாபம் போக்கி
நோய்களெல்லாம் நீக்கி
சுகமான வாழ்வைத் தந்தீரே - எனக்கு

2. அன்பின் ஆவியாலே
அபிஷேகித்து நிறைத்தீர்
அன்பரே உம்மைத் துதிப்பேன் - என்றும்

3. கிருபை வசனத்தாலே
மகிமை வாழ்வை தந்தீர்
ராஜாவே உம்மைப் புகழ்வேன் - இயேசு

4. கருணையுள்ள தேவா
அருளைப் பொழியும் நாதா
உமக்காக என்றும் வாழ்வேன் - இனி

53. அப்பா உம் கிருபைகளால்

அப்பா உம் கிருபைகளால்
என்னை காத்துக் கொண்டீரே
அப்பா உம் கிருபைகளால் என்னை
அணைத்துக் கொண்டீரே

1. தாங்கி நடத்தும் கிருபையிது
தாழ்வில் நினைத்த கிருபையிது
தந்தையும் தாயும் கைவிட்டாலும்
தயவாய் காக்கும் தேவ கிருபை --- அப்பா

2. என்னை நினைக்கும் கிருபையிது
என்னை நடத்தும் கிருபையிது
தந்தையைப் போல தோளில் சுமந்து
என்னை நடத்தும் கிருபையிது

3. வியாதியின் நேரத்தில் காத்த கிருபை
விடுதலை கொடுத்த தேவ கிருபை
சூழ்நிலைகள் மாறினாலும்
மாறாமல் தாங்கிட்ட தேவ கிருபை --- அப்பா

4. கஷ்டத்தின் நேரத்தில் காத்த கிருபை
கண்ணீரை மாற்றின தேவ கிருபை
தடைகள் யாவையும் உடைத்து எறிந்து
வெற்றியைத் தந்திட்ட தேவ கிருபை --- அப்பா

54. அப்பா உம் சமுகத்தில் எப்போதும்

அப்பா உம் சமுகத்தில்
எப்போதும் ஆராதனை
அப்பாவை துதிக்கையிலே
எங்க உள்ளமெல்லாம் பொங்குதையா

1. தாயைப்போல தேற்றுகிறீர்
தகப்பனைப்போல சுமக்கின்றீர்
சோதனை வருகின்ற நேரமெல்லாம்
தாங்கி எங்களை நடத்துகிறீர் (2)

2. கூப்பிடும் காக்கை குஞ்சுகட்கும்
ஆகாரத்தை தருகின்றீர்
அவைகளைப் பார்க்கிலும் எங்களையே
மிகவும் நேசித்து நடத்துகிறீர்

3. எங்கள் மீது கண்ணை வைத்து
ஆலோசனை சொல்லுகின்றீர்
தீங்கு வருகின்ற நேரமெல்லாம்
கூடார மறைவில் மறைக்கின்றீர்

55. அப்பா உம்மை நேசிக்கிறேன்

அப்பா உம்மை நேசிக்கிறேன்
ஆர்வமுடன் நேசிக்கிறேன்

1. எப்போதும் உம் புகழ்தானே
எந்நேரமும் ஏக்கம் தானே
எல்லாம் நீர்தானே - ஐயா

2. பலியாகி என்னை மீட்டிரையா
பாவங்கள் சுமந்து தீர்த்தீரையா
ஒளியாய் வந்தீரையா - ஐயா

3. உந்தன் அன்பு போதுமையா
உறவோ பொருளோ பிரிக்காதையா
என் நேசர் நீர்தானையா - ஐயா

4. கண்ணீர் துடைக்கும் காருண்யமே
மன்னித்து மறக்கும் தாயுள்ளமே
விண்ணக பேரின்பமே - அப்பா

5. அனுதின உணவு நீர்தானைய -என்
அன்றாட வெளிச்சம் நீர்தானையா
அருட்கடல் நீர்தானையா - எனக்கு

6. ஒரு குறைவின்றி நடத்துகின்றீர்
ஊழியம் தந்து மகிழ்கின்றீர்
அருகதை இல்லையையா - ஐயா

7. ஜெபமே எனது ஜீவனாகணும்
ஜெயக்கொடி எனது இலக்காகணும்
ஊழியம் உணவாகணும் - ஐயா

Tamil Hymns

56. அப்பா என்னை முழுவதும் அர்ப்பணி

அப்பா என்னை முழுவதும் அர்ப்பணித்தேன் ஐயா
உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குச் சொந்தமையா
அர்ப்பணித்தேன் அர்ப்பணித்தேன்
ஆவி ஆத்துமா சரீரம் அர்ப்பணித்தேன் - என்

1. உள்ளம் உடல் எல்லாமே
உமக்குத் தந்தேனையா
கள்ளம் கபடு இல்லாமல்
காத்துக் கொள்ளுமையா

2. உலகப்பெருமை சிற்றின்பம்
உதறி விட்டேனையா
கசப்பு வெறுப்பு காயங்கள்
கடந்து போனதையா

3. வாக்குவாதம் பொறாமைகள்
தூக்கி எறிந்தேன் நான்
ஆண்டவர் இயேசுவை ஆடையாய்
அணிந்து கொண்டேன் நான்

4. உமக்காய் வாழும் வைராக்கியம்
உள்ளத்தில் வந்ததையா
எனக்காய் வாழும் எண்ணங்கள்
என்றோ மடிந்ததையா (செத்ததையா)

57. அப்பா நான் உம்மைப் பார்க்கிறேன்

அன்பே நான் உம்மைத் துதிக்கிறேன்
1. நீரே என் வழி நீரே என் சத்தியம்
நீரே என் ஜீவனன்றோ

2. அப்பாவும் நீரே அம்மாவும் நீரே
நான் உந்தன் பிள்ளையன்றோ

3. நல்ல மேய்ப்பன் நீர் தானே
நான் உந்தன் ஆட்டுக்குட்டி

4. ஜீவ நீரூற்று நீர் தானே
உந்தன்மேல் தாகம் கொண்டேன.

58. அப்பா இயேசு நீங்க வந்தால்

அப்பா இயேசு நீங்க வந்தால்
சந்தோஷம் எனக்கு
நீங்க இல்லா ஆராதனை
வேண்டாமே எனக்கு

வாருங்கப்பா வரம் தாருங்கப்பா
கேளுங்கப்பா ஜெபம் கேளுங்கப்பா (2)

1. தாவீதைப்போல் நடனமாடி
உம்மை உயர்த்துவேன்
தானியேல் போல் ஜெபித்து
உந்தன் பாதம் அமருவேன்
பல கோடி கோடி நாவுகள் உம்மை உயர்த்திட
முழங்கால்கள் உந்தன்
நாமத்துக்கு முடங்கி பணிந்திட

2. உம்மை நான் ஆராதித்தால்
தோல்வி எனக்கில்லை
உம்மை நான் ஸ்தோத்தரித்தால்
தொல்லை எனக்கில்லை
நீங்க செய்த நன்மைக்கு நான்
என்னத்தை செலுத்துவேன்
நாள்முழுவதும் உம்பாதம்
மகிழ்வேன் தொழுது

3. உயிரோடிருக்கும் வரை
உம்மைப் பாடுவேன்
உந்தன் நாமம் உயர்த்திடவே
உலகில் வாழுவேன் - நான்
உமது அடியேன் தான் ஆசீர்வதித்திடும்
உமக்கு ஸ்தோத்திர பலிகள் செலுத்தி
துதித்து மகிழுவேன்

59. அப்பா பிதாவே அன்பான தேவா

அப்பா பிதாவே அன்பான தேவா
அருமை இரட்சகரே ஆவியானவரே

1. எங்கோ நான் வாழ்ந்தேன் அறியாமல் அலைந்தேன்
என் நேசர் தேடி வந்தீர்
நெஞ்சார அணைத்து முத்தங்கள் கொடுத்து
நிழலாய் மாறி விட்டீர்
நன்றி உமக்கு நன்றி (அப்பா)

2. தாழ்மையில் இருந்தேன் தள்ளாடி நடந்தேன்
தயவாய் நினைவு கூர்ந்தீர்
கலங்காதே என்று கண்ணீரைத் துடைத்து
கரம் பற்றி நடத்துகிறீர்

3. உளையான சேற்றில் வாழ்ந்த என்னை
தூக்கி எடுத்தீரே
கல்வாரி இரத்தம் எனக்காக சிந்தி
கழுவி அணைத்தீரே

4. இரவும் பகலும் ஐயா கூட இருந்து
எந்நாளும் காப்பவரே
மறவாத தெய்வம் மாறாத நேசர்
மகிமைக்குப் பாத்திரரே

5. ஒன்றை நான் கேட்பேன்
அதையே நான் தேடி ஆர்வமாய் நாடுகிறேன்
உயிரோடு வாழும் நாட்களெல்லாம்
உம்பணி செய்திடுவேன்

Tamil Hymns

60. அப்பா பிதாவே கொஞ்சம் பாருங்க

அப்பா பிதாவே கொஞ்சம் பாருங்க
உன் செல்ல பிள்ளை வந்திருக்கேன் சேர்த்துக்கொள்ளுங்க

1. காசு பணம் பாவ சுகம் வேண்டாம் ஐயா
உன் காலடியில் தூசு போல கிடந்தா போதும்
வேறு எங்கிலும் போக மனசில்லப்பா
ஒரு வேலை காரன் போல கூட இருந்தா போதும்

2. கூச்சப்பட்டேன் நான் உங்க முகம் பார்க்கவே
முழு மனசா வந்து முத்தமிட்டிங்க
பார்த்துக் கிட்டிங்க என்ன பரிவொடவே
பாச தந்தை எப்போதும் நீங்க தானே

3. ஏதேதோ இன்பமுனு அலைஞ்சேன் ஐயா
எல்லாமே நீர்தானு புரிங்சுக்கிட்டேன்
காயப்பட்டிங்க என்னை கரை சேர்க்கவே
புரிஞ்சுக்கிட்டேன் ரொம்ப தாமதமாவே

Tamil Hymns

61. அப்பா வீட்டில் எப்போதும்

அப்பா வீட்டில் எப்போதும் சந்தோஷமே
ஆடலும் பாடலும் இங்கு தானே -நம்ம
ஆடுவோம் கொண்டாடுவோம்
பாடுவோம் நடனமாடுவோம்

அல்லேலூயா ஆனந்தமே
எல்லையில்லா பேரின்பமே

1. காத்திருந்தார் கண்டு கொண்டார்
கண்ணீரெல்லாம் துடைத்துவிட்டார்

2. பரிசுத்த முத்தம் தந்து
பாவமெல்லாம் போக்கிவிட்டார்

3. பாவத்திலே மரித்திருந்தேன்
புதிய மனிதனாய் உயிர்த்துவிட்டேன்

4. ஆவியென்னும் ஆடை தந்தார்
அதிகாரம் என்னும் மோதிரம் தந்தார் – தூய

5. வசனமென்னும் சத்துணவை
வாழ்நாளெல்லாம் ஊட்டுகிறார்

6. அணிந்து கொண்டோம் மிதியடியை
அப்பாவின் சுவிசேஷம் அறிவித்திட

62. அப்பானு கூப்பிடத்தான் ஆசை

அப்பானு கூப்பிடத்தான் ஆசை
உம்மை அப்பானு கூப்பிடவா
உம்மை அம்மானு கூப்பிடவும் ஆசை
அம்மானும் கூப்பிடவா

அப்பானு கூப்பிடவா - உம்மை
அம்மானும் கூப்பிடவா

1. கருவில் என்னை காத்தத பார்த்தா
அம்மானு சொல்லனும்
உம் தோளில் என்னை சுமப்பதை பார்த்தா
அப்பானு சொல்லனும்
என்னை கெஞ்சுவதும் கொஞ்சுவதும் பார்த்தா
அம்மானு சொல்லனும்
என்னை ஆற்றுவதும் தேற்றுவதும் பார்த்தா
அப்பானு சொல்லனும்

2. என் கண்ணீரை துடைப்பதை பார்த்தா
அம்மானு சொல்லனும்
என் விண்ணப்பத்தை கேட்பதை பார்த்தா
அப்பானு சொல்லனும்
என்னை ஏந்துவதும் தாங்குவதும் பார்த்தா
அம்மானு சொல்லனும்
உம் இரக்கத்தை உருக்கத்தை பார்த்தா
அப்பானு சொல்லனும்

Tamil Hymns

63. அபிஷேகம் என் தலைமேலே

அபிஷேகம் என் தலைமேலே
ஆவியானவர் எனக்குள்ளே
முழங்கிடுவேன் சுவிசேஷம்
சிறுமைப்பட்ட அனைவருக்கும்

அபிஷேகம் என்மேலே
ஆவியானவர் எனக்குள்ளே

1. இதயங்கள் நொறுக்கப்பட்டோர்
ஏராளம் ஏராளம்
காயம் கட்டுவேன் தேசமெங்கும்
இயேசுவின் நாமத்தினால்

2. சிறையிலுள்ளோர் ஆயிரங்கள்
விடுதலை பெறணுமே
கட்டவிழ்க்கணும் கட்டவிழ்க்கணும்
கட்டுக்களை உடைக்கணும்

3. துதியின் உடை போர்த்தணுமே
ஒடுங்கின ஜனத்திற்கு
துயரத்துக்குப் பதிலாக
ஆனந்த தைலம் வேண்டுமே

4. கிருபையின் கால இதுவன்றோ
அறிவிக்கணும் அதிவேகமாய்
இரட்சகர் இயேசு வரப்போகிறார்
ஆயத்தமாகணுமே

64. அபிஷேகியும் தேவா அபிஷேகியும்

அபிஷேகியும் தேவா அபிஷேகியும்
ஆனந்த தைலத்தினால்
சுயத்தை உடையும், சுத்திகரியும்
துதியின் உடையால் அலங்கரியும்

1. உமது ஜனங்கள் உம்மில் மகிழ
உன்னத ஆவியால் உயிர்ப்பியுமே
துன்பங்கள் மாற, துதிகள் எழும்ப
தூய ஆவியால் நிரப்பிடுமே

2. ஆவியின் வரங்கள் ஒன்பதையும்
ஆவியின் கனிகள் ஒன்பதையும்
நொறுங்குண்டதும் நருங்குண்டதும்
நிலைவர இருதயம் தந்திடுமே

3. பெந்தேகோஸ்தே நாளினில் நிறைவினிலே
அக்கினியாக இறங்கினீரே
தேவ ஆவியே, தேற்றும் ஆவியே
தேவை எனக்கு நீரல்லவோ

4. சத்துரு சேனையை தகர்த்திடவே
சத்திய ஆவியை தந்திடுமே
சர்ப்பத்தை எடுக்க தேள்களை மிதிக்க
சத்துவம் பொழிந்து வழிந்திடவே

65. அமர்ந்திருப்பேன் அருகினிலே

சாய்ந்திருப்பேன் உம் தோளினிலே
இயேசய்யா என் நேசரே
அன்பு கூர்ந்தீர் ஜீவன் தந்தீர்

நேசிக்கிறேன் உம்மைத்தானே
நினைவெல்லாம் நீர்தானய்யா
துதிபாழ மகிழ்ந்திருப்பேன்
உயிருள்ள நாளெல்லாம் - 2

66. அமலா தயாபரா அருள்கூர் ஐயா

அமலா, தயாபரா, அருள்கூர், ஐயா, - குருபரா,

1. சமயம் ஈராறோர் ஆறு சாஸ்திரங்கள் வேத நான்கும்
அமையும் தத்துவம் தொண்ணூற் றாறும், ஆறுங்கடந்த

2. அந்தம் அடி நடு இல்லாத தற்பரன் ஆதி,
சுந்தரம் மிகும் அதீத சோதிப்பிரகாச நீதி

3. ஞானத் ரவிய வேத நன்மைப் பரம போத,
வானத் தேவப் ரசாத மகிமைக் களவில்லாத

4. காணப்படா அரூப, கருணைச் சுய சொரூப,
தோணப்படா வியாப, சுகிர்தத் திருத் தயாப

5. சத்ய வசன நேயா, சமஸ்த புண்ய சகாய,
கர்த்தத்துவ உபாயா, கருணை பொழியும் வாயா

6. எல்லை இல்லா மெய்ஞ் ஞான ஏக பர வஸ்தான
சொல் அரிதாம் நிதான, துல்லிபத் தொன்றாம் மேலான

7. கருணாகரா, உப காரா, நிராகரா,
பரமேசுரா, கிரு பாகரா, சர்வேசுரா

Tamil Hymns

67. அமைதி அன்பின் ஸ்வாமியே

1. அமைதி அன்பின் ஸ்வாமியே,
இப்பாரில் யுத்தம் மூண்டதே;
விரோதம் மூர்க்கம் ஓய்த்திடும்,
பார் அமர்த்தும், போர் நீக்கிடும்.

2. எம் முன்னோர் காலம் தேவரீர்
செய்த மா கிரியை நினைப்பீர்;
எம் பாவம் நினையாதேயும்
பார் அமர்த்தும், போர் நீக்கிடும்.

3. நீர்தாம் சகாயம் நம்பிக்கை;
கடைப்பிடிப்போம் உம் வாக்கை;
வீண் ஆகாதே யார் வேண்டலும்;
பார் அமர்த்தும், போர் நீக்கிடும்.

4. விண் தூதர் தூயோர் அன்பினில்
இசைந்தே வாழும் மோட்சத்தில்
உம் அடியாரைச் சேர்த்திடும்;
பார் அமர்த்தும், போர் நீக்கிடும்.

68. அரசனைக் காணமலிருப்போமோ

அரசனைக் காணமலிருப்போமோ நமது
ஆயுளை வீணாகக் கழிப்போமோ

பரம்பரை ஞானத்தைப் பழிப்போமோ
யூதர் பாடனு பவங்களை ஒழிப்போமோ

1. யாக்கோபிலோர் வெள்ளி உதிக்குமென்றே,
இஸ்ரேல் ராஜ செங்கோலெங்கும்
கதிக்குமென்றே,
ஆக்கமிழந்து மறுவாக்குரைத்த பாலாம்
தீர்க்கன் மொழிபொய்யாத பாக்கியமே

2. தேசோ மயத்தாரகை தோன்றுது பார்
மேற்குத் திசை வழி காட்டிமுன் செல்லுது பார்
பூசனைக் காண நன்கொடைகள் கொண்டே
அவர் பொன்னடி வணங்குவோம், நடவுமின்றே

3. அரமனையில் அவரைக் காணோமே
அதை அகன்று தென்மார்க்கமாய்த் திரும்புவமே
மறைந்த உடு அதோ! பார் திரும்பினதே
பெத்லேம் வாசலில் நமைக்
கொண்டு சேர்க்குது பார்

4. அலங்காரமனை யொன்று தோணுது பார்
அழகு மனமுங் கண்ணும் கவர்ந்தது பார்!
இளவர சங்கிருக்கும் நிச்சயம் பார்! - நாம்
எடுத்த கருமம் சித்தியாகிடும் பார்

5. பொன் தூபவர்க்கம் வெள்ளைப் போளமிட்டே
ராயர் பொற்கழல் அர்ச்சனை புரிவோமே!
வன்கண்ணன் ஏரோதைப் பாராமல், - தேவ
வாக்கினால் திரும்பினோம் சோராமல்

Tamil Hymns

69. அரணும் கோட்டையும்

அரணும் கோட்டையும்
பெலனாய் காப்பவர்
திடமாய் ஜெயித்திட
எனது என்றென்றும் துணையே

1. ஜீவ நம்பிக்கை நல்க
இயேசு மரித்து எழுந்தார்
அழிந்திடாத உரிமை பெறவே
புது ஜீவன் அடையச் செய்தார்

2. மகிழ்ச்சி ஆனந்தம் தங்க
மகிமை நம்பிக்கை ஈந்தார்
நீதிமானை செழிக்கச் செய்து
என்றென்றும் ஜெயம் நல்குவார்

3. தம்மால் மதிலைத் தாண்டி
உம்மால் சேனைக்குள் பாய்வேன்
எதிர்த்து நின்று ஜெயமே அடைவேன்
என்றென்றும் துணைசெய்கின்றார்

70. அரியணையில் ராஜாவாக வாழ்பவரே

அரியணையில் ராஜாவாக வாழ்பவரே யெஷீவா
உலகை ஆளும் ராஜாவாக வாழ்பவரே யெஷீவா
உம்மைப் போல் தெய்வம்
இந்த உலகில் இல்லையே யெஷீவா
ராஜாதி ராஜா மகா ராஜா எங்கள் யெஷீவா

யெஷீவா யெஷீவா உயிர்த்தெழுந்த யெஷீவா
உம்மை போல் தெய்வம்
இந்த உலகில் இல்லையே யெஷீவா

இரண்டாம் ஆதாமாக சாத்தானுக்கு சவாலாக
சத்துருவை ஜெயிக்க வந்த யூத ராஜ சிங்கமாக
சிலுவையில் சாத்தானை நீர் மொத்தமாக அழித்துவிட்டீர்
துரைத்தனம் அதிகாரங்கள் அனைத்தையும் உரிந்து போட்டீர்

உயரே வானத்திலும் கீழே இந்த பூமியிலும்
மேலான ஒரே நாமம் யெஷீவாவின் ஒரே நாமம்
யெசுவா பெயரை சொன்னாலும் பேய்கள் எல்லாம் நடுங்குதையா
தீராத வியாதி எல்லாம் நொடி பொழுதில் மறையுதையா

மலைகள் செம்மறி போல் துள்ளி பாய்ந்து துதிக்குதாமே
நாங்களும் பாடுகிறோம் சந்தோஷமாய் ஆடுகிறோம்
பூமி மாத்திரமா யெஷீவாவை போற்றிடுது
சுற்றும் கோள் எல்லாம் அப்பாவை தான் பாடிடுது

Tamil Hymns

71. அரியணையில் வீற்றிருப்பவரே உமக்கே

அரியணையில் வீற்றிருப்பவரே உமக்கே ஆராதனை
ஆட்டுக்குட்டியானவரே உமக்கே ஆராதனை

உமக்கே ஆராதனை

1. அடைக்கலமானவரே
படைகளின் ஆண்டவரே
இடுக்கண் வேளையிலே
ஏற்ற துணை நீரே – உமக்கே

2. பக்கம் நின்று வலுவூட்டுகிறீர்
பாதுகாத்து பெலப்படுத்துகிறீர்
தீமை அணுகாமல் காத்து
சேர்த்திடுவீர் பரலோகம்

3. எரிகின்ற அக்கினிச் சூளை
எதுவும் என்னைத் தொடுவதில்லை
ஆராதிக்கும் எங்கள் தெய்வம்
எப்படியும் காப்பாற்றுவீர் – நாங்கள்

4. நீர் செய்ய நினைத்ததெல்லாம்
தடைபடாது என்றறிவேன்
சகலத்தையும் செய்ய வல்லவர்
அனைத்தையும் செய்து முடிப்பவர்

72. அரபிக்கடல் வற்றினாலும்

அரபிக்கடல் வற்றினாலும்
இயேசு அன்பு கடல் வற்றாதம்மா
பசிபிக்கடல் வற்றினாலும்
இயேசு பாசக்கடல் வற்றாதம்மா (2)

நேசமுள்ள நெஞ்சுக்குள்ளே
இயேசு வருவார் - பாசமுடன்
பாவங்களை மன்னித்திடுவார் (2)

1. என் உள்ளம் இறைவன் இல்லம்
என் உயிரும் அவரின் வடிவம் (2)
பார்வையிலும் எந்தன் பாதையிலும்
என் கண்ணின் முன்னே அவர் தோன்றுகிறார்
என் கூக்குரலை அவர் கேட்டுக்கொண்டு
என் துன்பங்களை வந்து நீக்குகின்றார்

2. என் நினைவில் அவரின் வருகை
அதை உணர்ந்தேன் மனதில் பெருமை (2)
வாழுகின்ற அந்த காலம் வரை
என் தேவனவர் என்றும் எனக்குத் துணை
பாடுகின்ற இந்த பாவியென்னை என்றும்
மீட்க வந்த தேவன் அவரை நினை

73. அருவிகள் ஆயிரமாய்

1. அருவிகள் ஆயிரமாய்
பாய்ந்து இலங்கிடச் செய்வார்
அனைத்தும் ஆள்வோர், “தாகமாய்
இருக்கிறேன்”என்றார்.

2. வெம்போரில் சாவோர் வேதனை
வியாதியஸ்தர் காய்ச்சலும்,
குருசில் கூறும் இவ்வோரே
ஓலத்தில் அடங்கும்.

3. அகோரமான நோவிலும்,
மானிடர் ஆத்துமாக்களை
வாஞ்சிக்கும் தாகம் முக்கியம்,
என் ஆன்மாவும் ஒன்றே.

74. அருளின் ஒளியைக் கண்டார்

1. அருளின் ஒளியைக் கண்டார்
இருளின் மாந்தரே;
மருள் மரண மாந்தரில்
திரு ஒளி வீச.

2. ஜாதிகளைத் திரளாக்கி
நீதி மகிழ்ச்சியால்
கோதில் அறுப்பில் மகிழ
ஜோதியாய்த் தோன்றினார்.

3. கர்த்தன், பிறந்த பாலகன்,
கர்த்தத்துவமுள்ளோன்;
சுத்த அவரின் நாமமே
மெத்த அதிசயம்.

4. ஆலோசனையின் கர்த்தனே,
சாலவே வல்லோனே,
பூலோக சமாதானமே,
மேலோக தந்தையே.

5. தாவீதின் சிங்காசனத்தை
மேவி நிலைகொள்ள
கூவி நியாயம் நீதியால்
ஏவி பலம் செய்வார்.

75. அருளே பொருளே ஆரணமே

1. அருளே! பொருளே! ஆரணமே அல்லும்பகலுந்துணைநீயே
இருள் சேர்ந்திடுமிவ்வேளையிலே இன்னலொன்றுந்தொடராமல்
மருண்டு மனது பிறழாமல், வஞ்சத் தொழிலிற் செல்லாமல்
கருணாகரனே! எனைக்காக்கக் கழறுந் துதியுனக் கொரு கோடி

2. சென்றநாட்களனைத்திலும் சிறியேன் தனக்கு செய்துவந்த
நன்றாம் நன்மைகளனைத்திற்கும் நவிலற்கரிய தயைகளுக்கும்,
என்றுமழியா வரங்களுக்கும் ஏழையடியேன் மிகத் தாழ்ந்து
கன்று நினைந்து கதறுதல்போல் கழறுந் துதியுனக் கொரு கோடி

3. பற்றொன்றில்லாப் பரம்பொருளே! பரமானந்த சற்குருவே!
வற்றாஞான சமுத்திரமே வடுவொன்றில்லா வான் பொருளே!
பெற்றோர், உற்றோருலகனைத்தும் பிரியமுடனே சுகித்திருக்கக்
கற்றில்லாத மிகச்சிறியேன் கழறுந் துதியுனக் கொரு கோடி,

4. பத்தியதனாலுனைப் பாடிப் பணிந்தே யென்றும் வாழ்ந்திருக்க,
நத்தும், இரவு முழுதனைத்தும் நாதா, என்னைக்காத்தருளி
முத்தியென்னும் மோட்சநிலை முடிவிலடியேன் தன்னைச் சேர்க்கக்
கத்தியலறிப் பரவசமாய்க் கழறுந்துதியுனக் கொரு கோடி

76. அருள் ஏராமாய் பெய்யும்

1. அருள் ஏராமாய் பெய்யும்
உறுதி வாக்கிதுவே
ஆறுதல் தேறுதல் செய்யும்
சபையை உயர்ப்பிக்குமே

அருள் ஏராளம் அருள் அவசியமே
அற்பமாய் சொற்பமாய் அல்ல
திரளாய் பெய்யட்டுமே

2. அருள் ஏராமாய் பெய்யும்
மேக மந்தாரமுண்டாம்
காடான நிலத்திலேயும்
செழிப்பும் பூரிப்புமாம்

3. அருள் ஏராளமாய் பெய்யும்
இயேசுவின் நாமத்திலே
இங்குள் கூட்டத்திலேயும்
கிரியை செய்தருளுமே

4. அருள் ஏராளமாய் பெய்யும்
பொழியும் இணமே
அருளின் மாரியைத் தாரும்
ஜீவ தயாபரரே

77. அருள் நிறைந்தவர்

1. பூரண ரட்சகர் தேவரீரே,
ஜெபத்தைக் கேட்கவும்
பாவத்தை நீக்கவும்
பரத்தில் சேர்க்கவும்
வல்லவரே.

2. சோரும் என் நெஞ்சுக்கு
பேரருள் பொழிந்து பெலன் கொடும்.
ஆ! எனக்காகவே
மரித்தீர் இயேசுவே@
என் அன்பின் ஸ்வாலையே
ஓங்கச் செய்யும்.

3. பூமியில் துக்கமும்
சஞ்சலம் கஸ்தியும் வருகினும்,
இரவில் ஒளியும்
சலிப்பில் களிப்பும்
துன்பத்தில் இன்பமும்
அளித்திடும்.

4. மரிக்கும் காலத்தில்
கலக்கம் நேரிடில், சகாயரே,
என்னைக் கைதூக்கவும்
ஆறுதல் செய்யவும்
மோட்சத்தில் சேர்க்கவும்
வருவீரே.

78. அருள் மாரி எங்குமாக

1. அருள் மாரி எங்குமாக
பெய்ய, அடியேனையும்
கர்த்தரே, நீர் நேசமாக
சந்தித்தாசீர்வதியும்;
என்னையும், என்னையும்
சந்தித்தாசீர்வதியும்.

2. என் பிதாவே, பாவியேனை
கைவிடாமல் நோக்குமேன்;
திக்கில்லா இவ்வேழையேனை
நீர் அணைத்துக் காருமேன்;
என்னையும், என்னையும்
நீர் அணைத்துக் காருமேன்.

3. இயேசுவே, நீர் கைவிடாமல்
என்னைச் சேர்த்து ரட்சியும்;
ரத்தத்தாலே மாசில்லாமல்
சுத்தமாக்கியருளும்;
என்னையும், என்னையும்
சுத்தமாக்கியருளும்.

4. தூய ஆவீ, கைவிடாமல்
என்னை ஆட்கொண்டருளும்;
பாதை காட்டிக் கேடில்லாமல்
என்றும் காத்துத் தேற்றிடும்;
என்னையும், என்னையும்
என்றும் காத்துத் தேற்றிடும்.

5. மாறா சுத்த தெய்வ அன்பும்,
மீட்பர் தூய ரத்தமும்,
தெய்வ ஆவி சக்திதானும்
மாண்பாய்த் தோன்றச்செய்திடும்;
என்னிலும், என்னிலும்
மாண்பாய்த் தோன்றச்செய்திடும்.

79. அருள்நாதா நம்பி வந்தேன்

1. அருள்நாதா நம்பிவந்தேன்,
நோக்கக்கடவீர்.
கைமாறின்றி என்னை முற்றும்
ரக்ஷிப்பீர்.

2. தஞ்சம் வேண்டி நம்பி வந்தேன்
திருப் பாதத்தில்;
பாவ மன்னிப்பருள்வீர் இந்
நேரத்தில்.

3. தூய்மை வேண்டி நம்பி வந்தேன்
உந்தன் ஆவியால்;
சுத்திசெய்வீர் மாசில்லாத
ரத்தத்தால்.

4. துணை வேண்டி நம்பி வந்தேன்,
பாதை காட்டுவீர்;
திருப்தி செய்து நித்தம் நன்மை
நல்குவீர்.

5. சக்தி வேண்டி நம்பி வந்தேன்,
ஞானம் பெலனும்;
அக்னி நாவும் வல்ல வாக்கும்
ஈந்திடும்.

6. இயேசு நாதா, நம்பி வந்தேன்,
தவறாமலே
என்னை என்றும் தாங்கி நின்று
காருமே.

80. அரூபியே அரூப சொரூபியே எமை

அரூபியே அரூப சொரூபியே எமை
ஆளும் பரிசுத்தரூபியே அரூப சொரூபியே

திருவிணா டுறை நிதான கருணையா திபதி மோன
சுரநரர் வணங்கும் வான ஒரு பரா பர மெய்ஞ்ஞான

1. அதி காரண அரூபியே அசரீரி சத்ய
நீதி ஆரண சொரூபியே
வேத வாசக சமுத்ர ஓதும் வாய்மைகள் சுமுத்ர
தீதிலா துயர் விசித்ர ஜாதி யாருட பவித்ர

4. சீரு லாவிய தெய்வீகமே திரி முதல் ஒரு பொருள்
ஏரு லாவிய சிநேகமே
பாருளோர் பணிந்து போற்றும் ஆரியா அடியர் சாற்றும்
நேரமே புகழை ஏற்றும் வீரமாய் மனதை ஆற்றும்

3. பத்தர் பாதகம் அடாமலே பசா சுலகுடல்
சத்ரு சோதனை படாமலே
அத்தனார் தேவ கோபம் நித்ய வேதனைகள் சாபம்
முற்றும் மாறிடத் தயாபம் வைத்து நீடுன் ப்ரதாபம்

81. அர்ப்பணிக்கின்றேன்

அர்ப்பணிக்கின்றேன் -2
எனதருமை இயேசுவுக்கே
அனைத்துமே அர்ப்பணமே
அர்ப்பணிக்கின்றேன் -2
ஆவி, ஆத்மா, தேகம், தந்து
அர்ப்பணிக்கின்றேன் -2
I surrender all I surrender all
All to thee my blessed savior
I surrender all

82. அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்

1. அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்
அற்புத நாதா உம் கரத்தில்
அனைத்தும் உமக்கே சொந்தம் என்று
அன்பரே என்னையே தத்தம் செய்தேன்

அனைத்தும் கிறிஸ்துவுக்கே - எந்தன்
அனைத்தும் அர்ப்பணமே
என் முழு தன்மைகள் ஆவல்களும்
அனைத்தும் கிறிஸ்துவுக்கே

2. என் எண்ணம் போல நான் அலைந்தேனே
என்னைத் தடுத்திட்ட தாருமில்லை
உம் சிலுவை அன்பை சந்தித்தேனே
நொறுங்கி வீழ்ந்தேனே உம் பாதத்தில்

3. ஐம்புலன்கள் யாவும் அடங்கிட
ஐம்பெருங் காயங்கள் ஏற்ற நாதா
வான் புவி கிரகங்கள் ஆள்பவரே
என்னையும் ஆண்டிட நீரே வல்லோர்

4. என் வாழ்வில் இழந்த நன்மைக்கீடாய்
எஞ்சிய நாட்களில் உழைப்பேனே
நீர் தந்த ஈவு வரங்கள் யாவும்
உம் பணி சிறந்திட முற்றும் தந்தேன்

83. அலங்கார வாசலாலே

1. அலங்கார வாசலாலே
கோவிலுக்குள் போகிறேன்;
தெய்வ வீட்டின் நன்மையாலே
ஆத்துமத்தில் பூரிப்பேன்
இங்கே தெய்வ சமூகம்,
மெய் வெளிச்சம், பாக்கியம்.

2. கர்த்தரே, உம்மண்டை வந்த
என்னண்டைக்கு வாருமேன்
நீர் இறங்கும்போதனந்த
இன்பத்தால் மகிழுவேன்.
என்னுட இதயமும்
தெய்வ ஸ்தலமாகவும்.

3. பயத்தில் உம்மண்டை சேர,
என் ஜெபம் புகழ்ச்சியும்
நல்ல பலியாக ஏற உமதாவியைக் கொடும்.
தேகம் ஆவி யாவையும்
சுத்தமாக்கியருளும்.

4. நல்ல நிலத்தில் விழுந்த
விதை பயிராகுமே
நானும் அவ்வாறே மிகுந்த
கனிகளைத் தரவே வசனத்தைக் காக்க
நீர் ஈவளிக்கக் கடவீர்.

5. விசுவாசத்தை விடாமல்
அதில் பலப்படவும்
ஒருக்காலும் தவறாமல்
உம்மை நான் பின்செல்லவும்,
மெய்வெளிச்சத்தை நீரே
என்னில் வீசும் கர்த்தரே.

6. சொல்லும், கர்த்தரே, நான் கேட்பேன்
நீர் இப்பாழ் நிலத்திலே
பெய்யப்பண்ணும் மன்னா சேர்ப்பேன்
நல்தியானத்துடனே தாரும்
ஜீவ பானத்தை தீரும் பசிதாகத்தை.

Tamil Hymns

84. அலையாலையாய் பாய்ந்து வரும்

அலையாலையாய் பாய்ந்து வரும்
தேவகிருபை என்னை நனைத்ததையா

தேவனே உம் கிருபை
என்றென்றும் மாறாதது

மலைகள் விலகினாலும்
மாசற்ற கிருபை பெருகுமே
மன்னவனை மகிழ்வித்தால்
மழையாக கிருபை ஊற்றுமே-பெரு

அதிகாலை தேவ சமூகமே
ஆச்சரிய கிருபை பெருகுமே
ஆராதனை தூபத்தில்
அப்பாவின் ஜீவன் கிடைக்குமே -இயேசு

பெலவீனத்தில் உம் கிருபை
பெலனாய் பாயுதையா
பலகோடி மைந்தர்களின் – வாழ்வு
மாறும் கிருபை வேண்டுமே – இன்று

85. அல்லேலுயா தேவ பிரசன்னம்

அல்லேலுயா தேவ பிரசன்னம் -2
என் இதயம் பொங்குதெ
அன்பினல் நிறையுதே
அல்லேலுயா தேவ பிரசன்னம் -2

Hallelujah is hear-2
And my heart is overflow
With the love that he showed
Hallelujah is hear-2

86. அல்லேலூயா அல்லேலூயா என்

அல்லேலூயா அல்லேலூயா
என் ஆத்துமாவே கர்த்தரை துதி

1. நான் உயிரோடு இருக்கு மட்டும்
என் தேவனைத் துதிப்பேனே
நான் உள்ளளவும் என் இயேசுவையே
கீர்த்தனம் பண்ணிடுவேன் - அல்லேலூயா

2. நான் மனிதனை என்றும் நம்பிடேன்
அவன் யோசனை அழிந்திடுமே
யாக்கோபின் தேவன் என் துணையே
என்றென்றும் பாக்கியவான் - அல்லேலூயா

3. என் ஆத்துமா தாகம் பெருக
என் கட்டுகள் அருத்திடுமே
கர்த்தரின் கரம் என்னை காத்திடுமே
என்றென்றும் வாழ்த்திடுவேன் - அல்லேலூயா

4. கர்த்தர் சதாகாலமும்
சீயோனில் அரசாளுவார்
தலைமுறை தலைமுறையாம் அவரே
இராஜரீகம் பண்ணிடுவார்

87. அல்லேலூயா இப்போது போர்

1. அல்லேலூயா! அல்லேலூயா!அல்லேலூயா!
இப்போது போர் முடிந்ததே;
சிறந்த வெற்றி ஆயிற்றே;
கெம்பீர ஸ்துதி செய்வோமே.
அல்லேலூயா!

2. கொடூர சாவை மேற்கொண்டார்;
பாதாள சேனையை வென்றார்;
நம் ஸ்தோத்திரப் பாட்டைப் பெறுவார்.
அல்லேலூயா!

3. இந்நாள் எழுந்த வேந்தரே,
என்றைக்கும் அரசாள்வீரே;
களித்து ஆர்ப்பரிப்போமே!
அல்லேலூயா!

4. எல்லாரும் உம்மைப் போற்ற நீர்
மரித்துயிர்த்திருக்கிறீர்;
சாகாத ஜீவன் அருள்வீர்.
அல்லேலூயா!

88. அல்லேலூயா அல்லேலூயா

அல்லேலூயா அல்லேலூயா (2)
அல்லேலூயா அல்லேலூயா (2)

1. யெகோவா ஷாலோம் அல்லேலூயா
யெகோவா நிஸியே அல்லேலூயா
யெகோவா யீரே அல்லேலூயா
பரிசுத்த பிதாவே அல்லேலூயா

2. சாரோனின் ரோஜாவே அல்லேலூயா
லீலி புஷ்பமே அல்லேலூயா
அழகில் சிறந்தவரே அல்லேலூயா
இயேசு கிறிஸ்துவே அல்லேலூயா

3. தேற்றரவாளனே அல்லேலூயா
பெலத்தின் ஆவியே அல்லேலூயா
சத்திய ஆவியே அல்லேலூயா
பரிசுத்த ஆவியே அல்லேலூயா

89. அல்லேலூயா ஆ மாந்தரே

1. அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா!
ஆ மாந்தரே, நாம் பாடுவோம்,
இந்நாளில் சாவை வென்றோராம்
விண் மாட்சி வேந்தர் போற்றுவோம்.
அல்லேலூயா!

2. அஞ்ஞாயிறு அதிகாலை
நல் மாதர் மூவர் கல்லறை
சென்றாரே காண தேகத்தை.

3. அம்மூவர் பார்த்தார் தூதன் தான்;
வெண் ஆடை தூதன் சொல்லுவான்:
நாதர் கலிலேயா செல்வார்.

4. பயந்த சீஷர் ராவிலே
கண்டார் கேட்டார் தம் நாதரே!
என் சமாதானம், தாசரே!

5. உயிர்த்த நாதர் கண்டோமே
என்றோரைத் தோமா கேட்டானே;
நம்பான், சந்தேகங்கொண்டானே.

6. வா, தோமா, என் விலாவைப் பார்,
இதோ, என் கைகள் கால்கள் பார்;
நம்பு, சந்தேகம் தீர் என்பார்.

7. தோமா சந்தேகம் தீர்ந்தனன்;
விலா, கை, கால்கள் நோக்கினன்;
என் நாதா! ஸ்வாமி! என்றனன்.

8. காணாமல் நம்பின் பாக்கியர்;
மாறா விஸ்வாசம் வைப்பவர்
மா நித்திய ஜீவன் பெறுவர்.

9. மா தூயதாம் இந்நாளில் நாம்
நம் பாடல் ஸ்தோத்ரம் படைப்போம்;
பரனைப் போற்றி மகிழ்வோம்.
அல்லேலூயா!

90. அல்லேலூயா ஆனந்தமே

அல்லேலூயா ஆனந்தமே
நான் அல்லேலூயா பாடி ஆனந்திப்பேன்

அல்லேலூயா ஆனந்தமே அருமை இரட்சகர் என்னை
அன்போடழைத்தனர் பாவங்கள் நீக்கினரே

1. இனி துன்பம் இல்லையே
இயேசு மகா ராஜன் எல்லோருக்கும் உண்டு
இன்பம் என்றென்றுமே - அல்லேலூயா

2. தினம் போற்றிப் பாடுவேன்
இவ்வுலகை போலே விண்ணுலகில் ஓர் நாள்
இணைந்து பாடிடுவேன் - அல்லேலூயா

91. அல்லேலூயா என் ஆத்துமாவே

அல்லேலூயா என் ஆத்துமாவே
கர்த்தரைத் துதித்திடு
நெஞ்சமெல்லாம் கொள்ளை கொண்ட
மன்னனை பாடிடு
உயிருள்ள காலமெல்லாம்
கர்த்தரை துதித்துடு
உள்ளமெல்லாம் உள்ளவரை
கீர்த்தனம் பண்ணிடு

1. வானத்தை பூமியைப் படைத்தவர்
அவரை நம்பினவன் பாக்கியவான்
உண்மையைய் காப்பார் நியாயம் செய்வார்
தலைமுறை தலைமுறை ஆளுவார்

2. குருடரின் கண்களைத் திறக்கின்றுர்
கட்டுண்டவர்களை விடுவிப்பார்
ஆகாரம் தருவார் ஆதரித்து காப்பார்
தலைமுறை தலைமுறை ஆளுவார்

3. நீதிமான்களை சிநேகிப்பார்
ஏழைகளை அவர் தாங்குவார்
கைப்பிடித்து காப்பார் ராஜரீகம் செய்வார்
தலைமுறை தலைமுறை ஆளுவார்

92. அல்லேலூயா கர்த்தரையே

1. அல்லேலூயா கர்த்தரையே
ஏகமாய்த் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம்
பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய்க் கிரியை செய்யும்
வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும்
இயேசுவைத் துதியுங்கள்

இராஜாதி இராஜனாம் இயேசுராஜன்
பமியில்ஆட்சிசெய்வார்
அல்லேலூயா அல்லேலூயா
தேவனைத் துதியுங்கள்

2. தம்புரோடும் வீணையோடும்
கர்த்தரைத் துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப்
போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும்
முழங்கிடத் துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர்
இயேசுவைத் துதியுங்கள்

3. சூரியனே, சந்திரனே
தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம்
அளித்தோரைத் துதியுங்கள்
அக்கினியே கல்மழையே
படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை
உடைப்போரைத் துதியுங்கள்

4. பிள்ளைகளே வாலிபரே
தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர்பணிக்கே
கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே பிரபுக்களே
தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய்
செலுத்தியே துதியுங்கள்

5. ஆழ்கடலே சமுத்திரமே
தேவனைத் துதியுங்கள்
அலைஅலையாய் ஊழியர்கள்
எழும்பினார் துதியுங்கள்
தூதர்களே முன்னோடிகளே
தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை இந்தியர்கள்
நிரப்புவார் துதியுங்கள

93. அல்லேலூயா துதி உமக்கே

அல்லேலூயா துதி உமக்கே

வாலாக்காமல் என்னை தலையாக்குவீர்
கீழாக்காமல் என்னை மேலாக்குவீர்

அரக்கன் கோலியாத்தை அழிக்கும் வல்லமையை
சிறிய தாவிதுக்குள் வைத்தவரே
ஆடுகள் மேய்த்தவனை ஜாதிகள் மத்தியிலே
உயர்த்தி தூக்கினீரே மேலே மேலே மேலே மேலே

கை நீட்டி தூக்கிவிட்டீர் உயர்த்தில் என்னை வைத்தீர்
பிள்ளையாய் மாற்றிவிட்டீர் நிரந்தரமாய்
தூசியை தட்டிவிட்டீர் சாம்பலை போக்கிவிட்டீர்
சிங்காரம் தந்துவிட்டீர் நிரந்தரமாய்

Tamil Hymns

94. அல்லேலூயா துதிமகிமை

அல்லேலூயா துதிமகிமை – என்றும்
இயேசுவுக்கே செலுத்திடுவோம்

ஆ அல்லேலூயா ஆ அல்லேலூயா(3)

1. சிலுவையை சுமப்பாயா
உலகத்தை வெறுப்பாயா – ஆ – ஆ
உலகத்தை வெறுத்து இயேசுவின்
பின்னே ஒடி வருவாயா

2. மோட்சத்தை அடைந்திடவே
பாடுகள் படவேண்டும் – ஆ -ஆ
பாடுகள் மத்தியில் பரமன்
இயேசுவில் நிலைத்தே நிற்கவேண்டும்

3. ஜெபத்திலே தரிந்திருந்து
அவர் சித்தம் நிறைவேற்று – ஆ – ஆ
முடிவு பரியந்தம் அவரில் நிலை நிற்க
பெலனைப் பெற்றுக்கொள்ளு – அல்

4. சென்றவர் வந்திடுவார்
அழைத்தே சென்றிடுவார் – ஆ – ஆ
அவருடன் செல்ல ஆயத்தமாவோம்
அவருடன் வாழ்ந்திடவே – அல

Tamil Hymns

95. அல்லேலூயா கீதம் பாடுவேன்

அல்லேலூயா கீதம் பாடுவேன்
என் ஆண்டவரைக் கொண்டாடுவேன் -2
தூக்கியெடுத்தார் சேற்றிலிருந்து
துதியின் கீதங்கள் நாவில் தந்தார் -2

ஆராதனை ஆராதனை
என் இராஜாதி இராஜனுக்கே
ஆராதனை ஆராதனை
என் தேவாதி தேவனுக்கே - 2

1. துன்பமெல்லாம் போக்கிவிட்டாரே
துதியின் ஆடை எனக்குத் தந்தாரே
வாழ்த்திப்பாடுவேன் போற்றிப்பாடுவேன்
தாழ்வில் என்னை நினைத்தவரே

2. நன்றியால் உள்ளம் பொங்குதே
இயேசு ராஜாவை நெஞ்சம் தேடுதே
என்றும் பாடுவேன் எந்தன் இயேசுவே
எந்தன் வாழ்வில் எல்லாம் அவரே

3. உயிருள்ள நாட்களெல்லாம்
அவர் நாமம் உயர்த்திடுவேன்
கர்த்தர் செய்த நன்மைகளுக்காய்
காலமெல்லாம் துதித்திடுவேன்

96. அல்லேலூயா நமதாண்டவரை

அல்லேலூயா நமதாண்டவரை
அவர் ஆலயத்தில் தொழுவோம்
அவருடைய கிரியையான
ஆகாய விரிவை பார்த்து

1. மாட்சியான வல்ல
கர மகத்துவத்துகாகவும் துதிப்போம்
மா எக்காள தொனியோடும்
வீணையோடும் துதிப்போம்
மாசில்லா சுர மண்டலத்தோடும்
தம்புருவோடும் நடனத்தோடும்
மாபெரியாழோடும் இன்னிசை
தேன் குழலோடும் துதித்திடுவோம்

2. அல்லேலூயா ஓசையுள்ள
கைத்தாளங்களை கொண்டும் துதிப்போம்
அவருடைய புதுப்பாட்டை
பண்ணிசைத்து துதிப்போம்
அதிசய படைப்புகள் அனைத்தோடும்
உயிரினை பெற்ற யாவற்றோடும்
அல்லேலூயா கீதம் அனைவரும் பாடி
துதித்து உயர்த்திடுவோம்

97. அல்லேலூயா பாடுவோம்

கர்த்தருக்கு புதுப் பாட்டப் பாடுங்க
அல்லேலூயா
பூமியின் குடிகளெல்லாம் கர்த்தரப் பாடிடுங்க

கர்த்தரப் பாடி அவருடைய
நாமத்தை ஸ்தோத்தரித்து
நாளுக்கு நாள் அவருடைய
இரட்சிப்ப சுவிசேஷமாய்
அறிவித்துப் பாடிடுங்க - கர்த்தருக்கு

ஜாதிகட்குள் அவருடைய
அதிசயங்கள் சொல்லுங்கள்
கர்த்தர் பெரிய வரும் வல்லவரும்
ஸ்தோத்தரித்து பாடுங்க - கர்த்தருக்கு

பரிசுத்த அலங்காரத்தோடு
கர்த்தர துதியுங்கள்
இந்த உலகிலுள்ள யாவருமே
கர்த்தருக்கு நடுங்கிடுங்க - கர்த்தருக்கு

நாட்டிலுள்ள யாவருமே
களிகூர்ந்து பாடிடுங்க
கர்த்தர் வருகின்றார் வருகின்றார்
நீதியோடு நியாயந்தீர்க்க வருகின்றார் - கர்த்தருக்கு

Tamil Hymns

98. அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

1. இப்போது போர் முடிந்ததே
சிறந்த வெற்றி ஆயிற்றே
கெம்பீர ஸ்துதி செய்வோமே.
அல்லேலூயா!

2. கொடூர சாவை மேற்கொண்டார்
பாதாள சேனையை வென்றார்
நம் ஸ்தோத்திரப் பாட்டைப் பெறுவார்.
அல்லேலூயா!

3. இந்நாள் எழுந்த வேந்தரே
என்றைக்கும் அரசாள்வீரே
களித்து ஆர்ப்பரிப்போமே!
அல்லேலூயா!

4. எல்லாரும் உம்மைப் போற்ற நீர்
மரித்துயிர்த்திருக்கிறீர்
சாகாத ஜீவன் அருள்வீர்.
அல்லேலூயா!

99. அல்லேலூயா தேவனுக்கே

அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா ராஜானுக்கே

தேவாதி தேவன்
ராஜாதி ராஜன்

என்றென்றும் நடத்திடுவார்

ஆராதனை ஆராதனை (2)
அல்லேலூயா அல்லேலூயா
ஆராதனை உமக்கே … ஆ…..ஆ

துணையாளரே துணையாளரே
துன்பத்தில் தாங்கும் மணவாளரே
கண்ணீரை நீக்கி
காயங்கள் ஆற்றி
கனிவோடு நடத்திடுவார் – ஆராதனை

வெண் மேகமே வெண் மேகமே
வெளிச்சம் தாரும் இந்நேரமே
அபிஷேகம் ஊற்றி
மறுரூபமாக்கி
ஆற்றலைத் தந்திடுவார் – ஆராதனை

100. அவரே என்னை என்றும் காண்பவர்

அவரே என்னை என்றும் காண்பவர் அவரே
என்னை என்றும் நடத்துவார் அவரே
என்னோடு இருப்பவரே அவரே

தண்ணீர் மீது நடந்தவார்
அவர் காற்றையும் கடலையும் அதட்டினார்
உயிர்த்தெழுந்த தேவன் அவர்
அவர் என்னோடென்றும் இருக்கிறார்

நமக்காக மரித்தவர் அவர்
நமக்காக உயிர்த்தார்
நாம் பாவம் கழுவ தன்னை
சிலுவையிலே அவர் தந்தார்

மேகங்கள் நடுவில் இடி
முழக்கத்தின் தொனியில்
ராஜாதி ராஜாவாய் இந்த
அகிலத்தை ஆளுகை செய்வார்

இயேசுவே அதிகாரம் நிறைந்தவர் இயேசுவே
அகிலத்தை ஆள்பவர் இயேசுவே
உலகத்தின் இரட்சகர் இயேசுவே

101. அவர் எந்தன் சங்கீதமானவர்

அவர் எந்தன் சங்கீதமானவர்
பெலமுள்ள கோட்டையுமாம்
ஜீவனின் அதிபதியான அவரை
ஜீவிய காலமெல்லாம் வாழ்த்திடுவோம்

துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூதர் கணங்கள் போற்றும் தேவன் அவரே
வேண்டிடும் பக்தர்களின் குறைகள் கேட்கும்
திக்கற்ற பிள்ளைகளின் தேவன் அவரே

இரண்டு மூன்று பேர் எந்தன் நாமத்தினால்
இருதயம் ஒருமித்தால் அவர் நடுவில்
இருப்பேன் என்றவர் நமது தேவன்
இருகரம் தட்டி என்றும் வாழ்த்திடுவோம்

வானவர் கிறிஸ்தேசு நாமமதை
வாழ்நாள் முழுவதும் வாழ்த்திடுவோம்
வருகையில் அவரோடு இணைந்து என்றும்
வணங்குவோம் வாழ்த்துவோம்
போற்றிடுவோம்

102. அவர் அற்புதமானவரே

அவர் அற்புதமானவரே அவர் அற்புதமானவரே
எனை மீட்டென்னைக் காத்தென்னைத்
தாங்குகிறார் அவர் அற்புதமானவரே

1. அவர் உன்னதர் என்றனரே - 2
விண் சூரிய சந்திர நட்சத்திரங்கள்
அவர் உன்னதர் என்றனரே
2. அவர் அற்புதமானவரே - 2
அவர் சிங்கத்தின் வாயைக் கட்டினாரே
அவர் அற்புதமானவரே
3. அவர் உன்னதர் என்றனரே - 2
அவர் காற்றையும் கடலையும் அதட்டினாரே
அவர் உன்னதர் என்றனரே

Tamil Hymns

103. அவர் அற்புதர் என்றனரே

அவர் அற்புதர் என்றனரே
விண் சூரிய சந்திரநட்சத்திரங்கள்
அவர் அற்புதர் என்றனரே

1. அவர் அற்புதமானவரே
அவர் மீட்டென்னை
காத்தென்னை தாங்குகிறார்
அவர் அற்புதமானவரே

2. அவர் அற்புத வைத்தியரே
அவர் தழும்புகளால்
குணமாக்கினாரே
அவர் அற்புத வைத்தியரே

104. அழகானவர்

அழகானவர் அருமையானவர்
இனிமையானவர் (2)
மகிமையானவர் மீட்பரானவர் (2)
அவர் இயேசு இயேசு இயேசு

1. சேனைகளின் கர்த்தர் நம் மகிமையின் இராஜா
என்றும் நம்மோடிருக்கும் இம்மானுவேலன்
இம்மட்டும் இனிமேலும் எந்தன் நேசர்
என்னுடையவர் என் ஆத்ம நேசரே (2)

2. கன்மலையும் கோட்டையும் துணையுமானவர்
ஆற்றித் தேற்றிக் காத்திடும் தாயுமானவர்
என்றென்றும் நடத்திடும் எந்தன் இராஜா
என்னுடையவர் என் நேச கர்த்தரே

3. கல்வாரி மேட்டினில் கொல்கொதாவிலே
நேசர் இரத்தம் சிந்தியே என்னை மீட்டார்
பாசத்தின் எல்லைதான் இயேசு இராஜா
என்னுடையவர் என் அன்பு இரட்சகர்

105. அழகாய் நிற்கும் யார் இவர்கள்

அழகாய் நிற்கும் யார் இவர்கள்?
திரளாய் நிற்கும் யார் இவர்கள்?
சேனைத் தலைவராம்
இயேசுவின் பொற்றளத்தில்
அழகாய் நிற்கும் யார் இவர்கள்?

1. எல்லா ஜாதியார் எல்லாக் கோத்திரம்
எல்லா மொழியும் பேசும் மக்களாம்
சிலுவையின் கீழ் இயேசு இரத்தத்தால்
சீர் போராட்டம் செய்து முடித்தோர்

2. வெள்ளை அங்கியைத் தரித்துக்கொண்டு
வெள்ளைக் குருத்தாம் ஓலை பிடித்து
ஆர்ப்பரிப்பார் சிங்காசனம் முன்பு
ஆட்டுக்குட்டிக்கே மகிமையென்று

3. தனிமையிலும் வறுமையிலும்
லாசரு போன்று நின்றவர்கள்
யாசித்தாலும் போஷித்தாலும்
விசுவாசத்தைக் காத்தவர்கள்

4. இனி இவர்கள் பசி அடையார்
இனி இவர்கள் தாகமடையார்
வெயிலாகிலும் அனலாகிலும்
வேதனையை அளிப்பதில்லை

5. ஆட்டுக்குட்டிக்கு தான் இவர் கண்ணீரை
அற அகற்றித் துடைத்திடுவார்
அழைத்துச் செல்வார் இன்ப ஊற்றுக்கே
அள்ளிப் பருக இயேசு தாமே!

Tamil Hymns

106. அழிந்து போகின்ற ஆத்துமாக்களை

அழிந்து போகின்ற ஆத்துமாக்களை
தினமும் திமமும் நினைப்பேன்
அலைந்து திரிகின்ற ஆட்டைத் தேடியே
ஓடி ஓடி உழைப்பேன்
தெய்வமே தாருமே
ஆத்தும பாரமே

1. இருளின் ஜாதிகள்
பேரொளி காணட்டும்
மரித்த மனிதர்மேல்
வெளிச்சம் உதிக்கட்டும்

2. திறப்பின் வாசலில்
தினமும் நிற்கின்றேன்
சுவரை அடைக்க நான்
தினமும் ஜெபிக்கின்றேன்

3. எக்காள சப்தம் நான்
மௌனம் எனக்கில்லை
சாமக்காவலன்
சத்தியம் பேசுவேன்

4. கண்ணீர் சிந்தியே
விதைகள் தூவினேன்
கெம்பீர சப்தமாய்
அறுவடை செய்கிறேன்

5. ஊதாரி மைந்தர்கள்
உம்மிடம் திரும்பட்டும்
விண்ணகம் மகிழட்டும்
விருந்து நடக்கட்டும்

107. அழைக்கிறார் அழைக்கிறார் அன்பாய்

அழைக்கிறார் அழைக்கிறார்
அன்பாய் இன்றே உன்னை
கல்லும் கரையும் கல்வாரியண்டை
கர்த்தர் அழைக்கிறார்

1. கேட்டின் மகன் கெட்டழிந்தான்
கெட்ட குமாரனைப்போல்
பாவத்தின் சம்பளம் மரணமே
பாவத்தில் மாளாதே

2. உந்தன் நீதி கந்தையாகும்
உன்னில் நன்மை ஒன்றில்லை
பாவஞ் செய்தே மகிமையிழந்தாய்
பாவியை நேசித்தார்

3. பாவங்களை மறைப்பவன்
பாரில் வாழ்வை அடையான்
சன்மார்க்கன் துன்மார்க்கன் இருவரும்
சங்காரம் அடைவார்

4. நானே வழி சத்தியமும்
நித்திய ஜீவன் என்றார்
இயேசுவை நம்பி நீ ஜெபிப்பதால்
இரட்சணியம் அடைவாய்

5. காலங்களும் கடந்திடும்
வால வயதும் மாறும்
தேவனைச் சந்திக்கும் வேளையிதே
தேடி நீ வாராயோ

Tamil Hymns

108. அழைக்கிறார் அழைக்கிறார் இதோ

அழைக்கிறார் அழைக்கிறார் இதோ
நீயும் வா உந்தன் நேசர்
ஆவலாய் அழைக்கிறார் - இதோ

1. பாவத்தை ஏற்றவர் பலியாய் மாண்டவர்
கல்வாரியின் மேட்டினில்
கண்கொள்ளாத காட்சியே
கண்டிடும், வேண்டிடும் பாவப்பாரம் நீங்கிடும்

2. நோயையும் ஏற்றவர் பேயையும் வென்றவர்
நேசர் உந்தன் நோய்களை
நிச்சயமாய் தீர்த்தாரே
நோயுற்ற உன்னையே நேயமாய் அழைக்கிறார்

3. துன்பம் சகித்தவர், துயரடைந்தவர்
இன்னலுற்ற உன்னையே
அண்ணல் யேசழைக்கிறார்
துன்புறும் நெஞ்சமே துரிதமாக வாராயோ

4. அந்தக் கேடடைந்தார் அழகற்றுத் தோன்றினார்
சொந்தமாகச் சேர்ந்திட
இந்தப் பாடடைந்தாரே நிந்திக்கும்
உன்னையும் சந்திப்பார் நீ வாராயோ

5. கல்லறைத் திறக்கக் காவலர் நடுங்கக்
கஸ்திகளடைந்தாரே கட்டுகளறுத்தாரே
உயிர்த்தார், ஜெயித்தார்
உண்டு மீட்புனக்குமே

6. சாந்த சொரூபனே சத்திய வாசனே
வஞ்சமற்ற வாயனே
வந்தணைக்கும் நேயனே-தஞ்சமே
தன்னையே தந்துனை அழைக்கிறார்

Tamil Hymns

109. அழைத்தீரே இயேசுவே

அழைத்தீரே இயேசுவே
அன்போடே என்னை அழைத்தீரே
ஆண்டவர் சேவையிலே மரிப்பேனே
ஆயத்தமானேன் தேவே

1. என் ஜனம் பாவத்தில் மாள்கிறதே
என் உயிர் தந்தேன் மன்னுயிர்க்கே
என் துயர தொனியோ இதை
யார் இன்று கேட்பாரோ
என் காரியமாக யாரை அழைப்பேன்
என்றீரே வந்தேனிதோ

2. என்னதான் தீங்கு நான் இழைத்தேன்
என்னை விட்டோடும் என் ஜனமே
எத்தனை நன்மைகளோ
உனக்காக நான் செய்தேனல்லோ
என்றே உரைத்தென்னை ஏங்கி அழைத்தீர்
எப்படி நான் மறப்பேன்

3. எந்தன் ஜெபத்தைக் கேட்டிடுமே
ஏழை ஜனத்தை மீட்டிடுமே - எந்தன்
பிதா சித்தமே என் போஜனமும் அதுவே
என் பிராணனைக்கூட நேசித்திடாமல்
என்னையும் ஒப்படைத்தேன்

4. ஆடம்பரங்கள் மேட்டிமைகள்
ஆசாபாசங்கள் பெருகிடுதே
ஆயிரம் ஆயிரமே நரக வழி போகின்றாரே
ஆ! நீரேயல்லாமல் யாருண்டு மீட்க
ஆண்டவரே இரங்கும்

5. பாக்கியமான சேவையிதே
பாதம் பணிந்தே செய்திடுவேன்
ஆயுள் முடியும் வரை கிறிஸ்தேசு வருகை வரை
அன்பு மனத்தாழ்மை உண்மையும் காத்து
ஆண்டவரை அடைவேன்

Tamil Hymns

110. அழைத்தீரே ஏசுவே

அழைத்தீரே ஏசுவே
அன்போடே என்னை அழைத்தீரே
ஆண்டவர் சேவையிலே மரிப்பேனே
ஆயத்தமானேன் தேவே

1. என் ஜனம் பாவத்தில் மாள்கிறதே
என் உயிர்தந்தேன் மண்ணுயிர்க்கே
என் துயரதொனியோ இதையார் இன்று கேட்பாரோ
என் காரியமாக யாரை அழைப்பேன்
என்றீரே வந்தேனிதோ - அழைத்தீரே

2. என்னதான் தீங்கு நான் இழைத்தேன்
என்னை விட்டோடும் என் ஜனமே
எத்தனை நன்மைகளோ உனக்காக நான்செய்தேனல்லோ
என்றே உரைத்தென்னை ஏங்கி அழைத்தீர்
எப்படி நான் மறப்பேன் - அழைத்தீரே

3. ஆதி விஸ்வாசம் தங்கிடவே
ஆண்டவர் அன்பு பொங்கிடவே
ஆதி அப்போஸ்தலரே உபதேசம் அளித்தனரே
நல் பூரண தியாகப் பாதை நடந்தே
நன்றியுடன் உழைப்பேன் - அழைத்தீரே

4. எந்தன் ஜெபத்தைக் கேட்டிடுமே
ஏழை ஜனத்தை மீட்டிடுமே
எந்தன் பிதா சித்தமே எந்தன் போஜனமும் அதுவே
என் பிராணனைக்கூட நேசித்திடாமல்
என்னையும் ஒப்படைத்தேன் - அழைத்தீரே

5. ஆடம்பரங்கள் மேட்டிமைகள்
ஆசாபாசங்கள் பெருகிடுதே
ஆயிரம் ஆயிரமே நரக வழி போகின்றாரே
ஆ! நிரேயல்லாமல் யாருண்டுமிட்க
ஆண்டவரே இரங்கும் - அழைத்தீரே

6. பாக்கியமான சேவையிதே
பாதம் பணிந்தே செய்திடுவேன்
ஆயுள் முடியும் வரை கிறிஸ்தேசு வருகை வரை
அன்பின் மனத்தாழ்மை உண்மையும் காத்து
ஆண்டவரை அடைவேன்- அழைத்தீரே

Tamil Hymns

111. அழைப்பின் குரல் கேட்டேன்

அழைப்பின் குரல் கேட்டேன் - என்
ஆண்டவர் என உணர்ந்தேன்
அருகினில் தயங்கி நடை பயின்றேன்
பின்னே வா என முன் சென்றார் - 2

1. அறிவில் குறைந்தவன் நான் அன்றோ
அதைத் தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன்
அறிந்தவர் செருக்கினை அகற்றிடவே - பின்னே

2. வலிமை குறைந்தவன் நான் அன்றோ
அதைத் தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன்
வலியவர் கொடுக்கினை வதைத்திடவே
பின்னே வா என முன் சென்றார்

3. குறைகள் நிறைந்தவன் நான் அன்றோ
அதைத் தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன்
கருவில் இருந்துன்னைத் தெரிந்தவர் நான்
பின்னே வா என முன் சென்றார்

Tamil Hymns

112. அள்ள அள்ள குறையாத அன்பு

அள்ள அள்ள குறையாத அன்பு
ருசிக்க ருசிக்க தெவிட்டாத அன்பு
சொல்ல சொல்ல முடியாத அன்பு -என்
இயேசுவின் இணையில்லாத அன்பு

1. பெயரைச் சொல்லி அழைத்த அன்பு - என்னை
உயர்த்தி வைத்த உன்னத அன்பு

என்னை கவர்ந்து கொண்ட
இயேசுவின் அன்பு

2. என்னையும் அபிஷேகித்த அன்பு - என்னை
அதிசயமாய் நடத்தின அன்பு

3. என்னையும் நினைத்த அன்பு - என்னை
கைவிடாமல் நடத்திய அன்பு

4. ஊழியத்தை கொடுத்த அன்பு - என்னை
ஊழியனாய் மாற்றின அன்பு

113. அறுப்பு மிகுதி ராஜாவே

1. அறுப்பு மிகுதி ராஜாவே
ஊழியர் தந்திடும்
வெறுப்பில் அலையும் ஜனத்தின் மேல்
எம் பொறுப்பை உணர்த்திடும்

இந்தியாவில் கோடி கோடி
உம்மை அறியாரே
என்னை அனுப்பும் ராஜாவே
நீர் என்னை அனுப்பிடும்

2. பாதாள சேனை இன்னும் இன்னும்
ஜெயிக்க விடாதிரும்
சேனை வீரராய் வாலிபர் பலர்
எழும்பச் செய்திடும்

3. யாரை அனுப்ப யார் போவார்
என்றலையும் இயேசுவே
என்னை உந்தன் கண்கள் காண
உம்முன் நிற்கிறேன்

4. மெய் வீரனாக ராஜாவே
நான் எழுந்து வருகிறேன்
கோதுமை மணியாக மாற
என்னைப் படைக்கிறேன்

114. அறுவடையோ மிகுதி ஆட்களோ

அறுவடையோ மிகுதி
ஆட்களோ கொஞ்சம்
அறுவடையின் தேவனை நோக்கிடுவோம்

1. வயல் நிலங்கள் எல்லாம்
விளைந்து விட்டதன்றோ
ஓடி ஓடி அறுப்போம்
களஞ்சியத்தில் சேர்ப்போம்

2. திறப்பிலே நிற்போம்
விரிசல்களை அடைப்போம்
விழித்திருந்து ஜெபிப்போம்
வெற்றி கண்டு மகிழ்வோம்

3. நதியளவு கண்ணீர்
நாள்முழுதும் வடிப்போம்
இந்தியாவை நினைப்போம்
இரவும் பகலும் ஜெபிப்போம்

4. ஆத்ம பாரம் கொள்வோம்
ஆர்வத்தோடு செல்வோம்
யுத்த களத்தில் நிற்போம்
கோலியாத்தை வெல்வோம்

5. தொடர்ந்து நன்மை செய்வோம்
சோர்வில்லாமல் செல்வோம்
குறித்த காலம் வருமே
அறுவடை நிச்சயமே

115. அற்ப வாழ்வை வாஞ்சியாமல்

1. அற்ப வாழ்வை வாஞ்சியாமல்
இன்பம் செல்வம் பின்பற்றாமல்
தெய்வ நேசத்தை ஓயாமல்
நாடுவாய், நாடுவாய்

2. விரும்பாதே பேர் பிரஸ்தாபம்
லோக மகிமை பிரதாபம்
ஆத்ம வாழ்வின் நித்திய லாபம்
நாடுவாய், நாடுவாய்

3. நாடுவாய், தெய்வாசிர்வாதம்
கர்த்தர் ஈயும் சற்பிரசாதம்
பாவம் தீரத் திருப்பாதம்
நாடுவாய், நாடுவாய்,

4. மீட்பர் போல் சுத்தாங்கமாக
தாழ்மையோடு சாந்தமாக
தொண்டு செய்ய ஆவலாக
நாடுவாய், நாடுவாய்,

5. பிறர் இயேசுவண்ட சேர
அவராலே கடைத்தேற
தெய்வ சித்தம் நிறைவேற
நாடுவாய், நாடுவாய்,

6. அருள் நாதர் அரசாளும்
காலம் வந்து, சர்வத்ராளும்
மீட்பைக் காணவும், எந்நாளும்
நாடுவாய், நாடுவாய்,

116. அற்புத அன்பிதே பொற்பரன் இயேசுவே

1. அற்புத அன்பிதே பொற்பரன் இயேசுவே
பெற்ற பிதாவிலும் உற்றவர் எனக்கே
உம்மை போற்றி ஏற்றி புகழ்ந்திடவே
துதி சாற்றி ஊற்றி உள்ளம் மகிழ்வேன் - 2

அன்பு பெருகும் சுனை நீரல்வோ
அம்பு விதனில் அரசே மாறா நின்
தயவும் மா நேசமதும் மறப்பேனா - 2

2. நாலாம் ஜாமத்திலே நடுக்கடல் மீதே
நடந்து சீஷரைத் தேற்றிய ஏசுவே
எந்தன் நாவாய்ப் பொங்கும் அலைகடந்தே
கரை நாடி சேரத் துணை புரிவீர்

3. மெல்கிசேதேக்கினைப் போன்ற குமாரனே
நல்குவீர் தாழ்மையும் நின்சித்தம் செய்யவே
தாரும் தூய ஆவி அனுக்கிரகமே
இன்று மீயுமென்னில் புது பெலனே

4. ஒளியில் இலங்கும் சுத்தர்களுடனே
எளியோன் எனக்கோர் பங்களித்தவரே
பரிசுத்தம் நான் பெறச் செய்யுமே
சுதந்திரம் நான் பெறச் செய்யுமே

5. சீயோனின் சிறப்பே அன்பின் பூரணமே
சிந்திக்க ஆனந்த கண்ணீh பெருகுதே
அதை எண்ணி நிறைந்தன்பினால்
இன்றும் எண்ணமில்லா துதி சொல்லுவேன்

117. அற்புத இயேசு ராஜனே உத்தம

அற்புத இயேசு ராஜனே உத்தம
மணாளனேநீரே என் ஆறுதல் ஓ.. ஓ..

என் கோட்டை என் துருகம்
நான் நம்பினவர் என் அடைக்கலம் -2

1. கனவிலும் மறவேன் நீர் செய்த நன்மைகள்
நனவிலும் மறவேன் நீர் செய்த அதிசயங்கள் (2)

என் ராஜா என் ரோஜா
என் தெய்வம் என் இயேசு

2. நேற்றும் இன்றும் என்றும் மாறா தேவன்
போற்றிப் பாடுமு சர்வ வல்ல ராஜன்

என் அன்பர் என் இன்பர்
என் நண்பர் என் இயேசு

3. ஒருவராக பெரியக் காரியங்களைச் செய்பவர்
இருளிலிருந்து புதையலை கொண்டு வருபவர்

நீர் பெரியவர் துதிக்குப் பாத்திரர்
எனக்குரியவர் என் இயேசு

118. அற்புத நட்சத்திரம்

கிழக்கிலே ஒரு நட்சத்திரம் கிளம்பியதும் ஓர் அற்புதம்
வானிலே அதன் தேர் வலம் நடந்த அழகு அற்புதம்!

1. தூதர்கள் கூட்டம் கீத பவனியாய்
தூது சொன்னது அற்புதம் அற்புதம்
பாமரர், மேய்ப்பர், தேடியே வந்ததும் அற்புதம் அற்புதமே
மேதையர் சிலராய்ப் பணிந்திடச் சென்றதும் அற்புதம் அற்புதமே

2. கன்னியின் வயிற்றில் உன்னதர் ஆவியால்
மன்னன் வரவு அற்புதம்
அகிலம் முழுவதும் தேவன் படைத்தது அற்புதம் அற்புதமே
உலகினில் தம்மை வெளிப்படச் செய்ததும் அற்புதம் அற்புதமே

3. பாவ நிவாரணம் கிடைத்திடும் வழிதனை
தேவன் அமைத்தது அற்புதம் அற்புதம்
சிலுவையில் தம்முயிர் தானமாய்ப் படைத்ததும் அற்புதம் அற்புதமே
விடுதலை பெறும்வழி துவக்கியே வைத்ததும் அற்புதம் அற்புதமே

4. இயேசுவின் சன்னிதி அடைக்கலம் தேடுவோர்
வாழ்வு மலர்ந்திடும் அற்புதம் அற்புதம்
மீண்டும் பிறந்தவர் கூடியோ வாழ்ந்திடும் அற்புதம் அற்புதமே
அழகிய மானுடம் உலகெங்கும் விடியும் அற்புதம் அற்புதமே

Tamil Hymns

119. அற்புத ஜீவியம்

அற்புத ஜீவியம் ஆஹா அற்புதம்
ஆனந்தம் அற்புதம் எனக்கு
இயேசுவை சந்தித்தேன்
என்னை முற்றும் மாற்றினார்
அற்புத ஜிவியமே
இயேசு என் உள்ளத்தில் வந்த நாள் முதல்
சொல்லி முடியாத அன்பு என்னில் பொங்குதே
நான் என் நேசருக்காய் ஜீவிப்பேன்
அற்புத ஜிவியமே

Tamil Hymns

120. அற்புதங்கள் செய்பவர்

அற்புதங்கள் செய்பவர் நம் இயேசு (2)
அற்புதங்கள் அதிசயங்கள்
அற்புதங்கள் நடத்துவார் இயேசு

121. அற்புதர் அற்புதர் அற்புதர் அற்புதர்

அற்புதர் அற்புதர் அற்புதர் அற்புதர்
இயேசு அற்புதர்
அண்டினோர் வாழ்வை இன்பமாய் மாற்றும்
இயேசு அற்புதர்

எல்லோரும் பாடுங்கள்
கைத்தாளம் போடுங்கள்
சந்தோஷத்துடன்
சங்கீதம் பாடுங்கள்

1. எத்தனை துன்பங்கள் நம்மில் வந்த போது
மீட்ட இயேசு அற்புதர்
என்னென்ன தொல்லைகள் நம்மைச் சூழ்ந்த போது
காத்த இயேசு அற்புதர் உலகத்தில் இருப்போனிலும்
உங்கள் இயேசு பெரியவர் – அற்புதரே
உண்மையாய் அவரை தேடும் யாவருக்கும்
இயேசு அற்புதர்
(எல்லோரும் பாடுங்கள்)

2. அலைகடல் மேலே நடந்தவர் எங்கள் இயேசு அற்புதர்
அகோரக் காற்றையும் அமைதிப்படுத்திய
இயேசு அற்புதர்
அறைந்தனர் சிலுவையிலே ஆண்டவர் மரித்தார் அந்நாளினிலே
ஆயினும் மூன்றாம் நாள் உயிருடன் எழுந்த
இயேசு அற்புதரே
(எல்லோரும் பாடுங்கள்)

122. அனந்த ஞான சொரூபா

அனந்த ஞான சொரூபா, நமோ நம!
அனந்த ஞான சொரூபா!

1. கனங்கொள் மகிமையின் கர்த்தாவே,
காத்திர நேத்திர பர்த்தாவே - நரர்
காண வந்தாரே - பரன் நரர் காண வந்தாரே
கருணாகர தேவா, அனந்த ஞான சொரூபா!

2. அந்தப் பரமானந்த குணாலா
ஆதத்தின் தீ தற்ற மனுவேலா - எமை
ஆண்டு கொண்டாரே, பரன் எமை ஆண்டு கொண்டாரே,
ஞானாதிக்கத் துரையே அனந்த ஞான சொரூபா!

3. ஆடுகளுக் குரிமைக் கோனே,
ஆரண காரணப் பெருமானே - நரர்க்
கன்பு கூர்ந்தாரே - பரன் நரர்க் கன்பு கூர்ந்தாரே,
கிருபாசனத் தானே, அனந்த ஞான சொரூபா!

4. பந்தத் துயரந் தீர்த்தாரே, பாவத்தைச்
சாபத்தை ஏற்றாரே - எமைப்
பார்க்க வந்தாரே - பரன் எமைப் பார்க்க வந்தாரே,
பரமாதிக்கத் தோரே, அனந்த ஞான சொரூபா!

Tamil Hymns

123. அனுக்ரக வார்த்தையோடே

1. அனுக்ரக வார்த்தையோடே - இப்போ-து
அடியாரை அனுப்புமையா!
முனமதில் தயவுறும் மகத்துவபரனே!
வந்தனம் உமக்காமென்.

2. நின்திரு நாமமதில் - கேட்ட
நிர்மலமாம் மொழிகள்
சந்ததம் எமதகம் மிக பலனளித்திடச்
சாமி நின்னருள் புரிவாய்.

3. தோத்திரம், புகழ், மகிமை, - கீர்த்தி,
துதிகனம் தினமுமக்கே
பாத்திரமேளூ அதிசோபித பரனே!
பாதசரண் ஆமென்!

124. அனுதினமும் உன்னில் நான் வளர்ந்திடவே

அனுதினமும் உன்னில் நான் வளர்ந்திடவே
உன் அனுக்கிரகம் தரவேண்டுமே
என்னால் ஒன்றும் கூடாதையா
எல்லாம் உம்மால் கூடும்

1. என் ஞானம் கல்வி செல்வங்கள் எல்லாம்
ஒன்றுமில்லை குப்பை என்றெண்ணுகிறேன்
என் நீதி நியாயங்கள் அழுக்கான கந்தை
என்றே உணர்ந்தேன் என் இயேசுவே --- அனுதினமும்

2. அழைத்தவரே உன்னில் பிழைத்திடவே
அவனியில் உமக்காய் உழைத்திடவே
அர்ப்பணிக்கின்றேன் என்னை இன்று
ஏற்றுக் கொள்ளும் என் இயேசுவே --- அனுதினமும்

125. அனுப்பும் தேவா உம் ஆவியினை

அனுப்பும் தேவா உம் ஆவியினை
அடியார் மீதே இவ்வேளையிலே

பரிசுத்த ஆவி பலமாய் இறங்கி
பின்மாரி பெய்திடவே இப்போ அனுப்பும்

1. சுட்டெரிக்கும் தேவ அக்கினியே
சுத்திகரிக்கும் எம்மை
குற்றங் குறைகள் கறைகளை
முற்றும் நீக்கி சுத்தம் செய்ய

2. பெந்தேகொஸ்தே நாளில் சீஷர்கள் மேல்
பலத்த காற்றாய் வந்தீர்
பலவீனர் எம் உள்ளத்திலும்
தேவ பெலன் பெற்றிடவே

3. மீட்கப்படும் நல் நாளுக்கென்றே
பெற்ற உம் ஆவிதனை
துக்கப்படுத்தாது பாதுகாத்து
தூய வழியில் நடந்திட

4. சாத்தானின் கோட்டைகள் தகர்ந்திடவே
சத்தியம் சாற்றிடவே
புத்தியாய் நின்று யுத்தம் செய்ய
சக்தி ஈவீர் இந்நேரமே

5. இளைத்துப் போன உள்ளம் பெலனடைந்து
இடைவிடா சேவை செய்ய
இரட்சகர் இயேசுவின் சாட்சியாக
பாரில் எங்கும் ஜீவித்திட

126. அனைத்து சமயத்து மெய்ப்பொருள்

அனைத்து சமயத்து மெய்ப்பொருள்
இயேசுவே - வேதங்கள் கூறிடும்
கருப்பொருள் இயேசுவே
மெய்ப்பொருள் இயேசுவே...

உண்மை என்பது ஒன்றே ஒன்றாகும்
அண்மையில் சேர்ந்திட்டால் அதுவும் புலனாகும்
மெய்ப் பொருள் இயேசுவே...

1. நோன்பு, நேர்ச்சை பல பிரயாணம் செய்துமே
பாவத்தின் கூர்மையை வெல்ல முடியவில்லை
சோதனை நேரத்தில் உடல் உள்ளம் கறைப்பட
துக்கம் நிறைந்திட வாழ்வெல்லாம் சோக மயம்
நிம்மதி எங்கே? விடுதலை எங்கே?
என்றிடும் வேளையில் கல்வாரி கண்ணில் பட
மெய்ப்பொருள் இயேசுவே...

2. பாவமும் சாபமும் துரத்திடும் வேளையில்
கல்வாரி சிலுவையின் காட்சியில் மூழ்கிட
பலியாடாம் இயேசுவின் இரத்தத்தில் என் பாவம்
மன்னிக்கப்பட்டது, நம்பிக்கைப் பிறந்தது
சோதனை வேளையில் இயேசுவின் துணை கண்டேன்
பரலோக பாதையில் இணையற்ற இன்பம் பெற்றேன்
மெய்ப்பொருள் இயேசுவே...

3. காலமும் கடந்திடும் சீலமும் குறைந்திடும்
மனிதனின் வாழ்வு ஓர் மாபெரும் மாய்கையே
கல்வி, செல்வம், புகழ், பதவி ஆசைகள் பல
மரணம் வரும்போது மறைந்து ஓடிப் போகும்
உன் பாவமோ தூய்மையோ உன்னைத் துரத்திடும்
புதிய மனம் பெற சிலுவை வரை வந்து
மெய்ப்பொருள் இயேசுவே...

Tamil Hymns

127. அனைத்தையும் அருளிடும்

அனைத்தையும் அருளிடும்
எனக்கென தந்திடும் - வலக்கரம்
என்னை உயர்த்திடும்என் தேவனே
யெஹோவா யீரே - (4)

1. செட்டையின் நிழலில் அடைக்கலம்
தீங்குகள் நேராமல் காத்திடும்
கழுகினைப் போல் என்னை சுமந்திடும்
என் தேவனே

2. சிலுவையில் எந்தன் நோய்களை
சுமந்தீர் உந்தன் சரீரத்தில்
அன்றே நான் சுகமானேனே
என் தேவனே

3. தேவனால் பிறந்தவன் எவனுமே
உலகத்தை ஜெயிப்பவன் என்றுமே
மலைகளையும் பதராக்குவேன்
என் தேவனே

4. புல்லுள்ள இடங்களில் எந்தனை
நித்தமும் சுகமாய் நடத்திடும்
அமர்ந்த தண்ணீரண்டை சேர்த்திடும்
என் தேவனே

128. அனைத்தையும் செய்து முடிக்கும்

அனைத்தையும் செய்து முடிக்கும்
ஆற்றலுல் உள்ளவரே நீர் நினைத்தது
ஒரு நாளும் தடைபடாதையா

1. நீர் முடிவெடுத்தால்
யார்தான் மாற்றமுடியும்
எனக்கென முன்குறித்த எதையுமே
எப்படியும் நிறைவேற்றி முடித்திடுவீர்
உமக்கே ஆராதனை
உயிருள்ள நாளெல்லாம்

2. நான் எம்மாத்திரம் ஒரு பொருட்டாய்
எண்ணுவதற்கு
காலைதோறும் கண்ணோக்கி பார்க்கிறீர்
நிமிடந்தோறும் விசாரித்து மகிழ்கிறீர்

3. என்னைப் புடமிட்டால் பொன்னாக துலங்கிடுவேன்
நான் போகும் பாதைகளை அறிந்தவரே
உந்தன் சொல்லை உணவு போலக் காத்துக்
கொண்டேன்

4. நான் எண்ணிமுடியா அதிசயம் செய்பவரே
காயப்படுத்தி கட்டுப்போடும் கர்த்தரே
அடித்தாலும் அணைக்கின்ற அன்பரே

5. என் மீட்பரே உயிரோடு இருப்பவரே
இறுதி நாளில் மண்ணில் வந்து நிற்பதை
என் கண்கள்தானே அந்நாளில் காணுமே
எப்போது வருவீரையா
என் உள்ளம் ஏங்குதையா

129. அன்பர் இயேசுவின் அன்புஅது

அன்பர் இயேசுவின் அன்பு
அது அளவிடமுடியாது
கடற்கரை மணலை கணக்கிடலாம்
அவர் அன்பிற்கீடேது

1. சிலுவை நாயகன் சிந்தியரத்தம்
அன்பாய் வழிகிறது
சிறுமைபட்ட ஜனங்களை மீட்க
இரத்தம் போகின்றது

2. பாவம் பெருகின இடத்தில் - தேவ
கிருபை வெளிப்பட்டதே
பாவ மீறுதல் போக்க சிலுவையிலே
இரத்த வெள்ளம் பாய்கின்றதே

3. ஆணிகள் அடித்து தொங்கிய போதும்
தனக்காய் அழவில்லை
கள்வர்கள் நடுவில் கதறிய
உன்க்காய் அழுகின்றார் - இயேசு
உன்னை மீட்க துடிக்கின்றார்
அன்பர் இயேசுவின் அன்பு

130. அன்பரின் நேசம் பெரிதே

அன்பரின் நேசம் பெரிதே
அதை நினைத்தே மகிழ்வோம்

1. உலகத் தோற்றம் முன்னமே
உன்னத அன்பால் தெரிந்தாரே
இந்த அன்பு ஆச்சரியமே
இன்பம் இகத்தில் வேறு இல்லை

2. அன்பின் அகலம் நீளமும்
ஆழம் உயரம் அறிவேனோ
கைவிடாமல் காக்கும் அன்பு
தூக்கி எடுத்து தேற்றும் அன்பு

3. பாவ சேற்றில் எடுத்தென்னை
சாபமெல்லாம் தொலைத்தாரே
தூய இரத்தம் சிந்தி மீட்ட
தூய்மையான தேவ அன்பு

131. அன்பான இயேசு என்னைத் தொட்டாரே

அன்பான இயேசு என்னைத் தொட்டாரே நம்பாமல்
இருப்பேனோ - நான் நம்பாமல் இருபபேனோ
(அன்பான இயேசு.......)

இருள் உன்னைச் சூழாதே
தேவ ஒளி உன்னை வழிநடத்தும் (2)
அழிகின்றதை நீ இழந்துவிட்டாய் (1)
அழியாததென்றை நீ அடைந்துவிட்டாய்
தேவ சமூகம் முன்னாலே நீ வருவாயே (1)
(அன்பான இயேசு.......)

கடன் நீ வாங்காயே
கடன் நீ கொடுத்திடுவாய் (2)

உண்ணாமல் நான் உன்னைப் போஷித்திடுவேன் (1)
உறங்காமல் நான் உன்னைக் காத்திடுவேன்
ஐவ அப்பமும் நானே
(அன்பான இயேசு........)

கடலும் கலங்கித் தெளிந்திடலாம்
மனக்கவலையும் ஒரு நாள் கலைந்திடலாம் (2)
உன் பலவீனத்தில் என் பலம் விளங்கும் (1)
என் கிருபை உனக்கு போதுமல்லோ
நான் உன்னை அழைக்கும் இயேசுவல்லோ
(அன்பான இயேசு.......)

132. அன்பரென் நேசரே உம்மண்டையில்

1. அன்பரென் நேசரே உம்மண்டையில்
இன்பமாக உந்தன் பாதையோட
நீரே வழியும் சத்தியமும் ஜீவனுமே

2. துன்பப் பெருக்கிலே சோர்ந்திடேனே
அன்பரறியாமல் வந்திடாதே
கண்மணி போல் நீர் காத்திடுவீர் கனிவுடன்

3. சுற்றிலும் சத்துரு சூழ்ந்திடினும்
வியாகுலம் என்னை விரட்டிடினும்
ஆ! நேசரே உம் இன்ப சத்தம் ஈந்திடுவீர்

4. ஈனச் சிலுவையில் ஏறிட்டீரோ
எந்தனுக்காய் கஷ்டப் பட்டிட்டீரோ
துன்ப மூலமாய் எய்திடுவேன் இன்ப கானான்

5. சொந்த ஜீவனை நீர் என்னிலீந்து
அன்பிலணைத்தீரே வல்லமையாய்
எந்தன் ஜீவனை மற்றோருக்காய் ஈந்திடவே

6. மாயையான இந்த லோகமதில்
மாய்ந்தழியும் இந்த மாந்தரன்பு
நேற்றும் இன்றென்றும் மாறிடீரே என் நேசரே

7. வஞ்சனையான இப்பார்த்தலமே
வஞ்சிக்குமே மிகத் தந்திரமாய்
வாஞ்சித்திடேனே
மோசமான இப்பார்த்தலத்தை

133. அன்பில் என்னை பரிசுத்தனாக்க

1. அன்பில் என்னை பரிசுத்தனாக்க
உம்மைக் கொண்டு சகலத்தையும்
உருவாக்கியே நீர் முதற்பேறானீரோ
தந்தை நோக்கம் அநாதியன்றோ

என் இயேசுவே நேசித்தீரோ
எம்மாத்திரம் மண்ணான நான்
இன்னும் நன்றியுடன் துதிப்பேன்

2. மரித்தோரில் முதல் எழுந்ததினால்
புது சிருஷ்டியின் தலையானீரே
சபையாம் உம் சரீரம் சீர் பொருந்திடவே
ஈவாய் அளித்தீர் அப்போஸ்தலரை --- என்

3. முன்னறிந்தே என்னை அழைத்தீரே
முதற்பேராய் நீர் இருக்க
ஆவியால் அபிஷேகத்தீர் என்னையுமே
உம் சாயலில் நான் வளர --- என்

4. வருங்காலங்களில் முதற்பேராய்
நீர் இருக்க நாம் சோதரராய்
உம் கிருபையின் வார்த்தையை வெளிப்படுத்தி
ஆளுவோம் புது சிருஷ்டியிலே --- என்

5. நன்றியால் என் உள்ளம் நிறைந்திடுதே
நான் எப்படி பதில் செய்குவேன்
உம்மகா நோக்கம் முற்றுமாய் நிறைவேறிட
என்னை தந்தேன் நடத்திடுமே --- என்

134. அன்பினால் படைத்தேன்

அன்பினால் படைத்தேன்
பண்பினைக் கொடுத்தேன்
இன்பமாய் வாழ வழியும் செய்தேன்
அன்பினை மறந்து பண்பினை இழந்து
துன்பமாய் வாழ்ந்திட காரணம் ஏன்

1. படைத்தார் கேட்கிறார் ஏன் – ஏன்- ஏன்
மரித்தார் கேட்கிறார் ஏன் – ஏன்- ஏன்
பரிசுத்த ஆவியால் ஆளுகை செய்யும்
பரிசுத்தர் கேட்கிறார் ஏன் – ஏன்- ஏன்

2. பாவத்தில் மாண்டாய், சாபத்துள்ளானாய்
தாபமாய் கேட்கிறார் காரணம் ஏன்
பாவத்தை விட்டு, இயேசுவை ஏற்று
மாசின்றி வாழா காரணம் ஏன்?

Tamil Hymns

135. அன்பின் உருவம் ஆண்டவர்

1. அன்பின் உருவம் ஆண்டவர்
அழைக்கிறார் நீ அருகில் வா
தொய்ந்துபோன உன் வாழ்வினை
கேட்கிறார் நீ அருகில் வா

ஓடிவா நீ ஓடிவா கண்கலங்கியே நீயே வா
தூரமாய் நிற்கும் உன்னைத்தான்
அழைக்கிறார் நீ அருகில் வா - 2

2. மனிதர் பலரை நம்பினாய்
பலமுறை தடுமாறினாய்
உற்றார் பெற்றார் அன்பெல்லாம்
கனவு போன்று அகலுமே

3. நண்பர் பலரும் இருப்பினும்
நாடும் அன்பைப் பெற்றாயோ
செல்வம் எல்லாம் மாய்கையே
உலகம் கானல் நீராமே

4. ஒருமுறை அன்பை ருசித்துமே
விழுந்துபோன நீ எழும்பிவா
பலமுறை துரோகம் செய்ததால்
இயேசுவின் கண்ணீர் துடைக்கவா

5. இன்னும் நொந்து போவானேன்
இன்றே அருகில் ஓடிவா
உள்ளம் குமுறும் உன்னையே
தள்ளேன் என்றார் ஓடிவா

136. அன்பின் சமூகமே இறை

அன்பின் சமூகமே இறை
அருளின் திருக்கூட்டமே
பேதமில்லாதே கூடுவோம் அருள்
வேதத்தின் வாக்கிலே வாழுவோம் (2)

அல்லேலூயா பாடி நாம் ஆர்ப்பரிப்போம்
அல்லேலூயா பாடி நாம் மகிழ்ந்திடுவோம்

1. அனைவரும் குடும்பமாய் கூடிடுவோம்
ஒருள்ளம் ஒருமனம் கொண்டு வாழ்வோம்
தேவையில் உடமையைப் பகிர்ந்திடுவோம்
சேவையில் தினம் நம்மைத் தந்திடுவோம்

2. எல்லோர்க்கும் நண்பராய் ஆகிடுவோம்
பொல்லார்க்கும் நன்மையே செய்திடுவோம்
மன்னித்து மறந்தே வாழ்ந்திடுவோம்
மங்காத அன்பிலே மிளிர்ந்திடுவோம்

3. தந்தை மகன் தூய ஆவியென
இறைவன் உறவுடன் வாழ்கின்றார்
சிந்தையும் செயலும் ஒருங்கிணைந்த
திரித்துவ சமூகத்தைப் போற்றிடுவோம்

Tamil Hymns

137. அன்பின் தெய்வம் இயேசு ஆறுதல்

அன்பின் தெய்வம் இயேசு ஆறுதல் தருபவர்
மார்பில் சாய்கின்றேன் மகிழ்ந்து பாடுவேன்

1. பாதை இழந்த ஆடாய் பாரினில் ஓடினேன்
சிலுவை அன்பினாலே திசையும் புரிந்தது
வாழ்வது நானல்ல என்னில்
இயேசு வாழ்கின்றார் (2)

2. இயேசு பேசும்போது என் உள்ளம் உருகுதே அவர்
வார்த்தை படிக்கும் போது என்
வாழ்வு மாறுதே வேதம் ஏந்துவேன்
வெல்வேன் அலகையை - தினம்

3. கண்ணீர் சிந்தும்போது
மனக் கண்ணில் தெரிகின்றார்
கவலை நெருங்கும்போது
அவர் கரத்தால் அணைக்கின்றார்
ஆவி பொழிகின்றார் ஆற்றல் தருகின்றார்

138. அன்பின் தெய்வமே என்னை

அன்பின் தெய்வமே
என்னை நடத்தும் தெய்வமே
நன்றியோடு உம்மைப் பாடுவேன் -நான் (2)

1. பிறந்த நாள்முதல் இந்த நாள் வரை
எத்தனையோ நன்மை செய்தீரே - 2
ஐயா எத்தனையோ நன்மை செய்தீரே - 2

2. சிறுமையானவனைத் தூக்கி எடுத்தீரே
அளவில்லாமல் ஆசீர்வதித்தீரே
இது அதிசயம் அதிசயம் தானே

3. புதிய கிருபையால் என்னை தாங்குகின்றீரே
புதிய வழியில் நடத்துகின்றீரே
இது ஆச்சரியம் ஆச்சரியம் தானே

4. பரம குயவனே உமது கரங்களில்
என்னையும் கொடுத்து விட்டேனே
உம் சித்தம் போல என்னை நடத்துமே

139. அன்பின் தேவன் இயேசு

அன்பின் தேவன் இயேசு உன்னை அழைக்கிறார்
அவரின் குரலைக் கேட்ட பின்னும் கலக்கம் ஏன்

கல்வாரியின் மேட்டினில்
கலங்கும் கர்த்தர் உண்டல்லோ
கவலை ஏன் கலக்கம் ஏன்
கர்த்தர் இயேசு அழைக்கிறார்
உன்னை எண்ணி உள்ளம் நொந்து
அணைக்க இயேசு துடிக்கிறார்

1. மனிதர்கள் அன்பு மாறலாம்
மறைவாக தீது பேசலாம்
அன்பு காணா இதயமே
அன்பின் இயேசுவை அண்டிக்கொள்

2. வியாதிகள் தொல்லைகள் தோல்வியோ
வாழ்க்கையில் என்ன ஏக்கமோ
கண்ணீர்தான் உந்தன் படுக்கையோ
கலங்காதே மன்னன் இயேசு பார்

3. வேலை வசதிகள் இல்லையோ
வீட்டினில் வறுமை தொல்லையோ
மனிதர்கள் மத்தியில் வெட்கமோ
மருளாதே மன்னன் இயேசு பார்

Tamil Hymns

140. அன்பின் தேவன் ஏசு

அன்பின் தேவன் ஏசு உன்னை அழைக்கிறார்
கல்வாரியின் மேட்டினில் கலங்கும் கர்த்தர் உண்டல்லோ
உன்னை எண்ணி உள்ளம் நொந்து
அணைக்க ஏசு துடிக்கிறார்
கவலையேன் கலக்கமேன் கர்த்தர் ஏசு அழைக்கிறார்

1. மனிதர்கள் அன்பு மாறலாம்
மறைவாக தீது பேசலாம்
அன்பு காணா இதயமே
அன்பின் தேவனை அண்டிக்கொள் --- அன்பின்

2. வியாதிகள் தொல்லையோ தோல்வியோ
வாழ்க்கையில் என்ன ஏக்கமோ
கண்ணீர்தான் உந்தன் படுக்கையோ
கலங்காதே மன்னன் ஏசு பார் --- அன்பின்

3. வேலை வசதிகள் இல்லையோ
வீட்டினில் வறுமை தொல்லையோ
மரண பயமும் நெருங்குதோ
மரணம் வென்ற ஏசு பார் --- அன்பின்

Tamil Hymns

141. அன்பின் தேவன் ஆண்டவர்

அன்பின் தேவன் ஆண்டவர்
அடைக்கலம் எனதாண்டவர்
கண்மணி போல நம்மை நடத்தி
கடைசி வரையில் காப்பவர்

1. துன்பங்கள் சூழும் வேளையில்
துணையாய் நின்று காத்திடுவார்
துயரம் யாவும் போக்கி நம்மை
தூய வழியில் நடத்துவார்

2. கவலை கஷ்டங்கள் வந்தாலும்
இனி நாம் கலங்க தேவையில்லை
கர்த்தர் நமக்காய் யுத்தம் செய்வார்
யாவையும் நன்மையாய் மாற்றிடுவார்

3. தீராத வியாதிகள் வந்தாலும்
தீங்கென்னை தொடரா காத்திடுவார்
குறைகளை எல்லாம் நீக்கி நம்மை
குணமாக்கி என்றுமே அரவணைப்பார்

142. அன்பின் முகத்தை அன்று நான் கண்டேன்

அன்பின் முகத்தை அன்று நான் கண்டேன்

**கல்வாரி மலை மேல் - தேவ அன்பின்
எல்லை அன்று நான் கண்டேன்
கொல்கொதா மலை மேல்**

**தியாகத்தின் நல் ஓசையைக் கேட்டேன்
கருனையின் முகங்கண்டேன்
கல்வாரி மலைமேல் அன்று**

**தேவ திருசுதன் அன்று அம்மலை மேல்
பாடுகள் ஏற்றதினால்
மனுக்குல பாவம் தீர்த்திடவே அவர்
சிதைந்து மாண்டதினால் ஓ....ஓ..**

**இரட்சகர் இயேசு அன்று அம்மலை மேல்
இரத்தம் சிந்தினதால்
திருக்கால் கரங்கள் மூன்றாணிகளால்
துளைக்கத் தொங்கினதால் ஓ...ஓ....**

Tamil Hymns

143. அன்பின் ஆண்டவரே

அன்பின் ஆண்டவரே
ஆத்ம அமைதி தந்தீர்
அன்பில் இறுக்கம்
பண்பில் ஒழுக்கம்
என்றும் காத்திடுவீர் - இயேசுவே - (2)

1. சொந்தப் பிள்ளையாக
எட்டிக் காயுமான
இந்தப் பாவியையும்
பங்கம் பாசம் காட்டி

அன்பிதோ துதிப்பேன்
அன்பிதோ மகிழ்வேன்
ஆத்ம அமைதி தந்தீர் - இயேசுவே
ஆத்ம அமைதி தந்தீர் - அன்பின்

2. வாழ்நாள் முடிவுவரை
தேவ பணிபுரிவேன்
கள்ளம் கபடு இன்றி
கர்த்தர் வழியில் செல்வேன்

அன்பிதோ துதிப்பேன்
அன்பிதோ மகிழ்வேன்
ஆத்ம அமைதி தந்தீர் - இயேசுவே
ஆத்ம அமைதி தந்தீர் - அன்பின்

144. அன்பின் தேவ நற்கருணையிலே

அன்பின் தேவ நற்கருணையிலே
அழியாப் புகழோடு வாழ்பவரே
அன்புப் பாதையின் வழி நடந்தே
அடியோர் வாழ்ந்திட துணை செய்வீர்

1. அற்புதமாக எமைப் படைத்தீர்
தற்பரன் நீரே எமை மீட்டீர்
பொற்புடன் அப்ப குண ரசத்தில்
எப்பொழுதும் வாழ் இறைவனானீர்
எத்தனை வழிகளில் உமதன்பை
எண்பித்தெமை நீர் ஆட்கொண்டீர்

2. கல்வாரி மலையின் சிகரமதில்
கனிவுடன் தினம் எம்மை நிலை நிறுத்தும்
நற் கருணை விஸ்வாசமதில்
நம்பிக்கையூட்டி வளர்த்திடுவீர்
இளமையின் பொலிவால் திருச்சபையும்
யாவரும் வாழ தயை புரிவீர்

Tamil Hymns

145. அன்பின் தேவன் இயேசு

அன்பின் தேவன் இயேசு உன்னை இன்றே அழைக்கின்றார்
அவர் உன்னை அழைக்கின்றார்
உன் துன்பம் துயரம் கவலை நீக்க இன்றே அழைக்கின்றார்
உன்னை அழைக்கின்றார்

1. ரத்தம் தோய்ந்த கையை கண்டு சித்தம் தெளியாயோ
நித்தமாய் நீ காய்ந்த காலை முத்தம் செய்யாயோ
உத்தமர் இயேசு உந்தனுக்காக இத்தனை வாதையோ
சத்திய நாதர் சத்தமாய் அழைக்கும் சத்தம் கேளாயோ

2. தீயின் கட்டு உலக மாயை எல்லாம் விரைந்தோடும்
நோயின் வாடை பார சுமைகள் சொன்னால் பரந்தோடும்
தாயின் பாசம் சேயின் நேசம் ஒருநாள் மறைந்தோடும்
ஆயின் வாக்கு மாறா இயேசு அன்போ வழிந்தோடும்

Tamil Hymns

146. அன்பு கூருவேன் இன்னும் அதிகமாய்

அன்பு கூருவேன் இன்னும் அதிகமாய்
ஆராதிப்பேன் இன்னும் ஆர்வமாய் (2)

முழு உள்ளத்தோடு ஆராதிப்பேன்
முழு பெலத்தோடு அன்பு கூருவேன்
ஆராதனை ஆராதனை - 2

1. எபிநேசரே எபிநேசரே
இதுவரையில் உதவினீரே (2)
இதுவரையில் உதவினீரே - உம்மை

2. எல்ரோயீ எல்ரோயீ
என்னைக் கண்டீரே நன்றி ஐயா
என்னைக் கண்டீரே நன்றி ஐயா - உம்மை

3. யெகோவா ராப்பா யெகோவா ராப்பா
சுகம் தந்தீரே நன்றி ஐயா
சுகம் தந்தீரே நன்றி ஐயா - உம்மை

147. அன்பு கூருவோம்

அன்பு கூருவோம்
நம் தேவனாகிய கர்த்தரை
அவரே நம் தேவன்
என்றென்றும் அவரில் வாழ்ந்திட

இயேசு மகாராஜன் சீக்கிரம் வருகிறார் --- அவர்
வருகையைச் சந்திக்க ஆயத்தமாவோம் நாம்

திருடனைப் போல் அவர் வருகை
தீவிரமாய் மிக நெருங்கிடுதே
ஆயத்தமில்லா அவனியில் உள்ளோர்
கண்டுபுலம்பிக் கதறுவாரே

இயேசு மகாராஜன் சீக்கிரம் வருகிறார் --- அவர்
வருகையைச் சந்திக்க ஆயத்தமாவோம் நாம்

அந்த நாளில் ஆயத்தமானோர்
இயேசுவிடம் பறந்திடுவோம்
இவ்வுலக வாழ்வை முடித்துப்
பரலோக வாசல் சேர்ந்திடுவோம்

இயேசு மகாராஜன் சீக்கிரம் வருகிறார் --- அவர்
வருகையைச் சந்திக்க ஆயத்தமாவோம் நாம்

Tamil Hymns

148. அன்புருவாம் எம் ஆண்டவா

1. அன்புருவாம் எம் ஆண்டவா,
எம் ஜெபம் கேளும், நாயகா;
நாங்கள் உம் ராஜ்ஜியம் ஆண்டாண்டும்
பாங்குடன் கட்ட அருளும்.

2. வாலிபத்தில் உம் நுகமே
வாய்மை வலுவாய் ஏற்றுமே,
வாழ்க்கை நெறியாம் சத்தியம்
நாட்ட அருள்வீர் நித்தியம்.

3. அல்லும் பகலும் ஆசையே
அடக்கி ஆண்டு, உமக்கே;
படைக்க எம்மைப் பக்தியாய்
பழுதேயற்ற பலியாய்.

4. சுய திருப்தி நாடாதே,
உம் தீர்ப்பை முற்றும் நாடவே;
வேண்டாம் பிறர் பயம் தயை,
வீரமாய்ப் பின் செல்வோம் உம்மை.

5. திடனற்றோரைத் தாங்கிட,
துக்கிப்பவரை ஆற்றிட;
வாக்கால் மனத்தால் யாரையும்
வருத்தா பலம் ஈந்திடும்.

6. எளிதாம் வாழ்க்கை ஏங்கிட,
தீங்கற்ற இன்பம் தேடிட,
மன்னிக்க முற்றும் தீமையை
நேசிக்க மனு ஜாதியை.

149. அன்புள்ள இயேசையா

அன்புள்ள இயேசையா
உம் பிள்ளை நான் ஐயா
ஆனந்த ஒளி பிறக்கும்
வாழ்வெல்லாம் வழி திறக்கும்

1. காடு மேடு ஓடிய ஆடு
என்று என்னை வெறுத்திடவில்லை

நாடி என்னை தேடிய தயவல்லவோ
பாடுவேன் வாழ்வெல்லாம் இன்பம்

2. பகலில் மேகம் இரவில் ஜோதி
பசிக்கு மன்னா ருசிக்கவும் அன்பு

3. தாகம் தீர ஜீவத் தண்ணீர்
உள்ளங்கையில் என்னையும் கண்டீர்

150. அன்புள்ள நேசர் இயேசு எனக்கெ

1. அன்புள்ள நேசர் இயேசு
எனக்கெல்லாம் அவரே
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்
அவர் பள்ளத்தாக்கின் லீலி
எனக்கெல்லாம் அவரே
என் ஆத்துமத்தின் பிராண நாயகர்
துக்கத்தில் என் ஆறுதல்
துன்பத்தில் எனதின்பம்
என் கவலைகளெல்லாம் தாங்குவார்

அவர் பள்ளத்தாக்கின் லீலி
அவர் காலை விடிவெள்ளி
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்

2. என் சஞ்சலங்கள் நீங்க
என் பாவம் மா அன்பாய்
சுமந்து அவர் ஜீவனை விட்டார்
நான் யாவையும் வெறுத்தேன்
என் நேச மீட்பர்க்காய்
அவர் ஒரு பொழுதும் கைவிடமாட்டார்
லோகம் என்னை வெறுத்து
சாத்தான் சோதித்தாலும்
மீட்பர் எனக்கு ஜெயம் தருவார்

3. கர்த்தாவின் சித்தத்துக்கு கீழ்படி வேனானால்
எல்லா துன்பத்தையும் சகிப்பேன்
எனக்கு பயமென்ன அவர் என் பங்கானால்
என் ஆத்துமத்தின் மன்னா இவரே
ஜீவ நதிகள் பாயும்
சொர்க்கத்தை சேர்கையில்
அவர் திருமுகத்தை நான் காண்பேன்

Tamil Hymns

151. அன்பே அன்பே அன்பே

அன்பே! அன்பே! அன்பே! ஆருயிர் உறவே
ஆனந்தம்! ஆனந்தமே!

1. ஒருநாள் உம் தயை கண்டேனையா
அந்நாளென்னை வெறுத்தேனையா
உம்தயை பெரிதையா - என் மேல்
உம் தயை பெரிதையா

2. பரலோகத்தின் அருமைப் பொருளே
நரலோகரி லன்பேனையா
ஆழம் அறிவேனோ அன்பின்
ஆழம் அறிவேனோ

3. அலைந்தேன் பலநாள் உமையுமறியா
மறந்தே திரிந்த துரோகியை
அணைத்தீர் அன்பாலே எனையும்
அணைத்தீர் அன்பாலே

4. பூலோகத்தின் பொருளில் மகிமை
அழியும் புல்லின் பூவைப் போல
வாடாதே ஐயா அன்பு வாடாதே ஐயா

5. இப்பாரினில் உம் அன்பின் இனிமை
இயம்பற் கியலாதாகில் யான்
இசைக்கவும் எளிதாமோ பரத்தில்
இசைக்கவும் எளிதாமொ

152. அன்பே என் இயேசுவே ஆருயிரே

அன்பே என் இயேசுவே ஆருயிரே
அன்பே என் இயேசுவே ஆருயிரே
ஆட்கொண்ட என் தெய்வமே

1. உம்மை நான் மறவேன்
உமக்காய் வாழ்வேன்

2. வாழ்வோ சாவோ
எதுதான் பிரிக்க முடியும்

3. தாயைப்போல் தேற்றினீர்
தந்தை போல் அணைத்தீர்

4. உம் சித்தம் நான் செய்வேன்
அதுதான் என் உணவு

5. இரத்தத்தால் கழுவினீர்
இரட்சிப்பால் உடுத்தினீர்

153. அன்பே கல்வாரி அன்பே

அன்பே கல்வாரி அன்பே
உம்மைப் பார்க்கையிலே
என் உள்ளம் உடையுதய்யா

1. தாகம் தாகம் என்றீர்
எனக்காய் ஏங்கி நின்றீர்
பாவங்கள் சுமந்தீர்
பரிகார பலியானீர் - எங்கள்

2. காயங்கள் பார்க்கின்றேன்
கண்ணீர் வடிக்கின்றேன்
தூய திரு இரத்தமே
துடிக்கும் தாயுள்ளமே

3. அணைக்கும் கரங்களிலே
ஆணிகளா சுவாமி
நினைத்து பார்க்கையிலே
நெஞ்சம் உருகுதையா

4. நெஞ்சிலே ஓர் ஊற்று
நதியாய் பாயுதையா
மனிதர்கள் மூழ்கணுமே
மறுரூபம் ஆகணுமே

154. அன்பே பிரதானம்

அன்பே பிரதானம் - சகோதர
அன்பே பிரதானம்

1. பண்புறு ஞானம் பரம நம்பிக்கை,
இன்ப விஸ்வாசம் இவைகளிலெல்லாம்

2. பலபல பாஷை படித்தறிந்தாலும்,
கல கல வென்னும் கைம்மணியாமே

3. என் பொருள் யாவும் ஈந்தளித்தாலும்,
அன்பிலையானால் அதிற்பயனில்லை

4. துணிவுடனுடலைச் சுடக்கொடுத்தாலும்,
பணிய அன்பில்லால் பயனதில்லை

5. சாந்தமும் தயவும் சகல நற்குணமும்,
போந்த சத்தியமும் பொறுமையுமுள்ள

6. புகழிறு மாப்பு பொழிவு பொறாமை,
பகைய நியாயப் பாவமுஞ் செய்யா

7. சினமடையாது தீங்கு முன்னாது,
தினமழியாது தீமை செய்யாது

8. சகலமுந் தாங்கும் சகலமும் நம்பும்,
மிகைபட வென்றும் மேன்மை பெற்றோங்கும்

Tamil Hymns

155. அன்பே விடாமல் சேர்த்துக் கொண்டீர்

1. அன்பே விடாமல் சேர்த்துக் கொண்டீர்
சோர்ந்த என் நெஞ்சம் உம்மில் ஆறும்;
தந்தேன் என் ஜீவன் நீரே தந்தீர்,
பிரவாக அன்பில் பாய்ந்தென்றும்
ஜீவாறாய்ப் பெருகும்.

2. ஜோதி! என் ஆயுள் முற்றும் நீரே;
வைத்தேன் உம்மில் என் மங்கும் தீபம்;
நீர் மூட்டுவீர் உம் ஜோதியாலே;
பேர் ஒளிக் கதிரால் உள்ளம்
மேன்மேலும் ஸ்வாலிக்கும்.

3. பேரின்பம் நோவில் என்னைத் தேடும்!
என் உள்ளம் உந்தன் வீடே என்றும்;
கார் மேகத்திலும் வான ஜோதி!
விடியுங்காலை களிப்பாம்!
உம் வாக்கு மெய் மெய்யே.

4. குருசே! என் வீரம் திடன் நீயே;
உந்தன் பாதம் விட்டென்றும் நீங்கேன்;
வீண் மாயை யாவும் குப்பை நீத்தேன்;
விண் மேனியாய் நித்திய ஜீவன்
வளர்ந்து செழிக்கும்.

156. அன்போடு எம்மைப் போஷிக்கும்

1. அன்போடு எம்மைப் போஷிக்கும்
பெத்தேலின் தெய்வமே;
முன்னோரையும் நடத்தினீர்
கஷ்ட இவ்வாழ்விலே.

2. கிருபாசனமுன் படைப்போம்
எம் ஜெபம் ஸ்தோத்ரமும்;
தலைமுறையாய்த் தேவரீர்
எம் தெய்வமாயிரும்.

3. மயங்கும் ஜீவ பாதையில்
மெய்ப் பாதை காட்டிடும்;
அன்றன்றுமே நீர் தருவீர்
ஆகாரம் வஸ்திரமும்.

4. இஜ்ஜீவிய ஓட்டம் முடிந்து,
பிதாவின் வீட்டினில்
சேர்ந்திளைப்பாறுமளவும்
காப்பீர் உம் மறைவில்.

5. இவ்வாறான பேர் நன்மைக்காய்
பணிந்து கெஞ்சினோம்;
நீர்தாம் எம் தெய்வம் என்றுமே,
சுதந்தரமுமாம்.

157. அன்று ஒரு நாளில் இயேசு பசியாய் வந்தார்

அன்று ஒரு நாளில் இயேசு பசியாய் வந்தார்
புசிக்க கனியைத் தேடி அத்திமரத்தைப் பார்த்தார்
இலைகள் நிறைந்த மரத்தில் கனிகளொன்றுமில்லை

புசிக்க வந்த இயேசு பசியாய் திரும்பி சென்றார்
கனிகொடாத நீயும் கனிகொடுக்கும் நாளில்
நல்ல கனிகள் கொடுத்தால் இயேசு மகிழ்ச்சி அடைவார்
ஆஹா ஆனந்தமே (3) என்றும் ஆனந்தமே

158. அன்னை அன்பிலும் விலை

அன்னை அன்பிலும் விலை
உன் இயேசுவின் தூய அன்பே - தன்னை
பலியாய்த் தந்தவர் உன்னை விசாரிப்பார்
அன்னை அன்பிலும் விலை

1. பாவச் சேற்றினில் வீழ்ந்தோரை
பரன் சுமந்து மீட்டாரே
தம் நாமத்தை நீ நம்பினால்
தளர்ந்திடாதே வா

2. மாய லோகத்தின் வேஷமே
மறைந்திடும் பொய்நாசமே
மேலான நல் சந்தோஷமே
மெய் தேவன் ஈவாரே

3. தேவ ராஜ்ஜிய பாக்கியமே
தினம் அதை நீ தேடாயோ
உன் தேவனை சந்தித்திட
உன் ஆயத்தம் எங்கே

4. ஜீவ புத்தகம் விண்ணிலே
தேவன் திறந்து நோக்குவார்
உன் பேர் அதில் உண்டோ இன்றே
உன்னை நிதானிப்பாய்

5. உந்தன் பாரங்கள் யாவையும்
உன்னை விட்டே அகற்றுவார்
உன் கர்த்தரால் கூடாதது
உண்டோ நீ நம்பி வா

159. ஆ அம்பர உம்பர மும் புகழுந்திரு

ஆ அம்பர உம்பர மும் புகழுந் திரு
ஆதிபன் பிறந்தார் - ஆதிபன்
பிறந்தார் அமலாதிபன் பிறந்தார்

1. அன்பான பரனே அருள்
மேவுங் காரணனே - நவ அச்சய
சச்சிதா ரட்சகனாகிய உச்சிதவரனே

2. ஆதம் பவமற நீதம் நிறைவேற
அன்று அல்லிராவினில் தொல்லை
யிடையினில் புல்லணையிற் பிறந்தார்

3. ஞானியர் தேட வானவர் பாட
மிக நன்னய உன்னத பன்னரும்
இசையா இந்நிலம் பிறந்தார்

4. கோனவர் நாட தானவர் கொண்டாட
என்று கோத்திரர் தோத்திசஞ்
சாற்றிடவே யூத கோத்திரன் பிறந்தார்

5. விண்ணுடு தோண மன்னவர் பேண
ஏரோது மைந்தனின் சிந்தையழுந்திக்
கலங்கிட விந்தையாய்ப் பிறந்தார்

160. ஆ இயேசுவே நான் பூமியில்

ஆ இயேசுவே, நான் பூமியில்
ஆ இயேசுவே, நான் பூமியில்

1. ஆ இயேசுவே, நான் பூமியில்
உயர்த்தப்பட்டிருக்கையில்
எல்லாரையும் என் பக்கமே
இழுத்துக்கொள்வேன் என்றீரே

2. அவ்வாறென்னை இழுக்கையில்,
என் ஆசை கெட்ட லோகத்தில்
செல்லாமல்; பாவத்தை விடும்,
அநந்த நன்மைக்குட்படும்

3. தராதலத்தில் உம்முடன்
உபத்திரவப்படாதவன்
உம்மோடு விண்ணில் வாழ்ந்திரான்;
சகிப்பவன் சந்தோஷிப்பான்

4. பிதாவின் வீட்டில் தேவரீர்
ஸ்தலம் ஆயத்தம் செய்கிறீர்
அங்கே வசிக்கும் தூயவர்
இக்கட்டும் நோவும் அற்றவர்

161. ஆ இயேசுவே உம்மாலே

1. ஆ இயேசுவே, உம்மாலே
நான் மீட்கப்பட்டவன்;
உம் திவ்விய ரத்தத்தாலே
நான் சுத்தமானவன்;
மிகுந்த கஸ்தியாலே
என் தோஷத்தைத் தீர்த்தீர்;
உமது சாவினாலே
நீர் என்னை ரட்சித்தீர்.

2. நான் உம்மால் என்றும் வாழ,
இப்பந்தியில் நீரே
என் ஆவிக் கேற்றதான
அமிர்தம் தந்தீரே;
உம் ஆசீர்வாதம் ஈந்து,
என் பாவம் மன்னியும்;
அன்போடு என்னைச் சேர்த்து,
தயாளம் காண்பியும்.

3. நீர் இன்னும் என்னில் காணும்
பொல்லாங்கு யாவையும்
அகற்றிப்போட வாரும்,
என் நெஞ்சில் தங்கிடும்;
நான் உம்மைப் பற்றிக் கொள்ள
கருணை புரியும்;
மிகுந்த தாழ்மையுள்ள
சித்தம் கடாஷியும்.

4. நல் மீட்பரே, உம்மோடு
நான் ஐக்கியமாகவும்,
நாடோறும் வாஞ்சையோடு
உம்மில் நிலைக்கவும்,
மிகுந்த அன்பினாலே
துணை செய்தருளும்;
தெய்வீக அப்பத்தாலே
நீர் என்னைப் போஷியும்.

162. ஆ இயேசுவே நீர்

1. ஆ இயேசுவே, நீர்
என் பலியானீர்;
பாவி உம்மை அகற்ற, கல்வாரி சென்றீர்;
மன்றாடிடுவீர்
இப்பாவிக்காய் நீர்;
என்னைக் கொன்றோருக்காய்
உயிர் ஈந்தேன் என்பீர்.

2. இறங்கிடுமேன்,
அகற்றிடுமேன்
உந்தன் அன்பினால் என்தன் உட்கடினத்தை;
சிலுவை அன்பால்
என்னை இழுத்தால்
ஆவேன் விடுதலை பாவியாம்
அடிமை.

3. கோபம் பெருமை
போக்கும் சிலுவை;
அகற்றுமே தூய ரத்தமும்
தோஷத்தை;
தீய மனத்தை
பாவ பாரத்தை
அகற்றி, ரத்தத்தால் சேர்த்திடும்
உம்மண்டை.

4. தூய வெண்மையே
இப்போ இப்போதே;
உந்தன் ரத்தத்தால் தூய்மையாவேன் பாவியே;
தூயோன் ஆக்குவீர்
முற்றும் மாற்றுவீர்;
உந்தன் சாயல் என் வாழ்க்கையில்
உண்டாக்குமே.

5. உம் ரத்தம் என்னில்
நிலைத்திருப்பின்,
ஒழிந்திடும் எப்பாவம் பலவீனமும்
பிதாவின் முன்னர்
சகாயராம் நீர்,
சுதா, பாவியேனை உம் அன்பால்
வாழ்விப்பீர்.

Tamil Hymns

163. ஆ இன்ப இல்லமே

1. ஆ இன்ப இல்லமே! நீ என்றும்
தழைத்து வாழ்க;
அன்புடன் பாலர் யாரும் அங்கு
ஐக்கியமாய் ஓங்க;
அன்னை தந்தை
ஆவலாய்ப் பாலகரை
ஆண்டவன் பாதம் படைக்க.

2. ஆ இன்ப இல்லமே! உன் செல்வம்
சுகம் தழைக்க;
உன் மக்கள் யாவரும் ஓர் வேலை
உகந்து செய்ய;
பக்தியுடன்
பற்பல சேவை ஆற்றி,
கர்த்தன் அருள் பெற்று ஓங்க.

3. ஆ இன்ப இல்லமே! நன்மை
பெருகும் அந்நாளில்
ஆண்டவர் நாமத்தை ஆர்வ
நன்றியுடன் போற்று;
துன்பம் துக்கம்
துயரம் தொடர் நாளில்
அன்றும் அவரைக் கொண்டாடு.

4. ஆ இன்ப இல்லமே! உன்
உண்மை நண்பர் கிறிஸ்தேசு;
அன்பர் அவர் பிரசன்னம் உன்னை
என்றும் நடத்தும்;
இவ்வாழ்வின்பின்
உன் மக்களை அவரே
விண்ணோடு சேர்த்துக் காப்பாரே.

164. ஆ என்னில் நூறு வாயும் நாவும்

1. ஆ, என்னில் நூறு வாயும் நாவும்
இருந்தால், கர்த்தர் எனக்கு
அன்பாகச் செய்த நன்மை யாவும்,
அவைகளால் பிரசங்கித்து,
துதிகளோடே சொல்லுவேன்,
ஓயா தொனியாய்ப் பாடுவேன்

2. என் சத்தம் வானமளவாக
போய் எட்டவேண்டும் என்கிறேன்;
கர்த்தாவைப் போற்ற வாஞ்சையாக
என் ரத்தம் பொங்க ஆசிப்பேன்;
ஒவ்வொரு மூச்சும் நாடியும்
துதியும் பாட்டுமாகவும்

3. ஆ என்னில் சோம்பலாயிராதே,
என் உள்ளமே நன்றாய் விழி;
கர்த்தாவை நோக்கி ஓய்வில்லாதே
கருத்துடன் இஸ்தோத்திரி;
இஸ்தோத்திரி, என் ஆவியே,
இஸ்தோத்திரி, என் தேகமே

4. வனத்திலுள்ள பச்சையான
எல்லா வித இலைகளே,
வெளியில் பூக்கும் அந்தமான
மலர்களின் ஏராளமே,
என்னோடேகூட நீங்களும்
அசைந்திசைந்து போற்றவும்

5. கர்த்தாவால் ஜீவன் பெற்றிருக்கும்
கணக்கில்லா உயிர்களே,
பணிந்து போற்ற உங்களுக்கும்
எந்நேரமும் அடுக்குமே;
துதியாய் உங்கள் சத்தமும்
ஓர்மித் தெழும்பி ஏறவும்

165. ஆ கர்த்தாவே உம் கிரியை

1. ஆ! கர்த்தாவே உம் கிரியை காணும் போது
சொல்லொண்ணா ஆச்சரியமடைந்தேன்
விண்மீன்களும் இடி முழக்கங்களும்
உம் வல்லமையை காட்டுகின்றதே

என் ஆத்துமா பாடும் இரட்சகா தேவா
நீர் எத்தனை பெரியவர்! -2

2. சோலை, வனம். பூங்கா வழி செல்கையில்
பைங்கிளிகளில் பாடல் கேட்கையில்
மலையுச்சியின் மேல் நின்று கீழ்
நோக்குகையில் மென் காற்றருவியால்
மகிழ்ந்திருக்கையில்

3. பின்னும் பிதா தன் சுதனை குருசில்
தந்த விந்தை விளங்கவில்லை
என் பாவம் போக்கவே அவர் மரத்தில்
ரத்தம் சிந்தி ஜீவன் விட்டார் - என் ஆத்துமா

4. ஒவ்வொரு நாளும் உன் கிருபையினால்
உமது ஞானம் வியந்து மகிழுவேன்
உமது கிருபையால் என் பாவம் நீங்க
என் விண்ணப்பம் உம் கரத்தில் வைத்தேன

5. ஆர்ப்பரிப்போடவர் திரும்ப வந்து
விண் வீட்டில் சேர்க்கையில் மா ஆனந்தம்
அப்போ முன் வணங்கிப் பணிந்து நீரே
ஆ! எத்தனை பெரியவர் என்பேன்

Tamil Hymns

166. ஆகமங்கள் புகழ் வேதா நமோ நமோ

1. ஆகமங்கள் புகழ் வேதா நமோ நமோ!
வாகு தங்கு குருனாதா நமோ நமோ!
ஆயர் வந்தனைசெய் பாதா
நமோ நமோ

மாகமண்டல விலாசா நமோ நமோ
மேகபந்தியி னுலாசா நமோ நமோ
வான சங்கம் விஸ்வாசா
நமோ நமோ

நாகவிம்பம் உயர் கோலா நமோ நமோ
காகமும் பணிசெய் சீலா நமோ நமோ
நாடும் அன்பர் அனுகூலா
நமோ நமோ

ஏசு மந்த்ரமுறு பூமா நமோ நமோ
யூக தந்த்ரவாதி சீமா நமோ நமோ
ஏசு வென்ற திருநாமா
நமோ நமோ

2. அறிவி னுருவாகிய மூலா நமோ நமோ
மறையவர்கள் தேடிய நூலா நமோ நமோ
அதிசய பராப சீலா
நமோ நமோ

பொறிவினை யூறத சரீரா நமோ நமோ
குறையணுவிலாத குமாரா நமோ நமோ
புவன முழுதாள் அதிகாரா
நமோ நமோ

நிறைவழியின் மேவிய கோனே நமோ நமோ
முறைகள் தவறாத விணேனே நமோ நமோ
நிதிபெருகு மாரச தேனே
நமோ நமோ

இறை தவிது பாடிய கீதா நமோ நமோ
பறைகள்பல கூடிய போதா நமோ நமோ
எருசலை யினீடிய
நாதா நமோ நமோ

Tamil Hymns

167. ஆ கர்த்தாவே தாழ்மையாக

1. ஆ கர்த்தாவே, தாழ்மையாக
திருப் பாதத்தண்டையே
தெண்டனிட ஆவலாக
வந்தேன், நல்ல இயேசுவே;
உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன்.

2. வல்ல கர்த்தாவினுடைய
தூய ஆட்டுக்குட்டியே,
நீரே என்றும் என்னுடைய
ஞான மணவாளனே;
உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன்.

3. என் பிரார்த்தனையைக் கேளும்,
அத்தியந்த பணிவாய்;
கெஞ்சும் என்னை ஏற்றுக் கொள்ளும்
உம்முடைய பிள்ளையாய்;
உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன்.

168. ஆகாதது எதுவுமில்ல உம்மால்

ஆகாதது எதுவுமில்ல
உம்மால் ஆகாதது எதுவுமில்ல
அகிலம் அனைத்தையும்
உண்டாக்கி ஆளுகின்றீர்

1. துதி செய்யத் தொடங்கியதும்
எதிரிகள் தங்களுக்குள்
வெட்டுண்டு மடியச் செய்தீர் (2)
உம்மால் ஆகும் எல்லாம் ஆகும்

2. அலங்கார வாசலிலே
அலங்கோல முடவன் அன்று
நடந்தானே இயேசு நாமத்தில் (2)
உம்மால் ஆகும் எல்லாம் ஆகும்

3. கோலும் கையுமாக
பிழைக்கச் சென்றார் யாக்கோபு
பெருகச் செய்தீர் பெரும் கூட்டமாய்
உம்மால் ஆகும் எல்லாம் ஆகும்

4. கண்ணீரைக் கண்டதாலே
கல்லறைக்குச் சென்றவனை
கரம் பிடித்து தூக்கி விட்டீர்
உம்மால் ஆகும் எல்லாம் ஆகும்

5. ஈசாக்கு ஜெபித்ததாலே
ரெபேக்காள் கருவுற்று
இரட்டையர்கள் பெற்றெடுத்தாள்
உம்மால் ஆகும் எல்லாம் ஆகும்

6. எலியாவின் வார்த்தையாலே
சாறிபாத் விதவை வீட்டில்
எண்ணெய் மாவு குறையவில்லையே
உம்மால் ஆகும் எல்லாம் ஆகும்

7. ஜெப வீரன் தானியேலை
சிங்கங்களின் குகையினிலே
சேதமின்றிக் காப்பாற்றினீர்
உம்மால் ஆகும் எல்லாம் ஆகும்
8. கானாவூரில் வார்த்தை சொல்ல

Tamil Hymns

கப்பர்நகூம் சிறுவனங்கே
சுகமானான் அந்நேரமே
உம்மால் ஆகும் எல்லாம் ஆகும்

9. தண்ணீரால் ஜாடிகளை
கீழ்படிந்து நிரப்பினதால்
திராட்சை ரசம் வந்ததையா
உம்மால் ஆகும் எல்லாம் ஆகும்

169. ஆ சகோதரர் ஒன்றாய்

1. ஆ சகோதரர் ஒன்றாய்
ஏகமான சிந்தையாய்
சஞ்சரித்தல் எத்தனை
நேர்த்தியான இனிமை!

2. அது ஆரோன் சிரசில்
வார்த்துக் கீழ்வடிகையில்
கந்தம் வீசும் எண்ணையே
போன்றதாயிருக்குமே.

3. அது எர்மோன்மேலேயும்
சீயோன் மேடுகளிலும்
பெய்கிற ஆகாசத்து
நற்பனியைப்போன்றது.

4. அங்கேதான் தயாபரர்
ஆசீர்வாதம் தருவார்
அங்கிப்போதும் என்றைக்கும்
வாழ்வுண்டாகிப் பெருகும்.

5. மேய்ப்பரே நீர் கிருபை
செய்து சிதறுண்டதை
மந்தையாக்கி யாவையும்
சேர்த்தணைத்துக்கொள்ளவும்.

6. எங்கள் நெஞ்சில் சகல
நற்குணங்களும் வர
தெய்வ அன்பை அதிலே
ஊற்றும் இயேசு கிறிஸ்துவே.

7. நீரே நெஞ்சை நெஞ்சுடன்
கட்டி நேசத்தின் பலன்
நன்மை தீமை நாளிலும்
காணக் கட்டளையிடும்.

8. மூன்றொன்றாகிய பிதா
மைந்தன் ஆவியும் எல்லா
நாளும் ஒருமைப்படும்
போல் இம்மந்தை ஒன்றவும்.

Tamil Hymns

170. ஆ பாக்கிய தெய்வ பக்தரே

1. ஆ பாக்கிய தெய்வ பக்தரே;
உம் நீண்ட போர் முடிந்ததே;
வெற்றிகொண்டே, சர்வாயுதம்
வைத்துவிட்டீர் கர்த்தாவிடம்;
சீர் பக்தரே, அமர்ந்து நீர்
இயேசுவின் பாதத்தில் வாழ்வீர்.

2. ஆ பாக்கிய தெய்வ பக்தரே;
மா அலுப்பாம் பிரயாணத்தை
முடித்து, இனி அலைவும்
சோர்வும் இல்லாமல் வாழ்ந்திடும்;
சீர் பக்தரே, அமர்ந்து நீர்
நல் வீட்டில் இளைப்பாறுவீர்.

3. ஆ பாக்கிய தெய்வ பக்தரே;
இஜ்ஜீவ யாத்திரை ஒய்ந்ததே;
இப்போதபாய புயலும்
உம்மைச் சேராது கிஞ்சித்தும்;
சீர் பக்தரே, அமர்ந்து நீர்
இன்பத் துறையில் தங்குவீர்.

4. ஆ பாக்கிய தெய்வ பக்தரே;
உம் மேனி மண்ணில் தூங்கவே,
மாண்பாய் எழும்புமளவும்
விழித்துக் காத்துக்கொண்டிரும்;
சீர் பக்தரே, மகிழ்ந்து நீர்
நம் ராஜா வருவார் என்பீர்.

5. கேளும், தூயோரின் நாதரே,
பரிந்து பேசும் மீட்பரே,
வாழ் நாள் எல்லாம், நல்லாவியே,
சீர் பக்தரோடு நாங்களும்
மேலோகில் சேரச் செய்திடும்.

171. ஆ மேசியாவே வாரும்

1. ஆ மேசியாவே வாரும்
தாவீதின் மா மைந்தா!
பார் ஆள ஏற்ற காலம்
நீர் வந்தீர் மா கர்த்தா;
சிறைகளையே மீட்டு
கொடுங்கோல் முறிப்பீர்.
சிறப்பாய் நீதி செய்து
பாவமும் போக்குவீர்.

2. நிஷ்டூரம் யாவும் நீக்கி
சகாயம் நல்குவீர்;
கஷ்டத்தில் ஏழை தேற்றி
நல் பலம் ஈகுவீர்;
மாய்வோர் திரளை மீட்டு
களிப்பால் நிரப்பி,
உய்விப்பீர் ஒளி ஈந்து
இருளை அகற்றி.

3. நல் மாரிபோல் நீர் வாரும்
இப்பூமி செழிக்க
நம்பிக்கை மகிழ்வன்பும்
எங்கெங்கும் மலர
நாதர் முன்தூதனாக
நற் சமாதானமும்
நீதியும் நதியாக
எங்கெங்கும் பாய்ந்திடும்.

4. விழுவார் தாழ்ந்து வேந்தர்
பொன் போளம் படைத்தே
தொழுவாரே, பார் மாந்தர்
துதித்துப் பாடியே,
ஓயா மன்றாட்டு ஸ்தோத்ரம்
சமுகம் ஏறிடும்;
ஒழியாதோங்கும் ராஜ்யம்
என்றும் நிலைத்திடும்.

5. மாற்றார் எல்லாரும் மாய
மாண்பாக ஆளுவீர்
பேற்றின்மேல் பேறுண்டாக
ஆண்டாண்டும் ஆளுவீர்;
நிற்கும் ஓயாத காலம்

உமது ஆணையே,
அன்பாம் உமது நாமம்
ஆம், சதாகாலமே.

172. ஆச்சரியமே அதிசயமே ஆண்டவர்

ஆச்சரியமே! அதிசயமே
ஆண்டவர் செயல்கள் ஆதி பக்தரிடம்

1. செங்கடல் இரண்டாய் பிரிந்து போக
சொந்த ஜனங்களைக் கடத்தினாரே
இஸ்ரவேலின் துதிகளாலே
ஈன எரிகோ வீழ்ந்ததுவே

2. ஏழுமடங்கு எரி நெருப்பில்
ஏழை தம் தாசருடன் நடந்தார்
தானியேலைச் சிங்க கெபியில்
தூதன் துணையால் காத்தனரே

3. பனி மழையை நிறுத்தினாரே
பக்தன் எலியா தன் வாக்கினாலே
யோசுவாவின் வார்த்தையாலே
ஏகும் சூரியன் நின்றதுவே

4. மதிலைத் தாண்டி சேனைக்குள் பாயும்
மா பெலன் தேவனிடம் அடைந்தான்
வீழ்த்தினானே கோலியாத்தை
வீரன் தாவீது கல்லெறிந்தே

5. நம் முற்பிதாக்கள் நம்பின தேவன்
நேற்றும் இன்றும் என்றும் மாறிடாரே
தம்மை நோக்கி வேண்டும் போது
தாங்கி நம்மை ஆதரிப்பார்

173. ஆசீர்வதிக்கும் இயேசு உன்னை

ஆசீர்வதிக்கும் இயேசு
உன்னை ஆசீர்வதிப்பாரே
ஆண்டுகள் நன்மைகளாலே
முடி சூட்டி மகிழ்வாரே
உன் வாழ்வு செழிப்பாய் மாறும்
உன் பாதைகள் நெய்யாய் பொழியும்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்

1. வறண்ட நிலமும் மகிழ்ந்து பாடிடும்
வயல்வெளி செழித்திடுமே
கர்த்தரின் மகிமை தேவனின் மகத்துவம்
தேசங்கள் அறிந்திடுமே -2
ஒருபோதும் மறவாத -2
நம் இயேசு நடத்திடுவார்-2

2. அனுதினமும் நடத்திடுவார் புது கிருபை
அளித்திடுவார் - மலைகள் விலகிடும் பர்வதம்
பெயர்ந்திடும் கிருபைகள் நிலைத்திடுமே காலங்கள்
மாறிடும் கவலைகள் மறைந்திடும் காத்திடுவார் என்றுமே

3. நிறைவேறும் அவர் வார்த்தை நம் இயேசு
நம்முடனே உன் நேசர் உன்னுடனே
கதவு திறந்திடும் கட்டுகள் உடைந்திடும்
செல்வங்கள் சுதந்தரிப்பாய் தாவீதின் கிருபைகள்
உன்னை நிரப்பிடும் ஆளுகை செய்திடுவாய்

Tamil Hymns

174. ஆசீர்வதிக்கும் இயேசு நம்மை

ஆசீர்வதிக்கும் இயேசு
நம்மை ஆசீர்வதிப்பாரே
துதி ஸ்தோத்திரம் இயேசு நாதா
துதி உமக்கே என்றுமே

1. ஆபிரகாமை ஆசீர்வதித்தவர்
ஆசீர்வதிப்பாரே
ஈசாக்கை ஆசீர்வதித்த தேவன்
ஆசீர்வதிப்பாரே

2. யாக்கோபை ஆசீர்வதித்தவர்
ஆசீர்வதிப்பாரே
யாபேசை ஆசீர்வதித்த தேவன்
ஆசீர்வதிப்பாரே

3. எஸ்தரை ஆசீர்வதித்தவர்
ஆசீர்வதிப்பாரே
ரூத்தை ஆசீர்வதித்த தேவன்
ஆசீர்வதிப்பாரே

4. அன்னாளை ஆசீர்வதித்தவர்
ஆசீர்வதிப்பாரே
ஆகாரை ஆசீர்வதித்த தேவன்
ஆசீர்வதிப்பாரே

175. ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்தம் மிகவே

1. ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்தம் மிகவே
நேசா உதியும் சுத்தரே நித்தம் மகிழவே

வீசீரோ வான ஜோதி கதிரிங்கே
மேசியா எம்மணவாளனே
ஆசாரியரும் வான் ராஜனும்
ஆசீர்வதித்திடும் .

2. இம் மணமக்களோடென்றும்
என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டும் பின்சென்றும்
ஓங்கச் செய்தருளும்
இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே
இன்பத்தோ டன்பாக்கி சூட்சமே
உம்மிலே தங்கிதரிக்க ஊக்கமருளுமே.

3. ஒற்றுமையாக்கும் இவரை ஊடாக நீர் நின்றே
பற்றோடும்மீது சார்ந்துமே பாரில் வசிக்கவே
வெற்றி பெற்றோங்கும் இவர் நெஞ்சத்திலே
வீற்றாளும் நீர் ஏக ராஜனாய்
ஏற்றவான் ராயர் சேயர்க்கே
ஒப்பாய் ஒழுகவே

4. பூதல ஆசீர்வாதத்தால் பூரணமாகவே
ஆதரித்தாளும் கர்த்தரே ஆசீர்வதித்திடும்
மாதிரளாக இவர் சந்ததியார்
வந்துதித்தும் பிரஸ்தாபிக்க
ஆ தேவ கிருபை தீர்மானம்
ஆம் போல் அருளுமேன்.

Tamil Hymns

176. ஆசீர்வாத மழை பொழியும் தேவா

ஆசீர்வாத மழை பொழியும் தேவா
ஆசீர்வாத மழை பொழியும் தேவா
எங்களையும் ஜனங்களையும் ஆசீர்வதியும் தேவா

கீழாகாமல் மேலாவாய் என்று சொன்னீர்
வாலாகாமல் தலையாவாய் என்று உரைத்தீர் (2)
ஆசீர்வாத ஊற்று திறக்கட்டுமே
ஆசீர்வாத மழை என்மேல் பொழியட்டுமே (2)

ஆசீர்வாத வாழ்வு உந்தன் வாக்குத்தத்தம்
ஆபிரகாமின் ஆசீர் எங்கள் சுதந்திரம் (2)
ஆசீர்வாத வாய்க்காலாய் என்னை மாற்றும்
நேசக்கரம் தொட்டு என்னை ஆசீர்வதியும் (2)

யாபேசின் ஆசீர்வாதம் வேண்டுகிறோம்
ஆசீர்வதியும் எங்கள் நல்ல கர்த்தரே (2)
பாவிகளுக்கும் துரோகிகளுக்கும்
நன்மை செய்பவர் என்னை ஆசீர்வதியும் (2)

177. ஆசை மணாளனே ஆமேன்

1. ஆசை மணாளனே ஆமேன் நீர் வாருமே
ஆவி மணாளியும் அழைக்கும் ஓசையே

ஓ ஓ வேகம் வாருமே எம் கர்த்தனே நீர்
ஆ, ஆ ஆவல் பெருகுதே அல்லேலூயா
கீதங்கள் பாடி பறந்து செல்வோமே

2. சுத்த பிரகாசமாம் தூயரின் நீதியாம்
சித்திர தையலாய் யேசுடை அணிந்தவர்

3. பிதாவின் நாமமே நெற்றியில் அணிந்தவர்
புதிய பாட்டுடன் சீயோனில் நிற்கிறார்

4. குற்றம் குறைகளும் மற்றும் கரைகளும்
அற்ற மகிமையை பெற்ற சபையதோ

5. எப்போ நான் காண்பேனோ என் ஆசை ஏறுதே
பொற்பரன் இயேசுவை கண்டு களிக்கவே

6. பரிசுத்த ஆவியால் மறுரூபமாகியே
திரியேக தேவனை சேவிக்க நித்தியமாய்

178. ஆட்கொண்ட தெய்வம் திருப்பாதம் அமர்ந்து

ஆறுதல் அடைகின்றேன்
அமைதி பெறுகின்றேன்

1. புயல் வீசும் கடலில் தடுமாறும் படகை
தாங்கிடும் நங்கூரமே - தினம் (3)

2. எதிர்காற்று வீச எதிர்ப்போரும் பேச
எனைக் காக்கும் புகலிடமே - தினம்

3. நிலையற்ற வாழ்வின் நிம்மதியே
நீங்காத பேரின்பமே - என்னைவிட்டு

4. இருள் நீக்கும் சுடரே என்இயேசு ராஜா
என் வாழ்வின் ஆனந்தமே

5. மனதுருகும் தேவா மன்னிக்கும் நாதா
மாபெரும் சந்தோஷமே

6. காயங்கள் ஆற்றி கண்ணீரைத் துடைக்கும்
நல்ல சமாரியனே

Tamil Hymns

179. ஆணிகள் பாய்ந்த கரங்களை

ஆணிகள் பாய்ந்த கரங்களை விரித்தே
ஆவலாய் இயெசுன்னை அழைக்கிறாரே

1. பார் திருமேனி வாரடியேற்றவர்
பாரச் சிலுவைதனைச் சுமந்து சென்றனரே
பாவமும் சாபமும் சுமந்தாரே உனக்காய்
பயமின்றி வந்திடுவாய்

2. மயக்கிடுமோ இன்னும் மாயையின் இன்பம்
நயத்தாலே உந்தனை நாசமாக்கிடுமே
உணர்ந்திதையுடனே உன்னதனண்டை
சரண்புகுவாய் இத்தருணம்

3. கிருபையின் வாசல் அடைத்திடு முன்னே
மரணத்தின் சாயலில் இணைந்திடுவாயே
உருவாக்கியே புது சிருஷ்டியில் வளர
கிருபையும் அளித்திடுவார்

4. பரிசுத்த ஆவியால் பரமனின் அன்பினைப்
பகர்ந்திடுவார் உந்தன் இருதயந்தனிலே
மறுரூப நாளின் அச்சாரமதுவே
மகிமையும் அடைந்திடுவாய்

5. இயேசுவல்லாது இரட்சிப்புத் தருவோர்
இரட்சகர் வேறு இகமதிலுண்டோ
அவர் வழி சத்தியம் ஜீவனுமாமே
அவரே உன் நாயகரே

180. ஆண்டவரே ஆராதனை ஆவியோடு

ஆண்டவரே ஆராதனை ஆவியோடு ஆராதனை
முழு உள்ளத்தோடு ஆராதனை
பிதா குமரனே ஆராதனை
பரிசுத்த ஆவியே ஆராதனை

ஆண்டவரே ஆராதனை
ஆவியோடு ஆராதனை
முழு உள்ளத்தோடு ஆராதனை

1. ஜீவனுள்ள தேவனே ஆராதனை
ஜீவன் தந்த இயேசுவே ஆராதனை - (2)
ஜீவபாதை காட்டினீரே ஆராதனை ஆராதனை - (2)
ஜீவத்தண்ணீர் ஊற்றினீரே
உமக்கு ஆராதனை ஆராதனை - (2)
ஆண்டவரே ஆராதனை

2. காலையிலும் மாலையிலும் ஆராதனை
காக்கும் வல்ல இயேசுவே ஆராதனை - (2)
கன்மலையானவரே ஆராதனை ஆராதனை - (2)
காலமெல்லாம் காப்பவரே
உமக்கு ஆராதனை ஆராதனை - (2)
ஆண்டவரே ஆராதனை

3. உன்னதமானவரே ஆராதனை
உலகத்தை மீட்டவரே ஆராதனை - (2)
உயிரோடு எழுந்தவரே ஆராதனை ஆராதனை - (2)
உருவாக்கும் இயேசுவே
உமக்கு ஆராதனை ஆராதனை - (2)
ஆண்டவரே ஆராதனை

181. ஆண்டவரே உம் பாதம் சரணடைந்தேன்

ஆண்டவரே உம் பாதம் சரணடைந்தேன்
அடிமை நான் ஐயா
ஆயிரம் ஆயிரம் துன்பங்கள் வந்தாலும்
அகன்று போக மாட்டேன் - உம்மை விட்டு
அகன்று போக மாட்டேன்

1. ஒவ்வொரு நாளும் உம் குரல் கேட்டு
அதன்படி நடக்கின்றேன்
உலகினை மறந்து உம்மையே நோக்கி
ஓடி வருகின்றேன்

2. வேதத்திலுள்ள அதிசயம் அனைத்தும்
நன்கு புரியும்படி
தேவனே எனது கண்களையே
தினமும் தறந்தருளும்

3. வாலிபன் தனது வழிதனையே
எதனால் சுத்தம் பண்ணுவான்
தேவனே உமது வார்த்தையின்படியே
காத்துக் கொள்வதனால்

4. நான் நடப்பதற்கு பாதையைக் காட்டும்
தீபமே உம் வசனம்
செல்லும் வழிக்கு வெளிச்சமும் அதுவே
தேவனே உம் வாக்கு

5. தேவனே உமக்கு எதிராய் நான்
பாவம் செய்யாதபடி
உமது வாக்கை என் இருதயத்தில்
பதித்து வைத்துள்ளேன்

182. ஆண்டவரை எக்காலமும் போற்றிடுவேன்

ஆண்டவரை எக்காலமும் போற்றிடுவேன்
அவர்புகழ் எப்போதம்
என் நாவில் ஒலிக்கும்

1. என்னோடே ஆண்டவரை மகிமைப்படுத்துங்கள்
ஒருமித்து அவர் நாமம் உயர்த்திடுவோம்
நடனமாடி நன்றி சொல்வோம்…

2. ஆண்டவரைத் தேடினேன்
செவி கொடுத்தார் - எல்லாவித
பயத்தினின்றும் விடுவித்தார்

3. அவரை நோக்கிப்
கார்த்ததால் பிரகாசமானேன்
எனதுமுகம் வெட்கப்பட்டு போகவயில்ல

4. கர்த்தர் நல்லவர் சுவைத்துப் பாருங்கள்
அவரை நம்பும் மனிதரெல்லாம்
பாக்கியவான்கள்

5. சிங்கக்குட்டிகள் உணவின்றி
பட்டினி கிடக்கும் - ஆண்டவரை
நாடுவோர்க்கு குறைவேயில்லை

6. கர்த்தர் கண்கள்
நீதிமானை நோக்கியிருக்கும் - அவர்
செவிகள் அவனுக்கு திறந்திருக்கும்

7. ஆண்டவரில் என் ஆன்மா
மேன்மைபாராட்டும் சிறுமையுற்றோர்
அதைக்கேட்டு அக்களிப்பார்கள்

183. ஆண்டவரே என் ஆண்டவரே

ஆண்டவரே என் ஆண்டவரே
நீர் என்னைக் கைவிடமாட்டீர்
துன்ப துயரங்கள் எனைத் தொடர்ந்தாலும்
துணைகள் இன்றியே நான் துவண்டாலும்
நீர் என்னைக் கைவிடமாட்டீர்

1. இன்னலுற்ற வேளையிலும்
இதயம் உடைந்த பொழுதினில்
கைவிடமாட்டீர் கைவிடமாட்டீர்
இடையன் இல்லா ஆட்டைப்போல்
இலக்கின்றி அலைந்தாலும்
இரக்கம் மறந்தும்மை
நான் உதறிச் சென்றாலும்
இறவா இறைவன் உன்
இதயநிழலில் வாழுவேன்
இதயமாய் உன் கரத்தை இறுகப்
பற்றிக் கொள்ளுவேன் -- 2

ஆண்டவரே ஆண்டவரே ஆண்டவரே என் ஆண்டவரே

2. தோல்வி தொடர்ந்த வேளையில்
சோர்ந்து நொந்த பொழுதினில்

உலகம் பழிக்கும் நேரத்தில்
உறவும் இகழும் காலத்தில்
உயிரைத் தந்த உம்மை
நான் மறந்து போனாலும்

குறையா உன் ஆற்றல்
கண்டு வியந்து பாடுவேன்
நிறைவாய் உன் அன்பில்
நிலைத்து என்றும் மகிழுவேன்

ஆண்டவரே ஆண்டவரே ஆண்டவரே என் ஆண்டவரே

Tamil Hymns

184. ஆண்டவர் ஆளுகை செய்கின்றார்

ஆண்டவர் ஆளுகை செய்கின்றார்
அனைத்து உயிர்களே பாடுங்கள்

1. மகிழ்வுடனே கர்த்தருக்கு
ஆராதனை செய்யுங்கள்
ஆனந்த சத்தத்தோடே
திருமுன் வாருங்கள்
ராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தர்
எப்போதும் இருப்பவர் இனிமேலும் வருபவர்

2. எக்காள தொனி முழங்க
இப்போது துதியுங்கள்
வீணையுடன் யாழ் இசைத்து
வேந்தனை துதியுங்கள்

3. துதியோடும் புகழ்ச்சியோடும்
வாசலில் நுழையுங்கள்
அவர்நாமம் உயர்த்திடுங்கள்
ஸ்தோத்திர பலியிடுங்கள்

4. ஓசையுள்ள கைத்தாளத்தோடு
நேசரை துதியுங்கள்
சுவாசமுள்ள யாவருமே
இயேசுவை துதியுங்கள்

5. நம் கர்த்தரோ நல்லவரே
கிருபை உள்ளவரே
நம்பத்தக்கவர் தலைமுறைக்கும்
என்றென்றும் நம்பத்தக்கவர்
ராஜாதி ராஜ

6. இயேசுவே நம் இரட்சகர்
என்று முழங்கிடுங்கள்
அவர் நமக்காய் ஜீவன் தந்தார்
அவரின் ஆடுகள் நாம்

7. நடனத்தோடும் தம்புரோடும்
நாதனை துதியுங்கள்
மத்தளத்தோடும் குழல் ஊதி
சப்தமாய் துதியுங்கள்

Tamil Hymns

185. ஆண்டவர் எனக்காய் யாவையும்

ஆண்டவர் எனக்காய் யாவையும்
செய்து முடிப்பார் அச்சமே
எனக்கில்லை அல்லேலூயா

1. என்னை நடத்தும் இயேசுவினாலே
எதையும் செய்திடுவேன்
அவரது கிருபைக்கு காத்திருந்து
ஆவியில் பெலனடைவேன்

2. வறுமையோ வருத்தமோ
வாட்டிடும் துன்பமோ
எதையும் தாங்கிடுவேன்
அநுதின சிலுவையைத் தோளில் சுமந்து
ஆண்டவர் பின் செல்வேன்

186. ஆண்டவர் நம் இயேசுவை ஆயிரம்

1. ஆண்டவர் நம் இயேசுவை
ஆயிரம் துதிகளாலும் ஆர்ப்பரித்து
போற்றிட நாம் ஆயத்தமல்லோ
ஆவியின் சந்தோஸமே எமக்களித்தாரே

ஆதியும் நீரே என் அந்தமும் நீரே
மாறிடா நேசரே எந்தன் இயேசுவே

2. எண்ணில்லா எம் துன்பங்கள்
எங்கு போய் ஒழிந்ததோ - எம்முள்ளந்தான்
நன்றியால் நிறைந்து பொங்குதே - ஏகமாய்
எல்லோரும் கூடி ஸ்தோத்தரிப்போமே

3. சுயாதீன ஆவியால் சிலர் சத்தியம்
விட்டோடினும் - சக்தியீந்து சாட்சியாக
இன்றும் நிலைக்க - பக்தியில்
வைராக்கியம் எமக்களித்தாரே

4. இயேசு எம் பட்சம் நிற்க
ஈன சாத்தானும் தோற்க
ஆர்ப்பரிப்போடாரவாராம் எங்கும் தொனிக்க
அல்லேலூயா வல்லமையாய்ப் பாடிடுவோமே

5. இடுக்கமான வழியே இன்பக் கானான் ஏகவே
இன்னும் அவரோடு கூடப் பாடு சகிப்போம்
இன்றும் என்றும் இயேசுவோடு
ஆட்சி செய்வோமே

6. உன்னத மா தேவனின்
உயர்ந்த செட்டைகளின் கீழ்
தஞ்சமென அஞ்சிடாமல் தங்கி வாழுவோம்
தீங்கு நாட்கள் தீவிரம் எம் முன் நெருங்கிற்றே

7. எருசலேமே ஆர்ப்பரி சீயோனே
நீ கெம்பீரி - ஆயிரம் பதினாயிரம்
விண் தூதருடனே - ஆசை மணவாளன்
இயேசு தாம் வருகிறார்

187. ஆண்டவர் படைத்த வெற்றியின் நாளிது

ஆண்டவர் படைத்த வெற்றியின் நாளிது
இன்று அகமகிழ்வோம் அக்களிப்போம்
அல்லேலூயா பாடுவோம்

அல்லேலூயா தோல்வி இல்லை
அல்லேலூயா வெற்றி உண்டு

1. எனக்கு உதவிடும் எனது ஆண்டவர்
என் பக்கம் இருக்கிறார்
உலக மனிதர்கள் எனக்கு எதிராக
என்ன செய்ய முடியும்

தோல்வி இல்லை எனக்கு
வெற்றி பவனி செல்வேன்

2. எனது ஆற்றலும் எனது பாடலும்
எனது மீட்புமானார்
நீதிமான்களின் (கூடாரத்தில்) சபைகளிலே
வெற்றி குரல் ஒலிக்கட்டும்

3. தள்ளப்பட்ட கல் கட்டிடம் தாங்கிடும்
மூலைக்கல் ஆயிற்று
கர்த்தர் செயல் இது அதிசயம் இது
கைத்தட்டிப் பாடுங்களேன்

4. என்றும் உள்ளது உமது பேரன்பு
என்று பறைசாற்றுவேன்
துன்ப வேளையில் நோக்கி கூப்பிட்டேன்
துணையாய் வந்தீரையா

188. ஆண்டவா மேலோகில்

1. ஆண்டவா! மேலோகில் உம்
அன்பின் ஜோதி ஸ்தலமும்,
பூவில் ஆலயமுமே
பக்தர்க்கு மா இன்பமே.
தாசர் சபை சேர்ந்திட,
நிறைவாம் அருள் பெற,
ஜோதி காட்சி காணவும்,
ஏங்கி உள்ளம் வாஞ்சிக்கும்.

2. பட்சிகள் உம் பீடமே
சுற்றித் தங்கி பாடுமே,
பாடுவாரே பக்தரும்
திவ்விய மார்பில் தங்கியும்;
புறாதான் பேழை நீங்கியே
மீண்டும் வந்தாற்போலவே,
ஆற்றில் காணா நின் பக்தர்
ஆறிப்பாதம் தரிப்பர்.

3. அழுகையின் பள்ளத்தில்
ஆர்ப்பரிப்பார் உள்ளத்தில்;
ஜீவ ஊற்றுப்பொங்கிடும்,
மன்னா நித்தம் பெய்திடும்;
பலம் நித்தம் ஓங்கியே
உந்தன் பாதம் சேரவே,
துதிப்பார் சாஷ்டாங்கமாய்
ஜீவ கால அன்புக்காய்.

4. பெற மோட்ச பாக்கியம்
பூவில் வேண்டும் சமுகம்;
ரட்சை செய்யும் தயவால்
பாதம் சேர்த்தருள்வதால்,
நீரே சூரியன் கேடகம்,
வழித்துணை காவலும்;
கிருபை மகிமையும்
மேலும் மேலும் பொழியும்.

Tamil Hymns

189. ஆண்டவா பிரசன்னமாகி

1. ஆண்டவா பிரசன்னமாகி
ஜீவன் ஊதி உயிர்ப்பியும்;
ஆசை காட்டும் தாசர்மீதில்
ஆசீர்வாதம் ஊற்றிடும்.

அருள்மாரி எங்கள் பேரில்
வருஷிக்கப் பண்ணுவீர்.
ஆசையோடு நிற்கிறோமே,
ஆசீர்வாதம் ஊற்றுவீர்.

2. தேவரீரின் பாதத்தண்டை
ஆவலோடே கூடினோம்;
உந்தன் திவ்விய அபிஷேகம்
நம்பி நாடி அண்டினோம்.

3. ஆண்டவா , மெய்பக்தர் செய்யும்
வேண்டுகோளைக் கேட்கிறீர்;
அன்பின் ஸ்வாலை எங்கள் நெஞ்சில்
இன்று மூட்டி நிற்கிறீர்.

4. தாசர் தேடும் அபிஷேகம்
இயேசுவே! கடாட்சியும்;
பெந்தே கொஸ்தின் திவ்விய ஈவை
தந்து ஆசீர்வதியும்.

190. ஆதாரம் நீ தான் ஐயா என்துரையே

ஆதாரம் நீ தான் ஐயா என்துரையே.
சூதாம் உலகில்நான் தீதால் மயங்கையில் -

1. மாதா பிதாவெனைத் தீதாய்
மதிக்கையில் -மற்றோர்க்குப்
பற்றேதையா எளியன்மேல்
மற்றோர்க்குப் பற்றேதையா -எளியனுக்கு

2. நாம் நாம் துணையென நயந்துரை
சொன்னவர் -நட்டாற்றில் விட்டாரையா
தனியனை நட்டாற்றில்
விட்டாரையா -தனியனுக்கு

3. கற்றோர் பெருமையே மற்றோர்
அருமையே -வற்றாக் கிருபை நதியே
என்பதியே வற்றாக் கிருபை
நதியே என்பதியே

4. சோதனை யடர்ந்து வேதனை
தொடர்ந்து -துக்கம் மிகுவேளையில்
என் சுகிர்தமே துக்கம் மிகு
வேளையில் -உன் தாசனுக்கு

191. ஆதாரம் நீர் தான் ஐயா

ஆதாரம் நீர் தான் ஐயா
காலங்கள் மாற, கவலைகள் தீற
காரணம் நீர் தான் ஐயா

1. உலகத்தில் என்னென்ன ஜெயங்கள்
கண்டேன் நான் இந்நாள் வரை
ஆனாலும் ஏனோ நிம்மதி இல்லை
குழப்பங்கள் நிறைகின்றன,(என் நிலைமாற)

2. குடும்பத்தில் குழப்பங்கள் இல்லை
பணக்கஷ்டம் ஒன்றுமே இல்லை
ஆனாலும் ஏனோ நிம்மதி இல்லை
அமைதி தான் கலைகின்றது, (என் நிலைமாற)

3. உந்தனின் சாட்சியாய் வாழ
உள்ளத்தில் வெகு நாளாய் ஆசை
உம்மிடம் வந்தேன் உள்ளத்தை தந்தேன்
சாட்சியாய் வாழ்ந்திடுவேன்

192. ஆதித் திரு வார்த்தை திவ்விய

ஆதித் திருவார்த்தை திவ்விய
அற்புதப் பாலனாகப் பிறந்தார் (2)
ஆதந் தன் பாவத்தின் சாபத்தை தீர்த்திட
ஆதிரையோரையீ டேற்றிட

மாசற்ற ஜோதி திரித்துவத்தோர் வஸ்து
மரியாம் கன்னியிட முதித்து(2)
மகிமையை மறந்து தமை வெறுத்து
மனுக்குமாரன் வேஷமாய்
உன்ன தகஞ்சீர் முகஞ்சீர் வாசகர்
மின்னுச்சீர் வாசகர் மேனிநிறம் எழும்
உன்னத காதலும் பொருந்தவே சர்வ
நன்மைச் சொருபனார் ரஞ்சிதனார்

தாம் தாம் தன்னரர் வன்னரர்
தீம் தீம் தீமையகற்றிட
சங்கிர்த சங்கிர்த சங்கிர்த சந்தோ
ஷமென சோபனம்பாடவே
இங்கிர்த இங்கிர்த இங்கிர்த நமது
இருதயத்திலும் எங்கும் நிறைந்திட - ஆதி

1. ஆதாம் சாதி ஏவினர்
ஆபிரகாம் விசுவாசவித்து (2)
பூதர் சிம்மாசனத்தாளுகை செய்வோர்
ஈசாய் வங்கிஷத்தானுதித்தார்

2. பூலோகப் பாவ விமோசனர்
பூரண கிருபையின் வாசனர் (2)
மேலோக இராஜாதி இராஜன் சிம்மாசனன்
மேன்மை மகிமைப் பிரதாபன் வந்தார்

3. அல்லேலூயா சங்கீர்த்தனம்
ஆனந்த கீதங்கள் பாடவே (2)
அல்லைகள் தொல்லைகள் எல்லாம்
நீங்கிட-அற்புதன் மெய்ப்பரன் தற்பரனார்

Tamil Hymns

193. ஆதிபன் பிறந்தார் அமலாதிபன் பிறந்தனரே

ராஜன் பாலன் பிறந்தனரே
தாழ்மையான தரணியிலே

ஆதிபன் பிறந்தார் அமலாதிபன் பிறந்தனரே
ஏழ்மையானதொரு மாட்டுக் கொட்டில்தனில்
தாழ்மையாய் அவதரித்தார்
… ராஜன்

1. அன்னை மரியின் கர்ப்பத்திலுதித்தார்
அன்பன் ஏழையாய் வந்தார்
அவர் மண்ணினில் மானிடரை
காக்க வென்றே அவதரித்தார்
… ராஜன்

2. பாரில் பாவம் போக்கவே பாங்குடன்
மானிட ஜென்மம் எடுத்தார்
அவர் பாதம் பணிந்திடுவோம்
பாலனின் அன்புக்கோர் எல்லையுமுண்டோ
மானிட ஜென்மம் எடுத்தார்
… ராஜன

194. ஆதிபிதாக் குமாரன் ஆவி திரியேகர்க்கு

ஆதிபிதாக் குமாரன் - ஆவி திரியேகர்க்கு
அனவரதமும் தோத்திரம்
திரியேகர்க்கு அனவரதமும் தோத்திரம்

நிறைந்த சத்திய ஞான மனோகர,
உறைந்த நித்திய வேத குணாசர -2
நீடு வாரி திரை சூழு மேதினியை
மூடு பாவ இருள் ஓடவே அருள்செய்

1. எங்கணும் நிறைந்த நாதர் - பரிசுத்தர்கள்
என்றென்றைக்கும் பணிபாதர்,
துங்கமாமறைப்பிர போதர் கடைசி நடு
சோதனை செய் அதி நீதர்
பங்கில்லான் தாபன் இல்லான்
பகர் அடி முடிவில்லான்-பன்ஞானம்
சம்பூரணம் பரிசுத்தம் நீதி என்னும்
பண்பதாய்க யம்பு விவேகன்,
அன்பிரக்கத யாளப்பிரவாகன்
பார்தலத்தில் சிருஷ்டிப்பு, மீட்பு, பரி
பாலனத்தையும்பண் பாய் நடத்தி, அருள் -

2. நீதியின் செங்கோல் கைக்கொண்டு
நடத்தினால் நாம் நீணிலத்தில்லாமல் அழிந்து,
தீதறு நரகில் தள்ளுண்டு - மடிவோ மென்று
தேவ திருவுளம் உணர்ந்து
பாதகர்க் குயிர் தந்த பாலன் யேசுவைக்கொண்டு
பரன் எங்கள் மிசை தயை
வைத்தனர் இது நன்று
பகர்ந்த தன்னடி யார்க்குறு சங்சலம்
இடைஞ்சல் வந்த போதே தயவாகையில்
பாரில் நேரிடும் அஞ்ஞான சேதமுதற்
சூரியன் முன் இருள் போலவே சிதறும்

Tamil Hymns

195. ஆதியாகமம் யாத்திராகமம்

1. ஆதியாகமம், யாத்திராகமம்,
லேவியராகமம், எண்ணாகமம்,
உபாகமம்,யோசுவா, நியாயாதிபதிகள்,
ரூத், 1 சாமுவேல், 2 சாமுவேல்,
1 இராஜாக்கள், 2 இராஜாக்கள்,
1 நாளாகமம், 2 நாளாகமம்,

2. எஸ்றா, நெகேமியா, எஸ்தர், யோபு,
சங்கீதம், நீதிமொழிகள்,பிரசங்கி,
உன்னதப்பாட்டு, ஏசாயா, எரேமியா,
புலம்பல், எசேக்கியேல், தானியேல், ஓசியா, யோவேல், ஆமோஸ்,
ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக்,
செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா.

3. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்,
அப்போஸ்தலர், ரோமர்,
1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர்,
எபேசியர், பிலிப்பியர், கொலோசேயர்,
1 தெசலோனிக்கேயர், 2 தெசலோனிக்கேயர்,
1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு,
தீத்து, பிலேமோன், எபிரெயர், யாக்கோபு,
1 பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், 2 யோவான், 3 யோவான்,யூதா,
வெளிப்படுத்தின விசேஷம்

Tamil Hymns

196. ஆதியில் வார்த்தையாக இருந்த

ஆதியில் வார்த்தையாக இருந்த
எங்கள் இயேசுவே மனிதனை
மீட்க நீரே மண்ணில் வந்தீரே - 2
இருளில் ஒளியாக வந்த எங்கள்
வெளிச்சமே வழியாய் வந்த இயேசுவே -2

இயேசுவே இம்மானுவேலரே
மனிதனை மீட்க வந்த மகா பிரபுவே

1. பொன்னை கேட்கல - உன்
பொருளையும் கேட்கல
சொத்த கேட்கல - உன் சம்பத்த கேட்கல (2)
உன்னை கேட்கிறார் உன் உள்ளத்தை கேட்கிறார்
மகனாய் உன்னை மாற்றுவார்
மகளாய் உன்னை மாற்றுவார்

2. சாபத்தின் கட்டுகளை
உடைக்க வந்த இயேசுவே
எனக்காய் சாபமானீர் சிலுவை மீதிலே
பாவத்தின் சம்பளத்தை நான் செலுத்த தேவை இல்ல
எனக்காய் செலுத்திவிட்டாரே
இயேசு செலுத்திவிட்டாரே

Tamil Hymns

197. ஆதியில் இருளை

1. ஆதியில் இருளை
அகற்றி, ஒளியை
படைத்த நீர்,
உம் சுவிசேஷத்தை
கேளாத தேசத்தை
கண்ணோக்கி கர்த்தாவே,
பிரகாசிப்பீர்.

2. நற்சீராம் சுகத்தை,
மெய்ஞான பார்வையை
அளித்த நீர்,
நைந்தோர் சுகிக்கவும்
கண்ணற்றோர் காணவும்
மானிடர் பேரிலும்
பிரகாசிப்பீர்.

3. சத்தியமும் நேசமும்
உள்ளான ஜீவனும்
அளிக்கும் நீர்,
வெள்ளத்தின் மீதிலே
புறாப்போல பறந்தே,
பார் இருள் நீக்கியே,
பிரகாசிப்பீர்.

4. ஞானமும் வன்மையும்,
தூய்மையும் அருளும்
திரியேகா நீர்,
கடலைப் போன்றதாய்
மெய்யொளி எங்குமாய்,
பரம்பும் வண்ணமாய்,
பிரகாசிப்பீர்.

198. ஆதியும் அந்தமுமானவரே அல்பா ஒமெகா

ஆதியும் அந்தமுமானவரே
அல்பாவும் ஒமேகவும் ஆனவரே
அல்லேலூயா அல்லேலூயா(2)

1. பரிசுத்த பிதாவே நீர் வாழ்க
யேகோவா தேவனே நீர் வாழ்க

2. பரிசுத்த குமாரனே நீர் வாழ்க
இயேசு கிறிஸ்துவே நீர் வாழ்க

3. பரிசுத்த ஆவியே நீர் வாழ்க
தேற்றரவாளனே நீர் வாழ்க

4. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
திரியாக தேவனே ஸ்தோத்திரம்

5. பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தரே

6. நல்லவர் நல்லவர் நல்லவரே
நமது தேவன் நல்லவரே

7. வல்லவர் வல்லவர் வல்லவரே
நமது தேவன் வல்லவரே

8. சிலுவையில் வெற்றி சிறந்தவரே
இரட்சகா உம்மை தொழுகிறோம்

Tamil Hymns

199. ஆதியும் அந்தமுமானவரே அதிசயமானவரே

ஆதியும் அந்தமுமானவரே
அதிசயமானவரே

1. சிருஷ்டிப்பின் ஆதிகாரணரே
ஜீவனின் அதிபதியானவரே
நேற்றும் இன்றும் என்றும்
மாறாதவரே நிலைவரமானவரே

2. ஒருமனதோடே தேடுவோரை
உண்மையாய் ஏற்றுக் கொள்பவரே
ஊக்கமாய் ஜெபிப்போர்க்குள்ள பலனை
உடனடி அளிப்பவரே

3. தாகமுள்ளோர்க்கு ஜீவநீரை
தாராளமாயீவேன் என்றவரே
ஆவியாம் ஜீவ தண்ணீரை எமக்கு
மேவியே இன்று ஈவீரே

4. பாவிக்குப் பாதை காண்பிக்கவே
பாரினில் ஈவாய்த் தோன்றினீரே
பாதகன் போல பாரக் குருசில்
தேவனே தொங்கினீரே

5. சீக்கிரமாய் இதோ வருபவரே
மணவாட்டி சபையைச் சேர்த்திடவே
மாசற்றோராய் உம் மகிமையில் சேர
மன்னவனே அருள் ஈவீரே

200. ஆதியும் நீரே அந்தமும் நீரே மாறிடா

ஆதியும் நீரே அந்தமும் நீரே
மாறிடா நேசர் துதி உமக்கே
தேவ சபையில் வாழ்த்தி புகழ்ந்து
எந்நாளும் துதித்திடுவோம்

1. தூதர்கள் போற்றும் தூயவரே
துதிகளின் பாத்திரர் தேவரீரே
உந்தனின் சமூகம் ஆனந்தமே
உந்தனைப் போற்றி புகழ்ந்திடுவோம்

2. செய்கையில் மகத்துவம் உடையவரே
இரக்கமும் உருக்கமும் நிறைந்தவரே
பரிசுத்த ஸ்தலத்தில் துதியுடனே
பரிசுத்த தேவனை வாழ்த்திடுவோம்

3. ஆண்டவர் இயேசுவைத் தொழுதிடுவோம்
ஆவியில் நிறைந்தே களித்திடுவோம்
உண்மையும் நேர்மையும் காத்தென்றுமே
உத்தம தேவனைப் பணிந்திடுவோம்

4. ஸ்தோத்திர பலிதனை செலுத்திடுவோம்
பாத்திரர் அவரை உயர்த்திடுவோம்
மகிமையும் கனமும் துதிகளையே
செலுத்தியே இயேசுவை துதித்திடுவோம்

201. ஆத்தும ஆதாயம் செய்குவோமே

ஆத்தும ஆதாயம் செய்குவோமே - இது
ஆண்டவர்க்குப் பிரியம் - நாமதினால் நாம
ஆசீர்வாதம் பெறுவோம்

சாத்திரம் யாவும் தெரிந்த கிறிஸ்தையன்
தஞ்சத்தைப் பெற்று நாமிந்த மாவேலையில்
ஆத்திரமாக முயற்சி செய்வோமாகில்
அற்புதமான பலனை அடையலாம்

1. பாழுலக முழுதையும் ஒருவன் சம்
பாதித்துக் கொண்டாலும் - ஒரு
நாளுமழியாத ஆத்துமத்தை அவன்
நஷ்டப்படுத்தி விட்டால்,
ஆளுந்துரையவ னாயிருந்தாலுமே,
அத்தால் அவனுக்கு லாபமில்லை யென்று,
ஏழை ரூபங் கொண்டு ஞாலமதில் வந்த
எம்பெருமான் கிறிஸ்தேசன்று சொன்னாரே

2. கெட்டுப்போன ஆத்துமாக்களை ரட்சிக்க
மட்டில்லா தேவசுதன் - வானை
விட்டுலகில் கனபாடு பட்டு ஜீவன்
விட்டதும் விந்தைதானே;
துட்டை யொருத்தியி னாத்துமத்தை மீட்க
தூயபரன் முன்னோர் கிணற்றருகிலே
இட்டமுடன் செய்த இரட்சணிய வேலையை
இந்த நிமிஷமே சிந்தையி லெண்ணியே

202. ஆத்துமமே என் முழு உள்ளமே

ஆத்துமமே, என் முழு உள்ளமே
உன் ஆண்டவரைத் தொழு தேத்து
இந்நாள் வரை அன்பு வைத் தாதரித்த
உன் ஆண்டவரைத் தொழுதேத்து

1. போற்றிடும் வானோர், பூதலத்துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள

2. தலை முறை தலை முறை தாங்கும் விநோத
உலக முன் தோன்றி ஒழியாத

3. தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத் தருளும், மேலான

4. வாதை, நோய், துன்பம் மாற்றி, அனந்த
ஓதரும் தயைசெய் துயிர் தந்த

5. உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்,
முற்றும் கிருபையினால் முடி சூட்டும்

6. துதி மிகுந்தேறத் தோத்தரி தினமே,
இதயமே, உள்ளமே, என் மனமே

203. ஆத்மாக்களுக்காய் செலவு பண்ணவும்

ஆத்மாக்களுக்காய் செலவு பண்ணவும்
செலவு பண்ணப்படவும்
உன்னை தியாகம் செய்வாயா

1. ஆதாரமின்றி அழிந்து போகும்
ஆத்ம மீட்பிழந்தவர்க்காய்
ஆத்தும பாரம் கொண்டவனாய்
ஆதாயம் செய்வாயா?

2. எண்ணற்ற மாணவர் நிலையிழந்து
கண்ணற்ற நிலையிலுள்ளார்
எண்ணற்ற ஆசிகள் பெற்ற நீயும்
எண்ணியே பார்ப்பாயா?

3. கோதுமை மணி நிலம் விழுந்து செத்தால்
அதிக பலன் தருமே
பிறரது பாரத்தை உன் பாரமாய்
ஏற்றிட துணிவாயா?

4. சாமுவேல், மோசே, நெகேமியா போன்ற
தீர்க்கரை அறிவாயா?
திறப்பின் வாசலில் நிற்க உள்ளம்
திறந்து கொடுப்பாயா?

204. ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய் நேசரை

ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய்
நேசரை நோக்கிடுவாய்
உன் பாதம் கல்லில் இடறாதபடி
தூதர்கள் ஏந்திடுவார் - (2)

1. வனாந்திரத்தில் மன்னா தந்தார்
மறைவாக காத்து வந்தார் - (2)
இருள் நீக்கி வெளிச்சம் தந்தார்
நாளெல்லாம் நிழலானார் - (2)

2. அலை அலையாய் பகைவர்களும்
எழும்பியே வந்தாலும் - (2)
அதிகாரங்கள் உடையவர்தான்
ஆண்டவர் நடத்தினாரே - (2)

3. நன்மையினால் உன் வாழ்வை
இதுவரை நடத்தினாரேஆத்துமாவே - (2)
ஏன் கலங்குகிறாய்
இயேசுவில் நிலைத்திடுவாய் - (2)

205. ஆத்துமாவே நீ துதித்திடுவாய்

ஆத்துமாவே நீ துதித்திடுவாய்
நம் தேவனை என்றுமாய்
பாவங்களை மன்னித்தாரே
நம் நோய்களை நீக்கினாரே

விண்ணில் உன்னை சேர்த்திடவே
மண்ணில் உதித்தார் கண்ணீர் யாவும்
போக்கிடவே செந்நீர் வடித்தார்-அல்லேலூயா
பாலைவனமாம் பாரினில் உன்னை
சோலைவனம் ஆக்கினாரே

தாகமான நேரம் ஜீவத் தண்ணீர் கொடுத்தார்
சோகமான நேரம் அவர்
தோளில் சுமந்தார்-அல்லேலூயா
பெலவீன நேரம் வைத்தியரானார்
என் வாழ்வில் அவர் போதுமே

நித்தியத்தின் பாதையிலே நித்தம்
நடத்தும் நீதிபரர் இயேசுவையே
நித்தம் துதிப்பாய்-அல்லேலூயா
வழுவாமலே காத்திடுவார்
வாழ்நாள் எல்லாம் துதிப்பேன்

206. ஆத்துமாவே ஸ்தோத்தரி முழு

ஆத்துமாவே ஸ்தோத்தரி முழு உள்ளமே ஸ்தோத்தரி
ஜீவனுள்ள தேவனைத் துதி

1. ஒன்று இரண்டு என்றல்ல
தேவன் தந்த நன்மைகள்
கோடா கோடா கோடி ஆகுமே
ஒன்று இரண்டு என்றல்ல
நீ சொலுத்தும் நன்றிகள் - கோடா
கோடா கோடியாகட்டும்

2. நாட்டில் உள்ள மக்களே
பமியின் குடிகளே
என்னுடன் தேவனைத் துதியுங்கள்
கூட்டில் உள்ள பறவைபோல்
சிக்கிக் கொண்ட நம்மையே
விடுவித்த தேவனைத் துதியுங்கள்

3. பெத்லகேம் வந்தாரே கல்வாரிக்குச்
சென்றாரே இயேசு எனக்காய்
ஜீவன் விட்டாரே இம்மகா சிநேகத்தை
ஆத்துமாவே சிந்திப்பாய்
நெஞ்சமே நீ மறக்கக் கூடுமோ

4. நானும் என் வீட்டாருமோ
போற்றுவோம் ஆராதிப்போம்
இயேசுவை என்றுமே சேவிப்போம்
எங்கள் பாவம் மன்னித்தார் எங்கள் தேவா

Tamil Hymns

207. ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றதே

ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றதே, என்றன்
ஆவியும் அவரில் களிக்கின்றதே - இதோ!
நேர்த்தியாய்ப் பாடுவேன், நிதங்கனிந்தே எந்தன்
பார்த்திப னுட பதந் தினம் பணிந்தே - இதோ! --- ஆத்துமா

1. அடிமையின் தாழ்மையைப் பார்த்தாரே - என்னை
அனைவரும் பாக்கிய ளென்பாரே,
முடிவில்லா மகிமை செய்தாரே, பல
முடியவர் பரிசுத்தர் என்பாரே - இதோ! --- ஆத்துமா

2. பயப்படும் பத்தருக் கிரங்குகிறார் - நரர்
பார்த்திட பெருஞ்செயல் புரிகின்றார்;
உயர்த்திடு நரர்களைச் சிதறடிப்பார் - தன்னை
உகந்தவர் தாழ்ந்திடில் உயர்த்துகின்றார் - இதோ! --- ஆத்துமா

3. முற்பிதாக் களுக்கவர் சொன்னதுபோல் - அந்த
முனியாபி ராமுட ஜனமதன்பால்,
நட்புடன் நினைவொடு நல்லிசரேல் - அவன்
நலம் பெற ஆதரித் தார்மறவேல் - இதோ! --- ஆத்துமா

Tamil Hymns

208. ஆத்துமாக்கள் மேய்ப்பரே

1. ஆத்துமாக்கள் மேய்ப்பரே,
மந்தையைப் பட்சிக்கவும்
சாத்தான் பாயும் ஓநாய் போல்
கிட்டிச்சேரும் நேரமும்,
நாசமோசம் இன்றியே
காரும், நல்ல மேய்ப்பரே.

2. பணம் ஒன்றே ஆசிக்கும்
கூலியாளோ ஓடுவோன்;
காவல் இன்றிக் கிடக்கும்
தொழுவத்தின் வாசல்தான்;
வாசல், காவல் ஆன நீர்
மந்தைமுன் நின்றருள்வீர்.

3. கெட்டுப்போன யூதாஸின்
ஸ்தானத்திற்குத் தேவரீர்,
சீஷர் சீட்டுப்போடவே
மத்தியா நியமித்தீர்;
எங்கள் ஐயம் யாவிலும்,
கர்த்தரே, நடத்திடும்.

4. புது சீயோன் நகரில்
பக்தர் வரிசையிலே
நிற்கும் மத்தியாவோடும்
நாங்கள் சேரச் செய்யுமே
கண் குளிர உம்மையும்
காணும் பாக்கியம் அருளும்.

209. ஆத்மமே உன் ஆண்டவரின்

1. ஆத்மமே, உன் ஆண்டவரின்
திருப்பாதம் பணிந்து-மீட்பு, சுகம்,
ஜீவன், அருள் பெற்றதாலே துதித்து,
அல்லேலுயா, என்றென்றைக்கும்
நித்திய நாதரைப் போற்று

2. நம் பிதாக்கள் தாழ்வில் பெற்ற
தயை நன்மைக்காய் துதி-கோபங்கொண்டும்
அருள் ஈயும் என்றும் மாறாதோர் துதி
அல்லேலுயா, அவர் உண்மை
மா மகிமையாம் துதி

3. தந்தை போல் மா தயை உள்ளோர்;
நீச மண்ணோர் நம்மையே
அன்பின் கரம் கொண்டு தாங்கி
மாற்றார் வீழ்த்திக் காப்பாரே!
அல்லேலுயா, இன்னும் அவர்
அருள் விரிவானதே.

4. என்றும் நின்றவர் சமுகம்
போற்றும் தூதர் கூட்டமே,
நாற்றிசையும் நின்றெழுத்து
பணிவர் நீர் பக்தரே;
அல்லேலுயா, அனைவோரும்
அன்பின் தெய்வம் போற்றுமே

Tamil Hymns

210. ஆபிரகாம் தேவன் ஈசாக்கின் தேவன்

ஆபிரகாம் தேவன் ஈசாக்கின் தேவன்
யாக்கோபின் தேவனவர் - என்னை
அழைத்தும் உன்னத வழியில்
என்றென்றும் நடத்திடுவார்

1. வனாந்திரமோ வாடாத மனமே
காடையை அனுப்பிடுவார்
தண்ணீர் இல்லையோ - எண்ணிப்பார்
அவரின் நன்மைகள் எத்தனையோ - ஆபிரகாம்

2. சோதனை வேளையோ சோராதே மனமே
இயேசுவை சார்ந்திடுவாய்
யோர்தானை கடந்து - இயேசுவை பற்றிக் கொள்
என்றென்றும் ஜீவிப்பாய் - ஆபிரகாம்

3. கசந்த மாராவோ கவலை வேண்டாமே
கர்த்தர் உன்னோடே உள்ளார்
ஜெபத்திலே நீ விழிப்பாய் இருந்து
வெற்றியை சேர்த்திடுவாய் - ஆபிரகாம்

4. அல்லேலூயா பாடி இயேசுவை துதித்து
அனுதினம் ஜீவிப்பாயோ
அவரின் சித்தம் நித்தமும் செய்ய
ஆவலாய் கீழ்ப்படிவாய் - ஆபிரகாம்

Tamil Hymns

211. ஆபிரகாமின் தேவன் ஈசாக்கின் தேவன்

ஆபிரகாமின் தேவன் ஈசாக்கின் தேவன்
யாக்கோபின் தேவன் உன்னை ஆசிர்வதிப்பார்

1. கர்த்தருக்கு பயந்து
வழிகளில் நடக்கின்ற நீ
பாக்கியவான் பாக்கியவான்
உழைப்பின் பயனை நீ
உண்பது நிச்சயமே நிச்சயமே

2. நன்மையும் பாக்கியமும்
உன் வாழ்வில் நீ காண்பாய்
செல்வமும் ஆஸ்தியும் தேடி வரும் தினமும்
ஜீவனுள்ள நாட்களெல்லாம்
செழிப்பை நீ காண்பாய் நீ காண்பாய்

3. இல்லத்தில் உன் மனைவி
கனிதரும் திராட்சைச் செடி
பிள்ளைகள் ஒலிவமரக் கன்றுகள்போல் வளர்வார்கள்
பிள்ளைகளின் பிள்ளைகளை காண்பது
நிச்சயம் நிச்சயமே

212. ஆபிரகாமின் தேவனே

ஆபிரகாமின் தேவனே ஈசாக்கின் தேவனே,
யாக்கோபின் தேவரீரே
உம் நாமத்தோடவே என் பெயரை இணையுமே
ஆனந்தம் அடைந்திடுவேன்

1.தானியேலின் தேவன் நீரே
சிங்கத்தின் வாயைக் கட்டினீரே
தேவாதி தேவனே வாழ்க
ராஜாதி ராஜாவே வாழ்க

2.சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோவை
அவியாமல் அக்கினியிலே காத்தவரே
பாதுகாக்கும் இயேசு நாமம்
பரலோகம் சேர்த்திடும் நாமம்

3.பவுலும் சீலாவும் சிறையிலே
கட்டுகளை அறுத்துக் காத்தவரே
பரிசுத்த ஆவியே வாழ்க
திரியேக தேவனே வாழ்க

213. ஆபிரகாமை ஆசீர்வதித்த ஆண்டவா

1. கல்லின் மனைபோலக் கணவனும்
இல்லின் விளக்கெனக் காரிகையும்
என்றும் ஆசிபெற்று இனிது வாழவே
வாழவே! வாழவே! வாழவே!
என்றும் ஆசிபெற்று இணைந்து வாழவே!
இல்லறமாம் இன்ப நல்லறச் சோலையில்
இன்னிசை யெழுப்பி இங்கிதமா யென்றும்
இணைந்து வாழவே - இணைந்து வாழவே

2. அன்பும் அறனும் அங்கோங்குமெனின்
பண்பும் பயனும் உண்டாமே
இன்பமோடே அங்ஙன மென்றும் வாழப்பாரும்
வாழவே! வாழவே! வாழவே!
என்றும் ஆசிபெற்று இணைந்து வாழவே!
என்றுமிதே இன்பம் கொண்டிவன் வாழவே
நற்புகழடைந்து நண்பருடன் சுற்றம்
நயந்து வாழவே - நயந்து வாழவே

3. உள்ளம் விரும்பிய செல்வமுடன்
உத்தமச் சேய்களையே தாரும்
நல்ல கீர்த்திகொண்டு நாளும் வாழப் பாரும்
வாழவே! வாழவே! வாழவே!
என்றும் ஆசிபெற்று இணைந்து வாழவே!
ஐயமது கொள்ளாது அன்பினிற் கூடியே
வையகந்தனில் வல்லபிதா உம்மை
வணங்கி வாழவே - வணங்கி வாழவே

214. ஆமென் அல்லேலூயா மகத்துவத்

ஆமென், அல்லேலூயா! மகத்துவத் தம்பராபரா
ஆமென், அல்லேலூயா! ஜெயம்!
ஜெயம் அனந்த தோத்திரா

ஆம் அனாதி தந்தார்(2) வந்தார்,
இறந்துயிர்த்தெழுந்தாரே, உன்னதமே

1. வெற்றிகொண் டார்ப்பரித்து - கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து, - முறித்து
பத்ராசனக் கிறிஸ்து - மரித்து
பாடுபட்டுத்தரித்து, முடித்தார்

2. சாவின் கூர் ஒடிந்து(2)
மடிந்து தடுப்புச் சுவர் இடிந்து, - விழுந்து,
ஜீவனே விடிந்து, - தேவாலயத்
திரை ரண்டாய்க் கிழந்து ஒழிந்தது

3. வேதம் நிறைவேற்றி(2)
மெய் தோற்றி,மீட்டுக் கரையேற்றி, - பொய்
மாற்றி பாவிகளைத் தேற்றி, - கொண்டாற்றி,
பத்ராசனத் தேற்றி வாழ்வித்தார்

4. தேவ கோபந்தீர்ந்து (2)
அலகையின் தீமை எலாஞ் சோர்ந்து, முடிந்தது
ஆவலுடன் சேர்ந்து - பணிந்து
கொண்டாடும், களி கூர்ந்து மகிழ்ந்து

215. ஆயன் இயேசு கூட இருக்க எனக்கு

ஆயன் இயேசு கூட இருக்க
எனக்கு கவலையில்ல
கையப் புடிச்சுக் கூட நடக்க
யாரும் தேவையில்ல (2)

1. அமைதி நீர் நிலைக்கு என்னை அழைத்துச் சென்றிடுவார்
பசும்புல் தினம் எனக்கு பரமன் தந்திடுவார்

2. இருட்டு பயமில்ல எனக்கு எதிரி பயமில்ல
கோலும் கைத்தடியும் எனக்கு காலமும் இருக்கும்

216. ஆயிரம் நாவுகள் இருந்தாலும் போதாது

ஆயிரம் நாவுகள் இருந்தாலும் போதாது
அப்பா நீர் செய்த நன்மை சொல்லிட

இயேசப்பா உமக்கு ஸ்தோத்திரம் -4

1. தனிமையின் நேரத்தில் துணையாக வந்தீரே
இயேசப்பா உமக்கு என்றும் ஸ்தோத்திரம்

2. தடுமாறும் நேரத்தில் தாங்கி சுமந்தீரே
இயேசப்பா உமக்கு என்றும் ஸ்தோத்திரம்

3. அவமான நேரத்தில் ஆறுதல் தந்தீரே
இயேசப்பா உமக்கு என்றும் ஸ்தோத்திரம்

Tamil Hymns

217. ஆயிரம் நாவுகள் போதாதே

ஆயிரம் நாவுகள் போதாதே
உம்மை துதிக்க உம்மை போற்றிட
பல நாமங்களால் நீர் போற்றப்படும்
எங்கள் யெகோவா தெய்வம் நீங்க

உம்மையே பாடுவேன்
உம்மையே உயர்த்துவேன்
பரிசுத்தர் நீர் பரிசுத்தர்
உம்மையே நான் பாடுவேன்
உம்மையே நான் உயர்த்துவேன்
பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

1. தேவையெல்லாம் சந்தித்தீர்
யெகோவா யீரே
வெற்றிமேல் வெற்றி தந்தீர்
எங்கள் யெகோவா நிசி

2. சுகம் தந்து உயிர் கொடுத்தீர்
யெகோவா ரஃப்பா
சந்தோஷம் சமாதானம் தந்த
யெகோவா ஷாலோம்

Tamil Hymns

218. ஆயிரம் ஆயிரம் பாடல்களை

1. ஆயிரம் ஆயிரம் பாடல்களை
ஆவியில் மகிழ்ந்தே பாடுங்களேன்
யாவரும் தேமொழிப் பாடல்களால்
இயேசுவைப் பாடிட வாருங்களேன்

அல்லேலூயா! அல்லேலூயா!
என்றெல்லாரும் பாடிடுவோம்
அல்லலில்லை! அல்லலில்லை!
ஆனந்தமாய்ப் பாடிடுவோம்

2. புதிய புதிய பாடல்களைப்
புனைந்தே பண்களும் சேருங்களேன்
துதிகள் நிறையும் கானங்களால்
தொழுதே இறைவனைக் காணுங்களேன்

3. நெஞ்சின் நாவின் நாதங்களே
நன்றி கூறும் கீதங்களால்
மிஞ்சும் ஓசைத் தாளங்கலால்
மேலும் பரவசம் கூடுங்களேன் -2

4. எந்த நாளும் காலங்களும்
இறைவனைப் போற்றும் நேரங்களே
சிந்தை குளிர்ந்தே ஆண்டுகளாய்
சீயோனின் கீதம் பாடுங்களேன்

219. ஆயிரம் ஆண்டுகள் கழிந்தாலும்

ஆயிரம் ஆண்டுகள் கழிந்தாலும் அலைகடல்
என்றும் ஓய்வதில்லை ஆண்டவர்;
இயேசுவை நம்பியவர்;
அநாதையாகி அலைவதில்லை

(ஆயிரம் ஆண்டுகள்.......)
மாதம் ஒரு நாள் நிலா மறைந்தால்

வானிலா இல்லை என்பாயோ (2)
சோதனை வேதனை வருகையிலே (1)
நீயும் தேவனே இல்லை எனலாமோ

(ஆயிரம் ஆண்டுகள்.......) ஆண்டவர்;
கொண்ட திருச்சித்தம்

உன்னில் ஆளுகை செய்ய இணங்கிடுவாய் (2)
காலையில் கதிரவன் பனி போல (1)
உன் கவலைகள் யாவும் மறைந்துவிடும்
(ஆயிரம் ஆண்டுகள்.......)

220. ஆயிரம் வருட அரசாட்சியே

ஆயிரம் வருட அரசாட்சியே
பரிசுத்தவான்களின் இராஜ்ஜியமே
பரமபிதா வேதவாக்கிதே
பசுமை பொற்காலம் வருகின்றதே

1. பசுவும் கரடியும் கூடி மேயுமே
புலியும் வெள்ளாடும் படுத்திருக்கும்
ஒரு மித்து நடக்கும் காளையும் சிங்கமும்
ஒரு சிறு பையனே நடத்திடுவான்

2. இடுக்கண்கள் தீங்கு இழைப்பாரில்லை
இகத்தில் கர்த்தாவின் மகிமை தங்கும்
குழந்தையின் கரங்கள் பாம்பின் மண்புதரில்
களங்கம் பயமின்றி விளையாடுமே

3. வறண்ட நிலங்களும் செழித்தோங்குமே
விருட்சங்கள் இனிய கனி தருமே
அமைதியும் நிலவும் சுகவாழ்வு துளிர்க்கும்
அற்பாயுசுள்ளோர்கள் அதில் இல்லையே

4. கிறிஸ்தேசு ராஜா புவியாளுவார்
கிடைக்கும் நல்நீதி எளியவர்க்கே
பரிபூர்ணம் அடைந்த மெய் தூய பக்தர்கள்
பரனோடு நீடுழி அரசாளவே

Tamil Hymns

221. ஆயிரம் ஸதோத்திரமே

ஆயிரம் ஸதோத்திரமே
இயேசுவே பாத்திரரே
பள்ளத்தாக்கிலே அவர் லீலி
சாரோனிலே ஓர் ரோஜா - 2

1. வாலிப நாட்களிலே என்னைப்
படைத்தவரை நினைத்தேன் - 2
ஏற்றிய தீபத்தால் இதயமே நிறைந்தது
இயேசுவின் அன்பினாலே - (ஆயிரம்)

2. உலக மேன்மையாவும்
நஷ்டமாய் எண்ணிடுவேன் - 2
சிலுவை சுமப்பதே லாபமாய் நினைத்து
சாத்தானை முறியடிப்பேன்

3. இயேசுவின் நாமத்தினால்
ஜெயங்கொடுக்கும் தேவனுக்கு - 2
அல்லேலூயா ஸ்தோத்திரம் இயேசுவே வாரும்
என்றென்றும் உம்மில் வாழ

222. ஆராதனை ஆராதனை அப்பா என்

ஆராதனை ஆராதனை
அப்பா என் இயேசுவுக்கே - 2

1. எங்கள் ஜெயகிறிஸ்துவே ஆராதனை
எங்கள் சேனை அதிபதியே ஆராதனை

ஆராதனை துதி ஆராதனை
ஆராதனை ஸ்தோத்ர ஆராதனை

2. பிராண சிநேகிதரே ஆராதனை
பரிந்து பேசும் கிறிஸ்துவே ஆராதனை

3. இஸ்ரவேலின் நம்பிக்கையே ஆராதனை
இஸ்ரவேலின் ஆறுதலே ஆராதனை

Tamil Hymns

223. ஆராதனை ஆராதனை அல்லேலூயா

ஆராதனை ஆராதனை
அல்லேலூயா தேவனுக்கு ஆராதனை

1. ராஜாதி ராஜனுக்கு ஆராதனை
கர்த்தாதி கர்த்தருக்கு ஆராதனை

ஆராதனை ஆராதனை

2. மன்னாதி மன்னனுக்கு ஆராதனை
மகிமையின் ராஜனுக்கு ஆராதனை

3. தேவாதி தேவனுக்கு ஆராதனை
தூயாதி தூயவருக்கு ஆராதனை

4. திரியேக தேவனுக்கு ஆராதனை
துதிகளின் பாத்திரர்க்கு ஆராதனை

5. நித்திய தேவனுக்கு ஆராதனை
நிதம் காக்கும் கர்த்தருக்கு ஆராதனை

6. பரிசுத்த தேவனுக்கு ஆராதனை
பக்தர்களின் நேசருக்கு ஆராதனை

Tamil Hymns

224. ஆராதனை ஆராதனை ஆவியோடு

ஆராதனை (2) ஆவியோடு
ஆராதிக்கின்றோம் ஆராதனை (2)
உண்மையோடு ஆராதிக்கின்றோம்
ஆராதனை (4)

1. சத்திய தேவனே உம்மை உயர்த்தி
உந்தன் உண்மையோடு ஆராதிக்கின்றோம்
நித்திய தேவனே உம்மை உயர்த்தி

உந்தன் ஆவியோடு
ஆராதிக்கின்றோம்

2. யெகோவாயீரே பார்த்துக் கொள்வீர்
உந்தன் ஆவியோடு ஆராதிக்கின்றோம்
யெகோவா நிசி வெற்றித் தருவீர்

3. யெகோவா ஷாலோம் சமாதானமே
உந்தன் ஆவியோடு ஆராதிக்கின்றோம்
யெகோவா ஷம்மா கூட இருப்பீர்

4. யெகோவா ரஃப்பா சுகம் தருவீர்
உந்தன் ஆவியோடு ஆராதிக்கின்றோம்
யொகோவா மெக்காதீஸ் பரிசுத்தரே

5. ஏலொகீம் எங்கும் நிறைந்தீர்
உந்தன் ஆவியோடு ஆராதிக்கின்றோம்
எல்ஷடாய் சர்வ வல்லவரே

6. ஆதியும் அந்தமும் ஆனவரே
உந்தன் ஆவியோடு ஆராதிக்கின்றோம்
வழியும் சத்தியமும் ஜீவன் நீரே

Tamil Hymns

225. ஆரவாரம் ஆர்ப்பாட்டம்

ஆரவாரம் ஆர்ப்பாட்டம்
அப்பா சந்நிதியில்
நாளெல்லாம் கொண்டாட்டம்
நல்லவர் முன்னிலையில்

நன்றிபாடல் தினமும் பாடுவோம்
நல்ல தேவன் உயர்த்திப் பாடுவோம்

1. கல்வாரி சிலுவையிலே கர்த்தர்
இயேசு வெற்றிச்சிறந்தார்
கண்ணீரை மாற்றி நம்மை
காலமெல்லாம் மகிழச் செய்தார்

2. கிறிஸ்துவை நம்பினதால்
பிதாவுக்கு சொந்தமானோம்
அப்பான்னு கூப்பிடப்பண்ணும்
ஆவியாலே நிரப்பப்பட்டோம்

3. உயிர்த்த கிறி;ஸ்து நம்ம
உள்ளத்திலே வந்துவிட்டார்
சாவுக்கேதுவான நம்ம
சரீரங்களை உயிர்ப்பிக்கின்றார்

4. ஆவிக்கேற்ற பலி செலுத்தும்
ஆசாரிய கூட்டம் நாம்
வெளிச்சமாய் மாற்றியவர்
புகழ்ச்சிதனை பாடிடுவோம்

5. துயரம் நீக்கிவிட்டார்
கொண்டாட்டத்தின் ஆடை தந்தார்
ஒடுங்கின ஆவி நீக்கி
துதி என்னும் உடையை தந்தார்

6. நீதியின் சால்வை தந்து
இரட்சிப்பாலே போர்த்துவிட்டார்
மணமகன் மணமகள் போல்
அலங்கரித்து மகிழ்கின்றார்

7. இயேசுவின் பெயராலும்
ஆவியிலும் கழுவப்பட்டோம்

Tamil Hymns

நீதிமானாய் மாற்றப்பட்டு
தூய்மையான பிள்ளைகளானோம்

8. மூலைக்கல்லாம் கிறிஸ்துவின் மேல்
கட்டப்பட்ட மாளிகை நாம்
ஆவிதங்கும் ஆலயமாய்
வளர்கின்ற கோபுரம் நாம்

9. விண்ணகமே நம் நாடு
வருகைக்காக காத்திருப்போம்
அற்பமான நமது உடல்
அப்பா போல மாறிடுமே

226. ஆராதனை ஆராதனை துதி

ஆராதனை ஆராதனை துதி
ஆராதனை ஆராதனை - (2)
காலையிலும் மாலையிலும்
ஆராதனை அப்பாவுக்கே - (2)

1. தூய ஆவியே உமக்கு ஆராதனை
துணையாளரே உமக்கு ஆராதனை
வான பிதாவே உமக்கு ஆராதனை
வழிகாட்டியே உமக்கு ஆராதனை (2)

2. ஜீவ பலியே உமக்கு ஆராதனை
ஜீவ தண்ணீரே உமக்கு ஆராதனை
மேகஸ்தம்பமே உமக்கு ஆராதனை
மேசியாவே உமக்கு ஆராதனை (2)

3. அப்பா பிதாவே உமக்கு ஆராதனை
மறுரூபமானவரே உமக்கு ஆராதனை
கன்மலையே உமக்கு ஆராதனை
காண்பவரே உமக்கு ஆராதனை (2)

227. ஆராதனை ஆராதனை வல்லவரே

ஆராதனை ஆராதனை வல்லவரே நல்லவரே
ஆராதனை ஆராதனை அற்புதரே அதிசயமே
உந்தன் நாமம் உயர்த்தியே பாடிடுவேன்
உயிர் உள்ள நாளெல்லாம் (2)

1. பாவங்கள் எமக்காய் சுமந்தவரே
உமக்கே ஆராதனை
பாடுகள் எனக்காய் சகித்தவரே
உமக்கே ஆராதனை

2. ஆவியின் வரங்களைத் தந்தவரே
உமக்கே ஆராதனை
அபிஷேகம் எனக்காய் தந்தவரே
உமக்கே ஆராதனை

3. மரணத்தை எனக்காய் ஜெயித்தவரே
உமக்கே ஆராதனை
பாதாள வல்லமை தகர்த்தீரே
உமக்கே ஆராதனை

228. ஆராதனை இந்த வேளை ஆண்டவரை

ஆராதனை இந்த வேளை
ஆண்டவரை தொழும் காலை
துதியுடனே ஸ்தோத்தரிப்போம்
தூயவரை தொழுதிடுவோம்

1. ஆவியுடன் நல் உண்மையுடன்
ஆராதிப்போம் அவர் நாமத்தை
கூடிடுவோம் பணிந்திடுவோம்
கல்வாரி அன்பினை பாடிடுவோம்

2. திருரத்தத்தால் மீட்பர் சம்பாதித்த
திருச்சபையில் தினம் சூடிடவே
தவறாமல் வேதம் தினம் ருசி பார்த்திட
திருப்பாதம் சேர்ந்து ஜெபித்திடுவோம்

3. மெய் சமாதானம் கிருபையுடன்
மாறாத மீட்பர் மகிமையுடன்
மாசற்ற பேரின்பம் அன்பினிலே
மறுரூபம் அடைந்தே பறந்திடுவோம்

228. ஆராதனை உமக்குத்தான் அப்பா அப்பா

ஆராதனை உமக்குத்தான்
அப்பா அப்பா உமக்குத்தான்
எஜமான் நீரிருக்க அடிமை நான் ஆராதிக்க
இரத்தத்தால் கழுவி என்னை
சுத்தமாக மாற்றினீரே - ஆராதனை

1. சாரோனின் ரோஜாவே
பூத்து குலுங்கும் வாசனையே
உம்மைப்போல் மணம் வீச
யாருண்டு உலகினிலே

2. சீலோவாம் குளத்தினிலே
கழுவும் போது கண் திறந்தீர்
எப்பத்தா என்று சொல்லி
செவிகளையே திறந்து விட்டீர்

3. அப்பாவின் பாதத்தில் நான்
அமர்ந்திருந்து பெலனடைந்து
கழுகு போல் சிறகடித்து
உயர உயர பறந்திடுவேன்

230. ஆராதனை சுகம் தரும்

ஆராதனை சுகம் தரும்
ஆராதித்தால் பெலன் வரும்
நான் போற்றுவேன் நான் புகழ்வேன்

கிருபை எந்நாளும்
நினைத்து வாழ்ந்திடுவேன்

1. எனது வாஞ்சையும் நீரே
எனது ஆசையும் நீரே
உங்க சமூகமே எனக்கானந்தம்
உங்க பிரசன்னமே எனக்காறுதல்

2. எனது ஏக்கமும் நீரே
எனது நோக்கமும் நீரே
எந்தன் நேசமே எந்தன் ஜீவனே
எந்தன் இயேசுவே

Tamil Hymns

231. ஆராதனை செய்கின்றேன் என் இயேசப்பா

ஆராதனை செய்கின்றேன் என் இயேசப்பா
உங்க அன்பெல்லாம் நெனச்சு ஆராதிக்கிறேன்
மன்னுயிரைக் காப்பவரே ஆராதனை
மனதுருக்கம் உள்ளவரே ஆராதனை

1. பாவியான எந்தன் மீது பாசம் வைத்தீர்
பாசத்தாலே உங்க ஜீவன் தந்து விட்டீர்
ஏழை எந்தன் நோய்களெல்லாம் சுமந்தவரே
எனக்காக மரணத்தை ருசித்தவரே

2. நிலையற்ற உலகினில் நிம்மதியின்றி
ஏராளம் மனிதர்கள் வாழ்கின்றாரே - அப்பா
உங்க கண்களோ என்னைக் கண்டதே
உங்க கருணையை நினைச்சிட்டா
உள்ளம் பொங்குதே

3. மண்ணுலக மாயை என்னை மாற்றிடாமலே
மகிமையான அபிஷேகத்தால் காப்பவரே
விண்ணவரே உங்க பாதம் சேரும் வரையில்
என் மன்னவரே கிருபையால் நடத்திடுமே

Tamil Hymns

232. ஆராதனை செய்கின்றோம் உம்மை

ஆராதனை செய்கின்றோம்
உம்மை உயர்த்துகின்றோம்
ஆராதனை செய்கிறோம்
உம்மை துதிக்கின்றோம்

நல்லவரே வல்லவரே
நன்மைகள் செய்பவரே-நீர்

உமக்கு ஆராதனை ஆராதனை
ஆராதனை உமக்கு ஆராதனை

1. உன்னதமானவரே உயர்வை தருபவரே
சேனைகளின் கர்த்தரே
எங்களைக் காப்பவரே

2. என் இருதய வாஞ்சைகளை நிறைவேற்றி
தருபவரே என் ஆத்தும நேசர் நீரே
என் அன்பு தெய்வம் நீரே

Tamil Hymns

233. ஆராதனை செய்யும் நேரம்

ஆராதனை செய்யும் நேரம்
அப்பாவின் சந்தோஷ நேரம் - 2

ஆராதனை ஆராதனை (4)

1. கண்களின் விருப்பமே
ஆராதனை ஆராதனை
பலத்தின் முக்கியமே
ஆராதனை ஆராதனை
அலங்கார மகிழ்ச்சியே ஆராதனை
ஆத்தும வாஞ்சையே ஆராதனை

2. ஆதார துருகமே
ஆராதனை ஆராதனை
அடைக்கலப் பட்டணமே
ஆராதனை ஆராதனை
ஆருயிர் தோழரே ஆராதனை
அனுகூல துணையே ஆராதனை

3. நேசத்தின் உச்சிதமே
ஆராதனை ஆராதனை
பாசத்தின் பர்வதமே
ஆராதனை ஆராதனை
உருக்கத்தின் சிகரமே ஆராதனை
ஆசீர்வாத மழையே ஆராதனை

4. ஏழையின் பெலனே
ஆராதனை ஆராதனை
எளியோரின் திடனே
ஆராதனை ஆராதனை
பெருவெள்ள அணையே ஆராதனை
வெயிலுக்கு நிழலே ஆராதனை

Tamil Hymns

234. ஆராதனை தேவனே ஆராதனை இயேசுவே

ஆராதனை தேவனே
ஆராதனை இயேசுவே
ஆராதனை ஆவியே ஆராதனை ஆராதனை

1. உன்னதரே ஆராதனை
உத்தமரே ஆராதனை
உண்மையான தேவனே உயிருள்ள
ராஜனே ஆராதனை ஆராதனை -2

2. நித்தியரே ஆராதனை ச
த்தியரே ஆராதனை
நித்தமும் காக்கும் தேவனே சத்தியம்
பேசும் ராஜனே ஆராதனை ஆராதனை

3. மதுரமே ஆராதனை
மகத்துவமே ஆராதனை
மகிமையான தேவனே மாசில்லாத
ராஜனே ஆராதனை ஆராதனை -2

4. புதுமையே ஆராதனை
புண்ணியமே ஆராதனை
பூரணமான தேவனே பூலோக
ராஜனே ஆராதனை ஆராதனை -2

Tamil Hymns

235. ஆராதனை நாயகன் நீரே

ஆராதனை நாயகன் நீரே
ஆராதனை வேந்தனும் நீரே
ஆயுள் முடியும் வரை
உம்மை தொழுதிடுவேன் ---2

1. ஆயிரம் பேர்களில் சிறந்தோர்
ஆண்டவர் இயேசுவிலே
விடிவெள்ளியே என்தன் பிரியம் நீரே
என்றென்றும் தொழுதிடுவேன் --- 2

2. மாந்தர்கள் போற்றிடும் தெய்வம்
மகிமையின் தேவன் நீரே
முழங்கால் யாவுமே முடங்கிடுமே
மகிழ்வுடன் துதித்திடவே --- 2

3. முடிவில்லா ராஜ்ஜியம் அருள
திரும்பவும் வருவேன் என்றீர்
ஆயத்தமாய் நாம் சேர்ந்திடவே
அனுதினம் வணங்கிடுவேன் -2

236. ஆராதனை நாயகரே உம்மை

1. ஆராதனை நாயகரே
உம்மை நான் ஆராதிப்பேன்
அபிஷேகத்தைத் தருபவரே
உம்மை நான் ஆராதிப்பேன்

அல்லேலூயா ஆமென்

2. அன்பரும் நீரே ஆதாரம் நீரே
உம்மை நான் ஆராதிப்பேன்
இன்பமும் நீரே ஈடில்லா நேசரே
உம்மை நான் ஆராதிப்பேன்

3. உண்மையும் நீரே ஊக்கமும் நீரே
உம்மை நான் ஆராதிப்பேன்
எண்ணமும் நீரே ஏக்கமும் நீரே
உம்மை நான் ஆராதிப்பேன்

4. ஐந்து காயம் ஏற்றவர் நீரே
உம்மை நான் ஆராதிப்பேன்
ஓங்கிய புயமும் ஔஷதம் நீரே
உம்மை நான் ஆராதிப்பேன்

237. ஆராதனைக்கு தகுதியான தெய்வம்

ஆராதனைக்கு தகுதியான தெய்வம்
இயேசு நீர் மாத்திரமே முழு
உலகத்திற்கும் பொதுவான தெய்வம்
இயேசு நீர் மாத்திரமே

1. அன்பு என்றால் என்ன என்றுசொல்லித்
தந்த தெய்வம் இயேசு நீர் மாத்திரமே
பெரும்பாவி மனம் மாற ஏங்குகின்ற
தெய்வம் இயேசு நீர் மாத்திரமே
தம்மை நம்பி வருபவர்கள்
எந்த மதத்து மனிதராயினும்
ஏற்றுக்கொள்ளும் பாசதெய்வமே

2. பர்வதத்தை சுட்டிக்காட்டி கண்டித்துணர்த்தும்
தெய்வம் இயேசு நீர் மாத்திரமே
பாவத்தை மன்னிக்கும் பரிசுத்த தெய்வம்
இயேசு நீர் மாத்திரமே
பரலோகம் போவதற்கு வழிகாட்ட வந்த
தெய்வ அவதாரம் நீர் மாத்திரமே

3. சொன்ன சொல் தவறாத நம்பிக்கைக்கு
உரியவர் இயேசு நீர் மாத்திரமே
பாரபட்சமில்லாத நேர்மையுள்ள தெய்வம்
இயேசு நீர் மாத்திரமே
பரலோகம் போவதற்கு வழிகாட்ட வந்த
தெய்வ அவதாரம் நீர் மாத்திரமே

4. ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி
என்ற வேறுபாட்டை வென்ற தெய்வமே
மனித நேயமில்லாத மதவாத உலகத்துக்கு
மனிதநேயம் சொல்லித்தந்தவரே
சமத்துவம் சமதர்மம் உலகத்தில் நிலைநாட்ட
உயிரைத் தந்த உண்மை தெய்வமே

Tamil Hymns

238. ஆராதனைக்குரியவரே அபிஷேக

ஆராதனைக்குரியவரே
அபிஷேக நாதரே அச்சாரமானவரே

1. அல்லேலூயா பாட்டுப் பாடுவேன்
ஆனந்தமாய் துதித்துப் பாடுவேன்
அல்லேலூயா(3) ஆமென் அல்லேலூயா

2. தாவீதைப்போல் நடனமாடுவேன்
கோலியாத்தை முறியடிப்பேன்

3. பவுலைப்போல பாட்டுப் பாடுவேன்
சிறையிருப்பை மாற்றிடுவேன்

4. சாத்தானை ஜெயித்துடுவேன்
சாட்சியாய் வாழ்ந்திடுவேன்

239. ஆராதனைக்குரியவரே உம்மை

ஆராதனைக்குரியவரே
உம்மை உயர்த்தி ஆராதிப்பேன்

பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

1. என்னை நேசிப்பவர் நீர் அல்லவோ
என்னுடைய ஆராதனை
உங்களுக்குத்தான்

2. என்னை மன்னித்தவர் நீர் அல்லவோ
என்னுடைய ஆராதனை
உங்களுக்குத்தான்

3. என்னை ஆட்கொண்டவர் நீர் அல்லவோ
என்னுடைய ஆராதனை
உங்களுக்குத்தான்

4. என்னை இரட்சித்தவர் நீர் அல்லவோ
என்னுடைய ஆராதனை
உங்களுக்குத்தான்

5. என்னை நினைத்தவர் நீர் அல்லவோ
என்னுடைய ஆராதனை
உங்களுக்குத்தான்

240. ஆராதிக்க உம்மிடம் வந்தேன்

ஆராதிக்க உம்மிடம் வந்தேன்
ஆவியால் நிரப்பும் -2

உம்மை உயர்த்தி நான் உள்ளம் மகிழ்வேன்
உம் முகத்தைப் பார்த்து
என் உள்ளம் நிறைவேன்

1. உம் அன்பை ருசித்து உம்மோடிணைந்து
உறவாடித் துதிக்கணுமே
கண்ணீரோடு உந்தனை அணைத்து
துதித்து மகிழணுமே

2. உம் நாமம் சொல்லி அதினர்த்தம் புரிந்து
உம் அன்பால் நிறையணுமே
உம் பாதத்தில் விழுந்து பணிந்து
உந்தனை உயர்த்தணுமே

3. உம் குரலைக் கேட்டு அதினாலே மகிழ்ந்து
உலகத்தை மறக்கணுமே
பிரசன்னத்திலே கண் மூடிக் கிடப்பேன்
தழுவி அணைத்துக் கொள்ளும்

241. ஆராதிக்க உம்மை ஆராதிக்க இன்று

ஆராதிக்க உம்மை ஆராதிக்க
இன்று ஆராதிக்க கூடியுள்ளோம்
ஊற்றும்மைய்யா நிரம்பும்மைய்யா
உன்னத பரலோக அபிஷேகத்தால் - 2

1. உன்னதரே உம்மை ஆராதிப்போம்
உயர்ந்தவரே உம்மை ஆராதிப்போம்
வல்லவரே உம்மை ஆராதிப்போம்
வழிகாட்டியே உம்மை ஆராதிப்போம்

2. நம்பிக்கையே உம்மை ஆராதிப்போம்
நங்கூரமே உம்மை ஆராதிப்போம்
புகலிடமே உம்மை ஆராதிப்போம்
புகழ்ச்சி நீரே உம்மை ஆராதிப்போம்

3. அற்புதரே உம்மை ஆராதிப்போம்
அடைக்கலமே உம்மை ஆராதிப்போம்
பரிசுத்தரே உம்மை ஆராதிப்போம்
பரிகாரியே உம்மை ஆராதிப்போம்

242. ஆராதிக்கக் கூடினோம் ஆர்ப்பரித்துப் பாடி

ஆராதிக்கக் கூடினோம்
ஆர்ப்பரித்துப் பாடிடுவோம்
வல்ல இயேசு நம் தேவன்
என்றென்றும் அவர் நல் தேவன்

1. தேவ வாசஸ்தலம் என்றும் இன்பமானதே
மகிமை தேவன் கிறிஸ்து இயேசு பிரசன்னம் இங்கே
மகிமை மகிமையே என் மனம் பாடுதே -2
மக்கள் மத்தியில் என்றும் மகிழ்ச்சி பொங்குதே

2. சீயோன் பெலனே வெற்றி சிகரமே
சேனைகளின் கர்த்தர் இயேசு கிரியை செய்கிறார்
ஜீவன் பெலனும் நல் ஆசீர்வாதமும்
நித்திய ஜீவன் இன்றும் என்னில் ஓங்கி நிற்குதே

3. கர்த்தர் சமூகம் என் வாழ்வின் மேன்மையே
கர்த்தர் இயேசு ராஜன் என்றும் உயர்ந்து நிற்கிறார்
அல்லேலூயா என் ஆவி பாடுதே
ஆராதனை அழகு என்னை கவர்ந்து கொண்டதே

4. தேவ சாயல் சபையில் தோன்றுதே
தேவர் நடுவில் இயேசு நியாயம் செய்கிறார்
தேவ சேவையே என் கெம்பீர சேவை
தேவ ஆவியில் நிறைந்து நானும் ஆடிப்பாடுவேன்

243. ஆராதிக்க தெரிந்தெடுத்தீர் கிருபையாக

ஆராதிக்க தெரிந்தெடுத்தீர்
கிருபையாக இரட்சித்தீர் - உயிர்
உள்ளவரை உம்மைப் பாடுவேன்
நான் உள்ளளவும் உம்மைத் துதிப்பேன்

1. எகிப்தில் இருந்து கூட்டி வந்தீர்
இடர்கள் எல்லாம் கடக்க செய்தீர்
எல்லாம் ஆராதிக்கத்தானே - உம்மை

2. பாவசாபம் எல்லாமே நீங்க செய்தீர்
பரிசுத்த ஜாதியாக மாற்றிவிட்டீர்
எல்லாம் ஆராதிக்கத்தானே - உம்மை

3. அந்தகார இருளிலிருந்து அழைத்து வந்தீர்
ஆச்சரிய ஒளிக்குள் அழைத்து சென்றீர்
எல்லாம் அராதிக்கத்தானே - உம்மை

Tamil Hymns

244. ஆராதிக்க வெட்கப்படமாட்டேன்

ஆராதிக்க தயங்கவும் மாட்டேன்-நான்
ஆராதித்து ஆராதித்து ஆராதனையின் ஆழம் சென்று
ஆவியில் களிகூர்ந்து மகிழ்வேன்

கைக்கொட்டி பாடுவேன் நடனமாடுவேன்
கெம்பீர சத்தமாய் முழக்கமிடுவேன்

1. நான் துதிக்கும் ஆராதனையில்
தேவ வல்லமை உண்டு உண்டு

ஆராதித்து நான் ஆராதித்து நான்
ஆராதனையின் அபிஷேகத்தால்
நிறைந்திடுவேன்

2. நான் துதிக்கும் ஆராதனையில்
தேவ மகிமை உண்டு உண்டு

3. நான் துதிக்கும் ஆராதனையில்
தேவ பிரசன்னம் உண்டு உண்டு

4. நான் துதிக்கும் ஆராதனையில்
தேவ அபிஷேகம் உண்டு உண்டு

5. நான் துதிக்கும் ஆராதனையில்
தேவ அக்கினி உண்டு உண்டு

Tamil Hymns

245. ஆராதிக்கிறேன் கும்பிட்டாராதிக்கிறேன்

ஆராதிக்கிறேன் கும்பிட்டாராதிக்கிறேன்
ஆராதனையில் புது கானம் பாடியே
மா உன்னதராம் இரட்சகர் நாமம் வாழ்த்திப் பாடி
உம் மலரடியில் தாழ்ந்து வீழ்ந்து வணங்குவேன்
ஆத்மநாதனே உம்மில் சேர்வேனே
என் மனதில் நீர் என்றும் தங்குமே

1. இயேசு நாதா ஒரு சிசுவாய்
என்னை உந்தன் முன்பில் மாற்றிடுமே
எந்தன் பாவம் யாவும் போக்கினதால்
துக்கபாரம் யாவும் நீக்கினதால்
ஆனந்தக் கண்ணீரில் பாடுகிறேன்

2. ஸ்நேக நாதா ஜீவபலியாய்
என்றும் உம்மில் நானும் ஜீவித்திட
எனது உள்ளம் யாவும் சமர்ப்பிக்கின்றேன்
மகனாக என்னையும் மாற்றிடுமே
ஆதிநாதனே அதிசயமே
நீர் எந்தன் மகிமை மேசியாவே

Tamil Hymns

246. ஆராதிக்கின்றோம் உம்மை ஆராதிக்கின்

ஆராதிக்கின்றோம் உம்மை
ஆராதிக்கின்றோம் -இரட்சகா
தேவா உம்மை ஆராதிக்கின்றோம்

1. மாட்சிமை உள்ளவரே எல்லா
மகிமைக்கும் பாத்திரரே
மாறிடாத என் நேசரே
துதிக்குப் பாத்திரரே

2. என் பெலவீன நேரங்களில்
உந்தன் பெலன் என்னைத் தாங்கிடுதே
ஆத்துமாவை தேற்றினீரே
கிருபை கூர்ந்தவரே

3. ஊழிய பாதையிலே எனக்கு
உதவின மா தயவே
கெஞ்சுகிறேன் கிருபையினை
உமக்காய் வாழ்ந்திடவே

Tamil Hymns

247. ஆராதனைக்குள் வாசம் செய்யும்

1. ஆராதனைக்குள் வாசம்
செய்யும் ஆவியானவரே
எங்கள் ஆராதனைக்குள்
இன்று வாசம் செய்கிறீர் (2)

அல்லேலூயா ஆராதனை (2)
ஆராதனை ஆராதனை ஆராதனை (2)

2. சீனாய் மலையில் வாசம் செய்தீர்
சீயோன் உச்சியிலும்
கன்மலை வெடிப்பில் வாசம் செய்தீர்
என்னில் நீர் வாசம் செய்யும்

3. நீதியின் சபையில் வாசம் செய்தீர்
நீர் மேல் அசைந்தீர்
துதிகளின் மத்தியில் வாசம் செய்தீர்
என்னில் நீர் வாசம் செய்யும்

4. பரிசுத்த ஸ்தலத்தில் வாசம் செய்தீர்
பலிபீட நெருப்பிலே
இல்லங்கள் தோரும் வாசம் செய்தீர்
உள்ளத்தில் வாசம் செய்யும்

5. மேல் வீட்டறையில் வாசம் செய்தீர்
மேகங்கள் நடுவில் நீர்
நித்திய உலகில் வாசம் செய்தீர்
என்னில் நீர் வாசம் செய்யும்

Tamil Hymns

248. ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்

ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்
ஆண்டவர் இயேசுவை ஆராதிப்பேன்

1. வல்லவரே உம்மை ஆராதிப்பேன்
நல்லவரே உம்மை ஆராதிப்பேன்

2. பரிசுத்த உள்ளத்தோடு ஆராதிப்பேன்
பணிந்து குனிந்து ஆராதிப்பேன்

3. ஆவியிலே உம்மை ஆராதிப்பேன்
உண்மையிலே உம்மை ஆராதிப்பேன்

4. தூதர்களோடு ஆராதிப்பேன்
ஸ்தோத்திர பலியோடு ஆராதிப்பேன்

5. காண்பவரை நான் ஆராதிப்பேன்
காப்பவரை நான் ஆராதிப்பேன்

6. வெண்ணாடை அணிந்து ஆராதிப்பேன்
குருத்தோலை ஏந்தி ஆராதிப்பேன்

249. ஆராதிப்பேன் ஆராதிப்பேன்

ஆராதிப்பேன் ஆராதிப்பேன் ஆராதிப்பேன்
ஆண்டவர் இயேசுவை நான் ஆராதிப்பேன் (2)

பரிசுத்த கரங்களை உயர்த்தி
புதிய பாடல் பாடி ஆராதிப்பேன்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா (2)

பாவங்கள் யாவையும் மன்னித்த ராஜனை - ஆராதிப்பேன்
பரிசுத்த ஆவியால் அபிஷேகம் செய்தவரை - ஆராதிப்பேன்
வல்லமை வரங்களை எனக்குத் தந்தவரை - ஆராதிப்பேன்
தேவைகள் தந்திடும் யேகோவாயீரை - ஆராதிப்பேன்
வெற்றியை தந்திடும் யேகோவாநிசியை - ஆராதிப்பேன்
ஆவியால் அனுதினம் நடத்திடும் மேய்ப்பரை - ஆராதிப்பேன்
சீக்கிரம் வரப்போகும் இயேசு ராஜாவை - ஆராதிப்பேன்

Tamil Hymns

250. ஆராதிப்பேன் நான் ஆத்ம மணாளன் என்

ஆராதிப்பேன் நான் ஆத்ம மணாளன் என்
ஆண்டவர் இயேசுவை அனுதினமே
ஆனந்த கீதத்தால் அவர் நாமம் போற்றியே
அனுதினம் ஸ்தோத்தரிப்பேன் என் இயேசுவை
என் இயேசுவை - (2)

1. தூத சேனை போற்றும் தூயாதி தூயனை
துதிகளின் மத்தியிலே வாசம்
செய்யும் நேசனை - ஜெபமதை
ஜெயமாக்கும் தேவாதி தேவனை (2)
தினம் தினம் ஸ்தோத்தரிப்பேன்
என் இயேசுவை - (2)

2. அல்லேலூயா என்று ஆவியில் நிறைந்து
அந்நிய பாஷையிலே அவரோடே பேசி
நன்மையால் என் வாழ்வை
நாள்தோறும் நடத்தும் (2)
நாதனை ஸ்தோத்தரிப்பேன்
என் இயேசுவை - (2)

Tamil Hymns

251. ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன் ஆனந்த

ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்
ஆனந்த சத்தத்தோடே ஆராதிப்பேன்
பரிசுத்த அலங்கார துதியுடனே
தேவனின் சந்நிதிக்கு வந்திடுவேன்

1. கல்வாரி மலையில் என் கடனை தீர்த்தார்
கன்மலையின் நீருற்றால் தாகம் தீர்த்தார்
பரிசுத்த ஆவியால் நிறைய செய்தீர் - ஆராதிப்பேன்

2. பாடி ஆடி ஆவியில் மகிழ்ந்திடுவேன்
பல பாஷை சொல்லி துதித்திடுவேன்
பக்தி யுக்தி என்னில் அடைந்திடவே - ஆராதிப்பேன்

3. ஆசையோடு தொழுதிடும் அடியவர்க்கு
ஆசீர் வாத மழை இன்று பொழியட்டுமே
ஆத்தும தோட்டம் செழிக்கட்டுமே - ஆராதிப்பேன்

4. அபிஷேகம் அருளிச் சுத்திகரியும்
ஆவியின் அக்கினியால் தீக் கொளுத்தும்
வேதத்தின் பொருளை விளங்கச் செய்யும் - ஆராதிப்பேன்

Tamil Hymns

252. ஆராதிப்பேன் நான் பாடல் பாடி ஆட்டம் ஆடி

1. ஆராதிப்பேன் நான் பாடல் பாடி ஆட்டம் ஆடி
இயேசுப்பா புகழ் பாடி என்னை மறப்பேன்
நான் நம்பும் நம்பிக்கையே
பாடுவேன் அல்லேலூயா
ஓசன்னா என்று சொல்லி ஆராதிப்பேம்

நீதியின் தேவனே வெற்றியின் தேவனே
என் பட்சமாக யுத்தம் செய்தீரே
நான் பாடிடும் தேவனே
நான் தேடிடும் தேவனே
என் பாடலுக்குச் சொந்தக்காரரே
பாடு அல்லேலு பாடு அல்லேலு
பாடு அல்லேலு அல்லேலூயா

2. குப்பைக்குள் கிடந்தேன்
நான் தூசியாக இருந்தேம்
இயேசப்பா கரம் நீட்டி தூக்கி விட்டீரே

3. துக்கத்தில் இருந்த போது
கலக்கத்தோடு நடந்த போது- அப்பா
உம் கைகள் என்னை தூக்கி வந்ததே

4. காலங்கள் கடந்து சென்று
நாட்கள் எல்லாம் மாறிட்ட - நீர் செய்த
நன்மையை நான் என்று நினைப்பேன்

Tamil Hymns

253. ஆராதிப்போம் இயேசுராஜனை

ஆராதிப்போம் இயேசுராஜனை
இராக்காலத்தில் நிற்கும் ஊழியரே
நம் கைகளை உயர்த்தியே நாம்
ஆராதிப்போம் இயேசுராஜனை

ருசித்துப்பார், இயேசு நல்லவர் (3)
ஆராதிப்போம் இயேசுராஜனை

தூக்கினாரே சேற்றினின்றே
நிறுத்தினாரே கன்மலைமேல்
புதுப்பாடலை எந்தன் நாவில் தந்தார்
துதி பாடுவேன், துதி பாடுவேன்

254. ஆராய்ந்து பாரும் கர்த்தரே

1. ஆராய்ந்து பாரும், கர்த்தரே
என் செய்கை யாவையும்
நீர் காணுமாறு காணவே
என்னில் பிரகாசியும்

2. ஆராயும் என்தன் உள்ளத்தை
நீர் சோதித்தறிவீர்!
என் அந்தரங்க பாவத்தை
மா தெளிவாக்குவீர்

3. ஆராயும் சுடரொளியால்
தூராசை தோன்றவும்;
மெய் மனஸ்தாபம் அதனால்
உண்டாக்கியருளும்

4. ஆராயும் சிந்தை, யோசனை,
எவ்வகை நோக்கமும்,
அசுத்த மனோபாவனை
உள்ளிந்திரியங்களும்

5. ஆராயும் மறைவிடத்தை
உம் தூயக் கண்ணினால்;
அரோசிப்பேன் என் பாவத்தை
உம பேரருளினால்

6. இவ்வாறு நீர் ஆராய்கையில்,
சாஷ்டாங்கம் பண்ணுவேன்;
உம் சரணார விந்தத்தில்
பணிந்து போற்றுவேன்

Tamil Hymns

255. ஆராரோ பாடுங்கள்

ஆராரோ பாடுங்கள் அகிலமெங்கும் கூறுங்கள்
ஆதவன் இயேசு பிறந்தாரென்று - 2
அல்லேலூயா பாடிடுங்கள் - 4

1. அன்னை மரியின் சின்னப் பிள்ளை
அன்பு பிதாவின் செல்லப்பிள்ளை
தீர்க்கர் வாக்கின் நிறைவே இயேசு
வழியும், சத்தியமும், ஜீவனும் இயேசு

2. முன்னணையில் தவழ்ந்த இரட்சகரே
எண்ணற்றோர் இதயத்தில் வாழ்பவரே
கண்மணிப்போல காப்பவரே
காலமெல்லாம் வாழும் நித்தியரும் நீரே

256. ஆரிரரோ சொல்லிப் பாடுங்கள்

ஆரிரரோ சொல்லிப் பாடுங்கள்
நம் தேவன் பிறந்ததால்
ஆரிரரோ சொல்லிப் பாடுங்கள்
இயேசு பாலன் பிறந்ததால்
ஆரிரரோ சொல்லிப் பாடுங்கள்
நம் தேவன் பிறந்ததால்

1. தீர்க்கன் உரைத்தது நடந்திடவே
நம் பாவம் யாவையும் போக்கிடவே
பூமியில் பாடுகள் அடைந்திடவே
நம் தேவப் பாலன் தோன்றினார் --- ஆரிரரோ

2. தேவனின் அன்பை நாம் உணர்ந்திடவே
நம் வாழ்வினைப் பரிசுத்தமாக்கிடவே
மண்ணுலகும் இதைப் புரிந்திடவே
நம் தேவப் பாலன் தோன்றினார் --- ஆரிரரோ

257. ஆரிரோ பாலகா

ஆரிரோ பாலகா
ஆரிரோ நாயகா
ஆரிரோ கண்மணி
என் இசை கேட்டு நீ தூங்காயோ

1. விண்ணில் தூதர் போற்ற மண்ணில் ஏழையாக
இயேசு ராஜன் பிறந்தார்
ஆதி வேதம் வார்த்தை ஜோதி உண்மையாக
பெத்லகேமில் பிறந்தார்
- ஆரிரோ

2. மாட்டுத் தொழுவினில் இயேசு பாலகனை
மேய்ப்பர் தண்டு பணிந்தார்
வேந்தர் மூவர் வந்து போற்றி புகழ் தந்து
தேவ பாதம் பணிந்தார்
- ஆரிரோ

3. பாவம் சாபம் எல்லாம் போக்க வந்த தேவன்
பாரில் வந்து பிறந்தார்
பாசமுள்ள தேவன் வல்லமையின் ராஜன்
மீட்க தன்னைக் கொடுத்தார்
- ஆரிரோ

Tamil Hymns

258. ஆரிவர் ஆராரோ கண்மணி

ஆரிவர் ஆராரோ கண்மணி அன்பே என் ராஜாவே (2)
பூபோல மேனி பொன் போல மின்ன
மாமன்னன் தூங்கட்டுமே (2)

1. உன்னையும் என்னையும் உருவாக்கியே
உலகாளும் இராஜா இவர்
சின்னக் குடிலில் கண் தூங்குகிறார்
என்ன இது விந்தையே (2)
- ஆரிவர்

2. வானதூதர் சொல் கேட்டு மேய்ப்பர்களும்
வந்தார் விரைந்தேகியே
உன்னத பாலன் புகழ் பாடியே
சென்றார் மகிழ்ந்தாடியே (2)
- ஆரிவர்

Tamil Hymns

259. ஆரோக்கியம் ஆரோக்கியம்

ஆரோக்கியம் ஆரோக்கியம்
அப்பாவின் சமூகத்தில் ஆரோக்கியம்

1. நீதியின் சூரியன் என் மேலே -அவர்
சிறகின் நிழலாலே ஆரோக்கியம்

2. கட்டுக்கள் அவிழ்க்கப்பட்ட கன்றுக்குட்டி
கொழுத்த கன்றுகளாய் வளருவோம்

3. துன்மார்க்க சாத்தானை மிதிப்போம்
காலின் கீழ் சாம்பலாய் எரிப்போம்

4. இயேசப்பா நோய்களை சுமந்ததால்-இனி
நாம் சுமக்க தேவையில்லை தேவையில்லை

5. பொறாமை அவதூறு அகற்றுவோம்
வஞ்சகம் வெளிவேடம் நீக்குவோம்

6. புதிதாய் பிறந்த குழந்தைகள் போல்
வார்த்தையாம் பாலின் மேல்
வாஞ்சையாம்

Tamil Hymns

260. ஆர் இவர் ஆராரோ

ஆர் இவர் ஆராரோ - இந்த
அவனியோர் மாதிடமே - ஆனடை குடிலிடை
மோனமாய் உதித்த இவ்வற்புத பாலகனார்

1. பாருருவாகுமுன்னே இருந்த
பரப் பொருள் தானிவரோ?
சீருடன் புவி, வான், அவை பொருள்
யாவையுஞ் சிருஷ்டித்த மாவலரோ?

2. மேசியா இவர்தானோ?
நம்மை மேய்த்திடும் நரர்கோனோ
ஆசையாய் மனிதருக்காய் மரித்திடும்
அதி அன்புள்ள மனசானோ?

3. தித்திக்கும் தீங்கனியோ?
நமது தேவனின் கண்மணியோ?
மெத்தவே உலகிருள் நீக்கிடும்
அதிசயமேவிய விண்ணொளியோ?

4. பட்டத்துத் துரைமகனோ?
நம்மைப் - பண்புடன் ஆள்பவனோ?
கட்டளை மீறிடும் யாவர்க்கும்
மன்னிப்புக் காட்டிடுந் தாயகனோ?

5. ஜீவனின் அப்பமோதான்?
தாகம் தீர்த்திடும்பானமோதான்?
ஆவலாய் ஏழைகள் அடைந்திடும்
அடைக்கல மானவர் இவர் தானோ?

Tamil Hymns

261. ஆர் இவர் ஆரோ ஆர் இவர் ஆரோ

ஆர் இவர் ஆரோ ஆர் இவர் ஆரோ
ஆர் இவர் பரன் வார்த்தை மாமிசம்
ஆயினர் இவரோ

1. ஈர் ஐந்து குணம் இல்லாதோர் போலே
பாரினில் ஓர் எளிய கன்னிகையின்
பாலர் ஆனாரோ

2. ஊரில் ஓர் இடமும் உகந்திட இல்லையோ
சீர் அல்லாக் குடியிற் பிறந்தார் அதி
சயம் ஆனவரோ

3. கர்த்தத்துவமோ காணாது தோள் மேல்
சுற்றிவைக்கப் பழந்துணியோ இவர்
தூங்கப்புல் அணையோ

4. சேனைதூதர் இதோ சிறப்புடன் பாட
கானகக் கோனர் காணவர இவர்
கர்த்தர் ஆவாரோ

262. ஆர்ப்பரிப்போம் நல்

ஆர்ப்பரிப்போம் நல் ஆண்டிலே
ஆற்புதமாய் ஈந்த ஆண்டிலே
அன்பரின் அன்பை எண்ணி பாடுவோம்
ஆவிக்குள்ளாக என்றும் மகிழ்வோம்

1. கர்த்தர் நல்லவர் என ருசித்தேன்
கர்த்தரே என்றும் போதுமானவர்
ஒரு நன்மையும் குறையின்றியே
ஒப்பற்ற நேசரென்னைக் காத்திட்டார் - ஆர்ப்பரிப்போம்

2. வந்த வனாந்திர வழியெல்லாம்
வாக்குத்தத் தத்தால் என்னைத் தேற்றினார்
ஆராயமுடியாத பாதையில்
ஆச்சரியமாகவே நடத்தினார் - ஆர்ப்பரிப்போம்

3. தந்தை மைந்தனை சுமந்தது போல்
தாங்கி சுமந்தாரே தோளின் மீதே
எந்தன் கேடகம் அரண் அவரே
எந்தன் அடைக்கலமும் அவரே - ஆர்ப்பரிப்போம்

4. ஆசீர்வாதமான ஆண்டதிலே
ஆசீர்வதித்து என்னை அனுப்பும்
அதிசயமாம் உம் கிருபையை
அடிமையில் விளங்கச் செய்யுமே - ஆர்ப்பரிப்போம்

5. பூரணமாய் உம் சித்தம் செய்திட
பூவில் அர்ப்பணித்தேனே என்னையும்
களிப்புடனே ஓட்டம் ஓடியே
கண்டிடுவேன் நேசர் இயேசுவை - ஆர்ப்பரிப்போம்

Tamil Hymns

263. ஆவலாய் இருக்கின்றார் கருணைகாட்ட

ஆவலாய் இருக்கின்றார் கருணைகாட்ட
அன்பு கரம் அசைத்து ஓடி வருகின்றார்
நீதி செய்பவர் இரக்கம் உள்ளவர்
மனதுருகும்படி காத்திருப்பவர்

1. சீயோன் மக்களே எருசலேம் குடிகளே
இனி ஒருபோதும் அழமாட்டீர்கள்
கூப்பிடும் குரலுக்கு செவிசாய்க்கின்றார்
கேட்ட உடனேயே பதில் தருகின்றார்

2. இன்னல்கள் துன்பங்கள் மிகுந்த உலகிலே
உன்னதர் வாக்களித்த வார்த்தை உண்டு
எண்ணி முடியாத அதிசயங்கள்
கண்களால் காண்பீர்கள் அதிசீக்கிரத்தில்

3. வலப்புறம் இடப்புறம் சாய்ந்து போனாலும்
வழிதவறி நாம் நடந்து சென்றாலும்
இதுதான் வழி இதிலே நடந்து செல்லுங்கள்
என்ற சப்தம் நம் இதயத்தில் ஒலிக்கும்

264. ஆவி உடல் பொருள் அத்தனையும்

ஆவி உடல் பொருள் அத்தனையும்
உமக்காக படைக்கிறேன் ஆண்டவரே
பாவி என்னை மீட்க பரலோகத்தை விட்டு
பாரினில் வந்து மா பாடுகள் பட்டதால்

1. பாவத்தை தண்ணீர் போல் பருகி வந்தேன்
கோபத்திற்காளாய் கெட்டழிந்தேன்
சாபத்திற்காளாய் சஞ்சரித்தேன்
என் சாபத்தை ஏற்றுக்கொண்டீரே என் நாதா

2. பங்க குருசில் படுத்தீர் அன்றோ
தங்க திருமேனி தவித்ததன்றோ
தாங்கொண்ணா வேதனை சகித்தீரன்றோ
எங்குதியன் ஆவி ஆப்பாடு நினைக்கையில்

3. பிள்ளையை போல் என்னை தாழ்த்துகிறேன்
கள்ளமெல்லாமுமே தள்ளுகிறேன்
உள்ளத்தை உம்முன்னே ஊற்றுகிறேன்
தள்ளாதென்னை ஏற்றுக் கொள்ளுமே என் நாதா

Tamil Hymns

265. ஆவி அனலுள்ளதாய் அவியாமல்

ஆவி அனலுள்ளதாய்
அவியாமல் பாதுகாப்பாய் (2)

அனலுமில்லாமல் குளிருமில்லாமல்
ஜவிப்பது பரிதாபம் (2)
(ஆவி அனலுள்ளதாய்.......)
கர்;த்தரின் நாள் சமீபம்

மிகக் கருத்துடன் ஜPவிப்பாயே (2)
நிர்பந்த நாட்கள் வரும்
நியாயத் தீர்ப்பின் நாள் நெருங்குதே (2)

(ஆவி அனலுள்ளதாய்.......)
வருகையின் அடையாளங்கள்

வெகு விரைவாக நிறைவேறுதே (2)
வானத்தின் அதிசயங்கள்
காலம் கூறுதே கண்டிடுவாய் (2)
(ஆவி அனலுள்ளதாய்.......)

266. ஆவியான எங்கள் அன்பு தெய்வமே

ஆவியான எங்கள் அன்பு தெய்வமே
அடியோரை ஆட்கொண்டு நடத்துமே

ஆட்கொண்டு எங்களை அனலாக்கும்
அன்பினால் இன்று அலங்கரியும்..

1. ஜெபிக்க வைக்கும் எங்கள் ஜெபவீரனே
துதிக்கத் தூண்டும் துணையாளரே
சாத்தானின் சகல தந்திரங்களை
தகர்த்தெறிய வாரும் ஐயா

2. சாவுக்கேதுவான எங்கள் சரீரங்களை
உயிர்பெறச் செய்பவரே
சரீரங்களின் தீய செயல்களையே
சாகடிக்க வாருமையா

3. பெலன் இல்லாத நேரங்களில்
உதவிடும் துணையாளரே
சொல்லொண்ணா பெருமூச்சோடு
ஜெபித்திட வாருமையா

4. மனதை புதிதாக்கும் மன்னவனே
மறுரூபமாக்குமையா
ராஜாவின் இரண்டாம் வருகைக்காக
எந்நாளும் ஏங்கச் செய்யும் - இயேசு

5. தேவாதி தேவனின் ஆழங்களை
ஆராய்ந்து அறிபவரே
அப்பாவின் திருச்சித்தம் வெளிப்படுத்தி
எப்போதும் நடத்தும் ஐயா

6. பாவம் நீதி நியாயத்தீர்ப்பை
கண்டித்து உணர்த்தும் ஐயா
பரிபூரண உம் சத்தியத்திற்குள்
பக்தர்களை நடத்தும் ஐயா

Tamil Hymns

267. ஆவியானவரே அன்பின் ஆவியானவரே

ஆவியானவரே அன்பின் ஆவியானவரே
இப்போ வாரும் இறங்கி வாரும்
எங்கள் மத்தியிலே

1. உளையான சேற்றினின்று
தூக்கி எடுத்தவரே
பாவம் கழுவி தூய்மையாக்கும்
இந்த வேளையிலே

2. பத்மு தீவினிலே
பக்தனை தேற்றிநீரே
என்னையும் தேற்றி ஆற்ற வாரும்
இந்த வேளையிலே

3. சீனாய் மலையினிலே
இறங்கி வந்தவரே
ஆத்மா தாகம் தீர்க்க வாரும்
இந்த வேளையிலே

4. நேசரின் மார்பினிலே
இனிதாய் சாய்ந்திடவே
ஏக்கமுற்றேன் விரும்பி வந்தேன்
உந்தன் பாதத்தில்

5. ஆவியின் வரங்களினால்
என்னையும் நிரப்பிடுமே - எழுந்து
ஜொலிக்க எண்ணெய் ஊற்றும்
இந்த வேளையிலே

Tamil Hymns

268. ஆவியானவரே அன்பு நேசரே

ஆவியானவரே அன்பு நேசரே
ஆட்கொண்டு நடத்துமையா

1. உந்தன் பாதைகள் அறிந்திடச் செய்யும்
உம் வழிகள் கற்றுத் தாரும்
உந்தன் வார்த்தையின் வெளிச்சத்திலே
தினந்தினம் நடத்துமையா

2. கண்ணின்மனி போல காத்தருளும்
கழுகு போல சுமந்தருளும்
உந்தன் சிறகுகள் நிழல்தனிலே
எந்நாளும் மூடிக் கொள்ளும்

3. வெயில் நேரத்தில் குளிர் நிழலே
புயல்காற்றில் புகலிடமே
கடுமழையில் காப்பகமே
நான் தங்கும் கூடாரமே

4. நியாயத் தீர்ப்பின் ஆவியானவரே
சுட்டெரிக்கும் ஆவியானவரே
பாவம் கழுவி தூய்மையாக்கும்
பரிசுத்த ஆவியானவரே

5. வியத்தகு உம் பேரன்பை
எனக்கு விளங்கப்பண்ணும்
என் இதயம் ஆய்ந்தறியும்
புடமிட்டு பரிசோதியும்

269. ஆவியானவரே அனலாய் இறங்கிடுமே

ஆவியானவரே அனலாய் இறங்கிடுமே
எல்லா ஆவியின் வரங்களோடு
பலமாய் இங்கு இறங்கும் இன்று

1. வானங்கள் இன்று திறக்கட்டுமே
அபிஷேக மழையே பெய்யட்டுமே
உன்தை ஆவியை ஊற்றிடுமே
மறுரூபமாய் என்னை மாற்றிடுமே

2. பெந்தெகொஸ்தே நாளின் அனுவங்கள்
அப்படியே இன்று நடக்கட்டுமே
பலத்த காற்றின் முழுக்கம்போல் - ஒரு
வல்லமை இங்கு வீசட்டுமே

3. அக்கினி மயமான நாவுகள்
எங்கள் மேல் வந்து அமரட்டுமே
ஆவியின் வரங்கள் யாவையுமே
வெளிப்படுத்தணுமே செயல்படுத்தணுமே

4. கண்ணீர் கவலைகள் மறையணுமே
கட்டுகள் யாவும் உடையணுமே
அற்புதம் அதிசயம் நடக்கணுமே - நீர்
யார் என்று ஜனம் அறியணுமே

5. பெலத்தின் ஆவியால் நிரம்பணுமே
சாட்சிகளாய் எங்கும் வாழணுமே
எங்கள் சித்தம் மறையணுமே
தேவ சித்தம் நிறைவேறணுமே

Tamil Hymns

270. ஆவியானவரே ஆவியானவரே பரிசுத்த

ஆவியானவரே ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
அன்பின் ஆவியே, அன்பின் ஆவியே
அபிஷேகம் இன்று தாருமே

1. பாத்திரம் நிரம்பி வழிய வேண்டுமே
கன்மலை தடாகமாக வேண்டுமே
கற்பாறை நீரூற்றாக வேண்டுமே
வரப்புகள் யாவும் தணிய வேண்டுமே

2. ஜனத்தின் மேல் அசைவாட வேண்டுமே
ஜனத்தின் பாவம் உணர்த்த வேண்டுமே
ஒழுங்கின்மை மாற வேண்டுமே
வெறுமை நிறைவாக வேண்டுமே

3. உள்ளத்தில் ஆறுதல் வேண்டுமே
வாழ்விலே மாறுதல் வேண்டுமே
ஊழியத்தில் எழுப்புதல் வேண்டுமே
பாழிடங்கள் அரண்மனையாகவே

4. நாவிலே அக்கினி வேண்டுமே
உள்ளத்தி ஜீவநதி ஓடவே
பெருங்காற்று முழக்கம் வேண்டுமே
இருக்கும் இடம் அசைய வேண்டுமே

5. வல்லமை வரங்கள் வேண்டுமே
சொல்லவும் வாக்குகள் வேண்டுமே
கள்ளங்கபடு மாற வேண்டுமே
உள்ளத்தில் தேவ அன்பு வேண்டுமே

6. அந்நிய பாஷைகள் பேசியே
மண்ணிலே சாட்சியாய் வாழவே
விண்ணிலே உம்மை நான் சந்திக்க
புண்ணியரே என்னையும் நிரப்புமே

Tamil Hymns

271. ஆவியானவரே உம்மை வாஞ்சிக்கிறேன்

ஆவியானவரே உம்மை வாஞ்சிக்கிறேன்
மகிமையின் பிரசன்னம் நிறைவாய்
இறங்கட்டும் இந்த வேளையிலே

1. ஆவியிலே களிகூறவே என்றென்றும் விரும்புகிறேன்
வாஞ்சிக்கிறேன் எந்நாளுமே உந்தன் சமூகத்தையே
நேசர் முகம் காண்கையிலே ஆவியில் நிரம்புகிறேன்
பாடி உம்மை துதிக்கையில் பரவசம் கொள்கிறேன்

2. தாவீது போல் மகிழ்ந்திடவே சமூகம் வேண்டுகிறேன்
ஆடிப்பாடி துதித்திடவே விடுதலை ஈந்திட்டீரெ
உன்னதத்தில் உதவிடுமே ஆவிக்குள்ளாய்
அனுதினமும் அனல் போல் மாற்றிடுமே

3. மேல் வீட்டறை அனுபவத்தை என்றென்றும் தந்திடுமே
ஆவிமழை கரை புரள தேசத்தை சந்தியுமே அஸ்திபாரம்
அசைந்திடவே எழுப்பிடும் சபையோரை எழுப்புதலால்
புது உள்ளங்கள் உயிர்ப்பிக்க செய்திடுமே

Tamil Hymns

272. ஆவியானவர் அச்சாரமாய் எனக்குள்

1. ஆவியானவர் அச்சாரமாய்
எனக்குள் இருக்கின்றார் - 2
வழுவாமலே என்னை காத்திடுவார்
என்றும் நடத்திடுவார் - 2

2. ஆவியானவர் பிரசன்னத்தால்
கரைகள் நீங்கிற்றே
தம் பெலத்தால் என்னை நிறைதிடுவார்
பாதை காட்டுவார்

3. ஆவியானவர் தேற்றிடுவார்
அனுதினம் போதிப்பார்
பரிசுதமை என்னை வனைந்திடுவார்
கனிகள் தந்திடுவார்

Tamil Hymns

273. ஆவியை அருளுமே சுவாமீ

ஆவியை அருளுமே சுவாமீ- எனக்
காயுர் கொடுத்த வானத்தினரசே

1. நற்கனி தேடிவருங் காலங்களல்லவோ
நானொரு கனியற்ற பாழ்மர மல்லவோ
முற்கனி முகங்காணா வெம்பயி ரல்லவோ
முழுநெஞ்சம் விளைவற்ற உவர்நில மல்லவோ

2. பாவிக்கு ஆவியின் கனியெனுஞ் சிநேகம்,
பரம சந்தோஷம் நீடிய சாந்தம்
தேவ சமாதானம், நற்குணம், தயவு,
திட விசுவாசம் சிறிதெனுமில்லை

3. தீபத்துக் கெண்ணையைச் சீக்கிரம் ஊற்றும்;
திரி யவியாமலே தீண்டியே யேற்றும்
பாவ அசூசங்கள் விலக்கியே மாற்றும்
பரிசுத்தவரந் தந்தென் குறைகளைத் தீரும்

274. ஆவியை மழைபோலே யூற்றும்

ஆவியை மழைபோலே யூற்றும் - பல
ஜாதிகளை யேசு மந்தையிற் கூட்டும்
பாவிக்காய் ஜீவனை விட்ட கிறிஸ்தே
பரிந்து நீர் பேசியே இறங்கிடச் செய்யும்

1. அன்பினாலே ஜீவனை விட்டீர் - ஆவி
அருள்மாரி பொழியவே பரலோகஞ் சென்றீர்
இன்பப் பெருக்கிலே பொங்கி மகிழ
ஏராளமான ஜனங்களைச் சேரும்

2. சிதறுண்டலைகிற ஆட்டைப் - பின்னும்
தேடிப் பிடித்து நீர் தூக்கிச் சுமந்து
பதறாதே நான்தான் உன் நல்மேய்ப்பன் யேசு
பாக்கியரென்னும் நல் வாக்கையருளும்

3. காத்திருந்த பலபேரும் - மனங்
கடினங்கொள்ளா முன்னே உம் பாதஞ் சேரும்
தோத்திரக் கீதங்கள் பாடிப் புகழ்ந்து
சுத்தலோகம் வரத் தூயாவி ஊற்றும்

4. தோத்திர கீதங்கள் பாடி - எங்கும்
சுவிசேஷ ஜெயத்தையே நிதம் நிதம் தேடிப்
பாத்திரராக அநேகரெழும்பப்
பரிசுத்த ஆவியின் அருள்மாரி ஊற்றும்

Tamil Hymns

275. ஆவியோடும் உண்மையோடும் ஆண்டவரை

ஆவியோடும் உண்மையோடும்
ஆண்டவரை தொழுதிடுவோம்
பரிசுத்த அலங்காரத்துடனே நாமும்
பரிசுத்தரை தொழுவோமே

1. நடுக்கத்தோடும் பயபக்தியோடும்
கர்த்தரில் களிகூறுவோம்
பனிந்து குனிந்து தலைகள் தாழ்த்தி
பாதம் பணிந்திடுவோம் - அவர்
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே
பரிசுத்தரிடம் பாவமில்லையே - அவர்
பரிசுத்தம் எல்லையில்லையே

2. ஆர்வத்தோடும் ஆனந்தத்தோடும்
சந்நிதி வாருங்களே
கர்த்தரே தேவன் மகாராஜன்
என்றே சொல்லுங்களே-அவர்
வாசலில் துதியோடும் புகழ்ச்சியோடும்
வந்து கீர்த்தனம் பண்ணுங்களே -துதி
பலிகளை செலுத்துங்களே

3. உதட்டிலல்ல உள்ளத்திலிருந்து
ஸ்தோத்திர பலியிடுவோம்
ஒன்று கூடி ஒருமனமாய்
பாடி புகழ்ந்திடுவோம்-அவரே
தேவன் நாம் அவர் ஆடுகளே
அவர் சத்தியம் மேய்ந்திடுவோம்-அதில்
என்றென்றும் நிலைத்திருப்போம்

276. ஆழ்ந்த சேற்றினில் அகப்பட்ட

ஆழ்ந்த சேற்றினில் அகப்பட்ட நம்மை
அணைத்து எடுத்தாரே - இயேசு
அலை கடல் நடுவே தவிக்கின்ற நமக்கு
ஆறுதல் அளிப்பாரே - இயேசு

1. பாவங்கள் போக்கி ரோகங்கள் நீக்கி
கோபத்தை கலைத்தாரே இயேசு கோபத்தை கலைத்தாரே
காவியம் போற்றும் ஆவியும் ஜீவனும் ஆகமம் ஆனாரே
இயேசு ஆகமம் ஆனாரே

2. கல்லறை திறந்திட காவலர் நடுங்கிட
கட்டுகள் அறுத்தாரே இயேசு கட்டுகள் அறுத்தாரே
கல்வாரி பாதையில் பார சிலுவையை நொந்து சுமந்தாரே
இயேசு நமக்கென பிறந்தாரே

3. பூவினில் வந்த தேவனை துதித்தால் தீவினை அகன்றிடுமே
பாலகன் இயேசுவின் நாமத்தினில் ஜெபித்தால்
பாசம் வளர்ந்திடுமே நல்ல பாசம் பாசம் வளர்ந்திடுமே

277. ஆளுகை செய்பவரே அபிஷேகம் தருபவரே

ஆளுகை செய்பவரே அபிஷேகம் தருபவரே
ஆராதனை உமக்கே ஆராதனை

ஆராதனை ஆராதனை (2)

1. அழகிலே சிறந்தவரே ஆராதனை
அன்பின் பிறப்பிடமே ஆராதனை

2. வாழ்க்கையின் ஆதாரமே ஆராதனை
வாழ்வெல்லாம் காப்பவரே ஆராதனை

3. ஏக்கங்கள் தீர்ப்பவரே ஆராதனை
எல்லாம் தருபவரே ஆராதனை

4. தாய்போல அணைப்பவரே
தகப்பனாய் சுமப்பவரே ஆராதனை

278. ஆளுகை செய்யும் ஆவியானவரே

ஆளுகை செய்யும் ஆவியானவரே
பலியாய் தந்தேன் பரிசுத்தமானவரே
ஆவியானவரே - என் ஆற்றலானவரே

1. நினைவெல்லாம் உமதாகணும்
பேச்செல்லாம் உமதாகணும்
நாள் முழுதும் வழிநடத்தும்
உம் விருப்பம் செயல்படுத்தும்

2. அதிசயம் செய்பவரே
ஆறுதல் நாயகனே
காயம் கட்டும் கர்த்தாவே
கண்ணீரெல்லாம் துடைப்பவரே - என்

3. புதிதாக்கும் பரிசுத்தரே
புதுப்படைப்பாய் மாற்றுமையா
ஊடைத்துவிடும் உருமாற்றும்
பண்படுத்தும் பயன்படுத்தும்

4. அப்பாவை அறிந்திடணும்
வெளிப்பாடு தாருமையா
மனக்கண்கள் ஒளிபெறணும்
மகிமையின் அச்சாரமே

5. என் இதய பலகையிலே
எழுதிடும் உம் வார்த்தை
மையாலல்ல உம் ஆவியாலே
எழுதிடுமே ஏங்குகின்றேன்

6. உள்ளான மனிதனை
வல்லமையாய் பலப்;படுத்தும்
அன்பு ஒன்றே ஆணிவேராய்
அடித்தளமாய் அமைந்திடணும்

7. அரண்களை தகர்த்தெறியும் - என்
அன்பின் வல்லவரே
எதிரான எண்ணங்களை
கீழ்படுத்தும் சிறைபடுத்தும்
8. சங்கீதம் கீர்த்தனையால்
பிறரோடு பேசணுமே

Tamil Hymns

எந்நேரமும் எப்போதுமே
நன்றிப் பலி செலுத்தணுமே

9. போர் செய்யும் ஆயதமாய்
உம் வசனம் தாருமையா
எல்லாவித ஜெபத்தோடு
ஆவியிலே மன்றாடணும்

9. என் இதய பலகையிலே
எழுதிடும் உம் வார்த்தை
மையாலல்ல உம் ஆவியாலே
எழுதிடுமே ஏங்குகின்றேன்

10. கிறிஸ்துவின் அன்பின் ஆழம்
அகலம் அயரம் உணரணுமே
நினைப்பதற்கும் ஜெபிப்பதற்கும்
அதிகமாய் செய்பவரே

279. ஆறுதலின் தெய்வமே உம்முடைய

ஆறுதலின் தெய்வமே உம்முடைய திருச்சமூகம்
எவ்வளவு இன்பமானது

1. ஆத்துமா தேவனே உம்மையே நோக்கி
ஆர்வமுடன் கதறுகின்றன
உள்ளமும் உடலும் ஒவ்வொருநாளும்
கெம்பீரித்து சத்தமிடுது - ஆமென்

2. உம்முடைய சந்நிதியில் தங்கியிருப்போர்
உண்மையிலே பாக்கியவான்கள்
தூய மனதுடன் துதிப்பார்கள்
துதித்துக் கொண்டிருப்பார்கள் - ஆமென்

3. உம்மிலே பெலன் கொள்ளும் மனிதர்களெல்லாம்
உண்மையிலே பாக்கியவான்கள்
ஓடினாலும் களைப்படையார்
நடந்தாலும் சோர்வடையார் - ஆமென்

4. கண்ணீரின் பாதையில் நடக்கும் போதெல்லாம்
களிப்பான் நீரூற்றாய் மாற்றிக் கொள்வார்கள்
வல்லமைமேலே வல்லமைகொண்டு
சீயோனைக் காண்பார்கள் - ஆமென்

5. வேறிடத்தில் ஆயிரம் நாள் வாழ்வதைவிட
உம்மிடத்தில் ஒரு நாள் மேலானது
ஒவ்வொரு நாளும் உமது இல்லத்தின்
வாசலில் காத்திருப்பேன் - ஆமென்

Tamil Hymns

280. ஆறுதலின் மகனாம்

1. ஆறுதலின் மகனாம்
என்னும் நாமம் பெற்றோனாம்
பக்தன் செய்கை, வாக்கிலே
திவ்விய ஒளி வீசிற்றே

2. தெய்வ அருள் பெற்றவன்
மா சந்தோசம் கொண்டனன்
வார்த்தை கேட்ட நேகரும்
சேர்ந்தார் கர்த்தர் அண்டையும்

3. பவுல் பர்னபாவையும்
ஊழியத்திற்கழைத்தும்
வல்ல ஞான வரத்தை
ஈந்தீர் தூய ஆவியை

4. கிறிஸ்து வலப் பக்கமாய்
நாங்களும் மாசற்றோராய்
நிற்க எங்கள் நெஞ்சையும்
தேவரீரே நிரப்பும்

281. ஆனந்த கீதங்கள்

ஆனந்த கீதங்கள் எந்நாளும் பாடி
ஆண்டவர் இயேசுவை வாழ்த்திடுவோம்

1. புதுமை பாலன் திரு மனுவேலன்
வறுமை கோலம் எடுத்தவதரித்தார்
முன்னுரைப்படியே முன்னணை மீதே
மன்னுயிர் மீட்கவே பிறந்தாரே

2. மகிமை தேவன் மகத்துவராஜன்
அடிமை ரூபம் தரித்திகலோகம்
தூதரும் பாட மேய்ப்பரும் போற்ற
துதிக்குப் பாத்திரன் பிறந்தாரே

3. மனதின் பாரம் யாவையும் நீக்கி
மரண பயமும் புறம்பே தள்ளி
மா சமாதானம் மா தேவ அன்பும்
மாறா விஸ்வாசமும் அளித்தாரே

4. அருமை இயேசுவின் திருநாமம்
இனிமை தங்கும் இன்னல்கள் நீக்கும்
கொடுமை பேயின் பெலன் ஒடுக்கும்
வலிமை வாய்ந்திடும் நாமமிதே

5. கருணை பொங்க திருவருள் தங்க
கிருபை பொழிய ஆர்ப்பரிப்போமே
எம்முள்ளம் இயேசு பிறந்த பாக்கியம்
எண்ணியே பாடிக் கொண்டாடுவோம்

Tamil Hymns

282. ஆனந்த கீதங்கள் பாடுங்கள் வாழ்த்துங்கள்

ஆனந்த கீதங்கள் பாடுங்கள் வாழ்த்துங்கள்
ஆண்டவர் பாலனாய் மண்ணிலே தோன்றினார்
ஆதாம் செய் பாவங்கள் சாபங்கள் நீக்கவே
அன்னையின் மைந்தனாய் - தாழ்மையாய் - தோன்றினார்
ஆனந்த கீதங்கள்

1. மேலோக தூதர்கள் பாட
பூலோக மாந்தர்கள் போற்ற
தாலேலோ கீதம் எங்கும் கேட்குதே (2)
வானாதி வானங்களே
களிகூர்ந்து பாடிடுங்கள்
விண்ணில் நல்லாட்சி தோன்ற
மண்வீழ்ச்சி காண வந்தார்

2. சர்ப்பத்தின் தலையை நசுக்க
சந்தோஷம் எங்கும் பெருக
சாந்த குமாரன் இயேசு தோன்றினார்
சாலேமின் ராஜனிவர்
மகிழ்ந்து கண் தூங்கிடவே
ஜீவனோர் தொட்டில் இல்லை
மாடடையும் கொட்டில் உண்டு

Tamil Hymns

283. ஆனந்த துதி ஒலி கேட்கும்

ஆனந்த துதி ஒலி கேட்கும்
ஆடல் பாடல் சத்தமும் தொனிக்கும்
ஆகாய விண்மீனாய் அவர் ஜனம் பெருகும்
ஆண்டவர் வாக்கு பலிக்கும் --- ஆ... ஆ...

1. மகிமைப்படுத்து வேனென்றாரே
மகிபனின் பாசம் பெரிதே
மங்காத புகழுடன் வாழ்வோம்
மாட்சி பெற்றுயர்ந்திடுவோமே
குறுகிட மாட்டோம் குன்றிட மாட்டோம்
கரையில்லா தேவனின் வாக்கு --- ஆ... ஆ...(2)

2. ஆதி நிலை எகுவோமே
ஆசீர் திரும்பப் பெறுவோம்
பாழான மண்மேடுகள் யாவும்
பாராளும் வேந்தன் மனையாகும்
சிறை வாழ்வு மறையும் சீர் வாழ்வு மலரும்
சீயோனின் மகிமை திரும்பும் --- ஆ... ஆ...(2)

3. யாக்கோபு நடுங்கிடுவானோ
யாக்கோபின் தேவன் துணையே
அமரிக்கை வாழ்வை அழைப்போம்
ஆண்டவர் மார்பில் சுகிப்போம்
பதறாத வாழ்வும் சிதறாத மனமும்
பரிசாக தேவனருள்வார் --- ஆ... ஆ... (2)

4. ஆறாத காயங்கள் ஆறும்
ஆரோக்கியம் வாழ்வினில் மூடும்
ஆற்றியே தேற்றும் நல்நாதர்
போற்றியே பாதம் பணிவோம்
அனாதி தேவனே அடைக்கலம் பாரினில்
அனாதையாவதே இல்லை ஆ... ஆ...(2)

5. பார்போற்றும் தேவன் நம் தேவன்
பாரினில் வேறில்லை பாக்கியம்
நீர் எந்தன் ஜனங்கள் என்றாரே
வேறென்ன வாழ்வினில் வேண்டும்
பிள்ளைகளும் சபையும் ஆ... ஆ... (2)
பிதாமுன்னே நிலைக்கும்
பரிசுத்த மாளிகை எழும்பும்

Tamil Hymns

6. விடுதலை முழங்கிடுவோமே
விக்கினம் யாவும் அகலும்
இடுக்கண்கள் சூழ்ந்திடும் வேளை
இரட்சகன் மீட்பருள்வாரே
நுகங்கள் முறிந்திடும் கட்டுகள் அறுந்திடும்
விடுதலை பெருவிழா காண்போம் --- ஆ... ஆ... (2)

Tamil Hymns

284. ஆனந்தபாடல்கள் பாடிடுவேன்

ஆனந்தபாடல்கள் பாடிடுவேன்
எந்தன் ஆத்தும நேசரைப் புகழ்ந்துடுவேன்
அலைச்சல்கள் யாவையும் அகல செய்தே-நல்ல
மேய்சலில் எந்தனை மகிழச் செய்தார்

1. மேலோக நாடேந்தன் சொந்தமிதே - இந்த
பூலோக நாட்டமும் குறைகின்றதே
மாலையில் மனமினி வைத்திடாமல்
நேச காயமதை எண்ணி வாழ்ந்திடுவேன்

2. நம்பிக்கை அற்றோனாய் அலைந்த வேளை
இயேசுநாதர் என்பக்கமாய் வந்தனரே
பாவங்கள் பாரங்கள் பறக்கச் செய்தே
பாரினில் வெற்றி என்னை சிறக்கச் செய்தார்

3. அற்புதமாம் அவர் நேசமது
எந்தன் பொற்பரன் சேவையின் பாக்யமது
பற்பல கிருபைகள் பகருகின்றார்
ஏழை கற்புடன் அவர் பணி செய்திடவே

4. பரம தேசம் கண்ணில் தெரிகிறதே
அங்கு தூதரின் தொனி காதில் கேட்கின்றதே-2
காலம் இனி இல்லை உணர்ந்திடுவோம்
விரைவாக நம் ஓட்டத்தில் ஓடிடுவோம்

5. அழைத்தவரே அவர் உண்மையுள்ளோர்
தம் அழைப்பதில் விழிப்புடன் நிறுத்த வல்லோர்
உழைத்திடுவோம் மிக ஊக்கமுடன்
அங்கு பிழைத்திடவே அன்பர் சமூகமதில்

6. ஜெபமதை கேட்டிடும் ஜீவனுள்ள தேவன்
என் பிதா ஆனதால் ஆனந்தமே
ஏறெடுப்போம் நம் இதயமதை
என்றும் மாறாமல் பதில் தரும் மன்னனிடம்

Tamil Hymns

285. ஆனந்த பாடல்கள் பாடிடுவேன் ஆர்ப்பரித்து

ஆனந்த பாடல்கள் பாடிடுவேன்
ஆர்ப்பரித்து என்றும் மகிழ்ந்திடுவேன்
அல்லேலூயா (3) என்று பாடிடுவேன்

1. ஆண்டவர் செய்த அற்புதங்கள்
அற்புதம் அற்புதம் அற்புதமே
குருடர் கண்களைத திறந்தாரே
செவிடர் கேட்கச் செய்தாரே
என்னையும் இரட்சித்தாரே
என் வாழ்வில் அற்புதமே

2. பாவச் சேற்றில் வாழ்ந்த என்னை
தூக்கி எடுத்து கழுவினாரே
கரத்தை பிடித்துக் கொண்டாரே
கரத்தால் தாங்குவேன் என்றாரே
புது சிருஷ்டியாய் மாற்றினாரே
என் வாழ்வில் அற்புதமே

3. வானாதி வானங்கள் கொள்ளாத
வல்லவர் வாழ்வினில் வந்தாரே
வாசற்படியில் தட்டினாரே
இதயத்தில் வாசம் செய்திடவே
என்னுடன் ஜீவிக்கின்றார்
என் வாழ்வில் அற்புதமே

286. ஆனந்த மகிழ்ச்சி அப்பா சமூகத்தில்

ஆனந்த மகிழ்ச்சி அப்பா சமூகத்தில்
எப்போதும் இருக்கையிலே
நெஞ்சே நீ ஏன் கலங்குகிறாய்
ஏன் ஏன் நீ புலம்புகிறாய் - 2

1. கர்த்தரை நம்பும் ஒருவன் மேலும்
குற்றம் சுமராது
காத்திடுவார் உயர்த்திடுவார்
காத்து நடத்திடுவார்

2. தெரிந்து கொண்டாரே தாசன் நீ தான்
சிநேகிதனும் நீ தான்
அழைத்த தெய்வம் ஆகாதவன் என்று
தள்ளி விட மாட்டார்

3. கைகள் நீட்டு கோலை உயர்த்து
கடலைப் பிரித்து விடு - உன்
காய்ந்த தரையில் நடந்து போவாய்
எதிரி காணமாட்டாய்

4. உனக்கு முன்னே அவர் சமூகம் செல்லும்
கோணல்கள் நேராகும்
வெண்கல இரும்பு கதவுகள் உடையும்
புதையல் உனதாகும்-2
இந்த தேசம் உனதாகும்

5. அஞ்சவே மாட்டேன் கர்த்தர் என் சகாயர்
என்று நீ அறிக்கையிடு
மனிதர் எனக்கு என்ன செய்ய முடியும்
என்று தினம் கூறு

Tamil Hymns

287. ஆனந்த மழையில் என் இதயம் நனைய

ஆனந்த மழையில் என் இதயம் நனைய
தூய நல் ஆவியே என்னில் வருக

தோல்வியால் துவண்டு விழுந்தேன்
நான் செய்த பாவத்தால் அமைதி இழந்தேன்

புதுக்கோலம் நான் பூணவே
இனி நாளும் இறையாட்சி எனை ஆளவே
உன்னதத்தின் ஆவி என்னகத்தையே
தோல்வி என மாற்றி துணையிருக்கவே

ஆ........ஆ......
Ah.... Ah.....

(ஆனந்த மழையில்)
(Anandha Mazhayil)

எளியவர்க்கு நற்செய்தியாய்
என் இறைவன் யேசுவுக்கு மறைசாட்சியாய்

நான் வாழ வழிகாட்டுவாய்
உனை பாட எனை மீட்டுவாய்
திருச்சபையின் தலைவா எழுந்து வருவாய்
தீவினைகள் அகற்றி என்னை ஆள்வாய்

ஆ........ஆ......
(ஆனந்த மழையில்)

288. ஆனந்தமாக அன்பரைப் பாடுவேன்

1. ஆனந்தமாக அன்பரைப் பாடுவேன்
ஆசையவ ரென்னாத்து மாவிற்கே
ஆசிகளருளும் ஆனந்தனந்தமாய்
ஆண்டவர் இயேசு போல் ஆருமில்லையே

இயேசுவல்லால் இயேசுவல்லால்
இன்பம் இகத்தில் வேறு எங்குமில்லையே
இயேசுவல்லால் இயேசுவல்லால்
இன்பம் வேறு எங்குமில்லையே

2. தந்தை தாய்முன் சொந்தமானோர்களும்
தள்ளிடினும் நான் தள்ளிடுவேனோ
தாங்கிடுவேனேன் நீதியின் கரத்தால்
தாபரமும் நல்ல நாதனுமென்றார்

3. கிறிஸ்து இயேசு பிரசன்னமாகவே
கிருபையும் வெளியாகினதே
நீக்கியே சாவினை நற்சுவிசேஷத்தால்
ஜீவன் அழியாமை வெளியாக்கினார்

4. ஒப்பில்லாத நம்பிக்கை சந்தோஷமும்
தப்பறு தேசின் கிரீடமாகவே
அப்போஸ்தலர் தம் ஊழியத்தாலே
ஆதி விஸ்வாசத்தில் வளர்ந்திடுவோம்

5. அழுகையின் தாழ்வில் நடப்பவரே
ஆழிபோல் வான்மழை நிறைக்குமே
சேர்ந்திட சீயோனில் தேவனின் சந்நிதி
ஜெயத்தின் மேல் ஜெயமடைந்திடுவோம்

289. ஆனந்தமாய் இன்பக் கானான் ஏகிடுவேன்

ஆனந்தமாய் இன்பக் கானான் ஏகிடுவேன்
தூய பிதாவின் முகம் தரிசிப்பேன் - நாளுக்கு
நாள் அற்புதமாய் என்னைத் தாங்கிடும்
நாதன் இயேசு என்னோடிருப்பார்

1. சேற்றினின்றென்னைத் தூக்கியெடுத்து
மாற்றி உள்ளம் புதிதாக்கினாரே - கல்லான
என் உள்ளம் உருக்கின கல்வாரியை
கண்டு நன்றியுடன் பாடிடுவேன்

2. வாலிப நாளில் இயேசுவைக் கண்டேன்
வாஞ்சையுடன் என்னைத்தேடி வந்தார்
எதற்குமே உதவா என்னையும்
கண்டெடுத்தார் - இயேசுவின்
அன்பை நான் என் சொல்லுவேன்

3. கர்த்தரின் சித்தம் செய்திட நித்தம்
தத்தம் செய்தே என்னை அர்ப்பணித்தேன்
இயேசு அல்லால் ஆசை இப்பவில் வேறே இல்லை
என்றும் எனக்கவர் ஆதரவே

4. உம்மைப் பின் சென்று ஊழியம் செய்து
உம் பாதம் சேர்த்திட வாஞ்சிக்கிறேன்
தாரும் தேவா ஏழைக்கு மாறாத உம்கிருபை
கண்பாரும் என்றும் நான் உம் அடிமை

5. தேற்றிடுதே உம் வாக்குகள் என்னை
ஆற்றிடுதே உந்தன் சமூகமே - பெலத்தின்
மேல் பெலனடைந்து நான் சேருவேன்
பேரின்ப சீயோனில் வாழ்ந்திடுவேன

Tamil Hymns

290. ஆனந்தமாய் நம் தேவனை கீதங்கள்

ஆனந்தமாய் நம் தேவனை
கீதங்கள் பாடித் துதித்திடுவோம்
தொழுவோம் பணிந்திடுவோம்
அவர்தான் பாத்திரரே

1. மகிமையும் வல்லமை கனத்திற்குப் பாத்திரர்
சகலமும் சிருஷ்டி தேவன் அதிபதி இயேசுவே
பரிசுத்தர் இயேசு பரிசுத்தர்
பாத்திரர் இயேசு பாத்திரரே

2. ஒளி தரும் கண்களோ சுடர் தரும் பாதங்கள்
பெரு வெள்ள இரைச்சல் சத்தம்
வலக்கரம் வல்லமை சிறந்தவர் அழகில் சிறந்தவர்
துதிகளை செலுத்தி தொழுதிடுவோம்

3. ஜீவன்கள் மூப்பர்கள் தூதர்கள் யாவரும்
பணிந்திடும் தேவன் நீரே பரிசுத்தர் இயேசுவே
ஆவியில் நிறைந்து தொழுவோம்
ஆண்டவர் இவரைப் பணிந்திடுவோம்

Tamil Hymns

291. ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே

1. ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே
அருமையாம் இயேசு நமக்களித்த
அளவில்லாக் கிருபை பெரிதல்லவோ
அனுதின ஜீவியத்தில்

ஆத்துமமே என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்திரி
பொங்கிடுதே என் உள்ளத்திலே
பேரன்பின் பெரு வெள்ளமே

2. கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணிபோல் எமைக் காத்தாரே
கவலைகள் போக்கி கண்ணீர் துடைத்தார்
கருத்துடன் பாடிடுவோம்

3. படகிலே படுத்து உறங்கினாலும்
கடும் புயல் அடித்து கவிழ்த்தினாலும்
கடலையுங் காற்றையும் அமர்த்தியெமைக்
காப்பாரே அல்லேலூயா

4. யோர்தானைக் கடப்போம் அவர் பெலத்தால்
எரிகோவைத் தகர்ப்போம் அவர் துதியால்
இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுத்தே
என்றென்றுமாய் வாழ்வோம்

5. பரிசுத்தவான்களின் பாடுகளெல்லாம்
அதி சீக்கிரமாய் முடிகிறதே
விழிப்புடன் கூடித் தரித்திருப்போம்
விரைந்தவர் வந்திடுவார்

Tamil Hymns

292. ஆனந்தமே பரமானந்தமே

ஆனந்தமே பரமானந்தமே - இயேசு
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே

1. இந்தப் புவி ஒரு சொந்தம் அல்ல என்று
இயேசு என் நேசர் மொழிந்தனரே
இக்கட்டும் துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய் கிடைத்திடினும்

2. கர்த்தாவே நீர் எந்தன் காருண்ய கோட்டையே
காரணமின்றி கலங்கேனே நான்
விஸ்வாசப் பேழையில் மேலோகம் வந்திட
மேவியே சுக்கான் பிடித்திடுமே

3. என்னுள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணாய்
கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ இது
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்று நாம்
ஜெய கீதம் பாடி மகிழ்ந்திடலாம்

4. கூடார வாசிகளாகும் நமக்கிங்கு
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ
கைவேலையில்லாத வீடொன்றை மேலேதான்
செய்வேன் எனச் சொல்லிப் போகலையோ

5. துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்
சொல்லி முடியாத ஆறுதல் கிருபையை
துன்பத்தினூடே அனுப்பிடுவார்

6. இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
ஏழை வெகுவாய்க் கலங்குகிறேனே
என் நேசர் தன் முக ஜோதியதேயல்லாமல்
இன்பம் தரும் பொருள் ஏதுமில்லை

Tamil Hymns

293. ஆனந்தமே ஜெயா ஜெயா

ஆனந்தமே! ஜெயா! ஜெயா!
அகமகிழ்ந்தனைவரும் பாடிடுவோம்
ஞானரட்சகர் நாதர் நமை -இந்த
நாள்வரை ஞாலமதினில் காத்தார் --- புகழ்

1. சங்கு கனம், வளர் செங்கோலரசிவை
தளராதுள கிறிஸ்தானவராம்
எங்கள் ரட்சகரேசு நமை -வெகு
இரக்கங் கிருபையுடன் ரட்சித்ததால்

2. முந்து வருடமதனில் மனுடரில் வெகு
மோசகஸ்திகள் தனிலேயுழல
தந்து நமக்குயிருடையுணவும் - வெகு
தயவுடன் யேசு தற்காத்ததினால்

3. பஞ்சம்பசிக்கும் பட்டயத்துக்கும்
வெகுகொடும் பாழ் கொள்ளை
நோய் விஷ தோஷத்திற்கும்-தஞ்ச
இரட்சகர் தவிர்த்து நமை -இத்தரை
தனில் குறைதணித் தாற்றியதால்

Tamil Hymns

294. ஆனந்தம் எனக்கு கிடைத்தது

ஆனந்தம் எனக்கு கிடைத்தது
என் வாழ்க்கையே மாறியது
என் உள்ளத்தில் இயேசு வந்தார்
என் வாழ்க்கையின் ராஜாவானார்

1. கர்த்தரை ருசித்து அறிந்து கொண்டேன்
எவ்வளவு எவ்வளவு அன்பானவர்
உலகம் முழுவதிலும் கண்டதில்லை
இயேசுவின் அன்பினை போல

2. என் மகிழ்ச்சி கடலின் அலை போன்றது
இயேசுவை என்றும் தொடர்கின்றது
என்னை அழைத்து நன்மை செய்தார்
எந்நாளும் துதித்திடுவேன்

3. கர்த்தரை கெம்பீரமாய் பாடிடுவேன்
கன்மலையை சங்கீர்த்தனம் பண்ணிடுவேன்
எத்தனை மகிழ்ச்சி பெருகிடுதே
இயேசு என் மீட்பரானார்

295. ஆனந்தம் கொள்ளுவேன் அன்பர் இயேசுவில்

1. ஆனந்தம் கொள்ளுவேன் அன்பர் இயேசுவில்
எந்தன் பாவங்கள் போக்கியதால்
அற்புதர் இயேசுவை என்றும் துதித்திடுவோம்
எந்தன் ஜீவியம் மாற்றியதால்

நான் புகழ்ந்திடுவேன் அவர் நாமமதை
நன்றி நிறைந்த நல் இதயமுடன்
ஆயட் காலமெல்லாம் துதி பாடிடுவேன்
நன்றி மறவா நல் மனதுடனே

2. இத்தனை அற்புத நன்மைகள் செய்தவர்
இன்னமும் என்னைக் காத்திடுவார்
அத்தனை நாட்களும் எம்மை நடத்திடவே
கர்த்தர் இயேசுவே முன் செல்கிறார் - நான்

3. சோர்ந்திடும் வேளைகள் எம்மைத் தேற்றிடவே
ஈந்தவர் தேவ ஆவி எம்மில்
நேர்ந்திடும் துன்ப துயரமாம் வேளைகளில்
நேசர் கிருபைகள் அளித்திடுவார் - நான்

4. கூப்பிடும் வேளைகளில் நேசக் கொடி அசைத்தே
வேகமாய் வந்தே பதிலளித்தார்
தப்பிடும் வழிகள் எந்தன் ஆபத்தினில்
வேத வசனத்தால் நடத்திடுவார் - நான்

5. பற்பல சோதனைகள் எம்மைச் சூழ்ந்திட்டதால்
நற்பலன் வாழ்வில் பரிசுத்தமே
சீயோனை எமக்காய் கட்டி வெளிப்படுவார்
சேர்வேன் தரிசிக்க தூய முகம் - நான்

Tamil Hymns

296. ஆனந்தம் பொங்கிடும் நன்னாளிது

ஆனந்தம் பொங்கிடும் நன்னாளிது
ஆண்டவர் இயேசு பிறந்துவிட்டார்
ஆடுவோம் பாடுவோம்
ஆனந்தம் கொண்டாடுவோம்

ஆண்டவர் இயேசு பிறந்துவிட்டார்
ஆனந்தம் நம் வாழ்வில் தந்துவிட்டார்

1. தூதர்கள் செய்தி கூறிட
மேய்ப்பர்கள் கண்டு துதித்திட
மன்னவன் இயேசு பிறந்துவிட்டார்
மகிழ்ச்சியை நம் வாழ்வில் தந்துவிட்டார்

2. சாஸ்திரிகள் கண்டு பணிந்திட
ராஜாவும் கேட்டு கலங்கிட
இம்மானுவேலன் பிறந்துவிட்டார்
இன்பம் நம் வாழ்வில் தந்துவிட்டார்

Tamil Hymns

297. ஆல்பா ஓமேகா ஆதி அந்தமே

ஆல்பா ஓமேகா ஆதி அந்தமே
ஆண்டவர் இயேசு உயர்ந்தவரே
அகிலம் படைத்தவர் நீரே
அடியார் உம்மை தொழுகின்றோம்

1. யெகோவா நிசி வெற்றிகொடி
யெகோவா ரஃபா பரிகாரி
சுற்றிலும் சூழ்ந்து இருப்பவரே
துதிகள் செலுத்தி தொழுகின்றோம்

2. யெகோவா யீரே போதும் நீரே
யெகோவா ஷாலோம் சமாதானம்
பரிசுத்த தொழுகை அலங்காரம்
பயத்துடன் உம்மை பணிகின்றோம்

3. அடைக்கப்பட்ட ஆட்டுக்குட்டி
ஜெயம் கொண்டவர் இயேசு நீரே
முத்திரை உடைக்க பாத்திரரே
புத்தகம் திறக்கும் வேந்தன் நீரே

298. ஆஹா என்ன இன்பம் பரலோக இன்பம்

ஆஹா என்ன இன்பம் பரலோக இன்பம்
இன்ப இயேசு அளித்தனரே
அளவிற் கடங்கா புத்திக்கும் எட்டிடா
அன்பைக் கூறவும் நாவும் போதுமோ

1. நீசதுரோகி எந்தனை
பாசமாய் ஏற்றீரோ நீர்
பாவ உளையினின்றே
தூக்கி எடுத்தீரே நீர்

2. நாசபுரி நோக்கியே
விரைந்து சென்ற என்னை
பாசம் வைத்தேன் உந்தனில்
என்று கூவி அழைத்தீரே நீர்

3. நெரிந்த நாணல் என்னை
முறித்திடும் தருணம்
பரிந்து பேசி அன்பால்
நிலையாய் நிறுத்தினீர்

4. எச்சரிப்பின் சத்தத்தை
தள்ளிவிட்ட போதிலும்
அன்பின் சவுக்கடியால்
சேர்த்தன்பாய் ஆதரித்தீர்

5. காரிருள் சூழும் வேளை
கலங்கித் தவிக்கையில்
காத்து நீர் என்னை
தேற்றி கருத்தாய் ஆதரித்தீர்

6. பிராண நாதா உந்தனை
என்று நான் கண்டிடுவேன்
ஆருயிர் நேசா உம்மை
என்றும் காண ஆசை பொங்குதே

7. அழைப்பின் சத்தம்
கேட்க நாட்கள் அதிகமாகுமோ
நேசர் மார்பில் சாய்ந்திட
வாஞ்சை பெருகிடுதே

Tamil Hymns

8. ஆகாய மேகந்தனில்
சேர்த்திடும் நேரமதில்
ஆனந்தம் ஆனந்தமே
என்றென்றும் ஆனந்தமே

299. இகத்தின் துக்கம் துன்பம்

1. இகத்தின் துக்கம் துன்பம்
கண்ணீரும் மாறிப் போம்
முடிவில்லாத இன்பம்
பரத்தில் பெறுவோம்.

2. இதென்ன நல்ல ஈடு,
துன்பத்துக்கின்பமா?
பரத்தில் நிற்கும் வீடு
மரிக்கும் பாவிக்கா?

3. இப்போது விழிப்போடு
போராட்டம் செய்குவோம்
விண்ணில் மகிழ்ச்சியோடு
பொற் கிரீடம் சூடுவோம்

4. இகத்தின் அந்தகார
ராக்காலம் நீங்கிப்போம்
சிறந்து ஜெயமாக
பரத்தில் வாழுவோம்.

5. நம் சொந்த ராஜாவான
கர்த்தாவை நோக்குவோம்
கடாட்ச ஜோதியான
அவரில் பூரிப்போம்.

300. இகபரமதிலே அகபரன் அவரை

இகபரமதிலே அகபரன் அவரை
துதிக்க வைத்ததால் ஸ்தோத்திரம்
அற்பநாவிலே அற்புதர் அவரை
பாட வைத்ததால் ஸ்தோத்திரம்
அல்லேலூயா ஸ்தோத்திரம் (2)
அல்லேலூயா ஸ்தோத்திரம் (2)

1. பார்வோன் சேனையை கடலில் மூழ்கடித்த
தேவாதி தேவனை துதியுங்கள்
எரிகோ கோட்டையை இடித்துத் தகர்த்திய
இராஜாதி இராஜனைத் துதியுங்கள் – அல்லேலூயா

2. அக்கினி நடுவிலே உலாவி தம்மை
வெளிப்படுத்தினவரை துதியுங்கள்
தண்ணீரின் மேலே நடந்த அற்புதர்
இயேசு ராஜனைத் துதியுங்கள் – அல்லேலூயா

3. வார்த்தையிலே அகிலம் படைத்த
அநாதி தேவனைத் துதியுங்கள்
மண்ணினாலே மனிதனைப் படைத்த
மன்னாதி மன்னனைத் துதியுங்கள் – அல்லேலூயா

301. இகமனுதேவா நமஸ்கரிப்பேன்

இகமனுதேவா நமஸ்கரிப்பேன்
இயேசு தயாளா சரணடைந்தேன்

1. மாசணுகாத திரு உருவே
மகிமையைத் துறந்த எம்பரம் பொருளே
தீமைக் கண்டேன் என் இதயத்திலே
தாழ் பணிந்தேன் உம் பாதத்திலே
குருபர நாதா தேடி வந்தீர்
குறை நீக்க மனுவாய் அவதரித்தீர்

2. ஞானியர் போற்றிய தூயவனே
மேய்ப்பர்கள் வணங்கின மறையவனே
ஆர்ப்பரித்து உம் புகழ் உரைப்பேன்
ஆனந்தமாய் நின் பணிபுரிவேன்
அகிலமே உமது அடிதொடர
ஆணை பெற்றேன் நான் முன் நடக்க

3. காலத்தால் அழிந்திடா காவலனே
கன்னியின் மைந்தனாய் வந்தவனே
மாமன்னனாய் வருவீரே
முகமுகமாய் காண்பேனோ
திரிமுதல் தேவா காப்பீரே
தினம் எமை கழுவி மீட்பீரே

Tamil Hymns

302. இசைமழையில்

இசைமழையில் தேன்கவி பொழிந்தே
கர்த்தர் ஜெனித்தார் அன்பாய் பாடுங்கள்

1. வான்மலர்தான் இப்புவியினிலே
மலர்ந்திட்டதே நம் வாழ்வில் இன்று
நமக்காய் பிறந்தார் பாசம்கொண்டு
வாழ்வின் மீட்பின் பாதை இதே

2. மாசற்றவர் நம் வாழ்வினிலே
மகிமையென்றே கண்டோமே இன்று
விடிவெள்ளியாக தேவபாலன்
தாழ்மை தாங்கி அவதரித்தார்

3. உலகம் என்னும் பெதஸ்தாவிலே
கரைதனில் பல ஆண்டுகளாய்
பாதை தெரியாதிருந்த நம்மை
வாழ வைக்க வந்துதித்தார்

303. இடுக்கமான வாசல் வழியே

இடுக்கமான வாசல் வழியே
வருந்தி நுழைய முயன்றிடுவோம்
சிலுவை சுமந்து இயேசுவின் பின்
சிரித்த முகமாய் சென்றிடுவோம்

1. வாழ்வுக்கு செல்லும் வாசல்
இடுக்கமானது
பரலோகம் செல்லும் பாதை
குறுகலானது

2. நாம் காணும் இந்த உலகம்
ஒரு நாள் மறைந்திடும்
புது வானம் பூமி நோக்கி
பயணம் செய்கின்றோம்

3. இவ்வாழ்வின் துன்பம் எல்லாம்
சிலகாலம் தான் நீடிக்கும்
இணையில்லாத மகிமை
இனிமேல் நமக்குண்டு

4. அழிவுக்கு செல்லும் வாயில்
மிகவும் அகன்றது
பாதாளம் செல்லும் பாதை
மிகவும் விரிந்தது

Tamil Hymns

304. இடைவிடா நன்றி உமக்குத்தானே

இடைவிடா நன்றி உமக்குத்தானே
இணையில்லா தேவன் உமக்குத்தானே

1. என்ன நடந்தாலும் நன்றி ஐயா
யார் கைவிட்டாலும் நன்றி ஐயா
நன்றி நன்றி --- இடைவிடா

2. தேடி வந்தீரே நன்றி ஐயா
தெரிந்துக் கொண்டீரே நன்றி ஐயா

3. நிம்மதி தந்தீரே நன்றி ஐயா
நிரந்தரம் ஆனீரே நன்றி ஐயா

4. என்னைக் கண்டீரே நன்றி ஐயா
கண்ணீர் துடைத்தீரே நன்றி ஐயா

5. நீதி தேவனே நன்றி ஐயா
வெற்றி வேந்தனே நன்றி ஐயா

6. அநாதி தேவனே நன்றி ஐயா
அரசாளும் தெய்வமே நன்றி ஐயா

7. நித்திய இராஜாவே நன்றி ஐயா
சத்திய தீபமே நன்றி ஐயா

305. இணையில்லா நாமம் இயேசுவின் நாமம்

இணையில்லா நாமம் இயேசுவின் நாமம்
இன்பமே தங்கும் இதயமே பொங்கும்
இன்னல்கள் தீரும் என் மனம் மாறும்

1. பாவத்தின் கூரை முறித்திடும் நாமம்
பாடுகள் ஏற்ற இயேசுவின் நாமம்
சாபப்பிசாசை ஜெயித்தவர் னாமம்
சந்தம் ஓங்கிடும் நாமம்

2. லோகத்தின் ஆசை வெறுத்திடும் நாமம்
சோகத்தை மீட்கும் இயேசுவின் நாமம்
ஜீவனைக் கொடுத்த இரட்சகர் நாமம்
ஜீவனோடெழுந்தவர் நாமம்
அதை யார் மறைத்திடுவார் மனுக்குல விளக்கே
அணைந்திடா ஒளி திருனாமம்

3. அண்டிடுவோரை அணைத்திடும் நாமம்
அன்பின் சொருபி இயேசுவின் நாமம்
வேண்டுதல் கேட்கும் வல்லவர் நாமம்
வேதனை தாங்கிடும் நாமம்
இதை நம்பியே வாரும் பாவங்கள் தீரும்
இன்றும்மை அழைத்திடும் நாமம்

4. அழியாமை ஜீவன் அளித்திடும் நாமம்
அற்புதம் செய்யும் இயேசுவின் நாமம்
விண்ணுலகினிலே சேர்த்திடும் நாமம்
மண்ணுலகோர் நம்பும் நாமம்
மிகச்சீக்கிரம் வருவேன் என்றும் வாக்குரைத்த
மீட்பர் நல் மேய்ப்பரின் நாமம்

Tamil Hymns

306. இதயங்கள் மகிழட்டும்

இதயங்கள் மகிழட்டும்
முகங்கள் மலரட்டும் (சிரிக்கட்டும்)
மனமகிழ்ச்சி நல்ல மருந்து

1. மன்னித்து அணைத்துக்கொண்டார்
மகனாய் சேர்த்துக்கொண்டார்
கிருபையின் முத்தங்களால் புது உயிர்தருகின்றார்
கோடி நன்றி பாடிக் கொண்டாடுவோம்

2. அவரது மக்கள் நாம் - அவர்
மேய்க்கும் ஆடுகள் நாம்
தலைமுறை தலைமுறைக்கும்
நம்பத்தக்கவரே

3. தாய் மறந்தாலும்
மறக்கவே மாட்டார்
உள்ளங்கைகளிலே
பொறித்து வைத்துள்ளார்

4. தண்டனை நீக்கிவிட்டார்
சாத்தானை துரத்திவிட்டார்
நடுவில் வந்துவிட்டார்
தீங்கைக் காணமாட்டோம்

5. உண்டாக்கினார் நம்மை
அவரில் மகிழ்ந்திருப்போம்
ஆட்சி செய்கின்றார் அந்த
ராஜாவில் களிகூருவோம்

6. தமது ஜனத்தின்மேல்
பிரியம் வைக்கின்றார்
அதிசய இரட்சிப்பினால்
அலங்கரிக்கின்றார்

7. நல்லவர் நல்லவரே
(அவர்) கிருபை உள்ளவரே
அவரது பேரன்பு
என்றென்றும் நிலைத்திருக்கும்

8. சஞ்சலமும் தவிப்பும்

Tamil Hymns

பறந்து ஓடியதே
நித்திய நித்தியமாய்
மகிழ்ச்சி நம் தலைமேல்

307. இதயம் நன்றியுடன்

இதயம் நன்றியுடன்
நிரம்பி துதித்திடுவோம்
மகிபன் இயேசுவையே
தினமும் துதித்திடுவோம்

1. சென்ற நாளில் நன்மை செய்த
மன்னன் இயேசு தேவனே
பாதுகாத்தார் துணை நின்றார்
நன்றியோடு பாடுவோம்

2. தேவ ராஜ்யம் தேடி வந்தால்
தேவ நன்மை தங்கிடும்
துதி செய்தால் தடை நீங்கும்
தேவ ஆசீர் தங்கிடும்

3. ஆவி ஆத்மா உடல் யாவும்
பரிசுத்தம் காத்துமே
பரன் பாதம் போற்றி வாழ்த்தி
எந்த நாளும் பணிகுவோம்

4. வஞ்சியாமல் பொருள் தந்து
தேவ சேவை தாங்குவோம்
அதினாலே நன்மை தங்கும்
என்றும் ஆசீர்வாதமே

5. கர்த்தர் சமூகம் காத்திருந்து
பெலன் பெற்று எழும்புவோம்
துதி செய்தால் சோர்வு நீங்கும்
கர்த்தர் நாமம் போற்றுவோம்

308. இத்தரை மாந்தரே நித்திரை தெளிவீர்

இத்தரை மாந்தரே நித்திரை தெளிவீர்
இயேசுவின் சுவிசேஷம் கூற எழுந்து செல்வீர்

இயேசு நாமம் கூற பணிந்து செல்லுவீர்
யோசனையோடு கூட துணிந்து செல்லுவீர்

பகல் சென்று போயிற்று இரவும் ஆயிற்று
இடறலின் காலமோ எங்குமுண்டாயிற்று
மானிட உள்ளங்கள் மாய்மாலம் பேசுது
முடிவு காலத்தில் நீ சேவை செய்திட

பூமி அதிர்ந்தது பஞ்சங்கள் வந்தது
வஞ்சக மாந்தரால் வாதை நிறைந்தது
தஞ்சம் அவர் உண்டு தாரணி தெரிந்திட
அஞ்சாமல் கெஞ்சி நீ சேவை செய்திட

யுத்தங்கள் நேர்ந்தது சித்தம் நிறைவேறுது
பக்தர் கூட்டங்கள் பரனையே தேடுது
சத்திய வசனமோ எங்குமே கேட்குது
நித்திய ராஜ்யம் சேர்க்க ஒரே மனதாய்

309. இது அதிசயமே எனக்கானந்தமே

இது அதிசயமே எனக்கானந்தமே
இன்ப பரலோகம் துறந்தெனக்காய்
இகத்தில் இயேசு மனுவாய் உதித்தார்

1. விண்ணையும் துறந்து இம்மண்ணுலகில்
என்னையும் எண்ணிலே தம் மனதில்
தாழ்மையின் ரூபமே தாம் எடுத்து
தயாபரனாய்த் தோன்றினார் - தேவ

2. மானிடர் மன இருள் நீக்கிடும் மெய்
மா பிரபையோடிலங்கும் மகிபன்
மன்னுயிர் மீட்கவே தன்னுயிரைத்
தந்தாரே இயேசுவையே -எந்தன்

3. சமாதான பிரபுவாய் ஜெகத்தில் வந்தே
சமாதானம் எனதுள்ளமே பொழிந்தார்
நன்றியோடே நானும் பாடிடுவேன்
தற்பரன் இயேசுவையே எந்தன்

4. பறத்திடும் பறவைக்கும் கூடு உண்டே
பதுங்கிட நரிக்கும் ஓர் குழியுமுண்டே
இயேசுவுக்கோ தலை சாய்த்திடவோ
எங்குமோர் ஸ்தலமுமில்லை - பூவில்

5. சாந்தமும் தாழ்மையும் நீதியுமே
சிறப்புடன் விளங்கிடுதே அவரில்
இந்நுகமே எனக்கெந்நாளுமே
சொந்த மென்றேற்றிடுவேன் என்றும்

Tamil Hymns

310. இது உலர்ந்த எலும்புகள் உயிர்

பேசு சபையே பேசு பேசு சபையே பேசு
இது உலர்ந்த எலும்புகள்
உயிர் பெற்று எழும்பிடும் நாட்கள்
இது தள்ளாடும் முழங்கால்கள்
புது பெலன் பெற்று கொள்ளும் நாட்கள்

இது கோணல்கள் யாவும்
நேராக மாறிடும் நாட்கள்
இது கரடான பாதைகள்
செவ்வையாக மாறிடும் நாட்கள் - 2

1. நரம்புகள் உருவாகும் எலும்புகள்
ஒன்று சேரும் தசைகளும் புதிதாக தோன்றும்
ஆவியின் அசைவாலும்
கர்த்தரின் வார்த்தையாலும்
புது ஜீவன் உனக்குள்ளாய் தோன்றும்

2. மேகங்கள் சூழ்ந்திடவே இரைச்சலும்
பெருகிடவே பெருமழை தேசத்தில் பெய்யும்
கல்வாரி இரத்ததாலே ஜாதிகள் மீட்கப்பட்டு
கர்த்தரை தெய்வமாக வணங்கும் அதனால்

3. ஜாதிகள் ஓங்கிடவும்(நடுங்கிடவும்)
தேசங்கள் வியந்திடவும்
கர்த்தரின் கிரியைகள் தோன்றும்
மரித்தோர் பள்ளத்தாக்கில்
துதிக்கின்ற சேனை ஒன்று
கர்த்தரின் ஜிவன் பெற்று எழும்பும்

4. ஜீவனை பேசு இரட்சிப்பை பேசு
சுவாசத்தைப் பேசு அற்புதத்தை பேசு
சபையே நீ எழும்பிடு காற்றே நீ வீசிடு
போற்று சபையே போற்று

Tamil Hymns

311. இது சிந்திக்கும் காலம்

இது சிந்திக்கும் காலம் செயல்படும்
நேரம் மௌனமாயிருக்காதே

மௌனமாயிருக்காதே - நீ
இது அதிசயமே எனக்கானந்தமே

1. அறுவடை காலத்தில் மௌனமாயிருந்தால்
அறுவடை இழப்பாயே
ஆண்டவர் காலத்தில் மௌனமாயிருந்தால்
இரட்சிப்புத்தான் வருமோ?

2. இந்தியர் இயேசுவை அறிந்திடும் காலம்
இதுதான் இதுதானே
இந்தக் காலத்தில் மௌனமாயிருந்தால்
இரட்சிப்புதான் வருமோ?

3. பகட்டு வாழ்வோ பரமனின் அன்போ
எது உன்னை இழுக்கிறது?
கணக்குக் கேட்கும் கர்த்தர் வருவார்
வெறுங்கையாய் நிற்பாயோ?

Tamil Hymns

312. இதுவரை செய்த செயல்களுக்காக

இதுவரை செய்த செயல்களுக்காக
இயேசுவே உம்மைக் பாட வந்தேன்
இம்மட்டும் காத்தவரே இம் மானுவேலே
ஏழு ஸ்வரங்களில் பாடுகின்றேன்
இசையால் மகிமைப் படுத்துகின்றேன்

1. என்னில் நன்மை இல்லாதிருந்தும்
ஏனோ என்னை தெரிந்து கொண்டீர்
ஏழை என் நாவினில் பாடிடும் ஒரு தொனி
இயேசுவே நான் பாடும் கல்யாணி
நித்தம் நித்தம் புதுப்பாடல் பாடிட
நேசரே உம் அன்பைக் கூறிட
கெட்ட ஆவி நெடுந்தூரம் ஓடிட
பாட்டுப்பாடின தாவீதைப் போல்
அந்தப் பாடலில் இருந்த வல்லமை
இந்த வேளையில் இணங்கச் செய்யவே
வருவீர் வரம் தருவீர்
கிருபை தினம் பொழிவீர்
எந்தன் நாவில் உன்தன் வேதம் எங்கும்
ஒலிக்க கிருபை செய்வீர்

313. இதுவரை நடத்தி குறைவின்றி காத்து

இதுவரை நடத்தி குறைவின்றி காத்து
மகிழ்வை தந்தீரே நன்றி ஐயா
தண்ணீரை கடந்தேன்
சோதனை ஜெயித்தேன்
மதிலை தாண்டினேன் உம் பலத்தால்

நன்றி நன்றி ஐயா...
உம்மை உயர்த்திடுவேன்

1. ஆபத்து நாளில் அனுகுலமான
துணையுமானீரே நன்றி ஐயா

2. உம் கரம் நீட்டி ஆசீர்வதித்து
எல்லையை பெருக்கினீர் நன்றி ஐயா

3. அபிஷேகம் தந்து வரங்களை ஈந்து
பயண்படச் செய்தீரே நன்றி ஐயா

4. கிருபைகள் தந்து ஊழியம் தந்து
உயர்த்தி வைத்தீரே நன்றி ஐயா

314. இது விதைக்கின்ற காலமல்லவா

இது விதைக்கின்ற காலமல்லவா
நாம் செயலாற்றும் நேரமல்லவா
உறங்காமல் நாமும் விரைந்தோடி இங்கும்
சுவிசேஷ விதை தூவுவோம்

1. ராக்காலம் வருகின்றதே - அதன்
சாயல் தெரிகின்றதே
ஒளியுள்ள காலம் முடிவாகுமுன்னே
உன் சேவை நிறைவேற்றிடு

2. திறப்பின் ஓர் வாசல் எங்கே
அதில் நிற்கும் மனிதன் எங்கே
கர்த்தரின் கண்கள் பூலோகமெங்கும்
அதை தேடி அலைகின்றதே

3. பின் மாரி பொழிகின்றதே
உன் வேலை வருகின்றதே
அழிகின்ற கூட்டம் உன்னைத்தான் இன்று
எதிர் நோக்கி நிற்கின்றதே

Tamil Hymns

315. இதோ ஒரு திறந்த வாசல்

இதோ ஒரு திறந்த வாசல்
உனக்காக எனக்காக இயேசு தருகிறார்
ஒருவரும் பூட்ட முடியாது - இதை
ஒருவரும் பூட்ட முடியாது

1. அழிந்து போகும் ஆத்துமாவை மீட்டிட
அறுவடை பணியை நாம் செய்திட

2. கட்டுண்ட மக்களை விடுவிக்க
சிறைப்பட்ட ஜனங்களை மீட்டிட

3. கிராமமெல்லாம் வீதியெல்லாம் சென்றிட
இயேசுவின் ஊழியத்தை செய்திட

4. இயேசுவுக்காய் எழும்பி நீயும் செயல்பட
மகிமையான ஊழியத்தை செய்திட

5. தேசத்திலே அக்கினி ஊற்றப்பட
நீயும் நானும் அக்கினியாய் மாறிட

Tamil Hymns

316. இதோ மனுஷரின் மத்தியில்

இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி தேவனே
வாசஞ் செய்கிறாரே

1. தேவன் தாபரிக்கும் ஸ்தலமே
தம் ஜனத்தாரின் மத்தியிலாம்
தேவன் தாம் அவர்கள் - தேவனாயிருந்தே
கண்ணீர் யாவையும் துடைக்கிறாரே

2. தேவ ஆலயமும் அவரே
தூய ஒளி விளக்கும் அவரே
ஜீவனாலே தம் ஜனங்களின் - தாகம் தீர்க்கும்
சுத்த ஜீவ நதியும் அவரே

3. மகிமை நிறை பூரணமே
மகா பரிசுத்த ஸ்தல மதுவே
என்றும் துதியுடனே - அதன் வாசல் உள்ளே
எங்கள் பாதங்கள் நிற்கிறதே

4. சீயோனே உன் வாசல்களை
ஜீவ தேவனே நேசிக்கிறார்
சீர் மிகுந்திடு மிச் - சுவிசேஷந்தனை
கூறி உயர்த்திடுவோம் உனையே

5. முன்னோடியாய் இயேசு பரன்
மூலைக் கல்லாகி சீயோனிலே
வாசஞ் செய்திடும் உன்னத சிகரமதை
வாஞ்சையோடு நாம் நாடிடுவோம்

317. இந்த அருள் காலத்தில்

1. இந்த அருள் காலத்தில்
கர்த்தரே உம் பாதத்தில்
பணிவோம் முழந்தாளில்

2. தீர்ப்பு நாள் வருமுன்னே
எங்கள் பாவம் உணர்ந்தே
கண்ணீர் சிந்த ஏவுமே

3. மோட்ச வாசல், இயேசுவே
பூட்டுமுன் எம் பேரிலே
தூய ஆவி ஊற்றுமே

4. உந்தன் ரத்த வேர்வையால்
செய்த மா மன்றாட்டினால்
சாகச் சம்மதித்ததால்

5. சீயோன் நகர்க்காயக் கண்ணீர்
விட்டதாலும் தேவரீர்
எங்கள்மேல் இரங்குவீர்

6. நாங்கள் உம்மைக் காணவே
அருள் காலம் போமுன்னே
தஞ்சம் ஈயும் இயேசுவே

318. இந்த ஆண்டின் நன்மை யாவும்

இந்த ஆண்டின் நன்மை யாவும்
உந்தன் வாழ்வில் பலிக்குமே
இதயம் நிறைந்து துதித்திடுவோம்
இயேசு ராஜனையே

நல்லவர் இயேசு வல்லவர்
அவர் மாட்சிமை உள்ளவரே

1. எல்லாவற்றிலும் ஜெயம் தந்திடுவாரே
கண்ணீரின் ஜெபத்தை தள்ளவேமாட்டார்
எதிர்பார்க்கும் நன்மைகளை தந்திடுவாரே
கரம் தட்டி பாடிடுவோம்

2. பொல்லாப்பும் வாதையும் அணுகிடாதே
கரங்களினால் நம்மை தாங்கிடுவாரே
செட்டையின் மறைவில் மறைத்துக்
கொள்வார் - அடைக்கலம் புகுந்திடுவாய்

3. சத்துரு எய்திடும் ஆயுதங்களை ஒன்றையும்
வாய்த்திடாமல் செய்திடுவாரே
உந்தனின் வாழ்வினில் ராஜா அவரே
தீங்கை இனி காணமாட்டாய்

Tamil Hymns

319. இந்தக் கல்லின் மேல் இயேசு கிறிஸ்து

1. இந்தக் கல்லின் மேல் - இயேசு கிறிஸ்து
சபையைக் கட்டுவார் 2
பாதாளத்தின் வாசல்கள்
அதை மேற்கொள்ளாதே (2)

அல்லேலூயா அல்லேலூயா (4)

2. எல்லாவற்றையும் எல்லாவற்றாலும்
நிரப்பிடும் தேவ சபை
சத்தியத்திற்கு தூணுமான
ஆதாரமான சபை (2) - அல்லேலுயா

3. கரையற்றதும் திரையற்றதும்
கற்புள்ளதான சபை
கர்த்தராம் இயேசுவின்
மணவாட்டியான சபை (2) -அல்லேலுயா

4. பிழையற்றதும் குறைவற்றதும்
மகிமையால் நிறைந்த சபை
சாத்தானின் கோட்டைகளை
தகர்த்திடும் தேவசபை (2) - அல்லேலுயா

Tamil Hymns

320. இந்த நாளை நான் சமர்ப்பிப்பேன்

இந்த நாளை நான் சமர்ப்பிப்பேன்
இயேசுவின் திருப் பாதத்தில்

காலை முதல் மாலை வரை
காக்கும் கர்த்தர் நமது இயேசு
காலைத் தள்ளாட என்றுமே விடார்

1. இனிய வார்த்தை எப்போதும் பேசஇயேசு
நடத்திடும் - இடுக்கண்ணில் இருப்போர்
யாரையும் மீட்க இயேசு காட்டிடும்
இன்பத்தை வெறுத்து துன்பத்தை நாட
இயேசு போதியும்-இன்முகம் காட்டி
இறங்கி நோக்க இயேசு கற்பியும்

2. பிறர் என்ன செய்ய விரும்புவேனோ
அதையே செய்யவும்
பிறர் எனக்கு மன்னிப்பதையே
அவர்க்கு மன்னிக்கவும்
பிறர் நலம் கருதியே சதா உழைக்கவும்
பிறருக்காக என்னை ஒடுக்கி நான் மரிக்கவும்

321. இந்த மங்களம் செழிக்கவே

இந்த மங்களம் செழிக்கவே - கிருபை செய்யும்
எங்கள் திரித்துவ தேவனே
சுந்தரக் கானாவின் மணப் பந்தலில்
சென்றம் பணத்தை -கந்தரசமாகச்
செய்த விந்தை போல் இங்கேயும் வந்து

1. ஆதித்தொடுத் தன்பை எடுத்தாய் மனுடர்தம்மை
ஆணும் பெண்ணுமாகப் படைத்தாய்
நீதி வரம் நாலுங்கொடுத்தாய்
பெற்றுப் பெறுகி நிற்க உலகத்தில் விடுத்தாய்
மாதவர் பணியும் வேத போதனே
அந்தப்படி உன் ஆதரவைக் கொண்டு
அதன் நீதியை நம்பிப்புரிந்த

2. தக்க ஆபிரகாமும் விண்டனன் - அதனை
மனதுக்குள் எலியேசர் கொண்டனன்
முக்ய ஆரான் நிலத்தண்டினன்
நினைத்தபடி சக்கியமதாகக் கண்டனன்
பக்குவம் உரைத்திடா ரெபேக்காளும்
ஈசாக்குவுக்கு தக்க மணவாளியாகத்
தந்து தயை செய்தாற்போல

3. சத்திய வேதத்தின் வாசனே
அருளு பரிசுத்த சுவிசேட நேசனே
பக்தர்கள் பவ விமோசனே
பழுதணுவும் அற்ற கிறிஸ்தேசுராஜனே
வெற்றியால் யாக்கோபுவுக்கு முற்றிலும்
அளித்த பேறாய் - புத்திர சம்பந்துண்டாக்கி
நித்திய சுப சோபனமாய்

Tamil Hymns

322. இந்த மண்ணில் வந்து மன்னன் இயேசு

இந்த மண்ணில் வந்து
மன்னன் இயேசு பிறந்தார் - இங்கு
நாமும் கூடி பாட்டுப்பாடி மகிழ்வோம் (2)

இறைவாக்கினர்கள் சொன்னபடி
பிறந்த நம் இயேசுவைப் போற்றிடுவோம்
போற்றிடுவோம் நாம் போற்றிடுவோம்

1 .மார்கழி இரவின் குளிரினிலே
மாமரி மகனாய் வந்துதித்தார்
மாடுகள் அடையும் தொழுவத்திலே -2
மனிதருள் மாணிக்கம் பிறந்தாரே

Happy Christmas - 2
Happy Happy Christmas

2. புவியில் நன்மனம் கொண்டவர்கள்
நெஞ்சினில் நிம்மதி கண்டிடவே
அமைதியின் வேந்தன் அவனியிலே -2
அழகிய குழந்தையாய் உதித்தாரே

323. இந்த மட்டும் காத்த எங்கள் தேவனுக்கு

இந்த மட்டும் காத்த எங்கள்
தேவனுக்கு ஸ்தோத்திரம்
இனிமேலும் காக்கும் எங்கள்
அன்பருக்கு ஸ்தோத்திரம் - (2)

அவரை நான் எக்காலத்திலும்
துதிப்பேன் போற்றுவேன்
நிதம் நன்றி சொல்லி மகிழ்ந்திடுவேன்
அவர் பாதம் வந்து அமர்ந்திடுவேன்
அவர் குரல் கேட்டிடுவேன்

1. பயப்படாதே என்று அவர் சொல்லி
வலக்கையை பிடித்து துணைநின்றார்
எண்ணிலா கிருபைகள் தந்து
அவர் சமூகத்தில் மகிழச் செய்திட்டார்
என் வாழ்விலே அவர் செய்த
அதிசயம் அளவிடவே முடியாது
அதை நான் இனி நன்றிகள்
சொல்ல அந்த வார்த்தை போதாது

2. திராணிக்கு மேல் நான் சோதிக்கப்பட
ஒருபோதும் விடாமல் காத்திட்டார்
நன்மையான ஈவுகள் தந்து
பனைப்போல் செழிக்க செய்திட்டார்
அலைச்சல் யாவும் நினைவுக் கூர்ந்து
கண்ணீரை துருத்தியில் வைத்திட்டார்
ஒலிவமரக் கன்றுகளைப் போல்
ஆலயத்தில் நிற்கச் செய்திட்டார்

Tamil Hymns

324. இந்த மட்டும் காத்த எபிநேசரே

1. இந்த மட்டும் காத்த எபிநேசரே
இனிமேலும் காத்த யெகோவாயீரே
எந்தன் வாழ்க்கையின் இம்மானுவேலரே
இந்த வருடத்தின் நாட்களிலே

ஸ்தோத்திரிப்போம் நாமே
துதிகளுடனே ஆர்ப்பரிப்போம்
அன்பர் இயேசுவை - அல்லேலூயா!

2. யோர்தானும் செங்கடலும் நம் எதிரில்
எழும்பி வந்த போதிலும் காத்தவர்
சாபப்பிசாசின் சோதனை போதிலும்
இயேசு நாமத்தில் அகற்றியவர் -2

3. சேயைக் காக்கும் ஒரு தாயைப்போலவே
இந்த மாய லோகில் என்னைக் காக்கும் தேவனே
மகத்தான கிருபை என்மேலே
மகிபா நீர் ஊற்றிடுமே -2

Tamil Hymns

325. இந்தியாவில் இயேசு நாமம் இன்றே

இந்தியாவில் இயேசு நாமம்
இன்றே கூற வேண்டும்
இந்தியரை பரலோகத்தில்
பாக்கியவான்களாய் மாற்றும் -2

1. எலியாக்கள் எழும்ப வேண்டும்
எலிசாக்கள் எழும்ப வேண்டும் -2
கர்த்தரின் வல்ல நாமம்
உயர்த்தியாக வேண்டும் -2

2. அக்கினி இறங்க வேண்டும்
அற்புதம் விளங்க வேண்டும்
கர்த்தரே தெய்வம் என்று
ஜாதிகள் முழங்க வேண்டும் -2

3. தேசத்தின் ஜனங்கள் காக்க
திறப்பின் வாயில் நிற்க
தேவன் தேடும் மனிதன்
நாம் தான் இன்றே படைப்போம் -2

326. இந்தியாவில் இயேசு நாமம் முழங்கட்டுமே

இந்தியாவில் இயேசு நாமம்
முழங்கட்டுமே முழங்கட்டுமே - 2

இந்தியா - 3 இயேசுவுக்கே

1. சாத்தானின் கோட்டைகளை
உடைத்திடுமே இயேசு நாமம்

2. மேய்ப்பரெல்லாம் ஒன்றாகச்
சேரட்டுமே சேரட்டுமே

3. எழுப்புதல் தீ இந்தியாவிலே
எரியட்டுமே எரியட்டுமே

4. சபைகள் எல்லாம் ஒன்றாக
வளரட்டுமே வளரட்டுமே

5. சுவிசேஷம் தீவிரமாய்
அறிவிப்போமே அறிவிப்போமே

6. அற்புதங்கள் அதிசயங்கள்
நடக்கட்டுமே நடக்கட்டுமே

Tamil Hymns

327. இந்தியாவை அரசாளும் இயேசுவே

இந்தியாவை அரசாளும் இயேசுவே
நீர் என்றென்றும் வீற்றிருப்பீர்
ஆளுகைகள் அகன்று போகும்
வல்லமைகள் மாறிப்போகும் நீரோ
என்றென்றும் வீற்றிருப்பீர் (2)

1. ஒளி படைத்த உலகமைக்க எழுந்து வா
உறுதி கொண்ட நெஞ்சுடன் உணர்ந்து வா
அலைகளால் கலங்கி நிற்கும் அன்பர்கள்
நிலையான இயேசு வாழ்வு காண்பார்கள்

2. பாரதத்தின் உயிர்துடிப்பே எழுந்து வா
பாரெங்கும் பணி செய்ய பாய்ந்து வா
சிலுவைகொடி தேசங்களில் பறக்கட்டும்
பரலோகத்தை பக்தர்கள் நிரப்பட்டும்

3. வீறுகொண்ட வாலிபனே எழுந்து வா
வீர இயேசுவை வாழ்வில் தொழுது வா
இந்தியர்கள் அவர் நாமம் போற்றும் தொனி
இல்லங்களில் ஒலிக்கட்டும் அது நம் பணி

328. இந்நாளில் இயேசுநாதர் உயிர்த்தார்

1. இந்நாளில் இயேசுநாதர்
உயிர்த்தார் கம்பீரமாய் -இகல்
அலகை சாவும் வென்றதிக வீரமாய்

மகிழ் கொண்டாடுவோம் மகிழ் கொண்டாடுவோம்

2. போர் சேவர் சமாதி
சூழ்ந்து காவிலிருக்க
புகழார்ந்தெழுந்தனர் தூதன்
வந்து கல்முடி பிரிக்க

3. அதிகாலையில் சீமோனோடு
யோவானும் ஓடிட
அக்கல்லறையினின் றேகினர்
இவர் ஆய்ந்து தேடிட

4. பரிசுத்தனை அழிவுகாண
வொட்டீர் என்று முன்
பகர் வேத சொற்படி
பேதமற்றெழுந்தார் திருச்சுதன்

3. இவ்வண்ணமாய் பரன் செயலை
எண்ணி நாடுவோம் எல்லோருமே
களிகூர்ந்தினிதுடன் சேர்ந்து பாடுவோம்

329. இந்நாள் ரட்சிப்புக் கேற்ற நல் நாள்

இந்நாள் ரட்சிப்புக் கேற்ற நல் நாள்,
ஏற்ற நல் நாள் , ஏற்ற நல் நாள்
சொன்னார் கிறிஸ்துனக்குக் கிருபையைச் சொரிந்து
பாடனு பவங்களை ஒழிப்போமோ? - யூத

1. சந்தோஷந்தனைச் சொல்ல வந்தேன் - தேவ
சமாதான வார்த்தையைப் பெலனாகத் தந்தேன்

2. வாடித் திகைத்துப் புலம்பாதே - உன்தன்
மனதில் அவிசுவாசம் வைத்துக் கலங்காதே

3. உலகச் சிநேகம் வெகு கேடு - அதற்
குடந்தைப் படாமல் ஜீவ மார்க்கத்தைத்தேடு

4. இன்றுன் இரட்சகரிடம் திரும்பு - அவர்
இயற்றும் சம்பூரண ஜீவனை விரும்பு

5. இனிமேலாகட்டும் , என் றெண்ணாதே - பவ
இச்சைக் குட்பட்டால் , திரும்ப ஒண்ணாதே

6. கிறிஸ் தேசுவை உற்றுப்பாரு - அவர்
கிருபையாய்ச் சிந்தின ரத்தத்தைச் சேரு

7. பாவங்கள் அறச் சுத்திகரிப்பார் - உனைப்
பரிசுத்த வஸ்திரத்தால் அலங்கரிப்பார்

8. மகிமை நிறைந்த கிரீடஞ் சூடி - நித்திய
வாழ்வை அருள்வார் உனக்கின்பங் கொண்டாடி

9. ஏசுபெருமானை நீ நம்பு - அவர்
என்றென்றைக்கும் உனக் கிரட்சிப்பின் கொம்பு

Tamil Hymns

330. இப்போ நாம் பெத்லெகேம்

1. இப்போ நாம் பெத்லெகேம் சென்று
ஆச்சரிய காட்சியாம்
பாலனான நம் ராஜாவும்
பெற்றோரும் காணலாம்;
வான் ஜோதி மின்னிட
தீவிரித்துச் செல்வோம்,
தூதர் தீங்கானம் கீதமே
கேட்போம் இத்தினமாம்.

2.இப்போ நாம் பெத்லெகேம் சென்று
ஆச்சரிய காட்சியாம்
பாலனான நம் ராஜாவும்
பெற்றோரும் காணலாம்;
தூதரில் சிறியர்
தூய தெய்வ மைந்தன்;
உன்னத வானலோகமே
உண்டிங் கவருடன்.

3. இப்போ நாம் பெத்லெகேம் சென்று
ஆச்சரிய காட்சியாம்
பாலனான நம் ராஜாவும்
பெற்றோரும் காணலாம்;
நம்மை உயர்த்துமாம்
பிதாவின் மகிமை!
முந்தி நம்மில் அன்புகூர்ந்தார்,
போற்றுவோம் தெய்வன்பை.

4. அப்போ நாம் ஏகமாய்க் கூடி
விஸ்வாசத்தோடின்றே
சபையி தங்கும் பாலனின்
சந்நிதி சேர்வோமே;
மகிழ்ந்து போற்றுவோம்
ஜோதியில் ஜோதியே!
கர்த்தா! நீர் பிறந்த தினம்
கொண்டாடத் தகுமே.

Tamil Hymns

331. இமைப்பொழுதும் என்னை கைவிடமாட்டீர்

இமைப்பொழுதும் என்னை கைவிடமாட்டீர்
ஒரு நாளும் விட்டு விலகமாட்டீர்
நீர் கைவிடா கன்மலையே
நித்தமும் காப்பவரே

1. நீரே என் அடைக்கலம்
என் கோட்டை என் கேடகம்
நான் நம்பும் தெய்வம் என்று சொல்லுவேன்
வேடனுடைய கண்ணிக்கும்
பாழாக்கும் கொள்ளை நோய்க்கும்
தப்புவித்து சிறகால் மூடி மறைக்கிறீர்

2. கர்த்தர் என் மேய்ப்பர் நான் தாழ்ச்சியடையேன்
புல்லுள்ள இடங்களில் என்னை மேய்க்கிறீர்
அமர்ந்த தண்ணீர் அண்டையில் என்னை
கொண்டு போய்விடுகிறீர்
ஆத்துமாவை தேற்றி திருப்தியாய் நடத்துகிறீர்

3. சத்துருக்கள் முன்பாய் ஒரு பந்தி ஆயத்தப்படுத்தி
என் தலையை எண்ணெய்யால் அபிஷேகித்தீர்
ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும்
என்னை தொடரும்
உம் வீட்டில் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்
அல்லேலூயா அல்லேலூயா - (2)

4. பயமில்லை பயமில்லை எந்தன் குடும்பம்
உந்தன் கையில்
பயமில்லை பயமில்லை என் எதிர்காலம்
உந்தன் கையில்

5. நடத்துவீர் நடத்துவீர் கரம் பிடித்து நடத்துவீர்
காத்துக் கொள்வீர் காத்துக் கொள்வீர்
கண்மணிபோல காப்பீர்

6. அகற்றுவீர் அகற்றுவீர் என் வியாதிகளை அகற்றுவீர்
பார்த்துக்கொள்வீர் பார்த்துக்கொள்வீர்
என் தேவையை பார்த்துக் கொள்வீர்

7. என்னை பலுகச் செய்வீர் பெருகச் செய்வீர்
நீண்ட ஆயுசு தந்து காப்பாற்றுவீர்

Tamil Hymns

குடும்பத்தை பேழையில் வைத்து காப்பாற்றுவீர்
குடும்பத்தை வேலி அடைத்து காப்பாற்றுவீர்

Tamil Hymns

332. இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்

இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்
அவர் இனியும் நடத்திடுவார்
அவர் கிருபை என்றென்றுமுள்ளது

1. தாழ்வில் நினைத்தவரே
என்னை தயவாய் தூக்கினீரே
சத்துருவின் கையினின்று விடுதலை தந்தவரை
என்றென்றும் ஸ்தோத்திரிப்பேன்

2. உம் வார்த்தையால் தேற்றினீரே
ஆத்துமாவில் பெலன் தந்தீரே
கூப்பிடும் போது பதில் தரும் தேவனே
உம்மையே ஆராதிப்பேன்

3. உம் நீதியின் வலக்கரத்தால்
என்னை தாங்கி இரட்சிப்பவரே
எனக்காக யாவையும் செய்து முடிப்பார்
என்றென்றும் நம்பிடுவேன்

Tamil Hymns

333. இம்மட்டும் கைவிடா தேவன்

இம்மட்டும் கைவிடா தேவன்
இனியும் கைவிட மாட்டார்
தாயின் வயிற்றில் தாங்கினார்
ஆயுள் முழுதும் தாங்குவார்
தாங்குவார் தப்புவிப்பார்
ஏந்துவார் என் தெய்வம்

1. ஆயன் இயேசு ஆடு நான்
ஆதலால் பயமில்லை
சாத்தான் பறிக்க முடியாது
சபிக்கின்றேன் இயேசு நாமத்தில்

2. இயேசு கிறிஸ்து வசனத்தால்
எல்லா நாளும் சந்தோஷம்
வியாதி வறுமை வேதனை
எது தான் பிரிக்க முடியுமோ

3. கர்த்தர் எனக்காய் யுத்தம் செய்வார்
கலக்கம் எனக்கு இனியில்லை
துதித்து துதித்து நாளெல்லாம்
துரத்திடுவேன் சத்துருவை

334. இம்மட்டும் ஜீவன் தந்த

1. இம்மட்டும் ஜீவன் தந்த
கர்த்தாவை அத்தியந்த
பணிவோடுண்மையாக
இஸ்தோத்திரிப்போமாக.

2. நாள் பேச்சைப்போல் கழியும்
தண்ணீரைப்போல் வடியும்;
இதோ, இந்தாள் வரைக்கும்
இவ்வேழை மண் பிழைக்கும்.

3. அநேக விதமான
இக்கட்டையும், உண்டான
திகிலையும் கடந்தோம்;
கர்த்தாவின் மீட்பைக் கண்டோம்.

4. அடியார் எச்சரிப்பும்
விசாரிப்பும் விழிப்பும்,
தயாபரா, நீர் தாமே
காக்காவிட்டால் வீணாமே.

5. தினமும் நவமான
அன்பாய் நீர் செய்ததான
அநுக்ரகத்துக்காக
துதி உண்டாவதாக.

6. துன்னாளில் நாங்கள் தாழ்ந்து
நொந்தாலும், உம்மைச் சார்ந்து
நிலைக்கிறதற்காக
திடன் அளிப்பீராக.

7. மா ஜன சேதத்துக்கும்,
உண்டான போர்களுக்கும்
ஓர் முடிவு வரட்டும்,
நொறுங்கினதைக் கட்டும்.

8.சபையை ஆதரித்து,
அன்பாய் ஆசீர்வதித்து,
எல்லாருக்கும் அன்றன்றும்
அருள் உதிக்கப்பண்ணும்.

Tamil Hymns

9. பொல்லாரைத் தயவாக
திருப்பிக்கொள்வீராக;
இருளிலே திரியும்
ஜனத்துக்கொளி தாரும்.

10. திக்கற்றவரைக் காரும்,
நோயாளிகளைப் பாரும்,
துக்கித்தவரைத் தேற்றும்,
சாவோரைக் கரையேற்றும்.

11. பரத்துக்கு நேராக
நடக்கிறதற்காக,
அடியாரை எந்நாளும்
தெய்வாவியாலே ஆளும்.

12. அடியார் அத்தியந்த
பணிவாய்க் கேட்டுவந்த
வரங்களை அன்பாக
தந்தருளுவீராக.

335. இம்மானுவேலின் இரத்தத்தால்

1. இம்மானுவேலின் இரத்தத்தால்
நிறைந்த ஊற்றுண்டே
எப்பாவத் தீங்கும் அதினால்
நிவிர்த்தியாகுமே

2. மா பாவியான கள்ளனும்
அவ்வூற்றில் மூழ்கினான்
மன்னிப்பும் மோட்சானந்தமும்
அடைந்து பூரித்தான்

3. அவ்வாறே நானும் யேசுவால்
விமோசனம் பெற்றேன்
என் பாவம் நீங்கிப் போனதால்
ஓயாமல் பாடுவேன்

4. காயத்தில் ஓடும் ரத்தத்தை
விஸ்வாசத்தால் கண்டேன்
ஒப்பற்ற மீட்பர் நேசத்தை
எங்கும் பிரஸ்தாபிப்பேன்

5. பின் விண்ணில் வல்ல நாதரை
நான் கண்டு பூரிப்பேன்
அங்கென்னை மீட்ட நேசத்தைக்
கொண்டாடிப் போற்றுவேன்

336. இயேசப்பா உங்க நாமத்தில்

இயேசப்பா உங்க நாமத்தில்
இன்றும் அற்புதங்கள் நடக்குது
பேய்கள் ஓடுது நோய்கள் தீருது
பாவங்கள் பறந்தோடுது - 2

உந்தன் வல்லமைகள் குறைந்து
போகவில்லை - உந்தன்
உயிர்தெழுதல் மகிமை மாறவில்லை-2

1. துன்பங்கள் தொல்லைகள்
வியாதிகள் வறுமைகள்
வந்தாலும் எம் இயேசு குணமாக்குவார்
விசுவாசம் நமக்குள் இருந்தால் போதும்
தேவ மகிமையை கண்டிடுவோம்

2. மந்திரம் சூனியம் செய்வினை கட்டுக்கள்
இன்றே நம் இயேசு உடைத்தெறிவார்
ஆவியானவர் நமக்குள் இருப்பதால்
உலகத்தை நாம் கலக்கிடுவோம்

3. சாத்தானின் சதிகளா பாவத்தின் வாழ்க்கையா
இன்றே நம் இயேசு உடைத்தெறிவார்
துதியின் ஆயதம் நமக்குள் இருப்பதால்
அசுத்த ஆவியை துரத்திடுவோம்

337. இயேசப்பா உம்மைத் தேடி வந்தேனே

இயேசப்பா உம்மைத் தேடி வந்தேனே
இங்கு எல்லமே விட்டு விட்டு வந்தேனே
எனக்கெல்லாமே நீர் தானே
என் வாழ்வெல்லாம் நீர் தானே
என் சொந்தம் பந்தம் யாவும் நீரே

1. சொந்தம் என்று சொன்னவுடனே
உம்மைத் தானே நினைக்கின்றேன்
உம்மை அறிந்த நாளிலிருந்து
உம்மையே அண்டி கிடக்கின்றேன்
அன்பு என்றாலே உமதன்பு ஒன்றுதானே
என்று மாறா அன்பு ஐயா
உயிரே உயிரே இங்கு
நீரின்றி நானில்லையே
உம்மையன்றி யாரை நம்பி
நானும் தேடி போவது

2. என் மனதின் வேதனையெல்லாம்
புரிந்து கொள்வார் யாருமில்லை
இதயம் நொறுங்கி கலங்கும் நேரம்
அன்பு காட்டவும் யாருமில்லை
அன்பே நீர் மட்டும் என்
வாழ்வில் இல்லையென்றால்
என்றோ மண்ணாகிப் போயிருப்பேன்
இயேசுவே இயேசுவே என்மேல்
கரிசனை உள்ளவரே
என்னை அறிந்த என் மனம் புரிந்த
ஒரு ஜீவன் நீரே ஐயா

Tamil Hymns

338. இயேசப்பா நானும் வருகிறேன்

இயேசப்பா நானும் வருகிறேன்
கலிலேயா கடலோரமாய்
என்னைவிட்டு போகாதீங்க ராஜா
என்னுள்ளம் தாங்காதுங்க -2
ஒலிவமலையில்ஏறி மறுரூபமானீங்க
கடலின் மேலே நடந்து அதிசயம் செய்தீங்க-2

1. எம்மாவூரு சீடரோடு நடந்து சென்றீங்க
என்னோடு இன்று நடந்து வாருங்க -2
அதுவே என் வாஞ்சை அதுவே என் தாகம்
அதுதான் என் சந்தோஷமே -2

2. மார்த்தாள் அழைத்த போது கூடப்போனீங்க
மரித்த லாசரை உயிர்தெழும்பச் செய்தீங்க
உம்மாலே கூடும் எல்லாம் கூடும்
கூடாதது ஒன்றுமில்லை

3. மோசேயோடு கூட நடந்து சென்றீங்க
கடலைப் பிளந்து நடக்க உதவி செய்தீனங்க
அற்புத தேவன் அதிசய தேவன்
எல்லாம் நீர் செய்திடுவீர்

Tamil Hymns

339. இயேசு அழைக்கிறார்

இயேசு அழைக்கிறார் இயேசு அழைக்கிறார்
ஆவலாய் உன்னைத் தம் கரங்கள் நீட்டியே
இயேசு அழைக்கிறார் - இயேசு அழைக்கிறார்

1. எத்துன்ப நேரத்திலும்
ஆறுதல் உனக்களிப்பார் - என்றுணர்ந்து
நீயும் இயேசுவை நோக்கினால்
எல்லையில்லா இன்பம் பெற்றிடுவாய்

2. கண்ணீரெல்லாம் துடைப்பார்
கண்மணிபோல் காப்பார் - கார்மேகம்
போன்ற கஷ்டங்கள் வந்தாலும்
கருத்துடன் உன்னைக் காத்திடவே

3. சோர்வடையும் நேரத்தில்
பெலன் உனக்களிப்பார் - அவர்
உன் வெளிச்சம் இரட்சிப்புமானதால்
தாமதமின்றி நீ வந்திடுவாய்

4. சகல வியாதியையும்
குணமாக்க வல்லவராம்
யாராயிருந்தாலும் பேதங்கள் இன்றியே
கிருபையாய் அன்பை அளித்திடவே

340. இயேசு அற்புதமானவரே

இயேசு அற்புதமானவரே - இயேசு அற்புதமானவரே
அவர் மீட்டென்னைக் காத்தென்னைத் தாங்குகிறார்
அவர் அற்புதமானவரே

இயேசு உன்னதர் என்றனரே - இயேசு உன்னதர் என்றனரே
விண் , சூரிய , சந்திர , நட்சத்திரங்கள்
அவர் உன்னதர் என்றனரே

இயேசு அற்புதமானவரே - இயேசு அற்புதமானவரே
அவர் சிங்கத்தின் வாயைக் கட்டினாரே
அவர் அற்புதமானவரே

இயேசு உன்னதர் என்றனரே - இயேசு உன்னதர் என்றனரே
அவர் காற்றையும் கடலையும் அதட்டினாரே
அவர் உன்னதர் என்றனரே

341. இயேசு இன்பமானவர் இயேசு

இயேசு இன்பமானவர் இயேசு மகிமையானவர்
பாவசாப ரோகம் நீக்க வல்லமையானவர் (2)
1. அதிசயமானவர் அற்புதமானவர்
அருமையானவர் அடைக்கலமானவர் (2)
2. உன்னதமானவர் உண்மையானவர்
வெண்மையானவர் மேன்மையானவர் (2)
3. நித்தியமானவர் நிரந்தரமானவர் நீதியானவர்
நிலைவரமானவர் (2)

342. இயேசு எனக்கு ஜீவன் தந்தாரே

1. இயேசு எனக்கு ஜீவன் தந்தாரே (2)

துதி பாடல் நான் பாடி
இயேசுவையே போற்றி
என்றென்றும் வாழ்ந்திடுவேன்
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா -4

2. சமாதானம் தந்தார் இயேசு -4

3. புது வாழ்வு தந்தார் இயேசு -4

4. விடுதலை தந்தார் இயேசு -4

5. வல்லமை தந்தார் இயேசு -4

6. அபிஷேகம் தந்தார் இயேசு -4

343. இயேசு எங்கள் மேய்ப்பர் கண்ணீர்

1. இயேசு எங்கள் மேய்ப்பர்கண்ணீர் துடைப்பார்
மார்பில் சேர்த்தணைத்துபயம் நீக்குவார்
துன்பம் நேரிட்டாலும் இன்பம் ஆயினும்
இயேசுவின்பின் செல்வோம் பாலர் யாவரும்

2. நல்ல மேய்ப்பர் சத்தம் நன்றாய் அறியோம்
காதுக்கின்பமாக கேட்டுக் களிப்போம்
கண்டித்தாலும் நேசர் ஆற்றித் தேற்றூவார்
நாங்கள் பின்னே செல்ல வழி காட்டுவார்

3. ஆட்டுக்காக மேய்ப்பர் ரத்தம் சிந்தினார்
அதில் மூழ்கினாரே தூயர் ஆகுவார்
பாவ குணம் நீக்கி முற்றும் ரட்சிப்பார்
திவ்விய தூய சாயல் ஆக மற்றுவார்

4. இயேசு நல்ல மேய்ப்பர் ஆட்டைப் போஷிப்பார்
ஓனாய்கள் வந்தாலும் தொடவே ஒட்டார்
சாவின் பள்ளத்தாக்கில் அஞ்சவே மாட்டோம்
பாதாளத்தின்மேலும் ஜெயங்கொள்ளுவோம்

Tamil Hymns

344. இயேசு எந்தன் மேய்ப்பர்

இயேசு எந்தன் மேய்ப்பர் எனக்கொன்றும் குறையில்லை
அவரே எந்தன் மேய்ப்பர் நான் தாழ்ச்சி அடைவதில்லை (2)

குறையில்லை குறையில்லை குறையில்லை
நான் தாழ்ச்சி என்றும் அடைவதில்லை (2)

1. புல்லுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை நடத்தி
அவர் எந்தன் ஆத்துமாவை தேற்றி
நீதியின் பாதையில் நடத்தி - என்னை --- குறை

2. மரண இருளின் பள்ளத்தாக்கு
பொல்லாப்புக்கு ஒரு போதும் பயப்படேன்
தேவரீர் என்னோடு இருக்கிறீர்
உம் கோலும் உம் தடியும் என்னை தேற்றும் --- குறை

Tamil Hymns

345. இயேசு எந்தன் நேசரே கண்டேன் வேத

1. இயேசு எந்தன் நேசரே,
கண்டேன் வேத நூலிலே;
பாலர் அவர் சொந்தந்தான்,
தாங்க அவர் வல்லோர்தான்

இயேசு என் நேசர், இயேசு என் நேசர்
இயேசு என் நேசர், மெய் வேத வாக்கிதே

2. என்னை மீட்க மரித்தார்
மோட்ச வாசல் திறந்தார்
எந்தன் பாவம் நீக்குவார்
பாலன் என்னை இரட்சிப்பார்

3. பெலவீனம் நோவிலும்
என்றும் என்னை நேசிக்கும்
இயேசு தாங்கித் தேற்றுவார்
பாதுகாக்க வருவார்

4. எந்தன் மீட்பர் இயேசுவே
தாங்குவார் என்னருகே
நேசனாய் நான் மரித்தால்
மோட்சம் சேர்ப்பார் அன்பினால்

Tamil Hymns

346. இயேசு எந்தன் வாழ்வின்

இயேசு எந்தன் வாழ்வின் பெலனானால்
எனக்கென்ன ஆனந்தம் (2)

1. எந்தன் வாலிப காலமெல்லாம்
எந்தன் வாழ்க்கையின் துணையானார்
உம் நாமமே தழைத்தோங்க
நான் பாடுவேன் உமக்காக

எந்தன் இதயமே உம்மைப் பாடும்
எந்தன் நினைவுகள் உமதாகும்

2. பெரும் தீமைகள் அகன்றோட
பொல்லா மாயைகள் மறைந்தோட
உமதாவியின் அருள் காண
வரும் காலங்கள் உமதாகும்

3. இந்த உலகத்தை நீர் படைத்தீர்
எல்லா உரிமையும் எனக்களித்தீர்
உம் நாமமே தழைத்தோங்க
நான் பாடுவேன் உமக்காக

Tamil Hymns

347. இயேசு என் அஸ்திபாரம்

இயேசு என் அஸ்திபாரம்
ஆசை எனக்கவரே - நேச முசிப்பாறுதல்
இயேசுவில் கண்டேன் யானும்

1. என்ன மதுரம் அவர் - நன்னய நாமச் சுவை
என்னகத்தில் நினைத்தால்
இன்னல் பறந்திடுமே

2. பஞ்சம் பசியுடனே - மிஞ்சும் துயர்
வந்தாலும் - அஞ்சிடேன் இவையை
என் தஞ்சம் இயேசு இருக்கையில்

3. லோகம் என்னை எதிர்த்து
போவென்று சொல்லிடினும் - சோகம்
அடைவேனோ என் ஏகன் எனக்கிருக்க

4. வியாதியால் எந்தனது - காயம் கெட்டுப்
போயினும் மாயத்தோற்றத்தை
இயேசு நாயகன் மாற்றிடுவார்

5. என்னென்ன மாய லோகக்
கன்னல் என்மேல் வந்தாலும்
முன்னும் பின்னுமாய் இயேசு
என்னை நடத்திடுவார்

348. இயேசு என் பரிகாரி இன்ப இயேசு

இயேசு என் பரிகாரி
இன்ப இயேசு என் பரிகாரி
என் ஜீவிய நாட்களெல்லாம்
இன்ப இராஜா என் பரிகாரி

1. என்ன துன்பங்கள் வந்தாலும்
என்ன வாதைகள் நேர்ந்தாலும்
என்ன கஷ்டங்கள் சூழ்ந்தாலும்
இராஜா என் பரிகாரி

2. சாத்தான் என்னை எதிர்த்தாலும்
சத்துரு என்னை தொடர்ந்தாலும்
சஞ்சலங்கள் வந்த போதும்
இராஜா என் பரிகாரி

3. பணக் கஷ்டங்கள் வந்தாலும்
மனக் கஷ்டம் நேர்ந்தாலும்
ஜனமே என்னை வெறுத்தாலும்
இராஜா என் பரிகாரி

4. எனக்கென்ன குறை உலகில்
என் இராஜா துணை எனக்கு
என் ஜீவிய நாட்களெல்லாம்
இராஜா என் பரிகாரி

Tamil Hymns

349. இயேசு என் வாழ்வினில் இன்பம்

இயேசு என் வாழ்வினில் இன்பம்
இகமதில் அவரைப் புகழுவேன் (2)

1. பாவங்கள் போக்கிடும் நாமம்
பரிசுத்தம் நிறைந்த நல் நாமம்
அகமதிலே அருள் தனையே
அளிக்கும் அன்பு தேவன் - இயேசு

2. கண்ணீர் துடைத்திடும் கரங்கள்
காயம் ஏற்ற நல் கரங்கள்
கருணை மிகும் கரங்களையே
நீட்டி அழைக்கும் தேவன் - இயேசு

3. நன்மை செய்திடுங் கால்கள்
நல்லோரைத் தேடிடுங் கண்கள்
அளவில்லாத ஆசீர்களையே
அளிக்கும் நல்ல தேவன் - இயேசு

4. இயேசு காட்டும் பாதை
இடறில்லா அன்பின் வழியே
ஜீவ வழி என்றவரே
ஜீவன் தந்த தேவன் - இயேசு

5. சிலுவையில் தொங்கும் மீட்பர்
சிறந்த வாழ்வின் பங்கு
சுதந்திரமே நல்கிடுவார்
சுகமாய் தங்கி வாழ்வேன் - இயேசு

350. இயேசு என் வாழ்வில் வந்ததினால்

1. இயேசு என் வாழ்வில் வந்ததினால்
ஆனந்தம் பேரானந்தம்
என் மீட்பர் மகிழ்ச்சி தந்தார்
என்றென்றும் நான் பாடுவேன்

அல்லேலூயா அல்லேலூயா

2. இயேசு என் வாழ்வில் வந்ததினால்
பரலோக சந்தோஷமே
சுகம் தந்தார் பெலன் ஈந்தார்
எந்நாளும் நான் பாடுவேன்

3. இயேசு என் வாழ்வில் வந்ததினால்
எந்தன் பாதையில் வெளிச்சமே
இருள் நீக்கி ஒளி தந்தார்
ஓயாமல் நான் பாடுவேன்

351. இயேசு என் தலைவர் ஜீவனின் அதிபர்

இயேசு என் தலைவர் ஜீவனின் அதிபர்
சந்தோஷம் சந்தோஷமே
இகத்தினில் அவர்போல் அன்பதாய்க் காப்பார்
யார் உண்டு சொல் மனமே (2)

1. நாள் மட்டும் நடத்தினாரே
நன்மையால் சூட்டினாரே
கரம் நீட்டித் தூக்கினாரே
சுகம் சுகம் அவர் நிழலே
முகம் முகம் அவரைத் தரிசிக்கும் நாளே
எனக்கு ஓர் பொன்னாளே (2)

2. இந்திய தேசம் வர
இளமையில் எழுந்து நின்றார்
சிறுவனே உட்கார் என்றார்
கேரியோ வென்று வந்தார்
மனிதனின் சிந்தை சோர்பு அளிக்கும்
உற்சாகம் செய்வார் இயேசு (2)

3. ஆசையாய் ஆதரித்தோர்
சீற்றத்தால் அகன்றே போனார்
தேவனோ அவன் அருகில்
அதோனிராம் ஜட்சன் வென்றான்
மனிதரைச் சார்ந்தால் மண்வீடாய் போவாய்
தேவனைப் பற்றி நீ வாழ் (2)

4. ஓசன்னா சொன்னோர் எங்கே?
ஓடிடேன் என்றோன் எங்கே?
சிலுவையின் சுமை தணிக்க
பழகியோர் யாரும் இல்லை
இறுதிவரை நான் உம் சார்பில் நிற்க
அருள் ஈயும் இயேசு நாதா (2)

Tamil Hymns

352. இயேசு என்தன் நேசரே

1. இயேசு என்தன் நேசரே,
கண்டேன் வேத நூலிலே;
பாலர் அவர் சொந்தந்தான்,
தாங்க அவர் வல்லோர்தான்.

இயேசு என் நேசர்,
இயேசு என் நேசர்,
இயேசு என் நேசர்,
மெய் வேத வாக்கிதே.

2. என்னை மீட்க மரித்தார்,
மோட்ச வாசல் திறந்தார்,
என்தன் பாவம் நீக்குவார்,
பாலன் என்னை ரட்சிப்பார்.

3. பெலவீனம் நோவிலும்,
என்றும் என்னை நேசிக்கும்
இயேசு தாங்கித் தேற்றுவார்,
பாதுகாக்க வருவார்.

4. என்தன் மீட்பர் இயேசுவே,
தாங்குவார் என்னருகே;
நேசனாய் நான் மரித்தால்
மோட்சம் சேர்ப்பார் அன்பினால்.

353. இயேசு என்ற திருநாமத்திற்கு

இயேசு என்ற திருநாமத்திற்கு
எப்போதுமே மிகத் தோத்திரம்

1. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வல்லமையுள்ள நாமமது
தூயர் சொல்லித் துதித்திடும் நாமமது - 2

2. வேதாளம் பாதாளம் யாவையும் ஜெயித்த
வீரமுள்ள திரு நாமமது
நாமும் வென்றிடுவோமிந்த நாமத்திலே

3. பாவத்திலே மாளும் பாவியை மீட்கப்
பாரினில் வந்த மெய் நாமமது
பரலோகத்தில் சேர்க்கும் நாமமது

4. உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது
உலகெங்கும் ஜொலித்திடும் நாமமது

5. சஞ்சலம் வருத்தம் சோதனை நேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது
தடைமுற்று மகற்றிடும் நாமமது

Tamil Hymns

354. இயேசு என்னில் வந்தார் என்

இயேசு என்னில் வந்தார்
என் வாழ்வில் சந்தோஷமே
என் பாவம் முற்றும் சுமந்தார்
என் வாழ்வில் சந்தோஷமே
நோய்களை எல்லாம் நீக்கினார்
என் வாழ்வில் சந்தோஷமே
தம் பிள்ளையாக தெரிந்தார்

என் வாழ்வில் சந்தோஷமே
நான் பாடி ஸ்தோத்தரிப்பேன்
ஆராதித்து சந்தோஷிப்பேன்
பாடி போற்றி ஆடி பாடி
ஹாலேலூயா ஹாலேலூயா

1. என் மனதை கவர்ந்த நேசரே
நான் பாடி கொண்டாடுவேன்
உலகில் பெரிய தேவனே
நான் பாடி கொண்டாடுவேன்
உயிருள்ள நாட்கள் எல்லாம்
நான் பாடி கொண்டாடுவேன்

2. துதிக்கு பாத்திரர் இயேசுவை
நான் பாடி கொண்டாடுவேன்
என் பெலனாகிய இயேசுவே
நான் பாடி கொண்டாடுவேன்
என்னில் கிருபை கொண்ட இயேசுவே
நான் பாடி கொண்டாடுவேன்

355. இயேசு என்னும் நாமத்தில்

இயேசு என்னும் நாமத்தில் (2)
ஜெயம் நமக்குண்டு
இயேசு என்னும் நாமத்தில் (2)
பேய்கள் பறந்தோடும்
இயேசு நாமத்தில் நிற்கும்போது
யார் நமக்கெதிரே நிற்பார்கள்
இயேசு இயேசு நாமத்திலே
ஜெயம் நமக்குண்டு

In the name of Jesus (2)
We have the victory
In the name of Jesus (2)
Demons will have to flee
When we stand on the name of Jesus
Tell me who can stand before
In the name of Jesus, Jesus
We have the victory

356. இயேசு என்னோடு இருப்பத நெனைச்சிட்டா

இயேசு என்னோடு இருப்பத நெனைச்சிட்டா
என்னுள்ளம் துள்ளுதம்மா
நன்றி என்று சொல்லுதம்மா

1. கவலை கண்ணீரெல்லாம்
கம்ப்ளீட்டா மறையுதம்மா
பயங்கள் நீங்குதம்மா
பரலோகம் தெரியதம்மா

அகிலம் ஆளும் தெய்வம்
என் அன்பு இதய தீபமே

2. பகைமை கசப்பு எல்லாம்
பனிபோல மறையுதம்மா
பாடுகள் சிலுவை எல்லாம்
இனிமையாய் தோன்றுதம்மா

3. உலக ஆசை எல்லாம்
கூண்டோடே மறையுதம்மா
உறவு பாசமெல்லாம்
குப்பையாய் தோன்றுதம்மா

4. எரிகோ கோட்டை எல்லாம்
இல்லாமல் போகுதம்மா
எதிர்க்கும் செங்கடல்கள்
இரண்டாய் பிரியுதம்மா

357. இயேசு கற்பித்தார்

1. இயேசு கற்பித்தார் ஒளி வீசவே
சிறுதீபம் போல இருள் நீக்கவே
அந்தகார லோகில் ஒளி வீசுவோம்
அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம்

2. முதல் அவர்க்காய் ஒளி வீசுவோம்
ஒளி மங்கிடாமல் காத்துக்கொள்ளுவோம்!
இயேசு நோக்கிப்பார்க்க ஒளி வீசுவோம்
அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம்

3. பிறர் நன்மைக்காய் ஒளி வீசுவோம்
உலகின் மாஇருள் நீக்க முயல்வோம்
பாவம் சாபம் யாவும் பறந்தோடிப்போம்
அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம்

358. இயேசு கிறிஸ்து ஆண்டவர்

இயேசு கிறிஸ்து ஆண்டவர்
இந்தியாவின் இரட்சகர் -4

1. **கஷ்டமோ துன்பமோ**
கர்த்தரிடம் செல்லுவோம் -3

2. **உனக்காக சிலுவையை**
சுமந்தாரே என் இயேசு

3. **உன்னையும் என்னையும் இயேசு**
கிறிஸ்து நேசிக்கிறார்

Tamil Hymns

359. இயேசுகிறிஸ்து என் ஜீவன்

இயேசுகிறிஸ்து என் ஜீவன்
சாவது ஆதாயமே
வாழ்வது நானல்ல
இயேசு என்னில் வாழ்கின்றார்

1. இயேசுவை நான் எற்றுக் கொண்டேன்
அவருக்குள் நான் வேர் கொண்டேன்
அவர் மேல் எழும்பும் கட்டடம் நான்
அசைவதில்லை தளர்வதும் இல்லை

2. என்ன வந்தாலும் கலங்கிடாமல்
இடுக்கண் நேரம் ஸ்தோத்தரிப்பேன்
அறிவைக் கடந்த தெய்வீக அமைதி
அடிமை வாழ்வின் கேடயமே

3. எனது ஜீவன் கிறிஸ்துவுடனே
தேவனுக்குள்ளே மறைந்தது
ஜீவன் கிறிஸ்து வெளிப்படும் நாளில்
மகிமையில் நான் வெளிப்படுவேனே

4. கிறிஸ்துவுக்குள்ளே இரத்தத்தினாலே
பாவ மன்னிப்பின் மீட்படைந்தேன்
அவரை அறியும் அறிவிலே வளர்வேன்
அவரின் விருப்பம் செய்தே மகிழ்வேன்

Tamil Hymns

360. இயேசு கிறிஸ்து மாறாதவரே

இயேசு கிறிஸ்து மாறாதவரே
மாறாதவரே மாறாதவரே
ஆமாம் இயேசு கிறிஸ்து மாறாதவரே
நித்திய நித்தியமாய்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

Tamil Hymns

361. இயேசு கிறிஸ்துவின் அன்பு

இயேசு கிறிஸ்துவின் அன்பு
என்றும் மாறாதது இயேசு கிறிஸ்துவின்
மாறா கிருபை என்றும் குறையாதது

1. பாவி என்றென்னை அவர்
தள்ளவே மாட்டார் - ஆவலாய்
உன்னை அழைக்கிறாரே
தயங்கிடாதே தாவி ஓடிவா
தந்தை இயேசுவின்
சொந்தம் கொள்ளவா - (2)

2. உன் மீறுதல்கள்காய் இயேசு
காயங்கள் பட்டார்
உன் அக்கிரமங்கள்காய்
இயேசு நொறுக்கப்பட்டார்
உனக்காகவே அவர் அடிக்கப்பட்டார் - உன்னை
உயர்த்த தன்னை தாழ்த்தினார்

3. கள்ளர் மத்தியில் ஒரு கள்வனை போல
குற்ற மற்ற கிறிஸ்தேசு தொங்கினாரே
பாவி உனக்காய் அவன் கரங்கள்
பார சிலுவை சுமக்கிறதே

Tamil Hymns

362. இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்

1. இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்
விசுவாசத்தில் முன் நடப்போம்
இனி எல்லோருமே அவர் பணிக்கெனவே
ஒன்றாய் எந்நாளும் உழைத்திடுவோம்

நம் இயேசு இராஜாவே
இதோ வேகம் வாராரே
அதி வேகமாய் செயல்படுவோம்

2. மனிதர் யாரிடமும் பாசம் காட்டுவோம்
இயேசு மந்தைக்குள் அழைத்திடுவோம்
அதி உற்சாகமாய் அதி சீக்கிரமாய்
இராஜ பாதையைச் செவ்வையாக்குவோம்

3. சாத்தானின் சதிகளைத் தகர்த்திடுவோம்
இனி இயேசுவுக்காய் வாழ்ந்திடுவோம்
இந்தப் பார் முழுவதும் இயேசு நாமத்தையே
எல்லா ஊரிலும் எடுத்துரைப்போம்

4. ஆவி ஆத்துமா தேகம் அவர் பணிக்கே
இனி நான் அல்ல, அவரே எல்லாம்
என முடிவு செய்தோம் அதில் நிலைத்திருப்போம்
அவர் நாளினில் மகிழ்ந்திடுவோம்

Tamil Hymns

363. இயேசு கிறிஸ்துவின் நாமமிதே

இயேசு கிறிஸ்துவின் நாமமிதே இனிமையாமே
இன்பமதுவே ஏழைக்கும் ஆறுதலே

1. நாமம் அதிசயமே தேவதாசரின் புகலிடமே
நானிலந்தனிலே யாவரும் வணங்கிடவே
நாதன் இயேசுவின் நாமமதையே
நன்றியுடன் புகழ்வோம்

2. அளிப்பேன் யாவுமே
என் நாமத்தில் என்றனரே - அழித்த
வலியவனை வல்லமையுண்டதிலே
களிப்போம் வல்ல நாமத்திலே
கனிந்தே பாடிடுவோம்

3. நோய்கள் நீக்கிடவும்
நவ பாஷைகள் பேசிடவும்
சர்ப்பங்களை எடுக்க சக்தி ஈந்துதவும்
உத்தமர்கள் போற்றிப் புகழும்
கர்த்தரின் நாமமதே

4. சாவுக்கேதுவான கொடும்
நஞ்சைப் பருகிடினும்
சேதப்படுத்தாதே காக்க வல்லதுவே
நாதன் ஈந்த தைலமெனவே
நமக்காய் ஊற்றுண்டதே

5. பாவ இருள்தனை போக்கும்
புண்ணிய நாமமதாய்
பாரில் இறங்கினாரே தேவனின் அன்பதுவே
இயேசு கிறிஸ்துவே நேசரிவரே
ஆசைக்குகந்தவரே

Tamil Hymns

364. இயேசு கூட வருவார் எல்லாவித

இயேசு கூட வருவார்
எல்லாவித அற்புதம் செய்வார்

1. நோய்கள் பேய்கள் ஓட்டிடுவார்
நொந்துபோன உள்ளத்தை தேற்றிடுவார்

2. வேதனை துன்பம் நீக்கிடுவார்
சமாதானம் சந்தோஷம் எனக்குத் தருவார்

3. கடன்தொல்லை கஷ்டங்கள் நீக்கிடுவார்
கண்ணீர்கள் அனைத்தையும் துடைத்திடுவார்

4. எடுத்த காரியத்தில் வெற்றி பெறுNவுன்
எதிரியான சாத்தானை முறியடிப்பேன்

Tamil Hymns

365. இயேசு சுமந்து கொண்டாரே நான்

இயேசு சுமந்து கொண்டாரே
நான் சுமக்க தேவையில்லை
இயேசுவின் காயங்களால்
சுகமானேன் சுகமானேன்

1. பெலவீனம் சுமந்து கொண்டார்
பெலவானாய் மாற்றிவிட்டார. இயேசுவின்

2. என் நோய்கள் சுமந்து கொண்டார்
என் துக்கம் ஏற்றுக் கொண்டார்

Tamil Hymns

366. இயேசு தானே அதிசய தெய்வம்

இயேசு தானே அதிசய தெய்வம்
என்றும் ஜீவிக்கிறார் நம் தெய்வம்

1. அதிசயமே அவர் அவதாரம்
அதிலும் இனிமை அவர் உபகாரம்
அவரைத் தெய்வமாகக் கொள்வதே பாக்கியம்
அவரில் நிலைதிருப்பதே சிலாக்கியம்

2. இருவர் ஒருமித்து அவர் நாமத்திலே
இருந்தால் வருவார் இருவர் மத்தியிலே
அந்தரங்கத்தில் அழுது நீ ஜெபித்தால்
அவர் கரத்தால் முகம் தொட்டு துடைப்பார்

3. மனிதன் மறு பிறப்படைவதவசியம்
மரித்த இயேசுவால் அடையும் இரகசியம்
மறையும் முன்னே மகிபனைத் தேடு
இறைவனோடு பரலோகம் சேரு

4. ஆவியினால் அறிந்திடும் தெய்வம்
பாவிகளை நேசிக்கும் தெய்வம்
ஆவியோடு உண்மையாய் தொழுதால்
தேவசாயலாய் மாறி நீ மகிழ்வாய்

Tamil Hymns

367. இயேசு திருநாமம் ஈய உயர்

இயேசு திருநாமம் ஈய உயர் மகிமையில் ஜெய மகிழ்
இயேசு திருநாமம் எனக்குயிரே
ஆசீர்வாதம் தாரும் ஆசீர்வாதம் தான்
ஆசீர்வாதம் பேசுருபாதம் மேசியா நீர் தான்
- இயேசு ... எனக்குயிரே

1. இந்த சபையோரும் உன் செயலாம்
இதை நன்றுணர்ந்தே – புகழ்
நெஞ்சமே கொண்டாடி என்றும் போற்றவே (2)
மிஞ்சும் வாக்கும் செய்கை
ஒன்றிதே உம் மீட்பை
சென்றுலகெங்கும் தந்தையுகந்தை
நன்று காட்டவே - இயேசு ... எனக்குயிரே

2. விண்ணுலகோர் பாட
மண்ணுலகோர் அடிபணிந்திட
பாதளத்துள்ளோரும் பயந்தோடிட (2)
எந்தன் நடு வா வா
உந்தன் அருன் தா தா
வந்தனம் சந்ததம் என்றுமே தந்தனம்
உந்தன் அடிமை நான் - இயேசு ... எனக்குயிரே

368. இயேசு நம்மோடு இன்று ஆனந்தம்

இயேசு நம்மோடு இன்று ஆனந்தம்
இயேசு நம்மோடு என்றும் ஆனந்தம்
அல்லேலூயா ஆர்ப்பரிப்போமே
அல்லேலூயா அகமகிழ்வோமே

1. காரிருள் நம்மைச் சூழ்ந்தாலும்
கர்த்தர் ஒளியாவார்
ஒளியாய் எழும்பி சுடர்விடுவோம்
உலகின் ஒளிநாமே

2. வியாதிகள் தொல்லைகள் நடுவினிலே
தேவனின் வார்த்தை உண்டு
அவரின் தூய தழும்புகளால்
குணம் அடைகின்றோம் நாம்

3. மனிதர்கள் நம்மை இகழ்ந்தாலும்
மனமோ தளர்வதில்லை
கோதுமை மணிபோல் மடிந்திடுவோம்
சிலுவையைச் சுமந்திடுவோம்

Tamil Hymns

369. இயேசு நல்லவர் இயேசு வல்லவர்

இயேசு நல்லவர் இயேசு வல்லவர்
என்றென்றும் மாறாதவர்
அவர் என்றென்றும் மாறாதவர்

1. குருடரின் கண்களை திறப்பவர்
அவர் நல்லவர் நல்லவரே
செவிடரின் செவிகளை திறப்பவர்
அவர் நல்லவர் நல்லவரே

அவர் நல்லவர் சர்வ வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

2. வியாதியில் விடுதலை தருபவர்
அவர் நல்லவர் நல்லவரே
பாவத்தை மன்னிக்கும் பரிசுத்தர்
அவர் நல்லவர் நல்லவரே

3. துன்பத்தில் ஆறுதல் அளிப்பவர்
அவர் நல்லவர் நல்லவரே
நம் பாரங்கள் யாவையும் நீக்குவார்
அவர் நல்லவர் நல்லவரே

4. இதுவரை நம்மை நடத்தினார்
அவர் நல்லவர் நல்லவரே
இனிமேலும் நம்மை நடத்துவார்
அவர் நல்லவர் நல்லவரே

5. சோதனை நேரத்தில் பெலன் தந்தார்
அவர் நல்லவர் நல்லவரே
என் தேவைகள் யாவையும் சந்தித்தார்
அவர் நல்லவர் நல்லவரே

Tamil Hymns

370. இயேசு நல்லவர் இயேசு வல்லவர்

இயேசு நல்லவர் இயேசு வல்லவர்
இயேசு இரட்சகரே
அல்லேலுயா ஆராதனை
ராஜ ராஜனுக்கே

1. வறண்ட நிலமாய் இருந்த வாழ்வை
வயலாய் மாற்றினாரே
அழுகை நிறைந்த பள்ளத்தாக்கை
களிப்பாய் மாற்றினாரே
குறைகள் எல்லாம் நிறைவாய் மாற்றி
கவலை தீர்த்தாரே
கண்ணீர் துடைத்தாரே - (2) அவர்

2. சேற்றினின்றும் குழியினின்றும்
தூக்கி எடுத்தாரே
கன்மலைமேல் கால்கள் நிறுத்தி
உறுதிப்படுத்தினாரே
புதிய பாடல் நாவில் தந்து
பாட வைத்தாரே
துதிக்க செய்தாரே - என்னை (2)

3. பாவம் யாவும் மன்னித்தாரே
சாபம் நீக்கினாரே
கிருபையாலே நீதிமானாய்
என்னை மாற்றினாரே
பிள்ளையாக என்னை கூட
ஏற்றுக் கொண்டாரே
அப்பா இயேசுவே - என் (2)

4. பரலோகத்தில் எனது பெயரை
எழுதி வைத்தாரே
நானும் வாழ அங்கோர் இடத்தை
தெரிந்து வைத்தாரே
இயேசு வருவார் அழைத்துச் செல்வார்
பறந்து சென்றிடுவேன்
சுகமாய் வாழ்ந்திடுவேன் - (2) அங்கு

Tamil Hymns

371. இயேசு நல்லவர் நம் இயேசு பெரியவர்

இயேசு நல்லவர் நம் இயேசு பெரியவர்
இயேசு உன்னதர் சர்வ லோகத்தின் ஆண்டவர்
நல்லவர் பெரியவர் சர்வ வல்லவர் (2)

1. வியாதியால் வருந்திடும் உனக்கு
சுகம் தரும் தெய்வம் நம் இயேசு
சாபங்கள் யாவையும் நீக்கி - உன்னை
வாழ வைக்கும் தெய்வம் இயேசு

2. மரண பயம் சூழ்ந்த உன்னை
விடுவிக்க வல்லவர் இயேசு
இருண்டு போன உந்தன் வாழ்வில் - ஜீவ
ஒளியை ஏற்றுவார் இயேசு

3. ஏமாற்றம் நிறைந்த உன் வாழ்வில்
புது நம்பிக்கை கொடுப்பவர் இயேசு
தோல்வியை சந்தித்த உனக்கு
ஜெயத்தைத் தருபவர் இயேசு

372. இயேசு நாதா எந்தன் நேசா

இயேசு நாதா எந்தன் நேசா
கண்ணோக்கிப் பாருமே என்னை
காத்துக்கொள்ளுமே

கன்மலையும் கோட்டையும் என்
இரட்சகரும் நீர் எந்தன்
நம்பிக்கை நீர்தாமே

மாம்ச சரீர போராட்டமதிலே
தாங்கிக் கொள்ளுமே உந்தன்
வல்லமை தாருமே

எந்தன் வழியை செவ்வை செய்யும்
அன்பின் தேவனே என்னை
பலத்தால் நிறைத்திடும்

எந்தன் பாரம் உம்மில்
வைக்க உதவி செய்யுமே
என்றும் உம் பின்செல்வேன்

எந்தன் கால்கள் மான்கள் கால்கள்
போலாகச் செய்யுமே - உயர்ந்த
ஸ்தலத்தில் நிறுத்துமே

கண்ணீர் சிந்தி கதறி ஜெபிக்க
உதவி செய்யுமே
ஜெபத்தின் ஆவி தாருமே

373. இயேசு நாமமே ஜெய நாமமே

ஜெய நாமமே எங்கள் இயேசு நாமமே
இயேசு நாமமே எங்கள் ஜெய நாமமே

1. வானத்திலும் பூமியிலும்
உயர்ந்த நாமமே- சர்வ பூமிக்கும்
ஆண்டவரே உன்னத நாமமே

2. மரணத்தின் கூரை உடைத்த
இயேசு நாமமே- பாதாளத்தை வெற்றி
சிறந்த இயேசு நாமமே

3. நித்திய ஜீவனை தருகின்ற
இயேசு நாமமே-வழியும் சத்தியம்
ஜீவனுமான இயேசு நாமமே

374. இயேசு நாமம் உயர்த்திடுவோம்

இயேசு நாமம் உயர்த்திடுவோம்
இன்னல் நீக்கி வாழ்வளிக்கும்
மனதின் பாரம் நீக்கிடுமே
மாறாத இயேசு நாமமிதே

1. அற்புத அடையாளம் நடந்திடும்
அதிசயங்கள் பல புரிந்திடும்
நோய்கசும் போய்களும்
விரட்டி ஓட்டிடும் நாமமிதே

2. இரட்சண்யம் அளித்திடும் நாமமே
இரட்சகர் இயேசுவின் நாமமே
பாவங்கள் போக்கிடும்
பரமன் இயேசுவின் நாமமிதே

3. நேற்றும் இன்றும் மாறிடா
நேசர் இயேசுவின் நாமமே
தேனிலும் இனிமையாய்
தேவன் இயேசுவின் நாமமிதே

4. இருளின் பயங்கள் நீக்கிடும்
இனிமை வாழ்வினில் தங்கிடும்
மகிழ்ச்சியும் தந்திடும்
மகிபன் இயேசுவின் நாமமிதே

5. இயேசுவின் நாமம் பரிசுத்தம்
நாவுகள் யாவும் துதித்திடும்
உயர்ந்தது சிறந்ததே
உன்னதர் இயேசுவின் நாமமிதே

Tamil Hymns

375. இயேசு நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம்

1. இயேசு நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம்
கன்னியர்கள் உம்மை
அன்பாய் நேசிக்கிறார்கள்

என் பிரியமே ஆத்ம நேசரே
என் அன்பின் மணவாளன்
நீர் இன்பமானவர் - (2)
அல்லேலுயா ஓசன்னா - (4)

1. இயேசு ராஜா முத்தங்களால்
என்னை முத்தமிடுவாரே
திராட்சை இரசத்திலும்
உமது நேசம் இனிமையே - (2)

2. இராஜ பந்தியில் வாசனை என்றும் வீசுமே
வெள்ளைப்போளச் செண்டு நீர் எங்கேதி
பூங்கொத்து - (2)

Tamil Hymns

376. இயேசு நாமம் எந்தன் வாழ்வில் போதுமே

இயேசு நாமம் எந்தன் வாழ்வில் போதுமே
எந்தன் வாழ்வில் உந்தன் நாமம் உயர்த்துவேன்
நீரே என் தேவன் நீரே என் தேவன்

1. கோடானகோடி நாவுகள் போதாதையா
நீர் செய்த நன்மை நான் துதித்துப் பாடிட
என் தேவனே நீர் போதுமே உம் அன்பு என் வாழ்விலே

2. ஆயிரமாயிரம் ஸ்தோத்திரம் நான் சொல்லுவேன்
உமதன்பின் வெள்ளம் என் உள்ளம் பாய்ந்திட
என் இயேசுவே நீர் போதுமே உம் கிருபை என் வாழ்விலே

3. அதிகாலைதோறும் உம் பாதம் பணிந்திடுவேன்
விண்ணப்பம் செய்திட உதவிடும் என் தெய்வமே
தூய ஆவியே நீர் போதுமே உம் ஐக்கியம் என் வாழ்விலே

Tamil Hymns

377. இயேசு நாமம் சொல்ல சொல்ல

இயேசு நாமம் சொல்ல சொல்ல
எங்கும் எதிலும் ஜெயமே ஜெயமே
அல்லேலூயா அல்லேலூயா

1. இயேசுவின் நாமத்தில் புதுபெலன் உண்டு
உலர்ந்த எலும்பும் உயிர்பெறும் இன்று
பெலவீனம் சுகவீனம் நீங்கிடும் இன்று
உன்னத வல்லமை இறங்கிடும் இன்று
தெய்வீக சுகம் உண்டு நம் இயேசுவின் நாமத்தில்

2. இயேசுவின் பேர் சொல்ல பேய் நடுநடுங்கும்
அசுத்த ஆவிகள் அகன்றே ஓடும் -2
அந்தகார வல்லமை அழிந்தே போகும்
சாத்தானின் கோட்டைகள் தகர்ந்தே நொறுங்கும் பிசாசை
ஜெயித்திடுவோம் நம் இயேசுவின் நாமத்தில்

3. இயேசுவின் நாமத்தில் கேட்பது கிடைக்கும்
அற்புத அதிசயம் எதுவும் நடக்கும்
இருளும் விலகி வெளிச்சம் தோன்றும்
துக்கம் எல்லாம் சந்தோ~மாகும்
வாழ்வே புதிதாகும் நம் இயேசுவின் நாமத்தில்

378. இயேசு நாமம் போற்றித் துதி அல்லேலூயா

இயேசு நாமம் போற்றித் துதி அல்லேலூயா
கிறிஸ்தேசு நாமம் பாடித் துதி அல்லேலூயா

ராஜாதி ராஜா இயேசு அல்லேலூயா அவர்
நித்திய ராஜ்யம் சேர அழைக்கிறார் அல்லேலூயா

இரத்தம் சிந்தி மீட்டார் உன்னைஅல்லேலூயா கர்த்தர்
திருச் சித்தம் செய்ய அழைக்கின்றார் அல்லேலூயா

பாவம் சாபம் நீக்கிவிட்டார் அல்லேலூயா உந்தன்
பொல்லா சாத்தானையும் வெல்ல செய்தார் அல்லேலூயா

வருகையில் சேர்த்துக்கொள்வார் அல்லேலூயா கர்த்தர்
அவர் கிருபையோ பெரியது அல்லேலூயா

379. இயேசு நான் நிற்கும் கன்மலையே

இயேசு நான் நிற்கும் கன்மலையே! - மாற்ற
எந்த ஆதாரமும் வெறும் மணல் தரையே

1. இயேசுவின் நாமத்தின் மேலே - என்றன்
எல்லா நம்பிக்கையும் வைத்தேன் அன்பாலே
நேசனையுங் கூட நம்பேன் -நான்
இயேசு நாமத்தின் மேல முழுதுமே சார்வேன்

2. இருள் அவர் அருள் முகம் மறைக்க - நான்
உறுதியாய் அவர் மாறாக் கிருபையில் நிலைப்பேன்
உரமாகக் கடும் புயல் வீச சற்றும்
உலையாத எனது நங்கூரமாம் அவரே

3. பெரு வெள்ளம் பிரவாகம் வரினும் அவர்
பிரதிக்னை,ஆணை ,இரத்தம் என் காவல்;
இருதயத்தின் நிலை அசைய - அப்போ
தேசுவே என் முழு நம்பிக்கையாமே

4. சோதியாய் அவர் வரும் போது - நான்
சுத்தனாய்த் தரிசித்தே அவரைப் போலாவேன்
நீதியாம் ஆடை தரிப்பேன் - சதா
நித்திய காலமாய் ஆளுகை செய்வேன்

380. இயேசு நீங்க இருக்கையிலே

இயேசு நீங்க இருக்கையிலே
நாங்க சோர்ந்து போவதில்லை
நீங்க எல்லாமே பார்த்துக் கொள்வீங்க

1. சமாதான காரணர் நீங்கதானே
சர்வ வல்லவரும் நீங்கதானே

2. அதிசய தேவன் நீங்கதானே
ஆலோசனைக் கர்த்தர் நீங்கதானே

3. தாயும் தகப்பனும் நீங்கதானே
தாங்கும் சுமைத்தாங்கி நீங்கதானே

4. எனக்கு அழகெல்லாம் நீங்கதானே
எனது ஆசையெல்லாம் நீங்கதானே

5. இருள் நீக்கும் வெளிச்சம் நீங்கதானே
இரட்சிப்பின் தேவன் நீங்கதானே

6. வழியும் சத்தியமும் நீங்கதானே
வாழ்வளிக்கும் வள்ளல் நீங்கதானே

7. எல்லாமே எனக்கு நீங்கதானே
எனக்குள் வாழ்பவரும் நீங்கதானே

8. முதலும் முடிவும் நீங்கதானே
முற்றிலும் காப்பவர் நீங்கதானே

9. பாவமன்னிப்பு நீங்கதானே
பரிசுத்த ஆவியும் நீங்கதானே

Tamil Hymns

381. இயேசு நேசிக்கிறார்

இயேசு நேசிக்கிறார் - இயேசு நேசிக்கிறார்
இயேசு என்னையும் நேசிக்க யான் செய்த
தென்ன மாதவமோ!

1. நீசனாமெனைத் தான்
இயேசு நேசிக்கிறார்
மாசில்லாத பரன் சுதன்றன் முழு
மனதால் நேசிக்கிறார்

2. பரம தந்தை தந்த பரிசுத்த வேதம்
நரராமீனரை நேசிக்கிறாரென
நவிலல் ஆச்சரியம்

3. நாதனை மறந்து
நாட்கழித் துலைந்தும்
நீதன் இயேசெனை நேசிக்கிறாரெனல்
நித்தம் ஆச்சரியம்

4. ஆசை இயேசுவென்னை
அன்பாய் நேசிக்கிறார் - அதை
நினைந்தவர் அன்பின் கரத்துளெ
ஆவலாய்ப் பரப்பேன்

5. ராசன் இயேசுவின்
மேல் இன்ப கீதஞ் சொலில் - ஈசன்
இயேசெனைத் தானெசித்தாரென்ற
இணையில் கீதஞ் சொல்வேன்

382. இயேசு நேசிக்கிறார் அவர்

இயேசு நேசிக்கிறார்
அவர் அன்பாய் நேசிக்கின்றார்
பாவி நான் என்றாலும் தள்ளிவிடாமலே
பாதுகாக்கின்றார் கிருபை தருகிறார்

1. அழைத்தேனே நெருக்கத்திலே
அன்போடு செவி கொடுத்தீர் - ஆபத்து
காலத்திலே அரணான துணையானீர்
ஆத்துமத்தில் என்னை முழு மனதுடன்
அரவணைத்தாரே அன்பை அளித்தாரே - இயேசு

2. மாசற்ற தம் உதிரம் எனக்காக சிலுவையிலே
மனதார அளித்தவரை மனம் நோக செய்தேனே
மனசாட்சி தீவினை மன்னித்து வாழ்வினை மாற்றி
அமைத்தாரே மகிழச் செய்தாரே- இயேசு

383. இயேசு பாதம் எனக்குப் போதும்

**இயேசு பாதம் எனக்குப் போதும்
எந்த நாளும் ஆனந்தமே (2)**

**1. பாதம் அமர்ந்து கண்ணீர் சிந்தி
கதறி அழுதிடுவேன் - நான்**

**2. இரவும் பகலும் வேதவசனம்
தியானம் செய்திடுவேன் - நான்**

**3. காத்திருந்து பெலனடைந்து
கழுகைப் போல் பறப்பேன் - நான்**

**4. கசந்த மாரா மதுரமாகும்
எகிப்து அகன்றிடுமே - கொடிய**

**5. என்னை விட்டு எடுபடாத
நல்லபங்கு இது - எனக்கு**

**6. எதை நினைத்தும் கலங்கமாட்டேன்
என்றும் துதித்திடுவேன் - நான்**

384. இயேசு பாலனாய் பிறந்தார்

இயேசு பாலனாய் பிறந்தார்
இயேசு தேவனே பெத்லகேமிலே
ஏழைக் கோலமாய் முன்னணை
புல்லணை மீதிலே பிறந்தார்

1. உன்னதத்தில் தேவ மகிமை
பூமியிலே சமாதானமும்
மானிடரில் பிரியம் உண்டாவதாக
என்று தேவ தூதர் பாடிட - இயேசு

2. விண்ணை வெறுத்த இம்மானுவேல்
விந்தை மானிடவதாரமாய்த்
தன்னைப் பலியாகத் தந்த ஒளி இவர்
தம்மை பணிந்திடுவோம் வாரும் - இயேசு

3. ஓடி அலைந்திடும் பாவியைத்
தேடி அழைக்கும் இப்பாலகன்
பாவங்களின் நாசர் பாவிகளின் நேசர்
பாதம் பணிந்திடுவோம் வாரும் - இயேசு

4. கைகள் கட்டின தேவாலயம்
கர்த்தர் தங்கும் இடமாகுமோ
நம் இதயமதில் இயேசு பிறந்திட
நம்மை அளித்திடுவோம் வாரும்- இயேசு

5. அன்பின் சொரூபி இப்பாலனே
அண்டி வருவோரின் தஞ்சமே
ஆறுதல் அளித்து அல்லல் அகற்றிடும்
ஆண்டவரை பணிவோம் வாரும் - இயேசு

385. இயேசு பாலகா என்

இயேசு பாலகா என்
ஜீவகால மெல்லாம்
உம் பிறந்த நாளை
வாழ்த்தி பாடுவேன் (2)

1. விண்ணை விட்டு மண்ணுலகம் வந்ததால்
என்னை மீட்க ஏழைக்கோலம் கொண்டதால்
ஜீவ நாயகா என் அருமை ரட்சகா
பூவுலகை மீட்க வந்த இயேசு பாலகா - இயேசு

2. எந்தன் உள்ளம் இன்பத்தால் நிறைந்தாலும்
துன்பம் என்னை சூழ்ந்தலைக்கழித்தாலும்
ஜீவ நாயகா என் அருமை ரட்சகா
பூவுலகை மீட்க வந்த இயேசு பாலகா - இயேசு

386. இயேசு பிறந்தாரே எந்தன் உள்ளத்திலே

இயேசு பிறந்தாரே எந்தன் உள்ளத்திலே
இயேசு பிறந்தாரே மகிழ்ந்து பாடிடுவோம்
பாவங்கள் போக்கிட இரட்சகர் பிறந்தாரே
சாபங்கள் நீக்கிட நித்தியர் பிறந்தாரே

ஹாலேலூயா ஹாலேலூயா

1. தூதர்கள் பாடிட சாஸ்திரிகள் தொழுதிட
மேய்ப்பர்கள் வணங்கிட அற்புதம் நடந்திட
நீதியின் சூரியனாய் இயேசு பிறந்தாரே

2. கட்டுகள் அறுந்திட விடுதலை தந்திட
வியாதிகள் நீங்கிட அதிசயம் நடந்திட
நீதியின் சூரியனாய் இயேசு பிறந்தாரே

387. இயேசு பிறந்தார் பெத்தலகேம் ஊரிலே

இயேசு பிறந்தார் பெத்தலகேம் ஊரிலே
மரியாளின் மைந்தனாய் இயேசு
பிறந்தார் பாவங்களைப் போக்கவே
மனுவாய் அவதரித்தாரே

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலு அல்லேலு
அல்லேலூயா

இருளைப் போக்கிடவே பிறந்தார் இயேசு
வெளிச்சம் தந்திடவே பிறந்தார் இயேசு
பாவத்தைப் போக்கிட சாபத்தை நீக்கிட
பாரினில் மைந்தனாய் பிறந்தார் இயேசு

மாட்டுத் தொழுவத்திலே பிறந்தார் இயேசு
ஏழ்மைக் கோலத்திலே பிறந்தார் இயேசு
மேன்மையை வெறுத்தவர்
தாழ்மையை தரித்தவர்
ராஜாதி ராஜனாய் பிறந்தார் இயேசு

Tamil Hymns

388. இயேசு பெரியவர் நம் இயேசு பெரியவர்

இயேசு பெரியவர் நம் இயேசு பெரியவர்
என்றென்றும் இயேசு பெரியவர்
அவர் ஒருபோதும் கைவிடமாட்டார் # அல்லேலூயா

1. மனுஷனை பார்க்கிலும் இயேசு பெரியவர்
பிரபுக்களை பார்க்கிலும் இயேசு பெரியவர்
செல்வங்களை பார்க்கிலும் இயேசு பெரியவர்
பட்டம் பதவி பார்க்கிலும் இயேசு பெரியவர்

2. அதிசயங்களை செய்திடும் இயேசு பெரியவர்
அற்புதங்களை செய்திடும் இயேசு பெரியவர்
நம்பினோரைவாழவைக்கும் இயேசு பெரியவர்
நம்பிக்கையின் நங்கூரம் இயேசு பெரியவர்

3. தாகம் தீர்க்கும் ஜீவ நதி இயேசு பெரியவர்
ஜீவ அப்பம் நானே என்ற இயேசு பெரியவர்
உலகிற்கு ஒளியான இயேசு பெரியவர்
உத்தமனின் துணையான இயேசு பெரியவர்

4. உனக்குள்ளே இருக்கின்ற இயேசு பெரியவர்
உலகிலுள்ள சாத்தானிலும் இயேசு பெரியவர்
உறங்காமல் காத்திடும் இயேசு பெரியவர்
உன் குறைவை நிறைவாக்கும் இயேசு பெரியவர்

389. இயேசு போதுமே எனக்கு போதுமே

இயேசு போதுமே எனக்கு போதுமே
இயேசு போதுமே எனக்கு போதுமே - 2

1. இயேசு கைவிடார் உன்னை கைவிடார்
இன்றும் கைவிடார் அவர் என்றும் கைவிடார்

2. இயேசு வல்லவர் எனக்கு வல்லவர்
இன்றும் வல்லவர் அவர் என்றும் வல்லவர்

3. இயேசு நல்லவர் எனக்கு நல்லவர்
இன்றும் நல்லவர் அவர் என்றும் நல்லவர்

4. இயேசு வாழ்கின்றார் என்னில் வாழ்கின்றார்
இன்றும் வாழ்கின்றார் அவர் என்றும் வாழ்கின்றார்

Tamil Hymns

390. இயேசு போதுமே என்னை நேசிக்க

இயேசு போதுமே என்னை நேசிக்க
இயேசு ஒருவரே எந்தன் ரட்சகர்
என் பாவங்கள் என் சாபங்கள்
என் துரோகங்கள் மாற்றினார்
என் துக்கங்கள் என் துயரங்கள்
என் துன்பங்கள் போக்கினார்
இயேசு போதுமே என்னை நேசிக்க
இயேசு ஒருவரே எந்தன் ரட்சகர்

1. துக்கம் துளைக்குதோ பெறும்
துயரம் வாட்டுதோ - நீ இயேசுவின்
சேனையாய் எதற்கும் அஞ்சிடாதே
யுத்தத்தில் வல்லவர் கிருபைகள் நிறைந்தவர்
சாவை வென்றவர் சர்வ வல்லவர்
சகலமும் படைத்தவர் உன்னை
இமைப்போல காப்பாரே - 2

2. சோதனை கண்டுமே
மனம் உடைந்து போனாயோ
பெரும் சோதனையை சகித்தவர்
என்றும் உன்னோடிருக்கிறார்
இயேசு பாதத்தை காத்திடு
மீட்பர் இயேசுவே
உந்தன் ரட்சகர் நம்பிடு பரிகாரி இயேசுவே
இதை மட்டும் உணர்ந்திடு

391. இயேசு மகாராஜனே

இயேசு மகாராஜனே மீண்டும் வந்திடுவீரே
உம் மக்களாய் ஒன்று கூடினோம்
உம் மகிமையை தரிசிக்க

பஞ்சங்கள் கொள்ளை நோயும் வாட்டுதே
பூகம்பம் யுத்தங்கள் பெருகுதே
மனிதனின் அன்பு தணிந்து போகுதே
உபத்திரவ காலம் தொடங்குதே

இது என்னவோ என்று சிந்தித்துப் பார் நண்பனே
காலங்கள் இது முடிவுதான் என் நேசமே
இவைகளெல்லாம் வேதனைக்கு ஆரம்பம்
இராஜாதி ராஜன் இயேசு மீண்டும் வருகிறார்

உம் நாமம் பரிசுத்த படுவதாக
உம் அரசு வருவதாக-உம்
சித்தம் பூமியெங்கும் நிறைவேறுவதாக
என்னை மன்னித்தது போல்
மற்றவர்களை நானும் மன்னிக்கணுமே
எங்கள் அன்றாட உணவை
அனுதினமும் தரவேண்டுமே
இராஜ்யம் கனமும் வல்லமை
என்றென்றும் உரித்தாகட்டும்

இயேசு மகாராஜனே மீண்டும் வந்திடுவீரே
உம் மக்களாய் ஒன்று கூடினோம்
உம் மகிமையை தரிசிக்க
இயேசுவே வாருமே இன்றே வாருமே
இயேசுவே வாருமேஆவலாய் நிற்கிறோம்
இயேசுவே இயேசுவே இயேசுவே

Tamil Hymns

392. இயேசு மானிடனாய் பிறந்தார்

இயேசு மானிடனாய் பிறந்தார்
இந்த லோகத்தை மீட்டிடவே
இறைவன் ஒளியாய் இருளில் உதித்தார்
இந்த நற்செய்தி சாற்றிடுவோம்

மேய்ப்பர்கள் இராவினிலே தங்கள்
மந்தையைக் காத்திருக்க
தூதர்கள் வானத்திலே தோன்றி
தேவனைத் துதித்தனரே

ஆலோசனை கர்த்தரே இவர்
அற்புதமானவரே
விண் சமாதான பிரபு சர்வ
வல்லவர் பிறந்தனரே

யாக்கோபில் ஓர் நட்சத்திரம் இவர்
வாக்கு மாறாதவரே
கண்ணிமை நேரத்திலே நம்மை
விண்ணதில் சேர்த்திடுவார்

பொன், பொருள், தூபவர்க்கம் வெள்ளைப்
போளமும் காணிக்கையே
சாட்சியாய் கொண்டு சென்றே - வான
சாஸ்திரிகள் பணிந்தனரே

மாட்டுத் தொழுவத்திலே பரன்
முன்னணையில் பிறந்தார்
தாழ்மையைப் பின்பற்றுவோம் அவர்
ஏழ்மையின் பாதையிலே

Tamil Hymns

393. இயேசு ரட்சகர் பெயரைச் சொன்னால்

இயேசு ரட்சகர் பெயரைச் சொன்னால்
எதுவும் நடக்குமே
அவர் இதயத்தோடு கலந்து விட்டால்
எல்லாம் கிடைக்குமே (2)

1. வாடி கிடந்த உயிர்களெல்லாம் வாழ வைத்தாரே
அவர் வாழ்வும் சத்தியம் ஜீவனுமாய் நன்மை செய்தாரே
பரம பிதா ஒருவன் என்று வகுத்து சொன்னவர் இயேசு
பாசம் அன்பு கருணையோடு உலகை கண்டவர் இயேசு

2. எதையும் தாங்கும் சகிப்புத் தன்மை வேண்டும் என்றவர் இயேசு
நம் எல்லோருக்கும் இறைவனாக விளங்குகின்றவர் இயேசு
தீமை வளரும் எண்ணம் தன்னை அகற்ற சொன்னவர் இயேசு
தூய்மை நிறைந்த உள்ளத்தோடு பழகச் சொன்னவர் இயேசு

394. இயேசு இரட்சகரின் பிறந்த நாள் இதுவே

இயேசு இரட்சகரின் பிறந்த நாள் இதுவே
நீசமனிதரின் மீட்பின் வழி இவரே

1. வாழ்க கன்னிமரியாளே
ஸ்திரிகளே நீ பாக்கியவதி (2)
பரிசுத்த ஆவியின் பெலத்தாலே
மகிமையின் மைந்தன் உதித்தாரே (2)
- இயேசு

2. பெத்லகேம் என்னும் சிற்றூரே
ஆயிரங்களில் நீ சிறியதல்ல (2)
இஸ்ரவேலின் பிரபுதானே
உன்னிடம் இருந்து வந்தாரே (2)
- இயேசு

3. பரலோக வாசல் திறந்ததுவே
தூதர் சேனை பாடினரே (2)
மறுமையின் மகிமையில் நாங்களுமே
அவருடன் சேர்ந்து போற்றுவோமே (2)
- இயேசு

395. இயேசு ராசா எனை ஆளும் நேசா

1. மாசிலா மணி ஆன முச்சுடர்
மேசியா அரசே- மனு
வேலே, மாமறை நூலே, தேவ செங்
கோலே, இங்கெனின் மேலே அன்பு செய் - யேசு

2. தாவீ தரசன் மைந்தா - நின்
சரணம் சரணம், எந்தா சதா
னந்தா வா னந்தா, உ
வந்தாள்; மிக வந்தனம், வந்தனம்! - யேசு

3. ஐயா, என் மனம் ஆற்றி, - உன
தடிமை என்றனைத் தேற்றிக் -குண
மாக்கி, வினை நீக்கிக் கை
தூக்கி, மெய் பாக்கியம் கொடு -யேசு

4. சுத்த திருத்துவ வஸ்துவே, - சுவி
சேட மகத்துவ கிறிஸ்துவே, - பரி
சுத்தனே, கரி சித்தெனை இ
ரட்சித் தடிமை கொள்; நிததியம் தோத்திரம் -யேசு

5. மங்களம் ஈசாவே, - வளம் மிகும்
சங்கையின் ராசாவே, - நரர்
வாழ்வே, மன் னாவே, மெய்த்
தேவே, உமக கோசன்னாவே! - யேசு

Tamil Hymns

396. இயேசு ராஜனின் திருவடிக்கு

இயேசு ராஜனின் திருவடிக்கு
சரணம் சரணம் சரணம்
ஆத்மா நாதனின் மலரடிக்கு
சரணம் சரணம் சரணம்

1. பார் போற்றும் தூய தூய தேவனே
மெய் ராஜாவே எங்கள் நாதனே
பயம் நீக்கும் துணை யாவும் ஆனீரே

2. இளைப்பாறுதல் தரும் வேந்தனே
இன்னல் துன்பம் நீக்கும் அருள் நாதரே
ஏழை என்னை ஆற்றி தேற்றி காப்பீரே

3. பெலவீனம் யாவும் போக்கும் வல்லோரே
பெலனீந்து வலக்கரம் பிடிப்பீரே
ஆவி ஆத்துமா சரீரத்தை படைக்கிறேன்

4. உந்தன் சித்தம் செய்ய அருள் தாருமே
எந்தன் சித்தம் யாவும் என்றும் ஒழிப்பீரே
சொந்தமாக ஏற்று என்னை ஆட்கொள்ளும்

5. அல்லேலூயா பாடி வந்து துதிப்பேன்
மனதார உம்மை என்றும் போற்றுவேன்
அல்லேலூயா அல்லேலூயா ஆமென்

397. இயேசு ராஜனே நேசிக்கிறேன் உம்மையே

இயேசு ராஜனே
நேசிக்கிறேன் உம்மையே
உயிருள்ள நாளெல்லாம்
உம்மைத்தான் நேசிக்கிறேன்

நேசிக்கிறேன் (4)

1. அதிசயமானவரே, ஆறுதல் நாயகரே
சந்தோஷமே, சமாதானமே
உம்மைத்தான் நேசிக்கிறேன்

2. இம்மானவேல் நீர்தானே, எப்போதும் இருப்பவரே
ஜீவன் தரும், திருவார்த்தையே
உம்மைத்தான் நேசிக்கிறேன்

3. திராட்சைச் செடி நீரே, தாவீதின் வேர் நீரே
விடிவெள்ளியே, நட்சத்திரமே
உம்மைத்தான் நேசிக்கிறேன்

4. யோனாவிலும் பெரியவரே
சாலமோனிலும் பெரியவரே, ரபூனியே போதகரே
உம்மைத்தான் நேசிக்கிறேன்

5. பாவங்கள் நிவர்த்தி செய்யும்
கிருபாதாரபலி நீரே, பரிந்துபேசும் ஆசாரியரே
உம்மைத்தான் நேசிக்கிறேன்

Tamil Hymns

398. இயேசு ராஜா உம் இதயத் துடிப்பை

இயேசு ராஜா உம் இதயத் துடிப்பை
அறிந்து கொள்ளும் பாக்கியம் தாரும்
உம் ஏக்கம் எல்லாம் நிறைவேற்ற
கிருபையைத் தாரும்

ஒருவாழ்வு உமக்காக (2)
உணர்வெல்லாம் உமக்காக
உள்ளமெல்லாம் உமக்காக

1. உம் இதயம் மகிழ்ந்திட
வாழ்ந்திட வேண்டும் - உம் சித்தம்
செய்து நான் மடிந்திட வேண்டும்

2. அழிந்து போகும் ஆத்துமாக்கள்
நினைத்திட வேண்டும் ஆத்தும
பாரத்தினால் அலைந்திட வேண்டும்

3. உலத்திற்கு மரித்து நான்
வாழ்ந்திட வேண்டும் - உண்மையான
ஊழியனாய் உழைத்திட வேண்டும்

4. அகிலத்தையே உம் அண்டை
சேர்த்திட வேண்டும் - அனைத்து மகிமை
உமக்கே நான் செலுத்திட வேண்டும்

399. இயேசு ராஜா உம் நாமத்தை

இயேசு ராஜா உம் நாமத்தை
சொல்லி சொல்லி நான் மகிழ்வேன்
உந்தன் அன்பை என் உள்ளத்தில்
எண்ணி எண்ணி துதிபாடுவேன்

ஆமென் ஆமென் அல்லேலுயா

1. பாவியாய் வாழ்ந்த எனைத் தேடி வந்தீர்
பரிசுத்த இரத்தம் சிந்தி என்னை மீட்டீர்
பரமனே உம் அன்பு மிகப்பெரியது
பாரினில் நிகரேதும் இல்லாதது

2. வியாதிகள் வேதனை எனை சூழ்ந்த போதும்
வாழ்ந்திட வழியின்றி கலங்கின நேரம்
வார்த்தையினாலே என்னைத் தேற்றி
வளமான வாழ்வை எனக்குத் தந்தீர்

3. உலகமே என்னை வெறுத்தாலும்
நண்பர்கள் யாவரும் கைவிட்டாலும்
நீதியின் தேவன் என்னோடு உண்டு
நித்தமும் மகிழ்வுடன் வாழ்ந்திடுவேன்

Tamil Hymns

400. இயேசு ராஜா ஏழை என் உள்ளம்

இயேசு ராஜா ஏழை என் உள்ளம்
தேடி வந்தீரே

1. என் நேசர் நீர்தானையா
என்னை தேற்றிடும் என தேசையா
சாரோனின் ரோஜா லீலி புஷ்பமே
சீக்கிரம் வாருமையா - ஐயா

2. உழையான சேற்றினின்று என்னை
உயிர்ப்பித்து ஜீவன் தந்தீர்
அலைபோல துன்பம் என்னை சூழ்ந்தபோது
அன்பாலே அணைத்துக் கொண்டீர் - ஐயா

3. ஆபத்து காலத்திலே நல்ல
அநுக்கிரகம் துணையும் நீரே
அன்பே என்றீர் மகளே என்றீர்
மணவாட்டி நீதான் என்றீர்

4. பரிசுத்த ஆவியினால் என்னை
அபிஷேகம் செய்தீரே
பயங்களை நீக்கி பலத்தையே தந்து
பரிசுத்த மகளாக்கினீர்

401. இயேசு ராஜா நன்றி என்று சொல்லுகிறேன்

இயேசு ராஜா நன்றி என்று சொல்லுகிறேன்
செய்த நன்மை நினைத்து
துதி சொல்லி பாடுகிறேன்
காலையும் மாலையும் எந்த வேளையிலும்
துதிபாடல் ஓய்வதில்லை
காலமே மாறினும் சூழ்நிலை மாறினும்
நாவில் துதி ஓய்வதில்லை

வானம் பூமி யாவும் ஆளுகின்றவரே
ராஜ்ஜியம் எல்லையில்லையே (உம்)
என்னையாளும் ராஜாவே உம்
அன்பின் எல்லையில்லையே

வாக்கு மாறா தேவன் வாக்குத்தத்தம் தந்து
சொன்னதெல்லாம் செய்தீரே (நீர்)
பொய்யுரையா என் தேவனே நீர்
மனம் மாறுவதில்லையே

வாக்குக்கடங்காத பெருமுச்சோடு
வேண்டுதல் (எனக்காகவே) செய்கிறீர்
எனக்காக யாவையும் நீர்
செய்து முடிக்கின்றீர்

பாவங்களுக்கேற்ற தண்டனை தராமல்
மன்னிப்பையும் தந்தீரே (நீர்)
இரக்கத்தில் ஐஸ்வர்யமே உம்
இரக்கத்தில் முடிவில்லையே

பாதாளத்தில் நானும் போய் சோர்ந்திடாமல்
பாதுகாத்துக் கொண்டீரே (நீர்)
என் நீதியால் இல்லையே உம்
சுத்த கிருபையினாலே

Tamil Hymns

402. இயேசு ராஜா முன்னே செல்கிறார்

இயேசு ராஜா முன்னே செல்கிறார்
ஓசன்னா கீதம் பாடுவோம்
வேகம் சென்றிடுவோம் - ஓசன்னா ஜெயமே (2)
ஓசன்னா ஜெயம் நமக்கே

அல்லேலூயா (3) மகிமை (2)

1. அல்லேலூயா துதி மகிமை - என்றும்
அல்லேலூயா துதி மகிமை
இயேசு ராஜா எங்கள் ராஜா (2)
என்றென்றும் போற்றிடுவோம்

2. துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும்
தொல்லை கஷ்டங்கள் தேடி வந்தாலும்
பயமுமில்லை கலக்கமில்லை (2)
கர்த்தர் நம்முடனே

3. யோர்தானின் வெள்ளம் வந்தாலும்
எரிகோ கோட்டை எதிர் நின்றாலும்
பயமுமில்லை கலக்கமில்லை (2)
மீட்பர் நம்முடனே

4. பாதாளம் வாய் திறந்தாலும்
மரணமே எதிர் வந்தாலும்
பயமும் இல்லை கலக்கம் இல்லை!
இயேசு நம்முடனே - ஓசன்னா
ஓசன்னா ஜெயம் நமக்கே

403. இயேசு ராஜா வந்திருக்கிறார்

இயேசு ராஜா வந்திருக்கிறார்
எல்லோரும கொண்டாடுவோம்
கைதட்டி நாம் பாடுவோம்

கொண்டாடுவோம் கொண்டாடுவோம்
கவலைகள் மறந்து நாம் பாடுவோம்

1. கூப்பிடு நீ பதில் கொடுப்பார்
குறைகளெல்லாம் நிறைவாக்குவார்
உண்மையாக தேடுவோரின்
உள்ளத்தில் வந்திடுவார்

2. மனதுருக்கம் உடையவரே
மன்னிப்பதில் வள்ளலவர்
உன் நினைவாய் இருக்கிறார்
ஓடிவா என் மகனே

3. கண்ணீரெல்லாம் துடைத்திடுவார்
கரம் பிடித்து நடத்திடுவார்
எண்ணமெல்லாம் ஏக்கமெல்லாம்
இன்றே நிறைவேற்றுவார்

4. நோய்களெல்லாம் நீக்கிடுவார்
நொடிப்பொழுதே சுகம் தருவார்
பேய்களெல்லாம் நடுநடுங்கும்
பெரியவர் திரு முன்னே

5. பாவமெல்லாம் போக்கிடுவார்
பயங்களெல்லாம் நீக்கிடுவார்
ஆவியினால் நிரப்பிடுவார்
அதிசயம் செய்திடுவார்

6. கசையடிகள் உனக்காக
காயமெல்லாம் உனக்காக
திருஇரத்தம் உனக்காக
திருந்திடு என் மகனே!

Tamil Hymns

404. இயேசு இராஜனே

இயேசு இராஜனே
உம் திவ்ய கிருபையே
பட்டுப்போன எந்தன் வாழ்வை
செழிக்க வைத்ததே – 2

உயிருள்ள நாளெல்லாம்
உம்மை உயர்த்துவேன்
வாழ்கின்ற நாளெல்லாம்
உமக்காய் ஓடுவேன் – 2

இயேசு இராஜனே

1.எல்லாராலும் நான் தள்ளப்பட்டாலும் – 2
அன்பான தேவனே என்னை உயர்த்தினீர் – 2
உயிருள்ள நாளெல்லாம் உம்மை உயர்த்துவேன்
வாழ்கின்ற நாளெல்லாம் உமக்காய் ஓடுவேன் – 2
இயேசு இராஜனே

2.கண்ணீரின் பள்ளத்தாக்கில் நடக்கும்போதெல்லாம்
கனிவோடு உந்தன் கரம் என்னை அணைத்ததே – 2
உயிருள்ள நாளெல்லாம் உம்மை உயர்த்துவேன்
வாழ்கின்ற நாளெல்லாம் உமக்காய் ஓடுவேன் – 2
இயேசு இராஜனே
3.அந்தகாரமே என் வாழ்க்கை ஆனது – 2
விளக்கேற்றி வைத்த என் அன்பு தெய்வமே – 2
உயிருள்ள நாளெல்லாம்
உம்மை உயர்த்துவேன்
வாழ்கின்ற நாளெல்லாம்
உமக்காய் ஓடுவேன் – 2
இயேசு இராஜனே
உம் திவ்ய கிருபையே
பட்டுப்போன எந்தன் வாழ்வை
செழிக்க வைத்ததே – 2
உயிருள்ள நாளெல்லாம்
உம்மை உயர்த்துவேன்
வாழ்கின்ற நாளெல்லாம்
உமக்காய் ஓடுவேன் – 2
இயேசு இராஜனே

405. இயேசு ஜீவன் தந்தாரே பாவத்தை

இயேசு ஜீவன் தந்தாரே
பாவத்தை போக்கிவிட்டாரே
நித்திய வாழ்வு எனக்கு தந்து
என்னை சேர்த்து கொண்டாரே

1. ஆவியில் நிரப்பி அபிஷேகம் தந்து
சாட்சியாய் மாற்றினாரே

2. ஆத்தம பாரம் எனக்கு தந்து
ஜெபிக்க கற்றுதந்தாரே
ஜெபமே ஜெயம் ஜெபமே ஜீவன்

3. வாழ்வில் சோர்வு நேரிட்டாலும்
வந்து பெலன் தருவார்
மேங்கள் நடுவில் கர்த்தர் வருவார்
நம்மை சேர்த்துகொள்வார்

406. இயேசு வாழ்வு கொடுக்கிறார்

இயேசு வாழ்வு கொடுக்கிறார்
இன்றே அவரிடம் நம்பி வா
இயேசு வாழ்வு கொடுக்கிறார்
இன்றே அவரிடம் நம்பி வா

1. ஆறுதல் இல்லையோ,
அலைந்து தவிக்கின்றாயோ
ஆறுதல் தந்திடும் இயேசு அன்பாய்
உன்னை அழைக்கின்றாரே
அழைக்கின்றார் அழைக்கின்றார்
இயேசு உன்னை அழைக்கின்றார்

2. சமாதானம் தருவாரே
கவலைகள் நீக்குவாரே
தேவைகள் தந்திடும் இயேசு அன்பாய்
உன்னை அழைக்கின்றாரே
அழைக்கின்றார் அழைக்கின்றார்
இயேசு உன்னை அழைக்கின்றார்

3. வியாதியின் கொடுமையோ
நம்பிக்கை இழந்தாயோ
சுகத்தை தந்திடும் இயேசு அன்பாய்
உன்னை அழைக்கின்றாரே
அழைக்கின்றார் அழைக்கின்றார்
இயேசு உன்னை அழைக்கின்றார்

Tamil Hymns

407. இயேசுவாலே பிடிக்கப்பட்டவன்

இயேசுவாலே பிடிக்கப்பட்டவன்
அவர் இரத்ததாலே கழுவப்பட்டவன்
எனக்கென்று எதுவுமில்லை
இப்பூமி சொந்தமில்ல

எல்லாமே இயேசு…என் இயேசு
எல்லாம் இயேசு இயேசு இயேசு

1. பரலோகம் தாய் வீடு
அதைத் தேடி நீ ஓடு
ஒருவரும் அழிந்து போகாமலே
தாயகம் வர வேண்டும் தப்பாமலே

2. அந்தகார இருளினின்று
ஆச்சரிய ஒளிக்கழைத்தார்
அழைத்தவர் புண்ணியங்கள் அறிவித்திட
அடிமையை தெரிந்தெடுத்தார் - இந்த

3. பாடுகள் அநுபவிப்பேன்
பரலோக தேவனுக்காய்
கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் நாளில்
களிர்கூர்ந்து மகிழ்ந்திருப்பேன் - நான்

4. இலாபமான அனைத்தையுமே
நஷ்டமென்று கருதுகின்றேன்
இயேசுவை அறிகின்ற தாகத்தினால்
எல்லாமே இழந்து விட்டேன் நான்

5. பின்னானவை மறந்தேன்
முன்னானவை நாடினேன்
என் நேசர் தருகின்ற பரிசுக்காக
இலக்கை நோக்கித் தொடருகின்றேன்

6. நீதியை விரும்புகிறேன்
அக்கிரமம் வெறுக்கிறேன்
ஆனந்த தைல அபிஷேகத்தால்
அனுதினம் நிரம்புகிறேன்

Tamil Hymns

408. இயேசுவின் அன்பினை அறிவித்திட

இயேசுவின் அன்பினை அறிவித்திட
இணைந்தே செயல்படுவோம்
சுவிசேஷ நற்செய்தி கூறிட
விரைந்தே புறப்படுவோம்

நம் பாரதம் நம் தாயகம்
கர்த்தரை அறியட்டுமே
நம் தாய் மண்ணும் நம் தலைமுறையும்
இயேசு வை அறியட்டுமே (2)

1. நினிவேயின் ஜனங்களுக்காக
நம் தேவன் பரிதவித்தார்
தீர்க்கன் யோனாவையோ
அவர் அனுப்பி எச்சரித்தார்
இலட்சத்திற்காக பரிதபித்தார்
கோடிகட்காக கலங்கிடாரோ

2. இமைக்கும் நொடி பொழுதிலே
மரித்திடும் மாந்தரைப் பார்
பாவ மன்னிப்பின்றி
ஆக்கினை அடைவதை பார்
திறப்பில் நின்று தடுத்திடுவோம்
ஜெபிக்கும் மக்களைத் திரட்டிடுவோம்

3. காலம் கடந்திடுதே
நம் வேதமும் நிறைவேறுதே
இயேசுவின் வருகை இன்று
அதி சமீபமாகிறதே
இளைஞர் கூட்டம் இயேசுவுக்காய்
நற்செய்தி சுமந்து புறப்படுவோம்

Tamil Hymns

409. இயேசுவின் அன்பை தியானிக்கையில்

இயேசுவின் அன்பை தியானிக்கையில்
கண்களில் கண்ணீர் புரண்டோடுதே
கள்ளமில்லா அந்தக் கல்வாரி அன்பு
கள்ளன் என் இதயத்தைக் கரைத்திட்டதே
கல்லான என் உள்ளம் கரைந்திட்டதே

1. பாவி என் மீது ஏன் இந்த அன்பு
ஒன்றுமே புரியவில்லை
எனக்காக ஜீவன் தந்த இயேசுவுக்காய்
எந்தனின் வாழ்வை அர்ப்பணிக்கிறேன்

2. மெய்யான அன்பை நான் தேடி அலைந்தேன்
எங்குமே காணவில்லை
பாவியாய் ஓடி நான் திரிந்திட்ட வேளை
என்னையும் தம்மிடம் சேர்த்துக் கொண்டார்

3. ஒன்றுக்கும் உதவா என்னையும் தேடி
இயேசு என் வாழ்வில் வந்தார்
என்னையும் அழைத்தார் தம் சேவைக்காய்
உண்மையாய் ஊழியம் செய்திடுவேன்

410. இயேசுவின் இரண்டாம் வருகை

இயேசுவின் இரண்டாம் வருகை
அதி வேகமாய் நெருங்கி வருதே
ஆயத்தமாகிடுவோம்
அன்பர் இயேசுவை சந்திக்கவே

மாரநாதா அல்லேலூயா (4)

1. நித்திரையை விட்டு நாம் எழும்புவோம்
நம் நீதியின் சூரியன் வருகிறார்
இரட்சிப்பின் வஸ்திரம் காத்துக் கொள்வோம்
நம் இரட்சகர் வருகிறார்

2. பரிசுத்தமாய் நம்மை காத்துக் கொள்வோம்
நம் பரிசுத்தர் வருகிறார்
நீதியாய் நியாயந்தீர்த்திடவே
நியாயாதிபதியாக வருகிறார்

3. மரணத்தை வென்ற நம் ஆண்டவர்
மணவாளனாகவே வருகிறார்
கறைதிரையற்ற சபையினை
தம்மோடு சேர்க்கவே வருகிறார்

411. இயேசுவின் இரத்தத்தாலும் தேவனின்

இயேசுவின் இரத்தத்தாலும்
தேவனின் கிருபையாலும்
மீட்கப்பட்டோர்கள் ஆனந்தம்
பாடி ஆண்டவருடன் சேருவார்

1. மேகத்தில் எக்காளமே - இயேசு
வருகையில் தொனித்திடுமே
அன்பருடன் அவர் பக்தர் பலர்
ஆயத்தமாய் வருவார் - இயேசுவின்

2. அத்தி மரம் துளிர்க்குதே - அந்த
புத்திரர் இஸ்ரவேலர்
பத்திரமாக கூடிச் சேர - வேத
சத்தியம் நிறைவேறுதே - இயேசுவின்

3. ஜொலிக்கும் நட்சத்திரங்கள் - பல
வீழ்கின்ற நாளிதுவே
பாவத்தை வெறுத்து பயத்தோடே ஜீவித்து
இயேசுவை பின் செல்லுவோம் - இயேசுவின்

4. தூதனின் கரங்களில் - ஓர்
கோப கலசத்தைப் பார்
ஐயோ என்றொரு தொனி கேட்குதே
ஐங்கண்டங்கள் எங்குமே - இயேசுவின்

5. காலம் இனி செல்லாதே - கர்த்தர்
இயேசு வருகின்றாரே
ஆவியும் அவர் மணவாட்டியும்
கூவி அழைத்திடுவார் - இயேசுவின்

412. இயேசுவின் கரங்களைப் பற்றிக்

இயேசுவின் கரங்களைப்
பற்றிக் கொண்டேன் - நான் -2
இயேசுவின் கரங்களைப் பற்றிக் கொண்டேன்
எதற்கும் பயம் இல்லையே
இனியும் கவலை எனக்கில்லையே
அல்லேலூயா அல்லேலூயா (2)

1. இயேசுவுக்காய் அவமானம் ஏற்றுக் கொண்டேன்
இனிவரும் பலன் மேல் நோக்கமானேன்
அழிந்து போகும் பாராட்டு வேண்டாமே
அரவணைக்கும் இயேசு போதும் போதுமே

2. அதிவிரைவில் நீங்கும் இந்த உபத்திரவம்
அதிகமான கனமகிமை உண்டாக்கும்
காண்கின்ற எல்லாமே அநித்தியம்
காணாதவைகளோ நித்தியம்

3. பகைவர்க்கு அன்பு காட்டிடுவேன்
வெறுப்பவர்க்கு நன்மை செய்திடுவேன்
சபிப்பவர்க்கு ஆசி கூறிடுவேன்
தூற்றுவோருக்காக ஜெபித்திடுவேன்

4. கர்த்தரையே முன்வைத்து ஓடுகிறேன்
கடும்புயல் வந்தாலும் அசைவதில்லை
எதையும் தாங்குவேன் இயேசுவுக்காய்
இனியும் சோர்ந்;து போவதே இல்லை

5. ஆட்கொண்ட தேவனை நம்புகிறேன்
அவருக்குள் வேர் கொண்டு வளருகிறேன்
கோடைக்காலம் வந்தாலும் அச்சமில்லையே
வறட்சிக் காலம் வந்தாலும் கவலையில்லையே

6. வேதத்தில் இன்பம் காண்கின்றேன்
விரும்பி தியானம் செய்கின்றேன்
வாய்க்காலில் நடப்பட்ட மரம் நான்
வாழ்க்கையெல்லாம் தவறாமல் கனி கொடுப்பேன்

Tamil Hymns

413. இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு

இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு
அன்பு நிறைந்திடும் இடம் உண்டு (2)

1. உயர்வுமில்லை அங்கு தாழ்வுமில்லை
ஏழை இல்லை பணக்காரனில்லை
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் ஆண்டிடுவார்

2. பாவமில்லை அங்கு சாபமில்லை
வியாதியில்லை கடும் பசியுமில்லை
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் காத்திடுவார்

3. இன்பம் உண்டு சமாதானம் உண்டு
வெற்றி உண்டு துதி பாடல் உண்டு
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் ஈந்திடுவார்

414. இயேசுவின் கைகள் காக்க

1. இயேசுவின் கைகள் காக்க
மார்பினில் சாருவேன்- பேரன்பின்
நிழல் சூழ சுகிப்பேன் பளிங்குக் கடல் மீதும்
மாட்சி நகர்நின்றும் - தூதரின்
இன்ப கீதம் பரிப்புண்டாக்கிடும்

இயேசுவின் கைகள் காக்க
மார்பினில் சாருவேன்
பேரன்பின் நிழல் சூழ அமர்ந்து சுகிப்பேன்

2. இயேசு என் இன்பக் கோட்டை
எனக்காய் மாண்டோரை - சார்ந்தென்றும்
நிற்பேன் நீரே நித்திய கன்மலை
காத்திருப்பேன் அமர்ந்து
ராக்காலம் நீங்கிட
பேரின்ப கரை சேர மா ஜோதி தோன்றிட

3. இயேசுவின் கைகள் காக்க,
பாழ் லோகின் கவலைசோதனை
பாவக் கேடும் தாங்காது உள்ளத்தை
கஷ்டம் துக்கம் கண்ணீரும்
காணாமல் நீங்குமே வதைக்கும்
துன்பம் நோவும் விரைவில் தீருமே

Tamil Hymns

415. இயேசுவின் சமூகம் எத்தனை ஆனந்தம்

இயேசுவின் சமூகம் எத்தனை ஆனந்தம்
இயேசுவுக்காய் ஜீவிப்பதே எனக்கு ஆனந்தம்

1. இன்பம் (2) உள்ளமெல்லாம் இன்பம் கொள்ளுதே
பொங்கி (2) பாத்திரம் நிரம்பி வழியுதே
புரண்டு(2) சமாதானம் நதியாய் பாயுதே
உருண்டு (2) பாவபாரம் ஓடி மறையுதே - இயேசுவின்

2. கேட்க (2) வேதம் விசுவாசம் பெருகுதே
நினைக்க (2) கல்வாரியை அன்பு பெருகுதே
பேச (2) அன்னியபாஷை பக்தி பெருகுதே
பாட (2) பரிசுத்தாவி நிறைவு பெருகுதே - இயேசுவின்

3. ஜெபிக்க (2) மலைகளும் அசைந்து போகுதே
துதிக்க (2) சத்ரு கோட்டை இடிந்து வீழ்குதே
இயேசு (2) என் ரோகம் எல்லாம் தொலையுதே
இயேசு (2) ரத்தம் ரத்தம் சுத்தமாகுதே - இயேசுவின்

4. சகிக்க (2) பாடுகளை பலன் பெருகுதே
சுமக்க (2) சிலுவைதனை சொர்க்கம் திறக்குதே
கொள்ள (2) ஆத்ம பாரம் மீட்பு பெருகுதே
சொல்ல (2) சுவிசேஷம் அற்புதம் விளங்குதே -இயேசுவின்

5. ஊற்றும் (2) வாக்குதத்த பின்மாரி ஊற்றும்
வாரும் (2) வல்லமை விளங்கவே வாரும்
தாரும் (2) ஆவியின் வரங்களைத் தாரும்
போடும் (2) பரிசுத்த அக்கினி போடும் - இயேசுவின்

Tamil Hymns

416. இயேசுவின் சிந்தையை தரிப்போம்

இயேசுவின் சிந்தையை தரிப்போம்
நேசமொடவரின் அன்பில் சுகிப்போம்

1. சுத்த இதயத்தை சுதந்தரமக்கி
நித்திய வாழ்வதை நினைவதில் ஆக்கி
சத்திய வேதம் சர்வாயுதமாக்கி
கர்த்தரை பார்த்து நடப்போம்

2. கஷ்டங்கள் எல்லாம் கர்த்தருக்காக
நஷ்டம் என்றே உணராதவராக
கண மகிமை உண்டு பன்னுதற்காக
மன மடிவின்றி நடப்போம்

3. பொறுமை இல்லாதவர் முருமுருத்தாலும்
உரிமை இல்லை என்று வெருத்துவிட்டலும்
சிலுவையின் பாடுகள் சகித்தவர் போல
சினம் அடையாது நடப்போம்

4. கள்ள சகோதரர் கலக்கிடும் போது
சொல்லாதவைகளை சுமத்திடும் போது
அல்லலின் மேல் அல்லல் அணுகிடும் போது
சொல் தவறாமல் நடப்போம்

5. பதிலுக்கு பதில் செய்யாமல் இருந்து
நிந்திப்பவர்காய் நிதமும் ஜெபித்து
சபித்திடும் சத்ருக்களை ஆசீர்வதித்து
பிதாவை போல் ஆக கடவோம்

6. மூல உபதேசங்களை கடந்து
உலகத்தின் வேஷத்தை மனமுகர்ந்தருத்து
நலமென காண்பதை நாடோறும் உணர்ந்து
பூரனரக கடவோம்

Tamil Hymns

417. இயேசுவின் நாமத்தில் நாம் கூடிடும்

இயேசுவின் நாமத்தில் நாம்
கூடிடும் சமயங்களில்
பேசுவார் தியானத்திலே
அவர் தம் கிருபைகள் அளிக்க

1. மலைகள் விலகினாலும்
மாபர்வதம் நிலை பெயர்ந்தும்
என்றும் மாறாத அவர் கிருபைகள்
தம் மக்களுக்காறுதலே - இயேசு

2. சீயோனில் அவர் நம்மையே
சிறுமந்தையாய் சேர்த்திடுவார்
நித்திய ராஜ்யத்தை தந்திடுவார்
சத்திய பாதையில் நடந்ததினால் - இயேசு

3. கஷ்டங்கள் கவலைகளில்
அன்புக்கரம் நம்மை தாங்கிடுமே
கஷ்டங்கள் மாறிடுமே
நாதன் இயேசுவின் நாமத்தினால் - இயேசு

418. இயேசுவின் நாமத்தினால் ஒரு அற்புதம்

இயேசுவின் நாமத்தினால் - ஒரு
அற்புதம் எனக்கு நடக்கும் (2)
இயேசுவின் நாமத்தினால் - ஒரு
ஒரு புதுவழி எனக்கு திறக்கும் (2)

ஆமென் அல்லேலூயா (4)

தூதர்கள் சேனை இறங்கும் - ஒரு
யுத்தம் எனக்காய் நடக்கும் (2)
சிலுவை வெற்றி யாவும் - என்
சொந்தமாய் வந்து சேரும் (2)

சூழ்நிலை எனக்காய் மாறும் - நான்
ஜெபித்தது வந்து சேரும் (2)
சத்துரு கோட்டை வீழும் - நான்
சந்ததி தோல்வி மறையும் (2)

மூடிய கதவு திறக்கும் - முன்
நிற்கும் தடைகள் விலகும் (2)
இருளின் நாட்கள் நீங்கும் - மா
வெளிச்சம் என்மேல் உதிக்கும் (2)

சகல வியாதியும் - இயேசு
தழும்புகளால் மாறும் (2)
பாவ நோய்கள் எல்லாம் - இயேசு
இரத்தத்தால் நீங்கிடும் (2)

தேவன் தந்த தரிசனம் - அவை
நிச்சயம் நடந்தே தீரும் (2)
கர்த்தரின் வாக்குத்தத்தம் - அது
நிச்சயம் என்னை உயர்த்தும்

Tamil Hymns

419. இயேசுவின் நாமமே கிறிஸ்தேசுவின்

இயேசுவின் நாமமே!
கிறிஸ்தேசுவின் நாமமே!
வானம் பூமிதனில்
மகிமையோடிறங்கும்
உன்னதர் நாமமே!-இயேசு

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா - 2

1. மாந்தர் போற்றும் நாமம் - விண்
தூதர் வாழ்த்தும் நாமம்
பூவுலகோர் போற்றும்
மேன்மையான நாமம் -

2. பாவம் போக்கும் நாமம் - தூய
வாழ்வளிக்கும் நாமம்
நித்திய ஜீவனருளும்
ஈடில்லாத நாமம்

3. பேய் நடுங்கும் நாமம் - கடும்
நோய் அகற்றும் நாமம்
நேற்றும் இன்றும் என்றும்
மாறிடாத நாமம் -

4. இனிமை தங்கும் நாமம் - தீய
இன்னல் மாற்றும் நாமம்
இருளின் பயங்கள் நீக்கும்
ஈடில்லா நாமமே

5. சாவை வென்ற நாமம் - பாவ
சாபம் போக்கும் நாமம்
சர்வ வல்ல நாமம்
இயேசுவின் நாமமே

Tamil Hymns

420. இயேசுவின் நாமமே திருநாமம்

இயேசுவின் நாமமே திருநாமம் - முழு
இருதயத்தால் தொழுவோம் நாமும்

1. காசினியில் அதனுக் கிணையில்லையே
வாசித்த பேர்களுக்குக் குறையில்லையே

2. இத்தரையில் மெத்தவதிசய நாமம்
நித்தமுந் தொழுபவர்க்கு ஜெய நாமம்

3. உத்தம மகிமைப் பிரசித்த நாமம்
சத்திய விதேய மன மொத்த நாமம்

4. விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும்
நாமம் அண்டிடும் பேய்
பயந்தோடு தேவ நாமம்

5. பட்சமுள்ள ரட்சைசெயு முபகாரி
பாவப்பிணிகள் நீக்கும் பரிகாரி

Tamil Hymns

421. இயேசுவின் நாமம் அதிசயமா

இயேசுவின் நாமம் அதிசயமா
யேசுவின் நாமம் அதிசயமாமே
றென்றும் கர்த்தரை ஸ்தோத்தரிப்பேன்
என்னை விசாரிக்கும் அன்புள்ள இயேசுவே
எப்போதும் என்னுள்ளம் ஜீவிக்கிறார்

1. காடு மலையும் மேடானாலும்
கர்த்தரே வழிகாட்டி நடத்தினார்
இம்மானுவேல் அவர் என்னோடிருந்துமே
ததால் ஸ்தோத்தரிப்பேன்

2. போக்கும் வரத்தும் ஆபத்திலும்
காக்கும் தம் பலமான கரங்களே
நம்பிடுவேனே நான் அண்டிடுவேன் நித்தம்
நன்றி மறவாமல் ஸ்தோத்தரிப்பேன்

3. நிந்தை சுமந்த நேரங்களில்
தந்தை தம் பெலமீந்து தேற்றினாரே
என்னென்ன துன்பங்கள் இன்னும் வந்தாலுமே
மென்மேலும் இயேசுவை ஸ்தோத்தரிப்பேன்

4. சோதனையான வியாதிகளில்
வேதனை மரணப் படுக்கையிலும்
சித்தம் நிறைவேற முற்றும் குணமாக்கி
ஜீவன் அளித்ததால் ஸ்தோத்தரிப்பேன்

5. பாக்கியமான இரட்சிப்புமே
பெற்றேன் இக்கனமான அழைப்புமே
ஆனந்த தைலத்தின் வல்ல அபிஷேகம்
அன்போடு ஈந்ததால் ஸ்தோத்தரிப்பேன்

6. என்று வருவார் என் இயேசுவே
ஏங்கி என் மனமே தவித்திடுதே
கற்புள்ள கன்னிகை கூட்டமுடன் சேர்ந்து
கர்த்தரைக் கண்டு நான் ஸ்தோத்தரிப்பேன்

Tamil Hymns

422. இயேசுவின் நாமம் அன்பின் நாமம்

இயேசுவின் நாமம் அன்பின் நாமம்
இன்பம் சுரந்திடும் மதுர நாமம்

கூனர் நிமிர்ந்திட செவிடர் கேட்டிட
பாவம் போக்கிடும் பரலோக நாமம்

சாத்தான் வீழ்ந்திட சத்தியம் ஓங்கிட
சபையில் நிறைந்திடும் புண்ணிய நாமம்

வஞ்சகம் நீக்கிட தஞ்சம் பெற்றிட
வாஞ்சையில் நிறைந்திடும் புனித நாமம்

வறுமை நீக்கிட அருமை பெற்றிட
வளத்தில் நிறைந்திடும் புனித நாமம்

அநீதி நீக்கிட அருமை பெற்றிட
குருதி சிந்திட குறைவில்லா நாமம்

உண்மை வளர்ந்திட ஊக்கம் உயர்ந்திட
உரிமை நிறைந்திடும் உன்னத நாமம்

அறுவடை பெருகிட ஆட்களை அழைத்திட
ஆவியைப் பொழிந்திடும் ஆனந்த நாமம்

423. இயேசுவின் நாமம் எல்லாவற்றிற்கும்

இயேசுவின் நாமம் எல்லாவற்றிற்கும்
மேலான நாமம் இயேசுவின் நாமம்
எல்லாவற்றிற்கும் மேலான நாம்
இயேசுவின் நாமம் இயேசுவின் நாமம்

1. துரைத்தனத்திற்கும் அதிகாரத்திற்கும்
பேய்பிசாசின் தந்திரத்திற்கும்
எல்லாவற்றிற்கும் மேலான நாமம்
இயேசுவின் நாமம் இயேசுவின் நாமம்

2. வல்லமைக்கும் கர்த்தத்துவத்திற்கும்
இம்மையிலும் மறுமையிலும்
எல்லாவற்றிற்கும் மேலான நாமம்
இயேசுவின் நாமம் இயேசுவின் நாமம்

3. ஸ்தோத்தரிப்பீர் ஸ்தோத்தரிப்பீர்
விசுவாசிப்போர் ஸ்தோத்தரிப்பீர்
எல்லாவற்றிற்கும் மேலான நாமம்
இயேசுவின் நாமம் இயேசுவின் நாமம

424. இயேசுவின் நாமம் இனிதான நாமம்

இயேசுவின் நாமம் இனிதான நாமம்
இணையில்லா நாமம் இன்ப நாமம்

1. பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும்
பரம சந்தோஷம் பக்தருக்களிக்கும்

2. பரிமள தைலமாம் இயேசுவின் நாமம்
பார் எங்கும் வாசனை வீசிடும் நாமம்

3. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வானாதி வானவர் இயேசுவின் நாமம்

4. நேற்றும் இன்றும் என்றும் மாறிடா நாமம்
நம்பினோரை என்றும் கைவிடா நாமம்

5. முழங்கால் யாவும் முடக்கிடும் நாமம்
மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம்

6. சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம்
சாபப் பிசாசை துரத்திட்ட நாமம்

Tamil Hymns

425. இயேசுவின் நாமம் ஓங்கிடவே நேசமுடன்

1. இயேசுவின் நாமம் ஓங்கிடவே
நேசமுடன் புகழ் பாடிடுவோம்
காசினியில் நிகர் வேறதற்கில்லை
தாசர்கள் நாம் துதி சாற்றிடுவோம்

வானமும் பூமியும் யாவையுமே
வார்த்தையினால் உண்டாக்கினவர்
என்னை மண்ணென்று நினைவாக்கினவர்
எனக்கென்றும் சொந்தமவர்

2. அற்புதமாம் அதிசயமாம்
ஆண்டவர் இயேசுவின் நாமமதே
பேய் நடுங்கும் கடும் நோய் அகலும்
நல் பேர் புகழ் ஓங்கிடும் நாமமதே

3. வாழ்ந்திடும் வானோர் பூதலத்தோர்
வாழ்த்தி வணங்கிடும் நாமமதே
மானிடரின் முழங்கால் முடங்கும்
மெய் மேன்மை உயர் திரு நாமமதே

4. சாவு பயங்கள் நீங்கிடவே
சத்துருமேல் ஜெயம் பெற்றிடவே
சோதனையில் பல வேதனையில்
என் சொந்த அடைக்கல நாமமதே

5. வந்துன்னைச் சேர்ப்பேனென்றுரைத்த
வல்ல கிறிஸ்தேசுவின் நாமமதே
நீடுழியாய் நித்ய ராஜ்யத்திலே -தம்
நாமமதை நான் போற்றிடுவேன்

Tamil Hymns

426. இயேசுவின் பிள்ளைகள் நாங்கள்

இயேசுவின் பிள்ளைகள் நாங்கள்
எப்போதும் மகிழ்ந்திருப்போம்

(இயேசுவின் பிள்ளைகளே
எப்போதும் மகிழ்ந்திருங்கள்)

1. எந்நேரமும் எவ்வேளையும்
இயேசுவில் களிகூறுவோம்
நம் நேசரில் களிகூறுவோம் (2)

2. எதை நினைத்தும் கலங்காமல்
இப்போதும் ஸ்தோத்தரிப்போம்
நாம் எப்போதும் ஸ்தோத்தரிப்போம்

3. இன்று காணும் எகிப்தியரை
இனிமேலும் காணமாட்டோம்
நமக்காய் யுத்தம் செய்வார் - இயேசு

4. நமக்கு எதிராய் மந்திரம் இல்லை
குறிசொல்லல் எதுவும் இல்லை
சாத்தான் நம் காலின் கீழே - இன்று

5. காற்றை நாம் காணமாட்டோம்
மழையையும் பார்க்கமாட்டோம்
வாய்கால்கள் நிரப்பப்படும்

6. நினைப்பதற்கும் வேண்டுவதற்கும்
அதிகமாய் செய்திடுவார்
அதிசயம் செய்திடுவார்

7. வாலாக்காமல் தலையாக்குவார்
கீழாகாமல் மேலாக்குவார்
குறையெல்லாம் நிறைவாக்குவார் - நம்

Tamil Hymns

427. இயேசுவின் பின்னால் நான் செல்வேன்

இயேசுவின் பின்னால் நான் செல்வேன்
திரும்பி பார்க்க மாட்டேன்
சிலுவையே முன்னால் உலகமே பின்னால்
இயேசு சிந்திய இரத்தத்தினாலே
என்றும் விடுதலையே

1. உலகத்தின் பெருமை செல்வத்தின் பற்று
எல்லாம் உதறி விட்டேன்
உடல், பொருள், ஆவி உடைமைகள் யாவும்
ஒப்புக் கொடுத்து விட்டேன்
நான் அவர் ஆலயம் எனக்குள்ளே இயேசு
என்ன நடந்தாலும் எவ்வேளையிலும்
எப்போதும் துதித்தீடுவேன்

2. வேதனை நெருக்கம் இன்னல்கள் இடர்கள்
எதுவும் பிரிக்காது
வெற்றி வேந்தன் என் இயேசுவின் அன்பால்
முற்றிலும் ஜெயம் பெறுவேன்
நிகழ்கின்ற காலமோ வருகின்ற காலமோ
வாழ்வோ சாவோ வல்ல தூதரோ
பிரிக்கவே முடியாது

3. அகிலமெங்கிலும் ஆண்டவன் இயேசு
ஆட்சி செய்திடணும்
ஆவியில் நிறைந்து சத்தியம் பேசும்
சபைகள் பெருகிடணும்
என் சொந்த தேசம் இயேசுவுக்கு
இயேசுதான் வழி என்கிற முழக்கம்
எங்கும் கேட்கணுமே

4. பழையன கடந்தன புதியன புகுந்தன
பரலோக குடிமகன் நான்
மறுரூபமாகி மணவாளன் இயேசுவை
முகமுகமாய் காண்பேன்
இதயமெல்லாம் ஏங்குதைய்யா
இயேசுவே உந்தன் அன்பு நதியிலே
எந்நாளும் நீந்தணுமே

Tamil Hymns

428. இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்

1. இயேசுவின் பின்னே போகத்
துணிந்தேன் - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

2. உலகம் என் பின்னே சிலுவை
என் முன்னே - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

3. கஷ்டம் என் இன்பம் நஷ்டம்
என் லாபம் - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

4. என் மீட்பர் பாதை என்றும்
பின் செல்வேன் - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

5. இயேசு என் ஆசை சீயோன்
என் வாஞ்சை - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

6. நேசரின் சித்தம் செய்வதென்
வாஞ்சை - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

7. செல்வேன் நான் வேகம் வெல்வேன்
என் கிரீடம் - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

8. கேட்கும் ஓர் ஓசை வா எந்தன்
காந்தை - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

429. இயேசுவின் மார்பினில் சாருவேனே

இயேசுவின் மார்பினில் - சாருவேனே
துன்பம் துக்கம் கண்ணீர் - மறப்பேனே

காரிருள் மூடும் நேரத்தினில்
கர்த்தா உம் பாதம் அண்டி நின்றேன்
எந்தனை மீட்டிட உந்தனை ஈந்திரே
அன்பின் சொரூபி என் இயேசு நாதா

நீசச் சிலுவை மீதினிலே
என் பாவம் போக்கத் தொங்கினீரே
ஆருயிர் நாதனே எத்தனை வாதைகள்
என்னை நீர் மந்தையில் சேர்த்திடவே

கல்வாரி நாதா நின் இரத்தத்தை
சிந்தினீரே இப்பாவிக்காக
கைகால்கள் ஆணிகள் கடாவப்பட்டதே
முள்முடி சூட்டியே நின் சிரசில்

ஜீவனைத் தந்த என் நேசரே
ஒப்புவித்தேன் என்னை உமக்காய்
கரத்தில் ஏந்தியே பொற்கிரீடம் சூட்டியே
விண்ணிலும் சேர்ப்பீரே பாவியென்னை

Tamil Hymns

430. இயேசுவின் வாக்கு நித்தியமாமே

இயேசுவின் வாக்கு நித்தியமாமே
என்ன நேரினும் மாறாதாமே
வானமும் ப10மியிம் மாறிபோமே
வல்லவர் வாக்கு மாறாதாமே

(இயேசுவின்) அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகித்தார்
அவரின் மிகுந்த காருண்யத்தால்
உன்னை என்றென்றுமாய் இழுத்துக்கொண்டார்
அவரின் அன்பு மாறாதாமே

இயேசுவின் அன்பு நித்தியமாமே
என்ன நேரினும் மாறாதாமே
தந்தையும் தாயும் கைவிட்டபோதும்
நேசரின் அன்பு மாறாதாமே

என் ஜீவனுள்ள நாளெல்லாமே
நன்மை கிருபையும் தொடருமே
கர்த்தருடைய வீட்டிலே நானும்
நீடித்த நாட்களாய் நிலைப்பேனே

Tamil Hymns

431. இயேசுவின் ரத்தம் வல்லமையுள்ளது

1. இயேசுவின் ரத்தம் வல்லமையுள்ளது
இயேசுவின் ரத்தம் மேன்மையுள்ளது
இயேசுவின் ரத்தம் பரிசுத்தமானது
விலையேரப்பெற்றது (2)

இயேசுவின் ரத்தம் ஜெயம் ஜெயம் (3)
நம் இயேசுவின் ரத்தம் ஜெயம் ஜெயம் (2)

2. பாவத்தை போக்கிடும் இயேசுவின் ரத்தம்
சாபத்தை நீக்கிடும் இயேசுவின் ரத்தம் (2)
வியாதியை நீக்கிடும் இயேசுவின் ரத்தம்
விடுதலை தந்திடும் இயேசுவின் ரத்தம் (2)

3. பாதாளம் வென்றிடும் இயேசுவின் ரத்தம்
பாதுகாத்திடும் இயேசுவின் ரத்தம் (2)
பெலனை தந்திடும் இயேசுவின் ரத்தம்
உயிர் கொடுத்திடும் இயேசுவின் ரத்தம் (2)

432. இயேசுவுக்காய் தொண்டு செய்திடவே

இயேசுவுக்காய் தொண்டு செய்திடவே
ஏகமாய் எழும்பிடுவீர் சபையே
நாசமிந் நானிலத்தில் வருதே

1. தமக்கு முன் வைத்த மகிமை எண்ணி
தளராமல் பாடு சகித்தவரை
நோக்கியே நாம் ஓடிடுவோம்
தாங்கியே காப்பாரே கடைசிவரை - ஏசுவுக்காய்

2. பாவத்தில் மா ஜனம் அழிகிறதே
லோகத்தின் இரட்சிப்பைக் கருதியே நாம்
நள்ளிரவோ நடுப்பகலோ
நருங்குண்ட ஆவியில் ஜெபித்திடுவோம்- ஏசுவுக்காய்

3. பேதுரு பவுலும் ஸ்தேவானும்
பெரும் ரத்தசாட்சியாய் மரித்தது போல்
புறப்படுவோம் ஏசுவுக்காய்
போர் முனையில் ஜீவன் வைத்திடவே - ஏசுவுக்காய்

4. ஒருவரும் கிரியை செய்ய இயலா
இருண்ட இராக்காலம் எதிர்படுமுன்
ஏகோபித்து எழும்பிடுவோம்
இயேசுவின் சத்தியம் சாற்றிடவே - ஏசுவுக்காய்

5. மேகத்தில் ஏசுதான் தோன்றிடும் நாள்
வேகத்தில் நெருங்கிடும் காலமிதில்
பரிசுத்தத்தை காத்துக் கொண்டே
பரமனுக்காய் கடும் சேவை செய்வோம்

Tamil Hymns

433. இயேசுவுக்கு சொந்தமான பிள்ளைகள்

இயேசுவுக்கு சொந்தமான பிள்ளைகள் - அவர்
அன்புக்கு அடிபணிந்த சீடர்கள்
தேவகரம் வடிவமைத்த ஜீவ சிற்பங்கள் - அவர்
ஆற்றலுக்கு வலுவான உயிர்ச்சான்றுகள்

இசாவா நாங்கள் இசாவா - 2
இயேசுவைச் சேர்ந்தவர்கள் இசாவா - நாங்கள் -2

இயேசுவைப் பற்றிக்கொண்ட புத்திசாலிகள்
உன்னதத்தில் கொலுவிருக்கும் விந்தை மாந்தர்கள்
நிலைவாழ்வும் நிறைவாழ்வும் கண்ட ஞானிகள்
சாத்தானைத் தோற்கடிக்கும் வெற்றி வீரர்கள் - நாங்கள்

பாவ மாந்தர் மீட்பைக் காணும் அடையாளங்கள்
தேவ செய்தி சுமந்தலையும் இராஜ மடல்கள்
தூய்மை மணம் வீசுகின்ற நற்கந்தங்கள்
வாழ்வை பானபலியாக்கும் உயிர்த்தோழர்கள் - நாங்கள்

தேவ அரசு விடிய உழைக்கும் போராளிகள்
தேசத்தைக் கலக்குகின்ற சாவின் எதிரிகள்
இராஜநெறி பரப்புகின்ற புரட்சியாளர்கள்
தேவனுக்காய் வாழ்ந்து முடிக்கும் நித்யசாட்சிகள் - நாங்கள்

Tamil Hymns

434. இயேசுவுக்கே ஒப்புவித்தேன் யாவையும்

1. இயேசுவுக்கே ஒப்புவித்தேன் யாவையும் தாராளமாய்
என்றும் அவரோடு தங்கி நம்பி நேசிப்பேன் மெய்யாய்

ஒப்புவிக்கிறேன் ஒப்புவிக்கிறேன்
நேச ரட்சகா நான் யாவும் ஒப்புவிக்கிறேன்

2. இயேசுவுக்கே ஒப்புவித்தேன் அவர் பாதம் பணிந்தேன்
லோக இன்பம் யாவும் விட்டேன் இப்போதேற்றுக் கொள்ளுமேன்

3. இயேசுவுக்கே ஒப்புவித்தேன் முற்றும் ஆட்கொண்டருளும்
நாம் உம் சொந்தம் நீர் என் சொந்தம் சாட்சியாம் தேவாவியும்

4. இயேசுவுக்கே ஒப்புவித்தேன் நாதா அடியேனையும்
அன்பு பெலத்தால் நிரப்பி என்னை ஆசீர்வதியும்

5. இயேசுவுக்கே ஒப்புவித்தேன் திவ்விய ஜூவாலை வீசுதே
பூரண இரட்சை, பேரானந்தம் சதா ஸ்தோத்திரம் அவர்க்கே

Tamil Hymns

435. இயேசுவே ஆண்டவர் இயேசுவே

இயேசுவே ஆண்டவர்
இயேசுவே ஆண்டவர்

1. வானம் பூமி யாவையும்
தம் வார்த்தையாலே படைத்தார்
சர்வ சிருஷ்டியின் நாயகன்
சர்வ லோகத்தின் ஆண்டவர்

2. நம் இயேசுவால் கூடாதது
ஒன்றுமே இல்லையே
அவரையே நம்புவோம்
என்றென்றும் ஆராதிப்போம்

3. இயேசு நீதி நிறைந்தவர்
சமாதான காரணர்
சர்வ வல்லவர்
சகல அதிகாரம் உடையவர்

4. நம் இயேசுவைப் போலவே
வேறே இரட்சகர் இல்லையே
நம் இரட்சண்ய கன்மலை
அவரே நம் தஞ்சமே

436. இயேசுவே ஆண்டவர்

இயேசுவே ஆண்டவர்
மரணத்தினின்று உயிர்த்தெழுந்தார்
கால்கள் யாவும் முடங்கும்
நாவு யாவும் போற்றிடும்
அந்த இயேசுவே ஆண்டவர்

437. இயேசுவே உந்தன் மாசில்லா இரத்தம்

1. இயேசுவே உந்தன் மாசில்லா இரத்தம்
எந்தனுக்காக சிந்தினீரே -2
கோரப்பாடுகள் யாவும் சகித்தீர்
அத்தனையும் எனக்காகவோ

மா பாவியாம் என்னை நினைக்க
மண்ணான நான் எம்மாத்திரம் ஐயா
தேவ தூதரிலும் மகிபனாய்
என்னை மாற்றின அன்பைத் துதிப்பேன்

2. என் மேல் பாராட்டின உமதன்புக்
கீடாய் என்ன நான் செய்திடுவேன்
நரகாக்கினையில் நின்று மீட்ட
சுத்த கிருபையை நித்தம் பாடுவேன்

3. எந்தன் பாவங்கள் பாரச்சுமை போல
தாங்கக்கூடாத மா பாரம்
மன்னிக்கும் தயை பெருத்த என் தேவா
மன்னித்தும் மறந்தும் தள்ளனீர்

4. எந்தன் பாதங்கள் சறுக்கிடும்போது
வலக்கரத்தாலே தாங்குகின்றீர்
மனபாரத்தால் சோர்ந்திடும்போது
ஜீவ வார்த்தையால் தேற்றிகின்றீர்

5. எனக்காக நீர் யாவும் முடித்தீர்
உமக்காக நான் என்ன செய்வேன்
எந்தன் ஜீவனுள்ள நாளெல்லாம் உம்
சிலுவை சுமந்து வருவேன்

438. இயேசுவே உம் அருகினிலே

இயேசுவே உம் அருகினிலே
ஆவலாய் வருகின்றேன்
எந்நேரமும் எந்தன் சுவாசம்
உம்மையே துதித்திடுமே
எந்நாளுமே எந்தன் வாழ்க்கை
உந்தன் மகிமையைப் பாடிடுமே
இயேசுவே… இயேசுவே…

439. இயேசுவே உம்மை உயர்த்திடுவேன்

இயேசுவே உம்மை உயர்த்திடுவேன்
என் நேசரே உம்மைப் பாடுவேன் - 2
நீர் செய்த எல்லா நன்மைகட்காக
உமக்கே ஆராதனை

உமக்கே ஆராதனை-ஐயா (4)

1. நீர் தான் என் தஞ்சமே
நீர் தான் என் கோட்டையே
துன்ப வேளையில் தூக்கி என்னை
தோளில் சுமந்தவரே

2. நீரே என் ஆதாரமே
நீரே என் துனையாளரே
சோர்ந்திடும் நேரம் சார்ந்திட உந்தன்
கிருபை ஈந்தவரே

3. நீர் தான் என் பெலன்
நீர் தான் என் சுகமே
கண்ணீர் துடைத்து கவலை போக்கி
ஆறுதல் அளிப்பவரே

Tamil Hymns

440. இயேசுவே உம்மைப்போலாக வாஞ்சிக்குதே

இயேசுவே உம்மைப்போலாக
வாஞ்சிக்குதே என்னுள்ளம்

என் ஆவி ஆத்மா சரீரம்
முற்றும் படைத்து விட்டேன்
என்னை ஏற்றுக்கொள்ளும் ஐயனே

1. பாவமறியாது பாவமே செய்யாது
பாரினில் ஜீவித்தீரே
பரிசுத்தர் உம்மைப் போல் ஜீவிக்கவே
பெலமதை தாருமையா - உந்தன்

2. உபத்திரவம் உண்டு உலகினில் என்று
உலகத்தை வென்றேனென்றீர்
உம்மைப்போல் உலகினை ஜெயத்திடவே
பெலமதை தாருமையா - உந்தன்

3. சிலுவை சுமந்தென்றும் என் பின் வராதவன்
அல்ல என் சீஷன் என்றீர்
எந்தன் சிலுவையை நான் சுமக்க
பெலமதைத் தாருமையா - உந்தன்

4. தலைசாய்க்க தலமில்லை
தரணியில் உறவில்லை
நிலையில்லா பூவில் என்றீர்
நானும் உம்மைப் போல தியாகம் செய்ய
பெலமதைத் தாருமையா - உந்தன்

5. சீயோன் மலையதில் சிறந்தே இலங்கிடும்
தேவாட்டுக்குட்டி நீரே
சீயோனில் உம்முடன் நானிருக்க
உம்மைப் போல் மாற்றும் ஐயா - என்னை

Tamil Hymns

441. இயேசுவே உம் நாமத்தினால்

1. இயேசுவே உம் நாமத்தினால்
இன்பமுண்டு யாவருக்கும்
நன்றியுள்ள இதயத்துடன்
கூடினோம் இந்நன்னாளிலே

எங்கள் தேவனே எங்கள் ராஜனே (2)
என்றும் உம்மையே சேவிப்போம்
நன்றியுள்ள சாட்சியாக
உமக்கென்றும் ஜீவிப்போம்

2. நிலையில்லா இவ்வுலகில்
நெறி தவறி நாம் அலைந்தோம்
நின்னொளி பிரகாசித்திட
நீங்கா ஜீவன் பெற்றிடவே

3. பொன்னை நாடி மண்ணையடைந்தோம்
புகழ் தேடி ஏமாற்றங் கொண்டோம்
விண்ணை நோக்கி ஜெயம் பெற்றோம்
இயேசுவின் தரிசனத்தால்

4. உன்னைக் கண்டழைக்கும் சத்தத்தை
கேட்டாயோ ஓ! பாவியே
இன்றும் இயேசுவண்டை வாராயோ
நித்திய ஜீவன் பெற்றிடவே

5. இயேசுவை நாம் பின் செல்லுவோம்
உலகை என்றும் வெறுப்போம்
துன்ப பாதை சென்றிடுவோம்
என்றும் அவரின் பெலத்தால்

Tamil Hymns

442. இயேசுவே உம்மை தியானித்தால்

1. இயேசுவே, உம்மை தியானித்தால்
உள்ளம் கனியுமே;
கண்ணார உம்மைக் காணுங்கால்
பரமானந்தமே.

2. மானிட மீட்பர் இயேசுவின்
சீர் நாமம் போலவே,
இன் கீத நாதம் ஆய்ந்திடின்
உண்டோ இப்பாரிலே?

3. நீர் நொறுங்குண்ட நெஞ்சுக்கு
நம்பிக்கை ஆகுவீர்;
நீர் சாந்தமுள்ள மாந்தர்க்கு
சந்தோஷம் ஈகுவீர்.

4. கேட்போர்க்கும் தேடுவோர்க்கும் நீர்
ஈவீர் எந்நன்மையும்;
கண்டடைந்தோரின் பாக்கிய சீர்
யார் சொல்ல முடியும்?

5. இயேசுவின் அன்பை உணர்ந்து
மெய் பக்தர் அறிவார்;
அவ்வன்பின் ஆழம் அளந்து
மற்றோர் அறிந்திடார்.

6. இயேசுவே, எங்கள் முக்தியும்
பேரின்பமும் நீரே;
இப்போதும் நித்திய காலமும்
நீர் எங்கள் மாட்சியே.

Tamil Hymns

443. இயேசுவே உம்மை பாடுவேன்

இயேசுவே உம்மை பாடுவேன் - நான்
நேசரே உம்மை போற்றுவேன்
உலகத்தில் உதித்த உன்னதரே - உம்மை
என்றும் பாடிடுவேன்

1. பாவத்தை போக்க பலியாக வந்த
பரனே உம்மைப் பாடுவேன்
பாவத்தை வெறுத்து பாவியை அணைத்து
பரமனே உம்மை பாடுவேன்
பாரினில் வந்து பழி சுமந்தீரே
பாவ பலியாய் அடிக்கப் பட்டீரே
பரமனே உம்மை பாடுவேன் - நான்
என்றும் பாடிடுவேன்

2. சாரோனின் ரோஜா சாந்த சொரூபா
உம்மையே நான் பாடுவேன்
சாவினை வென்று சாத்தானை ஜெயித்த
யேசுவே உம்மை பாடுவேன்
சகலமும் படைத்த சீர் இயேசு நாதா
அகிலமும் போற்றும் ஆருயிர் நாதா
தேவனே உம்மை பாடுவேன் - நான்
என்றும் பாடிடுவேன்

3. தேவகுமாரா தேற்றரவாளனே
உம்மையே நான் பாடுவேன்
ஆறுதல் தந்து என்னை தேற்றி
மார்புடனே இருப்பவரே
தேடி வந்த தேவ சுதனே
தன்னையே தந்த தேவாதி தேவா
தினமும் உம்மை பாடுவேன் - நான்
என்றும் பாடிடுவேன்

Tamil Hymns

444. இயேசுவே உம்மையல்லாமல்

1. இயேசுவே உம்மையல்லாமல்
நாங்கள் மாநிர்பாக்கியர்
எந்த நன்மையுமில்லாமல்
கெட்டுப் போன மானிடர்

2. நாங்கள் பாவ இருளாலே
அந்தகாரப்பட்டவர்
சர்ப்பத்தின் விஷத்தினாலே
தாங்கா நோய் பிடித்தவர்

3. இந்தக் கெட்ட லோகம் எங்கும்
பாவக்கண்ணி மிகுதி
தேவரீராலன்றி யாரும்
தப்பி வாழ்வதெப்படி

4. இயேசுவே, பலத்தைத் தந்து
அந்தகாரம் அகற்றும்
ஞானக்கண்ணைத் தெளிவித்து
எங்கள் மேல் பிரகாசியும்

445. இயேசுவே ஒளி வீசும்

இயேசுவே ஒளி வீசும்
எங்கள் நாட்டை உம் ஒளியால் நிரப்பும்
பற்றி எரியட்டும் எங்கள் வாழ்க்கை யாவும்
கிருபை இரக்கத்தில் அன்பால்
என் தேசம் நிரப்பச் செய்யும்
வார்த்தையை அனுப்புமேன்
இயேசுவையே ஒளி வீசும்

1. இயேசுவே உந்தன் அன்பின் வெளிச்சம்
இருளின் நடுவில் என்றும் உதிக்கும்
உலகின் ஒளியாம் இயேசுவின் வெளிச்சம்
இருளில் இருந்தென்னை விடுதலை ஆக்கும்
இயேசுவே ஒளி வீசும் --- இயேசுவே

2. உந்தன் ராஜ மேன்மையைப் பார்த்து
எங்கள் முகங்களும் உம் முகம் காட்ட
மகிமையில் இருந்து மகிமையாய் மாற
என்னை காண்பவர் உம் செயல் காண
இயேசுவே ஒளி வீசும் --- இயேசுவே

Tamil Hymns

446. இயேசுவே கல்வாரியில் என்னை

1. இயேசுவே கல்வாரியில்
என்னை வைத்துக்கொள்ளும்
பாவம் போக்கும் இரத்தமாம்
திவ்ய ஊற்றைக்காட்டும்

மீட்பரே, மீட்பரே!
எந்தன் மேன்மை நீரே
விண்ணில் வாழுமளவும்
நன்மை செய்குவீரே

2. பாவியேன் கல்வாரியில்
இரட்சிப்பைப் பெற்றேனே
ஞானஜோதி தோன்றவும்
கண்டு பரித்தேனே

3. இரட்சகா, கல்வாரியின்
காட்சி கண்டோனாக
பக்தியோடு ஜீவிக்க
என்னை ஆள்வீராக

4. இன்னமும் கல்வாரியில்
ஆவலாய் நிற்பேனே
பின்பு மோட்ச லோகத்தில்
என்றும் வாழுவேனே

447. இயேசுவே கிருபாசனப்பதியே

இயேசுவே, கிருபாசனப்பதியே,
இயேசுவே, கிருபாசனப்பதியே, கெட்ட
இழிஞன் எனை மீட்டருள்,
ஏசுவே, கிருபாசனப்பதியே.

1.காசினியில் உன்னை அன்றி, தாசன் எனக் காதரவு
கண்டிலேன், சருவ வல்ல மண்டலாதிபா!
நேசமாய் ஏழைக்கிரங்கி, மோசம் அணுகாது காத்து
நித்தனே, எனைத் திருத்தி, வைத்தருள் புத்தி வருத்தி,

2.பேயுடைச் சிறையதிலும், காய வினைக் கேடதிலும்,
பின்னமாகச் சிக்குண்ட துர்க் கன்மி ஆயினேன்@
தீயரை மீட்கும் பொருளாய் நேயம் உற்றுதிரம் விட்ட
தேவனே, எனைக்கண் நோக்கித் தீவினை அனைத்தும் நீக்கி,

3.சிறைப்படுத்தின வற்றைச் சிறையாக்கி விட்ட அதி
தீரமுள்ள எங்கள் உபகார வள்ளலே,
குறை ஏதுனை அண்டினோர்க் கிறைவா? எனைச் சதிக்கும்
குற்றங்கள் அறவே தீர்த்து, முற்றுமுடியக் கண் பார்த்து,

4.பொல்லா உலகம் அதில் நல்லார் எவரும் இல்லை,
புண்ணியனே, உன் சரணம் நண்ணி அண்டினேன்@
எல்லார்க்குள் எல்லாம் நீ அல்லோ எனக்குதவி?
இந்நாள் அருள் புரிந்து உன் ஆவியைச் சொரிந்து,

Tamil Hymns

448. இயேசுவே தாவீதின் குமாரனே

இயேசுவே தாவீதின் குமாரனே
இரங்கிடும் எனக்கு இரங்கிடும்
நீர் வந்தால் போதும்
என் வாழ்க்கை மாறும் -2

இரங்கிடும் எனக்கு இரங்கிடும்
திறந்திடும் கண்கள் திறந்திடும்

1. இயேசுவே சர்வ வல்லவரே
உம்மால் கூடாதது ஒன்றுமில்லையே
ஒரு வார்த்தை போதும்
என் வாழ்க்கை மாறும்

2. இரங்கிடும் எனக்கு இரங்கிடும்
மாற்றிடும் என் வாழ்வை மாற்றிடும்
விசுவாசித்தாலே எல்லாம் மாறும்
விசுவாசித்தாலே அற்புதங்கள் நடக்கும்
நானும் உம்மை விசுவாசிக்கிறேன்
விசுவாசித்தாலே தேவ மகிமை காண்பேன்
விசுவாசித்தாலே எல்லாம் மாறும்
விசுவாசித்தாலே அற்புதங்கள் நடக்கும்
விசுவாசித்தாலே என் வாழ்க்கை மாறும்
விசுவாசித்தாலே என் கண்கள் திறக்கும்

Tamil Hymns

449. இயேசுவே என் பிரியமே

இயேசுவே என் பிரியமே
இயேசுவே என் இன்பமே
அன்பினாலே என் இதயம் நிறைந்திடவே
உம் பாசத்தாலே என் இதயம் பொங்கிடவே

என் உள்ளம் தேடுது
அது உம்மை நாடுது - (2)

1. உலகத்திலே எத்தனையோ பாசங்களுண்டு
உள்ளத்திலே எழும்புகின்ற ஏக்கங்களுண்டு
உலகத்திலே எத்தனையோ பாசங்களுண்டு
உள்ளத்திலே எழும்புகின்ற ஏக்கங்களுண்டு
ஆனாலும் நீரோ என் நேசரே - 2
என் உயிரே என் ஆன்ம துணையுமானீரே - (2)

2. நல்லதாக தோன்றுகின்ற வழிகளுமுண்டு
நயமாக பேசுகின்ற மனிதருமுண்டு
நல்லதாக தோன்றுகின்ற வழிகளுமுண்டு
நயமாக பேசுகின்ற மனிதருமுண்டு
ஆனாலும் நீரோ என் நேசரே - 2
என் வழியும் உண்மையும் வாழ்வுமானீரே - (2)
(என் உள்ளம்... 2) (இயேசுவே... 2)

Tamil Hymns

450. இயேசுவே என் தெய்வமே

இயேசுவே என் தெய்வமே
என்மேல் மனமிரங்கும்

1. நான் பாவம் செய்தேன்
உம்மை நோகசச் செய்தேன்
உம்மைத் தேடாமல் வாழ்ந்து வந்தேன்
என்னை மன்னியும் தெய்வமே (2)

2. உம்மை மறுதலித்தேன்
பின் வாங்கிப் போனேன்
உம் வல்லமை இழந்தேனையா
என்னை மன்னியும் தெய்வமே

3. முள்முடி தாங்கி
ஐயா காயப்பட்டீர்
நீர் எனக்காக பலியானீர்
உம் இரத்தத்தால் கழுவிவிடும்

4. துன்ப வேளையிலே
மனம் துவண்டு போனேன்
உம்மை நினையாது தூரப்போனேன்
என்னை மன்னியும் தெய்வமே இந்த
ஒருவிசை மன்னியுமே

5. அநியாயம் செய்தேன்
கடும் கோபம் கொண்டேன்
பிறர் வாழ்வைப் கெடுத்தேனையா
என்னை மன்னியும் தெய்வமே

451. இயேசுவே தேவன் என் அன்பரே

இயேசுவே தேவன் என் அன்பரே
இயேசுவே பெலன் என் வாஞ்சை என்றுமே
என் மணவாளன் என் நேசமாணவர்
ஆத்ம நேசர் லீலி புஷ்பமே -2

மதுரமே எந்தன் இயேசுவே
உம் அன்பில் நான் மகிழ்ந்திடுவேன்
சாரோனின் ரோஜாவும் நீரே
என் இயேசுவே என் ஜோதியே அன்பரே

452. இயேசுவே வழி சத்தியம் ஜீவன்

இயேசுவே வழி சத்தியம் ஜீவன்
இயேசுவே ஒளி நித்யம் தேவன்

1. புது வாழ்வு எனக்கு தந்தார்
சமாதானம் நிறைவாய் அளித்தார்
பாவங்கள் யாவும் மன்னித்தார்
சாபங்கள் யாவும் தொலைத்தார்
கல்வாரி மீதில் எனக்காய்
தம் உதிரம் சிந்தி மரித்தார்
மூன்றாம் நாளில் உயிர்த்தார்
உன்னதத்தில் அமர்ந்தார்

2. நல் மேய்ப்பனாக காத்தார்
எனை தமையனாகக் கொண்டார்
என் நண்பனாக வந்தார்
என் தலைவனாக நின்றார்
மேகங்கள் மீதில் ஓர்நாள்
மணவாளனாக வருவார்
என்னை அழைத்துக் கொள்வார்
வானில் கொண்டு செல்வார்

453. இயேசுவே நீர் என்னை விட்டால்

1. இயேசுவே, நீர் என்னை விட்டால்
கெட்டழிந்து போவேனே
பாவ சோதனைக்குட்பட்டால்
மோசத்திற்குள்ளாவேனே
இயேசுவே, நீர் என்றைக்கும்
தஞ்சம் தந்து ரட்சியும்.

2. நேசரால் கைவிடப்பட்டு
நொந்து போய்த் தவிக்கையில்
ஆபத்தால் நெருக்கப்பட்டு
ஏங்கி அங்கலாய்க்கையில்
இயேசுவே, நீர் என்றைக்கும்
தஞ்சம் தந்து ரட்சியும்.

3. பாதை எங்கும் அந்தகாரம்
சூழ்ந்து நிற்கும் வேளையில்
கொடிதாம் என் பாவ பாரம்
வேதனை கொடுக்கையில்
இயேசுவே, நீர் என்றைக்கும்
தஞ்சம் தந்து ரட்சியும்.

4. தந்தை தாயும் மக்கள் நண்பர்
யாருமின்றி ஏங்கினால்
துன்புறுத்தும் தீய வம்பர்
கைகள் என் மேல் ஓங்கினால்
இயேசுவே, நீர் என்றைக்கும்
தஞ்சம் தந்து ரட்சியும்.

5. பெலன் என்னிலே ஒடுங்கி
சாகும் நேரம் கிட்டுகில்,
சாத்தான் என்னண்டை நெருங்கி
மோசம் போகப் பார்க்கையில்
இயேசுவே, நீர் என்றைக்கும்
தஞ்சம் தந்து ரட்சியும்.

454. இயேசுவை நம்பிப் பற்றிக் கொண்டேன்

1. இயேசுவை நம்பிப் பற்றிக் கொண்டேன்
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்
தேவகுமாரன் இரட்சை செய்தார்
பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்

இயேசுவைப் பாடிப் போற்றுகிறேன்
நேசரைப் பார்த்துப் பூரிக்கிறேன்
மீட்பரை நம்பி நேசிக்கிறேன்
நீடுழி காலம் ஸ்தோத்தரிப்பேன்

2. அன்பு பாராட்டிக் காப்பவராய்
எந்தனைத் தாங்கி பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்
இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்

3. மெய் சமாதானம் ரம்மியமும்
தூய தேவாவி வல்லமையும்
புண்ணிய நாதர் தந்துவிட்டார்
விண்ணிலும் சேர்ந்து வாழச் செய்வார்

455. இயேசுவை நம்பி விசுவாசிப்பவன்

1. இயேசுவை நம்பி விசுவாசிப்பவன்
அவர் செய்த கிரியை தானும் செய்வான்
அதிலும் மேலாய் செய்திடுவான்
என்று நம் இயேசு கூறினாரே

2. நமது மாதிரி இயேசு தாமே
அவரின் சுவட்டை பின்பற்றுவோம்
நாதனின் நல்சிந்தை நிறைந்தோராய்
நானிலந்தனிலே வாழ்ந்திடுவோம்

3. கிருபை ரட்சண்யம் சத்தியமும்
விசுவாசம் ஆவியின் வல்லமையும்
வல்ல நல் ஆவியின் கனிகளும்
அவர் போல வாழச் செய்திடுமே

4. இயேசுவே மெய்யான திராட்சை செடி
அவரில் நிலைத்தால் கனி கொடுப்பாய்
கனி கொடுக்கும் கொடி எதுவோ
அதிகம் கொடுக்க சுத்தம் செய்வார்

5. தேவ எக்காளம் முழங்கிடவே
ஆரவாரத்தோடே தோன்றிடுவார்
ஆயிரம் ஆயிரம் சுத்தருடன்
மறு ரூபமாகி ஏகிடுவோம்

Tamil Hymns

456. இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை

1. இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை
என்னென்ன துன்பங்கள் நேரிட்டாலும்
சிங்கத்தின் வாயின்றும் இரட்சிப்பார்
பங்கம் வராதுன்னை ஆசீர்வதிப்பார்

நெஞ்சமே நீ அஞ்சிடாதே
நம்பினோரைக் கிருபை சூழ்ந்திட
இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்
இன்னமும் காத்துன்னை நடத்துவார்

2. நாசியில் சுவாசமுள்ள மாந்தரை
நம்புவதில்லை தம் ஆலோசனை
கோர பயங்கர காற்றடித்தும்
கன்மலைமேல் கட்டும் வீடு நிற்கும்

3. விஸ்வாசத்தால் நீதிமான் பிழைப்பான்
வறட்சி மிகுந்த காலத்திலும்
பக்தன் வலது பாரிசத்திலே
கர்த்தன் தாம் நிற்பதால் அசைந்திடான்

4. இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெற்றே
ஏகிப் பறந்திடும் பக்தரோடே
சேர்ந்தென்றும் வாழ்த்திடும் ஐக்கியத்திலே
ஜெய கம்பீரமே உனக்குண்டே

5. ஏழை உன் ஆத்துமா பாதாளத்தில்
என்றும் அழிந்திட விட்டு விடார்
தம் சமூகம் நித்திய பேரின்பமே
சம்பூரண ஆனந்தம் பொங்கிடுமே

6. அங்கே அநேக வாசஸ்தலங்கள்
அன்பின் பிதா வீட்டில் ஜொலிக்குதே
நேர்த்தியான இடங்களில் உந்தன்
நித்திய பங்கு கிடைத்திடுமே

Tamil Hymns

457. இயேசுவை நம்பு

இயேசுவை நம்பு
தேற்றுவார் உண்மையாய்
கஷ்ட நஷ்டங்கள் ஏதேனும்
நீக்குவார் உண்மையாய்
இன்பமும் துன்பமும் சேர்ந்து வந்தாலுமே
எப்போதும் எந்நாளும்
பாடிக் களிப்போம்

458. இயேசுவை நாம் எங்கே காணலாம்

இயேசுவை நாம் எங்கே காணலாம்
அவர் பேசுவதை எங்கே கேட்கலாம்
பனி படர்ந்த மலையின் மேல் பாக்க முடியுமா
கனி நிறைந்த சோலையின் நடுவே காண முடியுமோ

1. ஓடுகின்ற அருவியெல்லாம்
தேடி அலைந்தேனே
ஆடுகின்ற அலைகடலில்
நாடி அயர்ந்தேனே
தேடுகின்ற என் எதிரே
தெய்வத்தைக் காணேனே
பாடுபடும் ஏழை நான்
அழுது வாடினேனே

2. வானமதில் பவனி வரும்
கார்முகில் கூட்டங்களே
வந்தருளும் இயேசுவையே
காட்டிட மாட்டீரோ
காலமெல்லாம் அவனியின்மேல்
வீசிடும் காற்றே நீ
கர்த்தர் இயேசு வாழுமிடம்
கூறிட மாட்டாயோ

3. கண்ணிரண்டும் புனலாக
நெஞ்சம் அனலாக
மண்டியிட்டு வீழ்ந்தேன் நான்
திருமறை முன்பாக
விண்ணரசர் அன்புடனே
கண்விழிப்பாய் என்றார்
கண்விழித்தேன் என் முன்னே
கர்த்தர் இயேசு நின்றார்

Tamil Hymns

459. இயேசுவை நோக்கிடு நோக்கிப் பார்த்திடு

இயேசுவை நோக்கிடு நோக்கிப் பார்த்திடு
கவலைகள் மறந்திடு அவர் மேல் வைத்திடு
தேவைகள் சந்திப்பார் கவலைகள் மாற்றுவார்
கரத்தால் அணைத்திடுவார் அவரை நம்பிடு
அல்லேலூயா அல்லேலூயா - (4)

1. துன்பத்தினால் உள்ளம் உடைந்து வாடுகின்றாயோ
அன்பர் இயேசு உனக்கு உண்டு கவலைப்படாதே
உள்ளம் மாறிடும் வேதனை நீங்கிடும்
கண்ணீர் துடைத்து ஆறுதல் தருவார்

2. வியாதியினால் சரீரத்தில் பெலவீனமோ
பரிகாரி இயேசு உண்டு மனம் தளராதே
வேதனை மாறிடும் வியாதிகள் நீங்கிடும்
மனது உருகி நிச்சயம் இரங்குவார்

3. தோல்வியாலே உள்ளம் உடைந்து
சொர்ந்து போனாயோ ஜெயம் கொடுக்கும்
இயேசு உண்டு தளர்ந்து போகாதே
தோல்விகள் மாறிடும் சோர்வுகள் விலகிடும்
வெற்றியை தருபவர் நிச்சயம் தருவார்

Tamil Hymns

460. இயேசுவைப் பின்பற்றும் மனிதர்கள் யார்

இயேசுவைப் பின்பற்றும் மனிதர்கள் யார்
இந்தப் பூவுலகில்? - எந்தன்
இயேசுவைப் பின்பற்றும் மனிதர்கள் யார்
இந்தப் பூவுலகில்?

1. சுயவெறுப்பின் கோட்டிற்கு வா - நீ வா
நயமாக அழைக்கிறார் வா -நீ வா
உலக மாமிச ஆசை
வீண் என தள்ளி விட்டு வா வா - நீ வா
இயேசுவைப் பின்பற்ற வா

2. எல்லாவற்றையும் விட்டு வா - நீ வா
எல்லாவற்றையும் விற்று வா - நீ வா
பிசாசின் வலையில் சிக்கி
பாழாய் போய் விடாதே வா, வா - நீ வா
இயேசுவைப் பின்பற்றி வா

3. ஆசைகள் அனைத்தையும் அழித்திட வா - நீ வா
உன்னை சிலுவையில் பதித்திட வா - நீ வா
இச்சையின் வலையில் நீ
சிக்கி விடாதே வா, வா - நீ வா
இயேசுவைப் பின்பற்ற வா

4. பின்பற்ற வருகிறேன் நான் - நானே
உம்மை பின்பற்ற வருகிறேன் நான் - நானே
இயேசுவே இரங்கிடும்
ஏற்றிடும் என்னையும் வந்தேன் தந்தேன்
இயேசுவைப் பின்பற்றுவேன்

Tamil Hymns

461. இயேசுவைப்போல் அழகுள்ளோர்

1. இயேசுவைப்போல் அழகுள்ளோர்
யாரையும் இப்பூவினில்
இதுவரை கண்டதில்லை
காண்பதுமில்லை

பூரண அழகுள்ளவரே
பூவில் எந்தன் வாழ்க்கையதில்
நீரே போதும் வேறே வேண்டாம்
எந்தன் அன்பர் இயேசுவே
மண்ணுக்காக மாணிக்கத்தை
விட்டிட மாட்டேன்

2. சம்பூரண அழகுள்ளோர் என்னை ஷ
மீட்டுக் கொண்டீரே
சம்பூரணமாக என்னை உந்தனுக்கீந்தேன்

3. எருசலேம் குமாரிகள் எந்தனை
வளைந்தோராய் - உம் மேல் உள்ள எந்தன்
அன்பை நீக்க முயன்றார் - பூரண

4. லோக சுகமேன்மை எல்லாம் எந்தனைக்
கவர்ச்சித்தால் - பாவ சோதனைகளெல்லாம்
என்னை சோதித்தால்- பூரண

5. நீர் மேல் மோதும் குமிழியைப்
போல் மின்னும் ஜட மோகமே
என்மேல் வந்து வேகமாக மோதியடித்தால்

6. தினந்தோறும் உம்மில் உள்ள
அன்பு என்னில் பொங்குதே
நேசரே நீர் வேகம் வந்து என்னைச் சேருமே

Tamil Hymns

462. இயேசுவைப்போல் என்னை மாற்றும்

1. பாவத்தை வெறுத்த வாழ்ந்திட
பரிசுத்த சிந்தையில் நடந்திட - 2

2. இடைவிடாமல் ஜெபித்திட
ஜெபத்தில் நிலைத்து வாழ்ந்திட - 2

3. சத்துருவை நான் ஜெயித்திட
சத்தியத்தில் என்றும் நிலைத்திட - 2

4. உம் சித்தத்தை நிறை வேற்றிட
உம்மில் ஒன்றாக இணைந்திட - 2

463. இயேசுவைப் போல் ஒரு தெய்வம் இல்லை

1. இயேசுவைப் போல் ஒரு தெய்வம் இல்லை
இந்த உலகத்தில் உம்ம போல யாரும் இல்லை
மேலே உயரே உயரே இருந்தவரே
விழுந்த மனிதனை தூக்கிட வந்தவரே

இயேசுவே... இயேசுவே...
இயேசுவே... இயேசுவே...

2. தண்ணீரை ரசமகா மாற்றினீரே
அதை கண்டவர் உம்மை கண்டு வியந்தனரே
கடும் காற்றையும் கடலையும் அதட்டினீரே
கடும் காற்றும் உம்மை
கண்டு அடங்கினதே

3. லாசருவே நீ வா என்றதும் அன்று
மரித்தவன் உயிர் பெற்று நடந்தானே
உம் வார்த்தையில் உள்ளது வல்லமையே
அது ஜீவனை தந்திடும் நிச்சயமே

4. வாரால் அடித்து அறைந்தனரே
உம்மை ஆணிகள் கடாவி சிலுவையிலே
ஆனால் மரித்த பின்பு மூன்றாம் நாள்
நீர் உயிரோடெழுந்தது சரித்திரமே

Tamil Hymns

464. இயேசுவையே துதிசெய் நீ மனமே

இயேசுவையே துதிசெய் நீ மனமே
இயேசுவையே துதிசெய்- கிறிஸ்தேசுவையே

1. மாசணுகாத பராபர வஸ்து
நேசகுமாரன் மெய்யான கிறிஸ்து - ஏசு

2. அந்தரவான் தரையுந் தரு தந்தன்
சுந்தர மிகுந்த சவுந்தராநந்தன் - ஏசு

3. எண்ணின காரியம் யாவும் முகிக்க
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க - ஏசு

Tamil Hymns

465. இரக்கங்களின் தகப்பன் இயேசு

இரக்கங்களின் தகப்பன் இயேசு
இன்றே உனக்கற்புதம் செய்வார்

நீ கலங்காதே நீ திகையாதே
உன் கண்ணீர்கள் துடைக்கப்படும்

திரளான ஜனங்களைக் கண்டார்
மனதுருகி நோய்கள் நீக்கினார்
ஐந்து அப்பங்கள் ஏந்தி ஆசீர்வதித்தார்
அனைவரையும் போஷித்து அனுப்பினர்

வாழ்கிறார் இயேசு வாழ்கிறார்
எல்லாம் செய்ய வல்லவர்

விதவையின் கண்ணீரைக் கண்டார்
மனதுருகி அழாதே என்றார்
கிட்ட வந்து பாடையைத் தொட்டார்
மரித்தவன் உட்கார்ந்து பேசினான் – வாழ்

முப்பத்தெட்டு வருடங்களாய் குளத்தருகே
படுத்திருந்த மகளைத் தேடிச் சென்றார்
படுக்கையை எடுத்துக் கொண்டு நடக்கச் செய்தார்
(இனி) பாவஞ்செய்யாதே என்று எச்சரித்தார்

தொலைவில் வந்த தன் மகனைக் கண்டார்
மனதுருகி ஓடிச் சென்றார்
கழுத்தைக் கட்டி முத்தங்கள் கொடுத்தார்
கொழுத்த கன்று அடித்துக் கொண்டாடினார்

புயல் காற்றில் போராடும் சீடர்களைக் கண்டு
கடலின் மேல் நடந்தே வந்தார்
பயப்படாதிருங்கள் என்று தேற்றினார்
படகில் ஏறி பெருங்காற்றை அமர்த்தினார்

Tamil Hymns

466. இரக்கமுள்ள மீட்பரே

1. இரக்கமுள்ள மீட்பரே,
நீர் பிறந்த மா நாளிலே
ஏகமாய்க் கூடியே நாங்கள்
ஏற்றும் துதியை ஏற்பீரே.

2. பெத்தலை நகர் தனிலே
சுத்த மா கன்னிமரியின்
புத்திரனாய் வந்துதித்த
அத்தனே மெத்த ஸ்தோத்திரம்!

3. ஆதித் திரு வார்த்தையான
கோதில்லா இயேசு கர்த்தனே,
மேதினியோரை ஈடேற்ற
பூதலம் வந்தீர் ஸ்தோத்திரம்!

4. பாவம் சாபம் யாவும் போக்க,
பாவிகளைப் பரம் சேர்க்க,
ஆவலுடன் மண்ணில் வந்த
அற்புத பாலா ஸ்தோத்திரம்!

5. உன்னதருக்கே மகிமை,
உலகினில் சமாதானம்,
இத்தரை மாந்தர்மேல் அன்பு
உண்டானதும்மால், ஸ்தோத்திரம்!

6. பொன் செல்வம் ஆஸ்தி மேன்மையும்
பூலோக பொக்கிஷங்களும்
எங்களுக்கு எல்லாம் நீரே
தங்கும் நெஞ்சத்தில், ஸ்தோத்திரம்!

467. இரக்கம் நிறைந்த தெய்வமே

இரக்கம் நிறைந்த தெய்வமே
இதயம் திறந்து அழைக்கின்றேன்

உன்னைப் பாட வருகின்றேன்
உன்னை அன்பு செய்கின்றேன் - 2

1. பொன்னும் பொருளும் எனக்கு இருந்தாலும்
பெயரும் புகழும் என்னைச் சூழ்ந்தாலும்
உதயம் தேடும் மலரைப் போலவே
உயிரின் உயிரே உன்னைத் தேடினேன்
நிலவில்லா வானம் போலவே நீயில்லா வாழ்வும் வாழ்வில்லை
நம்பிக்கையின் நாயகா நலன்களின் தேவா வா
வார்த்தை ஒன்று பேசுமே வளங்கள் எல்லாம் கூடுமே

2. தேடும் உலக செல்வம் நிறைந்தாலும்
பதவி பட்டங்கள் உயர்வைத் தந்தாலும்
அலைகள் ஓயாக் கடலைப் போலவே
அன்பே உனது அருளை வேண்டினேன்
தாயில்லாக் குழந்தை போலவே
தவிக்கின்றேன் ஏக்கம் போக்குமே

முழுமுதல் இறைவனே
மூவொரு வேந்தனே - காலம் கடந்த
தேவனே உன் கருணை ஒன்றே போதுமே

Tamil Hymns

468. இரங்குமே என் இயேசுவே இரக்கத்தின்

இரங்குமே என் இயேசுவே
இரக்கத்தின் ஐஸ்வரியமே
கூவி கதறியே ராவும் பகலுமே
கெஞ்சும் ஜெபம் கேளுமே

1. நித்தம் எமக்காய் பரிந்து பேசும்
நள்ளிரவின் நண்பனே - அன்பின்
பிதா முன்னில் இன்று ஜெபித்திடும்
அன்பர் ஜெபங்கேளுமே

2. அன்று நினிவே அழிவைக் கண்டே
அன்பே இரங்கினீரே - யோனா
உரைத்த தம் ஆலோசனை தந்து
ஏழை ஜெபங்கேளுமே

3. எத்தனை துன்பம் சகித்து மீட்டீர்
எல்லாமே வீணாகுமோ
அத்தி மரத்திற்கு அன்று இரங்கினீர்
அந்த ஜெபங்கேளுமே

4. சோதனையினின்று இரட்சித்தீரே
சோதோமின் பக்தனையே
ஆபிரகாம் அன்று வேண்டி ஜெபித்ததோர்
ஆதி ஜெபங்கேளுமே

5. தாரும் உயிர் மீட்சி சபைதனில்
சோரும் உள்ளம் மீளவே
கர்த்தாவே உம் ஜனம் செத்த நிலை மாற
பக்தர் ஜெபங்கேளுமே

469. இரங்கும் இரங்கும் கருணைவாரி

இரங்கும் இரங்கும் கருணை வாரி
ஏசு ராசனே - பவ நாச நேசனே!

1. திரங் கொண்டாவி வரங்
குண்டுய்யச் சிறுமை பார் ஐயா
ஏழை வறுமை தீர் ஐயா

2. அடியேன் பாவக் கடி விஷத்தால்
அயர்ந்து போகிறேன்
மிகப் பயந்து சாகின்றேன்

3. தீமை அன்றி வாய்மை செய்யத்
தெரிகிலேன் ஐயா
தெரிவைப் புரிகிறேன் ஐயா

4. பாவி ஏற்றும் கவி மன்றாட்டைப்
பரிந்து கேள் ஐய
தயை புரிந்து மீள்

470. இரட்சணிய கொம்பு இயேசு எந்தன்

இரட்சணிய கொம்பு இயேசு
எந்தன் வாழ்வில் வந்ததால்
இரட்சணிய பாடல் எந்தன்
நாவில் வந்தது - (2)

1. இரட்சிப்பு வந்தது பெரும்மகிழ்ச்சியை தந்தது
சமாதானம் வந்தது துதிபாடலும் வந்தது

2. புது ஜீவன் வந்தது புது வாழ்வும் வந்தது
வெற்றியும் வந்தது ஜெய தொனியும் தந்தது

3. இருளும் அகன்றது ஜீவ ஒளியும் வந்தது
மனதில் மறுரூபம் புது வெளிச்சம் வந்தது

Tamil Hymns

471. இரட்சண்யம் மகிமை துதிகனம் வல்லமை

இரட்சண்யம் மகிமை துதிகனம் வல்லமை
இயேசுவுக்கு சொந்தமல்லவா
ஆவியின் வல்லமை கிருபை மேல் கிருபை
தருகின்ற தேவன் அல்லவா

பாடி ஸ்தோத்தரிப்பேன்
சங்கீர்த்தனம் பண்ணிடுவேன்
உம்மில் என்றும் மகிழ்ந்திடுவேன்

1. சாரோனின் ரோஜா நீரே
சீயோனில் பெரியவரே
சாத்தானை ஜெயிக்க சத்துவம் அளிப்பீர்
பாடுவேன் அல்லேலூயா

2. காருண்யம் உள்ளவரே
கரம் பற்றி நடத்திடுமே
கண்மணிபோல காத்திட்டதாலே
பாடுவேன் அல்லேலூயா

3. சாலோமின் ராஜா நீரே
சமாதான காரணரே
ஷாலோம் என்றாலே சமாதானம் தானே
பாடுவேன் அல்லேலூயா

4. மரணத்தை வென்றவரே
மறைவிடமானவரே
வசனத்தை அனுப்பி குணமாக்குவீரே
பாடுவேன் அல்லேலூயா

Tamil Hymns

472. இரட்சா பெருமானே பாரும்

1. இரட்சா பெருமானே பாரும்,
புண்ணிய பாதம் அண்டினோம்
சுத்தமாக்கி சீரைத் தாரும்
தேடிவந்து நிற்கிறோம்,
இயேசு நாதா, இயேசு நாதா,
உந்தன் சொந்தமாயினோம்

2. மேய்ப்பன் போல முந்திச் சென்றும்
பாதுகாத்தும் வருவீர்
ஜீவத் தண்ணீரண்டை என்றும்
இளைப்பாறச் செய்குவீர்
இயேசு நாதா இயேசு நாதா
மேய்ச்சல் காட்டிப் போஷிப்பீர்

3. நீதி பாதை தவறாமல்
நேசமாய் நடத்துவீர்,
மோசம் பயமுமில்லாமல்
தங்கச் செய்து தாங்குவீர்,
இயேசு நாதா இயேசு நாதா
ஒரு போதும் கைவிடீர்

4. ஜீவ காலபரியந்தம்
மேய்த்தும் காத்தும் வருவீர்,
பின்பு மோட்ச பேரானந்தம்
தந்து வாழச் செய்குவீர்,
இயேசு நாதா இயேசு நாதா
ஊழி காலம் வாழ்விப்பீர்.

Tamil Hymns

473. இரட்டிப்பான நன்மைகள் தந்திட

இரட்டிப்பான நன்மைகள் தந்திட
இயேசு வாக்களித்தாரே
முன் மாரிமேல் பின் மாரி மழையே
உன்னதத்தினின்று வந்திறங்குதே

1. பெலத்தின் மேலே மா பெலனே
புது பெலன் நாம் பெற்றிட
சால்வைதனை எலிசா அடைந்தாற் போல்
சோர்வின்றி பெலன் என்றும் நாடுவோம்

2. கிருபையின் மேல் மா கிருபை
கர்த்தரிடம் நாம் பெற்றிட
ஸ்திரீகளுக்குள் மரியாள் பெற்ற பாக்யம்
ஸ்தோத்திரம் பாடி என்றும் தேடுவோம்

3. ஜெயத்தின் மேல் மா ஜெயமே
ஜெய தொனியாய் பெற்றிட
போர் முனையில் சிறு தாவீது போல
போர் வீரராக என்றும் ஜெயிப்போம்

4. நம்பிக்கையின் மேல் நம்பிக்கை
நல் விசுவாசம் பெற்றிட
ஆதி அப்போஸ்தலர் காலம் நடந்த
அற்புதங்கள் நாம் என்றும் காணுவோம்

5. பரிசுத்தம் மேல் பரிசுத்தம்
பங்கில்லாமல் பெற்றிட
நீதியின் சூரியன் ஏசுவுடனே
நீதி அணிந்து என்றும் ஆளுவோம்

6. மகிமையின் மேல் மா மகிமை
மறுரூபம் நாம் பெற்றிட
கண்ணிமை நேரத்திலே பறந்தேகி
கர்த்தருடன் நாம் என்றும் வாழுவோம்

Tamil Hymns

474. இரண்டாயிரம் ஆண்டு ஆகியும்

இரண்டாயிரம் ஆண்டு ஆகியும்
இந்தியா இயேசுவை அறியலையே
இன்றைய விசுவாச கூட்டமும்
இன்பத்தை நாடி அலைகிறதே

1. பொருளாசை என்னும் அரக்கனும்
பொலிவுடனே மனதினை ஆள்கிறதே
பொல்லாப்பு செய்யும் கைகளும்
பொய் தீர்க்கதரிசனமும் பெருகிடுதே

2. கள்ளரின் உபதேச புரட்டலும்
கர்த்தரின் வார்த்தையை மிதித்திடுதே
கல்வாரி நாயகனின் கதறலும்
கவனிப்பாரற்று போகிறதே

3. அன்புகூர ஆளைத் தேடுவோரை
அசைத்திடும் அகிலத்தின் சபைதனையே
அழைப்பின் சத்தம் கேட்டிடுவோம்
அர்ப்பணிப்போம் அவர் தம் பணிக்கெனவே

4. தேவனே இரங்கிட மாட்டீரோ
தேசம் உம்மை அறியனுமே
தேவை இன்றே புறப்படுவோம்
தேடுவோம் காணாமல் போனவரை

475. இரத்தக் கோட்டைக்குள்ளே

இரத்தக் கோட்டைக்குள்ளே
நான் நுழைந்து விட்டேன்
இனி எதுவும் அணுகாது
எந்தத் தீங்கும் தீண்டாது

1. நேசரின் இரத்தம் என்மேலே
நெருங்காது சாத்தான்
பாசமாய் சிலுவையில் பலியானார்
பாவத்தை வென்று விட்டார்

2. இம்மட்டும் உதவின எபினேசரே
இனியும் காத்திடுவார்
உலகிலே இருக்கும் அவனை விட
என் தேவன் பெரியவரே

3. தேவனே ஒளியும் மீட்புமானார்
யாருக்கு அஞ்சிடுவேன்
அவரே என் வாழ்வின் பெலனானார்
யாருக்கு பயப்படுவேன்

4. தாய் தன் பிள்ளையை மறந்தாலும்
மறவாத என் நேசரே
ஆயனைப் போல நடத்துகிறீர்
அபிஷேகம் செய்கின்றீர் - என்னை

5. மலைகள் குன்றுகள் விலகினாலும்
மாறாது உம் கிருபை
அனாதி சிநேகத்தால் இழுத்துக் கொண்டீர்
அணைத்து சேர்த்துக் கொண்டீர்

476. இரத்தத்தால் ஜெயம்

இரத்தத்தால் ஜெயம்
இரத்தத்தால் ஜெயம்
இரத்தத்தால் ஜெயம் இயேசுவே
அல்லேலூயா அல்லேலூயா
இரத்தத்தால் ஜெயம் இயேசுவே

1. இயேசு ஜெயித்தார்
இயேசு ஜெயித்தார்
இயேசு ஜெயித்தார் சாத்தானை
அல்லேலூயா அல்லேலூயா
இயேசு ஜெயித்தார் சாத்தானை

2. நாமும் ஜெயிப்போம்
நாமும் ஜெயிப்போம்
நாமும் ஜெயிப்போம் சாத்தானை
அல்லேலூயா அல்லேலூயா
நாமும் ஜெயிப்போம் சாத்தானை

3. சாத்தான் தோல்வியுற்றான்
சாத்தான் தோல்வியுற்றான்
சாத்தான் தோல்வியுற்றான் இரத்தத்தால்
அல்லேலூயா அல்லேலூயா
சாத்தான் தோல்வியுற்றான் இரத்தத்தால்

4. மீட்கப்பட்டேன் நான் (2)
மீட்கப்பட்டேன் நான் இரத்தத்தால்
அல்லேலூயா அல்லேலூயா
மீட்கப்பட்டேன் நான் இரத்தத்தால்

Tamil Hymns

477. இரத்தத்தினாலே கழுவப்பட்டேன்

இரத்தத்தினாலே கழுவப்பட்டேன்
பரிசுத்தமாக்கப்பட்டேன்
மீட்கப்பட்டேன் திரு இரத்தத்தால்
அலகையின் பிடியினின்று - நான்

இரத்தம் ஜெயம் , இரத்தம் ஜெயம்
இயேசுகிறிஸ்துவின் இரத்தம் ஜெயம்

1. படைத்தவரே என்னை ஏற்றுக் கொண்டார்
சிந்தப்பட்ட திரு இரத்தத்தால்
பாவம் செய்யாத ஒரு மகனைப்போல
பார்க்கின்றார் பரமபிதா

2. என் சார்பில் தேவனை நோக்கி
தொடர்ந்து கூப்பிடும் இரத்தம்
அருள் நிறைந்த இறை அரியணையை
துணிவுடன் அணுகிச் செல்வோம்

3. போர்க்கவசம் என் தலைக்கவசம்
இயேசுவின் திரு இரத்தம்
தீய ஆவி(யும்) அணுகாது
தீங்கிழைக்க முடியாது-எந்த

4. சுத்திகரிக்கும் தூய்மையாக்கும்
வாழ்நாளெல்லாம் தினமும்
நன்மையான காரியங்கள்
நமக்காய் பரிந்து பேசும்

5. சாவுக்கேதுவான கிரியை நீக்கி
பரிசுத்தமாக்கும் இரத்தம்
ஜீவனுள்ள தேவனுக்கு
ஊழியம் செய்வதற்கு

478. இரத்தம் காயம் குத்தும்

1. இரத்தம் காயம் குத்தும் நிறைந்து, நிந்தைக்கே
முள் கிரீடத்தாலே சுற்றும் சூடுண்ட சிரசே,
முன் கன மேன்மை கொண்ட நீ லச்சை காண்பானேன்?
ஐயோ, வதைந்து நொந்த உன்முன் பணிகிறேன்.

2. நீர் பட்ட வாதை யாவும் என் பாவப் பாரமே;
இத்தீங்கும் நோவும் சாவும் என் குற்றம் கர்த்தரே,
இதோ, நான் என்றுஞ் சாக நேரஸ்தன் என்கிறேன்;
ஆனாலும் நீர் அன்பாக என்னைக் கண்ணோக்குமேன்.

3. நான் உம்மைத் தாழ்மையாக வணங்கி நித்தமே
நீர் பட்ட கஸ்திக்காக துதிப்பேன், இயேசுவே;
நான் உம்மில் ஊன்றி நிற்க சகாயராயிரும்;
நான் உம்மிலே மரிக்க கடாட்சித்தருளும்.

4. என் மூச்சொடுங்கும் அந்த கடை இக்கட்டிலும்
நீர் எனக்காய் இறந்த ரூபாகக் காண்பியும்;
அப்போ நான் உம்மைப் பார்த்து கண்ணோக்கி நெஞ்சிலே
அணைத்துக்கொண்டு சாய்ந்து, தூங்குவேன், இயேசுவே

Tamil Hymns

479. இரத்தம் ஜெயம் இரத்தம் ஜெயம்

இரத்தம் ஜெயம் இரத்தம் ஜெயம்
கல்வாரி இயேசுவின் இரத்தம் ஜெயம்
காருண்ய தேவனின் இரத்தம் ஜெயம்

1. எதிரியை துரத்திடும் இரத்தம் ஜெயம்
எந்நாளும் சுகம் தரும் இரத்தம் ஜெயம்
அதிகாரம் தந்திடும் இரத்தம் ஜெயம்
அதிசயம் செய்திடும் இரத்தம் ஜெயம்

2. பாவங்கள் போக்கிடும் இரத்தம் ஜெயம்
பரிசுத்தமாக்கிடும் இரத்தம் ஜெயம்
சாபங்கள் நீக்கிடும் இரத்தம் ஜெயம்
சமாதானம் நீக்கிடும் இரத்தம் ஜெயம்

3. விடுதலை தருகின்ற இரத்தம் ஜெயம்
வெற்றிமேல் வெற்றிதரும் இரத்தம் ஜெயம்
பெலவீனம் நீக்கிடும் இரத்தம் ஜெயம்
பெலவானாய் மாற்றிடும் இரத்தம் ஜெயம்

4. நமக்காய் பரிந்துபேசும் இரத்தம் ஜெயம்
நாள்தோறும் பாதுகாக்கும் இரத்தம் ஜெயம்
நீதிமானாக்கிடும் இரத்தம் ஜெயம்
நித்திய ஜீவன் தரும் இரத்தம் ஜெயம்

5. பிரிவனை நீக்கிடும் இரத்தம் ஜெயம்
பிளவுகள் போக்கிடும் இரத்தம் ஜெயம்
ஒப்புரவாக்கிடும் இரத்தம் ஜெயம்
ஒருமனமாக்கிடும் இரத்தம் ஜெயம்

6. குற்றமில்லா இயேசுவின் இரத்தம் ஜெயம்
குறைகளை போக்கிடும் இரத்தம் ஜெயம்
விலையேறப் பெற்ற இரத்தம் ஜெயம்
விண்ணகம் நடத்திடும் இரத்தம் ஜெயம்

Tamil Hymns

480. இராமுழுதும் பிரயாசப்பட்டேன்

இராமுழுதும் பிரயாசப்பட்டேன்
ஒன்றும் அகப்படவில்லை
ஆயினும் உந்தன் வார்த்தையின்படியே
வலையை விரிக்கின்றேன் நான்

1. இரவெல்லாம் கடலின்மேல்
சுயத்தால் போராடினேன்
ஒன்றும் அகப்படவில்லை
சோர்ந்து போனேன் நான்

2. உமக்காய் ஊழியம் செய்ய
தினமும் வாஞ்சிக்கின்றேன்
சோதனைப் பாதையிலே
சோர்ந்து வாடுகின்றேன்

481. இராஜா உம் பிரசன்னம் போதுமையா

இராஜா உம் பிரசன்னம் போதுமையா
எப்போதும் எனக்கு போதுமையா

பிரசன்னம் பிரசன்னம் தேவ பிரசன்னம் – 2

1. அதிகாலமே தேடுகிறேன் – 2
ஆர்வமுடன் நாடுகிறேன் – 2

2. உலகமெல்லாம் மாயையய்யா
உம் அன்பொன்றே போதுமைய்யா

3. இன்னும் உம்மை அறியனுமே
இன்னும் கிட்டி சேரனுமே

4. கரம் பிடித்த நாயகரே
கைவிடாத தூயவரே

5. ஆட்கொண்ட அதிசயமே
ஆறுதலே அடைக்கலமே

6. துதியினிலே வாழ்பவரே
துணையாளரே என் மணவாளரே

7. அநாதி தேவன் அடைக்கலமே
அவர் புயங்கள் ஆதாரமே

8. சகாயம் செய்யும் கேடகமே
மகிமை நிறை பட்டயமே

9. சீர்படுத்தும் சிருஷ்டிகரே
ஸ்திரப்படுத்தும் துணையாளரே

10. பெலப்படுத்தும் போதகரே
நிலைநிறுத்தும் நாயகரே

482. இராஜா உம் மாளிகையில்

இராஜா உம் மாளிகையில்
இராப்பகலாய் அமர்ந்திருப்பேன்-இயேசு
துதித்து மகிழ்ந்திருப்பேன்
துயரம் மறந்திருப்பேன் - உம்மை
ஆராதனை ஆராதனை
அப்பா அப்பா உங்களுக்குத்தான்

1. என் பெலனே என்கோட்டையே
ஆராதனை உமக்கே
மறைவிடமே என் உறைவிடமே
ஆராதனை உமக்கே

2. எங்கும் நிறைந்த யேகோவா ஏலோஹிம்
ஆராதனை உமக்கே
எங்கள் நீதியே யேகோவா ஸிட்கேனு
ஆராதனை உமக்கே

3. பரிசுத்தமாக்கும் யேகோவா மெக்காதீஸ்
ஆராதனை உமக்கே
உருவாக்கும் தெய்வம் யேகோவா ஓசேனு
ஆராதனை உமக்கே

4. உன்னதரே உயர்ந்தவரே
ஆராதனை உமக்கே
பரிகாரியே பலியானீரே
ஆராதனை உமக்கே

5. சீர்படுத்தும் சிருஷ்டிகரே
ஆராதனை உமக்கே
ஸ்திரப்படுத்தும் துணையாளரே
ஆராதனை உமக்கே

6. தாழ்மையிலே நினைத்தவரே
ஆராதனை உமக்கே
ஏழ்மையை மாற்றினீரே
ஆராதனை உமக்கே

Tamil Hymns

483. இராஜா உம்மைப் பார்க்கணும்

இராஜா உம்மைப் பார்க்கணும்
இராப்பகலாய் துதிக்கணும்
வருகைக்காய் காத்திருக்கின்றேன்
எப்போது வருவீர் ஐயா

இறுதிக்காலம் இதுவே என
அறிந்து கொண்டேன் நிச்சயமாய்
உறக்கத்தில் இருந்து நான்
உமைக்காண விழித்துக் கொண்டேன்

வரவேண்டும் வரவேண்டும் விரைவாகவே
வழிமேலே விழி வைத்துக் காத்திருக்கின்றேன்

மணமகனை வரவேற்கும்,
மதி உடைய கன்னிகை போல
விளக்கோடு ஆயில் ஏந்தி,
உமக்காக வெளிச்சமானேன் – வரவேண்டும்

உண்மையுள்ள ஊழியனாய்,
நீர் கொடுத்த தாலந்தை – உம்
பயன்படுத்தி பெருக்கிடுவேன்
மகிழ்ச்சியில் பங்கடைவேன்

தாராளமாய்க் கொடுத்திடுவேன்,
தாங்கிடுவேன் ஊழியங்கள்
அனாதை ஆதரவற்றோர்
கண்ணீரைத் துடைத்திடுவேன்

ஊழியத்தில் உதவிடுவேன்
புத்தி சொல்வேன் போதிப்பேன்
இறைவாக்கு உரைத்திடுவேன்
எப்போதும் துதித்திடுவேன்

அந்தகார கிரியைகளை
அகற்றிவிட்டேன் எறிந்துவிட்டேன்
இச்சைக்கு இடங்கொடாமல்
இயேசுவையே தரித்துக் கொண்டேன்

குடிவெறி களியாட்டம்
வேசித்தனம் விட்டுவிட்டேன்
சண்டைகள், குறை சொல்லுதல்
அடியோடு வெறுத்துவிட்டேன்

Tamil Hymns

வீண்பெருமை தேடாமல்
பொறமை கொள்ளமல்
இழிவான உணர்வுகளை,
சிலுவையிலே அறைந்துவிட்டேன்

484. இராஜா நீர் செய்த நன்மைகள்

இராஜா நீர் செய்த நன்மைகள்
அவை எண்ணி முடியாதையா
ஏறெடுப்பேன் நன்றிபலி
என் ஜீவ நாளெல்லாம – நான்
நன்றி ராஜா இயேசு ராஜா (4)

1. அதிகாலை நேரம் தட்டி தட்டி எழுப்பி
புது கிருபை தந்தீரையா
ஆனந்த மழையில் நனைத்து நனைத்து
தினம் நன்றி சொல்ல வைத்தீரையா – 2 நன்றி

2. வேதத்தின் இரகசியம் அறிந்திட புரிந்திட
உம் வெளிச்சம் தந்தீரையா
பாதம் அமர்ந்து நான் உம் குரல்
கேட்கும் பாக்கியம் தந்தீரையா

3. ஒவ்வோரு நாளும் உணவும் உடையும் தந்து
பாதுகாத்து வந்தீரையா
உடல் சுகம் தந்து ஒரு குறைவின்றி
வழி நடத்தி வந்தீரையா

4. துன்பத்தின் பாதையில் நடந்த அந்நாளில்
தூக்கிச் சென்றீரையா
அன்பர் உம் கரத்தால் அணைத்து அணைத்து தினம்
அதிசயம் செய்தீரையா (ஆறுதல் தந்தீரையா)

5. கூப்பிட்ட நாளில் மறுமொழி கொடுத்து
விடுதலை தந்தீரையா
குறைகளை நீக்கி கரைகளைப் போக்கி
கூடவே வந்தீரையா

6. உமக்காக வாழ உம் நாமம் சொல்ல
தெரிந்து எடுத்தீரையா
உம்மோடு வைத்து ஊழியனாக
உருவாக்கி வந்தீரையா

Tamil Hymns

485. இராஜாதி இராஜன்

1. இராஜாதி இராஜன் இயேசு வருவார்
சிந்திக்க ஆயத்தமா ?
வருவேன் என்றவர் சீக்கிரம் வருவார்
சந்திக்க ஆயத்தமா ?

கேள் ! கேள் ! மானிடரே
சந்திக்க ஆயத்தமா ?
இராஜாதி இராஜனாய் வந்திடுவார்
சந்திக்க ஆயத்தமா ?

2. பல்லாயிரம் மக்கள் ஆயத்தமே
சந்திக்க ஆயத்தமா ?
பரலோக வாழ்வின் நல்பாக்கியத்தை
சந்திக்க ஆயத்தமா ?

3. குத்தினோர் யாவரும் கண்டிடுவார்
சந்திக்க ஆயத்தமா ?
கத்திக் கதறியே தாழிடுவார்
சந்திக்க ஆயத்தமா ?

4. உலகமனைத்துமே கண்டிடுமே
சந்திக்க ஆயத்தமா ?
பரிசுத்தவான்களின் போர் நிற்குமே
சந்திக்க ஆயத்தமா ?

486. இராஜாதி இராஜாவைக் கொண்டாடுவோம்

இராஜாதி இராஜாவைக் கொண்டாடுவோம்
நாள்தோறும் துதிபாடி கொண்டாடுவோம் - நம்

1. வந்தாரே தேடி வந்தாரே
தன் ஜீவன் எனக்காய் தந்தாரே (யோ 10:11)
என்னை வாழ வைக்கும் தெய்வம் தான் இயேசு
என்னை வழிநடத்தும் தீபம் தானே இயேசு - அந்த

2. கலக்கம் இல்லே எனக்கு கவலை இல்லே
கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார் (சங் 23:1,2)
என்னை பசும் மேய்ச்சலுக்கு நடத்துவார்
நான் பசியாற உணவு ஊட்டி மகிழ்வார் - அந்த

3. வென்றாரே சாத்தானை வென்றாரே
வல்லமைகள் அனைத்தையும் உரிந்தாரே (கொலோச 2:15)
அந்த சாத்தான் மேலே அதிகாரம் தந்தாரே
இயேசு நாமம் சொல்லிச் சொல்லி முறியடிப்பேன்

4. கரங்களிலே என்னை பொறித்து உள்ளார்
கண் முன்னே தினம் என்னை நிறுத்தியுள்ளார் (ஏசா 49:16)
ஏற்ற காலத்திலே உயர்த்துவார் - அவர் (சங் 27:5)
கரங்களுக்குள் அடங்கி நான் காத்திருப்பேன் (1 பேது 5:6)

5. முடிவில்லாத தம் மகிமையிலே
பங்கு பெற என்னை தெரிந்து கொண்டார்
என்னை சீர்படுத்தி ஸ்திரப்படுத்தி நடத்துவார்
பெலப்படுத்தி நிலைநிறுத்தி ம்கிழுவார் (1 பேது 5:10)

487. இருதயம் இயேசுவின் சிங்காசனம்

இருதயம் இயேசுவின் சிங்காசனம்
நம்மை இயேசுதான் ஆள வேண்டும்
இந்த உலகம் ஆள்வது நியாயமில்லை

1. என் நாயகரை நான் மறந்து
இந்த உலகத்தை நேசித்து திரிந்தேனே
கர்த்தர் என்னை சிட்சித்து உணர செய்தாரே
கர்த்தர் என்னை ரட்சித்து உணர செய்தாரே

2. என் பாவத்தை சுயமாய் செய்த வேளையில்
என்னை தேடி வந்தாரே
கர்த்தர் முந்தினவைகளை மறக்க செய்தாரே
கர்த்தர் பரிசுத்தமாய் வாழ செய்தாரே

3. இந்த உலகத்தில் யாரும் இல்லை என்று
நான் சாக நினைத்த வேளையிலே
கர்த்தர் எனக்கு புதிய காரியம் செய்தாரே
கர்த்தர் எனக்கு இன்றே தோன்ற செய்தாரே

Tamil Hymns

488. இருள் சூழ்ந்த லோகத்தில்

1. இருள் சூழ்ந்த லோகத்தில்
இமைப் பொழுதும் தூங்காமல்
கண்மணிபோல என்னை
கர்த்தர் இயேசு காத்தாரே
கானங்களால் பாடுவேன்

அஞ்சிடேன் அஞ்சிடேன்
என் இயேசு என்னோடிருப்பதால்

2. மரணப் பள்ளத்தாக்கில்
நான் நடந்த வேளைகளில்
கர்த்தரே என்னோடிருந்து
தேற்றினார் தம் கோலினால்
பாத்திரம் நிரம்பி வழிய
ஆவியால் அபிஷேகித்தார்

3. அலைகள் படகின் மேல்
மோதியே ஆழ்த்தினாலும்
கடல்மேல் நடந்து வந்து
கர்த்தரே என்னைத் தூக்கினார்
அடல் நீக்கியவர் அமைதிப் படுத்தினார்

489. இருள் சூழும் காலம் இனி வருதே

1. இருள் சூழும் காலம் இனி வருதே
அருள் உள்ள நாட்கள் பயன்படுத்தும்
திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொறுங்குண்ட மனதாய் முன்செல்வோர் யார்?

திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொறுங்குண்ட மனதாய் முன்செல்வோர் யார்?
நாட்கள் கொடியதாய் மாறிடுதே
காலத்தை ஆதாயம் செய்திடுவோம்

2. தரிசு நிலங்கள் அநேகம் உண்டு
தரிசனம் பெற்றோர் நீர் முன் வருவீர்
பரிசாக இயேசுவை அவர்களுக்கும்
அளித்திட அன்பால் எழுந்து செல்வீர்

3. எத்தனை நாடுகள் இந்நாட்களில்
கர்த்தரின் பணிக்குத்தான் கதவடைத்தார்
திறந்த வாசல் இன்று உனக்கெதிரில்
பயன்படுத்தும் மக்கள் ஞானவான்கள்

4. விசுவாசிகள் எனும் கூட்டம் உண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒரு மனம் ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும்

5. இனிவரும் நாட்களில் நமது கடன்
வெகு அதிகம் விசுவாசிகளே
நம்மிடை உள்ள ஐக்கியமே
வெற்றியும் தோல்வியும் ஆக்கிடுமே

6. இயேசுவே எங்கள் உள்ளங்களை
அன்பெனும் ஆவியால் நிறைத்திடுமே
இந்தியாவின் எல்லாத் தெருக்களிலும்
இயேசுவின் நாமமும் விரைந்திடுமே

Tamil Hymns

490. இல்ல இல்ல இல்ல இல்ல இல்ல

இல்ல இல்ல இல்ல இல்ல இல்ல
உம்மைப் போல யாருமில்லப்பா
சர்வ வல்லவர் அவர் என்றும் நல்லவர்
உம்மை போல யாருமில்லைப்பா - இயேசப்பா

1. உம் கிருபையால் நான் என்றும் வாழ்கிறேன்
உம் இரக்கத்தால் நான் நிலை நிற்கிறேன்
நீங்க இல்லாம நானும் இல்லப்பா
இயேசப்பா இயேசப்பா
இல்ல -5 நீங்க இல்லாம நானும் இல்லப்பா

2. என் பெலத்தினால் ஒன்னும் முடியல
என் சுயத்தினால் வாழ முடியால
உம்மை விட்டு வாழ முடியல இயேசப்பா
உம்மை விட்டு வாழ முடியல
இல்ல -5 உம்மை விட்டு வாழ முடியல

3. இருளில் வாழ்ந்தேனே பயத்தோடு இருந்தேனே
சோர்ந்து போனேனே கலக்கத்தால் சூழ்ந்தேனே
பயமே இல்லாம வாழ செஞ்சீங்க இயேசப்பா
பயமே இல்லாம வாழ செஞ்சீங்க
இல்ல - 5 இப்போ எனக்கு பயமே இல்லப்பா

Tamil Hymns

491. இவரே பெருமான்

இவரே பெருமான் மற்றப்
பேர் அலவே பூமான் - இவரே பெருமான்

1. கவலைக் கிடங்கொடுத் தறியார்
வேறு பவ வினை யாதுமே தெரியார்
இப்புவன மீது நமக்குரியார்

2. குருடர்களுக் குதவும் விழியாம் - பவக்
கரும இருளை நீக்கும் ஒளியாம் தெய்வம்
இருக்குந் தலஞ்சல் வாசல் வழியாம்

3. பலபிணி தீர்க்கும் பரிகாரி
சொல்லும் வலமையில் மிக்க விபகாரி
எக்குலத்துக்கும் நல்ல உபகாரி

4. அறஞ் செய்வதினில் ஒரு சித்தன்
கொடு மறம்விடு பவர்க்கருள் முத்தன்
இங்கே இறந்தோர்க் குயிரீயும் கர்த்தன்

5. அலகை தனை ஜெயித்த வீரன்
பவ உலகை ரட்சித்த எழிற்பேரன்
விண்ணுலகு வாழ் தேவ குமாரன்

6. பொன்னுலகத் தனில்வாழ் யோகன்
அருள் துன்ன உலகில் நன்மைத் தேகன்
நம்பால் தன்னை யளித்த ஓர் தியாகன்

Tamil Hymns

492. இளமையை இயேசுவுக்குப் பரிசாக்குவோம்

இளமையை இயேசுவுக்குப்
பரிசாக்குவோம்! - நம் வாழ்நாளை
அவருக்கு பலியாக்குவோம்!
ஜீவ பலியாக்குவோம்!

1. முடமாக்கும் பாவத்துக்கு முடிவுகட்டுவோம்
முழு சிந்தையையும் இயேசுவுக்கு உரிமையாக்குவோம்!
உடலாலும் உள்ளத்தாலும் ஆராதிப்போம்! இனி
ஒருபோதும் உலகுக்கு அடிமைப்படோம்!

2. தள்ளாடும் முழங்காலை ஊன்றக்கட்டுவோம்
தவறான பற்றுகளை வெட்டி எறிவோம்
அறிவோடும் உணர்வோடும் பின் பற்றுவோம்! இனி
உளமாற இயேசுவில் நாம் அன்பு கூருவோம்

3. பலிபீடத்தனல் கொண்டு சிந்தையைத் தொடும்!
துதிபாடும் அனல்கொண்ட உள்ளம்தாரும்!
விழிவைத்து எதிர்நோக்கும் என்னைப்பாரும்! இனி
பதிவாக உம்மில் நான் நிலைப்பேன் என்றும்!

493. இளைப்பாறுதல் ஈந்திடும் நாடே

1. இளைப்பாறுதல் ஈந்திடும் நாடே
இன்ப இயேசுவின் மோட்ச வீடே
புவியாத்திரை தீர்ந்திடும் போதே
பரலோகம் அழைத்திடுமே

2. இந்த மண்ணுலகாசை வெறுத்தேன்
இப்புவி எந்தன் சொந்தமல்ல
இன்பம் எண்ணம் மனம் எல்லாம் இயேசு
இலக்கை நோக்கித் தொடருகிறேன் - எந்

3. நம் முன்னோர் பலர் அக்கரை மீதே
நமக்காகவே காத்திருக்க
விண்ணில் ஜீவ நதிக்கரை ஓரம்
வேகம் நானும் சேர்ந்துகொள்வேன் - எந்

4. அற்பமான சரீரம் அழிந்தே
அடைவேன் மறுரூபமாக
புதுராகம் குரல் தொனியோடே
புதுப்பாட்டு பாடிடுவேன் - எந்

5. பரலோகத்தில் இயேசுவே அல்லால்
பரமானந்தம் வேறில்லையே
அங்கு சேர்ந்து அவர் முகம் காண்போம்
ஆவல் தீர அணைத்துக் கொள்ளுவோம் - எந்

6. உண்மையாக உம் ஊழியம் செய்ய
உன்னத அழைப்பை ஈந்தீரே
தவறாமலே காத்த கரத்தில்

Tamil Hymns

494. இவ்வந்தி நேரத்தில் எங்கே

1. இவ்வந்தி நேரத்தில் எங்கே
போய்த் தங்குவீர் என் இயேசுவே
என் நெஞ்சில் நீர் பிரவேசிக்கும்
மா பாக்கியத்தை அருளும்.

2. ஆ, நேசரே நீர் அடியேன்
விண்ணப்பத்துக்கிணங்குமேன்
என் நெஞ்சின் வாஞ்சை தேவரீர்
ஒருவரே என்றறிவீர்.

3. பொழுது சாய்ந்துபோயிற்று
இரா நெருங்கி வந்தது
மெய்ப்பொழுதே, இராவிலும்
இவ்வேழையை விடாதேயும்.

4. ஆ, என்னைப் பாவ ராத்திரி
பிடித்துக் கெடுக்காதினி
நீர் ஒளி வீசியருளும்
ரட்சிப்பின் பாதை காண்பியும்.

5. நீர் என் கடை இக்கட்டிலும்
என்னோடிருந்து ரட்சியும்
உம்மைப் பிடித்துப் பற்றினேன்
நீர் போய்விடீர் என்றறிவேன்.

495. இவ்வுலக மக்களிலே அன்பு

இவ்வுலக மக்களிலே அன்பு கொள்ள வந்தார்
அந்த இறைவனின் அன்பினையே
ருசித்துப் பாராயோ நீ ருசித்துப் பாராயோ
இவ்வுலக மக்களிலே அன்பு கொள்ள வந்தார்

1. கடவுளின் சாயலிலே படைக்கப்பட்டான் மனிதன்
கீழ்படியாமையால் இழந்தான் கர்த்தர் சமூகந்தனை
ஆயினும் வாக்களித்தார் ரட்சகரை நமக்கே
பாருலகை மீண்டும் தம்மோடு ஒப்புரவாக்க

2. படைத்தார் இப்பாருலகை படைத்தே பராமரித்தார்
நாம் பாவமே செய்தாலும் அழித்திட துணியவில்லை
படைப்பின் நீதினிலே பரிவும் அன்பும் கொண்டார்
பாவத்தையே வெறுத்தார் பாவியையோ நேசித்தார்

3. இறைவன் நமக்களித்த வாக்குதத்தங்கள் எல்லாம்
கிறிஸ்துவாம் உலக ரட்சகர் ஆண்டவரில் ஆம் என்றும்
இறைவனுக்கு மகிமை உண்டாகும் படி நம்மில்
இயேசு கிறிஸ்துவினால் ஆமேன் ஆமேன் என்றேன்

Tamil Hymns

496. இளைஞர் நேசா அன்பரே

1. இளைஞர் நேசா, அன்பரே,
அடியேனை உம் சொந்தமாய்
படைத்திட சமூலமாய்,
ஆண்டவா, கர்த்தா – நான் வந்தேன்.

2. இளமைக் காலை என்னையே
படைப்பேன் வாக்குப்படியே,
பின்வையேன் ஒன்றும் – இப்போதே
பூரண ஆவலாய் வந்தேன்.

3. ஒளியில் என்றும் ஜீவிப்பேன்
நீதிக்காய் என்றும் உழைப்பேன்
முழுபலத்தால் சேவிப்பேன்
உம்மண்டை ஆதலால் வந்தேன்.

4. சிறியேன் திடகாத்திரன்;
சத்தியம், நீதி, உமக்காய்
ஜீவிப்பேன் நல்லுத்தமனாய்;
ஜீவாதிபதி - நான் வந்தேன்.

5. பொன், புகழ், சித்தி, இன்பமும்
மேன்மையாய்த் தோன்றும் – ஆயினும்
விஸ்வாசமே மேல் நாட்டமாய்
ஜீவநாள் முற்றிலும் – வந்தேன்.

6. உமக்காய் மேன்மை யடைய,
ஜெயித்து கிரீடம் சூடிட,
பணிந்தும் பாதம் படைக்க,
ஆண்டவா, கர்த்தா – நான் வந்தேன்.

497. இறந்தோரை வாழவைக்கும் வல்லவர்

இறந்தோரை வாழவைக்கும் வல்லவர்
எனக்குள் வந்து தங்கிவிட்டார்
இல்லாதவரை இருக்கசெய்யும் நல்லவர்
மனக்கண் திறந்துவிட்டார்
அல்லேலூயா ஆனந்தமே

1. செடியான கிறிஸ்துவோடு இணைந்து விட்டேன்
கொடியாக அவருக்காய் படர்ந்திடுவேன்

2. பாவம் சாவு இவற்றினின்று மீட்கப்பட்டவன்
இனி எனக்கு தண்டனை தீர்ப்பே இல்லை

3. இயேசுகிறிஸ்து பெயராலும் ஆவியாலும்
நீதிமானாய் கழுவப்பட்டு தூய்மையானேன்

4. மூலைக்கல்லாம் கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டவன்
ஆவி தங்கும் ஆலயமாய் வளர்கின்றவன்

5. கர்த்தரின் கைவேலைப்பாடு நான் அல்லவா
அவர் சாயல் காட்டும் கண்ணாடி நான் அல்லவா

6. புதிதாய் பிசைந்து புளிப்பில்லா மாவு நானே
துர்க்குணங்களை தீமைகள் தவிர்த்துவிட்டேன்

7. பழைய மனிதன் சிலுவையிலே அறையப்பட்டதால்
பாவத்திற்கு அடிமையாக வாழ்வதில்லை

8. தூய ஆவி துணையாலே வாழ்கின்றவன்
ஆவிகாட்டும் நெறியிலே நடக்கின்றவன்

Tamil Hymns

498. இறைவனை நம்பியிருக்கிறேன்

இறைவனை நம்பியிருக்கிறேன்
எதற்கும் பயப்படேன்
இவ்வுலகம் எனக்கெதிராய்
என்ன செய்ய முடியும்

1. பயம் என்னை ஆட்கொண்டால்
பாடுவேன் அதிகமாய்
திருவசனம் தியானம் செய்து
ஜெயமெடுப்பேன் நிச்சயமாய்

அச்சம் மேற்கொள்ளாது
இறை அமைதி என்னை காக்கும்
இவ்வுலகம் எனக்கெதிராய்
என்ன செய்ய முடியும்

2. என் சார்பில் இருக்கின்றீர்
என்பதை நான் அறிந்து கொண்டேன்
எதிராக செயல்படுவோர்
திரும்புவார்கள் பின்னிட்டு - அச்சம்

3. சாவினின்று என் உயிரை
மீட்டீரே கிருபையினால்
உம்மோடு நடந்திடுவேன்
உயிர்வாழும் நாட்களெல்லாம்

4. துயரங்களின் எண்ணிக்கையை
கணக்கெடுக்கும் தகப்பன் நீர் -என்
கண்ணீரைத் தோற்பையில்
சேர்த்து வைத்துப் பதில் தருவீர்

5. மறக்கவில்லை என் பொருத்தனைகள்
செலுத்துகிறேன் நன்றி பலி
காலடிகள் இடறாமல்
காத்தீரே நன்றி ஐயா

Tamil Hymns

499. இறைவனே என்னைக் காக்கின்றார்

இறைவன் என்னை காக்கின்றார்
குறை ஒன்றும் எனக்கு இல்லையே
மகிழ்ச்சி ஊட்டும் இடத்தில் வைத்து
சிறகுகள் நிழலில் காக்கின்றார் (2)

1. புல்லும் மேய்ச்சலும் அருவியும் உள்ள
பாலும் தேனும் நிறைந்த கானான் (2)
அழைத்து சென்று களைப்பை ஆற்றி
புத்துயிர் ஊட்டுகின்றார் (2)

2. தீமை துன்பம் நெருங்க விடாமல்
அறனும் கோட்டையும் புகலிடமான (2)
வார்த்தை கேடயம் கவசமாக
காத்து வருகின்றார் (2)

3. இருளும் பள்ளமும் எதிரியுமான
எரிக்கோ யோர்தான் தடைகளை மாற்றி (2)
வாழ்வின் வழியை எனக்கு காட்டி
சீயோனில் சேர்க்கின்றார் (2)

500. இனிமை இனிமை இது இனிமை

இனிமை இனிமை இது இனிமை
மகிமை மகிமை புது மகிமை
இயேசுவின் மார்பில் நான்
சாய்ந்து கொண்டிருந்தால்
இந்த நாள் முழுவதும்
இல்லை தனிமை 3

1. காலையும் மாலையும் புது கிருபை
கண்ணின் மணிபோல காக்கும் கிருபை
இறுதி வரைக்கும் வரும் கிருபை
நிலைத்திருக்கும் நம் தேவ கிருபை

2. மலைகள் விலகினாலும் மாறா கிருபை
மன்னன் இயேசு வாக்களித்த வல்ல கிருபை
பர்வதங்கள் பெயர்ந்து பயங்கரம் சூழ்ந்தாலும்
பரிசுத்தவான்களைக் காக்கும் கிருபை

3. அனாதி சிநேகத்தால் வந்த கிருபை
ஆயிரம் தலைமுறை காக்கும் கிருபை
அழகிய தேவ குமாரன் இயேசு
அளித்திட்ட அதிசயமான கிருபை

4. வனாந்தர வழிதனில் வந்த கிருபை
வழி தப்பிப் போனோரைக் காக்கும் கிருபை
வல்லமையுள்ள தேவனின் ஆவி
வரம் தந்து காத்திட்ட தேவ கிருபை

Tamil Hymns

501. இனியும் உம்மோடு கிட்டிச் சேர

இனியும் உம்மோடு கிட்டிச் சேர
ஆவியின் மாரியை ஊற்றும்
ஆதி அன்பின் ஆழங்களில் என்னை
ஆழ்த்தி கிருபைகள் ஈந்திடுமே

1. பெல வீனன் என் அருகில்
பெலன் தாரும் வந்தெனக்காய்
உம்மை போல் நான் கனி தரவே
உம தாவியால் நிறைந்திடுமே

2. நல்ல திராட்சை செடி நீரல்லோ
நானும் இணைந்து வாழ்ந்திடவே
எல்லா நாளும் கனி தந்திட
இயேசுவே சுத்தமாக்கிடுமே

Tamil Hymns

502. இன்ப இயேசு ராஜாவை நான்

இன்ப இயேசு ராஜாவை நான் பார்த்தால் போதும்
மகிமையில் அவரோடு நான் வாழ்ந்தால் போதும் (2)
நித்தியமாம் மோட்ச வீட்டில் சேர்ந்தால் போதும்
அல்லேலூயா கூட்டத்தில் நான் மகிழ்ந்தால் போதும் (2)

1. இயேசுவின் இரத்தத்தாலே மீட்கப்பட்டு
வசனமாம் வேலியாலே காக்கப்பட்டு (2)
கறை திறை அற்றப் பரிசுத்தரோடு
ஏழையான் பொன் வீதியில் உலாவிடுவேன் (2)

2. தூதர்கள் வீணைகளை மீட்டும் போது
நிறைவான ஜெய கோஷம் முழங்கும்போது (2)
அல்லேலூயா கீதம் பாடிக்கொண்டு
அன்பராம் இயேசுவோடு அகமகிழ்வேன் (2)

3. முட்கிரீடம் சூட்டப்பட்ட தலையைப் பார்ப்பேன்
பொற்கிரீடம் சூட்டி நானும் புகழ்ந்திடுவேன் (2)
வாரினால் அடிக்கப்பட்ட முதுகைப் பார்த்து
ஒவ்வொரு காயங்களாய் முத்தம் செய்வேன் (2)

4. என்னுள்ளம் நன்றியால் நிறைந்திடுதே
எந்தனின் பாக்கிய வீட்டை நினைக்கையிலே (2)
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
வர்ணிக்க எந்தன் நாவு போதாதையா (2)

5. ஆகா எக்காளம் என்று முழங்கிடுமோ
ஏழை என் ஆவல் என்று தீர்ந்திடுமோ (2)
அப்பா என் கண்ணீர் என்று துடைக்கிறாரோ
ஆவலாய் ஏங்கிடுதே எனதுள்ளம் (2)

Tamil Hymns

503. இன்ப இயேசு

இன்ப இயேசு என் மதுரம்
என் அற்புதம் நீரே
விடிவெள்ளிக்கு மேல் பிரகாசிக்கின்றீர்
உந்தன் ரூபம் வழி லீலியிலும் அழகுள்ளதே
என் அருமையின் மதுரம் நீரே

504. இன்ப இயேசுவின் இணையில்லா

இன்ப இயேசுவின் இணையில்லா
நாமத்தை புகழ்ந்து
இகமதில் பாடிட தருணமிதே
இயேசுவைப் போல் ஒரு நேசரில்லை
இன்றும் என்றென்றும் அவர்
துதி சாற்றிடுவேன்

1. நித்தியமான பர்வதமே
உந்தனில் நிலைத்திருப்பேன்
நீக்கிடாதென்னை தோளின் மேல் சுமந்தே
நித்தம் நடத்திகிறீர் - என்னையும்
உம் ஜனமாய் நினைத்தே ஈந்தீர்
உன்னத வெளிப்படுத்தல் நிறைவாய்

2. பாவத்தில் வீழ்ந்து மாயையிலே
ஆழ்ந்து நான் மாள்கையிலே
பிரிந்து தேவ அன்பினைக் காட்டியே
பட்சமாய் பிரிந்தெடுத்தீர்
பாரில் பரிசுத்தராகுதற்காய் - மிக
பரலோக நன்மைகளால் நிறைந்தீர்

3. மானானது நீரோடைகளை
வாஞ்சித்துக் கதறுமாப் போல் - என்
ஆத்துமா உம்பொன் முகம் காணவே
வாஞ்சித்து கதறிடுதே
வானிலும் இந்தப் பூமிலும் நீர் - என்
வாஞ்சைகள் தீர்ப்பவராய் நினைத்தே

4. ஆர்ப்பரிப்போடே ஸ்தோத்திரிப்போம்
அன்பரை உளம் கனிந்தே
அற்புத ஜெயம் ஈந்தீரே
அளவில்லாத ஜீவனை அளித்தே
அல்லேலூயா துதி கன மகிமை - உம்
நாமத்திற்கே நிதம் சாற்றிடுவோம்

Tamil Hymns

505. இன்ப கீதம் துன்ப நேரம்

இன்ப கீதம் துன்ப நேரம்
ஈந்தீரே என் இயேசுவே
கொல்கொதா பாதை சிலுவை சுமந்தே
கர்த்தாவே உம்மண்டை வந்தேன்

1. பெரு வெள்ளத்தின் புகலிடம் நீரே
பெரும் கன்மலை நிழலே
வீசிடும் கொண்டல் காற்றுக்கு ஒதுக்கே
வற்றாத நீரூற்றும் நீரே - இன்ப

2. ஊளையிடும் ஓர் பாழும் நிலத்தில்
ஊக்கமுடன் என்னைத் தேடி
கண்டு உணர்த்தி கைதாங்கி நடத்தி
கண்ணின் மணிபோலக் காத்தீர் - இன்ப

3. துஷ்டமிருகம் என்னை எதிர்த்தும்
கஷ்டம் வராது என்னைக் காத்தீர்
மந்தையின் மேய்ப்பன் தாவீதின் தேவன்
எந்தை என் தந்தையும் நீரே - இன்ப

4. போராட்டமான போன வாழ்நாளில்
நீரோட்டம் மோதும் இன்னலில்
முற்று முடிய வெற்றி அளித்தீர்
குற்றம் குறை நீக்கி காத்தீர் - இன்ப

5. உந்தன் சரீர பெலவீன நேரம்
எந்தன் கிருபையே போதும்
என்று உரைத்து என்னை அணைத்து
எத்தனையா நன்மை செய்தீர் - இன்ப

6. கல்வாரிப் பாதை தோல்வியில்லையே
கர்த்தாவே முன்னோடி நீரே
உம்பின் நடந்தே உம்மைத் தொடர்ந்தே
உன்னத வீட்டை அடைவேன் - இன்ப

7. அழைத்தவரே உண்மையுள்ளோரே
அப்படியே ஜெயம் ஈவார்
இயேசுவே உம்மால் ஜெயம் அருளும்
எங்கள் பிதாவுக்கு ஸ்தோத்திரம் - இன்ப

Tamil Hymns

506. இன்ப நதியே தென்றலே காற்றே

இன்ப நதியே தென்றலே காற்றே
அக்கினி தழலே வெண்புறாவே

1. ஜீவ நதியாய் நீர் வாருமே
தென்றல் காற்றாய் நீர் வாருமே
அக்கினி தழலாய் நீர் வாருமே
வெண்புறாவாய் நீர் வாருமே

2. வானத்துப் பனியாய் நீர் வாருமே
ஞானத்தின் பிறப்பிடமே வாருமே
சிலுவை சுமந்து தவிப்பவர்க்கு
இளைப்பாறும் நதியாய் நீர் வாருமே

3. ஆனந்த தைலமாய் வாருமே
ஆரோக்கிய நதியாய் நீர் வாருமே
நெருக்கப்பட்ட எம் உள்ளங்களில்
ஆறுதலாய் நீர் வாருமே

507. இன்பமிதே பேரின்பமிதே இயேசு

இன்பமிதே பேரின்பமிதே
இயேசு நாமம் இன்பமிதே
இன்பமிதே நல் இன்பமிதே
இயேசு நாமமே!

1. பாவம் போக்க வந்த
நாமம் இயேசு நாமமே
வாதை போக்க வந்த நாமம்
இயேசுவின் நாமமே

2. நேற்றும் இன்றும் மாறா
நாமம் இயேசு நாமமே
தேனிலும் இனிய நாமம்
இயேசுவின் நாமமே

3. ஜீவ பாதை காட்டும்
நாமம் இயேசு நாமமே
ஜீவன் பெலன் தந்த நாமம்
இயேசுவின் நாமமே

4. சாவு பயங்கள் நீக்கும்
நாமம் இயேசு நாமமே
சாபம் ரோகம் நீக்கும் நாமம்
இயேசுவின் நாமமே

5. தேவ ராஜ்யம் சேர்க்கும்
நாமம் இயேசு நாமமே
தேவநீதி நிறைந்த நாமம்
இயேசுவின் நாமமே

Tamil Hymns

508. இன்பம் தந்திடும் இயேசு பிறந்தார்

இன்பம் தந்திடும் இயேசு பிறந்தார்
இனி இன்னல் என்பது நமக்கு இல்லை
மேளம் கொட்டி பாட்டு பாடி
மேசியாவை வாடிநத்திடுவோம்
இன்பம் இன்பம் இன்பம்
இன்பம் தரும் கிறிஸ்துமஸ் - 3

1. வறன்டு போன நம் வாடிநவிலே
வற்றாத நீரூற்றாடீநு இயேசு பிறந்தார்
வருந்தி சுமந்திடும் பாரம் போக்கவே
வார்த்தையின்று மாம்சமானாரே

2. தினமும் நம்மை போசிக்கவே
தீர்க்கர் உரைப்படி பாலன் பிறந்தார்
பரிசுத்த நம்மிலே என்றும் நிலைக்கவே
பரிசுத்த ஆவியால் கருவானார்

3. வார்த்தையின்று மாம்சமானாரே
கும்மாளம்தான் போடுங்க
துள்ளி துள்ளி ஆடுங்க
வின் தூதர் போல பாட்டுபாடுங்க

509. இன்று கண்ட எகிப்தியனை

இன்று கண்ட எகிப்தியனை
என்றுமே இனி காண்பதில்லை (2)
இஸ்ரவேலைக் காக்கும் தேவன்
உறங்கவில்லை தூங்கவில்லை

1. தண்ணீரை நீ கடக்கும்போது
கண்ணீரை அவர் துடைத்திடுவார் (2)
வெள்ளம் போல சத்துரு வந்தால்
ஆவியில் கொடியேற்றிடுவார் (2)

2. கசந்த மாரா மதுரமாகும்
வசந்தமாய் உன் வாழ்க்கை மாறும் (2)
கண்ணீரோடு நீ விதைத்தால்
கெம்பீரமாய் அறுத்திடுவாய் (2)

3. வாதை உந்தன் கூடாரத்தை
அணுகிடாமல் காத்திடுவார் (2)
பாதையிலே காக்கும்படிக்கு
தூதர்களை அனுப்பிடுவார் (2)

4. சோர்ந்து போன உனக்கு அவர்
சத்துவத்தை அளித்திடுவார் (2)
கோரமான புயல் வந்தாலும்
போதகத்தால் தேற்றிடுவார் (2)

510. இன்று கிறிஸ்து எழுந்தார்

1. இன்று கிறிஸ்து எழுந்தார், அல்லேலூயா
இன்று வெற்றி சிறந்தார்; அல்லேலூயா
சிலுவை சுமந்தவர், அல்லேலூயா
மோட்சத்தைத் திறந்தவர், அல்லேலூயா

2. ஸ்தோத்ரப் பாட்டுப் பாடுவோம், அல்லேலூயா
விண்ணின் வேந்தைப் போற்றுவோம், அல்லேலூயா
அவர் தாழ்ந்துயர்ந்தாரே; அல்லேலூயா
மாந்தர் மீட்பர் ஆனாரே, அல்லேலூயா

3. பாடநுபவித்தவர், அல்லேலூயா
ரட்சிப்புக்குக் காரணர், அல்லேலூயா
வானில் இப்போதாள்கிறார்; அல்லேலூயா
தூதர் பாட்டைக் கேட்கிறார், அல்லேலூயா

Tamil Hymns

511. இன்று முதல் நான் உன்னை ஆசீர்வதிப்பேன்

இன்று முதல் நான் உன்னை
ஆசீர்வதிப்பேன் எல்லையில்லா
நன்மைகளால் நிரப்பிடுவேன்

1. பெரிய இனமாக்கி ஆசீர்வதிப்பேன்
உமது பெயரை நான் உயர்த்திடுவேன்
ஆசீர்வாத வாய்க்காலாய் நீ இருப்பாய்

2. செல்லும் இடமெல்லாம் காவலாய் நான்
இருப்பேன் சொன்னதை செய்திடுவேன்
கைவிடமாட்டேன் - நீ வாழும்
இந்த தேசம் உனக்கு தந்திடுவேன்

3. எனது சாயலாய் உருவாக்கி
நடத்துகிறேன் பலுகி பெருகிடுங்கள்
பூமியெல்லாம் நிரம்பிடுங்கள்
உயிர் வாழும் அனைத்தின் மேல்
ஆளுகை செய்திடுங்கள்

4. வானத்து விண்மீன் போல
ஒளிக் கொடுப்பாய் - கடற்கரை
மணலை போல பெருகிடுவாய்
எதிரியின் வாசல்களை
உரிமை ஆக்கிடுவாய்

5. நீரண்டை வளருகின்ற செடியும் நீதானே
மதில் மேல் ஏறுகின்ற கொடியும் நீதானே
பகை நிறைந்த உலகத்திலே
அன்பு கரம் நீட்டிடுவாய்

6. மாராவின் கசந்த தண்ணீர் மதுரமாகிடும்
பன்னிரெண்டு நீருற்றும் ஏலீமும் உனக்கு உண்டு
கல்வாரி நிழல்தனிலே காலமெல்லாம் வாழ்ந்திடுவாய்

7. கர்த்தரின் குரலுக்கு கவனமாய் செவிகொடுத்து
பார்வைக்கு நல்லதையே செய்து நீ வாழ்ந்து வந்தால்
வியாதி வருவதில்லை குணமாக்கும் ஆண்டவர் நான்

8. உணவையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பேன்
மலடு இருப்பதில்லை Abortion ஆவதில்லை

Tamil Hymns

ஆவியிலும் உண்மையிலும் ஆராதனை செய்திடுங்கள்

512. இன்றும் என்றும் மாறிடாத இயேசுவே

இன்றும் என்றும் மாறிடாத இயேசுவே
ஜீவனீந்திரல்லோ அன்பினால்
திவ்ய வாக்கு தத்தம் தந்தெம்மை ஸ்திரப்படுத்தி
நின் கிருபையாலே நிறைத்திடுவீரே

இயேசுவே என்னை
நீர் ஆசீர்வதியும் சௌக்யமீந்திடும்
நான் நம்பி வந்தேனே

1. அன்பினால் சகேயுவை அழைத்துமே
அன்று இரட்சிப்பளித்திட்டீரே
இன்று யான் பெறவே உம்மாறிடா சந்தோஷமே
நின் கிருபையாலே நிறைந்திடுவீரே - இயேசு

2. ரோகிகளின் ஏற்ற நல்ல வைத்தியரே
தேகமதில் காயமேற்றீரே
என்னை சுமமாக்க நின் வன் கரத்தை நீட்டியே
நின் கிருபையாலே நிறைத்திடுவீரே

3. வாவென்று அழைத்த வல்ல சத்தமே
லாசரை உயிர்ப்பித்ததுவே
என்னை உயிர்ப்பித்த அவ்வல்ல வாக்குரைத்துமே
நின் கிருபையாலே நிறைந்திடுவீரே - இயேசு

4. யாவுமெனக்காய் முடித்த இயேசுவே
யாருண்டு இப்பாரில் உம்மைப்போல்
உம் மகிமை சாயல் இம்மண் சரீரம் பெற்றிட
நின் கிருபையாலே பூரணனாக்கிடும்

Tamil Hymns

513. இன்று வரை என்னை நடத்தினீர்

இன்று வரை என்னை நடத்தினீர்
இன்றுவரை என்னை தாங்கினீர்
இயேசுவே நீர் மிக நல்லவர்
நீர் என்றென்றும் போதுமானவர்

எந்தன் பாவ பாரமெல்லாம்
உந்தன் மீது சுமந்து கொண்டீர்
எனக்காய் சிலுவை மரித்தீர்
இயேசுவே நீர் மிக நல்லவர்

எந்தன் தேவைகள் அறிந்து
வானம் திறந்து தந்திட்டிரே
எல்லால் சம்பூரணமாய் நல்கிறீர்
இயேசுவே நீர் மிக நல்லவர்

மன பாரத்தால் நான் அலைந்தேன்
மன வேதனையால் நிறைந்தேன்
மனம் உருகி நான் கதறும் போது
இயேசுவே நீர் மிக நல்லவர்

கடும் வியாதி வந்த வேளையில்
வைத்தியராகி என்னை தேற்றினீர்
கடும் வெயிலும் நல் நிழலானீர்
இயேசுவே நீர் மிக நல்லவர்

ஒருநாளும் கைவிடீர் நீர்
ஒருநாளும் விலகிடீர் நீர்
ஒருபோதும் மறக்க மாட்டீர்
இயேசுவே நீர் உண்மையுள்ளவர்

Tamil Hymns

514. இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய்

இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய்
இயேசு நாதையா - இன்றைத் தினம்
உன் அருள் ஈகுவாய்...
அன்றுன் உதிரம் நரர்க் - கென்று
சிந்தி மீட்டெனை வென்றியுடன்
ரட்சித்த நன்றி போலே எனக்கு

1. போன ராவில் என்னைக் கண் பார்த்தாய் - பலவிதமாம்
பொல்லா மோசங்களில் தற்காத்தாய்
ஈன சாத்தான் எனையே இடர்க்குள் அகப்படுத்தி - ஊனம்
எனக்குச் செய்யா துருக்கமுடன் புரந்தாய்

2. கையிட்டுக் கொள்ளும் என்றன் - வேலை
யாவிலுமுன்றன் கடைக்கண்ணோக்கி
அவற்றின் மேலே - ஐயா நின் ஆசீர்வாதம்
அருளி என் மனோவாக்கு - மெய்யால்
நின் மகிமையே விளங்கும்படி ஒழுக

3. எத்தனையோ விபத்தோர் நாளே - தஞ்சம்
நீ என எளியேன் அடைந்தேன் உன்றன் தாளே
பத்தர் பாலனா எனைப் பண்பாய்
ஒப்புவித்தேன் - உன் சித்தம்
எனது பாக்கியம் - தேவ திருக்குமாரா

4. பாவ சோதனைகளை வென்று -- பேயுலகுடல்
பண்ணும் போர்களுக் கெதிர் நின்று
ஜீவ பாதையில் இன்றும்
திடனாய் முன்னிட்டுச் செல்ல - தேவ
சர்வாயுதத்தைச் சிறக்க எனக் களித்து

Tamil Hymns

515. இன்னமும் தாமதமேன் இன்பச்

இன்னமும் தாமதமேன்
இன்பச் சத்தம் கேளாயோ
இன்னலின்று காத்திட
இன்றுன்னை அழைக்கிறாரே

ஜீவனின் அதிபதி இயேசுவண்டை
நித்திய ஜீவன் உண்டே
நீங்கிடா அவர் அன்பையே
நாடி நீ வந்திடாயோ

1. கல்வாரி மேட்டினிலே
கரங்களை விரித்தவராய்
காத்து உன்னை இரட்சித்திட
கனிவுடன் அழைக்கிறாரே (ஜீவனின்)

2. லோகத்தின் இன்பமெல்லாம்
மாறிடும் ஷணப்பொழுதில்
மாறிடா நேசர் இயேசு
மாண்புடன் அழைக்கிறாரே (ஜீவனின்)

3. நாளை உன் நாளாகுமோ
நாடாயோ நாதனை நீ
நாசலோகை மீட்டிட
நாதன் அழைக்கிறாரே (ஜீவனின்)

516. இன்னும் நான் அழியல இன்னும்

இன்னும் நான் அழியல
இன்னும் தோற்று போகல
ஆனாலும் வாழ்கிறேனே
ஏன்? ஏன்? ஏன்?
போராட்டங்கள் முடியல பாடுகளும் தீரல
ஆனாலும் இருக்குறேனே
ஏன்? ஏன்? ஏன்?
கிருபை கிருபை கிருபை கிருபை - எல்லாம்
நான் இல்ல என் பெலன் இல்ல
என் தாலந்தில்ல எல்லாம் கிருபை

1. படிக்கல உயரல பட்டத்தாரி ஆகல
ஆனாலும் வாழ்கிறேனே ஏன்? ஏன்? ஏன்?
நிற்கிறேன் நிர்மூலமாகமலே இருக்கிறேன்
ஆனாலும் நிற்கிறேனே ஏன்? ஏன்? ஏன்?

2. அற்புதங்கள் நடக்குது
அதிசயங்கள் நடக்குது
வியாதியெல்லாம் மாறினது
ஏன்? ஏன்? ஏன்?
பாவமெல்லாம் மறைந்தது
சாபமெல்லாம் உடைந்தது
பரிசுத்தமாய் மாறினது
ஏன்? ஏன்? ஏன்?

Tamil Hymns

517. இன்னோர் ஆண்டு முற்றுமாய்

1. இன்னோர் ஆண்டு முற்றுமாய்
எங்களை மகா அன்பாய்
காத்து வந்தீர் இயேசுவே;
உம்மைத் துதி செய்வோமே.

2. நீரே இந்த ஆண்டிலும்
எங்கள் துணையாயிரும்;
எந்தத் துன்பம் தாழ்விலும்
கூடத் தங்கியருளும்.

3. யாரேனும் இவ்வாண்டினில்
சாவின் பள்ளத்தாக்கினில்
செல்லின், உந்தன் கோலாலே
தேற்றும், நல்ல மேய்ப்பரே.

4. நாங்கள் உந்தன் தாசராய்
தூய்மை பக்தி உள்ளோராய்
சாமட்டும் நிலைக்க நீர்
காத்து கிரீடம் ஈகுவீர்.

5. ஏசு கர்த்தராம் நீரே
மன்னர் மன்னன் எனவே
என்றும் உம்மைப் போற்றுவோம்
உந்தன் வீட்டில் வாழுவோம்.

518. இஸ்ரவேல் என்னும் நாட்டினிலே

1. இஸ்ரவேல் என்னும் நாட்டினிலே
பெத்லகேம் என்னும் ஊரினிலே
பிறந்தார் (4) தேவ குமாரன் பிறந்தார்
பிறந்தார் (4) இயேசு கிறிஸ்து பிறந்தார்

உன்னதத்தில் மகிமை
பூமியிலே சமாதானம்
மனுஷர் மேல் பிரியம்
மனுஷர் மேல் பிரியம்

2. கன்னிமரியின் தாய்மையிலே
தாவீது இராஜா வம்சத்திலே
பிறந்தார் (4) அதிசயமானவர் பிறந்தார்
பிறந்தார் (4) முன்னோரின் மேசியா பிறந்தார்
- உன்னதத்தில்

3. சத்திரத்தில் இடம் இல்லையே
மெத்தையோ தொழுமுன்னணையே
பிறந்தார் (4) சிருஷ்டிப்பின் தேவன் பிறந்தார்
பிறந்தார் (4) கர்த்தாதி கர்த்தர் பிறந்தார்
- உன்னதத்தில்

519. இஸ்ரவேல் என் ஜனமே என்றும்

இஸ்ரவேல் என் ஜனமே என்றும்
இடறிட வேண்டாம்
யேகோவா உன் தெய்வமானால்
ஏதும் பயம் வேண்டாம்

1. ஓங்கும் புயமும் பலத்த கரமும்
உன் பக்கமே யுண்டு
தாங்கும் கிருபை தயவு இரக்கம்
தாராளமாயுண்டு

2. பார்வோன் கைக்கு விடுத்து மீட்ட
பஸ்கா ஆட்டுக்குட்டி
ஆரோன் மோசே என்னும் நல்ல
ஆசாரியர் உண்டு

3. செங்கடலில் வழி திறந்த
சீயோன் நாயகனே
பங்கமின்றி பாலைவனத்தில்
பராமரித்தாரே

4. சத்துருக்களை சிதற அடித்த
சர்வ வல்ல தேவன்
யுத்தத்தில் உன் முன்னே சென்று
ஜெயமெடுத்தாரே

5. பயப்படாதே சிறு மந்தையே
பார் நான் உன் மேய்ப்பன்
தயங்காதே மனம் கலங்காதே உன்
தேவன் தினம் காப்பேன்

Tamil Hymns

520. இஸ்ரவேலின் சேனைகளின் முன் நடந்த

இஸ்ரவேலின் சேனைகளின் முன் நடந்த
தெய்வமே - எங்கள் சேனாதிபதியாய்
எங்கள் முன்னே செல்லுமே

1. உம்மை நம்பி உம்மை சார்ந்து உம்மை
மகிமைப்படுத்தவே அடியார் தொடுக்கும்
வேலையை நீர் ஆசீர்வதிக்க வேணுமே

2. ஸ்நானகன் யோவானோடேசு ஸ்நானம் வாங்கும்
வேளையில் - வந்தமர்ந்த வான் புறாவே!
வாரும் இந்த நேரத்தில்

3. அன்று நூற்றிருபது பேர் சென்றதோர் மேல்
வீட்டினில் - வந்தமர்ந்த வான்அக்கினியே!
வாரும் இந்த நேரத்தில்

4. சமுத்திரத்தை இரண்டாக பிளந்த எங்கள்
தெய்வமே - உலர்ந்த தரையை எங்களுக்காய்
செய்ய வேணுமே

5. ஆறு லட்சம் இஸ்ரவேலர் அப்பம் தண்ணீர்
குறைவில்லாமல் - நாற்பதாண்டு வனாந்திரம்
நடத்தின எம் தெய்வமே

6. யோசுவாவின் போர்க்களத்தில் வீரனாய் முன்
நின்றவர் - சந்திர சூர்ய மண்டலங்கள்
தரித்து நிற்கச் செய்தவர்

7. ஏழை எலியாவின் மேலே வல்லமையாய்
நின்றவர் - பாரில் பாகால் கோபுரங்கள்
அழித்துப் போடும் தெய்வமே

8. ஆதிக் கிறிஸ்து சீஷர் முதல் இன்று வரை
பக்தரை - ஆசீர் வதித்து வல்லமையால்
ஆளும் எங்கள் தெய்வமே

9. புதிய வானம் புதிய பூமி ஆக்கி ஆள
வருவாரே - புதிய எருசலே மீதில்
ஏழைகளைச் சேருமெ

Tamil Hymns

521. இஸ்ரவேலின் துதிகளில் வாசம் செய்யும்

இஸ்ரவேலின் துதிகளில் வாசம் செய்யும்
எங்கள் தேவன் நீர் பரிசுத்தரே
ஓ.... வாக்குகள் பல தந்து அழைத்துவந்தீர்
ஒரு தந்தை போல எம்மை தூக்கி சுமந்தீர்

இனி நீர் மாத்ரமே (3)
எங்கள் சொந்தமானீர்
உம்மை ஆராதிப்போம் ஆர்ப்பரிப்போம்
உம் நாமத்தினால்
என்றும் ஜெயமெடுப்போம்

1. எதிர்காலம் இல்லாமல் ஏங்கி நின்றோம்
காலத்தைப் படைத்தவர் தேடிவந்தீர் -2
சிறையிருப்பை மாற்றி தந்தீர்
சிறுமையின் ஜனம் எம்மை உயர்த்திவைத்தீர்

2. செங்கடலைக் கண்டு சோர்ந்துபோனோம்
யோர்தானின் நிலை கண்டு அஞ்சி நின்றோம்
பயப்படாதே முன் செல்லுகிறேன்
என்றுரைத்து எம்மை நடத்திவந்தீர்

3. எதிரியின் படை எம்மை சூழும்போது
ஓங்கிய புயங் கொண்டு யுத்தம் செய்தீர்
பாடச் செய்தீர் துதிக்கச் செய்தீர்
எரிகோவின் மதில்களை இடிக்கச் செய்தீர்

Tamil Hymns

522. இஸ்ரவேலின் துதிகளுக்குள்

இஸ்ரவேலின் துதிகளுக்குள்
வாசம் செய்யும் தேவரிரவர்
துதிக்கிறதாம் இடங்களில்
இறங்கி வந்திடுவார்-எருசலேம்
சென்று இயேசுவை காண்பேன்
அவரோடு நான் வாழ்வேன் சதாகாலமாக

1. உயிர் தந்த நேசர்
இவரே மிக அழகுள்ளவர்
வெண்ணங்கி தரித்தவர் மிக
சிறந்த மேனியும் உள்ள

2. புது வானம், புது பூமி
புது எருசலேமும்
மணவாட்டி சபைக்காக
ஆயத்தமாகிடும்

3. இதோ மனுஷர்களிடத்தில்
தேவனின் வாசஸ்தலம்-தேவன் தாமே
இவருக்கு தேவனாயிருப்பார்

4. பனிபோல தெளிவான
ஜீவ தண்ணீரண்டை
ஆட்டுக்குட்டியான தேவனோடு
கூட இருப்பேன்

5. மாரநாதா சீக்கிரம் வாரும்
என துதிகளுக்குள்-வாசம் செய்து
கொண்டு சென்று உமது நாடதிலே

Tamil Hymns

523. இஸ்ரவேலின் துதிகள் வாசம்

இஸ்ரவேலின் துதிகள்
வாசம் பண்ணும் தேவனே
இந்நேரம் அடியாரின் துதிகள்
மத்தியில் இறங்கி வந்திடுமே

1. உம் வாசல்களில் துதியோடும்
உம் பிரகாரத்தில் புகழ்ச்சியோடும்
உம்மைத் துதித்திடவே பிரவேசித்திட்டோம்
உம் நாமத்தை ஒருமித்துமே
உயர்த்தியே போற்றுகிறோம் (2)

2. இஸ்ரவேலின் எக்காலம் மகா
ஆரவாரத்து முழக்கத்தின் மேல்
எரிகோவின் அலங்கம் விழுந்தது போல்
இப்போ சத்துருவின் கொட்டைகளை
இடித்து தகர்த்திடுமே (2)

3. எதைக் குறித்தும் கவலைப்படாமல்
எல்லா விண்ணப்பமும் எறேடுங்கள்
என்றும் ஸ்தோத்திர ஜெப வேண்டுதலோடு
இப்போ எல்லா புத்திக்கும் மேலான
உம் சாமாதானம் ஈந்திடுமே (2)

4. உம் கிருபையின் மகிமைக்குமே
எம்மை புகழ்ச்சியாய் முன் குறித்தீர்
எம் சுதந்திரத்தின் அச்சாரமாக
எம்மை மீட்கவே முத்தரித்தீரே
உம் ஆவியானவரால்

Tamil Hymns

524. இஸ்ரவேலின் தேவனை

இஸ்ரவேலின் தேவனை இயேசு இராஜன் பாலகனை
துதிபாடுவோம் அவரை வாழ்த்தி துதிமலர் தூவிடுவோம்

1. இருளின் அதிகாரத்தினால் நாம்
அடிமைகளாயிருந்தோம்
அன்பின் குமாரன் தியாகத்தினால்
நாம் விடுதலையாக்கப்பட்டோம்
தம் அன்பின் ஜனத்திரளாக
நம்மை சேர்த்துக்கொண்டாரே
பாவ மன்னிப்பு மீட்பு எல்லாமே
அன்பின் இலவச பரிசாக அளித்தாரே

2. சர்வ சிருஷ்டிக்கும் முந்தினவர்
திருச்சபையின் தலையானார்
சகல பரிபூரணமும்
அவருக்குள் வாசமாகும்
ஆதியும் தற்சொரூபமும் அவரே
சமாதானம் தருபவரே
பூலோகம் மேலோகம் யாவுமே
ஒன்றாய் இணைந்தே வாழ்ந்திடும் சீக்கிரமே

525. இஸ்ரவேலின் ராஜாவே

1. இஸ்ரவேலின் ராஜாவே
என் தேவனாம் கர்த்தரே
நான் உம்மை வாழ்த்துகிறேன்
நன்மைகள் நினைக்கிறேன்

இயேசுவே - (4)
நன்றி நன்றி நாதா
அளவில்லா அன்பிற்காக (4)

2. திருக்கரம் என்னை தாங்கி
உன் கடும் பிரட்சனைகளிலும்
முன்னேறி செல்வதிற்கு
பலத்தை நீர் தந்தற்காய்

3. எதிற்கிறவர் முன்பிலும்
தள்ளினவர் மத்தியில்
பந்தி ஆயத்தப்படுத்தி
அன்பாக கனம் பண்ணினீர்

4. என்ன நான் செலுத்திடுவேன்
ஆயிரம் பாடல்களோ
என் உயிர் காலம் முழுதும்
இரட்சிப்பை உயர்த்திடுவேன்

526. இஸ்ரவேலின் ஜெயபெலமே எங்கள்

இஸ்ரவேலின் ஜெயபெலமே
எங்கள் சேனையின் கர்த்தரே
உம் வார்த்தையினால் பிழைத்திருப்போம்
உம் கிருபையினால் நிலைத்திருப்போம்

நீரே தேவனாம்எங்கள்
சேனையின் கர்த்தரே
உம்மை உயர்த்தியே
நாங்கள் தேசத்தை சுதந்தரிப்போம்

1. பாகால்கள் அழிந்திடவே
உந்தன் அக்கினி அனுப்புமே
எலியாவின் தேவன் மெய்தேவன்
என்று தேசங்கள் பாடவே

2. எதிர்த்திடும் சிங்கங்களின்
வாய்களை கட்டுவேன்
தானியேலின் தேவன் மெய்தேவன்
என்று இராஜாக்கள் சொல்லவே

Tamil Hymns

527. இஸ்ரவேலே உன்னை காக்கும் தேவன்

இஸ்ரவேலே உன்னை காக்கும் தேவன்
உறங்குவதில்லை தூங்குவதில்லை
இனியும் கலங்குவதேன் - நீயும்

1. பார்வோனின் சேனைகள்
உன்னை தொடர்ந்து வந்த போது
தம் கரத்தால் செங்கடலை பிளந்தாரே
இஸ்ரவேலைக் காக்கிறவர் நம் தேவனே
அவர் மாறிடாரே

2. வனாந்திர யாத்திரையில்
நீயும் சோர்ந்து போகையிலே
தம் சமுகம் உன்னுடனே இருந்ததே
இஸ்ரவேலைக் காக்கிறவர் நம் தேவனே
அவர் விலகிடாரே

528. இஸ்ரவேலே உன்னை எப்படிக்

எப்பிராயீமே உன்னை எப்படிக் கைநெகிழ்வேன்
என் மகனே உன்னை எப்படிக் கைவிடுவேன்
என் மகளே உன்னை எப்படிக் கைநெகிழ்வேன்

1. என் இதயம் உனக்காய் ஏங்குகின்றது
என் இரக்கம் பொங்கிபொங்கி வழிகின்றது
எப்படி கைவிடுவேன்
எப்படி கைநெகிழ்வேன் - உன்னை

2. நானே தான் உன்னை குணமாக்கினேன்
ஏனோ நீ அறியாமல் போனாயோ

3. கையிலே ஏந்தி நடத்துகிறேன்
கரம்பிடித்து நடக்க உன்னைப் பழக்குகிறேன்

4. பரிவு என்னும் கயிறுகளால் பிணைத்துக் கொண்டேன்
பக்கம் சாய்ந்து உணவு நான் ஊட்டுகிறேன்

5. முடிவில்லாத அன்பு நான் காட்டியுள்ளேன்;
பேரன்பால் உன்னை ஈர்த்துக் கொண்டேன்

Tamil Hymns

529. இஸ்ரவேலே கர்த்தரை நம்பு

இஸ்ரவேலே
கர்த்தரை நம்பு (3)
இஸ்ரவேலே - அவர் உன்
துணையும் கேடகமானவர்

1. புழுதியிலிருந்து தூக்கி விடுவார்
குப்பையிலிருந்து உயர்த்திடுவார்
பிரபுக்களோடும் ராஜாக்களோடும்
உட்கார செய்பவர் உனக்கு உண்டு

2. அக்கினி மீது நீ நடக்கும் போதும்
ஆறுகளை நீ கடக்கும் போதும்
அக்கினி பற்றாது ஆறுகள் புரளாது
ஆண்டவர் உன்னோடு இருப்பதாலே

3. அவர் உன்னை விட்டு விலகுவதில்லை
அவர் உன்னை என்றும் கைவிடுவதும் இல்லை
உள்ளங்கையில் வரைந்தவர்
அவர் உன்னை என்றும் மறப்பதில்லை

Tamil Hymns

530. இஸ்ரவேலே பயப்படாதே

இஸ்ரவேலே பயப்படாதே
நானே உன் தேவன்
வழியும் சத்தியமும் ஜீவனும் நானே

1. உன்னை நானே தெரிந்து கொண்டேனே
உன் பெயர் சொல்லி நான் அழைத்தேனே
ஒரு போதும் நான் கைவிடமாட்டேன்
கைவிடமாட்டேன்

2. தாய் மறந்தாலும் நான் மறவேனே
உள்ளங்கையில் தாங்கி உள்ளேன்
ஒருபோதும் நான் மறப்பதில்லை
மறந்து போவதில்லை

3. துன்பநேரம் சோர்ந்து விடாதே
ஜீவகிரீடம் உனக்குத் தருவேன்
சீக்கிரம் வருவேன் அழைத்துச் செல்வேன்
எழுந்து ஒளி வீசு

4. தீயின் நடுவே நீ நடந்தாலும்
எரிந்து நீயும் போகமாட்டாய்
ஆறுகளை நீ கடக்கும் போது
மூழ்கி போக மாட்டாய்

Tamil Hymns

531. ஈசாயின் அடி மரமே

ஈசாயின் அடி மரமே
நேசா நீர் அதன் கிளையே
ஏசாயா உரைத்திடும் மெய்பொருளே
ஏதென்று அறிந்திடுவோம்

திகழும் ஜோதி தவழும் காட்சி
புகழும் நற்செய்தியே மகிழ்ச்சி
ஏக புதல்வன் தேவகுமாரன்
இயேசு கிறிஸ்து இவரே

யூதாவின் பால சிங்கம்
நாதா உம் நாமமோங்கும்
யாக்கோபில் உதிக்கும் ஓர் நட்சத்திரம்
யார் என்று விளம்பிடுவோம்

தாவீதின் ஊர் தனிலே
தாயார் மரி மகனே
வான பரன் பிறந்தார் அதனை
வாரும் சென்றுரைத்திடுவோம்

வானோர் பராபரனே
ஏனோ வந்தார் புவியே
பாவியின் அடைக்கலமாய் உதித்தார்
பாரும் நாம் வணங்கிடுவோம்

ஆலோசனை கர்த்தரே
அதிசயமானவரே
கர்த்தத்துவம் அவர் தோளிலுண்டே
கண்டே இன்றுணர்ந்திடுவோம்

செங்கோலும் யுதாவிலே
மங்கி மறைந்திடாதே
சமாதான கர்த்தர் வருமளவும்
சேர்ந்தென்றும் முழங்கிடுவோம்

Tamil Hymns

532. ஈனலோகத்தில் இயேசு ஏன் பிறந்தார்

ஈனலோகத்தில் இயேசு ஏன் பிறந்தார்
ஈன பாவிகளை மீட்க தான் பிறந்தார்

1. ஆ அதிசயம் ஆ அதிசயம்
அன்பரின் ஜெனிப்பு அதிசயம்
அன்பரின் பிறப்பு அதிசயம்

2. மா மகிமையே மா மகிமையே
மனுக்குலம் மீட்ட மகிமையே
மனு உரு எடுத்த மகிமையே

3. மா பரிசுத்தர் மா பரிசுத்தர்
பரலோக மேன்மை துறந்ததால்
பாவியின் சாயல் அணிந்ததால்

4. ஆ அல்லேலூயா ஆ அல்லேலூயா
ஆகாய மகிமை ஜொலித்ததால்
ஆட்டிடையர் கண்டு இரசித்ததால்

533. உங்க ஆவியை அனுப்புங்க

உங்க ஆவியை அனுப்புங்க
என்னை உயிரடைய செய்யுங்க
உலர்ந்த எலும்புகள் இந்த நாளில்
உயிரடைய வேண்டுமே

1. உயிரடைய வேண்டுமே உயிரடைய வேண்டுமே
உயிரடைய வேண்டுமே உயிரடைய வேண்டுமே
உந்தன் உயிர்த்தெழுந்த வல்லமை வேண்டுமே

2. பாதளக் கட்டுகள் உடையட்டுமே
பார்வோனின் வல்லமை அழியட்டுமே
உமக்காக நாங்கள் ஓடிட உயிரடைய வேண்டுமே

3. கவலையின் கட்டுகள் உடையட்டுமே
சந்தோஷத்தாலே நிரப்பிடுமே
என் இரவுகளெல்லாம் துதிநேரமாய் உயிரடைய வேண்டுமே

534. உகந்த காணிக்கையாய்

உகந்த காணிக்கையாய்
ஒப்புக் கொடுத்தேனையா
சுகந்த வாசனையாய்
நுகர்ந்து மகிழுமையா

1. தகப்பனே உம் பீடத்தில்
தகனபலியானேன்
அக்கினி இறக்கிவிடும்
முற்றிலும் எரித்துவிடும் - உகந்த

2. வேண்டாத பலவீனங்கள்
ஆண்டவா முன் வைக்கின்றேன்
மீண்டும் தலை தூக்காமல்
மாண்டு மடியட்டுமே

3. கண்கள் தூய்மையாக்கும்
கர்த்தா உமைப் பார்க்கணும் -என்
காதுகள் திறந்தருளும்
கர்த்தர் உம் குரல் கேட்கணும்-என்

4. அப்பா உம் சமூகத்தில்
ஆர்வமாய் வந்தேனையா
தப்பாமல் வனைந்து கொள்ளும்
உப்பாக பயன்படுத்தும்

535. உங்க ஊழியம் நான் ஏன் கலங்கணும்

உங்க ஊழியம் நான் ஏன் கலங்கணும்
அழைச்சது நீங்க நடத்திச் செல்வீங்க

1. திட்டங்கள் தருபவரும் நீர் தானையா
செயல்படுத்தி மகிழ்பவரும் நீர்தானையா
எஜமானனே என்ராஜனே எஜமானன் நீர்
இருக்க வேலைக்காரனுக்கு ஏன் கவலை

2. எலியாவை காகம் கொண்டு போஷித்தீரே
சூரைச்செடி சோர்வு நீங்க பேசினீரே
தெய்வமே பேசும் தெய்வமே
எலியாவின் தேவன் இருக்க
எதுவும் என்னை அசைப்பதில்லை

3. பவுலையும் சீலாவையும் பாடவைத்தீரே
சிறையிலே நள்ளிரவில் ஜெபிக்க வைத்தீரே
கதவு திறந்தன கட்டுகள் உடைந்தன
காக்கும் தெய்வம் நீர் இருக்க
கவலை எனக்கு எதற்கு

4. ஆயன் நான் ஆடுகளை அறிந்திருக்கிறேன்
ஒருவராலும் பறித்துக் கொள்ள முடியாதென்றீர்
நல் ஆயனே என் மேய்ப்பரே
என் ஆயன் நீர் இருக்க
ஆட்டுக்குட்டிக்கு ஏன் கவலை

5. தகப்பன் தன் பிள்ளைகளை சுமப்பதுபோல
இறுதிவரை உங்களை நான் சுமப்பேன் என்றீர்
தகப்பனே தாங்கும் தெய்வமே
தகப்பன் நீர் இருக்கையிலே
பிள்ளை எனக்கு ஏன் கவலை

Tamil Hymns

536. உங்க கிருபைதான் என்னை தாங்குகின்றது

உங்க கிருபைதான் என்னை தாங்குகின்றது
உங்க கிருபைதான் என்னை நடத்துகின்றது
கிருபையே கிருபையே மாறாத நல்ல கிருபையே

1. உடைக்கப்பட்ட நேரத்திலெல்லாம்
என்னை உருவாக்கின கிருபை இது

2. சோர்ந்துபோன நேரத்திலெல்லாம்
என்னை சூழ்ந்துகொண்ட கிருபை இது

3. ஒன்றுமில்லா நேரத்திலெல்லாம்
எனக்கு உதவி செய்த கிருபை இது

4. ஊழியத்தின் பாதையிலெல்லாம்
என்னை உயர்த்திவைத்த கிருபை இது

Tamil Hymns

537. உங்க நேசம் பெரியது

உங்க நேசம் பெரியது
இயேசுவின் நேசம் பெரியது
அது அளவிட முடியாதது
அது பாரபட்சம் இல்லாதது

1. தாழ்மையில் இருந்த என்னை
கண்ணோக்கி பார்த்த நேசம்

2. உலகத்தின் நேசமெல்லாம்
மாயை மாயை தானே

3. என் நேசரின் நேசத்தினால்
என் உள்ளமெல்லாம் பொங்குதைய்யா

Tamil Hymns

538. உங்க முகத்தைப் பார்க்கணுமே இயேசையா

உங்க முகத்தைப் பார்க்கணுமே இயேசையா - 2
அல்லேலூயா அல்லேலூயா - 4

1. எந்தன் பாடுகள் வேதனை மறைந்துவிடும்
எந்தன் துயரங்கள் கலக்கங்கள் மாறிவிடும் - 2

2. யோர்தானின் வெள்ளங்கள் விலகிவிடும்
எரிகோவின் மதில்கள் இடிந்து விழும் - 2

3. எங்கள் தேசத்தின் கட்டுக்கள் அறுந்துவிடும்
எங்கள் சபைகளில் எழுப்புதல் பரவி விடும் - 2

4. பெலவீனத்தில் உம் பெலன் விளங்கிவிடும்
உம் கிருபை என்றும் எனக்குப் போதும் - 2

5. கல்வாரியில் நீர் எந்தன் பாவம் தீர்த்தீர்
என் நோய்களை சிலுவையில் சுமந்துவிட்டீர் - 2

6. எந்தன் பாவத்தின் தோஷத்தை சுமந்தவரே
எங்கள் தேசத்தின் சாபத்தை மாற்றிடுமே - 2

539. உங்க வசனம் மனமகிழ்ச்சியா

உங்க வசனம் மனமகிழ்ச்சியா
இல்லாமல் போனா என் துக்கத்திலே
அழிந்து போயிருப்பேன்

பாதைக்கு வெளிச்சமல்லோ
பேதைக்கு தீபமல்லோ

மரண இருளில் நடக்கினற போது-கோலும்
தடியுமாக தேற்றுதையா உம் வசனம்
துன்பத்தின் பாதையிலே நடக்கின்ற போது
உயிர்பித்து உயர்த்துதையா
உம் வசனம் தானையா

உமது வேதத்தை இரவும் பகலும்
தியானம் செய்வதினால்
பாக்கியமாய் உயர்த்துதையா
பச்சையான மரமாக இலை உதிராமல்
காலமெல்லாம் கனிகொடுத்து
உயர்த்துதையா உம் வசனம்

உமது வசனம் உட்கொள்ளும்போது
இதயம் அனலாகி கொழுந்து
விட்டு எரியுதையா
உலர்ந்த எலும்பெல்லாம் உயிர்பித்து
எழும்புதையா-சேனையாய் எழும்பி
நின்று சத்துருவை துரத்துதையா

540. உங்களைப் படைத்தவர் சருவ

1. உங்களைப் படைத்தவர்
சருவ தயாபரர்
தம்மில் வாழ்ந்து ஜீவிக்க,
என்றும் தம்மோடிருக்க
ஆசைப்பட்டோர் உங்களை
பார்த்து, "என் சிநேகத்தை
தள்ளிவிட்டு நிற்பதார்?
திரும்புங்கள்," என்கிறார்.

2. உங்களை ரட்சித்தவர்
தெய்வ சுதனானவர்
திரு ரத்தம் சிந்தினார்
சிலுவையில் மரித்தார்
"நீங்கள் வீணில் சாவதேன்!
மரித்துங்களை மீட்டேன்,"
என்று கூறி நிற்கிறார்
"திரும்புங்கள்," என்கிறார்.

3. உங்களை நேசிப்பவர்
தூய ஆவியானவர்
நயம் பயம் காட்டினார்
குணப்பட ஏவினார்;
"தயை பெற வாரீரோ,
மீட்பைத் தேடமாட்டீரோ!"
என்றிரங்கிக் கேட்கிறார்,

541. உங்களையே உங்களையே இயேசு

உங்களையே உங்களையே - இயேசு
அழைக்கின்றார் இன்று உங்களையே
உலகத்தை வெறுத்து என் பின்னே வா
என அழைக்கின்றார் இன்று உங்களையே

1. மாறாத அன்பை உலகிற்கு காட்டிட
இயேசுவைப்போல் வாடிநந்திட வாருங்களே
உங்களிடம் வேறெதுவும் கேட்கவில்லை
அவர் கேட்பது எல்லாம் உங்களையே

2. தாலந்து திறமை படைத்தோரே - நீங்கள்
தந்திடுங்கள் இன்று உங்களையே
கல்வியும் ஞானமும் அவருக்காய் செலவிட்டு
கரைந்திட கொடுங்கள் உங்களையே

3. பரலோகின் மேன்மையை அற்பமாய் எண்ணி
தந்திட்டாரே தன்னையே உங்களுக்காய்
அவருக்காய் உங்களை அர்ப்பணம் செய்
வாடிநந்திட அழைக்கின்றார் உங்களையே

Tamil Hymns

542. உங்கள் மீது கண்கள் வைத்து

உங்கள் மீது கண்கள் வைத்து
கருத்தாய் விசாரிப்பவர்
இன்ப நல் மீட்பர்
இயேசுவின் மீது உங்கள்
பாரத்தை வைத்திடுங்கள்

1. உயர்த்துங்கள் இயேசுவையே உயர்த்துங்கள்
ஆர்பரித்து விண்ணதிர உயர்த்துங்கள் – 5

2. தோற்கடித்து காலடியில் கீழ்ப்படுத்தி
வீழ்த்திடுங்கள் சாத்தானை வீழ்த்திடுங்கள்

3. உயர்த்துங்கள் இயேசுவையே உயர்த்துங்கள்
ஆர்பரித்து விண்ணதிர உயர்த்துங்கள் – 5

Tamil Hymns

543. உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்

உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்
உங்கள் கவலைகள் கண்ணீர்
எல்லாம் மறைந்து விடும்

கலங்காதே மகனே
கலங்காதே மகளே
என் இயேசு கைவிடமாட்டார்

1. கடந்ததை நினைத்து கலங்காதே
நடந்ததை மறந்துவிடு
கர்த்தர் புதியன செய்திடுவார்
இன்றே நீ காண்பாய்
கலங்கிடவே வேண்டாம்

2. நொறுங்குண்ட இதயம் தேற்றுகிறார்
உடைந்த உள்ளம் தாங்குகிறார்
காயங்கள் அனைத்தையும் கட்டுகிறார்
கண்ணீர் துடைக்கிறார் - உன்

3. திராணிக்கு மேலாக சோதிக்கப்பட
ஒருநாளும் விடமாட்டார்
தாங்கிடும் பெலன் தருவார்
தப்பிச் செல்ல வழி செய்வார்

4. நல்லதோர் போராட்டம் போராடுவோம்
விசுவாசம் காத்துக்கொள்வோம்
நீதியின் கிரீடம் நமக்கு உண்டு
நேசர் வருகையில் தந்திடுவார் - நாம்

5. அக்கினியின் மேல் நடந்தாலும்
எரிந்து போகமாட்டாய்
ஆறுகளை நீ கடந்தாலும்
மூழ்கி போக மாட்டாய்

எங்கள் துக்கம் சந்தொஷாமாய் மாறும்
எங்கள் கவலைகள் கண்ணீர்
எல்லாம் மறைந்து விடும்
கலங்கிடவே மாட்டோம் - நாங்கள்
கலங்கிடவே மாட்டோம்

Tamil Hymns

544. உச்சித மோட்ச பட்டணம் போக

உச்சித மோட்ச பட்டணம் போக
ஓடி நடப்போமே- அங்கே
உன்னத யேசு மன்னவருண்டு ஓயா இன்பமுண்டு,

1. சித்தச் சீயோன் பெற்றிடச் செல்லும்
சேனையின் கூட்டமதாய் -எங்கள்
ஜீவனினதிபர் யேசு நம்மகிபர்
சீயோன் பதி மனுவேல் - உச்சித

2. அன்பினால் அழைப்பார், ஆறுதல் சொல்வார்
அதிபதி யேசையர்- அங்கே
இன்பங்கல்களுண்டு; இயேசுவின் சமுகம்
என்றென்றும் ஆறுதலே - உச்சித

3. கீதங்களோடு யேசுவைப் போற்றிக்
கெம்பீரமாய் நடப்போம் -அங்கே
கிளர் ஒளியுள்ள பட்டன ராசன்
கீதங்கள் நாம் அறிவோம்

545. உடலைக்கொடு உள்ளத்தைக் கொடு

உடலைக்கொடு உள்ளத்தைக் கொடு
உற்சாகமாய் உன்னைக்கொடு
ஒப்புக்கொடு சந்தோஷமாய்
இதிலே தேவன் பிரியமாய் இருக்கிறார்
இதிலே தான் மகிமை அடைகிறார்

1. ஒரு மணிநேரம் கொடுத்துப்பாரு
உன்னை தேவன் உயர்த்துவாரு
பத்தில் ஒரு பங்கு கொடுத்துப்பாரு
கடனில்லாமல் நடத்துவாரு

2. நன்றிப்பாடல் தினமும் பாடு
நல்ல தேவன் வருவார் உன்னோடு
என்ன நடந்தாலும் நன்றி கூறிடு
தீமையை நன்மையால் தினமும் வென்றிடு

3. தேசத்திற்காக தினம் மன்றாடு
பிறருக்காக பிரார்த்தனை செய்திடு - ஆளும்
தலைவர்களை ஜெபத்தில் நினைத்திடு
அமைதி பொங்கிடும் வன்முறை நீங்கிடும்

4. விசுவாசம் தானே உலகத்தை ஜெயிக்கும்
விசுவாசி என்றும் பதறான் பதறான்
அறிக்கை செய்திடுவோம் எரிகோ பிடித்திடுவோம்
செங்கடல் விலகிடும் யோர்தான் பிரிந்திடும்

5. நாடெங்கும் சென்றிடு நற்செய்தி சொல்லிடு
வீடுகள் தோறும் விடுதலை கூறிடு
சபைகளை நிரப்பிடு சாட்சிகள் எழுப்பிடு
இரட்சகர் வருகைக்கு ஆயத்தமாக்கிடு

Tamil Hymns

546. உண்மையாய் உம்மை நேசிக்க

உண்மையாய் உம்மை நேசிக்க
என் சுபாவத்தை மாற்றும்
உண்மையாய் உம்மை சேவிக்க
என் சுயத்தை மாற்றும்

உம் ரத்தத்தால் கழுவி விடும்
உம் சித்தத்தால் என்னை நிரப்பும்
உம் சத்தத்தால் என்னோடு பேசும்
துதி கீதத்தால் என் உள்ளம் நிரப்பும்
என் இயேசு ரட்சகா

1. பொல்லாதவர்கள் மேலுள்ள
என் எரிச்சலை மாற்றும்
பகைமை கசப்பு எல்லாம்
என்னை விட்டொழிய செய்யும்

2. என் மேன்மை பாராட்டுகள்
உம் பிரியமாய் மாறட்டும்
என் வாயின் வார்த்தைகள்
உம் பிரியமாய் மாறட்டும்

Tamil Hymns

547. உதவி வரும் கன்மலை நோக்கிப்

உதவி வரும் கன்மலை நோக்கிப் பார்கின்றேன்
வானமும் வையமும் படைத்தவரை நான் பார்கின்றேன் (2)

1. கால்கள் தள்ளாட விடமாட்டார்
காக்கும் தேவன் உறங்க மாட்டார் (2)
இஸ்ரவேலை காக்கிறவர்
என்னாளும் தூங்க மாட்டார் (2) – உதவி

2. கர்த்தர் என்னை காக்கின்றார்
எனது நிழலாய் இருகின்றார் (2)
பகலினிலும் இரவினிலும்
பாது காக்கின்றார் (2) – உதவி

3. கர்த்தர் எல்லா தீங்கிற்கும்
விலக்கி என்னைக் காத்திடுவார் (2)
அவர் எனது ஆத்துமாவை
அனுதினம் காத்திடுவார் (2) – உதவி

4. போகும் போதும் காக்கின்றார்
திரும்பும் போதும் காக்கின்றார் (2)
இப்போது எப்போது
என்னாளும் காக்கின்றார் (2) – உதவி

548. உதறித் தள்ளு தூக்கி எறிந்திடு

உதறித் தள்ளு தூக்கி எறிந்திடு
அழுத்தும் சுமைகளை (தினம்)
பற்றும் பாரங்களை – உன்னை

பொறுமையுடன் நீ ஓடு
நேசரின் மேல் கண் வைத்து ஓடு

1. மேகம் போன்ற திரள் கூட்டம்
பரிசு பெற்று நிற்கின்றனர்
முகம் மலர்ந்து கை அசைத்து
வா வா வா என்கின்றனர்

2. அவமானத்தை எண்ணாமல்
சுமந்தாரே சிலுவைதனை
அமர்ந்து விட்டார் அரியணையில்
அதிபதியாய் அரசனாய்

3. தமக்கு வந்த எதிர்ப்பெல்லாம்
தாங்கிக் கொண்ட இரட்சகரை
சிந்தையில் நாம் நிறுத்தினால்
சோர்ந்து நாம் போவதில்லை

549. உத்தமமாய் முன் செல்ல

உத்தமமாய் முன் செல்ல
உதவி செய்யும் யெகோவா
ஊக்கமதைக் கைவிடாமல்
காத்துக்கொள்ள உதவும் (2)

1. பலவிதமாம் சோதனைகள்
உலகத்தில் எமை வருத்தும்
சாத்தானின் அக்கினி அஸ்திரங்கள்
எண்ணா நேரத்தில் தாக்கும் (2)

2. தீர்மானங்கள் தோற்கா வண்ணம்
காத்துக்கொள்ள உதவும்
நேர்மையாக வாக்கைக் காக்க
வழி வகுத்தருள வேண்டும் (2)

3. இவ்வுலக மாயாபுரி
அழியப்போவது நிச்சயம்
இரட்சகனே நீர் இராஜாவாக
வருவது அதி நிச்சயம் (2)

4. தூதருடன் பாடலோடு
பரலோகில் நான் உலாவ
கிருபை செய்யும் இயேசு தேவா
உண்மை வழி காட்டியே (2)

550. உந்தன் ஆசி தாரும்

உந்தன் ஆசி தாரும்
எந்தன் இயேசு தேவா
தந்தையே நான் பணிகிறேன் (2)

பெலன் இல்லாதவள் நானே
பெலனைத் தாரும் தேவா (2)
உந்தன் பெலன் போல் பெலன் ஏது
என் பெலனும் சுகமும் நீரே (2)
(உந்தன்)

ஞானமற்றவள் நானே
ஞானம் தாரும் தேவா (2)
உம்மையன்றி வழி ஏது
என் கல்வி ஊற்றும் நீரே (2)
(உந்தன்)

551. உந்தன் ஆவி எந்தன் உள்ளம்

உந்தன் ஆவி எந்தன் உள்ளம் தங்க வேண்டும்
எந்த நாளும் உந்தன் நாமம் பாட வேண்டும்

1. உள்ளம் எல்லாம் அன்பினாலே
பொங்க வேண்டும்
கள்ளம் நீங்கி காலமெல்லாம்
வாழ வேண்டும்

2. பாவமான் சுபாவம்
எல்லாம் நீங்க வேண்டும்
தேவ ஆவி தேற்றி
என்றும் நடத்த வேண்டும்

3. ஜீவ தண்ணீர் நதியாகப்
பாய வேண்டும்
சிலுவை நிழலில் தேசமெல்லாம்
வாழ வேண்டும்

4. வரங்கள் கனிகள் எல்லா நாளும்
பெருக வேண்டும்
வாழ் நாளெல்லாம் பணிசெய்து
மடிய வேண்டும்

5. ஏதேன் தோட்ட உறவு என்றும்
தொடர வேண்டும்
இயேசுக் கிறிஸ்து குரலைக் கேட்டு
மகிழ வேண்டும்

552. உந்தன் ஆவியை நீர் ஊற்றும்

உந்தன் ஆவியை நீர் ஊற்றும்
உந்தன் விடுதலை நீர் தாரும்
உந்தன் ஆவியை நீர் ஊற்றும்
ஊற்றுமே

ஊற்றிட வேண்டுமே - என்னை
நிரப்பிட வேண்டுமே தந்திட
வேண்டுமே உம் அக்கினி
வானம் திறந்து நீர் ஊற்றும்
உம் வல்லமையை நீர் ஊற்றும்
என் தேசத்தை
நீர் மாற்றும் ஊற்றுமே

உந்தன் அக்கினியை நீர் ஊற்றும்
என்னை அக்கினி பிளம்பாய் மாற்றும்
அக்கினியை நீர் ஊற்றும் ஊற்றும்

வானம் திறந்து நீர் ஊற்றும்
உம் வல்லமையை நீர் ஊற்றும்
என் வாழ்க்கையை நீர் மாற்றும் ஊற்றுமே

Tamil Hymns

553. உந்தன் ஏக்கம் விருப்பம் எல்லாம்

1. உந்தன் ஏக்கம் விருப்பம் எல்லாம்
உன் தேவன் நிறைவேற்றுவார்
உனக்காக யாவையும் அவரே
செய்து முடிப்பார்

2. இஸ்ரவேவேலே நீ கலங்காதே
இஸ்ரவேவேலே நீ திகையாதே

3. யெகோவா உனக்குண்டு
யெகோவா துணையுண்டு

4. உன் ஏக்கம் அவர் அறிவார்
உன் துக்கம் மாற்றிடுவார்

5. ஏமாற்றம் அடைந்தாயோ
தடுமாற்றம் அடைந்தாயோ

6. வாசல்கள் அடைபட்டதோ
வாய்ப்புகள் தடைபட்டதோ

7. நெருக்கங்கள் நெருக்கியதோ
சுற்றங்கள் நொருக்கியதோ

8. செங்கடல் உ¡சை;சூழ்ந்ததோ
எரிகோவும் எதிர் நின்றதோ

554. உந்தன் கிருபைதான் என்னை வாழ

உந்தன் கிருபைதான் என்னை வாழ வைத்தது
உந்தன் கிருபைதான் என்னைப் பாட வைத்தது
என்னிலும் ஒன்றும் இல்லை ஐயா
எல்லாமே உந்தன் கிருபையய்யா

1. ஆயக்காரனைப் போல் இருந்தேன்
அணைத்துக் கொண்டீரே (2)
பாவியாகிய எந்தனின் மேல்
பாசம் வைத்தீரே

2. உண்மையுள்ளவன் என்று
கருதி ஊழியம் தந்தீரே (2)
ஆசரியக் கூட்டத்தோடு
சேர்த்துக் கொண்டீரே

3. வாங்குகின்ற மனிதனாக
வாடி நின்றேனே
அள்ளிக் கொடுக்கும்
மனிதனாக ஆசீர்வதித்தீரே

555. உந்தன் சித்தம் போல் நடத்தும்

உந்தன் சித்தம் போல் நடத்தும்
கர்த்தாவே நீர் நித்தம் என்னை
எந்தன் சித்தம் போல வேண்டாம்
என் பிதாவே என் யெகோவா

1. இன்பமான வாழ்க்கை வேண்டேன்
இனிய செல்வம் சீரும் வேண்டேன்
துன்பமற்ற சுகமும் வேண்டேன்
நின் தொண்டு செய்யும் அடியேன்

2. நேர் சமனாம் நின் வழியோ
சிறு துரமோ மாதொலைவோ
எவ்விதத் துயர்கடலோ
ஏழையின் வாழ்வு எதிலும்

3. அக்னி ஸ்தம்பம் மேக ஸ்தம்பம்
ஆம் இவற்றால் நீர் நடத்தி
அனுதினம் என்னோடிருப்பீர்
ஐயனே கடைக்கனியே

556. உந்தன் சிநேக வாக்குகள்

உந்தன் சிநேக வாக்குகள்
என்றும் மாறிடாததால்
என்னை என்றும் வழி நடத்தும்
உந்தன் ஜீவ பாதையில்

1. கோரமாம் பாவி என்னையும் உந்தன்
கொல்கொதா வரைக்கும் கொண்டு சென்றீர்
கழுவினீர் எந்தன் பாவ கறை
களைந்தேன் வாழ்க்கையின் துரோகங்களை

2. சிநேகத்தின் சிகரமாம் என் இயேசு ராஜன்
சிந்தினாரே கண்ணீர் சிலுவையிலே தண்ணீரும்
இரத்தமாய் வந்ததைக் கண்டேன்
என் கவலைகள் தீர்க்கவே நீர் மரித்தீர்

3. திருக்கரம் நீட்டி என்னை அழைத்த
உம் மகா சிநேகத்தை வாணிக்கவே
ஆயிரம் நாவுகள் போதாது ஸ்வாமி
எப்படி மறப்பேன் நான் உம்மையே

557. உந்தன் சுயமதியே நெறி என்று

உந்தன் சுயமதியே நெறி என்று
உகந்து சாயாதே - அதில் நீ
மகிழ்ந்து மாயாதே

1. மைந்தனே தேவ மறைப்படி யானும்
வழுத்தும்மதித னைக் கேளாய் - தீங்
கொழித் திதமாய் மனந் தாழாய் அருள் சூழாய்

2. சொந்தம் உனதுளம் என்று நீ பார்க்கிலோ
வந்து விளையுமே கேடு - அதின்
தந்திரப் போக்கை விட்டோடு கதி தேடு

3. துட்டர் தம் ஆலோசனைப்படியே தொடர்ந்
திட்ட மதாய் நடவாதே - தீயர்
கெட்ட வழியில் நில்லாதே அது தீதே

4. சக்கந்தக் காரர் இருக்கும் இடத்தொரு
மிக்க இருக்க நண்ணாதே - அவர்
ஐக்கிய நலம் என்றெண்ணாதே அதொண்ணாதே

5. நான் எனும் எண்ண மதால் பிறரை அவ
மானிப்பது வெகு பாவம் - அதின்
மேல் நிற்குமே தேவ கோபம் மனஸ்தாபம்

Tamil Hymns

558. உந்தன் தழும்புகள் என் ஆரோக்கியம்

உந்தன் தழும்புகள் என் ஆரோக்கியம்
உந்தன் சிலுவை எந்தன் மேன்மை
எந்தன் வாஞ்சை எல்லாம் தீர்க்கும்
எந்தன் பாதை செவ்வையாக்கும்

1. உந்தன் பாடுகள் என் ஆறுதல்
உந்தன் நாமம் என் துருகம்
உந்தன் அன்பு என்னுள் பாயும்
கரை புரண்டு பொங்கி ஓடும்

2. உந்தன் பாதம் எந்தன் வாஞ்சை
உந்தன் கரங்கள் எந்தன் தஞ்சம்
உம்மைத் தேடும் எந்தன் ஆத்மா
உம் சமூகம் நித்தம் நாடும்

3. உந்தன் மாம்சம் எந்தன் போஜனம்
உந்தன் இரத்தம் எந்தன் பானம்
உந்தன் சித்தம் எந்தன் பாக்கியம்
உந்தன் கிருபை மட்டும் போதும்

Tamil Hymns

559. உந்தன் துணையிவரே என்றும்

உந்தன் துணையிவரே
என்றும் காத்திடுவார் - இவர்
கலங்காதே பயப்படாதே
மீட்பர் தாங்கிடுவார்

பொன் இயேசு இராஜன் இவர்
எந்நாளும் துணையிவரே
அல்லேலூயா ஆமென்

1. உன்னைத் தெரிந்தவரே
உன்னை நடத்திடுவார் என்றும்
அழைப்பதனை அறிந்துணர்ந்து
கிரியை செய்திடுவாய் - பொன்

2. உன்னை பெலப்படுத்தி
ஜெயமாய் நடத்திடுவார் இவர்
முன்னேறிச் சுதந்தரிப்பாய்
தேவ வாக்குகளை- பொன்

3. அன்பின் தேவனிவர்
உயர்த்தி தாங்கிடுவார் - என்றும்
தவறியே நீ விழுந்திடாமல்
காத்து தாங்கிடுவார் - பொன்

560. உந்தன் நாமத்தில் எல்லாம் கூடும்

உந்தன் நாமத்தில் எல்லாம்
கூடும் எல்லாம் கூடுமே
உந்தன் சமுகத்தில் எல்லாம்
கூடும் எல்லாம் கூடுமே

உம்மால் கூடும் எல்லாம் கூடும்
கூடாதது ஒன்றுமில்லையே - உம்மால்

1. உந்தன் வார்த்தையால்
புயல் காற்று ஓய்ந்தது
உந்தன் பார்வையால் திருந்தினார் பேதுரு

2. தாபித்தாள் மரித்தாள்
ஜெபத்தால் உயிர்த்தாள்
திமிர்வாத ஐநேயா சுகமாகி நடந்தான்

3. மீனின் வாயிலே
காசு வந்ததே
கழுதையின் வாயிலே பேச்சு வந்ததே

4. வாலிபன் ஐதீகு தூக்கத்தால் விழுந்தான்
இறந்தும் எழுந்தான் பவுல்
அன்று ஜெபித்ததால்

5. எலிசவின் சால்வையால்
யோர்தான்பிரிந்தது
எரிகோவின் உப்புநீர் ஆரோக்கியாமானது

6. கோடாரி மிதந்தது
எலிசாவின் வார்த்தையால்
குஷ்டம் மறைந்தது
யோர்தானில் குளித்தால்

7. காலூன்றி நில்லென்று
கத்தினார் பவுல் அன்று
முடவன் நடந்தான் லிஸ்திரா நகரிலே

Tamil Hymns

561. உந்தன் நாமம் மேன்மை போல்

உந்தன் நாமம் மேன்மை போல்
வேறொரு நாமம் இல்லையே -2
நீரே என் தேவன் - (2)
வல்லமைஉள்ளவரே....
நீரே என் தேவன் (2)

ஆலோசனை கர்த்தரே (2)
உம்மை ஆராதிக்கிறேன் (3) -2
இயேசுவே
அன்பரே நல்லவரே வல்லவரே
என் ஆண்டவரே -2

562. உந்தன் பிரசன்னத்தால் வழி நடத்தும்

உந்தன் பிரசன்னத்தால் வழி நடத்தும்
சுத்திகரியும், பெலப்படுத்தும்
உந்தன் பிரசன்னத்தால் வழி நடத்தும்
சுத்திகரியும், பெலப்படுத்தும்

தூய ஆவியானவரே, அன்பின் ஆவியானவரே
தூய ஆவியானவரே, அன்பின் ஆவியானவரே

1. மனிதர்களால் வாழ்வில் எனக்கு
என்றும் போராட்டமே -2
உறவுகளால் வாழ்வில் எனக்கு
என்றும் மனதில் சஞ்சலமே -2

2. தனிமையில் வாடும் எனக்கு
உம் பிரசன்னம் ஆனந்தமே
கேள்விகள் உள்ள எனக்கு
உம் வசனம் பேர் ஆறுதலே

3. உந்தன் பிரசன்னத்தால் வழி நடத்தும்
சுத்திகரியும், பெலப்படுத்தும்
உந்தன் பிரசன்னத்தால் வழி நடத்தும்
சுத்திகரியும், பெலப்படுத்தும்

563. உந்தன் வல்லமையால்

உந்தன் வல்லமையால் மகிழ்ந்திருக்கின்றேன்
உந்தன் தயவினால் அசைவுராதிருப்பேன்
நீர் போதுமே என் நேசரே
உம்மால் தானே மேன்மை வந்தது

1. கேட்டேன் வாய்விட்டு
நீர் மறுக்கவில்லையே
உள்ளம் விரும்பினதை
எனக்குத் தந்தீரே - என்

2. வெற்றி தந்ததால்
பெரியவனானேன் - நீர்
மேன்மை வந்ததால் என்
ஏழ்மை மாறியது

3. வாழ ஓடி வந்தேன் சுகம் தேடி வந்தேன்
நீண்ட வாழ்வோடு நித்திய ஜீவன் தந்தீர்

4. பூரிப்படைகின்றேன் உந்தன் பேரன்பால்
பெலன் பெறுகின்றேன்
உம்மை நம்புவதால்

5. என்றும் நிலைத்திருக்கும் ஆசீர்தருகின்றீர்
உம் சமுகத்தின் மகிழ்ச்சியினால் திருப்த்தியாக்குகிறீர்

Tamil Hymns

564. உமக்காகத் தானே ஐயா

உமக்காகத் தானே ஐயா
நான் உயிர் வாழ்கிறேன் ஐயா
இந்த உடலும் உள்ளமெல்லாம்
அன்பர் உமக்காகத் தானே ஐயா

1. கோதுமை மணிபோல் மடிந்திடுவேன்
உமக்காய் தினமும் பலன் கொடுப்பேன்
அவமானம் நிந்தை சிலுவைதனை
அனுதினம் உமக்காய் சுமக்கின்றேன்

2. எனது ஜீவனை மதிக்கவில்லை
ஒரு பொருட்டாய் நான் கணிக்கவில்லை
எல்லாருக்கும் நான் எல்லாமானேன்
அனைவருக்கும் நான் அடிமையானேன்

3. எத்தனை இடர்கள் வந்தாலும்
எதுவும் என்னை அசைப்பதில்லை
மகிழ்வுடன் தொடர்ந்து ஓடுகிறேன்
மனநிறைவோடு பணி செய்வேன்

4. பண்படுத்தும் உம் சித்தம் போல
பயன்படுத்தும் உம் விருப்பம் போல
உம் கரத்தில் நான் புல்லாங்குழல்
ஒவ்வொரு நாளும் இசைத்திடுமே

5. எனது பேச்செல்லாம் உமக்காக
எனது செயல் எல்லாம் உமக்காக
எழுந்தாலும் நடந்தாலும் உமக்காக
அமர்ந்தாலும் படுத்தாலும் உமக்காக

Tamil Hymns

565. உமக்குப் பிரியமானதைச் செய்ய

1. உமக்குப் பிரியமானதைச் செய்ய
எனக்குக் கற்றுத் தாரும் தெசய்வமே
நீரே என் தேவன் உம் நல்ல
பரிசுத்த ஆவியானவர் செம்மையான
வழியிலே நடத்த வேண்டுமே

மேகஸ்தம்பமே அக்கினி ஸ்தம்பமே
தேற்றும் தெய்வமே துணையாளரே

2. உம்மை நோக்கி என் கைகளை
உயர்த்தி உயர்த்தி மகிழ்கின்றேன் ஐயா
வறண்ட நிலம் தவிப்பது போல்
என் ஆன்மா உமக்காக ஒவ்வொரு நாளும்
ஏங்கி ஏங்கி தவிக்கின்தையா

எனது ஏக்கமே எனது பிரியமே
எனது பாசமே எனது ஆசையே

3. உமது அன்பை அதிகாலையில்
காணச்செய்யும் கருணை நேசரே
உம்மையே நம்பியுள்ளேன்
நீர் விரும்பும் உம் நல்ல பாதைகளை
தினந்தோறும் காட்டவேண்டும் திவ்யநாதரே

அன்பின் சிகரமே ஆருயிரே
அணைக்கும் தெய்வமே ஆறுதலே

Tamil Hymns

556. உமக்கு மகிமை தருகிறோம்

1. உமக்கு மகிமை தருகிறோம்
உம்மில்தான் மகிழ்ச்சி அடைகிறோம்
அல்லேலூயா அல்லேலூயா

2. தாழ்மையில் அடிமையை
நோக்கிப் பார்த்தீரே
உயர்த்தி மகிழ்ந்தீரே
ஒரு கோடி ஸ்தோத்திரமே

3. வல்லவரே மகிமையாய்
அதிசயம் செய்தீர்
உந்தன் திருநாமம்
பரிசுத்தமானதே

4. வலியோரை அகற்றினீர்
தாழ்ந்தோரை உயர்த்தினீர்
பசித்தோரை நன்மைகளால்
திருப்தியாக்கினீர்

5. கன்மலையின் வெடிப்பில் வைத்து
கரத்தால் மூடுகிறீர்
என்ன சொல்லிப் பாடுவேன்
என் இதய வேந்தனே

Tamil Hymns

567. உம் அருள் பெற இயேசுவே

1. உம் அருள் பெற, இயேசுவே,
நான் பாத்திரன் அல்லேன்;
என்றாலும் தாசன் பேரிலே
கடாக்ஷம் வையுமேன்.

2. நீர் எனக்குள் பிரவேசிக்க
நான் தக்கோன் அல்லவே
நீர் என் பாழ் நெஞ்சை ஆசிக்க
நிமித்தம் இல்லையே.

3. ஆனாலும் வாரும் தயவாய்,
மா நேச ரக்ஷகா;
என்றைக்கும் தங்கும் ஐக்கியமாய்
என் பாவ நாசகா.

4. நற்கருணையாம் பந்திக்கும்
அபாத்திரன் ஆயினேன்
நற் சீரைத் தந்து என்னையும்
கண்ணோக்கிப் பாருமேன்.

5. தெய்வீக பான போஜனம்
அன்பாக ஈகிறீர்;
மெய்யான திவ்விய அமிர்தம்
உட்கொள்ளச் செய்கிறீர்.

6. என் பக்தி, ஜீவன் இதினால்
நீர் விர்த்தியாக்குமேன்;
உந்தன் சரீரம் இரத்தத்தால்
சுத்தாங்கம் பண்ணுமேன்.

7. என் ஆவி, தேகம், செல்வமும்
நான் தத்தம் செய்கிறேன்;
ஆ இயேசுவே, சமஸ்தமும்
பிரதிஷ்டை செய்கிறேன்.

568. உம் அவதாரம் பாரினில்

1. உம் அவதாரம் பாரினில்
கண்ணுற்ற பக்தனாம் யோவான்;
கர்த்தா, உம் சாந்த மார்பினில்
அன்பாகச் சாயவும் பெற்றான்.

2. சாவுறும் தன்மை தேவரீர்
தரித்தும், திவ்விய வாசகன்,
அநாதி ஜோதி ரூபம் நீர்,
என்றே தெரிந்துகொண்டனன்.

3. கழுகைப் போல் வான் பறந்தே
மா ரகசியம் கண்ணோக்கினான்;
நீர் திவ்விய வார்த்தையாம் என்றே
மெய்யான சாட்சி கூறினான்.

4. உம் அன்பு அவன் உள்ளத்தில்
பெருகி பொங்கி வடிந்து,
அவன் நல் ஆகமங்களில்
இன்னும் பிரகாசிக்கின்றது.

5. சீர் கன்னி மைந்தா, இயேசுவே,
பூலோக ஜோதியான நீர்,
பிதா, நல்லாவியோடுமே
என்றென்றும் துதி பெறுவீர்.

569. உம் அன்பால் என்னை நிரப்பும்

உம் அன்பால் என்னை நிரப்பும்
என் இயேசுவே (2)
உம் அன்பால் என்னை நிரப்பும்
உம் பாசம் மட்டும் எனைத் தேற்றுமே
உம் அன்பால் என்னை நிரப்பும்

1. நிழலாகத் தொடரும் பல துன்பங்கள் இங்கு
நீரன்றி யாரென்னை காக்கும் இவ்வேளை
உம்மண்டை சேர நான் வேண்டினேன்
உம்முகம் காண நான் ஏங்கினேன்

2. ஆசைகள் என்னில் ஓராயிரம் உண்டு
நேசமாய் உம் சித்தம் நிறைவேற்றும் இன்று
என் வாழ்வில் எந்நாளும் நீர் தங்க வேண்டும்
உம் வார்த்தையால் என்னில் நீர் பேச வேண்டும்

Tamil Hymns

570. உம் அன்பு ஒன்றே போதும் யேசப்பா

உம் அன்பு ஒன்றே போதும் யேசப்பா
என் ஜீவன் உம்மில் மகிழும் யேசப்பா
வாழ் நாள் முழுதும் உம்மைத் துதித்திடுவேன்
உம் நாமம் என்றும் உயர்த்திடுவேன்

அன்பு பாசத்திற்கு ஏங்கி நின்றேன்
வாழ்க்கை ஓரத்துக்கே நெருக்கினதே
உள்ளம் பாரத்தாலே சிதறியதே
உம் பாசக்கரம் நீட்டினீரே
அப்பா உம் சிலுவை இந்த பாவிக்காகவே
ராஜா சிந்திய ரத்தம் அது எனக்காகவே

என் விண்ணப்பத்தை கேட்டவரே
என் கண்ணீரை காண்பவரே
உம் மார்போடு அணைத்துக் கொண்டீர் ஐயா
எல்லா தீங்கிற்கும் விலக்கி வைத்தீர்
அப்பா உம் சிலுவை இந்த பாவிக்காகவே
ராஜா சிந்திய ரத்தம் அது எனக்காகவே

Tamil Hymns

571. உம் இரத்தமே உம் இரத்தமே சுத்தம்

உம் இரத்தமே உம் இரத்தமே
சுத்தம் செய்யுமே
உம் இரத்தமே என் பானமே

1. பாய்ந்து வந்த நின் ரத்தமே
சாய்ந்தோர்கட்கு அடைக்கலமே
பாவிகள் நேசர் பாவி என்னை
கூவி கழுவினீர் என்னை

2. நெசர் சிலுவை சத்தியம்
நாசம் அடைவோர்க்குப் பைத்தியம்
இரட்சிப்படைவோர் சத்தியம்
நிச்சயம் காப்பார் நித்தியம்

3. நின் சிலுவையில் சிந்திய
வன்மையுள்ள இரத்தத்தினால்
என் பாவத்தை பரிகரித்தீர்
அன்புள்ள தேவ புத்திரா

4. பன்றி போல் சேறில் புரண்டேன்
நன்றி இல்லாமல் திரிந்தேன்
கரத்தால் அரவணைத்தீர்
வரத்தால் ஆசீர்வதித்தீர்

5. விழுங்கப் பார்க்கும் சாத்தானை
மழுங்க வைத்தீர் அவனை
புழங்காமல் போக்கினானே
களங்கமில்லா கர்த்தரே

6. ஐயனே உமக்கு மகிமையும்
துய்யனே துதி கனமும்
மெய்யனே எல்லா வல்லமையும்
உய்யோனே உமக்கல்லேலூயா

Tamil Hymns

572. உம் கிருபை தான் என்னைக் கண்டது

உம் கிருபை தான் என்னைக் கண்டது
உம் கிருபை தான் என்னைக் காத்தது
உம் கிருபை தான் என்னை நடத்தியது

கிருபை கிருபை கிருபையே

1. கஷ்டங்கள் என்னை நெருங்கினாலும்
கவலையால் நான் கலங்கினாலும்
துன்பங்கள் என்னை துவட்டினாலும்
காத்தது உங்க கிருபையே

2. சாத்தான் என்னை துரத்தினாலும்
பாவம் என்னை நெருங்கினாலும்
உலகம் என்னை மயக்கினாலும்
மீட்டது உங்க கிருபையே

573. உம் உண்மை பெரிதே

1. தேவ பிதாவே! உம் உண்மை பெரிதே
மனம் மாற மாந்தன் அல்லவே நீர்
மாறா உம் மனதுருக்கம் நிலைக்கும்
இன்று போல் என்றும் நீர் நிலைப்பீரே

உம் உண்மை பெரிதே (2)
காலை தோறும் புதுக்கிருபையே
என் தேவை யாவும் உம் கரம் தந்ததே
உம் உண்மை பெரிதே என் மீதிலே

2. வெயிலும், பனியும், விதைப்பறுப்பும்,
சூரிய சந்திர விண்மீன்களும்,
படைப்பனைத்துடன் சாட்சி பகரும்
உம் பேருண்மை, இரக்கம், அன்பிற்கே

3. சமாதானத்துடன் பாவ மன்னிப்பும்
மகிழ் பிரசன்னமும் வழிகாட்ட
இன்றைய பெலனும், நாளை நம்பிக்கை,
ஆசி பல்லாயிரம் நான் பெற்றேனே

574. உம் சமூகத்தை வாஞ்சிக்கிறேன்

உம் சமூகத்தை வாஞ்சிக்கிறேன்
உம் சமூகத்தை விரும்புகிறேன்
உம் சமூகத்தை தேடுகிறேன்
உம் சமூகத்தை நேசிக்கிறேன்

1. உம் சமூகத்தால் என்னை மூடிடுமே
உம் சமூகத்தால் என்னை தேற்றிடுமே
உம் சமூகத்தை முன்னே அனுப்பிடுமே
உம் சமூகத்தால் என்னை சூழ்ந்திடுமே

2. அக்கினி ஸ்தம்பமாய்
என் மேல் இறங்கிடுமே
மேக ஸ்தம்பமாய் என் மேல் நிழலிடுமே
மறுரூப மலையே இறங்கி வந்திடுமே
மகிமையின் மேகமே என்னை கவர்ந்திடுமே

Tamil Hymns

575. உம் சமூகமே என் பாக்கியமே

உம் சமூகமே என் பாக்கியமே
ஓடி வந்தேன் உம்மை நோக்கிட
உம் குரல் கேட்க உம் குரல் கேட்க
ராஜா இயேசு ராஜா இயேசு ராஜா

1. ஒரு கோடி செல்வங்கள் எனைத்
தேடி வந்தாலும் உமக்கது ஈடாகுமோ
செல்வமே, ஒப்பற்ற செல்வமே
நல் உணவே.. நாளெல்லாம் உம் நினைவே

2. என் பாவம் நீங்கிட எடுத்தீரே சிலுவையை
என்னே உம் அன்பு
தென்றலே கல்வாரி தென்றலே
அசைவாடும் ஆட்கொள்ளும் என்னில்
ஆளுகை செய்யும்

3. எத்தனையோ எழில்மிகு
காட்சிகள் தந்தாலும்
எல்லாமே மாயை ஐயா -2
தண்ணீரே, ஊற்றுத் தண்ணீரே உம்
நதியில் ஒவ்வொரு நாளும் மூழ்கணுமே

576. உம் சமூகம் வந்து நிற்கிறேன் நான்

உம் சமூகம் வந்து நிற்கிறேன் நான்
உம் சமூகம் வந்து நிற்கிறேன்
உம் சாயலாக மாறத்தானை யா இன்று
உந்தன் முன்பாய் வந்து நிற்கிறேன்

1. மண்ணான என்னை நீர் குனிந்தெடுத்தீர்
விண்ணவர் உந்தன் சுவாசம் என க்குள் வைத்தீர்
உம் சாயலாக தானே என்னை உண்டாக்கினீரே
உம் ரூபமாக தானே என்னை உருவாக்கினீர்

2. அனை த்தையும் ஆளுகை செய்ய என்னை படைத்தீர்
அன்பாய் நீர் ஒரு கனியை தொடாதேன்றீர்
உம் வார்த்தை மீறி நானும் பாவம் செய்ததாலே - நானே
சாபமாகி போனே ன் தேவ சாயலை இழந்தேன் நானே

3. சாபமான என்னை நீர் பாவத்தில் விடவில்லை
என் பாவம் போக்க பரலோக தேவன் பூமிக்கு வந்தீர்
என் அக்கிரமங்கள் ஏற்றீர் என் மீறுதலை சுமந்தீர்
என்னை சாயலாக மாற்ற உம் ஜீவனை யும் தந்தீர் - இயேசுவே

4. குமாரனின் சாயலுக்குள் ஒப்பாயிருக்க
முன்குறித்தீரே என்னை தெரிந்து கொண்டீரே
என்னை நீதிமானாக மாற்றுபவரும் நீரே
உந்தன் மகிமையில் என்னை கொண்டு சேர்ப்பவரும் நீரே

577. உம் சார்பினில் நடத்தும்

1. உம் சார்பினில் நடத்தும், தந்தையே;
உம் துணையின்றி தவறுவோமே,
சந்தேகம் சூழும், துக்கம் மிஞ்சிடும்;
மெய் வழி கிறிஸ்துமூலம் நடத்தும்.

2. சத்தியத்தில் நடத்தும், தந்தையே;
உம் துணையின்றி கேடு சூழுமே;
வாணாள் சிற்றின்ப மாய்கையால் கெடும்,
சற்றும் நம்பிக்கையற்றே வாடிடும்.

3. சன்மார்க்கத்தில் நடத்தும், தந்தையே;
உம் துணையின்றி வழி காணோமே;
கார்மேகம் மூடி இருள் சூழுவோம்,
உம்மாலே சேதமின்றிச் செல்லுவோம்.

4. விண் ஓய்வுக்கு நடத்தும், தந்தையே;
காடு மேடான பாதை என்றுமே,
உம் சித்தம்போலே துன்பம் இன்பமும்
தந்தடியாரை வானோர் ஆக்கிடும்.

578. உம் சித்தம் செய்வது தான்

உம் சித்தம் செய்வது தான்
என் வாழ்வின் நோக்கமையா
வேறே ஒன்றும் இல்லை
இவ்வுலகில் நீர்தானையா

இயேசையா -2 உம் பிள்ளை நானையா

1. தனிமையாய் நானும் எங்கே போவேன்
தகப்பனே நீர் தானே என் தஞ்சம்

2. கண்மணிபோல என்னை காத்தீரே
கால்கள் வழுவாமல் தாங்கினீரே

3. உம்பாதம் நானென்றும் சரணடைந்தேன்
உமக்காக என்னையே அர்ப்பணித்தேன்

579. உம் சித்தம் போல் என்னை என்றும்

உம் சித்தம் போல் என்னை என்றும்
தற்பரனே நீர் நடத்தும்
என் சித்தமோ ஒன்றும் வேண்டாம்
என் பிரியனே என் இயேசுவே

1.திரு மார்பில் நான் சாய்ந்திடுவேன்
மறு பிரயாண காலம் வரை
பரனே உந்தன் திருசித்தத்தை
அறிவதல்லோ தூயவழி

2.வழிப் பிரயாணி மூடனைப்போல்
வழி தவரு நடந்திடவே
வழி இதுவே என்று சொல்லும்
இனிய சத்தம் தொனித்திடட்டும்

3.அக்கினிஸ்தம்பம் மேகஸ்தம்பம்
அடியார் மீது ஜொலித்திடட்டும்
இரவு பகல்கூட நின்று
என்றென்றுமாய் நடத்திடுமே

4.இடுக்கமே என் அப்பமுமாய்
கண்ணீரோ என் தண்ணீருமாய்
பருகிடினும் பயப்படேன் நான்
என்றென்றும் உம் சித்தம் போதும்

580. உம் நாமம் உயரணுமே

உம் நாமம் உயரணுமே
உம் அரசு வரணுமே
உம் விருப்பம் நடக்கணுமே
அப்பா பிதாவே அப்பா (4)

1. அன்றாட உணவை, ஒவ்வொரு நாளும்
எனக்குத் தாரும் ஐயா (2)

2. பிறர்குற்றம் மன்னித்தோம், ஆதலால் எங்கள்
குறைகளை மன்னியுமே

3. சோதிக்கும் சாத்தானின் சூழ்ச்சியிலிருந்து
விடுதலை தாருமையா

4. ஆட்சியும் வல்லமை மாட்சியும் மகிமை
என்றென்றும் உமக்கே சொந்தம்

5. ஜாதிகள் ஒழியணும் சண்டைகள் ஓயணும்
சமாதானம் வரணுமே

6. ஊழியர் எழும்பணும் ஓடி உழைக்கணும்
உம் வசனம் சொல்லணுமே

7. உமக்காய் வாழணும், உம்குரல் கேட்கணும்
உம்மோடு இணையணுமே

8. அனுதின சிலுவையை, ஆர்வமாய் சுமந்திட
கிருபை தாருமையா

9. ஆவியில் நிறைந்து ஜெபிக்க துதிக்க
ஆர்வம் தாருமையா

10. என் சொந்த ஜனங்கள் இயேசுவை அறியணும்
இரட்சிப்பு அடையணுமே

11. அரசியல் தலைவர்கள் M.L.A., M.P.க்கள்
உம்மை அறியணுமே, உம் நாமம் சொல்லணுமே

Tamil Hymns

581. உம் நாமம் சொல்ல சொல்ல

உம் நாமம் சொல்லச் சொல்ல
என் உள்ளம் மகிழுதையா
என் வாழ்வில் மெல்ல மெல்ல
உம் இன்பம் பெருகுதையா

1. மாணிக்கத் தேரோடு காணிக்கை தந்தாலும்
உமக்கது இணையாகுமோ ?
இந்த உலகமே வந்தாலும் உறவுகள் நின்றாலும்
உம்க்கது ஈடாகுமோ ஆ–ஆ

2. பால் என்பேன் தேன் என்பேன்
தெவிட்டாத அமுதென்பேன்
உம் நாமம் என்ன என்பேன்
மறை என்பேன் நிறை என்பேன்
நீங்காத நினைவென்பேன்
உம் நாமம் என்ன என்பேன்

582. உம் நாமம் பாடணுமே ராஜா

உம் நாமம் பாடணுமே ராஜா
உம்மையே துதிக்கணுமே
உம்மைப்போல் வாழணுமே

1. ஒவ்வொரு நாளும் உம்திரு பாதம்
ஓடி வர வேணுமே
உமது வசனம் தியானம் செய்து
உமக்காய் வாழணுமே

2. இரவும் பகலும் ஆவியிலே நான்
நிரம்பி ஜெபிக்கணுமே
ஜீவ நதியாய் பாய்ந்து பிறரை
வாழ வைக்கணுமே

3. பேய்கள் ஓட்டி நோய்களைப் போக்கி
பிரசங்கம் பண்ணணுமே
சிலுவை அன்பை எடுத்துச் சொல்லி
சீடர் ஆக்கணுமே

583. உம் நாமம் வாழ்க ராஜா

உம் நாமம் வாழ்க ராஜா என் தந்தையே (2)
உம் அரசு வருக ராஜா என் தந்தையே (2)

வாழ்க ராஜா அல்லேலுயா (4)
அல்லேலுயா ஓசன்னா (4)

1. யேகோவா யீரே
உம் நாமம் பரிசுத்தப் படுவதாக (2)
யேகோவா நிசியே எந்நாளும் வெற்றி தருவீர்

2. யேகோவா ரூவா
உம் நாமம் பரிசுத்தப்படுவதாக (2)
யேகோவா ரஃபா சுகம் தருபவர் நீர்

3. ராஜாதி ராஜா நீரே
உம் நாமம் பரிசுத்தப்படுவதாக (2)
உயிரோடு எழுந்தவரே வேகமாய் வாருமையா

மாரநாதா அல்லேலூயா

Tamil Hymns

584. உம் பாதம் பணிந்தேன்

உம் பாதம் பணிந்தேன் எந்நாளும் துதியே
உம்மையன்றி யாரைப்பாடுவேன் - ஏசையா
உந்தன் அன்பு உள்ளம் பொங்குதே

1. பரிசுத்தமே பரவசமே
பரனேசருளே வரம் பொருளே
தேடினதால் கண்டடைந்தேன்
பாடிட பாடல்கள் ஈந்தளித்தீர்

2. புது எண்ணெய்யால் புது பெலத்தால்
புதிய கிருபை புது கவியால்
நிரப்பி நிதம் நடத்துகின்றீர்
நூதன சாலேமில் சேர்த்திடுவீர்

3. நெருக்கத்திலே உம்மை அழைத்தேன்
நெருங்கி உதவி எனக்களித்தீர்
திசைக் கெட்டெங்கும் அலைந்திடாமல்
தீவிரம் வந்தென்னைத் தாங்குகின்றீர்

4. என் முன் செல்லும் உம் சமூகம்
எனக்கு அளிக்கும் இளைப்பாறுதல்
உமது கோலும் உம் தடியும்
உண்மையாய் என்னையும் தேற்றிடுதே

5. கனிசெடி நீர் நிலைத்திருக்கும்
கொடியாய் அடியேன் படர்ந்திலங்க
கினை நறுக்கிக் கிளை பிடுங்கி
கர்த்தரே காத்தென்னை சுத்தம் செய்தீர்

6. என் இதய தெய்வமே நீர்
எனது இறைவா ஆருயிரே
நேசிக்கிறேன் இயேசுவே உம்
நேசமுகம் என்று கண்டிடுவேன்

7. சீருடனே பேருடனே
சிறந்து ஜொலிக்கும் கொடுமுடியில்
சீக்கிரமாய் சேர்த்திடுவீர்
சீயோனை வாஞ்சித்து நாடிடுவேன்

Tamil Hymns

585. உம் பிரசன்னம் நாடி வந்தேன்

உம் பிரசன்னம் நாடி வந்தேன்
கிருபையினால் நோக்கிடுமே
உம் இரத்தத்தால் என்னை கழுவிடுமே
உம் பிள்ளையாய் என்னை மாற்றிடுமே

என் இயேசுவே என் இராஜனே
நான் ஏங்குகிறேன் உம் சமூகத்திற்கே

1. உம் வசனம் தியானிக்கையில்
இதயம் அதில் ஆறுதலே
மனிதர்கள் என்னை பகைத்தாலும்
அஞ்சிடேனே நீர் இருக்கையிலே --- என் இயேசுவே

2. வாழ்க்கையின் பாரங்கள் நெருக்கையிலே
உம் பிரசன்னம் என் அடைக்கலமே
திக்கற்ற நிலைமையில் இருந்தாலும்
திடன் கொள்ளுவேன் உம் சமூகத்திலே --- என் இயேசுவே

Tamil Hymns

586. உம் பிரசன்னம் என்ன ஆனந்தம்

உம் பிரசன்னம் என்ன ஆனந்தம்
உம் சமூகம் எந்தன் வாஞ்சை (2)
ஸ்தோத்திரம் என் தேவனே
ஸ்தோத்திரம் என் தூயோனே (2)

1 அபிஷேகத் தைலம் ஆண்டவரே
அடியோர்களுக்கு அருளுமே (2)
பகைவர் மத்தியில் மகிழ்ந்திருக்க (2)
பரிசுத்த தேவா அபிஷேகியும்

2 மாமிசமான யாவர் மேலும்
உன்னத ஆவியை ஊற்றிடுமே (2)
தாகமுள்ள அடியார்மேல் (2)
ஊற்றிடுமே உந்தன் அபிஷேகமே

3 அபிஷேகத்தால் என்னை நிரப்பிடும்
தேவா உம் அன்பினால் பெலப்படுத்தும் (2)
உம் சித்தம் போல் நடத்திடும் (2)
உந்தன் பாதையில் வழிநடத்தும்

Tamil Hymns

587. உம் பீடத்தை சுற்றி சுற்றி

உம் பீடத்தை சுற்றி சுற்றி
நான் வருகிறேன் தெய்வமே
கறைகளெல்லாம் நீங்கிட
என் கைகளைக் கழுவுகிறேன்

என் தெய்வமே, இயேசுநாதா
இதயமெல்லாம் மகிழுதையா.

1. உரத்த குரலில் நன்றி பாடல்
பாடி மகிழ்கிறேன்
வியத்தகு உம் செயல்களெல்லாம்
எடுத்து உரைக்கிறேன்

2. உந்தன் மாறாத பேரன்பு
என் கண்முன் இருக்கிறது
உம் திருமுன்னே உண்மையாக
வாழ்ந்து வருகிறேன்

3. கர்த்தாவே உம்மையே நம்பியுள்ளேன்
தடுமாற்றம் எனக்கில்லை
உந்தன் சமூகம், உந்தன் மகிமை
உண்மையாய் ஏங்குகிறேன்

Tamil Hymns

588. உன் புகழைப் பாடுவது என்

உன் புகழைப் பாடுவது என்
வாழ்வின் இன்பமைய்யா
உன் அருளைப் போற்றுவது என்
வாழ்வின் செல்வமைய்யா

1. துன்பத்திலும் இன்பத்திலும் நல்
தந்தையாய் நீ இருப்பாய்
கண்ணயரக் காத்திருக்கும் நல்
அன்னையாய் அருகிருப்பாய் (2)
அன்பு எனும் அமுதத்தினை நான்
அருந்திட எனக்களிப்பாய்
உன்நின்று பிரியாமல்
நீ என்றும் அணைத்திருப்பாய் (2)

2. பல்லுயிரை படைத்திருப்பாய் நீ
என்னையும் ஏன் படைத்தாய்
பாவத்திலே வாழ்ந்திருந்தும் நீ
என்னையும் ஏன் அழைத்தாய் (2)
அன்பினுக்கு அடைக்கும் தாழ்
ஒன்று இல்லை என்றுணர்ந்தேன்
உன் அன்பை மறவாமல்
நான் என்றும் வாழ்ந்திருப்பேன் - 2

589. உம் ராஜ்யம் வருங்காலை கர்த்தரே

1. உம் ராஜ்யம் வருங் காலை கர்த்தரே
அடியேனை நினையும் என்பதாய்
சாகும் கள்ளன் விஸ்வாச நோக்காலே
விண் மாட்சி கண்டு சொன்னான் தெளிவாய்.

2. அவர் ஓர் ராஜா என்று சொல்லுவார்
எவ்வடையாளமும் கண்டிலாரே;
தம் பெலனற்ற கையை நீட்டினார்;
முட்கிரீடம் நெற்றி சூழ்ந்து பீறிற்றே.

3. ஆனாலும், மாளும் மீட்பர் மா அன்பாய்
அருளும் வாக்கு, ‘இன்று என்னுடன்
மெய்யாய் நீ பரதீஸிலிருப்பாய்’
என்பதுவாம் விஸ்வாசத்தின் பலன்.

4. கர்த்தாவே, நானும் சாகும் நேரத்தில்,
‘என்னை நினையும்’ என்று ஜெபித்தே
உம் சிலுவையை, தியானம் செய்கையில்,
உம் ராஜியத்தைக் கண்ணோக்கச் செய்யுமே.

5. ஆனால், என் பாவம் நினையாதேயும்,
உம் ரத்தத்தால் அதைக் கழுவினீர்;
உம் திரு சாவால் பாவமன்னிப்பும்
ரட்சிப்பும் எனக்காய்ச் சம்பாதித்தீர்.

6. ’என்னை நினையும்’ , ஆனால், உமக்கும்
என்னால் உண்டான துன்பம் கொஞ்சமோ?
சிலுவை, நோவு, ரத்த வேர்வையும்,
சகித்த நீர், இவை மறப்பீரோ?

7. ’என்னை நினையும்’ , நான் மரிக்கும் நாள்
‘நீயும் என்னோடு தங்குவாய் இன்றே
நற்பரதீஸில்’ என்னும் உம் வாக்கால்
என் ஆவி தேர்ந்து மீளச் செய்யுமே.

Tamil Hymns

590. உம்மண்டை தேவனே நான் சேரட்டும்

1. உம்மண்டை தேவனே நான் சேரட்டும்
சிலுவை சுமந்து நடப்பினும்
என் ஆவல் என்றுமே
உம்மண்டை தேவனே நான் சேர்வதே

2. தாசன் யாக்கோபைப் போல் இராக்காலத்தில்
திக்கற்றுக் கல்லின் மேல் நான் துயில்கையில்
எந்தன் கனாவிலே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே இருப்பேனே

3. நீர் என்னை நடத்தும் பாதை எல்லாம்
விண் எட்டும் ஏணிப் போல் விளங்குமாம்
தூதர் அழைப்பாரே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே நான் சேரவே

4. விழித்து உம்மையே நான் துதிப்பேன்
என் துயர்க் கல்லை உம் வீடாக்குவேன்
என் துன்பத்தாலுமே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே நான் சேர்வனே

Tamil Hymns

591. உம்மண்டை கர்த்தரே

1. உம்மண்டை கர்த்தரே நான் சேரட்டும்
சிலுவை சுமந்து நடப்பினும்,
என் ஆவல் என்றுமே
உம்மண்டை கர்த்தரே (3) நான் சேர்வதே

2. தாசன் யாக்கோபைப் போல் ராக்காலத்தில்
திக்கற்றுக் கல்லின் மேல் தூங்குகையில்,
என்தன் கனாவிலே
உம்மண்டை கர்த்தரே இருப்பேனே

3. நீர் என்னை நடத்தும் பாதை எல்லாம்
விண் எட்டும் ஏணிபோல் விளங்குமாம்
தூதர் அழைப்பாரே
உம்மண்டை கர்த்தரே நான் சேரவே

4. விழித்து உம்மையே நான் துதிப்பேன்
என் துயர்க் கல்லை உம் வீடாக்குவேன்
என் துன்பத்தாலுமே உம்மண்டை கர்த்தரே
உம்மண்டை கர்த்தரே நான் சேர்வேனே

Tamil Hymns

592. உம்மாலே எல்லாம் கூடும்

உம்மாலே எல்லாம் கூடும்
ஒரு வார்த்தை சொன்னால் போதும்

உங்க கிருபையே உங்க கிருபையே
என்னை தாங்கி நடத்தினதே

1. அலை மோதும் வாழ்வில் அசையாமல்
நிற்க நங்கூரமாக இருப்பவரே
காற்றையும் கடலையும் அதட்டி அமைதி
படுத்தினதும் உங்க கிருபையே

2. கரடு முரடான பாதைகளில்
வெளிச்சமாய் என்றும் இருப்பவரே
வழிகளில் எல்லாம் தூதர்கள் அனுப்பி
காப்பதும் உங்க கிருபையே

593. உம்மாலே தான் என் இயேசுவே

1. உம்மாலே தான், என் இயேசுவே,
ரட்சிக்கப்படுவேன்;
உம்மாலேதான் பேரின்பத்தை
அடைந்து பூரிப்பேன்.

2. இப்பந்தியில் நீர் ஈவது
பரம அமிர்தம்;
இனி நான் பெற்றுக்கொள்வது
அநந்த பாக்கியம்.

3. இவ்வேழை அடியேனுக்கு
சந்தோஷத்தைத் தந்தீர்;
இக்கட்டு வரும்பொழுது,
நீர் என்னைத் தேற்றுவீர்.

4. பூமியில் தங்கும் அளவும்
உம்மையே பற்றுவேன்;
எவ்வேளையும் எவ்விடமும்
நான் உம்மைப் போற்றுவேன்.

594. உம்மாலே நான் ஒரு சேனைக்குள்

1. உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்வேன்
மதிலைத் தாண்டிடுவேன் (2)
ஐயா ஸ்தோத்திரம்
இயேசையா ஸ்தோத்திரம்

2. எனது விளக்கு எரியச் செய்தீர்
இருளை ஒளியாக்கினீர்

3. மான்களைப் போல ஓடச் செய்தீர்
உயர அமரச் செய்தீர்

4. பெலத்தால் இடைக்கட்டி வழியை
செவ்வையாக்கி வாழ வைத்தவரே

5. நீரே என் கன்மலை நீரே என் கோட்டை
எனது அடைக்கலமே

6. இரட்சிப்பின் கேடயம் எனக்கு தந்தீர்
எந்நாளும் தாங்கிக் கொண்டீர்

7. இம்மட்டும் காத்தீர் இனிமேலும் காப்பீர்
எந்நாளும் துதித்திடுவேன்

8. அற்புதம் செய்தீர் அதிசயம் செய்தீர்
அப்பனே உம்மைத் துதிப்பேன்

9. கால்கள் வழுவாமல் நடக்கும்
பாதையை அகலமாக்கிவிட்டீர்

Tamil Hymns

595. உம்மாலே நான் ஒரு சேனைக்குள்

உம்மாலே நான் ஒரு
சேனைக்குள் பாய்வேனே
மதிலைத் தாண்டிடுவேன்
எதிரியைத் தோற்க்கடித்திடுவேன்

1. இவ்வுலகில் எனக்கு எல்லாம் நீரல்லவா
அன்பே நீர் என்னுடைய
தெய்வம் என்றுமையா
உம்மைத் துதித்திடுவேன்
உண்மையாக ஆராதித்திடுவேன்

2. உம் வசனம் ஆத்துமாவை
உயிர்பெறச் செய்யும்
பேதைகளை ஞானியாக
உயர்ந்திடச் செய்யும்
அதை பின்பற்றினால் எப்பொழுதும்
பெலன் பெற்றிடுவேன்
கன்மலையே உம்மில் நான்
அடைக்கலம் புகுந்தேன்

3. என் வழியை என்றென்றும்
செம்மைப்படுத்துகிறார்
இரட்சிப்பின் கேடகத்தால்
என்னைச் சூடுகிறார் அவர்
காருண்யம் என்னை பெரியவனாக்கும்
உங்க அன்பினாலே
நீடிய காலம் வாழ்ந்திடுவேன்

Tamil Hymns

596. உம்மால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை

உம்மால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை (2)
எல்லாமே உமால் ஆகும் - அல்லேலுயா
எல்லாமே உம்மால் ஆகும்

ஆகும் எல்லாம் ஆகும்
உம்மாலேதான் எல்லாம் ஆகும்

1. சொல்லி முடியாத அற்புதம்
செய்பவர் நீரே ஐயா நீரே
எண்ணி முடியாத அதிசயம்
செய்பவர் நீரே ஐயா நீரே

அப்பா உமக்கு ஸ்தோத்திரம்
அன்பே உமக்கு ஸ்தோத்திரம்

2. எனக்கு குறித்ததை நிறைவேற்றி
முடிப்பவர் நீரே ஐயா நீரே
எனக்காக யாவையும்
செய்து முடிப்பவர் நீரே ஐயா நீரே

3. வறண்ட நிலத்தை நீரூற்றாய்
மாற்றுபவர் நீரே ஐயா நீரே
அவாந்தர வெளியை தண்ணீராய்
மாற்றுபவர் நீரே ஐயா நீரே

597. உம்மில் நான் வாழ்கிறேன்

உம்மில் நான் வாழ்கிறேன்
உமக்குள்ளே வளர்கிறேன்

1. ஜீவத்தண்ணீராம் உமக்குள்ளே
வேர் கொண்டு வளரும் மரம்தானே
படர்ந்திடுவேன் நிழல் தருவேன்
பறவைகள் தங்கும் வீடாவேன்

2. அடித்தளம் இரட்சகர் இயேசுவின் மேல்
அமைந்து உயரும் கட்டடம் நான்
பெருங்காற்று அசைப்பதில்லை
பெருமழையோ பிரிப்பதில்லை

3. இயேசுவே எனது தலையானீர்
நானோ உமது உடலானேன்
உம்நினைவு என் உணவு
உம் விருப்பம் என் ஏக்கம்

4. செடியான உம்மோடு இணைந்துவிட்டேன்
கொடியாய் படர்ந்து கனிதருவேன்
இலைகளெல்லாம் மருந்தாகும்
கனிகளெல்லாம் விருந்தாகும்

5. உமது வார்த்தைகள் எனக்குள்ளே
உந்தன் ஆவி என்னோடே
மீட்பளிக்கும் நறுமணம் நான்
கேட்பதெல்லாம் பெற்றுக் கொள்வேன்

Tamil Hymns

598. உம்முன்னே எனக்கு நிறைவான மகிழ்ச்சி

உம்முன்னே எனக்கு
நிறைவான மகிழ்ச்சி உண்டு
உம் அருகில் எப்போதும்
நித்திய பேரின்பம் உண்டு
நிறைவான மகிழ்ச்சி நீரே
நித்திய பேரின்பமே

1. என்னை காக்கும் இறைவன் நீரே
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்
என்னையாளும் தலைவர் நீரே
உம்மையன்றி ஆசைவேறுயில்லை

என்னை காக்கும் இறைவன் நீரே
அரசாளும் தலைவர் நீரே

ஆராதனை உமக்கே
நாளெல்லாம் ஆராதனை

2. எனக்குரிய பங்கும் நீரே
பரம்பரை சொத்தும் நீரே
ஆலோசனை தரும் தகப்பனே
இரவும் பகலும் பேசும் தெய்வமே

எனக்குரிய பங்கு நீரே
பரம்பரை சொத்தும் நீரே

3. எப்போதும் என் முன்னே
உம்மைத்தான் நிறுத்தியுள்ளேன்
வலப்பக்கத்தில் இருப்பதனால்
அசைவுற விடமாட்டீர்

எப்போதும் என் முன்னே
உம்மைத்தான் நிறுத்தியுள்ளேன்

4. என் இதயம் மகிழ்கின்றது
என் உடலும் இளைப்பாறுது
ஜீவமார்க்கம் எனக்குப் போதித்தீர்
ஜீவனே, உம்மைப் பாடுவேன்

என் இதயம் மகிழ்கின்றது

Tamil Hymns

என் உடலும் இளைப்பாறுது

599. உம்மை அப்பான்னு கூப்பிடத்தான் ஆசை

உம்மை அப்பான்னு கூப்பிடத்தான் ஆசை
உம்மை அப்பான்னு கூப்பிடவா
உம்மை அம்மான்னு கூப்பிடத்தான் ஆசை
உம்மை அம்மான்னு கூப்பிடவா

அப்பான்னு கூப்பிடுவேன்-உம்மை
அம்மான்னு கூப்பிடுவேன்

1. கருவில் என்னை சுமந்ததைப்பார்த்தா
அம்மான்னு கூப்பிடுவேன்
தோள் மேலே சுமந்ததைப்பார்த்தா
உம்மை அப்பான்னு கூப்பிடுவேன்
என்னை கொஞ்சுவதை கெஞ்சுவதைப்பார்த்தா
உம்மை அம்மான்னு கூப்பிடுவேன்
என்னைஆற்றுவதை தேற்றுவதை பார்த்தா
உம்மை அப்பான்னு கூப்பிடுவேன்

2. கண்ணீரை துடைச்சதை பார்த்தா உம்மை
அம்மான்னு சொல்லுவேன்
விண்ணப்பட்தை கேட்டதை பார்த்தா உம்மை
அப்பான்னு சொல்லுவேன்
என்னை ஏந்துவதை தாங்குவதை பார்த்தா
உம்மை அம்மான்னு சொல்லுவேன்
உங்க இரக்கட்தை உருக்கத்த பார்த்தா
உம்மை அப்பான்னு சொல்லுவேன்

Tamil Hymns

600. உம்மை அல்லாமல் எனக்கு யாருமுண்டு

உம்மை அல்லாமல் எனக்கு யாருமுண்டு (4)
என் இயேசையா, அல்லேலூயா (4)

1. இன்பத்திலும் நீரே, துன்பத்திலும் நீரே (2)
எவ்வேளையும் ஐயா நீர் தானே (2) --- உம்மை

2. என் ஸ்நேகமும் நீரே, என் ஆசையும் நீரே (2)
என் எல்லாமே ஐயா நீர் தானே (2) --- உம்மை

3. இம்மையிலும் நீரே, மறுமையிலும் நீரே (2)
எந்நாளுமே ஐயா நீர்தானே (2) --- உம்மை

601. உம்மை ஆராதிக்க கூடினோம் நல்லவரே

உம்மை ஆராதிக்கக் கூடிவந்தோம் நல்லவரே
ஆவியோடும் நல் உண்மையோடும்
உம்மை ஆராதிக்க கூடிவந்தோம் பரிசுத்தரே
பரிசுத்த உள்ளத்தோடு

ஆராதனை (6) உமக்குத்தானே

1. நீர் செய்த நன்மைகள் ஏராளம் எராளம்
உமக்கே ஆராதனை
உந்தன் கிருபைகள் தாராளம் தாராளம்
உமக்கே ஆராதனை

உம் நாமம் உயர்த்திடுவேன்
உம் அன்பைப் பாடிடுவேன்

2. நீர் தந்த இரட்சிப்பு பெரிதல்லோ பெரிதல்லோ
உமக்கே ஆராதனை
உந்தன் வழிகள் அதிசயம் அதிசயம்
உமக்கே ஆராதனை

மகிமை நிறைந்தவரே
மாட்சிமை உடையவரே

3. நீர் தரும் இன்பமெல்லாம் நிரந்தரம் நிரந்தரம்
உமக்கே ஆராதனை
உந்தன் வார்த்தைகள் வல்லமை வல்லமை
உமக்கே ஆராதனை

உண்மை உள்ளவரே
துதிக்குப் பாத்திரரே

Tamil Hymns

602. உம்மை ஆராதிக்க கூடினோம்

உம்மை ஆராதிக்க
கூடினோம் ஆவியானவரே
நுகங்கள் முறிக்கும் ஆவியானவரே
உம்மை ஆராதிக்க விடுதலை தாருமே
எம்மை நிரப்பிட இப்போது வாருமே

1. உன்னத பெலத்தினால் மூடிடும்
ஆத்தும தரிசனம் தந்திடும்

2. பரிசுத்த அக்கினி எரியட்டுமே
மகிமையின் மேகம் மூடட்டுமே

3. உம் வரங்கள் கிரியை செய்யட்டுமே
உம் கனி எங்களில் வளரட்டுமே

4. வியாதிகள் இப்போது சுகமாகட்டும்
பிசாசின் கட்டுகள் தொலைந்தோடட்டும்

5. எம் கைகளை உமக்கு உயர்த்துகிறோம்
எம் உள்ளத்தில் உம்மை வாழ்த்துகிறோம்

603. உம்மை ஆராதிக்கின்றோம்

1. உம்மை ஆராதிக்கின்றோம்
இயேசுவே உம்மை ஆராதிக்கின்றோம்
நீர் நல்லவர் சர்வ வல்லவர்
உம்மைப் போல் வேறு தேவனில்லை

அல்லேலூயா அல்லேலூயா

2. பாவியான என்னையும்
உம் பிள்ளையாய் மாற்றினீர்

3. என்னை அழைத்தவரே
நீர் உண்மை உள்ளவரே

4. என்னையும் முன் குறித்தீர்
நீர் கைவிடவே மாட்டீர்

5. என்னை மறுருபமாக்கிடும்
உந்தன் மகிமையில் சேர்த்திடும்

Tamil Hymns

604. உம்மை ஆராதிப்பதே என் ஆசை

உம்மை ஆராதிப்பதே என் ஆசை
உம்மை ஆராதிப்பதே என் ஆசை - 2
உம்மை ஆராதிக்கிறேன்

இயேசு ராஜா உம்மை - என்
இயேசு ராஜா உம்மை
உம்மை ஆராதிக்கிறேன்
இயேசு ராஜா உம்மை

1. ஆதி அந்தமில்லா அனாதிதேவா
அனைத்தையும் படைத்தவரே

2. துக்கத்தை கலைத்து துதி உடை
தந்தீர் இயேசு ராஜாவே - 2

3. சாம்பலுக்கு பதிலாய் சிங்காரம்
தந்தீர் இயேசு ராஜாவே

605. உம்மை உயர்த்தி உயர்த்தி

உம்மை உயர்த்தி உயர்த்தி
உள்ளம் மகிழுதையா
உம்மை நோக்கிப் பார்த்து
இதயம் துள்ளுதையா

1. கரம்பிடித்து நடத்துகிறீர்
காலமெல்லாம் சுமக்கின்றீர்

நன்றி நன்றி நன்றி நன்றி

2. கண்ணீரெல்லாம் துடைக்கின்றீர்
காயமெல்லாம் ஆற்றுகிறீர்

3. நல்லவரே வல்லவரே
காண்பவரே காப்பவரே

4. இருப்பவரே இருந்தவரே
இனிமேலும் வருபவரே

5. வலுவூட்டும் திருஉணவே
வாழ வைக்கும் நல் மருந்தே

606. உம்மை உயர்த்திடுவேன் உம்மை

உம்மை உயர்த்திடுவேன்
உம்மை போற்றிடுவேன்
தேவாதி தேவன் நீரல்லோ
லுPலி புஷ்பம் நீரே சாரோனின் ரோஜா நீரே
என் ஆத்தும நேசர் நீரல்லோ

1. மலைகள் விலகினாலும்
பர்வதங்கள் பெயர்ந்திட்டாலும்
மாறாத தேவன் நீரல்லோ
ராஜாதி ராஜன் நீரே தேவாதி தேவன் நீரே
இயேசுவின் நாமம் தொனிக்குதே

2. வியாதிகள் வந்தாலும்
சோர்வுகள் நெருக்கிட்டாலும்
சுகம் தரும் தெய்வம் நீரல்லோ
காக்கும் கர்த்தர் நீரே கருணையின்
தேவன் நீரே துதிகளின் பாத்திரர் நீரே

Tamil Hymns

607. உம்மை உயர்த்திடுவேன் (மேலே மேலே)

உம்மை உயர்த்திடுவேன் (மேலே மேலே)
எந்தன் ஆசை மேலான உந்தன் ஒருவர் மேலே

1. கன்மலை மேல் நிறுத்தி
என் அடிகள் பெலப்படுத்தி
தேவனை துதிக்கும் புது பாடல் தந்தீர்
அநேகர் அதை கண்டு
பயந்து உம்மை நம்பி
என்னோடு சேர்ந்து உம்மை பாட செய்வீர்
அதனால் (நன்றி சொல்வேன்)
கன்மலை மேல் என்னை நிறுத்தினதால்
நன்றி சொல்வேன்

2. மேலான கிருபைகள்
மேலான தரிசனங்கள்
மேலானதெல்லாம் எனக்காய் வைத்தீர்
பூமியிலே கட்டவிழ்ப்பேன்
பரலோகத்தில் எடுப்பேன்
மேலான பொக்கிஷங்கள் திறந்து தந்தீர்
அதனால் (நன்றி சொல்வேன்)
மேலானதை நீர் வைத்ததாலே
நன்றி சொல்வேன்

3. அம்புகள் பறந்தாலும்
கொள்ளை நோய் நடந்தாலும்
சங்காரம் தொடர்ந்தாலும் பயமில்லையே
உம்மிலே வாஞ்சையாய் நான்
உம் நாமம் அறிந்ததினால்
உயர்ந்த அடைக்கலத்தில் வைத்து விட்டீர்
அதனால் (நன்றி சொல்வேன்)
உயர்ந்த அடைக்கலத்தில் வைத்ததினால்
நன்றி சொல்வேன்

Tamil Hymns

608. உம்மை என்றும் துதிப்பேன் உள்ளளவும்

உம்மை என்றும் துதிப்பேன்
உள்ளளவும் துதிப்பேன்
ஆவியோடும் உண்மையோடும்
உம்மை துதிப்பேன்
கெம்பீர சத்தத்தோடும்
கைத்தாள ஓசையோடும்
ஆரவாரத்தோடும்மை துதிப்பேன்

அல்லேலூயா அல்லேலூயா

1. தடைகள் தாண்டி ஓடிடச் செய்தீர்
இலக்கை அடைய கிருபையும் கொடுத்தீர்
எனது நிழலானீர் எனது துணையானீர்

2. பாவம் அணுகா வாழ்வை தந்தீர்
பாடுகள் சகிக்க பெலனும் தந்தீர்
எனது வாழ்வானீர் எனது பெலனானீர்

3. சாதிக்க செய்தீர் உமக்காகத்தானே
சதிகளை தகர்த்தீர் எமக்காகத்தானே
எனது ஜெயமும் நீர் எனது அரணும் நீர்

Tamil Hymns

609. உம்மைத்தானே நான் முழுஉள்ளத்தோடு

உம்மைத்தானே நான் முழுஉள்ளத்தோடு
நேசிக்கிறேன் தினமும்
உயிரோடு நான் வாழும் நாட்களெல்லாம்
உம்மைத்தான் நேசிக்கிறேன்

1. மாலை நேரத்திலே அழுகையென்றாலே
காலையில் ஆனந்தமே
இன்றைய துன்பமெல்லாம் நாளைய இன்பமாகும்
நடப்பதெல்லாம் நன்மைக்கே

அல்லேலூயா ஆராதனை (4)

2. நொறுங்கின இதயம் உடைந்த உள்ளம்
அருகில் நீர் இருக்கின்றீர்
ஒடுங்கிப்போன உள்ளம் தேடி
காயம் கட்டுகின்றீர்

3. நீதிமான் வேதனை அநேகமாயிருக்கும்
அநேகமாயிருக்கும்
விடுவிக்கின்றீர் அவை அனைத்தினின்றும்
வெற்றியும் தருகின்றீர்

4. புலம்பி நான் அழுதேன் மாற்றினீரே
நடனமாட வைத்தீர்
துயரத்தின் ஆடையை நிக்கினீரே
துதிக்கச் செய்தீரையா

610. உம்மைத்தான் நான் பார்க்கின்றேன்

உம்மைத்தான் நான் பார்க்கின்றேன்
பிரகாசமடைகின்றேன் - 2
அவமானம் அடைவதில்லை
அப்பா நான் உமது பிள்ளை - 2 - ஒருநாளும்

1. கண்கள் நீதிமானை பார்கின்றன (உம்)
சேவிகள் மன்றாட்டை கேட்கின்றன - உம்
இடுக்கண் நீக்கி விடுவிக்கின்றீர்
இறுதிவரை நீர் நடத்திச் செல்வீர் -

2. உடைந்த நொந்த உள்ளத்தோடு
கூடவே இருந்து பாதுகாக்கின்றீர்
அநேக துன்பங்கள் சேர்ந்து வந்தாலும்
அனைத்தின்றும் நீர் விடுவிக்கின்றீர்

3. நல்லவர் இனியவர் என் ஆண்டவர்
நாளெல்லாம் சுவைத்து மகிழ்கின்றேன்
உண்மையாய்க் கர்த்தரைத் தேடும் எனக்கு
ஒரு நன்மையும் குறைவதில்லையே

4. துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேன் எவ்வேளையும்
நன்றிக்கீதம் எந்நாவில் எந்நேரமும்
என் ஆத்துமா கர்த்தருக்குள் மேன்மை பாராட்டும்
அகமகிழ்வார்கள் துன்பப்படுவோர்

5. தேடினேன் கூப்பிட்டேன் பதில் தந்தீரே
பயங்கள் நீக்கிப் பாதுகாத்தீரே
எலும்புகள் நரம்புகள் முறிந்திடாமல்
யேகோவா தேவன் பார்த்துக் கொள்வீர்

Tamil Hymns

611. உம்மை துதிப்பேன் நான் உம்மை

உம்மை துதிப்பேன் நான்
உம்மை புகழ்வேன் நான்

1. அழிவில் நின்று பிராணனை
மீட்டுக் கொண்டீரே
கிருபை இரக்கத்தால்
கீரிடம் சூட்டினீர்

2. நன்மைகளினால் எந்தன்
வாயை நிரப்பினீர்
கழுகைப் போல்
சிறகை விரிக்கச் செய்தீரே

3. என் பாவங்களுக்குத்
தக்கதாக செய்யாமல்
உந்தன் பெரிய
கிருபையாலே நேசித்தீரே

4. எந்தன் உருவம்
இன்னது என்று அறிந்தவரே
மண்ணாம் இந்த ஏழையை
நீர் கண்டீரே

612. உம்மை துதிக்கனுமே உம்மை பாடனுமே

1. உம்மை துதிக்கனுமே உம்மை பாடனுமே
உம்மை போற்றனுமே இயேசய்யா
ஓசன்னா-4

2. ஜீவனுள்ள நாளெல்;லாம் உம்மை போற்றிடுவேன்
நன்மையால் கிருபையால் என்னை நிரப்பிடுமே-2
- உம்மை துதிக்கனுமே

3. உம்மைப்போல இரட்சகர் வேறே இல்லையே
மகிமையின் பிரகாசத்தால் என்னை மூடிடுமே-2
- உம்மை துதிக்கனுமே

4. எங்கும் சென்று உங்க அன்பை சொல்லிடுவேன்
வல்லமையின் அபிஷேகத்தால் என்னை நிறைத்திடுமே
– உம்மை

Tamil Hymns

613. உம்மை நம்பி உந்தன் பாதம்

உம்மை நம்பி உந்தன் பாதம்
உறுதியாய்ப் பற்றிக் கொண்டோம்
ஒருபோதும் கைவிடமாட்டீர் - 2

1. கண்ணீரைத் துடைத்து
கரங்களைப் பிடித்து
காலமெல்லாம் காத்துக் கொண்டீர்

2. மகனாக மகளாக
அப்பா என்றழைக்கும்
உரிமையை எனக்குத் தந்தீர்

3. அச்சாரமாய் முத்திரையாய்
அபிஷேக வல்லமையை
அடிமைக்குத் தந்தீரே

4. குருடர்கள் பார்த்தார்கள்
செவிடர்கள் கேட்டார்கள்
முடவர்கள் நடந்தார்கள்

Tamil Hymns

614. உம்மை நம்பியிருக்கிறேன் இயேசுவே

உம்மை நம்பியிருக்கிறேன் இயேசுவே
என்னில் இரக்கமாயிரும் இயேசுவே

உன் கணவனை விட
உன் மனைவியை விட
உன்னில் அன்பு வைத்தவர் இயேசுதான்
உன் பெற்றோரை விட
உன் நண்பர்களை விட
உன்னில் அன்பு வைத்தவர் இயேசுதான்

அவரைப்போல் நல்ல
நேசர் உலகில் இல்லை
அவரைப்போல் உண்மை
நண்பன் உனக்கு கிடைக்காதே

1. உயிரை கொடுத்து நான்
நேசித்தோர்களோ-என்னை
உதறி தள்ளினர் குப்பை போல
இந்த உலக பாசங்கள் அழிந்து போயிடும்
அழியாத அன்புதான் இயேசுவே
என் அன்பை நான் உமக்காக தருவேனே
என் உயிரை நான் உமக்காக கொடுப்பேனே

Tamil Hymns

615. உம்மை நம்பி வந்தேன் நான் வெட்கப்படல

உம்மை நம்பி வந்தேன் நான் வெட்கப்படல
உம் தயை என்னைக் கைவிடல (2)
வெறுங்கையாய் நான் கடந்துவந்தேன்
இரு பரிவாரங்கள் எனக்குத் தந்தீர் (2)

ஏல்-எல்லோகே ஏல்-எல்லோகே
உம்மைத் துதிப்பேன்- நான்

காயப்பட்டு நின்றேன் கண்ணீரில் சென்றேன்
கலங்கின எனக்காக இறங்கி வந்தீர் (2)
உடன்படிக்கை என்னோடு செய்து
இழந்திட்ட யாவையும் திரும்பத் தந்தீர் (2) --- ஏல்

வேண்டினோரெல்லாம் விடைபெற்ற போதும்
வேண்டியதெல்லாம் எனக்குத் தந்தீர் (2)
பரதேசியாய் நான் தங்கினதை
சுதந்திரமாக மாற்றித் தந்தீர் (2) --- ஏல்

616. உம்மை நாடித் தேடும் மனிதர்

1. உம்மை நாடித் தேடும் மனிதர்
உம்மில் மகிழ்ந்து களிகூரட்டும்
உந்தன் மீட்பில் நாட்டம் கொள்வோர்
மன அமைதி இன்று பெறட்டும்

மகிமை மாட்சிமை, மாவேந்தன் உமக்கே
துதியும், கனமும், தூயோனே உமக்கே

2. ஒரு நாளும் உம்மை மறவேன்
ஒரு போதும் உம்மை பிரியேன்
மறுவாழ்வு தந்த நேசர்
மணவாளன் மடியில் சாய்ந்தேன்

2. என் பார்வை சிந்தை எல்லாம்
நீர் காட்டும் பாதையில் தான்
என்சொல்லும் செயலும் எல்லாம்
உம் சித்தம் செய்வதில் தான்

3. உந்தன் வேதம் எனது உணவு
நன்றி கீதம் இரவின் கனவு
உந்தன் பாதம் போதும் எனக்கு
அதுதானே அணையா விளக்கு

4. உம்மை வருத்தும் வழியில் நடந்தால்
என்னைத் திருத்த வேண்டும் தேவா
கருத்தோடு உமது வசனம்
கற்றுத் தந்து நடத்த வேண்டும்

Tamil Hymns

617. உம்மை நான் போற்றுகிறேன் இறைவா

உம்மை நான் புகழ்கின்றேன் தேவா
போற்றி புகழ்கின்றேன்
வாழ்த்தி வணங்குகின்றேன்

1. என்னைக் கைதூக்கிவிட்டீர்
எதிரியின் மேல் வெற்றி தந்தீர்
உதவி தேடி வந்தேன்
உடல் சுகம் தந்தீரய்யா- ஆஆ
புகழ்ந்து பாடுவேன்
மகிழ்ந்து கொண்டாடுவேன்

2. மாலைநேரம் அழுகையென்றால்
காலை நேரம் ஆனந்தமே
நொடிப்பொழுது உந்தன் கோபம்
தயவோ வாழ்நாளெல்லாம்

3. சாக்கு துணி களைந்துவிட்டீர்
மகிழ்ச்சி உடை உடுத்திவிட்டீர்
புலம்பலை நீக்கிவிட்டீர்
புதுப்பாடல் நாவில் வைத்தீர்

4. என் உள்ளம் புகழ்ந்து பாடும்
இனி மௌனமாய் இருப்பதில்லை
கர்த்தாவே என் தெய்வமே
கரம்பிடித்த மெய் தீபமே

5. மலைபோல் நிற்கச் செய்தீர்
மாவேந்தன் உம் அன்பினால்
நிலைகலங்கி போனேன் ஐயா
நின்முகம் மறைந்தபோது

6. புழுதி உம்மை புகழ முடியுமா
சத்தியம் சொல்ல அதனால் இயலுமா
என் மீது இரங்கும் ஐயா
எனக்குத் துணையாய் இரும்

Tamil Hymns

618. உம்மை நினைக்கும் போதெல்லாம்

உம்மை நினைக்கும் போதெல்லாம்
நெஞ்சம் மகிழுதையா நன்றி பெருகுதையா

நன்றி நன்றி ராஜா
நன்றி இயேசு ராஜா

1. தள்ளப்பட்ட கல் நான்
எடுத்து நிறுத்தினீரே
உண்மை உள்ளவன் என்று கருதி
ஊழியம் தந்தீரையா

2. பாலை நிலத்தில் கிடந்தேன்
தேடி கண்டு பிடித்தீர்.
கண்ணின் மணிபோல் காத்து வந்தீர்
கழுகு போல் சுமக்கின்றீர்

3. பேரன்பினாலே என்னை
இழுத்துக் கொண்டீர்
பிரிந்திடாமலே அணைத்துக் கொண்டீர்
பிள்ளையாய் தெரிந்து கொண்டீர்

4. இரவும் பகலும் கூட
இருந்து நடத்துகின்றீர்
கலங்கும் நேரமெல்லாம் கரம் நீட்டி
கண்ணீர் துடைக்கின்றீர்

5. உந்தன் துதியைச் சொல்ல
என்னை தெரிந்து கொண்டீர்
உதடுகளைத் தினம் திறந்தருளும்
புது ராகம் தந்தருளும்

6. சிநேகம் பெற்றேன் ஐயா
கனம் பெற்றேன் ஐயா
உந்தன் பார்வைக்கு அருமையானேன்
உம் ஸ்தானாதிபதியானேன்

7. உலக மகிமையெல்லாம்
உமக்கு ஈடாகுமோ
வானம் பூமியெல்லாம் ஒழிந்து போகும்
உம் வார்த்தையோ ஒழியாதையா

Tamil Hymns

619. உம்மை நேசிக்கிறேன் என் இயேசுவே

உம்மை நேசிக்கிறேன் என் இயேசுவே
என் ஆவி ஆத்துமா சரீரம்
உம் பாதத்தில் நான் படைக்கிறேன்
என்னை உந்தன் கையில் ஏற்று
மாற்றிடும் உம் பிள்ளையாய்

1. என் வாழ்வில் என்ன நடந்தாலும்
நான் உம்மை நேசிக்கிறேன்
மரணத்தின் பாதை சென்றாலும்
நான் உம்மை நேசிக்கிறேன்

2. என்னை கொன்று போட்டாலும்
நான் உம்மை நேசிக்கிறேன்
நன்மை செய்யாவிட்டாலும்
நான் உம்மை நேசிக்கிறேன்

3. எனக்காய் காயம் அடைந்தவரே
உம்மை நேசிக்கிறேன்
என் பாவத்தின் தண்டனை ஏற்றவரே
உம்மை நேசிக்கிறேன்

4. எனக்காய் மீண்டும் வருபவரே
உம்மை நேசிக்கிறேன்
என்னை உம்மோடு
சேர்த்துக் கொள்வீர்
உம்மை நேசிக்கிறேன்

Tamil Hymns

620. உம்மை நோக்கிப் பார்க்கின்றேன்

உம்மை நோக்கிப் பார்க்கின்றேன்
உம்மை நினைத்து துதிக்கின்றேன்
இயேசையா ஸ்தோத்திரம் - (4)

1. உலகம் வெறுக்கையில்
நீரோ அணைக்கிறீர்
உமது அணைப்பிலே அந்த
வெறுப்பை மறக்கின்றேன்

2. கண்ணின் மணிபோல
என்னைக் காக்கின்றீர்
உமது சமூகமே
தினம் எனக்குத் தீபமே

3. நீரே என் செல்வம்
ஒப்பற்ற என் செல்வம்
உம்மில் மகிழ்கின்றேன்
நான் என்னை மறக்கின்றேன்

Tamil Hymns

621. உம்மை பாடாத நாட்களும் இல்லையே

உம்மை பாடாத நாட்களும் இல்லையே
உம்மை தேடாத நாட்களும் இல்லையே
உம்மையல்லாமல் யாரை நான் நேசிப்பேன்
உமக்காக அல்லாமல் யாருக்காக வாழுவேன்
நம்புங்கப்பா உந்தன் பிள்ளையை (2)

1. வெள்ளியை புடமிடும்
போல என்னை புடமிட்டீர் (2)
அதனால் நான் சுத்தமானேனே
பொன்னாக விளங்கச் செய்தீரே

2. பொருத்தனைகள் நிறைவேற்றி
ஸ்தோத்திரங்கள் செலுத்துவேன்
ஆராதித்து உம்மை உயர்த்துவேன்
நம்புங்கப்பா உந்தன் பிள்ளையை

3. என் அலைச்சல்களை எண்ணினீர்
கண்ணீரும் துருத்தியில்
வைத்து நன்மை தருபவரே
நம்புவேன் நான் எல்லா நாளிலும்

622. உம்மை பாடாத நாவும்

1. உம்மை பாடாத நாவும்கேளாத செவியும்
மகிமையிழந்ததே - பாரில் (2)

உந்தன் சித்தம் செய்ய நித்தம்
இயேசுவை நீர் என்னை ஆட்கொள்ளுமே

2. எந்தன் பாவத்தைப் போக்க பாரினில் வந்த
பரனை போற்றுவேன் - தேவ

3. இயேசு சிந்தின இரத்தம் உந்தனுக்காக
சிலுவை அண்டை நீ வா - அவர்

4. இதோ சீக்கிரம் வரும் இயேசு ராஜனை
போற்றித் துதித்திடுவோம் - தினம்

Tamil Hymns

623. உம்மை பாடாமல் யாரை நான் பாடுவேன்

உம்மை பாடாமல் யாரை நான் பாடுவேன்
உம்மை துதிக்காமல் யாரை நான் துதிப்பேன்

துதியும் உமக்கே அல்லேலூயா
கனமும் உமக்கே அல்லேலூயா
மகிமை உமக்கே அல்லேலூயா
புகழ்ச்சி உமக்கே அல்லேலூயா

1. உளையான சேற்றிலிருந்து எடுத்தீரே
உன்னத அனுபவம் தந்தீரே

2. துக்கங்களை சந்தோஷமாய் மாற்றினீர்
துயரங்களை மகிழ்ச்சியாய் மாற்றினீர்

3. ஒன்றுக்கும் உதவாத என்னையும்
உருவாக்கி உயர்த்தின தெய்வமே

4. ஜீவன் சுகம் பெலன் தந்து காத்தீரே
என் ஜீவன் உள்ள நாளெல்லாம் பாடுவேன்

Tamil Hymns

624. உம்மைப் பிரிந்து வாழ முடியாதையா

உம்மைப் பிரிந்து வாழ முடியாதையா
இயேசையா இயேசையா (2)

1. திராட்சை செடியின் கொடியாக
உம்மில் நிலைத்திருப்பேன்
மிகுந்த கனி கொடுப்பேன்
உம் சீடனாயிருப்பேன் – நான்

2. முன்னும் பின்னும் என்னை நெருக்கி
உம் கரம் வைக்கின்றீர்
உமக்கு மறைவாய் எங்கே போவேன்
உம்மை விட்டு எங்கே ஓடுவேன் – நான்

3. பகைவர்கள் ஆயிரம் பேசட்டுமே
பயந்து போக மாட்டேன்
துன்பங்கள் ஆயிரம் சூழ்ந்தாலும்
சோர்ந்து போகமாட்டேன் – நான்

4. நடந்தாலும் படுத்திருந்தாலும்
என்னை சூழ்ந்து உள்ளீர்
என் வழிகளெல்லாம் நீர் அறிவீர்
எல்லாம் உம் கிருபை – ஐயா

5. கர்த்தாவே என்னை ஆராய்ந்து
அறிந்து இருக்கின்றீர்
உட்காருதலையும் எழுதலையும்
அறிந்து இருக்கின்றீர்

625. உம்மை புகழ்ந்து பாடுவது நல்லது

உம்மை புகழ்ந்து பாடுவது நல்லது
அது இனிமையானது ஏற்புடையது

1. பாடல்கள் வைத்திர் ஐயாபாலகர் நாவிலே
எதிரியை அடக்க பகைவரை ஒடுக்க
இவ்வாறு செய்தீரய்யா

உந்தன் திருநாமம் - அது
எவ்வளவு உயர்ந்தது - 2

2. நிலாவை பார்க்கும்போது
விண்மீன்கள் நோக்கும்போது
என்னை நினைத்து விசாரித்து
நடத்த நான் எம்மாத்திரமையா

3. வானதூதனை விட சற்று
சிறியவனாய் படைத்துள்ளீர்
மகிமை மாட்சிமை மிகுந்த
மேன்மையாய் முடிசூட்டி நடத்துகிறீர்

4. அனைத்துப் படைப்புகள் மேல்
அதிகாரம் தந்துள்ளீர்
காட்டு விலங்குகள் மீன்கள்
பறவைகள் கீழ்படியச் சொன்னீர்

Tamil Hymns

626. உம்மை போல நல்ல தேவன்

உம்மை போல நல்ல தேவன்
யாரும் இல்லையே
உம்மை போல வல்ல தேவன்
யாரும் இல்லையே

உம்மை போல என்னை காத்திட
உம்மை போல என்னை தாங்கிட
உம்மை போல என்னை தேற்றிட
யாரும் இல்லையே -ஏசையா

உம்மை நான் போற்றுகிறேன்
போற்றுகிறேன்...(3) - என் தெய்வமே
உம்மை நான் போற்றுகிறேன்...
வாழ்த்துகிறேன்...வணங்குகிறேன்...
என் தெய்வமே, என் ஏசுவே...என்

Tamil Hymns

627. உம்மைப் போல இந்த உலகிலே

உம்மைப் போல இந்த உலகிலே
வேறொருவரும் இல்லையே…
அம்மாவும் நீரே என் அப்பாவும் நீரே
என் ஆத்ம நேசர் நீரல்லோ…
அம்மாவும் நீரே என் அப்பாவும் நீரே
என் இதய துடிப்பும் நீரல்லோ…

1. அன்பைத் தேடி நான் அலைந்து திரிந்தேன்
மனித உறவுகளால் நொறுக்கப்பட்டேன்…
வேதனையில் நான் வாழுகையில்
உம் அன்பினால் என்னை உயிர்ப்பித்தீர்…

2. குழப்பமான சில நேரங்களில்
கேள்விகள் அநேகம் எழுகையில்…
உம் ஞானத்தினால் என்னை வழிநடத்தும்
உம் சமூகத்தில் என்னை பெலப்படுத்தும்…

628. உம்மை போல யாருண்டு நன்மை

உம்மை போல யாருண்டு
நன்மை செய்ய நீருண்டு
உம்மைத் தானே நம்புவேன்
என் தேவா

உம்மைதான் எந்தன் வாழ்வில்
ஆதாரமாய் நினைத்து உள்ளேன்
நீர் இல்லா எந்தன் வாழ்க்கை
வீணாய் தானே போகுதைய்யா - உம்மை போல

எல்ஷடாய் ஆராதிப்பேன்
எலோஹிம் ஆராதிப்பேன்
அடோனாய் ஆராதிப்பேன்
இயேசுவே ஆராதிப்பேன் - உம்மை போல

கலங்கி நின்ற என்னைக் கண்டு
கண்ணீரைத் துடைத்தவரே
காலமெல்லாம் கண்மணிபோல
கரம்பிடித்து காத்தவரே - உம்மை போல

மரணத்தின் பாதைதனில்
மனம் தளர்ந்து நின்ற என்னை
மருத்துவராய் நீரே வந்து
மறுவாழ்வு தந்தீரைய்யா

Tamil Hymns

629. உம்மைப்போல் மாறிட உலகம்

உம்மைப்போல் மாறிட
உலகம் எல்லாம் சென்றிட (2)
அப்பனே ஆசீர்வாதம்
ஈந்திடும் ஐயா (2)

1. உலகின் பாவம் சுமந்த
உன்னத தேவகுமாரரே (2)
உமது சபையை நடத்த
உமது கிருபை வேண்டுமே (2)

2. நித்தமும் சத்தியத்தாலே
உமது சபையை நடத்திட (2)
சத்திய ஆவியாலே
சாட்சியோடு நடத்துமே (2)

3. கோடா கோடி ஜனம்
உந்தன் சபையில் சேர்ந்திடணும் (2)
மறுரூபமாகிடணும்
மகிமையிலே சேர்ந்திடணும் (2)

630. உம்மைப் போல் யாருண்டுஎந்தன்

உம்மைப் போல் யாருண்டு - எந்தன்
இயேசு நாதா இந்தப் பார்தலத்தில்
உம்மைப் போல் யாருண்டு
பாவப்பிடியினில் சிக்கி நான் உழன்றேன்
தேவா தம் அன்பினால் மன்னித்தீர்

1. உலகம் மாமிசம் பிசாசுக் கடியில்
அடிமை யாகவே பாவி நான் ஜீவித்தேன்
நிம்மதி இழந்தேன் தூய்மையை மறந்தேன்
மனம் போல் நடந்தேன் ஏமாற்றம் அடைந்தேன்
என்னையா தேடினீர் ஐயா இயேசு நாதா
உம்மை மறந்த ஓர் துரோகி நான்
என்னையா தேடினீர் ஐயா இயேசு நாதா
அடிமை உமக்கே இனி நான்

2. இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை
என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்
நொறுக்கும் , உறுக்கும் , உடையும் வனையும்
உமக்கே உகந்த தூய சரீரமாய்
ஐம் பொறிகளையும் உமக்குள் அடக்கும்
இயேசுவே ஆவியால் நிரப்பும்
வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய் திகழ
அக்கினி என் உள்ளம் இறக்கும்

3. வீட்டிலும் ஊரிலும் செல்லுமிடமெங்கும்
சோதனை வந்திடில் கர்த்தா நீர் காத்திடும்
மேசியா வருகை வரையில் பலரை
சிலுவைக் கருகில் அழைக்க ஏவிடும்
முழங்காலில் நிற்க வேதத்தை அறிய
தினந்தோறும் தேவா உணர்த்தும்
உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்
என்றுமே வராமல் காத்திடும்

Tamil Hymns

631. உம்மை போற்றி பாடுவோம்

உம்மை போற்றி பாடுவோம்
எங்கள் உயர்ந்த கண்மலையே

1. பெருவெள்ளம் மதில்லை மோதி
பெருங்காற்றும் அடிக்கையில்
எங்கள் புகலிடமே எங்கள் தஞ்சமே
பெருங்கன்மலையின் நிழலே

2. செங்கடலும் பிளந்து போகும்
யுத்த சேனையும் அமிழ்ந்திடும் எங்கள்
பராக்கிரமமே எங்கள் பெலனும் நீரே
ஜெயம் எடுப்போம் உம்மாலே

3. எம்மை உயர்ந்த ஸ்தானங்கள் மேல்
வைத்த வைத்ததும் நீரல்லவோ
கன்மலை தேனும் வடியும் எண்ணெயும்
தருவது நீரல்லவோ

Tamil Hymns

632. உம்மைத் துதிக்கிறோம்

1. உம்மைத் துதிக்கிறோம், யாவுக்கும் வல்ல பிதாவே;
உம்மைப் பணிகிறோம் ஸ்வாமீ, ராஜாதி ராஜாவே;
உமது மா மகிமைக்காக கர்த்தா
ஸ்தோத்திரம் சொல்லுகிறோமே.

2. கிறிஸ்துவே, இரங்கும் சுதனே, கடன் செலுத்தி,
லோகத்தின் பாவத்தை நீக்கும் தெய்வாட்டுக்குட்டி,
எங்கள் மனு கேளும் பிதாவினது
ஆசனத் தோழா இரங்கும்.

3. நித்திய பிதாவின் மகிமையில் ஏசுவே
நீரே பரிசுத்தாவியோடேகமாய் ஆளுகிறீரே.
ஏகமாய் நீர் அர்ச்சிக்கப்படுகிறீர்.
உன்னத கர்த்தரே. ஆமேன்.

633. உம்மைத் துதிப்பேன்

உம்மைத் துதிப்பேன் கர்த்தாதி கர்த்தரே
உம் கிரியைகள் மிக அற்புதமானதே
உம்மைப் பணிவேன் தேவாதி தேவனே
உம் ஆலோசனைகள் அருமையானதே

1. என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்
என் நினைவையும் தூரத்தில் அறிவீர்
எந்தன் நாவில் சொல் பிறவா முன்னமே
எந்தன் தேவனே அவையாவும் அறிவீர்

2. உமக்கு மறைவாய் இருளும் மூடாதே
இரவும் பகல் போல் வெளிச்சமாகுமே
உமது கரத்தை என்மேல் வைக்கிறீர்
இந்த அறிவுதான் மா விந்தையானதே

3. வானில் சென்றாலும் அங்கேயும் இருக்கிறீர்
விடியற்காலத்துச் செட்டையில் பறந்தாலும்
பாதாளத்திலே படுக்கை போட்டாலும்
உமது கரத்தால் என்னைப் பிடிக்கிறீர்

4. என்னை ஆராய்ந்து அறிந்து கொள்ளுமே
வேதனை வழி என்னின்று அகல
நித்ய வழியிலே என்னை நடத்துமே
எந்தையே எந்தன் உள்ளம் பாடிட

634. உம்மை மகிமைப் படுத்துகிறேன்

உம்மை மகிமைப் படுத்துகிறேன்
மகிமைப் படுத்துகிறேன் மகிமைக்குரியவரே
உம்மைத் துதித்துப் பாடுகிறேன்
துதித்துப் பாடுகிறேன் துதிக்குப் பாத்திரரே

உம்மை மகிமைப் படுத்துகிறேன்…
உம்மைத் துதித்துப் பாடுகிறேன்…

1. ஆயிரம் தலைமுறைக்கு இரக்கம் செய்பவரே
ஆபிரகாம் உடன்படிக்கை நினை வு கூர்பவரே

2. தாவீதுக்கு அருளிய நிச்சய கிருபையை
நித்திய உடன்படிக்கையாய் என க்குத் தருபவரே

3. மோசேயோடு இருந்தது போல் என்னோ இருக்கின்றீர்
என க்கு எதிராக நிற்பவன் யார்

Tamil Hymns

635. உம்மை மறவேன் நான்

உம்மை மறவேன் நான்-2
என் இயேசய்யா உம்மை மறவேன் நான்
என் தாழ்வினில் என்னை நினைத்தீரே-2
என் இயேசய்யா உம்மை மறவேன் நான்

1. ஆபத்து காலத்தில்
அரணான கோட்டையும்
கன்மலையும் மீட்பரும் நீர்தானையா
கன்மலையும் மீட்பரும் நீர்தானையா-2

2. என் வாழ்வில் நீர் செய்த
எண்ணில்லா நன்மைகள்
ஆயிரம் பதினாயிரம் அதற்கும் மேலய்யா
ஆயிரம் பதினாயிரம் அதற்கும் மேலய்யா-2

Tamil Hymns

636. உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு

உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு
என் இயேசய்யா அல்லேலுயா

1. இன்பத்திலும் நீரே துன்பத்திலும் நீரே
எவ்வேளையும் ஐயா நீர் தானே

2. என் சிநேகமும் நீரே என் ஆசையும் நீரே
என் எல்லாமே ஐயா நீர் தானே

3. இம்மையிலும் நீரே மறுமையிலும் நீரே
எந்நாளும் ஐயா நீர் தானே

Tamil Hymns

637. உம்மையே நம்பியுள்ளோமே

உம்மையே நம்பியுள்ளோமே இயேசையா
உம்மையே நம்பியுள்ளோமே (2)

நீரே என் ஜீவன் நீரே சத்தியம்
நீரே என் வழியையா - 2

1. என் காலை மான் காலாய் மாற்றி மாற்றி
மதிலை தாண்டசெய்தீர்
என்னை நீர் பெலப்படுத்தி இடைகட்டி
வழியை செவ்வையாக்கினீர் - 2

2. உம்பாதம் சரணடைந்தேன் இயேசையா
உம்மில் நான் மகிழ்ந்திருப்பேன்
நன்மையும் கிருபையும் என்னை
என்றும் சூழ்ந்திடும் உம் தயவால்

3. ஆபத்து நாட்களெல்லாம்
எனக்கு ஆதரவாயிருந்தீர்
சத்ருக்கள் எனக்கு முன்பாய் முன்பாய்
ஓடிடக் காணச் செய்தீர்

638. உம்மையே நம்புவேன் உண்மையாய்

1. உம்மையே நம்புவேன்
உண்மையாய் ஆராதிப்பேன்

2. நம்பிக்கை நாயகன் நீரே
நம்பிடுவேன் நான் உம்மையே

3. எந்தன் வாழ்வில் அசையாத
கன்மலையே கோட்டையே

4. எந்தன் வாழ்வில் பிரகாசிக்கும்
தீபமே ஜோதியே

5. எந்தன் வாழ்வில் சூழ்ந்து நிற்கும்
கேடகமே துருகமே

639. உம்மையே நம்பி வந்த எனக்கு

உம்மையே நம்பி வந்த எனக்கு
உலகில் யாருமில்லை
உம் சொல்லையே நம்பி வந்த
எனக்கு நீரே புகழிடம்

நீரே நீரே நீரே அடைக்கலம்
நீரே நீரே நீரே புகழிடம்

1. உமக்காய் பறக்க நினைக்கையிலே
சிறகை முறிக்கும் உலகத்திலே
புது சிறகை முளைக்க செய்து

2. என்னை உயர எழுப்புகிறீர்
நீரே நீரே நீரே அடைக்கலம்
நீரே நீரே நீரே புகழிடம்

Tamil Hymns

640. உம்மையே நான் நேசிப்பேன்

உம்மையே நான் நேசிப்பேன் (3)
நான் பின் திரும்பேனே!

> **உம் சந்நிதியில் முழங்காலில் நின்று**
> **உம் பாதையில் நான் நடந்திட்டால்**
> **இன்னல் துன்பமே வந்தாலும்**
> **நான் பின் திரும்பேனே!**

1. உம்மையே நான் நேசிப்பேன் - (3)
நான் பின் திரும்பேனே

2. உம்மையே நான் ஆராதிப்பேன் (3)
நான் பின் திரும்பேனே!

641. உம்மோடு செலவிடும் ஒவ்வொரு நிமிடமும்

உம்மோடு செலவிடும் ஒவ்வொரு நிமிடமும்
வீணாக போகாதையா - என்னை
பெலவானாய் மாற்றுதையா

ஓ தேவ பிரசன்னம் ஆ என்ன ஆனந்தம்
ஆகாயம் கொண்டு செல்லுதே

வானத்திலே தூதரெல்லாம் பரிசுத்தரே
என்று பணிகிறார்களே பூமியிலே
மண்ணான நான் - உம் நாமம்
வாழ்கவென்று தொழுகிறேனையா

தாயனவள் தன் பாலனை மறந்தாலும்
என்னை மறவாதவர்
தகப்பனைப் போல் இரக்கமுள்ள
பரிசுத்தரே உம்மை பணிகிறேனய்யா

என் இயேசுவே உம் ஆவியால்
ஒருவிசையாய் என்னை நிரப்பிடுமையா
உலகத்திலே உமக்காக நான் உயிருள்ள
நாள் வரையில் உழைக்கணுமையா

642. உம்மோடு இருக்கணுமே ஐயா

உம்மோடு இருக்கணுமே ஐயா
உம்மைப் போல் மாறணுமே
உலகின் ஒளியாய் மலைமேல் அமர்ந்து
வெளிச்சம் கொடுக்கணுமே

1. ஓடும் நதியின் ஓரம் வளரும்
மரமாய் மாறணுமே
எல்லா நாளும் இலைகளோடு
கனிகள் கொடுக்கணுமே

2. உலகப் பெருமை இன்பமெல்லாம்
குப்பையாய் மாறணுமே
உம்மையே என் கண்முன் வைத்து
ஓடி ஜெயிக்கணுமே

3. பேய்கள் ஓட்டும் வல்லமையோடு
பிரசங்கம் பண்ணணுமே
கடினமான பாறை இதயம்
உடைத்து நொறுக்கணுமே

4. வார்த்தை என்னும் வாளையேந்தி
யுத்தம் செய்யணுமே
விசுவாசம் என்னும் கேடயத்தால்
பிசாசை வெல்லணுமே

5. ஆத்ம பார உருக்கத்தோடு
அழுது புலம்பணுமே
இரவும் பகலும் விழித்து ஜெபிக்கும்
மேய்ப்பன் ஆகணுமே

Tamil Hymns

643. உம்மோடு இருப்பதுதான்

உம்மோடு இருப்பதுதான்
உள்ளத்தின் வாஞ்சையையா
உம் சித்தம் செய்வது தான்
இதயத்தின் ஏக்கமையா

இயேசையா உம்மைத்தானே
என் முன்னே நிறுத்தியுள்ளேன்

1. எனக்காக யாவையும் செய்பவரே
செய்து முடிப்பவரே
என் பாரங்கள் என் சுமைகள் - 2
உம் பாதத்தில் இறக்கி வைத்தேன் - 2

2. இரக்கமும் உருக்கமும் நீடிய
சாந்தமும் கிருபையும் உள்ளவரே
என் ஜீவனை அழிவில் நின்று
மீட்டவரே என் மேய்ப்பரே

3. எபிநேசரே எல்எலியோன்
என்றுமே உயர்ந்தவரே
எல்ஷடாய் (சர்வ) வல்லவரே
எல்ரோயீ காண்பவரே

4. மன்னிப்பதில் வள்ளல் நீரே
சுகம் தரும் தெய்வம் நீரே
உம் அன்பையும் இரக்கத்தையும்
மணி முடியாய் சூட்டுகின்றீ

Tamil Hymns

644. உயரமும் உன்னதமுமான

உயரமும் உன்னதமுமான
சிங்காசனத்தில் வீற்றிருக்கும்
சேனைகளின் கர்த்தராகிய
ராஜாவை என் கண்கள் காணட்டும்

சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர்-8
பரிசுத்தர் பரிசுத்தரே

1. ஒருவராய் சாவாமையுள்ளவர்
அவர் சேரக்கூடா ஒளிதனில்
வாசம் செய்பவர் அகிலத்தை
வார்த்தையால் சிருஷ்டித்தவர்
இயேசுவே உம்மையே
ஆராதிப்பேன்

2. ஆதியும் அந்தமுமானவர் அவர்
அல்பாவும் ஒமேகாவுமானவர்
அவர் இருந்தவரும் இருப்பவரும்
சீக்கிரம் வரப்போகும் ராஜா இவர்

3. எல்லா நாமத்திலும் மேலானவர்
முழங்கால்கள் முடங்கிடும்
இவருக்கு முன்
துதிகனம் மகிமைக்கு பாத்திரரே
தூயவர் இயேசுவை உயர்ந்திடுவேன்

Tamil Hymns

645. உயிரினும் மேலானது

உயிரினும் மேலானது
உந்தன் பேரன்பு
எனவே பாடுகிறேன்
என் உயிர் இருக்கும் வரை

1. உம்மைத்தானே உறுதியுடன்
தினமும் பற்றிக் கொண்டேன்
உம் நிழலில் தானே களிகூர்ந்து
தினமும் பாடுகிறேன்
உந்தன் மனதுருக்கம் தினமும் தாங்குதய்யா
உந்தன் மனதுருக்கம் தினமும் தாங்குதய்யா

போற்றி போற்றி புகழ்கின்றேன்
வாழ்த்தி வாழ்த்தி வணங்குகின்றேன் – உயிரி

2. பகலெல்லாம் பாடுகின்றேன்
இரவெல்லாம் தியானிக்கின்றேன்
ஏங்குதய்யா என் இதயம்
திருமுகம் காண வேண்டும்
எப்போது வருவீரையா எதிர் நோக்கி ஓடுகிறேன்
உம் நினைவால் சோகமானேன்
எப்போது வருவீரையா
உம் நினைவால் சோகமானேன்
எப்போது வருவீரையா – போற்றி

3. நீரே என் தேவன்
அதிகாலை தேடுகிறேன்
உம் சமூகம் ஓடி வந்தேன்
இதுதானே என் விருந்து
உம் திருவசனம் தியானிக்கிறேன் அதுதானே என் மருந்து
மறுரூபமாகணுமே
மகி உயிரினும் மேலானது
உந்தன் பேரன்பு
எனவே பாடுகிறேன்
என் உயிர் இருக்கும் வரை
உம்மைத்தானே உறுதியுடன்
தினமும் பற்றிக் கொண்டேன்
உம் நிழலில் தானே களிகூர்ந்து
தினமும் பாடுகிறேன்
உந்தன் மனதுருக்கம் தினமும் தாங்குதய்யா
உந்தன் மனதுருக்கம் தினமும் தாங்குதய்யா

Tamil Hymns

போற்றி போற்றி புகழ்கின்றேன்
வாழ்த்தி வாழ்த்தி வணங்குகின்றேன் – உயிரி
பகலெல்லாம் பாடுகின்றேன்
இரவெல்லாம் தியானிக்கின்றேன்
ஏங்குதய்யா என் இதயம்
திருமுகம் காண வேண்டும்
எப்போது வருவீரையா எதிர் நோக்கி ஓடுகிறேன்
உம் நினைவால் சோகமானேன்
எப்போது வருவீரையா
உம் நினைவால் சோகமானேன்
எப்போது வருவீரையா – போற்றி
நீரே என் தேவன்
அதிகாலை தேடுகிறேன்
உம் சமூகம் ஓடி வந்தேன்
இதுதானே என் விருந்து
உம் திருவசனம் தியானிக்கிறேன் அதுதானே என் மருந்து
மறுரூபமாகணுமே
மகிமையில் மூழ்கணுமேமையில் மூழ்கணுமேa

Tamil Hymns

646. உயர்த்துவார் உயர்த்துவார் இயேசு

உயர்த்துவார் உயர்த்துவார்
இயேசு உன்னை உயர்த்துவார்
உன்னை என்றும் காண்பவர்
உன் கண்ணீர் என்றும் துடைப்பவர்
உன்னை என்றும் நடத்துவார்

அல்லேலூயா (5)

1. உன்னதமானவர் மறைவிலே வாழ்கிறேன்
சிங்கத்தின் மேலே நடப்பேன்
சீறும் சர்ப்பத்தை மிதிப்பேன்
பெலனான தேவன் உண்டு

2. மிதித்திடுவோம் மிதித்திடுவோம்
சர்ப்பங்களை தேள்களை மிதித்திடுவோம்
சமாதான தேவன் சீக்கிரம்
சாத்தானை நம் கால்களின் கீழே
நசுக்குவார் நசுக்குவார் நசுக்குவார்

3. உயர்த்திடுவோம் உயர்த்திடுவோம்
இயேசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்
வானிலும் பூவிலும் உயர்ந்தவர்
சர்வ வல்லமை உடையவர்
பரிசுத்த தேவன் இவரே

Tamil Hymns

647. உயிருள்ள திருப்பலியாய்

உயிருள்ள திருப்பலியாய்
உடலைப் படைக்கின்றேன்
உள்ளம் தந்து விட்டேன்

தகப்பனே தந்து விட்டேன்
தங்கிவிடும் நிரந்தரமாய்

1. உலகப்போக்கில் நடப்பதில்லை
ஒத்த வேஷம் தரிப்பதில்லை
என் மனம் புதிதாக வேண்டும்
திருச்சித்தம் புரிந்து வாழ வேண்டும்

2. உள்ளத்தின் நினைவுகள் உமக்கு
உகந்தனவாய் இருப்பதாக
நாவின் சொற்கள் எல்லாம்
ஏற்றனவாய் இருப்பதாக

3. எண்ணங்கள் ஏக்கங்கள் உமதாகணும்
இன்னும் அதிகமாய் நேசிக்கணும்
உன்னதர் பணி செய்ய வேண்டும்
என் உயிர் இருக்கும் வரை

648. உயிருள்ள நாளெல்லாம் உம்மைப்

உயிருள்ள நாளெல்லாம் உம்மைப் பாடுவேன்
என் ஆசை நாயகா உம்மை நேசிப்பேன்
என்ன வந்தாலும் உம்மை துதிப்பேன்
எவ்வேளையும் நான் உம்மில் மகிழ்வேன்

1. பூமியிலே உயிர் வாழும் வரை
ஆசையுடன் உம்மை ஆராதிப்பேன்
விண்ணிலும் மண்ணிலும் என் செல்வம் நீரே
இழப்பேனோ உம்மை மறப்பேனோ

2. நினைவெல்லாம் உமதாகணும்
என் பேச்செல்லாம் உம் புகழாகணும்
உம்மை அல்லாமல் நிம்மதி ஏது
உம்மையன்றி வேரு மகிழ்வேது

649. உயிரோடு எழுந்த இயேசுவே

1. உயிரோடு எழுந்த இயேசுவே
நான் வாழுவேன் உமக்காகவே
நீர் ஒருவரே ஆண்டவர்
நீர் ஒருவரே இரட்சகர்-2

என்னை தூக்கி தூக்கி எடுத்திரே
சர்வ வல்லவரே
என்னை தூக்கி தூக்கி எடுத்திரே
சமாதான காரணரே

2. மரித்து போன அந்த லாசரை
அன்று தேடியே இயேசு வந்தீரே-2
உங்க வாயின் வார்த்தையால்
அந்த ஜீவன் வந்தது-2

3. சிலுவையின் அந்த போரிலே
இயேசு நீரே
மரித்துப் போனீரே-2
ஆனால் உயிரோடு எழுந்தீரே
அந்த எதிரியை ஜெயித்தீரே

650. உயிரோடு எழுந்தவரே

1. உயிரோடு எழுந்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
ஜீவனின் அதிபதியே
உம்மை ஆராதனை செய்கிறோம்

அல்லேலூயா ஓசன்னா
அல்லேலூயா ஓசன்னா - (2)

2. மரணத்தை ஜெயித்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
பாதாளம் வென்றவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்

3. அகிலத்தை ஆள்பவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
ஆனந்த பாக்கியமே
உம்மை ஆரதைனை செய்கிறோம்

Tamil Hymns

651. உயிர்த்தெழுந்தாரே

உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா
ஜெயித்தெழுந்தாரே
உயிருடன் எழுந்த மீட்பர் இயேசென்
சொந்தமானாரே

1. கல்லறை திறந்திடவே
கடும் சேவகர் பயந்திடவே
வல்லவர் இயேசு உயிர்த்தெழுந்தாரே
வல்ல பிதாவின் செயலிதுவே

2. மரித்தவர் மத்தியிலே
ஜீவ தேவனைத் தேடுவாரோ?
நீதியின் அதிபதி உயிர்த்தெழுந்தாரே
நித்திய நம்பிக்கை பெருகிடுதே

3. எம்மா ஊர் சீஷர்களின்
எல்லா மன இருள் நீக்கினாரே
எம்மனக் கலக்கங்கள் நீங்கினதாலே
எல்லையில்லாப் பரமானந்தமே

4. மரணமுன் கூர் எங்கே?
பாதாள முன் ஜெய மெங்கே?
சாவையும் நோயையும்
பேயையும் ஜெயித்தார்
சபையோரே துதி சாற்றிடுவோம்

5. ஆவியால் இன்றும் என்றும்
ஆ எம்மையும் உயிர்ப்பிக்கவே
ஆவியின் அச்சாரம் எனக்களித்தாரே
அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

6. பரிசுத்தமாகுதலை பயத்தோடென்றும்
காத்துக் கொள்வோம் - எக்காளம்
தொனிக்கையில் மறுரூபமாக
எழும்புவோமே மகிமையிலே

Tamil Hymns

652. உருகாயோ நெஞ்சமே

உருகாயோ நெஞ்சமே குருசினில்
அந்தோ பார் - கரங்கால்கள்
ஆணியேறித் திருமேனி நையுதே

1. மன்னுயிர்க்காய் தன்னுயிரை
மாய்க்க வந்த மன்னவனார்
இந்நில மெல்லாம் புரக்க
ஈனக்குரு சேறினார்

2. தாகம் மிஞ்சி நாவறண்டு
தங்க மேனி மங்குதே
ஏகபரன் கண்ணயர்ந்து
எத்தனையாய் ஏங்குறார்

3. மூவுலகும் தாங்கும் தேவன்
மூன்று ஆணி தாங்கிடவோ
சாகும் வேளை வந்த போது
சிலுவையில் தொங்கினார்

4. வல்ல பேயை வெல்ல வானம்
விட்டு வந்த தெய்வம் பாராய்!
புல்லரிதோ நன்றி கெட்டு
புறம்பாக்கினாரன்றோ

5. திண்டு போல எண்டிசையின்
தொண்டர் பாவம் ஆண்டான் மேலே
நின்றதே ஓர் பண்டு ஏவை
தின்ற சாபம் மண்டுதே

6. நித்திய காலம் பாத்திரராய்
நீசர் வாசஸ்தலம் உய்ய
சத்திய தாசர் சித்தமேவும்
சங்கை ராஜன் இங்கு பார்

Tamil Hymns

653. உருகாதோ நெஞ்சம் அவர்தானே

உருகாதோ நெஞ்சம்
அவர்தானே தஞ்சம்
உனக்காக பலியாக வந்தார்
கலங்காதோ கண்கள்
வழியாதோ கண்ணீர்
கல்வாரி காட்சியைக் கண்டு

1. நடமாட முடியா தடுமாறிக் கிடந்த
முடவனின் குரல் கேட்டு நின்று
இடம் தேடி வந்து இதயத்தில் நொந்து
நடமாடச் செய்த தாலே
உந்தன் கால்களில் ஆணியோ அரசே
அதுதான் சிலுவையின் பரிசே

2. கரமெல்லாம் குஷ்டம் தீராத கஷ்டம்
கதறிய மனிதனைக் கண்டு
கனிவோடு நோக்கி கரம் தொட்டு தூக்கி
கருணையாய் சுகம் தந்ததாலே
உந்தன் கரங்களில் ஆணியோ அரசே
அது தான் சிலுவையின் பரிசே

3. இதயத்தில் பாவம் குடி கொண்டதாலே
இகமதில் அழிகின்ற ஆத்மா
பாவத்தை நீக்கி பாவியை மீட்டு
இரட்சிப்பின் வழி தந்ததாலே
உந்தன் இதயத்தில் ஈட்டியோ அரசே
அதுதான் சிலுவையின் பரிசே

654. உலகத்தில் இருப்பவனிலும் உங்களில்

உலகத்தில் இருப்பவனிலும்
உங்களில் இருப்பவர் பெரியவர்
கர்த்தர் பெரியவர் நல்லவர்
வல்லவர் என்றுமே

1. தண்ணீரைக் கடந்திடும் போதும்
உன்மேல் அவைகள் புரளுவதில்லை
அக்கினியின் சோதனை ஒன்றும் செய்யாதே
அவைகளை மிதித்து ஜெயமே அடைவாய்

2. உன் பக்கம் ஆயிரம் பேரும்
உன் மேல் விழுந்தும் தீங்கொன்றுமில்லை
கண்களினால் காணுவாய் தேவன் துணை உனக்கே
ஜெயதொனியோடே முன்னே செல்வாய்

3. என்றென்றும் கர்த்தரின் நாமம்
துணையே என்று அறிந்துணர்வாயே
உனக்கெதிராய் எழும்பிடும் ஒன்றும் வாய்க்காதே
சேனைகளின் தேவன் ஜெயமே அளிப்பார்

4. எந்நாளும் இயேசுவை நம்பு
குறைவேயில்லை ஜீவியமதிலே
பசுமையின் ஜீவியம் உந்தன் பங்காகும்
கர்த்தரின் ஆசீர் உனக்கே சொந்தம்

Tamil Hymns

655. உலகத்தை வென்று இயேசு உயிர்த்தார்

உலகத்தை வென்று இயேசு உயிர்த்தார் ஆர்ப்பரி
காலத்தை வென்று வெற்றி சிறந்தார் ஆர்ப்பரி
அலகினை வென்று அகிலம் சிறந்தார் ஆர்ப்பரி
இயேசுவே தேவன் என்று முழங்கி ஆர்ப்பரி
ஆர்ப்பரி ஆர்ப்பரி ஆர்ப்பரி ஆர்ப்பரி

யெகோவா நிசி அல்லேலூயா
யெகோவா சபயத் அல்லேலூயா
அல்லேலூயா ஓசன்னா (2)

1. வழி என்று சொன்னவர் வழியாக
வந்தவர் இயேசு ஒருவரே - அற்புதமாக
அவனியில் வந்தவர் இயேசு ஒருவரே
பாவமே இல்லா பரிசுத்தரானவர்
இயேசு ஒருவரே - அதிசய அற்புத
நன்மைகள் செய்தவர் இயேசு ஒருவரே

2. தனிப்புகழ் பெற்றவர் தனித்தன்மை
வாய்ந்தவர் இயேசு ஒருவரே
அழிந்திடா உன்னத வார்த்தைகள்
சொன்னவர் இயேசு ஒருவரே நீடித்த
பெயரும் நிலையாக பெற்றவர் இயேசு ஒருவரே
ஆத்மீக தாகம் தீர்த்திட வல்லவர் இயேசு ஒருவரே

3. வசனங்கள் நிறைவேற சரித்திரம்
படைத்தவர் இயேசு ஒருவரே
மரணத்தை வென்று ஜெயமாக
நின்றவர் இயேசு ஒருவரே
சீக்கிரம் மீண்டும் வருவேன்
என்றவர் இயேசு ஒருவரே
இதயங்கள் மாற்றி புதுவாழ்வு
தருபவர் இயேசு ஒருவரே

Tamil Hymns

656. உலகமெல்லாம் எனக்காதாயம் என

உலகமெல்லாம் எனக்காதாயம்
என வாழ்ந்தவர் மகிழ்ந்ததில்லை
ஆன்மாவே எனக்காதாயம்
என வாழ்ந்தால் கவலையில்லை
அழியும் செல்வம் சேர்ப்பதா
அழியா ஆன்மாவை காப்பதா
கேள்விக்கு பதிலாய் வாழ்ந்தவர் யார்!
அவரே புனித சவேரியார்!

1. பொன்னும் பொருளும் தேடுகிறோம்
பட்டம் பதவியை நாடுகிறோம்!
எதுவும் நிறைவு தருவதில்லை
எதிலும் மகிழ்ச்சி நிலைப்பதில்லை
முடிவில்லாதது ஒன்றே தான்
அழிவில்லாத ஆன்மா தான்

2. அறிவும் திறனும் அமைவதில்லை
உறவும் நட்பும் தொடர்வதில்லை
தேடும் எதுவும் கிடைப்பதில்லை
கிடைக்கும் பலவும் நிலைப்பதில்லை

657. உலகம் தந்திடும் அன்பு மாயையே

உலகம் தந்திடும் அன்பு மாயையே
இயேசு தந்திடும் அன்பு போதுமே - (2)

இயேசுவே வாருமே
உம் நேசத்தை தாருமே
இயேசுவே வாருமே
உம் வல்லமை தாருமே

1. பரிசுத்த ஸ்தலத்துக்குள் அழைத்து செல்லுமே
பரிசுத்த ஆவியால் நிரம்ப வேண்டுமே

2. மாம்சத்தின் கிரியைகள் அழிய வேண்டுமே
ஆவியின் பெலத்தினால் நிறைய வேண்டுமே

3. உமக்காய் வாழ்ந்திட கிருபை தாருமே
உம் ஊழியம் செய்திட வரங்கள் வேண்டுமே

658. உலகம் தராத அன்பை

உலகம் தராத அன்பை
தருவாய் இயேசு பாலா
பலம் இல்லை என்ற நெஞ்சில்
அருள் கூரும் தேவ பாலா

1. வானோர்கள் சேனை பாட
மேய்ப்பர்கள் தேடி சென்றார்
மாமன்னர் பொன்னும் தந்தார்
நான் என் செய்வேன் தேவ பாலா
என் உள்ளம் உன் சொந்தம் பாலா

2. கரைகாணா துன்ப வெள்ளம்
புரண்டோடும் வேளை வந்தீர்
திருக் கைகள் மீட்டி என்னை
உம் அருகில் அணைத்து கொண்டீர்
உம் அருகில் அணைத்து கொண்டீர்

659. உலகில் பாவப் பாரத்தால் சோரும்

உலகில் பாவப் பாரத்தால் சோரும் – இளைப்
பார்ந்த நரரே வந்து சேரும்

அலைசடி பட்டவரே வாரும் - எந்தன்
ஆறுதலால் அவற்றை தீரும் - பொல்லா

1. பாவி என்றெண்ணி திகைப்போரும் - எந்தன்
பாவம் தீராதென்றிப்போரும்
ஆவலாய் ஓடிவந்து சேரும் - நான்
ஆகாமியர்க்காக வந்ததோரும் - பொல்லா - உலகில்

2. இளமை என்றே எண்ணி நில்லாதே - சாவும்
இளமை என்று சொல்லிச் செல்லாதே;
வளமாய் வருவதைத் தள்ளாதே - கெட்ட
வழக்கமதையே கைகொள்ளாதே - பொல்லா - உலகில்

3. வாலிபப் பிராயமிதில் நாளும் - இன்ப
வாழ்வு சுகிக்கவென்று மாளும்;
சீலரே, இன்றென்னுரை கேளும், அவை
சேர்க்கும் நரகத்தில் எந்நாளும் - பொல்லா - உலகில்

4. காலம் கடந்த கிழவோரே - வீணாய்க்
காலம் கழித்தே உழல்வோரே,
காலமே தேட மறந்தோரே - உங்கள்
கவலையைத் தீர்ப்பேன் அறிவீரே – பொல்லா – உலகில்

Tamil Hymns

660. உலகில் வந்தார் தெய்வ சுதன்

உலகில் வந்தார் தெய்வ சுதன்
வையம் போற்றும் வல்ல பரன்
அதிக் குளிரில் நடு இரவில்
உதித்தனரே மானிடனாய்

1. பெத்தலையில் மாடடையில்
புல்லணையில் அவதரித்தார்
வேதத்தின் சொல் நிறைவேறிட
தேவன் வந்தார் நம்மை மீட்டிடவே

2. வான சேனை கீதம் பாடி
வாழ்த்தினரே விண்ணவனை
உன்னதத்தில் மாமகிமை
மண்ணுலகில் சமாதானமே

661. உலகின் வாஞ்சையான

1. உலகின் வாஞ்சையான
என் ஸ்வாமி இயேசுவே
நான் உம்மை ஏற்றதான
வணக்கத்துடனே
சந்திக்கச் செய்வதேன்ன.
நான் தேவரீருக்கு
செலுத்த உமக்கென்ன
பிரியமானது.

2. நீர் சேர்கையில் களிக்கும்
சீயோன் கிளைகளை
வழியிலே தெளிக்கும்;
நான் உமதுண்மையை
சங்கீதத்தால் துதிப்பேன்,
மகிழ்ச்சியுடனே
நான் உம்மை தோத்தரிப்பேன்
பெரிய கர்த்தரே.

3. நான் யாதொரு கதியும்
இல்லாதே போனோனாய்
நிர்ப்பந்தமுங் கெடியும்
நிறைந்தவனுமாய்
இருந்தபோதன்பாக
நீர் என்னை நோக்கினீர்
நீரே என் மீட்புக்காக
வெளிப்படுகிறீர்.

4. கட்டுண்ட நான் கிடந்தேன்,
நீர் கட்டவிழ்க்கிறீர்;
இகழ்ச்சியைச் சுமந்தேன்,
நீர் அதை நீக்கினீர்;
நீர் என்னை மேய்மையாக்கி,
என் ஆத்துமத்திலே
ஐஸ்வரியவானாக்கி
ரட்சிக்க வந்தீரே.

5. மகா நிர்ப்பந்தத்தாலே
அழிவதாகிய
உலகைத்தயவாலே,
நீர் பார்த்திருக்கிற
சிநேகந் தேவரீரை

Tamil Hymns

அடியாரண்டைக்கு
வந்தெங்கள் கெட்ட சீரைத்
திருத்த ஏவிற்று.

6. வியாகுலம் அடைந்த
ஜனத்தின் கூட்டமே,
இக்கட்டினால் நிறைந்த
ஆதாமின் வம்சமே,
இதோ, சகாயர் வந்தார்
கர்த்தர்கெட்டோருக்கு;
அத்தால் மகிழ்ந்திரு.

7. இங்கிந்த்த் தெய்வப் பிள்ளை
இறங்க அவரை
இழுக்கத் தேவையில்லை;
தாம் தாமே உங்களை
அன்பாய்ச் சந்திப்பதற்கு
இறங்கி வந்தாரே:
ரட்சிப்பவரவர்க்குச்
சமீபமாகவே.

8. சுமந்த குற்றத்தாலே
கலங்கினோருக்கும்
இம்மானுவேலினாலே
கிலேசம் ஆறிடும்;
பாவக் கடன் செலுத்த,
நாதரைத் தம்மிலே
ஆரேக்கியப்படுத்த
வருவார் அவரே.

9. நெஞ்சே, துன்மார்க்கருக்கும்
பகைஞர் உனக்கு
உண்டாக்குந் துன்பத்துக்கும்
பயப்படாதிரு;
உன் மீட்பர் ராஜாவாக
வருகிறாரல்லோ,
அவருக்கு முன்பாக
பேய்க் கூட்டம் நிற்குமோ?

10. பொல்லதாவர்களுக்கு
மா ஆக்கினைகளும்
நல்லோரின் கூட்டத்துக்கு
அனந்த பூரிப்பும்

Tamil Hymns

முடிவிலே உண்டாக
அந்நாள் வருவீரே.
அடியார் மீட்புக்காக
நீர் வாரும், இயேசுவே.

662. உலகின் இரட்சகரே உன்னத குமாரனே

உலகின் இரட்சகரே உன்னத குமாரனே
ஜீவ ஒளியாய் உதித்தவரே
ஜீவன் தந்திட வந்தவரே

போற்றிடுவோம் நாம் புகழ்ந்திடுவோம்
இயேசுவின் திருநாமத்தை
இயேசு பிறந்த இந்நாளிலே
எல்லாரும் கொண்டாடுவோம்

1. இருளில் நடக்கும் ஜனங்களை
வெளிசத்தில் நடத்துவீர் மரண
இருளை நீக்கி நம்பிக்கை கொடுத்தீர்

2. மனதின் பாரம் நீங்கிடும்
இயேசு பிறந்ததால் சாத்தானின்
வல்லமை அழிந்திடும் இயேசு வந்ததால்

Tamil Hymns

663. உலகின் ஒளியே இயேசுவே அகிலம்

1. உலகின் ஒளியே இயேசுவே
அகிலம் போற்றும் தெய்வமாய்
அன்பின் தெய்வம் வேறு இல்லை
அவரை அண்டியே சேர்ந்திடுவாய்

இயேசு நல்லவரே
இயேசு வல்லவரே
மனதின் இருளை நீக்கிடுவார்
உள்ளம் திறந்தே ஏற்பாய்

2. பாவம் போக்க வந்தார்
சாபம் யாவும் நீக்குவார்
இவரை அல்லால் வழியும் இல்லை
அகத்தில் இவரை ஏற்றிடுவாய்

3. பயங்கள் யாவும் அகற்றிடவே
பரிவாய் வந்தார் உலகினிலே
சாவை ஜெயித்தார் ரோகம் தொலைத்தார்
உந்தன் நாயகனாம் இவரை

4. தேவ மைந்தனாய் வந்தவர்
மாளும் மாந்தரை மீட்கவே
கருணை தேவன் அன்பின் தெய்வம்
எந்தன் நாயகனாம் இவரே

Tamil Hymns

664. உலகின் ஒளியே வாழ்க உயிர்ப்பிக்கும்

உலகின் ஒளியே வாழ்க!
உயிர்ப்பிக்கும் தேவனே நீர் வாழ்க
பரிசுத்த ஆவியே வாழ்க
பணிந்து போற்றுகிறோம்

1. மகிமையாய் வெற்றி சிறந்தவரே
மாட்சிமை உள்ளவரே உன்னதரே,
உயர்ந்தவரே, உண்மையுள்ளவரே

2. சிலுவையில் வெற்றி சிறந்தவரே
சிலுவையின் நாயகரே வல்லவரே,
நல்லவரே, அன்பு மிகுந்தவரே

3. ஆதியும் அந்தமும் ஆனவரே
அதிசயமானவரே அன்பரே,
நண்பரே, அற்புதமானவரே

4. சாத்தானின் செயல்களை அழித்தவரே
சந்ததம் உள்ளவரே சத்தியரே
சகாயரே, சாவாமையுள்ளவரே

5. சீக்கிரம் வருவேன் என்றவரே
சீயோனின் அதிபதியே இனியவரே,
பெரியவரே இரக்கமானவரே

Tamil Hymns

665. உலகோர் உன்னைப் பகைத்தாலும்

1. உலகோர் உன்னைப் பகைத்தாலும்
உண்மையாய் அன்பு கூருவாயோ (2)
உற்றார் உன்னை வெறுத்தாலும்
உந்தன் சிலுவை சுமப்பாயோ

உனக்காக நான் மரித்தேனே
எனக்காக நீ என்ன செய்தாய்

2. உலக மேன்மை அற்பம் என்றும்
உலக ஆஸ்தி குப்பை என்றும்
உள்ளத்தினின்று கூருவாயோ
ஊழியம் செய்ய வருவாயா

3. மேய்ப்பன் இல்லாத ஆடுகள் போல்
மேய்கிறார் பாவப்புல் வெளியில்
மேய்ப்பன் இயேசுவை அறிந்த நீயும்
மேன்மையை நாடி ஓடுகின்றாயோ

4. இயேசு என்றால் என்ன விலை
என்றே கேட்டிடும் எத்தனை பேர்
பிள்ளைகள் அப்பம் கேட்கின்றனர்
ஜீவ அப்பம் கொடுப்பாயா

5. ஐந்து சகோதரர் அழிகின்றாரே
யாரையாவது அனுப்பிடுமே (2)
யாரை நான் அனுப்பிடுவேன்
யார்தான் போவார் எனக்காக

666. உலர்ந்த எலும்புகள் உயிர்பெற்று எழ

உலர்ந்த எலும்புகள் உயிர்
பெற்று எழ வேண்டும் - ஒன்று
சேர்ந்து முழு மனிதனாக வேண்டும்
அசைவாடும் இன்று அசைவாடும்
ஆவியான தேவா

1. நரம்புகள் உண்டாகட்டும்
உம் சிந்தை உண்டாகட்டும்

2. சதைகள் உண்டாகட்டும்
உம் வசனம் உணவாகட்டும்

3. தோலினால் மூடணுமே
பரிசுத்தமாகணுமே

4. காலூன்றி நிற்கணுமே
கர்த்தரோடு நடக்கணுமே

5. சேனையாய் எழும்பணுமே
தேசமெங்கும் செல்லணுமே

6. சாத்தானை ஜெயிக்கணுமே
சாட்சியாய் நிற்கணுமே

7. மறுபடி பிறக்கணுமே
மறுரூபம் ஆகணுமே

8. பயங்கள் நீங்கணுமே
பரிசுத்தமாகணுமே

Tamil Hymns

667. உள்ளத்தில் அவர்பால்

உள்ளத்தில் அவர்பால்
பேரன்புள்ளோரெல்லாம்
எண்ணத்தில் தெளிவை பெறுவீர்
சொல்லதில் கூறுவீர் வாழ்வதில் சாதிப்பீர்
இயேசு தேடும் நபர் இவரே

1. பரமன் பேரிலே பற்றுக் கொண்டோரெல்லாம்
எளிதில் புரிவார் அவரின் பாரத்தை
உலகின் பேரிலே இயேசுவின் அக்கரை
தமதாக்கியவர் வாழுவார், மாளுவார்
உண்மை அடியவர் இயேசுவை அறிவார்
தம்மையே அவர்க்காய் அளிப்பார்

2. தேசங்கள் தீவுகள் பல பிராந்தியங்கள்
பாவத்தால் நிறைந்து சாபமாகிறது
திறப்பின் வாயிலே நிற்கத்தக்கதாக
தேவன் தேடும் நபர் நம்மிலே யார் யாரோ?

3. செல்வம் சீர் சிறப்பு நற்குடிப் பிறப்பு
செல்வாக்கு அந்தஸ்து படாடோபவஸ்து
யாவையும் பெரினும் சாகையில் என் செய்வீர்?
உலகின் சம்பத்து குப்பை என்றே சொல்வீர்

Tamil Hymns

668. உள்ளத்தின் மகிழ்ச்சி நீர்தானையா

உள்ளத்தின் மகிழ்ச்சி நீர்தானையா
இல்லத்தில் எல்லாமே நீர்தானையா -என்
என் தேவையெல்லாம் நீர்தானே
ஜீவனுள்ள நாளெல்லாம்

1. வழிகள் அனைத்தையும்
உம்மிடம் ஒப்படைத்தேன்
என் சார்பில் செயலாற்றுகிறீர்
எல்லாமே செய்து முடிப்பீர்

2. பட்டப்பகல்போல, (என்)
நீதியை விளங்கச் செய்வீர்
நோக்கி அமர்ந்திருப்பேன்,
உமக்காய்க் காத்திருப்பேன்

3. கோபங்கள், ஏரிச்சல்கள்
அகற்றி ஏறிந்து விட்டேன்
நம்பியுள்ளேன் உம்மையே,
நன்மைகள் செய்திடுவேன்

4. பாதத்தில் வைத்து விட்டேன்,
பாரங்கள், கவலைகள் - உம்
தள்ளாட விடமாட்டீர்
தாங்கியே நடத்திச் செல்வீர்

669. உள்ளமெல்லாம் உருகுதையோ

1. உள்ளமெல்லாம் உருகுதையோ
உத்தமனை நினைக்கையிலே
உம்மை யல்லால் வேறே தெய்வம்
உண்மையாய் இங்கில்லையே
கள்ளனென்றும் தள்ளிடாமல்
அள்ளி என்னை அணைத்தவா
சொள்ளடங்கா நேசத்தாலே உன்
சொந்தமாக்கிக் கொண்டீரே

2. எந்தன் என்னை உத்தமனாக்க
சித்தம் கொண்டீர் என் ஏசையா
எத்தனையோ துரோகம் நான் செய்தேன்
அத்தனையும் நீர் மன்னித்தீர்
இரத்தம் சிந்த வைத்தேனே நான்
அத்தனையும் என் பாவமல்லோ
கர்த்தனே உம் அன்புக்கீடாய்
நித்தம் செய்வேன் உம் சேவையே

3. மேக மீதில் இயேசு ராஜன்
வேகம் தோன்றும் நாளொன்றோ
லோக மீதில் காத்திருப்போர்
ஏக்க மெல்லாம் தீர்ந்திட
தியாக ராஜன் ஏசுவை நான்
முகமுகமாய் தரிசிக்க
ஆவலோடு ஏங்கும் தாசன்
சோகம் நீங்கும் நாள் என்றோ?

Tamil Hymns

670. உள்ளம் ஆனந்த கீதத்திலே

உள்ளம் ஆனந்த கீதத்திலே
வெள்ளமாகவே பாய்ந்திடுதே
எந்தன் ஆத்தும நேசரையே
என்றும் வாழ்த்தியே பாடிடுவேன்

1. பாவ பாரம் நிறைந்தவனாய்
பல நாட்களாய் நான் அலைந்தேன்
அந்த பாரச் சிலுவையிலே
எந்தன் பாரங்கள் சுமந்தவரே

2. மலை போன்றதோர் சோதனையில்
மகிபன் அவர் கைபிடாரே
கல்வாரியின் அன்பினிலே
கனிவோடுன்னை அணைத்திடுவார்

3. உலகம் முடியும் வரைக்கும்
உந்தனோடிருப்பேன் என்றவர்
வாக்கு மாறிடா நேசரையே
நம்பிடுவாய் துணை அவரே

671. உள்ளம் எல்லாம் உருகுதய்யா உந்தன்

உள்ளம் எல்லாம் உருகுதய்யா உந்தன்
அன்பை நினைக்கையிலே
தன்னாலே கண்ணு கலங்குது
கர்த்தாவே உம்மை நினைக்குது

இந்த தெள்ளுப் பூச்சிக்கும்
நல்ல வாழ்க்கையை தந்தீரே
என்னை நல்லவனாக்கி அல்லையில்
வைத்துக் கொண்டீரே

1. கருவினில் அநாதையானேன்
தெருவினில் நான் கிடந்தேன்
அருகினில் வந்து என்னை
அணைத்த அன்பு தெய்வமே
அற்புதமே அதிசயமே உம்மை
நான் என்றும் மறவேன்

2. தேற்றிட ஒருவரில்லை
ஆற்றிட யாருமில்லை
தூற்றிட பலருண்டு
சேற்றை வீசும் மனிதருண்டு
ஏற்றிடும் என் விளக்கை
தேற்றும் எந்தன் தெய்வமே
சற்பரனே பொற்பரனே உம்மை
நான் என்றும் துதிப்பேன்

3. ஊரெல்லாம் சென்றிடுவேன்
உந்தன் நாமம் பறை சாற்றிடுவேன்
தெருவெல்லாம் ஏசுவே என்று
உம் நாமம் உயர்த்திடுவேன்
ஆளுகை செய்யும் என்னை
எந்தன் அன்பு தெய்வமே
உம்மையன்றி இவ்வுலகில்
ஆறுதல் எனக்கு யாருமில்லை

Tamil Hymns

672. உறக்கம் தெளிவோம்

உறக்கம் தெளிவோம் உற்சாகம் கொள்வோம்
உலகத்தின் இறுதிவரை
கல்வாரித் தொனிதான் மழை மாறி பொழியும்
நாள்வரை உழைத்திடுவோம்

1. அசுத்தம் களைவோம் அன்பை அழைப்போம்
ஆவியில் அனலும் கொள்வோம்
அவர் படை ஜெயிக்க நம்மிடை கருத்து
வேற்றுமையின்றி வாழ்வோம்

2. அச்சம் தவிர்ப்போம் தைரியம் கொள்வோம்
சரித்திரம் சாட்சி கூறும்
இரத்தச் சாட்சிகள் நம்மிடை தோன்றி
நாதனுக்காய் மடிவோம்

3. கிறிஸ்துவுக்காய் இழந்தவர் எவரும்
தரித்திரர் ஆனதில்லை -இராஜ்ய
மேன்மைக்காய் கஷ்டம்
அடைந்தோர் நஷ்டப்பட்டதிலை

4. உயிர் பெறுவீர் ஒன்று கூடுவீர்
உலர்ந்த எலும்புகளே
நீங்கள் அறியா ஒருவர் உங்கள்
நடுவில் வந்துவிட்டார்

Tamil Hymns

673. உறைவிடமாய் தெரிந்து கொண்டு

உறைவிடமாய் தெரிந்து கொண்டு
உலவுகிறீர் என் உள்ளத்திலே
பிள்ளையாக ஏற்றுக்கொண்டு
பேசுகிறீர் என் இதயத்திலே

அப்பா தகப்பனே உம்மை பாடுவேன்
ஆயுள் நாளெல்லாம் உம்மை உயர்த்துவேன்

1. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தம் ஏது?
ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் ஏது?

விட்டுவிட்டேன் பிரிந்து விட்டேன்
தீட்டானதை, தொடமாட்டேன்

2. உலக போக்கோடு உறவு எனக்கில்லை
சாத்தான் செயல்களோடு
தொடர்பு எனக்கில்லை

3. தூய்மையாக்கினேன் ஆவி ஆத்துமாவை
தெய்வ பயத்துடன் பூரணப்படுத்துவேன்

4. பயனற்ற இருளின் செயல்களி
வெறுக்கிறேன் - அதை செய்யும்
மனிதரை கடிந்து கொள்கிறேன்

5. அந்நிய நுகத்தோடு
பிணைப்பு எனக்கில்லை
அவிசுவாசிகளின் ஐக்கியம் எனக்கில்லை

Tamil Hymns

674. உனக்காய் மரித்தேன்

உனக்காய் மரித்தேன் ஆனாலும் சதா காலமும்
உயிரோடெழுந்தேன் இதோ
ஜீவிக்கிறேன் என்றாரே - இயேசு (2)

சீயோனே! கெம்பீரி! சாலேமே! நீ ஸ்தோத்தரி
துதியே கனமே மகிமை செலுத்து! (2)
என் மீட்பர் உயிரோடிருக்கின்றார்! ஆமென் அல்லேலூயா! (2)

1. வாக்கு மாறாதவரே இயேசு
சொல் தவறாதவரே
சொன்னபடி அன்று உயிர்த்தெழுந்தாரே --- சீயோனே

2. சுத்த திருச்சபையே பறை
சாற்றிடு நற்செய்தியை
சாவையும், பேயையும், நோயையும் ஜெயித்தார் --- சீயோனே

3. பாலகர் வாயினிலே - துதி
பாடல்கள் முழங்குதே
போற்றிப் பாடும் வாயை அடக்கக் கூடாதே --- சீயோனே

4. தள்ளினோம் ஆகாதென்றே - ஆனார்
தலைக்கு மூலைக்கல்லாய்
ஸ்திரமாய் கர்த்தர் மேல் வாழ்க்கையைக் கட்டுவோம் --- சீயோனே

5. அன்றாடகம் என்னுடன் - பேசி
அன்பாய் விசாரிக்கின்றார்
என்னோடு ஜீவிக்க இயேசு உயிர்த்தாரே --- சீயோனே

6. நம்பிக்கையுள்ள வல்ல - ஜீவ
நல்ல மார்க்கமிதுவே
நாமும் உயிர்த்து நம் கர்த்தரைச் சேருவோம் --- சீயோனே

Tamil Hymns

675. உனக்கும் எனக்கும் தேவன் தந்த

உனக்கும் எனக்கும் தேவன் தந்த
காலம் அல்லவா - இதை
உணராமல் ஜீவிப்பது பாவம் அல்லவா!
பிறருக்காக வாழும் வாழ்க்கை
உன்னதம் அல்லவா - இதை
அறிந்து உண்ர்ந்து வாழும்போது
இலாபம் அல்லவா!

1.வந்துபோன மனிதர் எல்லாம்
உலகம் நினைப்பதில்லை
மரித்தும் பேசும் மனிதர் உண்டு
என்றும் அவர்கள் கொஞ்சமே
தியாகத்தோடு தீபமாக
வாழ்ந்த தேவ மனிதரை
இதிகாசம் மறந்ததாக
சேதி ஒன்றும் இல்லையே!!

2.அருவி போன்ற ஆசிர்வாதம்
பெற்று மகிழ வாருங்கள்
ஆவியாலே உள்ளம் பொங்கி
துள்ளி சேவை செய்யுங்கள்
பிறருக்காக சேவை செய்து
மகிழ்ச்சி வெள்ளமாக்குங்கள்
திரள் ஜனத்தை சிலுவை பக்கம்
கொண்டு வந்து சேருங்கள்

676. உனக்குள்ளே இருக்கின்ற உன்

உனக்குள்ளே இருக்கின்ற உன்
இயேசு என்றும் பெரியவரே
நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான
பெரிய காரியங்களை செய்திடுவார்

1. நம்பிக்கை இல்லா நிலையானதோ
விசுவாசம் உன்னில் குறைவானதோ
அற்புதர் உனக்குள் இருகின்றார்
அதிசயம் செய்வார் நீ கலங்காதே
அதிசயம் செய்வார் நீ கலங்காதே

2. சூழ்நிலை எல்லாம் எதிரானதோ
சுற்றத்தார் உன்னில் பகையானாரோ
வல்லவர் உனக்குள்ளே இருக்கின்றார்
வலக்கரம் தாங்குவார் கலங்காதே
வலக்கரம் தாங்குவார் கலங்காதே

3. மதுரமான வாழ்வு கசப்பானதோ
ஒளிவரும் நேரம் இருளானதோ
ஜீவனுள்ள தேவன் இருக்கின்றார்
யாவையும் செய்வார் கலங்காதே
யாவையும் செய்வார் கலங்காதே

677. உனக்கொத்தாசை வரும் நல் உயர்

உனக்கொத்தாசை வரும் நல் உயர் பருவதம் இதோ!
தினமும் மனது நொந்து சிந்தை கலங்குவானே

1. வானம் புவி திரையும் வகுத்த நன்மைப் பிதாவின்
மாட்சிமையின் கரமே வல்லமையுள்ள தல்லோ? - உனக்கொத்தாசை

2. காலைத் தள்ளாட வொட்டார் கரத்தைத் தளர வொட்டார்;
மாலையுறங்க மாட்டார் மறதியாய்ப் போக மாட்டார் - உனக்கொத்தாசை

3. கர்த்தருன்னைக் காப்பவராம் கரமதில் சேர்ப்பவராம்
நித்திய முந்தனுக்கு நிழலாயிருப்பவராம் - உனக்கொத்தாசை

4. பகலில் வெயிலெனிலும் இரவில் நிலவெனிலும்
துயர் தருவதுமில்லை துன்பஞ் செய்வதுமில்லை - உனக்கொத்தாசை

5. தீங்கு தொடராதுன்னை தீமை படராதுன்மேல்
தாங்குவோர் தூதர் கோடி தாளிடறாதபடி - உனக்கொத்தாசை

6. போக்கும் ஆசீர்வாதாமாம் வரத்தும் ஆசீர்வாதமும்;
காக்கைக் குஞ்சுகள் முதல் கதறி நம்பிவிடுமே - உனக்கொத்தாசை

7. துன்ப துயரத்திலும் துக்க சமயத்திலும்
இன்பமுறும் பொழுதும் எல்லாம் உனக்கவரே - உனக்கொத்தாசை

Tamil Hymns

678. உனக்கொரு நண்பன் இல்லை என்று

உனக்கொரு நண்பன் இல்லை என்று
ஏங்குகின்றாயோ இப்பூமியிலே

1. அன்னையைப்போல ஆதரிப்பார்
அல்லும் பகலும் காத்திடுவார்
நீ கிருபையில் வாழ வழிவகுத்தார்
சோராமல் என்றும் வாழ்ந்திடவே

2. தகப்பனும் தாயும் கைவிட்டாலும்
தேவன் உன்னை கைவிடவேமாட்டார்
தம் செல்வம் போல ஆதரிப்பார்
கண்மணிப்போல உன்னை பாதுகாப்பார்

உனக்கொரு நண்பன் இயேசு உண்டு
அரவணைக்க ஒரு தகப்பன் உண்டு

679. உனக்கொருவர் இருக்கிறார் உன்னை

உனக்கொருவர் இருக்கிறார்
உன்னை விசாரிக்கத் துடிக்கிறார்
உன்னையும் என்னையும் இயேசு நேசிக்கிறார்
நம்மை உள்ளங்கைகளில்
வரைந்திருக்கிறார் - 2

1. சாதிசனம் மறந்திட்டாலும் மறந்திடாதவர்
ஜோதிகளின் பிதாவாம் இயேசுவானவர்
சூழ்நிலைகள் மாறினாலும் இயேசு உன்னை மறப்பதில்லை
சிலுவையில் ஜீவன் விடும் நேரத்திலும் வெறுக்கவில்லை

2. ஆகாதவன் என்று உன்னை யார்தள்ளினாலும்
ஆபிரகாமின் தேவன் உன்னை தள்ளிவிடுவாரோ
தஞ்சம் என்று வருபவரைத் தள்ளாத நேசர் அவர் - 2
அஞ்சிடாதே மகளே, மகனே என்று உன்னைத் தேற்றிடவே

3. வியாதியஸ்தன் என்று உன்னை ஒதுக்கி வைப்பார்கள்
வேண்டாத வார்த்தைகளைச் சொல்லி புண்படுத்துவார்கள்
வாழ்வதா சாவதா என்று நீ அழுது புலம்பிடுவாய்
வாழத்தான் வேண்டுமென்று வியாதியிலே சுகம் தரவே

4. கஷ்டப்படும் போதும் நமக்கு உதவுவாரில்லை
கடன்பட்ட போது அதை தீர்ப்பவரில்லை
இஷ்டப்பட்ட தெய்வத்தையெல்லாம் கும்பிட்டும் பாத்தாச்சு
நம்ம கஷ்டங்களை தீர்க்க அவை முன் வரவில்லை

5. உலகத்தில் தெய்வங்கள் உண்டென்று
சொல்வதெல்லாம் சும்மாங்க
இயேசு கிறிஸ்து ஒருவரே மெய்யான தெய்வமுங்க
ஜனங்களின் பாவம் நீக்கி இரட்சிக்க வந்த தெய்வமுங்க

Tamil Hymns

680. உன் தருணம் இதுவென்று உணர்ந்திடுவாய்

உன் தருணம் இதுவென்று
உணர்ந்திடுவாய் மகனே
ஒரு தருணம் இது போல
மறுமுறை வந்திடுமோ அறியாய்

1. பணம் போனால் வந்திடலாம்
காலம் வந்திடுமா
பொருள் போனால் வந்திடலாம்
வாலிபம் வந்திடுமா

2. மரணத்தினை நோக்கி நிதம்
பயணம் தொடர்கின்றோம்
வெறுத்தாலும் மறுத்தாலும் - அந்த
பயணம் விடுவதில்லை

3. காலங்களும் தருணங்களும்
உனக்காய் நிற்பதில்லை
செலவழிக்க ஒரு நிமிடம்
மறுபடி வருவதில்லை - அதனால்

4. உயிர்த்தெழுந்த இயேசுவையே
நோக்கியே திரும்பிடுவாய்
விலையில்லா இரட்சிப்பையே
இன்றே அடைந்திடிடுவாய் - வாராய்

681. உன் வாசல் திற சீயோனே

1. உன் வாசல் திற, சீயோனே
மெய்ப் பொருளானவர்
தாமே ஆசாரி பலியாய்
உன்னிடம் வந்தனர்.

2. கடாக்கள் ரத்தம் சிந்தல் ஏன்?
பிதாவின் மைந்தனார்
தம் பீடமீது பாவத்தின்
நிவாரணம் ஆனார்.

3. தன் பாலன் ஸ்வாமி என்றோர்ந்தே
தூய தாய் மரியாள்
ஓர் ஜோடு புறாக் குஞ்சுகள்தான்
காணிக்கையாய் வைத்தாள்.

4. தாம் எதிர்பார்த்த கர்த்தரை
அன்னாள் சிமியோனும்
கண்ணுற்ற சாட்சி கூறினார்
ஆனந்தமாகவும்.

5. சௌபாக்யவதி மாதாவோ
தன் நெஞ்சில் யாவையும்
வைத்தெண்ணியே வணங்கினாள்
மா மௌனமாகவும்.

6. பிதா, குமாரன், ஆவிக்கும்
நீடுழி காலமே
எல்லாக் கனம், மகிமையும்
மேன்மேலும் ஓங்குமே.

682. உன் வெட்கத்திற்கு பதிலாக

உன் வெட்கத்திற்கு பதிலாக
இரட்டிப்பான பலன் வரும்
உன் இலட்சைக்கு பதிலாக
நித்திய மகிழ்ச்சி வரும்

துதித்திடுவோம் போற்றிடுவோம்
மகிழ்ந்திடுவோம் ஸ்தோத்தரிப்போம்

1. சாம்பலுக்கு பதிலாக
சிங்காரம் கொடுப்பாரே
துயரத்திற்கு பதிலாக
தைலத்தை கொடுப்பாரே - ஆனந்த

2. சோர்வை எல்லாம் மாற்றிடுவார்
துதியின் உடை தருவார்
நீதி தேவன் சரிக்கட்டுவார்
ஆறுதல் தந்திடுவார் - நல்ல

3. திறந்த வாசல் உனக்கு உண்டு
திகையாதே கலங்காதே
அவர் நாமத்தை தொழுதிடுவாய்
மகிமையை அடைந்திடுவாய் – அவர்

Tamil Hymns

683. உன் நெஞ்சிலே உண்டான விசாரங்களை

1. உன் நெஞ்சிலே உண்டான விசாரங்களை நீ
கர்த்தாவின் உண்மையான கரத்துக் கொப்புவி
விண்மண்ணை ஆண்டிருக்கும் மகா தயாபரர்
உன் காரியங்களுக்கும் வழியுண்டாக்குவார்.

2. ஜெயமடைந்து வாழ கர்த்தாவைப் பிள்ளைபோல்
நீ நம்பி மனதார பணிந்து பற்றிக்கொள்
உன் கவலைகளாலே பயம் ரட்டிக்குது
வேண்டாம் ஜெபத்தினாலே நீ வேண்டிக்கொண்டிரு.

3. இக்கட்டுகளினாலே கலங்கினோனே நீ
திடன்கொள் கர்த்தராலே இக்கட்டின் ராத்திரி
சந்தோஷமாக மாறும் சற்றே பொறுத்திரு
நீ பூரிப்பாய்க் கொண்டாடும் நாள் வரப்போகுது.

4. கர்த்தாவே எங்களுக்கு எல்லா இக்கட்டிலும்
ரட்சிப்பளிப்பதற்கு நேரிட்டுக்கொண்டிரும்
ஆ எங்களைத் தேற்றிடும் பரகதிக்குப் போம்
வழியிலும் நடத்தும் அப்போ பிழைக்கிறோம்.

684. உன்றன் சுயமதியே

உன்றன் சுயமதியே நெறி என்று
உகந்து சாயாதே - அதில் நீ
மகிழ்ந்து மாயாதே

1. மைந்தனே, தேவ மறைப்படி யானும்
வழுத்தும்மதித னைக் கேளாய் - தீங்
கொழித் திதமாய் மனந் தாழாய் அருள் சூழாய் --- உன்றன்

2. சொந்தம் உனதுளம் என்றுநீ பார்க்கிலோ,
வந்து விளையுமே கேடு - அதின்
தந்திரப் போக்கை விட்டோடு கதிதேடு --- உன்றன்

3. துட்டர் தம் ஆலோசனைப்படியே தொடர்ந்
திட்ட மதாய் நடவாதே - தீயர்
கெட்ட வழியில் நில்லாதே அது தீதே --- உன்றன்

4. சக்கந்தக் காரர் இருக்கும் இடத்தொரு
மிக்க இருக்க நண்ணாதே அவர்
ஐக்யம் நலம் என்றெண்ணாதே அதொண்ணாதே --- உன்றன்

5. நான் எனும் எண்ணமதால் பிறரை அவ
மானிப்பது வெகு பாவம் - அதின்
மேல்நிற்குமே தேவ கோபம் மனஸ்தாபம் --- உன்றன்

Tamil Hymns

685. உன்னத ஆவியை உந்தனின் பக்தர்க்கு

உன்னத ஆவியை உந்தனின் பக்தர்க்கு
ஊற்றிடும் வல்லமையால்
ஊயிர் மீட்சி அடைந்திடவே

1. கிதியோன் மேல் வந்த ஆவியே
சிம்சோனைப் பலப்படுத்தினீர்
சோர்ந்து போகாதென்னையே
வழுவிடாது என்றுமே தாங்கிடுமே உந்தன் ஆவியால்

2. மாமிசமான யாவர் மேல்
ஊற்றிடுவேன் எந்தன் ஆவியை
என்றுரைத்த தேவா ஊற்றிடும் உம் ஆவியை
இந்த கடைசி நாளிலே - உன்னத

3. பரிசுத்த தேவ ஆவியே
பரத்தை விட்டு வந்த ஆவியே
பரிசுத்தவான்கள் கூடும் இந் நேரத்தில்
பலமாக அசைவாடுமே - உன்னத

Tamil Hymns

686. உன்னத சாலேமே என்

1. உன்னத சாலேமே
என் கீதம் நகரம்
நான் சாகும் நேரமே
மேலான ஆனந்தம்.

விண் ஸ்தானமே!
கர்த்தா, எந்நாள்
உம் திருத் தாள்
சேவிப்பேனே!

2. பூவில் தகாரென்றே
தீர்ப்புற்ற நாதனார்
தம் தூதரால் அங்கே
சீர் வாழ்த்தல் பெறுவார்.

3. அங்கே பிரயாணத்தை
பிதாக்கள் முடிப்பார்
வாஞ்சித்த பிரபுவை
ஞானியர் காணுவார்.

4. தூய அப்போஸ்தலர்
சந்தோஷமாய்க் காண்பேன்
பொன் வீணை வாசிப்பவர்
இசை பாடக் கேட்பேன்.

5. சீர் ரத்தச் சாக்ஷிகள்
வெள்ளங்கி பூணுவார்
தங்கள் தழும்புகள்
கொண்டு மாண்படைவார்.

6. கேதேர் கூடாரத்தில்
இங்கே வசிக்கிறேன்;
நல் மோட்ச பாதையில்
உம்மைப் பின்பற்றுவேன்.

687. உன்னத தேவன் உன்னுடன் இருக்க

உன்னத தேவன் உன்னுடன் இருக்க
உள்ளமே கலங்காதே
அவர் நல்லவரே என்றும் வல்லவரே
நன்மைகள் குறையாதே

1. அந்நாளில் தம் பாதம்
அமர்ந்த அந்நாளின் ஜெபம் கேட்டார்
அனாதையாய் திரிந்த
அந்த ஆகாரின் ஜெபம் கேட்டார் - உன்னத

2. பாவத்தில் இருந்த உன்னை
பரிசுத்தமாக்கினாரே
தாழ்மையில் கிடந்த உன்னை
தம் தயவால் தூக்கினாரே - உன்னத

3. இயேசு உன் முன் நடந்தால்
நீ யோர்தானைக் கடந்திடலாம்
விசுவாசம் உனக்கிருந்தால்
அந்த எரிகோவைத் தகர்த்திடலாம் - உன்னத

Tamil Hymns

688. உன்னத தேவன் உன்னை

உன்னத தேவன் உன்னை அழைக்கிறார்
நம்பியே வந்திடுவாய்

சிலுவை சுமந்தே
உனக்காய் அவர் மரித்தாரே

1. பாவத்தில் அழியாதே
தேவனை மறவாதே
இருதயத்தைத் தட்டுகிறார்
இன்றதை திறந்தளிப்பாய் - உன்

2. இன்று உன் ஜீவன் போனால்
எங்கு நீ சென்றிடுவாய்
இந்த வேளை சிந்தனை செய்
இயேசுன்னை அழைக்கிறாரே - உன்

3. நரகத்தின் பாதையிலும்
மரணத்தின் வழிகளிலும்
உல்லாசமாய் நடப்பது ஏன்
உண்மையாய் அறிந்திடுவாய் - உன்

4. தம்மிடம் வருபவரைத்
தள்ளிடவே மாட்டார்
அன்புகரம் விரித்தவராய்
ஆண்டவர் அழைக்கிறாரே

689. உன்னத தேவன் என்னோடு இருக்க

உன்னத தேவன் என்னோடு இருக்க
பயப்படவே மாட்டேன்
காருண்ய தேவன் என்னோடு இருக்க
கலங்கிடவே மாட்டேன்

1. கோலும் தடியும் தேற்றி நடத்துமே
கண்ணீரை துடைத்திடுவார் தாயை
போல் தேற்றிடும் உன்னத தேவன் இவரே
கைவிடவே மாட்டார்

2. சோதனை சகிக்க பெலன் எனக்களிப்பார்
பெலப்படுத்தும் கிறிஸ்துவினால்
எல்லாம் செய்ய பெலன் எனக்களிப்பார்
இயேசு கைவிடவே மாட்டார்

3. கர்த்தர் என் சார்பில் இருக்கும் போது
எனக்கெதிராய் நிற்பவன் யார்
கர்த்தரே யுத்தம் செய்திடுவார் எனக்காய்

Tamil Hymns

690. உன்னத தேவனுக்கே மகிமை உலகில்

1. உன்னத தேவனுக்கே மகிமை
உலகில் சமாதானமாமே
காரிருள் நீங்கிடக் காசினி மீதிலே
கதிரொளியாய் ஜெனித்தார்

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா துதியவர்க்கே
அல்லேலூயா துதியவர்க்கே

2. மானிடர் மேலிவர்க்கன்பிதுவோ
மனுக் கோலமாய் மனுவேலனார்
மாட்சிமை யாவையும் துறந்தே இவ்வுலகில்
மாணொளியாய் ஜெனித்தார்

3. தாரகையென அவர் தோன்றிடவே
நேர்ப் பாதையில் நடத்திடவே
தற்பரன் கிருபையும் சத்தியம் மீந்திட
தன் ஒளியாம் ஜெனித்தார்

Tamil Hymns

691. உன்னத தேவனே என் இயேசு ராஜனே

உன்னத தேவனே என் இயேசு ராஜனே
உம்மோடு இணைந்திட
என் உள்ளம் ஏங்குதையா

1. உம் அன்பைப் பருகிட ஓடோடி வந்துள்ளேன்
உம்மாக மாறிட உலகை மறக்கின்றேன்

இரவெல்லாம் பகலெல்லாம் இதயம்
உமக்காகத் துடிக்குதையா
நினைவெல்லாம் பேச்செல்லாம்
நேசரே உம்மைப் பற்றித் தானே ஐயா

2. பேரின்பக் கடலிலே ஓய்வின்றி மூழ்கணும்
துதித்து மகிழணும் தூயோனாய் வாழணும் நான்

3. கொடியாக படரணும் உந்தன் நேசரே
மடிமீது தவழணும் மழலைக் குழந்தை நான்

4. மறுரூபமாக்கிடும் மகிமையின் மேகமே
உம் முகச் சாயலாய் உருமாற்றும் தெய்வமே

5. ஐயா உம் நிழலிலே ஆனந்த பரவசம்
அளவிடா பேரின்பம் ஆரோக்கியம் அதிசயம்

Tamil Hymns

692. உன்னதத்தின் ஆவியை உந்தன்

உன்னதத்தின் ஆவியை
உந்தன் பக்தர் உள்ளத்தில்
ஊற்ற வேண்டும் இந்த நாளிலே
உலகமெங்கும் சாட்சி நாங்களே

1. பெந்தெகோஸ்தே பெருவிழாவிலே
பெருமழை போல் ஆவி ஊற்றினீர்
துயரமான உலகிலே சோர்ந்து போகும்
எங்களை
தாங்க வேண்டும் உந்தன் ஆவியால்

2. ஆவியின் கொடைகள் வேண்டுமே
அயல்மொழியில் துதிக்க வேண்டுமே
ஆற்றலோடு பேசவும் அன்பு கொண்டு
வாழவும்
ஆவி ஊற்றும் அன்பு தெய்வமே

Tamil Hymns

693. உன்னதத்தின் தூதர்களே

1. உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக் கூடுங்கள்
மன்னன் யேசுநாதருக்கே வான்முடி சூட்டுங்கள்!

ராசாதி ராசன் யேசு, யேசு மகா ராசன்! - அவர்
ராஜ்யம் புவியெங்கு மகா மாட்சியாய் விளங்க
அவர் திருநாமமே விளங்க, - அவர் திருநாமமே விளங்க,

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலுயாவே!
அல்பா, ஒமேகா, அவர்க்கே அல்லேலுயாவே!

2. நாலாதேசத் திலுள்ளோரே, நடந்து வாருங்கள்,
மேலோனேசு நாதருக்கே மெய்முடி சூட்டுங்கள்!

3. நல்மனதோடு சொல்கிறேன், நாட்டார்களே, நீங்கள்
புன்னகையொடு நிற்பானேன்? பூமுடி சூட்டுங்கள்!

4. இந்தநல் தேசத்தார்களே, ஏகமாய்க் கூடுங்கள்,
சிந்தையில் மகிழ்வடைந்தே செம்முடி சூட்டுங்கள்!

5. யேசுவென்ற நாமத்தையே எல்லாரும் பாடுங்கள்,
ராசாதிராசன் தலைக்கு நன்முடி சூட்டுங்கள்!

6. சகல கூட்டத்தார்களே, சாஷ்டாங்கம் செய்யுங்கள்,
மகத்வ ராசரிவரே, மாமுடி சூட்டுங்கள்!

694. உன்னதப் பரமண்டலங்களில் வசிக்கும்

உன்னதப் பரமண்டலங்களில் வசிக்கும்
ஒளிர்பிதா வே, உனின் நாமம்
உயர் பரிசுத்த மாய்த்தொழப் படுக
உனது ராச்சிய முறை வருக
முன்னிய உனது சித்தமே பரத்தில்
முடியுமாப் போல இப்புவியில்
முடிவுறச் செய்யப் படுவது மாக
முழுதும் நின் கரத்தையே நோக்கும்
நின் அடியார்க்கன்றாடக உணவு
நிரம்பவே அருள், பிறர் இயற்றும்
நீதிக்கே டினை யாம் பொறுப்பது போல
நிமலனே எம்பவம் மனியாய்
இன்னமும் எமைச்சோ தனைக்குட் படாமல்
இடர் தவிர்த் திரக்கமாய்க் காவாய்
இராச்சியம் வல்லமை மகிமைமற் றெவையும்
என்றும் உன் உடைமையே ஆமென்

695. உன்னதமானவர் மறைவினிலே

உன்னதமானவர் மறைவினிலே
சர்வ வல்லவர் நிழல்தனிலே
தங்கி உறவாடி மகிழ்கின்றேன்
எங்கும் வெற்றி நான் காண்கின்றேன்

1. ஆண்டவர் எனது அடைக்கலமானார்
நான் நம்பும் கோட்டையும் அரணுமானார்
வேடர் கண்ணிகள் கொள்ளைநோய்கள்
தப்புவித்து காப்பாற்றி தாங்குகிறார்

2. தமது சிறகால் அரவணைக்கின்றார்
இறக்கையின் கீழே அமரச் செய்கின்றார்
சத்திய வசனம் எனது கேடகம்
நிச்சயம் நிச்சயம் விடுதலை உண்டு

3. என் பக்கம் ஆயிரம்பேர் விழுந்தாலும்
பதினாயிரம் பேர்தாக்கினாலும்
பாதுகாப்பவர் என் பக்கத்திலே
பாதிப்பு இல்லையே பயமில்லையே

4. செல்லுமிடமெல்லாம் என்னைக்காக்க
தமது தூதருக்கு கட்டளையிட்டார்
பாதம் கல்லிலே மோதாமலே
கைகளில் ஏந்திடுவார் தாங்கிடுவார்

5. சிங்கத்தின் மீது நான் நடந்திடுவேன்
சீறும் சர்ப்பங்களை மிதித்திடுவேன்
சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்
சாத்தானை காலடியில் நசுக்கிடுவார்

Tamil Hymns

696. உன்னதமானவரின் உயர்

உன்னதமானவரின் உயர்
மறைவினில் இருக்கின்றவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
ஆகா ஆனந்தம் ஆனந்தமே (2)

1. நீர் எந்தன் அடைக்கலமே
நீரே எந்தன் கோட்டையுமே (2)
உம்மை நோக்கிப் பார்க்கிறேன் - 2

2. இரவில் பயங்கரத்துக்கும்
பகலில் பறக்கும் அம்புக்கு
நீர் என் தெய்வம் அஞ்சிடேன்

3. வழிகளில் என்னைக் காக்க
உந்தன் தூதரை அனுப்பிடுவீர்
கண்மணிபோலக் காக்கின்றீர்

697. உன்னதமானவரின் உயர் மறைவிலிருக்கிறவன்

1. உன்னதமானவரின் - உயர்
மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சிலாக்கியமே

அவர் செட்டையின் கீழ்
அடைக்கலம் புகவே
தம் சிறகுகளால் மூடுவார்

2. தேவன் என் அடைக்கலமே
என் கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே

3. இரவின் பயங்கரத்துக்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன்

4. ஆயிரம் பதினாயிரம்
பேர்கள் உன் பக்கம் விழுந்தாலும்
அது ஒரு காலத்தும் உன்னை அணுகிடாதே
உன் தேவன் உன் தாபரமே

5. தேவன் உன் அடைக்கலமே
ஒரு பொல்லாப்பும் உன்னைச் சேருமோ
ஒரு வாதையும் உன் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார்

6. உன் வழிகளிலெல்லாம்
உன்னைத் தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாதபடி
தங்கள் கரங்களில் ஏந்திடுவார்

7. சிங்கத்தின் மேலும் நடந்து
வலுசர்ப்பத்தையும் மிதிப்பாய்
அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்
உன்னை விடுவித்து காத்திடுவார்

8. ஆபத்திலும் அவரை நான்

Tamil Hymns

நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்
என்னை தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே
என் ஆத்தும நேசரவர்

698. உன்னதம் ஆழம் எங்கேயும்

1. உன்னதம், ஆழம், எங்கேயும்
தூயர்க்கு ஸ்தோத்திரம்;
அவரின் வார்த்தை, செய்கைகள்
மிகுந்த அற்புதம்.

2. பாவம் நிறைந்த பூமிக்கு
இரண்டாம் ஆதாமே
போரில் சகாயராய் வந்தார்
ஆ, தேச ஞானமே!

3. முதல் ஆதாமின் பாவத்தால்
விழுந்த மாந்தர்தாம்
ஜெயிக்கத் துணையாயினார்
ஆ ஞான அன்பிதாம்

4. மானிடர் சுபாவம் மாறவே
அருளைப் பார்க்கிலும்
சிறந்த ஏது தாம் என்றே
ஈந்தாரே தம்மையும்

5. மானிடனாய் மானிடர்க்காய்
சாத்தானை வென்றாரே
மானிடனாய் எக்கஸ்தியும்
பட்டார் பேரன்பிதே

6. கெத்செமெனேயில், குருசிலும்
வேதனை சகித்தார்
நாம் அவர்போன்றே சகித்து
மரிக்கக் கற்பித்தார்

7. உன்னதம், ஆழம், எங்கேயும்
தூயர்க்கு ஸ்தோத்திரம்
அவரின் வார்த்தை; செய்கைகள்
மிகுந்த அற்புதம்.

Tamil Hymns

699. உன்னதரே உம் பாதுகாப்பில் வாழ்கின்றேன்

உன்னதரே உம் பாதுகாப்பில் வாழ்கின்றேன் -சர்வ
வல்லவரே உம் நிழலில்தான்தங்கியுள்ளேன்

புகலிடமே அடைக்கலமே
கோட்டையே நம்பிக்கையே

1. பாழாக்கும் கொள்ளை நோய் அணுகாது
வேடனின் கண்ணி ஒன்றும் செய்யாது
காக்கும் அரண் நீரே என் கேடகமானீரே

2. படைத்தவரை புகலிடமாய்க் கொண்டுள்ளேன்
பரிசுத்தரே பாதுகாக்கும் மதிலானார்
தீங்கு நிகழாது நோயும் அணுகாது

3. வழியெல்லாம் காக்கும் தூதன் எனக்குண்டு
பாதம் கல்லில் மோதாமல் தாங்கிடுவார்
மிதிப்பேன் சிங்கத்தையே நான்
நடப்பேன் சர்ப்பத்தின்மேல்

4. சிறகுகளால் அரவணைத்து மூடுகிறீர்
உம் சமூகம்தான் நிரந்தர நீரோடை
நிமிரச் செய்தீரே நிரந்தரமானீரே -தலை

5. இரவில் வரும் திகிலுக்குநான் பயப்படேன்
பகலில் வரும் சோதனைகளை மேற்கொள்வேன்
ஆயிரம் எனக்கெதிராய் வந்தாலும் பயமில்லையே

6. கர்த்தரிடத்தில் வாஞ்சையாய் இருப்பதால்
விடுதலையும் ஜெய வாழ்வும் எனக்குண்டு
நாமம் அறிந்ததினால் உயர்வு உண்டெனக்கு

7. உம்மை நோக்கி மன்றாடும் போதெல்லாம்
பதில் தந்து கனப்படுத்தும் தகப்பன் நீரே
நீடிய ஆயுள் உண்டு நிச்சயம் வெற்றி உண்டு

700. உன்னதரே என் நேசரே உமது

உன்னதரே என் நேசரே-உமது
பேரன்பினால் அசைவுராதிருப்பேன்

1. முழு மனதோடு நன்றி சொல்வேன்
முகமலர்ந்த நன்றி சொல்வேன்
கூப்பிட்ட நாளில் பதில் தந்ீரே
ஆத்துமா வாழ பெலன் தந்தீரே

2. உன்னதத்தில் நீர் வாழ்ந்தாலும்
நலிந்தோரைக் கண்ணோக்கிப் பார்க்கிறீர்
துன்பத்தின் நடுவே நடந்தாலும்
துரிதமாய் என்னை உயிர்பிக்கின்றீர்

3. வலதுகரத்தால் காப்பாற்றினீர்
வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றினீர்
எனக்காய் யாவையும் செய்து முடித்தீர்
என்றுமுள்ளது உமது அன்பு

4. உந்தன் நினைவில் அகமகிழ்வேன்
நீர்தந்த வெற்றியில் களிகூறுவேன்
மனதின் ஏக்கங்கள் மலரசெய்தீர்
வாய்விட்டு கேட்டதை மறுக்கவில்லை

701. உன்னத வீட்டை சீக்கிரம் சென்று

உன்னத வீட்டை சீக்கிரம் சென்று
அன்பரை சேர்ந்திடுவோம்
இயேசு இரட்சகர் ஏழையின் வாஞ்சை
யாவையும் தீர்த்துவிட்டார்

1. தூதரின் மத்தியில் மகிழ் கொண்டாடிட
தேவனை போற்றிடுவேன்
கமழ் வாசனை வீசும் பூக்களின் மத்தியில்
இன்பமாய் அயர்ந்திடுவேன்

2. வானோர்கள் பற்பல ஊழியஞ் செய்ய
ஏழையும் சேர்ந்து கொள்ளுவேன்
என் இயேசுவின் துதியை நாவினால் பாடி
நேசரால் அகமகிழ்வேன்

3. பளிங்கு நதியின் ஓரங்களில்
நான் ஓடியுலாவிடுவேன்
பொன் வீதியில் நானும்
அன்பருடன் கவியுடன் அடியெடுப்பேன்

4. பறவைகளனேகம் விருட்சங்களதிகம்
தானுமங்கே உண்டு
பராபரன் தாமே எனக்காக சேர்த்த
பொருட்களும் மெத்தவுண்டு

5. பேதுரு யோவான் பவுலும் கூட
அங்கே ஓய்ந்திருப்பார்
என் நேசரின் வீட்டில் மகாபெருமின்பம்
ஆ ஆ ஆனந்தமே

Tamil Hymns

702. உம்மில் பழுது ஒன்றுமில்லை

உம்மில் பழுது ஒன்றுமில்லை
நீ தான் பூரண ரூபவதி - 2
என் இருதயத்தை கவர்ந்து கொண்டவளே
கவர்ந்து கொண்டவளே - நீ என்
மணவாளி, உன் ஆத்ம நேசர் நான் தானே

1. மாரிகாலம் சென்றது மழையும் பெய்து ஓய்ந்தது
பூமியிலே புஷ்பங்கள் பூத்து குலுங்குது(2)
குருவிகள் பாடும் காலம் வந்ததே
காட்டு புறாவின் சத்தம் கேட்குதே-2
என் பிரியமே நீ ரூபவதி எழுந்து வா (2)

2. திங்கள் போன்ற அழகும்
ஞாயிறு போன்ற ஒளியும்-2
கொடிகளுடன் படைகளை போல வருபவளும்
அடைத்து வைத்த தோட்டமும் நீ தான்
மறைவு கட்டிய நீரூற்றும் நீ தான்-2
என் பிரியமே நீ ரூபவதி திரும்பி வா

Tamil Hymns

703. உன்னை அதிசயம் காணச் செய்வேன்

உன்னை அதிசயம் காணச் செய்வேன்
நீ அற்புதம் கண்டிடுவாய்
இன்று வாக்களித்தார் தேவன்
இன்று நிறைவேற்ற வந்து விட்டார்

1. வழிதிறக்கும் அதிசயம் நடந்திடுமே
செங்கடலும் திறந்தே வழிவிடுமே
தடைகளெல்லாம் தகர்ந்தே போகுமே
இடைஞ்சலெல்லாம் இன்றே மறைந்திடுமே

2. குறைகளெல்லாம் நிறைவாகும் அதிசயமே
இறைமகனாம் இயேசுவால் நடந்திடுமே
வாதையெல்லாம் மறைந்தே போகுமே
பாதையெல்லாம் நேயாய் பொழிந்திடுமே

3. வழிநடத்தும் அதிசயம் நடந்திடுமே
காரிருளில் பேரொளி வீசிடுமே
வனாந்திரமே வழியாய் வந்தாலும்
வல்லவரின் கரமே நடத்திடுமே

Tamil Hymns

704. உன்னை வாலாக்காமல் இயேசு

உன்னை வாலாக்காமல்
இயேசு தலையாக்குவார்
உன்னை கீழாக்காமல் இயேசு
மேலாக்குவார்
ஜெயம் ஜெயம் அல்லேலுயா (4)

1. இஸ்ரவேலே நீ பயப்படாதே
கரம் பிடித்து உன்னை நடத்தி செல்வார்

2. செங்கடலும் யோர்தானும்
உம்மை கண்டு விலகி ஓடுமே

3. சிறியவனை குப்பையிலிருந்து
உயர்த்துகிறீர் அப்பா உயர்த்துகிறீர்

4. ஒன்றும் இல்லாத என்னை அழைத்தீரே
பயன்படுத்தும் இன்னும் பயன்படுத்தும்

5. பாலும் தேனும் ஓடுகின்ற
தேசத்தை போல் உன்னை மாற்றிடுவார்

705. உன்னை காக்கிறவர் உறங்கார்

உன்னை காக்கிறவர் உறங்கார்
உன் காலைத் தள்ளாட வொட்டார்
கவலைகள் தீர்ப்பார் கண்ணீர் துடைப்பார்
கடைசி மட்டும் கைவிடாதிருப்பார் - 2

1. மலை போன்ற துன்பம் தினம் வந்தாலும்
ஆழி போல் சோதனை பெருகினாலும்
கோட்டையும் அரணுமாய் கர்த்தர் இருப்பதால்
நெஞ்சே நீ கலங்கிடாதே - உன்னை

2. பாவமும் சாபமும் சூழ்ந்த போது
பாவத்துக்காய் மனம் திரும்பும் போது
பாவத்தை மீண்டும் நினையேன் என்றதால்
நெஞ்சே நீ கலங்கிடாதே - உன்னை

3. சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து
பட்டினியாகவும் இருக்கும்
கர்த்தரை தேடுவோர்க்கு
குறைவில்லை என்றதால்
நெஞ்சே நீ கலங்கிடாதே - உன்னை

Tamil Hymns

706. உன்னைக் காண்கிறார் உன்

உன்னைக் காண்கிறார்
கண்ணீர் துடைக்கின்றார் - இயேசு

நீ அழவேண்டாம்…அழ வேண்டாம்
அதிசயம் செய்திடுவார்

1. நோய்நொடியில் வாடுகின்ற
உன்னைக் காண்கிறார்
நொடிப்பொழுது சுகம் தந்து
உன்னைத் தேற்றுவார்

2. கடன் தொல்லையால் கதறுகின்ற
உன்னைக் காண்கிறார்
உடன் இருந்த நடத்திடுவார்
ஒருபோதும் கைவிடார்

3. எதிர்காற்றோடு போராட்டமா
உன்னைக் காண்கிறார்
உன் படகில் ஏறுகிறார் அமைதி தருகிறார்

4. உனக்கெதிரான ஆயுதங்கள்
வாய்க்காதே போகும்
உன்னை எதிர்த்து வழக்காடுவோர்
உன் சார்பில் வருவார்கள்

5. கிறிஸ்துவோடு இணைந்து வாழும் நமக்கு
வெற்றி உண்டு
நறுமணம் போல் பரவிடுவோம்
நற்செய்தி முழங்குவோம்

Tamil Hymns

707. உன்னைப் பாடாத நாளெல்லாம் வீணே

உன்னைப் பாடாத நாளெல்லாம் வீணே....
உன்னைத் தேடாத வாழ்வெல்லாம் வீணே...
கைகளிலே பேரெழுதி நாளெல்லாம் வாசித்தாய்
கண்களிலே ஊரெழுதி வாழ்வெல்லாம் நேசித்தாய்
போதாது வார்த்தைகள் உனது அன்பைப் பாடவே
போதாது வாழ்நாட்கள் உன் புகழ் பாடவே

பாவத்தில் வாழ்ந்தாலும் பாசத்தை பொழிகின்றாய்
ஆபத்தில் வீழ்ந்தாலும் அன்புக்குள் அணைக்கின்றாய்
தாயுன்னை நான் பிரிந்து ஓடி ஓடி ஒழிகின்றேன்
ஆடென்னை தோள் சுமக்க தேடித்தேடி அலைகின்றாய்
முள்ளில் நான் மலர்ந்தாலும் உன் பீடம் ரோசாப்பூ
சேற்றில் நான் வளர்ந்தாலும் உன் பாதம் தாமரைப்பூ
வாடாப்பூ நீ என்பேன் என் யேசுவே உன்னை
தேடாப்பூ நான் என்பேன் என் யேசுவே

Tamil Hymns

708. உன்னைத்தான் கேட்கிறேன்

உன்னைத்தான் கேட்கிறேன் (2)
மனம் மாற மாட்டாயா (2)

1. காடும் வீடும் நிலமும் எனக்கு போதும் என்று சொன்னால்
ஆவி உன்னை விட்டு போகும் போது என்ன சொல்வாய்
யாவும் அழிந்து போகும் அழியா தொன்று உண்டு
உன்னை காக்க வல்ல இயேசு கிறிஸ்துவின் நேச கரங்கள்

2. பட்டம் படிப்பு தகுதி உறவு யாவும் மாறிப் போகும்
உலகம் உன்னை ஒதுக்கி தள்ளும் காலம் வந்து சேரும்
அன்று உணர்ந்து கொள்வாய் உண்மை என்னவென்று
மாறும் உலகில் நிலைக்க ஒருவர் இயேசு ராஜனென்று

3. பாவம் செய்யும் போது மனதில் பயமே ஒன்றும் இல்லை
காலம் கடந்து நீதி வரும் போதோ நெஞ்சம் கலங்கும்
நெஞ்சின் பாவ பாரம் நீங்கும் உந்தன் வாழ்வில்
நோக்கி பார் இயேசு உன்னை அழைக்கிறார் இந்த நேரம்

Tamil Hymns

709. உன்னையும் என்னையும்

உன்னையும் என்னையும் இரட்சிக்கவே
இயேசு தம் ஜீவனை ஈந்தனரே

குருசில் கண்டேன் (2) என் இயேசுவை

1. பாவத்தின் தோஷத்தை மன்னிக்கவே
பரன் தம் இரத்தத்தைச் சிந்தினாரே
குருசில் கண்டேன் (2) என் இயேசுவை

2. மன்னிப்பும் மோட்சமும் அடைந்திட
நானே வழி சத்தியம் ஜீவன் என்றார்
சோர்ந்திடாதே நம்பியேவா
நிச்சயம் நேசர் ஏய்றுக்கொள்வார்

3. இயேசு உன்னை அன்பாய் அழைக்கிறார்
அவரை நீ இன்று ஏற்றுக்கொள்வாய்
அழைக்கிறார் (3) அன்புடனே

4. இரட்சகர் பாதம் நீ பற்றிக்கொண்டால்
நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வாய்
அல்லேலூயா (3) ஆமென்

Tamil Hymns

710. உன்னையே வெறுத்துவிட்டால்

உன்னையே வெறுத்துவிட்டால் ஊழியம் செய்திடலாம்
சுயத்தை சாகடித்தால் சுகமாய் வாழ்ந்திடலாம்

1. சிலுவை சுமப்பதனால் சிந்தையே மாறிவிடும்
நீடிய பொறுமை வரும்நிரந்தர அமைதி வரும்

2. பெயர் புகழ் எல்லாமே இயேசுவின் நாமத்திறகே
கிறிஸ்து வளரட்டுமெ நமது மறையட்டுமே

3. நாளைய தினம் குறித்து கலங்காதே மகனே (மகளே)
இதுவரை காத்த தெய்வம் இனியும் நடத்திடுவார்

4. சேர்த்து வைக்காதே திருடன் புறித்திடுவான்
கொடுத்திடு கர்த்தருக்கே குறைவின்றி காத்திடுவார்

5. தன்னலம் நோக்காமல் பிறர் நலம் தேடிடுவோம்
இயேசுவில் இருந்த சிந்தை என்றுமே இருக்கட்டுமே

Tamil Hymns

711. ஊதும் தெய்வாவியை புத்துயிர் நிரம்ப

1. ஊதும் தெய்வாவியை
புத்துயிர் நிரம்ப
நாதா,என் வாஞ்சை
செய்கையில்
உம்மைப்போல் ஆகிட

2. ஊதும், தெய்வாவியை
தூய்மையால் நிரம்ப
உம்மில் ஒன்றாகி
யாவையும்
சகிக்க செய்திட

3. ஊதும், தெய்வாவியை
முற்றும் ஆட்கொள்ளுவீர்
தீதான தேகம் மனத்தில்
வானாக்னி மூட்டுவீர்

4. ஊதும், தெய்வாவியை
சாகேன் நான் என்றுமாய்
சதாவாய் வாழ்வேன்
உம்மோடு
பூரண ஜீவியாய்

712. ஊற்றப்பட வேண்டுமே உன்னதத்தின் ஆவி

ஊற்றப்பட வேண்டுமே, உன்னதத்தின் ஆவி
உயிர்ப்பிக்க வேண்டும், எம்மை தேவா
முன்மாரியாக அன்று பொழிந்திட்ட ஆவியை
பின்மாரியாக இன்று பொழிந்திடுமே - (2)

எண்ணெய் அபிஷேகமே - என்
தலையை நனைக்க ஆவியால் நிரப்புமே
பாத்திரம் வழிந்தோடும்
நீச்சல் ஆழம் மூழ்கியே - நேசர்
அன்பில் மகிழ அக்கினி அபிஷேகம்
எந்தன் ஆவல் தீர்த்திடும்

1. தேவ மைந்தன் இயேசுவை விசுவாசித்தோம்
போதிக்கும் ஆவியாலே நிறைத்திடுமே

2. ஜெப வேண்டுதலிலே தரித்திருப்போம்
ஜெகத்திலே சாட்சியாக எம்மை நிறுத்தும்

3. ஒருமனதோடு கூடி வந்துள்ளோம்
தேவ புத்திரர் என முத்திரை போடும்

4. ஜீவ பலியாக எம்மை ஒப்புவிக்கிறோம்
சகல சத்தியத்திலும் எம்மை நடத்தும்

5. ஆவியின் வரங்களை அருள் செய்யும் தேவா
ஆவியின் கனிகள் என்றும் ஈந்திடவே

Tamil Hymns

713. ஊற்றிடுமே உம் வல்லமையை

ஊற்றிடுமே உம் வல்லமையை
இந்த நாளில் எங்கள் மேலே
ஊற்றிடுமே உம் அக்கினியை - இந்த
நாளில் எங்கள் மீது வல்லமையோடே

வல்லமை வல்லமை தாருமே
தேசத்தை உமக்காய் கலக்கிட
அபிஷேகம் அபிஷேகம் ஊற்றுமே
அனல் கொண்டு உமக்காய் எழும்பிட

1. பெந்தே கோஸ்தே நாளில் செய்தது போல
அக்கினியின் நாவுகள் பொழிந்திடுமே
அப்போஸ்தலர் நாளில் செய்தது போல
இன்றும் செய்ய வேண்டும்

2. மாம்சமான யாவர் மேலும் ஊற்றுவேனென்று
வாக்கு தந்த ஆவியை ஊற்ற வேண்டுமே
நீச்சல் ஆழம் கொண்டு சென்று நீந்த செய்யுமே
நதியாய் பாய்ந்திடுமே

3. அற்புதங்கள் திரளாய் நடந்திடவே
அற்புதத்தின் ஆவியே வந்திடுமே
அந்தகார சங்கிலிகள் அறுந்திடவே
அக்கினியை ஊற்றிடுமே

Tamil Hymns

714. ஊற்றுண்ட பாரிமள தைலம்

ஊற்றுண்ட பாரிமள தைலம் நீர் இயேசு
ஊற்றுவீர் உன்னத வல்லமையால் (2)
உம்மை நான் நேசிப்பேன்
என்றும் நான் நேசிப்பேன்
உயிருள்ளவரை ஆராதிப்பேன்

1. என்னை நீர் இழுத்துகொள்ளும்
உம்மிடம் நடி வருவேன்
உம் பாதம் சரண்டைந்தேன்
உமக்காய் நான் வாழ்ந்திடுவேன்

2. என் ஆத்மா மரணத்திற்கும்
என் கண்ணை கண்ணீருக்கும்
என் கால்கள் இடறாமலும்
தப்புவியும் இயேசுவே

3. பாவத்தை வெறுத்திடுவேன்
பலியாகத் தந்திடுவேன்
பாரிசுத்தர் பாரிசுத்தரே உம்
பாரிசுத்தம் தாருமையா

715. ஊற்றுத் தண்ணீரே எந்தன்

ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே
ஜீவ நதியே என்னில் பொங்கிப் பொங்கி வா
ஆசீர்வதியும் என் நேசக் கர்த்தரே
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும்

1. கன்மலையைப் பிளந்து வனாந்திரத்திலே
கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே
பள்ளத்தாக்கிலும் மலைகளிலும்
தண்ணீர் பாயும் தேசத்தை நீர் வாக்களித்தீரே

2. ஜீவத் தண்ணீராம் எந்தன் நல்ல கர்த்தாவே
ஜீவ ஊற்றினால் என்னை நிறைத்திடுவீர்
கனி தந்திட நான் செழித்தோங்கிட
கர்த்தரின் கரத்தால் நித்தம் கனம் பெற்றிட

3. இரட்சிப்பின் ஊற்றுக்கள் எந்தன் சபைதனிலே
எழும்பிட இந்த வேலை இரங்கிடுமே
ஆத்மா பலமும் பரிசுத்தமும்
ஆவலுடன் பெற்றிடவே வரம் தாருமே

4. திறக்கப்பட்டதாம் ஊற்று சிலுவையிலே
இரட்சகரின் காயங்களில் வெளிப்படுதே
பாவக் கறைகள் முற்றும் நீங்கிட
பரிசுத்த சமூகத்தில் ஜெயம் பெற்றிட

5. கிருபையின் ஊற்றுகள் பெருகிடவே
புதுபெலன் அடைந்து நான் மகிழ்ந்திடவே
பரிசுத்தத்தை பயத்துடனே
பூரணமாக்கிட தேவ பெலன் தாருமே

Tamil Hymns

716. ஊற்றுங்கைய்யா பெருமழையாக

ஊற்றுங்கைய்யா (2) பெருமழையாக
நிரப்புங்கைய்யா (2) எங்க வாழ்க்கைய - 2

1. தேவர்கள் உண்டோ
வானமும் தானாகவே
மழையை பொழியுமோ - 2
நீர் அல்லவோ நீர் அல்லவோ - 2

2.வயல்களும் ஆறுகளும்
வற்றிப் போயிருக்கும்
ஆவி ஊற்றப்பட்டா
வானந்திரம் செழிக்கும் - 2
நீர் அல்லவோ நீர் அல்லவோ - 2

3.இராஜாவின் முகக்களையில்
ஜீவன் இருக்கும்
உங்க தயவுக்குள்ளே
பின்மாரி இருக்கும் - 2
நீர் அல்லவோ நீர் அல்லவோ - 2

Tamil Hymns

717. எக்காலத்தும் கர்த்தர் இயேசுவை

எக்காலத்தும் கர்த்தர் இயேசுவை
எந்தன் துணையாய் ஏற்றிடுவேனே
உயர்வோ தாழ்வோ எந்நிலையோ
எந்தன் தஞ்சம் இயேசுவே

1. மண்ணின் வாழ்வும் மாயையாகுமே
மனிதன் காண்பது பொய்யாகும்
மாறிடா நேசர் இயேசுவே (2)
மாறாத அன்பு என்றும் போதுமே

2. அலைகள் மோதி எதிர்வந்தாலும்
கலங்கிடேனே வாழ்க்கையிலே
அசையா எந்தன் நம்பிக்கை
நங்கூரம் எந்தன் இயேசு போதுமே

3. அவரை நோக்கி ஜெபிக்கும் போது
அருகில் வந்து உதவி செய்வார்
கைவிடாமல் கருத்துடன்
காத்தென்னை என்றும் நடந்திடுவார்

4. தேவ பயமே ஜீவ ஊற்று
மரண கண்ணிக்கு விலக்கிடுமே
தேவ பாதையில் நடந்திட
தேவாவியானவர் உதவி செய்வார்

5. முன்னறிந்து அழைத்த தேவன்
முடிவு வரையும் நடத்திடுவார்
தேவ சாயல் மாறியே
தேவாதி தேவனை தரிசிப்போமே

Tamil Hymns

718. எக்காலமும் நான் துதிப்பேன்

எக்காலமும் நான் துதிப்பேன்
உள்ளளவும் நான் ஸ்தோத்தரிப்பேன்
இதயம் பாடும் ஹாலேலுயா

1. துதிகள் மத்தியில் வாசம்
செய்பவர் எங்கள் மத்தியில் வாருமே
தூதர் போற்றும் தூய தூயர்
பரிசுத்தத்தை தாருமே

கைகள் தட்டி சேர்ந்து பாடி
உந்தன் நாமம் உயர்த்தவே… (2)- எக்காலமும்
ஹாலேலுயா …ஹாலேலுயா…
ஹாலேலுயா…ஆ …ஆமென்
ஹாலேலுயா…ஹாலேலுயா…
ஹாலேலுயா…ஆ …ஆமென்

2. சென்ற நாட்களில் நன்மை செய்தவர்
இந்த நாளிலும் செய்வாரே
நேற்றும் இன்றும் மாறா நேசரே
அற்புதத்தை செய்வாரே -கைகள் தட்டி …

3. தோளில் என்னை சுமந்தீரே
தாழ்வில் என்னை தேற்றினீர்
தள்ளப்பட்ட கல்லை மாற்றியே
கன்மலைமேல் உயர்த்தினீர்

Tamil Hymns

719. எக்காள சத்தம் வானில் தொனித்திடவே

எக்காள சத்தம் வானில் தொனித்திடவே
எம் இயேசு மாராஜனே வந்திடுவார்

1. அந்த நாள் மிக சமீபமே
சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே
தேவ எக்காலம் வானில் முழங்க
தேவாதி தேவனை சந்திப்போமே - எக்காள

2. வானமும் பூமியும் மாறிடினும்
வல்லவர் வாக்குதாம் மாறிடாதே
தேவதூதர் பாடல் தொனிக்க
தேவன் அவரையே தரிசிப்போமே - எக்காள

3. கண்ணிமை நேரத்தில் மாறிடுவோம்
விண்ணிலே யாவரும் சேர்ந்திடுவோம்
கண்ணீர் கவலை அங்கே இல்லை
கர்த்தர் தாமே வெளிச்சமாவார் - எக்காள

4. கர்த்தரின் வேளையை நாம் அறியோம்
கர்த்தரின் சித்தமே செய்திடுவோம்
பழங்கள் யாவையும் அவரே அளிப்பார்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவோம் - எக்காள

5. கள்ளர்கள் பரவி அங்கு மிங்கும்
கர்த்தரின் வார்த்தையைப் புரட்டுகிறார்
கர்த்தரே வாரும் வாஞ்சையை தீரும்
கருத்துடன் நாம் விழித்திருப்போம் - எக்காள

Tamil Hymns

720. எக்காள தொனியோடு மானிடரே வாரீர்

எக்காள தொனியோடு மானிடரே வாரீர்
எக்காலம் இயேசுவையே அறிவிக்கவே வாரீர்

அல்லேலூயா! அல்லேலூயா (24)

1. என் இயேசு போன்னேசு,
என்னை மாற்றியவரும் அவரே
அன்போடும் பண்போடும் என்னை
நடத்தியவரும் அவரே - அல்லேலூயா

2. சந்தோசம் (2) என்னை
ஆவியிலே நிறைத்தீர்
சங்கீதம் பாடிடுவேன் நான்
சபையிலே சேர்ந்திடுவேன்

3. கல்வாரி நாயகனாம்
இயேசு மீண்டும் வந்திடுவார்
கைதட்டிப் பாடிடுவேன் நான்
அவருடன் சேர்ந்திடுவேன்

4. சாத்தான் என்னை அணுகும்போது
இயேசுவை கூப்பிடுவேன்
சாத்தானை ஜெயித்தவராம்
அவர் எனக்கும் ஜெயம்

5. அன்பான மானிடரே நீங்கள்
அனைவரும் வாருங்கள்
அன்பான இரட்சகராம் நம்மை
அழைக்கிறார் வாருங்கள்

Tamil Hymns

721. எக்காளம் ஊதிடுவோம்

எக்காளம் ஊதிடுவோம்
எரிக்கோவை தகர்த்திடுவோம்
கர்த்தரின் நாமம் உயர்த்திடுவோம்
கல்வாரிக் கொடி ஏற்றுவோம்

1. கிதியோன்களே புறப்படுங்கள்
எதிரிகளை துரத்திடுங்கள்
தீபங்களை ஏந்திடுங்கள்
தெருத் தெருவாய் நுழைந்திடுங்கள்

2. சிம்சோன்களே எழும்பிடுங்கள்
வல்லமையால் நிரம்பிடுங்கள்
சீறிவரும் சிங்கங்களை
சிறைபிடித்து கிழித்திடுங்கள்

3. தெபோராக்களே விழித்திடுங்கள்
உபவாசித்து ஜெபித்திடுங்கள்
எஸ்தர்களே கூடிடுங்கள்
இரவுகளை பகலாக்குங்கள்

4. அதிகாலையில் காத்திருப்போம்
அபிஷேகத்தால் நிரம்பிடுவோம்
கழுகுபோல பெலனடைந்து
கர்த்தருக்காய் பறந்திடுவோம்

Tamil Hymns

722. எகிப்திலிருந்து கானானுக்கு

எகிப்திலிருந்து கானானுக்கு கூட்டிச் சென்றீரே
உமக்கு கோடி நன்றி ஐயா

அல்லேலூயா அல்லேலூயா

1. கடலும் பிரிந்தது மனமும்
மகிழ்ந்தது கர்த்தரை என்றும்
மனது ஸ்தோத்திரித்தது

2. பாறையினின்று தண்ணீர்
சுரந்தது தாகம் தீர்ந்தது
கர்த்தரை மனமும் போற்றியது

3. வெண்கல சர்ப்பமானாரே
நமக்காய் உயிர் கொடுத்தாரே
அவரை உயர்த்திடுவோமே

4. யோர்தானைக் கடந்தோம்
எரிகோவை தகர்த்தோம்
ஜெயம் கொடுத்தாரே
அவரை துதித்திடுவோமே

Tamil Hymns

723. எங்களுக்குள்ளே வாசம் செய்யும்

எங்களுக்குள்ளே வாசம் செய்யும்
ஆவியானவரே இந்நாளில் உம்
சித்தம் போல் நடத்திச் செல்லுமையா

ஆவியானவரே…ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே -2

1. எப்படி நான் ஜெபிக்க வேண்டும்
எதற்காக ஜெபிக்க வேண்டும்
கற்றுத்தாரும் ஆவியானவரே (2)
வேதவசனம் புரிந்துகொண்டு
விளக்கங்களை அறிந்திட
வெளிச்சம் தாரும் ஆவியானவரே.. (2)

2. கவலை கண்ணீர் மறக்கணும்..
கர்த்தரையே நோக்கணும்
கற்றுத் தாரும் ஆவியானவரே
செய்த நன்மை நினைக்கணும்
நன்றியோடு துதிக்கணும்
சொல்லித் தாரும் ஆவியானவரே

3. எங்கு செல்ல வேண்டும் என்ன சொல்ல வேண்டும்
வழிநடத்தும் ஆவியானவரே
உம்விருப்பம் இல்லாத இடங்களுக்கு செல்லாமல்
தடுத்து நிறுத்தும் ஆவியானவரே

4. எதிரிகளின் சூழ்ச்சிகள்
சாத்தானின் சூழ்ச்சிகள்
எதிர்த்து நிற்க பெலன் வேண்டுமே
உடல் சோர்வுகள் அசதிகள் பெலவீனங்கள் நீங்கி
உற்சாகத்தால் நிரம்ப வேண்டுமே

Tamil Hymns

724. எங்கள் ஆராதனைக்குரியவரே

எங்கள் ஆராதனைக்குரியவரே
எங்கள் ஆராதனை நாயகரே
எங்கள் ஆராதனை ஏற்றுக் கொள்ளுமே
எங்கள் யேகோவா தெய்வமே

1. துணையாளரே உம்மை துதிக்கையிலே
துன்பமெல்லாம் தூசியாக பறக்குதையா
துயரமெல்லாம் நீங்குதையா
துள்ளிப்பாட உள்ளமெல்லாம் ஏங்குதையா

2. வல்ல தெய்வமே இப்போ வாருமையா
வல்லமையால் எங்களை நிரப்புமையா
வறண்டு போன என் வாழ்க்கையிலே
வாழ்வெல்லாம் வசந்தம் ஆக்குமையா

3. அன்பின் ராஜனே உம் அபிஷேகத்தை
பிள்ளைகளாம் எங்கள் மேலே ஊற்றுமையா
பெலனடைந்து உம்மை உயர்த்திடவே
கிருபை எங்களுக்கு தாருமையா

725. எங்கள் தரிசனத்தை எங்கள் ஊழியத்தில்

எங்கள் தரிசனத்தை எங்கள் ஊழியத்தில்
நிறைவேற்றிடும் ஆவியானவரே
தரிசனம் தந்தவரே...
நிறைவேற்றிட உதவிடுமே -2

1. நாங்கள் இழந்து போன உந்தன் வல்லமையை
திரும்பவும் தந்திடுமே
நாங்கள் மறந்து போன தரிசனத்தை
மீண்டும் புதுப்பித்திடும்

2. எங்கள் பார்வையை ஒரு விசை தெளிவாக்கிடும்
நோக்கத்தை நேராக்கிடும்
உந்தன் சித்தத்தை விட்டு விலகிடாமல்
காத்துக் கொள்ளும் தேவனே

3. நாங்கள் உண்மையுள்ளவர்களென்று நம்பி
தந்த இவ்வூழியத்தை
உண்மையாய் செய்திட வாஞ்சிக்கிறோம்
உந்தன் பலத்தால் நிரப்பிடுமே

4. எங்கள் சுய பலத்தை நம்பி தோற்றுப் போனோம்
அனுபவம் சார்ந்து கொண்டோம்
உந்தன் கிருபையை முற்றிலும் சார்ந்து கொண்டு
ஓடிட உதவிடுமே

Tamil Hymns

726. எங்கள் தேவன் வல்லவரே

எங்கள் தேவன் வல்லவரே
இன்றும் என்றும் காப்பவரே
வல்லவர் சர்வ வல்லவர்
நல்லவர் என்றும் நல்லவர் – அல்லேலூயா

1. தீயின் நடுவே நடந்தாலும்
எரிந்து போகமாட்டோம்
கடலின் நடுவே நடந்தாலும்
மூழ்கிப் போகமாட்டோம்

2. சோதனை துன்பம் சூழ்ந்தாலும்
சோர்ந்து போவதில்லை
வேதனை வியாதி நெருக்கினாலும்
வெற்றி சிலுவையுண்டு

3. அலகை அனுதினம் தாக்கினாலும்
ஆண்டவர் வார்த்தையுண்டு
உலகம் நம்மை வெறுத்தாலும்
உன்னதர் கரங்களுண்டு

727. எங்கள் பிதாவே இயேசு இரட்சகரே

எங்கள் பிதாவே இயேசு இரட்சகரே
தூய ஆவியானவரே உம்மைத் தொழுகிறோம்

1. சர்வத்தையும் படைத்தவர் நீர்தானே
சாவாமையுள்ளவர் நீர்தானே
ஆதியும் அந்தமும் நீர்தானே
ஆராதனைக்குரியவர் நீர்தானே

2. அதிசயமானவர் நீர்தானே
ஆலோசனைக் கர்த்தர் நீர்தானே
மகிமையின் ராஜா நீர் தானே
மாறாத நேசர் நீர்தானே

3. சர்வ வல்ல தேவன் நீர்தானே
சாத்தானை வென்றவர் நீர்தானே
சேனைகளின் கர்த்தர் நீர்தானே
திரியேக தேவனும் நீர்தானே

4. எங்களுக்காய் மரித்தவர் நீர்தானே
மரணத்தை வென்றவர் நீர்தானே
மூன்றாம் நாள் எழுந்தவர் நீர்தானே
ஜீவிக்கின்ற தெய்வமும் நீர்தானே

728. எங்கள் ஜெபங்கள் தூபம் போல

எங்கள் ஜெபங்கள் தூபம் போல
உம் முன் எழ வேண்டுமே

1. ஜெபிக்கும் எலியாக்கள்
தேசமெங்கும் எழவேண்டும்
உடைந்த பலிபீடம் சரிசெய்யப்பட வேண்டும்

2. பரலோக அக்கினி
எங்கும் பற்றியெரிய வேண்டும்
பாவச்செயல்கள் சுட்டெரிக்கப்பட வேண்டும்

3. தூரம் போன ஜனங்கள்
உம் அருகே வரவேண்டும்
கர்த்தரே தெய்வமென்று
காலடியில் விழவேண்டும்

4. பாகால்கள் இந்தியாவில்
இல்லாமல் போக வேண்டும்
பிசாசின் கிரியைகள்
முற்றிலும் அழிய வேண்டும்

5. பாரத தேசத்தை
ஜெபமேகம் சூழ வேண்டும்
பெரிய காற்று அடித்து பெருமழை
பெய்ய வேண்டும்

Tamil Hymns

729. எங்கு போகிறீர் இயேசு தெய்வமே

எங்கு போகிறீர் இயேசு தெய்வமே
எனக்காய் சிலுவையை சுமக்கும் தெய்வமே

1. பாரச்சிலுவையோ என் பாவச்சிலுவையோ
நீர் சுமந்தது என் பாவச்சிலுவையோ

உம் உள்ளம் உடைந்ததோ
என் பாவச் சேற்றினால் எங்கு போகிறீர்

2. தீய சிந்தனை நான் நினைத்ததால்
உன் சிரசில் முள்முடி நான் சூட்டினேன்

3. பெருமை கோபத்தால் உம் கன்னம் அறைந்தேனே
என் பொறாமை எரிச்சலால் உம் விலாவைக் குத்தினேனே

4. கசையால் அடித்தது என் காம உணர்ச்சியால்
காறித்துப்பியது என் பகைமை உணர்ச்சியால்

5. அசுத்த பேச்சுக்கள் நான் பேசி மகிழ்ந்ததால்
கசப்புக்காடியை நான் குடிக்கக் கொடுத்தேனே

Tamil Hymns

730. எங்குமுள்ளோர் யாரும்

எங்குமுள்ளோர் யாரும் சேர்ந்து ஸ்தோத்தரிப்போமே
இஸ்ரவேலின் கர்த்தருக்குத் துதி செலுத்துமே
யாக்கோபின் சந்ததியாரும் கூடி வாருமே
இயேசு எங்கள் கர்த்தர் என்று ஸ்தோத்தரிப்போமே

1. தேவ மைந்தன் இயேசுவுக்காய் ஸ்தோத்தரிப்போமே
பரிசுத்தாகமம் ஈந்ததற்காய் ஸ்தோத்தரிப்போமே
கடந்த கால வீரருக்காய் ஸ்தோத்தரிப்போமே
ஜீவன் விட்ட சுத்தருக்காய் ஸ்தோத்தரிப்போமே
கோதுமை மணி தனித்தால் இலாபம் ஏது உண்டு பாரீர்
செத்ததாகில் பலன் மிகுதி ஸ்தோத்தரிப்போமே --- எங்கு

2. நம்பிக்கை இழக்காவண்ணம் முன் நடப்போமே
இராஜாவின் கட்டளைக்குக் கனம் கொடுப்போமே
தேவ சமூகப் பழக்கம் உள்ளோர் பயம் கொள்ளமாட்டார்
கீழ்ப்படியக் கற்றுக்கொண்டோர் தடுமாற்றம் கொள்ளார்
அவர்க்காய் இழந்தவர்க்குப் பரிசு நூறத்தனையாகக் கிட்டும்
நித்திய மகிழ்ச்சி அவரை மூடும் ஸ்தோத்தரிப்போமே --- எங்கு

3. அத்தி மரம் துளிர்விடாமல் போனபோதிலும்
திராட்சைச் செடியில் கனி காணாமல் கருகிப்போயினும்
ஒலிவ மரத்தின் பலன்கள் கூட அற்றுப்போயினும்
வயலில் மகசூல் இன்றி ஏக்கம் வந்தபோதிலும்
இம்மைக்காக அல்ல இயேசுநாதர் மேலே உள்ள பற்று
நம் இருப்பு பரலோகத்தில் ஸ்தோத்தரிப்போமே --- எங்கு

Tamil Hymns

731. எங்கும் நிறைந்த தெய்வமே

1. எங்கும் நிறைந்த தெய்வமே
   ஏழை அடியார் பணிவாய்
   துங்கவன் உந்தன் பாதமே
   ஸ்தோத்திரிக்கின்றோம் ஏகமாய்.

2. உலக எண்ணம் நீங்கியே
   உந்தனில் திட மனதாய்
   நலமாய் உள்ளம் பொங்கியே
   நாடித் துதிக்கச் செய் அன்பாய்.

3. கேட்டிடும் தெய்வ வாக்கியம்
   கிருபையாய் மனதிலே
   நாட்டிட நின் சிலாக்கியம்
   நாங்கள் நிறையச் செய்காலே.

4. தூதர்கள் கூடிப் பாடிடும்
   தூயர் உம்மை மா பாவிகள்
   பாதம் பணிந்து வேண்டினோம்
   பாலிப்பீர் நாங்கள் ஏழைகள்.

732. எங்கும் புகழ் யேசு

எங்கும் புகழ் யேசு ராசனுக்கே
எழில் மாட்சிமை வளர் வாலிபரே!

உங்களையல்லவோ
உண்மை வேதங் காக்கும்
உயர்வீரரெனப் பக்தர் ஓதுகிறார்

1. ஆயிரத் தொருவர் ஆவிரல்லோ நீரும்
அதை அறிந்து துதி செய்குவீர்
தாயினும் மடங்கு சதம் அன்புடைய
சாமி யேசுவிக்கிதயம் தந்திடுவீர்

2. கல்வி கற்றவர்கள் கல்வி கல்லாதோர்க்குக்
கடன்பட்டவர்கள் கண்திறக்கவே;
பல்வழி அலையும் பாதை தப்பினோரைப்
பரிந்து திருப்ப நிதம் பார்த்திடுவீர்

3. தாழ்மை சற்குணமும் தயை காருண்யமும்
தழைப்பதல்லோ தகுந்த கல்வி - பாழுந்
துர்க்குணமும் பாவச் செய்கையாவும்
பறந்தோடப் பார்ப்பதுங்கள் பாரமன்றோ

4. சுத்த சுவிசேஷம் துரிதமாய்ச் செல்ல
தூதர் நீங்களே தூயன்வீரரே
கர்த்தரின் பாதத்தில் காலைமாலை தங்கிக்
கருணை நிறை வசனம் கற்றிடுவீர்

Tamil Hymns

733. எங்கே சுமந்து போகிறீர்

எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர்
எங்கே சுமந்து போகிறீர்?

1. எங்கே சுமந்து போறீர்? இந்தக்
கானலில் உமதங்க முழுவதும்
நோக ஐயா என் யேசுநாதா

2. தோளில் பாரம் அழுத்த தூக்கப்
பெலமில்லாமல் தாளும் தத்தளிக்கவே
தாப சோபம் உற நீர்

3. வாதையினால் உடலும் வாடித்
தவிப்புண்டாக பேதம் இல்லாச்
சீமோனும் பின்னாகத் தாங்கிவர

4. தாயார் அழுதுவர சார்ந்தவர் பின் தொடர
மாயம் இல்லாத ஞான மாதர் புலம்பிவர

5. வல்ல பேயைக் கொல்லவும்
மரணந்தனை வெல்லவும் -எல்லை இல்லாப்
பாவங்கள் எல்லாம் நாசமாகவும்

6. வண்டக் கள்ளர் நடுவில் மரத்தில்
தொங்குவதற்கோ? -சண்டாளர்களைத்
தூக்கும் தலையோட்டு மேட்டுக்கோ

7. மாசணுகாத சத்திய வாசகனே, உமது
தாசர்களைக் காக்கவும்
தாங்காத சுமையை எடுத்து

Tamil Hymns

734. எங்கே ஓடுவேன் பாதகன் ஆனேன்

1. எங்கே ஓடுவேன்?
பாதகன் ஆனேன்
தீமை எங்கும் என்னை மூடும்,
ஆதரிக்க ஆரால் கூடும்?
எங்கே ஓடுவேன்?
பாதகன் ஆனேன்

2. யேசு சுவாமி, நீர்
என்னைக் கூப்பிட்டீர்
ஆதலால் உம்மண்டை வந்து
அன்புடன் உம்மைப் பணிந்து
நிற்கிறேன்; ஆ! நீர்
என்னைக் கூப்பிட்டீர்

3. பாவத்தால் உண்டாம்
துன்பமே எல்லாம்
உம்மால் தீர நீர் மரித்தீர்
மாசில்லாத ரத்தம் விட்டீர்;
இவ்விதமாய் நீர்
என்னை இரட்சித்தீர்

4. குற்றம் தீயது
ஆகிலும் அது
நீர் அடைந்த சாவினாலே
நீங்கிப் போயிற்றா தலாலே
ஏழைப்பாவி நான்
நீதிமான் ஆனேன்

735. எண்ணி எண்ணி துதிசெய்வாய்

எண்ணி எண்ணி துதிசெய்வாய்
எண்ணடங்காத கிருபைகளுக்காய்
இன்றும் தாங்கும் உம் புயமே
இன்ப இயேசுவின் நாமமே

1. யோர்தான் புரண்டு வரும்போல்
எண்ணற்ற பாரங்களோ
எலியாவின் தேவன் எங்கே
உந்தன் விஸ்வாச சோதனையில்

2. உனக் கெதிராகவே ஆயுதம் வாய்க்காதே
உன்னை அழைத்தவர் உண்மை தேவன்
அவர் தாசர்க்கு நீதியவர்

3. உன்னை நோக்கும் எதிரியின்
கண்ணின் முன்பில் பதறாதே,
கண்மணிப்போல் காக்கும் கரங்களில்
உன்னை மூடி மறைப்பாரே

4. திறந்த வாசல் முன்னே
தீவிரமாய் பிரவேசிப்போம்
ஒரு மனிதனும் பூட்ட மாட்டான்
உன் கர்த்தர் முன் செல்வார்

Tamil Hymns

736. எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் தேவா

எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் தேவா
என்றென்றும் நான் பாடுவேன் (2)
இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

1. வானாதி வானங்கள் யாவும்
அதின் கீழுள்ள ஆகாயமும்
பூமியில் காண்கின்ற யாவும்
கர்த்தா உம்மைப் போற்றுமே (2)

2. காட்டினில் வாழ்கின்ற யாவும்
கடும் காற்றும் பனி துறலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும்
நாதா உம்மைப் போற்றுமே (2)

3. நீரினில் வாழ்கின்ற யாவும் இந்
நிலத்தின் ஜீவ ராசியும்
பாரின்ல் பறக்கின்ற யாவும்
பரனே உம்மைப் போற்றுமே (2)

737. எண்ணில் அடங்கா ஸ்தோத்திரம்

எண்ணில் அடங்கா ஸ்தோத்திரம் - தேவா
என்றென்றும் நான் பாடுவேன்
இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

1. வானாதி வானங்கள் யாவும்
அதின் கீழுள்ள ஆகாயமும்
பூமியில் காண்கின்ற யாவும்
கர்த்தா உம்மைப் போற்றுமே

2. காட்டினில் வாழ்கின்ற யாவும்
கடும் காற்றும் பனி தூறலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும்
நாதா உம்மை போற்றுமே

3. நீரினில் வாழ்கின்ற யாவும் -இந்
நிலத்தின் ஜீவ ராசியும்
பாரினில் பறக்கின்ற யாவும்
பரனே உம்மைப் போற்றுமே

4. வால வயதுள்ளானோரும் - மிகும்
வயதால் முதிர்ந்தோர்களும்
பாலகர் தம் வாயினாலும்
பாடி உம்மைப் போற்றுவாரே

Tamil Hymns

738. எண்ணெய் பூசி காயங்கள் ஆற்றியே

எண்ணெய் பூசி காயங்கள் ஆற்றியே
திராட்சை ரசத்தால் என்
உள்ளம் தேற்றியே
மரண தருவாயில் என்னை
அவர் கண்டார் அன்பால்
எரிகோ நகர் வீதிதனிலே

எந்தன் நல்ல இயேசு
என் சிந்தை நிறைந்தார் (கவர்ந்தார்)
என்றென்றும் என் சிந்தை நிறைந்தார்

739. எதை நினைத்தும் நீ கலங்காதே மகனே

எதை நினைத்தும் நீ கலங்காதே மகனே
யேகோவா தேவன்
உன்னை நடத்திச்செல்வார் (2)

1. இதுவரை உதவின
எபிநேகர் உண்டு
இனியும் உதவி செய்வார் - 2

2. சுகம் தரும் தெய்வம்
யேகோவா ர:ப்பா உண்டு
பூரண சுகம் தருவார்

3. புதுபெலன் அடைந்து சிறகுகளை
விரித்து உயர பறந்திடுவாய்
மடிந்து போவதில்லை

4. பூரண அன்ப பயத்தை புறம்பே தள்ளும்
அன்பிலே பயமில்லை

5. கர்த்தரை நினைத்து
மகிழ்ந்து களிகூர்ந்தால்
உனது விருப்பம் செய்வார்

6. வழிகளிளெல்லாம் அவரையே நம்பியிரு
உன் சார்பில் செயலாற்றுவார்

7. வலுவூட்டும் இயேசுகிறிஸ்துவின்
துணையால் எதையும் செய்திடுவாய்

Tamil Hymns

740. எதைக்குறித்தும் கலக்கம் இல்லப்பா

எதைக்குறித்தும் கலக்கம் இல்லப்பா
எல்லாவற்றிற்காகவும் நன்றி சொல்லுவேன்
யார் மேலும் கசப்பு இல்லப்பா
எல்லாருக்காகவும் மன்றாடுவேன்
எதைக் குறித்தும் கலக்கம் இல்லப்பா

1. இதுவரை உதவி செய்தீர்
இனிமேலும் உதவி செய்வீர்

2. கவலைகள் பெருகும்போது
கர்த்தர் என்னைத் தேற்றுகிறீர்

3. என் சமூகம் முன் செல்லும்
இளைப்பாறுதல் தருவேன் என்றீர்

4. வலப்பக்கத்தில் இருப்பதனால்
நான் அசைக்கப்படுவதில்லை

5. எனக்காய் யுத்தம் செய்தீர்
யாவையும் செய்து முடிப்பீர்

6. எப்போதும் உம் புகழ்தானே
உம்மைத்தான் நிறுத்தியுள்ளேன்

741. எதையும் தாங்கும் ஓர் இதயம் தாரும்

எதையும் தாங்கும் ஓர் இதயம் தாரும்
இயேசு தேவா என் தேவா

ஏன் என்று கேட்க உரிமை இல்லையே
எதையும் தாங்கும் ஓர் இதயம் தாரும்

1. கொடுத்த உயிரை நீர் எடுத்தீர்
குயவன் களிமண்ணின் அதிபதி அல்லோ
வாழ்நாள் குறைந்தவன், வருத்தம் நிறைந்தவன்
உயிருள்ள மனிதன் முறையிடுவானே --- ஏன் என்று

2. சோதித்த பின் சுத்த பொன்னாக்கிடும்
வேதத்தின் விளக்கத்தை உணரச் செய்யும்
மண்ணில் பிறந்தவன் மண்ணுக்கே திரும்புவான்
மனிதனை சோதிக்க எம்மாத்திரம் - அவன் --- ஏன் என்று

Tamil Hymns

742. எத்தனை திரள் என் பாவம்

எத்தனை திரள் என் பாவம், என் தேவனே!
எளியன்மேல் இரங்கையனே

நித்தம் என் இருதயம் தீயதென் பரனே
நிலைவரம் எனில் இல்லை நீ என் தாபரமே

1. பத்தம் உன் மேல் எனக்கில்லை
என்பேனோ பணிந்திடல் ஒழிவேனோ
சுத்தமுறுங் கரம்கால்கள் விலாவினில்
தோன்றுது காயங்கள் தூய சிநேகா!

2. என்றன் அநீதிகள் என் கண்கள் முனமே
இடைவிடாதிருக்கையிலே
உன்றன் மிகுங் கிருபை ஓ! மிகவும் பெரிதே
உத்தம மனமுடையோய் எனை ஆளும்!

3. ஆயங் கொள்வோன்போல் பாவ ஸ்திரீபோல்
அருகிலிருந்த கள்ளன் போல்
நேயமாய் உன் சரண் என் வணங்கினேன்
நீ எனக்காகவே மரித்தனை பரனே!

4. கெட்ட மகன்போல் துட்டனாய் அலைந்தேன்
கெடு பஞ்சத்தால் நலிந்தேன்
இட்டமாய் மகன் எனப் பாத்திரன் அவன் நான்
எனை ரட்சித்திடல் உன்றன் நிமித்தமே அப்பனே!

Tamil Hymns

743. எத்தனை நன்மைகள் எனக்குச்

எத்தனை நன்மைகள் எனக்குச் செய்தீர்
எப்படி நன்றி சொல்வேன் - நான்
நன்றி ராஜா நன்றி ராஜா

1. தாழ்மையில் இருந்தேன் தயவாய் நினைத்தீர்
தேவனே உம்மை துதிப்பேன்

2. பெலவீனன் என்று தள்ளி விடாமல்
பெலத்தால் இடைக் கட்டினீர்

3. பாவத்தினாலே மரித்துப்போய் இருந்தேன்
கிருபையால் இரட்சித்தீரே

4. எனக்காக மரித்தீர் எனக்காக உயிர்த்தீர்
எனக்காக மீண்டும் வருவீர்

5. கரங்களைப் பிடித்து கண்மணி போல
காலமெல்லாம் காத்தீர்

6. பாவங்கள் போக்கி சாபங்கள் நீக்கி
பூரண சுகமாக்கினீர்

7. முள்முடி தாங்கி திரு இரத்தம் சிந்தி
சாத்தனை ஜெயித்து விட்டீர்

8. நீர் செய்த அதிசயம் ஆயிரம் உண்டு
விவரிக்க முடியாதையா

Tamil Hymns

744. எத்தனை நாவால் துதிப்பேன்

எத்தனை நாவால் துதிப்பேன் - எந்தன்
கர்த்தா உன் கருணையைப் பாடிப் புகழ்ந்து

நினைக்க நினைக்க எந்தன்
நெஞ்சமெல்லாம் உருகும் - நின்னைச்
சொல் மாலையில் சூட்டி மகிழும்

1. நம்பினோரால்லோ அறிவார் எந்தன்
தம்பிரானே உந்தன் கம்பீர குணம்
அம்பரா உன் அன்பின் அதிசய நடத்துதல்
சம்பீரண சவரட்சணை செல்வம்

2. பிரார்த்தனை கேட்கும் பெம்மானே இந்த
பேதை பலவீனம் பாராதருள் கோனே
சரணென்றுன் செம்பாத மலரடி சேர்ந்தோர்
தாவிப் பிடித்துக் கவலை தீர்த்தோனோ

3. துணிவாய் என் நேஞ்சே தீவிரமாய் மிகத்
தொழுது ஆண்டவன் செயல் நினைந்து
எண்ணில் அடங்காது இறைவனின் கிருபை
விண்ணவன் சேவையின் வீரமாய்ச் செல்லு

745. எத்தனை நன்மை எத்தனை இன்பம்

எத்தனை நன்மை எத்தனை இன்பம்
சகோதரர்கள் ஒருமித்து
வாசம் பண்ணும் போது

1. அது ஆரோன் தலையில்
ஊற்றப்பட்ட நறுமணம்
முகத்திலிருந்து வழிந்தோடி
உடையை நனைக்கும்

2. சீயோன் மலையில்
இறங்குகின்ற பனிக்கு ஒப்பாகும்
இளைப்பாறுதல் சமாதானம்
இங்கு உண்டாகும்

3. இங்குதான் முடிவில்லாத
ஜீவன் உண்டு இங்குதான் எந்நாளும்
ஆசீர் உண்டு

4. இருவர் மூவர் இயேசு நாமத்தில்
கூடும் போதெல்லாம்
அங்கு நான் இருப்பேனென்று
இரட்சகர் சொன்னாரே

746. எத்தனை நாவால் பாடுவேன்

1. எத்தனை நாவால் பாடுவேன்
என் மீட்பர் துதியை!
என் ஆண்டவர் என் ராஜனின்
மேன்மை மகிமையை!

2. பாவிக்கு உந்தன் நாமமோ
ஆரோக்கியம் ஜீவனாம்!
பயமோ துக்க துன்பமோ
ஓட்டும் இன்கீதமாம்.

3. உமது சத்தம் கேட்குங்கால்
மரித்தோர் ஜீவிப்பார்;
புலம்பல் நீங்கும் பூரிப்பால்,
நிர்ப்பாக்கியர் நம்புவார்.

4. ஊமையோர், செவிடோர்களும்
அந்தகர், ஊனரும்,
உம் மீட்பர்! போற்றும்! கேட்டிடும்!
நோக்கும்! குதித்திடும்!

5. என் ஆண்டவா, என் தெய்வமே,
பூலோகம் எங்கணும்
பிரஸ்தாபிக்க உம் நாமமே
பேர் அருள் ஈந்திடும்.

747. எத்தனை நாட்கள் செல்லும் இயேசுவின்

1. எத்தனை நாட்கள் செல்லும் இயேசுவின் சுவிசேஷம்
அத்தனை நாட்டவரும் அறிய எத்தனை நாட்கள் செல்லும்?

ஆடுகள் ஏராளம் அலைந்து திரிந்திடுதே
தேடுவோர் யாவருக்கும் என் பெலன் தாராளம்

2. சாத்தானின் சக்திகளும் பெருகிடும் நாட்களிலே
தேவனின் பிள்ளைகட்குள் ஒருமனம் என்று வரும்?

3. தேவைகள் நிறைந்து நிற்க வாய்ப்புகள் நழுவிச் செல்ல
தாழ்மையாய் ஊழியர்கள் இணைவது என்று வரும்?

4. கோபங்கள், சீற்றங்களும், பொறாமையும், பிரிவுகளும்
ஊழியர் என்று சொல்வார் நடுவினில் என்றகலும்?

5. உண்மையாம் கோதுமைகள் மணியாக மண் அடியில்
மறைந்திடும் நாள் வருமா? நாம் உடைபடும் நாள் வருமா?

748. எத்தனையோ நாமங்கள் தேவனே

எத்தனையோ நாமங்கள் தேவனே
அத்தனையும் உமக்கு பொருந்துமே
யேகோவா தேவனே எபினேச பிரபுவே
இம்மனுவேலரே ஏசுவே

1. எல் ரோஹி நாமம் உள்ளவர்
எங்களை காண்கின்ற தேவனாம் (2)
எல் எல்யோன் நாமத்தை உடையவர் என்பது
அதி உன்னத தேவன் என்று ஆகுமே

2. எத்தனையோ நாமங்கள் தேவனே
அத்தனையும் உமக்கு பொருந்துமே (2)
யேகோவா தேவனே எபினேச பிரபுவே
இம்மனுவேலரே ஏசுவே (2)

3. என்றென்றும் உயிரோடு இருப்பவர்
எல் ஓலம் என்று அழைக்கிறோம் (2)
நமக்கென்றும் துணையாய் நம்மோடு இருப்பதால்
யேகோவா ஷம்ம என்று சொல்கிறோம் (2)

4. எத்தனையோ நாமங்கள் தேவனே
அத்தனையும் உமக்கு பொருந்துமே (2)
யேகோவா தேவனே எபினேச பிரபுவே
இம்மனுவேலரே ஏசுவே (2)

Tamil Hymns

749. எந்த நிலையில் நான் இருந்தாலும்

எந்த நிலையில் நான் இருந்தாலும்
என்னை வெறுக்காதவர் என் இயேசு ஒருவரே
என் நேசர் ஒருவரே

1. அனாதையாய் நான் இருந்தால் பலர் வெறுப்பார்கள்
அன்பு வேண்டுமா என்று அலைய வைப்பார்கள்
எந்த நிலையில் நான் இருந்தாலும்
என்னை வெறுக்காதவர் என் இயேசு ஒருவரே
என் நேசர் ஒருவரே --- எந்த

2. பட்டப்படிப்பு இல்லா விட்டால் பலர் வெறுப்பார்கள்
என் பட்டங்களை சொல்லி சொல்லி பரிகசிப்பார்கள்
எந்த நிலையில் நான் இருந்தாலும்
என்னை வெறுக்காதவர் என் இயேசு ஒருவரே
என் நேசர் ஒருவரே --- எந்த

3. நோயாளியாய் நான் இருந்தால் பலர் வெறுப்பார்கள்
என் நோய்களையே சொல்லி சொல்லி நோகடிப்பார்கள்
எந்த நிலையில் நான் இருந்தாலும்
என்னை வெறுக்காதவர் என் இயேசு ஒருவரே
என் நேசர் ஒருவரே --- எந்த

4. கடனாளியாய் நான் இருந்தால் பலர் வெறுப்பார்கள்
என் கடன்களையே சொல்லி சொல்லி கலங்க வைப்பார்கள்
எந்த நிலையில் நான் இருந்தாலும்
என்னை வெறுக்காதவர் என் இயேசு ஒருவரே
என் நேசர் ஒருவரே --- எந்த

750. எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்

இயேசுவே உம்மை நான்
துதிப்பேன் துதிப்பேன் - எந்த
வேளையிலும் துதிப்பேன்

1. ஆதியும் நீரே அந்தமும் நீரே
ஜோதியும் நீரே என் சொந்தமும் நேரே

2. தாய் தந்தை நீரே தாதியும் நீரே
தாபரம் நீரே என் தாரகம் நீரே

3. வாழ்விலும் நீரே தாழ்விலும் நீரே
வாதையில் நீரே என் பாதையில் நீரே

4. வானிலும் நீரே பூவிலும் நீரே
ஆழியில் நீரே என் ஆபத்தில் நீரே

5. துன்ப நேரத்தில் இன்பமும் நேரே
இன்னல் வேளையில் என் மாறிடா நேசர்

6. ஞான வைத்தியராம் ஔஷதம் நீரே
ஆத்ம நேசராம் என் நண்பரும் நீரே

7. மீட்பரும் நீரே என் மேய்ப்பரும் நீரே
மேன்மையும் நீரே என் மகிமையும் நீரே

8. தேவனும் நீரே என் ஜீவனும் நீரே
ராஜ ராஜனும் என் சர்வமும் நீரே

9. ஞானமும் நீரே தானமும் நீரே
நியாமமும் நேரே என் நாதனும் நீரே

10. ஆறுதல் நீரே ஆதாரம் நீரே
ஆசையும் நீரே என் ஆனந்தம் நீரே

Tamil Hymns

751. எந்தன் அன்புள்ள ஆண்டவர்

1. எந்தன் அன்புள்ள ஆண்டவர் இயேசுவே நான்
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உம்மைப் போல் ஒரு தேவனைப் பூமியில்
அறிந்திடேன் உயிர் தந்த தெய்வம் நீரே

ஆ! ஆனந்தம் ஆனந்தமே
அல்லும் பகலிலும் பாடிடுவேன்
இயேசுவே எந்தன் ஆருயிரே

2. பெற்ற தாயும் என் தந்தையுமானவரே!
மற்றும் எல்லாம் எனக்கு நீரே
வானம் பூமியும் யாவுமே மாறிடினும் நீரோ
வாக்கு மாறாதவரே

3. உயர் அடைக்கலத்தில் என்னை வைத்தவரே
உந்தன் நாமத்தை நம்பிடுவேன்
உம்மையல்லாதிப் பூமியில் யாரையும் நம்பிடேன்
உயிருள்ள தெய்வம் நீரே

4. எந்தன் சிருஷ்டிகரே உம்மை நினைத்திடவே
தந்த வாலிப நாட்களிலே
இந்த மாய உலகத்தை வெறுத்திட
அளித்தீரே பரிசுத்த ஜீவியமே

5. பொன் வெள்ளியுமோ பெரும் பேர் புகழோ
பண ஆஸ்தியும் வீண் அல்லவோ
பரலோகத்தின் செல்வமே என் அருள்
இயேசுவே போதும் எனக்கு நீரே

Tamil Hymns

752. எந்தன் ஆத்துமா உம்மை நாடுது

எந்தன் ஆத்துமா உம்மை நாடுது
எந்தன் ஜீவனும் உம்மைத் தேடுது
எந்தன் நினைவுகள் உம்மை பாடுது
எந்தன் இதயமும் வாஞ்சித்து கதறுது

1. நீரே வெளிச்சமும் இரட்சிப்புமானவர்
எந்தன் ஜீவனும் பெலனுமானவர்
யாருக்கு அஞ்சுவேன் யாருக்கு
பயப்படுவேன் அடைக்கலம் நீரல்லவோ
யுத்தம் ஒன்று எழும்பினாலும்
பாளையம் ஒன்று எதிர் கொண்டாலும்
பகைவர் என்னை எதிர்தாலும்
எதிர்த்தவர் இடறுவார் - என்னை

2. உம்மிடத்தில் ஒன்று கேட்டேன்
உன்னத மகிமை வேண்டி நின்றேன்
உமது வசனம் தேடி வந்தேன்
ஆலயம் நாடுவேன்
தீங்கு நாளில் கூடார மறைவில்
என்னை மறைத்து பாதுகாத்து
கன்மலை மேலே உயர்த்தி வைத்து
என்றென்றும் காத்திடுவீர - என்னை

3. பகைவர்க்கெதிரே நீர் என்னை உயர்த்த
மகிழ்வுடன் நானும் ஆனந்த பலியிட
உம்மைப் பாடி கீர்த்தனம் பண்ணுவேன்
பாடல் கேட்டிடுவீர்
உமது முகத்தை தேடுங்கள் என்றீர்
உமது முகத்தையே தேடுவேன் என்றெ
நெகிழ விடாமல் நீரே காத்திடும்
நீரே சகாயரே - எனக்கு

Tamil Hymns

753. எந்தன் ஆத்துமாவே கர்த்தரை துதி

எந்தன் ஆத்துமாவே கர்த்தரை துதி
கர்த்தரையே துதி
எந்தன் முழு உள்ளமே அவர் நாமத்தையே
என்றென்றும் ஸ்தோத்தரி

1. அன்பின் கரத்தாலே தூக்கி எடுத்தீரே
கன்மலைமேல் என்னை நிறுத்தினீரே
உம்மைத் துதித்திடும் புதுப் பாடல் தந்தீரே
ஆயிரம் நாவுகள் போதாதே

2. உம் கிருபையினால் முடிசூட்டினீர் என்னையே
தூதரிலும் மேலாய் உயர்த்தினீரே
உம் நன்மையை நினைத்து நானென்றும்
துதிப்பேன் - ஆயிரம் நாவுகள் போதாதே

3. நாட்கள் நகர்ந்திட்டாலும் காலம் கடந்திட்டாலும்
கர்த்தரே நீர் என்றும் மாறாதவர்
உம் கிருபையை என்றும் எண்ணி நான் துதிப்பேனே
ஆயிரம் நாவுகள் போதாதே

Tamil Hymns

754. எந்தன் ஆத்ம நேசரே

1. எந்தன் ஆத்ம நேசரே
வெள்ளம் போன்ற துன்பத்தில்
தாசன் திக்கில்லாமலே
தடுமாறிப் போகையில்
தஞ்சம் தந்து இயேசுவே
திவ்விய மார்பில் காருமேன்
அப்பால் கரையேற்றியே
மோட்ச வீட்டில் சேருமேன்.

2. வல்ல தேவரீர் அல்லால்
வேறே தஞ்சம் அறியேன்
கைவிடாமல் நேசத்தால்
ஆற்றித் தேற்றித் தாங்குமேன்
நீரே எந்தன் நம்பிக்கை
நீர் சகாயம் செய்குவீர்
ஏதுமற்ற ஏழையை
செட்டையாலே மூடுவீர்

3. குறை யாவும் நீக்கிட
நாதா நீர் சம்பூரணர்
திக்கற்றோரைத் தாங்கிட
நீரே மா தயாபரர்
நான் அசுத்த பாவிதான்
நீரோ தூயர் தூயரே
நான் அநீதி கேடுள்ளான்
நீர் நிறைந்த நித்தியரே

4. பாவம் யாவும் மன்னிக்க
ஆரருள் அமைந்த நீர்
என்னைச் சுத்திகரிக்க
அருள் பாயச் செய்குவீர்
ஜீவ ஊற்றாம் இயேசுவே
எந்தன் தாகம் தீருமேன்
ஸ்வாமி என்றும் என்னிலே
நீர் சுரந்து ஊறுமேன்.

755. எந்தன் இதய கானம் என்றும் உன்னைப்

எந்தன் இதய கானம் என்றும் உன்னைப் பாடும்
இயேசுவே என் தலைவனென்று என்றும் எடுத்துக்கூறும் (2)

1. காலையில் பண்பாடும் பறவைக் கூட்டங்கள்
சோலையில் நின்றாடும் மரத்தின் தோட்டங்கள்
மாலையில் எம்மீது வீசும் தென்றல்கள்
மருதம் மகிழச் சேரும் மழையின் துளிகள்
நீரில் நீந்திடும் மீனின் ஓட்டங்கள்
நிலத்தினில் வாழ்ந்திடும் விலங்கின் கூட்டங்கள்
எல்லாம் உன் புகழ்ப்பாடுதே உன் சொல்லாலே உயிர் வாழுதே

2. தெய்வமே என்றாகும் மழலை மொழிகளும்
தேயா அன்பாகும் தெய்வ மாந்தரும்
கோயிலில் நின்றோங்கும் புகழ்ச்சிப் பாக்களும்
பூமியில் நற்சேவை ஆற்றும் தொண்டரும்
நீதியும் நேர்மையும் கேட்கும் கூக்குரல்
நியாயமும் தர்மமும் தேடும் ஏக்கங்கள்
எல்லாம் உன் புகழ்ப்பாடுதே உன் சொல்லாலே உயிர் வாழுதே

Tamil Hymns

756. எந்தன் இயேசு உன்னதத்தில்

1. எந்தன் இயேசு உன்னதத்தில்
அன்புள்ளோனாய் வாழும் போது
ஏழையேன் கலங்குகிறேன் இப்பூமியில் அதால்
என்று மவர் கிருபை மட்டும் போதுமே

2. இன்னல்களாம் குன்றுதனில்
பின்னிடாமல் ஏறுதற்கு - இயேசு
என்கால் தனை மான் கால்போலாக்கி என்னை
இன்பமா யென் பாதையோடச் செய்குவார்!

3. ஆரும் துணை இல்லை என்றோ
ஏகனாய் நான் ஆனேன் என்றோ
என் மனதில் எண்ணிடேன் ஓர் நாளுமே - இயேசு
என்னுடனில்லாமல் எங்கு போயினர்?

4. என்னருமைத் தோழரன்றோ தெய்வதூத சங்கமெல்லாம்;
இப்போதவர் என் பிதா முன் நிற்கிறார் - பின்னால்
என்னையும் தம் ஊழியத்தால் தேற்றுவார்

5. வியாகுலம் என் வீட்டை விட்டு காட்டிலோடப் பண்ணிடினும்
அங்கேயொரு தூதன் என்னைச் சந்தித்து, சூடாம்
அப்பமும் ஜலமும் தந்து தேற்றுவார்!

6. வரும் நாளுக்காக வீணாய் என் மனம் நொந்தென்ன புண்ணியம்?
என்னைத் தினம் போஷிப்பவர் இல்லையோ? - இன்றும்
ஏழையான் அவரை மட்டும் நம்புவேன்

7. கவனிப்பாய் காகத்தை நீ! விதைப்பில்லை! அறுப்பில்லை!
விலையின்றிப் போற்ற வில்லையோ நாதன் - லீலி
புஷ்பங்களில் வண்மையதை வைத்திட்டார்!

8. பத்மு தீவில் ஏகனாய் நான் தங்கிடினும் பயப்படேன்
வானம் திறந்தேசு நாதர் ஜோதியாய் - என்னை
பரதீசில் ஆவிக்குள் எடுப்பாரே!

9. ஹா! மகேசா! கருணேசா பொன்னு நாதா! நீரெனக்காய்
வேண்டியதெல்லாம் தயவாய்த் தந்தால் - நானென்
வாணாளெல்லாம் உம்மைப் போற்றிப் பாடுவேன்

Tamil Hymns

757. எந்தன் இயேசு எந்நாளும் என்னை

எந்தன் இயேசு எந்நாளும் என்னை காப்பாரே
எந்தன் இயேசு எப்போதும் என்னை மறவாரே
அவர் உள்ளங்கையில் என்னை வரைந்தாரே
எப்போதும் என்னை பார்க்கவே

1. தாயைப் போல தேற்றுகிறார் அன்பு காட்டுகிறார்
ஏந்திக் கொள்ளுவார் என்றும் தாங்குவார்
கோழியும் தன் குஞ்சுகளை கூவி
தமது சிறகால் மூடுவது போல
ஆபத்திலே நான் கூப்பிடும் போது
ஓடோடிவந்திடுவார் சிறகால் மூடிடுவார்

2. அக்கினிபோன்ற சோதனையில் கடும்வேதனையில்
கரம் நீட்டியே என்னை தாங்குவார்
எனக்கு என்று பெலன் ஒன்றும் இல்லையே
என் பெலமெல்லாம் இயேசுவே இயேசுவே
அவர் பெலத்தாலே தரும் ஜெயத்தாலே
மலைகளை நொறுக்கிடுவேன்
மதிலையும் தாண்டிடுவேன்

3. வெள்ளம்போல சாத்தானும் வந்துமோதினாலும்
என் தேவனோ பட்சமாய் நிற்பார்
கர்த்தர் எனக்காய் யுத்தம் செய்யவாரே
எதிலும் எனக்கு ஜெயங்கொடுப்பாரே
இது வரை காத்தவர் இனியும் காப்பார்
என்றென்றும் நடத்திடுவார் கூடவே இருந்திடுவார்

Tamil Hymns

758. எந்தன் இயேசு எனக்கு நல்லவர்

எந்தன் இயேசு எனக்கு நல்லவர்
அவர் என்றென்றும் போதுமானவர்
ஆபத்தில் வியாதியில் என் பிரயாசங்களில்
அவர் என்றுமே போதுமானவர்

கல்வாரி மலைமேல் ஏறியே
முள் முடி சிரசில் சூடியே
என் வேதனை யாவையும் நீக்கி என்னில்
புது ஜீவனை ஊற்றினதால்

அவர் ஆதியும் அந்தமுமே
தெய்வ சிநேகத்தின் பிறப்பிடமே
பதினாயிரங்களில் மிக சிறந்தவரை
துதிக்கப் படத்தக்கவரே

புவி யாத்திரை மிகக் கடினம்
தேவ கிருபைகள் எந்நேரமும்
பகல் மேகஸ்தம்பம் ராவில் அக்கினிஸ்தம்பம்
அனுதினம் என்னை வழி நடத்தும்

எந்தன் ஏக்கம் எல்லாம் நீங்கிப்போம்
கண்ணீர் யாவையும் துடைத்திடுவார்
இயேசு இராஜாவாய் வானத்தில் வெளிப்படும் நாள்
நான் அவருடன் பறந்திடுவேன்

Tamil Hymns

759. எந்தன் இயேசு கைவிடமாட்டார்

எந்தன் இயேசு கைவிடமாட்டார்
என்னை மறந்திட மாட்டார்

அல்லேலூயா - 8

1. நிந்தனை போராட்டத்தில்
நேசர் எனைத் தாங்கினார்
சோதனை வந்த போதெல்லாம்
தப்பிச் செல்ல வழி காட்டினார்

2. கடந்ததை மறக்கின்றேன்
கண் முன்னால் என் இயேசுதான்
காத்திருந்து பெலன் அடைந்து
கழுகைப் போல் எழும்பிடுவேன்

3. சீக்கிரம் வரப்போகின்ற
நேசருக்காய் காத்திருப்பேன்
எரியும் விளக்கேந்தியே
இயேசுவின் பின் செல்லுவேன்

4. ஆயிரம் துன்பம் வந்தாலும்
அச்சம் எனக்கில்லையே
அரணும் கோட்டையும் அவர்
அத்தனையும் தகர்த்திடுவாரே

Tamil Hymns

760. எந்தன் யேசு சொந்த யேசு

எந்தன் யேசு சொந்த யேசு
உம்மை என்றும் பாடுவேன்
நீரே போதும் வேறே வேண்டாம்
உம்மை என்றும் பாடுவேன்

1. என்னை சொந்தமாக கொண்ட
உம்மை போல இயேசையா
எண்ணி எண்ணி உம்மில் சார்ந்து
என்றும் உம்மை பாடுவேன்

2. என்ன குடிப்பேன் உடுப்பேன் என்று
எண்ணும் கவலை இல்லையே
அண்ணல் இயேசு நீரே போதும்
என்றும் உம்மை பாடுவேன்

3. பொன்னும் ஒன்றும் வேண்டாமே
போதும் இயேசு மாத்ரமே
இங்கும் இயேசு அங்கும் இயேசு
என்றும் எங்கு பாடுவேன்

4. ஊற்றுண்ட தைலம் இயேசு
என் உள்ளத்திலே ஜீவிக்க
ஊக்கமாய் என் தேவையிலே
பொன் இயேசுவை பாடுவேன்

5. போக்குவரத்தும் இயேசுவே
என் புகலிடமும் இயேசுவே
ஏக்கத்தோடே காத்திருக்கேன்
தூக்கத்திலும் பாடுவேன்

Tamil Hymns

761. எந்தன் இயேசு வல்லவர்

எந்தன் இயேசு வல்லவர்
என்றும் நடத்துவார்
ஆ பேரின்பம் அவர் என் தஞ்சமே
அனுதினம் அன்பருடன் இணைந்து செல்லுவேன்

1. அற்புதமாம் அவர் அன்பு
அண்டினோர் காக்கும் தூய அன்பு
இப்பூவினில் இவரைப்போல் அன்பர் எவருண்டு
மாறாதவர் எந்தன் இயேசு என்றும் பற்றிடுவேன்

2. சர்வ வல்ல தேவனிவர்
சாந்தமும் தாழ்மை உள்ளவராம்
எந்நாளுமே எந்தனையே தாங்கிடும் வல்லவராம்
நம்பிடுவேன் என்றென்றுமாய் எந்தன் இயேசுவை

3. குற்றங்களை மன்னித்தவர்
தம்மண்டை என்னைச் சேர்த்துக் கொண்டார்
எந்தன் நேசர் ஒப்பற்றவர் - பொறுமை நிறைந்தவர்
சார்ந்திடுவேன் இந்நிலத்தே - எந்தன் தஞ்சமிவர்

4. கர்த்தர் எந்தன் மேய்ப்பராவார்
சீரான பாதை நடத்திடுவார்
எந்தன் வழி செம்மையாக்கி ஏற்று நிறுத்துவார்
எந்தன் நேசர் காத்திடுவார் என்றும் பின் செல்லுவேன்

5. ஜெயங் கொண்ட வேந்தனிவர்
பாதாளம் யாவும் வென்றவராம்
வெற்றியுடன் முன்சென்றிட கிருபை நல்கிடுவார்
முன்செல்லுவேன் இயேசுவுடன் என்றும் ஆனந்தமே.

Tamil Hymns

762. எந்தன் இயேசுவின் அன்பதையே

எந்தன் இயேசுவின் அன்பதையே
எண்ணும் வேளையில் ஆனந்தமே

1. கடந்த நாட்களில் கைவிடாமலே
கண்ணின் மணிபோல காத்ததினால்
மனப்பூர்வமாய் துதிப்பேன் மகிழ்வுடனே
மன்னன் கிறிஸ்தேசுவையே

2. அழைத்த பாதையில் தளர்ந்த வேளையில்
அன்பின் மொழியால் பேசினாரே
புது ஜீவனும் நிறைவாய் அளித்ததினாலே
புண்ணியனைப் போற்றிடுவேன்

3. வறுமை வியாதியின் வலிய தோல்வியும்
வந்த வேளையில் தாங்கினாரே
ஜெய கீதமே தினமும் எவ்வேளையிலும்
ஜெயத்துடன் பாடிடுவேன்

4. நெகிழ்ந்த கரங்களை உயிர்த்து இதுவரை
இழந்த வரங்களும் ஈந்ததினால்
அவர் சேவையை புரிந்து கனம் மகிமை
அவருக்கே செலுத்திடுவேன்

5. நிறைந்த ஜோதியாய் திறந்த வானிலே
நீதி சூரியன் தோன்றிடுவார்
மறு ரூபமே அடைந்தே பறந்திடுவேன்
மட்டற்ற பேரின்பமுடன்

Tamil Hymns

763. எந்தன் இயேசையா

எந்தன் இயேசையா எந்தன் இயேசையா
உம் அன்பென்றும் பெரிதையா
என் வாழ் நாளெல்லாம் உம் அன்பை நான் நினைத்து
எந்நாளும் போற்றிடுவேன் -2

1. குருசினில் தொங்கி குருதியும் சிந்தி
பாவங்கள் போக்கி அணைத்தீரையா (2)
என் உள்ளம் பொங்கும் உம்மையே துதிக்கும்
உயிரின் ஜீவன் நீர்தானையா (2)

2. உலகம் என்னை வெறுத்த போது
கரங்கள் நீட்டி அணைத்தீரையா (2)
உம் அன்பு என்றும் ஆறுதல் அளிக்கும்
என் வாழ்வே என்றும் நீர்தானையா

Tamil Hymns

764. எந்தன் உள்ளத்தில் புது உணர்வு

1. எந்தன் உள்ளத்தில் புது உணர்வு
எந்தன் வாழ்வினில் புது மலர்ச்சி
எந்தன் நடை உடை பாவனை சொல் செயலும்
எந்தன் இயேசுவால் புதிதாயின

புது வாழ்வு புது ஜீவன்
என்னை சந்தித்த இயேசு தந்தார்
ஆடிப்பாடி உள்ளம் ஆர்ப்பரிப்பேன்
ஆண்டவர் சமூகத்தை அலங்கரிப்பேன் (2)

2. கதரேனரின் கடற்கரையில்
கல்லறையிடை வாசம் செய்த
பொல்லா ஆவி மனிதன் நாதர் பாதம்பணிய
நல்ல அற்புத மாற்றம் பெற்றான்

3. ஓடையில் உருண்டோடி வரும்
சின்னக் கற்களும் வடிவம் பெறும்
செல்ல தாவீதுக்கு கோலியாத்தை வீழ்த்த
வல்ல ஆயுதமாகிவிடும்

4. காட்டத்தி மரம் ஏறி ஒளிந்த
குள்ளன் சகேயுவும் மாற்றம் பெற்றான்
உள்ளபடி யாவும் நாதரிடம் அறிக்கை செய்தான்
வெள்ளம் போன்றுல்லாம் பூரிப்படைந்தான்

5. சிலுவை நிழல் வந்திட்டேனே
இயேசுவின் கரம் பற்றிட்டேனே
எந்தன் இயேசுவுடன் கொண்ட உறவு என்னை
புது வடிவமாய் திகழச் செய்யும்

Tamil Hymns

765. எந்தன் உள்ளம் தங்கும்

எந்தன் உள்ளம் தங்கும் இயேசு நாயகா
உந்தன் வீடாய்க் கொள்ளும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
உந்தன் வீடாய்க் கொள்ளும் இயேசு நாயகா

1. மாம்சக்கிரியை போக்கும் இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா

2. திரும்ப விழாது பாரும் இயேசு நாயகா
கிருபை இழாது காரும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
கிருபை இழாது காரும் இயேசு நாயகா

3. என்னை உமக்குத் தந்தேன் இயேசு நாயகா
இனி நான் அல்ல, நீரே இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
இனி நான் அல்ல, நீரே இயேசு நாயகா

766. எந்தன் உள்ளம் புதுக்கவியாலே

1. எந்தன் உள்ளம் புதுக்கவியாலே பொங்க
இயேசுவைப் பாடிடுவேன்
அவர் நாமம் ஊற்றுண்ட பரிமளதைலம்
அவரையே நேசிக்கிறேன்

அல்லேலுயா துதி அல்லேலூயா -- எந்தன்
அண்ணலாம் இயேசுவைப் பாடிடுவேன்
இத்தனை கிருபைகள் நித்தமும் அருளிய
கர்த்தனைக் கொண்டாடுவேன்

2. சென்ற காலம் முழுவதும் காத்தாரே
ஓர் சேதமும் அணுகாமல்
சொந்தமாக ஆசீர் பொழிந்தெனக்கென்றும்
சுகபெலன் அளித்தாரே

3. சிலவேளை இமைப் பொழுதே
தம் முகத்தை சிருஷ்டிகர் மறைத்தாரே
கடும் கோபம் நீங்கி திரும்பவும் என்மேல்
கிருபையும் பொழிந்தாரே

4. பஞ்சகாலம் பெருகிட நேர்ந்தாலும்
தாம் தஞ்சமே யானாரே
அங்கும் இங்கும் நோய்கள் பரவி வந்தாலும்
அடைக்கலம் அளித்தாரே

5. களிப்போடு விரைந்தெம்மைச் சேர்த்திட
என் கர்த்தரே வருவாரே
ஆவலோடு நாளும் வானத்தை நோக்கி
அனுதினம் காத்திருப்போம்

Tamil Hymns

767. எந்தன் கர்த்தாவே உம்மை

எந்தன் கர்த்தாவே உம்மை
நான் துதிப்பேன் எல்லா நேரமும்
எந்தன் கன்மலையே எந்தன் கோட்டை
எந்தன் தஞ்சமும் நீரே

நீரே என் அடைக்கலம் நீரே என் இரட்சகர்
நீரே துதிக்கு பாத்திரர் நீர் ஒருவரே பாத்திரர்

பாவங்கள் மன்னித்து
நோய்களை குணமாக்கி
ஜீவனை அழிவுக்கு மீட்டீர்
கிருபையினாலும் இரக்கத்தினாலும்
என்னை முடி சூட்டினீர்

ஆபத்தில் கூப்பிட்டேன்
கரம்கொண்டு தூக்கினீர்
தேவன் நீர் என்னோடு இருக்கிறீர்
சத்துருக்கள் முன்பாக பந்தி
ஆயத்தம் செய்து என்னை அபிஷேகித்தீர்

Tamil Hymns

768. எந்தன் கன்மலை ஆனவரே

1.எந்தன் கன்மலை ஆனவரே
என்னை காக்கும் தெய்வம் நீரே
வல்லமை மாட்சிமை நிறைந்தவரே
மகிமைக்கு பாத்திரரே

ஆராதனை உமக்கே (4)

2. உந்தன் சிறகுகளின் நிழலில்
என்றென்றும் மகிழச் செய்தீர்
தூயவரே என் துணையாளரே
துதிக்குப் பாத்திரரே

3. எந்தன் பெலவீன நேரங்களில்
உம் கிருபை தந்தீரைய்யா
இயேசு ராஜா என் பெலனானீர்
எதற்கும் பயம் இல்லையே

4. எந்தன் உயிருள்ள நாட்களெல்லாம்
உம்மை புகழ்ந்து பாடிடுவேன்
ராஜா நீர் செய்த நன்மைகளை
எண்ணி துதித்திடுவேன்

Tamil Hymns

769. எந்தன் கோட்டை எந்தன் தஞ்சம்

எந்தன் கோட்டை எந்தன் தஞ்சம்
எந்தன் ஆருயிர் நண்பன் நீர்
எனக்காய் வந்தீர் எனக்காய் மரித்தீர்
எனக்காய் திரும்பவும் வருபவர் நீர்

உம்மை போல இவ்வுலகில் யாருமில்லையே
உம்மைப் பாடி போற்றி உயர்த்திடுவேன்

இயேசு பிறந்தார் பிறந்தார் எனக்காகவே
சிலுவை சுமந்தார் மரித்தார் எனக்காகவே
உயிர்த்தெழுந்தார் எழுந்தார் எனக்காகவே
மீண்டும் வருவார் வருவார் எனக்காகவே

எந்தன் நேசர் எந்தன் மீட்பர்
என்னைக் காக்கும் தெய்வம் நீர்
நான் உம்மைப் பாடி உம்மைப் போற்றி
உமக்காய் என்றும் வாழ்ந்திடுவேன்
பாவியான என்னை மீட்டவரே
உம்மைப்போல் இவ்வுலகில் யாருமில்லையே

இயேசுவே என் இயேசுவே - நீர்
இல்லாமல் எனக்கு யாருமில்லையே
நான் செய்த பாவங்கள் பல ஆயிரம்
உம் இரத்தத்தால் என்னை மீட்டுகொண்டீரே
நன்றி இயேசுவே

770. எந்தன் சமுகம் முன்னே செல்லும்

எந்தன் சமுகம் முன்னே செல்லும்
இளைப்பாறுதல் தந்திடுவேன்
நேற்றும் இன்றும் மாறாதவர்
நேசர் இயேசு வாக்கு தந்தார்

1. தேவ சமுகம் செல்லும் வேளை
தேவ வல்லமை தோன்றிடுதே
தேவைகளை சந்தித்திடும்
நித்திய தேவன் நம் துணையே

2. தேவ தூதன் முன் சென்றுமே
தேவ இரட்சிப்பை தந்திடுவார்
சத்துருவை ஜெயித்திட
சத்துவம் யாவும் தந்திடுவார்

3. தேவ சமுகம் ஆனந்தமே
நித்திய பேரின்பம் தந்திடுமே
கர்த்தருக்குள் மகிழ்ந்திட
சத்திய தேவன் அருள் செய்வார்

4. உந்தன் மறைவில் சேரும்போது
உம்மில் ஒளித்து காத்திடுவீர்
ஆபத்தினில் அடைக்கலம்
அற்புத தேவன் துணையாவார்

5. பூமியை நியாயம் தீர்த்திடவே
இயேசு ராஜனாய் வந்திடுவார்
விழிப்புடன் ஜீவித்துமே விண்ணவர்
இயேசுவை சந்திப்போமே

Tamil Hymns

771. எந்தன் தேவனால்

எந்தன் தேவனால் எந்தன் தேவனால்
நிச்சயம் நான் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளுவேன்
உந்தன் வசனம் கைக்கொள்ளுவேன் நான்
உந்தன் வழிகளில் நடந்திடுவேன்

1. தேசத்தில் நான் ஆசீர்வாதமாயிருப்பேன்
வேலையிலும் ஆசீர்வாதமாயிருப்பேன்
என் வீட்டில் ஆகாரக் குறைவில்லையே
என் தேவைகள் ஒன்றும் தடையில்லையே

2. எனக்கெதிராய் வரும் ஆயுதமெல்லாம்
நிர்மூலமாய் போய்விடும் எந்தன் தேவனால்
என் பெலன் ஆரோக்கியம் தேவதானமே
எந்தன் சரீரம் ஆசீர்வதிக்கப்படும்

3. வாழ்கைத் துணையும் என் பிள்ளைகளும்
எந்தன் சம்பத்தும் ஆசீர்வதிக்கப்படும்
எந்தன் நன்மைக்காய் செழித்தோங்கிடச் செய்வார்
என்னையவர் பரிசுத்த ஜனம் ஆக்குவார்

4. இனி என்றும் கடன் வாங்க விடமாட்டார்
கொடுத்ததை செழித்தோங்கச் செய்திடுவார் (2)
உயர்வடைவேன் என் வாழ்க்கையிலே
உன்னதங்களில் என்னை உயர்த்திடுவார்

Tamil Hymns

772. எந்தன் மறைவிடமே உமக்கு

எந்தன் மறைவிடமே உமக்கு ஸ்தோத்திரமையா
எந்தன் புகலிடமே உமக்கு ஸ்தோத்திரமையா
இயேசையா (2) உமக்கு கோடி கோடி ஸ்தோத்திரமையா

1.என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீரே
இக்கட்டுக்கெல்லாம் விலக்கினிரே
இரட்சணிய பாடல்கள் சூழ்ந்துகொள்ள செய்தீரே
உமக்கு கோடி ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரம் இயேசு நாதா
ஸ்தோத்திரம் இயேசு ராஜா

2.என் மேல் உம் கண்களை வைத்தீரையா
ஆலோசனை தினம் தருகின்றீரே
நடக்கும் வழிதனை காட்டுகிறீர்
உமக்கு கோடி ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரம் இயேசு நாதா
ஸ்தோத்திரம் இயேசு ராஜா

Tamil Hymns

773. எந்தன் நண்பனே அட எந்தன் நண்பனே

எந்தன் நண்பனே அட எந்தன் நண்பனே
நான் சொல்லுவது உண்மை அதை நம்பு (2)
ஆழகான உலகம் நமக்கிங்கு உண்டு
அதன் பின்னே சென்றால் என்ன உண்டு (2)
அட வேஸ்டு வேஸ்டு வேஸ்டு
இந்த உலகம் ரொம்ப வேஸ்டு
ஆனால் டேஸ்டு டேஸ்டு டேஸ்டு
என் இயேசு ரொம்ப டேஸ்டு (2) - எந்தன் நண்பனே

1. ஏர்டெலில் போட்டோம் கடலை
ஏர்செலில் அனுப்பினோம் எஸ்எம்எஸ்
உலகத்தின் இன்பம் நிரந்தரமென்று
சுற்றித் திரிந்தோம் (2) (அட)
அட மனுஷனின் அன்பு பொய்யே
இயேசுவின் அன்பு மெய்யே
இதை புரிந்தவனாய் நீ வாழ்ந்தால்
கலக்கிடலாம் (2)

அட வேஸ்டு வேஸ்டு வேஸ்டு
இந்த உலகம் ரொம்ப வேஸ்டு
ஆனால் டேஸ்டு டேஸ்டு டேஸ்டு
என் இயேசு ரொம்ப டேஸ்டு (2) - எந்தன் நண்பனே

2. ஸ்கூலில் கடைசி பென்ச்சு
ஆனால் தியேட்டரில் முதல் சீட்டு
பரிட்சை மார்கில் நாங்கள் என்றும்
முட்டை எடுத்தோம் (2) (அட)
அட ஆகாதவன் என்று
தள்ளப்பட்ட கல்நான்
என்னை மூலைக் கல்லாய் மாற்றின இயேசு
உனக்கு உண்டு (2)
அட வேஸ்டு வேஸ்டு வேஸ்டு
இந்த உலகம் ரொம்ப வேஸ்டு
ஆனால் டேஸ்டு டேஸ்டு டேஸ்டு
என் இயேசு ரொம்ப டேஸ்டு (2)

Tamil Hymns

774. எந்தன் நாவில் புதுப்பாட்டு

எந்தன் நாவில் புதுப்பாட்டு
எந்தன் இயேசு தருகிறார் (2)

ஆனந்தம் கொள்ளுவேன்
அவரை நான் பாடுவேன் - உயிருள்ள
நாள் வரையில்

1. பாவ இருள் என்னை வந்து
சூழ்ந்து கொள்கையில் - தேவனவர்
தீபமாம் என்னைத் தேற்றினார்

2. வாதை நோயும் வந்தபோது
வேண்டல் கேட்டிட்டார் - பாதை காட்டி
துன்பமெல்லாம் நீக்கி மீட்டிட்டார்

3. சேற்றில் வீழ்ந்த என்னையவர்
தூக்கியெடுத்தார் - நாற்றமெல்லாம்
ஜீவரத்தம் கொண்டு மாற்றினார்

4. தந்தை தாயும் நண்பருற்றார்
யாவுமாகினார் நிந்தை தாங்கி
எங்குமவர் மேன்மை சொல்லுவேன்

5. இவ்வுலக பாடு என்னை என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வைக் காண
காத்திருக்கிறேன்

Tamil Hymns

775. எந்தன் நெஞ்சமெல்லாம் நன்றி

எந்தன் நெஞ்சமெல்லாம்
நன்றி சொல்லிடுதே
உள்ளத்தின் ஆழத்திலே
ஆராதனை செய்து
நன்றி என்றும் நான் மறவேன்

கண்ணீரோடு நன்றியையே
காணிக்கையாய் ஆக்குகிறேன்

1. நோயின் கொடுமையிலே மரண படுக்கையிலே
கைவிடப்பட்டு நம்பிக்கை இழந்து
கலங்கி தவித்த நேரத்திலே
இனி பிழைப்பேனோ என்ற நிலைமையிலும்
ஓடி வந்தீரே சுகம் கொடுத்தீரே
இயேசைய்யா நீர் எனது வைத்தியரே - எந்தன்

2. எதற்கும் உதவாத குப்பை நானய்யா
அற்பமான என்னையும் கூட
உமக்காய் தெரிந்து கொண்டிரோ
எல்லோருமே என்னை வெறுக்கையிலே
உந்தன் பார்வைக்கோ நான் அருமையானேன்
இயேசைய்யா நீர் என்னையும் அழைத்தீரே - எந்தன்

3. சிரித்த போதெல்லாரும் கூட இருந்தனரே
அழுத போதோ யாரும் இல்லையே
நான் மட்டும் தானே அழுதேனே
என் வாழ்விலும் என் தாழ்விலுமே
இன்ப துன்பமோ எந்த நிலையிலுமே
பிரியாமல் நீர் கூட இருக்கின்றீரே

Tamil Hymns

776. எந்தன் நேசர் இயேசு நாதா

1. எந்தன் நேசர் இயேசு நாதா உம்மில் அன்பு கூறுவேன்
உம்மில் வைக்கும் ஆசையாலே பாவம் யாவும் வெறுப்பேன்
உந்தன் அன்பால் ஏற்றுக் கொண்டு ரத்தம் சிந்தி ரட்சிப்பீர்
நேசர் மா பெரும் கிருபையை நானோ எப்போதும் மறவேன்

எந்தன் நேசர் இயேசு நாதா
உம்மில் அன்பு கூறுவேன்
நேசர் மா பெரும் கிருபையை
நானோ எப்போதும் மறவேன்

2. எண்ணம் இல்லா எந்தன் வாழ்க்கை அனைத்தையும் மன்னிப்பீர்
பரிசுத்த ஆவி தந்து சத்ய பாதை காட்டினீர்
மேலும் நேர் வழி நடக்க நீர் என் முன்னே செல்கிறீர்
சா மட்டும் நிலைத்து நிற்க உம் கிருபையை ஈகிறீர் --- எந்தன்

3. இனி நான் என் வாழ் நாளெல்லாம் உம்மையே பின் செல்லுவேன்
நன்றியுள்ள சாட்சியாக உம் அன்பை பிரஸ்தாபிப்பேன்
சா மட்டும் உந்தன் துதி எங்கள் வாயில் இருக்கும்
என்னிலும் உம்மோடு வாழ்ந்து நித்யானந்தம் கொள்ளுமே

Tamil Hymns

777. எந்தன் வாஞ்சை நீரல்லோ

எந்தன் வாஞ்சை நீரல்லோ
உம்மை நினைத்து பாடுவேன்
உம்மை துதித்து என்றும் போற்றி
உந்தன் நாமம் உயர்த்துவேன்

ஆராதனை ஆராதனை உமக்கே இயேசுவே

மானானது நீரோடையை
வாஞ்சித்து கதறுமாப்போல
என் ஆத்துமாவும் தேவா
உம்மை வாஞ்சித்தே கதறுதே

நீரே எந்தன் கன்மலையும்
கோட்டையும் அரசனுமானவர்
என் சந்தோஷமே என் சமாதானமே
என் நிந்தையே நம்பிக்கையே

பரலோகில் உம்மை அல்லால்
எனக்கு யாருண்டு இயேசுவே
இப்பூவினில் உம்மையன்றி
விருப்பம் வேறு யாதைய்யா

பாசமிகு அண்ணல் நீரே
நித்திய ஜீவனில் காரணரே
ஜீவன் தந்து என்னை மீட்டவரே
உந்தனை தொழுகிறேன்

பரிசுத்தமும் சத்தியமும் கிருபையும்
நிறைந்த தேவனே
வழுவாதென்னை காத்து
கரை சேர்த்திடும் உத்தம தெய்வம் நீரே

Tamil Hymns

778. எந்தன் விஸ்வாச ஜீவியத்தில்

எந்தன் விஸ்வாச ஜீவியத்தில்
நான் கலங்கிடவே மாட்டேன்
காலங்கள் மாறும் மனிதரும் மாறுவார்
கர்த்தரோ மாறாதவர்

ஏசு எந்தன் கூட உண்டு
எந்தன் கோட்டையும் அரணுமவர் இன்ப
ஒரு சேனை எதிரே பாளையம் வந்தாலும்
சோர்ந்திடவே மாட்டேன்

கருவில் என்னை கண்டவர்
இருளை ஒளியாய் மாற்றினார்
கலங்கி நானும் திகைத்தபோது
அருகில் வந்தென்னை தேற்றினார்

சாரிபாத்திலும் கோத்தில்
சூரைச் செடியின் கீழிலும்
சோர்நது போன எலியாவை போஷித்த
யெகோவா என்னையும் போஷிப்பார்

இமைப்பொழுதே மறந்தாலும்
இரக்கம் கிருபையால் அழைத்தாரே
எக்காள தொனியும் முழங்கும் வானில்
என்னையும் விண்ணிலே சேர்ப்பாரே

Tamil Hymns

779. எந்தன் ஜீவனிலும் மா அருமை

எந்தன் ஜீவனிலும் மா அருமை
உந்தன் கிருபை கிறிஸ்தேசுவே
அந்தமே இல்லா அன்பின் ஆழமதை
எண்ணி நான் துதித்திடுவேனே

1. சந்தோஷமுடன் துதி சாற்றிடுவேன்
சந்ததம் நல்கிடும் நன்மைகட்காய்
நாவினாலே திருநாமத்தைப்
போற்றிட நாட்களும் போதுமோ நானிலத்தில்

2 .இகமதில் என் பெலன் குறைந்திடினும்
அகமதில் உம் பெலன் பெருகுவதால்
கழுகினைப் போல் புது வாலிபம் என்னுள்ளில்
கிருபையால் அனுதினம் வளர்ந்திடுதே

3. கோதுமை மணி மண்ணில் மாய்வது போல்
சேவையில் ஜீவனை ஊற்றிடினும்
தேவா நின் கிருபையின் ஊற்றென்னில்
பாய்வதால் சோராது நிறைபலன் ஈந்திடுவேன்

4. அற்புதமாய் என்னை அழைத்தவரே
அற்பமான எந்தன் சரீரத்தினை
தற்பரனே உந்தன் சாயல் மாற்றிடும்

Tamil Hymns

780. என்தன் ஜீவன் இயேசுவே

1. என்தன் ஜீவன் இயேசுவே சொந்தமாக ஆளுமே
எந்தன் காலம் நேரமும் நீர் கையாடியருளும்

2. என்தன் கை பேரன்பினால் ஏவப்படும் என்தன் கால்
சேவை செய்ய விரையும் அழகாக விளங்கும்

3. என்தன் நாவு இன்பமாய் உம்மைப் பாடவும்; என்வாய்
மீட்பின் செய்தி கூறவும் ஏதுவாக்கியருளும்

4. என்தன் ஆஸ்தி தேவரீர் முற்றும் அங்கீகரிப்பீர்
புத்தி கல்வி யாவையும் சித்தம் போல் பிரயோகியும்

5. என்தன் சித்தம் இயேசுவே ஒப்புவித்துவிட்டேனே
என்தன் நெஞ்சில் தங்குவீர் அதை நித்தம் ஆளுவீர்

6. திருப்பாதம் பற்றினேன் என்தன் நேசம் ஊற்றினேன்
என்னையே சமூலமாய் தத்தம் செய்தேன் நித்தமாய்

Tamil Hymns

781. எந்தன் ஜெபவேளை உமைத்தேடி வந்தேன்

எந்தன் ஜெபவேளை உமைத்தேடி வந்தேன்
தேவா பதில் தாருமே
எந்தன் கோட்டை எந்தன் தஞ்சம் நீரே
உம்மை நான் நாடி வந்தேன்

1. சோராது ஜெபித்திட
ஜெப ஆவி வரம் தாருமே
தடை யாவும் அகற்றிடுமே
தயை கேட்டு உம்பாதம் வந்தேன்

2. உம்மோடு எந்நாளும்
உறவாட அருள் செய்யுமே
கர்த்தாவே உம் வார்த்தையை
கேட்டிட காத்திருப்பேனே

3. நம்பிக்கை இல்லாமல்
அழிகின்ற மாந்தர்களை
மீட்டிடும் என் இயேசுவே
போராடி ஜெபிக்கின்றேன் நாதா

4. நாளெல்லாம் பாதத்தில்
கர்த்தாவே காத்திருப்பேன்
கண்ணீர் ஜெபம் கேளுமே
கருணையின் பிரவாகம் நீரே

782. எந்தன்தந்தை இயேசுவே எனக்காய்

எந்தன்தந்தை இயேசுவே எனக்காய் ஜீவன் தந்தீரே
உமக்காய் வாழ என்னையும்
அர்ப்பணிக்கின்றேன் நான்
அல்லேலூயா அல்லேலூயா – 3
எந்தன் தந்தையே – 2

1. மாராவின் நீரை மதுரமாய்
மாற்றின எங்கள் கர்த்தரே
எந்தன் வாழ்வின் கசப்பினை நீக்கும் தந்தையே

2. ஆறுதல் அளிக்கும் அன்பினால்
காயப்பட்ட கரங்களில்
தூக்கி என்னை சுமப்பாரே எந்தன் தந்தையே

3. ஆபத்துக்காலத்தில் என்னையும்
நோக்கி கூப்பிடு என்றீரே
கூப்பிட்ட என்னை விடுவித்தீர் எந்தன் தந்தையே

4. தாய் மறந்தாலும் உன்னையும்
நான் மறவேனே என்று சொன்னீரே
உள்ளங்கையில் வரைந்தீரே எந்தன் தந்தையே

5. சிலுவையில் சிந்தின இரத்தத்தால்
என்னையும் மீட்ட இரட்சகா
உமக்காய் ஊழியம் செய்வேனே எந்தன் தந்தையே

783. எந்நாளுமே துதிப்பாய்

எந்நாளுமே துதிப்பாய் - என்னாத்துமாவே
நீ எந்நாளுமே துதிப்பாய்!

இந்நாள் வரையிலே உன்னதனார் செய்த
எண்ணில்லா நன்மைகள்யாவு மறவாது

1. பாவங்கள் எத்தனையோ? நினையா
திருத்தாருன் பாவங்கள் எத்தனையோ ?
பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்
பாரினில் வைத்த மகா தய வைஎண்ணி

2. எத்தனையோ கிருபை - உன்னுயிர்க்குச்
செய்தாரே எத்தனையோ கிருபை
நித்தமுனைமுடி சூட்டினதுமன்றி,
நேயமதாக ஜீவனை மீட்டதால்

3. நன்மையாலுன் வாயை - நிறைத்தாரே,
பூர்த்தியாய் நன்மையாலுன் வாயை - உன்
வயது கழுகைப்போல் பலங்கொண்டு
ஓங்கு இளமைபோ லாகவே செய்ததால்

4. பூமிக்கும் வானத்துக்கும் - உள்ள
தூரம் போலவே பூமிக்கும் வானத்துக்கும்
சாமி பயமுள்ளவர் மேல் அவர் அருள்
சாலவும் தங்குமே சத்திய மேயிது

5. மன்னிப்பு மாட்சிமையாம் - மாதேவ
னருளும் மன்னிப்பு மாட்சிமையாம்
எண்ணுவாயோ கிழக்கு மேற்கின் தூரமே
எண்ணில் உன்பாவம் அகன்றதத்தூரமே

6. தந்தைதன் பிள்ளைகட்கு - தயவோ
டிரங்கானோ தந்தைதன் பிள்ளைகட்கு
எந்த வேளையும் அவரோடு தங்கினால்
சொந்தம் பாராட்டியே தூக்கிச் சுமப்பாரே

Tamil Hymns

784. எப்பக்கத்திலும் முன்னும் என் பின்னும்

1. எப்பக்கத்திலும் முன்னும் என் பின்னும்
என்றும் தாங்கிடும் தேவன் எனக்குண்டு
இஸ்ரவேலைக் காக்கும் நல்தேவன்
உறங்குவதில்லையே தூங்குவதில்லை

என் தேவன் என்னை காத்து நடத்துவார்
என் தேவன் என்றும் ஆளுகை செய்வார்.

2. பயப்படாதே கர்த்தர் உன்னோடு
இருக்கும் போது கவலையே இல்லை
உள்ளங் கரத்தில் உன்னை வரைந்து
கண்ணை பதித்து காக்கும் நல் தேவன

785. எப்படி நான் பாடுவேன்

எப்படி நான் பாடுவேன்
என்ன சொல்லி நான் துதிப்பேன் -உம்மை

1. இரத்தம் சிந்தி மீட்டவரே
இரக்கம் நிறைந்தவரே

2. அபிஷேகித்து அணைப்பவரே
ஆறுதல் நாயகனே

3. உந்தன் பாதம் அமர்ந்திருந்து
ஓயாமல் முத்தம் செய்கிறேன்

4. என்னை விட்டு எடுபடாத
நல்ல பங்கு நீர்தானையா

5. வருகையில் எடுத்துக் கொள்வீர்
கூடவே வைத்துக் கொள்வீர்

6. உளையான சேற்றினின்று
தூக்கி எடுத்தவரே

7. உந்தன் நாமம் உயிர்த்திடுவேன்
உம் விருப்பம் செய்திடுவேன்

Tamil Hymns

786. எப்படிப் பாடுவேன் நான்

எப்படிப் பாடுவேன் நான்
என் இயேசு எனக்குச் செய்ததை
ஆயுள் முழுவதும் என் கர்த்தருக்காய்
ஆத்தும ஆதாயம் செய்வேன்

ஒருவழி அடையும்போது
புதுவழி திறந்த தேவா
திறந்த வாசலை என் வாழ்க்கையில்
அடைக்காத ஆண்டவரல்லோ

எப்பக்கம் நெருக்கப்பட்டும்
ஒடுங்கி நான் போவதில்லை
அப்பனின் மார்பினில் சாய்ந்தென்றுமே
எப்போதும் பாடிடுவேன்

கடந்து வந்த பாதையில்
கண்மணிபோல் காத்திட்டீர்
கடுகளவும் குறை வைக்காமலே
அதிகமாய் ஆசீர்வதித்தீர்

Tamil Hymns

787. எப்படிப் பாடுவேன் நானே

எப்படிப் பாடுவேன் நானே
ஏராளமாம் பாட்டுத்தானே
எப்படிப் பாடினும் ஆடினும் அவரன்பை
சொல்ல முடியாதப்பா

பத்து லட்சம் கிண்ணரங்கள் போதா
பத்து லட்சம் மத்தளங்கள் போதா
எப்படிப் பாடினும் ஆடினும் அவரன்பை
சொல்ல முடியாதப்பா

Tamil Hymns

788. எப்பொழுதும் எவ்வேளையும்

எப்பொழுதும் எவ்வேளையும்
நான் ஸ்தோத்தரிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்
இரவு பகல் எந்நேரமும்
உம் திருநாமம் உயர்த்திடுவேன்

உம்மைப் புகழ்வேன் பெலத்தோடு
உம்மைப் பாடுவேன் சுகத்தோடு

1. தடுக்கி விழுந்த யாவரையும்
தாங்கி நடத்தும் தகப்பன் நீரே
தாழ்த்தப்பட்ட அனைவரையும்
தூக்கி நிறுத்தும் துணையாளரே

2. நோக்கிக் கூப்பிடும் அனைவருக்கும்
தகப்பன் அருகில் இருக்கின்றீர்
அஞ்சி நடப்போர் விருப்பங்களை
பூர்த்தி செய்யும் பரிசுத்தரே

3. உணவுக்காக உயிரினங்கள்
உம்மை நோக்கிப் பார்க்கின்றன
ஏற்ற வேளையில் உணவளித்து
ஏக்கமெல்லாம் நிறைவேற்றுவீர்

4. இரக்கம் கிருபை உடையவரே
கருணை அன்பு நிறைந்தவரே
நன்மை செய்யும் நயாகனே
நாவு அனைத்தும் உம்மைப் பாடுமே

Tamil Hymns

789. எப்போதும் என் முன்னே

எப்போதும் என் முன்னே
உம்மைத்தான் நிறுத்தியுள்ளேன்
என் மேய்ப்பர் நீர்தானையா
குறை ஒன்றும் எனக்கில்லையே

1. என் நேசரே என் மேய்ப்பரே
எப்போதும் நீர்தானையா
என் முன்னே நீர்தானையா

2. உம் இல்லம் ஆனந்தம்
பரிபூரண ஆனந்தம்
பேரின்பம் நீர்தானையா
நிரந்தர பேரின்பமே -என் நேசரே

3. என் இதயம் மகிழ்கின்றது
உடலும் இளைப்பாறுது
எனைக் காக்கும் தகப்பன் நீரே
பரம்பரைச் சொத்தும் நீரே

4. என் செல்வம் என் தாகம்
எல்லாமே நீர்தானையா
எனக்குள்ளே வாழ்கின்றீர்
அசைவுற விடமாட்டீர்

5. கல்வாரி எனக்காக
காயங்கள் எனக்காக
திரு இரத்தம் எனக்காக
சிந்தியே ஜீவன் தந்தீர்

Tamil Hymns

790. எப்பொழுது உம் சந்நிதியில்

எப்பொழுது உம் சந்நிதியில் வந்து நிற்பேன்
தாகமாயிருக்கின்றேன்

ஜீவனுள்ள தேவன்மேலே தாகமாயிருக்கின்றேன்
அதிகமாய் துதிக்கின்றேன் தாகமாயிருக்கின்றேன்

தண்ணீருக்காய் மானானது தாகம் கொள்வதுபோல்
என் ஆன்மா உம்மைத்தானே தேடித் தவிக்கிறது

1. இரட்சகரே உம் வருகையிலே
நிச்சயமாய் உம்முகம் காண்பேன்
தாகமாய் இருக்கின்றேன்
அதிகமாய் துதிக்கின்றேன் – எப்பொழுது

2. ஆத்துமாவே நீ கலங்குவதேன்
சோர்ந்து போவது ஏன்
கர்த்தரையே நம்பியிரு
அவர் செயல்கள் நினைத்துத் துதி – இரட்சகரே

3. காலைதோறும் உம்பேரன்பைக்
கட்டளையிடுகிறீர்
இரவுபகல் உம் துதிப்பாடல்
என் நாவில் ஒலிக்கிறது

791. எம் உயர்ந்த வாசஸ்தலமதுவே

எம் உயர்ந்த வாசஸ்தலமதுவே
எம் பூரண சீயோனே
கன்மலையின் மேலே கழுகுபோல்
உன்னதத்தில் வாழுவோம் - இயேசு
பக்தர்கள் ஜெயம் பெற்றே
பிதா முகம் காண்போம்

1. ஞானக் கன்மலையே கிறிஸ்தேசு
எம் அரணே - வான சீயோனிலே
அவர் ஆவியால் பிறந்தோம்
ஏழு தூண்களுடன் திட அஸ்திபாரமுடன்
ஏசுவின் மேல் நின்று வீடாய்
நாமிலங்கிடுவோம்

2. அன்பின் பூரணமே அதிலே பயமில்லையே
அன்பர் இயேசுவிடம் அதை நாடி பெற்றிடவே
ஆவியால் நிறைந்தே அவர் அன்பிலே நடந்தே
ஆ! பேரின்ப ஆத்மாவில்
ஆனந்தங் கொள்வோம்

3. மா சமாதானமே விசுவாச நம்பிக்கையே
மா பரிசுத்தமே மரணத்தின் பாடுகளே
தேவ சாயலுமே நம்மில் பூரணம் அடைய
தூய வாழ்வை நாடி நாம்
முன்னேறியே செல்வோம்

4. ஓட்டமே ஜெயமாய் நாமும் ஓடியே முடிக்க
ஒவ்வொரு தினமும் புதிய பெலனடைவோம்
பாவ சாபங்களும் புவி ஆசையும்
ஜெயித்தோர் பாழுலகை வேகம்
தாண்டி அக்கறை சேர்வோம்

5. வானங்கள் வழியே இறங்கி பரன் வருவார்
வாஞ்சையாய் சபையாய்
அன்று யேசுவை சந்திப்போம்
மீட்பின் நாள் நெருங்க தலைகள் உயர்த்திடுவோம்
மத்திய வானவிருந்தில் பங்கடைந்திடுவோம்

6. வாலையும் சுழற்றி வலுசர்ப்பம் தோன்றிடுதே

Tamil Hymns

வீர ஆண்பிள்ளையை விழுங்க வகைதேடுதே
வான அக்கினியால் அதைத்தீக்
கொளுத்திடுவோம் வல்லமை மிகுந்த
கர்த்தர் இயேசு நாமத்திலே

Tamil Hymns

792. எரிகோ கோட்டை விழுகுதே

1. எரிகோ கோட்டை விழுகுதே
துதியால் ஜெயமும் கிடைக்குதே
இரும்பு தாழ்ப்பாள் முறியுதே
வெண்கல கதவும் உடையுதே

ஓ...ஓ...விடுதலை
என்றும் விடுதலை

2. தோமா கனவு பலிக்குதே
இந்திய தேசம் எழும்புதே
வாலிபர் உள்ளம் ஒளிருதே
தேசத்தில் எழுப்புதல் பரவுதே

793. எரிகோ நகர் வீதியிலே கள்ளர்

1. எரிகோ நகர் வீதியிலே
கள்ளர் கையில் அகப்பட்டேன்
குற்றுயிராய் காயப்பட்டு நான்
அநாதைப்போல் கிடந்தேன்
பலனற்ற எனக்கு உதவிட
ஒருவரும் முன்வரவில்லையே
அலங்கோலமாய் நான் கிடந்தாலும்
அலங்கரிக்க ஒருவர் வந்தார்

காயங்கள் ஆற்றும் வைத்தியர்
கருத்தாய் விசாரிக்கும் சிநேகிதர்
குற்றங்கள் அனைத்தையும் மன்னித்து
மறக்கும் தயாளர் இவர்

2. வாழ்க்கையின் பாதையிலே
காயங்கள் நேரிடுமே
வேதனை துன்பங்கள் பலவீனம்
ஏமாற்றம் தனிமை சுகவீனம்
கடந்ததை நடந்ததை நினைத்து
வருத்தத்தில் மூழ்குவதில் இலாபமில்லை
உதவி செய்வார் யாருமில்லை
என்று நீ கலங்கவேண்டாம்

இயேசுவைப்போல் யாருமில்லையே
உன்னையும் என்னையும் நேசிக்க
தனியாய் இருந்தாலும் தனிமை இல்லை
இயேசு நம்மோடிருக்க

Tamil Hymns

794. எருசலேம் என் ஆலயம் ஆசித்த

1. எருசலேம் என் ஆலயம்
ஆசித்த வீடதே
நாள் அதைக் கண்டு பாக்கியம்
அடைய வேண்டுமே

2. பொற்றாளம் போட்ட வீதியில்
எப்போதுலாவுவேன் ?
பலிங்கேத் தோன்றும் ஸ்தலத்தில்
எப்போது பணிவேன்

3. எந்நாளும் கூட்டம் கூட்டமாய்
நிற்கும் அம் மோட்சத்தார்
கர்த்தாவைப் போற்றிக் களிப்பாய்
ஓய்வின்றிப் பாடுவார்

4. நானும் அங்குள்ள கூட்டத்தில்
சேர்ந்தும்மைக் காணவே
வாஞ்சித்து, லோக துன்பத்தில்
களிப்பேன், இயேசுவே

5. எருசலேம் என் ஆலயம்
நான் உன்னில் வாழுவேன்
என் ஆவல்; என் அடைக்கலம்
எப்போதும் சேருவேன் ?

795. எலியாவின் தேவன் நம் தேவன்

எலியாவின் தேவன் நம் தேவன்
வல்லமையின் தேவன் நம் தேவன்
தாசர்களின் ஜெபம் கேட்பார்
வல்ல பெரும் காரியம் செய்திடுவார்
கர்த்தரே தேவன் கர்த்தரே தேவன்
என்றே ஆர்ப்பரிப்போம் - 2

1. வேண்டிடும் பக்தர்களின் ஜெபம் கேட்டே
பனிமழை நிறுத்தினார் வல்ல தேவன்
பஞ்ச காலத்தில் விதவை வீட்டில்
பாத்திரங்களை அவர் ஆசீர்வதித்தார்

2. சத்துருக்கள் முன்னிலையில் தேவ மனிதன்
வீரமுடன் முழங்கினார் தேவ மனிதன்
அக்கினியால் பதிலளிக்கும்
தேவனே தேவன் என்றார் தேவ மனிதன்

3. தேவ ஜனம் கூட்டிச் சேர்த்தே தேவ மனிதன்
பலிபீடம் செப்பனிட்டு பலியுமீந்தார்
கேட்டருளும் கேட்டருளும்
என்றே கதறினார் தேவ மனிதன்

4. வானங்களை திறந்தே வல்ல தேவன்
அக்கினியால் பதில் தந்தார் ஜீவ தேவன்
கர்த்தரே தேவன் கர்த்தரே தேவன்
என்றே பணிந்தனர் தேவ ஜனங்கள்

Tamil Hymns

796. எலியாவின் பலிபீடத்தில்

1. எலியாவின் பலிபீடத்தில்
இறங்கின அக்கினியே - எங்கள்
சபைதனிலே (தேசத்திலே) இப்பொழுதே
இறங்கும் தெய்வமே

அபிஷேகம் அபிஷேகமே
இப்போ தாரும் தெய்வமே
அக்கினி அக்கினியாய்
என்னை மாற்றும் தெய்வமே

2. மோசேயை வனாந்திரத்தில்
சந்தித்த அக்கினியே - என்
வாழ்க்கையையும் உங்க அக்கினியால்
சந்தியும் தெய்வமே

3. ஏசாயாவை அக்கினியால்
தொட்ட என் தெய்வமே - என்
வாலிபத்தையும் உங்க அக்கினியால்
தொட்டு விடும் தெய்வமே

4. தாவீதையும் அபிஷேகத்தால்
நிரப்பின தெய்வமே
என் பாத்திரமும் அபிஷேகத்தால்
நிரம்பி வழியணுமே

5. உலர்ந்து போன எலும்புகளை
உயிர்பித்த அக்கினியே - உலர்ந்து
போன என் வாழ்க்கையையும்
உயிர்ப்பியும் தெய்வமே

797. எலியாவின் நாட்கள் இதுவே

1. எலியாவின் நாட்கள் இதுவே
துதி கூடாரம் எழும்பிவிடும்
மோசேயின் நாட்கள் இதுவே
தேவ நீதி நிலைப்படும் காலம்
பஞ்சம் இருள் பட்டயமும்
சோதனையோடு வந்திட்டாலும்
வனாந்திரம் கூப்பிடும் சத்தம் நாமே
கர்த்தர் வழி ஆயத்தம் செய்வோம்

இதோ வருகிறார் மேகங்கள் மேலே
எக்காள சத்தத்தில் பிரகாச சூரியன் போல்
முழங்கிடுவோம் இது யூபிலி ஆண்டு
சீயோனிலிருந்து இரட்சிப்பு வரும்

2. எசேக்கியல் நாட்கள் இதுவே
உலர் எலும்புகள் மாம்சமாகும்
தாவீதின் நாட்கள் இதுவே
துதி கூடாரம் எழும்பிவிடும்
அறுவடை நாட்கள் இதுவே
உலகின் வயல் ஆயத்தமே
நாம் திராட்ச தோட்ட வேலையாள்
கூறுவோம் தேவ வார்த்தையையே

Tamil Hymns

798. எல்லா நாமத்திற்க்கும் மிக மேலான

எல்லா நாமத்திற்க்கும் மிக மேலான
நாமம் இயேசுவின் நாமம்
எல்லா தலைமுறையும் எங்கும் போற்றிடும்
நாமம் இயேசுவின் நாமம்

இயேசு நாமமே ஜெயம் ஜெயமே
சாத்தானின் சக்தி ஒன்றுமில்லையே
அல்லேலூயா ஓசன்னா
அல்லேலூயா அல்லேலூயா ஆமென்

1. பாவத்திலிருந்து இரட்சித்ததே இயேசுவின் நாமமே
நித்திய நரகத்திலிருந்து விடுவித்ததே
இயேசு இயேசுவின் நாமமே

2. சாத்தானின் மேல் அதிகாரம் தந்ததே
இயேசுவின் நாமமே
சத்துரு கோட்டைகளை தகர்ந்தெரிந்திட்டதே
இயேசு இயேசுவின் நாமமே

3. சரீர வியாதிகளை குணமாக்குதே
இயேசுவின் நாமமே
தொல்லை கஷ்டங்கள் அனைத்தையும் நீக்கிடுதே
இயேசு இயேசுவின் நாமமே

799. எல்லா மகிமைக்கும் பாத்திரரே எல்லா

எல்லா மகிமைக்கும் பாத்திரரே
எல்லா கனத்துக்கும் பாத்திரரே
அசைவாடும் தெய்வமே (4)
எங்கள் மேலே அசைவாடுமே (2)

1. செங்கடல் மேல் அசைவாடினீர்
எல்லாத்தடைகளை மாற்றினீரே
எங்கள் தடைகள் மேல் அசைவாடுமே (2)

2. உலர்ந்த எலும்பிற்கு உயிர் தந்தீரே
என் வாழ்க்கையில் அசைவாடுமே
என் வாழ்க்கையில் அசைவாடுமே (2)

3. எரிகோ மதில்மேலே அசைவாடினீர்
எல்லாத் தடைகளை மாற்றினீரே
எங்கள் மேலே அசைவாடுமே (2)

4. பவுலும் சீலாவும் பாடும்போது
சிறைச்சாலையில் அசைவாடினீர்
எங்கள் மேலே அசைவாடுமே (2)

800. எல்லாமே முடிந்தது என்று (முடிந்ததென்று)

எல்லாமே முடிந்தது என்று (முடிந்ததென்று)
என்னைப்பார்த்து இகழ்ந்தனர்
இனியென்றும் எழும்புவதில்லை
என்று சொல்லி நகைத்தனர்
ஆனாலும் நீங்க என்னை
கண்டவிதம் பெரியது
என் உயர்வின் பெருமையெல்லாம்
உம் ஒருவருக்கு உரியதே

நீர் மட்டும் பெருகனும்
நீர் மட்டும் இயேசுவே

உடைக்கப்பட்ட பாத்திரமானேன்
உபயோக மற்று இருந்தேன்
ஒன்றுக்கும் உதவுவதில்லை
என்று சொல்லி ஒதுக்கப்பட்டேன்
குயவனே உந்தன் கரம்
மீண்டும் எனை வனைந்தது
விழுந்து போன இடங்களில்யெல்லாம்
என் தலையை உயர்த்தியதே....

801. எல்லாம் என் இயேசுவே எல்லாம் அவரே

எல்லாம் என் இயேசுவே எல்லாம் அவரே
சிறிதும் பெரிதாயினும் எல்லாம் அவரே
புதிதாய் என் ஜீவியம் மாற்றுகின்றார்
எனக்கெல்லாம் இயேசுவே
எனக்கென்றுமே

He is my everything He is my all
He is my everything Both great and small
He makes my life complete Makes everything new
He is my everything Now how about you?

802. எல்லாம் இயேசுவே எனக்கெல்லாமேசுவே

எல்லாம் இயேசுவே - எனக்கெல்லா மேசுவே
தொல்லைமிகு மிவ்வுலகில் - தோழர் யேசுவே;

1. ஆயனும் சகாயனும் நேயனும் உபாயனும்,
நாயனும் எனக்கன்பான ஞானமண வாளனும் --- எல்லாம்

2. தந்தை தாய் இனம்ஜனம் பந்துளோர் சிநேகிதர்,
சந்தோட சகலயோக சம்பூரண பாக்யமும் --- எல்லாம்

3. கவலையில் ஆறுதலும் , கங்குலிலென் ஜோதியும்,
கஷ்டநோய்ப் படுக்கையிலே கைகண்ட அவிழ்தமும் --- எல்லாம்

4. போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில்,
ஆதரவு செய்திடுங் கூட்டாளிமென் தோழனும் ---எல்லாம்

5. அணியும் ஆபரணமும் ஆஸ்தியும் - சம்பாத்யமும்,
பிணையாளியும் மீட்பருமென் பிரிய மத்தியஸ்தனும் --- எல்லாம்

6. ஆன ஜீவ அப்பமும் ஆவலுமென் காவலும்,
ஞானகீதமும் சதுரும் நாட்டமும் கொண்டாட்டமும் --- எல்லாம்

803. எல்லாம் நீரே எல்லாம் நீரே

எல்லாம் நீரே, எல்லாம் நீரே
என் உயிரும் என் உறவும் நீரே
என் உறைவிடமும் நீரே

1. என் இருளில் வெளிச்சம் நீரே
என் வாழ்வின் ஒளியும் நீரே
என் பாதைக்கு நல் தீபமும் நீரே
என் வாழ்க்கையின் ஜோதியும் நீரே

2. என்னை தாங்கும் தேவன் நீரே
என்னை காக்கும் தெய்வம் நீரே
என்னை நேசிக்கும் கர்த்தர் நீரே
என்னை மறவா என் நேசர் நீரே

Tamil Hymns

804. எல்லாம் நீர் தானே இயேசு ராஜனே

எல்லாம் நீர் தானே இயேசு ராஜனே - என்
எல்லாம் நீர் தானே இயேசு ராஜனே

1. தாகம் நீர் தானே
தண்ணீர் நீர் தானே - என்

உம்மை தான் நான் பாடுவேன்
உம்மை தான் நான் போற்றுவேன்
இயேசு ராஜனே

2. பசியும் நீர் தானே
உணவும் நீர் தானே - என்

3. எதிர்காலம் நீர் தானே
எதிர்பார்ப்பும் நீர் தானே - என்

4. உதவி நீர் தானே
ஒத்தாசை நீர் தானே - என்

805. எல்லாருக்கும் மா உன்னதர்

1. எல்லாருக்கும் மா உன்னதர்,
கர்த்தாதி கர்த்தரே,
மெய்யான தெய்வ மனிதர்,
நீர் வாழ்க, இயேசுவே!

2. விண்ணில் பிரதானியான நீர்
பகைஞர்க்காகவே
மண்ணில் இறங்கி மரித்தீர்
நீர் வாழ்க, இயேசுவே!

3. பிசாசு, பாவம், உலகை
உம் சாவால் மிதித்தே,
ஜெயித்தடைந்தீர் வெற்றியை
நீர் வாழ்க, இயேசுவே!

4. நீர் வென்றபடி நாங்களும்
வென்றேறிப் போகவே
பரத்தில் செங்கோல் செலுத்தும்
நீர் வாழ்க, இயேசுவே!

5. விண்ணோர்களோடு மண்ணுள்ளோர்
என்றைக்கும் வாழவே,
பரம வாசல் திறந்தோர்
நீர் வாழ்க, இயேசுவே!

Tamil Hymns

806. எல்லையில்லா உந்தன் அன்பால்

எல்லையில்லா உந்தன் அன்பால்
எந்தன் உள்ளம் கொள்ளை கொண்ட
மன்னவா உமக்கு நன்றி
இயேசு மன்னவா உமக்கு நன்றி

1. கள்ளமில்லா உந்தன் அன்பினால்
எனக்குள்ளதெல்லாம் மறந்தேன் – 2
கல்லும் முள்ளும் எந்தன் வாழ்வில் – 2
என்னை நடத்தின விதம் தனை மறவேன் – 2
நான் மறவேன் – 3 என்றென்றும் மறவேன் – 2

எல்லையில்லா உந்தன் அன்பால்
எந்தன் உள்ளம் கொள்ளை கொண்ட
மன்னவா உமக்கு நன்றி
இயேசு மன்னவா உமக்கு நன்றி

2. தொல்லை மிகுந்த உலகில்
இல்லை ஆறுதல் எனக்கு – 2
அல்லல் நிறைந்த எந்தன் வாழ்வில் – 2
என்னை அணைத்திட்ட விதம் தனை மறவேன் – 2
நான் மறவேன் – 3 என்றென்றும் மறவேன் – 2

எல்லையில்லா உந்தன் அன்பால்
எந்தன் உள்ளம் கொள்ளை கொண்ட
மன்னவா உமக்கு நன்றி
இயேசு மன்னவா உமக்கு நன்றி

3. சொல்லி முடியாது நாதா
உம் அன்பு அள்ளி தீராது தேவா – 2
உள்ள உறுதியுடன் நானும் – 2
உம் சமூகம் சேரும்வரை துதிப்பேன் – 2
நான் துதிப்பேன் – 3 என்றென்றும் துதிப்பேன் – 2

எல்லையில்லா உந்தன் அன்பால்
எந்தன் உள்ளம் கொள்ளை கொண்ட
மன்னவா உமக்கு நன்றி
இயேசு மன்னவா உமக்கு நன்றி

Tamil Hymns

807. எல்லையற்ற அன்பினாலே என்னை

எல்லையற்ற அன்பினாலே
என்னை அழைத்தார்
எண்ணிலடங்கா நன்மைகளாலே
என்னை நிரப்பினார்

துதிப்பேன் போற்றுவேன் பாடுவேன்
கெம்பீரிப்பேன் ஆ…அல்லேலூயா

1. நீர் செய்த நன்மைகள் ஒவ்வொன்றாய் எண்ணி
நித்தமும் உம்மை நான் துதித்திடுவேன்
இதற்கீடாக நான் என்ன செய்வேன் -என்
ஜீவனை பலியாக படைக்கின்றேன் நான்

2. உம் அன்பிற்கு இணையேதும் ஒன்றுமே
காணேன் உண்மையாய்
உணர ஓர் இதயம் தாரும்
திறந்தருளும் என் மனக்கண்களை
இப்பூவிலே வேறொரு விருப்பமில்லை

3. புழுதியினின்றெம்மை தூக்கியே மீட்டீர்
நறுமணம் நல்கும் நல் மலராக்கினீர்
உம் கல்வாரி அன்பன்றோ மாற்றியது
என் சுயம் வெறுத்து
உந்தன் சித்தம் செய்வேன்

Tamil Hymns

808. எல்லோரும் கூடியே சங்கீதம் பாடியே

எல்லோரும் கூடியே
சங்கீதம் பாடியே
ராஜாவை வாழ்த்துகிறோம்
உம் நாமம் உயர்த்துகிறோம்

1. இருள் பூமியையும்
காரிருள் ஜனங்களையும்
மூடினாலும் கர்த்தாவே
நீர் என்மேல் உதிப்பீரே

இயேசய்யா ஸ்தோத்திரம்
ஓசன்னா! ஸ்தோத்திரம்

2. நீதியின் சூரியனே நித்திய வெளிச்சம் நீரே
தேவனே உம் மகிமையாலே
என் துக்கம் முடிந்திட்டதே

3. நித்தியமாம் மகிழ்ச்சி தலைமேல்
இறங்கிடுதே - சஞ்சலமும்
தவிப்பு எல்லாம் விலகி ஓடிடுதே

4. கூட இருப்பவரே விலகிடாதவரே
நிரந்தரமாய் வாசம் செய்ய
எனக்குள் வந்தவரே

Tamil Hymns

809. எல்ஷடாய் எந்தன் துணை நீரே

எல்ஷடாய் எந்தன் துணை நீரே
என் வாழ்வின் கேடகம்
எண்ணில்லா நன்மைகள்
என் வாழ்வில் செய்தீரே
எந்தன் வாழ்வின் பெலன் நீரே

1. காலைதோறும் கிருபை பொழியும்
கிருபையே ஸ்தோத்திரம்
உந்தன் நாமம் எந்தன் இன்பம்
உமது செட்டை அடைக்கலம்

2. இம்மட்டும் என்னை காத்து நடத்தின
எபனேசரே ஸ்தோத்திரம்
எந்த நாளும் கூட இருக்கும்
இம்மானுவேலே ஸ்தோத்திரம்

3. யேகோவா ராஃபா எந்த நாளும்
எந்தன் பரிகாரி
எந்த நாளும் வெற்றி தருவீர்
யேகோவா நிசியே ஸ்தோத்திரம்

4. யேகோவாயீரே எந்தன் தேவைகள்
பார்த்துக் கொள்வீரே
எந்தன் வாழ்வின் சமாதானமே
யேகோவா ஷாலோம் ஸ்தோத்திரம்

810. எல்ஷடாய் என்ற நாமம் உடையவர்

எல்ஷடாய் என்ற நாமம் உடையவர்
எங்கள் மத்தியிலே அவர் வந்திருக்கிறார் (2)
வானம் போற்றுது பூமியும் வாழ்த்துது (2)
சகல ஜீவன்களும் வாழ்த்தி உம்மை பாடுது (2)
சர்வ வல்லவர் நித்தியமானவர்
சகலத்தையும் செய்திடுவார் (2)
எல்ஷடாய் என்ற நாமம் உடையவர்
எங்கள் மத்தியிலே அவர் வந்திருக்கிறார்

ஒருவரும் சேராத ஒளியினிலே வாழ்பவரே
நீதியின் சூரியனே செட்டைகளின் ஆரோக்யம் (2)
சர்வ வல்லவர் நித்தியமானவர்
சகலத்தையும் செய்திடுவார் (2)
எல்ஷடாய் என்ற நாமம் உடையவர்
எங்கள் மத்தியிலே அவர் வந்திருக்கிறார்

வானாதி வானங்கள் போற்றுகின்ற தெய்வம் நீரே
அகில உலகத்தையே ஆளுகிற தெய்வம் நீரே
சர்வ வல்லவர் நித்தியமானவர்
சகலத்தையும் செய்திடுவார் (2)
எல்ஷடாய் என்ற நாமம் உடையவர்
எங்கள் மத்தியிலே அவர் வந்திருக்கிறார்

யாரும்மை மகிமை படுத்தாமல் இருக்கலாம்
தேவரீர் ஒருவரே பரிசுத்தர் பரிசுத்தர் (2)
சர்வ வல்லவர் நித்தியமானவர்
சகலத்தையும் செய்திடுவார் (2)
எல்ஷடாய் என்ற நாமம் உடையவர்
எங்கள் மத்தியிலே அவர் வந்திருக்கிறார்

Tamil Hymns

811. எவ்வண்ணமாக கர்த்தரே

1. எவ்வண்ணமாக, கர்த்தரே,
உம்மை வணங்குவேன்;
தெய்வீக ஈவைப் பெறவே
ஈடென்ன தருவேன்?

2. அநேக காணிக்கைகளால்
உம் கோபம் மாறுமோ?
நான் புண்ணிய கிரியை செய்வதால்
கடாட்சம் வைப்பீரோ?

3. பலியின் ரத்தம் வெள்ளமாய்
பாய்ந்தாலும், பாவத்தை
நிவிர்த்தி செய்து சுத்தமாய்
ரட்சிக்கமாட்டாதே.

4. நான் குற்றவாளி, ஆகையால்
என்பேரில் கோபமே
நிலைத்திருந்து சாபத்தால்
அழிதல் நியாயமே.

5. ஆனால் என் பாவம் சுமந்து
ரட்சகர் மரித்தார்;
சாபத்தால் தலை குனிந்து
தம் ஆவியை விட்டார்.

6. இப்போதும் பரலோகத்தில்
வேண்டுதல் செய்கிறார்
உம் திவ்விய சந்நிதானத்தில்
என்னை நினைக்கிறார்

7. இவ்வண்ணமாக, கர்த்தரே,
உம்மை வணங்குவேன்.
என் நீதி இயேசுகிறிஸ்துவே,
அவரைப் பற்றினேன்.

Tamil Hymns

812. எழுந்தார் இறைவன்

எழுந்தார் இறைவன் - ஜெயமே ஜெயமெனவே
எழுந்தார் இறைவன்

1. சாவின் பயங்கரத்தை ஒழிக்கக் - கெட்ட
ஆவியின் வல்லமையை அழிக்க - இப்
பூவின்மீது சபை செழிக்க

2. செத்தவர் மீண்டுமே பிழைக்க - உயர்
நித்திய ஜீவனை அளிக்கத் - தேவ
பக்தர் யாவரும் களிக்க

3. விழுந்தவரைக் கரையேற்றப் - பாவத்
தெழுந்து மனுக்குலத்தை மாற்ற - விண்ணுக்
கெழுந்து நாம் அவரையே போற்ற

4. கருதிய காரியம் வாய்க்கத் - தேவ
சுருதி மொழிகளெல்லாம் காக்க - நம்
இரு திறத்தாரையும் சேர்க்க

813. எழுந்து பெத்தேலுக்கு போ

எழுந்து பெத்தேலுக்கு போ
அதுதானே தகப்பன் வீடு
நன்மைகள் பல செய்த நல்லவர்
இயேசுவுக்கு நன்றி பாடல் பாடனும்
துதி பலிபீடம் கட்டனும்

1. ஆபத்துநாளிலே பதில் தந்தாரே
அதற்கு நன்றி சொல்வோம்
நடந்த பாதையெல்லாம் கூட வந்தாரே
அதற்கு நன்றி சொல்வோம்

அப்பா தகப்பனே நன்றி நன்றி
எழுந்து பெத்தேல் செல்லுவோம்

2. போகுமிடமெல்லாம் கூடயிருந்து
காத்து கொள்வேனென்றீர்
சொன்னதை செய்து முடிக்கும் வரைக்கும்
கைவிடமாட்டேனென்றீர்

4. எல்லா தீமைக்கும் நீங்கலாக்கி
என்னை மீட்டீரையா
வாழ்நாள் முழுவதும் மேய்ப்பனாயிருந்து
நடத்தி வந்தீரையா

3. பிறந்தநாள் முதல் இந்நாள் வரைக்கும்
ஆதரித்த ஆயரே
ஆபிரகாம் ஈசாக்கு வழிபட்டு
வணங்கிய எங்கள் தெய்வமே

5. படுத்திருக்கும் இந்த பூமி சொந்தமாகும்
என்று வாக்குரைத்தீரையா
பலுகி பெருகி தேசமாய் மாறுவோம்
என்று வாக்குரைத்தீரையா

6. அந்நிய தெய்வங்கள் அருவருப்புகள்
அகற்றி புதைத்திடுவோம்
ஆடை மாற்றுவோம் தூய்மையாக்குவோம்
பாடி கொண்டாடுவோம்

7. வெறுங்கையோடு பயந்து ஓடிய யாக்கோபை

Tamil Hymns

தெரிந்து கொண்டீர்
இஸ்ரவேல் இனமாய் ஆசீர்வதித்து
பலுகிப்பெருகச் செய்தீர்

814. எழுப்புதல் அனுப்பும்

எழுப்புதல் அனுப்பும் , எழுப்புதல் அனுப்பும்
எங்கள் உள்ளத்திலே
எழுப்புதல் அனுப்பும் , எழுப்புதல் அனுப்பும்
சீக்கிரத்திலே

எழுப்புதல் அனுப்பும் , எழுப்புதல் அனுப்பும்
எங்கள் உள்ளத்திலே
எழுப்புதல் அனுப்பும் , எழுப்புதல் அனுப்பும்
இந்த நேரத்திலே

பாவத்தை மன்னியும் ஆவியைத் தாரும்
இரட்சகரின் நாமத்திலே
வியாதியை நீக்கும் , பிசாசைத் துரத்தும்
இயேசுவின் நாமத்திலே

Tamil Hymns

815. எழுப்புதல் என் தேசத்திலே என் கண்கள்

எழுப்புதல் என் தேசத்திலே (இந்தியாவில்)
என் கண்கள் காண வேண்டும்
தேவா கதறுகிறேன்
தேசத்தின் மேல் மனமிரங்கும்

1. சபைகளெல்லாம் தூய்மையாகி
சாட்சியாக வாழணுமே

2. தெரு தெருவாய் என் இயேசுவின் நாமம்
முழங்கணுமே முழங்கணுமே

3. கோடி மக்கள் சிலுவையை தேடி
ஓடி வந்து சுகம்பெறணும்

4. ஒருமனமாய் சபைகளெல்லாம்
ஒன்று கூடி ஜெபிக்கணுமே

5. தேசமெல்லாம் மனம் திரும்பி
நேசரையே நேசிக்கணும்

6. ஆதி சபை அதிசயங்கள்
அன்றாடம் நடக்கணுமே

7. துதி சேனை எழும்பணுமே
துரத்தணுமே எதிரிகளை

8. மோசேக்கள் கரம் விரித்து
ஜனங்களுக்காய் கதரணுமே

9. ஸ்தேவான்கள் எழும்பணுமே
தேவனுக்காய் நிற்கணுமே

10. அதிசயங்கள் அற்புதங்கள்
அனுதினமும் நடக்கணுமே

11. உம் வழியை அறியணுமே
உம் மீட்பை உணரணுமே

12. இருளில் வாழும் மனிதரெல்லாம்
பேரொளியை காணணுமே

Tamil Hymns

816. எழுப்புதலின் நேரமல்லோ இது

எழுப்புதலின் நேரமல்லோ இது
யோசுவாவின் காலமல்லோ
ஆர்ப்பரிப்போம் ஆர்ப்பரிப்போம்
அலங்கம் இடியும் வரை ஆர்ப்பரிப்போம்

எக்காளம் ஊதி எரிகோவைப் பிடிப்போம்
ஆரவாரத் துதியோடு
கானானுக்குள் நுழைவோம்

1. துதிக்கும் நமக்கோ தோல்வியில்லை
வெற்றி நிச்சயமே
பலங்கொண்டு திடமனதாயிருப்போமே
இந்த பாரதத்தை சுற்றி சுற்றி
சுதந்தரிப்போமே

2. கர்த்தர் நாமம் சொல்ல சொல்ல
தடைகள் விலகிடுமே
மாராவின் தண்ணீர்கள் மதுரமாகுமே
யோர்தானின் தடைகள் எல்லாம்
விலகிப்போகுமே

3. மாம்சத்தோடும் இரத்தத்தோடும்
நமக்கு யுத்தமில்லை - சர்வ வல்லவரின்
ஆயுதத்தை ஏந்திடுவோமே
சாத்தானின் ராஜ்ஜியத்தை
அழித்திடுவோமே

817. எழுப்புதலின் வாசனை எங்கும் வீசட்டும்

எழுப்புதலின் வாசனை எங்கும் வீசட்டும்
எழுப்புதலின் அக்கினி பற்றிப் பிடிக்கட்டும்
எழுப்புதலால் உள்ளங்கள் இன்றே மாறட்டும்
பிரிவினை அகலட்டும் தேவ அன்பு பெருகட்டும்
தேவனின் ராஜ்ஜியம் கட்டப்படட்டும்

ஒன்று சேர்ந்து நாம் உழைப்போம்
ஒன்று சேர்ந்து நாம் ஜெபிப்போம்
ஒன்று சேர்ந்து நாம் துதிப்போம்
தேவ ராஜ்ஜியம் கட்டுவோம்

1. பாரம்பரியங்களை விட்டுவிடுவோம் - நாம்
பாரதம் மீட்டிட பாடுபடுவோம்
கிறிஸ்துவின் சிந்தையை தரித்துக் கொள்வோம்
இயேசுவை உலகிற்கு காட்டிடுவோம்

2. சபைகளின் வித்தியாசம் களைந்து - ஒரே
சரீரமாக சேர்ந்து உழைப்போம்
தேவனின் அன்பால் நிறைந்திடுவோம்
எழுப்புதல் மழையில் நனைந்திடுவோம்

3. பிரிவினை ஆவிகளை எதிர்ப்போம் - நாம்
பிடிவாதங்களை தூக்கி எறிவோம்
சாத்தானின் சதிகளை அறிந்திடுவோம்
இயேசுவின் நாமத்தில் ஜெயமெடுப்போம்

4. சுய நலத்திற்காய் நாம் வாழாமல்
பரந்த மனதோடு செயல்படுவோம்
பண ஆசை, இச்சைகளை வெறுத்து விட்டு
பரலோகம் சென்றிட ஆயத்தமாகவோம்

5. ஆதி அன்பிற்கு திரும்பிடுவோம்
அழைத்த அழைப்பிலே நிலைத்திருப்போம்
அழைத்த நோக்கத்தை மறந்திடாமல்
அழைத்தவரின் சித்தம் செய்து முடிப்போம்

Tamil Hymns

818. எழுப்புதலே எங்கள் வாஞ்சை

எழுப்புதலே எங்கள் வாஞ்சை
எழுப்புதல் தாரும் தேவா
பரிசுத்த ஆவியின் எழுப்புதல்
பரவட்டும் எங்கள் தேசத்தில்

1. அந்தகார இருள் முற்றும் அகலவே
ஆவியின் மழையை ஊற்றுமே
அனலாய் கொழுந்து விட்டெரிய
அக்கினியால் எம்மை நிரப்பும்

2. இந்தியாவின் எல்லைகளெங்கிலும்
இயேசுவின் இரத்தம் பூசப்படட்டுமே
இயேசுவே ஆண்டவர் என்ற முழக்கம்
இன்றே தொனிக்கச் செய்யும்

3. எங்கள் தேசத்தை அழிக்க வேண்டாம்
நாங்கள் திறப்பினில் நிற்கிறோம்
தேவ கோபம் மாற வேண்டும்
தேசம் இயேசுவைக் காண வேண்டும்

4. எங்கள் சபைகள் உயிர்மீட்சி அடைய
ஆவியானவரே அருள் புரியும்
பெருமழையின் சத்தம் கேட்க
எங்கள் செவிகளைத் தூய்மையாக்கும்

819. எனக்காய் கருதுவார் என்னை போஷிப்பார்

எனக்காய் கருதுவார் என்னை போஷிப்பார்
எந்தன் தேவைகள் எல்லாம் சந்திப்பார்
துன்ப நாளில் கைவிடாமல்
தம் சிறகின் நிழலில் மறைப்பார்
நம்புவதற்கு எனக்கென்றும்
சர்வவல்லவர் கூட இருப்பார்
தளராமல் வனாந்திரத்தில்
பிரயாணம் செய்வேன் நம்பிக்கையோடு

1. பொல்லாப்புகள் நேரிடாது
வாதையோ உன்னை அணுகாது
பாதைகளில் தேவனுடைய
தூதர்கள் கரங்களில் தாங்குவார்

2. இரவினிலே பயங்கரமும்
பகலில் பறக்கும் அம்புகளுக்கும்
இருளதிலே நடமாடும்
கொள்ளை நோய்களுக்கும் நான் பயப்படேன்

3. சேருவேன் நான் இயேசுவுடன்
அவர் நாமத்தின் வல்லமை அறிவேன்
கஷ்ட நாட்களில் கூட இருப்பார்
தீர்க்காயுசாய் திருப்தியாக்குவார்
எனக்கின்பம் ஏதெனக் கேளு

Tamil Hymns

820. எனக்கின்பம் ஏதெனக் கேளு

1. எனக்கின்பம் ஏதெனக் கேளு நான் காரணம் சொல்வேன்
என் பாரம் நீங்கிற்றே
வம்பன் வந்தென்னை நோக்கி, நீங்கிற்றென்றால்
தெம்பாய் நீங்கிற்றென்பேன்

அதைக் கல்வாரியின் ரத்தத்தால் மூடியாச்சுதே
அவை வானம் பூமி போல நீங்கிற்றே
அன்பர் மறதிக் கடலுள்ளே ஆழ்ந்தது நன்றே
ஆமென் சுத்தமானேன்

2. அன்றொரு நாளில் இயேசு என் உள்ளத்தில் வந்தார்
என் பாரம் நீங்கிற்றே
என் உள்ளம் பொங்கிட்டதே பிசாசோடிப் போனான்
அன்றே சுகமானேன்

3. சாத்தான் என்னிடம் வந்து சந்தேக மூட்டினால்
சீ போ நீங்கிற்றென்பேன்
நீ துன்பத்துள் ஆக்கிட்டாய் என் இயேசென்னை மீட்டார்
நேசர் சுகம் தந்தார்

4. எப்போதும் நேசருடன் என் நாளெல்லாம்
அப்போதென் பாக்கியமாம்
தப்பாது பாட்டுப்பாடி ஜெபித்துப் போற்றுவேன்
ஆஹா பேரின்பமே

Tamil Hymns

821. எனக்காய் ஜீவன் விட்டவரே

1. எனக்காய் ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னை சந்திக்க வந்திடுவாரே

இயேசு போதுமே இயேசு போதுமே
எந்த நாளிலும் எந்தநிலையிலுமே
எந்தன் வாழ்வினிலும் இயேசுபோதுமே

2. பிசாசின் சோதனை பெருக்கிட்டாலும்
சோர்ந்து போகாமல் முன் செல்லவே
உலகமும் மாமிசமும் மயங்கிட்டாலும்
மயங்கிடாமல் முன்னேறவே

3. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்
ஆத்துமாவை தினம் தேற்றிடுவார்
மரண பள்ளத்தாக்கில் காத்திடுவார்

4. மனிதர் என்னைக் கைவிட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளிவிட்டாலும்

Tamil Hymns

822. எனக்கு உம்ம விட்டாயாரும் இல்லப்பா

எனக்கு உம்ம விட்டாயாரும் இல்லப்பா
உங்க அன்ப விட்டா எதுவும் இல்லப்பா

என் ஆசை நீங்கப்பா
என் தேவை நீங்கப்பா
என் சொந்தம் நீங்கப்பா
என் சொத்து நீங்கப்பா

1. காண்கின்ற எல்லாம் ஓர் நாள்
கறைந்து போகுமே
தொடுகின்ற எல்லாம் ஓர் நாள்
தொலைந்து போகுமே

2. உலகத்தின் செல்வம் எல்லாம்
நிலையாய் நிற்குமோ
அழியாத செல்வம் நீரே
போதும் இயேசுவே

823. எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம்

எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம்
என் இயேசுவோடு நான் பேசுவேன்
நான் பேசுவேன் அவர் பேசுவார்
இருவரும் சந்தோஷிப்போமே

1. ஆபத்து நேரத்தில் கூப்பிடுவேன்
அருகில் வந்தெனக்கு உதவி செய்வார்
இக்கட்டு நேரத்தில் கூப்பிடுவேன்
இனிமையாய் வந்தெனக்கு பதில் கொடுப்பார்

அல்லேலூயா… அல்லேலூயா…(6)

2. ஆராதனை நேரங்களில் கூப்பிடுவேன்
ஆவியின் அபிஷேகம் தந்திடுவார்
அந்நிய பாஷையில் நிரப்பிடுவார்
அபிஷேக தைலத்தை ஊற்றிடுவார்

3. அந்தி சந்தி மதியங்கள் கூப்பிடுவேன்
முந்தி வந்து எனக்கவர் உதவி செய்வார்
சபையிலே சாட்சியாய் வாழ்ந்திடுவேன்
சத்தியத்தை உணவாக்கி மகிழ்ந்திடுவேன்

4. உற்சாகமாய் கர்த்தருக்கு கொடுத்திடுவேன்
இரட்டிப்பான நன்மைகளைப் பெற்றிடுவேன்
ஜீவனின் அதிபதியானவரை - என்
ஜீவிய காலமெல்லாம் வாழ்த்திடுவேன்

Tamil Hymns

824. எனக்கேன் இனி பயமே எந்தன்

1. எனக்கேன் இனி பயமே
எந்தன் இயேசு என் துணையே
என் துன்ப நேரத்திலே (2)
இயேசுவே என்னோடிருப்பார் (2)

கடந்த வாழ் நாட்களெல்லாம் (2)
கர்த்தரே என்னை சுமந்தார்
கண்ணீர் யாவையும் துடைத்தார்

2. உண்மையாய் என்னையும் நேசித்தார்
உள்ளங்கையில் என்னை வரைந்தார்
அவர் அறியாதொன்றும் வந்ததில்லை
அவரையே சார்ந்து கொண்டேன் - எனக்கேன்

3. கர்த்தரோடிசைந்தே நடந்தேன்
கிருபை சமாதானம் ஈந்தார்
விசுவாசத்தால் நானும் பிழைத்ததால்
விரும்பி என்னை அணைத்தார் - எனக்கேன்

4. யுத்தங்கள் துன்பங்கள் சந்தித்தும்
யோர்தான் நதி புரண்டு வந்தும்
எலியாவின் தேவன் என் ஜெபங்களை
ஏற்று பதில் அளித்தார் - எனக்கேன்

5. இத்தனை அற்புத நன்மைகள்
கர்த்தர் செய்ததை நினைத்திடுவேன்
இதுவரை வழிகாட்டி நடத்திடுவார்
இன்னமும் காத்திடுவார் - எனக்கேன்

6. உலகம் முடியும் வரையும்
உந்தனோடிருப்பேன் என்றவர்
மகிமையில் சேர்ப்பாரே நம்பிக்கையில்
மேன்மை பாராட்டுகிறேன் - எனக்கேன்

Tamil Hymns

825. எனக்கொத்தாசை வரும்

எனக்கொத்தாசை வரும் பர்வதம் நேராய்
என் கண்களை ஏறெடுப்பேன்

1. வானமும் பூமியும் படைத்த
வல்ல தேவனிடமிருந்து
எண்ணுக்கடங்கா நன்மைகள் வருமே
என் கண்கள் ஏறெடுப்பேன்

2. மலைகள் பெயர்ந்தகன்றிடினும்
நிலைமாறி புவியகன்றிடினும்
மாறிடுமோ அவர் கிருபை எந்நாளும்
ஆறுதல் எனக்கவரே

3. என் காலைத் தள்ளாட வொட்டார்
என்னைக் காக்கும் தேவன் உறங்கார்
இஸ்ரவேலைக் காக்கும் நல் தேவன்
இராப்பகல் உறங்காரே

4. வலப்பக்கத்தில் நிழல் அவரே
வழுவாமல் காப்பவர் அவரே
சூரியன் பகலில் சந்திரன் இரவில்
சேதப்படுத்தாதே

5. எத்தீங்கும் என்னை அணுகாமல்
ஆத்துமாவைக் காக்குமென் தேவன்
போக்கையும் வரத்தையும் பத்திரமாக
காப்பாரே இது முதலாய்

826. எனக்கொரு ஆசையுண்டு

எனக்கொரு ஆசையுண்டு
என் இயேசுவை காண வேண்டும்
எனக்கொரு ஆவல் உண்டு
நான் அவரோடு பேச வேண்டும்

வையகமே வானகமே
எனது ஆசை நிறைவேறுமா

1. மலையும் காடும் சோலையும்
அலைந்தோடும் கடலும் தேடினேன்
காணேன் அவரை கதறி அழுதேன்
கர்த்தரே வாரும் வாரும் என்றேன்

2. கரம் ஒன்று என்னைத் தொட்டது
என் கண்ணீரை மெதுவாய் துடைத்தது
வேதம் தந்தேன் தினமும் அதிலே
என்னை பார் என மொழிந்தது

3. தினமும் வேதத்தில் காண்கிறேன்
தேவாதி தேவனை துதிக்கின்றேன்
ஜெபத்தில் பேசி மகிழுகின்றேன்
ஜீவ தேவனை வாழ்த்துகிறேன்

827. எனக்கொரு நேசர் உண்டு

எனக்கொரு நேசர் உண்டு
அவர்தான் இயேசு ராஜா
எனக்கொரு புகலிடம் உண்டு
அவர்தான் இயேசு ராஜா

1. என் வேதனைகளை அவர் காண்கிறார்
என் கண்ணீரையும் அவர் பார்க்கிறார்
ஏற்ற காலத்தில் உதவி செய்கிறார்

இயேசு அவர் நல்லவர் சர்வ வல்லவர்
இரக்கமுள்ளவர் ஆறுதல் தருபவர்

2. அவர் செட்டையின் நிழலில் ஆறுதல்
அவர் செட்டையின் மறைவில் ஆரோக்கியமே
பெலன் பெறுகவே சுகம் தருகிறார்

3. என் அலைச்சல்களை அவர் அறிகிறார்
என் பெலவீனங்கள் அவர் காண்கிறார்
தாங்கி நடக்கவே பெலன் தருகிறார்

828. எனது உள்ளம் யாருக்கு தெரியும்

எனது உள்ளம் யாருக்கு தெரியும் - இயேசையா
எனது நினைவு யாருக்கு புரியும்

என்னை நீர் அறிவீரே
உம்மை நான் அறிவேனே
என்னை புரிந்து கொண்ட
தெய்வம் நீரே - இயேசையா

1. அன்னை தந்தை அறியவில்லையே - என்
உள்ளம் தன்னை புரிந்து கொள்ள முடியவில்லையே
என்னை அறிந்த தெய்வம் நீரையா - என்
உள்ளம் புரிந்த அன்னை நீரையா

2. மனிதனோ முகத்தை பார்க்கிறான்
நீரோ என் உள்ளமதை அறிந்து பார்க்கிறீர்
நொருங்கி போன எனது உள்ளத்தை
அரவணைத்து காயம் ஆற்றினீர்

3. ஊரும் உறவும் என்னை வெறுத்தது
என் உள்ளம் நொந்து சோகமானது
என் உள்ளம் அறிந்து ஓடி வந்தீரே
ஆற்றி தேற்றி அணைத்துக் கொண்டீரே

Tamil Hymns

829. எனது கர்த்தரின் ராஜரீக நாள்

எனது கர்த்தரின் ராஜரீக நாள்
எப்போ வருகுமோ…
ஏங்கும் என் கலி நீங்க மகிழ்ச்சி
எப்போ பெருகுமோ…
மனிதசுதனின் அடையாளம்
விண்ணில் காணும், என்றாரே -2
வல்லமையோடு மகிமையாய்த் தோன்றி
வருவேன் என்றாரே

1. தேவ தூதரின் கடைசி எக்காளம்
தொனி முழங்கவே - ஜெகத்தில் ஏசுவைப்
பற்றி மரித்தோர் உயிர்த்தெழும்பவே
ஜீவனுள்ளோறும் அவருடன்
மறு ரூபமாகவே - ஜெகத்தில் பக்தர்கள்
கர்த்தரிடத்துக் கெழுந்து போகவே

2. தூதர் எக்காளத் தொனியில் என்னிடம்
சேர்ப்பேன் என்றாரே - சோதனை காலந்தனில்தப்ப
வுன்னைக் காப்பேன் என்றாரே
பாதக மனு ஜாதி வேதனை அடையும்
என்றாரே - பாவ மனுசன் தோன்றி
நாசமாய்ப் போவான் என்றாரே

3. எருசலேமி லிருந்து ஜீவ நதிகள் ஓடுமே
ஏழைகள் மன மகிழ்ந்து கர்த்தரை
ஏந்திப் பாடுமே
வருஷமாயிரம் அளவும் பூமியில் பலன்கள்
நீடுமே - வானராச்சிய சேனைகள்
யாவும் வந்து கூடுமே

4. சஞ்சலங்களும் தவிப்புகள் யாவும் ஓடிப் போகுமே
சந்தோஷத்தோடு மகிழ்ச்சியும் வந்து சார்ந்து பிடிக்குமே
நெஞ்ச மகிழ்ந்து நீதிமான்களின் வாய் துதிக்குமே
நித்திய ஜீவனைப் பெற என்றன் மனம் துடிக்குமே

Tamil Hymns

830. எனது தலைவன் இயேசுராஜன்

எனது தலைவன் இயேசுராஜன்
மார்பில் சாய்ந்து சாய்ந்து
மகிழ்ந்து மகிழ்ந்திருப்பேன்

1. இதய தீபம் எனது தெய்வம்
இரக்கத்தின் சிகரம்
பார்த்து பார்த்து ரசித்து ருசித்து
பரவசம் அடைவேன்... (2)

2. நீதி தேவன் வெற்ற வேந்தன்
அமைதியின் மன்னன்
நினைத்து நினைத்து கவலை மறந்து
நிம்மதி அடைவேன்... (2)

3. நல்ல மேய்ப்பன் குரலைக் கேட்டேன்
நாளும் பின் தொடர்வேன்
தோளில் அமர்ந்து கவலை மறந்து
தொடர்ந்து பயணம் செய்வேன்... (2)

4. பசும்புல் மேய்ச்சல் அமர்ந்த தண்ணீர்
அழைத்துச் செல்பவரே
ஆத்துமாவை தினமும் தேற்றி
அணைத்துக் கொள்பவரே... (2)

831. எனது மணவாளனே என் இதய ஏக்கமே

எனது மணவாளனே என் இதய ஏக்கமே
இனியவரே இயேசையா
உம்மைத் தான் தேடுகிறேன் - நான்
உம்மைத் தான் நேசிக்கிறேன்

1. உம் நாமம் சொல்லச் சொல்ல - என்
உள்ளமெல்லாம் துள்ளுதையா
உம் அன்பைப் பாடப் பாட
இதயமெல்லாம் இனிக்குதையா (2)

2. உம் முகம் பார்க்கணுமே
உம் அழகை ரசிக்கணுமே
உம் பாதம் அமரணுமே
உம் சித்தம் அறியணுமே

3. என் வாயின் சொற்களெல்லாம்
ஏற்றனவாய் இருப்பதாக
என் இதய எண்ணமெல்லாம்
உகந்தனவாய் இருப்பதாக (உமக்கு)

4. அழகெல்லாம் அற்றுப் போகும் - உலக
எழிலெல்லாம் ஏமாற்றும்
உம் அன்பு மாறாதையா
ஒரு நாளும் அழியாதையா (அன்பு)

5. நான் பார்க்கும் பார்வையெல்லாம்
ஏற்றனவாய் இருப்பதாக
நான் நடக்கும் பாதையெல்லாம்
உகந்தவனாய் இருப்பதாக (உமக்கு)

Tamil Hymns

832. என் அருள் நாதா இயேசுவே

1. என் அருள் நாதா இயேசுவே
சிலுவைக் காட்சி பார்க்கையில்
பூலோக மேன்மை நஷ்டமே
என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்

2. என் மீட்பர் சிலுவை அல்லால்
வேறெதை நான் பாராட்டுவேன்
சிற்றின்பம் யாவும் அதினால்
தகாததென்று தள்ளுவேன்

3. கை, தலை, காலிலும் இதோ
பேரன்பும் துன்பும் கலந்தே
பாய்ந்தோடும் காட்சிபோல் உண்டோ
முள் முடியும் ஒப்பற்றதே

4. மாந்தர்க்கு மீட்பைக் கஸ்தியால்
சம்பாதித்தீந்த இயேசுவே
உமக்கு என்றும் தாசரால்
மா ஸ்தோத்திரம் உண்டாகவே

5. சராசரங்கள் அனைத்தும்
அவ்வன்புக்கு எம்மாத்திரம்
என் ஜீவன் சுகம் செல்வமும்
என் நேசருக்குப் பாத்தியம்

833. என் அன்பரே என் இன்பமே

என் அன்பரே என் இன்பமே
என் மதுரமே ஸ்தோத்திரம் - என்
நேசத்தந்தையே என் அன்பின் ரட்சகா
என் இன்ப ராஜாவே ஸ்தோத்திரம்

1. ஆயிரம் பாடல்களைப் பாடியே ஸ்தோத்திரம்
ஆனந்த தைலத்தால் நிரம்பியே ஸ்தோத்திரம்
அற்புதங்கள் தியானித்தேன்
அதிசயங்கள் தியானித்தேன்
அன்பரே இன்பமே ஸ்தோத்திரம்

2. ஆவியில் ஆராதனை செய்துமே ஸ்தோத்திரம்
அனுதினமும் அன்பினால் நிறைந்துமே ஸ்தோத்திரம்
அஞ்சிடாமல் வாழ்ந்திட
சத்துருவை ஜெயித்திட
அடைக்கலமே மறைவிடமே ஸ்தோத்திரம்

3. பரிபூரண ஆனந்தமே உம சமூகம் ஸ்தோத்திரம்
நித்திய பேரின்பமே வலது பக்கம் ஸ்தோத்திரம்
ஆலோசனை தந்தீரே
கண்மணி போல காத்தீரே
கேடகமே துருகமே ஸ்தோத்திரம்

4. காலடிகள் வழுவாது காத்தீரே ஸ்தோத்திரம்
ராக்காலத்தில் ஆலோசனைத் தந்தீரே ஸ்தோத்திரம்
செட்டைகளின் நிழலிலே
என்னை மறைத்துக் கொண்டீரே
உன்னதரே சுதந்திரமே ஸ்தோத்திரம்

5. விழிக்கும் போது உம் சாயலால் திருப்தியாவேன் ஸ்தோத்திரம்
நீதியில் உம் முகத்தை நான் தரிசிப்பேன் ஸ்தோத்திரம்
உன்னதத்தில் உம்முடன்
என்றென்றுமாய் வாழ்ந்திட
தந்தீரே இந்த இன்ப பாக்கியம்

Tamil Hymns

834. என் அன்பே என் அன்பே என்

என் அன்பே என் அன்பே
என் அன்பே என் அன்பே

உந்தன் மகா பரிசுத்த ஸ்தலத்தில்
நான் உம்மைப் பார்க்கணும்
உந்தன் முகத்தை பார்த்து
நான் உம்மை ரசிக்கணும்

பாவியைப் போல தூரத்தில் நின்று
பார்த்திட விரும்பவில்லை
பிள்ளையைப் போல உம்மிடம்
வந்து பேசிட விரும்புகிறேன்

மகனாய் வந்து மடியில் தவழ்ந்து
நேசம் பகிர்ந்திடுவேன்
முத்தங்கள் தந்து பாசத்தை காட்டி
பரவசம் அடைந்திடுவேன்

வாரினால் அடிபட்டு முள்முடி சுமந்த
அன்பை எண்ணுகிறேன்
துரோகியாய் இருந்த என்னையும்
நேசித்த அன்பை பாடுகிறேன்

நீர் வெறுத்திடும் எல்லா காரியம்
விட்டு முற்றும் விலகிடுவேன்
அறைக்குள் வந்து அருகில் உம்மோடு
ரகசியம் பேசிடுவேன்

835. என் ஆத்தும நேச மேய்ப்பரே

1. என் ஆத்தும நேச மேய்ப்பரே!
என் உள்ளத்தின் ஆனந்தமே!
இன்னும் உம்மை கிட்டிச் சேர நான்
வாஞ்சையோடு சமீபிக்கிறேன்

பேசும் பேசும் பேசும் ஜெபம் செய்யும் போது
ஆண்டவா! பிரியமானதை
இப்போ காட்டும் செய்ய ஆயத்தம்

2. மெய் மீட்பருக்கு கீழ்ப்படிவோர்
தம் ஆத்துமத்தைத் தேற்றும் இடம்
அடியேனும் பெற அருள்வீர்
அப்பனே விண்ணப்பம் கேட்டிடும்

3. பாவிகட்கு உமது அன்பை
என் நடையார் காட்டச் செய்யும்
கல்வாரி ஆவியாலென் உள்ளத்தைப்
போரில் வெல்ல அபிஷேகியும்

4. என் ஜீவிய நாட்களெல்லாம்
நீர் சென்ற பாதையில் செல்லுவேன்
ஆசித்துத் தாரேன் எனதெல்லாம்
மீட்பரே வல்லமை தந்திடும்

Tamil Hymns

836. என் ஆத்தும நேசர் இயேசுவை

என் ஆத்தும நேசர் இயேசுவை
நான் அண்டிக் கொள்வேனே (4)

1. நிலையில்லா என்னைக் கண்டிட்டார்
நித்திய வழிக்குள் நடத்திட்டார்
விலையில்லா இரத்தம் சிந்தினார்
விந்தையாய் என்னைச் சந்தித்தார்

பரகதி வாழ்வை தந்தவர்
பரமன் இயேசு கர்த்தரே
நித்திய வழிக்குள் நடத்தியவர்
நிதம் அவர் துதி நான் பாடிடுவேன்
அல்லேலூயா அல்லேலூயா -- அல்லேலூயா

2. பாவத்தை கழுவி பரிகரித்தார்
சாபத்தை நீக்கி சங்கரித்தார்
லாபம் இன்றென் ஜீவனே
தாபம் எனக்கினி அவர்தானே

3. என்னையே மீட்க என் இயேசு
தன்னையே தியாகம் செய்தாரே
அன்னையாய் அப்பனாய் ஆனவர்
உன்னையும் அன்பாய் அழைக்கிறார்

Tamil Hymns

837. என் ஆத்துமாவே கர்த்தரைத் துதி

என் ஆத்துமாவே கர்த்தரைத் துதி
முழு உள்ளத்தோடே
அவர் நாமத்தையே ஸ்தோத்திரி
பரிசுத்தர் நீரே

நீர் செய்த சகல உபகாரங்களையும்
ஒவ்வொன்றாய் எண்ணி துதித்திடுவேன்
என்ன நடந்தாலும் என்ன நேர்ந்தாலும்
உம்மையே நம்பி துதித்திடுவேன்

நீர் அன்பில் சிறந்தவர் தயவில் பெரியவர்
இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவரே - உம்
கிருபையினால் என்னை
உயர்த்தின தேவனே - வாழ்நாளெல்லாம்
உம்மை தொழுதிடுவேன்

பெலனற்ற நேரம் நீர் பெலனாய் வருவீர்
நம்பினதெல்லாம் என்னை கைவிட்டாலும்
உம் முகத்தை மட்டும்
நோக்கி பார்த்திடுவேனே
சோர்ந்திடாமல் உம்மை உயர்த்திடுவேன்

Tamil Hymns

838. என் ஆத்துமாவே நீ கர்த்தரை ஸ்தோத்தரி

என் ஆத்துமாவே நீ கர்த்தரை ஸ்தோத்தரி
என் முழு உள்ளமே அவர்
பரிசுத்த நாமத்தை என்றும் ஸ்தோத்தரி
என் ஆத்துமாவே நீ கர்த்தரை ஸ்தோத்தரி
அவர் செய்த சகல உபகாரங்களை
என்றும் மறவாதே

ராஜாதி ராஜாவே என்றுமே
கர்த்தாதி கர்த்தாவே என்றுமே
ராஜாதி ராஜாவே என்றுமே
அல்லேலூயா ஆமென் - 2

உன் அக்கிரமங்களை மன்னித்தார்
உன் நோய்களை குணமாக்கினார்
உந்தன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டார்
உன்னை கிருபை இரக்கத்தால் முடி சூட்டினாரே
அவருக்கு ஸ்தோத்திரம் ஆமென் - 2

உன் வாயை நன்மையினால் கர்த்தர் திருப்தியாக்குகிறார்
உன் வயது கழுகுக்கு சமானமாய்
திரும்ப வால வயது போல் ஆகும்
அவருக்கு ஸ்தோத்திரம் ஆமென்

ஒடுக்கப்படும் யாவருக்கும் நீதி நியாயத்தை செய்கின்றாரே
உருக்கம் இரக்கம் கிருபை மிகுந்த
தேவன் நீடிய சாந்தம் நிறைந்த பிதாவே
அவருக்கு ஸ்தோத்திரம் ஆமென் - 2

அவர் எப்போதும கடிந்து கொள்ளார்
தேவன் என்றைக்கும் கோபம் கொண்டிரார்
நம் பாவங்களுக்கு தக்கதாய் செய்யாமலும்
சரிக்கட்டாமலும் அவர் இருக்கின்றதாலே
அவருக்கு ஸ்தோத்திரம் ஆமென் - 2

தகப்பன் தன் பிள்ளைகட்கு இரங்குவது போல் அவரும்
தமக்கு பயந்தோருக்கு இரங்குகின்றார்
கர்த்தர் கிருபை நீதி எமக்களித்தார்
அவருக்கு ஸ்தோத்திரம் ஆமென் - 2

Tamil Hymns

839. என் ஆத்ம நேசரும் நீரே எனக்காக

என் ஆத்ம நேசரும் நீரே
எனக்காக ஜீவன் தந்தீரே
என் பாவங்கள் என் சாபங்கள்
சிலுவையில் நீர் சுமந்தீரே

ஆராதனை ஆராதனை
அர்பணித்தேன் என்னையே

1. பெலவீன நேரத்தில் என்னை
பெலவானாய் மாற்றுகின்றீரே
என் சோதனையில் என் வேதனையில்
தாங்கினீர் உம் பெலத்தாலே

2. என் வழிகளெல்லாம்
உம்மை நினைத்தேன்
உம் செயல்களை கண்டு வியந்தேன்
என் அடைக்கலமே அதிசயமே
அற்புத தேவனும் நீரே

Tamil Hymns

840. என் ஆத்துமா பாடும்

என் ஆத்துமா பாடும்
என் இதயம் துதிக்கும்
என் உதடுகள் போற்றும்
இயேசு நல்லவர்
ஆ... அல்லேலூயா
ஆ... அல்லேலூயா
ஆ... அல்லேலூயா
அல்லேலூயா
ஆ... அல்லேலூயா
ஆ... அல்லேலூயா
ஆ... அல்லேலூயா
அல்லேலூயா

சேற்றிலிருந்த என்னை
கரத்தால் தூக்கி எடுத்தார்
நாற்றமெல்லாம் மாற்றினார்
இரத்தத்தாலே கழுவினார்
இயேசுவே என் ஆண்டவர்
இயேசுவே என் இரட்சகர்
இயேசுவே என் மீட்பர்
இயேசுவே என் ராஜா
தள்ளப்பட்ட என்னையும்
தலைக்கல்லாய் மாற்றினார்-
மகிமையாலே நிரப்பினார்
பயன்படுத்தி வருகிறார்

கர்த்தர் என் மேய்ப்பர்
நான் தாழ்ச்சி அடையேன்
இதுவரை நடத்தினார்
இனிமேலும் நடத்துவார்

பாவியான என்னையும்
கிருபையாய் இரட்சித்தார்
பிள்ளையாய் மாற்றினார்
புது வாழ்வை அளித்தார்

Tamil Hymns

841. என் ஆத்துமாவும் சரீரமும்

1. என் ஆத்துமாவும் சரீரமும்
என் ஆண்டவர்க்கே சொந்தம்
இனி வாழ்வது நானல்ல
என்னில் இயேசு வாழ்கின்றார்

இயேசு தேவா அர்ப்பணித்தேன்
என்னையே நான் அர்ப்பணித்தேன்
ஏற்றுக் கொள்ளும் ஏந்திக்கொள்ளும்
என் இதயம் வாசம் செய்யும்

2. அப்பா உம் திருசித்தம் - என்
அன்றாட உணவையா
நான் தப்பாமல் உம் பாதம்
தினம் எப்போதும் அமர்ந்திருப்பேன்

3. கர்த்தாவே உம் கரத்தில்
நான் களிமண் போலானேன்
உந்தன் இஷ்டம் போல் வனைந்திடும்
என்னை எந்நாளும் நடத்திடும்

Tamil Hymns

842. என் ஆவி ஆன்மா தேகமும்

என் ஆவி ஆன்மா தேகமும்
1. என் ஆவி ஆன்மா தேகமும்
இதோ படைக்கிறேன்;
என்றும் உம் சொந்தமாகவும்
பிரதிஷ்டை செய்கிறேன்.

2. ஆ, இயேசு, வல்ல ரட்சகா
உம் நாமம் நம்புவேன்;
ரட்சிப்பீர், மா தயாபரா,
உம் வாக்கை வேண்டுவேன்.

3. எப்பாவம் நீங்க, உறுப்பு
தந்தேன் சமூலமாய்;
போராட்டம் வெற்றி சிறப்பு
படைக்கலங்களாய்.

4. நான் உம்மில் ஜீவித்தல் மகா
மேலான பாக்கியம்;
தெய்வ சுதா, என் ரட்சகா,
என் ஜீவனாயிரும்.

5. என் நாதா, திரு ரத்தத்தால்
சுத்தாங்கம் சொந்தமே;
ஆனேன்! உம் தூய ஆவியால்
பலி நான் உமக்கே.

843. என் இதயம் யாருக்கு தெரியும்

என் இதயம் யாருக்கு தெரியும்
என் வேதனை யாருக்கு புரியும்
என் தனிமை என் சோர்வுகள்
யார் என்னைத் தேற்றுவார் " (2)

நெஞ்ஜில் நோவுகள் அதை மிஞ்சும் பாரங்கள் -2
தஞ்சம் இன்றியே நெஞ்சம் ஏங்குதே
நெஞ்சம் ஏங்குதே - என் இதயம்

1. சிறகு ஒடிந்த பறவை
அது வானில் பறக்குமோ -உடைந்த
உள்ளமும் ஒன்று சேருமோ

2. மங்கி எரியும் விளக்கு
பெருங்காற்றில் நிலைக்குமோ
உடைந்த உள்ளமும்

3. அங்கே தெரியும் வெளிச்சம்
அது கலங்கரை தீபமோ -இயேசு
ராஜனின் முகத்தின் வெளிச்சமே

என் இதயம் இயேசுவுக்கு தெரியும்
என் வேதனை இயேசுவுக்கு புரியும்
என் தனிமை என் சோர்வுகள்
இயேசு என்னைத் தேற்றுவார் -3

Tamil Hymns

844. என் இயேசு உன்னைத் தேடுகிறார்

என் இயேசு உன்னைத் தேடுகிறார்
இடமுண்டோ மகனே உன் உள்ளத்தில்

1. கதறிடும் உன்னைப் பார்க்கின்றார்-உன்
கண்ணீரைத் துடைக்க வருகின்றார்
உதவிடும் கரத்தை நீட்டுகிறார்-உன்
உள்ளத்தில் வாழத் துடிக்கின்றார்

2. சிலுவை மரணம் உனக்காக
சிந்திய திரு இரத்தம் உனக்காக
உன் பாவம் சுமந்து தீர்த்தாரே - தன்
உயிர் தந்து உன்னை மீட்டாரே

3. மார்த்தாள் வீட்டில் இடம் கொடுத்தாள்
மரித்த லாசரை மீண்டும் கண்டாள்
கலங்கிடும் மனிதா வருவாயா - என்
கர்த்தரின் பாதம் விழுவாயா

4. சகேயு உடனே இறங்கி வந்தான்
சந்தோஷமாக வரவேற்றான்
பாவங்கள் அனைத்தும் அறிக்கை செய்தான்
பரலோக இன்பம் பெற்றுக் கொண்டான்

5. பேதுரு படகில் இடம் கொடுத்தான்
பெரும் தோல்வி மாறி மகிழ்வடைந்தான்
அதிசய தேவனை கண்டு கொண்டான்
ஆண்டவன் பின்னே நடந்து சென்றான்

Tamil Hymns

845. என் இயேசு ராஜா ஸ்தோத்திரம்

என் இயேசு ராஜா ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் -2
உயிருள்ள நாளெல்லாம்

1. இரக்கம் உள்ளவரே
மனதுருக்கம் உடையவரே
நீடிய சாந்தம், பொறுமை, அன்பு
நிறைந்து வாழ்பவரே

2. துதி கன மகிமையெல்லாம்
உமக்கே செலுத்துகிறோம்
மகிழ்வுடன் ஸ்தோத்திரபலிதனை செலுத்தி
ஆராதனை செய்கிறோம்

3. கூப்பிடும் யாவருக்கும் அருகில் இருப்பவரே
உண்மையாய் கூப்பிடும்
குரல்தனை கேட்டு
விடுதலை தருபவரே

4. உலகத் தோற்ற முதல்
எனக்காய் அடிக்கப்பட்டீர்
துரோகியாய் வாழ்ந்த என்னையும் மீட்டு
புது வாழ்வு தந்து விட்டீர்

Tamil Hymns

846. என் இயேசு ராஜாவுக்கே எந்நாளும்

என் இயேசு ராஜாவுக்கே
எந்நாளும் ஸ்தோத்திரம்
என்னோடு வாழ்பவர்க்கே
எந்நாளும் ஸ்தோத்திரம்

1. கர்த்தாவே நீர் செய்த நன்மைகளை
நித்தமும் நினைக்கிறேன்
முழு உள்ளத்தோடு உம் நாமம்
பாடிப் புகழுவேன் - நான்

2. நெருக்கப்பட்டேன் தள்ளப்பட்டேன்
நேசர் நீர் அணைத்தீரே
கைவிடப்பட்டு கதறினேன்
கர்த்தர் நீர் தேற்றினீர்

3. இனி நான் வாழ்வது உமக்காக
உமது மகிமைக்காக
உம் அன்பை எடுத்துச் சொல்லுவேன்
ஓயாமல் பாடுவேன் - நான்

4. பாவங்கள் அணைத்தும் மன்னித்தீரே
நோய்களை சுகமாக்கினீர்
எனது ஜீவனை அழிவில் நின்று
காத்து இரட்சித்தீரே

847. என் இயேசு ராஜா சாரோனின் ரோஜா

என் இயேசு ராஜா சாரோனின் ரோஜா
உம் கிருபை தந்தாலே போதும் (2)
அலை மோதும் வாழ்வில் அலையாமல் செல்ல
உம் கிருபை முன் செல்ல அருளும் (2)

1. கடல் என்னும் வாழ்வில் கலங்கும் என் படகில்
சுக்கான் பிடித்து நடத்தும் என் தேவா (2)
கடலினைக் கண்டித்த கர்த்தர் நீர் அல்லவோ
கடவாத எல்லையை என் வாழ்வில் தாரும் (2)

2. பிளவுண்ட மலையே புகலிடம் நீரே
புயல் வீசும் வாழ்வில் பாதுகாத்தருளும் (2)
பாரினில் காரிருள் சேதங்கள் அணுகாது
பரமனே என் முன் தீபமாய் வாரும் (2)

3. எதிர்க் காற்று வீச எதிர்ப்போரும் பேச
என்னோடிருப்பவர் பெரியவர் நீரே (2)
இயேசுவே யாத்திரையில் கரை சேர்க்கும் தேவன்
என் ஜீவ படகின் நங்கூரம் நீரே (2)

Tamil Hymns

848. என் இயேசுவால் ஆகாத தொன்றுண்டோ

என் இயேசுவால் ஆகாத தொன்றுண்டோ? (2)
என் இயேசுவால் ஆகாதது (2)
என் இயேசுவால் ஆகாத தொன்றுண்டோ?
என் இயேசுவால் ஆகாத தொன்றில்லை (2)
என் இயேசுவால் ஆகாதது (2)
என் இயேசுவால் ஆகாத தொன்றில்லை

849. என் இயேசுவே உம்மை அல்லால்

என் இயேசுவே உம்மை அல்லால்
மண்ணில் ஆறுதல் ஒன்றுமே கண்டிலேன்

1. சுக செல்வ மகிமை பெருமையிலெங்கும்
இன்பம் தரும் பொருள் காணேன்
தாகம் பெருகும் தண்ணீரேயன்றி
லோகம் வேறொன்றும் நல்காதே

2. ஆபத்துக் காலத்தில் அனுகூலமான
துணையும் நீர் பெலனுமே நாதா
ஆகையால் பூமி நிலை மாறினாலும்
அஞ்சேன் கடல் பொங்கினாலும்

3. பாழ்மணல் பாதையில் எரியும் வெயிலில்
பரனே உம் கிருபையின் நிழலில்
பாடி மகிழ்வேன் குருசை புகழ்வேன்
பேரின்ப நாட்டில் நான் வாழ்வேன்

4. என் நேசர் இயேசுவில் நித்தமும் சார்ந்து
பரதேச யாத்திரை செய்வேன்
பாரினில் பொங்கும் துயரங்கள் தங்கும்
பாரங்கள் ஏதும் நானறியேன்

5. உமதன்பின் இனிமையை என்றும் ருசிப்பேன்
உலகின் வினைகள் மறப்பேன்
உருகும் என் நெஞ்சம் அருளும் நல் தஞ்சம்
பெருகும் என் இதயத்தின் இன்பம்

850. என் இயேசுவே நான் என்றும்

என் இயேசுவே நான் என்றும்
உந்தன் சொந்தம் - என் ராஜனே
அனுதினமும் வழிநடத்தும்

1. உளையான சேற்றின் மேல்
தூக்கியே நிறுத்தினீரே
உந்தனை நான் மறவேன்
உந்தனைப் போற்றிடுவேன்

2. அலைமோதும் கடலதனை
அடக்கியே அமர்த்தினீரே
வார்த்தையின் வல்லமையை
என்றுமே காணச் செய்வீர்

3. தாயினும் அன்பு வைத்தே
தாங்கியே காப்பவரே
ஜீவிய காலமெல்லாம்
உந்தனைப் பின்செல்லுவேன்

4. அக்கினி சூளையிலே
நின்ற எம் மெய் தேவனே
விசுவாசம் திடமனதும்
என்றென்றும் தந்தருளும்

5. ஆகாரின் அழுகுரலை
அன்று நீர் கேட்டீரல்லோ
கருத்துடன் ஜெபித்துமே நான்
உந்தனைத் தேடுகிறேன்

851. என் இன்பம் துன்ப நேரம்

என் இன்பம் துன்ப நேரம்
நான் உம்மைச் சேருவேன்
நான் நம்பிடுவேன்
பாரில் உம்மைச் சார்ந்திடுவேன்

1. நான் நம்பிடும் தெய்வம் இயேசுவே
நான் என்றுமே நம்பிடுவேன்
தேவனே ராஜனே
தேற்றி என்னைத் தாங்கிடுவார்

2. இவரே நல்ல நேசர் என்றுமே
தாங்கி என்னை நடத்திடுவார்
தீமைகள் சேதங்கள்
சேரா என்னைக் காத்திடுவார்

3. பார் போற்றும் இராஜன் புவியில்
நான் வென்றிட செய்திடுவார்
மேகத்தில் தோன்றுவார்
அவரைப் போல மாறிடுவேன்

852. என் உயிரான இயேசு

என் உயிரான இயேசு
என் உயிரோடு கலந்தீர்
என் உயிரே நான் உம்மைத் துதிப்பேன் - 2

1. உலகமெல்லாம் மறக்குதையா
உணர்வு எல்லாம் இனிக்குதையா
உம் நாமம் துதிக்கையிலே இயேசையா
உம் அன்பை ருசிக்கையிலே

2. உம் வசனம் எனக்கு உணவாகும்
உடலுக்கெல்லாம் மருந்தாகும்
இரவும் பகலுமையா!
உம் வசனம் தியானிக்கிறேன்

3. உம் திரு நாமம் உலகத்திலே
உயர்ந்த அடைக்கல அரண்தானே
நீதிமான் உமக்குள்ளே ஓடி
சுகமாய் இருப்பேனே

Tamil Hymns

853. என் உயிரான உயிரான உயிரான இயேசு

என் உயிரான உயிரான உயிரான இயேசு
என் உயிரான இயேசு என் உயிரோடு கலந்தீர்
என் உயிரே நான் உம்மைத் துதிப்பேன்

1. உலகமெல்லாம் மறக்குதையா!
உணர்வு எல்லாம் இனிக்குதையா
உம் நாமம் துதிக்கையிலே இயேசையா
உம் அன்பை ருசிக்கையிலே

2. உம் வசனம் எனக்கு உணவாகும்
உடலுக்கெல்லாம் மருந்தாகும்
இரவும் பகலுமையா!
உம் வசனம் தியானிக்கிறேன்

3. உம் திரு நாமம் உலகத்திலே
உயர்ந்த அடைக்கல அரண்தானே
நீதிமான் உமக்குள்ளே ஓடி
சுகமாய் இருப்பேனே

854. என் உயிரே ஆண்டவரைப் போற்று

என் உயிரே ஆண்டவரைப் போற்று
முழு உள்ளமே அவர் பெயரைப் போற்று

ஒருநாளும் மறவாதே
ஒருபோதும் மறவாதே

1. குற்றங்களை எல்லாம் மன்னிக்கின்றார்
நோய்களை குணமாக்கி நடத்துகிறார்

2. படுகுழியினின்று விடுவிக்கிறார்
இரக்கத்தை முடியாக சூட்டுகிறார்

3. வாழ்நாளெல்லாம் நன்மைகளால்
நிறைவாக்க நம்மைநடத்திச் செல்வார்

4. கழுகுபோல் இளமையை புதுப்பிக்கிறார்
காலமெல்லாம் நம்மை சுமக்கின்றார்

5. மோசேக்கு வழிகள் வெளிப்படுத்தினார்
அதிசய செயல்கள் காணச் செய்வார்

6. இரக்கமும் உருக்கமும் நீடியசாந்தமும்
மிகுந்த கிருபையும் உள்ளவரே

7. எப்போதும் கடிந்து கொள்பவரல்ல
என்றென்றும் கோபம் கொள்பவரல்ல

8. பாவங்களுக்கேற்ப நம்மை நடத்துவதில்லை
குற்றங்களுக்கேற்ப நம்மை தண்டிப்பதில்லை

Tamil Hymns

855. என் உயிரே என் பெலனே

என் உயிரே என் பெலனே
என் உணர்வே என் இயேசுவே
எங்கெங்கும் எந்நாளும் இருப்பவரே
அக்கினி அபிஷேகம் அளிப்பவரே

மகிமை தேவ மகிமை
கிருபை எங்கும் கிருபை

1. கர்த்தர் உமக்கு நிகர் யாருமில்லை
உம் அன்புக்கு இணை ஏதும் இல்லை
நேசிக்கிறேன் நேசிக்கிறேன் என் நேசரையே
பாடிடுவேன் பாடிடுவேன் என் இயேசுவையே

2. நேசரே எனக்கு சொந்தமானீர்
நீர் என்றும் எனக்கு துணையானீர்
வல்லவரே வல்லவரே நீர் உயர்ந்தவரே
நல்லவரே நல்லவரே என் சிநேகிதரே

3. சேனையின் கர்த்தர் நீர் தானே
மகிமையின் ராஜா நீர் தானே
வாழ்த்துகிறேன் வாழ்த்துகிறேன் என் கர்த்தரையே
போற்றுகிறேன் போற்றுகிறேன் என் மீட்பரையே

Tamil Hymns

856. என் உள் உறுப்புகள் உண்டாக்கியவர்

என் உள் உறுப்புகள் உண்டாக்கியவர் நீர்தானே
தாயின் கருவில் உருத் தந்தவர் நீர்தானே
வியத்தகு முறையில் என்னைப் படைத்தீரே
நன்றி நவில்கின்றேன்

நன்றி உமக்கு நன்றி (2) -அப்பா

அமர்வதையும் எழுவதையும்
அப்பா நீர் அறிந்திருக்கின்றீர்
எண்ணங்களை என் ஏக்கங்களை – என் (2)
எல்லாமே அறிந்திருக்கின்றீர் -அப்பா

உம்மை விட்டு மறைவாக
எங்கே நான் ஓட முடியும்
உம் சமூகம் இல்லாமலே
எங்கே வாழ முடியும் – அப்பா

உம்மை வருத்தும் காரியங்கள்
இல்லாமல் அகற்றி விடும்
நித்தியமான உம் பாதையில்
நித்தமும் நடத்துமையா

நடப்பதையும் படுப்பதையும் நன்கு
நீர் அறிந்திருக்கின்றீர்
என் வழிகள் என் செயல்கள்
உமக்குத் தெரியும் அன்றோ

என் முன்னும் என் பின்னும்
சுற்றிச் சூழ்ந்து இருக்கின்றீர்
பற்றிப் பிடிக்கின்றீர் உம் கரத்தாலே
முற்றிலும் அதிசயமே

857. என் உள்ளமே இளைப்பாறிடு

என் உள்ளமே இளைப்பாறிடு
இயேசப்பா உனக்கு நன்மை செய்தார்

1. கால்கள் இடராமல் காப்பாற்றினார்
சாவிலிருந்த விடுவித்தார்

2. நோயின் கட்டுகள் அவிழ்த்துவிட்டார்
ஊழியன் என்னையும் உயிர்த்துவிட்டார்

3. எளிய உள்ளத்தை பாதுகாத்தார்
தாழ்ந்த நெஞ்சத்தை மீட்டுக்கொண்டார்

4. மன்றாடும்போது செவி சாய்த்தார்
மறவாமல் உறவாடி மகிழச்செய்தார்

5. விண்ணப்பம் கேட்டதால் அன்புகூர்வேன்
விடுதலை தந்ததால் நன்றி சொல்வேன்

6. இரட்சிப்பின் பாத்திரம் கையில் ஏந்தி
இரட்சகர் நாமம் உயர்த்திடுவேன்

858. என் உள்ளம் ஏங்குதே உம் அன்பிற்காகவே

1. என் உள்ளம் ஏங்குதே உம் அன்பிற்காகவே
என்றென்றும் ஏங்குதே உம் வாசம் வேண்டியே
என்றென்றும் பாராமல் (2)
எப்போதும் நெஞ்சில் உம்மை துதிப்பேன்
காற்றோரம் காற்றாகி உம்மை தொடுவேன்
ஆனந்த பூவாகி உம் காலில் கிடப்பேன்
இன்பங்கள் பெருகி பாசத்தை பொழிவீர்
எப்போதும் நெஞ்சில் உம்மை துதிப்பேன்

உம் அன்பை பார்க்கிலும்
வேறொன்றும் இல்லையே ஓ...
என் இயேசுவே...
ஒருநாளும் மறவேனே
என் நேசர் நீர்தானே ஓ...
என்றென்றுமே
நான் உம்மை மறவேன்

2. உம் சத்தம் கேட்டுதான் என் நெஞ்சம் குளிரும்
உள்ளாடும் எண்ணங்கள் என் கண்ணில் தெரியும்
சிற்பங்கள் சிரிக்கும் சிந்தனை சிறக்கும்
உன் முகம் பார்த்தால் பூமி நிலைக்கும்
அதிகாலை நேரத்தில் என் கண்கள் தவிக்கும்
உம் முகம் பார்த்தால் என் கண்கள் குளிரும்
இன்பங்கள் தருவீர் பாசத்தை பொழிவீர்
எப்போதும் நெஞ்சில் உம்மை துதிப்பேன்

Tamil Hymns

859. என் உள்ளம் தேவன்பால்

என் உள்ளம் தேவன்பால் (continuation)
பொங்கி வழியுதே
இயேசுசென்னை இரட்சித்தார்
நான் ஆடிப் பாடுவேன்
எவருமறியாரே என் உள்ளம் பொங்குதே
என் உள்ளம் பொங்கி, பொங்கி, பொங்கி
பொங்கி வழியுதே

Tamil Hymns

860. என் ஓசை கேட்கின்றதா இயேசையா

என் ஓசை கேட்கின்றதா இயேசையா
ஆழத்திலிருந்து அழைக்கின்றேனே (அழுகின்றேனே)
பாழ் உலக பாரத்தாலே
பாவ உலகில் நான் மாள வேண்டுமா

உம் சித்தம் நிறைவேற ஒப்புவித்தேன்
என்சித்தத்தால் எங்கேயோ தவறிவிட்டேன்
இரக்கங்கள் பாராட்டுமே இயேசய்யா
இன்னும் ஒரே முறை எழுப்பிடுமே

எத்தனை தூரம் அலைந்தேனய்யா
அத்தனையும் உம் ஆணையாலே
நினைத்தருளும் உம் வாக்குகளை
வனைந்தது போதுமே இயேசய்யா

ஜெபம் கேட்டு பதில் தந்து எழுப்பினீரே
ஜெயக்கிறிஸ்துவே என்றும் மாறாதவர்
பயங்கள் பறந்தோட செய்தவரே
என் பரிசுத்தம் உயரட்டும் இயேசய்யா

861. என் கிருபை உனக்கு போதும்

என் கிருபை உனக்குப் போதும்
பலவீனத்தில் என் பெலமோ
பூரணமாய் விளங்கும்

1. பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன்
எனக்கே நீ சொந்தம்
பெயரிட்டு நான் உன்னை அழைத்தேன்
எனக்கே நீ சொந்தம்

2. உலகத்திலே துயரம் உண்டு
திடன்கொள் என் மகனே
கல்வாரி சிலுவையினால்
உலகத்தை நான் ஜெயித்தேன்

3. உனக்கெதிரான ஆயுதங்கள்
வாய்க்காதே போகும்
இருக்கின்ற பெலத்தோடு
தொடர்ந்து போராடு

4. எல்லா வகையிலும் நெருக்கப்பட்டும்
ஒடுங்கி நீ போவதில்லை
கலங்கினாலும் மனம் முறிவதில்லை
கைவிடப்படுவதில்லை

Tamil Hymns

862. என் கை உயர்த்தி உம்மை துதித்திடு

With my hands lifted high உம்மை துதித்திடுவேன்
Volume raise பண்ணி உயர்த்திடுவேன்
என் கை உயர்த்தி உம்மை துதித்திடுவேன்
சத்தத்தை உயர்த்தி நான் உயர்த்திடுவேன்

துதித்திடுவேன் புகழ்ந்திடுவேன் -2

உம்மை துதித்திடுவேன்
உம்மை புகழ்ந்திடுவேன்
உம்மை உயர்த்திடுவேன்
உமக்காய் ஓடிடுவேன் - 2
Jumping and dancing
ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
அப்பாவின் சமூகத்திலே
எத்தனையோ சந்தோஷம் (2)

2. சத்தமாய் துதிப்போம் துதியால் மதிலை இடிப்போம்
எரிகோ தடைகளை நாம் தூள்தூளாய் தகர்ப்போம்

3. ஒரு வழியாய் வந்த சாத்தானின் கூட்டம்
ஏழு வழியாக பிடிக்குதைய்யா ஓட்டம் (2)

Tamil Hymns

863. என் சித்தமல்ல உம் சித்தம் நாதா

என் சித்தமல்ல உம் சித்தம் நாதா
என்னாலேயல்ல உம்மாலே ஆகும்

1. அடிமை நானே எஜமானன் நீரே நாதா
பெலவீனன் நானே பெலவான் நீரே நாதா

2. காலையில் தோன்றி மாலையில்
மறைபவன் நாதா-மலர் போல் பூத்து
நிழல் போல் மறைபவன் நாதா

3. களிமண் நானே குயவன் நீரே நாதா
மண்ணான மனிதன் நான்
மண்ணுக்கே திரும்புவேன் நாதா

4. பாதகன் என்மேல் பாசம் கொண்டீரே நாதா
பாரெல்லாம் உம் புகழ் பாடி மகிழ்வேன் நாதா

5. உம் திருஇரத்தத்தால் மீட்டுக்
கொண்டீரே நாதா-உம் செல்லப்
பிள்ளையாய் சொந்தமானேன் நாதா

864. என் சிறுமையை கண்ணோக்கி பார்த்தவர்

என் சிறுமையை கண்ணோக்கி பார்த்தவர் நீர்
என் எளிமையில் கைதூக்க வந்தவர் நீர்
துரத்தப்பட்ட என்னை மீண்டும் சேர்த்துக்கொண்டீர்
ஒதுக்கப்பட்ட என்னை பெரிய ஜாதியாய் மாற்றினீர்

பீர்லாகாய் ரோயீ
என்னை காண்கின்ற தேவன் நீர்
பீர்லாகாய் ரோயீ
எங்கள் ஜீவ நீரூற்று நீர்

1. வனாந்திரம் என் வாழ்வானதே
பாதைகள் எங்கும் இருளானதே
எந்தன் அழுகுரல் கேட்டு
நீரூற்றாய் வந்தவரே

2. புறஜாதி என்னை தேடி வந்தீர்
சுதந்திரவாளியாய் மாற்றிவிட்டீர்
வாக்குதத்தம் செய்தீர்
நீர் சொன்னதை நிறைவேற்றினீர்

Tamil Hymns

865. என் தகப்பன் நீர்தானையா

என் தகப்பன் நீர்தானையா
எல்லாமே பார்த்துக் கொள்வீர்
எப்போதும் எவ்வேளையும் -உம்
கிருபை என்னைத் தொடரும்

1. மாண்புமிக்கவர் நீர்தானே
மிகவும் பெரியவர் நீர்தானே

உம்மையே புகழ்வேன் -ஓய்வின்றி
உம்மைத்தான் பாடுவேன் - பெலத்தோடு
உயிருள்ள நாளெல்லாம் (2) - என் தகப்பன்

2. தாழ்ந்தோரை நீர் உயர்த்துகிறீர்
விழுந்தவரை நீர் தூக்குகிறீர் - உம்மையே

3. ஏற்ற வேளையில் அனைவருக்கும்
ஆகாரம் நீர் தருகின்றீர்

4. சகல உயிர்களின் விருப்பங்களை
திருப்தியாக்கி நீர் நடத்துகிறீர்

5. நோக்கிக் கூப்பிடும் யாவருக்கும்
தகப்பன் அருகில் இருக்கின்றீர்

6. அன்பு கூருகின்ற அனைவரையும்
காப்பாற்றும் தெய்வம் நீர்தானே

7. துதிக்குப் பாத்திரர் நீர் தானே
தூயவரும் நீர் தானே

8. இரக்கமும் கனிவும் உடையவரே
நீடிய சாந்தம் உமதன்றோ

Tamil Hymns

866. என் தாயின் கருவிலே நான் உருவான

1. என் தாயின் கருவிலே நான் உருவான
நாள் முதல் நாள்தோறும் காத்து வந்தீரே
என் நாசியாலே நான் சுவாசித்த நாள் முதல்
நாள்தோறும் காத்து வந்தீர்

நன்றி நன்றி பலி செலுத்தியே
நாதன் இயேசுவை பாடுவேன்
கோடி நன்றி பலி செலுத்தியே
ஜீவன் தந்தவரைப் பாடுவேன்

2. பாவியாக நான் வாழ்ந்து பாவம் செய்த
நாட்களிலும் நாள்தோறும் காத்து வந்தீரே
நான் உம்மைவிட்டு தூரம் சென்று
நாள்தோறும் காத்து வந்தீரே

3. நான் திக்கற்று துணையின்றி திகைத்திட்ட
நேரத்தில் துணையாய் தேடிவந்தீரே
நான் துக்கத்தால் மனம் நொந்து
மடிகின்ற நேரத்தில் உம் மகன்
என்னை தேடி வந்தீரே

4. நான் மனதார நேசித்த மனிதர்கள்
மறந்தாலும் மறவாத நேசர் நீர் ஐயா
என் சூழ்நிலைகள் மாறிட்டாலும்
மாறிடா உம் கிருபையாலே
நாள்தோறும் தாங்கினீரையா

Tamil Hymns

867. என் தெய்வம் இயேசு

என் தெய்வம் இயேசு
என்னோடு பேசுவார்
எனக்கு சந்தோஷமே
அல்லேலூயா

1. கனவின் வழியாய் பேசுவார்
கலக்கம் நீங்கப் பேசுவார்
காட்சி தந்து பேசுவார்
சாட்சியாக நிறுத்துவார்

2. வேதம் வழியாய் பேசுவார்
விளக்கம் அனைத்தும் போதிப்பார்
பாதம் அமர்ந்து தியானிப்பேன்
பரலோகத்தைத் தரிசிப்பேன்

868. என் தேடல் நீ என் தெய்வமே

என் தேடல் நீ, என் தெய்வமே
நீ இன்றி என் வாழ்வு நிறம் மாறுதே
உனை மனம் தேடுதே, நீ வழி காட்டுமே

இறைவா இறைவா வருவாய் இங்கே
இதயம் அருகில் அமர்வாய் இன்றே

1. ஒரு கோடி விண்மீன்கள் தினம் தோன்றினும்
நீ இன்றி என் வாழ்வு இருள் சூழ்ந்திடும்
பிறர் அன்பை என் பணியில் நான் ஏற்கையில்
உன் அன்பு உயிர் தந்து வாழ்வாகிடும்
இறை வார்த்தையில் நிறைவாகுவேன்
மறை வாழ்விலே நிலையாகுவேன்
வழிதேடும் எனை காக்க நீ வேண்டுமே

2. உன்னோடு நான் காணும் உறவானது
உள்ளத்தை உருமாற்றி உனதாக்கிடும்
பலியான உனை நானும் தினம் ஏற்கையில்
எளியோனில் உன் வாழ்வு ஒளியாகிடும்
உன் மீட்டலால் எனில் மாற்றங்கள்
உன் தேடலால் எனில் ஆற்றல்கள்
வழி தேடும் எனை காக்க நீ வேண்டுமே

Tamil Hymns

869. என் தேவன் என் பெலனே அவர்

என் தேவன் என் பெலனே அவர்;
கூறும் நல் வசனம் என் பாதையின்
வெளிச்சம் அவர்; நாமம் என் நினைவே
(என் தேவன் என் பெலனே.......)

தீங்கு நாளில் என்னை அவர்;
தம் கூடாரம் மறைவில் காத்திடுவார்; (2)
தகுந்த வேளை தம் கரத்தால் கன்மலை மேலாய் உயர்த்திடுவார்; (2)
(என் தேவன் என் பெலனே.......)

கர்த்தருக்காய் காத்திடுவாய்
அவரால் இதயம் ஸ்திரப்படுமே (2)
திட மனதோடு காத்திருந்து
அடைக்கலம் புகுவாய் என்றென்றுமே (2)

(என் தேவன் என் பெலனே.......)
கர்த்தர்; எனக்கு பெலனானவர்;

யாருக்கு இனி நான் பயப்படுவேன் (2)
ஜீவனுள்ள நாட்களெல்லாம் ஆலயத்தில் நான் தங்கிடுவேன் (2)
(என் தேவன் என் பெலனே.......)

Tamil Hymns

870. என் தேவன் என் வெளிச்சம்

என் தேவன் என் வெளிச்சம்
என்னை இரட்சிப்பவரும் அவரே
என் ஜீவனுக் கரணானவர்
நான் யாருக்கும் அஞ்சமாட்டேன்

1. தீமை செய்கின்றவர்கள் எனக்கு
தீமை செய்ய விரும்புகையில்
என் தேவன் அருகில் வந்து
என்னைக் காத்து நின்றார் என்னை
பகைத்தவர்கள் தேவனை அறிந்தாரே

2. தாயும் தந்தையும் தள்ளி விட்டாலும்
அன்பர் இயேசென்னை சேர்த்துக் கொள்வார்
என்னை அவர் நிழலில்
வைத்து காத்திடுவார் கன்மலை
மேலேற்றி என்னை உயர்த்திடுவார்

3. தீங்கு நாளில் அவர் என்னை மறைத்து
தம் கரத்தினால் தாங்கிடுவார்
தம் கூடார மறைவிலே ஒளித்து வைத்து
செவ்வையான பாதையில் நடத்திடுவார்

871. என் தேவனே என் இயேசுவே

என் தேவனே என் இயேசுவே
உம்மையே நேசிக்கிறேன்

1. அதிகாலமே தேடுகிறேன்
ஆர்வமுடன் நாடுகிறேன்

2. என் உள்ளமும் என் உடலும்
உமக்காகத்தான் ஏங்குதையா

3. துணையாளரே உம் சிறகின்
நிழலில் தானே களி கூறுவேன்

4. ஜீவனுள்ள நாட்களெல்லாம்
ஸ்தோத்தரிப்பேன் துதிபாடுவேன்

5. உலகம் எல்லாம் மாயையையா
உம் அன்புதான் மாறாதையா

6. படுக்கையிலும் நினைக்கின்றேன்
இராச் சாமத்தில் தியானிக்கின்றேன்

872. என் தேவனாகிய கர்த்தாவே

என் தேவனாகிய கர்த்தாவே உம்மையென்றென்றைக்கும்
துதிப்பேன் அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா (2)

கர்த்தாவே என் சத்துருக்கள் என்னை
மேற்கொண்டு மகிழ விடாதிரும் (2)

நீர்; என்னைக் கை தூக்கி எடுத்தபடியால்
நான் உம்மையென்றென்றும் போற்றுவேன் (2)

(என் தேவனாகிய கர்;த்தாவே……)
உம்மை நான் நோக்கி கூப்பிட

நீர்; என்னைக் குணமாக்கினீர்; (2)
பாதாளத்திலிருந்து என்னை ஏறப்பண்ணி
என்னை உயிருடன் காத்தீர்; (2)

(என் தேவனாகிய கர்த்தாவே……)
கர்த்தாவே உம்மைக் கூப்பிட்டேன்

கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன் (2)
என் புலம்பலை நீர்; களிப்பாக மாற்றி
களிப்பின் கட்டினால் கட்டினீர்; (2)
(என் தேவனாகிய கர்த்தாவே…….)

873. என் தேவா உம்மை பாடுவேன் இனி

என் தேவா உம்மை பாடுவேன் இனி
என்றென்றும் ஸ்தோத்தரிப்பேன்
என்னுயிரே எந்தன் இயேசுவே முழு
மனதால் ஸ்தோத்தரிப்பேன்

எனது வலதுப்பக்கம் நீரே
அசைக்கப்படுவதில்லை நானே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

1. செய்த நன்மைகள் உலகம் கொள்ளாதே
எந்தன் வாழ்வினிலே
நினைத்து நினைத்து நன்றி
சொல்லத்தானே ஆயுள் போதாதே
மலர் போல் உதிர்கின்ற வாழ்வை
நன்றி சொல்லி கழித்திடுவேன்

2. உண்மையாய் உம்மை கூப்பிடும் போது
நெருங்கி அருகில் வந்தீர்
உருகி உருகி ஜெபித்திடும் போது
உன்னத பெலன் அளித்தீர்
உலகத்தையே நான் மறந்து
உம்மையே நினைத்திடுவேன்

3. எந்த பக்கமும் நெருக்கப்பட்டும் நான்
ஒடுங்கிப் போகவில்லை
துன்பத்திலே நான் அமிழ்ந்திட்ட போதும்
கைவிடப்படவுமில்லை
இயேசுவே என் பக்கபலமே
இயேசுவே என் துணையே

Tamil Hymns

874. என் தேவைகளை நீர் பார்த்துக் கொள்வீர்

என் தேவைகளை நீர் பார்த்துக் கொள்வீர்
அழைத்தவர் நீரல்லவோ
கலங்கிட மாட்டேன் பயந்திட மாட்டேன்
குழப்பங்கள் தேவையில்லை

குழப்பங்கள் தேவையில்லை
மனபாரங்கள் தேவையில்லை
என் தேவை எல்லாம் ஒன்றே
உந்தன் பாதத்தை
அனுதினம் நாடிடுவேன்

1. துவக்கத்தை கொடுத்தது
நீர் என்று சொன்னால்
முடிவதை கொடுப்பது
உம்மால் தான் ஆகும்
கஷ்டங்கள் சூழ்ந்து கொண்டு
குழப்பங்கள் வந்தாலும்
முடிவதை கொடுப்பது
உம்மால் தான் ஆகும்

2. கலக்கங்கள் நெருக்கங்கள்
அலை போல வந்தாலும்
புது வழி திறந்து நீர் நடத்திடுவீரே
வாக்குகள் நிறைவேற
தாமதங்கள்ஆனாலும்
தரமான நன்மைகளை அனுப்பிடுவாரே

875. என் நம்பிக்கையே உமக்கு

என் நம்பிக்கையே உமக்கு ஸ்தோத்திரம்
என் புகலிடமே உமக்கு ஸ்தோத்திரம்
உம்மைத்தான் நான் நம்பியிருக்கிறேன்
அற்புதங்கள் எனக்கு செய்யுங்கப்பா

1. நூற்றுக்கு நூறு உம்மை நம்புவேன்
அற்புதம் செய்திடுங்க அதிசயம் நடத்திடுங்க
மனிதர்கள் முன்பாக தலைகுனிந்து போகாமல்
உதவி செய்திடுங்க உயர்த்தி வெச்சிடுங்க

2. ஆராய்ந்து முடியாத அதிசங்கள் செய்பவரே
அற்புதம் செய்திடுங்க அதிசயம் நடத்திடுங்க
இரட்டிப்பான நன்மைகளை தருவேன்னு
சொன்னீரே இன்றைக்கே
தந்திடுங்க இப்பவே தந்திடுங்க

3. உம்மையல்லாமல் யார் என்னை
உயர்த்தக் கூடும் அற்புதம்
செய்திடுங்க அதிசயம் நடத்திடுங்க
ஐசுவரியம் கனமுமே உம்மாலே தான்
வருகிறது ஆளுகை செய்யுங்கப்பா
மேன்மை படுத்துங்கப்பா

876. என் நெஞ்சமே நீ மோட்சத்தை

1. என் நெஞ்சமே நீ மோட்சத்தை
விரும்பித் தேடி கர்த்தரை
வணக்கத்துடனே
துதித்துப் பாடி என்றைக்கும்
புகழ்ந்து போற்று நித்தமும்
மகிழ்ச்சியாகவே.

2. நட்சத்திரங்கள், சந்திரன்,
வெம் காந்தி வீசும் சூரியன்,
ஆகாச சேனைகள்,
மின் மேகம் காற்று மாரியே,
வானங்களின் வானங்களே,
ஒன்றாகப் பாடுங்கள்.

3. விஸ்தாரமான பூமியே,
நீயும் எழுந்து வாழ்த்தல் செய்,
யெகோவா நல்லவர்
சராசரங்கள் அனைத்தும்
அவர் சொற்படி நடக்கும்
அவரே ஆண்டவர்.

4. பரத்திலுள்ள சேனையே
புவியிலுள்ள மாந்தரே
வணங்க வாருங்கள்
யெகோவாதாம் தயாபரர்
எல்லாவற்றிற்கும் காரணர்
அவரைப் போற்றுங்கள்.

877. என் நெஞ்சம் நொந்து காயத்தால்

1. என் நெஞ்சம் நொந்து காயத்தால்
அவஸ்தைப்படவே,
குத்துண்ட மீட்பர் கரத்தால்
அக்காயம் ஆறுமே.

2. தீராத துக்கம் மிஞ்சியே
நான் கண்ணீர் விடினும்
நோவுற்ற இயேசு நெஞ்சமே
மெய் ஆறுதல் தரும்.

3. என் மனஸ்தாபத் தபசால்
நீங்காத கறையும்
வடிந்த இயேசு ரத்தத்தால்
நிவிர்த்தியாகிடும்.

4. என் மீட்பர் கரத்தால் சுகம்,
செந்நீரால் தூய்மையாம்
என் இன்பதுன்பம் அந்நெஞ்சம்
அன்பாய் உணருமாம்.

5. அக்கரம் நீட்டும், இயேசுவே
அவ்வூற்றைத் திறவும்;
குத்துண்ட உந்தன் பக்கமே
என்றன் அடைக்கலம்.

878. என் நேசர் என்னுடையவர்

என் நேசர் என்னுடையவர்
நான் என்றென்றும் அவருடையவன்
சாரோனின் ரோஜா பள்ளத்தாக்கின் லீலி
என்னையும் கவர்ந்து கொண்டவரே
தம் நேசத்தால் - என்னையும் (2)
கவர்ந்து கொண்டவரே

1. அவர் வாயின் முத்தங்களால்
என்னை அனுதினமும் முத்திமிடுகிறார்

2. திராட்சை ரசத்திலும் உங்க நேசமே
அது இன்பமும் மதுரமானது

3. அவர் முற்றிலும் அழகுள்ளவர்
இவரே என் சிநேகிதர்

4. விருந்துசாலைக்குள்ளே என்னை
அழைத்து செல்கிறார்
என்மேல் பறந்த கொடி நேசமே

Tamil Hymns

879. என் நேசர் நீர்தானையா

என் நேசர் நீர்தானையா
நேசிக்கின்றேன் உம்மைத்தானையா

1. எனது ஆன்மா உம்மை நினைத்து
எந்நாளும் ஏங்குதையா - 2
எந்தன் படுக்கையிலும்
உம்மை நினைக்கின்றேன்
நடு இராவிலும் தியானிக்கின்றேன் -2

2. உமது இரத்தத்தால் என்னை மீட்டீர்
நன்றி இயேசையா
உந்தன் அன்பாலே
எந்தன் உள்ளம் கவர்ந்தீர்
இனி நானல்ல எல்லாம் நீரே

3. துன்பமோ துயரோ வேதனையோ
உம்மைவிட்டு பிரிப்பதில்லை
உயிர் உள்ள வரை
உம்மைத்தான் நேசிப்பேன்
வேறெதற்கும் நான் அடிமைப்படேன்

880. என் நேசர் வெள்ளைப் போளச் செண்டு

என் நேசர் வெள்ளைப் போளச் செண்டு
என் அன்பர் மரிக்கொழுந்து பூங்கொத்து
நான் அவர்க்குள் மலர்ந்து
மணக்கும் ரோஜாவே
பள்ளத்தாக்கின் லீலி புஷ்பமே (2)

அருமையானவர் எந்தன் நேசர்
இன்பமானவர் ஆத்ம நேசர் -2
மதுரமானவர் எந்தன் நேசர்
பிரியமானவர் மதுரமானவர் -2

1. காட்டு மரங்களுக்குள்ளே
கிச்சிலி மரம் போல் ஆனவர் இவர்
கன்மலைக் குன்றின் வெடிப்பிலே
ஓடிவரும் மானுக்கு சமானமாவார்

2. வெண்மையும் சிவப்புமானவர்
புறாவின் கண்கள் கொண்டவர் அவர்
கேதுரு மரம்போல் ஆனவர்
பதினாயிரம் பேரில் சிறந்தவராவார்

881. என் நேசருக்குப் புதுப்பாடல் பாடுவேன்

என் (எபி) நேசருக்குப் புதுப்பாடல் பாடுவேன்
பாசத்தோடு தினம் தினம் பாடுவேன்

1. கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கின்றீர்
குறை ஒன்றும் எனக்கு இல்லையே

ஆனந்தமே எந்நாளுமே
அப்பா உம் சமூகத்திலே

2. புல்உள்ள இடங்களில் மேய்க்கின்றீர்
அமர்ந்த தண்ணீரண்டை சேர்க்கின்றீர்

3. புது உயிர் தினமும் தருகின்றீர்
ஆன்மாவைத் தேற்றி மகிழ்கின்றீர்

4. இருள்சூழ் பள்ளத்தாக்கில் நடந்தாலும்
பொல்லாப்புக்கு நான் பயப்படேன்

5. நன்மையும் கிருபையும் தொடருமே
உயிரோடு வாழும் நாளெல்லாம்

6. நிலைத்திருப்பேன் உம் இல்லத்தில்
நித்திய நித்திய காலமாய்

7. என்னோடுகூட இருக்கின்றீர் உம்
கோலும் தடியும் தேற்றுமே

8. எதிரிகள் கண்முன் விருந்தொன்று
ஏற்பாடு செய்கின்றீர் எனக்காய்

9. எண்ணெயால் அபிஷேகம் செய்கின்றீர்
பாத்திரம் நிரம்பி வழிகின்றது

Tamil Hymns

882. என் நேசரேசுவை நான் என்றும் பாடுவேன்

என் நேசரேசுவை நான் என்றும் பாடுவேன்
என் ஆத்துமாவை நித்தம் நேசிக்கின்றவர்
என் நேசர் லீலியிலும் வெண்மையானவர்
என் வாழ்வில் நறுமணமீந்தவர்

1. பெலனற்றுப் போகையில் என் பெலனவரே
இன்ப துன்ப நேரத்தில் என் நண்பரவரே
பொற்றள வீதியில் பாடி மகிழ
என் நேசரேசு மீட்டுக் கொள்வாரே

2. கடும் புயல் சீறிடும் அலைகள் மோதிடும்
கண்ணுக்கெட்டா கரைதனில் உள்ளம் நாடிடும்
பொற்கரம் நீட்டி என் கரம் கொடுப்பேன்
என் நேசரேசு மீட்டுக் கொள்வாரே

3. எட்டியாய் கசந்திட்ட என் வாழ்வு இனித்திட
எத்தனாய் அலைந்திடாது நித்தம் பின் செல்ல
ஏந்திட்டார் பொற்கரத்தில் ஆவலாய் என்னை
எந்நாளும் இன்ப துதிகள் பாடவே

Tamil Hymns

883. என் பரலோக ராஜாவிற்கு முன்பாக

என் பரலோக ராஜாவிற்கு முன்பாக
நான் ஒன்றுமில்லை
என்னை படைத்த என் தெய்வத்திற்கு
முன்பாக நான் ஒன்றுமில்லை

என்னை உருவாக்கின தெய்வமும்
இயேசு தான்- என்னை வாழ வைத்த
தெய்வமும் இயேசு தான்

என்னை இயக்குகின்ற தெய்வமும்
இயேசு தான் - என்னை நடத்துகின்ற
தெய்வமும் இயேசு தான்

என்னை தேடி வந்த தெய்வமும்
இயேசு தான்- என்னை உயர்த்தி
வைத்த தெய்வமும் இயேசு தான்

என்னை அபிஷேகித்த தெய்வமும்
இயேசு தான்- என்னை ஆசீர்வதித்த
தெய்வமும் இயேசு தான்

884. என் பாவங்கள் என் இயேசு

என் பாவங்கள் என் இயேசு மன்னித்து விட்டார்
தன் மகனாய் என் இயேசு ஏற்றுக் கொண்டார்

1. இனி நான் பாவியல்ல
பரிசுத்தமாகிவிட்டேன்
நேசரின் பின் செல்வேன் – நான்
திரும்பி பார்க்க மாட்டேன்

2. ஆழ்கடலில் எறிந்துவிட்டார்
காலாலே மிதித்து விட்டார்
நினைவுகூர மாட்டார் – என்
நேசரைத் துதிக்கின்றேன் – இனி

3. கிறிஸ்துவுக்குள் வாழ்கின்றேன்
மறுபடி பிறந்துவிட்டேன்
பழையன கழிந்தனவே – நான்
புதியன படைப்பானேன்

885. என் பாத்திரம் நிரம்பி நிரம்பி வழிகின்றது

என் பாத்திரம் நிரம்பி நிரம்பி வழிகின்றது
வழிந்து ஓடுகின்றது

எனக்குள்ளே ஜீவஊற்று
அது வற்றாது ஒரு நாளும்

1. அபிஷேகன் நதி நானே
அகிலமெங்கும் பரவிடுவேன்
ஏராளமான மீன்கள் திரளான உயிரினங்கள்
நதி பாயும் இடமெல்லாம் நான் போகும்
இடமெல்லாம்-எனக்கு

2. ஆனந்த தைலம் நானே
புலம்பலுக்கு எதிரானேன்
துதிஉடை போர்த்திடுவேன் சாம்பல் நீக்கிடுவேன்
அலங்காரமாக்கிடுவேன் -சபையை

3. கனி கொடுக்கும் மரம் நானே
நாள்தோறும் கனி கொடுப்பேன்
இலைகள் உதிர்வதில்லை கனிகள் கெடுவதில்லை-என்
விருந்தும் மருந்தும் நானே - சபைக்கு

4. முழங்கிடுவேன் தினம் சுவிசேஷம்
ஒடுக்கப்பட்ட இந்த உலகத்திற்கு
காயங்கள் ஆற்றிடுவேன் கட்டுக்கள் அவிழ்த்திடுவேன்
விடுதலை பறைசாற்றுவேன்

5. அயல்மொழிகள் தினம் பேசிடுவேன்
இறைவாக்கு உரைத்திடுவேன்
சாத்தானை துரத்திடுவேன் கரம் நீட்டி சுகம் கூறுவேன்
அதிசயம் தினம் காண்பேன்

886. என் பாவம் தீர்ந்த நாளையே

1. என் பாவம் தீர்ந்த நாளையே
அன்போடு எண்ணி ஜீவிப்பேன்
அந்நாளில் பெற்ற ஈவையே
சந்தோஷமாய்க் கொண்டாடுவேன்

இன்ப நாள் இன்ப நாள்
என் பாவம் தீர்ந்து போன நாள்
பேரன்பர் என்னை ரட்சித்தார்
சீராக்கி இன்பம் நல்கினார்
இன்ப நாள் இன்ப நாள்
என் பாவம் தீர்ந்து போன நாள்

2. இம்மானுவேல் இப்பாவியைத்
தம் சொந்தமாக்கிக் கொண்டனர்
சந்தேகம் நீக்கி மன்னிப்பைத்
தந்தென்னை அன்பாய் சேர்த்தனர்

3. என் உள்ளமே உன் மீட்பரை
என்றைக்கும் சார்ந்து வாழுவாய்
ஆருயிர் தந்த நாதரை
ஓர்காலும் விட்டு நீங்கிடாய்

4. ஆட்கொண்ட நாதா! எந்தனை
நாடோறும் தத்தம் செய்குவேன்
பின் மோட்ச வீட்டில் பேரன்பை
இன்னோசையாலே பாடுவேன்

887. என் பெலன் இயேசுவுக்கே

என் பெலன் இயேசுவுக்கே
ஆமேன் அல்லேலூயா (4)
ஆமேன் அல்லேலூயா (4)
என் பெலன் இயேசுவுக்கே
என் மனம் இயேசுவுக்கே
என் பணம் இயேசுவுக்கே
இயேசு எனக்காக
ஆமேன் அல்லேலூயா (4)

Tamil Hymns

888. என் பெலனாகிய கர்த்தாவே

என் பெலனாகிய கர்த்தாவே
உம்மை நான் நேசிக்கிறேன்
எந்தன் நெருக்கத்திலே என் சத்தமதை
நீர் கேட்டுப் பதிலளித்தீர்

1. என் கன்மலையும் என் கோட்டையும்
என் இரட்சகரும் என் தேவனும் நீர்
நான் நம்பிடும் என் துருகமே
எந்தன் இரட்சண்ய கொம்பும் நீரே

2. சிறுமைப்படும் மனிதனே கலங்கிடாதே
சீக்கிரம் நம் இயேசு வந்திடுவார்
மேட்டிமை மனிதர்க்கு நீ பயந்திடாதே
மேசியா என்றும் துணையானதால்

3. இரட்சிப்பின் கேடகம் எனக்குத் தந்தீர்
நீதி என்னும் சால்வையை உடுத்துவித்தீர்
கர்த்தர் பெலத்தால் மதிலைத் தாண்டிடுவேன்
அவர் வலக்கரம் என்னைத் தாங்கிடுமே

Tamil Hymns

889. என் பெலனாகிய கர்த்தாவே நான்

என் பெலனாகிய கர்த்தாவே
நான் உம்மையே நம்பியுள்ளேன்
நான் கைவிடப்படுவதில்லை

என் கால்கள் சறுக்கும் போதெல்லாம்
தாங்குதையா உம் கிருபை - நான்
அழுது புலம்பும் நேரமெல்லாம்
அணைக்குதையா உம் கிருபை என்னை

நான் மரண இருளில் நடந்தாலும்
பொல்லாப்புக்கு பயப்படேன் நான்
உங்க கோலும் தடியும் தேற்றுதையா
அனுதினம் வெற்றி பாதை காட்டுதையா

உம்மாலே ஒரு சேனைக்குள்ளே
பாய்ந்து நானும் சென்றிடுவேன்
உம்மாலே ஒரு மதிலின் மேல்
தாண்டி நானும் சென்றிடுவேன்

Tamil Hymns

890. என் மீட்பர் ரத்தம் சிந்தினார்

1. என் மீட்பர் ரத்தம் சிந்தினார்
மா நீதியும் சம்பாதித்தார்
என் சொந்த நீதி வெறுத்தேன்
இயேசுவின் நாமம் நம்புவேன்

நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்
வேறஸ்திபாரம் மணல் தான்

2. கார் மேகம் அவர் முகத்தை
மறைக்கும் காலம் அவரை
எப்போதும்போல நம்புவேன்
மாறாதவர் என்றறிவேன்

3. மரண வெள்ளம் பொங்கினும்
என் மாம்சம் சோர்ந்து போயினும்
உன் வாக்குத்தத்தம் ஆணையும்
என் நெஞ்சை ஆற்றித் தேற்றிடும

4. நியாயத்தீர்ப்புக் காலத்தில்
எக்காள சத்தம் கேட்கையில்
அஞ்சேன் என் மீட்பர் நீதியே
அநீதன் என்னை மூடுமே

891. என் மீட்பர் இரத்தம் சிந்தினார்

என் மீட்பர் இரத்தம் சிந்தினார்
நான் பரிசுத்தனானேன்
அவர் எனக்காய் மரிந்தெழுந்தார்
நான் மறுரூபமானேன்

அவர் பாதை ஜீவஒளியாம்
என் இதயம் தேடுதே
அவர் வார்த்தை ஜீவ ஊற்றாம்
என் இதயம் நாடுதே

அவர் எனக்காய் உயிர்கொடுத்தார்
என் உள்ளம் போற்றுதே
அவர் என்னோடென்றும் இருப்பார்
என் உள்ளம் வாழ்த்துதே

892. என் மீட்பரே என் இரட்சகா

என் மீட்பரே என் இரட்சகா
என் தேவனேஎன் கேடகம்
நான் நம்பினஎன் கோட்டையும்…
என் துருகமும் நீரே

1. துதிகளின் பாத்திரனே
திருசித்தம் போல் நடத்தி
துர் ஜன ப்ரவாகத்தில்
தேற்றினீர் போற்றுவேனே
சதிமோச நாசங்களில்
சத்ருவின் பயங்களிலும்
சார்ந்தும்மை நான் ஜீவிப்பேனே
சரணம் சரணம் மேசியாவே

2. தினம் தினம் உம் அருளால்
தீமைகள் வெல்லுவேன் நான்
கனம் மகிமை யாவும் உமக்கே செலுத்துவேனே
உம்மாலே ஒருவனாக சேனைக்குள் பாய்ந்திடுவேன் -2
வாழ் நாளெல்லாம் நீர் என் தஞ்சம்
வழி நடத்தும் மேசியாவே

Tamil Hymns

893. என் மீட்பர் உயிரோடிருக்கையிலே

என் மீட்பர் உயிரோடிருக்கையிலே - எனக்
கென்ன குறைவுண்டு நீ சொல், மனமே

1. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்,
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்;
விண்ணுல குயர்ந்தோர், உன்னதஞ்சிறந்தோர்,
மித்திரனே சுகபத்திர மருளும்

2. பாபமோ மரணமோ நரகமோ பேயோ
பயந்து நடுங்கிட ஜெயஞ் சிறந்தோர்
சாபமே தீர்த்தோர் சற்குருநாதன்
சஞ்சலமினியேன் நெஞ்சமே மகிழாய்

3. ஆசி செய்திடுவார் அருள்மிக அளிப்பார்
அம்பரந் தனிலெனக்காய் ஜெபிப்பார்
மோசமே மறைப்பார் முன்னமே நடப்பார்
மோட்சவழி சத்யம் வாசல் உயிரெனும்

4. கவலைகள் தீர்ப்பார் கண்ணீர் துடைப்பார்
கடைசிமட்டுங் கைவிடா திருப்பார்
பவமனிப்பளிப்பார் பாக்கியங் கொடுப்பார்
பரம பதவியினுள் என்றனை எடுப்பார்

5. போனது போகட்டும், புவிவசை பேசட்டும்,
பொல்லான் அம்புக ளெய்திடட்டும்,
ஆனது ஆகட்டும், அருள்மழை பெய்திடும்,
அன்புமிகும் பேரின்ப மெனக்கருள்

Tamil Hymns

894. என் மீட்பர் உயிரோடுண்டு

என் மீட்பர் உயிரோடுண்டு
உயிரோடுண்டு உயிரோடுண்டு
உயிரோடுண்டு இயேசு உயிரோடுண்டு

ஹா...லேலூயா ஹாலேலூயா (4)

1. ஆறுகளை நான் கடந்திடுவேன்
அக்கினியில் நான் நடந்திடுவேன்
சிங்க கெபியில் போட்டாலும்
சேதமில்லாமல் காத்திடுவார்

2. துன்பத்தின் பாதையில் நடந்தாலும்
அவர் வசனத்தால் உயிரடைவேன்
நன்மையும் கிருபையும்
என்னை தொடரும்-என்
ஜீவனுள்ள நாளெல்லாம்

3. வெள்ளம் போல சாத்தானும்
நம் எதிரே வந்தாலும்
ஆவியானவர் கொடி பிடித்து
யுத்தங்களை செய்திடுவார்

Tamil Hymns

895. என் மீட்பர் என் நேசர் சந்நிதியில்

என் மீட்பர் என் நேசர் சந்நிதியில்
எப்போது நான் நிற்கப் போகிறேன்
ஏங்குகிறேன் உம்மைக் காண
எப்போது உம் முகம் காண்பேன்

தாகமாய் இருக்கிறேன்
அதிகமாய்த் துதிக்கிறேன் -நான்

1. மானானது நீரோடையை
தேடி தவிப்பது போல்
என் நெஞ்சம் உம்மைக்காண
ஏங்கித் தவிக்கிறது - தாகமாய்

2. பகற்காலத்தில் உம் பேரன்பை
கட்டளையிடுகிறீர்
இராக்காலத்தில் உம் திருப்பாடல்
என் நாவில் ஒலிக்கிறது

3. ஆத்துமாவே நீ கலங்குவதேன்
நம்பிக்கை இழப்பதேன் -என்
கர்த்தரையே நீ நம்பியிரு
அவர் செயல்களை நினைத்துத் துதி
ஜீவனுள்ள தேவன்
அவர் சீக்கிரம் வருகிறார்

896. என் மீட்பர் கிறிஸ்து பிறந்தார்

என் மீட்பர் கிறிஸ்து பிறந்தார்
எனக்கென்ன ஆனந்தம்
என் மீட்பர் இயேசு உதித்தார்
எனக்கென்ன பேரின்பம்

1. பூலோகமெங்கும் ஓர் செய்தி
மேலோகமெங்கும் விண் ஜோதி
நரர் வாழ்ந்திடவே பெரும் நீதி
நீர் வாரும் மெய் ஜோதி - என்

2. உந்தன் மகிமையை என்றென்றும்
சொல்வேன் உந்தன் கிருபையின்
மேன்மையைக் கண்டேன்
நித்திய ஜீவ கிரீடம் எனதின்றே
பரலோக வாழ்வின்றே - என்

3. ஆ! அல்லேலூயா துதி பாடு
இன்று அமலன் பிறந்தார் பாரு
மோட்ச வாசலை திறந்தார் பாரு
எந் நாளும் புகழ் பாடு

Tamil Hymns

897. என் மீட்பர் சென்ற பாதையில்

என் மீட்பர் சென்ற பாதையில்
நீ செல்ல ஆயத்தமா
கொல்கதா மலை வாதையில்
பங்கைப் பெறுவாயா

சிலுவையை நான் விடேன் (5)
சிலுவையை (2) நான் விடேன்

2. ஊரார் இனத்தார் மத்தியில்
துன்பம் சகிப்பாயா
மூர்க்கர் கோபிகள் நடுவில்
திடனாய் நிற்பாயா

3. தாகத்தாலும் பசியாலும்
தோய்ந்தாலும் நிற்பாயா
அவமானங்கள் வந்தாலும்
சிலுவை சுமப்பாயா

4. பாவாத்மாக்கள் குணப்பட
நீ தத்தம் செய்வாயா
கோழை நெஞ்சர் திடப்பட
மெய்யுத்தஞ் செய்வாயா

5. லோகத்தார் மாண்டு போகிறார்
மெய் வீரர் இல்லாமல்
பார் மீட்பர் ஜீவனை விட்டார்
தொங்கிச் சிலுவையில்

6. வாழ் நாளெல்லாம் நிலை நின்று
சிலுவையை சுமப்பேன்
தேவ அருளினால் வென்று
மேல் வீட்டைச் சேருவேன்

Tamil Hymns

898. என் முடிவுக்கு விடிவு நீரே

என் முடிவுக்கு விடிவு நீரே
என் வாழ்வுக்கு உதயம் நீரே
என்னையா தெரிந்துக்கொண்டீர் - 2
என்னையா அழைத்து விட்டீர் - 2

தகுதி இல்லாத என்னை தகுதியாய் மாற்றி
கன்மலையில் நிறுத்தினீரே - 2

1. பூமியிலே நான் பரதேசி
ஆனால் உமக்கோ இப்பொழுது விசுவாசி

2. புல்லைப்போல் உலர்ந்திடும் என் வாழ்க்கை
ஆனால் உம்மிடத்தில் எனக்கோர் இடம்தந்தீர்

3. குயவன் கையில் களிமண் போல்
தேவனே என்னை வனைகின்றீர்

4. சோதித்தப்பின் சுத்த பொன்னாக
இந்த மண்ணிலே என்னை வீளங்கச்செய்தீர்

Tamil Hymns

899. என் முன்னே மேய்ப்பர் போகிறார்

1. என் முன்னே மேய்ப்பர் போகிறார்
நல்மேய்ப்பராகக் காக்கிறார்
ஓர்காலும் என்னைக் கைவிடார்
நேர் பாத காட்டிப் போகிறார்

முன் செல்கின்றார் முன் செல்கின்றார்
என் முன்னே சென்று போகிறார்
நல் மேய்ப்பர் சத்தம் அறிவேன்
அன்போடு பின்சென்றேகுவேன்

2. கார் மேகம் வந்து மூடினும்
சீர் ஜோதி தோன்றி வீசினும்
என் வாழ்வு தாழ்வில் நீங்கிடார்
என்றைக்கும் முன்னே போகிறார்

3. மெய்ப் பாதைகாட்டி பின் செல்வேன்
தெய்வீக கையால் தாங்குமேன்
எவ்விக்கினம் வந்தாலும் நீர்
இவ்வேழைமுன்னே போகிறீர்

4. ஒப்பற்ற உம் காருணியத்தால்
இப்பூமி பாடு தீருங்கால்
நீர் சாவை வெல்லச் செய்குவீர்
பேரின்பம் காட்டி முன்செல்வீர்

900. என் மேய்ப்பர் நீர்தானையா

என் மேய்ப்பர் நீர்தானையா
எனக்கென்றும் குறைவேயில்லை

நான் ஏன் கலங்கணும்
என் ஆயன் இருக்கையிலே

1. நீதியின் பாதையில் நடத்திச் செல்கின்றீர்
உம் மகிமை விளங்கும்படி

2. ஆத்துமா தேற்றுகின்றீர் ஆவி பொழிகின்றீர்
புது உயிர் தருகின்றீர்

3. எதிரிகள் கண்முன்னே வெற்றி தருகின்றீர்
விருந்து படைக்கின்றீர்

4. நிச்சயமாகவே வாழ்நாள் முழுவதும்
உம் கிருபை பின் தொடரும்

5. இருள்சூழ் பள்ளத்தாக்கில் நடக்க நேர்ந்தாலும்
பயமில்லையே பயமில்லையே
வசனமும் ஆவியும் தினமும் தேற்றுதையா

6. தலையை எண்ணையால் அபிஷேகம் செய்கின்றீர்
பாத்திரம் நிரம்பி வழிகின்றது

Tamil Hymns

901. என் மேய்ப்பராய் இயேசு இருக்கின்ற

என் மேய்ப்பராய் இயேசு இருக்கின்ற போது
என் வாழ்வினிலே குறைகள் என்பது ஏது

1. என்னை அவர் பசும்புல் பூமியிலே
எந்நேரமும் நடத்திடும் போதினிலே
என்றும் இன்பம் ஆஹா என்றும் இன்பம் ஆஹா
என்றென்றும் இன்பமல்லவா

2. என்னோடவர் நடந்திடும் போதினிலே
அங்கே இருள் சூழ்ந்திடும் பாதையிலே
எங்கும் ஒளி ஆஹா எங்கும் ஒளி ஆஹா
எங்கெங்கும் ஒளியல்லவோ

3. என்னையவர் அன்பால் நிரப்பியதால்
எல்லோருக்கும் நண்பனாய் ஆகியதால்
என் உள்ளமே ஆஹா என் தேவனை ஆஹா
எந்நாளும் புகழ்ந்திடுமே

Tamil Hymns

902. என் மேய்ப்பரே இயேசையா

என் மேய்ப்பரே இயேசையா
என்னோடு இருப்பவரே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் - 2

1. பசும்புல் மேய்ச்சலிலே
இளைப்பாறச் செய்கின்றீர்

2. அமர்ந்த தண்ணீரண்டை
அநுதினம் நடத்துகிறீர்

3. ஆத்துமா தேற்றுகிறீர்
அபிஷேகம் செய்கின்றீர்

4. கோலும் கைத்தடியும்
தினமும் தேற்றிடுமே

5. நீதியின் பாதையிலே
நித்தமும் நடத்துகிறீர்

6. இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில்
நடந்தாலும் பயமில்லையே

7. ஜீவனுள்ள நாட்களெல்லாம்
கிருபை என்னைத் தொடரும்

Tamil Hymns

903. என் வாழ்வில் இயேசுவே

என் வாழ்வில் இயேசுவே எந்நாளும் இங்கே
எல்லாமும் நீயாக வேண்டும்
எந்தன் எல்லாமும் நீயாக வேண்டும்

சோகங்கள் ஆறாமல் நான் வாடும் போது
தாயாக நீ மாற வேண்டும்
அன்புத் தாயாக நீ மாற வேண்டும்

1. பாரங்கள் தாங்காமல் சாய்கின்ற போது
பாதங்கள் நீயாக வேண்டும் - எந்தன்
பாவங்கள் கடலாகி நான் மூழ்கும் போது
ஓடங்கள் நீயாக வேண்டும் - வரும் --- என்

2. போராட்டம் சூழ்ந்தென்னை தீவாக்கும்போது
பாலங்கள் நீயாக வேண்டும் - இணை
தீராத ஆர்வத்தில் நான் தேடிப் பயிலும்
பாடங்கள் நீயாக வேண்டும் - மறை --- என்

3. காலங்கள் எல்லாமும் என் நெஞ்ச வீட்டில்
தீபங்கள் நீயாக வேண்டும் - சுடர்
தாகங்கள் தீராமல் நான் ஏங்கும் போது
மேகங்கள் நீயாக வேண்டும் - மழை --- என்

904. என் வாழ்க்கையெல்லாம் உம்

என் வாழ்க்கையெல்லாம்
உம் பிரசன்னத்திலே
எந்நாளும் கடந்திட வேண்டும் - 2
உந்தன் பிரசன்னம் எத்தனை இன்பம்
உந்தன் சமூகம் எத்தனை இன்பம் - 2

1. என்னை விட்டு எடுபடாத நல்ல பங்கு நீர்-2
எந்நாளும் எதற்காகவும் இழந்திடமாட்டேன்

உம்மை - 2 என் வாழ்க்கை

2. உலகம் என்னை திருப்திபடுத்த முடியாதைய்யா
எந்தன் ஊற்று உம்மிடத்தில் உள்ளதே ஐயா

3. இரவும் பகலும் உமது சமூகம் விழுந்து கிடக்கணும்
இடைவிடாமல் உம்மோடு என் தொடர்பு இருக்கணும்

4. சிறையினிலே யோசேப்போடு இருந்த தெய்வமே
சிறுமையிலும் வறுமையிலும் எங்கள் மகிமையே

5. வேறிடத்தில் ஆயிரம் நாள் வாழ்வதை விட
உம்மிடத்தில் நான் வாழும் நாட்கள் இன்பமே

Tamil Hymns

905. என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம்

என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம்
உம்மோடு இருப்பதுதான் - 2
இரவும் பகலும்
உம்மோடுதான் இருப்பேன்
என்ன நேர்ந்தாலும்
உம்மோடுதான் இருப்பேன்
எப்போதுமே நான் உம்மோடுதான் இருப்பேன்
அல்லேலூயா அல்லேலூயா (2)

1. என் வாழ்வின் முழு
ஏக்கமெல்லாம் - உம்
புகழ் பாடி மகிழ்வதுதான் - 2
இரவும் பகலும் புகழ்பாடி
மகிழ்ந்திருப்பேன்
என்ன நேர்ந்தாலும்
புகழ்பாடி மகிழ்ந்திருப்பேன்
எப்போதுமே புகழ்பாடி
மகிழ்ந்திருப்பேன்

2. என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம்
உம்மை நேசித்து வாழ்வது தான் -2
இரவும் பகலும் உம்மைத்தான்
நான் நேசிப்பேன்
என்ன நேர்ந்தாலும்
புகழ்பாடி மகிழ்ந்திருப்பேன்
எப்போதுமே புகழ்பாடி
மகிழ்ந்திருப்பேன்

3. என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம்
உம் சித்தம் செய்வதுதான்-2
இரவும் பகலும் உம்சித்தம் செய்திடுவேன்
என்ன நேர்ந்தாலும் உம்
சித்தம் செய்திடுவேன்
எப்போதுமே உம்சித்தம் செய்திடுவேன்

Tamil Hymns

906. என் வாழ்வினை மாற்றிடும்

1. என் வாழ்வினை மாற்றிடும்
புதியதாய் படைத்திடும்
என் வாழ்வினை மாற்றிடும்

2.என் வாழ்வினை வனைந்திடும்
மகிமையாய் வனைந்திடும்
என் வாழ்வினை வனைந்திடும்

3.என் வாழ்வினை உயர்த்திடும்
மேன்மையாய் உயர்த்திடும்
என் வாழ்வினை உயர்த்திடும்

4. என் சாயலை மாற்றிடும்
ஏசுவைப் போலாக்கிடும்
என் சாயலை மாற்றிடும்

907. என் யேசுவே

1. என் யேசுவே! உம்மையே நான் நேசிக்கிறேன்
வேறெந்த விண்வாழ்வையும் நாடாதிருப்பேன்
உம்மாலே மாநன்மையை நான் கண்டடைந்தேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

2. இப்பாவியின் பேரில் முந்தி நேசம் வைத்தீர்
நீர் ப்ராணத் தியாகம் செய்து மீட்டுக்கொண்டீர்
முட்க்ரீடமும் ஐங்காயமும் த்யானிக்கிறேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

3. பேரன்பின் சொரூபி! உம்மைப் போற்றுகிறேன்
எப்போதும் உம்மண்டை தங்க வாஞ்சிக்கிறேன்
என் ஜீவன் போனாலுங்கூட நீங்கமாட்டேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

4. பேரின்ப மேலோகத்தில் ஆனந்தங்கொள்வேன்
நீடூழி உம்முகம் கண்டு ஸ்தோத்திரிப்பேன்
எப்பாவமில்லாமலும் நான் வாழ்த்தல் செய்வேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

Tamil Hymns

908. என் ஜனமே மனந்திரும்பு

என் ஜனமே மனந்திரும்பு
இயேசுவிடம் ஓடி வா
இறுதிக்காலம் வந்தாச்சு
இன்னமும் தாமதமேன்

1. உன்னை நினைத்து சிலுவையிலே
தாகம் தாகம் என்றார்
உன்னை இரட்சிக்க பாவம் மன்னிக்க
தன்னையே பலியாக்கினார்

2. தூய இரத்தம் உனக்காக
தீய உன் வாழ்வு மாற
காயங்கள் உனக்காக
உன் நோயெல்லாம் தீர

3. உனக்காக பரலோகத்தில்
உறைவிடம் கட்டுகிறார்
உன்னைத் தேடி வருகின்றார்
இன்று நீ ஆயத்தமா - மகனே

4. உன் பாவங்கள் போக்கிடவே
சிலுவையை சுமந்தாரே
உன் சாபங்கள் நீக்கிடவே
முள்முடி தாங்கினாரே

909. என் ஜீவன் உம்மிலே

என் ஜீவன் உம்மிலே
என் பெலன் உம்மிலே
நம்பிக்கை உம்மிலே
உம்மில் மட்டும்

என் ஜீவனுடன் துதிப்பேன்
என் பெலத்துடனே துதிப்பேன்
என் ஆவியோடும் உண்மையோடும்
பணிந்து துதித்திடுவேன்

My life it's in You Lord
My strength it's in You Lord
My hope it's in You Lord
In You, it's in You

I will praise You with all of my life
I will praise You with all of my strength
With all of my life
With all of my strength
All of my hope is in You

910. என் ஜீவன் நீர் தானே என்

என் ஜீவன் நீர் தானே என் துதியும்
நீர் தானே - எனக்காய் மரித்தீரே
உமக்காய் வாழ்வேனே உம்மை நேசிக்கிறேன்

1. என் பாவங்கள் பாராமல்
உம் முகத்தை மறைத்தீரே - என்
மீறுதல் எண்ணாமல் கிருபை அளித்தீரே
மன்னியும் என்றேனே
மறந்தேன் என்றீரே

2. நான் கலங்கின நேரங்களில்
என் துணையாய் நின்றீரே - உலகம்
கைவிட்டாலும் நீர் என்னை அணைத்தீரே
ஜெபத்தை கேட்டீரே
கண்ணீர் துடைத்தீரே

911. என் ஜெபத்தை கேட்கிறார்

என் ஜெபத்தை கேட்கிறார்
எனக்கு அருள்கிறார்
கன்மலையில் என்னை வைத்து
பாதுகாக்கிறார் (2)
அலைகள் என்மேல் புரண்டாலும்
அஞ்சிடமாட்டேன் (2)
மலைகள் என்மேல் விழுந்தாலும்
பயப்படமாட்டேன் (2)

1. வரண்ட நிலத்தில் நான் நடந்து சென்றாலும் (2)
வழியறியாமல் திகைத்து நின்றாலும் (2)
வருத்தம் தாகம் பசியும் என்னை
நெருங்கவில்லையே (2)
வழிநடத்தும் தேவன்கரம்
குருகவில்லையே (2)

2. வியாதி வறுமையால் சோர்ந்துவிட்டாலும்
வாசல் கதவுகள் எல்லாம் அடைத்துக்கொண்டாலும் (2)
ஒன்றுமென்னை கலங்கவைக்க
முடியவில்லையே (2)
கர்த்தர் கிருபை என்னை விட்டு
விலகவில்லையே (2)

3. கடலின் அலையில் நான் பயனம் செய்தாலும்
காற்றும் புயலுமாய் என்னை எதிர்த்து வந்தாலும் (2)
எதுவுமென்னை தடுத்து நிறுத்த
முடியவில்லையே (2)
கர்த்தர் முன்னே செல்வதாலே
கவலையில்லையே (2)

4. அத்திமரங்களின் இலையுதிர்ந்தாலும்
திராட்சை செடிகளில் கனி இழந்தாலும் (2)
சுற்றி பஞ்சம் நேர்ந்தபோதும்
கலக்கமில்லையே (2)
கர்த்தர் கரங்கள் என்னைத்தாங்கும்
வருத்தமில்லையே (2)

Tamil Hymns

912. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்

1. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்
அப்போதென் துக்கம் மறப்பேன்
பிதாவின் பாதம் பணிவேன்
என் ஆசையாவும் சொல்லுவேன்
என் நோவுவேளை தேற்றினார்
என் ஆத்ம பாரம் நீக்கினார்
ஒத்தாசை பெற்றுத் தேறினேன்
பிசாசை வென்று ஜெயித்தேன்

2. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்
மா தாழ்மையோடு பிரார்த்திப்பேன்
மன்றாட்டைக் கேட்போர் வருவார்
பேர் ஆசீர்வாதம் தருவார்
என் வாக்கின் மேல் விஸ்வாசமாய்
என் பாதம் தேடு ஊக்கமாய்
என்றோர்க்கென் நோவைச் சொல்லுவேன்
இவ்வேளையை நான் வாஞ்சிப்பேன்

3. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்!
ஆனந்த களிப்படைவேன்
பிஸ்காவின் மேலே ஏறுவேன்
என் மோட்ச வீட்டை நோக்குவேன்
இத்தேகத்தை விட்டேகுவேன்
விண் நித்திய வாழ்வைப் பெறுவேன்
பேரின்ப வீட்டில் வசிப்பேன்
வாடாத க்ரீடம் சூடுவேன்

913. என்றும் ஆனந்தம்என் இயேசு தருகிறார்

என்றும் ஆனந்தம்
என் இயேசு தருகிறார்
துதிப்பேன் துதிப்பேன்
துதித்துக் கொண்டேயிருப்பேன்

அல்லேலூயா ஆனந்தமே (2)

1. உன்னதர் மறைவில் வல்லவர் நிழலில்
என்றும் தங்குவேன்
தேவனை நோக்கி அடைக்கலப் பாறை
என்றே சொல்லுவேன்

2. தமது சிறகால் என்னை மூடி
காத்து நடத்துவார்
அவரது வசனம் ஆவியின் பட்டயம்
எனது கேடகம்

3. வழிகளிளெல்லாம் என்னைக் காக்க
தூதர்கள் எனக்குண்டு
பாதம் கல்லில் மோதாமல் காத்து
கரங்களில் ஏந்துவார்

4. சிங்கத்தின் மேலும் பாம்பின் மேலும்
நடந்தே செல்லுவேன்
சாத்தானின் சகல வலிமையை வெல்ல
அதிகாரம் எனக்குண்டு

5. இரவின் பயங்கரம் பகலின் அம்பு
எதற்கும் பயமில்லை
உன்னத தேவன் எனது அடைக்கலம்
தங்கும் உறைவிடம்

6. தேவனைச் சார்ந்து வாழ்கின்ற எனக்கு
என்றும் விடுதலை
அவரது நாமம் அறிந்த எனக்கு
அவரே அடைக்கலம்

Tamil Hymns

914. என்றும் கர்த்தாவுடன் நான் கூடி வாழுவேன்

1. என்றும் கர்த்தாவுடன் நான் கூடி வாழுவேன்
இவ்வாக்கினால் சாகா வரன் செத்தாலும் ஜீவிப்பேன்
பற்றாசையால் உம்மை விட்டேன் நான் அலைந்தேன்
நாடோறும் வழி நடந்தே விண் வீட்டைக் கிட்டுவேன்

2. அதோ சமீபமே பிதாவின் வீடுதான்
என் ஞானக்கண்கள் காணுமே மின்னும் பொன்னகர் வான்
தூயதோர் சுதந்தரம் நான் நேசிக்கும் நாடே
என் ஆவி மேலெருசலேம் சேரத் தவிக்குமே

3. கர்த்தாவுடன் என்றும் பிதாவே இங்கும் நீர்
இவ்வாக்கை நிறைவேற்றவும் சித்தம் கொண்டருளுவீர்
என் பக்கம் தங்கிடின் தப்பாமலே நிற்பேன்
கைதூக்கி என்னைத் தாங்கிடின் போராடி வெல்லுவேன்

4. என் ஜீவன் போகும் நாள் கிழியும் இத்திரை
சாவை அழிப்பேன் சாவினால் சாகா உயிர் பெற்றே
என் நாதரைக் காண்பேன் நின்று களிப்புடன்
சிம்மாசனத்தின் முன் செல்வேன் என்றும் கர்த்தாவுடன்

Tamil Hymns

915. என்றைக்கு காண்பேனோ என் ஏசு தேவா

என்றைக்கு காண்பேனோ என் ஏசு தேவா
குன்றாத தேவ குமாரனைத் தானே நான்

1. பரகதி திறந்து பாரினில் பிறந்து
நரர் வடிவாய் வந்த ராஜ உல்லசானை

2. ஐந்தப்பம் கொண்டு அநேகருக்குப் பகிர்ந்து
சிந்தையில் உவந்தவசீகர சினேகனை

3. மாசிலா நாதன் மாமறை நூலன்
ஏசுவின் திருமுக தரிசனம் நோக்கி நான்

Tamil Hymns

916. என்றென்றும் ஜீவிப்போர்

1. என்றென்றும் ஜீவிப்போர்
அதரிசனர்
எட்டா ஒளியிலுள்ளோர் சர்வஞானர்
மா மேன்மை மகத்துவர்
அநாதியோராம்
சர்வவல்லோர் வென்றோர்
நாமம் போற்றுவோம்.

2. ஓய்வோ துரிதமோ இன்றி
ஒளிபோல்
ஒடுங்கா பொன்றா சக்தியோடாள்வதால்
வான் எட்டும் மலைபோல் உம்
நீதி நிற்கும்
அன்பு நன்மை பெய்யும்
உந்தன் மேகமும்.

3. பேருயிர் சிற்றுயிர்
ஜீவன் தேவரீர்
யாவர்க்குள்ளும் உய்வீர்
மெய்யாம் ஜீவன் நீர்
மலர் இலைபோல்
மலர்வோம் செழிப்போம்
உதிர்வோம் சாவோம்
நீரோ மாறாதோராம்.

4. மா மாட்சி பிதா தூய
ஜோதி தந்தாய்
தாழுவர் உம் தூதர்
மா வணக்கமாய்
துதிப்போம் மகத்தாய்க்
காணத் தோற்றுவீர்
கண் கூசும் ஜோதியாம்
ஜோதி தேவரீர்.

Tamil Hymns

917. என்தன் ஆத்ம நேசரே

1. என்தன் ஆத்ம நேசரே,
வெள்ளம் போன்ற துன்பத்தில்,
தாசன் திக்கில்லாமலே
தடுமாறிப் போகையில்,
தஞ்சம் தந்து, இயேசுவே,
திவ்விய மாஅர்பில் காருமேன்;
அப்பால் கரையேற்றிய
மோட்ச வீட்டில் சேருமேன்.

2. வல்ல தேவரீர் அல்லால்
வேறே தஞ்சம் அறியேன்;
கைவிடாமல் நேசத்தால்
ஆற்றித் தேற்றித் தாங்குமேன்;
நீரே என்தன் நம்பிக்கை,
நீர் சகாயம் செய்குவீர்;
ஏதுமற்ற ஏழையை
செட்டையாலே மூடுவீர்.

3. குறை யாவும் நீக்கிட,
நாதா, நீர் சம்பூரணர்;
திக்கற்றோரைத் தாங்கிட
நீரே மா தயாபரர்;
நான் அசுத்த பாவிதான்,
நீரோ தூயர் தூயரே;
நான் அநீதி கேடுள்ளான்,
நீர் நிறைந்த நித்தியரே.

4. பாவம் யாவும் மன்னிக்க
ஆரருள் அமைந்த நீர்
என்னைச் சுத்திகரிக்க
அருள் பாயச் செய்குவீர்;
ஜீவ ஊற்றாம் இயேசுவே,
என்தன் தாகம் தீருமேன்,
ஸ்வாமீ, என்றும் என்னிலே
நீர் சுரந்து ஊற்றுமேன்

Tamil Hymns

918. என்ன என் ஆனந்தம்

1. என்ன என் ஆனந்தம், என்ன என் ஆனந்தம்
சொல்லக்கூடாதே
மன்னன் கிறிஸ்து என் பாவத்தையெல்லாம்
மன்னித்து விட்டாரே

2. கூடுவோம் ஆடுவோம் பாடுவோம் ஒன்றாய்
மகிழ் கொண்டாடுவோம்
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனைப் போற்றிடுவோம்

3. பாவங்கள் சாபங்கள் கோபங்கள் எல்லாம்
பரிகரித்தாரே
தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து
தேற்றியே விட்டாரே

4. அச்சயன் பட்சமாய் ரட்சிப்பை எங்களுக்
கருளின தாலே
நிச்சயம் சுவாமியைப் பற்றிய சாட்சி
பகர வேண்டியதே

5. வெண்ணங்கி பொன் முடி வாத்தியம் மேல் வீடு
ஜெயக் கொடியுடனே
மண்ணுலகில் வந்து விண்ணுலகில் சென்ற
மன்னனை ஸ்தோத்தரிப்போம்

Tamil Hymns

919. என்ன சுகம் ஆஹா என்ன சுகம்

என்ன சுகம் ஆஹா, என்ன சுகம்
என் ரட்சகரின் சமூகம் பேரானந்தம்
பரமானந்த மோட்ச சுகானந்தம்
அதைப் பெற்று அனுபவித்தால் என்ன சுகம்

1. பொன்னகர் மேடையில் எந்நேரம் பாடலாம் (2)
கிண்ணரம் தம்புருவீணை இன்னோசை கேட்கலாம்

2. வெற்றி பொன் வெண் அங்கி தரித்துக் கொள்ளலாம் (2)
சுத்தப் பொன்னால் செய்த வீதியில் உலாவலாம்

3. ஜீவ நதியில் குளித்துக் களிக்கலாம் (2)
ஜீவ விருஷக் கனியைப் புசிக்கலாம்

4. தங்கக் கிரீடம் தலையில் தரிக்கலாம் (2)
சிங்காசனத்தினின்று ஜெயகீதம் பாடலாம்

5. வாட்டம் பசி தாகம் பட்டினி சாவில்லை (2)
கேட்டின் மனுடர் வந்து ஊடே யிருப்பதில்லை

6. துன்பம் ஒழிந்து மீட்பு இன்பமடையலாம் (2)
துயரின் சமூகத்தில் கூடி கொண்டாடலாம்

7. இயேசுவின் ரத்தத்தால் மீட்பை யடைந்தவர்கள் (2)
ஆசனம் மீதிருந்து ஜெயகீதம் பாடுவார்கள்

Tamil Hymns

920. என்னதான் ஆனாலென்ன

என்னதான் ஆனாலென்ன
என் மீட்பர் உயிரோடுண்டு
தொடர்ந்து பயணம் செய்வேன்
என் துணையாளர் முன்செல்கிறார்

காடு மேடு கடந்து சென்றாலும்
கரம் பிடித்தென்னை நடத்துகின்றாரே
ஆறுகளை நான் கடக்கும்போதும்
மூழ்கி நானும் போவதில்லை
அக்கினியில் நடக்கும் போதும்
எரிந்து நானும் போவதில்லை

மரணமே ஆனாலும் என்ன
ஜீவனே ஆனாலும் என்ன
பரிசுத்தரின் பின்னே செல்லுவேன்
திரும்பி நானும் பார்க்கமாட்டேன்
எனது ஜீவன் உமது கரத்தில்
ஒருவரும் பறிப்பதில்லை

கிறிஸ்து எனக்கு ஜீவன் தானே
சாவு எனக்கு ஆதாயமே
தேவனின் அன்பிலிருந்து
பிரிப்பவர்கள் யாருமில்லை
உனது பாதம் எனது தஞ்சம்
எனது கோட்டை நீர்தானே

Tamil Hymns

921. என்ன தியாகம் என் கல்வாரி நாயகா

என்ன தியாகம், என், கல்வாரி நாயகா!
என்னையும் உம்மைப்போல் மாற்றிடவோ!

1. விண் தூதர் போற்றிடும் உம்
பிதாவையும் விட்டிறங்கி வந்தீரே!
மாட்டுக் கொட்டிலோ வாஞ்சித்தீரையா!
மானிடர் மேல் அன்பினால்

2. ஜெனித்த நாள் முதலாய்
கல்வாரியில் ஜீவனை ஈயும் வரை
பாடுகள் உம் பங்காய்க் கண்டீரையா!
பாவியை மீட்பதற்காய்

3. தலையைச் சாய்த்திடவோ
உமக்கு ஓர் தலமோ எங்குமில்லை
உம் அடிச்சுவட்டில் நான் செல்லவோ!
முன் பாதை காட்டினீரே

4. தாய் தந்தை வீடும் நாடும்
இன்னும் தனக்குள்ளதெல்லாம் வெறுத்து
அனுதினம் குருசை சுமப்பவரல்லோ!
அப்போஸ்தலர் என்றீரே

5. பாடுகளல்லோ உம்மை
மகிமையில் பூரணமாய்ச் சேர்த்ததே
உம்மோடு நானும் பாடு சகிப்பேன்!
என் ஜீவனையும் வைத்தே

6. இன்பம் எனக்கினியேன்
என் அருமை இயேசுதான் என் பங்கல்லோ!
நேசரின் பின்னே போகத்துணிந்தேன்
பாசம் என்னில் வைத்ததால்

Tamil Hymns

922. என்ன நடந்தாலும் யார் கைவிட்டாலும்

என்ன நடந்தாலும் யார் கைவிட்டாலும்
உமக்கு நன்றி சொல்வேன்
உமது புகழ் பாடுவேன்

1. தேடி வந்தீரே தெரிந்து கொண்டீரே
தூய மகனாக்கினீர்
துதிக்கும் மகளாக்கினீர் - இராஜா

2. இதயம் நிறைந்த நன்றி சொல்லுவேன்
இரவும் பகலும் புகழ் பாடுவேன் - என்ன

3. ஆவியினாலே அன்பையே ஊற்றி
பாவங்கள் நீக்கினீரே
சுபாவங்கள் மாற்றினீரே - இராஜா

4. இராஜாவின் திருமுகம் காண்கின்ற நாளை
எதிர்நோக்கி ஓடுகிறேன் -இயேசு
நினைத்துப் பாடுகிறேன் - இராஜா

5. இரத்தத்தினாலே ஒப்புரவாக்கி
உறவாடச் செய்தீரையா
உம்மோடு இணைத்தீரையா

6. மரணத்தை அழித்து அழியா ஜீவனை
அறிமுகப்படுத்தினீரே
அறிவிக்க அழைத்தீரே

923. என்ன பாக்கியம்

என்ன பாக்கியம், எவர்க்குண்டு இந்தச்
சிலாக்கியம் - விண்ணவரும், புவிமேவும்
முனிவர்களும் மன்னவருங்
காணா மகிபனை யான் கண்டேன்

1. வானகந் தானோ - அல்லதிது வையகந் தானோ
ஆனகம் சென்று எழுந்த அரும்பொருள்
கானகந் தன்னில் என் கையில் அமர்ந்தது

2. சாமியைக் கண்டேன் மகானந்தம்
சாலவுங்கொண்டேன் - காமரு
தேங்கனி வாய்கள் துடிப்பதும்,
கண்ணும் மனமும் களிக்க விழிப்பதும்

3. அன்னமும் நீயே; கிடைத்தற்கருஞ்
சொன்னமும் நீயே - மின்னறு
மேகத் திருக்கை துறந்தையோ?
மேதினி தன்னை ரட்சிக்கப் பிறந்தையோ?
போதும் இவ்வாழ்வு பரகதி போவேன்
இப்போது; ஏதேன் என்ற பரதீசும் வந்திட்டது;
எண்ணில்லாத செல்வம் என் கையில் கிட்டுது

Tamil Hymns

924. என்னதான் ஆனால் என்ன

என்னதான் ஆனால் என்ன
என் மீட்பர் உயிரோடு உண்டு
தொடர்ந்து பயணம் செய்வேன்
என் துணையாளர் முன் செல்கிறார்
என்னதான் காடு மரணமே கிறிஸ்து

1. காடு மேடு கடந்து சென்றாலும்
கரம் பிடித்து என்னை நடத்துகிறாரே
ஆறுகளை நான் கடக்கும் போதும்
மூழ்கி நானும் போவதில்லை
அக்கினியில் நடக்கும் போதும்
எரிந்து நானும் போவதில்லை

2. மரணமே ஆனாலும் என்ன
ஜீவனே ஆனாலும் என்ன
பரிசுத்தரின் பின்னே செல்வேன்
திரும்பி நானும்பார்க்கமாட்டேன்
எனது ஜீவன் உமது கரத்தில்
ஒருவரும் பறிப்பது இல்லை

3. கிறிஸ்து எனக்கு ஜீவன் தானே
சாவு எனக்கு ஆதாயமே
தேவனின் அன்பிலிருந்து
பிரிப்பவர்கள் யாரும் இல்லை
உமது பாதம் எனது தஞ்சம்
எனது கோட்டை நீர்தானே
என்னதான் காடு மரணமே கிறிஸ்து

Tamil Hymns

925. என்ன வந்தாலும் நம்பிடுவேனே

என்ன வந்தாலும் நம்பிடுவேனே
என்ன நேர்ந்தாலும் பற்றிக் கொள்வேனே
யார் கைவிட்டாலும்
பின் செல்லுவேன் - உம்மை
நீரே நீரே நீரே போதுமே
இயேசுவே நீரே போது இயேசுவே

1. துன்பத்தின் நடுவில் நடந்தாலும்
கண்ணீரின் மத்தியில் கடந்தாலும்
மரண இருளின் பள்ளத்தாக்கில்
என்னோடு இருப்பவரே

2. வியாதியின் மத்தியில் அமிழ்ந்தாலும்
பாடுகள் என்னை நொறுக்கினாலும்
திகையாதே கலங்காதே
என்று சொன்னீரே
என்னையும் நடத்திடுமே

3. சோதனை என்னை சூழ்ந்தாலும்
வேதனை என்னை நெருக்கினாலும்
சோர்ந்திடாதே என்று தைரியப்படுத்தி
தூக்கி சுமப்பவரே

4. நேசித்தோர் என்னை விட்டு விலகினாலும்
நம்பினோர் என்னை கைவிட்டாலும்
முடிவு பரியந்தம் என்னோடு இருப்பேன்
என்று சொன்னவரே

Tamil Hymns

926. என்னண்டை வந்திடாயோ

என்னண்டை வந்திடாயோ
பின்பற்றி வந்திடாயோ
உன்னை நீ வெறுத்து சிலுவையை எடுத்து
பின்பற்றி வந்திடாயோ (2)

1. உலகை ஆதாயம் செய்தும்
ஜீவனோ நஷ்டப்பட்டால் மரணம்
வரும் வேளை மறுமைக்குள்
செல்கையில் என்ன லாபம் உனக்கு (2)

2. கல்வாரி காட்சி கண்டும் கல்மனம்
உருகலையோ ஐங்காயங்கள்
தனில் அடைக்கலம் அளித்திட

அழைப்போரை பார்த்திடாயோ

Tamil Hymns

927. என்னப்பா செய்யணும் நான்

என்னப்பா செய்யணும் நான்
சொல்லுங்கப்பா செஞ்சுடறேன்
இயேசப்பா இயேசப்பா-என்னப்பா

1. உங்க ஆசை தான் எனது ஆசை
உங்க விருப்பம்தான் எனது விருப்பமே

2. உங்க ஏக்கங்கதான் எனது ஏக்கம்
உங்க எண்ணந்தான் எனது எண்ணமையா

3. இனிஒரு வாழ்வு இல்லை நீங்க இல்லாம
உங்க பாதம்தான் எனது தஞ்சமையா

4. எத்தனை இடர் வரட்டும் - அது என்னை
பிரிக்காது உமக்காய் ஓடிடுவேன்
உற்சாகமாய் உழைத்திடுவேன்

Tamil Hymns

928. என்னில் என்ன கண்டீர் என்னை நேசிக்க

என்னில் என்ன கண்டீர் என்னை நேசிக்க
இப் பாவிக்கு தகுதி இல்லையே
என்னில் என்ன கண்டீர் என்னை நேசிக்க
இவ் ஏழைக்கு தகுதி இல்லையே

என் பெலவீனமறிந்தும் நீர் நேசித்தீர்
என் குறைகள் தெரிந்தும் நீர் நேசித்தீர்

1. உம்மை விட்டு விலகும்
செயல் செய்த நாள் உண்டு
உம்மை காயப்படுத்தும்
வார்த்தை சொன்ன நாள் உண்டு
பாவம் செய்ய காலம் கேட்ட துரோகி நான்

2. பாவச் சேற்றில் கிடந்த ஓர் பாவி நான் ஐயா
உந்தன் அன்பின் கயிற்றால்
என்னை இழுத்தீரே உம் நேசம் போல்
ஒன்றும் எங்கும் இல்லையே

Tamil Hymns

929. என்னிலே அன்பு கூர்ந்தீரே

என்னிலே அன்பு கூர்ந்தீரே
என்னை மாற்ற என் இயேசு ராஜனே
எந்தன் ஜீவியத்தில் நீர் செயத
நன்மைகள் நினைக்கையில்
வர்ணிக்க வார்த்தை இல்லையே

காரிருள் யாத்ரையில் நல்வழி காட்டுவீர்
நேரிட்ட துன்பங்கள் சோதனை வேளையில்
தாழ்விலே தாங்கினீர்... தேவனே இயேசுவே

நஷ்டங்கள் எத்தனை கஷ்டங்கள் கண்ணீரில்
பந்துக்கள் கைவிட சிநேகிதர் மாறிட
கல்வாரி அன்பினால்.... காத்தீரே நேசரே

Tamil Hymns

930. என்னை அழைத்தவர் உண்மையுள்ளவர்

என்னை அழைத்தவர் உண்மையுள்ளவர்
அன்பின் வாக்குத்தத்தங்களை தந்தவர்
எந்தன் வழிகளில் என்னைக் காப்பவர்
என்றும் உன்னை நடத்திடுவார்

1. தடைகள் உன் பாதையிலே
பெருந்துன்ப வேளைகளில்
பதறாமல் இயேசுவை நம்பு
புதுப்பாதை திறந்திடுவார்

2. நிறைவேற்றிடுவார் தன் நாமத்தினால்
செய்ய முடியாதவைகள் ஒன்றுமில்லை
சிங்கக் கெபியிலும் அக்கினியிலும்
அவர் சமுகம் உள்ளதினால்

3. கடல் அலைபோல் துயரங்கள் சூழ்ந்தாலும்
தீரா வியாதியினால் உடல் தளர்ந்தாலும்
உந்தன் அருகில் இயேசு வருவார்
விசுவாசத்தால் அவரைத் தொடு

931. என்னை ஆட்கொண்ட இயேசு

என்னை ஆட்கொண்ட இயேசு
உம்மை யாரென்று நானறிவேன்
உண்மை உள்ளவரே என்றும்
நன்மைகள் செய்பவரே

1. மனிதர் தூற்றும் போது உம்மில்
மகிழச் செய்பவரே
அதைத் தாங்கிட பெலன் கொடுத்து
தயவாய் அணைப்பவரே

2. தனிமை வாட்டும் போது நல்
துணையாய் இருப்பவரே
உம் அவியினால் தேற்றி
அபிஷேகம் செய்பவரே

3. வாழ்க்கைப் பயணத்திலே
மேகத் தூணாய் வருபவரே
உம் வார்த்தையின் திருவுணவால்
வளமாய் காப்பவரே

932. என்னை ஆனந்த தைலத்தால்

என்னை ஆனந்த தைலத்தால்
அபிஷேகம் செய்திடும் ஆவியானவரே - (4)
ஆவியானவரே அன்பின் ஆவியானவரே - (4)
வறண்ட நிலங்கள் வயல்வெளியாகட்டும் ஆவியானவரே - (2)
அன்பின் ஆவியானவரே - (2)

உலர்ந்த எலும்புகள் உயிரோடு எழும்பட்டும் ஆவியானவரே - (2)
அன்பின் ஆவியானவரே - (2)

Tamil Hymns

933. என்னை உண்டாக்கிய என்

என்னை உண்டாக்கிய
என் தேவாதி தேவன்
தூங்குவதுமில்லை உறங்குவதுமில்லை (2)

1. என் மேல் அவர் கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுவார்
சத்தியத்தின் பாதையிலே நித்தமும் நடத்துவார்
பரிசுத்த ஆவியால் உள்ளத்தை நிரப்புவார்
பரிசுத்தர் பரிசுத்தர் அவர் பெயரே

2. பெலவீன நாட்களிலே பெலன் தந்து தாங்குவார்
பலவித சோதனையில் ஜெயம் நமக்களிப்பார்
ஆபத்துக் காலத்தில் அரணான கோட்டையும்
கேடகமும், துருகமும் பெலன் அவரே

3. ஆவியான தேவனுக்கு ரூபமொன்றுமில்லையே
ரூபமொன்றுமில்லையதால் சொரூபமொன்றுமில்லையே
வாஞ்சையுள்ள ஆத்துமாவின் இருதயந்தன்னிலே
வார்த்தையாலே பேசுகின்ற ஆண்டவர் இவர்

Tamil Hymns

934. என்னை உம் கையில்

1. என்னை உம் கையில்
படைத்தேன் முழுவதுமாய்
என்னையும் பயன்படுத்தும் (2)

குயவன் நீர் களிமண் நான்
உம் சித்தம் நிறைவேற்றுமே

2. தவறிய பாத்திரம் நான்
தவறுகள் நீக்கி என்னை
தகுதியாய் நிறுத்திடுமே

3. குறைவுள்ள பாத்திரம் நான்
குறைவுகள் நீக்கி உந்தன்
கருவியாய் பயன்படுத்தும்

Tamil Hymns

935. என்னை கண்டவரே

என்னை கண்டவரே என்னை காண்பவரே
என்னை காத்தவரே என்னை காப்பவரே

அல்லேலுயா அல்லேலுயா
அல்லேலுயா அல்லேலுயா

1. பாவீயாய் இருந்த என்னை கண்டு கொண்டீரே
பாசமாய் மார்போடு அணைத்து கொண்டீரே
நெருக்கத்தில் இருந்த என்னை தேடி வந்தீரே
நெருங்கி அன்பாக சேர்த்து கொண்டீரே

2. கடந்த காலம் எல்லாம் காத்து கொண்டீரே
வருகிற காலத்திலும் காத்து கொள்வீரே
கொடுத்த வாக்குத்தத்தம் பூர்த்தீ செய்தீரே
புதிய வாக்குறுதி கொடுத்து விட்டீரே

3. தள்ளாடி நடந்த என்னை தேடி வந்தீரே
மதில்களை தாண்டும்படி தூக்கி விட்டீரே
நெரிந்த நாணலை போல் வாழ்ந்து வந்தேனே
எரியும் தீப்பிளம்பாய் மாற்றி விட்டீரே

Tamil Hymns

936. என்னைக் கண்டார் இயேசு

என்னைக் கண்டார் - இயேசு
என்னைக் கண்டார் - உள்ளங்கையில்
என்னை வரைந்து கொண்டார்
கண்ணுக்குள்ளே என்னை வைத்து
கடைசி வரைக்கும் காத்துக் கொள்வார்

இயேசு என் தேவன் இயேசு என் ஜீவன்
இயேசு தான் எனக்கு எல்லாம் எல்லாம்

1. கட்டவிழ்த்தார் என்னை கட்டவிழ்த்தார்
சத்துருவை அவர் துரத்தி விட்டார்
சாபத்தையும் வியாதியையும்
சாவினால் வென்று ஜெயம் கொடுத்தார்

2. மீட்டுக் கொண்டார் - என்னை
மீட்டுக் கொண்டார் - பாவத்திலிருந்தென்னை
மீட்டுக் கொண்டார்
சொந்த பிள்ளை என்றும் என்னை
உறுதிப்படுத்த தம் ஆவி தந்தார்

3. ஜெயம் தந்தார் இயேசு ஜெயம் தந்தார்
சத்துருவின் மேல் அவர் ஜெயம் தந்தார்
உலகத்தின் மேல் ஜெயமெடுக்க
விசுவாசத்தின் வலிமை தந்தார்

Tamil Hymns

937. என்னைக் காக்கும் கேடகமே

என்னைக் காக்கும் கேடகமே
தலையை நிமிரச் செய்பவரே
இன்று உமக்கு ஆராதனை
என்றும் உமக்கே ஆராதனை

1. உம்மை நோக்கி நான் கூப்பிட்டேன்
எனக்கு பதில் நீர்தந்தீரய்யா
படுத்து உறங்கி விழித்தெழுவேன்
நீரே என்னைத் தாங்குகிறீர்
ஆராதனை ஆராதனை
அப்பா அப்பா உங்களுக்குத்தான்

2. சூழ்ந்து எதிர்க்கும் பகைவருக்கு
அஞ்சமாட்டேன் அஞ்சவே மாட்டேன்
விடுதலை தரும் தெய்வம் நீரே
வெற்றிப்பாதையில் நடத்துகிறீர்

3. பக்தியுள்ள அடியார்களை
உமக்கென்று நீர் பிரித்தெடுத்தீர்
வேண்டும்போது செவிசாய்க்கிறீர்
என்பதை நான் அறிந்துகொண்டேன்

4. உலகப்பொருள் தரும் மகிழ்வை விட
மேலான மகிழ்ச்சி எனக்கு தந்தீர்
நீர் ஒருவரே பாதுகாப்புடன்
சுகமாய் வாழச் செய்கின்றீர்

5. உமது அன்பில் மகிழ்ந்திருப்பேன்
உம்மோடுதான் நான் வாழ்ந்திடுவேன்
எனக்கு நன்மை செய்தபடியால்
நன்றிப் பாடல் பாடிடுவேன்

Tamil Hymns

938. என்னைக் காக்கவும் பரலோகம்

என்னைக் காக்கவும் பரலோகம் சேர்க்கவும்
எனக்குள் இருப்பவரே ஸ்தோத்திரம்

எனக்காய் யுத்தம் செய்து
இரட்சித்து வழிநடத்தி
என்னோடு வருபவரே ஸ்தோத்திரம்

1. ஒரு வழியாய் எதிரி ஓடி வந்தால்
ஏழு வழியாக துரத்திடுவீர்

2. வறட்சி காலங்களில் திருப்தியாக்கி
எலும்புகளை வலிமை ஆக்குகிறீர்

3. போரிட கைகளுக்கு பயிற்சி தந்து
யுத்தம் செய்ய பழக்குகிறீர்

4. நலிந்தோரை நல்வாக்;கால் ஊக்குவிக்க
கல்விமான் நாவை எனக்குத் தந்தீரே

5. காலை தோறும் என்னை எழுப்புகிறீர்
கர்த்தர் உம் குரல் கேட்க பேசுகிறீர்

6. சத்தியமே உம்மை அறிந்து கொள்ள
புத்தியை தந்தீரே நன்றி ஐயா

7. புலம்பலை ஆனந்தமாக மாற்றுகிறீர்
சாக்கு ஆடைகளை நீக்குகிறீர்

8. வற்றாத நீரூற்றாய் ஓடச் செய்தீர்
வளமான தோட்டமாக மாற்றுகிறீர்

9. என் வாயில் அருளிய உம் வார்த்தையெல்லாம்
ஒரு நாளும் விலகாது என்றுரைத்தீர்

Tamil Hymns

939. என்னை சுமப்பதனால் இறைவா

என்னை சுமப்பதனால் இறைவா - உன்
சிறகுகள் உதிர்வதில்லை
அள்ளி அணைப்பதனால் இறைவா - உன்
அன்பு குறைவதில்லை - 2
ஆயிரம் மின்னல் இடித்திட்ட போதும்
வானம் கிழிவதில்லை - 2
ஆயிரம் மைல்கள் நடந்திட்ட போதும்
நதிகள் அழுவதில்லை - 2

1. கருவை சுமக்கும் தாய்க்கு என்றும்
குழந்தை சுமையில்லை
கருவிழி சுமக்கும் இருவிழி அதற்கு
இமைகள் சுமையில்லை - 2
மதுவை சுமக்கும் மலர்களுக்கென்றும்
பனித்துளி சுமையில்லை - 2
வானை சுமக்கும் மேகத்திற்கென்றும்
மழைத்துளி சுமையில்லை - 2

2. அகழும் மனிதரைத் தாங்கும் பூமிக்கு
முட்கள் சுமையில்லை
இகழும் மனிதரில் இரங்கும் மனதிற்கு
சிலுவைகள் சுமையில்லை - 2
உலகின் பாவம் சுமக்கும் தோள்களில்
நானொரு சுமையில்லை - 2
உயிரை ஈயுமுன் சிறகின் நிழலிலென்
இதயம் சுமையில்லை - 2

940. என்னைத் தேடி இயேசு வந்தார்

என்னைத் தேடி இயேசு வந்தார்
எந்தன் வாழ்வை மாற்றி விட்டார்
அல்லேலூயா நான் பாடுவேன்
ஆடிப்பாடித் துதித்திடுவேன்

1. மகனானேன் நான் மகளானேன்
அப்பா பிதாவே என்றழைக்கும்
உரிமையை எனக்குத் தந்தார்

2. ஆவி தந்தார் தூய ஆவி தந்தார்
வல்லமையும் அன்பும் ஞானமும் கொண்ட
பரிசுத்த ஆவி தந்தார்

3. சுகமானேன் நான் சுகமானேன்
இயேசு கிறிஸ்துவின் காயங்களால்
சுகமானேன் சுகமானேன்

4. தெரிந்துகொண்டார் என்னை
தெரிந்து கொண்டார்
பரிசுத்தனும் புனிதனுமாய்
அவர் திருமுன் வாழ

941. என்னை நடத்திடும் தேவன் என்னோடு

என்னை நடத்திடும் தேவன்
என்னோடு இருக்க
பயமே எனக்கில்லையே
நான் நம்பிடும் தேவன்
என் துருகமாய் இருப்பதால்
கலக்கமே எனக்கில்லையே - 2

பயமில்லை-2 பயமில்லையே
நம் சார்பில் கர்த்தர் உண்டு பயமில்லையே
பயமில்லை -2 பயமில்லையே
நமக்காக யுத்தம் செய்வர் பயமில்லையே

1. சிறு கூட்டமே நீ பயப்படாதே
கர்த்தர் என்றும் நம் துணை நிற்கின்றார்
எதிரிகள் வெள்ளம் போல் எதிராக வந்தாலும்
ஆவியானவர் கொடியேற்றுவார்

2. பாதைகள் எங்கும் தடைகற்களோ
தாமதம் மட்டும் பதிலானதோ
நேர்வழியாய் நம்மை நடத்திடும் தேவன்
நிச்சயம் நடத்துவார் பயமில்லையே

3. முந்தினதை நீ யோசிக்காதே
பூர்வமானதை சிந்திக்காதே
மேலானதை நீ சுதந்தரிக்க
வேரூன்ற செய்வார் பயமில்லையே

அல்லேலூயா -6
ஓசன்னா -6

Tamil Hymns

942. என்னை நடத்தும் இயேசு நாதா

என்னை நடத்தும் இயேசு நாதா
உமக்கு நன்றி ஐயா
எனக்குள் வாழும் எந்தன் நேசா
உமக்கு நன்றி ஐயா

1. ஒளியாய் வந்தீர் வழியைத் தந்தீர்
உமக்கு நன்றி ஐயா
அழிவில் நின்று பாதுகாத்தீர்
உமக்கு நன்றி ஐயா

2. தேடி வந்தீர் பாட வைத்தீர்
உமக்கு நன்றி ஐயா
ஓடி ஓடி உழைக்கச் செய்தீர்
உமக்கு நன்றி ஐயா

3. பாவமில்லா தூய வாழ்வு
வாழச் செய்பவரே பூவாய்
வளர்ந்து பூத்துக் குலுங்கி
மலரச் செய்பவரே

4. துயரம் நீக்கி ஆறுதல் தந்தீர்
உமக்கு நன்றி ஐயா
புலம்பல் மாற்றி ஆனந்தம் தந்தீர்
உமக்கு நன்றி ஐயா

5. உலகம் மாயை எல்லாம் மாயை
உணர்ந்தேன் உணர்ந்துக் கொண்டேன்
உறவு பாசம் குப்பையென்றறிந்து
உம்மையே பின் தொடர்ந்தேன்

6. கலக்கம் நீக்கி கண்ணீர் துடைத்தீர்
உமக்கு நன்றி ஐயா
கவலை மாற்றி கரத்தால் அணைத்தீர்
உமக்கு நன்றி ஐயா

Tamil Hymns

943. என்னை நிரப்பும் இயேசு தெய்வமே

என்னை நிரப்பும் இயேசு தெய்வமே
இன்று நிரப்பும் உந்தன் ஆவியால்

1. பேய்கள் ஓட்டி நோய்களைப் போக்கி
பெலனே வாருமே
பெலவீனம் நீக்கி பலவானாய் மாற்றும்
வல்லமையே வாருமே

2. தேற்றரவாளன் பரிசுத்த ஆவி
தேற்றிட வாருமே
ஆற்றலைக் கொடுத்து அன்பால் நிரப்பும்
ஆவியே வாருமே

3. வரங்களைக் கொடுத்து வாழ்வை அளிக்கும்
வள்ளலே வாருமே
கனிகளால் நிரப்பி காயங்கள் ஆற்றும்
கருணையே வாருமே

4. கோபங்கள் போக்கி சுபாவங்கள் மாற்றும்
சாந்தமே வாருமே
பாவங்கள் கழுவி பரிசுத்தமாக்கும்
பரமனே வாருமே

Tamil Hymns

944. என்னை நேசிக்கின்றாயா

என்னை நேசிக்கின்றாயா
என்னை நேசிக்கின்றாயா
கல்வாரிக் காட்சியை கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பாயா

1. வானம் பூமி படைத்திருந்தும்
வாடினேன் உன்னை இழந்ததினால்
தேடி இரட்சிக்க பிதா என்னை அனுப்பிடவே
ஓடி வந்தேன் மானிடனாய்

2. பாவம் பாரா பரிசுத்தர் நான்
பாவி உன்னை அழைக்கின்றேன் பார்
உன் பாவம் யாவும் சுமப்பேன் என்றேன்
பாதம் தன்னில் இளைப்பாற வா

3. பாவத்தின் அகோரத்தைப் பார்
பாதகத்தின் முடிவினைப் பார்
பரிகாசச் சின்னமாய் சிலுவையிலே
பலியானேன் பாவி உனக்காய்

உம்மை நேசிக்கின்றேன் நான் - 2
கல்வாரிக் காட்சியைக் கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பேனோ

Tamil Hymns

945. என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்

என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்,
ஏற்றுக் கொள்ளும், யேசுவே

அன்னை தந்தை உந்தம்
சன்னதி முன்னின்று - சொன்ன
வாக்குத்தத்த மல்லாது இப்போது

1. அந்தகாரத்தினின்றும் பவப்பேய்
அடிமைத் தனத்தி னின்றும்
சொந்த ரத்தக் கிரயத்தால் எனைமீட்ட
எந்தையே உந்தனுக்கிதோ! படைக்கிறேன்

2. ஆத்ம சரீரமதை உமக்கு
ஆதீன மாக்கி வைத்தேன் பாத்ரமதாய்
அதை பாவித்துக் கொள்ளக் - 2
காத்திருக்கின்றேன் கருணைசெய் தேவா

3. நீதியி னாயுதமாய் அவயவம்
நேர்ந்து விட்டேன் உமக்கு
ஜோதி பரிசுத்த ராலய மாகவே
சொந்தமாய்த் தந்தேன் என்றன் சரீரத்தை

Tamil Hymns

946. என்னை பெலப்படுத்தும் இயேசுவாலே

என்னை பெலப்படுத்தும் இயேசுவாலே
கூடாத காரியம் ஒன்றுமில்லை

எழுந்து புறப்படு நீ எழுந்து புறப்படு
உனக்கு சுகம் தருவார் பெலன் தருவார்
உனக்கு ஒரு ஜெயம் தருவார் -2

1.கன்மலையை பிளந்திடுவார்
உன் தாகத்தை தீர்த்திடுவார்
கானாவூரின் கல்யாணத்தின்
சந்தோஷம் தந்திடுவார்

2.சோர்வை மாற்றிடுவார்
புது பெலனை தந்திடுவார்
கழுகு போல செட்டையடித்து
உன்னை உயரச் செய்திடுவார்

3. அற்புதம் காணச் செய்வார்
உன்னை அதிசயமாய் நடத்துவார் உன்
குறைவுகளெல்லாம் நிறைவாக்குவார்
உன்னை ஆசீர்வதிப்பார்

Tamil Hymns

947. என்னைப் பெலப்படுத்தும்

என்னைப் பெலப்படுத்தும் இயேசுகிறிஸ்துவால்
எல்லாமே செய்து நான் முடித்திடுவேன்

1. கர்த்தர் என் வெளிச்சமும் எனது மீட்புமானார்
அவரே ஜீவனும் வாழ்வின் பெலனுமானார்

2. தீயோர் என் உடலை விழுங்க நெருங்கையில்
இடறிவிழுந்தார்கள் இல்லாமல் போனார்கள்

3. படையே எனக்கெதிராய் பாளையம் இறங்கினாலும்
என் நெஞ்சம் அஞ்சாது நம்பிக்கை இழக்காது

4. கேடுவரும் நாளிலே கூடாரமறைவினிலே
மறைத்து வைத்திடுவார் பாதுகாத்திடுவார்;

5. எனக்கு எதிரான மனிதர் முன்னிலையில்
என் தலை நிமிரச் செய்வார் வெற்றி காண செய்வார்

6. அப்பாவின் கூடாரத்தில் ஆனந்த பலியிடுவேன்
பாடல் பாடிடுவேன் நடனமாடிடுவேன்

7. நாட்கள் கூட கூட பெலனும் பெருகிவிடும்
இரும்பும் வெண்கலமும் பாதத்தின் கீழ் இருக்கும்

Tamil Hymns

948. என்னை பெலப்படுத்தும் கிறிஸ்துவினால்

என்னை பெலப்படுத்தும் கிறிஸ்துவினால்
எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு
என்னை திடப்படுத்து தேவனால்
எதையும் வென்றிடுவேன்

தோல்வி எனக்கில்லையே - நான்
தோற்று போவதில்லையே
ஜெயம் தரும் தேவன்
வெற்றியைத் தந்திடுவார்

1. பிசாசை வென்றிடுவேன்
சாத்தானை ஜெயித்திடுவேன்
கர்த்தரின் நாமத்தில் ஜெயித்திடுவேன்
தோல்வியை ஜெயமாக மாற்றிடுவேன்

2. கிறிஸ்து எனக்கு ஜீவன்
சாவு எந்தன் ஆதாயம்
நித்திய ஜீவன் பெற்றிடுவேன்
ஜெயவேந்தனோடு வாழ்ந்திடுவேன்

3. மதிலைத் தாண்டிடுவேன்
எரிகோவைத் தகர்த்திடுவேன்
செங்கடல் பிளந்திடுவேன்
யோர்தானைக் கடந்திடுவேன்

Tamil Hymns

949. என்னை மறவா இயேசு நாதா

என்னை மறவா இயேசு நாதா
உந்தன் தயவால் என்னை நடத்தும்

1. வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள்
வரைந்தெனக்காய் ஈந்ததாலே ஸ்தோத்திரம்
ஆபத்திலே அரும் துணையே
பாதைக்கு நல்ல தீபமிதே

2. பயப்படாதே வலக்கரத்தாலே
பாதுகாப்பேன் என்றதாலே ஸ்தோத்திரம்
பாசம் என் மேல் நீர் வைத்ததினால்
பறிக்க இயலாதெவருமென்னை

3. தாய் தன் சேயை மறந்து விட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே ஸ்தோத்திரம்
வரைந்தீரன்றோ உம் உள்ளங்கையில்
வல்லவா எந்தன் புகலிடமே

4. திக்கற்றோராய் கைவிடேனே
கலங்கிடீரே என்றதாலே ஸ்தோத்திரம்
நீர் அறியா யாதும் நேரிடா
என் தலை முடியும் எண்ணினீரே

5. உன்னை தொடுவேன் என் கண்மணியை
தொடுவதாக உரைத்ததாலே ஸ்தோத்திரம்
அக்கினியின் மதிலாக
அன்பரே என்னைக் காத்திடும்

6. உனக்கெதிராய் எழும்பும் ஆயுதம்
வாய்த்திடாதே என்றதாலே ஸ்தோத்திரம்
பறந்திடுமே உம் நாமத்திலே
பரனே எனக்காய் ஜெயக் கொடியே

7. என்னை முற்றும் ஒப்புவித்தேனே
ஏற்று என்றும் நடத்துவீரே ஸ்தோத்திரம்
எப்படியும் உம் வருகையிலே
ஏழை என்னை சேர்த்திடுமே

Tamil Hymns

950. என்னை மறவாதவரே என்னில்

என்னை மறவாதவரே
என்னில் நினைவானவரே
உம்மை நான் நம்புவேனைய்யா
நேசர் இயேசய்யா
உயிருள்ள நாளெல்லாம்
நான் நம்புவேனைய்யா

1. தாயானவள் தன் பாலனை
மறந்தாலும் நான் மறவேனே
உன்னை எந்தன் உள்ளங்கையில்
வரைந்து வைத்தேனே - உன்னை
மறவாமல் எந்நாளும் நினைத்திடுவேனே

2. இமைப்பொழுது எந்தன் முகத்தை
மறைத்தாலும் உனக்கு இரங்குவேன்
மலைகள் விலகி பர்வதங்கள்
நிலைபெயர்ந்தாலும் - எந்தன்
சமாதானம் உன்னைவிட்டு விலகிவிடாது

3. உன் தாய் உன்னை தேற்றிடும் போல
நான் உன்னை தேற்றிடுவேனே
தண்ணீரைக் கடக்கும்போதும்
உன்னுடன் இருப்பேன்
அக்கினியில் நடக்கும்போதும்
கூடவே நடப்பேன்

Tamil Hymns

951. என்னை வல்லடிக்கு நீக்கி உம்

என்னை வல்லடிக்கு நீக்கி
உம் கரங்களால் தூக்கி
உன்னதத்தில் வைத்ததை மறப்பேனோ
நீர் சொன்னதினால் நான்
பிழைத்துக்கொண்டேன்
நீர் கண்டதினால் நான் ஜீவன் பெற்றேன்
எங்கள் ஆதரவே எங்கள் அடைக்கலமே
எங்கள் மறைவிடமே உம்மை ஆராதிப்பேன்

1. ஆழத்தில் இருந்தென்னை தூக்கிவிட்டீர்
உயர்வான தளங்களில் நிறுத்தி வைத்தீர்
எதிரான யோசனை அதமாக்கினர்
உந்தனின் யோசனை நிறைவேற்றினீர்

2. ஆயிரம் என்னோடு போரிட்டாலும்
என்னை மேற்கொள்ளும் அதிகாரம் பெறவில்லையே
கிருபையினால் என்னை மூடிக்கொண்டீர்
நான் தள்ளுண்ட இடங்களில் உயர்த்தி வைத்தீர்

3. கரடான பாதையில் தூக்கிச் சென்றீர்
முள்ளுள்ள இடங்களில் சுமந்து கொண்டீர்
எனக்காக குறித்ததை எனக்கு தந்தீர்
நீர்தந்த தரிசனம் நிறைவேற்றினீர்

Tamil Hymns

952. என்னை வாழவைக்கும் அன்பு தெய்வமே

என்னை வாழவைக்கும் அன்பு தெய்வமே
என்னை தாங்கி நடத்தும் அன்பு இயேசுவே
நீங்க இல்லாத ஒரு நிமிஷம் கூட
என்னால நெனச்சு பார்க்க முடியல

1. நான் போகும் இடமெல்லாம்
நீங்க வரணும் நான் அமரும்
இடமெல்லாம் நீங்க அமரணும் - நான்
பேசும் பேச்சிலெல்லாம் நீங்க இருக்கணும்
நீங்க இல்லாம நான் இல்லையே

2. கண்ணீரில் நான் நடந்து போது
கண்ணீரை துடைத்தெறிந்த தேவனே
கலங்கியே நின்ற எந்தன் வாழ்வில்
ஒளியாக வந்துதித்த தெய்வமே

3. தனிமையிலே நான் நடந்து போது
தோளோடு தோள் கோர்த்த தேவனே
தவறி நான் கீழே விழுந்த போது
தூக்கியே சுமந்து சென்ற தெய்வமே

953. என்னை வெறுமையாக்கினேன்

என்னை வெறுமையாக்கினேன்
உம்மை மகிமைப்படுத்தினேன்

1. நான் யார் நான் யார் ஒரு மனிதன் தானே
நான் யார் நான் யார் வெறும் களிமண்தானே

2. நான் யார் நான் யார் ஒரு மனுஷி தானே
நான் யார் நான் யார் வெறும் தூசி தானே

3. இல்லை இல்லை நான் ஒன்றும் இல்லை
உந்தன் கையில் நான் சிறுபிள்ளை

Tamil Hymns

954. என்னையே அற்பணித்தேன் இயேசுவே

என்னையே அற்பணித்தேன் இயேசுவே
உம் சேவைக்கே ஆவி ஆத்மா சரீரத்தில்
ஜெயம் தந்தாட் கொள்வீர்; (2)
(என்னையே அற்பணித்தேன்.......)

லோக சிற்றின்பம் வேண்டிலேன்
தியாகத்தின் பாதையிலே (2)
பூலோக நேசம் போதுமே போதும் உம் அன்பென்றுமே (2)
(என்னையே அற்பணித்தேன்.......)

பாரில் பாடுகள் வந்தாலும்
நோய் பணி வருத்தினாலும் (2)
வளுவாமல் தினம் சென்றிட வல்லமை ஈந்திடுவீர்; (2)
(என்னையே அற்பணித்தேன்.......)

ஜீவ காலம் முழுவதும்
தேவனின் சேவை செய்வேன் (2)
என் சித்தம் யாவும் நீக்கியே உம் சித்தம் செய்திடுவேன் (2)
(என்னையே அற்பணித்தேன்.......)

955. என்னோடு நீ பேச வந்தாய் என்

என்னோடு நீ பேச வந்தாய்
என் வாழ்வை நீ மாற்றி நின்றாய்
என் தெய்வமே - 2
நீயின்றி நானில்லையே
உன் நினைவின்றி வாழ்வில்லையே

1. இதயத் தாகம் நீ இருளில் தீபம் நீ
உதயக் காலம் நீ உறவின் பாலம் நீ
தள்ளாடி நான் தடுமாறினேன்
கண்மூடி நான் வழிமாறினேன்
தீயாகும் துன்பங்களில் நீ தாயாகித் தாலாட்டினாய்

2. உயிரின் கீதம் நீ உலகின் வேதம் நீ
மழையின் மேகம் நீ மலரின் மணமும் நீ
என் பாதையில் முன் போக வா
கண் போலவே எனைக் காக்க வா
ஆதரம் நீயாகவே உன் அன்பொன்றே எனதாகவே

Tamil Hymns

956. என்னோடு கூட சேர்ந்து அவரை

என்னோடு கூட சேர்ந்து அவரை பாடுவீர்களா
ஆமென் அல்லேலூயா
என்னோடு கூட சேர்ந்து அவரை துதிப்பீர்களா
ஆமென் அல்லேலூயா

நீரே   சர்வ வல்ல தேவனே
நீரே   நாங்கள் நம்பும் தேவனே
நீரே   எங்கள் துதிக்கு பாத்திரர்
ஆமென் அல்லேலூயா
ஆமென் அல்லேலூயா

1. பெயர் சொல்லி அழைத்தவர் அவரே அவரே
நம் தாழ்வில் நினைத்தவர் அவரே அவரே
இம்மட்டும் நடத்தினவர் அவரே அவரே

2. யுத்தத்தில் வல்லவர் அவரே அவரே
யூதாவின் ராஜசிங்கம் அவரே அவரே
சேனைகளின் கர்த்தரும் அவரே அவரே
சர்வத்தை ஆள்பவர் அவரே அவரே

957. என்னோடு பேசும் இயேசுவே

என்னோடு பேசும் இயேசுவே
நீர் வந்து பேசாதிருந்தால்
என் வாழ்க்கை தொலைந்துபோகுமே
என் வாழ்க்கை சிதைந்து போகுமே
தந்தை தன் குழந்தை கூட பேசாதிருப்பாரோ
தாயும் குழந்தை கேட்க கொஞ்சாதிருப்பாளோ
நான் உந்தன் குழந்தை அல்லவோ
என்னோடு பேசமாட்டீரோ ?
உம் வார்த்தையாலே கடல் தலைகுனிந்தது
உம் வார்த்தையாலே காற்று திரும்பிப் போனது
அவைகளோடு பேசினீரே
என்னோடு பேசமாட்டீரோ ?

Tamil Hymns

958. என்னோடிரும் மா நேச கர்த்தரே

1. என்னோடிரும் மா நேச கர்த்தரே
வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே
மற்றோர் சகாயம் அற்றபோதிலும்
நீங்கா ஒத்தாசை நீர் என்னோடிரும்

2. நீர்மேல் குமிழிபோல் என் ஆயுசும்
இம்மையின் இன்ப வாழ்வும் நீங்கிடும்
கண் கண்ட யாவும் மாறி வாடிடும்
மாறாத கர்த்தர் நீர், என்னோடிரும்

3. நீர் கூடநின்று அருள் புரியும்
பிசாசின் கண்ணிக்கு நான் தப்பவும்
என் துணை நீர், என் தஞ்சமாயிரும்
இக்கட்டில் எல்லாம் நீர் என்னோடிரும்

4. நீர் ஆசீர்வதித்தால் கண்ணீர் விடேன்
நீரே என்னோடிருந்தால் அஞ்சிடேன்
சாவே எங்கே உன் கூரும் ஜெயமும்
நான் உம்மால் வெல்ல நீர் என்னோடிரும்

5. நான் சாகும் அந்தகார நேரத்தில்
உம் சிலுவையைக் காட்டும் சாகையில்
விண் ஜோதி வீசி இருள் நீக்கிடும்
வாழ்நாள் சாங்காலிலும் என்னோடிரும்

6. நியாயம் தீர்ப்போராக என்னண்டை
வராமல் சாந்தம் தயை கிருபை
நிறைந்த மீட்பராக சேர்ந்திடும்
நீர் பாவி நேசரே என்னோடிரும்

Tamil Hymns

959. என்னை ஜெனிப்பித்தவரும் நீர்தானே

என்னை ஜெனிப்பித்தவரும் நீர்தானே
என்னை பெற்றெடுத்தவரும் நீர்தானே
எனக்கு பேரு வச்சவரும் நீர்தானே
என்னை வளர்த்தவரும் நீர்தானே

கன்மலையே.... கன்மலையே (2)
உமக்கே ஆராதனை (2)

1. தாயின் அன்பிலும் மேலான அன்பு
அளவேயில்லாத உண்மையான அன்பு
எனக்காக அடிக்கப்பட்டார்
எனக்காக நொறுக்கப்பட்டீர்
நான் வாழ மரித்தீரே
எனக்காக உயிர்த்தீரே

2. என்மேல் கிருபை வைத்து இரட்சிப்பை
தந்தவரே-இதற்கு ஈடு இணை
பூமியிலே இல்லையப்பா
என் மேல் அன்பு வைத்து
பரிகாரம் செய்தீரே
பாவமில்லை மரணமில்லை
நித்திய ஜீவனை தந்தீரே

3. உமக்கு நிகரான தெய்வமொன்றும்
இல்லையப்பா-அகில உலகத்திற்கும்
ஆண்டவரும் நீர்தானே
முடிவில்லா இராஜ்யத்தை
அரசாளும் தெய்வம் நீரே
கண்ணீரெல்லாம் துடைத்திடுவீர்
நித்திய மகிழ்ச்சியே நீர்தானே

Tamil Hymns

960. எஜமானனே என் இயேசு ராஜனே

எஜமானனே என் இயேசு ராஜனே
எண்ணமெல்லாம் ஏக்கமெல்லாம்
உம் சித்தம் செய்வதுதானே-என்
எஜமானனே எஜமானனே
என் இயேசு ராஜனே

1. உமக்காகத்தான் வாழ்கிறேன்
உம்மைத்தான் நேசிக்கிறேன் (நான்)
பலியாகி எனை மீட்டீரே (2)
பரலோகம் திறந்திரையா (2)

2. உயிர் வாழும் நட்களெல்லாம்
ஓடி ஓடி உழைத்திடுவேன் -நான்
அழைத்தீரே உம் சேவைக்கு - என்னை
அதை நான் மறப்பேனோ

3. அப்பா உம் சந்நிதியில் தான்
அகமகிழந்து களிகூருவேன் - இயேசு
எப்போது உம்மைக் காண்பேன் -நான்
ஏங்குதய்யா என் இதயம்

4. என் தேச எல்லையெங்கும்
அப்பா நீ ஆள வேண்டும்
வறுமை எல்லாம் மாறணும் -தேசத்தின்
வன்முறை எல்லாம் ஒழியணும்

961. எஜமானனே எஜமானனே

1. எஜமானனே எஜமானனே
உம் சேவைக்காய் என்னை அழைத்தீர் - 2
அழியும் என் கைகளை கொண்டு
அழியா உம் ராஜ்ஜியம் கட்ட
பைத்தியமான என்னை தெரிந்தெடுத்தீர்

ஆராதிப்பேன் அதை எண்ணியே
வாழ்நாளெல்லாம் உம்மை மட்டுமே
ஆராதிப்பேன் ஆராதிப்பேன் (4)

2. என்னில் என்ன நன்மை கண்டீர்
என்னை அழைத்து உயர்த்தி வைத்தீர்

3. உம் சித்தத்தை நான் செய்வதே
அனுதினமும் என் போஜனம்

Tamil Hymns

962. ஏசுவையே துதிசெய்

ஏசுவையே துதிசெய், நீ மனமே
ஏசுவையே துதிசெய் - கிறிஸ் தேசுவையே

ஏசுவையே துதிசெய், நீ மனமே
ஏசுவையே துதிசெய் - கிறிஸ் தேசுவையே

1. மாசணுகாத பராபர வஸ்து
நேசகுமாரன் மெய்யான கிறிஸ்து

2. அந்தரவான் தரையுந் தரு தந்தன்
சுந்தர மிகுந்த சவுந்தரா நந்தன்

3. எண்ணின காரியம் யாவு முகிக்க
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க

Tamil Hymns

963. ஏதாவது ஏதாவது ஏதாவது செய்யவேண்டும்

ஏதாவது ஏதாவது ஏதாவது
செய்யவேண்டும் ஒவ்வொரு நாளும்
என் இயேசு ராஜாவுக்கு

1. துதிக்க வேண்டும் ஜெபிக்க வேண்டும்
துரத்த வேண்டும்
சாத்தானை துரத்த வேண்டும்

2. செல்ல வேண்டும் தேசமெங்கிலும்
சொல்ல வேண்டும் இயேசுவின்
சுவிசேஷத்தை

3. தாங்க வேண்டும் ஊழியங்களை
நமது ஜெபத்தால் நமது பணத்தால்

964. ஏதேனில் ஆதி மணம்

ஏதேனில் ஆதி மணம் உண்டான நாளிலே
பிறந்த ஆசீர்வாதம் மாறாதிருக்குமே

1. இப்போதும் பக்தியுள்ளோர்
விவாகம் தூய்மையாம் -மூவர்
பிரசன்னமாவார் மும்முறை வாழ்த்துண்டாம்

2. ஆதாமுக்கு ஏவாளை
கொடுத்த பிதாவே -இம்மாப்பிள்ளைக்கிப்
பெண்ணை கொடுக்க வாருமே

3. இரு தன்மையும் சேர்ந்த
கன்னியின் மைந்தனே -இவர்கள்
இரு கையும் இணக்க வாருமே

4. மெய் மணவாளனான
தெவ குமாரர்க்கே -சபையாம்
மனையாளை ஜோடிக்கும் ஆவியே

6. நீரும் இந்நாளில் வந்து
இவ்விரு பேரையும் - இணைத்து
அன்பாய் வாழ்த்தி மெய்ப் பாக்கியம் ஈந்திடும்

7. கிறிஸ்துவின் பாரியோடே
எழும்பும் வரைக்கும் - எத்தீங்கில்
நின்று காத்து பேர் வாழ்வு ஈந்திடும்

Tamil Hymns

965. ஏதுக்கழுகிறாய் நீ

ஏதுக்கழுகிறாய் நீ ஏதுக்கழுகிறாய் நீ
ஏழை மாது நான் என்ன செய்வேன்
கூதலடிக்கிறதோ பாலா
குளிரும் பொறுக்கலையோ

1. தந்தைக்கு தச்சு வேலை
பாலா தாயும் எளியவளே
இந்த மா சங்கடத்தில்
பாலா என்ன பெருமையுண்டு!

2. ஜோதியே சுந்தரமே
மனுஜாதியை மீட்க வந்த
நாதனே நீர் அழுதால்
இந்த நாடும் சிரியாதோ

3. இல்லாத ஏழைகட்கு
இன்பம் எல்லாம் அளிக்க வந்த
செல்வமே நீர ழுதால்
ஏழை மாது நான் என்ன செய்வேன்

4. மூடத் துணியில்லையோ
இந்த மாடடையுங்
கொட்டிலிலே வாடையடிக்கிறதோ
பாலா கலங்கித் தவிக்கிறாயோ

5. வான்தூதர் தாலாட்டைக்
கேட்ட மாமணியே உனக்கு
நான் பாடும் தாலாட்டு கேட்க
நன்றாயிருக் கலையோ

6. அன்பற்றோர் தேசத்தில்
அழுதால் யாரும் உருகுவாரோ
இன்பமே ரஞ்சிதமே
மகனே ஏங்கி அழாய் அரசே

Tamil Hymns

966. ஏலோகிம் ஏலோகிம் எங்கும்

ஏலோகிம் ஏலோகிம் எங்கும் நிறைந்தவரே
எல்ஷடாய் எல்ஷடாய் நீர் சர்வ வல்லவரே

1. யேகோவா ஷம்மா உம் சமுகத்தில் அழைத்து
யேகோவா ஓசேனு உருவாக்குகின்றீர்
உம் சமுகத்தில் அழைத்து உருவாக்குகின்றீர்

2. யேகோவா ஏலியோன் உன்னத தேவனே
யேகோவா மெக்காதீஸ் பரிசுத்தமாக்குமே
உன்னத தேவனே பரிசுத்தமாக்குமே

3. எபெனேசர் நீரே உதவி செய்தீரே
யேகோவா நிசியே வெற்றி தந்தீரே
உதவி செய்தீரே வெற்றித் தந்தீரே

Tamil Hymns

967. ஏழைகளின் பெலனே எளியவரின்

ஏழைகளின் பெலனே
எளியவரின் திடனே
புயல் காற்றிலே என் புகலிடமே
கடும் வெயிலினிலே குளிர் நிழலே

1. கர்த்தாவே நீரே என் தேவன் நீரே என் தெய்வம்
உம் நாமம் உயர்த்தி உம் அன்பைப் பாடி
துதித்து துதித்திடுவேன்
அதிசயம் செய்தீர் ஆண்டவரே

2. தாயைப் போல தேற்றுகிறீர், ஆற்றுகிறீர்
தடுமாறும் போது தாங்கி அணைத்து
தயவோடு நடத்துகிறீர்
உம் மடியிலே தான் இளைப்பாறுவேன்

Tamil Hymns

968. ஏழை மனுவுருவை எடுத்த

ஏழை மனு உருவை எடுத்த
இயேசு ராஜன் உன்னண்டை நிற்கிறார்
ஏற்றுக்கொள் அவரைத் தள்ளாதே

1. கைகளில் கால்களில் ஆணிகள் கடாவ
கடும் முள் முடி பொன் சிரசில் சூடிட
கந்தையும் நிந்தையும் வேதனையும் சகித்தார்
சொந்தமான இரத்தம் சிந்தினார் உனக்காய்
கனிவுடன் உன்னை அழைக்கிறாரே

2. அவர் தலையும் சாய்க்க
ஸ்தலமுமில்லை அன்று
தாகத்தைத் தீர்க்கவோ பானமுமில்லை
ஆறுதல் சொல்லவோ அங்கே ஒருவரில்லை
அருமை இரட்சகர் தொங்குகிறார் தனியே
அந்தப் பாடுகள் உன்னை மீட்கவே

3. அவர் மரணத்தால் சாத்தானின் தலை நசுங்க
அவர் ரத்தத்தால் பாவக் கறைகள் நீங்க
உந்தன் வியாதியின் வேதனையும் ஒழிய
நீயும் சாபத்தினின்று விடுதலை அடைய
சிலுவையில் ஜெயித்தார் யாவையும்

4. மாயை உலகம் அதையும் நம்பாதே
மனுமக்கள் மனமும் மாறிப் போகுமே
நித்திய தேவனை நேசித்தால் இப்போதே
நிச்சயம் சந்தோஷம் பெற்று நீ மகிழ
நம்பிக்கையோடே வந்திடுவாய்

5. இன்னமும் தமதம் உனக்கேன் மகனே
இன்ப இயேசுவண்டை எழுந்து வாராயோ
இந்த உலகம் தரக்கூடா சமாதானத்தை
இன்று உனக்குத் தரக் காத்து நிற்கிறாரே
அண்ணல் இயேசுன்னை அழைக்கிறாரே

Tamil Hymns

969. ஏழைக்கு பங்காளராம்

ஏழைக்கு பங்காளராம் பாவிக்கு
இரட்சகராம் -ஏசு என்னும்
திருமகனாம் இதயத்திலே வாழ்பவராம் (2)

1. மரியாள் வளர்த்த மைந்தன் மனித
தெய்வம் அவதரித்தார் - மாடு கட்டும்
தொழுவத்திலே மாணிக்கம் பிறந்ததம்மா (2)
அந்தி வானம் சிவக்குதம்மா அல்லி மலர்
சிரிக்குதம்மா - ஆண்டவராம் இயேசு
பிரான் அன்பு மணம் மணக்குதம்மா (2)

2. முள்முடி சூட்டி வந்த முதல் தலைவன்
இயேசுவுக்கு - கல்வாரி சிலுவையிலே
காயம் பட வைத்தனரே - உயிர்
மரித்தெழுந்த எங்கள் உத்தமரே
இயேசு ஐயா - நீர் இன்றி உலகத்திலே
நீதி தெய்வம் வேறு உண்டோ

Tamil Hymns

970. ஏறுகின்றார் தள்ளாடி

ஏறுகின்றார் தள்ளாடி
தவழ்ந்து களைப்போடே
என் ஏசு குருசை சுமந்தே
என்நேசர் கொல்கதா
மலையின் மேல் நடந்தே ஏறுகின்றார்

1. கன்னத்தில் அவர் ஓங்கி அறைய
சின்னப் பிள்ளை போல் ஏங்கி நின்றார்
அந்தப் பிலாத்தும் கையைக் கழுவி
ஆண்டவரை அனுப்புகிறான்

2. மிஞ்சும் பெலத்தால் ஈட்டி எடுத்தே
நெஞ்சை பிளந்தான் ஆ! கொடுமை
இரத்தமும் நீரும் ஓடி வருதே
இரட்சகரை நோக்கியே பார்

3. இந்தப் பாடுகள் உந்தன் வாழ்வுக்காய்
சொந்தப் படுத்தி ஏற்றுக் கொண்டார்
நேசிக்கின்றாயோ இயேசுநாதரை
நேசித்து வா குருசெடுத்தே

4. சேவல் கூவிடும் மூன்று வேளையும்
சொந்த குருவை மறுதலித்தான்
ஓடி ஒளியும் பேதுருவையும்
தேடி அன்பாய் நோக்குகின்றார்

5. பின்னே நடந்த அன்பின் சீஷன் போல்
பின்பற்றி வா சிலுவை வரை
காடியைப் போல கசந்திருக்கும்
கஷ்டங்களை அவரிடம் சொல்

6. செட்டைகளின் கீழ் சேர்த்தணைத்திடும்
சொந்த தாயின் அன்பதுவே
எருசலேமே! எருசலேமே!
என்றழுதார் கண்கலங்க

Tamil Hymns

971. ஏற்றுக்கொண்டருளுமே தேவா

ஏற்றுக்கொண்டருளுமே, தேவா - இப்போ
ஏழையேன் ஜெபத்தை இயேசுவின் மூலம்

1. சாற்றின ஆதி ஆயத்த ஜெபமும்,
சாந்தமாய் ஜெபித்த பாவ அறிக்கையும்,
தேற்றிக் கொண்டருளும் மன்னிப்பின் மருவும்
திவ்விய பாதத்தில் வைக்கிறேன், ஸ்வாமி

2. குறைவுண்டு இதிலே, அருமைப் பிதாவே
குற்றம் மன்னித்திடும் யேசுவின் மூலம்
முறைப்படி கேட்க நான் தெரியாத பாவி
முழுதும் மேசியாமேல் வைக்கிறேன், ஸ்வாமி

3. மறுரூப ஆவி வேண்டுமென் ஸ்வாமி
மனமெல்லாம் புதிதாக்கிடும் ஸ்வாமி
சிறுமைப்பட் டடியேன், கேட்கிறேன் ஸ்வாமி
தேற்றிடும் புதுபலன் ஊற்றிடும் ஸ்வாமி

4. விசுவாசம் பெருகி நிலைத்திடச் செய்யும்
வெளிப்படும் மறைபொருள் பலப்படச் செய்யும்
சிசுவைப்போல் மறுபடி பிறந்திடச் செய்யும்
தேவாவி என்னுளந் தங்கிடச் செய்யும்

Tamil Hymns

972. ஏன் இந்தப் பாடுகள் உமக்கு

ஏன் இந்தப் பாடுகள் உமக்கு
என் இயேசுவே காயங்கள் எதற்கு
கைகள் கால்களில் ஆணிகள் பாய
கோர காட்சியும் எதற்கு

1. சிந்தையில் பாவம் செய்ததால் தான்
சிரசினில் முள்முடி அறைந்தனரா
இரத்தம் ஆறாக ஓடிடுதே
இதயம் புழுவாக துடிக்கிறதே

2. தியாகமாய் ஜீவனை ஈந்ததாலே
தருகிறேன் எந்தன் இதயமதை
தாகமாய் சிலுவையில் தொங்கினீரே
தாகத்தை தீர்த்திட வருகின்றேன்

Tamil Hymns

973. ஏன் மகனே (மகளே) இன்னும்

ஏன் மகனே (மகளே) இன்னும்
இன்னும் பயம் உனக்கு
ஏன் நம்பிக்கை இல்லை?
உன்னோடு நான் இருக்க
உன் படகு மூழ்கிடுமோ?

கரை சேர்ந்திடுவாய் (நீ) கலங்காதே -2

1. நற்கிரியை தொடங்கியவர்
நிச்சயமாய் முடித்திடுவார்-உன்னில்
திகிலூட்டும் காரியங்கள்
செய்திடுவார் உன் வழியாய் -கரை

2. நீதியினால் ஸ்திரப்படுவாய்
கொடுமைக்கு நீ தூரமாவாய்
திகில் உன்னை அணுகாது
பயமில்லாத வாழ்வு உண்டு

3. படைத்தவரே உனக்குள்ளே
செயலாற்றி மகிழ்கின்றார் - உன்னைப்
விருப்பத்தையும் ஆற்றலையும்
தருகின்றார் அவர் சித்தம் செய்ய

4. வழுவாமல் காத்திடுவார்
நீதிமானாய் நிறுத்திடுவார்
மகிமையுள்ள அவர் சமுகத்திலே
மகிழ்வோடு நிற்கச் செய்வார்

5. வழி தவறி சாய்ந்தாலும் இதுதான்
வழி குரல் கேட்கும்
கூப்பிடுதல் சத்தம் கேட்பார்
மனம் இரங்கி பதிலளிப்பார்

Tamil Hymns

974. ஐயரே நீர் தங்கும் என்னிடம்

1.ஐயரே நீர் தங்கும் என்னிடம்
ஐயரே நீர் தங்கும் இப்போதே
அந்தி நேரமே பொழு தஸ்மிச்சாசே
ஐயரே நீர் இரங்கும்

2.பகல் முழுதுங் காத்தீர் சென்ற
பகல் முழுதுங் காத்தீர் தோத்திரம்
பரமனே இந்த இரவிலும் வாரும்
பாவியை நீர் காரும்

3.தங்கா தொருபொருளும் என்னிடம்
தங்கா தொருபொருளும் யேசு
தற்பரனே நீர் ஒருவரேயென்னில்
தங்கித் தயை புரியும்

4.உயிரே துமையன்றிப் பாவிக்
குயிரே துமையன்றி என்றன்
உடல் உயிர் உம்மால் உய்கிறதையா
உத்தமனே தங்கும்

5.நீர் தங்கிடும் வீட்டில் யேசுவே
நீர் தங்கிடும் வீட்டில் எல்லாம்
நிறைவே குறைவுண்டாமே கர்த்தா
நின்னை விடமாட்டேன்

6.என்பாவம் மனியும் இறையே
என்பாவம் மனியும் அப்போது
எளியன் உம்மோ டயர்வேன் இரவில்
எனக்கோர் திகிலேது

7.எனக்கு நீர்காவல் என்றும்
எனக்கு நீர்காவல் என்றன்
இனத்தார் ஜனத்தார் எளியோர் வலியோர்
எல்லவர்க்குங் காவல்

8.உம்மோடே படுப்பேன் ஐயா
உம்மோடே படுப்பேன் இரவில்
உம்மோ டயர்வேன் சேதமில்லாமல்
உம்மோ டெழுந்திருப்பேன்

Tamil Hymns

975. ஐயனே உமது திருவடிகளுக்கே

ஐயனே! உமது திருவடிகளுக்கே
ஆயிரந்தரந் தோத்திரம்!
மெய்யனே! உமது தயைகளை
அடியேன் விவரிக்க எம்மாத்திரம்?

1. சென்றதாம் இரவில் தேவரீனென்னைச்
சேர்த்தரவணைத்தீரே
அந்தடைவாயிப் பகலிலுங்
கிருபை யாகவா தரிப்பீரே

2. இருதயந் தனை நீர் புதியதே யாக்கும்
ஏழையைக் குணமாக்கும்
கருணையாய் என்னை உமதகமாக்கிக்
கன்மமெல்லாம் போக்கும்

3. நாவிழி செவியை, நாதனே இந்த
நாளெல்லாம் நீர் காரும்
தீவினை விலகிநான் திருமுகம் நோக்க,
தெய்வமே, அருள்கூரும்.

4. கை காலால் நான் பவம்புரி யாமல்
சுத்தனே துணை நில்லும்
துய்யனே, உம்மால் தான் எனதிதயம்
தூய்வழியே செல்லும்

6. ஊழியந்தனை நான் உண்மையாச் செய்ய
உதவி நீர் செய்வீரே
ஏழைநான் உமக்கே இசைய
நல் ஆவி இன்பமாய்ப் பெய்வீரே

7. அத்தனே! உமது மகிமையை நோக்க,
அயலான் நலம்பார்க்கச்
சித்தமாய் அருளும், மெய்விசுவாசம்,
தேவனே உமக்கேற்க

8. இன்றும் என் மீட்பைப் பயம்
நடுக்கத்தோடேயடியேன் நடத்தப்
பொன்றிடா பலமே தாரும்,
என் நாளைப் பூவுலகில் கடத்த

Tamil Hymns

9. இந்த நாளிலுமே திருச்சபை வளர
ஏகா தயைகூரும்
தந்தையே, நானதற்கு
தவியாயிருக்கத் தற்பரா வரந்தாரும்

Tamil Hymns

976. ஐயா உமது சித்தம் ஆகிடவே

ஐயா உமது சித்தம் ஆகிடவே வேணும்
மெய்யாய் எனது சித்தம்
வெகு மோசமே காணும்

1. ஆடுபோல் வழி தப்பி அவனவன்
வழி யொப்பி கேடடைந்தோர்
பாவத்தைக் கிறிஸ்துமேல் சுமத்தினீர்

2. ஜீவனோ, மரணமோ, செல்வமோ,
வறுமையோ, யாவிலெனை
நிறுத்த தேவரீர் நினைக்கினும்

3. வசை, யிசை, பகை,
நேசம், வாழ்வுயர், வதிமோசம்
பசி நிர்வாணம் நாசம் பாடு நோயடைகினும்

4. என்னிஷ்டம் வாயாததால் எத்தனை
துயர்கொண்டேன் பொன்னடிக்
கீழடங்கிப் புகழுமக்கென்று வாழ்வேன்

5. குயவன் கைக் களிமண்ணாய்
குருவே யுமக்கமைவேன் நயமிது
வென்றறிந்த ஞானமுள்ள பிதாவே

Tamil Hymns

977. ஐயா உம்திரு நாமம்

ஐயா உம்திரு நாமம்
அகில மெல்லாம் பரவ வேண்டும்
ஆறுதல் உம் வசனம்
அனைவரும் கேட்க வேண்டும்

1. கலங்கிடும் மாந்தர்
கல்வாரி அன்பை
கண்டு மகிழ வேண்டும்
கழுவப்பட்டு வாழ வேண்டும்

2. இருளில் வாழும் மாந்தர்
பேரொளியைக் கண்டு
இரட்சிப்பு அடைய வேண்டும்
இயேசு என்று சொல்ல வேண்டும்

3. சாத்தானை வென்று சாபத்தினின்று
விடுதலை பெற வேண்டும்
வெற்றி பெற்று வாழ வேண்டும்

4. குருடரெல்லாம் பார்க்கணும்
முடவரெல்லாம் நடக்கணும்
செவிடரெல்லாம் கேட்கணுமே
சுவிசேஷம் சொல்லணுமே

978. ஐயையா நான் வந்தேன்

ஐயையா நான் வந்தேன்
தேவ ஆட்டுக்குட்டி வந்தேன் -2

1. துய்யன் நீர் சோரி பாவி எனக்காய்ச் சிந்தித்
துஷ்டன் எனை அழைத்தீர்
தயை செய்வோம் என்றே
இதை அல்லாது போக்கில்லை
தேவாட்டுக்குட்டி, வந்தேன்

2. உள்ளக் கறைகளில் ஒன்றேனம்
தானாய் ஒழிந்தால் வருவேன் என்று
நில்லேன் தெள் உம்உதிரம்
கறை யாவும் தீர்த்திடும்
தேவாட்டுக்குட்டி, வந்தேன்

3. எண்ணம், வெளியே போராட்டங்கள்
உட்பயம் எத்தனை எத்தனையோ!
இவை திண்ணம் அகற்றி
எளியனை ரட்சியும்
தேவாட்டுக்குட்டி வந்தேன்

4. ஏற்றுக்கொண்டு மன்னிப் பீந்து சுத்திகரித்
தென்னை அரவணையும்
மனம் தேற்றிக்கொண்டேன்
உந்தம் வாக்குத்தத்தங்களால்
தேவாட்டுக்குட்டி வந்தேன்

5. மட்டற்ற உம் அன்பினால் தடை எதும்
மாறி அகன்றதுவே - இனி
திட்டமே உந்தம் உடைமை யான் என்றென்றும்
தேவாட்டுக்குட்டி, வந்தேன் --- ஐயையா

Tamil Hymns

979. ஐயையா நான் ஒரு மாபாவி

ஐயையா, நான் ஒரு மாபாவி - என்னை
ஆண்டு நடத்துவீர், தேவாவி!

1. மெய் ஐயா இது தருணம் ஐயா
என்றன் மீதிலிரங்கச் சமயம் ஐயா
ஐயையா இப்போ தென்மேல் இரங்கி
வெகு அவசியம் வரவேணும் தேவாவி!

2. எனதிருதயம் பாழ்நிலமாம்
ஏழை என்னைத் திருத்தி நீர் அன்பாகத்
தினமும் வந்து வழி நடத்தும்
ஞான தீபமே உன்னத தேவாவி!

3. ஆகாத லோகத்தின் வாழ்வை எல்லாம்
தினம் அருவருத்து நான் தள்ளுதற்கு
வாகன சத்த மனம் தருவீர்
நீர் வல்லவராகிய தேவாவி

4. பத்தியின் பாதை விலகாமல்
கெட்ட பாவத்தில் ஆசைகள் வையாமல்
சத்திய வேதப்படி நடக்க என்னைத்
தாங்கி நடத்திடும் தேவாவி

5. அன்பு பொறுமை நற்சந்தோஷம்
என் ஆண்டவரின் மேல் விசுவாசம்
இன்பமிகு மெய்ச் சமாதானம்
இவையாவும் தருவீரே தேவாவி

6. ஏசுகிறிஸ்துவில் நான் சார்ந்து
அவர் இடத்திலேயே நம்பிக்கை வைக்க
மாசில்லாத் துய்யனே, வந்துதவும்
நீர்வராமல் தீராதே தேவாவி

980. ஐயையா நான் பாவி

ஐயையா, நான் பாவி
என்னை ஆளும் தயாபரனே

1. பொய்யாம் உலக உல்லாசாத்தினால்
மனம் போனவழி நடந்தேன்
ஏசையா அபயம்! அபயம்!
இரங்கும்பேர் ஐயா, என் தாதாவே

2. எத்தனை சூதுகள், எத்தனை வாதுகள்,
எத்தனை தீதுகளோ - எனது
அத்தனே! என் பிழை அத்தனையும் பொறுத்
தாண்டருளும், கோவே

3. வஞ்சகமோ, கரவோ, கபடோ
மாய்மாலமோ, ரண்டகமோ
மனச்சஞ்சலம் நீக்கி எனக்கருள் செய்யும்,
சமஸ்த நன்மைக் கடலே

4. பொய்யும் புரட்டும் உருட்டும் திருட்டும்
பொறாமையும், ஆணவமும்,
விட்டுய்யும்படி அருள் செய்யும்
அனாதி ஓர் ஏகதிரித்துவனே

5. உன்னை யாவற்றிலும் பார்க்கச் சிநேகித்
துன தடியார்களையும்
நான் என்னைச் சிநேகிக்கிறாற்போல்
சிநேகிக்க ஏவும் பராபரனே

Tamil Hymns

981. ஐயா நீரன்று அன்னா காய்பாவின் வீட்டில்

1. ஐயா நீரன்று அன்னா காய்பாவின் வீட்டில்
நையவே பட்டபாடு ஏசையாவே
கைகள் கட்டப்பட்டவோ கால்கள் தள்ளாடினவோ
கயவர்கள் தூஷித்தாரோ ஏசையாவே

2. திருமுகம் அருள் மங்க செங்குருதிகள் பொங்க
இருளர் கஸ்திகொடுக்க ஏசையாவே
பொறுமை அன்பு தயாளம் புனிதமாக விளங்க
அருமைப் பொருளதான ஏசையாவே

3. முள்ளின் முடியணிந்து வள்ளலே என்றிகழ
எள்ளளவும் பேசாத ஏசையாவே
கள்ளன் போலே பிடித்துக் கசையால் அடித்து மிகக்
கன்மிகள் செய்த பாவம் ஏசையாவே

4. கற்றூணில் சேர்த்திருக்கிச் செற்றலர்தாம் முறுக்கிக்
கர்வங்கொண்டே தூஷிக்க ஏசையாவே
சற்றுமிரக்கமில்லாச் சண்டாளன் ஓடி வந்து
சாடிக் கன்னத்தறைய ஏசையாவே

5. பொன்னான மேனியதில் புழுதி மிகப்படிய
புண்ணியன் நீர் கலங்க ஏசையாவே
அண்ணலே அன்பருய்ய அவஸ்தைகளைச் சகித்தீர்
அடியேனைக் காத்தருளும் ஏசையாவே

Tamil Hymns

982. ஒப்பற்ற என் செல்வமே ஓ எந்தன்

ஒப்பற்ற என் செல்வமே
ஓ எந்தன் இயேசு நாதா
உம்மை நான் அறிந்து உறவாட
உம் பாதம் ஓடி வந்தேன் - நான்
உம் பாதம் ஓடி வந்தேன்

1. உம்மை நான் ஆதாயமாக்கவும்
உம்மோடு ஒன்றாகவும்
எல்லாமே குப்பையென
எந்நாளும் கருதுகிறேன்

2. என் விருப்பம் எல்லாமே
இயேசுவே நீர் தானன்றோ
உமது மகிமை ஒன்றே
உள்ளத்தின் ஏக்கம் ஐயா

3. கடந்ததை மறந்தேன்
கண்முன்னால் என் இயேசு தான்
தொடர்ந்து ஓடுவேன்
தொல்லைகள் என்ன செய்யும்

Tamil Hymns

983. ஒப்பிட முடியாத தெய்வமே

ஒப்பிட முடியாத தெய்வமே
உயர்ந்த அடைக்கலமே – 2
நீரே என் தெய்வம்
நீரே என் சொந்தம்
நீரே என் பந்தம்
நீரே என் எல்லாம் – ஒப்பிட

1. உம்மைப் போல் வேறே தெய்வம் இல்லை
உயிரோடு எழுந்தவரே

2. என் மேலே உம் பரிதாபங்கள்
என்னை காத்திடுதே

3. மனம் மாற நீர் ஒரு மனுஷனல்ல
தேவனாய் இருக்கின்றீரே

4. நித்திய விவாகத்திற்கென்று
நியமித்துக் கொண்டவரே

5. அரசாள என்னை அழைத்தவரே
அன்பால் இழுத்தவரே

Tamil Hymns

984. ஒப்பில்லா திரு இரா

1. ஒப்பில்லா - திரு இரா! இதில் தான் மா பிதா
ஏக மைந்தனை லோகத்துக்கு
மீட்பராக அனுப்பினது
அன்பின் அதிசயமாம்
அன்பின் அதிசயமாம்

2. ஒப்பில்லா - திரு இரா யாவையும் ஆளும் மா
தெய்வ மைந்தனார் பாவிகளை
மீட்டுவிண்ணுக்குயர்த்த, தம்மை
எத்தனை தாழ்த்துகிறார்
எத்தனை தாழ்த்துகிறார்

3. ஒப்பில்லா - திரு இரா ஜென்மித்தார் மேசியா
தெய்வ தூதரின் சேனைகளை
நாமும் சேர்ந்து, பராபரனை
பூரிப்பாய் ஸ்தோத்திரிப்போம்
பூரிப்பாய் ஸ்தோத்திரிப்போம்

985. ஒப்பில்லாத திவ்விய அன்பே

1. ஒப்பில்லாத திவ்விய அன்பே
மோட்சானந்தா தேவரீர்
எங்கள் நெஞ்சில் வாசம்செய்தே
அருள் பூர்த்தியாக்குவீர்
மா தயாள இயேசு நாதா
அன்பு மயமான நீர்
நைந்த உள்ளத்தில் இறங்கி
உம் ரட்சிப்பால் சந்திப்பீர்

2. உமது நல் ஆவி தாரும்
எங்கள் நெஞ்சு பூரிப்பாய்
உம்மில் சார நீரே வாரும்
சுத்த அன்பின் வடிவாய்
புhவ ஆசை எல்லாம் நீக்கி
ஆடியாரை ரட்சியும்
விசுவாசத்தைத் துவக்கி
முடிப்பவராய் இரும்

3. வல்ல நாதா எங்கள்பேரில்
மீட்பின் அன்பை ஊற்றுமே
விரைவாய் உம் ஆலயத்தில்
வந்து என்றும் தங்குமே
வானோர் போல நாங்கள் உம்மை
நித்தம் வாழ்த்திச் சேவிப்போம்
ஓய்வில்லாமல் உமதன்பை
பூரிப்பாய்க்கொண்டாடுவோம்

4. உந்தன் புது சிஷ்டிப்பையும்
சுத்த தூய்மையாக்குமேன்
உந்தன் திவ்ய ரட்சிப்பையும்
பூரணப்படுத்துமேன்
எங்கள் கிரீடம் உம்முன் வைத்து
அன்பில் மூழ்கிப் போற்றியும்
மேன்மைமேலே மேன்மை பெற்று
விண்ணில் வாழச்செய்திடும்

Tamil Hymns

986. ஒப்புக் கொடுத்தீர் ஐயா உம்மையே

ஒப்புக் கொடுத்தீர் ஐயா
உம்மையே எனக்காக
உலகின் இரட்சகரே உன்னத பலியாக

1. எங்களை வாழவைக்க
சிலுவையில் தொங்கினீர்
நோக்கிப் பார்த்ததினால்
பிழைத்துக் கொண்டோம் ஐயா

2. நித்திய ஜீவன் பெற
நீதிமானாய் மாற
ஜீவன் தரும் கனியாய்
சிலுவையில் தொங்கினீர்

3. சுத்திகரித்தீரே
சொந்த ஜனமாக
உள்ளத்தில் வந்தீர் ஐயா
உமக்காய் வாழ்ந்திட

4. பாவத்திற்கு மரித்து
நீதிக்குப் பிழைத்திட
உம் திரு உடலிலே
என் பாவம் சுமந்தீர் ஐயா

5. மீட்கும் பொருளாக
உம் இரத்தம் தந்தீர் ஐயா
சாத்தானை தோற்கடித்து
சாவையும் வென்றீர் ஐயா

6. என்னையே தருகிறேன்
ஜீவபலியாக
உகந்த காணிக்கையாய்
உடலைத் தருகிறேன்

Tamil Hymns

987. ஒப்புவிக்கிறேன்

1. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
யாவையும் தாராளமாய்
என்றும், அவரோடு தங்கி
நம்பி நேசிப்பேன் மெய்யாய்

ஒப்புவிக்கிறேன், ஒப்புவிக்கிறேன்
நேச இரட்சகர்! நான் யாவும் ஒப்புவிக்கிறேன்.

2. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
அவர் பாதம் பணிந்தேன்
லோக இன்பம் யாவும் விட்டேன்
இன்றே ஏற்றுக் கொள்ளுமேன்.

3. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
முற்றும் ஆட்கொண்டருளும்
நான் உம் சொந்தம் நீர் என் சொந்தம்
சாட்சியாம் தேவாவியும்.

4. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
நாதா! அடியேனையும்
அன்பு பெலத்தால் நிரப்பி
என்னை ஆசீர்வதியும்.

Tamil Hymns

988. ஒப்புவித்தேன் ஐயனே உம் சித்தம்

ஒப்புவித்தேன் ஐயனே
உம் சித்தம் செய்ய தந்தேனே
முற்றிலுமாய் அர்ப்பணித்தேன்
ஏற்றுகொள்ளும் இயேசுவே

1. சுட்டெரிக்கும் அக்கினியாய்
சுத்திகரித்தென்னை மாற்றிடுமே
ஆவி ஆத்துமா சரீரமே
ஆத்தும நேசரே படைக்கிறேன்

2. கண்ணீர் கவலை பெருகுதே
கர்த்தர் தம் வாக்காலே தேற்றிடுமே
உலக ஸ்நேகம் பின்னே வைத்தே
உறுதியாகப் பின் சென்றிட

3. அத்திமரம் துளிர்விடாமல்
ஆஸ்திகள் யாவும் அழிந்திடினும்
கர்த்தர் தம் அன்பை விட்டு நீங்கா
தூய கிருபை தந்தருளும்

4. எந்தனின் சிந்தை முன்னறிவீர்
எந்தனின் பாதை நீர் அறிவீர்
நல்ல பாதை நடந்திட
நாதனே என்னையும் அர்ப்பணித்தேன்

5. சோதனை எம்மை சூழ்ந்திடினும்
சோர்ந்திடா உள்ளம் தந்தருளும்
ஜீவகிரீடம் முன்னே வைத்தே
ஜீவிய காலம் நடந்திட

Tamil Hymns

989. ஒரு குற்றம் கூட செய்யாத ஒரே ஒரு

ஒரு குற்றம் கூட செய்யாத ஒரே ஒரு
தெய்வம்- இயேசு மட்டும் தான் (2)
தன் எதிரிகளுக்காய் உயிரை கொடுத்த
ஒரே ஒரு தெய்வம்
இயேசு மட்டும் தான் (2)

1. சிலுவையில் தன்னை அறைந்தவரைக்கூட
மன்னித்த பெரிய தெய்வம்
மரித்த பின்பு உயிரோடு எழுந்த
ஒரே ஒரு தெய்வம்

2. எங்கும் நிறைந்த எல்லாம் அறிந்த
எல்லாம் வல்ல தெய்வம்
உலகத்தைப் படைத்தவர்
வணக்கத்துக்குரியவர்
ஒரே ஒரு தெய்வம்

3. செத்துப் போன உடலுக்குள்ளே
உயிரை வைத்த தெய்வம்
ஆகாரமில்லா அனாதைகட்கு
அடைக்கலமான தெய்வம்

Tamil Hymns

990. ஒரு கோடி ஸ்தோத்திரங்கள் ஏறெடுப்போமா

ஒரு கோடி ஸ்தோத்திரங்கள்
ஏறெடுப்போமா
பரிசுத்தரின் பாதத்திலே அர்ப்பணிப்போமா
மனதார வாழவைப்பார்
மகிமையின் தேவனவர்
பரலோகம் சேர்த்திடுவார்
பரலோக ராஜனவர்
துதியும் கனமும் மகிமை செலுத்தி
பாடி கொண்டாடு

1. மனுகுல மீட்புக்காக வந்தவரும் இவரே
பாவங்கள் சாபங்கள்
மன்னித்தவர் இவரே
பரலோக வாசலை திறந்தவர் இவரே
நித்திய ஜீவனையும் தந்தவரும் இவரே

2. உலகத்தில் வந்துதித்த மெய்யான ஒளியே
நீதியின் சூரியனாய் வந்த வரும் இவரே
பாவ இருளை நீக்கியவர் இவரே
பரிசுத்த வாழ்க்கையை தந்தவரும் இவரே

3. வானிலும் பூமியிலும் உயர்ந்தவர் இவரே
எல்லா நாமத்திலும் மேலான நாமமே
பேய்களும் நோய்களும் நடுங்கியே ஓடுதே
வல்லமையுள்ள தேவனும் இவரே

Tamil Hymns

991. ஒரு தாய் தேற்றுவது போல்

ஒரு தாய் தேற்றுவது போல்
என் நேசர் தேற்றுவார்

அல்லேலூயா (4)

1. மார்போடு அணைப்பாரே
மனக்கவலை தீர்ப்பரே

2. கரம் பிடித்து நடத்துவார்
கன்மலைமேல் நிறுத்த்வார்

3. எனக்காக மரித்தாரே
என்பாவம் சுமந்தாரே

4. ஒருபோதும் கைவிடார்
ஒருநாளும் விலகிடார்

Tamil Hymns

992. ஒருநாள் வருவார் இராஜாதி இராஜன்

ஒருநாள் வருவார் இராஜாதி இராஜன்
ஆயத்தமாகிடுவோம்

நம் கால மனிதர் இயேசுவை காண ஆயத்தமாகிடுவோம்
நீ ஆயத்தமாகு ஆயத்தப்படுத்து வருகை மிக சமீபம்

1. தீபத்தில் எண்ணெய் வற்றாது காத்து
ஆயத்தமாகிடுவோம் தாலந்தைத் தரையில்
புதைத்துவிடாமல் ஆயத்தமாகிடுவோம் - நம் கால

2. முந்தினோர் அநேகர் பிந்தினோராவார்
ஆயத்தமாகிடுவோம் முடிவு பரியந்தம்
நிற்பவர் மகிழ்வார் ஆயத்தமாகிடுவோம் - நாம் கால

3. தேடாதே உனக்குப் பெரிய காரியம்
ஆயத்தமாகிடுவோம் தேடு தொழுவத்தில்
இல்லாத ஆடுகளை ஆயத்தமாகிடுவோம் - நம் கால

Tamil Hymns

993. ஒருநாளும் வீணாகாது

ஒருநாளும் வீணாகாது
நீ ஓடும் ஓட்டம் நீ செய்யும் ஊழியம்
ஒரு நாளும் வீணாகது

1. கர்த்தரே உனக்குள்ளே செயலாற்றி
மகிழ்கின்றார் - அவர் விருப்பம் நீ செய்திட
ஆற்றல் தருகின்றார்
தொடர்ந்து ஓடு விட்டுவிடாதே
பணி செய்வதை நீ நிறுத்திவிடாதே

2. பிடித்துக் கொள் ஜீவவசனம்
பிரகாசி கிறிஸ்து இயேசுவுக்காய்
நெறி கெட்ட சமுதாயத்தில்
நீதானே நட்சத்திரம்

3. அவமானம் நிந்தை எல்லாம்
அனுதின உணவு போல
பழிச்சொல் எதிர்ப்பு எல்லாம்
பெலன் தரும் ஊட்டச்சத்து

4. கண்களை பதித்துவிடு
கர்த்தாரம் இயேசுவின் மேல்
சிலுவை சுமந்ததனால்
சிங்காசனம் அமர்ந்துவிட்டார்

Tamil Hymns

994. ஒரு மருந்தரும் குருமருந்து

ஒரு மருந்தரும் குருமருந்-(து)
உம்பரத்தில் நான் கண்டேனே

1. அருள் மருந்துடன் ஆனந்த மருந்து,
ஆதியிற்றனாய் முளைத்த மருந்து,
வரும் வினைகளை மாற்றும் மருந்து,
வறுமையுள்ளோர்க்கே வாய்த்த மருந்து

2. சிங்கார வனத்தில் செழித்த மருந்து,
ஜீவதரு மீதில் படர்ந்த மருந்து,
அங்குவிளை பவம் மாற்றும் மருந்து,
வல்ல சர்ப்ப விஷம் மாய்த்த மருந்து

3. தீராத குஷ்டத்தைத் தீர்த்த மருந்து,
செவிடு குருடூமை தின்ற மருந்து,
மானா திருத்துவ மான மருந்து,
மனுவாய் உலகினில் வந்த மருந்து

4. மோசே முதல் முன்னோர் காணா மருந்து,
மோட்ச மகிமையைக் காட்டும் மருந்து,
தேசத்தோர் பிணியைத் தீர்த்த மருந்து,
தீர்க்கதரிசிகள் செப்பிய மருந்து

5. செத்தோரை உயிரோ டெழுப்பும் மருந்து,
ஜீவன் தவறா தருளும் மருந்து,
பத்தரைச் சுத்திகரித்திடும் மருந்து,
பரம வாழ்வினில் சேர்க்கும் மருந்து

Tamil Hymns

995. ஒருபோதும் மறவாத

ஒருபோதும் மறவாத உண்மைப் பிதாவிருக்க,
உனக்கென்ன குறை மகனே

சிறுவந்தொட்டுனை யொரு
செல்லப் பிள்ளைபோற் காத்த
உரிமைத் தந்தை யென்றென்றும்
உயிரோடிப்பாருன்னை

1. கப்பலினடித்தட்டில் களைப்புடன் தூங்குவார்
கதறுமுன் சத்தங் கேட்டால்
கடல் புசலமர்த்துவார்
எப்பெரிய போரிலும் ஏற்ற ஆயுதமீவார்
ஏழைப்பிள்ளை உனக்கு
ஏற்ற தந்தை நானென்பார்

2. கடல் தனக் கதிகாரி கர்த்தரென் றறிவாயே,
கடவாதிருக்க வெல்லை கற்பித்தாரவர்சேயே,
விடுவாளோ பிள்ளையத் தாய்
மேதினியிற்றனியே மெய்ப்பரனை
நீ தினம் விசுவாசித்திருப்பாயே

3. உன்னாசை விசுவாசம் ஜெபமும்
வீணாகுமா - உறக்க மில்லாதவர் கண்
உன்னைவிட டொழியுமா - இந்நில
மீதிலுனக் கென்னவந்தாலும் சும்மா
இருக்குமா அவர்மனம்
உருக்கமில்லாதே போமா

4. உலகப் பேயுடலாசை
உன்னை மோசம் செய்யாது - ஊக்கம்
விடாதே திரு வுளமுனை மறவாது,
இலகும் பரிசுத்தாவி எழில் வரம் ஒழியாது,
என்றும் மாறாத நண்பன் இரட்சகருடன் சேர்ந்து

Tamil Hymns

996. ஒருவாராய் சாவாமையுள்ளவரே

ஒருவாராய் சாவாமையுள்ளவரே
சேரக்கூடா ஒளியில் வாசம் செய்பவரே
மனிதரில் ஒருவரும் கண்டிராத தெய்வமே
மனிதரில் ஒருவரும் காணக்கூடா தெய்வமே

துதியும் கனமும் நித்திய வல்லமையும்
உமக்கே உண்டாவதாக

1. நித்தியமும் அழிவில்லாமையும் உடையவரே
அதரிசனமுள்ள ராஜனாக இருப்பவரே
ஒருவராய் ஞானமுள்ள தேவனாக இருப்பவரே
எல்லாவற்றையும் உயிரோடிருக்க செய்பவரே

2. ஆதியும் அந்தமும் ஆனவரே
நேற்றும் இன்றும் என்றும் மாறா தூயவரே
ராஜாதி ராஜாவே கர்த்தாதி கர்த்தரே
அனுபவிக்க சகலவித
நன்மைகளை கொடுப்பவரே

3. அளவிட முடியா அறிவை உடையவரே
மகா பெலமுள்ள தேவனாக இருப்பவரே
ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்கள் செய்பவரே
எண்ணி முடியாத அதிசயங்களை செய்பவரே

Tamil Hymns

997. ஒருவராய் பெரிய அதிசயம்

1. ஒருவராய் பெரிய அதிசயம்
செய்பவர் நீர் தானே இயேசையா

இந்த நாளில் செய்யுமே
இறங்கி வந்து செய்யுமே
ஒரு அற்புதம் நாங்கள்
காணச்செய்யுமே

அல்லேலூயா....அல்லேலூயா

2. தழும்புகளால் சுகமாக்குவேன்
என்றவர் நீர் தானே இயேசையா

998. ஒருவரும் சேரா ஒளியினில் வாசம்

ஒருவரும் சேரா ஒளியினில்
வாசம் செய்திடும் எங்கள் தேவனே
மனிதருள் யாரும் கண்டிரா
மகிமை உடையவர் எங்கள் தேவனே

நீரே உன்னதர் நீரே பரிசுத்தர்
நீரே மகத்துவர்
உம்மை ஆராதிப்பேன்

ஏல்- ஒலான் நீரே
உமக்கு ஆரம்பம் இல்லையே
ஏல்- ஒலான் நீரே
உமக்கு முடிவொன்றும் இல்லையே

உம்மை அறிந்தவர் இல்லையே
உம்மை புரிந்தவர் இல்லையே
உம்மை கண்டவர் இல்லையே
உமக்கு உருவொன்றுமில்லையே…

Tamil Hymns

999. ஒரு வார்த்தை சொல்லும் கர்த்தாவே

ஒரு வார்த்தை சொல்லும் கர்த்தாவே
எங்கள் வாழ்க்கை எல்லாம் செழிப்பாகுமே

உம் வார்த்தையிலே சுகம்
உம் வார்த்தையிலே மதுரம்
உம் வார்த்தையிலே எல்லாம் சந்தோஷம்

1. மாராவின் தண்ணீரெல்லாம்
மதுரமாக மாறிப்போகும்
கண்ணீர் மாறிடும், துக்கம் மாறிடும்
ஒரு வார்த்தை சொன்னால் போதுமே - நீர்

2. இருளான வாழ்க்கை எல்லாம்
ஒளியாக மாறிப்போகும்

3. எரிகோவின் தடைகள் எல்லாம்
துதிகளாலே மாறிப்போகும்

4. வியாதிகள் வருமையெல்லாம்
விசுவாசத்தால் மாறிப்போகும்

Tamil Hymns

1000. ஒவ்வொரு நாட்களிலும் பிரியாமல்

ஒவ்வொரு நாட்களிலும்
பிரியாமல் கடைசி வரை
ஒவ்வொரு நிமிடமும்
கிருபையால் நடத்திடுமே

நான் உம்மை நேசிக்கிறேன்
எந்தன் உயிரைப் பார்க்கிலும்
ஆராதிப்பேன் உம்மை நான்
உண்மை மனதுடன்

1. என்னை நேசிக்கும் நேசத்தின்
என்னை நேசித்த நேசத்தின் ஆழமதை
பெரும் கிருபையை நினைக்கும் போது
என்ன பதில் செய்வேனோ
இரட்சிப்பின் பாத்திரத்தை
உயர்த்திடுவேன் நன்றியோடு

2. பெற்ற என் தாயும்
நண்பர்கள் தள்ளுகையில்
என் உயிர் கொடுத்து
நான் நேசித்தோர் வெறுக்கையிலே
நீ என்னுடையவன் என்று சொல்லி
அழைத்தீர் என் செல்லப் பெயரை
வளர்த்தீர் இவ்வளவாக
உம் நாமம் மகிமைக்காக

3. இரத்தாம்பரம் போலுள்ள பாவங்களை
பனியை விட வெண்மையாய் மாற்றினீரே
சொந்த இரத்தம் சிந்தியே
மகனையே பலியாக்கினீர்
நான் இரட்சிப்படைவதற்கு
என் பாவம் சுமந்து தீர்த்தீர்

Tamil Hymns

1001. ஒளி தரும் கண்கள் சுடர்

ஒளி தரும் கண்கள் சுடர் தரும் பாதங்கள்
பெரு வெள்ள இரைச்சல் நீர்தானே

1. அழகில் சிறந்தவரே- துதிகள்
செலுத்தி துதித்திடுவோம்
சாரோனின் ரோஜா பள்ளத்தாக்கின் லீலி
மருதோன்றி பூங்கொத்து நீர்தானே

2. நேசர் அழகுள்ளவர்
பதினாயிரங்களில் சிறந்தவரே
சாரோனின் ரோஜா பள்ளத்தாக்கின் லீலி
மருதோன்றி பூங்கொத்து நீர்தானே

Tamil Hymns

1002. ஒளிதரும் தீபங்கள் சுடர்

ஒளிதரும் தீபங்கள்
சுடர் வீசும் தீபம் நாம்
கலங்கரை விளக்கைப்போல்
இயேசுவில் ஒளி தருவோம்

1. மலைமேல் ஜொலித்திடும் மாநகர் போலவே
மண்ணகம் காணவே ஒளியினை வீசுவோம்
ஆண்டவர் இயேசுவின் உறவினில் எரிந்திட
அணையாத ஜோதியாய் சுடரை வீசுவோம்

2. இருளை நீக்கிட ஒளியாய் வந்தவர்
அருள்நிறை ஒளியினை மேதினில் வீசுவோம்
வார்த்தையைப் பிடித்துமே சுடர்களைப் போலவே
எழும்பி பாரினில் சுடரை வீசுவோம்

3. அழிவின் பாதையில் கல்லறை சென்றிடும்
ஆயிரம் ஆயிரம் தரிசனம் காணுவோம்
சுவிசேஷ ஒளியினை யாவரும் கண்டிட
துணிந்து என்றென்றுமாய் சேவையை செய்குவோம்

4. பரிசுத்தவாங்களே ஒளியில் வாசமே
சாட்சியின் ஜீவியம் எங்கும் வீசிட
இயேசுவின் ஒளியினை பாரில் வீசியே
ஒளியின் பிள்ளையைப் போல் சீராய் வாழுவோம்

Tamil Hymns

1003. ஒன்று கூடி ஆராதிப்போம் இயேசு

ஒன்று கூடி ஆராதிப்போம்
இயேசு நமது பெலனானார்
ஒன்று கூடி ஆராதிப்போம்
இயேசு நமது அரணானார்

அல்லேலூயா அல்லேலூயா

1. பரிசுத்த தேவனை ஆராதிப்போம்
பரலோக ராஜனை ஆராதிப்போம்
திரு இரத்தம் சிந்தி சிலுவையில் மரித்து
ஜீவன் தந்தவரை ஆராதிப்போம்

2. முழு உள்ளத்தோடு ஆராதிப்போம்
முழு பெலத்தோடு ஆராதிப்போம்
ஆவியில் நிறைந்து ஆண்டவரை துதித்து
ஆனந்த சத்தத்தோடு ஆராதிப்போம்

3. கண்ணீரை துடைத்தவரை ஆராதிப்போம்
கவலைகள் நீக்கினாரே ஆராதிப்போம்
கண்மணி போல காலமெல்லாம் காக்கும்
கர்த்தாதி கர்த்தரை ஆராதிப்போம்

Tamil Hymns

1004. ஒன்றுமில்லை நான்

ஒன்றுமில்லை நான் (2)
அன்பு எனக்கிராவிட்டால்
ஒன்றுமில்லை நான்

1. பல பல பாஷை படித்தறிந்தாலும்
கல கல வென்னும் கை மணியாமே
என் பொருள் யாவும் ஈந்தளித்தாலும்
அன்பு இல்லையென்றால்
ஒன்றுமில்லை நான்

2. கண் கண்ட பிறனிடம் அன்பு கூராதவன்
கண் காணா தேவனில் அன்பு கூருவானோ?
விண்ணவர் மொழிதனை கற்றறிந்தாலும்
அன்பு இல்லையென்றால் ஒன்றுமில்லை நான்

3. சகலத்தைத் தாங்கி சகலத்தைச் சகித்து
சகலத்தையும் விசுவாசித்து நம்பி
சாந்தமும் தயவும் பொறுமையுமுள்ள
அன்பு இல்லையென்றால்
ஒன்றுமில்லை நான்

1005. ஓ என் இயேசுவின் தோட்டத்திலே

ஓ என் இயேசுவின் தோட்டத்திலே
ஆ ஹ ஆனந்தமே
அந்த தோட்டத்தின் நடுவினிலே
குட்டி நாயும் நாயுமாம்
அங்கும் லேல் இங்கும் லேல்
அங்குமிங்கும் லேல் லேல் -2
விளையாடி மகிழ்ந்தன – 2

ஆ ஹ ஆனந்தமே
அந்த தோட்டத்தின் நடுவினிலே
குட்டி பூனை நாயுமாம் பூனையாம்
அங்கும் மியா இங்கும் மியா
அங்குமிங்கும் மியா மியா -2
விளையாடி மகிழ்ந்தன – 2

ஆ ஹ ஆனந்தமே
அந்த தோட்டத்தின் நடுவினிலே
குட்டி வாத்தும் குட்டி வாத்துமாம்
அங்கும் குவாக் இங்கும் குவாக்
அங்குமிங்கும் குவாக் குவாக் -2
விளையாடி மகிழ்ந்தன – 2

ஆ ஹ ஆனந்தமே
அந்த தோட்டத்தின் நடுவினிலே
குட்டி தம்பி குட்டி தங்கைமாம்
அங்கும் ஜெ இங்கும் ஜெ
அங்குமிங்கும் ஜெ ஜெ -2
விளையாடி மகிழ்ந்தன – 2

Tamil Hymns

1006. ஓ எந்தன் உள்ளம் நீர் வந்ததால்

ஓ எந்தன் உள்ளம் நீர் வந்ததால்
என் வாழ்க்கையில்
எல்லாம் நிறைந்திருப்பதால்

உம்மைத் துதிப்பேன் நான்
உம்மைத் துதிப்பேன்
இன்றும் என்றும் உம்மை
போற்றி பாடித் துதிப்பேன்

1. கண்மணி போல காத்துக் கொள்வதால்
உம் கரங்களில் என்னை சுமந்து செல்வதால்

2. பெயர் சொல்லி என்னை அழைத்திருப்பதால்
உம் கரங்களில் என்னை வரைந்திருப்பதால்

3. ஆவியில் என்னை நிறைத்திருப்பதால்
ஆச்சரியமாக நடத்திச் செல்வதால்

Tamil Hymns

1007. ஓ தேவனுக்கு மகிமை தூக்கி எடுத்தார்

ஓ தேவனுக்கு மகிமை தூக்கி எடுத்தார்
என்னைத் தூக்கி எடுத்தார் இயேசு
தம் கரத்தை நீட்டி இரட்சித்தாரே
ஓ தேவனுக்கு மகிமை

இயேசுவை நேசிக்கிறேன்
மென்மேலும் நேசிக்கிறேன்
அக்கரையில் நின்று நானும் அவரை
என்றென்றும் வாழ்த்துவேன்

1008. ஓ மனிதனே நீ எங்கே போகின்றாய்

ஓ மனிதனே நீ எங்கே போகின்றாய்
காலையில் மலர்ந்து மாலையில்
மறையும் மலராய் வாழ்கின்றாய்

1. மண்ணில் பிறந்த மானிடனே
மண்ணுக்கே நீ திரும்புவாய்
மரணம் உன்னை நெருங்கும் போது
எங்கே நீ ஓடுவாய் - மரணத்தின் பின்னே
நடப்பது என்ன என்பதை நீ அறிவாயோ

2. பாவியாய் பிறந்த மானிடனே
பாவியாய் நீ மரிக்கின்றாய் - இயேசுவை
உள்ளத்தில் ஏற்றுக்கொண்டால் நீ
இன்றே மரணத்தை வென்றிடுவாய்
நித்திய ஜீவனை பெற்று நீ மோட்சத்தில்
நிலைத்தென்றும் வாழ்ந்திடுவாய்

Tamil Hymns

1009. ஓசன்னா உன்னதத்தில் ஓசன்னா

ஓசன்னா (2) உன்னதத்தில் ஓசன்னா (2)
உம்மை உயர்த்திடுவோம்
துதி நிறைவுடன்
கர்த்தரே நீர் உயர்ந்திடுவீர்
ஓசன்னா இராஜ இராஜனே
மகிமை (2) மகிமை ராஜ ராஜனுக்கே (2)

Hosannah (2) Hosannah in the highest (2)
Lord we lift up Your Name
With our hearts full of praise
Be exalted oh Lord our God
Hosannah in the highest
Glory (2) Glory to the king of kings (2)

1010. ஓசன்னா பாடுவோம் ஏசுவின் தாசரே

ஓசன்னா பாடுவோம், ஏசுவின் தாசரே,
உன்னதத்திலே தாவீது மைந்தனுக்கு ஓசன்னா!

1. முன்னும் பின்னும் சாலேம் நகர் சின்னபாலர் பாடினார்,
அன்றுபோல இன்றும் நாமும் அன்பாய்த்துதி பாடுவோம்.

2. சின்ன மறி மீதில்ஏறி அன்பர் பவனி போனார்,
இன்னும் என் அகத்தில் அவர் என்றும் அரசாளுவார்.

3. பாவமதைப் போக்கவும் இப்பாவியைக் கைதூக்கவும்,
பாசமுள்ள ஏசையாப் பவனியாகப் போகிறார்.

4. பாலர்களின் கீதம் கேட்டுப் பாசமாக மகிழ்ந்தார்,
ஜாலர் வீணையோடு பாடித் தாளைமுத்தி செய்குவோம்.

5. குருத்தோலை ஞாயிற்றில் நம் குருபாதம் பணிவோம்,
கூடி அருள் பெற்றுநாமும் த்ரியேகரைப் போற்றுவோம்.

Tamil Hymns

1011. ஓசன்னா கீதம் பாடிடுவேன்

ஓசன்னா கீதம் பாடிடுவேன்
உன்னத தேவன் உந்தனுக்கே
துதி பலி ஸ்தோத்திரங்கள்
தூயவர் உமக்குத்தானே

1. வானம் பூமியும் படைத்தவரே
வாழ்த்தி உம்மை போற்றிடுவேன்
வல்லவரே நல்லவரே
ஆராதனை உமக்கே

2. ஜீவன் தந்து மீட்டவரே
ஜீவிக்கும் தேவன் நீர்தானய்யா
இரட்சகரே இயேசுநாதா
ஆராதனை உமக்கே

3. என்னைத் தேற்றும் நேசர் நீரே
எந்நாளும் என்னோடு இருப்பவரே
தாகம் தீர்க்கும் ஜீவ ஊற்றே
ஆராதனை உமக்கே

1012. ஓசன்னா பாடி பாடி நேசரை தேடி

ஓசன்னா பாடி பாடி நேசரை தேடி
ஆத்துமா ஆடிப்பாட வாஞ்சிக்குதே
நிலையில்லா இந்த வாழ்வில்
அளவில்லா அன்பு செய்தீர்
சாட்சியாக நானிருந்து உந்தன்
அன்பை எடுத்துச் சொல்வேன்

1. ஆவியானவர் அன்பின் ஆண்டவர்
அடிமையெனக்காய் மனிதனானீர்
களிமண்ணாலே வனைந்த என்னை
கழுவியெடுக்க குருதி ஈந்நீர்
சிந்திய இரத்த எனக்காயல்லோ
பொன்னும் வெள்ளியின் விலைதான் தகுமோ
உம்மைப் போல் ஆண்டவர் யருமில்லை
உமதன்புக்கு ஈடாய் எதுவுமில்லை
உம்மையல்லால் ஒரு வாழ்வும் எனக்கில்லை

2. வான தூதர்கள் வாழ்த்துப் பாடிட
வாகை சூடி வானில் வருவீர்
மேகக் கூட்டங்கள் மேளம் முழங்க
மகிமையோடு இறங்கி வருவீர்
காத்திருந்தவை கண்டு மகிழ
கர்த்தரோடு வானில் எழும்ப
இன்பமோ துன்பமோ இனிவரும் நாளில்
என் இருதயத்தால் என்றும்
ஸ்தோத்தரிப்பேன் நீர் வரும் வரை
உம் வழி நிலைத்திருப்பேன்

Tamil Hymns

1013. ஓசன்னா பாடுவோம் இயேசுவின்

ஓசன்னா பாடுவோம் இயேசுவின்
தாசரே - உன்னதத்திலே தாவீதின்
மைந்தனுக்கு ஓசன்னா!

1. முன்னும் பின்னும் சாலேம் நகர்
சின்னபாலர் பாடினார்
அன்றுபோல இன்றும் நாமும்
அன்பாய்த் துதி பாடுவோம்

2. சின்ன மறி மீதில் ஏறி,
அன்பர் பவனி போனார்
இன்னும் என் அகத்தில்
அவர் என்றும் அரசாளுவார்

3. பாவமதைப் போக்கவும்
இப்பாவியைக் கைதூக்கவும்,
பாசமுள்ள ஏசையாப்
பவனியாகப் போகிறார்

4. குருத்தோலை ஞாயிற்றில்
நம் குருபாதம் பணிவோம்
கூடி அருள் பெற்று நாமும்
த்ரியேகரைப் போற்றுவோம்

Tamil Hymns

1014. ஓசன்னா பாலர் பாடும்

ஓசன்னா பாலர் பாடும்
ராஜாவாம் மீட்பர்க்கே - மகிமை
புகழ் கீர்த்தி எல்லாம் உண்டாகவே

1. கர்த்தாவின் நாமத்தாலே
வருங் கோமானே நீர்
தாவீதின் ராஜா மைந்தன் துதிக்கப்படுவீர்

2. உன்னத தூதர் சேனை
விண்ணில் புகழுவார் - மாந்தர்
படைப்பு யாவும் இசைந்து போற்றுவார்

3. உம்முன்னே குருத்தோலை
கொண்டேகினார் போலும் - மன்றாட்டு
கீதம் ஸ்தோத்திரம் கொண்டும்மைச் சேவிப்போம்

4. நீர் பாடுபடுமுன்னே பாடினார் யூதரும்
உயர்த்தப்பட்ட உம்மை
துதிப்போம் நாங்களும்

5. அப்பாட்டைக் கேட்டவண்ணம்
எம் வேண்டல் கேளுமே - நீர்
நன்மையால் நிறைந்த காருணிய வேந்தரே

Tamil Hymns

1015. ஓசன்னா ஓசன்னா

ஓசன்னா (2) உன்னதத்தில் ஓசன்னா
உம்மை உயர்த்திடுவோம் துதி நிறைவுடன்
கர்த்தரே நீர் உயர்த்திடுவீர்
ஓசன்னா ராஜ ராஜனே

மகிமை (2) மகிமை ராஜ ராஜனுக்கே
உம்மை உயர்த்திடுவோம் துதி நிறைவுடன்
கர்த்தரே நீர் உயர்த்திடுவீர்
மகிமை ராஜ ராஜனுக்கே

Tamil Hymns

1016. ஓ பெத்லெகேமே சிற்றூரே

1. ஓ பெத்லெகேமே சிற்றூரே
என்னே உன் அமைதி!
அயர்ந்தே நித்திரை செய்கையில்
ஊர்ந்திடும் வான் வெள்ளி
விண் வாழ்வின் ஜோதி தோன்றிற்றே
உன் வீதியில் இன்றே
நல்லோர் நாட்டம் பொல்லார் கோட்டம்
உன் பாலன் இயேசுவே.

2. கூறும் ஓ விடி வெள்ளிகான்
இம்மைந்தன் ஜன்மமே
விண் வேந்தர்க்கு மகிமையே
பாரில் அமைதியாம்
மா திவ்விய பாலன் தோன்றினார்
மண் மாந்தர் தூக்கத்தில்
விழித்திருக்க தூதரும்
அன்போடு வானத்தில்.

1017. ஓடு ஓடு ஓடு ஓடு ஓடிக்கொண்டிரு

1. ஓடு ஓடு ஓடு ஓடு ஓடிக்கொண்டிரு
இலக்கை நோக்கி வேகமாய் ஓடிக்கொண்டிரு
வெற்றி வேந்தன் இயேசுவை நோக்கிக் கொண்டிரு
ஓடு ஓடு ஓடு ஓடு ஓடிக்கொண்டிரு

2. ஓடுவேன் இயேசுவுக்காய் வேகமாய் ஓடுவேன்
நான் ஓடுவேன் இயேசுவுக்காய் வேகமாய் ஓடுவேன்

3. தேடு தேடு தேடு தேடு தேடிக்கொண்டிரு
கிருபையின் வார்த்தையை தேடிக்கொண்டிரு
பாடு பாடு பாடு பாடு பாடிக்கொண்டிரு
இரட்சகரின் புகழை பாடிக்கொண்டிரு

4. நாடு நாடு நாடு நாடு பாதத்தை நாடு
சுவிசேஷம் அறிவிக்க சந்தர்ப்பம் நாடு
ஓடு ஓடு ஓடு ஓடு எல்லைக்கு ஓடு
அறுவடை சேர்த்திட தாகமாய் ஓடு

5. பணத்திற்காக ஓடாமல் புகழுக்காக ஓடாமல்
பெயருக்காக ஓடாமல் இயேசுவுக்காக ஓடுவேன்

1018. ஓயாமல் துதிபோம் காலமெல்லாம்

ஓயாமல் துதிபோம்
காலமெல்லாம் பாடுவோம்
ராஜாதி ராஜாவாம் இயேசுவையே (என்றும்)

பாடு ஓசன்னா ஓசன்னா ஓசன்னா
என்றும் ஓசன்னா ஓசன்னா ஓசன்னா

1. சத்திருவை மிதிப்பார் எதிரி அடங்குவான்
இயேசுவே ஜெயிப்பார்
ராஜரீகம் பண்ணுவார் - நீயோ
கரங்களைத் தட்டியே துதித்துக்கொண்டிரு

2. கட்டுகளை அறுப்பார் சாபங்களை
முறிப்பார் - வேதனையை மாற்றுவார்
புதுபெலன் தருவார் நீயோ
கரங்களை அசைத்து துதித்துக்கொண்டிரு

3. விண்ணப்பத்தைக் கேட்பார்
கிருபையை பொழிவார்
வாக்குத்தத்தம் செய்தார்
நிறவேற்றி முடிப்பார் - நீயோ
கரங்களை உயர்த்தி துதித்துக்கொண்டிரு

Tamil Hymns

1019. ஓர் முறை விட்டு மும்முறை

1. ஓர் முறை விட்டு மும்முறை
சீமோன் மறுத்தும் ஆண்டவர்
என்னிலே அன்புண்டோ என்றே
உயர்த்த பின் கேட்டனர்

2. விஸ்வாசமின்றிக் கர்த்தரை
பன்முறை நாமும் மறுத்தோம்
பயத்தினால் பலமுறை
நம் நேசரை விட்டோம்

3. சீமோனோ சேவல் கூவுங்கால்
மனம் கசந்து அழுதான்
பாறைபோல் நின்று பாசத்தால்
கர்த்தாவைச் சேவித்தான்

4. அவன்போல் அச்சங்கொள்ளினும்
நாமோ மெய்யன்பு கூர்ந்திலோம்
பாவத்தால் வெட்கம் அடைந்தும்
கண்ணீர் சொரிந்திலோம்

5. நாங்களும் உம்மை விட்டோமே
பன்முறை மறுதலித்தும்
நீர் எம்மைப் பார்த்து, இயேசுவே
நெஞ்சுருகச் செய்யும்

6. இடறும் வேளை தாங்கிடும்
உம்மைச் சேவிக்கும் கைகளும்
உம்மை நேசிக்கும் நெஞ்சமும்
அடியார்க்கருளும்

Tamil Hymns

1020. கடந்து வந்த பாதைகளை திரும்பி

கடந்து வந்த பாதைகளை
திரும்பி பார்க்கிறேன் - கண்ணீரோடு
கர்த்தாவே நன்றி சொல்கிறேன்
நன்றி சொல்கிறேன் நான் நன்றி சொல்கிறேன்

அப்பா உமக்கு நன்றி ராஜா உமக்கு நன்றி

1. அனாதையாய் அலைந்தே
நான் திரிந்தேன் ஐயா
அழாதே என்று சொல்லி அணைத்தீர் ஐயா

2. எதிராய் வந்த சூழ்ச்சிகளை முறியடித்தீரே
எந்தநிலையிலும் உம்மைத்
துதிக்க வைத்தீரே

3. பாடுகளை சுமந்து செல்ல பெலன் தந்தீரே
பரிசுத்தமாய் வாழ்வு வாழ
துணை செய்தீரே

4. ஒருநாளும் குறைவில்லாமல் உணவு தந்தீர்
உறைவிடமும் உடையும் தந்து காத்து வந்தீர்

5. தள்ளப்பட்ட கல்லாகக் கிடந்தேன் ஐயா
எடுத்து என்னை பயன்படுத்தி
மகிழ்கின்றீர் ஐயா

6. எத்தனையோ புதுப்பாடல் நாவில் வைத்தீர்
இலட்சங்களை இரட்சிக்க பயன்படுத்துகிறீர்

7. பாதை அறியா குருடனைப்
போல் வாழ்ந்தேன் ஐயா
பாசத்தோடு கண்களையே திறந்தீர் ஐயா

Tamil Hymns

1021. கடவுள் உனக்கு வாழ்வு தந்தார்

கடவுள் உனக்கு வாழ்வு தந்தார்
வாழ்வுக்கு நீ என்ன தந்தாய்
என்ன தந்தாய் நீ என்ன தந்தாய்

கடவுள் எனக்கு வாழ்வு தந்தார்
வாழ்வுக்கு நான் என்னைத் தந்தேன்
என்னைத் தந்தேன் நான் என்னைத் தந்தேன்

1. பார்த்திட உனக்கு கண்கள் தந்தார்
கனிவுடன் மனிதரைப் பார்த்தாயா
பார்த்தாயா இனி பார்ப்பாயா?

பார்த்திட எனக்கு கண்கள் தந்தார்
கனிவுடன் மனிதரைப் பார்த்தேனே -2
பார்த்தேனே இனி பார்ப்பேனே

2. மன்னிக்க நல்ல மனதைத் தந்தார்
முழுமனதுடன் நீ மன்னித்தாயா மன்னிப்பாயா...
மன்னிக்க நல்ல மனதைத் தந்தார்
முழுமனதுடன் நான் மன்னித்தேனே - 2

மன்னிப்பேனே இனி மன்னிப்பேனே
உழைத்திட நல்ல கரங்கள் தந்தார்
நேரிய நிலை நின்று உழைத்தாயா - 2 - உழைத்தாயா இனி

3. உழைத்திட நல்ல கரங்கள் தந்தார்
நேரிய நிலை நின்று உழைத்தேனே - 2
உழைத்தேனே இனி உழைப்பேனே

Tamil Hymns

1022. கடல் கொந்தளித்துப் பொங்க

கடல் கொந்தளித்துப் பொங்க
கப்பல் ஆடிச் செல்கையில் - புயல்
காற்று சீறி வீச பாய் கிழிந்து போகையில்
இயேசு எங்களிடம் வந்து
கப்பலோட்டியாயிரும் - காற்றமைத்துத்
துணை நின்று கரை சேரச் செய்திடும்

1. கப்பலிலே போவோருக்கு
கடும் மோசம் வரினும்
இடி மின் முழக்கம் காற்று
உமக்கெல்லாம் அடங்கும்
இருளில் நீர் பரஞ்சோதி
வெயிலில் நீர் நிழலே
யாத்திரையில் திசை காட்டி
சாவில் எங்கள் ஜீவனே

2. எங்கள் உள்ளம் உம்மை நோக்கும்
இன்ப துன்ப காலத்தில்
எங்கள் ஆவி உம்மில் தங்கும்
இகபர ஸ்தலத்தில்
இயேசு எங்களிடம் வந்து
கப்பலோட்டியாயிரும்
காற்றமைத்துத் துணை நின்று
கரை சேரச் செய்திடும்

Tamil Hymns

1023. கடினமானது உமக்கு எதுவுமில்லை

கடினமானது உமக்கு எதுவுமில்லை
முடியாதது உமக்கு எதுவுமில்லை
எதுவுமில்லை இயேசப்பா எதுவுமில்லை
முடியாதது எதுவுமில்லை

1. ஓங்கிய உம் புயத்தாலே
வானம் பூமி உண்டாக்கினீர்
நீட்டப்பட்ட உம் கரத்தாலே
அகிலத்தையே ஆட்சி செய்கின்றீர்

2. உம்மாலே செய்ய முடியாத
அதிசயங்கள் ஒன்றுமில்லை
ஆயிரமாயிரம் தலைமுறைக்கும்
அன்புகாட்டும் Almighty God (ஆல்மைட்டி காட்)

3. மனிதர்களின் செயல்களையெல்லாம்
உடுநோக்கிப் பார்க்கின்றீர்
அவனவன் செயல்களுக்கேற்ப
தகுந்த பரிசு தருகின்றீர்

4. யோசனையில் பெரியவர் நீர்
செயல்களில் வல்லவர் நீர்
சேனைகளின் கர்த்தர் நீரே
எல்ஷடாய் உம் நாமமே

Tamil Hymns

1024. கடும் புயலிலே என்னைக் காத்தவரே

1. கடும் புயலிலே என்னைக் காத்தவரே
கண்ணின் மணிபோல காப்பவரே
தினம்தோறும் உம் கிருபையினால்
வழி நடத்திடுமே

என் அன்பு நேசரே என் ஆருயிர் நண்பனே
வாழ்த்துவேன் வணங்குவேன் உம்மையே
என் வாழ்நாளெல்லாம் உமக்காய் ஜீவிப்பேன்
என் உயிருள்ள நாள்வரை உம்மைப் போற்றிடுவேன்

2. இந்த நாளின் ஒவ்வொரு செயலிலும்
உம் ஞானத்தால் என்னை நடத்துமே
நான் நடக்கும் வழிதனை காண்பித்து
ஆலோசனை சொல்லுமேன்

3. பழைய நினைவுகள் கசந்த நிகழ்ச்சிகள்
துயரமான பல தோல்விகள்
என்னை வாட்டுகின்ற வேளையில்
உம் சமூகத்தை நான் சாருவேன்

4. உடைந்த உறவுகள் மனதின் கசப்புகள்
என்னை நொறுக்கும் இதயத்தின் ஏக்கங்கள்
இருளாய் என்னை சூழ்கையில்
உம் பிரசன்னம் தான் என் அடைக்கலம்

Tamil Hymns

1025. கடைசி நாட்களிலே

கடைசி நாட்களிலே
கடாட்சிக்கும் தேவன் அவர்
மாமிசமானவர் யாவரின் மேலும்
மாரியைப் பொழிவேன் என்றார் – அருள்

1. பெருமழையின் இரைச்சல்
பெருந்தொனியாய் முழங்க
பெருகிடும் கிருபை அறுவடைக்கென்றே
அருள்மாரி பொழியும் என்றார்-இன்று

2. தரிசனம் கண்டிடுவார்
கரிசனை உள்ளோரெல்லாம்
பரிசுத்தவான்கள் கூடி மகிழ்வார்
மாரிதனைக் கண்டபின் – அருள்

3. முழங்காலில் நின்றோரெல்லாம்
முழங்கிடுவார் அன்று
முழங்கால்கள் மடங்கும்
இயேசுவின் நாமம்
தளங்களை நிரப்பி விடும் – பணித்

4. இந்தியாவின் மண்ணிலே
சிந்திய கண்ணீரெல்லாம்
பந்தி பந்தியாய் திருப்பணிக்கென்றே
தந்தோரை எழுப்பிவிடும் – தம்மை

Tamil Hymns

1026. கட்டும் கர்த்தாவே நீர்

கட்டும் கர்த்தாவே நீர்
கட்டும் கர்த்தாவே
அறுந்து போகாத கயிற்றால்
கட்டும் கர்த்தாவே நீர்
கட்டும் கர்த்தாவே நீர்
கட்டும் எங்களை அன்பால்

தேவன் ஒருவராம்
இராஜனும் ஒருவரே
சரீரம் ஒன்றுதானே
பாடுவோம் ஆதலால்

Bind us together Lord
Bind us together with
Cords that cannot be broken
Bind us together Lord
Bind us together Lord
Bind us together with love

There is only one God
There is only one King
There is only one Body
That is why we sing

Tamil Hymns

1027. கட்டடம் கட்டிடும்

கட்டடம் கட்டிடும் சிற்பிகள் நாம்
கட்டிடுவோம் கிறிஸ்தேசுவுக்காய்
சுத்தியல் வைத்து அடித்தல்ல
ரம்பத்தால் மரத்தை அறுத்தல்ல

1. ஒவ்வொரு நாளும் கட்டிடுவோம்
ஒவ்வொரு செயலாம் கற்களாலே
உத்தமர் இயேசுவின் அஸ்திபாரம்
பத்திரமாக தாங்கிடுவார்

2. கைவினை அல்லா வீடொன்றை
கடவுளின் பூரண சித்தப்படி
கட்டிடும் சிறிய சிற்பிகள் நாம்
கட்டிடுவோமே நித்தியத்திற்காய்

3. பாவமா மணலில் கட்டப்பட்ட
பற்பல வீடுகள் வீழ்ந்திடுமே
ஆவலாய் இயேசுவின் வார்த்தை கேட்போம்
அவரே மூலைக்கல் ஆகிடுவார்

Tamil Hymns

1028. கட்டப்பட்ட மனிதரெல்லாம்

கட்டப்பட்ட மனிதரெல்லாம்
கட்டவிழ்க்கப்பட வேண்டும்
காயப்பட்ட மனிதரெல்லாம்
கல்வாரி வர வேண்டும்- கர்த்தர்
உம்மை காண வேண்டும்
தேவா……. தேவா…….

1. எழுப்புதல் தீ பரவட்டுமே
எங்கும் பற்றி எரியட்டுமே

2. அறியாமை இருள் விலகி
அதிசய தேவனை காண வேண்டும்

3. பாவங்கள் சாபங்கள்
பாரத தேசத்தில் மறைய வேண்டும்

4. இமயம் முதல் குமரி வரை என்
இயேசுவின் இரத்தம் பாய வேண்டும்

5. உண்மையான ஊழியர்கள்
உலகம் எங்கும் செல்ல வேண்டும்

6. சபைகளெல்லாம் தூய்மையாகி
சாட்சி வாழ்வு வாழ வேண்டும்

Tamil Hymns

1029. கட்டிப்பிடித்தேன் உந்தன் பாதத்தை

கட்டிப்பிடித்தேன் உந்தன் பாதத்தை
கண்ணீரால் நனைக்கின்றேன் கர்த்தாவே
இலங்கையிலே யுத்தங்கள் ஓய வேண்டுமே
இளைரெல்லாம் இயேசுவுக்காய் வாழவேண்டும்
இரங்கும் ஐயா மனம் இரங்குமையா

1. **துப்பாக்கி ஏந்தும் கைகள்**
உம் வேதம் ஏந்த வேண்டும்
தப்பாமல் உம் விருப்பம்
எப்போதும் செய்ய வேண்டும்

2. **பழிக்கு பழி வாங்கும்**
பகைமை ஒழிய வேண்டும்
மன்னிக்கும் மனப்பான்மை
தேசத்தில் மலர வேண்டும்

3. **பிரிந்த குடும்பமெல்லாம்**
மறுபடி இணைய வேண்டும்
பெற்றோரின் கண்ணீர் எல்லாம்
களிப்பாய் மாற வேண்டும்

4. **வீடு இழந்தவர்கள்**
இடங்கள் பெயர்ந்தவர்கள்
மறுவாழ்வு பெற வேண்டும்
மகிழ்ச்சியால் நிரம்ப வேண்டும்

Tamil Hymns

1030. கண் கலங்காமல் காத்தீரய்யா

கண் கலங்காமல் காத்தீரய்யா
கால் இடறாமல் பிடித்தீரய்யா
உயிரோடு வாழும் நாட்களெல்லாம்
உம்மோடு கூட நடந்திடுவேன்

உம்மோடு கூட நடந்திடுவேன்
உயிரோடு வாழும் நாட்களெல்லாம்

1. ஏனோக்கு நடந்தான் உம்மோடுகூட
எடுத்துக் கொண்டீரய்யா
பிரதான மேய்ப்பன் நீர் வெளிப்படும்போது
மகிமையின் கிரீடம் என் தலைமேல்

2. நோவா நடந்ததால் உம் கண்களில்
கிருபை கிடைத்ததையா
குடும்பமாய் பேழைக்குள் செல் என்று சொல்லி
வெள்ளத்திலிருந்து காத்தீரய்யா

3. ஆபிரகாம் நடந்தான் உம்மோடுகூட
சிநேகிதன் என்றழைத்தீர்
செய்யப்போவதை மறைப்பேனோ என்று
தெரிவித்தீர் உமது திட்டங்களை

4. உண்மையாய் நடந்த எசேக்கியா ராஜா
விண்ணப்பம் கேட்டீரையா
கண்ணீரைக் கண்டு மரணத்தினின்று
விடுவித்து மீண்டும் வாழச்செய்தீர்

Tamil Hymns

1031. கண்களை ஏறெடுப்பேன்

கண்களை ஏறெடுப்பேன் - மாமேருநேராய் என்
கண்களை ஏறெடுப்பேன்

விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்
தெண்ணில்லா வொத்தாசை என்றனுக்கே வரும் --- கண்களை

1.காலைத் தள்ளாட வொட்டார் - உறங்காது
காப்பவர் காலைத்தள்ளாட வொட்டார்,
வேலையில் நின் றிஸ்ர வேலரைக் காத்தவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காரவர்

2.பக்க நிழல் அவரே -- எனை ஆதரித்திடும்
பக்க நிழல் அவரே - எக்கால நிலைமையும்
எனைச் சேதப்படுத்தாது - முக்காலம்
நின்றென்னை நற்காவல் புரியவே

3.எல்லாத் தீமைகட்கும் என்னை
விலக்கியே எல்லாத் தீமைகட்கும்
பொல்லா உலகினில் போக்குவரத்தையும்
நல்லாத்துமாவையும் நாடோறும் காப்பவர்

Tamil Hymns

1032. கண்களை ஏறெடுப்பேன் என் கண்களை

கண்களை ஏறெடுப்பேன் - என்
கண்களை ஏறெடுப்பேன்
அல்பா ஓமேகா என் தேவன் நீர்
கண்களை ஏறெடுப்பேன்

1. துன்பங்கள் என்னை சூழ்ந்தாலும்
தனிமையில் நான் நடந்தாலும்
அஞ்சிடேன் கர்த்தரை நோக்கிடுவேன்
அவரே என் ஆதரவே

2. நன்மையும் கிருபையும்
என்னை என்றும் தொடருமே - என்
இருதயம் உம்மையே சார்ந்திருக்கும்
உம்மில் நான் செழித்திருப்பேன்

1033. கண்களை பதிய வைப்போம்

கண்களை பதிய வைப்போம்
கர்த்தராம் இயேசுவின் மேல்
கடந்ததை மறந்திடுவோம்
தொடர்ந்து முன்செல்லுவோம்

1. சூழ்ந்து நிற்கும் சுமைகள்
நெருங்கி பற்றும் பாவங்கள்
உதறித் தள்ளிவிட்டு
ஓடுவோம் உறுதியுடன்

2. இழிவை எண்ணாமலே
சிலுவையை சுமந்தாரே
வல்லவர் அரியணையின்
வலப்பக்கம் வீற்றிருக்கின்றார்

3. தமக்கு வந்த எதிர்ப்பை
தாங்கி கொண்ட அவரை
சிந்தையில் நிறுத்திடுவோம்
மனம் சோர்ந்து போகமாட்டோம்

4. ஓட்டத்தை தொடங்கினவர்
தொடர்ந்து நடத்திடுவார் -நம்
நிறைவு செய்திடுவார்
நிச்சயம் பரிசு உண்டு

5. பாவத்திற்கு எதிராய்
போராட்டம் நமக்கு உண்டு
இரத்தம் சிந்தும் அளவு
எதிர்த்து நிற்கவில்லையே

6. தடைகள் நீக்கும் இயேசு
நமக்கு முன் செல்கிறார்
தடை செய்யும் கற்களெல்லாம்
முன்னேற்றும் படிகளாகும்

7. மேகம் போன்ற சாட்சிகள்
நம்மை சூழ்ந்து நிற்க
நியமித்த ஓட்டத்திலே
ஓடுவோம் பொறுமையோடு

Tamil Hymns

1034. கண்கள் பன்னீர் தரும்

கண்கள் பன்னீர் தரும் உள்ளம் வந்து விடும்
தெய்வ திருமகவே
உன் தங்க மேனிக்கு அன்பு தாலாட்டு
ஏழைப் பாடுகின்றேன் - (2)
கண்ணல்லோ பொன்னல்லோ, ஆராரோ ஆரீரோ

1. நித்தியம் துறந்தாய் நீ இத்திரை பிறந்தாய்
உன் சத்தியத்தினை ஏற்பேன் நானையா இத்திரை பிறந்தாய்
ஏழைப் பாடுகின்றேன் இந்த ஏழைப் பாடுகின்றேன் - (2)

2. இந்த பாவிகட்காய் நீர் சொந்த பூமி விட்டு
இது என்ன தியாகமோ என்ன அன்பிதோ சொந்த பூமி விட்டு
ஏழைப் பாடுகின்றேன் இந்த ஏழைப் பாடுகின்றேன் - (2)

Tamil Hymns

1035. கண்டேண் கண்டேண் என்

கண்டேண் கண்டேண் என்
கண் குளிர கண்டேன்
ஆனந்தம் கொண்டேன் இதோ

கர்த்தர் எங்கள் இறை இயேசுவை
இயேசுவை இயேசுவை

ஏசாயா முன்னுரைத்த வாக்கியம்
ஏகன் மனுவான பாக்கியம்
நீசராகிய மனுவின் பாவம்
நீக்கியாளவந்த நிமல ரூபம்

கர்த்தரெங்கள் இயெசு கிறிஸ்து
கருணை நிறைவான வஸ்து
அர்த்த ராத்திரி நிசியில் உதித்த
அல்ர்மழை சுரற் பொழிந்து துதிக்க

தேவ சேனை துதிகள் செய்ய
து ந்துமிகள் முழங்கி உய்ய
ஆவல் பெருக ஆபிராம் தேவனை
ஆவி பிதா சுதன் அமர்ந்த மூவனை

1036. கண்டேன் கல்வாரியின் காட்சி

கண்டேன் கல்வாரியின் காட்சி
கண்ணில் உதிரம் சிந்துதே
அன்பான அண்ணல் நம் இயேசு
நமக்காய் பட்ட பாடுகள்

1. கல்வாரி மலை மீதிலே கள்ளர்கள் மத்தியிலே
சிலுவையில் அறைந்தனரே
உனக்காய் ஜீவன் விட்டாரே

2. பாழும் உலகத்தின் பாவப்பிணி போக்க
சிலுவை சுமந்து போகும்
காட்சி கண்முன் போகும்

3. பாவ உலகத்தில் ஜீவிக்கும் மானிடனே
பாரும் அவர் உனக்காய்
குருசில் தொங்கும் காட்சியை

Tamil Hymns

1037. கண்டேனே உம் தூய அன்பை

கண்டேனே உம் தூய அன்பை
அதில் களங்கம் இல்லையே
கேட்டேனே உம் அன்பின் குரலை
உள்ளம் நொறுங்கின நேரத்தில்

1. பணத்தின் பலத்தால் சேர்ந்திடும்
உன் நண்பர்கள் - உருவாக்கும் குழிகளில்
ஒரு நாளில் நீ வீழ்வாயோ
உதடுகளோ இனிமை பேசும்
ஆனால் அதற்குள் விஷமும் சேரும்
என்னை இயேசு உண்மை தேவன்
உன் கண்ணீரின் வேண்டுதல்
கேட்பார் கேட்பார்

2. உடைந்த மனதில் துயரங்களை அறிபவர்
பாலைவனத்தின் தனலிலும்
மாறாதவர் அல்லவோ
மரணத்தின் படுக்கையை மாற்றி
புது வாழ்வும் எனக்கும் ஈந்தீர்
உயரங்களில் சாட்சியாக்கும்
தம் அற்புதமாம் வல்ல கரங்கள்

Tamil Hymns

1038. கண்டேனென் கண்குளிர

கண்டேனென் கண்குளிர - கர்த்தனை
யின்று கண்டேனென் கண்குளிர
கொண்டாடும் விண்ணோர்கள்
கோமானைக் கையிலேந்திக்

1. பெத்தலேம் சத்திர முன்னணையில்
உற்றோருக் குயிர்தரும்
உண்மையாம் என் ரட்சகனைக்

2. தேவாதி தேவனை தேவசேனை ஓயாது
தோத்தரிக்கும் ஒப்புநிகர் அற்றவனைக்

3. பாவேந்தர் - தேடிவரும் பக்தர் பரனை
ஆரேந்தர் அடிதொழும் அன்பனை
என் இன்பனைநான்

4. மண்ணோர் இருள்போக்கும் மா மணியை,
விண்ணோரும் வேண்டி நிற்கும்
விண்மணியைக் கண்மணியைக்

5. அண்டி னோர்க் கன்புருவாம் ஆரணனை
கண்டோர்கள் கலி தீர்க்கும்
காரணனை பூரணனை

6. முத்தொழிற் கர்த்தாவாம் முன்னவனை
இத்தரை மீட்க எனை
நத்தி வந்த மன்னவனைக்

7. அன்னையாம் கன்னியும் ஐயனுடன்
முன்னறி யாப்பசுவின்
புல்லணையில் உன்னழகைக்

Tamil Hymns

1039. கண்ணீரால் நன்றி சொல்கிறேன்

கண்ணீரால் நன்றி சொல்கிறேன்
தேவா கணக்கில்லா நன்மை செய்தீரே

நன்றி நன்றி அய்யா இயேசையா
பல கோடி நன்மை செய்தீரே

1. தாழ்வில் என்னை நினைத்தீரே
தயவாய் என்னை உயர்த்தினீரே
உந்தன் அன்பை என்ன சொல்லுவேன்
தாயின் கருவில் தெரிந்து கொண்டீர்
உள்ளங்கையில் வரைந்து வைத்தீர்
உந்தன் அன்பை எண்ணி பாடுவேன்
உந்தன் அன்பை எண்ணி பாடுவேன்

2. போக்கிலும் வரத்திலும் காத்துக்கொண்டீர்
உந்தன் சிறகால் மூடி மறைத்தீர்
உந்தன் அன்பை என்ன சொல்லுவேன்
கால்கள் இடராமல் பாதுகாத்தீர்
கன்மலையின் மேல் என்னை நிறுத்தினீர்
உந்தன் அன்பை எண்ணி பாடுவேன்
உந்தன் அன்பை எண்ணி பாடுவேன்

3. உந்தன் இரத்தம் எனக்காய் சிந்தி
சிலுவையில் எனக்கு ஜீவன் தந்தீர்
உந்தன் அன்பை என்ன சொல்லுவேன்
பாவமெல்லாம் போக்கினீரே சாபமெல்லாம் நீக்கினீரே
உந்தன் அன்பை எண்ணி பாடுவேன்
உந்தன் அன்பை எண்ணி பாடுவேன்

Tamil Hymns

1040. கண்ணோக்கி பார்த்த தேவா

கண்ணோக்கி பார்த்த தேவா
கலக்கங்கள் தீர்த்த தேவா
பாவ சேற்றில் வாழ்ந்த என்னை
உந்தன் கரம் நீட்டி மீட்ட தேவா

தாயே என் இயேசு நாதா
தந்தையே மா யெகோவா -2

1. கர்ப்பத்தில் நான் தோன்று முன்னே
என்னை பெயர் சொல்லி அழைத்தவரே
கருவிலே நான் தோன்று முன்னே
உந்தன் கரங்களில் வரைந்து கொண்டீர்

2. இரத்தத்தாலே மீட்டவரே
இரட்சிப்பு தந்தவரே
பாவமெல்லாம் தீர்த்தவரே
பரலோகில் சேர்ப்பவரே

3. கண்மணி போல் காத்தவரே
கண்ணீரை துடைத்தவரே
எண்ணமெல்லாம் நிறைந்தவரே
என் இதயத்தை கவர்ந்தவரே

Tamil Hymns

1041. கண்மணி நீ கண்வளராய்

கண்மணி நீ கண்வளராய்
விண்மணி நீ உறங்கிடுவாய்

1. தூங்கு கண்ணே தூதர் தாலாட்ட
நீங்கும் துன்பம் நித்திரை வர
ஏங்கும் மக்கள் இன்னல் நீங்கிட
தாங்கா துக்கம் துயர் மிஞ்சும் கடும்
குளிரில் கந்தை துணி பொதிந்தாயோ

2. சின்ன இயேசு செல்லப்பாலனே
உன்னை நானும் ஏற்பேன் வேந்தனே
என்னைப் பாரும் இன்ப மைந்தனே
உன்னத தேவ வாக்குன்னில் நிறைவேற
ஏழை மகவாய் வந்தனையோ

3. வீடும் இன்றி முன்னனை தானோ
காடும் குன்றும் சேர்ந்ததேனோ
பாடும் கீதம் கேளாயோ நீயும்
தேடும் மெய்யன்பர் உன்னடி பணிய
ஏழ்மைக் கோலம் கொண்டனையோ

Tamil Hymns

1042. கண்மணி போல் காக்கும் இயேசு

கண்மணி போல் காக்கும் இயேசு ராஜா
கைவிடாத கர்த்தர் இயேசு ராஜா
ஸ்தோத்திரம் கோடி ஸ்தோத்திரம்
ஊற்றிடும் எந்நாவில் ஊற்றிடும்

இயேசு ராஜனே ஸ்தோத்திரம்
அல்லேலூயா ராஜராஜனே
ஸ்தோத்திரம் அல்லேலுயா அல்லேலுயா

1. நான் பிறந்த நாள் முதல் இந்த நாள்
வரையிலும் ஆதரித்து வந்த இயேசுவே
இந்த மட்டும் கைவிடாமல்
இனி மேலும் கைவிடாமல் இன்றும்
என்றும் தேற்றும் இயேசுவே
தந்தை தாயின் பாசமோ உந்தன் பாசமாகுமோ
சொந்த பந்த நேசமோ உந்தன் நேசமாகுமோ
போதுமையா உந்தன் நேசமைய்யா

2. தீமையான யாவையும் நன்மையாக மாற்றினீர்
தீங்கு நீக்கி என்னை மீட்டினீர்
இன்னல் வேளை வந்த போது
நல்ல வேளாயாக வந்து
நண்பனாக நன்மை செய்திட்டீர்
இரக்கமுள்ள தேவனே இரங்கி வந்த நாதனே
மீட்க வந்த மீட்பரே தேடி வந்த தெய்வமே
போதுமைய்யா உந்தன் நேசமைய்யா -2

Tamil Hymns

1043. கதிரவன் எழுகின்ற காலையில்

கதிரவன் எழுகின்ற காலையில் இறைவனைத்
துதி செய்ய மனமே எழுந்திராய்

1. வறண்டு தண்ணீர் அற்ற வனம் இந்தப் புவிதனில்
திரண்ட தயை தேவை நாடுவேன்

2. கடவுளின் வல்லமை கன மகிமை காணும்
இடமதில் செல்வதே என் இஷ்டம்

3. ஜீவனைப் பார்க்கிலும் தேவனின் காதலை
ஆவலாய் நாடி நான் போற்றுவேன்

4. ஆயுள் பரியந்தம் ஆண்டவர் நாமத்தை
நேயமாய் பாடி நான் உயர்த்துவேன்

6. மெத்தையில் ராச்சாமம்
நித்திரை கொள்கையில்
கர்த்தரின் செயல்களை சிந்திப்பேன்

7. அல்லும் பகலும் நான் - அவர்
செட்டைகளின் கீழ்த் தொல்லைக்கு
நீங்கியே ஒதுங்குவேன்

8. ஆத்துமம் தேவனை அண்டிக்கொள்ள
அவர் நேத்திரம்போல்
என்னைக் காக்கிறார்

Tamil Hymns

1044. கந்தை துணிகளில் தவழ்ந்திடும் பாலன்

கந்தை துணிகளில் தவழ்ந்திடும் பாலன்
சதபா – சதபா – ரிசகா – ரிசகா – நிக – சரி – கச – பத – மகரிசா
சரிகபா – கபதரிசா

கந்-தை துணிகளில் தவழ்ந்திடும் பா-லன்
சிந்தை மகிழ்ந்திடவே சங்கீதம் பாடிடுவோம் (2)

1. பொன்மேனி பாலகன் பிறந்தார் புல்லணை மீதினில் பிறந்தார் (2)
பாவங்கள் நீக்கிட பிறந்தார் பரகதி சேர்த்திட பிறந்தார்
- சதபா .... கந்தை

2. மன்னாதி மன்-னன் பிறந்தா-ர் மரியன்னை மகவாய் பிறந்தார் (2)
ஏழையின் ரூபமாய் பிறந்தார் உலகம் மகிழ்ந்திட பிறந்தார்
- சதபா .... கந்தை

Tamil Hymns

1045. கதிரவன் தோன்றும் காலையிதே

கதிரவன் தோன்றும் காலையிதே
புதிய கிருபை பொழிந்திடுதே நல்
துதி செலுத்திடுவோம் இயேசுவுக்கே

1. வான சுடர்கள் கானக ஜீவன்
வாழ்த்திடவே பரன் மாட்சிமையே
காற்று பறவை ஊற்று நீரோடை
கர்த்தருக்கே கவி பாடிடுதே

2. காட்டில் கதறி கானக ஓடை
கண்டடையும் வெளி மான்களை போல்
தாகம் தீர்க்கும் ஜீவ தண்ணீராம்
தற்பரன் யேசுவை தேடிடுவோம்

3. காலை விழித்தே கர்த்தரின் சாயல்
கண்களும் செவியும் காத்திருக்கும்
பாதம் அமர்ந்து தேவனை ருசித்து
கீதங்கள் பாடியே மகிழ்ந்திடுவேன்

4. எந்தன் உதடும் உந்தனைப் போற்றும்
என் கரங்கள் குவிந்தே வணங்கும்
பாக்கியம் நான் கண்டைந்தேனே
யாக்கோபின் தேவனே என் துணையே

5. காலை விழிப்பே கர்த்தரின் சாயல்
கண்களும் செவியும் காத்திருக்கும்
பாதம் அமர்ந்து வேதமே ருசித்து
கீதங்கள் பாடியே மகிழ்ந்திடுவேன்

6. வானம் பூமி யாவையும் படைத்தீர்
வானம் திறந்தே தோன்றிடுவீர்
ஆவல் அடங்க என்னையும் அழைக்க
ஆத்தும நேசரே வந்திடுவீர்

Tamil Hymns

1046. கரம்பற்றி நடந்திடுவேன் கர்த்தர்

கரம் பற்றி நடந்திடுவேன்
கர்த்தர் இயேசுவில் மகிழ்ந்திடுவேன் (2)
அவர் காட்டும் வழியில் உண்மையாய்
நடந்து ஆவியில் மகிழ்ந்திடுவேன் (2)

இராஜாதி இராஜாவுக்கே - மகிமை
இயேசு ராஜனுக்கே
இறங்கிடும் தேவ ஆவியே - என்னை
நிரப்பிடும் வல்ல ஆவியே

1. சத்துரு கொட்டைகளை இயேசு
இரத்தத்தால் ஜெயித்திடுவேன்
சத்திய ஆவி துணைகொண்டு என்றும்
புதுபெலன் அடைந்திடுவேன்

2. நெருக்கங்கள் வரும்போது - என்
நேசர் என் பட்சமுண்டு
துதித்திடுவேன் என்றும் புகழ்ந்திடுவேன்
அவர் நாமத்தில் ஜெயம் எடுப்பேன்

3. அற்புதம் நடந்திடுமே - என்றும்
மாறிடா தேவ அன்பால்
அல்லேலூயா பாடிடுவோம் - நம்
அதிசய தேவனுக்காய்

Tamil Hymns

1047. கரம் பிடித்து உன்னை என்றும்

கரம் பிடித்து உன்னை என்றும்
நடத்திடுவார் கண்மணிப் போல் உன்னை
என்றும் காத்திடுவார்
கலங்கிடாதே திகைத்திடாதே
கர்த்தர் கரம் உனக்குண்டு பயந்திடாதே

1. படு குழியில் நீ விழுந்தாலும்
பரத்திலிருந்து வந்து உன்னைத் தூக்கிடுவார்
அக்கினியில் நீ நடந்தாலும்
எதுவும் உன்னை சேதப்படுத்த முடியாதே
கலங்கிடாதே திகைத்திடாதே
கர்த்தர் கரம் உனக்குண்டு பயந்திடாதே

2. ஆறுகளை நீ கடந்தாலும்
அவைகள் என்றும் உன் மீது புரள்வதில்லை
காரிருளில் நீ நடந்தாலும்
பாதைக்கு வெளிச்சமாக இருப்பாரே
கலங்கிடாதே திகைத்திடாதே
கர்த்தர் கரம் உனக்குண்டு பயந்திடாதே

Tamil Hymns

1048. கரம் பிடித்து வழிநடத்தும் கர்த்தரை

கரம் பிடித்து வழிநடத்தும் கர்த்தரை
களிப்போடு துதிபாடி போற்றுவோம் - 2
ஆமென் அல்லேலூயா

1. பசுமையான மேய்ச்சல் உள்ள இடத்திலே
இளைப்பாறச் செய்கின்றார் இயேசு
களைப்பாற்ற நீர் நிறைந்த அருவிக்கு
கர்த்தர் என்னை அழைத்துச் செல்கின்றார்

2. நாம் நடக்கும் பாதைகளை காட்டுவார்
நாள்தோறும் ஞானத்தினாலே நிரப்புவார்
நீதியின் பாதையிலே நடத்துவார்
நிழல்போல் நம் வாழ்வை தொடருவார்

3. எந்தப் பக்கம் போனாலும் உடனிருந்து
இதுதான் வழியென்றே பேசுவார்
இறுதிவரை எப்போதும் நடத்துவார்
இயேசு நாமம் வாழ்கவென்று வாழ்த்துவோம்

Tamil Hymns

1049. கரம் பிடித்தென்னை வழி நடத்தும்

கரம் பிடித்தென்னை வழி நடத்தும்
கண்மணி போல காத்துக் கொள்ளும்
கறை திரை இல்லா வாழ்வளித்து
பரிசுத்த பாதையில் நடத்திச் செல்லும்

1. மேய்ப்பனே உம்மந்தை ஆடு நானே
மேய்த்திடும் மேய்ப்பனும்
பின்னே செல்வேன் -2
புல்வெளி மேய்ச்சல் காண செய்து
அமர்ந்த தண்ணீரண்டை வழி நடத்தும்
உம் கோலினை கொண்டு
என் பாதை மாற்றும்

2. செட்டையில் உயர்த்தியே தூக்கிச் செல்லும்
கழுகினை போல என் பயங்கள் மாற்றும்
வானிலும் பூவிலும் நிலை நிற்கும்
வரங்களினாலே எனை நிரப்பும்
உம் வார்த்தையை கொண்டு
என் வாழ்வை மாற்றும்

3. ஜீவனை தந்து என் ஜீவன் மீட்டீர்
ஜீவிக்கும் நாளெல்லாம் உம்மில் வாழ்வேன்
தோழ்களில் என்னை சுமந்து செல்லும்
தோழரைப் போல அன்பு செய்யும்
உம் அணைத்திடும் கரம்
கொண்டென் கண்ணீர் மாற்றும்

Tamil Hymns

1050. கருணையின் நாதா எந்தன் இயேசு

கருணையின் நாதா எந்தன் இயேசு
கண்ணீரை என்றும் துடைத்திடுவார்

1. காத்து காத்து பெலனடைந்தேன்
அழைத்தவர் என்றும் நடத்திடுவார்

2. ஊழியப்பாதையில் எத்தனை வேதனை
கலங்காதே என்று கரம் பிடித்தார்

3. ஜெபமே ஜெயம் ஜெபமே ஜீவன்
ஜெபித்து ஜெபித்து முன் செலுவோம்

4. உபவாசித்து நாம் ஜெபிக்க வேண்டும்
ஆவியில் நிரம்பி ஜெபித்திடுவோம்

Tamil Hymns

1051. கரையோர கடலலை சத்தம்

கரையோர கடலலை சத்தம் - காதோர காத்துல நித்தம்
சொல்லுது ஒரு அற்புத செய்தி மெய்யான செய்தி
சொல்லுது ஒரு அற்புத செய்தி மெய்யான செய்தி

1. வருஷமு இரண்டாயிரமுமாச்சி அடங்கல அவியல இந்த பேச்சி
வருஷமு இரண்டாயிரமுமா - –ச்சி அடங்கல அவியல இந்த பேச்சி
மரணத்துக்கப்பாலே நிசமாவே ஒருவாழ்க்கை இருக்குதென்ற ராசாவே (2)
- கரையோர

2. கெட்டுப்போன எனக்காக பிறந்தாரு குற்றமில்லா இரத்தத்தையும் சிந்தினாரு
கெட்டுப்போன எனக்காக பிறந்தா - –ரு குற்றமில்லா இரத்தத்தையும் சிந்தினாரு
பட்டுப்போன என் வாழ்வு மலர்ந்திருச்சி - இயேசு உயிர்த்தெழுந்தார் என்ன நம்பிக்கைவைச்சி (2)
- கரையோர

3. திரும்பவும் வருவேன்னு சொன்னாருங்க சத்திய வேதத்தில் உள்ள செய்திங்க
திரும்பவும் வருவேன்னு சொன்னாருங் – –க சத்திய வேதத்தில் உள்ள செய்திங்க
வாழ்ந்தாலும் இயேசுவுக்காய் வாழ்ந்திருப்பேன் உயிர்போனாலும் அவரோடு சேர்ந்திருப்பேன் (2)
- கரையோர

Tamil Hymns

1052. கர்த்தர் அன்பே தூய அன்பே

கர்த்தர் அன்பே தூய அன்பே
பக்தர்கள் போற்றும் அன்பே - என்
இயேசுவின் அன்பு மா பெரிதே
எப்படிப் பாடுவேனோ

1. ஆண்டவர் அன்பின் ஆழம் நீளம்
அன்பின் அகலம் உயரம் கண்டேன்
இயேசு பக்தருடன் சேர்ந்துணர்ந்தேன்
இன்றதைப் பாடிடுவேன் - என்

2. இந்த உலகத் தோற்றம் முன்னே
அந்த மேலான அன்பினிலே
மாசற்றோராக நிறுத்த எம்மை
மாதேவன் தெரிந்து கொண்டார் - தம்முன்

3. என் முழு ஆத்மா மனதுடனே
என் முழு சக்தி பெலத்துடனே
தேவனிடம் அன்பு கூர்ந்திடவே
தேடியே நாடிடுவேன் - என்

4. குற்றமில்லாத அன்புடனே
மற்றவரை நான் நேசிக்கவே
கற்பனையில் பிரதானம் ஒன்றே
கைக் கொண்டு வாழ்ந்திடுவேன் - அவர்

5. சத்துருவான மித்திரனை
சோதரன் தோழனாய் நேசித்தீரே
பாதம் பணிந்துமை வேண்டுகின்றேன்
பூரண அன்பருள்வீர் - திருப்

6. ஜீவனைத் தந்த அன்பதுவே
தேவனின் சேவை செய்திடவே
கர்த்தர் வருகையைக் கண்டிடவே
காத்திருந்தே அடைவேன் - என்

7. ஆவியின் வரங்கள் ஒன்பதுவே
ஆவியின் நற்கனி ஈந்திடுமே
தேவ அருள் வரம் தேவை அதே
தாகத்தைத் தீர்த்திடுமே - என்றும்

Tamil Hymns

1053. கர்த்தர் ஆவி என்னில் அசைவாடும்போது

1. கர்த்தர் ஆவி என்னில் அசைவாடும்போது
தாவீதைப்போல் துதிப்பேன்
துதிப்பேன், துதிப்பேன்
தாவீதைப் போல் துதிப்பேன் - 2

2. கர்த்தர் ஆவி என்னில் அசைவாடும்போது
தாவீதைப்போல் தட்டுவேன்
தட்டுவேன், தட்டுவேன்
தாவீதைப் போல் தட்டுவேன்

3. கர்த்தர் ஆவி என்னில் அசைவாடும்போது
தாவீதைப் போல் பாடுவேன்
பாடுவேன் பாடுவேன்
தாவீதைப் போல் பாடுவேன்

4. கர்த்தர் ஆவி என்னில் அசைவாடும்போது
தாவீதைப்போல் ஆடுவேன்
ஆடுவேன், ஆடுவேன்
தாவீதைப் போல் ஆடுவேன்

Tamil Hymns

1054. கர்த்தர் இயேசு வருகிறார் நீ

1. கர்த்தர் இயேசு வருகிறார் நீ ஆயத்தப்படு
சீக்கிரமாய் வருகிறார் நீ பரிசுத்தப்படு
பலன்களோடு வருகிறார் நீ விழித்து ஜெபித்திரு
முடிவுமட்டும் நிலைத்திருந்து உண்மையாயிரு

உண்மையாயிரு நீ உண்மையாயிரு
இயேசுவுக்கு மரணம் மட்டும் உண்மையாயிரு

2. பாடுகளைக் கண்டு நீயும் பயப்படாதிரு
சோதனைகள் சூழும்போது சோர்ந்திடாதிரு
பாடுபட்ட இயேசு உன்னைக் கைவிடமாட்டார்
ஜீவ கிரீடம் பெற்றிட நீ உண்மையாயிரு

3. தாலந்தனைத்தும் இயேசுவுக்காய் செலவழித்திடு
ஆத்தும ஆதாயம் செய்து உலகை வென்றிடு
நல்லது என் ஊழியனே என்று சொல்லுவார்
உண்மையானவன் என்று சாட்சி சொல்லுவார்

Tamil Hymns

1055. கர்த்தர் உயிர்த்தெழுந்தார்

கர்த்தர் உயிர்த்தெழுந்தார் - இன்னும்
கல்லறை திறந்திருக்க
நற்செய்தி தரிசனங்கள்
சாற்றி கீர்த்தனம் பண்ணிடுவோம்

காரிருளில் கண்ணீருடன்
கல்லறை நோக்கியே சென்றனரே
அற்புதக் காட்சியும் கண்டிட ஸ்திரீகள்
ஆச்சர்யம் அடைந்தனரே

மரியாளே என்ற சத்தம்
மா திகைப்பாய் அவள் கேட்டிடவே
ரட்சகர் தரிசனம் கண்டு முன்னோடி
ரபூனி என்றழைத்தான்

பயந்திடவே சீஷர்களே
பூட்டின உள்ளறை தங்கினரே
மெய்ச் சமாதானத்தின் வாக்குகள் கூறி
மேசியா வாழ்த்தி சென்றார்.

Tamil Hymns

1056. கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்

1. கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்
அதைக் கட்டும் உந்தன் பாடு விருதா
கர்த்தர் நகரத்தைக் காவல் செய்யாவிடில்
உன் கண்விழிப்பும் விருதா

ஆதலால் என் உள்ளமே
சதா அவர் சமூகம்
நிதம் நேசரையே துதித்திடட்டும்
கர்த்தருக்கு பயந்து
அவர் வழி நடந்தால்
நீ பாக்கியம் கண்டடைவாய்

2. உன் வழிகளிளெல்லாம் உன்னைத்
தூதர்கள் காத்திடுவார் உன் பாதம் கல்லில்
இடறாதபடி தங்கள் கரங்களில் ஏந்திடுவார்

3. இரவின் பயங்கரத்துக்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்களுக்கும்
நீ பயப்படவே மாட்டாய்

3. சிங்கத்தின் மேலும் நடந்து வலுசர்ப்பத்தையும்
மிதிப்பாய் அவர் நாமத்தை நீ
முற்றும் நம்பினதால்
உன்னை விடுவித்துக் காத்திடுவார்

4. ஆபத்திலும் அவரை நான் நோக்கிக் கூப்பிடும்
வேளையிலும் என்னைத் தப்புவித்தே
முற்றும் இரட்சிப்பாரே என் ஆத்தும நேசரவர்

5. கர்த்தருக்குப் பயப்பட்டவன்
இவ்வித ஆசீர்வாதம் பெறுவான்
கர்த்தர் சீயோனில் இருந்து உன்னை
கடைசிமட்டும் ஆசீர்வதிப்பார்

Tamil Hymns

1057. கர்த்தர் உன்னதங்களிலே

1. கர்த்தர் உன்னதங்களிலே
வல்லமையுள்ளவர் ஆவார்
கர்த்தர் இராஜரீகம் பண்ணுகிறார்
மகத்துவத்தை அணிந்திடுவார்

ஆதலால் மோட்ச கரம்
அசையாமல் நிலைத்திடுமே
அநாதியாய் உயர்ந்திருப்பார்
சிங்காசனம் உறுதியாகுமே

2. திரள் தண்ணீர்களிலே
இரைச்சலைபார்க்கிலுமே
சமுத்திர அலைகளை பார்க்கிலும்
கர்த்தர் மகிமையில் சிறந்தவரே

3. நம் ஆலயங்களிலே
ஜீவ சாட்சிகள் என்றென்றுமே
மிக உண்மையும் பரிசுத்தமானதும்
அலங்காரமாய் இருக்கிறது

4. கனமும் மகிமையுமே
அவர் சமூகத்தில் இருக்கிறது
வல்லமையும் அதிகாரமும்
அவர் பரிசுத்த ஸ்தலத்திலுண்டே

1058. கர்த்தர் உன்னதரே மகிமையில்

கர்த்தர் உன்னதரே மகிமையில் சிறந்தவரே
மகிமையின் தேவன் செயல்களை
நினைத்து எதனை செலுத்திடுவாய்

1. ஆத்துமாவை காத்தனரே
அற்புதம் செய்தனரே
மறவாது என்றென்றுமாய்
அன்பு கூர்ந்திடுவாய்

2. மகிமை உன்னைல் வெளிப்படவே
தம்மையே தந்தனரே
அனுதினமும் அவர் நாமமதை
சேவித்து வழி நடப்பாய்

3. உந்தனுக்காய் தேவகரம்
யாவையும் முடித்ததுவே
அவரது செய்கை அனைத்தையுமே
பூவினில் சாற்றிடுவாய்

4. நீதியின் நல் வாசல்களை
திறந்துமே நடத்தினாரே
துதிகளுடன் அவர் நாமத்தை
என்றுமே தொழுதிடுவாய்

1059. கர்த்தர் உன்னை மேன்மையாக

கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்
நீ கலங்காதே மனமே (2)

1. கையிடும் வேலையில் ஆசீர்வாதமும்
களங்களில் நிரம்பிடும் தானியமும்
நிறைவான நன்மை உண்டாக
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்

2. சத்துருக்கள் எதிராய் எழும்பும்போது
கர்த்தரே யுத்தத்தை செய்திடுவார்
வெற்றி மேல் வெற்றியை உனக்கு தந்து
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்

3. உன்னை அவர் தனக்காக தெரிந்துகொண்டார்
தன் பெயரை உனக்காக வழங்கினாரே
சுற்றமும் நண்பரும் உன்னை மதிக்க
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்

4. உன் தேசம் முழுவதும் மழை பொழியும்
உனக்காக பொக்கிஷத்தை திறந்திடுவார்
பிறருக்கு நீயும் கடன் கொடுக்க
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்

Tamil Hymns

1060. கர்த்தர் எனக்காய் யாவையும்செய்து

கர்த்தர் எனக்காய் யாவையும்
செய்து முடிப்பார்
சொன்னதை செய்யும்வரை அவர்
என்னைக் கைவிடுவதில்லை

1. கர்த்தர் எனக்காய் கர்த்தர் எனக்காய்
யாவையும் செய்து முடிப்பார்
கர்த்தர் எனக்காய் கர்த்தர் எனக்காய்
மலைகளை பெயர்ப்பாரே

2. நீர் சொன்னது நடக்குமோ
என்ற சந்தேகம் இல்லை
நீர் நினைத்தது நிலைநிற்குமோ
என்ற பயமும் இல்லை

3. என் நிந்தனை நிரந்தரம்
இல்லை என்றீரே
நான் இழந்ததைத் திரும்பவும்
தருவேன் என்றீரே

Tamil Hymns

1061. கர்த்தர் எனக்காக யாவையும் செய்வாரே

கர்த்தர் எனக்காக யாவையும் செய்வாரே
அற்புதமானவற்றை ஆச்சரியமாக செய்வார்

1. செய்வார் எல்லாம் செய்வார்
செய்யாமல் இருக்க மாட்டார்
முடிப்பார் எல்லாம் முடிப்பார்
நன்மையாய் முடித்திடுவார்

2. கூடும் அவரால் கூடும்
கூடாத தொன்றில்லையே
பெறுவேன் நன்மை பெறுவேன்
பெறாமல் இருக்கமாட்டேன்

3. ஆகும் அவரால் ஆகும்
ஆகாத தொன்றில்லையே
கிடைக்கும் நிச்சயம் கிடைக்கும்
கேட்டது கிடைத்திடுமே

1062. கர்த்தர் என் பக்கமாகில்

1. கர்த்தர் என் பக்கமாகில்
எனக்கு பயம் ஏன்?
உபத்திரவம் உண்டாகில்
மன்றாடிக் கெஞ்சுவேன்;
அப்போதென்மேலே வந்த
பொல்லா வினை எல்லாம்
பலத்த காற்றடித்த
துரும்புபோல ஆம்.

2. என் நெஞ்சின் அஸ்திபாரம்
மேலான கர்த்தரே;
அதாலே பக்தர் யாரும்
திடன்கொள்வார்களே;
நான் ஏழைப் பலவீனன்,
வியாதிப்பட்டோனே;
அவரில் சொஸ்தம்இ ஜீவன்
சமஸ்தமும் உண்டே.

3. தெய்வாவி என்னில் தங்கி
என்னை நடத்தவே,
பயம் எல்லாம் அடங்கி
திடனாய் மாறுதே;
அப்பாவே என்று சொல்ல,
அவர் என் நெஞ்சுக்கே
ஆற்றல் சகாயம்செய்ய
என் ஆவி தேறுதே.

4. என் உள்ளமே களிக்கும்
துக்கிக்கவேண்டுமோ?
கர்த்தர் என்மேல் உதிக்கும்
பகலோன் அல்லவோ?
பரத்தில் வைக்கப்பட்ட
அநந்த பூரிப்பே
என் ஆவிக்கு பலத்த
திடன் உண்டாக்குமே.

Tamil Hymns

1063. கர்த்தர் என் நம்பிக்கை துருகமானவர்

கர்த்தர் என் நம்பிக்கை துருகமானவர்
கன்மலை கோட்டையும் இரட்சிப்புமானவர்
அடைக்கலம் புகலிடம் கேடகம் என்றார்
ஆபத்து நாளில் என் அபயமுமாவார்

அல்லேலூயா அல்லேலூயா 4

1. வானம் அசைந்தது பூமி அதிர்ந்தது
பாதாளக் கட்டுகள் கழன்று போனது
பார்தலத்தின் ராஜன் உயிர்த்தெழுந்தாரே
கர்த்தர் கர்த்தர் என்று பூமி முழங்குதே

2. சமுத்திரத்தின் மேல் அதிகாரமுடையவர்
சந்நிதி பிரகாரத்தின் அக்கினியானவர்
சிங்கானம் என்றுமாய் வீற்றிருக்கவே
சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்தாரே

Tamil Hymns

1064. கர்த்தர் என் பெலனானார் அவரே

கர்த்தர் என் பெலனானார்
அவரே என் கீதமானார்
மகிழ்ச்சிக்குரல் வெற்றியின் தொனி
எனது (நமது) கூடாரத்தில்

அல்லேலூயா
அல்லேலூயா (3) தோல்வி இல்லை
அல்லேலூயா வெற்றி உண்டு

1. கர்த்தர் என் பட்சத்தில்
இருப்பதால் பயப்படேன்
மனிதன் எனக்கு எதிராய்
என்ன செய்யமுடியும்

2. இந்த நாள் நல்ல நாள்
யெகோவா தந்த நாள்
களிகூர்ந்து மகிழ்ந்திடு
காரியம் வாய்க்கச் செய்வார்

3. கர்த்தரின் வலக்கரம்
மிகவும் உயர்ந்துள்ளது
பராக்கிரமம் செய்கின்றார்
வெற்றி தருகின்றார்

4. ஈக்கள் (தேனீக்கள்) போல் பாடுகள்
எனை சூழ்ந்து வந்தாலும்
நெருப்பிலிட்ட முட்கள் போல்
சாம்பலாய் போகின்றன

5. விழும்படி தள்ளினார்கள்
என்னை வீழ்த்த முயன்றார்கள்
கர்த்தரோ தாங்கினார்
கரம் நீட்டி உதவினார்

Tamil Hymns

1065. கர்த்தர் என் பெலனும் என் கீதமும்

கர்த்தர் என் பெலனும் என் கீதமும்
நான் நம்பும் கன்மலையுமானவர்
கர்த்தர் என் கிருபை என்றைக்கும்
நான் பாடுவேன் நான் போற்றிடுவேன்

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா -2

1. அவர் கரமும் அவர் புயமும்
மகிமையும் மகத்துவமும்
அதிசயங்கள் செய்தது
கிருபையும் சத்தியமும் இரக்கமும்
அவர் அன்பும் வழி நடத்தியது

2. அவர் மேய்ப்பர் அவர் மீட்பர்
என் நேசர் பரிசுத்தர்
தாழ்ச்சியடைகிலேனே
ஜீவனுள்ள நாட்களெல்லாம்
ஆலயத்தில் தங்குவதை
வாஞ்சித்தே நாடிடுவேன்

Tamil Hymns

1066. கர்த்தர் என் மேய்ப்பர் நான் தாழ்ச்சி

கர்த்தர் என் மேய்ப்பர்
நான் தாழ்ச்சியடையேன்
அவர் என்னை காப்பார் ஏந்தி சுமப்பார்

1. என் துக்கம் மாற்றுவார்
என் தேவனை அறிவார்
அவர் சர்வ வல்ல தேவனே
அவரால் கூடாதது ஒன்றுமே இல்லை
எல்லாம் அவராலே கூடும்
அவரால் எல்லாம் கூடும்

2. சிறையிருப்பை மாற்றுவார்
தாழ்ப்பாள்களை உடைப்பார்
அவர் சேனைகளின் கர்த்தரே
அவர் அற்புதத்துன் தேவன்
அதிசயம் செய்வார்
அவராலே எல்லாம் கூடும்
எல்லாம் அவராலே கூடும்

Tamil Hymns

1067. கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறாரே

கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறாரே
தாழ்ச்சி அடையேன் என்றுமே - அவர்
என்னை புல்லுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை நடத்துகிறார்

1. ஆத்துமாவைத் தேற்றும் நேசரென்னை
ஆனந்தத்தால் நிறைக்கிறாரே
மகிமையின் நாமத்தினிமித்தம் அவர்
தம் நீதியின் பாதையில் நடத்துகிறார்

2. மரண பள்ளத்தாக்கில் நடந்திடினும்
மாபெரும் தீங்குக்கும் அஞ்சேனே
கர்த்தர் என்னோடென்றும் இருப்பதாலே
அவர் கோலும் தடியும் என்னைத் தேற்றிடுமே

3. சத்துருக்கள் முன்பில் எனக்காக
பந்தி யொன்று ஆயத்தம் செய்தார்
என்னை தம் எண்ணையால் அபிஷேகித்து என்
பாத்திரம் நிரம்பியே வழியச் செய்தார்

4. ஜீவன் என்னில் உள்ள காலம் வரையும் - என்னை
நன்மை கிருபை தொடரும்
கர்த்தரின் வீட்டில் நான் களிப்புடன் துதித்து
நித்திய நாட்களாய் நிலைத்திருப்பேன்

Tamil Hymns

1068. கர்த்தர் என் மேய்ப்பரானவர் நான்

1. கர்த்தர் என் மேய்ப்பரானவர்
நான் தாழ்ச்சியடையேன்
புல்லுள்ள இடத்தில் மேய்த்து,
தண்ணீர் காட்டுகின்றார்

2. கர்த்தர் என் ஆத்மாவைத் தேற்றி,
அவர் நாமத்தினால்
என்னை நீதியின் பாதையில்
நடத்துகின்றாரே

3. நான் மரணப் பள்ளத்தாக்கில்
செல்ல நேரிட்டாலும்,
உமது கோலும், தடியும்,
என்னைத் தேற்றிடுமே

4. என் சத்துருக்கள் முன்பாக,
பந்தி ஆய்த்தமாக்கி,
என் தலையை உம் எண்ணெயால்
அபிஷேகம் செய்வீர்

5. என் ஜீவ நாளெல்லாம் நன்மை,
கிருபை தொடரும்,
கர்த்தர் வீட்டில் நித்ய நாளாய்,
நிலைத்திருப்பேன் நான்

1069. கர்த்தர் என் மேய்ப்பர் அதினாலே

1. கர்த்தர் என் மேய்ப்பர் அதினாலே ஒருக்
காலும் தாழ்ச்சி யடையேன் இனிமேலே

2. புல்லுள்ள இடங்களிலவர் மேய்ப்பார் - நல்ல
புனல் தடங்களில் என்னைக் கொண்டு சேர்ப்பார்

3. ஆத்துமத் தேறுதல் அளித்தவர் பேர்ப்
பொருட்டாக நீதியிலென்னை நடத்துகிறார்

4. மரண இருள் பள்ளத்தில் நடந்தாலும் - அஞ்ச
மாட்டேன் நானுமதினால் ஒருக்காலும்

5. தேவரீர் என்னோடே நீர் இருப்பதாலும் - என்னைத்
தேற்றும் உமது தடியும் கோலும்

6. சத்துருக்களுக்கு முன் ஒரு பந்தி - நீர்
தக்கபடி எனக்குச் சரிப்படுத்தி

7. சிரசினில் எனக்கெண்ணெய் எடுத்து ஊற்றி - அபி
ஷேகம் செய்கிறீர் சகலமும் பூர்த்தி

8. ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையுடன் - கிருபை
சேர்ந்து தொடரும் என்னை செம்மையுடன்

9. நேச கர்த்தருடைய வீட்டிலே நான் - மேவி
நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்

1070. கர்த்தர் என்னை விசாரிப்பவர்

கர்த்தர் என்னை விசாரிப்பவர்
கர்த்தர் என்னை ஆதரிப்பவர்
கர்த்தர் என்னை உயர்த்துபவர்
கர்த்தர் என்னைத் தப்புவிப்பவர்.

1. பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு என்னை
அவர் நித்தம் நடத்திச் செல்வதால்
எந்தன் கவலை பாரத்தை முற்றும்
அவர் மீது வைத்திடுவேன் நான்.

2. தேவன் எந்தன் பட்சத்தில் இருக்க
மனிதன் எனக்கு என்னதான் செய்வான்?
எந்தன் கண்ணீரைத் தம் துருத்தியில்
அவரின் கணக்கில் வைத்துள்ளார் அல்லோ.

3. வலது கரத்தைப் பிடித்து என்னையும்
உனது துணை நான் என்று சொல்லி
வழக்காடுவோர் அனைவரையுமே
வெட்கப்பட்டு போகச் செய்வாரே.

4. தேவன் தமது ஐசுவரியத்தினால்
எந்தன் குறைகளை எல்லாமே
கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையில்
நிறைவாக்குவாரே கவலை ஏன்?

Tamil Hymns

1071. கர்த்தர் கரம் என் மேலங்க கடுகளவு

கர்த்தர் கரம் என் மேலங்க
கடுகளவு பயமில்லங்க

1. ஏந்திடுவார் என்னைத் தாங்கிடுவார்
இறுதி வரை என்னை நடத்திடுவார்

2. ஊட்டிடுவார் தாலாட்டிடுவார்
எதிரி வந்தால் எத்திடுவார்

3. அணைப்பாரே அரவணைப்பாரே
அள்ளி அள்ளி முத்தம் கொடுப்பாரே

4. இரத்ததாலே கழுவுகிறார்
இரட்சிப்பாலே உடுத்துகிறார்

5. தாலாட்டுவார் சீராட்டுவார்
வாலாக்காமல் தலையாக்குவார்

6. பறித்துக் கொள்ள முடியாதுங்க
ஒருவராலும் முடியாதுங்க

1072. கர்த்தர் கிருபை என்றுமுள்ளது

கர்த்தர் கிருபை என்றுமுள்ளது
என்றென்றும் மாறாதது
ஆண்டுகள் தோறும் ஆண்டவர் கிருபை
ஆண்டு நடத்திடுதே

கர்த்தர் நல்லவர் நம் தேவன் பெரியவர்
பெரியவர், பரிசுத்தர் கிருபைகள்
நிறைந்தவர் உண்மையுள்ளவர்

1. கடந்த ஆண்டு முழுவதும் நம்மை
கரத்தைப் பிடித்து நடத்தினாரே
தகப்பன் பிள்ளையை சுமப்பது போல
தோளில் சுமந்து நடத்தினாரே

2. வியாதி படுக்கை மரண நேரம்
பெலனற்ற வேளையில் தாங்கினாரே
விடுதலை தந்தார் பெலனும் ஈந்தார்
சாட்சியாய் நம்மை நிறுத்தினாரே

3. சோதனை நம்மை சூழ்ந்திட்ட நேரம்
வலக்கரத்தால் நம்மை தேற்றினாரே
வார்த்தையை அனுப்பி நம்மோடு பேசி
தைரியப்படுத்தி நடத்தினாரே

4. கண்ணீர் கவலையாவையும் போக்க
கர்த்தர் இயேசு வருகின்றாரே
கலங்கிட வேண்டாம் பயப்பட வேண்டாம்
அவரோடு நாமும் பறந்து செல்வோம்

Tamil Hymns

1073. கர்த்தர் செய்ய நினைத்தது ஒன்றும்

கர்த்தர் செய்ய நினைத்தது
ஒன்றும் தடைபடாது - 2
தடைகளை நீக்குவார் ஜெயத்தை தந்திடுவார்
ஜெயமாய் நடத்துவார் - உன்னை (நம்மை)
ஜெயமாய் நடத்துவார்
அல்லேலூயா… அல்லேலூயா (8)

1. இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே -நம்
கர்த்தருக்கு பிரியமானதே
அபிரகாமை ஆசிர்வதித்தவர்
உன்னையும் இன்று ஆசீர்வதிப்பார்
சூழ்நிலைகளைப் பார்த்து நீ சோர்ந்து போகாதே
கர்த்தர் உன்னை உயர்த்திடுவார் - அல்லேலூயா

2. வழியே இல்லா இடங்களிலும் - புது
வழியை உனக்கு உண்டாக்குவார்
இருண்டுபோன உந்தன் வாழ்க்கையில் - ஜீவ
ஒளியை இன்று ஏற்றிடுவார்
வாசல்கள் எல்லாம் அடைக்கப்பட்டாலும் - புது
வாசல் உனக்கு திறந்திடுவார்

Tamil Hymns

1074. கர்த்தர் சொல்ல ஆகுமே

கர்த்தர் சொல்ல ஆகுமே
கட்டளையிடவும் நிற்குமே
தேவ வார்த்தைகள் சத்தியம்
தேவ செய்கைகள் உத்தமம்

1. வானமும் பூமியும் வார்த்தையினாலே
சிருஷ்டித்து காத்திடும் உத்தமரே
சத்திய தேவனே எங்களிலே
சிருஷ்டிக்கும் வல்லமை வெளிப்படுத்தும்

2. நியாயமும் நீதியும் தரித்தவர் நீரே
காருண்ய வல்லமை நிறைந்தவரே
தளர்ந்திடும் போதும் சோர்ந்திடும்போதும்
தேற்றிடும் வல்லமை வெளிப்படுத்தும்

3. கர்த்தரின் நினைவுகள் நின்றிடும் என்றும்
அவரது யோசனை உத்தமமே
சகலத்தை அறித்திடும் எம் தேவனே
ஆளுகை புரிந்திடும் ஜீவியத்தில்

4. சீடரை தெரிந்துமே பூமியில் எங்கும்
சத்தியம் சாற்றிட அழைத்தவரே
உந்தனின் கட்டளை நிறைவேற்றிட
உன்னத வல்லமை அளித்திடுமே

Tamil Hymns

1075. கர்த்தர் சொல்ல ஆகுமே கர்த்தர்

கர்த்தர் சொல்ல ஆகுமே
கர்த்தர் சொன்னால் போதுமே (2)
தேவ வார்த்தை சத்தியமானதே
தேவ செய்கை உண்மையானதே (2)

1. வானம் பூமி யாவும்
உம் வார்த்தையினாலே
சிருஷ்டித்தீரே காத்திட்டீரே

2. கடலும் காற்றும் மழையும்
உம் ஆவியினாலே
சிருஷ்டித்தீரே காத்திட்டீரே

3. கவலை கண்ணீர் கஷ்டம் மாறும்
உம் வார்த்தையினாலே
ஒரு வார்த்தை நீர் சொன்னால் போதுமே

Tamil Hymns

1076. கர்த்தர் துயர் தொனியாய்

கர்த்தர் துயர் தொனியாய்
கதறி முகங்கவிழ்ந்தே
இருள் சூழ்ந்த தோட்டத்திலே
இதயம் நொறுங்கி ஜெபித்தார்

1. மரணத்தின் வியாகுலமோ
மனிதர் துணை இல்லையோ
தேவ தூதன் தேற்றிடவே
தருணம் நெருங்க ஒப்படைத்தார்
துன்ப சுமை சுமந்தார்

2. துக்கத்தால் தம் சீஷர்களே
தலை சாய்த்து தூங்கினரே
தம்மை மூவர் கைவிடவே
தூரமாய் கடந்தே திகிலடைந்தார்
தன்னந் தனிமையிலே

3. பிதாவே இப்பாத்திரத்தின்
பங்கினை நான் ஏற்றுக்கொண்டேன்
ஆகட்டும் உமது சித்தம்
அது நீங்கிடுமோ என்றுரைத்தார்
ஆ இரத்த வேர்வையுடன்

4. திறந்த கெத்சமனேயில்
துணிந்து வந்த பகைஞன்
என்ன துரோகம் செய்திடுனும்
எந்தன் சிநேகிதனே என்றழைத்தார்
என்ன மா அன்பிதுவே

5. பரமன் ஜெப சத்தமே
பூங்காவினில் கேட்கின்றதே
பெருமுச்சுடன் ஜெபிக்கும்
அவரோடிணைந்தே கண்ணீருடன்
ஆவியிலே ஜெபிப்பேன்

6. இயேசு தாங்கின துன்பங்கள்
என்னைத் தாண்டியே செல்லாதே
எனக்கும் அதில் பங்குண்டே
சிலுவை மரணப் பாடுகளால்
சீயோனில் சேர்ந்திடுவேன்

Tamil Hymns

1077. கர்த்தர் தேவன் என்னிலே வாசம்

கர்த்தர் தேவன் என்னிலே
வாசம் செய்யும் நாளிது
அக்கினியின் மதிலாக
அரவணைத்து நிற்கிறார்

1. கிறிஸ்து இயேசு மகிமையின்
இரகசியமாய் என்னிலே
வாசம் செய்து வருவதே
இரகசியம் இரகசியம்

2. வேண்டுவதற்கும் நினைப்பதற்கும்
மிகவும் அதிகமாய் என்னிலே
கிரியை செய்யும் வல்லமை
ஆஹா என்ன அதிசயம்

3. எந்தன் தேவன் கண்ணானால்
கண்ணின் மணியாய் நானிருப்பேன்
என்னைத் தொடுவான் அவரது
கண்ணின் மணியைத் தொடுவானாம்

4. பராக்கிரமும் அவரே தான்
பட்டயம் அவர் கையில் நானாவேன்
என்னை வில்லாய் நாணேற்றி
எதிரியினை வெல்லுவார்

5. எந்தன் இராஜா வருகின்றார்
அவரின் மந்தையை இரட்சிக்க
அவரின் நேசக் கொடிகளின்
கிரீடத்தில் நான் பதித்துள்ளேன்

Tamil Hymns

1078. கர்த்தர் நம்மை நடத்திய வழிகள்

கர்த்தர் நம்மை நடத்திய வழிகள்
எந்நாளும் நினைத்திடுவோம்
நன்றியாலே நிறைந்தவர் நாமம்
எந்நாளும் துதித்திடுவோம்

1. அன்றொரு நாளில் அழைத்தவர் அவரே
இன்று வரையிலும் நடத்தி வந்தாரே
சென்ற இடமெல்லாம் நம்முடன் இருந்தே
ஜெயமுடன் நம்மையும் நடத்தினாரே

2. ஞானிகள் வல்லவர் நல்லோர்கள் இருந்தும்
ஏதுமில்லா நம்மைத் தெரிந்தெடுத்தாரே
நம்மையும் நம்பியே கிருபைகள் அளித்தார்
என்றுமே அவர்க்காய் வாழ்ந்திடுவோம்

3. எத்தனை குறைகள் நம்மிலே இருந்தும்
எத்தனை முறையோ மன்னித்து மறந்தே
நம் பெலவீனத்தில் தம் பெலனளித்தே
நம்மையும் தயவாய் நடத்தினாரே

4. எத்தனை நன்மைகள் எத்தனை நண்பர்கள்
எத்தனை மேன்மைகள் நமக்களித்தாரே
எண்ணிடும் வேளையில் கண்ணீர் பெருகுதே
எண்ணில்லா துதியும் ஏறெடுப்போம்

Tamil Hymns

1079. கர்த்தர் நல்லவர் அவர் கிருபை

கர்த்தர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே - 2

பரலோகம் திறந்திடும் நேரம்
தேவ மகிமை இறங்கிடுதே

1. கர்த்தரை துதித்து ஸ்தோத்தரித்தால்
பரிசுத்த ஸ்தலத்தில் நாம் கூடினால் - 2
அபிஷேகத்தால் நம்மை நிறப்பிடுவார்
மகிமையினால் நம்மை மூடிடுவார் - 2

2. அந்நியபாஷைகள் தந்திடுவார்
அக்கினி அபிஷேகம் ஊற்றிடுவார்
வரங்களினால் நம்மை நிறப்பிடுவார்
ஆயுதமாய் நம்மை மாற்றிடுவார்

Tamil Hymns

1080. கர்த்தர் நல்லவர் துதியுங்கள் அவர்

1. கர்த்தர் நல்லவர் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
தேவாதி தேவனை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
கர்த்தாதி கர்த்தரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
அற்புதம் செய்பவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

மகிழ்ந்து பாடு அல்லேலூயா
புகழ்ந்து பாடு அல்லேலூயா
சேர்ந்து பாடு அல்லேலூயா
துதித்து பாடு அல்லேலூயா
களித்து பாடு அல்லேலூயா
அல்லேலூயா ஆமென்

அல்லேலூயா -18

2. வானங்களை விரித்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
பூமியை படைத்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
சூரியனை நிறுத்தியவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
சந்திரனை படைத்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

3. செங்கடலைப் பிளந்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
அரசர்களை அழித்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
சேனைகளைக் கவிழ்த்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
தேசத்தைத் தந்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

4. தாழ்வில் நினைத்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
விடுதலை தந்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

Tamil Hymns

ஆகாரம் தருபவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
பரத்தின் தேவனை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

1081. கர்த்தர் நல்லவர் ருசித்து பாருங்கள்

கர்த்தர் நல்லவர் ருசித்து பாருங்கள்
அவரை நம்பிடுவோர்
என்றும் பாக்கியாவன்
கர்த்தர் நல்லவர் கீர்த்தனம் பண்ணுங்கள்
அவரை நம்பிடுவோர் வெட்கமயடையார்

1. அப்பம் தண்ணீரை ஆசீர்வதிப்பவர்
வியாதியை முற்றிலும் விலக்கி வைப்பவர்
வாதை கூடாரம் அணுகா(து)மல் காப்பவர்
நீடித்த நாட்கள் திருப்தி செய்பவர்

2. வலது கையினால் அற்புதம் செய்பவர்
சத்ரு சேனையை கலங்கடித்தவர்
சிவந்த சமுத்திரம் இரண்டாக பிளந்தவர்
கன்மலை பிளந்து தண்ணீரை தந்தவர்

Tamil Hymns

1082. கர்த்தர் நல்லவர் ருசித்து பாருங்கள்

கர்த்தர் நல்லவர் ருசித்து பாருங்கள்
யுத்தத்தில் வல்லவர் யோசித்து பாருங்கள்
கர்த்தர் பெரியவர் துதித்து பாடுங்கள்
அவர் நல்லவர் அவர் வல்லவர் அவர் பெரியவர் -2

1. உன்னதமானவர் மறைவில் இருப்பவன்
சர்வ வல்லவர் நிழலில் தங்குவான்
அவர் சிறகுகளால் உன்னை மூடுவார்
அவர் செட்டையில் அடைக்கலம் புகுவாய்

2. வல்லமையானர் கரத்தில் இருப்பவன்
வாழ்வில் மேன்மையை அடைந்தே வாழுவான்
அவர் கிருபையினால் உன்னை நிரப்பிடுவார்
அவர் மகிமையில் தங்கிடுவாய்

3. பரிசுத்தமானவர் பாதத்தில் இருப்பவன்
பாரில் இயேசுவை பாடி போற்றுவான்
அவர் அன்பினால் உன்னை அணைத்திடுவார்
அவர் ஆறுதல் பெற்றிடுவாய்

Tamil Hymns

1083. கர்த்தர் நாமம் என் புகலிடமே

கர்த்தர் நாமம் என் புகலிடமே
கருத்தோடு துதித்திடுவேன் - 2

1. யெகோவாயீரே எல்லாமே பார்த்துக் கொள்வீர்
கலங்கலப்பா - நாங்க கலங்கலப்பா

2. யெகோவா நிசியே எந்நாளும் வெற்றி தருவீர்
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே

3. யெகோவா ரஃப்பா சுகம் தரும் தெய்வமே
கலங்கலப்பா - நாங்க கலங்கலப்பா

4. யெகோவா ரூவா எங்கள் நல்ல மேய்ப்பரே
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே

5. யெகோவா ஷம்மா கூடவே இருக்கின்றீர்
கலங்கலப்பா - நாங்க கலங்கலப்பா

6. யெகோவா ஷாலோம் சமாதானம் தருகின்றீர்
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே

Tamil Hymns

1084. கர்த்தர் பெரியவர் அவர் நமது

கர்த்தர் பெரியவர் அவர் நமது
தேவனுடைய நகரத்திலே
தமது பரிசுத்த பர்வதத்திலே
மிகத் துதிக்கப்படத் தக்கவர்

1. வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம்
வடிப்பமான ஸ்தானமே
சர்வ பூமியின் மகிழ்ச்சியாயிருக்கிறது
அது மகா ராஜாவின் நகரம்

2. அதின் அரமனையில் தேவன் உயர்ந்தவராய்
அடைக்கலமாக அறியப்பட்டார்
இதோ ராஜாக்கள் ஏகமாய்க் கடந்து வந்து
அதை கண்டு விரைந்தோடினர்

3. தேவனே உமது ஆலயம் நடுவே
உம் கிருபையை சிந்திக்கிறோம்
பூமியின் கடையாந்தர பரியந்தமும்
உம் புகழ்ச்சியும் விளங்கிடுதே

4. இந்த இயேசு தேவன் என்றென்றுமுள்ள
சதா காலமும் நமது தேவன்
மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்
நித்திய மகிமையில் சேர்த்திடுவார்

Tamil Hymns

1085. கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு

கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு
கலங்கித் தவிக்காதே
அவரே உன்னை ஆதரிப்பார்
அதிசயம் செய்வார்

1. நீதிமான் தள்ளாட விடமாட்டார்
நித்தமும் காத்து நடத்திடுவார்

2. நம்மைக் காக்கும் தேவனவர்
நமது நிழலாய் இருக்கின்றவர்

3. தகப்பனும் தாயும் கைவிட்டாலும்
அவரே நம்மை அணைத்துக் கொள்வார்

4. கர்த்தர் நம் சார்பில் இருக்கும்போது
நமக்கு எதிராய் நிற்பவன் யார்

5. வாழ்வை கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்போம்
அவரே எல்லாம் வாய்க்கச் செய்வார்

6. என்றும் அவரில் மகிழ்ந்திருப்போம்
இதய விருப்பம் நிறைவேற்றுவார்

Tamil Hymns

1086. கர்த்தரிலும் தம் வல்லமையிலும்

1. கர்த்தரிலும் தம் வல்லமையிலும்
கிருபையாய் யாவரும் பலப்படுவோம்
தீங்கு நாளிலே சாத்தானை எதிர்த்து நின்று
திராணியுடன் போர் புரிவோம்

சர்வாயுத வர்க்கத்தை
எடுத்துக் கொள்வோம்
சாத்தானின் சேனை முறிததிடுவோம்
அவர் சத்துவ வல்லமையால்

2. மாமிசம், ரத்தத்துடனுமல்ல
துரைத்தனம், அதிகாரம், அந்தகாரத்தின்
லோகாதிபதியோடும் பொல்லா ஆவியோடும்
போராட்டம் நமக்கு உண்டு - சர்வா

3. சத்தியமாம் கச்சையைக் கட்டியே
நீதியின் மார்கவசம் தரித்தே
சமாதானத்தின் சுவிசேஷ பாதரட்சை
நாம் கால்களில் தொடுத்துக் கொள்வோம் - சர்வா

4. பொல்லாங்க னெய்யும் அம்புகளை
வல்லமையோ டெதிர்க்கும் ஆயுதம்
விசுவாச மென்னும் கேடகம் மேலே
வீரமுடன் பிடித்து நிற்போம் - சர்வா

5. இரட்சண்யமாம் தலை சீராவும்
எக்ஷனமும் அணிந்து கொள்வோம்
தேவ வசனமென்னும் ஆவியின் பட்டயம்
தேவை அதைப்பிடித்துக் கொள்வோம் - சர்வா

6. எந்த சமயத்திலும் சகல
வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும்
பரிசுத்தர்கட்காகவே ஆவியினால்
மன உறுதியுடன் ஜெபிப்போம்

Tamil Hymns

1087. கர்த்தரின் கை குறுகவில்லை

1. கர்த்தரின் கை குறுகவில்லை
கர்த்தரின் வாக்கு மாறிடாதே
சுத்தர்கலாய் மாறிடவே
சுதன் அருள் புரிந்தனரே

விசுவாசியே நீ பதறாதே
விசுவாசியே நீ கலங்காதே
விசுவாசத்தால் நீதிமான்
இன்றும் என்றும் பிழைப்பான்

2. பரிசுத்த ஆவியானவரே
பரிசுத்த பாதையில் நடத்திடுவார்
கிருபையிலே நாம் வளர்ந்திடுவோம்
வரங்களை நாடிடுவோம்

3. திருச்சபையே கிரியை செய்வாய்
திவ்விய அன்பில் பெருகிடுவாய்
தலைமுறையாய் தலைமுறையாய்
தழைத்திட அருள் புரிவாய்

4. நெஞ்சமே நீ அஞ்சிடாதே
தஞ்சம் இயேசு உன் அரணே
தம் ஜனத்தை சீக்கிரமாய்
தம்முடன் சேர்த்துக் கொள்வார்

5. மேகம் போன்ற வாக்குத் தத்தம்
சூழ நின்றே காத்திருக்க
விசுவாசத்தால் உரிமை கொள்வாய்
விரைந்து முன் ஏகிடுவாய்

Tamil Hymns

1088. கர்த்தரின் சத்தம் வல்லமையுள்ளது

கர்த்தரின் சத்தம் வல்லமையுள்ளது
கர்த்தரின் சத்தம் மகத்துவமுள்ளது
திரண்ட தண்ணீர் மேல் ஜலப் பிரவாகம் மேல்
தற்பரன் முழங்குகின்றார் அல்லேலூயா!

1. பலவான்களின் புத்திரரே
பரிசுத்த அலங்காரமாய்
கனம் வல்லமை மகிமை
கர்த்தருக்கே செலுத்திடுங்கள்
பிதா குமாரன் பரிசுத்தாவியின்
புதிய ஆசீர்வாதம் பெருக

2. கேதுரு மரங்களையும்
லீபனோனின் மரங்களையும்
கர்த்தரின் வலிய சத்தம்
கோரமாக முறிக்கின்றது
சேனை அதிபன் நமது முன்னிலை
ஜெய வீரனாகச் செல்கின்றார்

3. அக்கினி ஜுவாலைகளை
அவர் சத்தம் பிளக்கின்றது
காதேஸ் வனாந்திரத்தை
கர்த்தர் சத்தம் அதிரப்பண்ணும்
ராஜாவாகவே கர்த்தர் வீற்றிருப்பார்
ராஜரீக மெங்கும் ஜொலிக்கும்

4. பெண்மான்கள் ஈனும்படி
பெலத்த கிரியை செய்திடும்
காட்டையும் வெளியாக்கும்
கர்த்தரின் வலிய சத்தம்
பெலன் கொடுத்து சமாதானமீந்து
பரன் எம்மை ஆசீர்வதிப்பார்

Tamil Hymns

1089. கர்த்தரின் நாள் நெருங்கிடுதே

கர்த்தரின் நாள் நெருங்கிடுதே
தேவனின் வாக்கு நிறைவேறும்
தேவன் விரும்பும் ஜீவியம் காத்து
தேவனை சந்திக்க ஆயத்தமா

1. கர்த்தர் வரும் நாளை நோக்கிடும் நாமே
கர்த்தரில் நெருங்கியே சேர்வோம்
சுத்தர்கள் கூடும் ஐக்கியத்திலே
என்றும் நிலைத்தே வாழ்ந்திடுவோம்

2. அன்பு விசுவாசம் நம்பிக்கையுடனே
தெளிந்த நல் ஜீவியம் செய்வோம்
விழிப்புடன் நாமே காத்திருந்து
களிப்புடன் ஏகியே பறந்திடுவோம்

3. கர்த்தர் வெளியாகும் நாளதைக் காண
ஆவலாய் ஆயத்தமாவோம்
குற்றமே இல்லா பக்தர்களை
இயேசுவின் சந்நிதி சேர்ந்திடுவோ

Tamil Hymns

1090. கர்த்தரின் பந்தியில் வா

கர்த்தரின் பந்தியில் வா - சகோதரா
கர்த்தரின் பந்தியில் வா.....

கர்த்தர் அன்பாய்ச் சொந்த ரத்தத்தைச் சிந்தின
காரணத்தை மனப் பூரணமாய் எண்ணி

1. ஜீவ அப்பம் அல்லோ? கிறிஸ்துவின்
திருச் சரீரம் அல்லோ? பாவ மனங் கல்லோ?
உனக்காய்ப் பகிரப்பட்ட தல்லோ?
தேவ குமாரனாம் ஜீவ அப்பத்தை நீ
தின்று அவருடன் என்றும் பிழைத்திட

2. தேவ அன்பைப் பாரு - கிறிஸ்துவின் சீஷர்
குறை தீரு - பாவக் கேட்டைக் கூறு
ராப்போசன பந்திதனில் சேரு - சாவுக்குரிய
மா பாவமுள்ள லோகம் தன்னில்
மனம் வைத்து அன்னியன் ஆகாதே

3. அன்பின் விருந்தாமே கர்த்தருடன்
ஐக்யப் பந்தியாமே - துன்பம்
துயர் போமே இருதயம் சுத்த திடனாமே
இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதமும் இல்லாதிப்போதே வா

Tamil Hymns

1091. கர்த்தரின் மாம்சம் வந்துட் கொள்ளுங்கள்

1. கர்த்தரின் மாம்சம் வந்துட் கொள்ளுங்கள்
சிந்துண்ட ரத்தம் பானம் பண்ணுங்கள்

2. தூய ரத்தத்தால் ரட்சிப்படைந்தோம்
நற்பெலன் பெற்று துதி ஏற்றுவோம்

3. தெய்வ குமாரன், மீட்பின் காரணர்
தம் சிலுவையால் வெற்றி பெற்றவர்.

4. தாமே ஆசாரி, தாமே பலியாய்
தம்மைச் செலுத்தினார் எல்லார்க்குமாய்.

5. பண்டை ஏற்பாட்டின் பலிகள் எல்லாம்
இந்த ரகசியத்தின் முன்குறிப்பாம்

6. சாவின் கடூர வன்மை மேற்கொண்டார்
தம் பக்தருக்கருள் கடாட்சிப்பார்

7. உண்மை நெஞ்சோடு சேர்ந்து வாருங்கள்
ரட்சிப்பின் பாதுகாப்பை வாங்குங்கள்

8. தம் பக்தரை ஈங்காண்டு காக்கிறார்
அன்பர்க்கு நித்திய ஜீவன் ஈகிறார்.

9. விண் அப்பத்தாலே திருப்தி செய்கிறார்
ஜீவ தண்ணீரால் தாகம் தீர்க்கிறார்.

10. எல்லாரும் தீர்ப்புநாளில் வணங்கும்
அல்பா ஒமேகா நம்மோடுண்டிங்கும்.

Tamil Hymns

1092. கர்த்தரின் வருகை நெருங்கிடுதே

1. கர்த்தரின் வருகை நெருங்கிடுதே
காத்திருப்போம் மனம் பூரிக்குதே
தேவ எக்காளம் விண் முழங்கிடவே
தூதர்கள் ஆயத்தமே

தேவ கிருபையே அவர் கிருபையே
தேவக்குமாரன் வெளிப்படும் நாளிலே
கண்ணிமைப் பொழுதே மாறிடுவோம்
விண்மேகம் மறைந்திடுவோம்

2. திருடனைப் போல வந்திடுவார்
தீவிரமாய் நாம் விழித்திருப்போம்
சம்பத்தைச் சேர்க்கும் நாளதில் நம்மைச்
சொந்தமாய் வந்தழைப்பார் - தேவ கிருபையே

3. லோத்தின் மனைவி நினைத்திடுவோம்
லோகத்தின் ஆசைகள் வெறுத்திடுவோம்
லௌகீக பாரம் பெருந்தீனி தள்ளி
தெய்வீகமாய் ஜொலிப்போம் - தேவ கிருபையே

4. ஆவியின் முத்திரை பெற்றவரே
ஆயத்தமாய்த் தவிக்கின்றனரே
புத்திர சுவிகாரம் அடைந்திடவே
பாத்திரர் ஆவோமே - தேவ கிருபையே

5. நம் குடியிருப்போ பரத்திலுண்டே
நம் கிறிஸ்தேசுவும் அங்கு உண்டே
வல்லமையான தம் செயலாலே
விண் மகிமை அடைவோம் - தேவ கிருபையே

6. தாமதம் வேண்டாம் வந்திடுமே
தம்திரு வாக்கு நினைத்திடுமே
இயேசுவே வாரும் ஆவலைத்தீரும்
ஏங்கி அழைக்கிறோமே

Tamil Hymns

1093. கர்த்தருக்குக் காத்திருப்போர் யாரும்

கர்த்தருக்குக் காத்திருப்போர் யாரும்
வெட்கப்பட்டுப் போவதில்லை -- (2)

1. துன்பங்கள் தொல்லைகள்
கஷ்டங்கள் வந்தாலும்

கர்த்தருக்குக் காத்திருப்போர்
வெட்கப்பட்டுப் போவதில்லை

2. வியாதிகள் வறுமை
வேதனை வந்தாலும்

3. தேசத்தில் கொள்ளைநோய்
யுத்தங்கள் வந்தாலும்

4. விலைவாசி விஷம் போல்
உயர்ந்து போனாலும்

5. பாவத்தின் கொடுமையால்
பல ஜனம் அழிந்தாலும்

Tamil Hymns

1094. கர்த்தருக்கு நாம் புதுப்பாட்டு துதியுடன்

கர்த்தருக்கு நாம் புதுப்பாட்டு
துதியுடன் ஏறெடுப்போம்
ஆவிக்குள்ளாய் பாடி மகிழ்வோம்
இயேசுவைக் கொண்டாடிடுவோம்

நாமெல்லாரும் ஒன்று கூடி
இயேசுவை கொண்டாடிவோம்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
கர்த்தருக்கென்றும் ஸ்தோத்திரம்

1. பரமானந்த நற்செய்தி வானில்
பரலோக தூதர் கூறினர்
நம் இயேசு பிறந்தார் பெத்லகேமில்
நமக்கும் இரட்சிப்பு வந்ததே

2. பரன் இயேசுவின் சத்திய மார்க்கம்
புனித புது வழியே
மெய்பூரண சத்தியம் பறை சாற்றி
மகிமை ஊழியம் செய்குவோம்

3. இன்ப இயேசுவே வாரும் விரைந்தே
இது நம் இறுதி ஜெபமே
நம் இயேசுவின் பொன் முகம் வேகம் காண்போம்
நடு வானில் வந்திறங்குவார்

Tamil Hymns

1095. கர்த்தருக்குள் களிகூர்ந்து மகிழ்கிறேன்

கர்த்தருக்குள் களிகூர்ந்து மகிழ்கிறேன்
கவலைகளை மறந்து துதிக்கிறேன்
ஆர்ப்பரித்து ஆரவார பலிதனையே
அப்பாவுக்கு ஆனந்தமாய் செலுத்துகிறேன்

ஆனந்த பலி ஆனந்த பலி
(என்) அப்பாவுக்கு அப்பாவுக்கு-2

1. பாவ சாபம் எல்லாமே பறந்து போச்சு
பரிசுத்த வாழ்வு என்னுள் வந்தாச்சு-இன்று

2. பயமும், படபடப்பும் ஓஞ்சுப் போச்சு
பாடுகளை தாங்கும் பெலன் வந்தாச்சு

3. நோய்நொடி எல்லாமே நீங்கிப் போச்சு
பேய்களை விரட்டும் ஆற்றல் வந்தாச்சு

4. நேசக்கொடி என்மேலே பறக்குதையா..என்
நேசருக்காய் பணிசெய்ய துடிக்குதையா

5. கடன்தொல்லை கஷ்டமெல்லாம்
கடந்து போச்சு - என் கண்ணீர்கள்
எல்லாமே முடிஞ்சுப்போச்சு

1096. கர்த்தரை எக்காலமும் ஸ்தோத்திரித்து

கர்த்தரை எக்காலமும்
ஸ்தோத்திரித்து பாடுவேன்
அவர் துதி வாயிலிருக்கும்

1. கர்த்தருக்குள் எந்தன் ஆத்துமா
மேன்மையினால் நிறைந்து நிற்குதே
கனம் மகிமை அவர்க்கு உரியதே

2. இந்த ஏழை அவரைக் கூப்பிட்டான்
இறங்கி வந்தே பதில் கொடுத்தாரே
இடுக்கண் எல்லாம் நீக்கி விட்டாரே

3. வாதை துன்பம் வந்த வேளையில்
பாதை காட்டி என்னைத் தேற்றினார்
வலக்கரத்தால் தாங்கிக் கொண்டாரே

4. என் சத்தத்தை உயர்த்திக் கெஞ்சினேன்
என் தேவனிடத்திலேயே கெஞ்சினேன்
அவர் எனக்கு செவி கொடுத்தாரே

Tamil Hymns

1097. கர்த்தரை என்றும் நம்பிக்கையாக

கர்த்தரை என்றும் நம்பிக்கையாக
கொண்டவன் எவனோ பாக்கியவான்
வருத்தமின்றி வறட்சி காலத்தில்
தப்பாமல் கனி தருவான்

1. தேவன் தங்கிடும் உயர்ந்த ஸ்தானம்
என்றும் விரும்பியே சேர்வாய்
நிலைத்திருந்தே கனி தந்திட
உணர்வின் ஜீவியம் அவசியமே

2. ஆவியின் ஊற்றில் ஆழமாய் சென்றிடும்
வேர்களை உடையவன் செழிப்பான்
வெப்ப காலமும் தாழ்ச்சி இல்லாமல்
பசுமை நிறைவுடன் ஓங்கிடுவான்

3. நற்குல கனியாய் மாறிட உன்னை
நாட்டிய இயேசுவைக் காண்பாய்
உந்தன் இச்சையை நிறைவேற்றாமல்
உணர்ந்து ஜீவியம் செய்திடுவாய்

Tamil Hymns

1098. கர்த்தரைத் துதித்து அவரின் நாமத்தை

கர்த்தரைத் துதித்து அவரின் நாமத்தை
பிரஸ்தாபமாக்குங்கள் (2)
அவரின் செய்கைகளை என்றும்
பிரசித்தப்படுத்துங்கள்

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா பாடிடுவோம்
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா ஆர்ப்பரிப்போம்

1. கர்த்தரே பெரியவர்
அவர் ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவர் (2)
ஜனங்களுக்குள்ளே மகிமையைப்பாடி (2)
விவரித்துச் சொல்லுங்களேன் (2) - கர்த்தரைத்

2. கர்த்தர் வல்லவர்
செங்கடல்தனை பிளந்தவர் (2)
அவர் சொல்ல ஆகும் கட்டளையிட நிற்கும் (2)
வல்லமை மிகுந்தவர் (2) - கர்த்தரைத்

3. கர்த்தரே நல்லவர்
நன்மையானதைச் செய்பவர் (2)
அல்லேலூயா பாடி ஆனந்தமாய்க் கூடி (2)
மகிமை செலுத்துவோம் (2)

Tamil Hymns

1099. கர்த்தரை துதிப்பதும் கீர்த்தனம்

கர்த்தரை துதிப்பதும் கீர்த்தனம்
பண்ணுவதும் எவ்வளவு நல்லது (2)
அல்லேலூயா அல்லேலூயா - 6

சேனைகளின் கர்த்தாவே - உம்
வாசஸ்தலங்கள் எவ்வளவு
மேன்மையும் இன்பமானவை (2)

1. உம் பீடங்களண்டையிலே
அடைக்கலான் குருவிக்கு வீடே
உம் சமுகத்தண்டையிலே
தகைவிலான் குஞ்சுக்கு கூடே

2. ஆகாமியக் கூடாரங்களில்
ஆயிரம் நாளைப் பார்க்கிலும்
உம் ஆலய வாசலிலே
காத்திருக்கும் நாள் நல்லது

3. தேவன் தங்கும் உள்ளம்
அது ஜீவனுள்ள தேவாலயம்
அது பரிசுத்தர் வாசம் செய்யும்
பரலோக தேவ ஆலயம்

Tamil Hymns

1100. கர்த்தரை துதிப்பேன் என் தேவனை

கர்த்தரை துதிப்பேன்
என் தேவனை துதிப்பேன்

1. **யூதா கோத்திரமே துதிப்பேன்**
இம்மானுவேலனை துதிப்பேன்

2. **இயேசுவே உம்மை நான் துதிப்பேன்**
பரிசுத்தரே உம்மை துதிப்பேன்

3. **உந்தன் பெலனால் துதிப்பேன்**
எந்தன் கீதமே துதிப்பேன்

4. **நல்லவரே நான் துதிப்பேன்**
நாள் முழுதும் உம்மை துதிப்பேன்

Tamil Hymns

1101. கர்த்தரையே துதிப்பேன்

கர்த்தரையே துதிப்பேன்
காலமெல்லாம் துதிப்பேன்
வல்லவர் நல்லவர் கிருபையுள்ளவர்
என்றே பாடுவேன் – நான்

1. நெருக்கத்திலே கர்த்தரை நோக்கி
கதறி கூப்பிட்டேன்
நெருங்கி வந்து குரலைக் கேட்டு
விடுதலை கொடுத்தார்

2. எனக்குதவும் கர்த்தர் எனது
நடுவில் இருக்கிறார்
எதிரியான அலகையை நான்
எதிர்த்து வென்றிடுவேன்

3. எனது பெலனும் எனது மீட்பும்
கீதமுமானார்
நம்பியிருக்கும் கேடயமும்
கோட்டையுமானார்

4. கர்த்தர் எனது பக்கம் இருக்க
எதற்கும் பயமில்லை
கடுகளவும் பாவம் என்னை
அணுகமுடியாது

5. வல்லமை மிக்கவர் செயல்கள் பல
எனக்குச் செய்தாரே
உயிரோடிருந்து உலகத்திற்கு
எடுத்துச் சொல்லுவேன்

Tamil Hymns

1102. கர்த்தரை துதியுங்கள்

கர்த்தரை துதியுங்கள்
அவர் என்றும் நல்லவர்
அவர் பேரன்பு என்றுமுள்ளது

1. ஒருவராய் மாபெரும்
அதிசயங்கள் செய்தாரே
வானங்களை ஞானமாய்
உண்டாக்கி மகிழ்ந்தாரே

இன்று போற்றி புகழுவோம்
நாம் உயர்த்தி மகிழுவோம் - 2

2. பகலை ஆள்வதற்கு
கதிரவனை உண்டாக்கினார்
இரவை ஆள்வதற்கு
சந்திரனை உண்டாக்கினார்

3. செங்கடலை இரண்டாக
பிரித்து நடக்கச் செய்தார்
வனாந்திர பாதையிலே
ஜனங்களை நடத்திச் சென்றார்

4. தாழ்மையில் இருந்த
நம்மையெல்லாம் நினைவுகூர்;ந்தார்
எதிரியின் கையினின்று
விடுவித்துக் காத்துக் கொண்டார்

Tamil Hymns

1103. கர்த்தரை தேடின நாட்களெல்லாம்

கர்த்தரை தேடின நாட்களெல்லாம்
காரியம் வாய்க்கச் செய்தாரே
எத்தனை எத்தனை நன்மைகளோ
இயேசப்பா செய்தாரே - நான்

இறுதிவரை என் வாழ்வு
இயேசப்பா உமக்குத்தானே - 2

1. கால்கள் தள்ளாட விடமாட்டார்
காக்கும் தேவன் உறங்க மாட்டார்
இஸ்ராயேலைக் காக்கிறவர்
எந்நாளும் தூங்க மாட்டார்

2. கர்த்தர் என்னைக் காக்கின்றார்
எனது நிழலாய் இருக்கின்றார்
பகலினிலும், இரவினிலும்
பாதுகாக்கின்றார்

3. போகும் போதும் காக்கின்றார்
திரும்பும் போதும் காக்கின்றார்
இப்போதும், எப்போதும்
எந்நாளும் காத்திடுவார்

1104. கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்

கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்
கவலை கஷ்டங்கள் தீர்ந்திடும்
கைவிடா காத்திடும் பரமனின்
கரங்களை நாம் பற்றிக் கொள்வோம்

1. ஜீவ தேவன் பின் செல்லுவோம்
ஜீவ ஒளிதனைக் கண்டடைவோம்
மனதின் காரிருள் நீங்கிடவே
மா சமாதானம் தங்கும்

2. உண்மை வழி நடந்திடும்
உத்தமனுக்கென்றும் கர்த்தர் துணை
கண்கள் அவன்மீது வைத்திடுவார்
கருத்தாய்க் காத்திடுவார்

3. உள்ளமதின் பாரங்களை
ஊக்கமாய்க் கர்த்தரிடம் சொல்லுவோம்
இக்கட்டு நேரத்தில் கூப்பிடுவோம்
இயேசு வந்தாதரிப்பார்

4. அன்பு மிகும் அண்ணலிவர்
அருமை இயேசுவை நெருங்குவோம்
தம்மண்டை வந்தோரை தள்ளிடாரே
தாங்கி அணைத்திடுவார்

5. நீதிமானின் சிரசின் மேல்
நித்திய ஆசீர் வந்திறங்குமே
கிருபை, நன்மைகள் தொடருமே
கேட்பது கிடைக்குமே

6. இம்மைக்கேற்ற இன்பங்களை
நம்மைவிட்டு முற்றும் அகற்றுவோம்
மாறாத சந்தோஷம் தேடிடுவோம்
மறுமை இராஜ்ஜியத்தில்

Tamil Hymns

1105. கர்த்தரை நம்பினோர் பேறுபெற்றோர்

கர்த்தரை நம்பினோர் பேறுபெற்றோர்
சீயோன் மலைபோல் உறுதியுடன்
அசையாமல் இருப்பார்கள்

1. எருசலேம் நகரம் மலைகளால்
எப்போதும் சூழ்ந்து இருப்பதுபோல்
இப்போதும் எப்போதும் கர்த்தர் நம்மை
சூழ்ந்து சூழ்ந்து காத்திடுவார்

2. வாய்க்கால்கள் ஓரத்தில் நடப்பட்டு
கனிதரும் மரமாய் வளர்வார்கள்
கோடை காலத்தில் பயமில்லை
வறட்சி வந்தாலும் கவலையில்லை

3. மனைவி கனிதரும் திராட்சைச் செடி
பிள்ளைகள் ஒலிவக் கன்றுகள் போல்
இல்லத்தில் மகிழ்ந்து வாழ்வார்கள்
இடைவிடாமல் ஜெபிப்பார்கள்

4. கர்த்தரை நேசித்து அவர் வழியில்
நடக்கும் மனிதர் பேறுபெற்றோர்
உழைப்பின் பயனை உண்பார்கள்
நன்மையும் நலமும் பெறுவார்கள்

1106. கர்த்தரையே நம்பிடும் தேவ ஜனமே

கர்த்தரையே நம்பிடும் தேவ ஜனமே
கலங்காதே ஒருபோதும்
வெட்கமடைவதில்லை (3)

1. செங்கடல் கோரமாய் முன்னே நிற்கும்
சேனைகள் பின்னால் தொடர்ந்து வரும்
ஆனாலும் முன்னேரிப்போ என்கிறாரே
அவரே ஓர் வழி திறந்திடுவாரே

2. கானானின் குடிகள் கொடியவரே
கானக பாதை கடினமாமே
கடந்து போய் நாம் அதை சுதந்தரிப்போமே
கர்த்தரே நமக்காய் யுத்தம் செய்வாரே

3. பாகாலின் சீடர்கள் சவால் விட்டு
பதிலளியா தேவனை வேண்டுகிறார்
எலியாவின் தேவன் இறங்கி வந்தாரே
எரி நெருப்பால் இன்றும் பதிலளிப்பாரே

4. உனக்கெதிராக ஆக்கிடுமாயுதம்
ஒருக்காலும் வாய்க்காமல் மறைந்திடுமே
உன் மேல் ஓர் யுத்தம் எழும்பினாலும்
உன்னை இரட்சிக்கும் தேவன் உண்டு .....

5. யாக்கோபின் கூட்டமே பயப்படாதே
ஈசாக்கின் தேவன் உன் துணையே
அன்னை தன் சேயை மறந்தாலுமே
ஆண்டவர் இயேசு அரவணைப்பாரே.....

6. சீயோனே உந்தன் பாடுகளெல்லாம்
சிலகாலம் என்று நினைத்தே பாடு
சீக்கிரம் வருவார் சேர்த்திட உன்னை
பாக்கிய மடைவாய் பரலோக வாழ்வில்

Tamil Hymns

1107. கர்த்தனே எம் துணையானீர்

கர்த்தனே எம் துணையானீர்
நித்தமும் எம் நிழலானீர்
கர்த்தனே எம் துணையானீர்

1. எத்தனை இடர் வந்து சேர்ந்தாலும்
கர்த்தனே அடைக்கல மாயினார் (2)
மனுமக்களில் இவர் போலுண்டோ
விண் உலகிலும் இவர் சிறந்தவர்

2. பாவி என்றென்னைப் பலர் தள்ளினார்
ஆவி இல்லை என்றிகழ்ந்தும் விட்டார் (2)
ராஜா உம் அன்பு எனைக் கண்டது
உம்மைப்போல் ஐயா, எங்கும் கண்டதில்லை

3. சுற்றத்தாரும் காலத்தில் குளிர்ந்திட்டார்
நம்பினோரும் எதிராக வந்திட்டார் (2)
கொள்கை கூறியே பலர் பிரிந்திட்டார்
ஐயா, உம்மைப்போல் நான் எங்கும் கண்டதில்லை

4. ஆயிரம் நாவுகள் நீர் தந்தாலும்
ராஜனே, உமைப் பாடக்கூடுமோ (2)
ஜீவனே உமக்களிக்கின்றேனே
உம்மைப்போல் ஐயா, எங்கும் கண்டதில்லை

Tamil Hymns

1108. கர்த்தா நீர் வசிக்கும்

1. கர்த்தா, நீர் வசிக்கும்
ஸ்தலத்தை நேசிப்போம்;
பாரின்பம் யாவிலும்
உம் வீட்டை வாஞ்சிப்போம்.

2. உம் ஜெப வீட்டினில்
அடியார் கூட, நீர்
பிரசன்னமாகியே
உம் மந்தை வாழ்த்துவீர்.

3. மெய் ஞானஸ்நானத்தின்
ஸ்தானத்தை நேசிப்போம்
விண் புறாவாம் ஆவியால்
பேரருள் பெறுவோம்

4. மா தூய பந்தியாம்
உம் பீடம் நேசிப்போம்
விஸ்வாசத்தால் அதில்
சமுகம் பணிவோம்.

5. மெய் ஜீவனுள்ளதாம்
உம் வார்த்தை நேசிப்போம்
சந்தோஷம், ஆறுதல்
அதில் கண்டடைவோம்.

6. உன் அன்பின் பெருக்கை
இங்கெண்ணிப் போற்றுவோம்
விண் ஜெய கீதமோ
எப்போது பாடுவோம்?

7. கர்த்தா, உம் முகத்தை
கண்ணாரக் காணவே,
உம்மை இப்பாரினில்
நேசிக்க ஏவுமே.

Tamil Hymns

1109. கர்த்தாவின் அற்புதச் செய்கை

1. கர்த்தாவின் அற்புதச் செய்கை
புத்திக் கெட்டாததாம்;
பொங்கு கடல் கடும் காற்றை
அடக்கி ஆள்வோராம்.

2. தம் வல்ல ஞான நோக்கத்தை
மா ஆழமாகவே
மறைத்துவைத்தும், தம் வேளை
முடியச் செய்வாரே

3. திகில் அடைந்த தாசரே,
மெய் வீரம் கொண்டிடும்
மின் இடியாய்க் கார் மேகமே
விண் மாரி சொரியும்.

4. உம் அற்ப புத்தி தள்ளிடும்
நம்பிக்கை கொள்வீரே;
கோபமுள்ளோராய்த் தோன்றினும்
உருக்க அன்பரே.

5. மூடர் நம்பிக்கையின்றியே
விண் ஞானம் உணரார்
தெய்வத்தின் ஞானம் தெய்வமே
வெளிப்படுத்துவார்.

Tamil Hymns

1110. கர்த்தாவின் தாசரே

1. கர்த்தாவின் தாசரே
எக்காளம் ஊதுங்கள்;
சந்தோஷ செய்தியை
எங்கெங்கும் கூறுங்கள்
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

2. எல்லார் முன்பாகவும்
இயேசுவை உயர்த்துங்கள்
அவரே யாவர்க்கும்
ரட்சகர் என்னுங்கள்
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

3. மோட்சத்தைப் பாவத்தால்
இழந்த மாந்தரே
கிறிஸ்துவின் ரத்தத்தால்
மோட்சம் கிடைக்குமே
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

4. பாவம் பிசாசுக்கும்
சிறைப்பட்டோர்களே
உங்களை ரட்சிக்கும்
மீட்பர் நல் இயேசுவே
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

5. சந்தோஷ செய்தியை
எல்லாரும் கேளுங்கள்
அன்போடு இயேசுவை
இப்போதே சேருங்கள்
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

Tamil Hymns

1111. கர்த்தாவின் ஜனமே கைத்தாளமுடனே

கர்த்தாவின் ஜனமே கைத்தாளமுடனே
களிகூர்ந்து கீதம் பாடு
சாலேமின் ராஜா நம் சொந்தமானார்
சங்கீதம் பாடி ஆடு

அல்லேலூயா! அல்லேலூயா! (2)

1. பாவத்தின் சுமையகற்றி
கொடும்பாதாள வழி விலக்கி
பரிவாக நம்மைக் கரம் நீட்டிக் காத்த
பரிசுத்த தேவன் அவரே அல்லேலூயா

2. நீதியின் பாதையிலே அவர்
நிதம் நம்மை நடத்துகின்றார்
எது வந்த போதும் மாறாத இன்ப
புது வாழ்வைத் தருகின்றாரே அல்லேலூயா

3. மறுமையின் வாழ்வினிலே இயேசு
மன்னவன் பாதத்திலே
பசிதாகமின்றி துதி கானம் பாடி
பரனோடு நிதம் வாழுவோம்! அல்லேலூயா

Tamil Hymns

1112. கர்த்தாவே உம் கிருபை எவ்வளவு

கர்த்தாவே உம் கிருபை
எவ்வளவு எனக்கு அருமை
நான் உமது செட்டைகளின்
நிழலில் வந்து அடைவேன் - 2

1. பறந்து காக்கும் பட்சி நீர்
பாதுகாப்பாய் நான் இருப்பேன் - 2
தீவிரமாய் இன்று இரங்கிடுவீர்
கடந்து வந்து விடுவிப்பீர் - 2

2. செங்கடல் தடை செய்ய முடியாது
எரிகோ எதிர் நிற்க முடியாது
யோர்தான் வழிகளை திறந்திடுமே
கன்மலை உச்சியில் வந்திடுவேன்

3. நானும் ஆசி பெற்றவனே
என்னை சபிக்க யாராலும் முடியாது
காயங்கள் அடிகள் பிலேயாமுக்கே
காக்கும் செட்டையில் நானிருப்பேன்

4. வளர்ந்து பெருகிப் படர்ந்திடுவேன்
பரவிப் பாய்ந்து ஓடிடுவேன்
காருண்யம் என்னைப் பெரியவனாக்கும்
கிருபை என்னைத் தினம் உயர்த்தும்

1113. கர்த்தாவே உம்மை போற்றுகிறேன்

கர்த்தாவே உம்மை போற்றுகிறேன்
கை தூக்கி எடுத்தீரே
உம்மை கூப்பிட்டேன்
என்னை குணமாக்கினீர்

1. எனது கால்கள் சறுக்கும் நேரமெல்லாம்
உமது அன்பு என்னைத் தாங்குதையா
என் கவலைகள் பெருகும்போது
உம் கரங்கள் அணைக்குதையா

2. உந்தன் தயவால் மலைபோல்
நிற்கசெய்தீர் - உம்மைவிட்டு பிரிந்து
மிகவும் கலங்கிபோனேன்
சாக்கு ஆடை நீக்கி என்னை
சந்தோஷத்தால் மூடினீர்

3. உம்மாலே ஒருசேனைக்குள்
பாய்ந்திடுவேன் - உம்மாலே
ஒரு மதிலை தாண்டிடுவேன்
பெலத்தால் இடைகட்டினீர்
மான் கால்கள் போலாக்கினீர்

4. உம் திரு பாதத்தில்
மகிழ்ந்து கொண்டாடுவேன் - உம் திரு
நாமத்தில் வெற்றிக் கொடி ஏந்துவேன்
கன்மலையே மீட்பரே
என்னை கைவிடா தெய்வமே

5. உமது கோபம் ஒரு நிமிடம் தான்
உமது தயவோ வாழ்நாளெல்லாம் நீடிக்கும்
மாலையில் அழுகை என்றால்
காலையில் அக்களிப்பு

Tamil Hymns

1114. கர்த்தாவே உமது கூடாரத்தில்

கர்த்தாவே உமது கூடாரத்தில்
தங்கி வாழ்பவன் யார்
குடியிருப்பவன் யார் - (2)

1. உத்தமனாய் தினம் நடந்து
நீதியிலே நிலை நிற்பவன்
மனதார சத்தியத்தையே
தினந்தோறும் பேசுபவனே

2. நாவினால் புறங்கூறாமல்
தோழனுக்குத் தீங்கு செய்யாமல்
நிந்தையான பேச்சுக்களை
பேசாமல் இருப்பவனே

3. கர்த்தருக்குப் பயந்தவரை
காலமெல்லாம் கனம் செய்பவன்
ஆணையிட்டு நஷ்டம் வந்தாலும்
தவறாமல் இருப்பவனே

4. கைகளில் தூய்மை உள்ளவன்
இதய நேர்மை உள்ளவன்
இரட்சிப்பின் தேவனையே
எந்நாளும் தேடுபவனே

Tamil Hymns

1115. கர்த்தாவே என் பெலனே

கர்த்தாவே என் பெலனே
உம்மில் அன்பு கூர்ந்திடுவேன்
துருகமும் நீர் கேடகம் நீர்
இரட்சண்யக் கொம்பும் அடைக்கலம் நீர்

1. மரணத்தின் கட்டுகள் சூழ்ந்த போதும்
துர்ச்சனப் பிரவாகம் புரண்ட போதும்
நெருக்கத்தின் மத்தியில் குரல் எழுப்ப
உருக்கமாய் வந்து உதவி செய்தார்

2. தயை செய்பவனுக்கு நீர் தயையுள்ளவர்
உத்தமனை நீர் உயர்த்திடுவீர்
புனிதனுக்கு நீர் புனிதரன்றோ
புதிய கிருபையின் உறைவிடமே

3. உம்மாலே ஓர் சேனைக்குள் பாய்வேன்
உம்மாலே மதிலைத் தாண்டுவேன்
சத்துருவை நான் தொடர்ந்திடுவேன்
சதா காலமும் ஜெயம் எடுப்பேன்

4. இரட்சண்ய கேடகம் எனக்குத் தந்தீர்
உமது கரம் என்னை உயர்த்தும்
கர்த்தரை அல்லால் தேவன் இல்லை
அவரே எந்தன் கன்மலையே

5. பலத்தினால் என்னை இடைக்கட்டி
மான்களின் கால்களை போலாக்கி
நீதியின் சால்வையை எனக்குத் தந்து
உயர் ஸ்தலத்தில் என்னை நிறுத்துகின்றார்

Tamil Hymns

1116. கர்த்தாவே தேவர்களில் உமக்கொ

கர்த்தாவே தேவர்களில்
உமக்கொப்பானவர் யார்
வானத்திலும் பூமியிலும்
உமக்கொப்பானவர் யார்

உமக்கொப்பானவர் யார் (2)
வானத்திலும் பூமியிலும்
உமக்கொப்பானவர் யார்

1. செங்கடலை நீர் பிளந்து உந்தன்
ஜனங்கலை நடத்தி சென்றீர்
நீர் நல்லவர் சர்வ வல்லவர்
என்றும் வாக்கு மாறாதவர்

2. தூதர்கள் உண்ணும் உணவால் உந்தன்
ஜனங்களை போஷித்தீரே
உம்மைப்போல் யாருண்டு
இந்த ஜனங்களை நேசித்திட

3. கன்மலையை நீர் பிளந்து
உந்தன் ஜனங்கலை தாகம் தீர்த்தீர்
உம் நாமம் அதிசயம்
இன்றும் அற்புதம் செய்திடுவீர்

Tamil Hymns

1117. கர்த்தாவே நீரே எந்தன் தேவனல்லோ

கர்த்தாவே நீரே எந்தன் தேவனல்லோ
எத்தனை அதிசயம் செய்தீர் என் வாழ்வில்
உந்தனை உயர்த்தி உம் நாமத்தை துதிப்பேன்
என் வாழ்வெல்லாம் உம் கரம் பற்றுவேன்

1. பெருவெள்ளம் போல சத்துரு வந்தாலும்
தருவீர் இவ்வேழைக்கு பெலன் திடனும்
எந்தன் கோட்டையும் அடைக்கலம் நீரே
உந்தன் தாசர்க்கு நிழலும் நீரே

2. என் தொனி கேட்டு எனக்கிரங்குமே
என் தேவா கிருபை எனக்குத் தாருமே
பகைவர் முன் என்னை உயர்த்திடுவீரே
நகைப்போர் அனைவரும் நாணுவாரே

Tamil Hymns

1118. கர்த்தாவே நீர் என்னைத் தேற்றும்

கர்த்தாவே நீர் என்னைத் தேற்றும் தேவன்
நான் என்றும் உம்மையே பற்றிக்கொள்வேன் - 2
சோகத்தால் என் உள்ளம் சோரும்போதும்
உம் ஆறுதல் என்னைத் தேற்றும் - 2

1. என் கால்கள் சறுக்கும் முன்னே
நீர் என்னைத் தாங்குகிறீர்
மானானது நீரோடையை
வாஞ்சிப்பதுபோல் உம்மை வாஞ்சிக்கின்றேன்

2. மானிடரின் வேஷங்களை
மாற்றும் உம் நேசம்தனை
உணரும் நல்ல உள்ளம் தாரும்
உமதாவியால் என்னை நிரப்பிடும்

3. உம் உள்ளம் உடையப்பண்ணும்
பாவங்கள் என்னில் உண்டோ
புடமிட்டென்னை பொன்னாக்கிடும்
பரிசுத்த வழியிலே நடத்திடும்

Tamil Hymns

1119. கர்த்தாவே நீர் மாட்சிமை நிறைந்தவரே

கர்த்தாவே நீர் மாட்சிமை நிறைந்தவரே
துதி மகிமைக்கெல்லாம்
என்றென்றும் பாத்திரரே - உந்தன்
நாமம் உயர்த்தி பாடி ஆராதிப்பேன்

ஆராதனை ஆராதனை - உந்தன்
நாமம் உயர்த்தி பாடி ஆராதிப்பேன்

1. மகத்துவமும் பேர் புகழும்
உம் கரத்திலிருக்கின்றதே - எந்த
மனிதனையும் மேன்மைப்படுத்த
உம்மால் ஆகுமே

2. ஐசுவரியமும் ஆனந்தமும்
உம் கரத்திலிருக்கின்றதே
எந்த மனிதனையும் உயர்த்திடவே
உம்மால் ஆகுமே

3. சத்தியமும் ஜீவனுமே
உம் கரத்திலிருக்கின்றதே
எந்த மனிதனையும் விடுவித்திட
உம்மால் ஆகுமே

Tamil Hymns

1120. கர்த்தாவே யுகயுகமாய்

1. கர்த்தாவே, யுகயுகமாய்
எம் துணை ஆயினீர் - நீர் இன்னும்
வரும் காலமாய் எம் நம்பிக்கை ஆவீர்

2. உம் ஆசனத்தின் நிழலே
பக்தர் அடைக்கலம் - உம்
வன்மையுள்ள புயமே நிச்சய கேடகம்

3. பூலோகம் உருவாகியே
மலைகள் தோன்றுமுன் - சுயம்புவாய்
என்றும் நீரே மாறா பராபரன்

4. ஆயிரம் ஆண்டு உமக்கு
ஓர் நாளைப் போலாமே - யுகங்கள்
தேவரீருக்கு ஓர் இமைக்கொப்பாமே

5. சாவுக்குள்ளான மானிடர்
நிலைக்கவே மாட்டார் - உலர்ந்த
பூவைப்போல் அவர் உதிர்ந்து போகிறார்

6. கர்த்தாவே யுக யுகமாய்
எம் துணை ஆயினீர் - இக்காட்டில்
நற் சகாயராய் எம் நித்திய வீடாவீர்

Tamil Hymns

1121. கர்த்தாவை நல்ல பக்தியாலே

1. கர்த்தாவை நல்ல பக்தியாலே
எப்போதும் நம்பும் நீதிமான்
எத்தீங்கிலேயும் அவராலே
அன்பாய்க் காப்பாற்றப்படுவான்;
உன்னதமான கர்த்தரை
சார்ந்தோருக்கவர் கன்மலை.

2. அழுத்தும் கவலைகளாலே
பலன் ஏதாகிலும் உண்டோ?
நாம் நித்தம் சஞ்சலத்தினாலே
தவிப்பது உதவுமோ?
விசாரத்தாலே நமக்கு
இக்கட்டதிகரிக்குது.

3. உன் காரியத்தை நலமாக
திருப்ப வல்லவருக்கு
நீ அதை ஒப்புவிப்பாயாக!
விசாரிப்பார், அமர்ந்திரு.
மா திட்டமாய்த் தயாபரர்
உன் தாழ்ச்சியை அறிந்தவர்.

4. சந்தோஷிப்பிக்கிறதற்கான
நாள் எதென்றவர் அறிவார்;
அநேக நற்குணங்கள் காண
அந்தந்த வேளை தண்டிப்பார்;
தீவிரமாயத் திரும்பவும்
தெய்வன்பு பூரிப்பைத் தரும்.

5. நீ கர்த்தரால் கைவிடப்பட்டோன்
என்றாபத்தில் நினையாதே;
எப்போதும் பாடும் நோவுமற்றோன்
பிரியனென்றும் எண்ணாதே;
அநேக காரியத்துக்கு
பின் மாறுதல் உண்டாகுது.

6. கதியுள்ளோனை ஏழையாக்கி
மகா எளியவனையோ
திரவிய சம்பன்னனாக்கி
உயர்த்த ஸ்வாமிக்கரிதோ?
தாழ்வாக்குவார், உயர்த்துவார்,

Tamil Hymns

அடிக்கிறார், அணைக்கிறார்.

7. மன்றாடிப் பாடி கிறிஸ்தோனாக
நடந்துகொண்டுன் வேலையை
நீ உண்மையோடே செய்வாயாக,
அப்போ தெய்வாசீர்வாதத்தை
திரும்பக் காண்பாய் நீதிமான்
கர்த்தாவால் கைவிடப்படான்

Tamil Hymns

1122. கலங்காதே என் நெஞ்சமே

கலங்காதே என் நெஞ்சமே
கர்த்தர் இயேசு அன்பு செய்ய
காலமெல்லாம் காத்திருக்க
கலக்கம் ஏன் நெஞ்சமே

1. இருளும் புயலும் உன்னை என்ன
செய்திடும் - அருளும் அன்பும்
பொழியும் இயேசு அருகிலிருக்கையில் (2)
வாழ்வில் வீழ்ந்து வருந்தும் போது
தோள் கொடுக்கிறார் - தாழ்வில்
வாடும் போது தயவு காட்டுவார்
தயவு காட்டுவார் இயேசு தயவு காட்டுவார்

2. உலகம் வெறுக்கும்போதும் உன்னில்
நிலைக்கிறார் - உயிர்ப்பும் உயிரும்
ஈந்து நாளும் உடனிருக்கிறார் - துன்ப
துயரம் தூரப்போகும் துணிந்து நின்றிடு
தூய தேவன் அருளை என்றும் நம்பிடு
என்றும் நம்பிடு அவரை என்றும் நம்பிடு

Tamil Hymns

1123. கலங்காதே கலங்காதே கர்த்தர்

கலங்காதே கலங்காதே
கர்த்தர் உன்னைக் கைவிடமாட்டார்

1. முள்முடி உனக்காக
இரத்தமெல்லாம் உனக்காக
பாவங்களை அறிக்கையிடு
பரிசுத்தமாகி விடு - நீ
பரிசுத்தமாகி விடு

2. கல்வாரி மலைமேலே
காயப்பட்ட இயேசுவைப் பார்
கரம் விரித்து அழைக்கின்றார்
கண்ணீரோடு ஓடி வா நீ

3. காலமெல்லாம் உடன் இருந்து
கரம்பிடித்து நடத்திச் செல்வார்
கண்ணீரெல்லாம் துடைப்பார்
கண்மணி போல் காத்திடுவார் உன்னை

Tamil Hymns

1124. கலங்காதே திகையாதே கர்த்தர்

1. கலங்காதே திகையாதே
கர்த்தர் இயேசு உன்னை அழைக்கிறார்
கண்மணி போல காத்திடும்
அவரைப் போல் ஒரு தெய்வம் உண்டோ

யார் என்னை நேசிப்பார் என்று நீ
கலங்குவதேன் மனமே
தன் உயிர் தந்து உன்னை நேசித்தாரே
ஆவலாய் உன்னை அழைக்கிறாரே

2. திக்கற்ற பிள்ளைகளை கைவிடாதவர்
விதவைகளின் நியாயத்தை விசாரிப்பர்
உன் பாரம் யாவையும் நீக்கிடவே
அன்போடு உன்னை அழிக்கிறாரே

3. உன்னை விட்டு என்றும் விலகாதவர்
உன்னை என்றும் கரம்பிடித்து நடத்திடுவார்
தகப்பனில்லா பிள்ளைகளின் தகப்பன் அவர்
அனிவோடு உன்னை அழைக்கிறாரே

4. பாரங்கள் வியாதிகள் கவலைகளால்
உள்ளம் உடைந்து நீ போனாயோ
உன் வேதனை நீக்கி ஆறுதல் அளித்திட
இயேசு உன்னை இன்றும் அழைக்கிறாரே

Tamil Hymns

1125. கலங்காதே மகனே கலங்காதே

கலங்காதே மகனே கலங்காதே மகளே
கன்மலையாம் கிறிஸ்து
கைவிடவே மாட்டார் - 3

1. மலைகள் பெயர்ந்து போகலாம்
குன்றுகள் அசைந்து போகலாம்
மனதுருகும் தேவன்
மாறிடவே மாட்டார் - 3

2. உலகம் வெறுத்து பேசலாம்
காரணமின்றி நகைக்கலாம்
உன்னை படைத்தவரோ
உள்ளங்கையில் ஏந்துவார்

3. தீமை உன்னை அணுகாது
துன்பம் உறைவிடம் நெருங்காது
செல்லும் இடமெல்லாம்
தூதர்கள் காத்திடுவார்

4. வியாதி வறுமை நெருக்கலாம்
சோதனை துன்பம் சூழலாம்
உன்னை மீட்டவரோ
உன்னைக் காத்துக் கொள்வார்

Tamil Hymns

1126. கலங்கின நேரங்களில் கைதூக்கி

கலங்கின நேரங்களில்
கைதூக்கி எடுப்பவரே
கண்ணீரின் பள்ளத்தாக்கில்
என்னோடு இருப்பவரே
உறவுகள் மறந்தாலும்
நீர் என்னை மறப்பதில்லை
காலங்கள் மாறினாலும்
நீர் மட்டும் மாறவில்லை

நீங்க தான்பா என் நம்பிக்கை
உம்மை அன்றி வேறு துணையில்லை

1. தேவைகள் ஆயிரம் என் முன் இருப்பினும்
சோர்ந்து போவதில்லை
என்னோடு நீர் உண்டு
தேவையை காட்டிலும் பெரியவர்
நீரல்லோ - நினைப்பதை
பார்க்கிலும் செய்பவர் நீரல்லோ

2. மனிதனின் தூஷனையில்
மனமடிவடைவதில்லை
நீர் எந்தன் பக்கம் உண்டு
தோல்விகள் எனக்கு இல்லை
நாவுகள் எனக்கெதிராய் சாட்சிகள்
சொன்னாலும் - வாதாட நீர் உண்டு
ஒருபோதும் கலக்கமில்லை

Tamil Hymns

1127. கலிலேயா என்ற ஊரில் இயேசு

கலிலேயா என்ற ஊரில்
இயேசு ஜனங்களைத் தொட்டார்
குருடர் செவிடர் முடவர் எல்லோரையும்
இயேசு குணமாக்கினார்

அல்லேலூயா ராஜனுக்கே
அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா கர்த்தருக்கே
அல்லேலூயா இயேசுவுக்கே

1. கரங்களைத் தட்டி பாடிடுவோம் (3)
அல்லேலூயா இராஜனுக்கே

2. கரங்களை அசைத்து பாடிடுவோம் (3)
அல்லேலூயா தேவனுக்கே

3. கரங்களை உயர்த்தி பாடிடுவோம் (3)
அல்லேலூயா இயேசுவுக்கே

Tamil Hymns

1128. கல்யாணமாம் கல்யாணம் கானா

1. கல்யாணமாம் கல்யாணம்
கானா ஊரு கல்யாணம்
கர்த்தர் இயேசு கனிவுடனே
கலந்து கொண்ட கல்யாணம்

2. விருந்தினர்கள் விரும்பியே
அருந்த ரசமும் இல்லையே
அறிந்த மரியாள் அவரிடம்
அறிவிக்கவே விரைந்தனள்

3. இல்லரமாம் பாதையில்
இல்லை என்னும் வேளையில்
சொல்லிடுவீர் அவரிடம்
நல்லறமாய் வாழுவீர்

Tamil Hymns

1129. கல்வாரி அன்பு மாற்றினதென்னை

1. கல்வாரி அன்பு மாற்றினதென்னை
கல்வாரி அன்பு - நொருக்கினதே என்னை
எனக்காகவே - 2 அலங்கோலம் எல்லாம்
எனக்காகவே - 2 அவதி எல்லாம்
என் சாபங்கள் பாவங்கள் நீக்கும்
சர்வலோகாதிபரே

இயேசுவின் காயங்களால், சுகமுண்டு
சாபங்கள் போக்கும், பாவங்கள் நீக்கும்
பூரண சுகமுண்டு இயேசுவண்டை மாத்ரமே

2. கல்வாரி அன்பு மாற்றிடும் உன்னை
கல்வாரி அன்பு நொறுக்கிடுமே உன்னை
உனக்காகவே - 2 அலங்கோலம் எல்லாம்
உனக்காகவே - 2 அவதி எல்லாம்
உன் சாபங்கள் பாவங்கள் நீக்கும்
சர்வலோகாதிபரே

Tamil Hymns

1130. கல்வாரி அன்பை எண்ணிடும்

கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை
கண்கள் கலங்கிடுதே
கர்த்தா உம் பாடுகள் நித்தமும் நினைத்தால்
நெஞ்சம் நெகிழ்ந்திடுதே

1. கெத்சமனே பூங்காவிலே கதறி அழும் ஓசை
எத்திசை அந்தோ தொனிக்கின்றதே
எந்தன் மனம் திகைக்கின்றதே
கண்கள் கலங்கிடுதே

2. சிலுவையில் மாட்டி வதைத்தனரோ உம்மை செந்நிறமாக்கினரோ
அப்போது அவர்க்காய் வேண்டினீரே
அன்போடு அவர்களைக் கண்டீரன்றோ
அப்பா உம் அன்பு பெரிதே

3. என்னையும் உம்மைப்போல் மாற்றிடவே உம் ஜீவன் தந்தீரன்றோ
என் தலை தரை மட்டும் தாழ்த்துகின்றேன்
தந்துவிட்டேன் அன்பு கரங்களிலே
ஏற்று என்றும் நடத்தும்

Tamil Hymns

1131. கல்வாரி இரத்தம் எனக்காக சிந்தி

கல்வாரி இரத்தம் எனக்காக சிந்தி
கல்வாரி இரத்தத்தால் கழுவுகின்றீர்

அல்லேலூயா அல்லேலூயா

1. கைகளில் ஆணிகளோ
எனக்காக அடிக்கப்பட்டீர்
எனக்காக இரத்தம் சிந்தினீர் இயேசு

2. முட்கிரீடம் தரித்தவராய்
சிலுவையில் அறைந்தனரே
சிலுவையில் தொங்கினாரே இயேசு

3. உடைந்த உள்ளத்தோடு
சிலுவையில் மரித்தீரே
எனக்காய் மரித்தீரே இயேசு

Tamil Hymns

1132. கல்வாரி சிநேகம் கரைத்திடும் என்னை

கல்வாரி சிநேகம் கரைத்திடும் என்னை
கல்மனம் மாற்றி கரைந்தோட செய்யும்

1. காலங்கள் தோறும் காவலில் உள்ளோர்
காணட்டும் உம்மை களிப்போடு என்றும்
குருசதின் இரத்தம் குரல் கொடுக்கட்டும்
கும்பிடுவோரை குணமாக்கும் வேதம்

2. இருண்டதோர் வாழ்வில் இன்னமும் வாழ்வோர்
இனியாவது உம் திருமுகம் காண
நாதா உம் சிநேகம் பெருகட்டும் என்னில்
என்னை காணுவோர் உம்மை காணட்டும்

3. அற்பமான வாழ்வு அற்புதமாய் மாற
அனைத்தையும் தந்தேன் ஆட்கொள்ளும் தேவா
நான் சிறுகவும் நீர் பெருகவும்
தீபத்தின் திரியாய் எடுத்தாட்கொள்ளும்

Tamil Hymns

1133. கல்வாரி குருசண்டை

கல்வாரி குருசண்டை ஏங்கி நின்றேன்
திரு இரத்தம் புரண்டோடி பெரு வெள்ளமாய்
என் மீது பாய்ந்திட நான் சுத்தமாயினேன்
என் பாவம் நீங்கினதே

1. மண் வாழ்வில் இன்பங்கள் வெறுத்துமே
விண் வாழ்வின் நன்மைகள் நாம் பெற்றிட
உன்னத ஜீவனை என்னில் நீர் ஈந்ததால்
உம்மை என்றும் துதிப்பேன்
என்றும் உம்மை துதிப்பேன்

2. உம் சித்தம் செய்து நான் ஜீவித்திட
உம் பெலனாம் என்னை தேற்றிடுமே
ஆத்தும பாரம் நான் பெற்றென்றும் உமக்காய்
ஊழியம் செய்திடவே
தேவா அருள் செய்குவீர்

3. உன்னத ஆவியை என்னில் ஊற்றும்
இந்நிலம் தன்னில் நான் பிராகாசிக்க
கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் வந்தாலும்
உம் கரம் பற்றிடுவேன்
உம் வழி நான் நடப்பேன்

4. சிலுவைக் காட்சியைக் கண்டிடுவேன்
அதை எண்ணி தினமும் வாழ்ந்திடுவேன்
சாந்த சொரூபியாம் ஏசுவின் சிலுவையில்
சாய்ந்திடுவேன் நானும்
ஏசுவை என்றும் விடேன்

5. என்னையே முற்றிலும் உம் கரத்தில்
ஜீவ பலியாக படைக்கிறேன்
மன்னவா விண்மீது நீர் வரும் வேளையில்
ஏழையான் காணப்பட
நீர் என்னைக் காத்துக் கொள்வீர்

Tamil Hymns

1134. கல்வாரி சிலுவை நாதா

கல்வாரி சிலுவை நாதா
காரிருள் நீக்கும் தேவா

பல்வினை பலனாம் பாவம்
புரிந்தவர் எமைக்கண் பாரும் (2) --- கல்வாரி

1. மன்னுயிர் மீட்கும் அன்பால்
தன் உயிர் மாய்த்தாய் அன்பே
மன்பதை மாந்தர் முன்னால்
தரணியை இழுத்தாய் நின்பால் (2)

2. தூயவன் நின்னை கண்டோர்
தீ உள்ளம் தெளிந்தே நிற்பார்
சேய் உள்ளம் தந்தாய் அருளாய்
வாய் உள்ளம் தந்தேன் புகழாய் (2)

Tamil Hymns

1135. கல்வாரி மாமலை ஓரம்

கல்வாரி மாமலை ஓரம்
கொடுங்கோர காட்சி கண்டேன்
கண்ணில் நீர் வழிந்திடுதே
எந்தன் மீட்பர் இயேசு அதோ (2)

1. எருசலேமின் வீதிகளில்
ரத்த வெள்ளம் கோலமிட (2)
திருக்கோலம் நிந்தனையால்
உருக்குலைந்து சென்றனரே (2)

2. சிலுவை தன் தோளதிலே
சிதறும் தன் வேர்வையிலே
சிறுமை அடைந்தவராய்
நிந்தனை பல சகித்தார்

1136. கல்வாரி மாமலைமேல்

1. கல்வாரி மாமலைமேல்
கை கால்கள் ஆணிகளால்
கடாவப் பட்டவராய் கர்த்தர்
தொங்கக் கண்டேன்

குருசின் வேதனையும் சிரசின்
முள் முடியும் குருதி சிந்துவதும்
உருக்கிற்றென் மனதை

2. அஞ்சாதே என் மகனே
மிஞ்சும் உன் பாவமதால்
நெஞ்சம் கலங்காதே தஞ்சம் நானே உனக்கு
எனக்கேன் இப்பாடு உனக்காகத்தானே
ஈனக்கோல மடைந்தேன்
உன்னை ரட்சித்தேன் என்றார்

3. கர்த்தரின் சத்தமதை சத்தியம் என்று நம்பி
பக்தியுடன் விழுந்து
முத்தம் செய்தேன் அவரை
என் பாவம் நீங்கியதே எக்கேடும்
ஓடியதே சந்தேகம் மாறியதே
சந்தோஷம் பொங்கியதே

1137. கல்வாரியில் தொங்குகின்றார்

கல்வாரியில் தொங்குகின்றார்
உன் பாவம் நீக்க தம்மைத் தந்தார்
உந்தன் சிலுவை ஏற்றனரே

1. வேர்வையும் இரத்தமாக ஆத்துமா
வியாகுலம் அடைந்தாரே இயேசு
உனக்காக தந்தையே உம் சித்தம்
என்று இயேசு கதறினாரே

2. சிரசினில் முள்முடி சிவப்பங்கி தரித்தோராய்
நிந்தை யாவும் உனக்காய் ஏற்றாரே
வாரினால் அடிபட்டார்
கோரமான காட்சியானார்

3. மாசற்ற தேவனே மகிமை யாவும்
துறந்தோராய் நீச குருசில் இயேசு தொங்கினார்
பாவத்தை போக்கியே
நீதிக்கு பிழைக்க செய்தார்

4. கைகளில் கால்களில் இரத்தமும் வடியுதே
உந்தன் நோய்கள் யாவும் ஏற்றாரே
சுகமே அடைவாய்
தழும்பாலே குணமடைவாய்

5. எத்தனை துன்பங்கள்
என்னையும் மீட்கவே
தியாக பாதை இயேசு காட்டினார்
நித்தமும் அவரின் பின்னே
சென்று வாழ்ந்திடுவாய்

Tamil Hymns

1138. கல்வாரியின் கருணையிதே

1. கல்வாரியின் கருணையிதே
காயங்களில் காணுதே
கர்த்தன் இயேசு பார் உனக்காய்
கஷ்டங்கள் சகித்தாரே

விலையேறப் பெற்ற திருரத்தமே - அவர்
விலாவினின்று பாயுதே
விலையேறப் பெற்றோனாய் உன்னை மாற்ற
விலையாக ஈந்தனரே

2. பொன் வெள்ளியோ மண்ணின் வாழ்வோ
இவ்வன்புக் கினையாகுமோ
அன்னையிலும் அன்பு வைத்தே
தம் ஜீவனை ஈந்தாரே

3. சிந்தையிலே பாரங்களும்
நிந்தைகள் ஏற்றவராய்
தொங்குகின்றார் பாதகன் போல்
மங்கா வாழ்வளிக்கவே

4. எந்தனுக்காய் கல்வாரியில்
இந்தப் பாடுகள் பட்டீர்
தந்தையே உம் அன்பிதையே
சிந்தித்தே சேவை செய்வேன்

5. மனுஷனை நீர் நினைக்கவும்
அவனை விசாரிக்கவும்
மண்ணிலவன் எம்மாத்திரம்
மன்னவா உம் தயவே

Tamil Hymns

1139. கல்வாரியே கல்வாரியே ஒப்பற்ற

கல்வாரியே கல்வாரியே
ஒப்பற்ற கல்வாரியே
கல்மனம் மாற்றிடும்
கனிவுள்ள கல்வாரியே

1. தேவனின் நித்ய அன்பு
இயேசுவில் தொனிக்கின்றதே
வேதனையின் இரத்தம் தாரையாய்
சிந்துது மானிடனே உனக்காய்

2. காயங்கள் ஐந்ததுவும் ஐந்து
கண்டத்தை இரட்சிக்கவே
நாயகனை நம்பி ஜீவனுக்குள்
செல்ல தீயனைத் தள்ளிவிடு

3. பாவத்தை மட்டுமல்ல உன்
நோயையும் நீக்கிடுமே
பயத்தை நீக்கி விசுவாசம் கொண்டு
பட்சமாய் அவரண்டை வா

4. சாத்தானின் தலையையும்
சிலுவையில் நசுக்கினார்
சகலத்தையும் ஜெயித்தவர்
சீக்கிரம் வருகிறார்

Tamil Hymns

1140. கல்வாரியே கவாரியே கருணையின்

கல்வாரியே கல்வாரியே
கருணையின் உறைவிடம் கல்வாரியே

1. பாவங்கள் போக்கி விட்டீர்
பாதாளம் வென்று விட்டீர்
பாவபாரம் நீக்கி விட்டீர்
பாசமாய் மீட்டு கொண்டீர்

2. சாபங்கள் தொலைத்து விட்டீர்
சாத்தானை ஜெயித்து விட்டீர்
மரண பயம் நீக்கி விட்டீர்
மகிமையை அணிந்து கொண்டீர்

3. பாடுகள் ஏற்றுக் கொண்டீர்
பெலவீனம் சுமந்து விட்டீர்
தழும்புகளால் குணமாக்கினீர்
தடைகளை அகற்றி விட்டீர்

Tamil Hymns

1141. கவலைப்படாதீர் என்றும் கவலைப்படாதீர்

கவலைப்படாதீர் என்றும் கவலைப்படாதீர்
கவலைப்படாதீர் என்றும் கவலைப்படாதீர்
உயிர் வாழ எதை உண்பதோ
உடலுக்கெதை உடுப்பதென்றோ
(கவலைப்)

பறவைகளைப் பாருங்கள் - அவை
விதைப்பதுமில்லை அறுப்பதுமில்லை
களஞ்சியம் சேர்ப்பதுமில்லை (2)
கடவுள் அதற்கும் உணவளிக்கின்றார் (2) (கவலைப்)

காட்டுச்செடியைப் பாருங்கள் - அவை
உழைப்பதுமில்லை நூற்பதுமில்லை
அழகிலே இணையதற்கில்லை (2)
கடவுள் அவற்றை உடுத்தி வருகிறார் (2) (கவலைப்)

இறையரசின் நீதிதனை முதலில் தேடுவோம்
அதை முதன்மையாக்குவோம்
உலகினில் வாழ்ந்து காட்டுவோம் (2)
கடவுள் நம்மைக் காத்து வருகிறார்
கடவுள் நம்மை வழி நடத்துகிறார்

Tamil Hymns

1142. கவலை கொள்ளாதிருங்கள்

கவலை கொள்ளாதிருங்கள்
உயிர் வாழ எதை உண்போம்
உடல் மூட எதை உடுப்போம்-என்று

1. பறக்கும் பறவைகள் பாருங்கள்
விதைப்பதுமில்லை அறுப்பதில்லை
பரம பிதா ஊட்டுகிறார்
மறப்பாரோ மகனே (ளே)

2. கவலைப்படுவதினால்
நமது உயரத்திலே
ஒரு முழம் கூட்ட முடியுமா
புதுபெலன் பெறவும் கூடுமா

3. நாளை தினம் குறித்து
நம்பிக்கை இழக்காதே
நாளைக்கு வழி பிறக்கும் - நீ
இன்றைக்கு நன்றி சொல்லு

4. தகப்பனின் விருப்பத்தையும்
அவரது ஆட்சியையும்
தேடுவோம் முதலாவது -நம்
தேவைகளை சந்திப்பார

5. காட்டு மலர்கள் கவனியுங்கள்
உழைப்பதில்லை, நூற்பதில்லை
உடுத்துகிறார் நம் தகப்பன்
உனக்கு அவர் அதிகம் செய்வார்

1143. களிகூருவோம் கர்த்தர் நம் பட்சமே

1. களிகூருவோம், கர்த்தர் நம் பட்சமே
தம் ரத்தத்தால் நம்மை மீட்டார்
அவர் நமக்கு யாவிலும் எல்லாமே
எப்பாவம் பயம் நீக்குவார்

கர்த்தர் நம் பட்சம், கர்த்தர் நம்மோடு, கர்த்தர் சகாயர்
யார் எதிர்க்க வல்லோர்?
யார்?... யார்?... யார்?...
யார் எதிர்க்க வல்லோர் யார் வல்லோர்

2. திடனடைவோம், தீமை மேற்கொள்ளுவோம்
கர்த்தாவின் வல்ல கரத்தால்
உண்மை பக்தியாய் நாடோறும் ஜீவிப்போம்,
அவரே திடன் ஆகையால்

3. வாக்கை நம்புவோம், உறுதி மொழியாய்
கிறிஸ்துவில் ஆம் ஆமேன் என்றே
பூமி ஒழிந்தும் என்றும் உறுதியாய்
நிலைக்கும், இது மெய் மெய்யே

4. நிலைத்திருப்போம் கர்த்தரின் கட்டினில்,
அதால் நித்திய ஜீவன் உண்டாம்
பற்றும் ஏழையைத் தம் வல்ல கரத்தில்
வைத்தென்றும் பாதுகாப்பாராம்

Tamil Hymns

1144. களிப்புடன் கூடுவோம் கர்த்தரை

1. களிப்புடன் கூடுவோம்,
கர்த்தரை நாம் போற்றுவோம் - 2
அவர் தயை என்றைக்கும்
தாசரோடு நிலைக்கும்.

2. ஆதிமுதல் அவரே
நன்மை யாவும் செய்தாரே
அவர் தயை என்றைக்கும்
மாந்தர்மேலே சொரியும்.

3. இஸ்ரவேலைப் போஷித்தார்,
நித்தம் வழி காட்டினார்
அவர் தயை என்றைக்கும்
மன்னாபோலே சொரியும்.

4. வானம் பூமி புதிதாய்
சிஷ்டிப்பாரே ஞானமாய்
அவர் தயை என்றைக்கும்
அதால் காணும் யாருக்கும்.

1145. கனத்திற்கும் மகிமைக்கும் பாத்திரரே

கனத்திற்கும் மகிமைக்கும் பாத்திரரே
உம்மை துதித்து பாடுகிறோம்
கிருபை பெருகுதப்பா - உங்க
மகிமை இறங்குதப்பா - 2

ஆராதனை ஆராதனை(2)

1. இரண்டு மூன்று பேர்கள்
ஒரு மனமாய்த் துதித்தால்
நான் இருக்கிறேன் என்றீரே
என் துதியில் வாழ்பவரே

2. அநேக ஸ்தோத்திரத்தால்
உம் கிருபை பெருகுதப்பா
உங்க கிருபை பெருகும்போது
உங்க மகிமை விளங்குதப்பா

3. உம்மை மகிமைப்படுத்துகிற
எந்த ஸ்தானத்திலும்
நீர் இறங்கி வந்துடுவீர்
எங்களை ஆசீர்வதித்திடுவீர்

Tamil Hymns

1146. கறைகள் நீங்கிட

கறைகள் நீங்கிட
கறைகள் நீங்கிட கைகள் கழுவி
கர்த்தரைத் துதிக்கின்றேன் - என்
பலிபீடத்தை சுற்றிச் சுற்றி நான் வலம் வருகின்றேன்

1. கர்த்தாவே உம் பேரன்பு
எப்போதும் என் கண் முன்னே
வார்த்தையின் வெளிச்சத்தில்
வாழ அர்ப்பணித்தேன்

ஆராதனை ஆராதனை
ஆயுள் எல்லாம் ஆராதனை
அன்புகூர்ந்தேன் ஆர்வமுடன்
அர்ப்பணித்தேன் ஆயுள் எல்லாம்

1. அறுவடையின் எஜமானனே
அரணான அடைக்கலமே
அல்பாவும் ஒமேகாவும்ää தொடக்கமும் முடிவும் நீரே

2. இரக்கங்களின் தகப்பனே இளவயதின் வழிகாட்டியே
ஜீவிக்கின்ற மெய்தேவனே ஜீவனின் அதிபதியே

3. நித்தியானந்த சக்ராதிபதி நீர் ஒருவரே மாவேந்தர்
அரசர்க்கெல்லாம் அரசர் நீர் பேரின்பக் கடவுள் நீரே

4. மகா மகா நீதிபரர் மகத்துவங்கள் நிறைந்தவர்
மீட்பளிக்கும் வல்லமையே சாவாமை உள்ளவரே

5. எல்லாருக்கும் நீதிபதி சர்வத்தையும் உருவாக்கினீர்
சகல கிருபையும் நிறைந்தவர் சத்தியமானவரே

6. உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தர் நன்மைகளின் பிறப்பிடமே
யோனாவிலும் பெரியவரேää பிரதான மேய்ப்பர் நீரே

Tamil Hymns

1147. கறையேறி உமதண்டை

1. கறையேறி உமதண்டை
நிற்கும்போது ரட்சகா
உதவாமல் பலனற்று
வெட்கப்பட்டுப் போவேனோ

ஆத்மா ஒன்றும் ரட்சிக்காமல்
வெட்கத்தோடு ஆண்டவா
வெறுங்கையனாக உம்மைக்
கண்டுகொள்ளல் ஆகுமா?

2. ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை
வைத்திடாமல் சோம்பலாய்க்
காலங்கழித்தோர் அந்நாளில்
துக்கிப்பார் நிர்ப்பந்தராய்

3. தேவரீர் கை தாங்க சற்றும்
சாவுக்கஞ்சிக் கலங்கேன்
ஆயினும் நான் பெலன் காண
உழைக்காமற் போயினேன்

4. வாணாள் எல்லாம் வீணாளாகச்
சென்று போயிற்றே ஐயோ
மோசம் போனேன் விட்ட நன்மை
அழுதாலும் வருமோ?

5. பக்தரே உற்சாகத்தோடு
எழும்பிப் பிரகாசிப்பீர்
ஆத்துமாக்கள் யேசுவண்டை
வந்துசேர உழைப்பீர்

Tamil Hymns

1148. கன்மலை மீது என் கால்கள்

கன்மலை மீது என் கால்கள் நிறுத்தினீர்
உன்னதகளில் உட்கார செய்தீர்
உலையான செட்டில் உள்ளண்ட என்னையும்
தூகிநிர் கலுவிநிர் காது வருகிறீர்

1. பாவங்களை மன்னிதிர் சபைகளை நிக்குநிர்
சத்துருவின் கைலின்று விடுதலை அளித்தீர்
தினம் தினம் உம புகழை நான் பாடுவன்
எசுயா எசுயா உம புகழ் பாடுவன் – கன்மலை

2. எல்லை இல்ல அந்தம் எந்தன் வாழ்வில்
சொல் ஒன்ன பேரின்பம் என் உள்ளத்தில் பொங்குதிய
ஜீவன் உள்ள நல எல்லாம் உம்மை பாடுவன்
எசுயா எசுயா உம புகழ் பாடுவன் – கன்மலை

Tamil Hymns

1149. கன்மலை மீதென் கால் நிறுத்தி

கன்மலை மீதென் கால் நிறுத்தி
அடிகள் உறுதி படுத்தும் எங்கள் தேவா எங்கள் தேவா
கன்மலையானவர் கோட்டை துருகமானவர்
எனக்கொத்தாசை வரும் பர்வதமாகி பாதுகாப்பவர்

1.வறட்சியான காலம் என்னை திருப்தியாக்கினீர்
நீர்பாய்ச்சலான தோட்டம் போல செழிப்பாக்கினீர்
உருக்கமான இருக்கங்களால் முடி சூட்டினீர்
மனக்கலக்கம் மாற்றி உமக்குள் புது சிருஷ்டியாக்கினீர்

2. உத்தமமான வழியினில் என்னை நித்தமும் நடத்தினீர்
விடாய்த்து போன ஆத்துமாவை ஆற்றி தேற்றினீர்
உலர்ந்து போன எலும்பை உயிர்கொடுத்து எழுப்பினீர்
வற்றாத நீரூற்றைப் போல வளமாக்கினீர்

3. கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருந்தேனே அவர்
என்னிடமாக சாய்ந்து எந்தன் கூக்குரல் கேட்டார்
குழியில் விழுந்து மடிந்திடாமல் வலக்கரம் பிடித்தார்
அவர் துதியை பாடும் பாடல் எந்தன் வாயினில் கொடுத்தார்

Tamil Hymns

1150. கன்னித்தாய் மரியாள்

கன்னித்தாய் மரியாள் வரவேற்றாள் தெய்வமகன்
சிப்பியவள் பொற்குடத்தில் முத்தெனவே அவதரித்தார்
ஆவியினால் ஆண்டவனை
அவள் சுமக்கக் கொடுத்து வைத்தாள்!

விண்ணுலகம் மகிழ்ந்து பண்பாடும்
மண்ணுலகம் வியந்து கொண்டாடும்
மனங்களில் அமைதி வென்றாளும்
மனிதரில் பாசம் உண்டாகும்

1. கிருபையினால் மா தேவன் - இரக்கம்
பெற்றாள் பணிந்ததினால்
மகிமையின் கர்த்தனிடம்
வலிமையின் தேவனிடம்
பலவான்கள் தலைகுனியும் - இனி
கனவான்கள் கைவிரியும்

2. தெய்வத்தின் நல் விருப்பம் - என்றும்
தெய்வமகன் விரும்பும் அப்பம்
ஜீவனின் அதிபதிதான்
ஜீவனைக் கொடுக்க வந்தார்
பாவத்தைத் தொலைக்க வந்தார் - வல்ல
சாத்தானை ஜெயிக்க வந்தார்

3. மானுட அவதாரம் - ஒன்றே
ஆண்டவரின் திரு விருப்பம்
தாழ்ந்தவர் உயர்ந்திடுவார்
பசித்தவர் விருந்துண்பார்
புதியதோர் சமுதாயம் - இனி
மலர்ந்திடும் அவனியெங்கும்

Tamil Hymns

1151. கன்னி பெற்ற பாலனே

கன்னி பெற்ற பாலனே
கண் உறங்கு
விண்ணிண்; தேவ மைந்தனே
விழி உறங்கு
ஆரிராரிரரோ (4)

1. பெத்லகேம் ஊர்தனிலே
தேவ புத்திரன் தோன்றினாரே (2)
உத்தம சத்தியரும்
மனம் மெத்த மகிழ்ந்தனரே (2)
- கன்னி

2. ஆயர்கள் ஓடி வர
மூன்று சாஸ்திரிகள் தேடி வர (2)
பாலகன் இயேசு கண்டு
அவர் பாதம் பணிந்தனரே (2)
- கன்னி

Tamil Hymns

1152. காக்கும் கரங்கள் உண்டெனக்கு

1. காக்கும் கரங்கள் உண்டெனக்கு
காத்திடுவார் கிருபையாலே
அல்லேலூயா பாடிப்பாடி
அலைகளை நான் தாண்டிடுவேன்

நம்பிவா இயேசுவை நம்பிவா இயேசுவை

2. நிந்தனைகள் போராட்டம் வந்தும்
நீதியின் தேவன் தாங்கினாரே
நேசக்கொடி என் மேல் பறக்க
நேசருக்காய் ஜீவித்திடுவேன்

3. கன்மலைகள் பெயர்க்கும் படியாய்
கர்த்தர் உன்னைக் கரம் பிடித்தார்
காத்திருந்து பெலன் அடைந்து
கழுகு போலே எழும்பிடுவாய்

4. அத்திமரம் துளிர்விடாமல்
ஆட்டுமந்தை முதலற்றாலும்
கர்த்தருக்குக் காத்திருப்போர்
வெட்கப்பட்டுப் போவதில்லை

Tamil Hymns

1153. காக்கும் தெய்வம் இயேசு இருக்க

காக்கும் தெய்வம் இயேசு இருக்க
கலக்கம் ஏன் மனமே கண்ணீர் ஏன் மனமே

1. இதுவரை உன்னை நடத்தின தேவன்
இனியும் நடத்திச் செல்வார்
எபிநேசர் அவர் தானே - 2

2. பாடுகள் சகித்தால்
பரமனின் வருகையில்
கூட சென்றிடலாம்பாடி மகிழ்ந்திடலாம்

3. காண்கின்ற உலகம் நமது இல்லை
காணாத பரலோகம் தான்
நமது குடியிருப்பு

4. சீக்கிரம் நீங்கிடும் உலக பாடுகள்
மகிமையை கொண்டு வரும்
மறவாதே என் மனமே

5. சிலுவை சுமந்தால் சுபாவம் மாறும்
தெரிந்து கொள்மனமே
சீடன் அவன் தானே

6. மலைகள் விலகும் குன்றுகள் அகலும்
கிருபை விலகாதென்றார்
மனது உருகும் தெய்வம்

Tamil Hymns

1154. காணிக்கை தந்தோம் கர்த்தாவே

காணிக்கை தந்தோம் கர்த்தாவே
காணிக்கை தந்தோம் கர்த்தாவே
ஏற்றுக்கொள் எம்மை இப்போதே
கண்கொண்டு பாரும் இறைவனின் மகனே
காணிக்கை யார் தந்தார் நீர்தானே

1. நாங்கள் தந்த காணிக்கை எல்லாம் இரட்சகர் கொடுத்தது
மேகம் சிந்தும் நீர்த்துளியெல்லாம் பூமி கொடுத்தது
காலங்கள் மாறும் கோலங்கள் மாறும்
ஆகாயம் மாறும் இறைவனின் மகனே
ஆனாலும் உம் அன்பு மாறாது

2. ஆலயத்தின் வாசல் வந்தால் அழுகை வருகுதே
ஆனமட்டும் அழுதுவிட்டால் அமைதி பெருகுதே
கண்ணீரைப்போல காணிக்கை இல்லை
கண்கொண்டு பாரும் இறைவனின் மகனே
கண்ணீரின் அர்த்தங்கள் நீர்தானே

3. காணிக்கை தான் செலுத்த வந்தோம் கருணை கிடைக்கட்டும்
தேவன் தந்த ஜீவன் எல்லாம் புனிதம் அடையட்டும்
என்னண்டை வாரும் பாவங்கள் தீரும்
ஏனென்று கேளும் இறைவனின் மகனே
எம்மையே காணிக்கை தந்தோமே

Tamil Hymns

1155. காணாத ஆட்டின் பின்னே கர்த்தர்

காணாத ஆட்டின் பின்னே - கர்த்தர்
கண்ணீருடன் அலைந்தார்
அன்போடு உன்னை அழைக்கின்றாரே
இன்றே திரும்பி நீ வா

1. முள்ளும் புதரும் காடும் மழையும்
உள்ளம் உடைந்தேசு தேடுகின்றார்
சிற்றின்ப சேற்றினில் சிக்கினதால்
சாத்தான் வலையில் நீ சிறையாகினாய் - காணாத

2. சுத்த இதயம் வேண்டாம் என்றெண்ணி
கர்த்தரின் அன்பை நீ சந்தேகித்தாய்
யோனாவைப் போல நீ போனாயல்லோ
ஏசுபரன் வாக்கு வேருத்தாயல்லோ - காணாத

3. என்னென்ன துன்பம் தொல்லைகள் வந்தும்
இயேசுவின் பாதை நீ விட்டோடாதே
நீதி நிறைந்த தம் கரங்களை
நீட்டி உன்னை தாங்கி பயம் நீக்குவார் - காணாத

4. துன்மார்க்கரெல்லாம் சன்மார்க்கரோடே
தேவ கோபாக்கினையால் மாள்பவரே
கர்த்தரின் பந்தியில் நீ பங்கடைய
கண்ணீருடன் நீயோ அருள் வேண்டுவாய் - காணாத

5. எத்தனை நேரம் உன்னை அழைத்தார்
இத்தனை காலம் நீ தள்ளலாமோ
கர்த்தரின் சித்தம் உன் வேளையிதே
கண்டு உணர்ந்து விரைந்தே நீ வா

Tamil Hymns

1156. காணாமல் போன என்னை நல்

1. காணாமல் போன என்னை
நல் மேய்ப்பர் தேடினார்
தம் தோளின் மேல் போட்டுக்
கொண்டன்பாய் இரட்சித்தார்
மேலோக தூதர் கூடினார்
ஆனந்தம் பொங்கிப் பாடினார்

நேசர் தேடி வந்தார் இரத்தம் சிந்தி மீட்டார்
என்னைச் சொந்தமாகக் கொண்டனர்
பேரன்போடு சேர்த்துக் கொண்டனர்

2. என் பாவக் காயம் கட்டி
வீண் பயம் நீக்கினார்
என் சொந்தமாக உன்னைக்
கொண்டேனே பார் என்றார்
அவ்வின்ப சத்தம் கேட்கவே
என் உள்ளம் பூர்ப்பாயிற்றே

3. பேரன்பராகத் தோன்றி
ஐங்காயம் காட்டினார்
முட்கிரீடம் சூடினோராய்
என்னோடு பேசினார்
இப்பாவியின் நிமித்தமே
படாத பாடு பட்டாரே

4. இப்போது இன்பமாக
என் மீட்பர் பாதத்தில்
ஒப்பற்ற திவ்ய அன்பை
தியானம் செய்கையில்
ஆனந்தம் பொங்கப் பூரிப்பேன்
மேன்மேலும் பாடிப் போற்றுவேன்

5. ஆட்கொண்ட நாதர் பின்பு
பிரசன்னம் ஆகவார்
தம் ஞான மணவாட்டி
சேர்த்தென்றும் வாழ்விப்பார்
என் மாசும் தீங்கும் நீங்கிப்போம்
பேரின்பம் பெற்று வாழுவோம்

Tamil Hymns

1157. காப்பார் உன்னைக் காப்பார்

காப்பார் உன்னைக் காப்பார்
காத்தவர் காப்பார் இன்னும்
இனிமேல் காத்திடுவார்
கலங்காதே மனமே

1. கண்டுனை அழைத்தவர் கரமதைப் பார்
அவர் கைவிடாதிருப்பார்
ஆண்டுகள் தோறும் உனக்கவர்
அளித்த ஆசிகளை எண்ணிப்பார்
என்ணிப்பார் என்ணிப்பார் எண்ணிப்பார்
ஒன்றொன்றாயதை எண்ணிப்பார்

2. இஸ்ரவேலுக்கு வாக்குப்படி
இன்பக் கானான் அளிக்கவில்லையோ
இப்போதிவர்களை நிர்மூலம்
செய்வதென்று பின்னும் இரங்கவில்லையோ
இல்லையோ இல்லையோ இல்லையோ
மனஸ்தாபம் கொள்ளவில்லையோ

3. ஆதரவாய் பல ஆண்டுகளில்
பரனடைக்கலமாயிருந்தார்
காவலுடனவர் கைப்பணி செய்திடக்
கனிவுடன் ஆதரித்தார்
ஆதரித்தார் ஆதரித்தார் ஆதரித்தார்
பரிசுத்தத்தில் அலங்கரித்தார்

4. வீழ்ச்சியில் விழித்துன்னை
மீட்பவரும் இகழ்ந்துவிடாது சேர்ப்பவரும்
சிற்சில வேளையில்
சிட்சையினாலுன்னைக் கிட்டியிழுப்பவரும்
ஜெயமும் கனமும் சுகமும்
இரக்கமா யுனக்களிப்பவரும்

5. தாயின் கட்டில் வருமுன்
உனக்காய்த் தாமுயிர் கொடுத்தவரே
காயீனைப் போலுனைத்
தள்ளிவிடாது கை கொடுத்தெடுத்தவரே
அன்பு கொண்டு மணந்தவரே

Tamil Hymns

1158. காரிருளில் என் நேச தீபமே

1. காரிருளில் என் நேச தீபமே
நடத்துமேன்... வேறொளியில்லை
வீடும் தூரமே நடத்துமேன்...
நீர் தாங்கின், தூரக்காட்சி ஆசியேன்!
ஓர் அடி மட்டும் என் முன் காட்டுமேன்

2. என் இஷ்டப்படி நடந்தேன் ஐயோ!
முன்னாளிலே ஒத்தாசை தேடவில்லை!
இப்போதோ நடத்துமேன்
உல்லாசம் நாடினேன் திகிலிலும்
வீம்பு கொண்டேன் அன்பாக மன்னியும்

3. இம்மட்டும் என்னை ஆசீர்வதித்தீர்;
இனிமேலும் காடாறு சேறு குன்றில்
தேவரீர் நடத்திடும்
உதய நேரம் வர களிப்பேன்
மறைந்து போன நேசரைக் காண்பேன்

1159. காரிருள் வேளையில் கடும் குளிர்

காரிருள் வேளையில் கடும்குளிர்
நேரத்தில் ஏழைக் கோலமதாய்
பாரினில் வந்தது மன்னவனே
உன் மாதயவே தயவு

1. விண்ணுலகில் சிம்மாசனத்தில்
தூதர்கள் பாடினரே
வீற்றிருக்காமல் மானிடனானது
மாதயவே தயவு

2. விண்ணில் தேவனுக்கே மகிமை
மண்ணில் சமாதானம்
மனுஷரில் பிரியம் மலர்ந்தது உன்தன்
மாதயவே தயவு

Tamil Hymns

1160. காலத்தின் அருமையை அறிந்து

காலத்தின் அருமையை அறிந்து
வாழாவிடில் கண்ணீர் விடுவாயே

ஞாலத்தில் பரனுன்னை நாட்டின
நோக்கத்தை சீலமாய் நினைத்தவர்
மூலம் பிழைத்திடுவாய்

1. மதியை இழந்து தீய வழியிலே நீ நடந்தால்
வருங்கோபம் அறிந்திடாயோ? கதியாம்
ரட்சண்ய வாழ்வை நீ கண்டு மகிழ்ந்திட
காலம் இதுவே நல்ல காலம் என்றறியாயோ?

2. நோவாவின் காலத்தில் நூற்றிருபது ஆண்டு
நோக்கிப்பின் அழித்தாரன்றோ? - தாவாத
கிருபையால் தாங்கி உனக்களித்த
தவணையின் காலமிவ் வருட முடியலாமே

3. முந்தின எரேமியா அனனியாவுக் குரைத்த
முடிவை நீ அறியாயோ? - எந்தக்
காலமும் சிரஞ்சீவி யென்றெண்ணிடாமல்
ஏற்ற ஆயத்தமாய் எப்போதும் இருந்திடாயோ

4. இகத்தினில் ஊழியம் அகத்தினில் நிறைவேற
யேசுனை அழைத்தாரல்லோ - மகத்துவ
வேலையை மறந்து தூங்குவாயானால்
பகற்கால முடியும் ராக்காலத்திலென்ன செய்வாய்

Tamil Hymns

1161. காலந்தோறும் தயவாக

1. காலந்தோறும் தயவாக
தேவரீர் அளித்திடும்
பலவித நன்மைக்காக
என்ன ஈடுதான் தகும்?
எங்கள் வாயும் உள்ளமும்
என்றும் உம்மைப் போற்றிடும்.

2. மாந்தர் பண்படுத்தி வித்தை
பூமியில் விதைக்கிறார்
கர்த்தரே அன்பாக அதை
முளைத்தோங்கச் செய்கிறார்
ஏற்ற காலம் மழையும்
பெய்து பூண்டை நனைக்கும்.

3. உம்முடைய சித்தத்தாலே
காற்று வெயில் வீசுமே
கால மழை பனியாலே
பயிர்கள் செழிக்குமே
உழுவோர் பிரயாசம் நீர்
சித்தியாகச் செய்கிறீர்.

4. ஆதலால் மகிழ்ந்து நாங்கள்
உம்மை அன்பாய்த் துதிப்போம்
தாழ்மையோடு உமக்கெங்கள்
நெஞ்சத்தையே படைப்போம்
தேகம் போஷிக்கின்ற நீர்
ஆவியையும் போஷிப்பீர்.

1162. காலமே தேவனைத் தேடு

காலையில் தேவனைத் தேடு - ஜீவ
காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு
சீலமுடன் பதம் பாடிக் கொண்டாடு,
சீரான நித்திய - ஜீவனை நாடு

1. மன்னுயிர்க்காய் மரித்தாரே - மனு
மைந்தனென நாமம் வைத்திருந்தாரே
உன் சிருட்டிகரை நீ உதயத்திலெண்ணு
உள்ளங்கனிந்து தனிஜெபம் பண்ணு

2. பாவச் சோதனைகளை வெல்லு - கெட்ட
பாருடல் பேயுடன் போருக்கு நில்லு
ஜீவ கிரீடஞ் சிரத்திலணியச்
சிந்தனை செய் மனுவேலனைப் பணிய

3. சிறுவர்கள் என்னிடஞ் சேரத் -தடை
செய்யா திருங்களென்றார் மனதார
பரலோக செல்வ மவர்க்குப் பலிக்கும்
பாக்கியமெல்லாம் பரந்து ஜொலிக்கும்

4. வேலையுனக்குக் கைகூட - சத்ய
வேதன் கிருபை வரத்தை மன்றாட
காலை தேடுவோர் எனைக் கண்டடைவாரே
கண்விழித்து ஜெபஞ் செய்யுமென்றாரே

Tamil Hymns

1163. காலமே உம்மைத் தேடுவேன்

1. காலமே உம்மைத் தேடுவேன்
கர்த்தனே முழு மனதுடன்
தண்ணீரில்லா நிலத்திலே
தாகத்துடன் தேடிடுவேன்
தேவா வாஞ்சிக்கிறேன்

2. உம் வல்லமையும் மகிமையும்
காணவே மிக ஆசையே
உம் கிருபை சிறந்தது
உயிரிலும் உயர்ந்தது
உம்மை துதித்திடுவேன்

3. வாழ்நாள் முழுதும் வாழ்த்துவேன்
உயர்த்துவேன் உம் நாமத்தை
திர்ப்தியாகும் என் ஆத்துமா
உதடுகள் உம்மைப் போற்றும்
மகா களிப்புடனே மிக மகிழ்வுடனே

4. படுக்கையில் உம்மை நினைக்கையில்
தியானமே நடுச்சாமமே
நீரே என்றும் எந்தன் துணை
உம் நிழலில் தங்கிடுவேன்
களிகூர்ந்திடுவேன்

5. ஆத்துமா பற்றிக் கொண்டதால்
உம் வலக்கரம் எனைத் தாங்குதே
பகைவர்கள் பதராவர்
பொய்யர்கள் வாய்கள் மூடும்
களிகூருகிறேன் கர்த்தர் சமூகத்திலே

Tamil Hymns

1164. காலமோ செல்லுதே வாலிபம்

காலமோ செல்லுதே வாலிபம் மறையுதே
எண்ணமெல்லாம் வீணாகும்
கல்வியெல்லாம் மண்ணாகும்

மகிமையில் இயேசுவை
தரிசிக்கும் நேரத்தில் - அந்த
நாள் நல்லநாள் பாக்கிய நாள்

1. துன்பமெல்லாம் மறைந்துபோம்
இன்னலெல்லாம் மாறிப்போம்
பெலமேல்லாம் குன்றிபோம்
நிலையில்லா இவ்வாழ்க்கையில் - மகிமையில்

2. கருணையின் அழைப்பினால்
மரணநேரம் வருகையில்
சுற்றத்தார் சூழ்ந்திட
பற்றுள்ளோர் பதறிட - மகிமையில்

3. உலகத்தின் மாந்தரே கலங்காதீர் வாருமே
இயேசுவை அண்டினால் கிலேசங்கள் மாறிப்போம்

Tamil Hymns

1165. காலம் இனி செல்லாது ஒரு காசு

காலம் இனி செல்லாது
ஒரு காசு கூட வராது
வெறும் பட்டம் அங்கே செல்லாது
உன் சட்டம் அங்கே நில்லாது
வெளி வேஷம் அங்கே செல்லாது
வெல்லாது செல்லாது செல்லாது

1. மாடி மேலே மாடி கட்டும் மைடியர் மிஸ்டர்
மறுமையிலே வீடு உண்டா
சொல்லுங்க மிஸ்டர் -2
ஒடி ஒடி சொத்து சேர்க்கும் மைடியர் மிஸ்டர்
சொத்து உண்டா பரலோகத்தில்
சொல்லுங்க மிஸ்டர்

புரிஞ்சுக்கோ நல்லா தெரிஞ்சுகோ
திருந்திக்கோ இயேசுவை
அறிஞ்சுக்கோ -3

2. நகையின் மேலே நகையை
பூட்ட விரும்பிடும் சிஸ்டர்
நாளை நகை உடன் வராது
தெரியுமா சிஸ்டர்
மினு மினுக்காய் உடலை போற்றும்
மைடியர் மிஸ்டர்
அது மண்ணுக்குள்ளே மங்கிப்போகும்
தெரிஞ்சுக்கோ சிஸ்டர்

3. வாங்கி விற்று பணத்தை
சேர்க்கும் மைடியர் மிஸ்டர்
666 வரும் தெரியுமா மிஸ்டர்
பணத்தை பேங்கில் சேர்த்து
வைக்கும் மைடியர் மிஸ்டர் - அதை
அந்திக் கிறிஸ்து அள்ளிக் கொள்வான்
தெரிஞ்சுக்கோ மிஸ்டர்

Tamil Hymns

1166. காலம் உமது கரத்தில் தேவா

காலம் உமது கரத்தில் தேவா
கிருபை தாரும் - உந்தன்
சித்தம் போல் என்றும்
என்னை நடத்திடும்

1. அப்பா நான் உந்தன் சொந்த பிள்ளைதான்
தப்பு செய்தாலும் என்னை தண்டியாதிரும்
என்னை நீர் மன்னித்து உம் சொந்தமாக
ஏற்றுக் கொள்ளும் மந்தை சேர்த்துக் கொள்ளும்

2. நித்தம் நானுமே உம்மை போற்றியே
புத்தம் புதிய பாடல் - என்றும் பாடிட
கிருபையின் காலம் ஆதாயம் செய்து
வருகையிலே வானில் மகிழச் செய்யும்

Tamil Hymns

1167. காலம் கடந்திடும் முன்னர்

1. காலம் கடந்திடும் முன்னர்
கருத்துக் கொள்வார் வாருமே
ஞாலத்தில் இயேசுவின் நாமம்
எடுத்துச் செல்லச் சேருமே
சுத்தக் கரத்தை உயர்த்தி
பரிசுத்தர் யாரும் சேருமே
பாவத்தில் சாகும் ஜனத்தை
தடுத்து நிறுத்தக் கூடுமே - இன்றே

காலம் கடந்திடும் முன்னர்
கருத்துக்கொள்வார் வாருமே
ஞாலத்தில் இயேசுவின் நாமம்
எடுத்துச் செல்லச் சேருமே

2. தன் கடன் செய்யா மனிதர்,
கவலையில் வாடி நிற்பார் - தீபத்தில்
எண்ணெய் பெறாதோர் துக்கத்தில் மூழ்கிடுவார்
ஆத்தும ஆதாயம் செய்யார்
சிரசினில் அடித்துக் கொள்வார்
மாய் மாலம் புரிந்தோருக்கு
செம்மையாய்ப் பதில் கொடுப்பார் - இன்றே

3. சீஷர்கள் யாவரும் ஒன்றாய்
ஜோதியாய்த் திகழ்ந்திடுவார்
இரத்த சாட்சிகளின் கூட்டம்,
வெற்றி முழக்கம் செய்யும்
ஜெபித்தோர், சிரத்தை எடுத்தோர்,
ஆனந்த பாடல் செய்குவார்
இராஜாதி இராஜன் இயேசுவே,
நீதியாய் அரசாளுவார்

4. நீ வாழும் இப்பூமி நாசம்
ஆகும் காலம் வருதே - உலகின்
கடைசி சந்ததி, நீயாக இருக்கலாமே
எழும்பு, எழும்பு தெபொராள்
பாராக்கே, விழித்துவிடு
தேவைக்கு ஏற்ற பெலனை,
இன்றைக்கே பெற்றெழும்பு

Tamil Hymns

1168. காலம் பனிக்காலம்

காலம் பனிக்காலம் வானில் ஒளிக் கோலம்
ஊரின் ஒரு ஓரம் இரவின் நடு நேரம்
பாலன் பிறந்தார் அன்று
பாசத் திருநாள் இன்று

தீபச் சுடர் ஏந்துங்கள் பாலன் முகம் காணுங்கள்
காலம் பனிக்காலம் வானில் ஒளிக் கோலம்
பாசத் திருநாள் இன்று

1. பூக்களின் எழில் புன்னகை தனில்
இறைமகன் பாசம் காணலாம்
நீரலை எழும் நீர்களின் தனில்
இறைமகன் நேசம் காணலாம்

பகலிலே வேகமாய்
இரவிலே தீபமாய்
காற்றும் இறை நாமமே
கலங்காதே நாம் வாழலாம் --- காலம்

2. காவியம் புகழ் பரமனின் அருள்
மழைத் தரும் மேகம் ஆகுமே
பாலகன் பதம் பணிந்திடும் மனம்
ஒளி விடும் தீபம் ஆகுமே

அமைதியை செல்வமாய்
அருளையே அமுதமாய்
தாரும் இறை இயேசுவே
எம் வாழ்வு ஒளி வீசுமே --- காலம்

Tamil Hymns

1169. காலையில் தேவனைத் தேடிடுவோம்

காலையில் தேவனைத் தேடிடுவோம்
வேளையிதே அவர் வெளிப்படுவார்
தேவனைத் தேடிடும் நேரமிதே
தேடித் பரன்முகம் கண்டடைவோம்

1. அதிகாலையில் எழுந்திடுவோம்
துதிபலியவர்க்கே செலுத்திடுவோம்
புதுபல கிருபைகள் அடைந்திடவே
புகழ்ந்தவர் நாமத்தை போற்றிடுவோம்

2. ஆத்ம நேசரை தேடிடுவோம்
ஆவலுடன் ஆதி காலையிலே
ஆயத்தமாகியே காத்திருப்பேன்
ஆண்டவர் என் ஜெபம் கேட்டிடுவார்

3. கண்மணிபோல் சென்ற இராவினிலே
கண்ணுறங்காமலே காத்தனரே
இன்னும் வரும் பகல் முழுவதிலும்
இன்னல்கள் நீக்கியே காத்திடுவார்

5. கன்மலையும் எந்தன் மீட்பரும் நீர்
என் நினைவும் எந்தன் வார்த்தைகளும்
உம் சமூகம் பிரீதியாயிருக்க
உன்னதமா பெலன் தந்திடுவீர்

6. உந்தன் வருகையை எண்ணியே நான்
எந்த வேளையிலும் ஆயத்தமாய்
இந்த புவிதினம் வாழ்ந்திடவே
சொந்த என் இராஜ்ஜியம் நாடுகிறேன்

Tamil Hymns

1170. காலையும் மாலையும்

காலையும் மாலை எவ்வேளையும்
கர்த்தரைக் கருத்துடன் பாடிடுவேன்
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்
எனத்தூதர் பாடிடும் தொனி கேட்குதே

1. கர்த்தர் என் வெளிச்சம் ஜீவனின் பெலனும்
கிருபையாய் இரட்சிப்புமானார்
அஞ்சிடாமல் கலங்காமல் பயமின்றித் திகிலின்றி
அனுதினம் வாழ்ந்திடுவேன்

2. எனக்கெதிராய் ஓர் பாளையமிறங்கி
என்மேல் ஓர் யுத்தம் வந்தாலும்
பயப்படேன்; எதிராளி நிமித்தமாய்
செவ்வையான பாதையில் நடத்திடுவார்

3. ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன்
என்றும் தம் மகிமையைக் காண
ஜீவனுள்ள நாளெல்லாம் தம்
ஆலயத்தில் தங்குவதை வாஞ்சித்து நாடிடுவேன்

4. தீங்கு நாளில் தம் கூடார மறைவில்
தேடிச் சேர்த்தென்னை மறைப்பார்
உன்னதத்தில் மறைவாக ஒளித்தென்னைப்
பாதுகாத்து உயர்த்துவார் கன்மலைமேல்

5. எந்தன் முகத்தைத் தேடுங்கள் என்று
என் கர்த்தர் சொன்னதினாலே
தம் முகத்தைத் தேடுவேனே கூப்பிடும்
என் சத்தம் கேட்டு தயவாகப் பதிலளிப்பார்

6. தகப்பனும் தாயும் கைவிட்டாலும் என்
கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்வார்
எந்தன் உள்ளம் ஸ்திரமாகத் திடமாகக் கர்த்தருக்கே
என்றென்றும் காத்திருக்கும்

7. எனக்காக யாவும் செய்து முடிப்பார்
என் கர்த்தர் வாக்கு மாறிடார்
தமக்கென்றும் பயந்திடும் பக்தர்
யாவர் விருப்பமும் தவறாமல் நிறைவேற்றுவார்

Tamil Hymns

1171. கால் மிதிக்கும் தேசமெல்லாம் என்

கால் மிதிக்கும் தேசமெல்லாம்-என்
கர்த்தருக்கு சொந்தமாகும்
கண்பார்க்கும் பூமியெல்லாம்
கல்வாரி கொடிபறக்கும்

1. பறக்கட்டும் பறக்கட்டும்
சிலுவையின் ஜெயக்கொடி-அல்லேலூயா
உயரட்டும் உயரட்டும்
இயேசுவின் திருநாமம்-அல்லேலூயா

2. எழும்பட்டும் எழும்பட்டும்
கிதியோனின் சேனைகள்-அல்லேலூயா
முழங்கட்டும் முழங்கட்டும்
இயேசுதான் வழியென்று-அல்லேலூயா

3. செல்லட்டும் செல்லட்டும்
ஜெபசேனை துதிசேனை-அல்லேலூயா
வெல்லட்டும் வெல்லட்டும்
எதிரியின் எரிகோவை-அல்லேலூயா

4. திறக்கட்டும் திறக்கட்டும்
சவிசேஷ வாசல்கள்-அல்லேலூயா
வளரட்டும் வளரட்டும்
அபிஷேக திருச்சபைகள்-அல்லேலூயா

Tamil Hymns

1172. காற்று வீசுதே தேசத்தின் மேலே

காற்று வீசுதே தேசத்தின் மேலே
ஆவியானவர் வந்து விட்டாரே

எல்லோரும் பாடுங்கள் களிப்பாய் பாடுங்கள்
இயேசுவைப் போற்றி கெம்பீரமாய் பாடுங்கள்

1. பாசமாய் வந்தவரே நேசமாய் தேடி வந்து
மோசமாய் வாழ்ந்த என்னை மீட்டெடுத்தீரே

2. பிசாசின் வல்லமைகளை
அனைத்தையும் முறிந்து போட்டு
பிதாவின் சித்தமதை முடித்து வைத்தீரே

3. ஏழையாய் இருந்த என்னை
செல்வந்தனாக்கிடவே
தரித்திரரானவரே ஸ்தோத்திரிப்பேனே

4. நரகை ஜெயித்திடவே
நரர் பிணி நீக்கிடவே
சிலுவை மீதினிலே ஜீவன் தந்தீரே

5. பரலோக வாழ்வுதனை பரிசாகத் தந்திடவே
பூலோக வாழ்வை நமக்காய்
விரும்பி எற்றீரே

Tamil Hymns

1173. காவியம் பாடிடுவேன்

காவியம் பாடிடுவேன்
காலமும் வாழ்வினிலே
இயேசுவின் அன்பினையே
இறைமகன் இயேசுவின் அன்பினையே

இதயமெல்லாம் மகிழ்ந்திடவே
கீதம் பாடிடுவேன் (2)

1. சொந்தம் பந்தம் எல்லாம்
வாழ்வில் மாறுமே
நெஞ்சில் வாழும் இயேசு
மாறா தெய்வமே (2)
அதை நினைப்பதினால் நன்றியுடன்
கீதம் பாடிடுவேன்

2. என்னை தேடி வந்தாய்
அன்பாய் தேவனே
என்றும் என்னை காக்கும்
தெய்வம் இயேசுவே (2)
அதை உள்ளத்திலே உணர்வதினால்
கீதம் பாடிடுவேன்

Tamil Hymns

1174. கானம் பாடியே வாழ்த்தின வான

தேவ மைந்தனும் தோன்றினார் மாந்தர் சாயலிலே (1)
(கானம் பாடியே.......)

கர்த்தர் இயேசுவைக் கண்டிட
பெத்தலை செல்வோம்

இத்தரை தன்னை மீட்டிட சத்திரம் வந்தார்
கர்த்தர் நாயகர்; (1)
(கானம் பாடியே.......)

மந்தை மேய்ப்பர்கள் கண்டனர்;
மைந்தன் இயேசுவையே சிந்தை மகிழ்ந்து சென்றனர்;
தந்த தேவனையே (1)
(கர்த்தர் இயேசு.......)

வருகைக்காக காத்திருப்போம் வருவார்
சீக்கிரமே விந்தையாக நாமங்கே வானில் சென்றிடுவோம் (1)
(கர்த்தர் இயேசு.......)

Tamil Hymns

1175. கானான் என்பது வளமுள்ள நாடு

கானான் என்பது வளமுள்ள நாடு
தேனும் பாலும் ஓடும் நல்ல நாடு
இழந்த அந்நாட்டை யோசுவாவோடு
இஸ்ரவேலர் திரும்பப் பெற்றார்
தேவனுக்குக் கீழ்ப்படிந்ததால்
தகர்ந்தது எரிகோ மதில்
சாத்தானின் கோட்டையைத் தகர்த்திட நாமுமே
தேவனுக்குக் கீழ்ப்படிவோமே வெற்றிக் கீதம்
ஆர்ப்பரிப்போமே

Tamil Hymns

1176. கிஞ்சிதமும் நெஞ்சே அஞ்சிடாதே

கிஞ்சிதமும் நெஞ்சே, அஞ்சிடாதே
நல்ல கேடகத்தைப் பிடி நீ
விசுவாசக் கேடகத்தைப் பிடி நீ
வஞ்சனையாகவே பேய்
எதிர்த்துன்றனை வன்னிக் கணை
தொடுத் தெய்கின்ற வேளையில்
நெஞ்சில் படாமல் தடுக்க அது நல்ல
நிச்சயமான பரிசை அறிந்து நீ

1. பாவத்தை வெறுக்க, ஆபத்தைச் சகிக்க
பத்தியில் தெளிக்கவும், - நித்ய ஜீவனைப்
பிடிக்க, லோகத்தை ஜெயிக்க திறமை அளிக்கவும்
சாவே உன் கூர் எங்கே, பாதாளமே உன்
ஜெயம் எங்கே என்று நீ கூவிக் களிக்கவும்
தேவன் உகந்துனைத் தான் அங்கீகரிக்க
செய்யவுமே அது திவ்ய நல் ஆயுதம்

2. பண்டையர் அந்தப் பரிசையினால் அல்லோ
கண்டடைந்தார் பேறு - நல்ல தொண்டன்
ஆபேல் முதலான வைதீகரைத் தொகுத்து
வெவ்வேறுவிண்டுரைக்கில் பெருகும்
தீ அணைத்ததும் வீரிய சிங்கத்தின் வாயை அடைத்ததும்,
கண்டிதமாய் வெற்றி கொண்டது மாம் பல
காரியங்களையும் பார் இது மா ஜெயம்

3. ஊற்றமுடன் இப்பரிசைப் பிடித்திட
உன் செயல் மா பேதம் - அதின் தோற்றமும்
முடிவும் ஏசுபரன் செயல் - துணை
அவர் பாதம் ஏற்றர வணைக்கவே பணிவாக
இரந்து மன்றாடி அவர் மூலமாகவே,
ஆற்றல் செய் தேற்றரவாளி பரிசுத்த
ஆவி உதவியை மேவி அடைந்து நீ

Tamil Hymns

1177. கிதியோன் நீ கிதியோன் நீ

கிதியோன் நீ கிதியோன் நீ
தேவனால் அழைக்கப்பட்டு அனுப்பப்பட்டவன் நீ
வாலிபனே வாலிபனே - ஊழியம்
செய்திட நீ ஒப்புக்கொடுப்பாயா

1. உணவுக்கு போராடும் தேசத்திலே
உண்மை தெய்வத்தை நீ சொல்லணுமே
விளைச்சலை கெடுக்கின்ற எதிரிகளை
விரட்டணுமே இயேசு நாமம் சொல்லி

2. தரித்திர ஆவிகளைத் துரத்தணுமே
விக்கிரக ஆவிகளை விரட்டணுமே
கர்த்தர் மனம் இறங்க கதறணுமே
நாடு நலம்பெற ஜெபிக்கணுமே

3. சுயம் என்ற மண்பாண்டம் உடைத்துவிடு
பயமின்றி திருவசனம் அறிக்கையிடு
மாம்சத்தைப் பலியாக ஒப்புக்கொட
புளியாத அப்பாமாக மாறிவிடு

4. இருக்கின்ற பெலத்தோடே புறப்பட்டுபோ
எதிரியை தோற்கடித்து ஜனங்களை மீட்பாய்
படைத்தவர் உனக்குள்ளே இருப்பதனால்
பராக்கிரமசாலியே பயமே வேண்டாம்

Tamil Hymns

1178. கிருபை இரக்கம் நிறைந்தவோர்

1. கிருபை இரக்கம் நிறைந்தவோர்
கிருபாசனம் ஆ தோன்றிடுதே
தருணமேதும் எங்கிலும் நல்ல
சகாயம் பெற்றிட ஏற்றதுவே

கிருபையே பெருகுதே
கல்வாரியினின்றும் பாய்ந்திடுதே
என்னுள்ளம் நன்றியால்
பொங்கி வழியுதே
என்ன என் பாக்கியமிதே

2. நம்மைப் போலவே சோதிக்கப் பட்டும்
நாதனோர் பாவமுமற்றவராய்
நாளும் நம் குறைகள் கண்டுருகும்
நல்ல ஆசாரியர் நமக்குண்டு

3. நம் பெலவீனத்தில் அவர் பெலன்
நல்கிடுவார் பரிபூரணமாய்
நாடுவோமே மாறா கிருபையை
நமக்காகவே அவர் ஜீவிப்பதால்

4. வானங்களின் வழியாய்ப் பரத்தில்
தானே சென்று இயேசுவா மெமது
மா பிரதான ஆசாரியரைப்
பற்றிடுவோம் நோக்கி நம்பிக்கையை

5. பிதாவண்டை சேரும் சுத்தர் கட்காய்
சதாபரிந்து பேசியே நிற்போர்
இதோ எம்மையே முற்றுமுடிய
இரட்சிக்க வல்லமையுள்ளவரே

Tamil Hymns

1179. கிருபை எம்மைச் சூழ்ந்து கொள்ளும்

கிருபை எம்மைச் சூழ்ந்து கொள்ளும் - தம்
கிருபை கர்த்தரில் மகிழ்வோம்
களிகூர்ந்திடுவோம் கண்டடைந்தோம் கிருபை

1.யோர்தானைக் கடந்துவந்தோம்- எங்கள்
இயேசுவின் பெலம் அடைந்தோம்
சேனையின் கர்த்தர் முன்னேநடந்தார்
சோர்வின்றி காத்துக் கொண்டார்

2.தேசமே பயப்படாதே - எங்கள்
தேவன் கிரியை செய்கின்றார் தேசத்தின்
நன்மை சேமம் அருள்வார்
தாசர்கள் வேண்டிடுவோம்

3.கர்த்தர் இவ்வாண்டினிலே - பெரும்
காரியம் செய்திடுவார்
கால் வைக்கும் தேசம்
இயேசு தருவார் காத்திருந்தே அடைவோம்

4.ஆண்டுகள் நன்மையினால் - முடி
சூண்டு வளம் பெருக
தேசத்தின் மீதே கண்களை வைத்தே
பாசமாய் நோக்கிடுவார்

5.ஜாதி ஜனங்களையும்
வந்து மோதி அசைத்திடுவார்
காத்துக் கிடக்கும் உள்ளம்
மகிழும் கர்த்தரே வந்திடுவார்

Tamil Hymns

1180. கிருபை கிருபை நம் தேவனின்

கிருபை கிருபை நம் தேவனின் மாறாத கிருபை
கிருபை… கிருபை…
நம் இயேசுவின் மாறாத கிருபை…

1. **அனுதினமும் நம்மை நடத்திடும்**
அற்புத தேவனின் கிருபை

2. **பாவத்தை மன்னிக்கும் கிருபை - நம்**
சாபத்தை போக்கிடும் கிருபை

3. **நமக்காய் ஜீவன் தந்த கிருபை - நம்மை**
நாள்தோறும் பாதுகாக்கும் கிருபை

4. **பரிச்சுத்தமாக்கிடும் கிருபை - நம்மை**
பரலோகம் சேர்த்திடும் கிருபை - கிருபை

5. **எத்தனை இழப்புகள் வந்தாலும் - நம்மை**
தாங்கி நடத்திடும் கிருபை - கிருபை

6. **நம்மை விட்டு விலகாத கிருபை**
நமக்காய் பரிந்து பேசும் கிருபை

Tamil Hymns

1181. கிருபை தாரும் தேவனே

கிருபை தாரும் தேவனே
தேவ கிருபை தாரும் தேவனே

1. பெலவீனத்தில் பெலன் என்றீர்
என் கிருபை போதும் என்றீர்
பரிசுத்த அபிஷேகம் தந்தீர்
பந்தயத்தில் வெற்றி தந்தீர்

2. இரட்சண்ய நாட்களை தந்தீர்
எல்லாமே இலவசம் என்றீர்
நெருக்கத்திலே விடுதலை தந்தீர்
நீதிமான் விழுவதில்லை என்றீர்

3. கிருபையும் அமைதியும் தந்தீர்
கிறிஸ்துவுக்குள் பிழைத்திரு என்றீர்
ஆத்தும பாரங்களை தந்தீர்
அறுவடைக்கு புறப்படு என்றீர்

4. ஈசாயின் அடிமரம் என்றீர்
எழுப்புதல் உன்னாலே என்றீர்
ஊழிய கிருபையை தந்தீர்
உலகத்தை கலக்கிடு என்றீர்

Tamil Hymns

1182. கிருபை புரிந்தெனை ஆள்

கிருபை புரிந்தெனை ஆள் - நீ பரனே
கிருபை புரிந்தெனை ஆள் - நிதம்

1. திரு அருள் நீடு மெய்ஞ்ஞான திரித்து,
வரில்நரனாகிய மா துவின் வித்து

2. பண்ணின பாவமெலாம் அகல்வித்து
நிண்ணயமாய் மிகவுந் தயைவைத்து

3. தந்திரவான்கடியின் சிறைமீட்டு
எந்தை, மகிழ்ந்துன்றன் அன்புபாராட்டு

4. தீமை உறும் பல ஆசையை நீக்கிச்
சாமி! என்னை உமக்காலயம் ஆக்கி

5. தொல்வினையால் வரும் சாபம் ஒழித்து
நல்வினையே செய் திராணி அளித்து

6. அம்பரமீதுறை வானவர் போற்ற
கெம்பீரமாய் விசுவாசிகள் ஏத்த

Tamil Hymns

1183. கிருபை மேலானதே

கிருபை மேலானதே - உம்
கிருபை மேலானதே
கிருபை மேலானதே - உம்
கிருபை மேலானதே

1. ஜீவனை பார்க்கிலும் - உம்
கிருபை மேலானதே
இவ் வாழ்கையை பார்க்கிலும்
உம் கிருபை மேலானதே

2. போக்கிலும் வரத்திலும் என்னை
காத்தது கிருபையே - என்
கால்கள் இடறாமல் என்னை
காத்தது கிருபையே

3. பலவீன நேரங்களில் - உம்
கிருபை என் பெலனானதே
சோர்வுற்ற வேளைகளில் - உம்
கிருபை என்னை தாங்கிற்றே

4. கஷ்டத்தின் நேரங்களில் - உம்
கிருபை என்னை காத்ததே
கண்ணீரின் மத்தியிலும் - உம்
கிருபை என்னை தேற்றுதே

Tamil Hymns

1184. கிருபை வேண்டும் நாதா

கிருபை வேண்டும் நாதா - இயேசுவே உம் திவ்விய
கிருபை வேண்டும் நாதா - இவ்வாராதனையில்

1. உம் கிருபை தான் வேண்டும் சொர்லோக ராஜாவே
உம் கிருபை யல்லாது எங்களால் ஆகாது

2. ஏழு பிசாசுகள் ஓட்டியே மரியாளை
இன்பமாய் நேசித்து அன்பால் நிரப்பின

3. இருவராம் சீசரின் சஞ்சலங்கள் நீக்கி
இருதயம் குளிர்ந்திட இனிமையாய் பேசின

4. பாவத்தை இனிமேல் செய்யாதே என்றுமே
பாவியாம் ஸ்திரிக்கு நேசமாய்க் கூறின

5. பெந்தே கொஸ்தே நாளில் அன்பராம் சீஷர் மேல்
உந்தன் வரங்களை மாரிபோல் பொழிந்தே

6. தாசனாம் ஸ்தேவானின் சாயலை மாற்றின
நேசமாய் கிருபையை எம்மேலும் ஊற்றிடும்

7. வருகிறேன் சீக்கிரம் என்றுரைத்த நேசா
தருகிறேன் என்னையே ஆசீர்வதித்திட

8. அடியாராம் ஏழைகள் உம்மைச் சந்தித்திட
முடிவு வரைக்கும், காத்திடும் கிருபையால்

Tamil Hymns

1185. கிருபையால் நிலை நிற்கின்றோம்

கிருபையால், நிலை நிற்கின்றோம்
உம் கிருபையால், நிலை நிற்கின்றோம்
கிருபை - (7) --- கிருபையால்

1. பெயர் சொல்லி அழைத்தது, உங்க கிருபை
பெரியவனாக்கியதும், உங்க கிருபை(2)

2. நீதிமானாய் மாற்றியது, உங்க கிருபை
நித்தியத்தில் சேர்ப்பது, உங்க கிருபை

3. கட்டுகளை நீக்கினது, உங்க கிருபை
காயங்களை கட்டியதும், உங்க கிருபை

4. வல்லமையை அளித்தது, உங்க கிருபை
வரங்களை கொடுத்தது, உங்க கிருபை

5. கிருபையை, கொண்டாடுகிறோம்
தேவ கிருபையை, கொண்டாடுகிறோம்

Tamil Hymns

1186. கிருபையிதே தேவ கிருபையிதே

கிருபையிதே தேவ கிருபையிதே
தாங்கி நடத்தியதே
இயேசுவிலே பொன் நேசரிலே
அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்

1. ஆருயிர் அன்பராய் எங்களுடனே
ஜீவிய பாதையிலே - இயேசுபரன்
அனுதினமும் வழி நடந்தே
அவரது நாமத்தில் காத்தனரே

2. வார்த்தையினால் அவர் தீர்த்தார் எந்தன்
வியாதியும் வேதனையும் - வைத்தியராய்
இயேசுவல்லால் சார்ந்திடவோ
இகமதில் வேறெமக் காருமில்லை

3. அன்பின் அகலமும் நீளம் உயரமும்
ஆழமும் அறிந்துணர - அனுக்கிரகித்தார்
கிறிஸ்துவிலே ஒரு மனையாய்
சிருஷ்டித்தே நிறுத்தினார் அவர் சுதராய்

4. நல்ல போராட்டம் போராடி ஜெயித்தே
நித்திய ஜீவனை நாம் - பெற்றிடவே
விசுவாசத்தில் நிலைத்திடுவோம்
அசையாது அழைப்பினை காத்துக்கொள்வோம்

5. எத்தனையோ பரிசுத்தர்கள் மறைந்தே
மகிமை சேர்ந்தனரே - பூரணமாய்
காத்தனரே கர்த்தர் எமை
கருணையினால் தூய சேவை செய்ய

6. ஆவியும் மணவாட்டியும் ஆவலுடன்
வாருமென்றழைக்கின்றாரே - வாருமென்பீர்
சீயோனே நீ பார் உனக்காய்
நாயகன் இயேசு தாம் வெளிப்படுவார்

Tamil Hymns

1187. கிருபையே உன்னை இந்நாள்

கிருபையே உன்னை இந்நாள்
வரையும் காத்தது என் கிருபையே

1. பாதையில் கஷ்டம் அணுகிடும் போது
பங்கம் வராது நான் உன்னைத் தாங்கினேன்
பெலன் ஈந்தேன் கரத்தால்
தூக்கினேன் உன்னை நான்
எந்தன் அன்பினால் உன்னை நிறுத்த

2. சோதனையாலே சோர்ந்திடும்போது
சொந்தமென நான் உன்னைச் சந்தித்தேன்
ஜோதியை உன் முன்னில் ஜொலித்திடச் செய்திட்டேன்
ஜெயகீதங்கள் பாடவைத்திட்டேன்

3. ஏகனாய் நீயும் சஞ்சலத்தாலே
ஏங்கும்போது உன் அண்டை வந்திட்டேன்
ஏற்ற நல்துணையை ஈந்திட்டேன் அல்லோ நான்
என்றும் உன்னை என் சொந்தமாக்கினேன்

4. ஜெயமான பாதை சென்றிடச் செய்தேன்
செப்பமாக உன் கரம் பிடித்தேன்
ஜெய ஜெயகீதங்கள் தொனித்திடச் செய்தேனே
சேவை செய்யவும் கிருபை தந்தேனே

5. என்றென்றுமாக என் கிருபை காட்ட
கொண்டேன் உன்னை
இம்மண்ணில் பிரித்து - என் அரும்
மகனே காப்பேனே உன்னை நான்
உன் தந்தை நான் உன்னை விடேனே

Tamil Hymns

1188. கிறிஸ்தவனை DISTURB பண்ணாதே

கிறிஸ்தவனை Disturb பண்ணாதே
அவனை Assault எண்ணி விடாதே

அவன் வெட்ட வெட்ட வளருவான்
கொட்ட கொட்ட உயருவான்

1. திட்டம் போட்டு மிரட்டிடலாம் என்று எண்ணாதே
கட்டிப் போட்டு மடக்கிடலாம் என்று கனவு காணாதே
முட்டி போட்டு ஜெபிச்சான்னா - நீ
முதுகைக் காட்டி ஓடிடுவே - அவன்
ஆழம் அகலம் தெரியாமல் காலை விடாதே - அவன்
நீளம் உயரம் தெரியாமல் மாட்டிக் கொள்ளாதே

2. மாம்சத்தோடு இரத்தத்தோடும் போரிடாதவன்
வீணான செயல்களுக்கு எதிர்த்து நிற்பவன்
நிந்தனைகள் போராட்டம் வந்தால் - அதை
பொறுமையோடு சகித்துக் கொள்பவன் - அவன்
கண்ணீரின் பள்ளத்தாக்கை கடந்து செல்பவன் - அவன்
தண்ணீரை தரைபோல வழி நடப்பவன்

3. கர்த்தரை எக்காலமும் ஸ்தோத்தரிப்பவன்
பாடுகளை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்பவன்
உயர்வோ தாழ்வானாலும் மரணமோ ஜீவனானாலும்
பசியோ பட்டினியோ நாசம் வந்தாலும்
நண்பர்களால் அன்பர்களால் துன்பம் வந்தாலும்

Tamil Hymns

1189. கிருபையே கிருபையே ஒப்பில்லா

கிருபையே கிருபையே ஒப்பில்லா கிருபையே
கிருபையே கிருபையே அதிசய கிருபையே
உங்க கிருபை தான் என்னை தாங்குது
உங்க கிருபை தான் என்னை நடத்துது

1. பெலவீன நேரத்திலே பெலப்படுத்துமே - 2
சோர்வான வேளையிலெ உற்சாக மூட்டுமே - 2
முடமான கால்களை உறுதிப்படுத்துமே - 2
தளர்ந்த கைகளை திடப்படுத்துமே

2. தகுதியில்லா இடங்களில் தகுதிப்படுத்துமே - 2
களைப்பான காலத்தில் உந்தித் தள்ளுமே - 2
முடியாத வேளையில் நிறைவேறுமே - 2
குறைவாக இருக்கும் போது நிறைவாகுமே - 2

Tamil Hymns

1190. கிறிஸ்தவ இல்லறமே

கிறிஸ்தவ இல்லறமே சிறந்திடக்
கிருபை செய்வீர், பரனே!
பரிசுத்த மரியன்னை, பாலன் யேசு,
யோசேப்புப் பண்பாய் நடத்தி வந்த
இன்பக்குடும்பம்போல

1. ஜெபமென்னும் தூபமே தினம் வானம் ஏறவும்,
திரு வேத வாக்கியம் செவிகளில் கேட்கவும்,
சுப ஞானக்கீர்த்தனை துத்தியம் பாடவும்,
சுதனேசு தலைமையில் தூய வீடாகவும்

2. ஊழியம் புரியவும் ஊதியம் விரும்பாமல்
உவந்த பெத்தானியா ஊரின் குடும்பம்போல
நாளும் யேசு பிரானை நல்விருந்தாளி யாக்கி
நாடியவர் பாதத்தில் கூடியமர்ந்து கேட்டுக்

3. அன்போடாத்தும தாகம் அரிய பரோபகாரம்
அருமையாக நிறைந்த அயலார்க்
கொளி விளக்காய்த் - துன்பஞ் செய்கிற
பலதொத்து வியாதிகளைத் தூர துரத்தும்
வகை சொல்லிச் சேவையைச் செய்து

4. மலையதின் மேலுள்ள மாளிகையைப் போலவே
மற்றவர்களுக்கு முன் மாதிரியாய் நின்று
கலைஉடை உணவிலும், கல்வி முயற்சியிலும்
கர்த்தருக் கேற்ற பரிசுத்தக் குடும்பமாகக்

Tamil Hymns

1191. கிறிஸ்துவின் அடைக்கலத்தில்

கிறிஸ்துவின் அடைக்கலத்தில்
சிலுவையில் மாநிழலில்
கன்மலை வெடிப்பதனில்
புகலிடம் கண்டு கொண்டோம்

1. கர்ச்சிக்கும் சிங்கங்களும்
ஓநாயின் கூட்டங்களும்
ஆடிடைக் குடிலினில்
மந்தைகள் நடுவினில்
நெருங்கவும் முடியாது

2. இரட்சிப்பின் கீதங்களும்
மகிழ்ச்சியின் சப்தங்களும்
கார்மேக இருட்டினில்
தீபமாய் இலங்கிடும்
கர்த்தரால் இசை வளரும்

3. தேவனின் இராஜ்ஜியத்தை
திசை எங்கும் விரிவாக்கிடும்
ஆசையில் ஜெபித்திடும்
அதற்கென்றே வாழ்ந்திடும்
யாருக்கும் கலக்கம் இல்லை

4. பொல்லோனின் பொறாமைகளும்
மறைவான சதி பலவும்
வல்லோனின் கரத்தினில்
வரைபடமாயுள்ள
யாரையும் அணுகாது

Tamil Hymns

1192. கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு

கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு
எப்போதும் வெற்றி உண்டு
வெற்றி உண்டு -3

1. என்னென்ன துன்பம் வந்தாலும்
நான் கலங்கிடவே மாட்டேன்
யார் என்ன சொன்னாலும்
நான் சோர்ந்து போகமாட்டேன்

2. என் ராஜா முன்னே செல்கிறார்
வெற்றிப் பவனி செல்கிறார்
குருத்தோலை கையில் எடுத்து
நான் ஓசன்னா பாடிடுவேன்

3. சாத்தானின் அதிகாரமெல்லாம்
என் நேசர் பறித்துக் கொண்டார்
சிலுவையில் அறைந்து விட்டார்
காலாலே மிதித்து விட்டார்

4. பாவங்கள் போக்கிவிட்டார்
சாபங்கள் நீக்கி விட்டார்
இயேசுவின் தழும்புகளால்
சுகமானேன் சுகமானேன்

5. மேகங்கள் நடுவினிலே
என் நேசர் வரப்போகிறார்
கரம்பிடித்து அழைத்துச் செல்வார்
கண்ணீரெல்லாம் துடைப்பார்

Tamil Hymns

1193. கிறிஸ்துவின் சேனை வீரர்கள்

1. கிறிஸ்துவின் சேனை வீரர்கள் நாம் என்றும்
கிறிஸ்துவுக்காய் சேவை செய்திடுவோம்
உயர்விலும் தாழ்விலும் காட்டிலும் நாட்டிலும்
உன்னதர் படையில் பணிபுரிவோம்

இறைமகன் இயேசு வாழ்க வாழ்க
அதிசயமானவர் வாழ்க வாழ்க
வல்லமையுள்ளவர் வாழ்க வாழ்க
மரித்துயிர்த் தெழுந்தாரே

2. சத்திய கச்சையை அரையினில் கட்டியே
நீதியின் மார்க்கவசம் தரிப்போம்
ஆயத்த பாதரட்சையைத் தொடுத்தே
விசுவாச கேடகத்தை பிடிப்போம்

3. ரட்சண்ய தலைசீராவை அணிந்து
வசனத்தின் பட்டயத்தை எடுப்போம்
சர்வாயுதத்தை அணிந்த வீரர் நாம்
இயேசுவுக்காய் யுத்தம் செய்திடுவோம்

வாழ்க வாழ்க வாழ்க (2)
வாழ்க நீர் வாழ்க உன் நாமம் வாழ்க
உன் புகழ் வாழ்க என்றென்றும் வாழ்க

Tamil Hymns

1194. கிறிஸ்துவின் சாயல் தரித்திட

கிறிஸ்துவின் சாயல் தரித்திட
தந்தேன் என்னை முழுவதுமாய்
உம்மைப் போல் மாறிட வாஞ்சிக்கிறேன்
மாற்றிடும் என்னை முழுவதுமாய்
உம்மைப் போல் மாற்றிடும்
உம்மைப் போல் வனைந்திடும்
உம்மாக மாறிட வாஞ்சிக்கிறேன்
மாற்றிடும் என்னை முழுவதுமாய்

1. தாழ்மையின் சிந்தை தரித்திட
தந்தேன் என்னை முழுவதுமாய்
மரண பரியந்தம் தாழ்த்தினீரே
தாழ்த்துகிறேன் என்னை முற்றிலுமாய்

2. அன்பு என்னில் பெருகிட
அர்ப்பணித்தேன் என்னை முழுவதுமாய்
அக்கினி அபிஷேக என்னில் ஈந்திடும்
அனலாய் என்றும் பிரகாசிப்பேன்

Tamil Hymns

1195. கிறிஸ்மஸ் நாளிதே எல்லோரும்

கிறிஸ்மஸ் நாளிதே
எல்லோரும் பாடி கொண்டாடி மகிழும்
கிறிஸ்துமஸ் நாளிதே

1. **மேய்ப்பர்கள் வணங்கிட சாஸ்திரிகள்**
தொழுதிட பிறந்திட்டார் இயேசு
குடும்பங்கள் சேர்ந்திட இயேசுவை
தொழுதிட பிறந்திட்டார் இயேசு

2. **பரலோகம் மகிழ்ந்திட தூதர்கள்**
துதித்திட பிறந்திட்டார் இயேசு
பூலோகம் மகிழ்ந்திட உலகமே
துதித்திட பிறந்திட்டார் இயேசு

Tamil Hymns

1196. கிறிஸ்தவ ஜீவியம் சௌ பாக்கிய ஜீவியம்

1. கிறிஸ்தவ ஜீவியம் சௌ பாக்கிய ஜீவியம்
கிறிஸ்துவின் மக்கட்கோர் ஆனந்த ஜீவியம்
கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் வந்தாலும்
கிறிஸ்தேசு நாயகன் கூட்டாளி அல்லவோ

2. பூலோக இன்பங்கள் மாறிப்போய்விடுமே
லோகத்தாரெல்லாரும் கைவிடுவாரல்லோ
உற்றார் உறவினர் தள்ளி வெறுத்தாலும்
யோசேப்பின் தெய்வமென் கூட்டாளி அல்லவோ

3. நம்பும் சகோதரர் வம்பு செய்திடுவார்
அப்பம் புசித்திட்டோர் குதிங் காலைத் தூக்கிடுவார்
ஆறாத்துயரிலும் மாறாக் கண்ணீரிலும்
ஆற்றிடும் தெய்வமென் கூட்டாளி அல்லவோ

4. இயேசு என் நல் மேய்ப்பர், இயேசு என் சிநேகிதர்
நித்யமாய் ராஜா என் கூட்டாளி அல்லவோ
என்னே இப்பாரங்கள் ன்னே இக்கிலேசங்கள்
கிறிஸ்தேசு இராஜா என் கூட்டாளி அல்லவோ

5. எக்காள நாதம் நான் கேட்டிடும் வேளையை
கஷ்டங்கள் யாவுமே நீங்கிடும் நேரமே
என்று நீர் வருவீர் எப்போ நீர் வருவீர்
என் கண்ணீர் துடைக்க என் நேசக் கூட்டாளியே

Tamil Hymns

1197. கிறிஸ்துவின் சுவிசேஷகர்

1. கிறிஸ்துவின் சுவிசேஷகர்
நற்செய்தி கூறினார்
யாவர்க்கும் திவ்விய ரகசியம்
விளங்கக் காட்டினார்

2. பூர்வீக ஞானர் மங்கலாய்
அறிந்த வாக்கையே
கார்மேகம் இல்லாப் பகல்போல்
இவர்கள் கண்டாரே

3. மெய் மாந்தனான கர்த்தரின்
மகா செய்கை எல்லாம்
உரைக்கும் திவ்விய வசனம்
சாகாமை உள்ளதாம்

4. நால் சுவிசேஷகரையும்
ஓர் ஆவி ஏவினார்
தம் வேதத்தாலே நம்மையும்
இப்போதழைக்கிறார்

5. நீர் பரிசுத்த மார்க்குவால்
புகன்ற செய்திக்கே
அடியார் உம்மை இத்தினம்
துதிப்போம் கர்த்தரே

Tamil Hymns

1198. கிறிஸ்துவின் வீரர் நாம்

1. கிறிஸ்துவின் வீரர் நாம்;
ரத்தத்தால் மீட்டாராம்
இப்போது சேனை சேர்ந்து நாம்
அவர்க்காய்ப் போர் செய்வோம்
அபாயத்தினூடும்
மகிழ்ந்து பாடுவோம்
தம் வீரரை நடத்துவோர்
நெஞ்சில் திடன் ஈவார்.

கிறிஸ்துவின் வீரர் நாம்
புகழ்ந்து போற்றுவோம்
நம் மேன்மையுள்ள ராஜனை
எக்காலும் சேவிப்போம்.

2. கிறிஸ்துவின் வீரர் நாம்
அவரின் பேர் நாமம்
சிலுவை மேலாய் நின்றதாம்
மாண்போடு தாங்குவோம்
நஷ்டமும் லாபமே
எந்நோவும் இன்பமே,
அவரின் நாமம் ஏற்றிடும்
கிறிஸ்துவின் வீரர்க்கே

3. கிறிஸ்துவின் வீரராய்
அவர்க்காய் சகிப்போம்
வேதனை நிந்தை வெட்கமும்
அவரோடாளுவோம்
காலம் சமீபமே,
ஓங்கிப் போர் செய்வோமே
மாண்பாக கிரீடம் சூடுவோம்
கிறிஸ்துவின் வீரரே.

Tamil Hymns

1199. கிறிஸ்தோரே எல்லாரும்

1. கிறிஸ்தோரே எல்லாரும்
களிகூர்ந்து பாடி
ஓ பெத்லெகேம் ஊருக்கு வாருங்கள்
தூதரின் ராஜா
மீட்பராய்ப் பிறந்தார்
நமஸ்கரிப்போமாக (3)
கர்த்தாவை

2. மகத்துவ ராஜா,
சேனையின் கர்த்தாவே,
அநாதி பிறந்த மா ஆண்டவா;
முன்னணை தானோ
உமக்கேற்கும் தொட்டில்
நமஸ்கரிப்போமாக (3)
கர்த்தாவை

3. விண் மண்ணிலும் கர்த்தர்
கனம் பெற்றோர் என்று
தூதாக்களே பாக்கியவான்களே
ஏகமாய்ப் பாடி
போற்றி துதியுங்கள்
நமஸ்கரிப்போமாக (3)
கர்த்தாவை

4. அநாதி பிதாவின்
வார்த்தையான கிறிஸ்தே!
நீர் மாமிசமாகி இந்நாளிலே
ஜென்மித்தீர் என்று
உம்மை ஸ்தோத்திரிப்போம்
நமஸ்கரிப்போமாக (3)
கர்த்தாவை

Tamil Hymns

1200. கீதம் கீதம் ஜெய ஜெய கீதம்

கீதம் கீதம் ஜெய ஜெய கீதம்
கை கொட்டிப் பாடிடுவோம் - இயேசு
ராஜன் உயிர்த்தெழுந்தார் அல்லேலூயா
ஜெயம் என்று ஆர்ப்பரிப்போம் - ஆ! ஆ!

1. பார் அதோ கல்லறை மூடினப் பெருங்கல்
புரண்டுருண்டோடுது பார் - அங்கு
போட்ட முத்திரை காவல் நிற்குமோ
தேவ புத்திரர் சந்நிதிமுன் - ஆ! ஆ!

2. வேண்டாம் வேண்டாம் அழுதிட வேண்டாம்
ஓடி உரைத்திடுவோம் - தாம்
கூறின மாமறை விட்டனர் கல்லறை
போங்கள் கலிலேயாவுக்கு - ஆ! ஆ!

3. அன்னா காய்பா ஆசாரியர் சங்கம்
அதிரடி கொள்ளுகின்றார் - இன்னா
பூத கணங்கள் இடி ஒலி கண்டு
பயந்து நடுங்குகின்றார் - ஆ! ஆ!

4. வாசல் நிலைகளை உயர்த்தி நடப்போம்
வருகின்றார் ஜெய வீரன் - நாமம்
மேள வாத்தியம் கைமணி பூரிகை
எடுத்து முழங்கிடுவோம் - ஆ! ஆ!

1201. கீழாக்காமல் உன்னை மேலாக்கியே

கீழாக்காமல் உன்னை மேலாக்கியே
உன்னை நான் அபிஷேகிப்பேன்
வாலாக்காமல் உன்னை தலையாக்கியே
புது நாமம் தந்திடுவேன்
எல்லையை பெரிதாக்கி விஸ்திகரித்து
உன்னை நான் உயர்த்திடுவேன்

மறவாமல் என்றும் நான் உன்னோடு இருந்து
தாயை போல் பரிபாலிப்பேன்
உன்னை என் கண்மணி போல் நான் காத்து
புது நாமம் தந்திடுவேன்

பாழாக்கும் கொள்ளை நோய்க்கு உன்னை காத்து
கண்ணிமையாய் காத்திடுவேன்
என் செட்டையின் கீழ் அடைக்கலப்படுத்தி
கோட்டையாய் காத்திடுவேன்

பகலில் பறக்கும் அம்பிற்க்கு உன்னை
விடுவித்து காத்துக் கொள்வேன்
பொலாப்பு உனக்கு நேரிடாமல் பார்த்து
எல்லையை காத்திடுவேன்

Tamil Hymns

1202. குணப்படு பாவி

குணப்படு பாவி தேவ கோபம்
வரும் மேவி - இப்போ
கணப்பொழுதினில் காயம் மறைந்துபோம்;
காலமிருக்கையில் சீலமதாக நீ

1. கர்த்தனை நீ மறந்தாய்
அவர் கற்பனையைத் துறந்தாய்,
பக்தியின்மை தெரிந்தாய் பொல்லாப்
பாவ வழி திரிந்தாய்
புத்திகெட்ட ஆட்டுக் குட்டியே ஓடி வா
உத்தம மேய்ப்பனார் கத்தி யழைக்கிறார்

2. துக்கமடையாயோ? பாவி துயரமாகாயோ ?
மிக்கப் புலம்பாயோ ? மனம் மெலிந்துருகாயோ ?
இக்கணம் பாவக் கசப்பை யுணராயோ ?
தக்க அருமறைப் பக்கந் தொடராயோ ?

3. தாவீ தரசனைப்போல் - தன்னைத்
தாழ்த்தும் மனாசேயைப்போல்
பாவி மனுஷியைப்போல் - மனம்
பதைத்த பேதுருபோல்
தேவனுக்கேற்காத தீமைசெய்தேனென்று
கூவிப் புலம்பு நல் ஆவியின் சொற்படி

4. உன்னை நீ நம்பாதே
இவ்வுலகையும் நம்பாதே,
பொன்னை நீ நம்பாதே
எப்பொருளையும் நம்பாதே
தன்னைப் பலியிட்டுத் தரணி மீட்டவர்
நின்னையும் ரட்சிப்பார் அனைவரைப் பற்று

Tamil Hymns

1203. குணம் இங்கித வடிவாய் உயர்

குணம் இங்கித வடிவாய் உயர் கோவே யேசு தேவே
மணம் இங்கித உற வருவீர் மேசியாவே

1. மன்றல் செய்து மனை புகு மண
வாளனோ டவ னேரும்
தன் றுணையான மங்கையும் இங்கே
தழைக்க அருள் தாரும் - குணம்

2. ஆதி மானிடற் கான ஓர் துணை
அன்றமைத்த நற் போதனே
தீதற இணையாம் இவர்க் கருள்
செய்குவீர் எங்கள் நாதனே - குணம்

3. தொன்றி கானாவில் மன்றல் ஓங்கிடத்
தோன்றிய தயாபரனே
இன்று மன்றல் சிறந்திட அருள்
ஈந்திடும் க்ருபா கரனே - குணம்

4. பண்பதில் அவ லேசமும் குறை
பாடில்லாத தெய்வீகனே
நண்பதில் இரு பேரும் வாழ்ந்திட
நண்ணும் மா திரி யேகனே - குணம்

5. உற்ற நல் உற வோரும் எங்கள்
உரிமை ஆனவர் யாரும்
பற்றதாய் உறு பத்தியோடும்மைப்
பாட நல் மனம் தாரும் - குணம்

Tamil Hymns

1204. குதூகலம் கொண்டாட்டமே

குதூகலம் கொண்டாட்டமே
என் இயேசுவின் சந்நிதானத்தில்
ஆனந்தம் ஆனந்தமே
என் அப்பாவின் திருப்பாதத்தில்

1. பாவமெல்லாம் பறந்தது நோய்களெல்லாம் தீர்ந்தது
இயேசுவின் இரத்தத்தினால் கிறிஸ்துவுக்குள்
வாழ்வு கிருபையால் மீட்பு பரிசுத்த ஆவியினால்

2. தேவாதி தேவன் தினம்தோறும்
தங்கும் தேவாலயம் நாமே
ஆவியான தேவன் அச்சாரமானார்
அதிசயம் அதிசயமே

3. வல்லவர் என் இயேசு வாழ வைக்கும் தெய்வம்
வெற்றிமேலே வெற்றி தந்தார்
ஒருமனமாய் கூடி ஓசன்னா பாடி
ஊரெல்லாம் கொடியேற்றுவோம்

4. எக்காள சத்தம், தூதர்கள் கூட்டம்
நேசர் வருகின்றார் - ஒரு
நொடி பொழுதில் மறுரூபமாவோம்
மகிமையில் பிரவேசிப்போம்

Tamil Hymns

1205. குதூகலம் நிறைந்த நன்னாள்

குதூகலம் நிறைந்த நன்னாள்
நடுவானில் மின்னிடுமே
இதுவரை இருந்த துன்பமில்லை
இனி என்றுமே ஆனந்தம்

1. தள கர்த்தனாம் இயேசு நின்று
யுத்தம் செய்திடுவார் நன்று
அவர் ஆவியினால் புது பெலனடைந்து
ஜெயகீதங்கள் பாடிடுவோம்

2. புவி மீதினில் சரீர மீட்பு
என்று காண்போம் என ஏங்கும்
மன மகிழ்ந்திடவே அவர் வந்திடுவார்
மணவாட்டியாய்ச் சேர்த்திடவே

3. ஜெப விழிப்புடன் வாஞ்சையாக
அவர் வருகையை எதிர் நோக்கி
நவ எருசலேமாய் தூயாலங்கிர்தமாய்
நாம் ஆயத்தமாகிடுவோம்

4. ஜீவ ஒளி வீசும் கற்களாக
சீயோன் நகர்தனிலே சேர்க்க - அருள்
சுரந்திருந்தார் நாமம் வரைந்திருந்தார்
அவர் மகிமையில் ஆர்ப்பரிப்போம்

5. தேவ தூதர்கள் கானமுடன்
ஆரவார தொனி கேட்கும்
அவர் கிருபையினால் மறுரூபமாக
நம்மை இனிதுடன் சேர்த்திடுவார்

Tamil Hymns

1206. கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்

கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்
இறைவா இயேசு உம்மை கும்பிடுகிறேன்
கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்
இறைவா இறைவா கும்பிடுகிறேன்

1. சர்வத்தையும் படைத்த
சர்வ வியாபியே - (2)
சாரோனின் ரோஜா லீலி புஷ்பம்
உம்மை நான் கும்பிடுகிறேன் - (2)

2. மகிமையின் மன்னவனே
மகத்வ ராஜனே
மாறாத தேவன் மரித்து உயிர்த்தீர்
உம்மை நான் கும்பிடுகிறேன்

வல்லமையின் தெய்வமே
வாழ வைக்கும் வள்ளலே
வானத்து மன்னா வாழ்வின் ஜோதி
உம்மை நான் கும்பிடுகிறேன்

1207. குயவனே உம் கையில் களிமண் நான்

குயவனே உம் கையில் களிமண் நான்
உடைத்து உருவாக்கும் (2)
என் சித்தம் அல்ல உம் சித்தம் நாதா
தருகிறேன் உம் கையிலே (2)

என்னைத் தருகிறேன்
தருகிறேன் உம் கரத்தில்
என்னைப் படைக்கிறேன்
படைக்கிறேன் உம் பாதத்தில் (2)

1. உம் சேவைக்காய் எனை தருகிறேன்
வனைந்திடும் உம் சித்தம் போல் - உம்
எனக்காக வாழாமல் உமக்காக வாழ்ந்திட
உருவாக்குமே உருவாக்குமே

2. உமக்காகவே நான் வாழ்கிறேன்
வனைந்திடும் உம் சித்தம் போல்
உம் சித்தம் செய்திடவே
உம் சத்தம் கேட்டிடவே
உருவாக்குமே உருவாக்குமே

3. உம் வருகையில் உம்மோடு நான்
வந்திட எனை மாற்றுமே
ஓய்வின்றி உமைப் பாட
ஓயாமல் உமைத் துதிக்க
உருவாக்குமே உருவாக்குமே

Tamil Hymns

1208. குயவனே குயவனே படைப்பின்

குயவனே குயவனே
படைப்பின் காரணனே
களிமண்ணான என்னையுமே
கண்ணோக்கி பார்த்திடுமே

1. வெறுமையான பாத்திரம் நான்
வெறுத்து தள்ளாமலே
நிரம்பி வழியும் பாத்திரமாய்
விளங்கச் செய்யுமே
வேதத்தில் காணும் பாத்திரம் எல்லாம்
இயேசுவை போற்றிடுதே
என்னையும் அவ்வித பாத்திரமாய்
வனைந்து கொள்ளுமே

2. விலைபோகாத பாத்திரம் நான்
விரும்புவார் இல்லையே
விலையில்லா உம் கிருபையால்
உகந்ததாக்கிடுமே
தடைகள் யாவும் நீக்கி என்னைத்
தம்மைப்போல் மாற்றிடுமே
உடைத்து என்னை உந்தனுக்கே
உடைமையாக்கிடுமே

3. மண்ணாசையில் நான் மயங்கியே
மெய்வழி விட்டகன்றேன்
கண்போன போக்கை பின்பற்றியே
கண்டேன் இல்லை இன்பமே
காணாமல் போன பாத்திரம் என்னைத்
தேடி வந்த தெய்வமே
வாழ்நாளெல்லாம் உம் பாதம் செல்லும்
பாதையில் நடத்திடுமே

மேய்ப்பனே மேய்ப்பனே
மந்தையை காப்பவனே
மார்க்கம் அகன்ற என்னையுமே
கண்ணோக்கி பார்த்திடுமே,

Tamil Hymns

1209. குருசினில் தொங்கியே

குருசினில் தொங்கியே குருதியும் வடிய
கொல்கதா மலைதனிலே - நம்
குருவேசு சுவாமி கொடுந் துயர் பாவி,
கொள்ளாய் கண் கொண்டு

1. சிரசினில் முண்முடி உறுத்திட அறைந்தே
சிலுவையில் சேர்த்தையோ! - தீயர்
திருக்கரங் கால்களில்
ஆணிகளடித்தார் சேனைத்திரள் சூழ

2. பாதகர் நடுவில் பாவியினேசன்
பாதகன் போல் தொங்க - யூத
பாதகர் பரிகாசங்கள் பண்ணிப்
படுத்திய கொடுமைதனை

3. சந்திர சூரிய சகல வான் சேனைகள்
சகியாமல், நாணுதையோ - தேவ
சுந்தர மைந்த னுயிர் விடு
காட்சியால் துடிக்கா நெஞ்சுண்டோ?

4. ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த
இறைவன் விலாவதிலே - அவர்
தீட்டிய திட்சைக் குருதியும் ஜலமும்
திறந்தூறோடுது பார்

5. எருசலேம் மாதே மறுகி நீயழுது
ஏங்கிப் புலம்பலையோ? - நின்
எருசலையதிபன் இள மணவாளன்
எடுத்த கோல மிதோ

Tamil Hymns

1210. குருசின்மேல் குருசின்மேல் காண்கின்ற

குருசின்மேல் குருசின்மேல்
காண்கின்ற தாரிவர்
பிராணநாதன் பிராணநாதன்
என் பேர்க்காய்ச் சாகின்றார்

பாவத்தின் காட்சியை
ஆத்துமாவே பார்த்திடாய்
தேவகுமாரன் மா சாபத்திலாயினார்

இந்த மா நேசத்தை நிந்தையாய் தள்ளினேன்
இம்மகா பாவத்தை எந்தையே மன்னிப்பீர்

பாவத்தை நேசிக்க நான் இனிச் செல்வேனோ
தேவனின் பிள்ளையாய் ஜீவிப்பேன் நானிதோ

கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் நேர்ந்தாலும்
குருசின் காட்சியை தரிசித்துத் தேறுவேன்

சூறாவளியைப் போல் சூழ்ந்திடும் ஆபத்தில்
சிலுவையின் நேசத்தை சிந்தித்து நோக்குவேன்

இம்மகா நேசத்தை ஆத்மாவே சிந்திப்பாய்
இம்மானுவேலே நீர் என்னையும் நேசித்தீர்

Tamil Hymns

1211. குற்றம் நீங்கக் கழுவினீரே

குற்றம் நீங்கக் கழுவினீரே
சுற்றி வருவேன் உம்மையே
பற்றிக் கொண்டேன் உம் வசனம்
வெற்றி மேல் வெற்றி காண்பேன்

நீர்தானே யேகோவா ரா∴பா
சுகமானேன் கல்வாரி காயங்களால்

இரக்கம் கண்முன்னே
உம் வாக்கு என் நாவில் -உம்
நான் ஏன் கலங்கணும்
நன்றி கூறுவேன்

மகிமை மேகத்திற்குள்
மறைந்து நான் வாழ்கின்றேன் -உம்
இரட்சகர் இயேசுதான்
எப்போதும் என் முன்னே

உம்மையே நம்பியுள்ளேன்
உம்மோடுதான் நடப்பேன்
தடுமாற்றம் எனக்கில்லை
தள்ளாடுவதுமில்லை

உமது ஜனத்தின் மேல்
பிரியும் வைக்கின்றீர்
நீடிய ஆயுளால்
திருப்தியாக்குவீர்

உருமாற்றம் அடைகிறேன்
உம் மேக நிழலிலே
மனம் புதிதாகின்றது
மறுரூபம் ஆகின்றேன்

Tamil Hymns

1212. கூடாதது ஒன்றுமில்லையே

1. கூடாதது ஒன்றுமில்லையே
கூடாதது ஒன்றுமில்லையே
தேவனால் கூடாதது
கூடாதது ஒன்றுமில்லையே

மனுஷரால் கூடாதது
தேவனால் கூடுமே (2)

2. ஒரே ஒரு வார்த்தை சொன்னாரே
வேலைக்காரன் சொஸ்தமானானே
சுத்தமாகு என்று சொன்னாரே
குஷ்டரோகி சொஸ்தமானானே

3. கடலின் மேல் நடந்தாரே
கடும்புயல் அதட்டினாரே
பாடையை தொட்டாரே
வாலிபன் பிழைத்தானே

4. நீ விசுவாசித்தாலே
தேவ மகிமை காண்பாயே
பெலப்படுத்தும் கிறிஸ்துவாலே
பெரிய காரியம் செய்வாயே

5. பாவங்கள் போக்குவாரே
சாபங்கள் நீக்குவாரே
தீராத நோய்களையும்
தீர்ப்பார் கிறிஸ்து இயேசுவே

6. லாசருவே வா என்றாரே
மரித்தவன் பிழைத்தெழுந்தானே
எழுந்திரு என்று சொன்னாரே
யவீரு மகள் பிழைத்தாளே

7. வஸ்திரத்தை தொட்டாளே
வல்லமை புறப்பட்டதே
எப்பத்தா என்று சொன்னாரே
செவிட்டு ஊமையன் பேசினானே

Tamil Hymns

1213. கூடி மீட்பர் நாமத்தில்

1. கூடி மீட்பர் நாமத்தில்
அவர் பாதம் பணிவோம்
யேசுவை இந் நேரத்தில்
கண்டானந்தம் அடைவோம்

ஆ! இன்ப, இன்ப ஆலயம்!
நல் மீட்பர் கிருபாசனம்!
கண்டடைவோம் தரிசனம்
இன்ப இன்ப ஆலயம்!

2. இரண்டு மூன்று பேர் ஒன்றாய்
கெஞ்சும் போது வருவார்
வாக்குப் போல தயவாய்
ஆசீர்வாதம் தருவார்

3. சொற்பப் பேராய்க் கூடினும்
கேட்பதெல்லாம் தருவார்
வாக்குப்படி என்றைக்கும்
யேசு நம்மோடிருப்பார்

4. வாக்கை நம்பி நிற்கிறோம்,
அருள் கண்ணால் பாருமேன்
காத்துக் கொண்டிருக்கிறோம்,
வல்ல ஆவி வாருமேன்

Tamil Hymns

1214. கூடுமே எல்லாம் கூடுமே

கூடுமே எல்லாம் கூடுமே
உம்மாலே எல்லாம் கூடும்
கூடாதது ஒன்றுமில்லை உம்மால்
கூடாதது ஒன்றுமில்லை

1. கடல்மீது நடந்தீரையா
கடும்புயல் அடக்கினீரே
சாத்தானை ஒடுக்கினீரே
சர்வ வல்லவரே

2. செங்கடல் உம்மை கண்டு
ஓட்டம் பிடித்தது ஏன்
யோர்தான் உம்மைக் கண்டு
பின்னோக்கிச் சென்றது

3. மரித்து உயிர்த்தீரையா
மரணத்தை ஜெயித்தீரையா
மறுபடி வருவீரையா
உருமாற்றம் தருவீரையா

4. உம் நாமம் சொன்னால் போதும்
பேய்கள் ஓடுதையா
உம் பெயரால் கை நீட்டினால்
நோய்கள் மறையுதையா

5. வனாந்திர பாதையிலே
ஜனங்களை நடத்தினீரே
கற்பாறை கன்மலையை
நீரூற்றாய் மாற்றினீரே

1215. கூர் ஆணி தேகம் பாய

1. கூர் ஆணி தேகம் பாய
மா வேதனைப்பட்டார்
பிதாவே, இவர்கட்கு
மன்னிப்பீயும் என்றார்.

2. தம் ரத்தம் சிந்தினோரை
நல் மீட்பர் நிந்தியார்;
மா தெய்வ நேசத்தோடு
இவ்வாறு ஜெபித்தார்.

3. எனக்கே அவ்வுருக்கம்
எனக்கே அச்செபம்;
அவ்வித மன்னிப்பையே
எனக்கும் அருளும்.

4. நீர் சிலுவையில் சாக
செய்ததென் அகந்தை;
கடாவினேன், இயேசுவே,
நானுங் கூர் ஆணியை.

5. உம் சாந்தக் கண்டிதத்தை
நான் நித்தம் இகழ்ந்தேன்;
எனக்கும் மன்னிப்பீயும்,
எண்ணாமல் நான் செய்தேன்.

6. ஆ, இன்ப நேச ஆழி!
ஆ, திவ்விய உருக்கம்!
நிந்திப்போர் அறியாமல்
செய் பாவம் மன்னியும்.

Tamil Hymns

1216. கெம்பீரமாகவே சங்கீதம் பாடுவோம்

கெம்பீரமாகவே சங்கீதம் பாடுவோம்
நம்பாரமே எந்நாளும் நீக்கு வோனை நாடுவோமே - கெம்

1. மங்காத தீபமாய் விளங்கும் மா வசனமே
சிங்காரமா யித்தீபம் நாடிச் சேர்ந்ததினமே - கெம்

2. படாமுடிக் கொடூரனைப் பதைக்கவே கொல
குடாரமாக வெய்த தேவ வேத மே வெல - கெம்

3. எக்காளம் தொனித்திடப் பொல்லாப் புரிவிழ
முக்காலமும் திரியேகரை முதன்மையாய்த் தொழ - கெம்

4. ஜீவாதிபற் கெலா மகத்வமே சிறந்திடத்
தேவாதி தேவன் யேசுவென் றெலாமறிந்திட - கெம்

5. அகோரப்பேய் நடுங்கியோட யாமகிழ்ந்திட
மகாமகத்வன் யேசுவென் றெலாம் புகழ்ந்திட - கெம்

Tamil Hymns

1217. கேரூபீன் சேராபீன்கள் ஓய்வின்றி

கேரூபீன் சேராபீன்கள் ஓய்வின்றி
உம்மைப் போற்றுதே
பூலோக திருச்சபையெல்லாம்
ஓவின்றி உம்மை போற்றிட

நீர் பரிசுத்தர்,நீர் பரிசுத்தர்,நீர் பரிசுத்தர் எங்கள்
பரலோக ராஜாவே இந்த
வானம் பூமியுள்ள யாவும் உங்கள்
நாமத்தை உயர்த்தட்டுமே

1. பூமியனைத்திலும் உந்தன் மகிமை
நிறைந்து வழிகின்றதே
ஆலயத்திலும் உந்தன் மகிமை
அலையலையாய் அசைகின்றதே
துதிகன மகிமைக்குப் பாத்திரர்
எல்லா புகழும் உமக்குத்தானே

2. வானம் உமது சிங்காசனம்
பூமி உந்தன் பாதபடி நாங்கள் உந்தன்
தேவ ஆலயம் நீர் தங்கும் தூய ஸ்தலம்
சகலமும் படைத்த என் தேவா
நீர் நித்திய சிருஷ்டிகரே

3. பரலோகத்தில் உம்மையல்லால்
யாருண்டு தேவனே பூலோகத்தில்
உம்மைத்தவிர வேறொரு விருப்பமில்லை
என்றும் உம்மோடு வாழ என்னை
உமக்காய் தெரிந்தெடுத்தீர்

Tamil Hymns

1218. கேள் ஜென்மித்த ராயர்க்கே

1. கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்தியம் ஏறுதே
அவர் பாவ நாசகர் சமாதான காரணர்
மண்ணோர் யாரும் எழுந்து,
விண்ணோர்போல் கெம்பீரித்து
பெத்லெகேமில் கூடுங்கள்
ஜென்ம செய்தி கூறுங்கள்

கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்தியம் ஏறுதே.

2. வானோர் போற்றும் கிறிஸ்துவே,
லோகம் ஆளும் நாதரே
ஏற்ற காலம் தோன்றினீர்
கன்னியிடம் பிறந்தீர்
வாழ்க, நர தெய்வமே அருள் அவதாரமே!
நீர் இம்மானுவேல் அன்பாய்
பாரில் வந்தீர் மாந்தனாய்

3. வாழ்க சாந்த பிரபுவே
வாழ்க, நீதி சூரியனே - மீட்பராக
வந்தவர், ஒளி, ஜீவன் தந்தவர்,
மகிமையை வெறுத்து,
ஏழைக் கோலம் எடுத்து
சாவை வெல்லப் பிறந்தீர்
மறு ஜென்மம் அளித்தீர்

1219. கைதட்டி பாடி மகிழ்ந்திருப்போம்

கைதட்டி பாடி மகிழ்ந்திருப்போம்
கர்த்தர் சமூகத்தில் களிகூறுவோம்

களிகூறுவோம் களிகூறுவோம்
கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தம்
சொல்லி மகிழ்வோம்
கவலைகள் மறந்து களிகூறுவோம்

1. நினைப்பதற்கும் நான்ஜெபிப்பதற்கும்
அதிகமாய் செய்திடுவார்

2. பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன்
எனக்கே நீ சொந்தம் என்றார்

3. நன்மையும் கிருபையும் நம்மைத் தொடரும்
ஜீவனுள்ள நாட்களெல்லாம்

4. அறிவு புகட்டுவார் பாதை காட்டுவார்
ஆலோசனை அவர் தருவார்

5. ஆபத்துக் காலத்தில் நோக்கிக் கூப்பிட்டால்
அவர் நம்மை விடுவிப்பாரே

6. வாலாக்காமல் அவர் தலையாக்குவார்
கீழாக்காமல் மேலாக்குவார்

7. பெலப்படுத்தி நான் சகாயம் செய்வேன்
வலக்கரம் தாங்கும் என்றார்

8. உள்ளங்கையில் அவர் பொறித்துள்ளார்
அவர் உன்னை மறப்பதில்லை

Tamil Hymns

1220. கொண்டாடு கொண்டாடு

கொண்டாடு கொண்டாடு
மனமகிழ்ந்து கொண்டாடு
கர்த்தரின் ஜெயத்தை கொண்டாடு - 4

கைகள் கொட்டியே தாளம் தட்டியே
கர்த்தர் நாமம் பாடிடு - 4

பார்வோன் சேனையை கடலில் அழித்தவர்
கர்த்தர் ஜெயத்தை பாடிடு
சாத்தான் சேனையை சிலுவையில் ஜெயித்தவர்
மீட்பர் ஜெயத்தை பாடிடு
மாம்சத்தோடும் இரத்தத்தோடும் போராட்டம்
நமக்கு இல்லையே
வானமண்டல பொல்லாத ஆவிகள்
நம்மை ஜெயிப்பதில்லை

தேவன் தந்திட்ட சர்வ ஆயதம்
கையில் ஏந்திடுவோம்
பிசாசின் தந்திர வலையை அறுத்து
ஜெபத்தில் ஜெயித்திடுவோம்

Tamil Hymns

1221. கொண்டாடுவோம் நாம் கொண்டாடுவோம்

1. கொண்டாடுவோம் நாம் கொண்டாடுவோம்
கொண்டாடுவோம் இயேசுவை - 4
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா - 4

2. சந்தோஷமே இனி சந்தோஷமே
சந்தோஷம் என் வாழ்விNலே -4 -அல்லேலூயா

3. துக்கமில்லை இனி துயரமில்லை
ஆனந்தம் என் வாழ்விலே - 4 - அல்லேலூயா

4. வியாதியில்லை இனி வருத்தமில்லை
ஆரோக்கியம் என் வாழ்விலே-4 -அல்லேலூயா

5. மகிழ்ச்சியே ஓ மகிழ்ச்சியே
மகிழ்ச்சி என் வாழ்விலே - 4 - அல்லேலூயா

6. அழுகையில்லை இனி அலரில்லை
ஆறுதல் என் வாழ்விலே - 4 - அல்லேலூயா

7. கண்ணீரில்லை இனி கவலையில்லை
மகிழ்ச்சி என் வாழ்விலே - 4 - அல்லேலூயா

Tamil Hymns

1222. கொண்டாடுவோம் நாம் கொண்டாடுவோம்

கொண்டாடுவோம் நாம் கொண்டாடுவோம்
பண்டிகைகள் நாம் கொண்டாடுவோம்
எக்காளம் ஊதி ஏழு நாட்களும்
யேகோவா தேவனைக் கொண்டாடுவோம்

1. பலிகள் செலுத்தி பரிசுத்தர் சமூகத்தில்
பாடிக் கொண்டாடுவோம்
தீயவன் நடுவில் வருவதில்லை
கர்த்தரோ ஜெயம் எடுத்தார் -நம்
அகமகிழ்வோம் அகக்களிப்போம்
ஆனந்த சத்தமிடுவோம்

2. நல்லவர் கர்த்தர் கிருபையுள்ளவர்
என்று நாம் உயர்த்திடுவோம்
கர்த்தரின் மகிமை மேகம் போல
இறங்கட்டும் இந்நாளிலே

3. அசைக்க முடியா கூடாரமாவோம்
அமைதியின் இல்லமாவோம்
நோயாளி என்று சொல்வதில்லை
குற்றங்கள் நீங்கியதே

4. இஸ்ரவேல் ஜனத்துக்கு தேவன் தந்த
பிரமாணம் இதுதானே
எகிப்து தேசம் விட்டு புறப்படும்போது
கட்டளையாய் கொடுத்தார்

5. பழைய புளித்த மாவை அகற்றி
தூக்கி எறிந்திடுவோம்
துர்க்குணம் பொல்லாப்பு தவிர்த்திடுவோம்
அசுத்தம் அகற்றிடுவோம்

6. எல்லாம் முடிந்தது என்று இரட்சகர்
முழங்கினார் சிலுவையிலே
சாவுக்கு அதிபதி சாத்தானை
சாவாலே வென்றுவிட்டார்

Tamil Hymns

1223. கொந்தளிக்கும் லோக வாழ்வில்

1. கொந்தளிக்கும் லோக வாழ்வில்
கேட்போம் மீட்பர் சத்தத்தை
நித்தம் நித்தம் மா அன்போடு
‘நேசா! பின் செல்வாய் என்னை’

2. பூர்வ சீஷன் அந்திரேயா
கேட்டான் அந்த சத்தமே
வீடு, வேலை, இனம் யாவும்
விட்டான் அவர்க்காகவே.

3. மண் பொன் மாய லோக வாழ்வை
விட்டு நீங்க அழைப்பார்
பற்று பாசம் யாவும் தள்ளி
‘என்னை நேசிப்பாய்’ என்பார்

4. இன்பம், துன்பம், கஷ்டம் சோர்வு
வேலை, தொல்லை, ஓய்விலும்,
யாவின் மேலாய்த் தம்மைச் சார
நம்மை அழைப்பார் இன்றும்.

5. மீட்பரே, உம் சத்தம் கேட்டு,
கீழ்ப்படிய அருளும்;
முற்றும் உம்மில் அன்பு வைத்து
என்றும் சேவிக்கச் செய்யும்.

Tamil Hymns

1224. கொல்கொதா மலைமேல்

1. கொல்கொதா மலைமேல் தோன்றுதோர் சிலுவை
அல்லல் பழிப்பின் சின்னமதாம்
நீசப் பாவிகட்காய் நேசர் மாண்டாரதில்
நேசிப்பேன் அத்தொல் சிலுவையை

அந்தச் சிலுவையை நேசிப்பேன்
பெலன் ஓய்ந்து நான் சாகும் வரை
தொல் சிலுவையை நான் பற்றுவேன்
பின் அதால் க்ரீடத்தை அணிவேன்

2. தேவாட்டுக் குட்டிதம் மாட்சிமை வெறுத்து
உலகோர் பழித்த குருசை
கல்வாரி மலைக்கே சுமந்தார் எனக்காய்
கவர்ந்த தென்னுள்ளத் தையது

3. என் பாவம் மன்னிக்க என்னைச் சுத்தமாக்க
நேசர் மாண்ட சிலுவையதோ
தூய ரத்தம் தோய்ந்த அந்தச் சிலுவையின்
அழகெத்தனை மாட்சிமை பார்

4. குருசின் இழிவை மகிழ்வாய் சுமந்தே
மேன்மை பாராட்டுவேன் நிந்தையில்
பின்னால் மோட்சலோகில் நேசர் கூட்டிச் சென்று
பங்களிப்பார் தம் மகிமையில்

Tamil Hymns

1225. கொல்கொதா மலை மீதிலே சிலுவை

கொல்கொதா மலை மீதிலே
சிலுவை சுமந்தேகினார்
உன்னத பிதாவின் சித்தமாய்
உத்தமர் இரத்தம் சிந்தினார்

1. அந்தோ எருசலேமே
ஆண்டவர் பவனி வந்தார்
அந்த நாளை நீ மறந்தாய்
அன்பரோ கண்ணீர் சிந்தினார்

2. மேனியில் கசையடிகள்
எத்தனை வசை மொழிகள்
அத்தனையும் அவர் உனக்காய்
அன்புடன் சுமந்து சகித்தார்

3. உத்தம தேவ மைந்தனே
சுத்தமாய் ரத்தம் சிந்தியே
நித்திய வாழ்வு தனையே
நீசனாம் எனக்களித்தார்

4. செந்நீரோ கண்ணீராய் மாறி
தரணியில் பாய்ந்தததங்கே
உன்நிலை நினைத்தவரே
தன்நிலை மறந்து சகித்தார்

5. வஞ்சக உலகினிலே
வணங்கா கழுத்துடனே
வழிபோகும் ஆத்துமாவே
வந்திடு நீ இயேசுவண்டை

Tamil Hymns

1226. கொல்கதா மேட்டினிலே

கொல்கதா மேட்டினிலே சிந்தினீர் உம் தூய இரத்தம்
பாவத்தின் சன்மானமான என் சாபத்தை
நீராக ஏற்றதெல்லாம் கொடு பாதகன் எனக்காக

வா என் கல்வாரி நாயகா உன் கிருபை பொழிந்திடவா
வா கருணையின் திருக்குமரா உன் அன்பால் அணைத்திடவா
அந்த அழகு தேவனே உமது சாயலை என்னிலும் உடுத்திடவா

என் பாவத்தால் தேவனே உம்மைத் துறந்தேன்
என் மீறுதலால் வீணாக கெட்டலைந்தேன் - 2
மாயை அதின் மயக்கத்தினால் வழிதப்பி சீரழிந்தேன்

என் துரோகமே வெளியே சொல்லி ஒப்புக்கொண்டேன்
மனந்திருந்தியே இயேசுவோடிணைத்துக்கொண்டேன் - 2
தெய்வத்தின் மன்னிப்பினால் நெடுநல் வாழ்வு பெற்றேன்

Tamil Hymns

1227. கொல்கொதா மேட்டினிலே

கொல்கொதா மேட்டினிலே
கொடூர பாவி எந்தனுக்காய்
குற்றமில்லாத தேவ குமாரன்
குருதி வடிந்தே தொங்கினார்

1. பாவ சாபங்கள் சுமந்தாரே
பாவியை மீட்க பாடுபட்டார்
பாவமில்லாத தேவகுமாரன்
பாதகன் எனக்காய் தொங்கினார்

2. மடிந்திடும் மன்னுயிர்க்காய்
மகிமை யாவும் இழந்தோராய்
மாசில்லாத தேவகுமாரன்
மூன்றாணி மீதினில் தொங்கினார்

3. இரத்தத்தின் பெருவெள்ளம் ஓட
இரட்சிப்பின் நதி என்னில் பாய
ஆதரவில்லா தேவகுமாரன்
அகோரக் காட்சியாய் தொங்கினார்

4. கல்வாரி காட்சி இதோ
கண்டிடுவாயே கண்கலங்க
கடின மனமும் உருகிடுமே
கர்த்தரின் மாறாத அன்பி னிலே

5. உள்ளமே நீ திறவாயோ
உருகும் சத்தம் நீ கேளாயோ
உன் கரம் பற்றி உன்னை நடத்த
உன் நெஞ்சை ஆவலாய் தட்டுகிறார்

Tamil Hymns

1228. கொல்கதா கொலைமரம்

கொல்கதா கொலைமரம்
பார்க்கவே பரிதாபம்
துங்கன் இயேசு நாதனார்
தொங்கும் காட்சி பார் இதோ!

1. கை காலை ஆணி பீறிட்டே
குருதி புரண்டு ஓடிற்றே
முள்ளினால் ஓர் கிரீடமே
சூட்டினார் மா பாதகர்

2. கல்வாரி நாதர் இயேசுவை
பற்றி நீயும் வந்திட்டால்
தூசியான உன்னையும்
மேசியா கைத் தூக்குவார்

1229. கொல்கொதாவே கொலை மரமே

கொல்கொதாவே கொலை மரமே
கோர மரணம் பாராய் மனமே
கோர மனிதர் கொலை செய்தார்
கோர காட்சி பார் மனமே

1. கந்தை அணிந்தார் நிந்தை சுமந்தார்
கள்ளார் நடுவில் கொலை மரத்தில்
எந்தனை மீட்க இத்தனைப் பாடேன்
எந்தன் ஜீவ நாயகா

2. என்னை மீட்ட கொலை மரமே
அன்னையே நான் என்ன செய்வேன்
என்னை உமக்கே ஒப்புவித்தேன்
என்றென்றுமாய் நான் வாழ

3. வானம் பூமி ஒன்றாய் இணைந்த
வல்ல தேவன் உமக்கே சரணம்
வாடி வாடி கொலை மரத்தில்
நிற்கும் காட்சி பார் மனமே

1230. கோடாகோடி ஸ்தோத்திரம் ஏறெடுப்போம்

கோடாகோடி ஸ்தோத்திரம் ஏறெடுப்போம்
இராஜாதி ராஜன் தேவாதி தேவன்
இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை

1. பரிசுத்த வான்கள் சபை நடுவே
தரிசிக்கும் தேவ சமூகத்திலே
அல்லேலூயா அல்லேலூயா
ஆவியில் பாடி மகிழுவோம்
ஆண்டவர் இயேசுவை கொண்டாடுவோம்

2. கிருபாசனத்தண்டை நெருங்குவோம்
திருரத்தம் கரத்தில் ஏந்தி நிற்போம்
அல்லேலூயா அல்லேலூயா
கண்டேன் சகாயம் இரக்கமே
கர்த்தர் கிருபை என்றும் உள்ளதே

3. குருவி பறவை வானம் பாடியே
கவலையின்றிப் பறந்து பாடுதே
அல்லேலூயா அல்லேலூயா
அற்புதமான சிருஷ்டிகரே
எந்த விசுவாசம் கற்றறிந்தோம்

4. கவலைப்படாதீர்கள் என்றுரைத்தீர்
காட்டுப் புஷ்பத்தை உடுத்துவித்தீர்
அல்லேலூயா அல்லேலூயா
ஆடை ஆகாரம் தேவை எல்லாம்
அன்றன்று தந்தெம்மை ஆதரித்தீர்

5. கணக்கில்லா நன்மைகள் கர்த்தர் செய்தீர்
கருத்துடன் பாடி நன்றி கூறுவோம்
அல்லேலூயா அல்லேலூயா
தேவ குமாரன் வந்திடும் நாள்
தூயமுகம் கண்டு கெம்பீரிப்போம்

Tamil Hymns

1231. கோடானுகோடி சிறியோர்

1. கோடானுகோடி சிறியோர்
மேலோகில் நிற்கிறார்;
எப்பாவம் தோஷமின்றியும்
ஓயாமல் பாடுவார்
விண்ணில் ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
இயேசுநாதா உமக்கே.

2. பேரின்ப வீட்டில் சுகமும்
மெய் வாழ்வும் நிறைவாய்
உண்டாக, சிறு பாலரும்
சேர்ந்தார் எவ்விதமாய்?
விண்ணில் ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
இயேசுநாதா உமக்கே.

3. மா பாவம் போக்கச் சிந்தினார்
மீட்பர் தம் ரத்தத்தை;
அப்பாலர் மூழ்கி அடைந்தார்
சுத்தாங்க ஸ்திதியை;
விண்ணில் ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
இயேசுநாதா உமக்கே.

4. ஏரோதின் வாளால் மடிந்து,
தம் பாலன் மீட்பர்க்காய்
ஆருயிரை நீத்ததாலே
உம் பாதம் சேர்ந்தோர்க்காய்,
விண்ணில் ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
இயேசுநாதா உமக்கே.

5. பெத்தலை தூய பாலர்போல்
வியாதி ஆபத்தால்
சுத்த இளமையில் சென்றோர்
எண்ணற்ற பாலரால்,
விண்ணில் ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
இயேசுநாதா உமக்கே.

6. இப்பூமியில் நல்மீட்பரின்
பேரன்பை அறிந்தார்
விண் வீட்டில் அவர் அண்டையில்
நின்றாரவரிப்பார்
விண்ணில் ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
இயேசுநாதா உமக்கே.

Tamil Hymns

1232. கோணலும் மாறுபாடுமான உலகத்தில்

கோணலும் மாறுபாடுமான உலகத்தில்
குற்றமற்ற குழந்தைகளாய்
வாழ்ந்திடுவோம்

இராஜா வருகிறார் விரைவில் வருகிறார்
ஆயத்தம் ஆயத்தமாவோம்

1. முணுமுணுக்காமல் வாதாடாமல்
அனைத்தையும் செய்து
நாம் முன்னேறுவோம்

2. ஜீவ வார்த்தைகள் பிடித்துக் கொண்டு
சுடர்களாய் உலகிலே ஒளிவீசுவோம்

3. இயேசுவைப்போல் இருப்போம்
வருகையிலே இருப்பதுபோல
அவரைக் காண்போம்

4. அற்பமான நம் சரீரங்களை
மகிமையின் சரீரமாய் மாற்றிடுவார்

5. வெறுமனே வீணாய் ஓடவில்லை என்ற
பெருமையடைவோம்
அவர் வருகையிலே

6. பரலோகத்தில் இருந்து இரட்சகர்
இயேசு வருவதை
எதிர்பார்த்து காத்திருப்போம்

Tamil Hymns

1233. சகல ஜனங்களே கைகொட்டி தேவனை

சகல ஜனங்களே கைகொட்டி தேவனை
கெம்பீர சத்தத்தோடே
ஆர்ப்பரித்திடுவோமே ஆர்ப்பரித்திடுவோமே

1. உன்னதமானவராகிய கர்த்தர்
எந்நாளும் அதிசயமானவராமே
மண்ணெங்கும் மகத்துவமான ராஜாவாம்
மகிழ்ந்து பாடிடுவோம்

2. போற்றிப் போற்றிப் பாடிடுவோமே
தேற்றி நம்மை காத்திடும் தேவனை
ஊற்றிடுவாரே ஆவி தனையே
சாற்றிடுவோம் துதியை

3. தாழ்வில் நம்மை நினைத்த தேவனை
வாழ்நாள் முழுவதும் வாழ்த்தியே துதிப்போம்
துதிகளின் பாத்திரர் தூயாதி தூயோனை
துதித்து உயர்த்திடுவோம் - தேசத்தில்

1234. சங்கரிப்பேன் சங்கரிப்பேன் சாத்தானின்

சங்கரிப்பேன் சங்கரிப்பேன்
சாத்தானின் கிரியைகளை
கர்த்தர் நாமத்தினால்
கல்வாரி இரத்தத்தினால்

ஜெயமெடுப்பேன் தோற்கடிப்பேன்
திருவசனம் அறிக்கை செய்வேன்

1. வேதனையில் கூப்பிட்டேன்
பதில் தந்து விடுவித்தார்
என் பக்கம் இருக்கின்றார்
எதற்கும் பயமில்லையே

2. சுற்றி வரும் சோதனைகள்
முற்றிலும் எரிகின்றன
எரியும் முட்செடி போல்
சாம்பலாய்ப் போகின்றன

3. கர்த்தரின் வலது கரம்
பராக்கிரமம் செய்கின்றது
மிகவும் உயர்ந்துள்ளது
மிராக்கிள் நடக்கின்றது

4. சாகாமல் பிழைத்திருப்பேன்
சரித்திரம் படைத்திடுவேன்
கர்த்தர் செய்தவற்றை
காலமெல்லாம் அறிவிப்பேன்

1235. சகோதரர்கள் ஒருமித்துச் சஞ்சரிப்பது

1. சகோதரர்க ளொருமித்துச்
சஞ்சரிப்பதோ எத்தனை
மகா நலமும் இன்பமும்
வாய்த்த செயலாயிருக்குமே

2. ஆரோன் சிரசில் வார்த்த நல்
அபிஷேகத்தின் தைலந்தான்
ஊறித் தாடியில் அங்கியில்
ஒழுகுமானந்தம் போலவே
3. எர்மோன் மலையின் பேரிலும்
இசைந்த சீயோன் மலையிலும்
சேர்மானமாய்ப் பெய்கின்ற
திவலைப் பனியைப் போலவே

4. தேசம் மார்க்கம் இரண்டிற்கும்
சேனை எகோவா தருகிற
ஆசீர்வாதம் சீவனும்
அங்கே என்றுமுள்ளதே

Tamil Hymns

1236. சத்தம் கேட்டு சித்தம் செய்ய

சத்தம் கேட்டு சித்தம் செய்ய
அழைக்கிறாரே --- இயேசு
சத்தம் கேட்டு சித்தம் செய்ய
அழைக்கிறாரே
சத்தம் கேட்டு சித்தம் செய்ய
வருந்தி அழைக்கின்றாரே

காலத்தின் வேகத்தைப் பார்க்கும்போது - ஆ ஆ ஆ
கருத்தாய் கவனமாய் ஜாக்கிரதையாய்
வாழ்ந்து விடும்படி அழைக்கின்றாரே (2)

1. கற்பனைகள் யாவும் நன்றல்லவோ - ஆ- ஆ- ஆ- ஆ
கற்பனைகள் யாவும் நன்றல்லவோ
அதைக் கடைப்பிடித்தாக வேண்டுமே
கீழ்ப்படிந்தவர்கள் அவர்க்குச்
சொந்த சம்பத்து அல்லவோ
கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதம் பெருகும்
கீழ்ப்படியாவிட்டால் சாபம் பெருகும்

2. உலக மாமிசப் பிடியினின்றும் - ஆ- ஆ- ஆ- ஆ
உலக மாமிசப் பிடியினின்றும்
பிசாசின் தந்திர வலையினுன்றும்
விடுவித்துக் கொள்வோம் செயல்படுவோம்
சாத்தானை முறியடிப்போம்
உப்பைப்போல கரைந்திடுவோம்
மெழுகைப் போல உருகிடுவோம்

3. தேவை அதிகம் ஏராளம் - ஆ- ஆ- ஆ- ஆ
தேவை அதிகம் ஏராளம் ஏராளம் ஏராளமே
குஜராத், பீகார், இமயத்தில் ஏராளம் ஏராளமே
இராஜஸ்தான் காஷ்மீர் ஒரிஸாவில்
நீ செல்ல மறுத்தால் யார் செல்லுவார்

4. வெற்றியே தரும் ஆண்டவர்க்கு - ஆ- ஆ- ஆ- ஆ
வெற்றியே தரும் ஆண்டவர்க்கு
நம்மை காணிக்கையாக்கிடுவோம்
உடல் பொருள் யாவும் இயேசுவுக்கே
காணிக்கையாக்கிடுவோம்
தேசம் இயேசுவைக் கண்டுவிடும்
சபைகள் ஏராளம் பெருகிவிடும்

Tamil Hymns

1237. சத்தாய் நிஷ்களமாய்

சத்தாய் நிஷ்களமாயொரு
சாமிய மும்மில தாய்ச்
சித்தாயானந்தமாய்த்
திகழ்கின்ற திரித்துவமே
எத்தால் நாயடியேன்
கடைத்தேறுவனென் பாவந்தீர்ந்து
அத்தாவுன்னை யல்லா
லெனக்கார் துணை யாருறவே?

1. எம்மாவிக்குருகி
உயிரீந்து புரந்த தற்கோர்
கைமாறுண்டு கொலோ?
கடைகாறும் கையடையாய்
சும்மா ரஷணை செய்,
சொல் சுதந்தரம் யாதுமிலேன்
அம்மானுன்னையல்லா
லெனக்கார் துணை, யாருறவே?

2. திரைசேர் வெம்பவமாங்
கடல் மூழ்கிய தீயரெமைக்
கரை சேர்த்துய்க்க வென்றே
புணையாயினை கண்ணிலியான்
பரசேன் பற்றுகிலேனெனைப்
பற்றிய பற்றுவிடாய்
அரசேயுன்னை யல்லாலெனக்கார்
துணை யாருறவே

3. தாயே, தந்தை தமர்
குரு சம்பத்து நட்பெவையும்
நீயே எம் பெருமான்
கதிவேறிலை நிண்ணயங்காண்
‘ஏயே’ வென்றி கழுமுல
கோடெனக் கென்னுரிமை?
ஆயேவுன்னை அல்லாலெனக் கார்
துணை யாருறவே?

4. மையார் கண்ணிருண்டு
செவி வாயடைத்துக் குழறி
ஐயால் மூச்சொடுங்கி உயிராக்கை
விட்டே கிடும்நாள்

Tamil Hymns

நையேல் கை வெகிவேனுனை
நாணுண் பஞ்சலென
ஐயா உன்னையல்லா லெனக்கார்
துணை யாருறவே?

Tamil Hymns

1238. சத்திய தேவனின் பூரண வாழ்வை

சத்திய தேவனின் பூரண வாழ்வை
அனுபவமாய் நான் பெறவேண்டும் -2

1. தேவனே என்னை போதித்து நடத்தும்
தோல்வி வராமல் தாங்கியே நிறுத்தும்
உத்தம பக்தர்கள் சூழ்ந்து நிற்க
இயேசுவை நோக்கித் தொடர உதவும்

2. துன்பங்கள் தொடர்ந்து வந்திட்ட போதும்
துணிந்து நின்ற யோபுவைப்போல
அனைத்து வளமும் அகன்று போனாலும்
ஆபகூக் போல மகிழ்வேன் என்றும் -2

3. கொண்டது அனைத்தையும்
குப்பையாய்க் கண்ட
இலட்சிய வீரர் பவுலினைப் போல
இறுதிநாள் வரை உண்மையாயிருந்து
அழியா மகுடம் முடிவாய்ப் பெறுவேன்

Tamil Hymns

1239. சத்திய வேதத்தைத் தினம் தியானி

சத்திய வேதத்தைத் தினம் தியானி
சகல பேர்க்கும் அதபிமானி
உத்தமஜீவிய வழிகாட்டும்
உயர்வானுலகில் உனைக்கூட்டும்

1. வாலிபர்தமக்கூண் அதுவாகும்
வயோதியர்க்கும் அதுணவாகும்
பாலகர்க்கினிய பாலும் அதாம்
படிமீ தாத்மபசி தணிக்கும்

2. சத்துருப் பேயுடன் அமர்புரியும்
தருணம் அதுநல் ஆயுதமாம்
புத்திரர் மித்திரரோடு மகிழும்
பொழுதும் அதுநல் உறவாகும்

3. புலைமேவிய மானிட ரிதயம்
புனிதம் பெறுதற்கதுமருந்தாம்
நிலையா நரர்வாணாள் நிலைக்க
நேயகாய கற்பம் அதாம்

4. கதியின் வழிகாணாதவர்கள்
கண்ணுக்கரிய கலிக்கம் அது
புதிய எருசாலேம்பதிக்குப் போகும்
பயணத்துணையும் அது

1240. சத்திய வேதம் பக்தரின் கீதம்

சத்திய வேதம் பக்தரின் கீதம்
சுத்தர்கள் போகும் பாதையின் தீபம்
உத்தம மார்க்கம் காட்டும்

எத்தனை துன்பம் துயரம் வந்தும்
பக்தனைத் தேற்றிடும் ஒளஷதம்

1. நித்தம் விரும்பும் கர்த்தர் வசனம்
சுத்தம் பசும்பொன் தெளிந்திடும் தேன்
இதயம் மகிழும் கண்கள் தெளியும்
இருண்ட ஆத்மா உயிரடையும்

2. பேதைகளிடம் ஞானம் அருளும்
வேத புத்தகம் மேன்மை தரும்
இரவும் பகலும் இதனின் தியானம்
இனிமை தங்கும் தனிமையிலும்

3. வேதப் பிரியர் தேவ புதல்வர்
சேதமடையா நடந்திடுவார்
இலைகள் உதிரா மரங்கள் போல
இவர்கள் நல்ல கனி தருவார்

4. உள்ளம் உதிக்கும் உறுதி அளிக்கும்
கள்ளங் கபடெல்லாம் அகற்றும்
கடிந்துக் கொள்ளும் கறைகள் போக்கும்
கனமடைய வழி நடத்தும்

5. கர்த்தர் வசனம் வல்ல சம்மட்டி
கன் மலையையும் நொறுக்கிடுமே
இதய நினைவை வகையாய் அறுக்கும்
இரு புறமும் கருக்குள்ளதே

6. வானம் அகலும் பூமி அழியும்
வேத வசனம் நிலைத்திருக்கும்
பரமன் வேதம் எனது செல்வம்
பரவசம் நிதம் அருளும்

Tamil Hymns

1241. சந்தோஷ கீதம் என்னில் பொங்குதே

1. சந்தோஷ கீதம் என்னில் பொங்குதே
சர்வ வல்ல ஏசு என்னை நேசித்தார்
பெற்றதாம் நன்மைகள் ஒவ்வொன்றாய் எண்ணியே
பேரன்பு பொங்க என்றும் பாடுவேன்

ஆர்ப்பரித்து நான் ஆனந்தங் கொள்வேன்
ஆண்டவர் சமுகம் என்னைத் தேற்றுமெ
துன்பங்கள் யாவுமே துரிதமாய் நீங்குதே
இன்ப இயேசு நாமத்தில்

2. பேரின்ப கீதம் என்னில் பொங்குதே
போன நாட்கள் என்னைக் கர்த்தர் தாங்கினார்
சோதனை சூழ்ந்து என் நம்பிக்கை குன்றினும்
சோர்ந்தழியாமல் என்றும் காத்ததால்

3. இரட்சிப்பின் கீதம் என்னில் பொங்குதே
இரட்சகர் என் பாவம் முற்றும் மன்னித்தார்
மானிடர் மாறினும் அன்பை விட்டோடினும்
மாதேவ அன்பில் என்னைக் காத்ததால்

4. ஆனந்த கீதம் என்னில் பொங்குதே
ஆரவாரத்தோடே இயேசு தோன்றுவார்
ஆவலாய் விழித்தே ராவிலும் ஜெபித்தே
ஆயத்தமாய் நான் காத்து நிற்பதால்

5. சீயோனின் கீதம் என்னில் பொங்குதே
சீக்கிரம் வந்தென்னை
சேர்த்துக் கொள்வார் - பொன் முடி
வேந்தனாம் எந்தை என் இயேசுவின்
பொன் மாளிகை நான் கிட்டிச்சேர்வதால்

Tamil Hymns

1242. சந்தோஷமாயிருங்க எப்பொழுதும்

சந்தோஷமாயிருங்க எப்பொழுதும் சந்தோஷமாயிருங்க
உயர்வானாலும் தாழ்வானாலும்
சர்வ வல்ல தேவன் நம்மோடிருக்கிறார் (2) - சந்தோஷ

1.நெருக்கத்தின் நேரத்திலும் கண்ணீரின் பாதையிலும்
நம்மைக் காண்கின்ற தேவன்
நம்மோடிருப்பதால் சந்தோஷமாயிருங்க

2.விசுவாச ஓட்டத்திலும் ஊழிய பாதையிலும்
நம்மை வழிநடத்தும் தேவன்
நம்மோடிருப்பதால் சந்தோஷமாயிருங்க

3.துன்பங்கள் வந்தாலும் நஷ்டங்கள் வந்தாலும்
நமக்கு ஜெயங்கொடுக்கும் தேவன்
நம்மோடிருப்பதால் சந்தோஷமாயிருங்க

4.என்னதான் நேர்ந்தாலும் சோர்ந்து போகாதீங்க
நம்மை அழைத்த தேவன்
கைவிட மாட்டார் சந்தோஷமாயிருங்க

Tamil Hymns

1243. சந்தோஷம் என்னுள் சந்தோஷம்

சந்தோஷம் என்னுள் சந்தோஷம்
என் இயேசு வந்ததால் சந்தோஷம் -2
அல்லேலூயா (3) ஆமென் (2)

1. என் பாவம் போக்கினதால் சந்தோஷம்
என் சாபம் நீக்கினதால் சந்தோஷம்

துதித்துப் பாடிடு கைதட்டி ஆடிடு
எல்லோரும் கொண்டாடுவோம்

2. என் கண்ணீரை மாற்றினதால் சந்தோஷம்
எனக்கு களிப்பை தந்ததால் சந்தோஷம்

3. என்னையும் அழைத்தார் சந்தோஷம்
புதிய வாழ்வை கொடுத்தார் சந்தோஷம்

4. பரலோகம் செல்வேன் சந்தோஷம்
என் பரனோடு வாழ்வேன் சந்தோஷம்

Tamil Hymns

1244. சந்தோஷம் சந்தோஷம் சந்தோஷமே

சந்தோஷம் சந்தோஷம் சந்தோஷமே
பரலோக சந்தோஷமே
சந்தோஷம் சந்தோஷம் சந்தோஷமே
அவர் சமூகத்தில் சந்தோஷமே
இயேசுவின் சமூகத்தில் சந்தோஷமே

1. கர்த்தரின் யுத்தத்தில் நாம் நிற்கும்போது
கலங்கிடத் தேவையில்லை
கைகளை உயர்த்தி ஆராதித்தால்
பெரும் வெற்றியைத் தந்திடுவார்

2. போராட்டம் பாடுகள் நம் வாழ்வில் வந்தாலும்
சோர்ந்திடவே வேண்டாம்
உலகத்தை ஜெயித்தவர் நம்முடன் இருக்கையில்
ஜெயம் ஜெயம் ஜெயம் நமக்கே

1245. சந்தோஷம் பொங்குதே

சந்தோஷம் பொங்குதே (2)
சந்தோஷம் என்னில் பொங்குதே
அல்லேலூயா இயேசு என்னை இரட்சித்தார்
முற்றும் என்னை மாற்றினார்
சந்தோஷம் பொங்கிப் பொங்குதே

1. வழி தப்பி நான் திரிந்தேன்
பாவப் பழியதைச் சுமந்தலைந்தேன்
அவர் அன்புக் குரலே அழைத்தது என்னையே
அந்த இன்ப நாளில் எந்தன் பாவம் நீங்கிற்றே

2. சத்துரு சோதித்திட தேவ உத்திரவுடன்
வருவான் - ஆனால் இயேசு கைவிடார்
தானாய் வந்து இரட்சிப்பார் - இந்த
நல்ல ஏசு எந்தன் சொந்தமானாரே சந்தோஷம்

3. பாவத்தில் ஜீவிப்பவர் பாதாளத்தில்
அழிந்திடுவார் - நானோ பரலோகத்தில்
நாளும் பாடல் பாடிடுவேன் - என்னில்
வாழும் இயேசுவோடு என்றும் வாழுவேன்

Tamil Hymns

1246. சாந்த இயேசு ஸ்வாமீ

**1.சாந்த இயேசு ஸ்வாமீ,
வந்திந்நேரமும்,
எங்கள் நெஞ்சை உந்தன்
ஈவால் நிரப்பும்.**

**2.வானம், பூமி, ஆழி
உந்தன் மாட்சிமை
ராஜரீகத்தையும்
கொள்ள ஏலாதே.**

**3.ஆனால், பாலர் போன்ற
ஏழை நெஞ்சத்தார்
மாட்சி பெற்ற உம்மை
ஏற்கப் பெறுவார்.**

**4.விண்ணின் ஆசீர்வாதம்
மண்ணில் தாசர்க்கே
ஈயும் உம்மை நாங்கள்
போற்றல் எவ்வாறே?**

**5.அன்பு, தெய்வ பயம்
நல் வரங்களும்,
சாமட்டும் நிலைக்க
ஈயும் அருளும்.**

1247. சபை எக்காலும் நிற்குமே

1. சபை எக்காலும் நிற்குமே
கன்மலை கிறிஸ்து மேல் நின்றும்,
ஆலயம் வீழ்ந்து போயுமே
அர்ச்சனை நிலைக்கும் என்றும்
இளைஞர் மூப்பர் ஓய்ந்துமே
துன்புற்ற மாந்தர் ஏங்கியே
அன்புடன் அர்ச்சிப்பார் ஈண்டே.

2. கைவேலையான கோவிலில்
தங்கிடார் உன்னத ராஜர்
சபையாம் ஆலயத்தினில்
தங்குவார் உன்னத நாதர்;
வானமும் கொள்ள ஸ்வாமியே
பூமியில் வாழ்ந்தார் நம்மோடே
மானிடர் உள்ளமே வீடாம்.

3. சபையே ஸ்வாமி ஆலயம்
ஜீவனுள் கற்களாம் நாமும்;
மெய் ஞானஸ்நான பாக்கியம்
பெற்றோமே ரட்சிப்பாம் ஈவும்
மா சொற்பப் பேரும் பாதத்தில்
பணிந்து வேண்டல் செய்கையில்
அருளும் தயவும் ஈவார்.

4. தாழ்வான ஸ்தானம் யாதிலும்
ராஜாதி ராஜரைக் காண்போம்
அவர் மா மேலாம் ஈவையும்
ஏற்றியே போற்றியே தாழ்வோம்;
அருள்வார் வாக்கு தயவாம்
அதே நம் ஜீவன் ஆவியும்;
அவர் மா சத்தியம் கேட்போம்.

5. பார் எங்குமே எம்மாந்தரும்
ஆலயம் பக்தியாய் நாட;
உம்மில் விஸ்வாசம் ஊன்றியும்
உம் திரு வார்த்தையைக் கேட்க
உம் அடியார் உம் சீஷரே;
நீரே எம் நாதர் யாவுமே
அருள்வீர் உந்தனின் சாந்தி.

Tamil Hymns

1248. சபையின் அஸ்திபாரம்

1. சபையின் அஸ்திபாரம்
நம் மீட்பர் கிறிஸ்துவே -சபையின்
ஜன்மாதாரம் அவரின் வார்த்தையே
தம் மணவாட்டியாக வந்ததைத் தேடினார்
தமக்குச் சொந்தமாக மரித்ததைக் கொண்டார்

2. எத்தேசத்தார் சேர்ந்தாலும் சபை ஒன்றே ஒன்றாம்
ஒரே விஸ்வாசத்தாலும் ஒரே
ரட்சிப்புண்டாம் - ஒரே தெய்வீக நாமம்
சபையை இணைக்கும்
ஓர் திவ்ய ஞானாகாரம் பக்தரைப் போஷிக்கும்.

3. புறத்தியார் விரோதம் பயத்தை உறுத்தும்
உள்ளானவரின் துரோகம் கிலேசப் படுத்தும்
பக்தர் ஓயாத சத்தம் எம்மட்டும் என்பதாம்
ராவில் நிலைத்த துக்கம்காலையில் களிப்பாம்

4. மேலான வான காட்சி கண்டாசீர்வாதத்தை
பெற்று போர் ஓய்ந்து வெற்றி சிறந்து, மாட்சிமை
அடையும் பரியந்தம் இன்னா உழைப்பிலும்,
நீங்காத சமாதானம் மெய்ச் சபை வாஞ்சிக்கும்

5. என்றாலும் கர்த்தாவோடு சபைக்கு
ஐக்கியமும் - இளைப்பாறுவோரோடு
இன்ப இணக்கமும் இப்பாக்ய
தூயோரோடுகர்த்தாவே நாங்களும் - விண்
லோகத்தில் உம்மோடு தங்கக் கடாட்சியும்

Tamil Hymns

1249. சபையே இன்று வானத்தை

1. சபையே இன்று வானத்தை
திறந்து தமது
சுதனைத் தந்த கர்த்தரை
துதித்துக் கொண்டிரு.

2. பிதாவுக்கொத்த இவரே
குழந்தை ஆயினார்
திக்கற்று முன்னணையிலே
ஏழையாய்க் கிடந்தார்.

3. தெய்வீக ஸ்பாவம் நம்மிலே
உண்டாக ஆண்டவர்
நரரின் ஸ்பாவமாய் இங்கே
வந்து பிறந்தனர்.

4. சிறியோராக ஆண்டவர்
பலத்தை மாற்றினார்;
பண்செய்வன் ரூபை சிஷ்டிகர்
தாமே எடுக்கிறார்.

5. அவர் புவியில் பரம
இராஜ்ஜியத்தையே
உண்டாக்க வந்தோராகிய
தாவீதின் மைந்தனே.

6. தாழ்ந்தார் அவர் உயர்ந்தோம் நாம்
இதென்ன அற்புதம்?
இதுன்னத சிநேகம் ஆம்
அன்பதின் பூரணம்.

7. திரும்பப் பரதீசுக்கு
வழி திறந்துபோம்
கேரூபின் காவல் நீங்கிற்று
மகிழ்ந்து பாடுவோம்.

1250. சபையோரே எல்லோரும் கர்த்தரைத்

சபையோரே எல்லோரும் கர்த்தரைத் துதியுங்கள்
ஜனங்களே எல்லாரும் அவரைப் போற்றுங்கள்
அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது
அவரது இரக்கம் என்றும் உள்ளது

1. நம்தேவன் உயர்ந்த செல்வந்தர் அன்றோ
தேவையான அனைத்தையும் மிகுதியாய் தருவார்
அநேக ஜனங்களுக்கு கொடுக்கச் செய்திடுவார்
கடன் வாங்காமல் வாழச்செய்திடுவார்

2. கர்த்தர் குரல்கேட்கும் ஆடுகள் நாம்
முடிவில்லா வாழ்வு நமக்குத் தந்திடுவார்
ஒருவனும் பறித்துக்கொள்ள முடியாதென்றார்
ஒருநாளும் அழிந்து போகவிடமாட்டார்

3. கர்த்தரோ நமக்கெல்லாம் உறைவிடம் ஆனார்
இன்னல்கள் நடுவிலே மறைவிடம் ஆனார்
விடுதலைகீதங்கள் பாடவைக்கின்றார்
வெற்றிக் கொடி அசைத்து ஆடவைக்கின்றார்

4. சொந்த மகனெனும் பார்க்காமலே
நாம் வாழ இயேசுவை நமக்குத் தந்தாரே
அவரோடு கூடமற்ற எல்லா நன்மைகளும்
அருள்வார் என்பதும் நிச்சயம்தானே

Tamil Hymns

1251. சப்தமாய் பாடி சத்துருவை

சப்தமாய் பாடி சத்துருவை சங்கிலியால் கட்டுவோம்
நித்தம் நித்தம் கர்த்தர் நாமம் பாடி உயர்த்திடுவோம்

இராஜா இயேசு ஜீவிக்கின்றார்
இரத்தம் சிந்தி ஜெயம் தந்தார்

1. புதுப்பாடல் பாடி மகிழ்வோம் புனிதர்கள் சபையிலே
துதிபலி எழும்பட்டும் ஜெயக்கொடி பறக்கட்டும்
எழுப்புதல் தேசத்தில் பொழுதுபோல் உதித்தது

2. உண்டாக்கினாரே நம்மை உள்ளம் மகிழட்டும்
ஆளுநர் அவர்தானே இதயம் துள்ளட்டும் - நம்

3. தமது ஜனத்தின்மேலே பிரியம் வைக்கின்றார்
வெற்றி தருகிறார் மேன்மைப்படுத்துவார் - இன்று

4. கர்த்தரை உயர்த்தும் பாடல் வாயில் இருக்கட்டும்
வசனம் என்ற போர் வாள் கையிலே இருக்கட்டும்

Tamil Hymns

1252. சமயமிது நல்ல சமயம் உமதாவி

சமயமிது நல்ல சமயம், உமதாவி
தரவேனுமே

அமையுஞ் சத்துவங்குன்றி,
அருள் ஞானத் துயிரின்றி ,
அமர்ந்து சேர்ந்தெழும்பா துறங்கிடும்
அடியன்மீ தணல்மூட்டி யுயிர் தர ,-

1. யேசுகிறிஸ்துவின்மேல் நேசம் பத்தியும்விசு
வாசம் நம்பிக்கை சமாதானம் மங்கிடலாச்சே ,
வீசுங்கிரணத்தாவி நேசச்சுவாலை மூட்டி
மிஞ்சுஞ்சீவ நற்கனிகளீங்குமைக்
கெஞ்சுதாசனின் மனதிலோங்கிட -சம

2. ஜெபமோ தவமோ தேவதியானமோ வாஞ்சையோ
செய்யுஞ்சுயமுயற்சி தொய்யுங் காரணமேனோ?
தவனம் ஞானாமுதின் மேல் சற்றுமில்லாததேனோ?
தந்தையேயுயிர் தந்தெனைத் தாங்கிட
உந்தையையினுற் சாகநல்லாவியை, - சம

3. ஓதும் பிரசங்கமும் ஓசைக்கைத்தாளம்போல
ஒலிக்குதல்லாமல் பலன் பலிக்குதில்லை , தாக்குள்
ஏதுமற்றிடும் பள்ளத்தெலும்பு உயிர்த்தெழும்ப
எசேக்கியேலுரை வாக்கிலு யிரருள்
போக்கியே செய்த ஆவியே இங்ஙனம், - சம

4. பெந்தெகோஸ்தினில் கூடிவந்த சீடரையன்று
உந்தனாவியினைப் பொழிந்தபிஷேகஞ் செய்த
விந்தைபோலெமதிடம் வந்தெம் வேலைகள் முற்றும்
வேதனே உமதருளி னுயிர்பெறப்
பூதலர் உமைப் போற்ற நின் சேயராய்ப் , சம

Tamil Hymns

1253. சமாதானம் ஓதும் ஏசுகிறிஸ்து

சமாதானம் ஓதும் ஏசுகிறிஸ்து
இவர் தாம் இவர் தாம் இவர் தாம்

1. நாம தாதி பிதாவின் திருப் பாலர் இவர்
அனுகூலர் இவர் மனுவேலர் இவர்

2. நேய கிருபையின் ஒரு சேயர் இவர்
பரம ராயர் இவர், நாம தாயர் இவர்

3. ஆதி நரர் செய்த தீதறவே
அருளானந்தமாய், அடியார் சொந்தமாய்

4. ஆரணம் பாடி விண்ணோர் ஆடவே
அறிஞோர் தேடவே ஆயரும் கூடவே

5. மெய்யாகவே மே சியாவுமே,
நம்மை நாடினாரே கிருபை கூறினாரே

6. அருளானந்த மோட்ச வழி காட்டினாரே
நிலை நாட்டினாரே முடி சூட்டினாரே

1254. சமாதானம் வேண்டுமா ஜெபம்

சமாதானம் வேண்டுமா ஜெபம் செய்வோம்
சங்கடங்கள் நீங்கவே
ஜெபம் செய்திடுவோம்
நிலை மாற வேண்டுமா ஜெபம் செய்வோம்
மனம் மாற வேண்டுமா
ஜெபம் செய்திடுவோம்

1. முழங்காலில் நாம் நின்றுவிட்டால்
முடியாது என்று ஒன்றுமில்லை
வாக்குதத்தம் நாம் பற்றிக் கொண்டால்
வாழ்வில் இனி ஒரு தோல்வியில்லை

வேதனைகள் நீங்கவே ஜெபம் செய்வோம்
வெற்றி வாழ்க்கை வாழவே
ஜெபம் செய்திடுவோம்

2. எலியாவும் ஒரு மனிதன் தான்
ஜெபித்திட மழை மறைந்ததே
மீண்டும் அவன் வந்து ஜெபிக்கையில்
நின்ற மழை அன்று பொழிந்ததே

விசுவாசத்தோடு நாம் ஜெபம் செய்வோம்
கருத்தாக யாவரும் ஜெபம் செய்திடுவோம்

3. வானவரே விண்ணப்பம் செய்யும் போது
மானிடர் நாம் ஜெபிக்க தயங்கலாகுமோ
கற்றுத் தந்தார் நாமும் ஜெபித்திட - அவர்
சித்தப்படி என்றும் நடந்திட

மனத்தாழ்மையோடு நாம் ஜெபம் செய்வோம்
உயிருள்ள நாள் வரை ஜெபம் செய்திடுவோம்

Tamil Hymns

1255. சமாதானம் நல்கும் நாமம் இயேசு நாமமே

சமாதானம் நல்கும் நாமம் இயேசு நாமமே
மனச்சாந்தி தரும் இனிய நாமம் இயேசு நாமமே

இயேசு நாமமே, இயேசு நாமமே
கிறிஸ்தேசு நாமமே (2)

1. அன்னை தந்தை சொந்தம் யாவும் இயேசு நாமமே
தன்னை தந்த இன்ப நாமம் இயேசு நாமமே

2. பாவமற கழுவும் நாமம் இயேசு நாமமே
உயர் பக்திதனை வளர்க்கும் நாமம் இயேசு நாமமே

3. பாவ இருள் போக்கும் நாமம் இயேசு நாமமே
ஜீவ ஒளி வீசும் நாமம் இயேசு நாமமே

4. பொன் வெள்ளி புகழ் பொருளும் இயேசு நாமமே
என் உள்ளில் வாழும் ஏசு நாமம் இயேசு நாமமே

Tamil Hymns

1256. சரணம் ஐயா தேவனே சர்வ வல்ல

1. சரணம் ஐயா தேவனே
சர்வ வல்ல தேவனே (2)
பாவம் தீர ஜீவன் விட்ட
ஜீவனுள்ள தேவனே (2)

இயேசுவே ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் (3)

2. பரிசுத்தத்தை சிநேகிக்கும்
பரிசுத்தராம் தேவனே (2)
இதய சுத்தம் என்னில் காண
என் உள்ளத்தில் இன்று நீர் (2)

3. நித்தம் எம்மை நடத்துவீர்
நம்பினோரை கைவிடீர் (2)
மக்கள் எல்லாம் உம்படைப்பு
ஒருவரையும் புறக்கணீர் (2)

4. நொறுங்கிப் போன வாழ்வையும்
புதியதாக மாற்றுவீர் (2)
நொந்துபோன குடும்பங்களையும்
மீண்டும் வாழச் செய்குவீர் (2)

5. ஜெயம் கொடுக்கும் தேவனே
கரம் கொடுத்து நடத்துவீர்
ஜெயத்தின் மேலே ஜெயத்தைக் காண
என்னுடனே இன்று நீர்

1257. சரணம் சரணம் அனந்தா

சரணம் சரணம் அனந்தா சச்சிதானந்தா
தாவீதின் மைந்தா ஓசன்னா! சரணபதந்தா
1.பித்தன் என்று வெள்ளை அரைச் சட்டை அணிந்து
பேதக ஏரோதே பரி காசம்பண்ணினான் - சரணம்

2.கற்றூணில் சேர்த்திருகக் கட்டி வலுவாய்க்
காவலன் தன் சேர்வை எல்லாம் கூடி அளித்தார் சரணம்

3.முள்ளின் முடி செய்தழுத்தி வள்ளல் எனவே
மூர்க்க முடனே தடிகொண் டார்க்க அடித்தார் - சரணம்

4.கையினில் செங்கோலதென்று மூங்கில் ஒன்றிட்டு
காவலன் நீ யூதருக்கென் றோவியஞ் சொன்னார் - சரணம்

5.துப்பினர் முகத்தினில் அதிக்கிரமமாய்
துன்னிய கைக்கோலை வாங்கி சென்னியில் போட்டார் - சரணம்

6.முழங்காலிலே இருந்து தெண்டன் பண்ணியே
முன்னவனைத் தான் இறைஞ்சிக் கன்னத்தறைந்தார் - சரணம்

Tamil Hymns

1258. சரணம் சரணம் சரணம் சரணம்

1. சரணம் சரணம் சரணம் சரணம் சச்சிதானந்தா
சரணம் சரணம் சரணம் சரணம் நித்தியானந்தா
சத்திய வழியில் ஜீவனுமான சற்குரு ஆனந்தா
நித்திய வாழ்வினைத் தந்திட வந்த நிர்மல ஆனந்தா

அல்லேலூயா ஓசன்னா (4)
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா ஓசன்னா ஓசன்னா (8)

2. தருணம் தருணம் தருணம் தற்பரனே தருணம்
தந்தையின் அன்பை தந்திட்ட எங்கள் சற்குருவே சரணம்
விந்தை மனிதரை ஒளிதனில் நடத்திட உதவிடுவாய் சரணம்
தருணம் இதுவே மீட்பினை பெற்றிட செய்திட்டோம்
சரணம் - அல்லேலூயா

3. சரணம் சரணம் சரணம் சரணம் சச்சிதானந்தா
சரணம் சரணம் சரணம் சரணம் நித்திய ஆனந்தா
முத்தி முதலாய் இருந்த எங்கள் முன்னவனே சரணம்
சித்தி பெற்றிட சித்தம் செய்திட பணிந்திட்டோம்
சரணம் - அல்லேலூயா

Tamil Hymns

1259. சரணம் நம்பினேன் இயேசு நாதா

சரணம் நம்பினேன் இயேசு நாதா
இது தருணம் தருணம்
உந்தன் கருணை துணை தான்

1. நின் அருளால் இங்கே வந்து - என்றும்
நின் அடையுங் கலமாக என்னையே தந்து
உன்னால் வினையை துறந்து - ஆதி
மூலமே உனக்கோலம் இரட்சியும் என்று

2. அலைபாய தொடர்ந்து போராடி - உமது
தடி கருணை வர செம்பாத தேடி
தொலையாத வாழ்வை மன்றாடி - அன்பின்
ஸ்தொத்தர சங்கீர்த்தன கீதங்கள் பாடி

3. இனிய கருணை பொழி வேதா - எனை
இருக்கரத்தால் அணை என் கிறிஸ்து நாதா
பழி வினை நீக்கிய நீதா - நாசரை
கர்த்தாதி கர்த்தா உன் கருணையை தா தா

Tamil Hymns

1260. சருவ வலிமை கிருபைகள் மிகுந்த

1.சருவ வலிமை கிருபைகள் மிகுந்த சருவேசா
தரிசனம் பெறஉன் சன்னிதி புகுந்தேன் திருவாசா

2.தூயசிந்தை உண்மையில் உனையே தொழுதேத்த
தூய ஆவி கொண்டெனை நிரப்பும் ஜகதீசா

3.இருதயத்தைச் சிதற விடாமல் ஒரு நேராய்
இசைத்தமைத்துப் பரவசமாக்கும் நசரேயா

4.அருளின் வாக்கைக் கருத்துடன் கேட்டு அகத்தேற்று
அறுபது நூறுமுப்பதாய்ப் பெருக அருளீசா

Tamil Hymns

1261. சருவ லோகாதிபா நமஸ்காரம்

1. சருவ லோகாதிபா, நமஸ்காரம்!
சருவ சிருஷ்டிகனே, நமஸ்காரம்!
தரை, கடல், உயிர், வான், சகலமும் படைத்த
தயாபர பிதாவே, நமஸ்காரம்.

2. திரு அவதாரா, நமஸ்காரம்!
ஜெகத் திரட்சகனே, நமஸ்காரம்!
தரணியின் மனுடர் உயிர் அடைந்தோங்கத்
தருவினில் மாண்டோய், நமஸ்காரம்.

3. பரிசுத்த ஆவி, நமஸ்காரம்!
பரம சற்குருவே, நமஸ்காரம்!
அரூபியாய் அடியார் அகத்தினில் வசிக்கும்
அரியசித்தே சதா நமஸ்காரம்.

4. முத்தொழிலோனே, நமஸ்காரம்!
மூன்றில் ஒன்றோனே நமஸ்காரம்!
கர்த்தாதி கர்த்தா, கருணை சொருபா,
நித்ய திரியேகா, நமஸ்காரம்.

1262. சர்வ அங்தகனபலி

சர்வ அங்க தகனபலி
எங்கள் சர்வ வல்ல தேவனுக்கு
உதடுகளின் ஸ்தோத்திர பலி
எங்கள் உன்னத நல் ராஜனுக்கு
ஸ்தோத்திர பலி - 3
நான் செலுத்தும் பலி - 2

1. அசைவாட்டும் ஜீவபலி - எங்கள்
அசைவாடும் தேவனுக்கு
பிசைந்த மாவின் ஓர் மெல்லிய பலி
எங்கள் மெல்லிய நல் ராஜனுக்கு

2. சமாதான ஜீவபலி - எங்கள்
சமாதான தேவனுக்கே
இடித்து பிழிந்த திராட்சை ரசத்தின் பலி
என்னை நடத்திடும் தேவனுக்கு

3. என் கைகளின் காணிக்கை பலி
என்னை வாழ வைக்கும் தேவனுக்கு
என் ஆவி ஆத்ம சரீர பலி
என்னை ஆளுகின்ற தேவனுக்கு

1263. சர்வ சிருஷ்டிக்கும் எஜமானார் நீரே

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானார் நீரே
உங்க வார்த்தைக்கு ஈடு இல்லயே
சத்தியம் ஜீவன் அவரே
நித்தியம் நித்தியம் அவரே

சத்திய தேவனே நித்திய ராஜனே
என்னோடு வருபவரும் அவரே
அவரே (3) இன்றும் என்றும் அவரே

1. ஒரு போதும் கைவிடாமல்
என்னையும் காத்தவரே - ஒருநாளும்
விலகிடாமல் என்னையும் கண்டாரே
எத்தனை நன்மைகள் செய்தார்
எத்தனை இன்பங்கள் தந்தார்
தந்தாரே (3) சந்தோஷம்
அள்ளியே தந்தாரே

2. ஒரே ஒரு வார்த்தையாலே
கடலையும் அதட்டினாரே - ஒரே ஒரு
வார்த்தையாலே மரணத்தை வென்றாரே
ஒரே ஒரு வார்த்தை சொன்னால் போதுமே
இன்றைக்கே உந்தன் வாழ்க்கை மாறுமே
மாறுமே (3) உந்தன் வாழ்வே மாறுமே

Tamil Hymns

1264. சர்வ சிருஷ்டிக்கும் எஜமானும் நீரே

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானும் நீரே
சர்வ சிருஷ்டியைக் காப்பவர் நீரே
எங்கள் இதயத்தில் உம்மை போற்றுகிறோம்
என்றென்றும் பணிந்து தொழுவோம்
ஆஹா ஹா அல்லேலூயா ஆமென்

1. வானம் பூமி ஒழிந்து போனாலும் உம்
வார்த்தைகள் என்றும் மாறாதே
உலகம் அழிந்து மறைந்து போம்
விசுவாசி என்றென்றும் நிலைப்பான்

2. சாத்தான் உன்னை எதிர்த்து போதும்
ஜெயக் கிறிஸ்து உன்னோடே உண்டே
தோல்வி என்றும் உனக்கில்லையே
துதிகானம் தொனித்து மகிழ்வாய்

3. எந்தன் மீட்பருமட் ஜீவனும் நீரே
என்னை காக்கும் கர்த்தரும் நீரே
என்னை உமக்கு என்றும் அர்ப்பணித்தேன்
என் வாழ்வில் ஜோதியும் நீரே

Tamil Hymns

1265. சர்வ வல்லவர் என் சொந்தமானர்

சர்வ வல்லவர் என் சொந்தமானர் (எஜமானன்)
சாவை வென்றவர் என் ஜீவனானவர் (மணவாளன்)

ஆ...இது அதிசயம் தானே
ஓ...இது உண்மைதானே

1. கண்டுகொண்டேன் ஒரு புதையல்
பெற்றுக்கொண்டேன் ஒரு பொக்கிஷம்
இயேசுதான் என் இரட்சகர்
இயேசு தான் என் ராஜா

2. சந்தோஷமும் சமாதானமும்
என் உள்ளத்தில் பொங்குதய்யா
பாவமெல்லாம் போக்கிவிட்டார்
பயங்களெல்லாம் நீக்கிவிட்டார்

3. பரலோகத்தில் எனது பெயர்
எழுதி விட்டார் என் இயேசு
என் வாழ்வின் நோக்கமெல்லாம்
இயேசுவுக்காய் வாழ்வது தான்

4. ஊரெல்லாம் சொல்லிடுவேன்
உலகமெங்கும் பறைசாற்றுவேன்
ஜீவிக்கின்றார் என் இயேசு
சீக்கிரமாய் வந்தீடுவார்

Tamil Hymns

1266. சாட்சிகள் இயேசுவின் சாட்சிகள்

சாட்சிகள் இயேசுவின் சாட்சிகள்
சாட்சிகள் உலகில் நாங்கள் சாட்சிகள்

1. பரிசுத்த ஆவியினால் பெலனடைந்த சாட்சிகள்
உன்னத தேவனால் உயிரடைந்த சாட்சிகள்

எருசலேமில் சாட்சிகள்
யூதேயாவில் சாட்சிகள்
சமாரியாவில் சாட்சிகள்
உலகமெங்கும் சாட்சிகள்

2. இயேசுவில் நிலைத்திருக்கும் நித்தியமான சாட்சிகள்
கனிகொடுத்து கர்த்தரை மகிமைப்படுத்தும் சாட்சிகள்

3. தெரிந்து கொள்ளப்பட்ட எங்கள் தேவனின் சாட்சிகள்
துன்பப்படுத்தப்பட்டும் துணிந்த வீர சாட்சிகள்

Tamil Hymns

1267. சாத்தானுக்கு சவால் விடும் சந்ததி நாங்க

சாத்தானுக்கு சவால் விடும் சந்ததி நாங்க
சேனைகளின் தேவனின் போ◌ா◌் வீரர்கள் நாங்க -2

சவாலே சமாளி சாத்தானே நீ ஏமாளி -2
சவால் சவால் 2)
சவாலே நாங்க பவுல போல சவால் விடுவோம் சவாலே

1.சாவுக்கேதுவாய் எதுவும் ஒன்றும் செய்வதில்லையே
ஆவியானவர் எங்களோடு பயமுமில்லையே
சவால் சவால் சவால் சவால் சவாலே
நாங்க பவுல போல சவால் விடுவோம் சவாலே

2.சாத்ராக் மேசாக் ஆபேத் நேகோ ஆவி எனக்குள்ளே
ஏழு மடங்கு எா◌ியும் சூலை எனக்கு பயமில்லை
சவால் சவால் சவால் சவால் சவாலே
நாங்க தானியேல் போல சவால் விடுவோம் சவாலே

3. பாலியத்தின் இச்சைகளுக்கு விலகி ஓடியே
எங்கள் வாலிபத்தை இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்
சவால் சவால் சவால் சவால் சவாலே
நாங்க யோசேப்பை போல சவால் விடுவோம் சவாலே

4.என் இயேசுவாலே நான் ஒரு சேனைக்குள் பாய்வேன்
என் இயேசுவாலே நான் பெரும் மதிலை தாண்டுவேன்
சவால் சவால் சவால் சவால் சவாலே
நாங்க இயேசுவைப் போல சவால் விடுவோம் சவாலே

Tamil Hymns

1268. சாரோனின் ராஜா இவர்

சாரோனின் ராஜா இவர்
பரிபூரண அழகுள்ளவர்
அன்புத் தோழனென்பேன் – ஆற்றும்
துணைவன் என்பேன்
இன்ப நேசரை நான் கண்டேன்
காடானாலும் மேடானாலும்
கர்த்தரின் பின்னே போகத்துணிந்தேன

1. சீயோன் வாசியே தளராதே
அழைத்தவர் என்றும் உண்மையுள்ளவர்
அன்பின் தேவன் மறக்கமாட்டார்
ஆறுதல் கரங்களால் அணைக்கின்றார்

2. மலைகள் பெயர்ந்து போகலாம்
குன்றுகள் அசைந்து போகலாம்
மாறா தேவனின் புதுகிருபை
காலை தோறும் நமக்கு உண்டு

3. நேசரை அறியா தேசமுண்டு
பாசமாய் செல்ல யார்தானுண்டு
தாகமாய் வாடிடும் கர்த்தருக்காய்
சிலுவை சுமந்து பின்செல்வோர் யார்

1269. சாரோனின் ரோஜா இவர் பரிபூரண

சாரோனின் ரோஜா இவர்
பரிபூரண அழகுள்ளவர்
அன்புத் தோழனென்பேன்
ஆற்றும் துணைவன் என்பேன்
இன்ப நேசரை நான் கண்டேன்
காடானாலும் மேடானாலும்
கர்த்தரின் பின்னே போகத்துணிந்தேன

1. சீயோன் வாசியே தளராதே
அழைத்தவர் என்றும் உண்மையுள்ளவர்
அன்பின் தேவன் மறக்கமாட்டார்
ஆறுதல் கரங்களால் அணைக்கின்றார்

2. மலைகள் பெயர்ந்து போகலாம்
குன்றுகள் அசைந்து போகலாம்
மாறா தேவனின் புதுகிருபை
காலை தோறும் நமக்கு உண்டு

3. நேசரை அறியா தேசமுண்டு
பாசமாய் செல்ல யார்தானுண்டு
தாகமாய் வாடிடும் கர்த்தருக்காய்
சிலுவை சுமந்து பின்செல்வோர் யார்

Tamil Hymns

1270. சாரோனின் ரோஜாவே சாலேமின்

1. சாரோனின் ரோஜாவே சாலேமின் ராஜாவே
சர்வேசு நாதனே நமோ நமோ

2. விண்ணாளும் வேந்தனே மண்ணாளும் மைந்தனே
எனையாளும் தெய்வமே நமோ நமோ

3. யெகோவா தேவனே யெகோவா நிசியே
யெகோவா ஷம்மாவே நமோ நமோ

4. ஆத்தும நேசரே ஆருயிர் நண்பரே
ஆனந்த ராகமே நமோ நமோ

5. திரியேசு தேவனே மகத்துவ ராஜனே
மன்னாதி மன்னனே நமோ நமோ

6. காட்டு மரங்களில் கிச்சிலியானவரே
ஊற்றுண்ட தைலமே நமோ நமோ

1271. சாரோனின் ரோஜா பள்ளத்தாக்கின் லீலி

1. சாரோனின் ரோஜா பள்ளத்தாக்கின் லீலி
மருதோன்றிப் பூங்கொத்து நீர்தானே!

2. ஒளி தரும் கண்கள் சுடர் தரும் பாதங்கள்
பெரு வெள்ள இரைச்சல் நீ தானே
நேசர் அழகுள்ளவர்
பதினாயிரங்களில் அவர் சிறந்தவரே

ஒளி தரும் கண்கள் சுடர் தரும் பாதங்கள்
பெரு வெள்ள இரைச்சல் நீ தானே
அழகில் சிறந்தவரே
துதிகள் செலுத்தி தொழுதிடுவோம்

சாரோனின் ரோஜா பள்ளத்தாக்கின் லீலி
மருதோன்றிப் பூங்கொத்து நீர்தானே!

Tamil Hymns

1272. சாரோனின் ரோஜாவே

சாரோனின் ரோஜாவே
பள்ளத்தாக்கின் லீலியே - உள்ளத்தின்
நேசமே இயேசு என் பிரியமே

1. ஆத்தும நேசரேஉம் நேசம் இன்பமே
பூரண ரூபமேபழுதொன்றும் இல்லையே

2. வருவேன் என்றுரைத்தவர் சீக்கிரம் வருகிறார்
வாக்கு மாறாதவர் தாமதம் செய்யாரே

3. அன்பரை சந்திக்க ஆயத்தமாகுவோம்
கர்த்தரின் கரமதில் நம்மை தந்திடுவோம்

Tamil Hymns

1273. சாலேமின் ராசா சங்கையின் ராசா

சாலேமின் ராசா சங்கையின் ராசா
ஸ்வாமி வாருமேன்
இந்தத் தாரணி மீதினில்
ஆளுகை செய்திடச் சடுதி வாருமேன்

1. சீக்கிரம் வருவோ மென்றுரைத்து
போன செல்வக் குமாரனே
இந்தச் சீர்மிகும் மாந்தர்கள்
தேடித்திரிகின்ற செய்திகேளீரோ

2. எட்டி எட்டி உம்மை அண்ணாந்து
பார்த்துக் கண்பூத்துப் போகுதே - நீர்
சுட்டிக்காட்டிப்போன வாக்குத்தத்தம்
நிறை வேறலாகுதே

3. நங்கை எருசலேம்பட்டினம்
உம்மை நாடித் தேடுதே
இந்த நானிலத்திலுள்ள
ஜீவப்பிராணிகள் தேடிவாடுதே

4. சாட்சியாகச் சுபவிசேஷம்
தாரணிமேவுதே உந்தச் சாட்சிகளுடைய
இரத்தங்களெல்லாம் தாவிக் கூவுதே

Tamil Hymns

1274. சிங்கக் குட்டிகள் பட்டினி கிடக்கும்

சிங்கக் குட்டிகள் பட்டினி கிடக்கும்
ஆண்டவரைத் தேடுவோர்க்கு குறையில்லையே

குறையில்லையே குறையில்லையே
ஆண்டவரைத் தேடுவோர்க்கு
குறையில்லையே

1.புல்லுள்ள இடங்களிலே
என்னை மேய்க்கின்றார்
தண்ணீரண்டை கூட்டிச் சென்று
தாகம் தீர்க்கின்றார்

2.எதிரிகள் முன் விருந்தொன்றை
ஆயத்தப்படுத்துகிறார்
என் தலையை எண்ணெயினால்
அபிஷேகம் செய்கின்றார்

3.ஆத்துமாவை தேற்றுகின்றார்
ஆவி பொழிகின்றார்
ஜீவனுள்ள நாட்களெல்லாம்
கிருபை என்னைத் தொடரும்

4.என் தேவன் தம்முடைய
மகிமை செல்வத்தினால்
குறைகளையே கிறிஸ்துவுக்குள்
நிறைவாக்கி நடத்திடுவார்

Tamil Hymns

1275. சிங்காசனத்தில் வீற்றிருக்கும்

1. சிங்காசனத்தில் வீற்றிருக்கும்
பரிசுத்தரே பரிசுத்தரே

ஆராதனை உமக்கு ஆராதனை (4)

2. கேருபீன்கள் சேராபீன்கள்
போற்றிடும் எங்கள் பரிசுத்தரே

3. ஏழு குத்து விளக்கின் மத்தியிலே
உலாவிடும் எங்கள் பரிசுத்தரே

4. ஆதியும் அந்தமும் ஆனவரே
அல்பாவும் ஒமேகாவும் ஆனவரே

5. அக்கினி ஜுவாலை போன்ற கண்களையும்
வெண்கல பாதங்களை உடையவரே

6. பரிசுத்தமும் சத்தியமும் - தவிதின்
திறவுகோலை உடையவரே

Tamil Hymns

1276. சிங்கார மாளிகையில்

சிங்கார மாளிகையில்
ஜெயகீதங்கள் பாடிடுவோம்
சீயோன் மணவாளனுடன்

1. ஆனந்தம் பாடி அன்பரைச் சேர்ந்து
ஆறுதலடைந்திடுவோம் - அங்கே
அலங்கார மகிமையின் கிரீடங்கள் சூடி
அன்பரில் மகிழ்ந்திடுவோம்

2. துயரப்பட்டவர் துதித்துப்பாடுவார்
துதியின் உடையுடனே அங்கே
உயரமாம் சீயோன் உன்னதரோடு
களித்து கவி பாடுவோம்

3. முள் முடி நமக்காய் அணிந்த மெய்
இயேசுவின் திருமுகம் கண்டிடுவோம் - அங்கே
முத்திரையிட்ட சுத்தர்கள் வெள்ளங்கி
தரித்தோராய் துதித்திடுவார்

4. பூமியின் அரசை புதுபாட்டாய் பாடி
புன்னகை பூத்திடுவோம் - புது
எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்பட்டோராய்
மண்ணாசை ஒழித்திடுவோம்

5. அவருரைத்த அடையாளங்களெல்லாம்
தவறாமல் நடக்கிறதே - அவர்
வரும் வேளை யறியாதிருப்பதால்
எப்போதும் ஆயத்தமாயிருப்போம்

Tamil Hymns

1277. சிலுவை ஏன் அவர்க்கு

சிலுவை ஏன் அவர்க்கு
சிறு குற்றமும் செய்யாதவர்க்கு
சிலுவை ஏன் அவர்க்கு

சிலுவை ஞானம் தேவ ஞானம்
மற்றதெல்லாம் உலக ஞானம்
சிலுவை ஏன் அவர்க்கு

1. கொடிய பாவத்தால் உண்டான குஷ்டரோகியை (2)
குனிந்து கரத்தால் அவனை தொட்டு (2)
குரோதத்தை மாற்றினதாலோ

2. இவரில் குற்றம் ஒன்றும் காணேன் என்றுரைத்தான் பிலாத்து
இவரில் குற்றம் ஒன்றும் காணேன் என்றுரைத்தான் ஏரோது
இயேசுவை கண்டவர் எல்லாம் (2)
ஏதும் குற்றம் இல்லை என்றார்

3. உலகோர் பாவ பாரம் யாவும் உத்தமர் சுமந்து (2)
சிலுவையில் மரித்ததாலே (2)
இரட்சிப்பை உண்டாக்கி வைத்தார்

Tamil Hymns

1278. சிலுவை சுமந்த உருவம்

சிலுவை சுமந்த உருவம்
சிந்தின இரத்தம் புரண்டோடியே
நதிபோலவே பாய்கின்றதே
நம்பி இயேசுவண்டை வா

1. பொல்லா உலக சிற்றின்பங்கள்
எல்லாம் அழியும் மாயை
காணாய் நிலையான சந்தோஷம் பூவில்
கர்த்தாவின் அன்பண்டை வா

2. ஆத்தும மீட்பைப் பெற்றிடாமல்
ஆத்துமம் நஷ்டமடைந்தால்
லோகம் முழுவதும் ஆதாயமாக்கியும்
லாபம் ஒன்றுமில்லையே

3. பாவ மனித ஜாதிகளைப்
பாசமாய் மீட்க வந்தார்
பாவப் பரிகாரி கர்த்தர் இயேசுநாதர்
பாவமெல்லாம் சுமந்தார்

4. நித்திய ஜீவன் வாஞ்சிப்பாயோ
நித்திய மோட்ச வாழ்வில்
தேடி வாரோயோ பரிசுத்த ஜீவியம்
தேவை அதை அடைவாய்

5. தாகமடைந்தோர் எல்லோருமே
தாகத்தை தீர்க்க வாரும்
ஜீவத் தண்ணீரான கர்த்தர் இயேசுநாதர்
ஜீவன் உனக்களிப்பார்

Tamil Hymns

1279. சிலுவை திரு சிலுவை

சிலுவை திரு சிலுவை (2)
சிலுவையின் இனிய மறைவினில் மறைத்து
கருணையின் தெய்வத்தை
காட்டிடும் அறிய

1. பரியாசம் பசி தாகமடைந்து
படுகாயம் கடும் வேதனை அடைந்து
பாவமறியா பரிசுத்தர் இயேசு (2)
பாதகர் நடுவில் பாவியாய் நிற்கும்

2. கைகள் கால்களில் ஆணி கடாவ
கடும் முள் முடி பின்னி தலையிலே சூட
நான்கு காயங்கள் போதாதென்று (2)
நடு விலாவையும் பிளந்திட செய்த

3. மரணத்தால் சாத்தானின் தலையை நசுக்க
இரத்தத்தால் பாவ கறைகள் நீக்க
உந்தன் வியாதியின் வேதனை ஒழிய (2)
சாபத்தினின்று நீ விடுதலையடைய

4. லோக சிற்றின்ப பாதையை நோடி
மாளும் பாவியை சிலுவையில் தேடி
சொந்த ஜீவனை உன்னிலே ஈந்து (2)
அன்பினை ஈக்க ஐங்காயமான

Tamil Hymns

1280. சிலுவை நாதர் இயேசுவின்

சிலுவை நாதர் இயேசுவின்
பேரொளி வீசிடும் தூய கண்கள்
என்னை நோக்கிப் பார்க்கின்றன - தம்
காயங்களையும் பார்க்கின்றன

1. என் கையால் பாவங்கள் செய்திட்டால்
தம் கையின் காயங்கள் பார்க்கின்றாரே
தீயவழியில் என் கால்கள் சென்றால்
தம் காலின் காயங்கள் பார்க்கின்றாரே

2. தீட்டுள்ள எண்ணம் என் இதயம் கொண்டால்
ஈட்டி பாய்ந்த நெஞ்சை நோக்குகின்றார்
வீண் பெருமை என்னில் இடம் பெற்றால்
முள்முடி பார்த்திட ஏங்குகின்றார்

3. திருந்திடா பாவிக்காய் அழுகின்றார்
வருந்திடா பிள்ளைக்காய்க் கலங்குகின்றார்
தம் கண்ணீர் காயத்தில் விழுந்திட
கண்ணீரும், இரத்தமும் சிந்துகின்றார்

4. அவர் இரத்தம் என் பாவம் கழுவிடும்
அவர் கண்ணீர் என்னை மெருகேற்றிடும்
கலங்கரை விளக்காக ஒளி வீசுவேன்
கலங்குவோரை அவர் மந்தை சேர்ப்பேன்

Tamil Hymns

1281. சிலுவையில் தொங்கும் இயேசுவைப்பார்

சிலுவையில் தொங்கும் இயேசுவைப்பார்
திரு இரத்தம் சிந்தும் தேவனைப்பார்

1. முள்முடி தலையில் பாருங்களேன்
முகமெல்லாம் இரத்தம் அழகில்லை
கள்வர்கள் நடுவில் கதறுகிறார்
கருணை தேவன் உனக்காக

2. கைகால் ஆணிகள் காயங்களே
கதறுகிறார் தாங்க முடியாமல்
இறைவா ஏன் என்னை கைநெகிழ்ந்தீர்
என்றே அழுது புலம்புகின்றார்

1282. சிலுவையில் நிழலில் அனுதினம் அடியான்

சிலுவையில் நிழலில் அனுதினம் அடியான்
சாய்ந்திளைப் பாரிடுவேன் - ஆ ஆ

சிலுவையின் அன்பின் மறைவில்
கிருபையின் இனிய நிழலில்
ஆத்தும நேசரின் அருகில்
அடைகிறேன் ஆறுதல் மனதில்

1. பாவப் பாரச்சுமையதால் சோர்ந்து
தளர்ந்தென் ஜீவியமே ஆ ஆ
சிலுவையண்டை வந்ததினால்
சிறந்த சந்தோஷங் கண்டதினால்
இளைப்படையாது மேலோகில்
ஏகுவேன் பறந்தே வேகம்

2. எவ்வித கொடிய இடருக்கும் அஞ்சேன்
ஏசுவை சார்ந்து நிற்பேன் - ஆ ஆ
அவனியில் வியாகுலம் வந்தால்
அவரையே நான் அண்டிக் கொண்டால்
அலைமிக மோதிடும் அந்நாள்
ஆறுதல் அளிப்பதாய்ச் சொன்னார்

3. இன்பம் சுரந்திடும் திருமொழி கேட்டே
இன்னல்கள் மறந்திடுவேன் - ஆ ஆ
திருமறை இன்னிசை நாதம்
தேனிலுமினிய வேதம்
தருமெனக்கனந்த சந்தோஷம்
தீர்க்குமென் இதயத்தின் தோஷம்

Tamil Hymns

1283. சிலுவையில் அறையுண்ட மேசியா

சிலுவையில் அறையுண்ட மேசியா
இறை வல்லமையும் இறை ஞானமுமாய் உள்ளார்
இதை உள்ளங்கள் உணர்ந்திடட்டும்
இந்த உலகமும் உணர்ந்திடட்டும் (2)

அல்லேலூ அல்லேலூ அல்லேலுயா (4)

1. குற்றம் இல்லாதோர் மாய்கின்றார்
எம் குழந்தைகள் பசியில் வாடுகின்றார்
நீதியை அழிப்போர் வாழ்கின்றார்
பல நேரிய மனிதர்கள் வீழ்கின்றார்
இந்த சிலுவை உமது வல்லமையோ
இந்த சிலுவை உமது ஞானமோ (2)

2. சிலுவையில் இறந்த செம்மறிதான்
பின் சாவினை அழித்து உயிர்த்ததன்றோ
சிலுவை வடிவே முடிவல்ல
முழு ஜெயமே எங்கள் பரிசன்றோ
இந்த சிலுவை உமது வல்லமையே
இந்த சிலுவை உமது ஞானமே (2)

3. நெஞ்சினில் அமைதியை இழக்கின்றோம் - மன
நிம்மதி இழந்தே தவிக்கின்றோம்
நோவிலும் சாவிலும் துடிக்கின்றோம் - எங்கள்
தேவனே சிலுவையின் பொருள் சொல்வாய்
இந்தச் சிலுவை உமது வல்லமையோ
இந்தச் சிலுவை உமது ஞானமோ (2)

4. உறவுகள் நிறைவு தருவதில்லை எங்கள்
உள்ளத்தில் அன்பு வளர்வதில்லை
பிரிவுகள் பிளவுகள் பிணக்குகளே எங்கள்
வீட்டிலும் நாட்டிலும் வளர்வது ஏன்
இந்தச் சிலுவை உமது வல்லமையோ
இந்தச் சிலுவை உமது ஞானமோ (2)

Tamil Hymns

1284. சிலுவையே நல்மரமே

சிலுவையே நல்மரமே
அதன் நிழல் அடைக்கலமே
கலங்காதே அழுதிடாதே
இயேசு உன்னை அழைக்கிறார்

1. துன்ப நெருக்கடியில்
சோர்ந்து போனாயோ - அன்பர்
இயேசு பார் - அணைக்கத் துடிக்கின்றார்

2. பாவச் சேற்றினிலே
மூழ்கி தவிக்கின்றாயோ - இயேசுவின்
திருரத்தம் இன்றே கழுவிடும்

3. வியாதி வேதனையில்
புலம்பி அழுகின்றாயோ - இயேசுவின்
காயங்களால் இன்றே குணம் பெறுவாய்

Tamil Hymns

1285. சிலுவையைப் பற்றி நின்று

1. சிலுவையைப் பற்றி நின்று
துஞ்சும் மகனைக் கண்ணுற்று,
விம்மிப் பொங்கினார் ஈன்றாள்;
தெய்வ மாதா மயங்கினார்;
சஞ்சலத்தால் கலங்கினார்;
பாய்ந்ததாத்துமாவில் வாள்.

2. பாக்கியவதி மாதா உற்றார்
சிலுவையை நோக்கிப் பார்த்தார்;
அந்தோ, என்ன வேதனை!
ஏக புத்திரனிழந்து,
துக்க சாகரத்தில் ஆழ்ந்து,
சோகமுற்றனர் அன்னை.

3. இணையிலா இடருற்ற
அன்னை அருந்துயருற
யாவரும் உருகாரோ?
தெய்வ மைந்தன் தாயார் இந்த
துக்க பாத்திரம் அருந்த,
மாதாவோடழார் யாரோ?

4. தம் குமாரன் காயப்பட,
முள்ளால் கிரீடம் சூட்டப்பட,
இந்த நிந்தை நோக்கினார்;
நீதியற்ற தீர்ப்புப்பெற,
அன்பர், சீஷர் கைவிட்டோட
அவர் சாகவும் கண்டார்.

5. அன்பின் ஊற்றாம், இயேசு ஸ்வாமீ
உமதன்னைக்குள்ள பக்தி
எந்தன் நெஞ்சில் ஊற்றிடும்!
அன்பினால் என் உள்ளம் பொங்க
அனல் கொண்டகம் உருக
அருளைக் கடாட்சியும். ஆமென்

Tamil Hymns

1286. சிலுவையை சுமந்தும்மை

சிலுவையை சுமந்தும்மை பின் செல்லவே
இயேசுவே என்னையும் அழைத்தீரே
கல்வாரி மலையில் ஜீவனை இழந்துமே
நல்லதோர் வழியை வகுத்தீரே

முற்றுமாய் பலியாய் படைக்கின்றேன்
உந்தனின் திருப்பாதத்தில்
ஏற்றுக் கொள்ளும் என்னை இயேசுவே
உம் சித்தம் நிறைவேற்றிடும்

1. நேசரே உம் அடிச் சுவடுகளை
நேசித்து தொடர்வேன் என் வாழ்வினிலே
இயேசுவே உம் திரு கரங்களில் பெற்ற - நல்
சேவையை நிறைவேற்ற வாஞ்சிக்கிறேன்

2. நேசத்தில் நின் சித்தம் நிறைவேற்றியே
வேகமாய் உம் அண்டை வந்திடுவேன்
ஏகமாய் உம்முடன் சீயோனில் இணைந்தும்மை
யுகயுகமாக சேவை செய்வேன்

Tamil Hymns

1287. சிலுவை சுமந்தோனாக இயேசு உம்மைப்

1. சிலுவை சுமந்தோனாக இயேசு உம்மைப் பின்பற்றுவேன்
ஏழைப் பரதேசியாக மோட்ச வீடு நாடுவேன்
உற்றார் மேன்மை ஆஸ்தி கல்வி ஞானம் லோகம் அனைத்தும்
அற்பக் குப்பை என்று எண்ணி வெறுப்பேனே முற்றிலும்

2. உமக்காகப் பாடுபட்டோன் நஷ்டப்பட மாட்டானே
உமக்கென்று ஜீவன் விட்டோன் சாகா ஜீவன் பெற்றானே
உம்மை வல்ல மீட்பர் என்று சொல்லி நித்தம் பற்றுவேன்
கஸ்தி பட்டும் சாவை வென்று வாடா கிரீடம் பெறுவேன்

3. துஷ்டர் என்னைப் பகைத்தாலும் நீரே தஞ்சம் ஆகுவீர்
கஸ்தி என்ன நேரிட்டாலும் இனி மேன்மை தருவீர்
உமதன்பு என்னைத் தேற்ற துக்கம் பயமில்லையே
நாதா உம் பிரசன்னம் நீங்க இன்ப மெல்லாம் துன்பமே

4. நெஞ்சமே உன் மேன்மை எண்ணு: வரும் செல்வம் நோக்கிப்பார்
மோட்ச நன்மை தேடிக்கொள்ளு உன் சுதந்திரத்தைக்கா
கொஞ்ச வேளைக்குள் பறந்து இயேசுவண்டை சேருவாய்
தெய்வ தூதரோடு நின்று என்றென்றைக்கும் துதிப்பாய்

Tamil Hymns

1288. சிலுவையோ அன்பின் சிகரம்

சிலுவையோ அன்பின் சிகரம்
சிந்திய உதிரம் அன்பின் மகுடம்
சிரசினில் முள்முடி சிந்தையில் நிந்தனை
சிலுவையை எனக்காய் ஏற்றீர்
சிலுவையில் எனக்காக மரித்தீர்

1. கல்வாரி சிலுவையில் காண்கின்றேன்
தியாகம் - கருணையின் உறைவிடம் நீ
என்னை தேடி வந்த அன்பை எண்ணி
என்ன சொல்லிடுவேன்
உம் அன்பை எந்நாளும்
என் வாழ்வில் தந்தேன்

2. குழம்பிய நேரம் அருகினில் வந்து
குழப்பங்கள் அகற்றினீரே
மார்போடு சேர்த்து அணைத்த அன்பை
என்றும் நான் மறவேன்
உம் அன்பை எந்நாளும் என் வாழ்வில் தந்தேன்

3. சோதனை நேரம் நெருங்கியே வந்து
சோர்வுகள் நீக்கினீரே
நீர் செய்த நன்மை யாவும் வாழ்வில்
என்றும் நினைத்திடுவேன்

Tamil Hymns

1289. சின்ன பரதேசி மோட்சம்

1. சின்ன பரதேசி
மோட்சம் நாடினேன்;
லோகத்தின் சிற்றின்பம்
வெறுத்து விட்டேன்.

2. முத்தி அடைந்தோரை
பாவம் சேராதே;
துக்க சத்தம் அங்கே
என்றும் கேளாதே.

3. சின்ன பரதேசி
இங்கே சீர்ப்படேன்;
அங்கே வெள்ளை அங்கி
தரித்துக்கொள்வேன்.

4. என்னைச் சுத்தமாக
காரும், இயேசுவே;
தினம் வழி காட்டும்,
தெய்வ ஆவியே.

5. சாந்த இயேசு ஸ்வாமி,
உம்மை நேசிப்பேன்;
என்றும் உந்தன் சீஷன்
ஆகப் பார்க்கிறேன்

1290. சின்ன சின்ன ஜீவ வண்டி

சின்ன சின்ன ஜீவ வண்டி
தேவன் அமைத்த ஜீவ வண்டி
சுக்கு ..... சுக்கு ஜீவ வண்டி
தேவன் அமத்த ஜீவ வண்டி

1. ஆச்சரியமான ஜீவ வண்டி
அற்புதமான ஜீவ வண்டி (2)

2. போகும் தூரம் வெகுதூரம்
போகும் வண்டி இதுவேதான் (2)

3. ஸ்டேஷன் மாஸ்டர் இயேசுதான்
தங்க டிக்கட் கொடுப்பாராம் (2)

4. போகும் திக்கு இரண்டேதான்
மோட்சம் நரகம் என்பதுதான் (2)

5. நீயும் இயேசுவை ஏற்றுக்கொண்டால்
மோட்சம் கொண்டு சேர்ப்பாரே (2)

Tamil Hymns

1291. சின்னஞ் சிட்டுக் குருவியே

சின்னஞ் சிட்டுக் குருவியே (2) உன்னை
சந்தோஷமாய் படைச்சது யாரு
அங்குமிங்கும் பறந்துகிட்டு
ஆனந்தமாய் பாடுறீயே - உன்னை
அழகாக படைச்சது யாரு

ஐயோ ஐயோ இது தெரியாதா
ஒரு ஆண்டவர் எனக்கு மேலே இருக்கிறார்
உண்ண உணவும் கொடுக்கிறார்
உறங்க இடமும் கொடுக்கிறார் இந்த
உலகத்தையே படைச்சும் இருக்கிறார்

சின்னஞ் சிட்டுக் குருவியே (2) - உன்
சிறகை எனக்கு தந்திடுவாயா
உன்னைப் போல பாடிக்கிட்டு
உல்லாசமாய்ப் பறப்பதற்கு ஒரு
உதவி என்னக்கு செய்திடுவாயா
ஐயோ இனிமே அப்படிக் கேட்காதே
அந்த ஆண்டவர் கேட்டா கோபிச்சுக்குவாரு
எங்களைக் காக்கிற ஆண்டவர்
உங்களைக் காப்பது இல்லையா - அட
உங்களைத்தானே ரொம்பவும் நேசிக்கிறார்
ஆமாம் சிட்டுக் குருவியே (2)
இது மனுஷங்களுக்கு புரியவில்லையே
உங்களைக் காக்கிற ஆண்டவர்
எங்களைக் காக்க மாட்டாரோ
இந்த உண்மையும் ஏனோ தெரியவில்லையே

Tamil Hymns

1292. சின்னஞ்சிறு சுதனே என்னரும் தவமே

சின்னஞ்சிறு சுதனே என்னரும் தவமே
மன்னர் மன்னவனே உன்னததிருவே

1. காடுண்டு நரிக்கு குழிகளுமுண்டு
கூடுண்டு பறவைகட்கு
பாடுண்டு உமக்கு மனிதகுமாரனே
வீடுண்டோ உந்தனுக்கு

2. தாரணி துயர்கள் துன்பங்கள் நீங்க
காரணம் நீரானீரோ
கோர வெம்பகைகள் பாரச்சுமைகள்
தீர மருந்தானீரோ – ஆ..ஆ..ஆ

3. சுற்றம் தாய் தந்தை மற்றுமனைத்தும்
முற்றிலும் நீரல்லவோ
குற்றம் துடைக்க பற்றினை நீக்க
உற்றவர் நீரல்லவோ

4. பாசமாய் வந்து காசினை மீட்ட
நேசமுள்ள ஏசுவே
நீச சிலுவை தொங்கப் பிறந்த
தாசரின் தாபரமே – ஆ..ஆ..ஆ

Tamil Hymns

1293. சின்னஞ்சிறு குழந்தை

சின்னஞ்சிறு குழந்தையாய்ப் பிறந்தார்! இயேசு பிறந்தார்!
பாவத்தைப் போக்க, பயமதை நீக்க, பாலகனாய்ப் பிறந்தார்

1. மேய்ப்பர்கள் வந்தனரே! மிக வேகமாய் வந்தனரே!
சாஸ்திரிகள் வந்து சாஷ்டாங்கம் செய்து பணிந்து கொண்டனரே!

2. வாருங்கள் மானிடரே! இயேசுவின் பின் செல்லவே!
சிலுவையை எடுத்து, சுயத்தை வெறுத்து, பின் செல்லுவீர் என்றுமே!

Tamil Hymns

1294. சீயோனிலே என் திட அஸ்திபாரம்

சீயோனிலே என் திட
அஸ்திபாரம் கிறிஸ்துவே - அவர்
நான் என்றும் நம்பும் கன்மலை

1. கலந்கிடுவேனோ பதறிடுவேனோ
கர்த்தரில் விசுவாசம் இருக்கையிலே
அசையா என் நம்பிக்கை நங்கூரமே
இயேசுவில் மாத்திரமே - சீயோனிலே

2. புயலடித்தாலும் அலை மோதினாலும்
எவர் எனக்கெதிராய் எழும்பினாலும்
எனக்கு எட்டாத உயரத்திலே
எடுத்தவர் நிறுத்திடுவார் - சீயோனிலே

3. வியாதியினாலே காயம் வருந்தி
வாடியே மரண நிழல் சூழினும்
விசுவாசத்தின் கரத்தாலவர்
வாக்கை நான் பற்றிடுவேன் - சீயோனிலே

4. மா பரிசுத்த விசுவாசத்தாலே
மா பரிசுத்த ஸ்தலம் ஏகிடவே
திரைவழியே தம்சரீரத்தினால்
திறந்தாரே தூய வழி - சீயோனிலே

5. நான் விசுவாசிப்போர் இன்னாரென்றறிவேன்
என்னையே படைத்திட்டேன் அவர் கரத்தில்
முடிவு வரை என்னை நடத்திடுவார்
முற்றுமாய் இரட்சிப்பாரே - சீயோனிலே

Tamil Hymns

1295. சீயோனில் வாசம் செய்யும்

சீயோனில் வாசம் செய்யும்
கர்த்தரை உயர்த்துவோம்
அவர் செயல்கள் ஜனங்களுக்கு
அறிவித்து பாடுவோம்
ஓசன்னா (3) மகிமை தேவனே
ஓசன்னா (3) மாட்சிமை தேவனே

சேனைகளின் கர்த்தர் அவர்
மகிமையின் ராஜா அவர்
வல்லமையின் தேவன் அவரே

1. மகிமை தேவன் முழுங்குகிறார்
பரிசுத்தமாய் இருக்கிறவர்
வல்லமையுள்ள சத்தமுடையோர்
சேனைகளின் கர்த்தர் அவரே
வானம் பூமி நடுங்க செய்யும்
உன்னத தேவன் வானம்
பூமி அடக்கி ஆளுகிறார்
ஹாலேலூயா உமது வல்லமைக்காய்
ஹாலேலூயா ஹாலேலூயா

Tamil Hymns

1296. சீயோன் தேசமதில் சேர்ந்தென்றும்

சீயோன் தேசமதில் சேர்ந்தென்றும்
அன்பருடன் வாழ்வேன் ஜெயகீதம்
பேரின்பம் துதிபாடி மகிழுவேன்

1. நகரத்தின் வீதிகள் பொன்னாக
மின்னுதே இராப்பகல் இல்லையே - என்
இரட்சகர் வெளிச்சமே

2. என் கண்ணீர் யாவையும் கரத்தால்
துடைப்பாரே சஞ்சலமில்லையே - என்
நேசர் மகிழ்ச்சியே

3. மண் சாயல் மாறியே வின் சாயல்
அணிந்துமே மறுரூபம் அடைவேனே - என்
இயேசு போல் மாறுவேன்

4. நிதமும் என் நேசரை துதிபாடி
போற்றுவேன்மகிபனின் தேசத்தில் - நான்
மகிமையாய் வாழுவேன்

1297. சீயோன் மணவாளன் நேசர்

1. சீயோன் மணவாளன் நேசர்
இயேசு ராஜன் தூய மணாளிக்காய்
மேகங்கள் மேல் வருவார்

வானில் ஆனந்தமாய் எக்காலம் தொனிக்கவே
பாரில் ஜெயமாக ஜீவித்தோர் ஏகிடுவார்

2. ஆவியின் கண்களால்
அன்பரை மாத்திரமே - தரிசித்து
நேசித்தார் மேகத்தில் சேர்த்திடுவார்

3. மான்போல வாஞ்சையாய்
தாகமாய் சேவைக்காய் - தியாகமாய்
ஜீவனை ஈந்தார் பறந்திடுவார்

4. ஜெபத்திலே விழிப்பாய் அகத்திலே
களிப்பாய் ஏகுவோர் எதிர் கொண்டு
ஏகநோடே இசைய

5. பாடுவோம் ஜெயகீதம்
ஆளுவோம் என்றென்றும் - ஆனந்தம்
ஆனந்தம் சீயோனில் ஆனந்தம்

Tamil Hymns

1298. சீரேசு பாலன் ஜெயமனு வேலன்

சீரேசு பாலன் ஜெயமனு வேலன்
சீர் நாமத்தைத் தினமே போற்றுவோமே
பாராளும் வேந்தன் பகரொண்ணா மைந்தன்,
தாராள மாகத் தாமே மனுவான

1. எண்ணரும் பெருமான் ஏழைச்சாயலாக
மண்ணி லேகின மாட்சிமை யாலே,
விண்ணவர்கள் போற்ற, வெற்றிக்கவி சாற்ற
வண்ணம் பாடி நாம் மகிழ்ந்திட வேண்டாமோ

2. உன்னத பரனுக் கொப்பில்லா மகிமை
இந்நிலத்தினில் எழில்சமா தானம்,
மன்னுயிர்கள் மீது மாபிரியம் ஓங்க
தன்னுயிர் தந்த தயவை என்ன சொல்வோம்

3. பாவப் பிணியாலே பாதகரைப் போலே
சாபத்தை நம்மேல் நாம் தேடினோமே,
கோபத்தை ஒழித்தே குவலயத்தை மீட்க
தீபமாய் வந்த தேவ மைந்தனான

4. நித்தனே, என் பாவம் எத்தனையானாலும்
சித்தம் உருகிச் சீர்கூற வேணும்,
அத்தனே, உன் பாதம் அண்டினேன் இப்போதும்
பத்தியாய் உன்னைப் பகருவேன் எப்போதும்

Tamil Hymns

1299. சீர் அடைதருணம் இதறி மனமே

சீர் அடைதருணம் இதறி மனமே
சிதைவு படும் முனமே
சீர் அடை தருணம் இதறி மனமே

பார் உடலொடு வலுபோர் இடும் அலகையும்-(ரீ)
ஆரவாரம் எடுத் தழிக்கும் உனை க்ஷணத்தில்

நொடியதில் அழிவடை புடவியில் நணுகுதல் நலமோ - பேதாய்
நோய் துயர் உறும் இது மேலுல கிற்கிணை பங்கோ
கடினப்படுத்து வலு மறம் அது நிலை அற(ரீ)
காதலோடு நல் வேத நெறி தொடர்ந்து.

பொருள் அதில் உறு விருப்பதி சிதைவுளதென அறியாய் - ஓகோ
போர் இடு பல பல தீதுகளுக் கது வேரே
மருளைத் தவிர்க்கும் இறை அருளைக் கருதி நனி(ரீ)
மாசிலாத தெய் வீகன் அடி பணிந்து

Tamil Hymns

1300. சீர் இயேசு நாதனுக்கு

சீர் இயேசு நாதனுக்கு ஜெயமங்களம் ஆதி
திரியேக நாதனுக்கு சுபமங்களம்

பாரேறு நீதனுக்கு பரம பொற்பாதனுக்கு
நேரேறு போதனுக்கு நித்திய சங்கீதனுக்கு

1. ஆதி சரு வேசனுக்கு ஈசனுக்கு மங்களம்
அகிலப் பிரகாசனுக்கு நேசனுக்கு மங்களம்
நீதிபரன் பாலனுக்கு நித்திய குணாளனுக்கு
ஓதும் அனுகூலனுக்கு உயர் மனுவேலனுக்கு

2. மானாபி மானனுக்கு வானனுக்கு மங்களம்
வளர் கலைக் கியானனுக்கு ஞானனுக்கு மங்களம்
கானான் நல நேயனுக்குக் கன்னி மரிசெயனுக்கு
கோனார் சகாயனுக்கு கூறு பெத்த லேயனுக்கு

3. பத்து லட்ச ணத்தனுக்குச் சுத்தனுக்கு மங்களம்
பரம பதத்தனுக்கு நித்தனுக்கு மங்களம்
சத்திய விஸ்தாரனுக்குச் சருவாதி காரனுக்கு
பத்தர் உபகாரனுக்குப் பரம குமாரனுக்கு

1301. சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம்

சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம் - ஆதி
திரி யேக நாதனுக்கு சுபமங்களம்
பாரேறு நீதனுக்கு பரம பொற்பாதனுக்கு
நேரேறு போதனுக்கு, நித்திய சங்கீதனுக்கு

1. ஆதி சரு வேசனுக்கு, ஈசனுக்கு மங்களம்
அகிலப் பிர காசனுக்கு, நேசனுக்கு மங்களம்
நீதி பரன் பாலனுக்கு, நித்திய குணாலனுக்கு,
ஓதும் அனுகூலனுக்கு, உயர் மனுவேலனுக்கு

2. மானாபி மானனுக்கு, வானனுக்கு மங்களம்
வளர் கலைக் கியானனுக்கு ஞானனுக்கு
மங்களம் - கானான் நல் தேயனுக்குக்
கன்னிமரிசேயனுக்கு - கோனார்
சகாயனுக்கு கூறு பெத்த லேயனுக்கு

3. பத்து லட்ச ணத்தனுக்குச் சுத்தனுக்கு மங்களம்
பரம பதத்தனுக்கு, நித்தனுக்கு மங்களம்
சத்திய விஸ்தாரனுக்குச் சருவாதி காரனுக்கு,
பத்தர் உப காரனுக்குப், பரம குமாரனுக்கு

Tamil Hymns

1302. சீர்திரியேக வஸ்தே நமோ நமோ

சீர்திரியேக வஸ்தே, நமோ நமோ, நின்
திருவடிக்கு நமஸ்தே, நமோ நமோ!
பார்படைத்தாளும் நாதா, பரம சற்பிரசாதா,
நாருறுந தூயவேதா, நமோ நமோ நமோ

1. தந்தைப் பராபரனே நமோ, நமோ, எமைத்
தாங்கி ஆதரிப்போனே - நமோ நமோ!
சொந்தக் குமாரன் தந்தாய்,
சொல்லரும் நலமீந்தாய் - எந்தவிர்
போக்குமெந்தாய், நமோ நமோ நமோ

2. எங்கள் பவத்தினாசா நமோ நமோ,
புது எருசலேம் நகர்ராசா நமோ நமோ!
எங்கும் நின் அரசேற எவரும் நின் புகழ்கூற
துங்க மந்தையிற் சேர, நமோ நமோ நமோ

3. பரிசுத்த ஆவிதேவா நமோ நமோ, திட
பலமளித் தெமைக்காவா, நமோ நமோ!
கரிசித்துத்தா நற்புத்தி கபடற்ற மனசுத்தி
திருமொழி பற்றும்பக்தி, நமோ நமோ நமோ

Tamil Hymns

1303. சீர்மிகு வான்புவி தேவா

சீர்மிகு வான்புவி தேவா தோத்ரம்
சிருஷ்டிப்பு யாவையும் படைத்தாய் தோத்ரம்,
ஏர்குணனே தோத்ரம், அடியர்க்-கு
இரங்கிடுவாய், தோத்ரம், மா நேசா

1. நேர் மிகு அருள் திரு அன்பா தோத்ரம்
நித்தமு முமக் கடியார்களின் தோத்ரம்
ஆர் மணனே, தோத்ரம், உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா

2. ஜீவன், சுகம், பெலன், யாவுக்கும் தோத்ரம்
தினம் தினம் அருள் நன்மைக்காகவும் தோத்ரம்
ஆவலுடன் தோத்ரம், உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா

3. ஆத்தும நன்மைகட்காகவும் தோத்ரம்,
அதிசய நடத்துதற்காகவும் தோத்ரம்,
சாற்றுகிறோம் தோத்ரம், உனது
தகுமன்புக்கே தோத்ரம், மா நேசா

4. மாறாப் பூரண நேசா தோத்ரம் - மகிழொடு
ஜெபமொழி மாலையின் தோத்ரம்
தாராய் துணை, தோத்ரம், இந்தத்
தருணமே கொடு, தோத்ரம், மா நேசா

Tamil Hymns

1304. சுகம் உண்டு பெலன் உண்டு

1. சுகம் உண்டு பெலன் உண்டு
ஜீவன் உண்டு உம் பாதத்தில்

நேசிக்கிறேன் உம்மைத் தானே
என் தெய்வமே என் இயேசுவே

2. நேசம் உண்டு பாசம் உண்டு
இரக்கம் உண்டு உம் பாதத்தில்

3. அடைக்கலமே அதிசயமே
அண்டி வந்தேன் உம் பாதமே

4. துக்கம் நீங்கும் துயரம் நீங்கும்
துன்பம் நீங்கும் உம் பாதத்தில்

5. வியாதி நீங்கும் வறுமை நீங்கும்
பாரம் நீங்கும் உம் பாதத்தில்

6. உயர்த்துகிறோம் உம்மைத்தானே
என் தெய்வமே என் இயேசுவே

7. சுகப்படுத்தும் பெலப்படுத்து
திடப்படுத்தும் இந்நேரத்தில்

8. உயர்த்துகிறேன் உம்மைத் தானே
என் தெய்வமே என் இயேசுவே

Tamil Hymns

1305. சுகம் தரவேண்டும் யேகோவா

சுகம் தரவேண்டும்
யேகோவா ர◌ஃப்பா -இன்று
இயேசு நாமத்தினால்
இயேசு இரத்தத்தினால்
தூய ஆவியின் வல்லமையால் (2)

1. நிமிரமுடியாத மகளை அன்று
நிமிர்ந்து துதிக்கச் செய்தீர்
நிரந்தாரமாய் குணமாக்கி
உமக்காய் வாழச் செய்தீர் -சுகம்

2. தொழுநோய்கள் சுகமானதே
உம் திருக்கரம் தொட்டதால்
கடும் வியாதிகள் விலகியதே
உமது வல்லமையால்

3. பிறவியிலே முடவர் அன்று
உம் நாமத்தில் நடந்தாரே
பெரும்பாடுள்ள பெண் அன்று
சாட்சி பகர்ந்தாளே

4. லேகியோனை தேடிச் சென்று
உம்பாதம் அமரச் செய்தீர்
தெக்கப்போலி நாடெங்கும்
உம் நாமம் பரவச் செய்தீர்

5. பேதுரு மாமி குணமாக்கினீர்
பணிவிடை செய்ய வைத்தீர்
பேய் பிடித்த அநேகரை
அதட்டி விடுவித்தீர்

Tamil Hymns

1306. சுகம் பெலன் எனக்குள்ளே பாய்ந்து

சுகம் பெலன் எனக்குள்ளே
பாய்ந்து செல்லுதே
வல்லமை நதியாய் பரவி பாயுதே
இரத்தக்குழாய்கள் கண்கள் செவி வாய்
தமனி எங்கும் பாய்கின்றதே

உம் வல்லமையால் சுகமானேன்
உம் வார்த்தையால் சுகமானேன்
உம் தழும்புகளால் சுகமானேன்
உம் தயவினால் சுகமானேன் - சுகம் பெலன்

இயேசையா இரட்சகரே
சுகம் தரும் என் தெய்வமே -உன் வல்லமை

1. முதுகுத்தண்டு இதயம்
மூளை நரம்பு இரத்தம்
வல்லமை பாய்கின்றதே
குடல் தோல் கனையம் இரைப்பை வயிறு
சதை எங்கும் பாய்கின்றதே

2. முட்டு ஈரல் மூட்டு கைகால் திசுக்கள்
வல்லமை பாய்கின்றதே
எலும்பு நரம்புகள் சிறுநீரகங்கள்
தலையெங்கும் பாய்கின்றதே

3. கர்ப்பப்பை கட்டி காயங்கள் புண்கள்
வல்லமை பாய்கின்றதே
முடக்குவாதங்கள் நுரையீரல்கள்
சுவாசம் எங்கும் பாய்கின்றதே

4. புதிய படைப்பு நானே
தேவ புத்திரன் ஆனேன்
இயேசுவே என் குடும்ப மருத்துவர் -அவர்
நாமத்தினால் இரத்தத்தினால் சுகமானேன்

Tamil Hymns

1307. சுத்த ஆவீ என்னில் தங்கும்

1. சுத்த ஆவீ, என்னில் தங்கும், நானும் சுத்தன் ஆகவே;
பாவ அழுக்கெல்லாம் நீக்கும் உம் ஆலயமாகவே
என்னை நீர் சிங்காரியும், வாசம் பண்ணும் நித்தமும்

2. சத்திய ஆவீ, என்னில் தங்கும், நானும் சத்தியன் ஆகவே;
தெய்வ பக்தி என்னில் முற்றும் வளர்ந்தேறச் செய்யுமே;
நீர் என்னில் பிரவேசியும்; ஆண்டு கொள்ளும் நித்தமும்

3. நேச ஆவீ , என்னில் தங்கும், நானும் நேசன் ஆகவே;
துர்ச் சுபாவம் போகப் பண்ணும்; அன்பில் நான் வேரூன்றவே
அன்பின் ஸ்வாலை எழுப்பும், மென்மேலும் வளர்த்திடும்

4. வல்ல ஆவீ, என்னில் தங்கும், நானும் வல்லோன் ஆகவே,
சாத்தான் என்னைத் தூண்டிவிடும் போது ஜெயங் கொள்ளவே
நீர் என் பக்கத்தில் இரும், என்னைப் பலப்படுத்தும்

5. நல்ல ஆவீ, என்னில் தங்கும், நானும் நல்லோன் ஆகவே;
பகை, மேட்டிமை , விரோதம், மாற்றும் தீமை யாவுமே
என்னை விட்டகற்றுமேன், என்னைச் சீர்ப்படுத்துமேன்

6. தெய்வ ஆவீ, என்னில் தங்கும், நானும் உம்மில் தங்கவே;
மோட்ச பாதையில் நடத்தும், இயேசுவின் முகத்தையே
தெளிவாகக் காண்பியும்; என்னை முற்றும் ரட்சியும்

Tamil Hymns

1308. சுத்தம் பண்ணப்படாத தேசமே

சுத்தம் பண்ணப்படாத தேசமே
சுத்திகரிக்க உன்னைத் தருவாயோ
ஸ்திரப்படாத தேசமே
நதியின் வஸ்திரம் தரிப்பாயோ

1. வேதத்தை சுமக்கும் சடர்களே
வேண்டாத சுமைகளை விட்டுவிடுங்கள்
பாவத்தை சுமக்கும் பாரதத்தில்
துய்மைக்கு மாதிரி காட்டிடுங்கள்

2. தேசத்தை ஆளும் பிரபுக்களே
தாழ்மையின் குரலுக்கு செவிகொடுங்கள்
தேவைக்கு அதிகம் இருப்பதெல்லாம்
ஏழைக்கு தானம் கொடுத்திடுங்கள்

3. பெலனான வயதுள்ள வாலிபரே
தொலைநோக்க கண்களை ஏறெடுங்கள்
எதிர்காலம் கனவாக மறைவதற்குள்
சுடராக இருளுக்குள் ஒளி கொடுங்கள்

Tamil Hymns

1309. சுந்தரப் பரம தேவ மைந்தன்

சுந்தரப் பரம தேவ மைந்தன்
ஏசு கிறிஸ்துவுக்குத் தோத்திரம்
புகழ்ச்சி நித்ய கீர்த்தனம் என்றும்!

அந்தரம் புவியும் தந்து
சொந்த ஜீவனையும் ஈந்து
ஆற்றினார் நமை ஒன்றாய்
கூட்டினார் - அருள் முடி சூட்டினார்
கிருபையால் தேற்றினாரே துதி

1. பாதகப் பசாசால் வந்த தீதெனும்
பவத்தால் நொந்த பாவிகளான
நமை உசாவி மீட்டாரே - வேத
பிதாவுக் குகந்த ஜாதியாகக் கூட்ட வந்த
மேசியாவைப் பற்றும் விசு வாச வீட்டாரே
கோதணுகா நீதிபரன் பாதமதின்
ஆதரவில் கூடுங்கள் பவத்துயர் போடுங்கள்
ஜெயத்தைக் கொண்டாடுங்கள் - துதி
சொல்லிப் பாடுங்கள், பாடுங்கள் என்றும்

2. விண்ணிலுள்ள ஜோதிகளும்
எண்ணடங்காச் சேனைகளும்
விந்தையாய்க் கிறிஸ்துவைப் பணிந்து
போற்றவே - மண்ணிலுள்ள ஜாதிகளும்
நண்ணும் பல பொருள்களும்
வல்லபரன் எனத் துதி சொல்லி ஏத்தவே
அண்ணலாம் பிதாவுக்கொரே
புண்ணியகுமாரனைக் கொண்டாடிட
அவர் பதம் தேடிட வெகு திரள் கூடிடத்
துதிபுகழ் பாடிடப் பாடிட என்றும்

3. சத்தியத் தலைவர்களும் வித்தகப்
பெரியார்களும் சங்கத்தோர்களுங்
கிருபை தங்கி வாழவே - எத்திசை
மனிதர்களும் பக்தர் விசுவாசிகளும்
ஏக மிகுஞ் சமாதான மாக வாழவே
உத்தம போதகர்களும்
சத்ய திருச்சபைகளும் - உயர்ந்து
வாழ தீயோன் பயந்து தாழ மிக நயந்து

Tamil Hymns

கிறிஸ்துவுக்கு ஜெயந்தான், நயந்தான் என்றும்

Tamil Hymns

1310. சுமந்து காக்கும் இயேசுவிடம்

சுமந்து காக்கும் இயேசுவிடம்
சுமைகளை இறக்கி வைத்திடுவோம்

1. தாயின் வயிற்றில் தாங்கியவர்
தலை நரைக்கும்வரை தாங்கிடுவார்
விடுதலை கொடுப்பவர் இயேசுவன்றோ
வியாதிகள் தீமைகள் வென்றுவிட்டோம்

2. ஆயன் ஆட்டை சுமப்பது போல்
ஆண்டவர் நம்மைச் சுமக்கின்றார்
பசும்புல் மேய்ச்சல் நமக்குண்டு
பயப்படாதே சிறுமந்தையே

3. கண்ணின் மணிபோல் காக்கின்றார்
கருத்தாய் நம்மைப் பார்க்கின்றார்
கழுகு போல் சிறகின் மேல் வைத்து
காலமெல்லாம் நம்மைச் சுமக்கின்றார்

Tamil Hymns

1311. சுய அதிகாரா சுந்தரக் குமாரா

சுய அதிகாரா சுந்தரக் குமாரா
சொந்த உலகந்தனை துறந்த மரிமைந்தனான

1. அகிலத்தை ஒரு சொல்லில் அமைத்தனையே
அதை ஒரு பம்பரம் போலிசைத்தனையே
துகில் போல் ஆகாயமதை லகுவாய் சமைத்ததிலே
ஜோதி பல மாதிரியாய்த் தூக்கி வைத்தி லங்கவைத்த

2. கரை மத கற்றகுளம் புவியிலுண்டோ
கடலுக்கவன் சொல்லையன்றிக் கரைகளுண்டோ
திரை திரையாக ஜலம் மலைபோற் குவிழ்ந்தெழுந்தும்
சேதமின்றிப் பூதலத்தை மா தயவாய் பாதுகாக்கும்

3. நரர் பலர் கூடி ஒரு மனை முடிக்க
இராப்பகலுழைத்திட்டாலும் நாள் பிடிக்குமே
மர முயிர் தாது இன்னும் வான் புவி யனைத்தையும் ஓர்
வார்த்தையால் ஷணப் பொழுதில் நேர்த்தியாய் உண்டாக்கி வைத்த

4. பாவ மனுவோர் முகத்தைப் பார்த்தீரே
பாவப்பிணி தோள் சுமந்து தீர்த்தீரே
சுவாமி உம்மைப் பற்றும் சுவாமி தாசருக் கிரங்க வேண்டும்
தஞ்சம் தஞ்சம் ஓடி வந்தோம் கெஞ்சமனுக் கேட்டருள்வாய்

Tamil Hymns

1312. சூரியன் அஸ்தமித்திருண்டிடும் வேளையில்

சூரியன் அஸ்தமித்திருண்டிடும் வேளையில்
சூழ்ந்தனர் பிணியாளிகள் - உனை நெருங்கித்
துயர் தீர வேண்டினரே

இன்னேரம் உன்தயை தேடும் இவ்வடியாரின்
இன்னலெல்லாம் ஓட அன்பே உன்னருள் ஈவாய்

1. பேயின் அகோரத்வம் உனைக்கண்டு பறந்தது
நோயும் நிர்பந்தமும் நீ தொட ஒழிந்தன
வாய்க்கும் சுகானந்தம் உனை நம்பினோர்க்கெல்லாம்
தாய்க் கருணையுடையோய் இன்றும் உன்தயை கூர்வாய் - சூரி

2. இஷ்டரின் துரோகத்தால் இடர் அடைந்துழல்வோரும்
துஷ்டர் செய்துன்பத்தால் தயங்கித் தவிப்போரும்
கஷ்டமெல்லாம் தீர்ந்து களிக்கக் கருணை கூர்வாய்
அஷ்டதிக்கும் ஆள்வோய் அபயம் அபயம் என்றோம் - சூரி

3. எளியோர் வறுமையில் இன்னருள் ஊற்றுவாய்
விழிப்போடிரவிற் கண்ணீர் விடுவோரைத் தேற்றுவாய்
வழி தப்பி அலைவோரை வழி காட்டி ஆற்றுவாய்
பழி பாவம் துணிவோரைத் தடுத்தாண்டு மாற்றுவாய் - சூரி

4. சருவ சக்தி சதா காலமும் உனதல்லோ
வருத்த மெல்லாம் ஓடும் வார்த்தை ஒன்று சொல்ல
உரித்தாய்க் கரத்தினால் உன்னடியாரைத் தொடுவாயே
கருகுங் கங்குலிலும் யாம் களிப்பாய்ச் சுகிப்போமே - சூரி

Tamil Hymns

1313. சூரியன் மறைந்து அந்தகாரம் சூழ்ந்தது

சூரியன் மறைந்து அந்தகாரம் சூழ்ந்தது
சோர்ந்த என் தேகம் அயர்ந்துமே
இளைப்பாறப் போகுது - தூயா
கிருபை கூர்ந்து காருமையா

1. பகல் முழுவதும் பட்சமாய்
என்னைப் பாதுகாத்தீரே (2) - சகல
தீமையுமகல வைத்தருள் நலமுந்தந்தீரே
சுவாமி உந்தன் பாதம் பணிகிறேன்

2. பாதகம் மிகப் புரிந்தேன் பரம நாயகா
பாவி நானிந்த நாளிலும்
பல தீவினைசெய்தேனையா
கோபமின்றி என் பாவம் பொறுத்திடுவாய்

3. ராவில் வரும் மோசமொன்றும் என்னைச்
சேராமல் (2) - பேயின் சர்ப்பனை
தீயசொப்பனம் மனதில் நேராமல்
நேயா நின் நல்தூதர் காவல் தா

4. ஆத்துமம் சரீரம் எனக்கான யாவையும்
அப்பனுன் கையிலொப்புவித்து
நான் அமர்ந்து தூங்குவேன்
ஐயனே உன் பொன்னடி சரணம்

Tamil Hymns

1314. செடியே திராட்சைச் செடியே

செடியே திராட்சைச் செடியே
கொடியாக இணைந்து விட்டேன்

உம் மடிதான் என் வாழ்வு
உம் மகிழ்ச்சிதான் என் உயர்வு

1. கத்தரித்தீரே தயவாய்
கனிகள் கொடுக்கும் கிளையாய்
சுத்தம் செய்தீரே இரத்தத்தால்
சுகந்த வாசனையானேன்

2. பிதாவின் மகிமை ஒன்றே
பிள்ளை எனது ஏக்கம்
மிகுந்த கனிகள் கொடுப்பேன்
உகந்த சீடனாவேன்

3. ஆயன் சத்தம் கேட்டு
உம் அன்பில் நிலைத்து வாழ்வேன்
பிரிக்க இயலாதையா
பறிக்க முடியாதையா

Tamil Hymns

1315. சேராபீன் தூதர்கள் போற்றிடும்

சேராபீன் தூதர்கள் போற்றிடும் பரிசுத்தர்
மகிமையை உடையாக
அணிந்துள்ள மகத்துவர்
பாத்திரர் நீரே பரிசுத்தர் நீரே
ஸ்தோத்திம் பாடியே புகழ்ந்திடுவேன்

1. தழும்புள்ள கரங்களினாலே
காயங்கள் ஆற்றிடுவீரே
கண்ணீரை துருத்தியில் வைத்து
பதில் தரும் நல்லவரே

2. சுத்தர்கள் தொழுதிடும் நாமம்
பரலோக தகப்பனின் நாமம்
ராஜ்ஜியம் வல்லமை கனமும்
உமக்கே சொந்தமாகும்

1316. சேர் ஐயா எளியேன்

சேர், ஐயா, எளியேன் செய்
பவவினை தீர் ஐயா

1. பார், ஐயா, உன் பதமே கதி - ஏழைப்
பாவிமேல் கண் பார்த்திரங்கி

2. தீதினை உணர்ந்த சோரனைப் - பர
தீசிலே அன்று சேர்க்கலையோ?

3. மாசிலா கிறிஸ் தேசுபரா, - உனை
வந்தடைந்தனன் தஞ்சம், என்றே

4. தஞ்சம் என்றுனைத் தான் அடைந்தோர் - தமைத்
தள்ளிடேன் என்று சாற்றினையே

5. பாவம் மா சிவப்பாயினும் - அதை
பஞ்செனச் செய்வேன், என்றனையே

6. தீயர்க்காய்ப் பிணையாய் மரித்த - யேசு
தேவனே, கருணாகரனே

Tamil Hymns

1317. சேற்றிலிருந்து தூக்கினார்

சேற்றிலிருந்து தூக்கினார்
கன்மலை மேல் நிறுத்தினார் -2
பாவமான வாழ்கையை
மாற்றி தந்தாரே
துன்பமான வாழ்க்கையில்
இன்பம் தந்தாரே

அவர் எந்தன் கன்மலை (2)
அவர் எந்தன் கன்மலையானார்

1318. சேனைகளாய் எழும்பிடுவோம்

சேனைகளாய் எழும்பிடுவோம்
தேசத்தை கலக்கிவோம் - புறப்படு
இந்தியாவின் எல்லையெங்கும்
இயேச நாமம் சொல்லிடுவோம் புறப்படு

புறப்படு புறப்படு தேசத்தை
கலக்கிடுவோம் புறப்படு (2)

1.பாதாளம் சென்றிடும் பரிதாப
மனிதர்களை தடுக்க வேண்டாமா
பட்டணங்கள் கிராமங்களில்
கட்டப்பட்ட மனிதர்களை அவிழ்க்க வேண்டாமா

2. உலக இன்பம் போதுமென்று பரலோகம்
மறந்தவர்கள் பார்வையடையணும்
பாவசேற்றிலே மூழ்கி பணத்திற்காக
வாழ்பவர்கள் மனந்திரும்பணும்

3. அறுவடையோ மிகுதி ஆட்களோ குறைவு
அறியாயோ மகன..
பயிர்கள் முற்றி அறுவடைக்கு
தயாராக உள்ளது தெரியாதா மகளே..

4. இயேசு நாமம் தெரியாத எத்தனையோ
கோடிகள் இந்தியாவிலே
இன்னும் சும்மா இருப்பது நியாயம்
இல்லையே தம்பி இன்றே புறப்படு

5. வழிதெரியா ஆடுகள் தொய்ந்து போன
இதயங்கள் லட்சங்கள் உண்டு
உண்மை தெய்வம் அறியாது குருடர்களாய்
வாழ்பவர்கள் கோடிகள் உண்டு

புறப்பட்டோம் புறப்பட்டோம்
தேசத்தை கலக்கிடவே புறப்பட்டோம்

சேனைகளாய் எழும்பிடுவோம்
தேசத்தை கலக்கிடவே புறப்பட்டோம்
இந்தியாவின் எல்லையெங்கும்
இயேசு நாமம் சொல்லிடவே புறப்பட்டோம்

Tamil Hymns

1319. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்

சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்
யாக்கோபின் தேவன் நமக்கு
உயர்ந்த அடைக்கலம்

பூமி நிலை மாறினாலும்
மலைகள் பெயர்ந்து போனாலும்
பர்வதங்கள் அதிர்ந்தாலும்
நாம் பயப்படோம்

1. தேவன் பூமி அனைத்திற்கும் இராஜா
கருத்துடனே போற்றி பாடுவோம்
யூத இராஜ சிங்கம் நம் கர்த்தர்
தாழ விழுந்து பணிந்து தொழுகுவோம்

2. தேவன் மகா உன்னதமானவர்
கெம்பீரமாக போற்றி பாடுவோம்
கர்த்தர் மிகவும் துதிக்கப்படத் தக்கவர்
பாடி அவரை மகிமைப்படுத்துவோம்

3. கர்த்தர் துதிகளில் பயப்படத்தக்கவர்
பயத்துடனே போற்றி பாடுவோம்
தமக்கு பயந்த பிள்ளைகளை காப்பவர்
அவர் கிருபையை நினைத்து போற்றி பாடுவோம்

4. தேவன் நமது இரட்சணயக் கன்மலை
ஆர்ப்பரித்து போற்றி பாடுவோம்
கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்படத் தக்கவர்
ஆனந்தமாய் ஆர்ப்பரித்துப் பாடுவோம்

4. தேவன் சத்தியத்தோடு நியாயந் தீர்ப்பார்
பயத்துடனே அவரை சேவிப்போம்
அவர் சீக்கிரமாய் நியாயந் தீர்க்க வருகிறார்
பரிசுத்தமாய் அவரை கிட்டி சேருவோம்

Tamil Hymns

1320. சேனைகளின் தேவன் நம்மோடு

சேனைகளின் தேவன்
நம்மோடு இருக்கின்றார்
நல்லவர் அவர் வல்லவர்
அடைக்கலமானவர்

1. எரிகோ போன்ற சோதனைகள்
எதிரிட்டு வந்தாலும்
தகர்த்திடுவார் நொறுக்கிடுவார்
ஜெயத்தை தந்திடுவார் - 2

2. சேனையின் கர்த்தரை நம்பிடுவோம்
பாக்கியம் அடைந்திடுவோம்
உயர்த்திடுவார் தாங்கிடுவார்
நன்மையால் நிரப்பிடுவார்

3. ஆவியின் வரத்தை தந்திடுவார்
ஆவியை பொழிந்திடுவார்
விரைந்திடுவாய் எழும்பிடுவாய்
சீயோனில் சேர்ந்திடுவாய்

4. சபையோரே நாம் எழும்பிடுவோம்
வசனத்தைப் பிடித்திடுவோம்
வென்றிடுவோம் சென்றிடுவோம்
ஊழியம் செய்திடுவோம்

1321. சேனைகளின் கர்த்தர் நல்லவரே

1. சேனைகளின் கர்த்தர் நல்லவரே
சேதமின்றி நம்மை காப்பவரே
சோர்ந்திடும் நேரங்கள் தேற்றிடும் வாக்குகள்
சோதனை வென்றிடத் தந்தருள்வார்

எக்காலத்தும் நம்பிடுவோம்
திக்கற்ற மக்களின் மறைவிடம்
பக்கபலம் பாதுகாப்பும்
இக்கட்டில் ஏசுவே அடைக்கலம்

2. வெள்ளங்கள் புரண்டு மோதினாலும்
உள்ளத்தின் உறுதி அசையாதே
ஏழு மடங்கு நெருப்பு நடுவிலும்
ஏசு நம்மோடங்கு நடக்கின்றார்

3. ஆழத்தினின்றும் நாம் கூப்பிடுவோம்
ஆத்திரமாய் வந்து தப்புவிப்பார்
கப்பலின் பின்னனி நித்திரை செய்திடும்
கர்த்தர் நம்மோடுண்டு கவலை ஏன்

4. காத்திருந்து பெலன் பெற்றிடுவோம்
கர்த்தரின் அற்புதம் கண்டிடுவோம்
ஜீவனானாலும் மரணமானாலும் நம்
தேவனின் அன்பில் நிலைத்திருப்போம்

5. ஏசு தம் யுத்தங்கள் நடத்துவார்
ஏற்றிடுவோம் என்றும் ஜெயக்கொடி
யாவையும் ஜெயித்து வானத்தில் பறந்து
ஏசுவை சந்தித்து ஆனந்திப்போம்

Tamil Hymns

1322. சேனையதிபன் நம் கர்த்தருக்கே

1. சேனையதிபன் நம் கர்த்தருக்கே
செலுத்துவோம் கனமும் மகிமையுமே
அற்புதமே தம் அன்பெமக்கு
அதை அறிந்து அகமகிழ்வோம்

ஜெயக் கிறிஸ்து முன் செல்கிறார்
ஜெயமாக நடத்திடுவார்
ஜெயக்கீதங்கள் நாம் பாடியே
ஜெயக் கொடியும் ஏற்றிடுவோம்
ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே

2. தாய் மறந்தாலும் நான் மறவேன்
திக்கற்றோராய் விட்டு விடேன்
என்றுரைத்தெம்மைத் தேற்றுகிறார்
என்றும் வாக்கு மாறிடாரே

3. மேய்ப்பனில்லாத ஆடுகட்கே
நானே நல்ல மேய்ப்பன் என்றார்
இன்பச் சத்தம் பின் சென்றிடுவோம்
இன்பப் பாதைக் காட்டிடுவார்

4. சத்துருவின் கோட்டை தகர்ந்தொழிய
சத்தியம் நித்தியம் நிலைத்தோங்க
சாத்தானின் சேனை நடுங்கிடவே - துதி
சாற்றி ஆர்ப்பரிப்போம்

5. கறை திரை முற்றும் நீங்கிடவே
கர்த்தர் நம்மைக் கழுவிடுவார்
வருகையில் எம்மைச் சேர்க்கும் வரை
வழுவாமல் காத்துக் கொள்வார்

Tamil Hymns

1323. சேனையின் கர்த்தா

1. சேனையின் கர்த்தா
    சீர்நிறை யெகோவா!
  உம் வாசஸ்தலங்களே
    எத்தனை இன்பம்!
  கர்த்தனே என்றும்
    அவற்றை வாஞ்சித்திருப்பேன்.
2. ராஜாதி ராஜா
    சேனைகளின் கர்த்தா!
  உம் பீடம் என் வாஞ்சையே
    உம் வீடடைந்தே
  உம்மைத் துதித்தே
    உறைவோர் பாக்கியவான்களே.
3. சேனையின் கர்த்தா!
    சீர் பெருகும் நாதா!
  எம் கேடயமானோரே!
    விண்ணப்பம் கேளும்
  கண்ணோக்கிப் பாரும்,
    எண்ணெய் வார்த்த உம் தாசனை.
4. மன்னா நீர் சூரியன்
    என் நற்கேடயமும்;
  மகிமை கிருபை ஈவீர்;
    உம் பக்தர் பேறு
  நன்மை அநந்தம்
    உம்மை நம்புவோன் பாக்கியவான்.
5. திரியேக தேவே!
    மகிமை உமக்கே
  வளமாய் உண்டாகவே!
    நித்தியம் ஆளும்,
  சதா காலமும்

    உளதாம்படியே ஆமென்

Tamil Hymns

1324. சொன்னபடி உயிர்த்தெழுந்தார்

சொன்னபடி உயிர்த்தெழுந்தார்
சொல்தவறா நம் இயேசு
அல்லேலூயா ஆனந்தமே
அன்பர் இயேசு உயிர்த்தெழுந்தார்

1. சாவே உன் வெற்றி எங்கே
சாவே உன் கொடுக்கு எங்கே
சாவு வீழ்ந்தது வெற்றி கிடைத்தது
சகல அதிகாரம் நமக்கு உண்டு

2. விண்ணும் ஒழிந்து போகும்
மண்ணும் மறைந்து போகும்
ஆண்டவர் வாக்கோ இன்றும்
என்றும் அழியாதது மாறாதது

3. கிறிஸ்து உயிர்த்ததினால்
நாமும் உயிர்த்தெழுவோம்
ஆண்டவர் வருகை சீக்கிரம் அன்றோ
அபிஷேகம் பெற்று காத்திருப்போம்

1325. சொந்தம் என்று சொல்லிக் கொள்ள

சொந்தம் என்று சொல்லிக் கொள்ள
உம்மை விட யாரும் இல்ல
சொத்து என்று அள்ளிக் கொள்ள
உம்மை விட ஏதும் இல்ல

இயேசுவே இயேசுவே
எல்லாம் இயேசுவே எல்லாம் இயேசுவே

1. உம் தழும்புகளால் நான் சுகமானேன்
உம் வார்த்தையினால்
நான் பெலனானேன்

2. உம் கிருபையினால் நான்
பிழைத்துக் கொண்டேன்
உம் பாசத்தினால்
நான் திகைத்துப் போனேன்

3. உம் ஆவியினால்
நான் பிறந்து விட்டேன்
உம் ஊழியத்துக்காய்
நான் உயிர் வாழ்வேன்

Tamil Hymns

1326. சொல்லரும் மெய்ஞ்ஞானரே

சொல்லரும் மெய்ஞ்ஞானரே, மேன்மைப்ரபுவே,
சுரூபத் தரூபக் கோனாரே - உரை
வல்லறஞ் சிறந்து மனுவானாரே - உயர்
இல்லறந் துறந்து குடிலானாரே - உரை

1. மாடாயர் தேடும் வஸ்துபகாரி - மிகு
கேடாளர் நாடுங் கிறிஸ்து சற்காரி,
வையகம் புரப்பதற்கு வந்தாரே - அருள்
பெய்து நவமும் தவமுந் தந்தாரே - உரை

2. அச்சய சவுந்தர அசரீரி - அதி
உச்சித சுதந்தர அருள்வாரி,
ஐயா வல்லாவே, மாதேவா - ஓ!
துய்யா, நல்லாவே, ஏகோவா - உரை

3. பாவ வினை யாவையுந் தீர்த்தாரே - உயர்
தேவ சபையில் எமைச் சேர்த்தாரே
செல்லமாய் முகம் பார்த்தாரே - பெரும்
செல்வம் போல் எமைச் சேர்த்தாரே - உரை

Tamil Hymns

1327. சோராதே என் மனமே

1. சோராதே என் மனமே
சோர்ந்து போகாதே என் உள்ளமே
மாறாத கர்த்தர் உன் பக்கம் இருக்கிறார்
பாராதவர் போல தான் - உன்னை

2. அஞ்சாதே ஒன்றுக்கும் நீ
அஞ்சித் துஞ்சாதே ஏதுக்கும் நீ
பஞ்சாய்ப் பறந்திடும் சஞ்சலம்
யாவுமே கெஞ்சிடும் உந்தனக்கு

3. பொன்னை புடமிடுவார்
அதின் மண்ணை அகற்றிடுவார்
உன்னை நேசிப்பதால் இந்த பணி செய்வார்
உனக்கேற்ற கிரீடம் செய்வார்

4. ஆண்டவர் பிள்ளைகளை
நெருக்கிடும் உபத்திரவமே
வேண்டிக்கொள்ளும்போது கலங்குவார்
புது பெலன் -(நீயும்) மீண்டும் ஜெயித்திடவே

5. வடியாதே கண்ணீர் இன்று
மனம் மடிவடையாதே நின்று
இடி மேகம் அகன்றிடும் - விடி வெள்ளி
ஜொலித்திடும் நடுப்பகல் கதிர் வீசிடும்

Tamil Hymns

1328. சோர்ந்து போகாதே என் நண்பனே

சோர்ந்து போகாதே என் நண்பனே
மனம் உடைந்து போகாதே என் பிரியனே
கடும் புயல் வரினும் காற்று வீசினும்
நீ கலங்காதே மனமே

1. ஆத்ம நேசர் முன் செல்கையில்
நான் என்றுமே அஞ்சிடேன் (2)
என் கரம் பிடித்து மகிமை தனில்
அவர் தினமும் நடத்துவார்

இயேசு உன்னை தேற்றிடுவார்
இயேசு உன்னைக் காத்திடுவார் - இயேசு
உன்னை உயர்த்துவார் நண்பனே

2. நண்பர் உன்னை கைவிட்டாலும்
நம்பினோர் உன்னைத் தள்ளிவிட்டாலும் (2)
மனம் கலங்காதே திகையாதே
உன் இயேசு இருக்கின்றார்

Tamil Hymns

1329. சோர்ந்து போகாதே மனமே

சோர்ந்து போகாதே மனமே
சோர்ந்து போகாதே போராட
சோர்ந்து போகாதே

கண்டுனை அழைத்த தேவன்
கைவிடுவாரோ

1. வாக்களித்த தேவனை நீ
பாடிக் கொண்டாடு
ஊக்கமான ஆவி உன்னைத்
தாங்க மன்றாடு

2. துன்பங்கள் தொல்லைகள் உன்னைச்
சூழ்ந்து கொண்டாலும்
அன்பர் உன்னைத் தேற்றும் நேரம்
ஆனந்தமல்லோ

3. சோதனைகளை ஜெயிப்பேன்
பாக்கியவானல்லோ
ஜீவகிரீடம் சூடும் நேரம் என்ன பேரின்பம்

Tamil Hymns

1330. சோர்வான ஆவியை நீக்கும்

1. சோர்வான ஆவியை நீக்கும்
துயர ஆவியை அகற்றும்
கண்ணீரின் மத்தியில் வாரும்
அப்பா வேண்டுகிறேன்

இயேசுவே இயேசுவே இயேசுவே
எல்லாம் எனக்கு நீரே

2. காத்திருந்து பெலன் பெறுவேன்
கழுகு போல பறப்பேன்
காகத்தின் வம்சம் நான் அல்ல
சிங்கத்தின் குட்டி நானே

Tamil Hymns

1331. ஞான நாதா வானம் பூமி

1. ஞான நாதா வானம் பூமி
நீர் படைத்தீர்
ராவு பகல் ஓய்வு வேலை
நீர் அமைத்தீர்
வான தூதர் காக்க எம்மை
ஊனமின்றி நாங்கள் தூங்க
ஞான எண்ணம் தூய கனா
நீர் அருள்வீர்.

2. பாவ பாரம் கோப மூர்க்கம்
நீர் தீர்த்திடும்
சாவின் பயம் ராவின் அச்சம்
நீர் நீக்கிடும்
காவலராய்க் காதலராய்
கூடத் தங்கி தூய்மையாக்கும்
ராவின் தூக்கம் நாளின் ஊக்கம்
நீர் ஆக்கிடும்.

3. நாளில் காரும் ராவில் காரும்
ஆயுள் எல்லாம்
வாழும் காலம் மா கரத்தால்
அமைதியாம்
சாகும் நேரம் மோட்சம் சேர்ந்து
ஆகிடவே தூதர்போன்று
ஆண்டிடவே மாட்சியோடு
உம்மோடெனடறும்.

1332. தகப்பனே தந்தையே தலைநிமிரச்

தகப்பனே தந்தையே
தலைநிமிரச் செய்பவர் நீரே

கேடகம் நீரே மகிமையும் நீரே
தலை நிமிரச் செய்பவர் நீரே

1. எதிரிகள் எவ்வளவாய் பெருகிவிட்டனர்
எதிர்த்தெழுவோர் எத்தனை
மிகுந்து விட்டனர் - ஆனாலும்
சோர்ந்து போவதில்லை
தளர்ந்து விடுவதில்லை - தகப்பன் நீர் தாங்குகிறீர்
என்னைத் தள்ளாட விடமாட்டீர்

2. படுத்துறங்கி மகிழ்வுடனே விழித்தெழுவேன்
ஏனெனில் கர்த்தர் என்னை ஆதரிக்கின்றீர்
அச்சமில்லையே கலக்கமில்லையே
வெற்றி தரும் கர்த்தர் என்னோடு
தோல்வி என்றும் எனக்கில்லையே

3. ஒன்றுக்கும் நான் கலங்காமல் ஸ்தோத்தரிப்பேன்
அறிவுக்கெட்டா பேர் அமைதி பாதுகாக்குதே
நீர் விரும்பத்தக்கவை,தூய்மையானவை
அவைகளையே தியானம் செய்கின்றேன்
தினம் அறிக்கை செய்து ஜெயம் எடுப்பேன்

Tamil Hymns

1333. தடுக்கி விழுந்தோரை தாங்குகிறீர்

தடுக்கி விழுந்தோரை தாங்குகிறீர்
தாழ்த்தப்பட்டோரை தூக்குகிறீர்

தகப்பனே தந்தையே
உமக்குத்தான் ஆராதனை

1. போற்றுதலுக்குரிய பெரியவரே
தூயவர் தூயவரே
எல்லாருக்கும் நன்மை செய்பவரே
இரக்கம் மிகுந்தவரே

உம்நாமம் உயரணுமே
அது உலகெங்கும் பரவணுமே

2. உயிரினங்கள் எல்லாம் உம்மைத்தானே
நோக்கிப் பார்க்கின்றன
ஏற்றவேளையில் உணவளித்து
ஏக்கமெல்லாம் நிறைவேற்றுவீர்

3. அன்பு கூறும் எங்களை அரவணைத்து
அதிசயம் செய்கின்றீர்
பற்றிக்கொண்ட யாவரையும் பாதுகாத்து
பரலோகம் கூட்டிச் செல்வீர்

4. உம் அரசின் மகிமை, மாட்சிதனை
அறிவித்து மகிழ்ந்திடுவேன்
உம் வல்ல செயல்கள் அனைத்தையுமே
தியானித்து துதித்திடுவேன்

5. உம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும்
அருகில் இருக்கின்றீர்
கூப்பிடுதல் கேட்டு, குறை நீக்குவீர்
விருப்பம் நிறைவேற்றுவீர்

Tamil Hymns

1334. தண்ணீர்கள் கடக்கும்போது என்னோடு

தண்ணீர்கள் கடக்கும் போது
என்னோடு இருக்கிறீர்
அக்கினியில் நடக்கும்போது
கூடவே வருகின்றீர்
மூழ்கிப் போவதில்லை - நான்
எரிந்து போவதில்லை

1. என்மேல் அன்புகூர்ந்து
எனக்காய் இரத்தம் சிந்தி
என் பாவம் கழுவி விட்டீரே
எனக்கு விடுதலை தந்து விட்டீரே
நன்றி ஐயா, நன்றி ஐயா

2. உமது பார்வையிலே
விலையேற பெற்றவன் நான்
மதிப்பிற்கு உரியவன் நானே - இன்று
மகிழ்வுடன் நடனமாடுவேன்

3. பாலைவன வாழ்க்கையிலே
பாதைகள் காணச் செய்தீர்
ஆறுகள் ஓடச் செய்தீரே - தினம்
ஆபத்திலே பாடி மகிழச் செய்தீரே

4. பெற்ற தாய் தனது
பிள்ளையை மறந்தாலும்
நீர் என்னை மறப்பதில்லையே - உமது
உள்ளங்கையில் பொறித்து வைத்துள்ளீர்

5. என்னை படைத்தவரே
உருவாக்கி மகிழ்ந்தவரே
பெயர் சொல்லி அழைத்துக் கொண்டீரே
உமக்கு உரிமையாக்கிக் கொண்டீரே

6. என்னை மீட்கும்படி
தன்னை பலியாக்கினீர்
எனக்குள் வந்து விட்டீரே -என்னை
ஆட்கொண்டு நடத்திச் செல்வீரே

Tamil Hymns

1335. தந்தானைத் துதிப்போமே

தந்தானைத் துதிப்போமே
திருச் சபையாரே கவி பாடிப்பாடி
விந்தையாய் நமக் கனந்தனந்தமான,
விள்ளற்கரியதோர் நன்மை மிக மிகத்

1. ஒய்யாரத்துச் சீயோனே
நீயும் மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து
ஒய்யாரத்துச் சீயோனே - ஐயனேசுக்கு
நீன் கையைக் கூப்பித் துதி செய்குவையே
மகிழ் கொள்ளுவையே நாமும்

2. கண்ணாரக் களித்தாயே நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து
கண்ணாரக் களித்தாயே
எண்ணுக்கடங்காத எத்தனையோ நன்மை
இன்னுமுன்மேற் சோனா
மாரிபோற் பெய்துமே

3. சுத்தாங்கத்து நற்சபையே உனை
முற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சுத்தாங்கத்து நற்சபையே - சத்துக்
குலைந்துனைச் சத்தியாக்கத் தமின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம்

4. தூரம் திரிந்த சீயோனே - உனைத்
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி
தூரம் திரிந்த சீயோனே
ஆரங்கள் பூட்டி அலங்கரித்து நினை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்னை!

5. சிங்காரக் கன்னிமாரே - உம்
அலங்காரக் கும்மி அடித்துப் படித்து,
சிங்காரக் கன்னிமாரே
மங்காத உம் மணவாளன் யேசுதனை
வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும்

Tamil Hymns

1336. தந்தேன் என்னை இயேசுவே

தந்தேன் என்னை இயேசுவே
இந்த நேரமே உமக்கே
உந்தனுக்கே ஊழியஞ் செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும்

1. ஜீவகாலம் முழுதும்
தேவ பணி செய்திடுவேன்
பூவில் கடும் போர் புரிகையில்
காவும் உந்தன் கரத்தினில் வைத்து

2. உலகோர் என்னை நெருக்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தினில் நாதா வெல்லுவேன்

3. உந்தன் சித்தமே செய்வேன்
எந்தன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்
இயேசுவே அங்கே இதோ போகிறேன்

4. கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
துஷ்டர் கூடிச் சூழ்ந்திட்டாலும்
அஷ்டதிக்கும் ஆளும் தேவனே
அடியேன் உம்மில் அமரச் செய்திடும்

5. ஒன்றுமில்லை நான் ஐயா
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்
அன்று சீஷர்களுக்களித்த ஆவியால்
இன்றே அடியேனை நிரப்பும்

Tamil Hymns

1337. தந்தை சுதன் ஆவியே

1. தந்தை, சுதன், ஆவியே,
ஸ்வாமியாம் த்ரியேகரே,
வானாசன மீதுற்றே,
எங்களுக்கு இரங்கும்.

2. நிந்தை, கஸ்தி, தேவரீர்
எங்கள் பொருட்டைந்தீர்;
தாசர் வேண்டுதலை நீர்
கேளும், தூய இயேசுவே.

3. சீஷர் மூவர் தூங்கவே,
கெத்செனே காவிலே
உற்ற வேதனையாலே
கேளும், தூய இயேசுவே.

4. தந்தை சித்தம் ஆகவும்;
வந்த பாத்ரம் நீங்கவும்,
நீர் ஜெபித்ததாலேயும்
கேளும், தூய இயேசுவே.

5. யூதாஸ் உம்மைக் காட்டவே,
யூதர் உம்மைக் கட்டவே,
சிறைப்பட்டதாலுமே
கேளும், தூய இயேசுவே.

6. வாரால் பட்ட காயமும்
போர்த்த சிவப்பங்கியும்,
முள்ளின் கிரீட மூலமும்
கேளும், தூய இயேசுவே.

7. ராஜன் உம்மைத் தள்ளியே,
கள்ளன் பரபாசையே
கேட்டுக் கொண்டதாலுமே
கேளும், தூய இயேசுவே.

8. "சிலுவையில் அறையும்"
என்று யூதர் கூவவும்,
சாகச் சென்றதாலேயும்
கேளும், தூய இயேசுவே.

9. நீர் சுமந்த க்ருசாலே,
நீர் குடிக்கும்படிக்கே

Tamil Hymns

தந்த காடியாலுமே
கேளும், தூய இயேசுவே.

10. கால் கரத்தில் ஆணியும்,
காட்டும் மேல்விலாசமும்,
காரிருள் நிமித்தமும்
கேளும், தூய இயேசுவே.

11. ஆடை சீட்டுப்போட்டதால்,
சாவின் வாதை பார்க்குங்கால்
யூதர் செய்த நிந்தையால்
கேளும், தூய இயேசுவே.

12. சொன்ன ஏழு சொற்களால்,
சோர்ந்து தலை சாய்ந்ததால்,
உந்தன் பிரேதச் சேமத்தால்
கேளும், தூய இயேசுவே.

13. சோதனை நெருக்கத்தில்
நாங்கள் தொய்ந்து போகையில்
உந்தன் சாவின் வன்மையில்
காரும், தூய இயேசுவே.

14. உம் சிலுவைப் பொருட்டே
யாவும் நஷ்டம் எனவே
நாங்கள் எண்ணும்படிக்கே
காரும், தூய இயேசுவே.

15. நாங்கள் உம்மைப் பற்றியே,
சாவின் நோவைக் கடந்தே
உம் சமுகம் சேரவே
காரும், தூய இயேசுவே.

Tamil Hymns

1338. தந்தை தன் சிறு பாலனை

1 தந்தை தன் சிறு பாலனை
கையேந்தி தாங்குவான்;
சீராட்டப் பெற்ற பாலகன்
அபாயம் நினையான்.

2 அவ்வாறே என்னை, தந்தையே,
காப்பாற்றித் தாங்குவீர்;
என் பலவீனம் நீங்கவும்
கையேந்தி வருவீர்.

3 மாதாவின் நேச மடியில்
சாய்ந்தாடும் குழந்தை
தாயாரின் முகம் பார்க்கையில்
மறக்கும் கிலேசத்தை.

4 அவ்வாறே, நேச ரசஷகா
உம் அருள் முகத்தை
நான் பார்க்க, ஸ்திரமாக்குவீர்
என் விசுவாசத்தை.

5 தாய் தந்தைப் பக்கம் பாலரை
உட்கார வைக்குங்கால்,
சந்தோஷித்துள்ளம் களிப்பார்
பெற்றோரின் அன்பினால்.

6 அவ்வாறே திருப்பாதத்தில்
ஆனந்தம் அடைந்தேன்;
மென்மேலும் அருள் நாதரே
பேரன்பை ருசிப்பேன்

1339. தந்தையின் பிரகாசமாகி

1. தந்தையின் பிரகாசமாகி
பக்தர் ஜீவனானோரே
விண்ணோரோடு மண்ணோர் சேர்ந்து
உம்மைத் துதி செய்வாரே.

2. கோடாகோடித் தூதர் கூட்டம்
யுத்த வீர சேனைதான்
வெற்றிக் குருசை கையில் தாங்கி
தூய மிகாவேல் நிற்பான்.

3. பட்டயத்தை ஓங்கி துரோக
சேனை விண்ணின்றோட்டுவான்
தெய்வ சத்துவத்தால் வலு
சர்ப்பத்தையும் மிதிப்பான்.

4. தீய சேனை அஞ்சி ஓட
நாங்கள் மோட்சம் சேரவும்
எங்கள் போரில் விண்ணோர் துணை
கிறிஸ்துவே கடாட்சியும்.

5. மா பிதாவாம் நித்திய ஜீவா
மாண்டுயிர்த்த மைந்தனே
தூய ஆவியே எந்நாளும்
ஸ்தோத்திரம் என்றும் உமக்கே

1340. தம் கிருபை பெரிதல்லோ

தம் கிருபை பெரிதல்லோ
என் ஜீவனிலும் அதே
இம்மட்டும் காத்ததுமே
இன்னும் தேவை கிருபை தாருமே

1. தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுதே கிருபை
வாழ்நாளெல்லாம் அது போதுமே
சுகமுடன் தம் பெலமுடன்
சேவை செய்ய கிருபை தாருமே

2. நிர்மூலமாகாததும் நிற்பதுமோ கிருபை
நீசன் என் பாவம் நீங்கினதே
நித்திய ஜீவன் பெற்றுக் கொண்டேன்
காத்துக் கொள்ள கிருபை தாருமே

3. தினம் அதிகாலையில் தேடும் புது கிருபை
மனம் தளர்ந்த நேரத்திலும்
பெலவீன சரீரத்திலும்
போதுமே உம் கிருபை தாருமே

4. மாபரிசுத்த ஸ்தலம் கண்டடைவேன் கிருபை
மூடும் திரை கிழிந்திடவே
தைரியமாய் சகாயம் பெற
தேடி வந்தேன் கிருபை தாருமே

5. ஸ்தோத்திர ஜெபத்தினால் பெருகுதே கிருபை
ஆத்தும பாரம் கண்ணீரோடே
சோர்வின்றி நானும் வேண்டிடவே
ஜெபவரம் கிருபை தாருமே

6. கர்த்தர் வெளிப்படும் நாள் அளித்திடும் கிருபை
காத்திருந்தே அடைந்திடவே
இயேசுவே உம்மைச் சந்திக்கவே
இரக்கமாய்க் கிருபை தாருமே

7. ஒன்றை ஒன்று சந்திக்கும் சத்தியமும் கிருபை
என்றும் மறவேன் வாக்குத்தத்தம்
நீதியுமே சமாதானமே
நிலை நிற்கும் கிருபை தாருமே

Tamil Hymns

1341. தம்மண்டை வந்த பாலரை

1. **தம்மண்டை வந்த பாலரை**
ஆசீர்வதித்த ரட்சகர்,
இப்போதும் சிறுவர்களை
அணைக்கத் தயையுள்ளவர்.

2. **ஆ, இயேசுவே, இப்பிள்ளையை**
அணைத்து ஏந்தியருளும்
அளவில்லாசீர்வாதத்தை
அன்பாகத் தந்திரட்சியும்.

1342. தயாள இயேசு தேவரீர்

1. தயாள இயேசு தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்
வெள்ளோலை தூவிக் கூட்டத்தார்
ஓசன்னா ஆர்ப்பரிக்கிறார்.

2. தாழ்வாய் மரிக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்
மரணம் வெல்லும் வீரரே
உம் வெற்றி தோன்றுகின்றதே.

3. விண்ணோர்கள் நோக்க தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்
வியப்புற்றே அம்மோக்ஷத்தார்
அடுக்கும் பலி பார்க்கிறார்.

4. வெம் போர் முடிக்க தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்
தம் ஆசனத்தில் ராயனார்
சுதனை எதிர்பார்க்கிறார்.

5. தாழ்வாய் மரிக்க தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்
நோ தாங்கத் தலை சாயுமே!
பின் மேன்மை பெற்று ஆளுமே.

Tamil Hymns

1343. தருணமே

தருணமே, பரம சரீரி - எனைத்
தாங்கியருள் கருணை வாரி

உரிமை அடியார் அனுசாரி - உயர்
எருசலை நகர் அதிகாரி - அதி

1. வரர் அடி தொழும் வெகு மானி - பரன்
மகிமை ஒளிர் தேவ சமானி
நரர் பிணை ஒரு பிரதானி - இயேசு
நாயகன் எனதெஜமான் நீ - அதி - தருணமே

2. ஆதாரம் உனை அன்றி யாரே? - எனை
அன்பாய்த் திருக்கண் கொண்டு பாரே;
பாதாரவிந்தம் கதிசேரே - இஸ்ரவேல்
பார்த்திபன் தாவீது வம்ச வேரே - அதி - தருணமே

3. நித்த நித்தமாக எந்தன் மேலே - வருவ
தெத்தனை துன்பங்கள் ஒருக்காலே;
அத்தனையும் நீக்குதற்குன் காலே - எனக்
குத்தம துணை தான் மனுவேலே - அதி - தருணமே

4. கங்குல் பகலும் துயரம், கோவே - வரும்
கலக்கம் ஒழித்தெனைத் தற்காகவே;
பங்கெனக்குத் தந்த மெய் மன்னாவே - ஏழைப்
பாவியை இரட்சியும் இயேசு தேவே - அதி – தருணமே

Tamil Hymns

1344. தளர்ந்து போன கைகளை திடப்படுத்துங்கள்

தளர்ந்து போன கைகளை
திடப்படுத்துங்கள் - தள்ளாடும்
முழங்கால்களை உறுதிபடுத்துங்கள்

1. உறுதியற்ற உள்ளங்களே திடன் கொள்ளுங்கள்
அஞ்சாதிருங்கள்
அநீதிக்கு பழிவாங்கும் தெய்வம் வருகிறார்
விரைவில் வந்து உங்களையே விடுவிப்பார் -2

அஞ்சாதிருங்கள் திடன்கொள்ளுங்கள்
ராஜா வருகிறார் இயேசு ராஜா வருகிறார்

2. அங்கே ஒரு நெடுஞ்சாலை வழியிருக்கும்
அது தூய வழி தீட்டுபட்டோர் அதன் வழியாய்
கடந்து செல்வதில்லை மீட்கப்பட்டோர்
அதன் வழியாய் நடந்து செல்வார்கள்

3. ஆண்டவரால் மீட்கப்பட்டோர்
மகிழ்ந்து பாடி சீயோன் வருவார்கள்
நித்திய மகிழ்ச்சி தலை மேலிருக்கும்
சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போகும்

4. பார்வைற்றோர் கண்களெல்லாம்
பார்வை அடையும் செவிகள் கேட்கும்
ஊனமுற்றோர் மான்கள்போல
துள்ளிக் குதிப்பர்கள் - ஊமையர்கள்
பாடிப்பாடி மகிழ்ந்திருப்பார்கள்

5. வறண்ட நிலம் நீருற்றால்
நிறைந்திருக்கும் நதிகள் ஓடும்
நரிகள் தங்கும் வளைகள் எங்கும்
கோரை முளைக்கும் -நாணலும்
புல்லும் நிலைத்து நிற்கும்

Tamil Hymns

1345. தனிமையின் பாதையில்

தனிமையின் பாதையில்
தகப்பனே உம் தோளில்
சுமந்ததை நான் மறப்பேனோ
ஆ! எத்தனை அன்பு என் மேல்
எத்தனை பாசம் என் மேல்
இதற்கு ஈடு என்ன தருவேன் நான்

1. சோர்ந்து போகும் நேரங்களெல்லாம்
மார்போடு அணைத்துக் கொண்டீரே
கண்ணீரை கணக்கில் வைத்தீரே
ஆறுதல் எனக்கு தந்தீரே

2. உடைக்கப்பட்ட நேரங்களெல்லாம்
அடைக்கலம் எனக்கு தந்தீரே
தடுமாறும் வேலையிலெல்லாம்
தகப்பன் போல சுமந்து சென்றீரே

3. பலர் சபித்து என்னை
தூற்றும் போதெல்லாம்
என்னை ஆசீர்வதித்து
உயர்த்தி மகிழ்ந்தீரே - உம்
உள்ளத்துக்குள் என்னை வரைந்தீரே
இதற்கு ஈடு என்ன தருவேன் நான்

Tamil Hymns

1346. தாங்கட்டுமே உம் கிருபை தேவனே

தாங்கட்டுமே உம் கிருபை தேவனே
தனிமையில் நடக்கும் போதெல்லாம் - என்
பெலவீனத்தில் உம்கிருபை பூரணம்
என்னில் இறங்க வேண்டுமே

தனிமையில் நினைத்து அழும் நேரமெல்லாம்
தகப்பனே உம் கிருபை தாங்கணுமே

1. உமது சேவைக்காக அழைத்தீரையா
எந்தன் சேவையை நீர் நினைக்கணும்
உமது தரிசனங்கள் என் வாழ்விலே
நீங்க நிறைவேற்றி முடிக்கணும்
கிருபையே (2) மாறாத தேவ கிருபையே
கிருபையே (2) நாள்தோறும்
தாங்கும் கிருபையே

2. உலகில் உபத்திரவம் வரும் போதெல்லால்
உந்தன் கிருபை என்னைத் தாங்கணும்
ஊழிய பாதையில் நான் சோர்ந்து போனால்
உந்தன் கிருபை என்னை நிரப்பணும்

1347. தாகமுள்ளவன் மேல் தண்ணீரை

தாகமுள்ளவன் மேல் தண்ணீரை
ஊற்றுவேன் என்றீர் - வறண்ட நிலத்தில்
ஆறுகளை ஊற்றுவேன் என்றீர்

ஊற்றுமையா உம் வல்லமையை
தாகத்தோடு காத்திருக்கிறேன் - நான்

1. மாம்சமான யாவர்மேலும்
ஊற்ற வேண்டுமே - மக்களெல்லாம்
இறைவாக்கு உரைக்க வேண்டுமே

2. முதியோர் மேலும் இளைஞர்
மேலும் ஊற்ற வேண்டுமே
கனவுகள் காட்சிகள் காண வேண்டுமே

3. நீரோடை அருகிலுள்ள மரங்களைப் போல
நித்தமும் தவறாமல் கனிதர வேண்டும்

4. புதிய கூர்மையான கருவியாகனும்
பூமியெங்கும் சுவைதரும் உப்பாகனும்

5. கல்லான இதயத்தை எடுத்திட வேண்டும்
சதையான இதயத்தைப் பொருத்திட வேண்டும்

6. நீதியும் நேர்மையும் தழைக்க வேண்டுமே
நல்வாழ்வும் நம்பிக்கையும் வளரவேண்டுமே

7. வனாந்திரம் செழிப்பான தோட்டமாகனும்
வயல்வெளி அடர்ந்த காடாகனும்

8. தூய நீரை எங்கள் மேல் தெளித்திட வேண்டும்
எல்லாவித அசுத்தங்கள் நீங்கிட வேண்டும்

Tamil Hymns

1348. தாசரே இத்தரணியை அன்பாய்

தாசரே இத்தரணியை அன்பாய்
இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்
நேசமாய் இயேசுவைக் கூறுவோம்
அவரைக் காண்பிப்போம் - மாவிருள்
நீக்குவோம் வெளிச்சம் வீசுவோம்

1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமப்போரை
வருந்தியன்பாய் அழைத்திடுவோம் - உரித்தாய்
இயேசு பாவப்பாரத்தை நமது துக்கத்தை
நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே

2. பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
பட்சமாக உதவி செய்வோம்
உசித நன்மைகள் நிறைந்து தமை மறந்து
இயேசு கனிந்து திரிந்தனரே

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்
பொறுக்க வொண்ணா கஷ்டத்துக்குள்
நிஷ்டூரத்துக்குள் படுகுழிக்குள் விழுந்தனரே

4. மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய வழிக்குள்
வந்திடச் சேர்த்திடுவோம் - ஊக்கமாக
ஜெபித்திடுவோம் நாமுயன்றிடுவோம்
நாம் உழைத்திடுவோம் நாம் ஜெயித்திடுவோம்

5. இந்து தேச மாது சிரோமணிகளை
விந்தை யொளிக்குள் வரவழைப்போம்
சுந்தர குணங்களடைந்து அறிவிலுயர்ந்து
நிர்பந்தங்கள் தீர்ந்து சிறந்திலங்கிட

Tamil Hymns

1349. தாயினும் மேலாய் என்மேல்

தாயினும் மேலாய் என்மேல்
அன்பு வைத்தவர் நீரே
ஒரு தந்தையைப் போல
என்னையும் ஆற்றித் தேற்றிடிவீரே

என் உயிரோடு கலந்தவரே
உம் உறவாலே மகிழ்ந்திடுவேன்
உன் மேல் அன்பு வைத்தேன் -நான்
உமக்காக எதையும் செய்வேன்

1. கைவிடப்பட்ட நேரங்களெல்லாம்
உம் கரம் பிடிப்பேன்
எனைக் காக்கும் கரமதை
நழுவவிடாமல் முத்தம் செய்வேன்

2. எந்தன் கால்கள் இடறும் போது
விழுந்திட மாட்டேன் - உம்
தோளின் மீது ஏறிக்கொண்டு
பயணம் செய்வேன்

Tamil Hymns

1350. தாயின் மடியில் குழந்தை போல

தாயின் மடியில் குழந்தை போல
திருப்தியாய் உள்ளேன்
கலக்கம் எனக்கில்லையே
கவலை எனக்கில்லையே

நற்செயல்கள் செய்ய
தேவையானதெல்லாம்
மிகுதியாய்த் தந்திடுவார்

1. யேகோவா தேவன் தாயானார்
இன்றும் என்றும் பெலன் ஆனார்
பால் அருந்தும் குழந்தை போல
பேரமைதியாய் உள்ளேன்

கலக்கம் எனக்கில்லையே
கவலை எனக்கில்லையே

2. எந்த நிலையிலும் எப்போதும்
தேவையானதெல்லாம் தருவார்
ஊழியம் செய்ய போதுமான
செல்வம் தந்து நடத்திடுவார்

3. கீழ்மையாக விடமாட்டார்
மேன்மையாகவே இருக்கச் செய்வார்
கடன் வாங்காமல் வாழச் செய்வார்
கொடுத்துக் கொடுத்து பெருகச் செய்வார்

4. ஏற்ற காலத்தில் மழை பெய்யும்
கையின் கிரியைக்கு பலன் உண்டு
கர்த்தரே தனது கருவூலமாம்
பரலோகம் திறந்தார் எனக்காக

5. நீதிமான் பாதை நண்பகல் வரைக்கும்
அதிகமதிகமாய் பிரகாசிக்கும்
சூரிய பிரகாசம் போலிருக்கும்
ஊழியம் வளரும் நிச்சயமாய்

Tamil Hymns

1351. தாயைப் போல தேற்றினீரே நன்றி

தாயைப் போல தேற்றினீரே நன்றி ஐயா
தகப்பன்போல சுமந்தவரே நன்றி ஐயா
என் ஜீவனுள்ள நாளெல்லாம் மறவேன்
உம்மை இயேசைய்யா இயேசைய்யா
உம்மைப்போல ஒரு தெய்வமில்லை

1. உள்ளம் உடைந்து அழுதபோதெல்லாம்
நீர் அன்போடு ஓடி வந்தீரே
என் அன்பான தேவன் நீரே

2. துன்ப துயர் நேரத்தில் எல்லாம்
என்னை ஆற்றித் தேற்றி அரவணைத்தீரே
என்னைத் தேற்றிடும் தெய்வம் நீரே

3. வியாதியிலே படுக்கும் போதெல்லாம்
என்னை தூக்கி எடுத்து குணமாக்கினீர்
என் பரிகாரியானவரே

Tamil Hymns

1352. தாய்மடியில் தவழுகின்ற குழந்தையைப்

தாய்மடியில் தவழுகின்ற
குழந்தையைப் போல
தகப்பனே உம்மடியில்
சாய்ந்துவிட்டேன் நான்

1. கவலையில்லையே கலக்கமில்லையே
கர்த்தர் கரம்பிடித்துக் கொண்டேன் - நான்
எதைக் குறித்தும் பயமில்லையே
என் நேசர் நடத்துகிறீர்

2. செய்த நன்மைகள் நினக்கின்றேன்
நன்றியோடு துதிக்கிறேன் - நான்
கைவிடாத என் ஆயனே
கல்வாரி நாயகனே

3. துணையாளரே துணையாளரே
இணையில்லா மணவாளரே - என்
உணவாக வந்தீரையா
உயிரோடு கலந்தீரையா -என்

4. உம்மைத்தானே பற்றிக்கொண்டேன்
உம்தோளில் அமர்ந்துவிட்டேன்-நான்
உந்தன் சிறகுகள் நிழல்தனிலே
உலகத்தையே மறந்துவிட்டேன் - இந்த

5. அதிகாலமே தேடுகிறேன்
ஆர்வமுடன் நாடுகிறேன - நான்
உயிர்வாழும் நாட்களெல்லாம்
உம் நாமம் சொல்வேனையா - நான்

6. அதிசயமே அதிசயமே
ஆறுதல் நாயகனே - என்
ஆலோசனைக் கர்த்தரே - என்
அடைக்கலப் பட்டணமே

Tamil Hymns

1353. தாய் மறந்தாலும் நீர் மறப்பதில்லையே

தாய் மறந்தாலும் நீர் மறப்பதில்லையே
தந்தை வெறுத்தாலும் நீர் வெறுப்ப-
தில்லையே-தந்தை தாயினும் மேலானவர்
தாங்கியென்றும் நெஞ்சில் சுமப்பவர்-2
கிழக்குக்கும் மேற்குக்கும் எவ்வளவு தூரமோ
அத்தனை தூரம் என் பாவம் அகற்றினீர்-2

1. மலைபோன்ற எந்தன் மாபெரும் பாவங்களை
முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டீரே

2. காலமெல்லாம் கண்ணீரை வரவழைத்த பாவங்களை
கடலின் ஆழத்திலே போட்டு விட்டீரே

3. விலையேறப் பெற்ற உந்தனின்
இரத்தத்தால் நீதிமானாய் ஆக்கி விட்டீரே

Tamil Hymns

1354. தாரகமே பசிதாகத்துடன் உம்மிடம்

வெட்கத்துடனே வாறேன்
சீருஞ் செல்வமும் பெற்றுத் தேறும்படிக் கென்னிடம்
சேரும் யாரையும் ஒரு போதுந் தள்ளிடே னென்றீர் - தார

1.பாவமகலத் தேவ கோபமது ஒழியப்
பாடுபட்டுயிர் விடுத்தீர் பின்னும்
ஜீவ போசன மெனக்கீய உமையே அந்தச்
சிலுவைதனிலே பகுத்தீர்
மேவியெனை நெருக்கித் தாவும் பவத்தைக் கொன்று
செவித் துயிர்பிழைக்க தேவே உமையுட் கொள்ள – தார

2.காணாதொழிந்த ஆடு வீணாய்ப்போகாமல் அதை
கண்டுபிடித்தி ரட்சித்தீர் அது
பேணுதலுடன் பரிபூரண மடைந்திடப்
பேருல குதித்தே னென்றீர்
வேணுமுமது நீதி பூண நிறைவா யுன்றன்
மாணருளுந் திருப்தியானே பெற உம்மிடம் - தார

3.தந்த திருவசனம் உந்தம் இராப்போசனம்
தகமை எத்தனமாமே யான்
சிந்தை பணிந்தவற்றை என்றன் மனதுட்கொள்ளத்
வேதசுத்தாவி தாமே
உந்தம் தசையுதிர விந்தை விருந்தினை யான்
சந்ததமுண்டு துதி சாற்ற அருள் செய்வீரே – தார

Tamil Hymns

1355. தாவீதின் ஊரிலே

தாவீதின் ஊரிலே
மாட்டுக் குடிலிலே
மீட்பர் பிறந்துள்ளார்
வாரும் ஆராதிப்போம்

1. ஆண்டவருக்காக புதிய பாடல் பாடுங்கள்
நீங்கள் இன்று அவரைப் பாடுங்கள்
ஆண்டவரைப் போற்றுங்கள்
அவர் பெயரை வாழ்த்துங்கள்
அவர் பெயரை வாழ்த்துங்கள்
வாழ்த்துங்கள்- (2) -தாவீதின்

2. அவர் கொணரும் மீட்பையே அறிவியுங்கள்
நீங்கள் அவரின் மாட்சி சொல்லுங்கள்
ஆண்டவர் தம் செயல்களை
அனைவருக்கும் கூறுங்கள் - (2)
அனைவருக்கும் கூறுங்கள்
கூறுங்கள் - (2) -தாவீதின்

1356. தாவீதின் கோத்திரனே

தாவீதின் கோத்திரனே
தாகத்தை தீர்ப்பவனே
மா அன்பு இயெசுவே
மா தேவ பாலனே
மா அன்பு எங்கள் இராஜனே

வான் வெள்ளி தோன்றும் அந்த வேளையில் |
வான் மன்னன் இயேசு இன்று தோன்றினார் | 2
வான் மூப்பர் விரைந்து அங்கு ஏகினார் |
வல்லவன் பதம் பணிந்து வாழ்த்தினார் | 2

நீதி தேவன் இயேசு இராஜன் காண்கிறார் |
நீதி நல்கி நியாயம் தீர்க்க போகிறார் | 2
நீதி நின்று வாழும் அன்பு மாந்தரை |
நீதி கிரீடம் சூட்டி அன்று வாழ்த்துவார் | 2

Tamil Hymns

1357. தாவீதைப் போல நடனமாடி

தாவீதைப் போல நடனமாடி
அப்பாவை ஸ்தோத்தரிப்பேன்
இயேசப்பா ஸ்தோத்திரம்

1. என்ன வந்தாலும் எது நடந்தாலும்
அப்பாவை ஸ்தோத்திரப்பேன்

2. கைத்தாளத்தோடும் மத்தாளத்தோடும்
அப்பாவை ஸ்தோத்திரப்பேன்

3. பரிசுத்த இரத்தத்தால் பாவங்கள் கழுவிய
அப்பாவை ஸ்தோத்திரப்பேன்

4. ஆவியினாலே அபிஷேகம் செய்த
அப்பாவை ஸ்தோத்திரப்பேன்

5. கிறிஸ்துவுக்குள்ளாய் முன் குறித்தாரே
அப்பாவை ஸ்தோத்திரப்பேன்

Tamil Hymns

1358. தாவீதை போல் நடனம் ஆடி

தாவீதை போல் நடனம்
ஆடி பாடி துதித்திடுவேன்
சங்கீதக்காரனும் சொந்தக்காரனே
சேர்ந்தும்மை போற்றிச்
சொல்லுவோம் அல்லேலூயா
எக்காள சத்தமாய்

ஏகமாய் முழங்க என்றென்றும்
போற்றிச் சொல்லுவோம் அல்லேலூயா

நீர் நல்லவர் வல்லவர் கிருபை
உள்ளவர் போதுமானவரே
நேற்றும் இன்றுமே நாளை என்றுமே
கைவிடாக் கன்மலையே
பணிந்து தொழுதிடுவேன்
மகிமை செலுத்திடுவேன் - 2

1. எலியாவைப் போல அக்கினி இறங்க
எந்நாளும் ஜெபித்திடுவேன்
ஏனோக்கைப் போல் ஒவ்வொரு நாளும்
உம்மோடு நடந்திடுவேன்

2. தானியேல் போல துன்பம் வந்தாலும்
தவறாமல் ஜெபித்திடுவேன்
தாவீதைப் போல என்ன வந்தாலும்
உம்மையே துதித்திடுவேன்

Tamil Hymns

1359. திக்கற்ற பிள்ளைகளுக்கு சகாயர்

திக்கற்ற பிள்ளைகளுக்கு
சகாயர் நீரே அல்லவோ
எக்காலம் துணையவர்க்கு
நிற்பவரும் நீரே அல்லவோ

தனிமையான எனக்கு
சகாயர் நீரே அல்லவோ
ஆதரவற்ற எனக்கு
பக்க பலம் நீரே அல்லவோ

1. என்றைக்கும் மறைந்திருப்பீரோ
தூரத்தில் நின்று விடுவீரோ
பேதைகளை மறப்பீரோ
இயேசுவே மனமிரங்கும்

2. கர்த்தாவே எழுந்தருளும்
கை தூக்கி என்னை நிறுத்தும்
தீமைகள் என்னை சூழும் நேரம்
தூயவரே இரட்சியும்

3. தாய் என்னை மறந்தாலும்
நீர் என்னை மறப்பதில்லை
ஏழையின் ஜெபம் கேளும்
இயேசுவே மனமிரங்கும்

1360. திவ்ய அன்பின் சத்தத்தை இரட்சகா

1. திவ்ய அன்பின் சத்தத்தை இரட்சகா
கேட்டு உம்மை அண்டினேன்
இன்னும் கிட்டிச் சேர என் ஆண்டவா
ஆவல் கொண்டிதோ வந்தேன்

இன்னும் கிட்ட கிட்ட சேர்த்துக்
கொள்ளுமேன் பாடுபட்ட நாயகா
இன்னும் கிட்ட கிட்ட சேர்த்துக்
கொள்ளுமேன் ஜீவன் தந்த இரட்சகா

2. என்னை முற்றுமே இந்த நேரத்தில்
சொந்தமாக்கிக் கொள்ளுமேன்
உம்மை வாஞ்சையோடெந்தன் உள்ளத்தில்
நாடித் தேடச் செய்யுமேன்

3. திருப்பாதத்தில் தங்கும் போதெல்லாம்
பேரானந்தம் காண்கிறேன்
உம்மை நோக்கி வேண்டுதல் செய்கையில்
மெய் சந்தோஷமாகிறேன்

4. இன்னும் கண்டிராத பேரின்பத்தை
விண்ணில் பெற்று வாழுவேன்
திவ்ய அன்பின் ஆழமும் நீளமும்
அங்கே கண்டானந்திப்பேன்

Tamil Hymns

1361. திராட்சை செடியே இயேசு ராஜா

திராட்சை செடியே இயேசு ராஜா
உம்மோடு இணைந்திருக்கும் கிளை நாங்கள்
உமக்காய் படருகின்ற கொடி நாங்கள்
திராட்சை செடியே இயேசு ராஜா

1. பசும்புல் மேய்ச்சலிலே
நடத்திச் செல்பவரே
பரிசுத்தமானவரே - ஐயா
உள்ளமே மகிழுதையா
உம்மோடு இருப்பதனால்
கள்ளம் நீங்குதையா - எனக்கு

2. குயவன் கையில் உள்ள களிமண் நாங்கள்
ஏந்தி வனைந்திடுமே ஐயா
சித்தம் போல் உருவாக்கும்
சுத்தமாய் உருமாற்றும்
நித்தம் உம் கரத்தில் - நாங்கள்

3. வார்த்தையில் நிலைத்திருந்து தினமும்
கனி கொடுக்கும்
சீடர்கள் நாங்கள் ஐயா
வேதத்தை ஏந்துகின்றோம்
வாசித்து மகிழுகின்றோம்
தியானம் செய்கின்றோம்- நாங்கள்

Tamil Hymns

1362. திரி முதல் கிருபாசனனே சரணம்

திரி முதல் கிருபாசனனே சரணம்!
ஜெக தல ரட்சக தேவா சரணம்!
தினம் அனுதினம் சரணம் - கடாட்சி
தினம் அனுதினம் சரணம் - சருவேசா!

1. நலம் வளர் ஏக திரித்துவா சரணம்!
நமஸ்கரி உம்பர்கள் நாதா சரணம்
நம்பினேன் இது தருணம் - தருணம்
நம்பினேன், தினம் சரணம் - சருவேசா!

2. அருவுருவே, அருளரசே, சரணம்!
அன்று மின்று மென்றும் உள்ளாய் சரணம்!
அதிகுணனே தருணம் - கிரணமொளிர்
அருள் வடிவே சரணம் - சருவேசா!

3. உலகிட மேவிய உனதா, சரணம்
ஓர் கிருபாசன ஒளியே சரணம்!
ஒளி அருள்வாய் தருணம் - மனுவோர்க்கு
உத்தமனே, சரணம் - சருவேசா!

4. நித்திய தோத்திர நிமலா, சரணம்!
நிதி இஸ்ரவேலரின் அதிபதி, சரணம்!
நாதா, இது தருணம் - கிருபைக்கொரு
ஆதாரா சரணம் - சருவேசா!

Tamil Hymns

1363. திருக்கரத்தால் தாங்கி என்னை

திருக்கரத்தால் தாங்கி என்னை
திருச்சித்தம் போல் நடத்திடுமே
குயவன் கையில் களிமண் நான்
அனுதினமும் வனைந்திடுமே -

1. உம் வசனம் தியானிக்கையில்
இதயமதில் ஆறுதலே
காரிருளில் நடக்கையிலே
தீபமாக வழி நடத்தும்

2. ஆழ்கடலில் அலைகளினால்
அசையும்போது என் படகில்
ஆத்ம நண்பர் இயேசு உண்டே
சேர்ந்திடுவேன் அவர் சமூகம்

3. அவர் நமக்காய் ஜீவன் தந்து
அளித்தனரே பெரிய மீட்பு
கண்களினால் காண்கிறேனே
இன்பக் கானான் தேசமதை

1364. திருப்தியாக்கி நடத்திடுவார்

திருப்தியாக்கி நடத்திடுவார்
தேவைகளெல்லாம் சந்திப்பார்
மீதம் எடுக்க வைப்பார்
பிறருக்கு கொடுக்க வைப்பார்

பாடி கொண்டாடுவோம்
கோடி நன்றி சொல்லுவோம்

1. ஐந்து அப்பங்களை
ஆயிரமாய் பெருகச் செய்தார்
ஐயாயிரம் ஆண்களுக்கு
வயிராற உணவளித்தார்

2. பொன்னோடும் பொருளோடும்
புறப்படச் செய்தாரே
பலவீனம் இல்லாமலே
பாதுகாத்து நடத்தினாரே-ஒரு

3. காடைகள் வரவழைத்தார்
மன்னாவால் உணவளித்தார்
கற்பாறையை பிளந்து
தண்ணீர்கள் ஓடச்செய்தார்

4. நீடிய ஆயுள் தந்து
நிறைவோடு நடத்திடுவார்
முதிர் வயதானாலும்
பசுமையாய் வாழச் செய்வார்

5. கெம்பீர சத்தத்தோடு
ஆரவார முழக்கத்தோடு
தெரிந்து கொண்ட தம்மக்களை
தினமும் நடத்தி சென்றார்

6. துதிக்கும் போதெல்லாம்
சுவையான உணவு அது
ஆத்மா திருப்தியாகும்
ஆனந்த ராகம் பிறக்கும்

Tamil Hymns

1365. திவ்விய பாலன் பிறந்தீரே

1. திவ்விய பாலன் பிறந்தீரே
கன்னி மாதா மைந்தன் நீர்
ஏழைக் கோலம் எடுத்தீரே
சர்வ லோகக் கர்த்தன் நீர்.

2. பாவ மாந்தர் மீட்புக்காக
வான மேன்மை துறந்தீர்
திவ்விய பாலா, தாழ்மையாக
மண்ணில் தோன்றி ஜெனித்தீர்.

3. லோக ராஜா வாழ்க வாழ்க,
செங்கோல் தாங்கும் அரசே!
பூமியெங்கும் ஆள்க, ஆள்க,
சாந்த பிரபு, இயேசுவே!

4. தேவரீரின் ராஜ்யபாரம்
நித்திய காலமுள்ளது
சர்வலோக அதிகாரம்
என்றும் நீங்கமாட்டாது.

5. வல்ல கர்த்தா பணிவோடு
ஏக வாக்காய் போற்றுவோம்
நித்திய தாதா பக்தியோடு
நமஸ்காரம் பண்ணுவோம்.

6. ஸ்தோத்திரம், கர்த்தாதி கர்த்தா
ஞானத்துகெட்டாதவர்
ஸ்தோத்திரம், ராஜாதி ராஜா
ஆதியந்தமற்றவர்.

Tamil Hymns

1366. திருப்பாதம் சேராமல் இருப்பேனோ

திருப் பாதம் சேராமல் இருப்பேனோ - நான்
தெய்வத்தைத் தேடாமல் பிழைப்பேனோ

1. அருட்கடலாம் ஈசன் அடியவர் பாசன்
உருக்கம் நிறைந்த விண்ணுயிரான நேசன்

2. ஆவியும் ஆத்மமும் ஆண்டவர் பங்கே
பூவில் அவரல்லால் புகலிடம் எங்கே

3. சத்திய மார்க்கமும் சகலமுமான
நித்திய ஜீவனும் நிமலனுமான

4. ஆறுதல் தேறுதல் அளித்திடும் சேயன்
கூறு மகிமையில் சேர்த்திடும் தூயன்

5. உலையில் மெழுகு போல் உருகுதென் நெஞ்சம்
மலையாதுன் திருவடி வணங்கினேன் தஞ்சம்

Tamil Hymns

1367. திருப்பாதம் நம்பி வந்தேன்

திருப்பாதம் நம்பி வந்தேன்
கிருபை நிறை இயேசுவே
தமதன்பைக் கண்டடைந்தேன்
தேவ சமூகத்திலே

1. இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரை தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன்

2. என்னை நோக்கி கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை நோக்கிடுமே

3. மனம் மாற மாந்தன் நீரல்ல
மனவேண்டுதல் கேட்டிடும்
எனதுள்ளம் ஊற்றி ஜெபித்தே
இயேசுவே உம்மை அண்டிடுவேன்

4. என்னைக் கைவிடாதிரும் நாதா
என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன்
உமது பலன் ஈந்திடுமே

5. உம்மை ஊக்கமாய் நோக்கிப் பார்த்தே
உண்மையாய் வெட்கம் அடையேன்
தமது முகப் பிரகாசம்
தினமும் என்னில் வீசிடுதே

6. சத்துரு தலை கவிழ்ந்தோட
நித்தமும் கிரியை செய்திடும்
என்னைத் தேற்றிடும் அடையாளம்
இயேசுவே இன்று காட்டிடுமே

7. விசுவாசத்தால் பிழைத்தோங்க
வீரப்பாதை காட்டினீரே
வளர்ந்து கனிதரும் வாழ்வை
விரும்பி வரம் வேண்டுகிறேன்

Tamil Hymns

8. பலர் தள்ளின மூலைக்கல்லே
பரம சீயோன் மீதிலே
பிரகாசிக்கும் அதை நோக்கி
பதராமலே காத்திருப்பேன்

Tamil Hymns

1368. தீய மனதை மாற்ற வாரும்

தீய மனதை மாற்ற வாரும் தூய ஆவியே
தூய ஆவியே - கன நேய ஆவியே

1. மாயபாசத் தழுந்தி வாடி மாளுஞ்
சாவிதால் - மிக மாயும் பாவி நான்

2. தீமை செய்ய நாடுதென்றன் திருக்கு
நெஞ்சமே - மருள் தீர்க்கும் தஞ்சமே

3. பரத்தை நோக்க மனம் அற்றேனே
பதடிதான் ஐயா - ஒரு பாவி நான் ஐயா

4. ஏக்கத்தோடென் மீட்பைத் தேடி இரந்து
கெஞ்சவே - தினம் இதயம் அஞ்சவே

5. புதிய சிந்தை புதிய ஆசை புதுப்பித்
தாக்கவே - அதைப் புகழ்ந்து காக்கவே

6. கிறிஸ்து மீது நாட்டங் கொண்டு கீதம்
பாடவே - அவர் கிருபை தேடவே

7. தேவ வசனப் பாலின்மீது தேட்டம்
தோன்றவே - மிகு தெளிவு வேண்டவே

8. ஜெபத்தின் தாகம் அகத்தில் ஊறி ஜெபித்துப்
போற்றவே - மிக சிறப்பாய் ஏற்றவே

Tamil Hymns

1369. தீயோர் சொல்வதைக் கேளாமல்

1. தீயோர் சொல்வதைக் கேளாமல்
பாவத்துக்கு விலகி,
பரிகாசரைச் சேராமல்
நல்லோரோடு பழகி,
கர்த்தர் தந்த வேதம் நம்பி
வாஞ்சை வைத்து, அதைத்தான்
ராப் பகலும் ஓதும் ஞானி
என்றும் வாழும் பாக்கியவான்.

2. நதி ஓரத்தில் வாடாமல்
நடப்பட்டு வளர்ந்து,
கனி தந்து, உதிராமல்
இலை என்றும் பசந்து,
காற்றைத் தாங்கும் மரம்போல
அசைவின்றியே நிற்பான்;
அவன் செய்கை யாவும் வாய்க்க
ஆசீர்வாதம் பெறுவான்.

3. தீயோர், பதர்போல் நில்லாமல்
தீர்ப்பு நாளில் விழுவார்;
நீதிமான்களோடிராமல்
நாணி நைந்து அழிவார்;
இங்கே பாவி மகிழ்ந்தாலும்,
பாவ பலன் நாசந்தான்;
நீதிமான் இங்கழுதாலும்
கர்த்தர் வீட்டில் வாழுவான்.

Tamil Hymns

1370. தீராத தாகத்தால்

1. தீராத தாகத்தால் என் உள்ளம் தொய்ந்ததே,
ஆ, ஜீவ தண்ணீரால் தேற்றும் நல் மீட்பரே.

2. விடாய்த்த பூமியில் என் பசி ஆற்றுமே;
நீர் போஷிக்காவிடில், திக்கற்றுச் சாவேனே.

3. தெய்வீக போஜனம், மெய் மன்னா தேவரீர்,
மண்ணோரின் அமிர்தம் என் ஜீவ ஊற்று நீர்.

4. உம் தூய ரத்தத்தால் எம் பாவம் போக்கினீர்,
உம் திரு மாம்சத்தால் ஆன்மாவைப் போஷிப்பீர்.

5. மா திவ்விய ஐக்கியத்தை இதால் உண்டாக்குவீர்;
மேலான பாக்கியத்தை ஏராளமாக்குவீர்.

6. இவ்வருள் பந்தியில் பிரசன்னமாகுமே;
என் ஏழை நெஞ்சத்தில் எப்போதும் தங்குமே.

1371. தீவினை செய்யாதே

1. தீவினை செய்யாதே மா சோதனையில்
பொல்லாங்கனை வென்று போராட்டத்தினில்
வீண் ஆசையை முற்றும் கீழடக்குவாய்
யேசையரை நம்பி வென்றேகிப்போவாய்

ஆற்றித் தேற்றியே காப்பார்
நித்தம் உதவி செய்வார்
மீட்பர் பெலனை ஈவார்
ஜெயம் தந்திடுவார்

2. வீண் வார்த்தை பேசாமல் வீண் தோழரையும்
சேராமலே நீங்கி நல்வழியிலும்
நின் ஊக்கமும் அன்பும் சற்றேனும் விடாய்
யேசையரை நம்பி வென்றேகிப்போவாய்

3. மெய் விசுவாசத்தாலே வென்றேகினோன்தான்
பொற்கிரீடம் பெற்றென்றும் பேர் வாழ்வடைவான்
மா நேசரின் பெலன் சார்ந்தே செல்லுவாய்
யேசையரை நம்பி வென்றேகிப்போவாய்

Tamil Hymns

1372. துணை என்றும் இயேசு தேவா

துணை என்றும் இயேசு தேவா
உமை நம்பினேன்
எமைக் காரும் தேவ மைந்தன்
உமை சாருவேன்

1. இருள் யாவும் நீக்கி எம்மில்
அருள் யாவும் தந்தீர் தேவா
கனிவாக வந்தீரே துணையாக நின்றீரே
தேவ தேவன் இயேசுவே அன்பு போதுமே

2. எனக்காக யாவும் செய்யும்
பலமுள்ள தேவன் நீரே
விளக்கினை ஏற்றுவீர் அபிஷேகம் பண்ணுவீர்
எந்தன் கொம்பு உயர்ந்திடும் நம்பும் தேவனே

3. அலைபோல் பாயும் துன்பம்
கடல் போல் சீறும் காற்றோ
இரையாதே என்றீரே அமைதலை தந்தீரே
வார்த்தை ஒன்று சொல்லுமே வல்ல தேவனே

4. வழி என்றும் காட்டும் தேவா
விழி என்னில் வைத்த மூவா
தினம் தினம் போதியும் அருள் நிதம் காட்டிடும்
உம்மைப்போல தெய்வத்தை பூவில் காணேன் நான்

Tamil Hymns

1373. துக்க பாரத்தால் இளைத்து

1. துக்க பாரத்தால் இளைத்து
நொந்து போனாயோ?
இயேசு உன்னைத் தேற்றிக் கொள்வார்
வாராயோ?

2. அன்பின் ரூபகாரமாக
என்ன காண்பித்தார்?
அவர் பாதம் கை விலாவில்
காயம் பார்!

3. அவர் சிரசதின் கிரீடம்
செய்ததெதனால்?
ரத்தினம் பொன்னாலுமல்ல
முள்ளினால்!

4. கண்டுபிடித்தாண்டினாலும்
துன்பம் வருமே!
கஷ்டம், துக்கம், கண்ணீர் யாவும்
இம்மையே.

5. அவரைப் பின்பற்றினோர்க்கு
துன்பம் மாறுமோ?
சாவின் கூரும் மாறிப்போகும்,
போதாதோ?

6. பாவியேனை ஏற்றுக்கொள்ள
மாட்டேன் என்பாரே!
விண், மண் ஒழிந்தாலும் உன்னை
தள்ளாரே!

7. போரில் வெற்றி சிறந்தோர்க்கு
கதியா ஈவார்?
தூதர், தீர்க்கர், தூயர், யாரும்
ஆம், என்பார்.

Tamil Hymns

1374. துக்கம் கொண்டாட வாருமே

1. துக்கம் கொண்டாட வாருமே,
பாரும்! நம் மீட்பர் மரித்தார்
திகில் கலக்கம் கொள்ளுவோம்
இயேசு சிலுவையில் மாண்டார்.

2. போர் வீரர், யூதர் நிந்தித்தும்,
மா பொறுமையாய்ச் சகித்தார்
நாமோ புலம்பி அழுவோம்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

3. கை காலை ஆணி பீறிற்றே,
தவனத்தால் நா வறண்டார்;
கண் ரத்தத்தாலே மங்கிற்றே;
இயேசு சிலுவையில் மாண்டார்.

4. மும்மணி நேரம் மாந்தர்க்காய்,
தம் மௌனத்தாலே கெஞ்சினார்;
நல் வாக்கியம் ஏழும் மொழிந்தே
இயேசு சிலுவையில் மாண்டார்.

5. சிலுவையண்டை வந்துசேர்,
நேசர் ஐங்காயம் நோக்கிப்பார்;
ஒப்பற்ற அன்பைச் சிந்தியேன்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

6. உருகும் நெஞ்சும் கண்ணீரும்
உள்ளன்பும் தாரும், இயேசுவே;
மாந்தர்மீதன்பு கூர்ந்ததால்
நீர் சிலுவையில் மாண்டீரே!

Tamil Hymns

1375. துக்கம் திகிள் இருள் சூழ

1. துக்கம் திகிள் இருள் சூழ
மோட்ச யாத்திரை செய்கிறோம்
கீதம்பாடி முன்னே நோக்கி
மோட்ச பாதை செல்கிறோம்

2. இருள் சூழ்ந்தும் பிரகாசிக்கும்
தீப ஸ்தம்ப ஜோதியும்
வீரமாக ஐக்கியமாக
முன்னே செல்வோம் ராவிலும்

3. பக்தரோடு தங்கிச் செல்லும்
தெய்வமாம் ஒளி ஒன்றே
இருள் நீங்க அச்சம் நீங்கும்
பாதை முற்றும் பகலே

4. எங்கள் ஜீவ நோக்கம் ஒன்றே
குன்றா விசுவாசமும்
எங்கள் ஊக்க வாஞ்சை ஒன்றே
ஒன்றே என் நம்பிக்கையும்

5. மோட்சம் செல்லும் கோடிப்பேரும்
பாடும் பாட்டு ஒன்றேயாம்
ஆபத்து போராட்டம், தெய்வ
பாதை செல்வதும் ஒன்றாம்

6. மோட்ச கரை சேர்ந்த பின்னும்
பூரிப்பானந்தம் ஒன்றே
ஒரே சர்வ வல்ல பிதா
அன்பால் அரசாள்வாரே

7. முன்னே செல்வீர், தோழரே நீர்
சிலுவை உம் பலமாம்
நிந்தை தாங்கிப் போர்புரிவீர்
ஆயுள் காலம் எல்லாம்

8. நியாயத் தீர்ப்பு மா தினத்தில்
கல்லறை விட்டெழுவோம்
துக்கம் திகில் யாவும் நீங்கும்
பாடும் ராவும் ஓய்ந்துபோம்

Tamil Hymns

1376. துங்கனில் ஒதுங்குவோன்

துங்கனில் ஒதுங்குவோன், பங்கமின்றித் தங்குவான்
கங்குல் பக லும்பரனார் காவல் அர ணாதலால் --- துங்கனில்

1. வேடன் கண்ணி குத்துங்கால், விக்கினங்கள் சுற்றுங்கால்,
மூடிஉனைக் காப்பரே, ஓர் மோசமின்றிச் சேர்ப்பரே

2. பக்கத்திலே ஆயிரம், பாலே பதினாயிரம்
சிக்கென வீழ்ந்தாழுமே, தீங்குனை அண்டாதுகாண்

3. கண்ணினாலே பார்க்குவாய், கடவுள் செயல் நோக்குவாய்
அண்ணலே உன் அடைக்கலம், ஆண்டவன் உன் தாபரம்

4. தீங்குனை அண்டாலும், தீனங்கள் தீண்டாமலும்,
பாங்கு தூதர் காபந்தில் பத்திரமாய் வாழ்வையே

5. பாதம் கல்லிட றாமல், பகைவர் உக்ரம் மீறாமல்
தூதர் உனைக் கைகளில் தூக்கி ஏந்திக் கொள்வரே

6. நீடுநாட்களாகவே கேடு துன்பம் போகவே,
வீடுபரதீசினில் சூடுவான் மா மகிமைகள் துங்கனில்

Tamil Hymns

1377. துதி அல்லேலூயா பாடுவோம்

துதி அல்லேலூயா பாடுவோம் (2)
துதி அல்லேலூயா (2)
துதி அல்லேலூயா பாடுவோம்
வேகமே இயேசு வருவார் (2)
வேகமே இயேசு (2)
வேகமே இயேசு வருவார்
இராஜாதிராஜா இயேசு தான் (2)
இராஜாதிராஜா (2)
இராஜாதிராஜா இயேசு தான்

1378. துதி எடுத்தால் சாத்தான் ஓடுவான்

துதி எடுத்தால் சாத்தான் ஓடுவான்
முறுமுறுத்தால் திரும்பி வருவான்
துதித்துப் பாடி மதிலை இடிப்போம்
மகிழ்ந்து பாடி எரிகோ பிடிப்போம்

1. டேவிட்ட பாடினான் சவுலுக்கு விடுதலை
கலக்கம் நீங்கியது ஆறுதல் வந்தது

2. துதிக்கும் தாவீதுக்கோ கொஞ்சமும் பயமில்லை
விசுவாச வார்த்தையால் கோலியாத்தை முறியடிப்போம்

3. ஆடுகள் மேய்த்தவன் அரசனாய் மாறினான்
ஆராதனை வீரனுக்கு Promotion நிச்சயம்

4. மீனின் வயிற்றிலே யோனா துதித்தான்
கட்டளை பிறந்தது போனான் நினிவே

5. வாயிலே எக்காளம் கையிலே திருவசனம்
சுயத்தை உடைத்து ஜெயத்தை எடுப்போம்

6. கர்த்தரை நம்புவோம் அவர்நம்மை தாங்குவர்
வார்த்தையை நம்புவோம் வருமே விடுதலை

7. பெராக்காவில் கூடுவோம் நன்றி செலுத்துவோம்
கர்த்தர் நல்லவர் கிருபை உள்ளவர்

Tamil Hymns

1379. துதி செய் நீ மனமே துதிகளைப் படியே

துதி செய் நீ மனமே துதிகளைப் படியே
துதி பெற பாத்திரராம் தூயவர் இயேசுவை

1. பரலோக மகிமை துறந்தவரே
பாவ இவ்வுலகில் வந்தவரே
பரிசுத்தராகவே வாழ்ந்தவரே
பாவியை மீட்கவே வந்தவரே

2. கருணையின் உள்ளம் படைத்தவரே
குற்றங்கள் யாவையும் சுமந்தவரே
குருசினில் எனக்காய் மரித்தவரே
குருதியை சிந்தியே மீட்டவரே

3. இயேசுவையன்றி வேறொருவர்
காசினில் உண்டோ சொல் மனமே
நேசரின் அன்பை என்றும் உணர்ந்து
தாசரும் அவர் பாதத்தில் விழுந்து

4. மானிடர் எல்லாரும் விட்டோடிடினும்
மாசற்ற தேவன் நம்மோடிருப்பார்
ஆர்ப்பரித்தே என்றுமே மகிழ்வேன்
ஆண்டாண்டு காலம் நம்மை காப்பதால்

5. நேசரின் மார்பினில் சார்ந்திடுவேன்
நேசத்தால் நம்மை நிரப்பிடுவார்
நாசம் என்றும் நம்மை அணுகாமலே
ஆதரித்து என்றும் காத்திடுவார்

6. நேசரின் வருகை நெருங்கிடுதே
நாச லோகை விட்டு சென்றிடுவேன்
எக்காள சத்தம் தொனித்திடுமே
மத்திய ஆகாயத்தை சேருவோம்

1380. துதி செய்யும் வேளை

துதி செய்யும் வேளை
உந்தன் பாதம் எனக்கு வேண்டுமே
என் ஆத்துமரே என் நேசரே
உம்மைப் பாடி போற்றுவேன்

1. காலங்கள் வீணானதே
நான் செய்த வினைகளால்
காலங்கள் மா சமீபமே
கல் நெஞ்சம் கரையாதோ - துதி செய்யும்

2. பெற்ற தாயும் தந்தையும்
என்னைக் கைவிட்டாலும்
மாறாத தேவக்கரம் என்னை
வாரி அணைக்குமே - துதி செய்யும்

1381. துதி துதி என் மனமே துதிகளின்

துதி துதி என் மனமே துதிகளின் உன்னதனை (2)
தூத கணங்கள் வாழ்த்திப் புகழ்ந்திடும் வானவர்;
இயேசுவின் நாமமதை (2)
(துதி துதி என் மனமே.......)

பாவமாம் காரிருள் சூழ்ந்திடும் வேளை
இரட்சிக்க தீபமாய் வந்தார்; (2)
அற்புதமாய் நம்மை நடத்திடும் இயேசு
அன்பரின் காயங்கள் கண்டே (2)
(துதி துதி என் மனமே.......)

கல்வாரியில் அன்று சிந்தின ரத்தம்
கழுவிடும் பாவங்களை (2)
கண்ணீரைத் துடைக்கும் அவரது
அன்பு கல்மனம் கரைத்திடுமே (2)
(துதி துதி என் மனமே.......)

சீக்கிரமாய் இதோ வருகிறேன் என்றவர்;
சீக்கிரம் வந்திடுவார்; (2)
உன்னத தேவனின் மகிமையைக் காண உள்ளமும் ஏங்கிடுதே (2)
(துதி துதி என் மனமே.......)

1382. துதிகளில் வாசம் செய்யும் எங்கள்

துதிகளில் வாசம் செய்யும்
எங்கள் தூயாதி தூயரே - உம்மை
துதிக்கிறோம் உம்மை தொழுகிறோம்
நீர் ஒருவரே பாத்திரர்

உம்மை பாடி போற்றுவோம்
உந்தன் நாமம் உயர்த்துவோம்
உமக்கே துதிகள் செலுத்துகிறோம்
உம் பாதம் தாழ்ந்து பணிகின்றோம்

1. என் வாழ்வில் நீர் செய்த
நன்மைகள் ஏராளம் ஏராளம்
அதை எண்ணி நான் உம்மை துதித்திட
என் நாட்கள் போதாதே
நீர் செய்த நன்மை நினைக்கின்றேன்
உள்ளம் நிறைந்து துதிக்கின்றேன்

2. என்மீது நீர் கொண்ட அன்பினை
உம் சிலுவையில் அறிந்தேன்
எனக்காய் நீர்பட்ட அடிகளில்
உம் நேசத்தை உணர்ந்தேன்
உம் சிலுவையை நோக்கி பார்க்கின்றேன்
உம் அன்பை நினைத்து துதிக்கின்றேன்

3. சோர்ந்து போன வேளைகளில்
புதிய பெலன் தந்தீர்
வறண்டு போன எந்தன் வாழ்க்கையில்
உம் ஜீவனை தந்தீர்
உம் பாதம் விழுந்து பணிகின்றேன்
என் வாழ்வை உமக்கு தருகின்றேன்

Tamil Hymns

1383. துதிகளின் பாத்திரனே துதிதனை

துதிகளின் பாத்திரனே
துதிதனை ஏந்தி நின்றோம்
தூயாவி அருள் தாருமே
துதிகளின் பாத்திரனே

1. கடந்த எம் நாட்கள் எல்லாம்
கருணையாய் நடத்தினாரே
கருத்துடன் மா தயவை
கனிவுடன் பாடிடுவோம்

2. ஆபத்து நாளினிலே
ஏற்ற சகாயர் நீரே
அதிசயம் செய்பவரே
துதிகளைச் செலுத்துகின்றோம்

3. முற்றுமாய் பலியாகவே
அர்ப்பணித்தோம் எம்மையே
ஆளுகை செய்திடுவீர்
ஆசீரை அளித்திடுவீர்

4. பாவங்கள் போக்கி அவர்
சாபங்கள் மாற்றினாரே
பரிசுத்த மீட்பதனை
பரமனே அளித்தனரே - துதி

5. மகிமையின் விண்ணரசர்
மகத்துவ தேவனவர்
மகிமையும் கனமதனை
மகிழ்வுடன் செலுத்துகின்றோம்

Tamil Hymns

1384. துதிகளின் மத்தியில் வாசம்

1. துதிகளின் மத்தியில் வாசம் செய்யும் சேனைகளின் தேவன்
தாழ்வில் நம்மை நினைத்த அவரை வாழ்வில் போற்றிடுவோம்

அல்லேலூயா அல்லேலூயா
ஆரவாரம் செய்வோம்

2. எரிகோவின் மதிலும் இடிந்து விழுந்தது துதியின் ஆயுதத்தால்
சாத்தான் சேனை பயந்து நடுங்கிடும் துதியின் முழக்கத்தினால்

3. பவுலும் சீலாவும் சிறையில் துதித்தனர் பாடுகள் மத்தியிலும்
மீட்கப்பட்டோர் சீயோனில் பாடுவார் துதியின் புதுப்பாடல்

4. மெளனத்தில் இறங்கும் மரித்தவர் எவரும் துதிக்க முடியாதே
தேகத்தில் ஆவி உள்ளவரை துதித்தே ஆராதிப்போம்

Tamil Hymns

1385. துதி பாடுவாய் நெஞ்சமே

துதி பாடுவாய் நெஞ்சமே இயேசுவை
அவர் துதி சொல்லி வரவே
தேவன் தந்திட்ட வாழ்வு இதுவே

முன் அறிந்தார் முன் குறித்தார்
நம்மை அழைத்தார் மகிமை படுத்தினார்
இன்னும் மகிமை படுத்துவார்

1. பூமியின் மண்ணை மரக்காலால்
அளந்தவரும் அவரே
வானங்களை திரைப்போலாய்
விரித்தவரும் அவரே
நட்சத்திரங்களை பெயர் சொல்லி
அழைத்தவரும் அவரே
உன்னையும் என்னையும்
உள்ளங்கையில் வரைந்தவரும் அவரே

2. வானம் திறந்து மன்னாவால்
போஷித்தவரும் அவரே
செங்கடல்தனை இரண்டாக
பிளந்தவரும் அவரே
மோசேயின் கைகோலால்
அற்புதங்கள் செய்தவரே
உலகம் முடியும் வரை துணையாய்
நம்முடன் இருப்பவரே

3. இழந்து போன என்னை
தேடி இரட்சிக்க வந்தவரே
பாவ குழியில் என்னை
மீட்டு புது வாழ்வு தந்தவரே
ஜீவனுள்ள நாளெல்லாம்
கிருபையால் காப்பவரே
உலகம் முடிவில் என்னை
அழைத்து பரலோகில் சேர்ப்பவரே

Tamil Hymns

1386. துதி மகிமை கனம் வல்லமை

துதி மகிமை கனம் வல்லமை
அனாதி தேவனுக்கே
எல்லா தேசமும் சர்வ சிருஷ்டியும்
தேவனை பணிந்திடுமே

சகல நாவும் போற்றும் தேவா - வானம் பூமி
எங்கும் முழங்கால்கள் முடங்கிடுமே - பணிந்து
நீரே என்றும் உயர்ந்திடுவீர் - உம் ராஜ்யம்
என்றென்றும் நிலைத்திருக்கும்
அனாதி தேவா

1387. துதி கனம் செலுத்துகிறோம் திரியேக

துதி கனம் செலுத்துகிறோம்
திரியே.க தேவனுக்கே
ஆராதனை நாயகரே
என்றென்றும் புகழ் உமக்கே (2)

1. பரிசுத்தரே பரம பிதாவே
பரலோக ராஜாவே - இருள் ஏதும்
பாவமேதும் இல்லாத தூயவரே

2. பேரறிவும் ஞானமும் நீரே
ஆலோசனை கர்த்தர் நீரே - யோசனையில்
பெரியவரே மறைபொருள் உமக்கில்லையே

3. சர்வலோக நீதிபதியே பூமியின் ராஜாவே
நீதியோடும் நிதானத்தோடும்
நியாயங்கள் தீர்ப்பவரே

4. என்னுயிராய் இருப்பவர் நீரே
என் பெலன் சுகம் நீரே - என் வழியே
சத்தியமே உம்மாலே வாழ்கிறேன்

Tamil Hymns

1388. துதி கனம் மகிமை எல்லாம்

துதி கனம் மகிமை எல்லாம்
நம் இயேசு ராஜாவுக்கே

1. தூதர்களே துதியுங்கள்
தூத சேனையே துதியுங்கள்
சூரிய சந்திரரே துதியுங்கள்
பிரகாச நட்சத்திரமே துதியுங்கள்

2. வானாதி வானங்களே துதியுங்கள்
ஆகாய மண்டலமே துதியுங்கள்
தண்ணீர் ஆழங்களே துதியுங்கள்
பூமியிலுள்ளவையே துதியுங்கள்

3. அக்கினி கல் மழையே துதியுங்கள்
மூடுபனி பெருங்காற்றே துதியுங்கள்
மலைகள் மேடுகளே துதியுங்கள்
பறவை பிராணிகளே துதியுங்கள்

4. வாலிபர் கன்னியரே துதியுங்கள்
பெரியோர் முதியோரே துதியுங்கள்
பிள்ளைகளே மகிழ்ந்து துதியுங்கள்
நாம் இயேசுவை என்றுமே துதித்திடுவோம்

Tamil Hymns

1389. துதி கீதங்களால் புகழ்வேன்

துதி கீதங்களால் புகழ்வேன்
உந்தன் நாம மகத் வங்களை
இயேசுவே இரட்சகா
உந்தன் நாமம் எங்கள் ஆறுதல்

1. தினத்தோறும் உம் கானங்களால்
நிறைத்திடுமே எங்களை நீர்
திரு உள்ளமதுபோல் எம்மை மாற்றிடுமே
கனிவோடெங்களை உந்தன் காருண்யத்தால்

2. அலை மோதும் இவ் வாழ்க்கையிலே
அனுகூலங்கள் மாறும் போது
வழி காட்டிடுமே துணை செய்திடுமே
கனிவோடடியார்களைக் காருண்யத்தால்

Tamil Hymns

1390. துதி கீதமே பாடியே வாழ்த்தி

துதி கீதமே பாடியே
வாழ்த்தி வணங்கிடுவோம்
ஜோதியின் தேவனாம்
இயேசுவைப் பணிந்திடுவோம்

1. தந்தைப் போல் நம்மைத் தாங்கியே
தோளில் ஏந்தி சுமந்தனரே
சேதம் ஏதும் அணுகிடாமல்
காத்த தேவனைத் துதித்திடுவோம்

2. காரிருள் போன்ற வேளையில்
பாரில் நம்மைத் தேற்றினாரே
நம்பினோரைத் தாங்கும் தேவன்
இன்றும் என்றுமாய் துதித்திடுவோம்

3. பஞ்சைப் போல் வெண்மை ஆகிட
பாவம் யாவும் நீக்கினாரே
சொந்த இரத்தம் சிந்தி நம்மை
மீட்ட தேவனைத் துதித்திடுவோம்

4. கட்டுகள் யாவும் அறுத்துமே
கண்ணீர் கவலை அகற்றினாரே
துதியின் ஆடை அருளிச் செய்த
தேவ தேவனைத் துதித்திடுவோம்

5. வானத்தில் இயேசு தோன்றிடுவார்
ஆயத்தமாகி ஏகிடுவோம்
அன்பர் இயேசு சாயல் அடைந்து
என்றும் மகிழ்ந்தே வாழ்த்திடுவோம்

Tamil Hymns

1391. துதிக்க துதிக்க இன்பம் பெருகுதே

துதிக்க துதிக்க இன்பம் பெருகுதே
உம்மை துதிக்க துதிக்க
கிருபை பெருகுதே
துதிக்க துதிக்க உயர்த்தப்படுகிறேன்
உம்மை துதிக்க துதிக்க
மதிலை தாண்டுவேன்

1. பவுலும் சீலாவும்
இரவெல்லாம் துதிச்சாங்க
துதிச்சது இரண்டு பேர்
விடுதலை பலருக்கு
துதிக்க துதிக்க தான் விடுதலை உண்டு
துதிக்க துதிக்க தான் இரட்சிப்பு உண்டு

2. அசைவில்லா இராஜ்ஜியத்தை
பெறப்போகும் நாமெல்லோரும்
பயத்தோடும் பக்தியோடும்
ஆராதனை செய்யணும்

3. சாம்பலுக்கு பதிலாக
சிங்காரம் தருவாரே
அழுகைக்கு பதிலாக
களிப்பை தருவாரே

Tamil Hymns

1392. துதிக்கிறோம் தேவனே உம் நாமமதையே

துதிக்கிறோம் தேவனே உம் நாமமதையே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் அல்லேலூயா
அல்லேலூயா (7)

1. தேவனே நீர் பெரியர்,
தேவனே நீர் வல்லவர்
தேவனே நீர் மகத்தவர்,
தேவனே நீர் நல்லவர் - அல்லேலூயா

2. கர்த்தர் இரக்கமுள்ளவர்
கர்த்தர் உருக்கமானவர்
கர்த்தர் சாந்தமுல்லவர்
கர்த்தர் கிருபை மிகுந்தவர்

3. கர்த்தர் ஆவியானவர்
கர்த்தர் வான் அக்கினி
கர்த்தர் தேற்றவாளன்
கர்த்தர் உன்னத பெலன்

4. இயேசுவே நீர் இரட்சகர்
இயேசுவே நீர் வைத்தியர்
இயேசுவே நீர் அற்புதர்
என்றுமே மாறாதவர்

5. இயேசுவே மணவாளன்
சீக்கிரம் வருகிறார்
இயேசுவே வாரும் வாரும்
ஸ்தோத்திரம் ஆமென்

Tamil Hymns

1393. துதிக்கிறோம் உம்மை வல்ல பிதாவே

1.துதிக்கிறோம் உம்மை – வல்ல பிதாவே
துத்தியம் செய்வோம் – உமை மா அரசே
தோத்ரம் உம் மாட்சிமைக்கே – பரனே
துந்துமி மாட்சிமைக்கே – பிதாவே.

2.சுதனே யிரங்கும் – புவியோர் கடனைச்
சுமந்ததைத் தீர்த்த – தூயசெம்மறியே,
சுத்தா ஜெபங்கேளும் – பரன்வலத்
தோழா ஜெபங்கேளும் – கிறிஸ்தே.

3.நித்தியபிதாவின் மகிமையில் – நீரே,
நிமலாவியினோ – டாளுகிறீரே,
நிதமேகார்ச்சனையே – உன்னத
நேயருக் கர்ச்சனையே – ஆமேன்

1394. துதிக்குப் பாத்திரரே எந்தன்

துதிக்குப் பாத்திரரே
எந்தன் துணையாளரே
ஆபத்து காலத்தில் அடைக்கலமே
ஆதரவே என் அனுகூலமே

உம்மை ஆராதனை செய்கிறேன்
உம்மை ஆராதனை செய்கிறேன்
உன்னதரே உயர்ந்தவரே
உம்மையே ஆராதிப்பேன்

1. யெகோவா ஷாலோம் நீரே
எந்தன் சமாதானமே
நித்திய மகிழ்ச்சி எனக்கு தந்தீர்
சஞ்சலம் தவிப்பு நீக்கிவிட்டீர்

2. யெகோவா ஷம்மா நீரே
என்னோடு இருப்பவரே
என்ன வந்தாலும் கலங்கிடேனே
அப்பா நீர் என்னோடு இருப்பதனால்

3. யெகோவா நிசி நீரே
எந்தன் ஜெயக் கொடியே
மனம் மகிழ்ந்து பாடிடுவேன்
மகிமையாய் நீர் வெற்றி சிறந்தீர்

Tamil Hymns

1395. துதி தங்கிய பரமண்டல சுவிசேடக

துதி தங்கிய பரமண்டல
சுவிசேடக நாமம் - சுப மங்கள
மிகு சம்பிரம சுக சோபன ஷேமம்

1. அதி சுந்தர நிறை கொண்டுயர்
அருள் மோக்கிஷ தீபன்
கதி உம்பர்கள் தொழும் இங்கித
கருணைப் பிரதாபன்

2. மந்தை ஆயர் பணிந்து பாதம்
மகிழ்ந்து வாழ்த்திய அத்தனார்
நிந்தையாய் ஒரு கந்தை மூடவும்
வந்த மாபரி சுத்தனார்

3. திருவான் உல கரசாய் வளர்
தேவ சொரூபனார்
ஒரு மாதுடை வினை
மாறிட நரர் ரூபமதானார்

4. ஆபிராம் முனி யிடமேவிய
பதிலாள் உபகாரன்
எபிரேயர்கள் குலம்
தாவீதென் அரசற் கோர்குமாரன்

5. சாதா ரண வேதா கம
சாஸ்த்ர சுவிசேஷன்
கோதே புரி ஆதா முடை
கோத்ர திரு வேஷன்

6. விண்ணாடரும் மண்ணாடரும்
மேவுந் திருப் பாதன்
பண்ணோதுவர் கண்ணாம்
வளர் பர மண்டல நாதன்

Tamil Hymns

1396. துதி துதி என் மனமேதுதிகளில்

துதி துதி என் மனமே
துதிகளில் உன்னதரை
அவர் நாள்தோறும் செய்யும்
நன்மைகளை நினைத்து
பாடித் துதி என் மனமே

1. அன்னையைப் போல அவர்
என்னை அரவணைத்தாற்றிடுவார்
அவர் அன்புள்ள மார்பதனில்
இன்பமாக இளைப்பாறுவேன் - நான்

2. கஷ்டங்கள் வந்திடவே
நல்ல கர்த்தராம் துணை அவரே
துஷ்ட எதிரிகள் நடுவிலவர்
நல்ல பந்தி ஆயத்தம் செய்வார்

3. பாரங்கள் அமிழ்த்தினாலும்
தீரா வியாதியால் கலங்கினாலும்
அவர் காயத்தின் தழும்புகளால்
வியாதி தனை விலக்கிடுவார்

4. சிங்கமோ விரியன் பாம்போ
பால சிங்கமோ வலு சர்ப்பமோ
அதன் தலையதை நசுக்கிடவே
பெலனதை தருபவரே

1397. துதித்திடு என் உள்ளமே ஸ்தோத்திரி

துதித்திடு என் உள்ளமே
ஸ்தோத்திரி என் கைகளே

1. மகத்துவ தேவனுக்கு ஸ்தோத்திரம்
மாறாத நேசருக்கு ஸ்தோத்திரம்
ஆலோசனை கர்த்தரே ஸ்தோத்திரம்
அதிசயமானவர்க்கு ஸ்தோத்திரம்

2. பாவங்களை வென்றவரே ஸ்தோத்திரம்
சாபங்களை தீர்த்தவரே ஸ்தோத்திரம்
ஆபத்தில் அடைக்கலம் ஸ்தோத்திரம்
ஆசீர்வாத தேவனே ஸ்தோத்திரம்

3. கண்ணீரைத் துடைப்பவரே ஸ்தோத்திரம்
கலங்காதே என்றவரே ஸ்தோத்திரம்
வியாதியின் பரிகாரியே ஸ்தோத்திரம்
ஆறுதலின் தேவனே ஸ்தோத்திரம்

4. மரணத்தை ஜெயித்தவரே ஸ்தோத்திரம்
மாசில்லாத தேவனே ஸ்தோத்திரம்
யூதராஜசிங்கமே ஸ்தோத்திரம்
ஆச்சரிய தேவனே ஸ்தோத்திரம்

Tamil Hymns

1398. துதித்திடுவேன் முழு இதயத்தோடு

துதித்திடுவேன் முழு இதயத்தோடு
புகழ்ந்திடுவேன் முழு உள்ளத்தோடு - 2
உன்னதரே உம்மில் மகிழ்ந்து
களிகூர்கின்றேன் தினமும் - 2

துதித்திடுவேன் முழு இதயத்தோடு
புகழ்ந்திடுவேன் முழு உள்ளத்தோடு - 2

1. ஒடுக்கப்படுவோர்க்கு அடைக்கலமே
நெருக்கடி வேளையில் புகலிடமே2
அடைக்கலமே புகலிடமே

2. நாடி தேடி வரும் மனிதர்களை
டாடி கைவிடுவதே இல்லை
ஒருபோதும் கைவிட மாட்டீர்

3. வறியவர்கள் மறக்கப்படுவதில்லை
எளியோர் நம்பிக்கை வீண்போவதில்லை
எளியோர் நம்பிக்கை வீண்போவதில்லை

1399. துதித்திடுவோம் நம் இயேசு பரனை

துதித்திடுவோம் நம் இயேசு பரனை
தூய்மையின் ஜீவியம் அடைந்திடவே
பரமனின் அருளை தினம் பெறவே
நாம் அனுதினம் துதித்திடுவோம்

1. சென்ற காலமெல்லாம் சுகமுடனே
கர்த்தன் நம் இயேசுவே
பாதுகாத்த தயவை எண்ணி
என்றும் துதித்திடுவோம்

2. அழைத்த தேவனையே நம்பிடுவோம்
அவரே நடத்திடுவார்
ஜெயத்துடனே நித்தம் நடத்தி
கிருபைகள் ஈந்திடுவார்

3. துன்பம் பலவாய் நம்மைச் சூழ்ந்திடினும்
யாவும் அகற்றினாரே
கண்ணீர் கவலை யாவும் துடைத்து
கர்த்தன் தேற்றினாரே

4. தேவ வழி நடப்போர் யாவருக்கும்
தேவன் துணையாகுவார்
அன்பின் வாக்கு யாவும் அளிப்பார்
அன்பரைத் துதித்திடுவோம்

5. தேவன் வந்திடுவார் வேகமுடன்
வானில் தோன்றிடுவார்
பரமனோடு வாழும் பாக்கியம்
பாரில் ஆனந்தமே

1400. துதித்துப் பாடிட பாத்திரமே

1. துதித்துப் பாடிட பாத்திரமே
துங்கவன் இயேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசஞ்செய்யும்
தூயனை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே

ஆ! அற்புதமே அவர் நடத்துதலே
ஆனந்தமே பரமானந்தமே
நன்றியால் உள்ளமே மிக பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

2. கடந்த நாட்களில் கண்மணிபோல்
கருத்துடன் நம்மைக் காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததாலே ஸ்தோத்தரிப்போமே

3. அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்தரிப்போமே

4. இந்த வனாந்திர யாத்திரையில்
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிடம் ஆனதால் ஸ்தோத்தரிப்போமே

5. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைந்து நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே

Tamil Hymns

1401. துதிபலியை செலுத்த வந்தோம்

துதிபலியை செலுத்த
வந்தோம் இயேசையா
உம்மை ஆராதிக்க
கூடி வந்தோம் இயேசையா

நீர் உயர்ந்தவர் நீர் வல்லவர்
இந்த உலகை ஆளும் தெய்வம் நீரே

1. என்னிலே ஒன்றுமில்லை
ஆனாலும் நேசித்தீரே -2
என்னிலே நன்மையில்லை
ஆனாலும் உயர்த்தினீரே
தகப்பனை போல என்னைச் சுமந்தீரையா
ஒரு தாயை போல என்னை தேற்றினீரே
சுமந்தீரையா தேற்றினீரே
ஆராதனை உமக்கே ஐயா எங்கள்
ஆராதனை ஆராதனை
எங்கள் ஆராதனை ஆராதனை ஆராதனை
ஆராதனை உமக்கே ஐயா

2. பிறந்த நாள் முதலாய் தூக்கி எறியப்பட்டேன்
ஒரு கண்ணும் என்மேலே
இரக்கமாய் இருந்ததில்லை
பிழைத்திரு என்று என்னை தூக்கினீரே
உம் மகனாகவே
என்னை ஏற்றுக்கொண்டீர்
பிழைக்க செய்தீர் ஏற்றுக்கொண்டீர்
ஆராதனை உமக்கே ஐயா

3. உமது இரக்கத்திற்கு
முடிவே இல்லையாப்பா
உமது அன்பிற்கு அளவே இல்லையப்பா
உமது காருண்யம் என்னை பெரியவனாய்
உயரத்திலே நிறுத்தியதே

Tamil Hymns

1402. துதிப்பதே என் தகுதியல்லோ

துதிப்பதே என் தகுதியல்லோ
துதித்திடுவேன் என் இயேசுவை

1. வேதம் நிறைந்த இதயம் தந்தார்
ஜெபம் நிறைந்த நேரம் தந்தார்
கண்ணீர் நிறைந்த கண்கள் தந்தார்
கருணை நிறைந்த கரங்கள் தந்தார்

2. வியாதி நேரத்தில் வல்லமை தந்தார்
சோதனை நேரத்தில் ஜெயம் தந்தார்
கைவிட்ட நேரத்தில் ஜீவன் தந்தார்
ஆரோக்கிய நேரத்தில் அடக்கம் தந்தார்

3. மனதில் நிறைந்த மகிழ்ச்சி தந்தார்
பார்வை நிறைந்த தூய்மை தந்தார்
சிந்தனை நிறைந்த ஊழியம் தந்தார்
செயல் நிறைந்த திட்டங்கள் தந்தார்

4. ஆபத்து நேரத்தில் அடைக்கலம் தந்தார்
பெலவீன நேரத்தில் பெலன் தந்தார்
செய்தி நேரத்தில் தூது தந்தார்
பாடிய நேரத்தில் பரவசம் தந்தார்

5. வளம் நிறைந்த வாழ்வு தந்தார்
மகிமை நிறைந்த தாழ்மை தந்தார்
அன்பு நிறைந்த ஆட்கள் தந்தார்
ஆவி நிறைந்த அறிவு தந்தார்

6. சாட்சி நிறைந்த ஜீவியம் தந்தார்
சத்தியம் நிறைந்த சபை தந்தார்
இயேசுவில் நிறைந்த ஞானம் தந்தார்
ஒழி நிறைந்த வழி திறந்தார்

Tamil Hymns

1403. துதிப்பேன் இயேசுவின் பாதம்

துதிப்பேன் இயேசுவின் பாதம்
துதிக்கப் பெறுமற்புதரானதால்
வணங்குவேன் வணங்குவேன் (2)
வணங்குவேனவர் பாதம் வீழ்ந்து நான்

1. பேயின் தலை மிதித்தவர்
நோயின் பெலனழித்தவர்
போற்றுவேன் போற்றுவேன்
போற்றுவேனேசு தேவசுதனை

2. வானம் பூமியுமடங்க
வல்ல அற்புதரானதால்
அற்புதர் அற்புதர் அற்புதர்
அவர் நாமமே அதைத்

3. ஜே ஜே ஜெயக்குமாரனும்
ஜெயம்பெற்று விளங்கினார்
ஜொலிப்பாரே ஜொலிப்பாரெ
ஜொலிப்பாரே அவர் தாசர் என்றைக்கும்

4. தூதர் கூட்டங்கள் போற்றும்
தூய சுந்தரராமிவர்
மகத்துவமே மகத்துவமே மகத்துவமே
அவர் ராஜ்யமென்றைக்கும்

5. செல்வேன் இயேசுவின் பாதம்
சொல்வேன் உள்ளத்தின் பாரம்
மகிழுவேன் மகிழுவேன் மகிழுவேன்
அவர் வார்த்தையிலென்றும்

Tamil Hymns

1404. துதிப்பேன் உம்மை துதிப்பேன்

துதிப்பேன் உம்மை துதிப்பேன்
மகிமை செலுத்தி துதிப்பேன்

துதியும் கனமும் எல்லாம்
உமக்கே தேவா உமக்கே (2)

1. கிருபைகள் என்னில்
பெருகச் செய்தீரே ஸ்தோத்திரம்
உம் கரங்களால் என்னை
அணைத்துக் கொண்டீரே ஸ்தோத்திரம்

2. சோதனை என்னை
வந்த போது நீர் காத்தீர்
வேதனை என்னில் வந்த
போது கிருபை தந்தீர்

3. கண்ணீர் என்னில் வந்த
போது நீர் துடைத்தீர்
உம் கரங்களால் என்னை
அணைத்து காத்துக் கொண்டீர்

Tamil Hymns

1405. துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்

துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்
கால காலமெல்லாம் என்னைக் காத்தவரை
நான் உள்ளவும் துதிப்பேன்
துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்

1. பாவங்கள் பல நான் செய்திட்டாலும்
பாவி என் மீது அன்பைச் சொரிந்து
என்னை மீட்டு காத்து நடத்திய
எந்தன் இயேசுவைத் துதிப்பேன்

2. நண்பர்கள் பகைவராய் மாறிட்டாலும்
துன்பங்கள் துயரங்கள் சூழ்ந்திட்டாலும்
என்னைத் தேற்றி அன்பு கூர்ந்த
எந்தன் இயேசுவைத் துதிப்பேன்

3. வாழ்விலே உம்மை நான் ஏற்றிடவே
தாழ்விலும் என்னை நீர் தாங்கிடவே
ஏழை நானே பாதம் பணிந்து
எந்தன் இயேசுவைத் துதிப்பேன்

Tamil Hymns

1406. துதிப்போம் அல்லேலூயா பாடி

துதிப்போம் அல்லேலூயா பாடி
மகிழ்வோம் மகிபனைப் போற்றி
மகிமை தேவ மகிமை - தேவ
தேவனுக்கே மகிமை - அல்லேலூயா

1. தேவன் நன்மை வந்தடையச் செய்தார்
தம்மையென்றும் அதற்காகத் தந்தார்
அற்புதங்கள் செய்யும் சர்வவல்ல தேவன்
அடைக்கலம் கொடுத்திடுவார்

2. அஞ்சிடேனே இருளிலே என்றும்
நடமாடும் கொள்ளை நோயைக் கண்டும்
பயங்கரத்திற்கும் பறக்கும் அம்பிற்கும்
பயந்திடேன் ஜெயித்திடுவேன்

3. தேவன் எந்தன் அடைக்கலமாமே
ஒருபோதும் பொல்லாப்பு வராதே
சர்வ வல்ல தேவன் தாபரமாக நின்றே
விடுவித்துக் காத்திடுவார்

4. கூப்பிடும் வேளைகளிலே என்னை
தப்புவிக்க ஆத்திரமாய் வந்தார்
சிங்கத்தின் மேலே நடந்திடுவேனே
சர்ப்பங்களை மிதித்திடுவேன்

5. பாதம் கல்லில் என்றும் இடறாமல்
கரங்களில் தாங்கிடுவார் தூதர்
ஒருபோதும் வாதை என் கூடாரத்தை
அணுகாமலே காத்திடுவார்

Tamil Hymns

1407. துதிப்போம் இயேசுவை துதிப்போம்

துதிப்போம் இயேசுவை துதிப்போம்
துதிப்போம் இராஜாவை துதிப்போம் ..... (2)

1.எரிகோ மதிலை தகர்த்திட்ட
தேவன் நம்மோடு இருக்கிறார் ..... (2)
யோசுவாவின் தேவன் இன்றும்
நம்மோடிருந்து தடையை தகர்ப்பார் ..... (2)

2.சிங்கத்தின் வாயை கட்டின
தேவன் நம்மோடு இருக்கிறார் ..... (2)
தானியேலின் தேவன் இன்றும்
நம்மோடிருந்து நம்மை காப்பார் ..... (2)

3.சிறையில் கட்டுகள் அறுத்திட்ட
தேவன் நம்மோடு இருக்கிறார் ..... (2)
பவுல்சீலாவின் தேவன் இன்றும்
நம்மோடிருந்து கட்டுகள் அறுப்பார் ..... (2)

1408. துதியின் ஆடை அணிந்து துயரம்

துதியின் ஆடை அணிந்து
துயரம் எல்லாம் மறந்து
துதித்து மகிழ்ந்திருப்போம் - நம்
தூயவரில் மகிழ்ந்திருப்போம்

1. இந்த நாள் கர்த்தர் தந்த நாள்
இதிலே களிகூறுவோம்
புலம்பல் இல்ல இனி அழுகையில்ல
இன்று புசித்து கொடுத்து கொண்டாடுவோம்

துதித்து துதித்து மகிழ்ந்திருப்போம்
துயரம் அனைத்தும் மறந்திருப்போம்

2. கர்த்தருக்குள் நாம் மகிழ்ந்திருந்தால்
அது தானனே நமது பெலன்
எத்தனையோ நன்மை செய்தவரை
இன்று ஏற்றி போற்றி புகழ்ந்திடுவோம்

3. நன்றியோடும் புகழ் பாடலோடும்
அவர் வாசலில் நுழைந்திடுவோம்
நல்லவரே கிருபையுள்ளவரே
என்று நாளெல்லாம் உயர்த்திடுவோம்

4. புலம்பலுக்கு பதில் ஆனந்தமே
இன்று ஆனந்தம் ஆனந்தமே
ஒடுங்கிப் போன ஆவி ஓடிப்போச்சு
இன்று உற்சாக ஆவி வந்தாச்சு

5. துயரத்துக்கு பதில் ஆறுதலே
இன்று ஆறுதல் ஆறுதலே
சாம்பலுக்கு பதில் சிங்காரமே
இன்று சிங்காரம் சிங்காரமே

6. கர்த்தர் தாமே நம்மை உண்டாக்கினார்
அவரின் ஜனங்கள் நாம்
அவர் தாமே நம்மை நடத்துகின்றார்
அவரின் ஆடுகள் நாம்

Tamil Hymns

1409. துதியின் சத்தத்தோடு ஆராதிப்போம்

துதியின் சத்தத்தோடு ஆராதிப்போம் - நாம்
துதியின் சத்தத்தோடு பலியிடுவோம்
உதடுகளின் கனியாகிய
ஸ்தோத்திர பலி செலுத்தி ஆராதிப்போம்
ஸ்தோத்திர பலி (3) செலுத்தி ஆராதிப்போம்

1. துதியின் சத்தம் அலங்கத்தை அதிரப்பண்ணும்
துதியின் சத்தம் அற்புதம் நடக்க செய்யும்
துதித்தலே இன்பமானது அல்லேலூயா துதித்தலே ஏற்றது

2. துதியின் சத்தம் இரும்புக் கதவை தகர்க்கும்
துதியின் சத்தம் அந்தகார இருள் அகற்றும்
துதித்தலே இன்பமானது அல்லேலூயா துதித்தலே ஏற்றது

3. துதியின் சத்தம் சாத்தானை கலங்கப்பண்ணும்
துதியின் சத்தம் சத்துருவின் சதி முறிக்கும்
துதித்தலே இன்பமானது அல்லேலூயா துதித்தலே ஏற்றது

Tamil Hymns

1410. துதியுங்கள் தேவனை

துதியுங்கள் தேவனை
தியுங்கள் தூயோனை

1. அவரது அதிசயங்களை பாடி (2)
அவர் நாமத்தை பாராட்டி,
அவரை ஆண்டவர் என்றறிந்து
அவரையே போற்றுங்கள்
ஆப்ரகாமின் தேவனை ஈசாக்கின் தேவனை
ஆர்ப்பரித்து வணங்குங்கள்

2. இஸ்ரவேலின் மக்களின் மன்னவனை
இடையூட்டினை போக்கினனே
கானானின் தேசத்தை காட்டினனே
கர்த்தரை போற்றுங்கள்
ராஜாதி ராஜனை கர்த்தாதி கர்த்தனை
ஆர்ப்பரித்து வணங்குங்கள்

Tamil Hymns

1411. துதியுங்கள் நம் தேவனை

துதியுங்கள் நம் தேவனை
போற்றுங்கள் நம் இராஜனை
வாழ்த்துங்கள் நம் கர்த்தனை
போற்றுவோம் வாழ்த்துவோம்
இன்றும் என்றென்றுமாய்

ஆஆஆ அல்லேலூயா
ஓஓஓ ஓசன்னா (4)

1. அதிசயம் செய்யும் தேவன் பெரியவர்
நாம் ஆராதிக்கும் தேவன் என்றும் சிறந்தவர்
நமக்காய் யாவும் செய்து முடித்தார்
நன்றியோடு ஆராதிப்போம்

2. நம் பாவம் போக்கும் ஜீவ தேவன் நல்லவர்
நம் பாவம் போக்கும் வல்ல தேவன் சிறந்தவர்
கண்ணீர் கவலை வியாதி யாவும் மாற்றுவார்
கரங்களை தட்டி ஆர்ப்பரிப்போம்

3. நமக்காய் இரத்தம் சிந்தி மரித்தார்
மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார்
நேற்றும் இன்றும் மாறிடா நம் இயேசுவை
கைகள் உயர்த்தி ஆராதிப்போம்

Tamil Hymns

1412. துயரத்தில் கூப்பிட்டேன்

துயரத்தில் கூப்பிட்டேன் உதவிக்காய்
கதறினேன் அழுகுரல் கேட்டீரையா
குனிந்து தூக்கினீர் பெரியவனாக்கினீர்
உமது காருண்யத்தால்

குனிந்து தூக்கினீரே பெரியவனாக்கினீரே
உமது காருண்யத்தால் குனிந்து தூக்கினீரே

1. எனது விளக்கு எரியச் செய்தீர்
இரவைப் பகலாக்கினீர்
எரிந்து கொண்டிருப்பேன்
எப்போதும் உமக்காய்
என் ஜீவன் பிரியும் வரை

(எரிந்து கொண்டேயிருப்பேன் எப்போதுமே
உமக்காய் என் ஜீவன் பிரியும்
வரை எரிந்து கொண்டேயிருப்பேன்)

2. நான் நம்பும் கேடகம்
விடுவிக்கும் தெய்வம்
நீர்தான் நீர்தானையா
தூயவர் தூயவர் துதிக்குப் பாத்திரர்
ஆறுதல் நீர்தானையா

(தூயவர் தூயவரே துதிக்குப் பாத்திரரே
ஆறுதல் நீர்தானையா துதிக்குப் பாத்திரரே)

3. சேனைக்குள் பாய்ந்தேன் உந்தன் தயவாலே
மதிலைத் தாண்டிடுவேன்
புகழ்ந்து பாடுவேன் உம்மையே உயர்த்துவேன்
உயிர் வாழும் நாட்களெல்லாம்

(புகழ்ந்து பாடிடுவேன் உம்மையே
உயர்த்திடுவேன் - உயிர் வாழும்
நாட்களெல்லாம் உம்மையே உயர்த்திடுவேன்)

Tamil Hymns

1413. துயருற்ற வேந்தரே

1. துயருற்ற வேந்தரே,
சிலுவை ஆசனரே,
நோவால் வாடும் முகத்தை
இருள் திரை மூடிற்றே,
எண்ணிறந்த துனபம் நீர்
மௌனமாக சகித்தீர்.

2. பலியாக மரிக்கும்
வேளை வரும் அளவும்
மூன்று மணி நேரமாய்,
துணையின்றி மௌனமாய்
காரிருளில் தேவரீர்
பேயோடே போராடினீர்.

3. தெய்வ ஏசு மைந்தனார்,
அபிஷேக நாதனார்
"தேவனே, என் தேவனே,
என்தனை ஏன் கைவிட்டீர்?"
என்றுரைக்கும் என் வாசகம்
கேள் இருண்ட ரகசியம்

Tamil Hymns

1414. துள்ளுதையா உம்நாமம் சொல்ல சொல்ல

துள்ளுதையா, உம்நாமம் சொல்ல சொல்ல
துதித்து துதித்து தினம் - மகிழ்ந்து
மகிழ்ந்து மனம் துள்ளுதையா

1. அன்பு பெருகுதையா
என் அப்பாவின் நிழல்தனிலே
அபிஷேகம் வளருதையா
எபிநேசர் பார்வையிலே

2. உள்ளங்கள் மகிழுதையா
உம்மோடு இருக்கையிலே
பள்ளங்கள் நிரம்புதையா
பாடி துதிக்கையிலே

3. நம்பிக்கை வளருதையா
நாதா உம் பாதத்திலே
நன்மைகள் பெருகுதையா
நாள்தோறும் துதிக்கையிலே

4. நோய்கள் நீங்குதையா
உம்மை கர்த்தர் உம் சமூகத்திலே
காயங்கள் ஆறுதையா
கருத்தோடு துதிக்கையிலே

5. கண்ணீர்கள் மறையுதையா
கர்த்தர் உம் சமூகத்திலே
காயங்கள் ஆறுதையா
கருத்தோடு துதிக்கையிலே

Tamil Hymns

1415. துன்பமா துயரமா

துன்பமா துயரமா அது தண்ணீர் பட்ட
உடை போன்றதம்மா
காற்றடிச்சா வெயில் வந்தா
காய்ந்து போய்விடும் கலங்காதே

1. இயேசுதான் நீதியின் கதிரவன்
உனக்காக உதயமானார் உலகத்திலே
நம்பி வா வெளிச்சம் தேடி வா
உன் துக்க நாட்கள் இன்றோடு முடிந்தது

2. இழந்து போனதை தேடி இயேசு வந்தார்
இளைப்பாறுதல் தருவேன் என்று சொன்னார்
எழுந்து வா போதும் பயந்தது
உன் புயல்காற்று இன்றோடு ஓய்ந்தது

3. உன் துக்கங்கள் இயேசு சுமந்துகொண்டார்
உன் பிணிகள் எல்லாம் ஏற்றுக்கொண்டார்
நீ சுமக்க இனி தேவையில்லை
ஒரு சுகவாழ்வு இந்நாளில் துளிர்த்தது

4. இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பில்லை
இயேசு நாமம் சொல்லாமல் மீட்பு இல்லை
கூப்பிடு இயேசு இயேசு என்று - உன்
குறைகளெல்லாம் நிறைவாக்கி நடத்திடுவார்

Tamil Hymns

1416. துன்பமான வேளையில் இன்பமான

துன்பமான வேளையில் இன்பமானவேளையில்
கஷ்டமான பாதையில் களிப்பானநேரத்தில்
என் இயேசு என்னோடு இருக்கின்றாரே

அவரே என் கன்மலை என் கோட்டையுமானார்
அவரை நான் சார்ந்திடுவேன்
அவரை நான் என்றும் சார்ந்திடுவேன்... (3)

1. கலங்கினவேளையில் கண்ணீர்மத்தியில்
வியாதியின் பாதையில் புலம்பலின் நேரத்தில்
அழாதே என் மகனே, உன்னை விடுவிப்பாரே
நீ நம்பும் தேவன் உன்னை கைவிடாரே

2. ஊழியப்பாதையில் சோர்வானநேரத்தில்
பணக்கஷ்டம் வந்தாலும், சபைவளராவிட்டாலும்
திடன்கொள் மனமே கலங்கிடாதே
உன்னை அழைத்தவர் உன்னை காத்திடுவார்

Tamil Hymns

1417. தூங்காமல் ஜெபிக்கும் வரம் தாங்கப்பா

தூங்காமல் ஜெபிக்கும் வரம் தாங்கப்பா
விழித்திருந்து ஜெபிக்கும் வரம் தாங்கப்பா
நான் தூங்கினால் எதிரிகளை விதைப்பான்
ஜெபம் மறந்தால் எதிரி ஜெயம் எடுப்பான்

1. உடலை ஒடுக்கணும்
உணவை குறைக்கணும் - பேச்சை
நிறுத்தணும் பெலத்தில் வளரணும்

2. அன்னாளை போல
கண்ணீரை வடிக்கணும் - சாமுவேலை
காணும்வரை இதயத்தை ஊற்றணும்

3. தானியேல் போல
துதிக்கணும் ஜெபிக்கணும் - சிங்கங்களின்
வாய்களை தினம்தினம் கட்டணும்

4. பவுலை போல
சிறையிலே ஜெபிக்கணும் - கதவுகள்
திறக்கணும் கட்டுகள் நீங்கணும்

5. மோசேயை போல
மலைமேல் ஏறணும் - கரங்களை
விரிக்கணும் கதறணும் தேசத்திற்காய்

Tamil Hymns

1418. துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக்

துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக் கழித்தாலும்
இன்பம் இழந்தேன் என்றெண்ணி சோர்ந்தாலும்
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்
கர்த்தர் செய்த யாவும் வியப்பை தரும்

எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள்
கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்
ஆசீர்வாதம்! எண்ணு ஒவ்வொன்றாய்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்

கவலைச்சுமை நீ சுமக்கும் போதும்
சிலுவை உனக்கு பளுவாகும் போதும்
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்
கர்த்தர் செய்த யாவும் வியப்பை தரும் - எண்ணி

நிலம் பொன்னுள்ளோரை நீ பார்க்கும் போது
நினை கிறிஸ்துவின் ஐசுவரியம் உண்டுனக்கு
பணங்கொள்ளா பேராசீர்வாதத்தைப் பார்
பரலோக பொக்கிஷமும் வீடும் பார் - எண்ணி

அகோரத் துன்பங்கள் உன்னைச் சூழ்ந்தாலும்
அதைரியப்படாதே கர்த்தர் உன் பக்கம்
அநேகமாம் நீ பெற்ற சிலாக்கியங்கள்
தூதர் உன்னை தேற்றுவார் பிரயாணத்தில் - எண்ணி

Tamil Hymns

1419. தூதாக்கள் விண்ணில் பாடிய

1. தூதாக்கள் விண்ணில் பாடிய
தயாபரருக்கே
துதி செலுத்து சகல
நரரின் கூட்டமே

2. மா செய்கைகளைச் செய்கிற
பராபரனைப் போல்
ஆர் என்றவரை உத்தம
கருத்தாய்ப் போற்றுங்கள்

3. இந்நாள் வரைக்கும் நமக்கு
சுகம் அருளினார்
நீங்கா இக்கட்டைத் தமது
கரத்தால் நீக்கினார்

4. நாம் செய்திருக்கும் பாவத்தை
பாராதிருக்கிறார்
தெய்வீக ஆக்கினைகள் அன்பாய்
அகற்றினார்

5. இனியும் நாம் மகிழ்ச்சியாய்
இருக்க சகல
தீங்கையும் அவர் தயவாய்
விலக்கியருள

6. புவியில் சமாதானத்தை
அவர் தந்தென்றைக்கும்
அன்பாய் நாம் செய்யும் வேலையை
ஆசிர்வதிக்கவும்

7. நம்மோடே அவர் தயவாய்
இருந்து துக்கமும்
வியாகுலமும் தூரமாய்
விலகப் பண்ணவும்

8. நாம் சாகுமட்டுக்கும் கர்த்தர்
நாம் தங்கும் கோட்டையும்
நாம் சாகும்போது நம்முட
கதியுமாகவும்

9. பிரிந்து போகும் ஆவியை
மோட்சானந்தத்திலே

Tamil Hymns

அவர் சேர்த்ததைத் தம்மண்டை
மகிழ்ச்சியாகவே

Tamil Hymns

1420. தூபம் போல் என் ஜெபங்கள்

தூபம் போல் என் ஜெபங்கள்
ஏற்றுக்கொள்ளும் ஐயா
மாலை பலி போல் என் கைகளை
உயர்த்தினேன் ஐயா

உம்மை நோக்கி கதறுகிறேன்
விரைவாய் உதவி செய்யும்

1. என் குற்றங்கள் நீர் மனதில் கொண்டால்
நிலைநிற்க முடியாதையா
மன்னிப்புத் தருபவரே
உம்மைத் தான் தேடுகிறேன்

2. விடியலுக்காய் காத்திருக்கும்
காவலனைப் பார்கிலும்
என் நெஞ்சம் ஆவலுடன்
உமக்காய் ஏங்குதையா

3. என் வாய்க்கு காவல் வையும்
காத்துக் கொள்ளுமையா
தீயன எதையுமே
நான் நாட விடாதேயும்

4. என்கண்கள் உம்மைத் தானே
நோக்கி இருக்கின்றன
அடைக்கலம் புகுந்தேன்
நான் அழிய விடாதேயும்

5. இடர் (துடை) களெல்லாம் நீங்கும் வரை
புகலிடம் நீர்தானையா
எனக்காய் யாவையுமே
செய்து முடிப்பவரே

6. என் கண்ணீரை உம் தோற்பையிலே
சேர்த்த வைத்திருக்கிறீர்
அலைச்சல் அனைத்தையும்
அறிந்து இருக்கிறீர்

Tamil Hymns

1421. தூய ஆவியானவர் இறங்கும்

1. தூய ஆவியானவர் இறங்கும்
துரிதமாக வந்திறங்கும்
தடை யாவையும் தயவாய் நீக்கி இறங்கும்

பரிசுத்த பிதாவே இறங்கும்
இயேசுவின் மூலம் இறங்கும்

2. பல பல வருடங்கள் கழிந்தும்
பாரினில் இன்னும் இருளும்
அகலவில்லை எனவே நீரே இறங்கும்

3. ஜெபிப்பவர் பலரையும் எழுப்பும்
கிறிஸ்தவ சமூகத்தைத் திருத்தும்
துயபரனே தயவாய் வேகம் இறங்கும்

4. ஐந்து கண்டம் வாழும் மனிதர்
ஐந்து காயம் காண இறங்கும்
பாடுபட்ட நாதரே இன்றே இறங்கும்

Tamil Hymns

1422. தூய தூய தூயா

1. தூய, தூய, தூயா! சர்வவல்ல நாதா!
தேவரீர்க் கெந்நாளும் சங்கீதம் ஏறுமே
தூய, தூய, தூயா! மூவரான ஏகா!
காருணியரே, தூய திரியேகரே!

2. தூய, தூய, தூயா! அன்பர் சூழ நின்று
தெய்வ ஆசனமுன்னர் தம்கிரீடம் வைப்பரே
கேருபீம் சேராபீம் தாழ்ந்து போற்றப்பெற்று,
இன்றென்றும் வீற்றாள்வீர், அநாதியே!

3. தூய, தூய, தூயா! ஜோதி பிரகாசா,
பாவக் கண்ணால் உந்தன்
மாண்பைக் காண யார் வல்லோர்
நீரே தூய தூயர், மனோவாக்குக் கெட்டா
மாட்சிமை, தூய்மை, அன்பும் நிறைந்தோர்,

4. தூய, தூய, தூயா! சர்வவல்ல நாதா!
வானம் பூமி ஆழி
உம்மை ஸ்தோத்திரிக்குமே
தூய, தூய, தூயா! மூவரான ஏகா!
காருணியரே, தூய திரியேகரே!

Tamil Hymns

1423. தூய பந்தி சேர்ந்த கைகள்

1. தூய பந்தி சேர்ந்த கைகள்
சேவை செய்யக் காத்திடும்
தூய தொனி கேட்ட செவி
தீக்குரல் கேளாமலும்.

2. ”தூயர் தூயர்” என்ற நாவு
வஞ்சனை பேசாமலும்
தூய அன்பைக் கண்ட கண்கள்
என்றும் நம்பி நோக்கவும்.

3. தூய ஸ்தலம் சென்ற கால்கள்
ஒளியில் நடக்கவும்
தூய ஆவி பெற்ற எம்மில்
நவ ஜீவன் பொங்கவும்.

1424. தூயர் ராஜா எண்ணிறந்த

1. தூயர் ராஜா, எண்ணிறந்த
வான்மீன் சேனை அறிவீர்
மாந்தர் அறியா அநேகர்
உம்மைப் போற்றப் பெறுவீர்
எண்ணரிய பக்தர் கூட்டம்
லோக இருள் மூடினும்
விண்ணின் ராஜ சமுகத்தில்
சுடர்போல விளங்கும்.

2. அந்தக் கூட்டத்தில் சிறந்த
ஓர் அப்போஸ்தலனுக்காய்
நாங்கள் உம்மைத் துதிசெய்வோம்
வருஷா வருஷமாய்
கர்த்தர்க்காக அவன் பட்ட
நற் பிரயாசம் கண்டதார்?
பக்தரின் மறைந்த வாழ்க்கை
கர்த்தர்தாமே அறிவார்.

3. தாசரது ஜெபம், சாந்தம்
பாடு, கஸ்தி யாவுமே
தெய்வ மைந்தன் புஸ்தகத்தில்
தீட்டப்பட்டிருக்குமே
இவை உந்தன் பொக்கிஷங்கள்
நாதா, அந்த நாளிலும்
உம் சம்பத்தை எண்ணும்போது
எண்ணும் அடியாரையும்.

1425. தூயாதி தூயவரே

தூயாதி தூயவரே
உமது புகழை நான் பாடுவேன்
பாரில் எனக்கு வேறென்ன வேண்டும்
உயிருள்ள வரை நின் புகழ் பாட வேண்டும்

1. சீடரின் கால்களைக் கழுவினவர்
செந்நீரால் என்னுள்ளம் கழுவிடுமே

2. பாரோரின் நோய்களை நீக்கினவர்
பாவி என் பாவ நோய் நீக்கினீரே

3. துயரங்கள் பாரினில் அடைந்தவரே
துன்பங்கள் தாங்கிட பெலன் தாருமே

4. பரலோகில் இடமுன்று என்றவரே
பரிவாக எனைச் சேர்க்க வேகம் வாருமே

1426. தூரம் சென்று போனீரோ உம்மை

1. தூரம் சென்று போனீரோ உம்மை
தேடி தேடி கண்கள் வாடுதே
தளராத விசுவாசத்தினால் உம்மை
நாடி நாடி நானும் வாழ்கிறேன்

நான் என்ன சொல்லுவேன்
நான் எங்கு செல்லுவேன்
நீர் தந்த கிருபையால்
உள்ளம் நிறைந்து பாடுவேன்

பாடுவேன் துதிப்பேன் இருள் சூழும்
வேளையிலும் கண்ணீரின் பாதையிலும்
பாடுவேன் துதிப்பேன் கரம் உயர்த்தி
சொல்லுவேன் உம் வார்த்தை உண்மையே

2. பல நன்மைகள் நீர் வைத்துமே
என் கண்களால் காண முடியல
ஆனாலும் நீர் என் நம்பிக்கை
நீர் எனக்காய் மரித்து உயிர்த்தெழுந்தீர்

Tamil Hymns

1427. தூய்மை பெற நாடு

1. தூய்மை பெற நாடு; கர்த்தர் பாதமே
நிலைத்தவர் வார்த்தை உட்கொள்ளென்றுமே;
கூடி பக்தரோடு சோர்ந்தோர் தாங்குவாய்,
யாவிலுமே தெய்வ தயை நாடுவாய்.

2. தூய்மை பெற நாடு; லோகத்தில் கோஷ்டத்தில்
தனித்திரு நாளும் அவர் பாதத்தில்
யேசுவைப் போலாவாய், நோக்கின் அவரை
பார்ப்போர் உன்னில் காண்பார் அவர் சாயலை.

3. தூய்மை பெற நாடு; கர்த்தர் நடத்த,
என்ன நேரிட்டாலும், அவர்பின் செல்ல;
இன்பம் துன்பம் நேர்ந்தும் விடாய் அவரை,
நோக்கியவர் வாக்கில் வைப்பாய் நம்பிக்கை.

4. தூய்மை பெற நாடு; ஆத்மா அமர்ந்து,
சிந்தை செய்கை யாவும் அவர்க்குட்பட்டு,
அன்பின் ஜீவ ஊற்றைச் சேர்ந்து ருசிக்க,
முற்றும் தூய்மையாவாய் விண்ணில் வசிக்க.

Tamil Hymns

1428. தெய்வ ஆசீர்வாதத்தோடே

தெய்வ ஆசீர்வாதத்தோடே
அடியாரை அனுப்பும்;
வார்த்தை என்னும் அப்பத்தாலே
போஷித்து வளர்ப்பியும்.
இப்போதும்மைத் தேடி வந்து
மனதாரப் போற்றினோம்;
மோட்ச லோகத்தில் களித்து,
உம்மை வாழ்த்தித் தொழுவோம்.

1429. தெய்வ ஆட்டுக்குட்டியே

1. தெய்வ ஆட்டுக்குட்டியே
லோகத்தாரின் மீட்பரே
உம்மால் மீட்கப்பட்ட நான்
தேவரீர்க்கு அடியான்
நீர் என் கோட்டை தஞ்சமாம்
ஆர் என் வாழ்வை நீக்கலாம்?

2. உம்மைப் பற்றும் நேசத்தை,
உம்மில் வைக்கும் பக்தியை
பேயும், கெட்ட லோகமும்
மூர்க்கமாய் விரோதிக்கும்;
இன்பம் துன்பம் நித்தமே
கண்ணியாக நிற்குமே.

3. கர்த்தரே, என் உள்ளத்தில்
அருள் தந்தென் மனதில்
அந்தகாரம் நீங்கிட,
அன்பின் தீபம் ஸ்வாலிக்க,
ஆவியின் நல் ஈவையும்
பூர்த்தியாக அளியும்.

4. எந்த நாழிகையிலே
நீர் வந்தாலும் இயேசுவே,
உம்மையே நான் சந்திக்க
கண்ணால் கண்டு களிக்க,
நான் விழித்திருக்கவே
நித்தம் ஏவிவாருமே.

1430. தெய்வ ஆவியே

1. தெய்வ ஆவியே,
பூர்வ நாளிலே
பலபாஷை பேசும் நாவும்
மேன்மையான வரம் யாவும்
உம்மால் வந்ததே,
தெய்வ ஆவியே.

2. சத்திய ஆவியே,
போதகர் நீரே;
மீட்பர் அருமையைக் காட்டி,
அவர் சாயலாக மாற்றி
என்னை ஆளுமே,
சத்திய ஆவியே.

3. ஜீவ ஊற்று நீர்,
என்னில் ஊறுவீர்,
சுத்தமற்ற ஸ்பாவம் நீக்க,
ஆத்துமாவின் தாகம் தீர்க்க
ஜீவ ஊற்று நீர்,
என்னில் ஊறுவீர்.

4. நேச ஆவியே,
எந்தன் நெஞ்சிலே
ஐயம் நீங்க இச்சை மாள,
தெய்வ சமாதானம் ஆள,
வாசம் பண்ணுமே,
நேச ஆவியே.

Tamil Hymns

1431. தெய்வ கிருபையைத் தேட

1. தெய்வ கிருபையைத் தேட
நீ போராடிக் கொண்டிரு,
ஆவி பாரமின்றி ஏற
நன்றாய் ஜாக்கிரதைப்படு.

2. வாசல் மிகவும் இடுக்கம்
தாழ்மையாகி உட்படு;
ஜீவனின் வழி நெருக்கம்,
லோக நேசத்தை விடு.

3. சேவகத்தில் பின் வங்காமல்
ராஜ்ஜியத்துக் குட்படு;
பேய் எதிர்த்தால், தளராமல்
நின்று, ஏகிக்கொண்டிரு.

4. பக்தி முழு லோகத்துக்கும்
உன்னை நீங்கலாக்கவே
பார்த்துக்கொள், பங்கிட்டிருக்கும்
நேசம்ஸ்வாமிக் கேற்காதே.

5. வேண்டுதலினால் போராடி,
ஆண்டவரின் தயவு
காணுமட்டுக்கும் மன்றாடி,
கூப்பிட்டுக் கொண்டேயிரு.

6. கர்த்தர் உன்னைத் தயவோடே
ஏற்றுக்கொண்ட பிறகு
பாவம் உன்னிலே வேரோடே
செத்ததென் றெண்ணாதிரு.

7. ஜீவனுள்ள நாள் மட்டாக
மோசங்கள் பல உண்டு;
திகிலும் பயமுமாக
உன்ரட்சிப்பைக் காத்திடு.

8. நீ முடுயைப் பெற்றிருந்தால்,
கெட்டியாய்ப் பிடித்திரு,
பின்னடைந்து போய்விழுந்தால்
மோசம் மா பெரியது.

Tamil Hymns

9. மாய்கையை நோக்காதேவிட்டு
ஞான ஆயுதங்களை
ராவும் பகலும் பிடித்து,
நிர்விசாரத்தைப் பகை.

10. உனதிச்சையை அடக்கு,
அதுன் நெஞ்சை ஆளவே
கிருபையான விளக்கு
மங்கிப்போய் அவியுமே.

11. மாமிசத்துக் கேற்றதாக
செய்தால், ஏழை ஆத்துமம்
நோஞ்சலுஞ் சீர்கேடுமாகப்
போகும் அது நிச்சயம்.

12. உண்மையுள்ளோன் ஓய்வில்லாமல்
பாவத்தை விரோதிப்பான்,
எத்தின் ஆவியைக் கேளாமல்
வெற்றியாய்ப் போராடுவான்.

13. அவன் கிறிஸ்துவைப் பின்பற்றி
துன்பத்தைச் சகிக்கிறான்,
இளக்காரத்தை அகற்றிச்
செல்வ வாழ்வாகாதென்பான்.

14. லோகத்தாரது சிரிப்பு
வெகு பைத்திய மென்பான்,
அதன் பிறகு துக்கிப்பு
வருமே என்றறிவான்.

15. உண்மையுள்ளோன் உலகத்தில்
உள்ளதைச் சிநேகியான்,
அவன் பொக்கிஷம் பரத்தில்
உண்டு, அங்கே ஏகிறான்.

16. இதை நாம் நினைப்போமாக
ஆ, நற்சேவகரைப் போல்
பந்தயம் பெறுமட்டாக
ஏகிப்போவோம், வாருங்கள்.

17. முடிவிந்த ஜீவனுக்கு
இன்று வரலாம் என்போம்,

Tamil Hymns

நம்முடைய தீபத்துக்கு
எண்ணெய் வார்க்கக்கடவோம்

18. லோகம் பேயின் வசமாமே,
சோதோம் வேகும் அல்லவோ,
தப்பிப்போக நேரமாமே,
தீவிரிக்க வேண்டாமோ.

19. தப்பத்தக்கதாக ஓடு,
ஆத்துமாவே, தீவிரி,
பாரத்தை இறக்கிப் போடு,
தெய்வச் சொல்லைக் கவனி.

20. அக்ரம சோதோமை விட்டு,
அதன் செக்கையை வெறு;
தப்பிப்போகத் தீவிரித்து
நல்லொ துக்குக் குட்படு.

21. நீ பின்னானதைப நாடாமல்,
முன்னிருப்பதைப் பிடி;
இச்சை வைத் தழுக்காகாமல்
தெய்வ சிந்தையைத் தரி.

22. வென்றவரை மோட்சத்துக்குச்
சேர்த்துயர்த்துவதற்கு
வரும் மணவாளனுக்கு
வாஞ்சையாகக் காத்திரு.

23. ஓடி அவரைச் சந்தித்து,
"ஜீவனே, முள் காட்டைப்போல்
காணும் இப்புவியை விட்டு,
என்னைச்சேரும்," என்றுசொல்.

Tamil Hymns

1432. தெய்வமே இயேசுவே உம்மைத்

தெய்வமே இயேசுவே உம்மைத் தேடுகிறேன்
தினம்தினம் உம்மையே நோக்கிப் பார்க்கிறேன்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் – 2

1. உலகப் பெருமை இன்பமெல்லாம்
உமக்காய் இழந்தேனையா
உம்மைப் பிரிக்கும் பாவங்களை
இனிமேல் வெறுத்தேனையா
உம் சித்தம் நிறைவேற்றுவேன்
உமக்காய் வாழ்ந்திடுவேன்

2. எதை நான் பேசவேண்டுமென்று
கற்றுத் தாருமையா
எவ்வழி நடக்க வேண்டுமென்று
பாதை காட்டுமையா
ஒளியான தீபமே
வழிகாட்டும் தெய்வமே

3. உலகம் வெறுத்து பேசட்டுமே
உம்மில் மகிழ்ந்திருப்பேன்
காரணமின்றி பகைக்கட்டுமே
கர்த்தரைத் துதித்திடுவேன்
சிலுவை சுமந்தவரை
சிந்தையில் நிறுத்துகிறேன்

Tamil Hymns

1433. தெய்வத்தின் சந்நிதானம் என்

தெய்வத்தின் சந்நிதானம் என்
உள்ளத்தின் ஆனந்தமே
காருன்யமாம் அவர் சப்தம்
என் காதுகளுக்கின்பமே

1. தளர்ந்த மனம் புதிதாக்கும் நல்லன்பு
தகர்ந்த ஆன்மாவிற்கு சாந்தி தரும்
அவர்தரும் வாக்குத்தத்தங்கள் உன்னை
அனுதினம் வழிநடத்தும் - தெய்வத்தின்

2. உலகத்தில் உன் நிலை நிர்பந்தமே
நோக்கிடு கல்வாரி நாயகனை
இயேசுவின் பாதத்தில் வீழ்ந்திடுவாய்
ஆறுதல் கண்டடைவாய்

Tamil Hymns

1434. தெய்வத்துவத்தின் பரிபூரணம்

தெய்வத்துவத்தின் பரிபூரணம் எல்லாம்
இயேசுவில் இருக்கக்கண்டோம்
அவருக்குள் ஞானம், மீட்பு, தூய்மை
பொக்கிஷவைப்பாய் கண்டோம்

1. விசுவாசத்தில் மெத்த உறுதிப்படுவோம்
இயேசுவின் சாயலை அணிந்திருப்போம்
அவரோடும் மரித்துயிர்த்தெழுந்தே
மகிமையாய் மலர்ந்திருப்போம்

மேலானவைகளை நாடுவோம்
மேலோகவாசிகளாய் இருப்போம்

2. இயேசுவை எந்நாளும் சேவிப்போம்
வேதத்தின் முன்னே நடுங்கி நிற்போம்
சொல் செயலாலும் அனுதினவாழ்வில்
கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்

3. ஞாலமெங்கும் தேவதூது சொல்வோம்
ஞானமாய் காலத்தை செலவழிப்போம்
ஜெபதூபம் ஸ்தோத்திரத்தோடே
ஜெயமாக வாழ்ந்திருப்போம்

Tamil Hymns

1435. தெய்வன்பின் வெள்ளமே

தெய்வன்பின் வெள்ளமே திருவருள்
தோற்றமே மெய் மனதானந்தமே!
செய்ய நின்செம்பாதம் சேவிக்க
இவ்வேளை ஐயா நின் அடி பணிந்தேன்

1. சொந்தம் உனதல்லால் சோர வழி செல்ல
எந்தாய் துணிவேனோ யான்?
புந்திக் கமலமாம் பூமாலை கோத்து நின்
பொற்பதம் பிடித்துக் கொள்வேன்

2. பாவச் சேற்றில் பலவேளை பலமின்றித்
தேவே தவறிடினும் - கூவி
விளித்துந் தன் மார்போடணைத் தன்பாய்
யாவும் பொறுத்த நாதா!

3. ஆசை பாசம் பற்று ஆவலாய்
நின்திருப் பூசைப் பீடம் படைப்பேன்
மோச வழிதனை முற்று மகற்றியென்
நேசனே நினைத் தொழுவேன்

4. மரணமோ, ஜீவனோ, மறுமையோ,
பூமியோ, மகிமையோ, வருங்காலமோ,
பிற சிருஷ்டியோ, உயர்ந்ததோ, தாழ்ந்ததோ,
பிரித்திடுமோ தெய்வன்பை?

5. மூர்க்ககுணம் கோபம் லோகம் சிற்றின்பமும்
மேற்கொள்ளும் நாச ஏக்கம்
தாக்கித் தடுமாறித் தயங்கிடும் வேளையில்
தூக்கித் தற்காத்தருள்வாய்

Tamil Hymns

1436. தெய்வன்புக்காக உன்னதக்

1. தெய்வன்புக்காக உன்னதக்
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி;
ஏன், பாவக்கேட்டை நீக்கின
அது மகா திரட்சி
மெய்ச் சமாதானம் என்றைக்கும்
நரர்கள் மேல் பிரியமும்
உண்டாம் இரக்கம் பெற்றோம்.

2. மாறாமல் ஆண்டிருக்கிற
மகத்துவப் பிதாவே,
துதியோடும்மைக் கும்பிடப்
பணிகிறோம், கர்த்தாவே
அளவில்லாப் பலமாய் நீர்
நினைத்த யாவுஞ்செய்கிறீர்;
மா பாக்கியர் அடியார்.

3. ஆ, இயேசு, தெய்வமைந்தனே,
கடன்களைச் செலுத்தி,
கெட்டோரை மீட்ட மீட்பரே
மாசற்ற ஆட்டுக்குட்டி,
மா கர்த்தரே, தயாபரா,
அடியார் சத்தங்கேட்டெல்லாச்
சபைக்கும் நீர் இரங்கும்.

4. மெய்யாகத் தேற்றும் உன்னத
தெய்வாவி, நீர் அன்பாக
இறங்கி, கிறிஸ்து தாமுற்றணியில்
சாவால் பிரியமாக
மீட்டோரைச் சாத்தான் கண்
விழாதே காத்து, துன்பத்தில்
ஜெயிக்கப்பண்ணும், ஆமேன்.

Tamil Hymns

1437. தெய்வாட்டுக் குட்டிக்கு பன்

1. தெய்வாட்டுக் குட்டிக்கு பன் முடி சூட்டிடும்
இன்னிசையாய்ப் பேரோசையாய் விண் கீதம் முழங்கும்
உள்ளமே போற்றிடு, உனக்காய் மாண்டோராம்
சதாகாலமும் அவரே ஒப்பற்ற வேந்தராம்.

2. அன்பார்ந்த கர்த்தர்க்கு பன் முடி சூட்டிடும்
கை கால் விலாவின் காயங்கள் விண்ணிலும் வியங்கும்.
பார்ப்பரோ தூதரும் ஏறிட்டக் காயங்கள்?
பணிவரே சாஷ்டாங்கமாய் மூடுவர் தம் கண்கள்.

3. சமாதானக் கர்த்தர்! பன் முடி சூட்டிடும்
போர் ஓய்ந்து ஜெப ஸ்தோத்ரமே பூமியை நிரப்பும்
ஆள்வார் என்றென்றைக்கும் ஆளும் எவ்விடமும்
விண் லோக பாக்கிய சிறப்பு விளங்கி வளரும்.

4. ஆண்டாண்டும் ஆள்வோர்க்கு பன் முடி சூட்டிடும்
சராசரங்கள் சிஷ்டித்தோர் உன்னத தெய்வமும்
பாவிக்காய் ஆருயிர் ஈந்த என் மீட்பரே,
சதா நித்திய காலமாய் உமக்குத் துதியே.

Tamil Hymns

1438. தெய்வாவி மனவாசராய்

1. தெய்வாவி, மனவாசராய்,
வந்தனல் மூட்டுவீர்;
உம் அடியாரின் உள்ளத்தில்
மா கிரியை செய்குவீர்.

2. நீர் சோதிபோல் பிரகாசித்து,
நிர்ப்பந்த ஸ்திதியும்
என் கேடும் காட்டி, ஜீவனாம்
மெய்ப் பாதை காண்பியும்.

3. நீர் வான அக்னிபோலவே,
துர் ஆசை சிந்தையும்
தீக் குணமும் சுட்டெரிப்பீர்,
பொல்லாத செய்கையும்.

4. நற் பனிபோலும் இறங்கும்
இவ்வேற்ற நேரத்தில்;
செழிப்புண்டாகச் செய்திடும்
பாழான நிலத்தில்.

5. புறாவைப்போல சாந்தமாய்
நீர் செட்டை விரிப்பீர்;
மெய்ச் சமாதானம் ஆறுதல்
நற் சீரும் அருள்வீர்.

Tamil Hymns

1439. தெய்வீகக் கூடாரமே என்

தெய்வீகக் கூடாரமே என்
தேவனின் சந்நிதியே
தேடி ஓடி வந்தோம்
தெவிட்டாத பாக்கியமே

மகிமை மகிமை மாட்சிமை
மாறா என் நேசருக்கே

1. கல்வாரி திருப்பீடமே
கறை போக்கும் திரு இரத்தமே
உயிருள்ள பரிசுத்த ஜீவ பலியாக
ஒப்புக் கொடுத்தோம் ஐயா

2. ஈசோப்பினால் கழுவும்
இன்றே சுத்தமாவோம்
உறைவின்றி பனி போல வெண்மையாவோம்
உம் திரு வார்த்தையினால்

3. அப்பா உம் சமூகத்தின்
அப்பங்கள் நாங்கள் ஐயா
எப்போதும் உம் திருப்பாதம் அமர்ந்திட
ஏங்கித் தவிக்கின்றோம்

4. உலகத்தின் வெளிச்சம் நாங்கள்
உமக்காய் சுடர் விடுவோம்
ஆனந்த தைலத்தால் அபிஷேகியும் ஐயா
அனல் மூட்டி எரிய விடும்

5. தூபமாய் நறுமணமாய்
துதிகளை செலுத்துகிறோம்
எந்நாளும் எப்போதும் எல்லா ஜெபத்தோடும்
ஆவியில் ஜெபிக்கின்றோம்

6. ஜீவனுள்ள புதிய
மார்க்கம் தந்தீர் ஐயா
மகா பரிசுத்த கூடாரத்திற்குள்ளே
மகிமையில் நுழைந்து விட்டோம்

Tamil Hymns

1440. தேசத்தார்கள் யாரும் வந்து

1. தேசத்தார்கள் யாரும் வந்து,
சுவிசேஷ வார்த்தையே
கேட்டு உந்தன் ஜோதி கண்டு
சேவிப்பார்கள் என்றீரே;
ஆ, கர்த்தாவே,
வாக்கை நிறைவேற்றுமேன்.

2. வையகம் எல்லாம் மிகுந்த
புத்தியீனமுள்ளது
அதால் மாந்தர்க்குள் புகுந்த
கேடு மா பலக்குது
ஆ, கர்த்தாவே,
மாந்தரை இரட்சியும்.

3. உம்முடைய வார்த்தை சொல்ல
போகும் போதகர்களை
நீர் பலப்படுத்தி, நல்ல
புத்தி தந்து, நேசத்தை
ஆவியாலே
ஊழியர்க்கு ஈந்திடும்

4. வார்த்தை கேட்கும் ஊர் ஜனங்கள்
உண்மையை உணரவும்
அங்கங்குள்ள பொய் மதங்கள்
யாவும் நீங்கிப் போகவும்
தூய வல்ல
ஆவியைக் கடாட்சியும்

1441. தேசத்தின் எழுப்புதலை

தேசத்தின் எழுப்புதலை -2
வாருங்கள் வந்து பாருங்கள் ஓசன்னா பாடிடுவோம்

ஓசன்னா பாடிடுவோம் - 2

1. சாத்தானின் கோட்டைகளை
தகர்த்துவிட்டோம் ஜெயம் பெற்றுவிட்டோம்
இயேசுவின் நாமத்தினால்

2. இந்தியாவின் எழுப்புதலை இந்தியாவின் எழுப்புதலை
வாருங்கள் வந்து பாருங்கள்
இந்தியாவின் எழுப்புதலை

3. ஆராதனை செய்யுங்கள் ஆராதனை செய்யுங்கள்
வாருங்கள் வந்து போற்றுங்கள் ஆராதனை செய்யுங்கள்

1442. தேசத்தை சுதந்தரிக்கப் புறப்படு

தேசத்தை சுதந்தரிக்கப் புறப்படு
மகனே சேனையின்
கர்த்தர் நம் முன்னே நடப்பார் நிச்சயமாய்
இந்தியாவை சுதந்தரிப்போம்

பெராக்காவில் கூடுவோம்
கர்த்தரை உயர்த்துவோம்
துதி அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா துதி அல்லேலூயா

1. கட்டாத பட்டணத்தை சுதந்தரிபோம்
நடாத தோட்டங்களை சுதந்தரிபோம்
சேனையின் கர்த்தர் நம்
முன்னே நடப்பார் சத்துருவை
காலாலே மிதித்திடுவோம்

2. யுத்த வீரன் யோசுவாவின் சந்ததியல்லோ
நடந்துபோய் தேசங்களை சுதந்தரிபோம்
அரணான பட்டணத்தை சுதந்தரிபோம்
சத்துருவை காலாலே மிதித்திடுவோம்

3. வாக்குதத்தம் பண்ணப்பட்ட சந்ததியல்லோ
உலகம் முழுவதையும் கலக்கிடுவோம்
பரலோக ராஜ்ஜியம் நம்மிடத்தில்
நிச்சயமாய் தேசங்களை சுதந்தரிபோம்

Tamil Hymns

1443. தேசமே தேசமே பயப்படாதே

தேசமே தேசமே பயப்படாதே -இயேசு
ராஜா உனக்காக யாவையும் செய்வார்
விசுவாசியே நீ கலங்காதே
விசுவாசியே நீ பதறாதே
மகிழ்ந்து பாடு ராஜா வருகிறார்

1. நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான
பெரிய பெரிய காரியங்கள் செய்திடுவார்

2. நீ போக வேண்டிய தூரமோ வெகுதூரம்
புறப்படு புறப்படு கர்த்தரின் வேலையை செய்

3. எழுப்பிப் பிரகாசி உன் ஒளி வந்தது
கர்த்தரின் மகிமை உன்மேல் உதித்தது

4. சின்னவன் ஆயிரம் ஆயிரமாவான்
சிறியவன் பலத்த ஜாதியுமாவான்

5. கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாவார்
உன்துக்க நாட்கள் இன்றே முடிந்து போனது

6. கர்த்தர் உன்னை அதிசயமாய் நடத்திடுவார் நீ
ஒரு நாளும் வெட்கப்பட்டு போவதேயில்லை

Tamil Hymns

1444. தேசமே பயப்படாதே மகிழ்ந்து

தேசமே பயப்படாதே மகிழ்ந்து களிகூரு
சேனையின் கர்த்தர் உன் நடுவில்
பெரிய காரியம் செய்திடுவார்

1. பலத்தினாலும் அல்லவே
பராக்கிரமம் அல்லவே
ஆவியினாலே ஆகும் என்று
ஆண்டவர் வாக்கு அருளினாரே

2. தாய் மறந்தாலும் மறவாமல்
உள்ளங்கையில் வரைந்தாரே
வல க்கரத்தாலே தாங்கி உன்னை
சகாயம் செய்து உயர்த்திடுவார்

3. கசந்த மாரா மதுரமாகும்
கொடிய யோர்தான் அகன்றிடும்
நித்தமும் உன்னை நல்வழி நடத்தி
ஆத்துமாவை நிதம் தேற்றிடுவார்

4. கிறிஸ்து இயேசு சிந்தையில்
நிலைத்தே என்றும் ஜீவிப்பாய்
ஆவியின் பெலத்தால் அனுதினம் நிறைந்தே
உத்தம சாட்சியாய் விளங்கிடுவாய்

5. மாமிசமான யாவர் மீதும்
உன்னத ஆவியை பொழியுவார்
ஆயிரமாயிரம் ஜனங்கள் தருவார்
எழும்பி சேவையும் செய்திடுவாய்

Tamil Hymns

1445. தேடி இயேசு வந்தார்

தேடி இயேசு வந்தார்
என்னைத் தேற்றி வாழ வைத்தார்

1. கண்ணீர் கடலினிலே
நான் கதறி மூழ்கையிலே
கர்த்தர் தம் கரம் நீட்டினார்
என் கண்ணீரெல்லாம் துடைத்தார்

2. பாவச் சேற்றினிலே
நான் மூழ்கிப் போகையிலே
கல்வாரி இரத்தத்தாலே
கழுவி மீட்டுக் கொண்டார் -என்னை

3. நோயின் பிடியினிலே
நான் வாடித் தவிக்கையிலே
இயேசுவின் தழும்புகளால்
சுகமானேன் சுகமானேன் - நான் -2

4. எத்தனை ஆண்டுகளோ
நான் இஷ்டம் போல் வாழ்ந்து வந்தேன்
மகராஜன் இயேசு வந்தார்
மகனாய் ஏற்றுக் கொண்டார்

Tamil Hymns

1446. தேடிவந்த தெய்வம் இயேசு

தேடிவந்த தெய்வம் இயேசு – என்னை
தேடி வந்த தெய்வம் இயேசு
வாடி நின்ற என்னையே வாழவைத்திட
தேடி வந்த தெய்வம் இயேசு

1. பாவியாக இருந்த என் பாவம் போக்கிட்டார்
ஆவி பொழிந்து என்னையே
தாவி அணைத்திட்டார்
அன்பே அவரின் பெயராம்
அருளே அவரின் மொழியாம்
இருளே போக்கும் ஒளியாம்

2. இயேசு என்னில் இருக்கிறார்
என்ன ஆனந்தம்
இருளும் புயலும் வரட்டுமே
இதயம் கலங்குமோ
இறைவா இயேசு தேவா
இதயம் மகிழ்ந்து பாடும்
என்றும் உம்மை நாடும்

Tamil Hymns

1447. தேவ கிருபை ஆசீர்வாதம்

தேவ கிருபை ஆசீர்வாதம்
தினமும் எங்களில் பெருகிட

1. ஆவலாயும தோய்வு நாளில்
ஆலயந்தனில் பணிந்து புகழ
பாவ அறிக்கை செய்யும் ஜனங்கள்
பரனின் கிருபை பெற்று மகிழ

2. ஆவலாய் எங்கள் ஆண் குழந்தைகள்
அழகான இள மரங்கள் போலவும்
பாவையர்களாம் பெண் குழந்தைகள்
பலத்த சித்திர அரண்கள் போலவும்

3. எங்கள் பண்டக சாலை சகல
இன்ப வஸ்துக்கள் நிறைந்திருக்கவும்
பங்க வலசை பகலின் கூக்குரல்
பதியில் என்று மில்லாதிருக்கவும்

4. எங்கள் மாடுகள் பலத்திருக்கவும்
இடுக்கணுள்ளே வராதிருக்கவும்
எங்கள் ஆடுகள் கிராமங்களிலே
லட்சங் கோடியாய்ப் பெருகி வரவும்

5. ஆலயந்தனில் உமது வசனம்
அறிவிக்கும் போதக ரனைவருக்குள்ளும்
வேலை ஓய்ந்து பணியும் சபையார்
விரும்பிப் படிக்கும் சகலருக்குள்ளும்

6. இத்தன்மையுடன் இருக்கும் ஜனங்கள்
இவர்கள் தாமென உலகம் சொல்லவும்
கர்த்தர் தெய்வமென் றிருக்கும் பாக்கியம்
கண்ட ஜனமென் றெம்மைச் சொல்லவும்

7. உன்னதங்களின் இருக்கும் தெய்வத்தின்
உயர்ந்த நாமம் மகிமைப்படவும்
இந்நிலம் சமாதானம் பெற்றிட
இஷ்டம் மானிடர் மேலுண்டாகவும்

8. இந்த வீட்டுக்குச் சமாதானம்
இன்ப சுகங்கள் அனைத்துண்டாகவும்

Tamil Hymns

சந்ததியாய் நீடூழி வாழவும்
சபை யனைவரும் துதித்திப் பாடவும்

Tamil Hymns

1448. தேவ கிருபை என்றுமுள்ளதே

தேவ கிருபை என்றுமுள்ளதே
அவர் கிருபை என்றுமுள்ளதே
அவரைப் போற்றித் துதித்துப் பாடி
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்

1. நெருக்கப்பட்டும் மடிந்திடாமல்
கர்த்தர் தாம் நம்மைக் காத்ததாலே
அவர் நல்லவர் அவர் வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது

2. சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தனாம் தாவீதின் தேவன் நமக்கு
முன் சென்றாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது

3. அக்கினி சோதனை பட்சிக்க வந்தும்
முட் செடி தன்னில் தோன்றிய தேவன்
பாது காத்தாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

4. காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாய்
என்னை நடத்தினார் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

5. வெள்ளம் போல் நிந்தை மேற்கொள்ள வந்தும்
வீரன் நெகேமியா ஆவியை அளித்தே
திட நம்பிக்கை தைரியம் ஈந்தாரே
அவர் கிருபை என்றுமுள்ளதே

6. நித்திய தேவனாம் சத்திய பரன் தான்
நித்தமும் நம்முடன் இருப்பதாலே
அவர் நல்லவர் என்றும் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளதே

Tamil Hymns

1449. தேவ சாயல் ஆக மாறி

தேவ சாயல் ஆக மாறி
தேவனோடிருப்பேன் - நானும் - 2

1. அந்த நாளும் நெருங்கிடுதே
அதி விரைவாய் நிறைவேறுதே
மண்ணின் சாயலை நான் கலைந்தே
தம் விண்ணவர் சாயல் அடைவேன்

2. பூமியின் கூடாரம் என்றும்
பெலவீனமே அழிந்திடுமே
கைவேலை யல்லாத பொன் வீடு
கண்டடைந்து வாழ்ந்திடுவேன்

3. சோரும் உள்ளான மனிதன்
சோதனையில் பெலனடைய
ஆற்றி தேற்றிடும் தேற்றரவாளன்
ஆண்டவர் என்னோடிருப்பார்

4. ஆவியின் அச்சாரமீந்தார்
ஆயத்தமாய் சேர்ந்திடவே
ஜீவனே எனது கிறிஸ்தேசு
சாவு எந்தன் ஆதாயமே

5. காத்திருந்து ஜெபிப்பதினால்
கழுகுபோல பறந்தெழும்பி
ஜீவ யாத்திரை ஓடி முடித்து
ஜீவக் கிரீடம் பெற்றிடுவேன்

6. மூன்றில் ஒன்றாய் ஜொலிப்பவரை
முகமுகமாய் தரிசித்திட
வாஞ்சையாய் தவிக்கும் எனதுள்ளம்
வாரும் என்று கூப்பிடுதே

7. உன்னத சீயோன் மலைமேல்
என் அருமை ஏசுவுடன்
ஜெப வீட்டினிலே மகிழ்ந்தே நான்
ஜீவிப்பேனே நீடுழிவாய்

Tamil Hymns

1450. தேவ சித்தம் நிறைவேற

தேவ சித்தம் நிறைவேற
என்னையும் ஒப்படைக்கிறேன்
தேவ சத்தம் என்னுள்ளம்
பலமாகத் தொனிக்குதே

1. முட்களுக்குள் மலர்கின்றதோர்
மக்களை கவரும் லீலி புஷ்பம் போல்
என்னையுமே தம் சாயலாய்
என்றென்றும் உருவாக்குவார்

2. பொன்னைப் போல புடமிட்டாலும்
பொன்னாக விளங்குவேன் என்றென்றுமே
திராணிக்கு மேல் சோதித்திடார்
தாங்கிட பெலன் அளிப்பார்

3. அத்தி மரம் துளிர் விடாமல்
ஆஸ்திகள் அழிந்து நஷ்டம் வந்தாலும்
கர்த்தருக்குள் சந்தோஷமாய்
நித்தமும் மகிழ்ந்திடுவேன்

4. நீதிமானை அனுதினமும்
சோதிக்க பல்வேறு துன்பம் வந்தும்
கர்த்தர் அன்பை விட்டு நீங்கா
சுத்தனாய் நிலைத்திருப்பேன்

5. முன்னறிந்து அழைத்தவரே
முன்னின்று நலமுடன் நடத்துவார்
சகலமும் நன்மைக்கேன்றே
சாட்சியாய் முடித்திடுவார்

6. கஷ்டமெல்லாம் தொலையும் ஓர் நாள்
கண்ணீரும் கவலையும் நீங்கும் அந்நாள்
இரட்டிப்பான பங்கைப் பெற
இரட்சகர் அழைத்திடுவார்

Tamil Hymns

1451. தேவ தேவனே இயேசு ராஜனே

தேவ தேவனே இயேசு ராஜனே
உம்மைக் காணும் இருதயம் மகிழும்
எனது எஜமானரே என்
மனதின் மணவாளரே

1. என் இதய சிங்காசனத்தினிலே
வீற்றிருக்கும் என் ராஜாவே
வானாதி வானங்கள் உமக்கிருக்க
இந்த இதயம் தான் உம் வீடானதோ
என்னில் நீர் வாழ்ந்திட
என்ன நான் செய்தேனோ

2. நான் உம்மை மறந்து பிரிந்திட்ட போதும்
நினைத்து நினைத்து ஏங்கினீரே
நான் உம்மை வெறுத்து ஓடின போதும்
நீர் என்னை உயிராய் நேசித்தீரே
இது தான் இயேசுவே அநாதி சிநேகமோ

3. நான் என்னை உயிராய் நேசிப்பதைவிட
நீர் என்னை அதிகமாய் நேசிக்கின்றீரே
பாவியில் நான் பெரும்பாவியாய் வாழ்ந்தும்
பாசமாய் உயிரையே கொடுத்தீரே
இது தான் இயேசுவே அன்பின் எல்லையோ

Tamil Hymns

1452. தேவ தேவனைத் துதித்திடுவோம்

1. தேவ தேவனைத் துதித்திடுவோம்
சபையில் தேவன் எழுந்தருள
ஒருமனதோடு அவர் நாமத்தை
துதிகள் செலுத்தி போற்றிடுவோம்

அல்லேலுயா தேவனுக்கே
அல்லேலுயா கர்த்தருக்கே
அல்லேலுயா பரிசுத்தருக்கே
அல்லேலுயா ராஜனுக்கே

2. எங்கள் காலடி வழுவிடாமல்
எங்கள் நடைகளை ஸ்திரப்படுத்தும்
கண்மணி போல காத்தருளும்
கிருபையால் நிதம் வழிநடத்தும்

3. சபையில் உம்மை அழைத்திடுவோம்
சகாயம் பெற்று வாழ்ந்திடுவோம்
சாத்தானை என்றும் ஜெயித்திடுவோம்
சாகும் வரையில் உழைத்திடுவோம்

4. ஜீவனுள்ள நாட்களெல்லாம்
நன்மை கிருபை தொடர்ந்திடவே
வேத வசனம் கீழ்படிவோம்
தேவ சாயலாய் மாறிடுவோம்

5. வானத்தில் அடையாளம் தோன்றிடுமே
இயேசு மேகத்தில் வந்திடுவார்
நாமும் அவருடன் சேர்ந்திடவே
நம்மை ஆயத்தமாக்கி கொள்வோம்

Tamil Hymns

1453. தேவ பாலன் பிறந்தீரே

தேவ பாலன் பிறந்தீரே
மனுக்கோலம் எடுத்தீரே
வானலோகம் துறந்தீர் இயேசுவே
நீர் வாழ்க வாழ்கவே

1. மண் மீதினில் மாண்புடனே
மகிமையாய் உதித்த மன்னவனே
வாழ்த்திடுவோம், வணங்கிடுவோம்
தூயா உம் நாமத்தையே

2. பாவிகளை ஏற்றிடவே
பாரினில் உதித்த பரிசுத்தனே
பாடிடுவோம், புகழ்ந்திடுவோம்
தூயா உம் நாமத்தையே

Tamil Hymns

1454. தேவ பிதா எந்தன் மேய்ப்பன்

தேவ பிதா என்றன் மேய்ப்பன் அல்லோ,
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே
ஆவலதாய் எனைப் பைம்புன்மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார்

1. ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்

2. சா நிழல்பள்ளத் திறங்கிடினும்,
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே
வானபரன் என் னோடிருப்பார்
வளை தடியும் கோலுமே தேற்றும்

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்
சுக தயிலம் கொண்டென் தலையைச்
சுபமாய் அபிஷேகம் செய்குவார்

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்,
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன்

1455. தேவ பிரசன்னமே

தேவ பிரசன்னமே இறங்கியே வந்திடுதே (2)

தேவனின் மகிமை நம்மை எல்லாம்
பரிசுத்த ஸ்தலத்தில் மூடுதே (2)

1. தேவனின் நல்ல தூதர்கள்
நம்மை சுற்றிலும் இங்கு நிற்கிறார்

2. தேவனின் தூய அக்கினி
இங்கு நமக்குள்ளே இறங்கி வந்திடுதே

3. வானத்தின் அபிஷேகமே
இன்று நமக்குள்ளே நிரம்பி வழியுதே

Tamil Hymns

1456. தேவலோக கானமே

தேவ லோக கானமே! தூதர் மீட்டிய இராகமே!
வானிலெங்கும் கேட்குதே! தேன் மழை சங்கீதமே!

வானவர் இசைபாடிட யாதவர் மனம் மகிழ்ந்திட
வந்தது கிறிஸ்மஸ்! மலர்ந்தது புதுயுகம்
ஹேப்பி ஹேப்பி கிறிஸ்மஸ்!

1. உயர் மனுவேலன் புகழென்றும் வாழ்க!
உன்னத தேவனின் சுடர் எங்கும் பரவ
மண்ணின் மீது அமைதி வந்தாள
மனிதர்கள் மத்தியில் பிரியம் நிலவ!

2. இராஜா வருகையில் கர்ஜனை இல்லை!
கோமகன் வந்தார் தோரணை இல்லை!
மேளங்கள் தாளங்கள் ஆர்ப்பாட்டம் இல்லை!
இரத்தினக் கம்பள வரவேற்பு இல்லை!

3. இறைமகன் மனுவாய்ப் பிறந்தது விந்தை
இறைமகன் வரவால் ஒழிந்தது நிந்தை
இயேசுவின் அருளால் இதயத்தில் தூய்மை
வென்றது வாய்மை தோன்றுது புதுமை

Tamil Hymns

1457. தேவ ஜனமே மகிழ்ந்து களிகூறு

தேவ ஜனமே மகிழ்ந்து களிகூறு
பயங்கள் நீக்கி துதிபாடு
இரட்சகர் உன்னை நேகிக்கிறார்
இரட்சித்து உன்னை காத்திடுவார்

1. சிருஷ்டிகரே உன் நாயகர்
கர்த்தர் என்பது அவர் நாமம்
பரிசுத்த தேவன் உன் மீட்பர்
சர்வ பூமிக்கும் அவரே தேவன்

2. நித்திய காலத்து நீதியை
நிலையாக உன்னில் ஸ்தாபிக்கிறார்
காத்தரின் கரத்தின் கிரீடமும்
இராஜ முடியும் நீ ஆவாய்

3. கைவிடப்பட்டவள் நீ அல்ல
பாழான தேசம் நீ அல்ல
எப்சிபா பியூலா
என்று சொல்லும்
புதிய வாழ்வைப் பெற்றிடுவாய்

1458. தேவசாயல் ஆக மாறி

தேவசாயல் ஆக மாறி
தேவனோடிருப்பேன் - நானும்

1. அந்த நாளும் நெருங்கிடுதே அதி விரைவாய் நிறைவேறுதே
மண்ணின் சாயலை நான் களைந்தே நம் விண்ணவர் சாயல் அடைவேன்

2. ப+மியின் கூடாரம் என்றும் பெலவீனமே அழித்திடுமே
கை வேலையல்லாத பொன் வீடு கண்டடைந்து வாழ்ந்திடுவேன்

3. சோரும் உள்ளான மனிதன் சோதனையில் பெலமடைய
ஆற்றித் தேற்றிடும் தேற்றரவாளன் ஆண்டவர் என்னோடிருப்பார்

4. ஆவியின் அச்சார மீந்தார் ஆயத்தமாய் சேர்ந்திடவே
ஜீவனே எனது கிறிஸ்தேசு சாவு எந்தன் ஆதாயமே

5. காத்திருந்து ஜெபிப்பதினால் கழுகுபோல பறந்தெழும்பி
ஜீவயாத்திரை ஓடி முடித்து ஜீவக்கிரீடம் பெற்றிடுவேன்

6. மூன்றில் ஒன்றாய் ஜொலிப்பவரை முகமுகமாய் தரிசித்திட
வாஞ்சையாய்த் தவிக்கும் எனதுள்ளம் வாரும் என்று கூப்பிடுதே

7. உன்னத சீயோன் மலைமேல் எனதருமை இயேசுவுடன்
ஜெபவீட்டினிலே மகிழ்ந்தே நான் ஜீவிப்பேனே நீடுழியே

Tamil Hymns

1459. தேவசேனை வானமீது

1. தேவசேனை வானமீது கோடிகோடியாகத் தோன்றும்
பலகோடித் திரள்கூடி குகைதேடி வேகம் ஓடும்
விண்மீன்கள் இடம்மாறிப் பாரெங்கும் வந்து கொட்டும்
நானோ ஆடி மிகப்பாடி என் நேசருடன் சேர்வேன்

அல்லேலூயா, அல்லேலூயா - (4)

2. ஐந்து கண்டம் தனில் ஆளும் ஆட்சியாவும் அற்றுப்போகும்
இருள் சூழும் இடிமுழங்கும் கூச்சல் கேட்கும் கண்ணீர் சிந்தும்
தூயர் கூட்டம் சுத்த உள்ளம் சாட்சிப்பாடல் எங்கும் கேட்கும்
நானோ ஆடி மிகப்பாடி என் நேசருடன் சேர்வேன்

அல்லேலூயா, அல்லேலூயா - (4)

3. கடல் குமுறும் கரை உடையும் கப்பல் கவிழும் பெரும் நாசம்
போக்குவரத்து யாவும் நிற்கும் இனி உலகம் என்பதில்லை
வாக்குமாறா வேதம் கூறும் வார்த்தை யாவும் நிறைவேறும்
நானோ ஆடி மிகப்பாடி என்நேசருடன் சேர்வேன்

அல்லேலூயா, அல்லேலூயா - (4)

Tamil Hymns

1460. தேவரீர் நீர் சகலமும் செய்ய வல்லவர்

தேவரீர் நீர் சகலமும் செய்ய வல்லவர்
தேவனே உமக்கு ஒப்பான தேவன் யார்
நீர் செய்ய நினைத்தது நிறைவேறும்
நீர் செய்வதை தடுப்பவன் யார்

1. தரிசனம் தந்தவர் நீர் அல்லவோ
தவறாமல் நிறைவேற்றி முடிப்பீரே
சவால்கள் என்றும் ஜெயித்திடுவேன்
சர்வ வல்லவர் நீர் தானே

2. தடைகளை உடைப்பவர் நீர் தானே
தடுப்பவர் எவரும் இங்கில்லையே
கடலையும் ஆற்றையும் கடந்திடுவேன்
கன்மலையே உம்மை துதித்திடுவேன்

உமக்கு ஒப்பானவர் யார்
உமக்கு ஒப்பானவர் யார்
வானத்திலும் பூமியிலும்
உமக்கு ஒப்பானவர் யார்

Tamil Hymns

1461. தேவனுக்கே மகிமை தெய்வத்திற்கே

தேவனுக்கே மகிமை
தெய்வத்திற்கே மகிமை
தேடி வந்து மீட்டவரே
தினம் உமக்கே மகிமை - என்னை

ஐயா வாழ்க வாழ்க
உம் நாமம் வாழ்க

1. உன்னதத்தில் தேவனுக்கே
மகிமை உண்டாகட்டும்
இந்தப் பூமியிலே சமாதானமும்
பிரியமும் உண்டாகட்டும்

2. செவிகளை நீர் திறந்து விட்டீர்
செய்வோம் உம் சித்தம் இந்தப்
புவிதனிலே உம் விருப்பம்
பூரணமாகட்டுமே

3. எளிமையான எங்களையே
என்றும் நினைப்பவரே
எங்கள் ஒளிமயமே துணையாளரே
உள்ளாத்தின் ஆறுதலே

4. தேடுகிற அனைவருமே
மகிழ்ந்து களிகூரட்டும்
இன்று பாடுகிற யாவருமே
பரிசுத்தம் ஆகட்டுமே

5. குறை நீக்கும் வல்லவரே
கோடி ஸ்தோத்திரமே
பாவக்கறை போக்கும் கர்த்தாவே
கல்வாரி நாயகனே

Tamil Hymns

1462. தேவனே ஆராதிக்கின்றேன் தெய்வமே

தேவனே ஆராதிக்கின்றேன்
தெய்வமே ஆராதிக்கின்றேன்

1. அதிகாலையில் ஆராதிக்கின்றேன்
ஆனந்த சத்தத்தோடு ஆராதிக்கின்றேன்

2. கன்மலையே ஆராதிக்கின்றேன்
காண்பவரே ஆராதிக்கின்றேன்

3. முழுமனதோடு ஆராதிக்கின்றேன்
முழங்காள் படியிட்டு ஆராதிக்கின்றேன்

4. யேகோவாயீரே ஆராதிக்கின்றேன்
எல்லாமே பார்த்துக் கொள்வீர்

5. யேகோவானிசி ஆராதிக்கின்றேன்
எந்நாளும் வெற்றி தருவீர்

6. யேகோவாஷாலோம் ஆராதிக்கின்றேன்
எந்நாளும் சமாதானமே

1463. தேவனே உம்மை நான் ஆராதிப்பேன்

தேவனே உம்மை நான் ஆராதிப்பேன்
இயேசுவே உம்மை நான் போற்றுகிறேன்

1. உம் கரம் வல்லமை அறிந்தோர் உம்மை
போற்றுவார் துதிப்பார் அல்லேலூயா
இரத்தமான தண்ணீர் இரசமானதுவே
அச்செயல் செய்தவர் இன்று என் இரட்சகர்

2. உம் கரம் காயங்கள் கண்டோர் உம்மை
போற்றுவார் துதிப்பார் அல்லேலூயா
காணக்கூடாதவர் கல்வாரி தோன்றினார்
ருசித்தோர் கூறுவார் இயேசுவே ஆண்டவர்

3. உம் கரம் இவ்வேளை உணர்வோர் உம்மை
போற்றுவார் துதிப்பார் அல்லேலூயா
மாறிடும் உலகில் மாறாதவர் நீரே
உம்மை அறிந்தவர் கூறுவார் ஸ்தோத்திரம்

Tamil Hymns

1464. தேவனே என் தேவா

தேவனே என் தேவா
உம்மை நோக்கினேன்
நீரில்லா நிலம் போல
உம்மை பார்க்கிறேன்

1. ஒவ்வொரு நாளும் உம்
பிரசன்னம் ஓடி வருகிறேன்
உம் வல்லமை மகிமை கண்டு
உலகை மறக்கின்றேன்

2. ஜீவனைப் பார்க்கிலும் உம் கிருபை
எனக்குப் போதுமே
உதடுகளாலே துதிக்கின்றேன்
உலகை மறக்கின்றேன்

3. படுக்கையிலே உம்மை நினைக்கின்றேன்
இராச்சாமத்தில் தியானிக்கிறேன்
உம் சிறகுகளின் நிழல்தனிலே
உலகை மறக்கின்றேன்

4. வாழ்நாளெல்லாம் உம் நாமம்
வாழ்த்திப் பாடுவேன்
சுவையான உணவை உண்பதுபோல்
திருப்தி அடைகின்றேன்

5. எனது ஆன்மா தொடர்ந்து உம்மை
பற்றி கொண்டது
உம் வலக்கரமோ என்னை நாளும்
தாங்கி கொண்டது

Tamil Hymns

1465. தேவனே என்னைத் தருகிறேன்

தேவனே என்னைத் தருகிறேன்
உம் பாதத்தில் என்னை படைக்கின்றேன்
யாவையும் நீர் தந்ததால்
உம்மிடம் திரும்ப தருகின்றேன்
எந்தன் வாழ்வின் மேன்மையெல்லாம்
உந்தனுக்கே தருகின்றேன் - 2

எங்கள் ஆராதனை உமக்கே
எங்கள் வாழ்நாளெல்லாம் உமக்கே - 2

1. ஊழியம் நீர் தந்தது
உயர்வுகள் நீர் தந்தது
மேன்மைகள் நீர் தந்தது
செல்வமும் நீர் தந்தது

2. தரிசனம் நீர் தந்தது
தாகமும் நீர் தந்தது
கிருபைகள் நீர் தந்தது
அபிஷேகம் நீர் தந்தது

Tamil Hymns

1466. தேவனே நான் உமதண்டையில்

தேவனே, நான் உமதண்டையில் - இன்னும் நெருங்கிச்
சேர்வதே என் ஆவல் பூமியில்

மாவலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான்
கோவே, தொங்க நேரிடினும்
ஆவலாய் உம்மண்டை சேர்வேன்

1. யாக்கோபைப்போல், போகும் பாதையில் - பொழுது பட்டு
இராவில் இருள் வந்து மூடிட
தூக்கத்தால் நான் சாய்ந்து தூங்கினாலும் என் கனாவில்
நோக்கியும்மை கிட்டிச் சேர்வேன், வாக்கடங்கா நல்ல நாதா!

2. பரத்துக்கேறும் படிகள் போலவே – என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா, என்றன் தேவனே,
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னையழைத்து அன்பின் தூதனாகச் செய்யும்

3. நித்திரையினின்று விழித்துக் - காலை எழுந்து
கர்த்தாவே, நான் உம்மைப் போற்றுவேன்;
இத்தரையில் உந்தன் வீடாய் என்துயர்க் கல் நாட்டுவேனே,
என்றன் துன்பத்தின் வழியாய் இன்னும் உம்மைக் கிட்டிச் சேர்வேன்

4. ஆனந்தமாம் செட்டை விரித்துப் - பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப் போயினும்
வான மண்டலங் கடந்து பறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக் கிட்டிச் சேர்வேன்

Tamil Hymns

1467. தேவனே நீர் தூரமாய் இருப்பது போல

1. தேவனே நீர் தூரமாய் இருப்பது போல
இன்று தெரிகிறதே
விசுவாசம் என்னில் உள்ளது
ஆனாலும் எனக்கு ஜெபிக்க முடியவில்லையே
இனி என்ன சொல்வது இனி யாரைக்
கேட்பது நீர் கிருபை அளித்ததால்

என் இதயத்திலிருந்து
நான் பாடுவேன் துதிப்பேன்
இருள் சூழும் நேரத்தில்
வேதனையின் மத்தியில்
நான் பாடுவேன் துதிப்பேன்
கைகள் உயர்த்தி போற்றுவேன்
உம் வார்த்தை உண்மையே
நான் பாடுவேன்

2. நீர் நடந்த பாதையில் என்னால்
நடந்து செல்ல முடியவில்லையே
உம் கரம் பிடிக்க நினைக்கிறேன்
என் பாவங்கள் என் கண்முன்
நிற்கிறதே - இனி என்ன சொல்வது
இனி யாரைக் கேட்பது
நீர் கிருபை அளித்ததால்
என் இதயத்திலிருந்து
நான் பாடுவேன்

நான் பாடுவேன் துதிப்பேன்
கைகள் உயர்த்தி போற்றுவேன்
உம் வார்த்தை உண்மையே
நான் பாடுவேன்

Tamil Hymns

1468. தேவனை உயர்த்தித் துதியுங்கள்

தேவனை உயர்த்தித் துதியுங்கள்
அவர் நாமத்தைப் போற்றியே
தேவனை உயர்த்தி துதியுங்கள்
தேவனின் செயல் அதிசயமென்று
அதிசயமென்று சொல்லி - நம்

1. கொடியவரின் சீறல் கடுமையாய் வரினும்
திட பெலனும் ஏழைக்கடைக்கலமுமானார்
படும் பலவந்தர் ஆரவாரம் என்றும்
ஆரவாரம் என்றுமே

2. இவரே நம் தேவன் இவர் நம்மை இரட்சித்தார்
இவரின் இரட்சிப்பினால் களிகூர்ந்திடுவோம்
இவர் பகைவரை வென்று கீழ்ப்படுத்தி
வென்று கீழ்படுத்தினார்

3. கர்த்தரையே நம்பி சத்தியம் கைக்கொண்ட
உத்தம ஜாதியே உட்பிரவேசியுங்கள்
பக்தருக்கென்று பலத்த நகரம்
பலத்த நகரம் உண்டு

4. அன்னியர் ஆள்வதில்லை இந்நிலம்
தன்னில் நம்மை மன்னாதி
மன்னனே நம் மகிபனாயிருப்பார்
மன்னரும் தேவ சமாதானம் தங்கும்
சமாதானம் தங்கிடுமே

5. புனிதராய் மரித்தோர் பூரித்தெழும்பிடுவார்
பனிபோல் கிருபையை
பக்தரின் மேல் பொழிவார்
இனி உலகத்தில் இன்னல் பெருகிடும்
இன்னல் பெருகிடும்

6. சிறந்த விருந்தொன்று சீயோன் மலையின் மீது
அருந்த யாவர்க்கும் ஆயத்தமாக்குவார்
நிந்தையை நீக்கிக் கண்ணீரைத் துடைத்துக்
கண்ணீரைத் துடைத்திடுவார்

Tamil Hymns

1469. தேவனைத் துதிப்பதும் கீர்த்தனம்

தேவனைத் துதிப்பதும்
கீர்த்தனம் பண்ணுகிறதும் நல்லது

1.எருசலேமைக் கட்டியே
கரிசனையாய் காக்கிறார்
துரத்துண்ட இஸ்ரவேலை (2)
கரத்தால் கூட்டிச் சேர்க்கிறார்

2.இதயம் நொறுங்குண்டோர்களை
இவரே குணமாக்குகிறார்
நொறுங்குண்டோர் காயங்களை
அருமையாய்க் கட்டுகிறார்

3.நட்சத்திரங்களின் இலக்கத்தை
அட்சயன் எண்ணுகிறார்
பட்சமாய் அவைகளை
உச்சரித் தழைக்கிறார்

4.ஆண்டவர் பெரியவர்
மீண்டும் பெலமுள்ளவர்
அறிவில் அளவில்லாதவர்
நெறியில் தவறாதவர்

5.சாந்தகுண முள்ளோர்களை
வேந்தன் உயர்த்துகிறார்
மாந்தரில் துன்மார்க்கரை
அகாந்தமாய்த் தாழ்த்துகிறார்

6.கர்த்தரையே பாடுங்கள்
துதியுடன் கொண்டாடுங்கள்
சுர மண்டலத்தாலுமே
கீர்த்தனம் பண்ணிடுங்கள்

Tamil Hymns

1470. தேவன் அருளிய சொல்லி முடியா

தேவன் அருளிய சொல்லி முடியா
ஈவுக்காக ஸ்தோத்திரம்
தேவன் நல்கிய நன்மைகள் யாவுக்கும்
என்றென்றைக்கும் ஸ்தோத்திரம்

1. மரண வாசலிலிருந்து என்னைத்
தூக்கினார் ஸ்தோத்திரம்
பாவத்தினின்று விடுதலை ஈந்த
இயேசுவுக்கே ஸ்தோத்திரம்

2. வாக்குத்தத்தங்களை வாக்கு மாறாது
நிறை வேற்றினார் ஸ்தோத்திரம்
என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்ட
தேவனுக்கே ஸ்தோத்திரம்

3. கிருபையை அதிகமாய் விளங்கச்
செய்தவருக்கு ஸ்தோத்திரம்
கிருபையை என்னை விட்டு விலக்கா
தேவனுக்கே ஸ்தோத்திரம்

Tamil Hymns

1471. தேவன் ஆராதனைக்குரியவரே

தேவன் ஆராதனைக்குரியவரே
அவர் மாறாத கிருபை நமக்கே

ஜீவனைப் பார்க்கிலும்
அவர் கிருபை நல்லது

1. பகைவர்கள் என்னை துரத்தினபோது
ஜீவனைக் காத்தீரே ஒருவரும் கடந்து
வராத படிக்கு மதிலாய் மாற்றினீரே

2. சோதனை வேளையில் தளர்ந்திட்டபோது
தாங்கியே நிறுத்தினீர் ஒருவரும் குறைகள்
சொல்லாதபடிக்கு அரணாய் மாறினீரே

1472. தேவன் தங்கும் உள்ளம் அது

தேவன் தாங்கும் உள்ளம்
அது தேவாலயம் - (2)

1. அசுத்தம் இல்லா உள்ளம் அது தேவாலயம்
அதில் ஆணவம் இல்லா உள்ளம் அது தேவாலயம்
கரைகள் இல்லா அது தேவாலயம்
வீண் பெருமைகள் இல்லா உள்ளம் அது தேவாலயம்

2. துதிகள் உள்ள உள்ளம் அது தேவாலயம்
இயேசு துங்கவன் மகிழும் உள்ளம் அது தேவாலயம்
இன்முகம் காட்டும் உள்ளம் அது தேவாலயம்
இயேசு என்றும் வாழும் உள்ளம் அது தேவாலயம்

3. அன்பு நிறைந்த உள்ளம் அது தேவாலயம்
அதில் அமைதி வாழும் உள்ளம் அது தேவாலயம்
அடக்கம் மிகுந்த இதயம் அது தேவாலயம்
இவை அனைத்தும் நிறைந்த மனிதன் அவன் தேவாலயம்

Tamil Hymns

1473. தேவன் தேடும் மனிதன் தேசத்தில்

தேவன் தேடும் மனிதன் தேசத்தில்
இல்லையா தேசம் அழிகின்றதே (2)

திறப்பிலே நின்றிட சுவரை அடைத்திட
பரிந்து பேசி ஜெபித்திட
ஆட்களே இல்லையா

1. ஐம்பது நீதிமான்கள் வேண்டாம்
நாற்பது நீதிமான்கள் வேண்டாம்
முப்பது நீதிமான்கள் வேண்டாம்
இருபது நீதிமான்கள் வேண்டாம்
பத்து நீதிமான்கள் இருந்தால் தேசத்தை
அழிக்க மாட்டேன் என்று சொன்னார்
அழிக்க மாட்டேன் என்று சொன்னார்

2. ஜீவ புஸ்தகத்தில் இருந்து
என் பேரை கிறுக்கிப் போடும்
இல்லையென்றால் இந்த ஜனத்தை
அழிக்காமல் மன்னித்தருளும்
என்று ஜெபித்து அழிவை தடுக்க
ஆட்களே இல்லையா
ஆட்களே இல்லையா

3. இந்தியாவை எனக்குத் தாரும்
இல்லையென்றால் ஜீவன் வேண்டாம்
என் தேசத்தை அழிக்காதிரும்
கோபம் நீங்கி மனம் மாறிடும்
என்று கதறி பரிந்து பேச
ஆட்களே இல்லையா
ஆட்களே இல்லையா

Tamil Hymns

1474. தேவன் தந்த திருச் சபையே

தேவன் தந்த திருச் சபையே
விசுவாச வாழ்வு தரும் சபையே
மலரும் சந்தோஷம் ஒளிரும் நல்நேசம்
இன்றும் என்றும் அருளிச்செய்யும்

1. ஆதி அந்தம் வரையில்
நித்ய ஜீவன் நல்கும் மீட்பரை
நித்தம் நித்தம் வாழ்த்தும் வாழ்த்தும்
இந்த நல் தேவனின் திருச்சபையே

2. போற்றும் போற்றும் இயேசுவை
சுப வாழ்வு தரும் நேசரை
நித்தம் நித்தம் வாழ்த்தும் வாழ்த்தும்
இந்த நல் தேவனின் திருச் சபையே

Tamil Hymns

1475. தேவன் நமக்கு அடைக்கலம் பெலனும்

தேவன் நமக்கு அடைக்கலம்
பெலனும் ஆனவரே -2
ஆபத்து காலங்களில் அனுகூலமானவரே

1. பூமி நிலைமாறினாலும்
மலைகள் சாய்ந்து போனாலும்
பர்வதம் அதிர்ந்து போனாலும்
நாம் பயப்படவே மாட்டோம்

2. கர்த்தர் சேனை நம் நடுவே
உயர்ந்த தேவன் நமதருகே
சாத்தான் எதிர்த்து வந்தாலும்
நாம் பயப்படவே மாட்டோம்

3. பூமி எங்கும் உயர்ந்திருப்பார்
பரத்தில் எங்கும் வீற்றிருப்பார்
அமர்ந்து இருந்து அறியுங்கள்
நம் தேவன் அவரே என்று

Tamil Hymns

1476. தேவன் நம் அடைக்கலமும் பெலனும்

1. தேவன் நம் அடைக்கலமும் பெலனும்
ஆபத்துக் காலத்திலே
அனுகூலம் துணையே

1. பர்வதம் அதிர்ந்தாலும் இந்த
பூமி நிலை மாறினாலும்
ஜலங்கள் பொங்கி மலை அதிர்ந்தும்
பயப்படோம் நாமே

2. ஓடும் ஓர் நதியுண்டே அதின்
நடுவில் நம் தேவனுண்டே
பொங்கும் சந்தோஷம் எங்கும் நிரம்பும்
தேவன் அதின் சகாயம்

3. ஜாதிகள் ராஜ்ஜியங்கள் மிக
வேகம் கொந்தளிக்கின்றதே
சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்க
தேவன் நம் அடைக்கலமே

4. பூமியின் பாழ்க்கடிப்பை பாரும்
கர்த்தர் நடப்பிக்கின்றாரே
யுத்தம் நிறுத்தி வில்லை டித்தார்
கர்த்தரின் செயலிதுவே

5. அமர்ந்திருந்து நானே தேவன்
என்று அறிவீர் என்றாரே
ஜாதிகட்குள்ளே பூமியின் மேலே
கர்த்தர் உயர்ந்திருப்பார்

Tamil Hymns

1477. தேவன் வருகின்றார் வேகம் இறங்கி

1. தேவன் வருகின்றார் வேகம் இறங்கி
தேவ பர்வதம் தம் பாதம் நிறுத்தி
பூமிதனை நியாயம் தீர்த்திடுவார்
பூலோக மக்களும் கண்டிடுவார்

இயேசு கிறிஸ்து வருகின்றார்
இந்தக் கடைசி காலத்திலே
கர்த்தரைக் குத்தின கண்கள் யாவும்
கண்டு புலம்பிடுமே

2. ஏழாம் தலைமுறை ஏனோக் குரைத்த
எல்லாம் நிறைவேறும் காலம் நெருங்க
யேசு கிறிஸ்துவின் சத்தியத்தை
ஏற்க மறுத்தவர் நடுங்குவார்

3. தம்மை விரோதித்த அவபக்தரை
செம்மை வழிகளில் செல்லாதவரை
ஆண்டவர் ஆயிரம் பக்தரோடே
அந்நாளிலே நியாயம் தீர்த்திடுவார்

4. எதை விதைத்தாயோ அதை அறுப்பாய்
எல்லா அநீதிக்கும் கூலி பெறுவாய்
கல்வாரி சிலுவை அண்டிடுவாய்
கர்த்தரை நம்பியே தப்பிடுவாய்

5. கையால் பெயர்க்காத கல் ஒன்று பாயும்
கன்மலையாகி இப்பூமி நிரப்பும்
கிரீடங்கள், பாறைகள் கவிழ்ந்திடும்
கிறிஸ்தேசு உரிமை பெற்றிடுவார்

6. யுத்தம் தொடங்குமுன் மத்திய வானம்
சுத்தரை அழைக்க கர்த்தரே வாரும்
ஆவி மணவாட்டி வாரும் என்றே
ஆண்டவர் இயேசுவை அழைக்கின்றோம்

7. அந்தி கிறிஸ்தன்றே அழிந்து மாள
அன்பராம் இயேசுவே ஜெயம் சிறக்க
வாயில் இருபுறம் கருக்குள்ள
வாளால் நெருப்பாக யுத்தம் செய்வார்

Tamil Hymns

1478. தேவன் வாழ்ந்திடும் ஆலயத்தினில்

தேவன் வாழ்ந்திடும் ஆலயத்தினில்
தேவ வல்லமை தங்கும் என்றுமே
வெற்றி வேந்தன் இயேசுவின் தேவ சக்தியே
எந்நாளும் தோன்றிடுதே

1. சாத்தானை மேற்கொள்ளும் அதிகாரமும்
தேவாதி தேவனே தந்தனரே
தந்திர மந்திரங்கள் தீமையும்
முற்றும் அழிந்து ஒழிந்து போகுமே

2. பொல்லாத நோய்களும் வேதனையும்
இயேசுவின் வல்லமை நீக்கிடுமே
பாவங்கள் யாவையுமே மேற்கொண்டு
வெற்றியுடன் முன்னே செல்லுவோம்

3. பாதாளம் வேதாளம் வென்றவராம்
வல்லமை தந்தனர் வென்றிடவே
சாத்தானை மேற்கொண்டு நாமுமே
வெற்றி வாகை சூடி மகழுவோம்

4. மாறாத இயேசுவின் வார்த்தையிலே
வல்லமை அதிகாரமும் தங்கினதே
கர்த்தரின் பிள்ளைகளின் வார்த்தையில்
வல்லமையும் தங்க வேண்டுமே

1479. தேவனின் ஆலயமே பரிசுத்த ஆலயமே

தேவனின் ஆலயமே பரிசுத்த ஆலயமே மகிமையின்
ஆலயமே நாமே அவ்வாலயமே
(தேவனின் ஆலயமே.......)

1. இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டோம்
அவருக்காய் கிரயமாய்க் கொள்ளப்பட்டோம் (2)
தேவனின் ஆவியால் நிரப்பப்பட்டோம் நாம்
தேவபிள்ளைகளானோம் அவர் சொந்த ஜனமானோம் (2)
(தேவனின் ஆலயமே.......)

2. நாம் இனி நம்முடையவர்களல்ல
அவரே நம் சரீரத்தின் சொந்தமானவர்; (2)
வஞ்சிக்கப்படாமல் தீட்டுப்படுத்தாமல்
பரிசுத்தம் காத்துக் கொள்வோம் பரிசுத்த ஜhதியாக (2)
(தேவனின் ஆலயமே.......)

3. கர்த்தருக்குள் என்றும் இசைந்திருப்போம்
அவருடன் ஒரே ஆவியாயிருப்போம் (2)
ஆவியினாலும் சரீரத்தினாலும்
மகிமை செலுத்திடுவோம் கர்த்தருக்கே என்றும் (2) (தேவனின் ஆலயமே.......)

4. அரமனையில் அவரைக் காணோமே! - அதை
அகன்று தென்மார்க்கமாய்த் திரும்புவமே!
மறைந்த உடு அதோ! பார் திரும்பினதே, - பெத்லேம்
வாசலில் நமைக் கொண்டு சேர்க்குது பார்! - யூத --- அரசனை

5. பொன் தூபவர்க்கம் வெள்ளைப் போளமிட்டே, - ராயர்
பொற்கழல் அர்ச்சனை புரிவோமே!
வன்கண்ணன் ஏரோதைப் பாராமல், - தேவ
வாக்கினால் திரும்பினோம் சோராமல், - யூத --- அரசனை

Tamil Hymns

1480. தேவனின் நாமத்திற்கே

தேவனின் நாமத்திற்கே துதி உண்டாகட்டுமே
தேவனின் நாமத்திற்கே உன்னதரே

1. தேவனின் நாமத்திற்கே மகிமை உண்டாகட்டுமே
தேவனின் நாமத்திற்கே உன்னதரே

2. தேவனின் நாமம் பலத்த கோட்டை
நீதிமான் வாழ்வில் சுகம் அங்கே

3. பரிசுத்தர் அவர் நாமம் – 3
உன்னதரே

4. இயேசு அவர் நாமம் – 3
உன்னதரே

Tamil Hymns

1481. தேவ ஜனமே பாடி துதிப்போம் தேவ

தேவ ஜனமே பாடி துதிப்போம்
தேவ தேவனை போற்றுவோம்
துதிகள் என்றும் ஏற்றியே
அவரில் களித்திடுவோம்

1. சென்ற நாளில் கண்ணின் மணிபோல்
காத்த தேவனை துதித்திடுவோம்
நீதி தயவு கிருபை நல்கும்
ஜீவ தேவனை துதித்திடுவோம்

2. வானம் பூமி ஆளும் தேவன்
வாக்கை என்றுமே காத்திடுவார்
அவரின் உண்மை என்றும் நிலைக்கும்
மகிமை தேவனைத் துதித்திடுவோம்

3. கர்த்தர் நாமம் ஓங்கி படர
தேவ மகிமை விளங்கிடவே
தேவ சுதராம் சேவை செய்து
தேவ ராஜனை வாழ்த்திடுவோம்

4. தம்மை நோக்கி வேண்டும் போது
தாங்கி என்றுமே ஆதரித்தார்
மறந்திடாமல் உறங்கிடாமல்
நினைத்த தேவனை துதித்திடுவோம்

5. நமது போரை தாமே முடித்து
ஜெயமே என்றும் அளித்திடுவார்
சேனை அதிபன் நமது தேவன்
அவரை என்றும் போற்றிடுவோம்

Tamil Hymns

1482. தேவப் பிதா எந்தன் மேய்ப்பன்

தேவப் பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ
சிறுமை தாழ்ச்சி அடைகிலேனே

ஆவலதாய் எனைப் பைம்புல்மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார்

1. ஆத்துமத் தன்னைக் குளிரப்பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்

2. சாநிழல் பள்ளத் திறங்கிடினும்
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே
வானபரன் என்னோடிருப்பார்
வளை தடியும் கோலுமே தேற்றும்

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்
சுக தயிலம் கொண்டென் தலையைச்
சுபமாய் அபிஷேகம் செய்குவார்

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன

1483. தேவா இரக்கம் இல்லையோ

தேவா, இரக்கம் இல்லையோ?
இயேசு தேவா, இரக்கம் இல்லையோ?

ஜீவா, பரப்ரமஏ கோவா
திரித்துவத்தின் மூவாள் ஒன்றாக
வந்த தாவீதின் மைந்தன் ஒரே

1. எல்லாம் அறிந்த பொருளே - எங்கள்
இல்லாமை நீக்கும் அருளே
கொடும் பொல்லா மனதுடைய
கல்லான பாவிகளைக் கொல்லாதருள்
புரியும் நல்லாயன் யேசுநாதர்!

2. எங்கும் நிறைந்த ஜோதியே
ஏழைப் பங்கில் உறைந்த நீதியே - எங்கள்
சங்கடமான பாவ சங்கதங்களை நீக்கும்
துங்க இசரவேலின் வங்கிஷ க்ரீடாபதி

3. வேதாந்த வேத முடிவே
ஜெக ஆதாரம் ஆன வடிவே - ஐயா
தாதாவும் எமைப் பெற்ற மாதாவும் நீயே
யேசு நாதா, ரட்சியும்,
வேறே ஆதாரம் எமக்கில்லை

1484. தேவா உந்தன் சமூகம் தெளிதேனிலும்

தேவா உந்தன் சமூகம்
தெளிதேனிலும் மதுரமே - 2

உந்தன் சமூகமே எனது விருப்பம்
அதில் வாழ்வதை விரும்புவேன்
உந்தன் சமூகமே எனது புகலிடம்
அதை என்றும் நான் வாஞ்சிக்கிறேன்
தேவா என்றும் உந்தன் சமூகமே வேண்டுமே
உந்தன் சமூகம் என் வாஞ்சையே
உந்தன் சமூகம் என் மேன்மையே

1. ஆயிரம் நாளைப் பார்க்கிலும்
உம் ஒருநாள் நல்லது
என் ஆனந்தம் இளைப்பாறுதல்
அதில்தான் உள்ளது

2. நேரங்கள் கடக்கும் போதிலும்
அதில் வெறுப்பொன்றும் இல்லயே
கோடியாய் பொன்கள் கிடைப்பினும்
அதற்கீடொன்றும் இல்லையே

Tamil Hymns

1485. தேவா உம் சமுகமே எனது பிரியமே

தேவா உம் சமுகமே எனது பிரியமே -2
ஆ.....ஆல்லேலூயா

1. வானத்தின் வாசல் நீரே
வாழ்க்கையின் அப்பம் நீரே -2

2. நம்பிக்கை தெய்வம் நீரே
நங்கூரம் என்றும் நீரே -2

3. கர்த்தாதி கர்த்தர் நீரே
கானான் தேசம் நீரே -2

4. ஆதி அந்தம் நீரே
ஆட்கொண்ட சொந்தம் நீரே -2

5. அக்கினி ஜூவாலை நீரே
காலை பனியும் நீரே -2

Tamil Hymns

1486. தேவா உம் சாட்சி நான்

தேவா உம் சாட்சி நான்
தினம் தேவை உம் ஆசிதான்
தேவா உம் சாட்சி நான்

1. நித்தியமான ஜீவனைத் தந்தீர்
சத்தியத்தில் என்னை நடத்துகிறீர்
ஆவியின் பெலனை அனுபவித்தே
வாழவைத்தீர் என்றும் மாதிரியாய்

2. விரும்பிய பாவம் விலக்கிய பின்னும்
வீரியம் கொண்டே மயக்குகையில்
நிலைத்திடும் தேவனின் அரசாட்சி
ஈந்திடும் வாழ்வில் தினம் வெற்றி

3. எனக்கெதிராக யார்தான் உண்டு?
என் மேல் குற்றம் சுமத்துவதார்?
எல்லாமே எனக்கு இயேசுவில் உண்டு
என் வாழ்வில் அவரே நீங்காத சொத்து

4. உம்மையே தந்தீர் நன்மைகள் தருவீர்
நீதிமானாய் என்றும் நிலைத்திருக்க
வேண்டுதல் செய்வீர் எனக்காக
மகிமை அளிப்பீர் முடிவா

Tamil Hymns

1487. தேவா உம் நாமத்தை

தேவா உம் நாமத்தை பாடி புகழ்வேன்ஆனந்தம் ஆனந்தமே
நீர் செய்த நன்மைகள் ஆயிரம் ஆயிரம் ஆனந்தம் ஆனந்தமே
ஏழைகளின் தேவனே எளியோரின் ராஜனே
திக்கற்ற பிள்ளைகளின் தேவனே

கேருபீன் சேராபீன்கள் ஓய்வின்றி பாடிபோற்ற
துதிக்கு பாத்திரரே
துதிகளின் மத்தியிலே வாசம் செய்திடும்
மகிமைக்கு பாத்திரரே

காற்றையும் கடலையும் அடக்கி அமர்த்திய
அற்புத தேவன் நீரே
அக்கினி மதிலாய் நடுவில் வாசம் செய்யும்
அதிசய தேவன் நீரே

ஜாதிகள் முழங்கால்கள் முடங்கி உயர்த்திடும்
உன்னத தேவன் நீரே
நாவுகள் யாவுமே அறிக்கை செய்திடும்
உத்தம தேவன் நீரே

Tamil Hymns

1488. தேவா உம்மை நான் நம்புவேன்

தேவா உம்மை நான் நம்புவேன்
அதிகாலை தேடினேன்
தேவனே இவ்வேளையில்
நீங்கா உமது கிருபை பொழியும்

1. காலை தோறுமே உந்தன் கிருபை புதியதே
தேவனே உம் சாயலால் திருப்தியாக்கிடும்

2. காலை விழிப்பினால் உந்தன்
நேச மொழியதை - கேட்டுமே
இந்நாளெல்லாம் மகிழச் செய்யுமே

3. கடந்த இராவினில் எம்மைக் காத்தா இயேசுவே
படைக்கிறேன் இக்காலையில் கிருபை தாருமே

4. தாகம் தீர்த்திடும் நல்ல ஜீவ தண்ணீரே
உந்தன் பாதம் அமர்ந்துமே
தியானம் செய்குவேன்

5. மீட்பர் இயேசுவே எந்தன் ஆத்ம நேசரே
நாளெல்லாம் உம் பாதையில் செல்ல நடத்துமே

1489. தேவா உம்மைப் பாடும் நேரம்

தேவா உம்மைப் பாடும்
நேரம் இன்ப நேரம்
இன்பத்திலும் துன்பத்திலும்
எந்த நேரமும் இன்ப நேரமே

1. நாவு ஒன்று போதுமோ
நாதன் உம்மை பாடவே
நீரில்லாமல் வாழ்விலே
யாரை நானும் பாடுவேன்
ஒரு கோடி பாடல் உமைப் பாடினாலும்
என் ஆசை என்றும் தீராதையா
உயிர்போகும் போதும் உமை பாட
வேண்டும் அதுவே ஆசையே
மண்ணில் அதுவே ஆசையே

2. தேகமெல்லாம் பசியினால்
வாடிப்போக இருப்பேனே
ராமுழுதும் தூக்கமும்
மறந்தும் கூட இருப்பேனே
ஒரு நாளும் கூட உமைப் பாட மறந்து
உயிர் வாழத்தானே முடியாதையா
பறவைகள் கூட உமைபாடும் போது
நான் பாடாதிருப்பேனோ

Tamil Hymns

1490. தேவா என்னை ஆசீர்வதியும்

தேவா என்னை ஆசீர்வதியும்
எல்லையை பெரிதாக்கும்
உமது கரமே என்னுடனிருந்து
எல்லா தீங்குக்கும் விலக்கிடும்

தேவனே இயேசுவே
தேவனே இயேசு தேவா

1. தாகம் தீர்க்கும் தண்ணீரையும்
வறட்சி நீக்கும் ஆறுகளும்
தேவஜனத்தில் ஆவியையும்
இன்று பலமாய் ஊற்றிடும்

தேவ சபையில் எழுந்தருளி
மகிமை பொழிந்திடுவீர்
மகிழ்ச்சி பொங்க பாடிடும் மக்கள்
மனதில் நிறைந்திடுவீர்

2. இரட்சிப்பின் மதில்கள் உயர்ந்திட
வாசல்கள் துதியால் நிறைந்திடும்
ஊழிய எல்லையை நீர் விரித்து
எந்நாளும் சேவையில் கலந்திடும்

3. என்றென்றும் இயேசுவின் கரத்தினால்
அன்றன்று தேவையைப் பெற்றிடுவேன்
ஒன்றுக்குமே இனி குறைவில்லை
சொந்தமாய் உம்மை சார்ந்திடுவேன்

4. தெய்வீக வாசனை சாட்சிக்கே
தீங்கை முற்றிலும் நீக்கிடுமே
ஆவியும் அருளும் தங்கிடவே
ஞானத்தின் அறிவு பெற்றிடுவேன்

Tamil Hymns

1491. தேவா சரணம் கர்த்தா சரணம்

தேவா சரணம் கர்த்தா சரணம்
ராஜா சரணம் இயேசையா சரணம்

1. தேவாதிதேவனுக்கு சரணம்
இராஜாதிஇராஜனுக்கு சரணம்
தூய ஆவி சரணம்அபிஷேக நாதா சரணம்

சரணம் சரணம் சரணம்

2. கர்த்தாதி கர்த்தனுக்கு சரணம்
காருண்ய கேடகமே சரணம்
பரிசுத்த ஆவி சரணம் ஜீவ நதியே சரணம்

3. மகிமையின் மன்னனுக்கு சரணம்
மாசற்ற மகுடமே சரணம்
சத்தியஆவியே சரணம்
சர்வ வியாபியே சரணம்
சரணம் சரணம் சரணம்
ராஜா சரணம் இயேசையா சரணம்

Tamil Hymns

1492. தேவாதி தேவன் என் சொந்தமானார்

1. தேவாதி தேவன் என் சொந்தமானார்
என்ன ஆனந்தமே
மன்னாதி மன்னன் என்னைத்தேடி வந்தார்
என்ன பேரின்பமே

சந்தோஷமே என் உள்ளத்தில்
நதியாய் பாயுதே
சர்வ வல்லவர் இயேசுவே
என் வாழ்வின் சொந்தமே

2. ஆனந்த கீதம் என் நாவில் தந்தார்
என் இயேசு நல்லவரே
இரட்சண்ய கீதம் எந்நாளும் பாடி
என் மீட்பரைப் போற்றுவேன்

3. கட்டுகளையெல்லாம் உடைத்து விட்டார்
களிகூர்ந்து பாடிடுவேன்
கிருபைகள் தந்தார் வல்லமை தந்தார்
எந்நாளும் நன்றி சொல்வேன்

4. என் ஆத்மநேசர் என் இயேசு ராஜா
என்றென்றும் என் சொந்தமே
எல்லையில்லாத தம் அன்பினாலே
என்னையும் நேசித்தாரே

Tamil Hymns

1493. தேவாதி தேவன் இராஜாதி ராஜன்

1. தேவாதி தேவன் இராஜாதி ராஜன்
வாழ்க வாழ்கவே
கர்த்தாதி கர்த்தர் மன்னாதி மன்னன்
வாழ்க வாழ்கவே

மகிமை உமக்குத்தான்
மாட்சிமை உமக்குத்தான்
மகிமை உமக்குத்தான்
மாட்சிமை அதுவும் உமக்குத்தான்

2. திசை தெரியாமல் ஓடி
அலைந்தேன் தேடி வந்தீரே
சிலுவையில் தொங்கி இரத்தம் சிந்தி
இரட்சித்து அணைத்தீரே

3. எத்தனை நன்மை எனக்குச் செய்தீர்
எப்படி நன்றி சொல்வேன்
வாழ்நாளெல்லாம் உமக்காய் வாழ்ந்து
உம் பணி செய்திடுவேன்

4. சோதனை நேரம் வேதனை வேளை
துதிக்க வைத்தீரே
எதிராய் பேசும் இதயங்களை
நேசிக்க வைத்தீரே

5. வேண்டுவதற்கும் நினைப்பதற்கும்
அதிகமாய் செய்பவரே
மீண்டும் மீண்டும் ஆறுதல் தந்த
அணைத்து மகிழ்பவரே

6. உளையான சேற்றில் வாழ்ந்த
என்னை தூக்கி எடுத்தீரே
கன்மலையின் மேல்நிறுத்தி
என்னை பாட வைத்தீரே

Tamil Hymns

1494. தேவாதி தேவனே பெத்தலை ஊரினிலே

1. தேவாதி தேவனே பெத்தலை ஊரினிலே
சத்திர கொட்டினிலே (2) புல்லணை மீதிலே
தம்மை வேண்டா மானிடர்க்காய், தம்சொல் கேளா பாவிகட்காய்
தம்மைத்தாம் வெறுமையாக்கினார், அடிமை ரூபம் எடுத்து வந்தாரே
ஆ வினோதமே ஆ வினோதமே

2. தேவாதி தேவனே பெத்தலை ஊரினிலே
சத்திர கொட்டினிலே (2) புல்லணை மீதிலே
மந்தைக் காக்கும் வேளையிலே, தங்க மாட்டு கொட்டினிலே
கந்தைக் கோலம் பூண்டு வந்தனர், மனுஷத் தன்மை யாவும் ஏற்றாரே
ஆ வினோதமே ஆ வினோதமே

3. தேவாதி தேவனே பெத்தலை ஊரினிலே
சத்திர கொட்டினிலே (2) புல்லணை மீதிலே
வானம் பார்த்த மேய்ப்பர்கட்கும், நிதம் பார்த்த சாஸ்திரகட்கும்
உன்னதத்தின் தேவன் தோன்றினார், தேவ பாலனாய் பிறந்தாரே
ஆ வினோதமே ஆ வினோதமே

Tamil Hymns

1495. தேவா நான் எதினால் விசேஷித்தவன்

தேவா நான் எதினால் விசேஷித்தவன்
ராஜா நான் அதை தினம் யோசிப்பவன்
எதினால் இது எதினால்
நீர் என்னோடு வருவதினால்எதினால்

1. மேகஸ்தம்பம் மேலிருந்து பாதுகாக்குது
பாதை காட்ட பகலெல்லாம் கூட செல்லுது
அன்பான தேவன் என்னோடு வருவார்
அது போதும் என் வாழ்விலே

2. தாகம் கொண்ட தேவ ஜனம்
வானம் பார்க்குது ஆவல் கொண்ட
கன்மலையும் கூட செல்லுது
என் ஏக்கம் எல்லாம் என் தேவன் தீர்ப்பார்
சந்தோஷம் நான் காணுவேன்

3. வாழ்க்கையில் கசப்புகள் கலந்திட்டாலும்
பாசமுள்ள ஒருமரம் கூடவருது
மாராவின் நீரை தேனாக மாற்றும்
என் நேசர் என்னோடுண்டு

4. பகல்சென்று அந்தகாரம்
சூழ்ந்து கொண்டது - பரிசுத்தமான
அக்கினி ஸ்தம்பம் செல்லுது
ஆ.. ஆ.. என் தேவன் தீர்ப்பார்
மங்காத அபிஷேகமே

Tamil Hymns

1496. தேவா பிரசன்னம் தாருமே

தேவா பிரசன்னம் தாருமே
தேடி உம்பாதம் தொழுகிறோம்
இயேசுவே உம் திவ்ய நாமத்திலே
இன்பமுடன் கூடி வந்தோமே

1. வானம் உமது சிங்காசனம்
பூமி உமது பாதஸ்தலம்
பணிந்து குனிந்து தொழுகிறோம்
கனிந்தெம்மை கண்பாருமே

2. சாரோனின் ரோஜா லீலி புஷ்பம்
சாந்த சொரூபி என் இயேசுவே
ஆயிரம் பேரிலும் சிறந்தோராம்
ஆண்டவரைத் தொழுகிறோம்

3. கர்த்தர் செய்த உபகாரங்கள்
கணக்குரைத்து எண்ணலாகுமோ
இரட்சிப்பின் பாத்திரம் கையில் ஏந்தி
இரட்சகரைத் தொழுகிறோம்

4. கர்த்தர் சமூகம் ஆனந்தமே
பக்தர் சபையில் பேரின்பமே
கர்த்தர் நாமத்தைக் கொண்டாடுகிறோம்
சுத்தர்கள் போற்றும் தேவனே

5. நூற்றிருபது பேர் நடுவே
தேற்றரவாளனே வந்தீரே
உன்னத ஆவியை ஊற்றிடுமே
மன்னவனே இந்நேரமே

6. எப்போ வருவீர் என் இயேசுவே
ஏங்கி உள்ளம் உம்மைத் தேடுதே
பறந்து விரைந்து தீவிரமே
இறங்கி வாரும் இயேசுவே

Tamil Hymns

1497. தேவை நிறைந்தவர் இயேசு தேவா

தேவை நிறைந்தவர் இயேசு தேவா வல்லமைதந்திடுமே
தேவைகள் சந்திக்க ஏற்றதோர் வல்லமை
வேளையில் தந்திடுமே இந்த

1. தேவைமிக்க ஒரு நாட்டினைத் தந்தீர் வல்லமைதந்திடுமே
எத்தனை மதங்கள் எத்தனை தெய்வங்கள்
கர்த்தரே தெய்வம் என்றே காட்ட வல்லமை தந்திடுமே

2. நாடுகள் நடுவினில் அமைதியே இல்லை வல்லமைதந்திடுமே
திறப்பின் வாசலில் நின்று களைப்பின்றி புலம்பிட
எங்களை எழுப்பிடுமே தேவா வல்லமை தந்திடுமே

3. நித்திய நாட்டுக்கு மக்களைச் சேர்க்க வல்லமைதந்திடுமே
நிலையில்லா உலகினில் நிலைநிற்கும் சேமிப்பு
ஆத்துமாக்கள் மட்டுமே தேவா வல்லமை தந்திடுமே

1498. தேனிலும் இனிமையே இயேசுவின்

தேனிலும் இனிமையே இயேசுவின் நாமமே
தெளி தேனிலும் மதுரமே
அதற்கிணையில்லை உலகிலே

கூனரை நிமிரச் செய்யும் குருடரை பார்க்கச்செய்யும்
கேளாத செவிடரை கேட்கச் செய்யும் -2
ஆ...ஆ...ஆ... (ஆமென்... அல்லேலூயா)
மாறாத நல் நாமம் இயேசுவின் நாமம்

காணக்கிடைக்காத தங்கம்
அவர் வெண்மையும் சிவப்புமான தேவன்
தலைத்தங்க மயமான தேவன் -2
ஆ...ஆ...ஆ... (ஆமென்... அல்லேலூயா)
இந்த தரணியில் இணையில்லா இயேசுவின் நாமம்

ஆகாரம் தரும் அதிமதுரம்
உன் சரும வியாதிகளை தீர்க்கும் நல் உதிரம்
கலங்கிய உள்ளங்களைத் தேற்றும் -2
ஆ...ஆ...ஆ... (ஆமென்... அல்லேலூயா)
ஜீவ கானானாம் பரலோகம் கொண்டு நம்மை சேர்க்கும்.

Tamil Hymns

1499. தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம்

தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம்
திவ்விய மதுரமாமே - அதைத் தேடியே நாடி
ஓடியே வருவாய், தினமும் நீ மனமே

1. காசினிதனிலே நேசமதாகக்
கஷ்டத்தை உத்தரித்தே - பாவக் கசடதை
அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்
கண்டுனர் நீ மனமே

2. பாவியை மீட்கத் தாவியே உயிரைத்
தாமே ஈந்தவராம் - பின்னும்
நேமியாம் கருணை நிலைவரமுண்டு
நிதம் துதி மனமே

3. காலையில் பனிபோல் மாயமாய் யாவும்
உபாயமாய் நீங்கிவிடும் - என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு
கருத்தாய் நீ, மனமே

4. துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல
துணைவராம் நேசரிடம் - நீயும்
அன்பதாய்ச் சேர்த்தால் அணைத்துனைக் காப்பார்
ஆசை கொள் நீ மனமே

5. பூலோகத்தாரும் மேலோகத்தாரும்
புகழ்ந்து போற்று நாமம் - அதைப்
பூண்டுகொண்டால்தான் பொன்னகர் வாழ்வில்
புகுவாய் நீ மனமே

Tamil Hymns

1500. தொடும் என் கண்களையே

1. தொடும் என் கண்களையே
உம்மை நான் காண வேண்டுமே
இயேசுவே உம்மையே நான்
காண வேண்டுமே
தொடும் என் காதினையே
உம் குரல் கேட்க வேண்டுமே
இயேசுவே உம் குரலைக் கேட்க வேண்டுமே

தொடும் என் ஆண்டவரே
தொடும் என் வாழ்வினையே
இயேசுவே உம்மை போல்
என்னை மாற்றுமே

2. தொடும் என் நாவினையே
உம் புகழ் பாட வேண்டுமே
இயேசுவே உம் புகழைப் பாட வேண்டுமே
தொடும் என் ஆன்மாவை
என் பாவம் போக்க வேண்டுமே
இயேசுவே என் பாவம் போக்க வேண்டுமே

3. தொடும் என் மனதினையே
மனப்புண்கள் ஆற வேண்டுமே
இயேசுவே மனப்புண்கள் ஆற வேண்டுமே
தொடும் என் உடலினையே
உடல் நோய்கள் தீர வேண்டுமே
இயேசுவே உடல் நோய்கள்தீர வேண்டுமே

1501. தொட்டு சுகமாக்குமையா இயேசுவே

தொட்டு சுகமாக்குமையா இயேசுவே
நீர் தொட்டால் போதும் எந்தன்
வாழ்க்கை மாறுமே - நீர் -(2)
மாறுமே… எல்லாம் மாறுமே…(2)

1. எட்டிக்காய் போல் கசக்கும் எந்தன்
வாழ்க்கையை - உம் பாசக் கைகள்
நீட்டி இன்று தொடணுமே
கட்டிப்பிடித்தேன் உந்தன் பாதம்
கர்த்தா எந்தன் கதறல் கேளும்
தொடணுமே என்னை தொடணுமே

2. கடனும் முடனும் என்னை முடக்க
முடியாதே - கடல்மேல் நடந்த
கர்த்தர் என்னோடிக்கின்றார்
கடல்மேல் என்னை நடக்கச் செய்வார்
கடனை எல்லாம் மாறச் செய்வார்
மாறுமே…. எல்லாம் மாறுமே…

3. குறைவை எண்ணி புலம்புவதை
நிறுத்துவேன் - நிறைவாய்
என்னை நடத்துபவர் இருப்பதால்
இல்லை என்பது எனக்கு இல்லை
தொல்லை என்பது துளியும் இல்லை
இல்லையே தொல்லை இல்லையே

1502. தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்

1. தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்
துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில் துன்பம் நேர்ந்திடும்
இருளாய்த் தோன்றும் எங்கும்
சோதனை வரும் வேளையில்
சொற்கேட்கும் செவியிலே
பரத்திலிருந்து ஜெயம் வரும்
பரன் உன்னைக் காக்க வல்லோர்

காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு
காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு
காத்திடுவார் என்றுமே

2. ஐய மிருந்ததோர் காலத்தில்
ஆவிக் குறைவால் தான் - மீட்பர்
உதிர பெலத்தால் சத்துருவை வென்றேன்
என் பயம் யாவும் நீங்கிற்றே
இயேசு கை தூக்கினார்
முற்றும் என்னுள்ளம் மாறிற்று
இயேசென்னைக் காக்க வல்லோர்

3. என்ன வந்தாலும் நம்புவேன்
என் நேச மீட்பரை - யார் கைவிட்டாலும்
பின் செல்வேன் எனது இயேசுவை
அகல ஆழ உயரமாய் எவ்வளவன்பு கூர்ந்தார்
என்ன துன்பங்கள் வந்தாலும்
என்னைக் கைவிடமாட்டார்

Tamil Hymns

1503. தொழுகிறோம் எங்கள் பிதாவே

தொழுகிறோம் எங்கள் பிதாவே
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே
பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம் சரணம்

1. வெண்மையும் சிவப்புமானவர்
உண்மையே உருவாய்க் கொண்டவர்
என்னையே மீட்டுக் கொண்டவர்
அன்னையே இதோ சரணம் சரணம்

2. தலை தங்க மயமானவர்
தலை மயிர் சுருள் சுருளானவர்
பதினாயிரம் பேரில் சிறந்தவர்
பதினாயிரமாம் சரணம் சரணம்

3. கண்கள் புறாக்கண்கள் போல
கன்னங்கள் பாத்திகள் போல
சின்னங்கள் சிறந்ததாலே
எண்ணில்லாத சரணம் சரணம்

4. கரங்கள் பொன் வளையல்கள் போல
நிறங்களும் தந்தத்தைப் போல
கால்களும் கல் தூண்கள் போல
காண்பதாலே சரணம் சரணம்

5. சமஸ்த சபையின் சிரசே
நமஸ்காரம் எங்கள் அரசே
பிரதானம் எம் மூலைக்கல்லே
ஏராளமாய் சரணம் சரணம்

6. அடியார்களின் அஸ்திபாரம்
அறிவுக்கெட்டாத விஸ்தாரம்
கூடி வந்த எம் அலங்காரம்
கோடா கோடியாம் சரணம் சரணம்

7. பார்த்திபனே கன தோத்திரம்
கீர்த்தனம் மங்களம் நித்தியம்
வாழ்க வாழ்க வாழ்க என்றும்
அல்லேலூயா ஆமென் ஆமென்

Tamil Hymns

1504. தோத்திர பாத்திரனே தேவா

தோத்திர பாத்திரனே, தேவா,
தோத்திரந் துதியுமக்கே!
நேத்திரம் போல் முழு ராத்ரியுங்காத்தோய்
நித்தியம் துதியுமக்கே!

1. சத்துரு பயங்களின்றி - நல்ல
நித்திரை செய்ய எமை
பத்திரமாய்ச்சீ ராட்டி உறக்கியே
சுற்றிலுங் கோட்டையானாய் --- தோத்திர

2. விடிந்திருள் ஏகும்வரை - கண்ணின்
விழிகளை மூடாமல்,
துடி கொள் தாய்போல் படிமிசை எமது
துணை எனக் காத்தவனே --- தோத்திர

3. காரிருள் அகன்றிடவே - நல்ல
கதிரொளி திகழ்ந்திடவே,
பாரிதைப் புரட்டி உருளச் செய் தேகன
பாங்கு சீராக்கி வைத்தாய் --- தோத்திர

4. இன்றைத் தினமிதிலும் - தொழில்
எந்தெந்த வகைகளிலும்
உன் திருமறைப்படி ஒழுகிட எமக்கருள்
ஊன்றியே காத்துக் கொள்வாய் --- தோத்திர

1505. தோத்திரப் பண்டிகை ஆசரிப்போமே

தோத்திரப் பண்டிகை ஆசரிப்போமே
தூயகம் ஊறிய பக்தியால் நாமே - தோத்திர

1. பாத்திரம் இதுவெனப் பகர்உடல் பொருளாவி
பரமனுக் கர்ப்பணஞ் செய் பரிவு நிறைய மேவித் - தோத்திர

2. பனித்துளி நிலத்தினைப் பண்படுத்தினதன்றே
பகருமுகில் கொழுமைப் படுத்திய தெண்ணிநன்றே - தோத்திர

3. கடவுளே பயிருக்குக் கனமழை பெய்வித்தாரே
காங்கையால் கதிர்வளம் கதிக்கவும் உய்வித்தாரே-தோத்திர

4. நெஞ்சத்தில் தெய்வஅன்பாம் நிதிநிகர் விதைபெய்து
நித்திய சமாதானம் நிறுவ விண் ணப்பம்செய்து-தோத்திர

5. இறைவன் இரத்தக் கையால் இரட்சண்யம் அருள்வித்தை
இதயத்தில் விதைத்ததற் கின்குணப் பலன்வைத்துத் – தோத்திர

Tamil Hymns

1506. தோத்திரம் கிருபை கூர் ஐயா

தோத்திரம்! கிருபை கூர், ஐயா!
விழி பார் ஐயா, விழி பார், ஐயா!

1. பாத்திரம் இலா எனை நேத்திரம் என உச்சிதமாய்க்
காத்து வந்திடும், எனது கர்த்தாதி கர்த்தனே - தோத்திரம்

2. இந்த நாள் அளவிலும் வந்த துன்பம் யாவுமே
என்றனை விட்டகலவே இரங்கிய தேவனே! - தோத்திரம்

3. மனதிலும் வாக்கிலும் மட்டில்லாத பாவி நான்;
எனது தகற்றி ஆளும், ஏகாம்பர நாதனே! - தோத்திரம்

4. போதனே, நீதனே, புனித சத்ய வேதனே,
கீதனே, தாசர் துதி கேளும், யேசு நாதனே! - தோத்திரம்

Tamil Hymns

1507. தோத்திரம் இயேசுநாதா

1. தோத்திரம் இயேசுநாதா
உமக்கென்றும் தோத்திரம் இயேசுநாதா
தோத்திரம் செய்கிறோம் நின்னடியார்
திரு நாமத்தின் ஆதரவில்!

2. வான தூதர் சேனைகள்
மனோகர கீதங்களால் எப்போதும்
ஓய்வின்றிப் பாடி துதிக்கப் பெறும்
மன்னவனே உமக்கு!

3. இத்தனை மகத்துவமுள்ள
பதவி இவ்வேழைகள் எங்களுக்கு
எத்தனை மாதயவு நின் கிருபை
எத்தனை ஆச்சரியம்!

4. நின் உதிரமதினால்
திறந்த நின் ஜீவ புது வழியாம்
நின் அடியார்க்குப் பிதாவின் சந்நிதி
சேரவுமே சந்ததம்!

5. இன்றைத் தினமதிலும்
ஒருமித்துக் கூட உம் நாமத்தினால்
தந்த நின் கிருபைக்காய் உமக்கென்றும்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே!

6. நீரல்லால் எங்களுக்குப்
பரலோகில் யாருண்டு ஜீவநாதா
நீரேயன்றி இகத்தில் வேறொரு
தேட்டமில்லை பரனே!

Tamil Hymns

1508. தோத்திரம் செய்வேனே

தோத்திரம் செய்வேனே - ரட்சகனைத்
தோத்திரம் செய்வேனே
பாத்திரமாக்க இம்மாத்ரம் கருணைவைத்த
பார்த்திபனை யூதக் கோத்திரனை, என்றும் --- தோத்திரம்

1. அன்னை மரி சுதனை - புல்மீது
அமிழ்துக் கழுதவனை,
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை,
முன்னுரை நூற்படி இந்நிலத் துற்றோனை --- தோத்திரம்

2. கந்தை பொதிந்தவனை - வானோர்களும்
வந்தடி பணிபவனை,
மந்தையர்க் கானந்த மாட்சியயளித்தோனை,
வான பரன் என்னும் ஞான குணவானை --- தோத்திரம்

3. செம்பொன் னுருவானைத் - தேசிகர்கள்
தேடும் குருவானை,
அம்பர மேவிய உம்பர் கணத்தோடு
அன்பு பெற நின்று, பைம் பொன் மலர் தூவி --- தோத்திரம்

Tamil Hymns

1509. தோத்திரம் துதி பாத்திரா

தோத்திரம் துதி பாத்திரா உம்மை
இன்றும் என்றும் துதித்திடுவேன்

காத்தீரே என்னைக் கருத்தாக
வழுவாமல் என்னை உமக்காக
எடுத்தீர் எனையும் உமக்காக
கொடுத்தீர் உமையும் எனக்காக --- தோத்திரம்

1. வல்ல வான ஞான விநோதா
துதியே துதியே துதித்திடுவேன்
எல்லாக் குறையும் தீர்த்தீரே
தொல்லை யாவும் தொலைத்தீரே
அல்லல் யாவும் அறுத்தீரே
அலையும் எனையும் மீட்டீரே --- தோத்திரம்

2. நம்பினோரைக் காக்கும் தேவா
துதியே துதியே துதித்திடுவேன்
அம்புவியாவும் படைத்தீரே
அம்பரா உந்தன் வாக்காலே
எம்பரா எல்லாம் ஈந்தீரே
நம்பினோர்க் குந்தன் தயவாலே --- தோத்திரம்

3. கண்ணின் மணிபோல் காத்தீரே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
அண்ணலே உந்தன் அருளாலே
அடியாரைக் கண் பார்த்தீரே
மன்னா எமக்கும் நீர் தாமே
எந்நாளும் எங்கள் துணை நீரே --- தோத்திரம்

4. தீயோன் அம்புகள் தாக்காதே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
தேவா நீர் உந்தன் சிறகாலே
தினமும் மூடிக் காத்தீரே
தீதணு காதும் மறைவினிலே
தேடியுமதடி தங்கிடுவேன் --- தோத்திரம்

5. அல்லேலூயா தோத்திரமே
துதியே துதியே துதித்திடுவேன்
அகில சிருஷ்டிகளும் துதிக்க
அடிமை துதியா திருப்பேனோ ?

Tamil Hymns

அல்லும் பகலும் நித்தியமாய்
அன்பே உமையும் துதித்திடுவேன் --- தோத்திரம்

Tamil Hymns

1510. தோத்திரம் பாடியே போற்றிடுவேன்

தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
தேவாதி தேவனை ராஜாதி ராஜனை
வாழ்த்தி வணங்கிடுவேன்

1. அற்புதமான அன்பே --- என்னில்
பொற்பரன் பாராட்டும் தூய அன்பே
என்றும் மாறா தேவ அன்பே
என்னுள்ளம் தங்கும் அன்பே --- தோத்திரம்

2. ஜோதியாய் வந்த அன்பே --- பூவில்
ஜீவன் தந்து என்னை மீட்ட அன்பே
தியாகமான தேவ அன்பே
திவ்விய மதுர அன்பே --- தோத்திரம்

3. மாய உலக அன்பை நம்பி
மாண்ட என்னைக் கண்டழைத்த அன்பே
என்னை வென்ற தேவ அன்பே
என்னில் பொங்கும் பேரன்பே --- தோத்திரம்

4. ஆதரவான அன்பே --- நித்தம்
அன்னை போல் என்னையும் தாங்கும் அன்பே
உன்னதமாம் தேவ அன்பே
உள்ளம் கவரும் அன்பே --- தோத்திரம்

5. வாக்கு மாறாத அன்பே --- திரு
வார்த்தையுரைத் தென்னைத் தேற்றும் அன்பே
சர்வ வல்ல தேவ அன்பே
சந்ததம் ஓங்கும் அன்பே --- தோத்திரம்

Tamil Hymns

1511. நடந்ததெல்லாம் நன்மைக்கே நன்மைக்கே

நடந்ததெல்லாம் நன்மைக்கே நன்மைக்கே
நன்றி செல்லி மகிழ்வேன் இன்றைக்கே

நன்றி நன்றி நன்றி
நன்மைக்கே நன்றி (2)

1. தீமைகளை நன்மையாக மாற்றினீர்
துன்பகளை இன்பமாக மாற்றினீர்

2. சிலுவைதனை அனுமதித்தீர் நன்றி
சிந்தைதனை மாற்றினீர் நன்றி

3. உள்ளான மனிதனை புதிதாக்கி
உடைத்து உருமாற்றி நடத்துகிறீர்

4. என் கிருபை உனக்குப் போதும் என்றீர்
உன் பெலவீனத்தில் என் பெலன் என்றீர்

5. தாங்கிடும் பெலன் தந்தீர் நன்றி
தப்பிச் செல்ல வழிசெய்தீர் நன்றி

6. விசுவாசப்புடமிட்டீர் நன்றி
பொன்னாக விளங்கச் செய்தீர் நன்றி

7. கசப்புக்களை மாற்றி விட்டீர் நன்றி
மன்னிக்கும் மனம் தந்தீர் நன்றி

1512. நடனமாடி ஸ்தோத்தரிப்பேன் நாதா

நடனமாடி ஸ்தோத்தரிப்பேன்
நாதா நான் உம்மைத் துதிப்பேன்
கைத்தாள ஓசையுடன்
கர்த்தா நான் உம்மைத் துதிப்பேன்

1. காண்பவரே காப்பவரே
கருணை உள்ளவரே
காலமெல்லாம் வழி நடத்தும்
கன்மலையே ஸ்தோத்திரம்

2. வல்லவரே நல்லவரே
கிருபை உள்ளவரே
வரங்களெல்லாம் தருபவரே
வாழ்வது உமக்காக

3. ஆண்டவரே உம்மைப்
பிரிந்து யாரிடத்தில் போவோம்
வாழ்வு தரும் வசனமெல்லாம்
உம்மிடம்தான் உண்டு

4. அற்புதமே அதிசயமே
ஆலோசனைக் கர்த்தரே
அண்டி வந்தோம் ஆறுதலே
அடைக்கலமானவரே

Tamil Hymns

1513. நடுக்குளிர் காலம்

1. நடுக் குளிர் காலம்
கடும் வாடையாம்;
பனிக்கட்டிபோலும்
குளிரும் எல்லாம்,
மூடுபனி ராவில்
பெய்து மூடவே;
நடுக் குளிர் காலம்
முன்னாளே.

2. வான் புவியும் கொள்ளா
ஸ்வாமி ஆளவே,
அவர்முன் நில்லாது
அவை நீங்குமே;
நடுக் குளிர் காலம்
தெய்வ பாலர்க்கே
மாடு தங்கும் கொட்டில்
போதுமே.

3. தூதர் பகல் ராவும்
தாழும் அவர்க்கு,
மாதா பால் புல் தாவும்
போதுமானது;
கேருபின் சேராபின்
தாழும் அவர்க்கே
தொழும் ஆடுமாடும்
போதுமே.

4. தூதர் தலைத்தூதர்
விண்ணோர் திரளும்
தூய கேரூப்ப சேராப்
சூழத் தங்கினும்,
பாக்கிய கன்னித் தாயே
நேச சிசு தான்
முக்தி பக்தியோடு
தொழுதாள்.

5. ஏழை அடியேனும்
யாது படைப்பேன்?
மந்தை மேய்ப்பனாயின்
மறி படைப்பேன்

Tamil Hymns

ஞானி ஆயின் ஞானம்
கொண்டு சேவிப்பேன்;
யானோ எந்தன் நெஞ்சம்
படைப்பேன்.

1514. நமக்கொரு தகப்பன் உண்டு

நமக்கொரு தகப்பன் உண்டு
அவரே நம் தெய்வம்
எல்லாமே அவரிலிருந்து வந்தன
நாமோ அவருக்காக வாழ்ந்திடுவோம்

1. திக்கற்ற பிள்ளைகளுக்கு தகப்பன் இவர்
தேவைகளை அறிந்த நல்ல தந்தை இவர்
உணவு ஊட்டுகிறார் உடையும் உடுத்துகிறார்
அப்பா…அப்பா…தகப்பனே
என்று கூப்பிடுவோம்

2. ஆட்கொண்டு நடத்துகிறார் அதிசயமாய்
உருவாக்கி மகிழ்கின்றார் ஒவ்வொருநாளும்
கேட்பதை கொடுத்திடுவார்
தட்டும்போது திறந்திடுவார்

3. இரக்கம் நிறைந்த தந்தை அவர்
ஆறுதல் அனைத்திற்கும் ஊற்று அவர்
கணவனை இழந்தவர்க்கு காப்பாளர் அவர்
தானே

4. குழந்தையாய் இருக்கும்போதே நேசித்தவர்
எகிப்திலிருந்து என்னை அழைத்துக்
கொண்டார்
கரங்கள் பிடித்துக் கொண்டு நடக்கப்
பழக்குகிறார்

Tamil Hymns

1515. நமக்கொரு பாலகன் பிறந்தார்

நமக்கொரு பாலகன் பிறந்தார்
நமக்கோர் சுதன் கொடுக்கப்பட்டார்
அவர் இயேசு தெய்வ மைந்தனாம்
அவர் பாதம் வணங்குவோம்
உன்னதத்தில் மகிமை
பூமியில் அமைதி
என்றும் உண்டாகவே

1. அதிசயமானவர் அவர் ஆலோசனை கர்த்தா
வல்லமையுள்ளவர் அமைதி காப்பவர்
இம்மானுவேலவர் என்றும் நம்மோடிருப்பவர்
இருளை அகற்றி ஒளியை தருபவர்
- நமக்கொரு

2. பாவிகள் நமக்காய் இந்த பாரில் உதித்தவர்
வான்மகிமைவிட்டு ஏழையாய் வந்தவர்
தேவாதி தேவனை இந்த ராஜாதி ராஜனை
ஏகமாய் போற்றியே வாழ்த்திடுவோம் நாமே
- நமக்கொரு

Tamil Hymns

1516. நமக்கோர் பாலகன்

நமக்கோர் பாலகன் - பிறந்தாரே
நமக்கோர் குமாரன் கொடுக்கப்பட்டார்
கர்த்தத்துவம் அவர் தோளிண் மேலே
யேசுவின் நாமம் அதிசயமே (2)

ஆலோசனைகளின் கர்த்தர் அவர்
வல்லமையுள்ள நித்ய பிதா
சமாதனப் பிரபு எனப்படுவாராம்
இயெசுவின் நாமம் அதிசயமே

பக்தர்கள் யாவரும் கூடியே
சுத்தரை வாழ்த்தியே பாடினர்
ஆரீரோ பாடியே பாலகன் யேசுவை
துத்தியம் செய்திட விரைவோமே

ஆகமங்கள் புகழ் கூறவே
ஆருமை இரட்சகர் பிறந்த்தாரே
பாவியாம் உன் பாவக் கறைகள் நீக்கவே
இறைவன் உன் உள்ளில் பிறப்பாரோ!

1517. நமது இயேசு கர்த்தரென்று

நமது இயேசு கர்த்தரென்று
நாவுகள் யாவும் அறிக்கையிடும் - 2
முழங்கால் யாவும் முடங்கிடும்
அவர் முன் முழங்கால் முடங்கிடும் - 2
ஆமென் அல்லேலுயா, ஆமென் அல்லேலுயா

1. சர்வத்தை ஆண்டிடும் தேவனவர்
அனைத்து சிருஷ்டிக்கும் முந்தினவர் - 2
வல்லமை தேவனை, நித்திய தேவனை
ஜாதிகள் யாவும் அறிந்திடுமே

2. ஊற்றுண்ட பரிமள தைலமவர்
உலகில் வாசனை வீசுபவர் - 2
ஆதியும் அவரே அந்தமும் அவரே
நித்திய நாமம் உடையவரே

3. வேதாளம் பாதாளம் நடுங்கிடுதே
வானோர் பூதலத்தோர் பணிந்திடுவார் - 2
தேவாதி தேவனை ராஜாதி ராஜனை
பூமியில் கீழானோர் பணிந்திடுவார்

Tamil Hymns

1518. நமது இயேசு கிறிஸ்துவின் நாமம்

1. நமது இயேசு கிறிஸ்துவின் நாமம்
நானிலமெங்கும் ஓங்கிடவே
புனிதமான பரிசுத்த வாழ்வை
மனிதராம் எமக்களித்தார்

தேவ கிருபை எங்கும் பெருக
தேவனை ஸ்தோத்திரிப்போம்
பாவ இருள் அகல
தேவ ஒளி அடைந்தோம்

2. அவரை நோக்கி கூப்பிடும் வேளை
அறிவிப்பாரே அற்புதங்கள்
எனக்கெட்டாத அறிந்திடலாகா
எத்தனையோ பதிலளித்தார்

3. பதறிப்போன பாவிகளாக
சிதறி எங்குமே அலைந்தோம்
அவரை நாம் தெரிந்தறியோமே
அவர் நம்மைத் தெரிந்தெடுத்தார்

4. பலத்த ஜாதி ஆயிரமாக
படர்ந்து ஓங்கி நாம் வளர
எளிமையும் சிறுமையுமான
எமக்கவர் அருள் புரிவார்

5. நமது கால்கள் மான்களைப் போல
நடந்து ஓடிப் பாய்ந்திடவே
உயர் ஸ்தலத்தில் ஏற்றுகின்றாரே
உன்னதமான ஊழியத்தில்

6. பரமனேசு வந்திடும் போது
பறந்து நாமும் சென்றிடுவோம்
பரமனோடு நீடூழி வாழும்
பரம பாக்கியம் பெறுவோம்

Tamil Hymns

1519. நமஸ்காரம் தேவனே

நமஸ்காரம் தேவனே நமஸ்காரமே
நமஸ்காரம் தேவனே நமஸ்காரமே

1. மலர்களை படைத்தவரே நமஸ்காரமே
மலைகளை உடைத்தவரே நமஸ்காரமே

2. புயல்காற்றை தடுத்தவரே நமஸ்காரமே
போர்ப்படை அமைத்தவரே நமஸ்காரமே

3. எரிகோவை இடித்தவரே நமஸ்காரமே (2)
எகிப்தை வென்றவரே நமஸ்காரமே (2)

4. வெற்றியை தருபவரே நமஸ்காரமே
பற்றியே எரிபவரே நமஸ்காரமே

5. எனக்குள்ளே இருப்பவரே நமஸ்காரமே
எகோவா தெய்வமே நமஸ்காரமே

6. எலியாவை எடுத்தவரே நமஸ்காரமே
எலிசாவை கொடுத்தவரே நமஸ்காரமே

7. குருடரை தொட்டவரே நமஸ்காரமே
வியாதியை நீக்கினீரே நமஸ்காரமே

1520. நம் இயேசு கிறிஸ்துவினாலே

நம் இயேசு கிறிஸ்துவினாலே
நாம் முற்றிலும் ஜெயம் கொள்ளுவோம்
நம்மில் அன்பு கூர்ந்து நம்மை நடத்திடுவார்
அவர் நாமத்தில் ஜெயம் கொள்ளுவோம்

முற்றிலும் ஜெயம் கொள்ளுவோம் - (3)
நம் இயேசுக் கிறிஸ்துவினாலே

1. பாடுகள் நிந்தைகள் வந்தாலும்
கிறிஸ்துவின் சிலுவையை சுமந்து செல்வோம்
பரிசுத்த தேவன் நம் இயேசுவை
பார் எங்கிலும் பாறை சாற்றிடுவோம்

2. பட்டயமோ மரணமோ வந்தாலும்
கிறிஸ்துவின் அன்பை விட்டு விலகிடோம்
பரலோக தேவன் நம் இயேசுவின்
நாமத்தை உயர்த்திட எழுந்து செல்வோம்

3. தேவன் எங்கள் பட்சத்தில் இருக்கிறார்
யார் எமக் என்றும் உண்மையுள்ளவர்
அழைத்தவர் என்றும் உண்மையுள்ளவர்
மரண பரியந்தம் நடதிடுவார் (2) நம்மை

Tamil Hymns

1521. நம் இயேசு நல்லவர் ஒருபோதும்

நம் இயேசு நல்லவர் ஒருபோதும்
கைவிடார் ஒரு நாளும் விலகிடார்

ஒன்று சேர்ந்து நாம் துதிப்போம்
சாத்தானை மிதிப்போம்
தேசத்தை சுதந்தரிப்போம்

1. அதிசயமானவர் ஆறுதல் தருகிறார் - சர்வ
வல்லவர் சமாதானம் தருகிறார் (2)

2. கண்ணீரைக் காண்கிறார்
கதறலைக் கேட்கிறார் - வேதனை
அறிகிறார் விடுதலை தருகிறார்

3. எதிர்காலம் நமக்குண்டு
எதற்கும் பயமில்லை - அதிகாரம்
கையிலே ஆளுவோம் தேசத்தை

4. நொறுங்குண்ட நெஞ்சமே
நோக்கிடு இயேசுவை - கூப்பிடு
உண்மையாய் குறையெல்லாம் நீக்குவார்

5. நண்பனே கலங்காதே
நம்பிக்கை இழக்காதே - கண்ணீரைத்
துடைப்பவர் கதவண்டை நிற்கிறார்

6. எத்தனை இழப்புகள்
ஏமாற்றம் தோல்விகள் - கர்த்தரோ
மாற்றுவார் கரம்நீட்டித் தேற்றுவார்

7. என் இயேசு வருகிறார்
மேகங்கள் நடுவிலே - மகிமையில்
சேர்த்திட மறுரூபமாக்குவார்

Tamil Hymns

1522. நம் இயேசுவைப் புகழ்ந்திடுவோம்

நம் இயேசுவைப் புகழ்ந்திடுவோம்
என்னாளும் ஸ்தோத்தரிப்போம்
அவர் வல்லவரே நல்லவரே
என்றும் துதித்திடுவோம்

1. ஆறுதல் செய்து ஆண்டு நடத்தினீரே
ஆயிரம் நன்மைகள் ஆண்டவர் அளித்தீர்

2. உந்தன் மறைவினிலே என்னை காத்தவரே
தீமைகள் நேர்ந்திடா பாதுகாத்தவரே

3. உம்மை நம்பியதால் உண்மை சமாதானம்
தந்தீரே இயேசுவே என்றும் ஸ்தோத்திரம்

Tamil Hymns

1523. நம் கர்த்தர் நல்லவர் நாம்

நம் கர்த்தர் நல்லவர்
நாம் அவரைப் பாடுவோம்
நம் தேவன் பெரியவர்
நாம் அவரைப் போற்றுவோம் - 2

இயேசு நல்லவர் இயேசு பெரியவர்
அவர் பரிசுத்தர் அவர் உன்னதர்
யேசு நல்லவர் சர்வ வல்லவர்
அவர் என்றென்றும் மாறாதவர் -2

நம் பாவத்தை மன்னித்தார்
நம் கர்த்தர் நல்லவர்
நம்மை பரிசுத்தமாக்கினார்
நம் தேவன் பெரியவர்

நம் வியாதியை விலக்கினார்
நம் கர்த்தர் நல்லவர்
நம் சாபத்தை போக்கினார்
நம் தேவன் பெரியவர்

நம் தாழ்வில் நம்மை நினைத்தார்
நம் கர்த்தர் நல்லவர்
நம் தேவைகள் சந்தித்தார்
நம் தேவன் பெரியவர்

நமக்காக யாவும் செய்வார்
நம் கர்த்தர் நல்லவர்
நமக்காக யுத்தம் செய்வார்
நம் தேவன் பெரியவர்

Tamil Hymns

1524. நம் தேவன் அன்புள்ளவர் நம்

நம் தேவன் அன்புள்ளவர்
நம் தேவன் பரிசுத்தர் நம் தேவன் நீதிபரர்
நமக்காய் ஜீவன் தந்த இயேசு அவரே

1. நன்மை ஏதும் ஒன்றும் இல்லையே
என்ற போதும் நம்மை நேசித்தாரே
ஆ.. ஆ அந்த அன்பில் மகிழ்வோம்
அன்பரின் பாதம் பணிவோம் -2

2. அத்திமரம் துளிர் விடாமற் போனாலும்
திராட்சைச் செடி கனி கொடாமற் போனாலும்
ஆ.. ஆ அவர் காயம் நோக்குவோம்
அதுவே என்றும் போதுமே -2

3. வான மீதில் ஏசு இறங்கி வருவார்
தேவ தூதர் போல மகிமை வாருமே
ஆ.. ஆ எங்கள் தேவா வாருமே
அழைத்து வானில் செல்லுமே -2

4. அல்லேலூயா கீதம் நாம் என்றும் பாடுவோம்
ஆண்டவரோடென்றும் நாம் ஆளுகை செய்வோம்
ஆ அந்த நாள் நெருங்குதே
நினைத்தால் நெருங்குதே
நினைத்தால் நெஞ்சம் பொங்குதே -2

Tamil Hymns

1525. நம் தேவனைத் துதித்துப்பாடி

நம் தேவனைத் துதித்துப்பாடி
அவர் நாமம் போற்றுவோம்

களிகூர்ந்திடுவோம், அகமகிழ்ந்திடுவோம்
துதி சாற்றிடுவோம், புகழ் பாடிடுவோம்
அவர் நாமம் போற்றுவோம் - 2

1. நம் பாவம் யாவும் நீக்கி மீட்டார்
அவர் நாமம் போற்றுவோம்
துன் மார்க்க வாசம் முற்றும் நீக்கி
அவர் நாமம் போற்றுவோம்

2. மெய் ஜீவ பாதை தன்னில் சென்று
அவர் நாமம் போற்றுவோம்
நல் ஆவியின் கனிகள் ஈந்து
அவர் நாமம் போற்றுவோம்

3. மேலோக தூதர் கீதம் பாடி
அவர் நாமம் போற்றுவோம்
பேரின்ப நாடு தன்னில் வாழ
அவர் நாமம் போற்றுவோம்

Tamil Hymns

1526. நம் நேசரை அங்கே சந்திப்போம்

1. நம் நேசரை அங்கே சந்திப்போம்
அங்கே கண்ணீர் சிந்தப்படாதே;

மெய் இரட்சகர் எங்கள் வழிகாட்டி!
பள்ளத்தாக்கை நாம் கடக்கும்போது

2. மரண இருளின் பள்ளத்தாக்கிலே நாம்
சமாதானத்தோடு நடப்போம்;

3. நம் மீட்பரை அங்கு காணுவோம்
துன்பம் துக்கம் ஒன்றும் அங்கில்லை

3. அவர் பாடல் நாம் அங்கே பாடுவோம்
அவரால் நாம் இரட்சிப் படைந்தோம்;

4. ஜெய வீரராய் அங்கு ஆளுவோம்,
யுத்தம் செய்து வெற்றி பெறுவோம்;

5. நாம் இயேசுவின் பாதம் சேர்த்திட்ட
பாவிகளை அங்கே சந்திப்போம்

Tamil Hymns

1527. நம்பத்தக்க தகப்பனே

நம்பத்தக்க தகப்பனே
உம்மைத்தானே நம்பியுள்ளேன்
உம்மைத்தானே நம்பியுள்ளேன்
நம்பத்தக்க தகப்பனே
வாழ்வே வழியே
வாழ்த்துகிறேன் உம்மை வணங்குகிறேன்

1. உம் சமூகம் குடியிருந்து
சத்தியத்தை உணவாக்கினேன்
வசனம் தியானம் செய்து உம்
வார்த்தையால் வாழ்கின்றேன்

2. இதய விருப்பமெல்லாம்
எப்படியும் நிறைவேற்றுவீர் -என்
ஒப்படைத்தேன் வழிகளெல்லாம்
உம்மையே சார்ந்து கொண்டேன்

3. நீதி நேர்மையெல்லாம்
பட்டப்பகல் போலாகும் -என்
நீர் எனக்குள் இருப்பதனால்
எல்லாம் செய்து முடிப்பீர்

Tamil Hymns

1528. நம்பாதே நம்பாதே நண்பர்களை நம்பாதே

நம்பாதே நம்பாதே நண்பர்களை நம்பாதே - 2
நாங்க இருக்கிறோம் என்று சொல்வாங்க

1. பிரச்சினை வந்தா கிட்ட வராங்க
நம்பாதே நம்பாதே நண்பர்களை நம்பாதே - 2

2. அண்ணன் என்பார்கள் தம்பி என்பார்கள்
நெருக்கடி வந்தா ஓடி போவார்கள் - 2

நம்பிடு நம்பிடு இயேசுவை நீ நம்பிடு - 2
போஷித்திடுவார் காத்திடுவார்
சேர்த்திடுவார் அரவணைப்பார் - 2
நம்பிடு நம்பிடு இயேசுவை நீ நம்பிடு - 2
நேசித்திடுவார் பெலன் தருவார்
விடுதலை தருவார் சுகம் தருவார் - 2
நம்பிடு நம்பிடு இயேசுவை நீ நம்பிடு - 2

Tamil Hymns

1529. நம்பிக்கை நங்கூரம்

நம்பிக்கை நங்கூரம், நான் நம்பும் தெய்வமே
நம்பினோரைக் காக்கும் இயேசுவே - பரம
பரிசுத்த தேவனை, பரலோக ராஜனை
பாடல் பாடி கொண்டாடிடுவோம் (2)

நம்பிக்கை நீர் தானே, நங்கூரம் நீர் தானே
நாங்கள் நம்பும் தெய்வம் நீர்தானே! (2) நீர்தானே

1. பார்வோனை வென்றவரை துதிப்போம்
எகிப்தியரை வென்றவரைத் துதிப்போம், ஆயிரம்
பார்வோன்கள் வந்தாலும், எகிப்தியர் வந்தாலும்
பாடல் பாடி முன்னேறிடுவோம் --- நம்பிக்கை

2. கன்மலையைப் பிளந்தவரைத் துதிப்போம்
நீரூற்றைத் தந்தவரைத் துதிப்போம், பஞ்சம்
பட்டினியே வந்தாலும், வறட்சிகள் என்றாலும்
பாடல் பாடி முன்னேறிடுவோம் --- நம்பிக்கை

3. கல்லறையைப் பிளந்தவரைத் துதிப்போம்
மரணத்தை வென்றவரைத் துதிப்போம், மரண
இருளுள்ள பள்ளத்தாக்கின், சூழ்நிலைகள் வந்தாலும்
பயமின்றி முன்னேறிடுவோம் --- நம்பிக்கை

Tamil Hymns

1530. நம்பிக்கைக்குஉரியவரே நம்பிவந்தேன்

நம்பிக்கைக்கு உரியவரே
நம்பிவந்தேன் உம்சமூகம்
நம்புகிறேன் உம் வசனம்

1. சொந்த ஆற்றலை நம்பவில்லை
தந்தை உம்மையே சார்ந்துவிட்டேன்
வாக்குத்தத்தம் செய்தவரே
வாழ்க்கையெல்லாம் உம் வார்த்தைதானே

பாதைக்கு தீபம் பேதைக்கு வெளிச்சம்
உந்தன் வசனமே; ஆற்றல் மிக்கது ஜீவனுள்ளது
உந்தன் அருள்வாக்கு

1. உம்மை நம்புகின்ற மனிதர்களை
உமது அன்பு என்றும் சூழ்ந்து கொள்ளும்
உள்ளமெல்லாம் மகிழுதைய்யா
உம் வசனம் நம்புவதால்

2. தீமை அனைத்தையும் விட்டு விலகி
உமக்கு அஞ்சிநான் நடந்து கொண்டால்
எலும்புகள் உரம்பெறும்
என் உடலும் நலம் பெறும்

3. புயலின் நடுவிலே பக்தன் பவுல்
வார்த்தை வந்ததால் திடன்கொண்டார்
கைதியாக கப்பல் ஏறி
கேப்டனாக செயல்பட்டார்

4 வார்த்தை நம்பியதால் வலைகள் வீசி
திரளாய் பேதுரு மீன்கள் பிடித்தார்
உம் வலையில் பிடிபட்டார்
தலைவனாக செயல்பட்டார்

5. உமது வார்த்தைகள் கைக்கொண்டு
உமக்கு உகந்தவற்றை செய்துவந்தால்
கேட்பதெல்லாம் பெற்றுக்கொள்வேன்
ஊற்று நீராய் பொங்கிடுவேன்

Tamil Hymns

1531. நம்பிக்கையினால் நீ வாழ்வு பெறுவாய்

நம்பிக்கையினால் நீ வாழ்வு பெறுவாய்
நண்பனே நீ பயப்படாதே

பயம் வேண்டாம் திகில் வேண்டாம்
படைத்தவர் உன்னை நடத்திச்செல்வார்

1. அதிசயக் கல்வாரி சிலுவையிலே
அனைத்தையும் செய்து முடித்துவிட்டார்
தழும்புகளால் நீ சுகமானாய்
தயவினால் மறுபடி பிறந்துவிட்டாய்

2. ஆடையை தொட்டால் நலம்பெறுவேனே
அறிக்கை செய்து சுகமடைந்தாள்
ஒருத்துளி சந்தேகமில்லாமலே
ஓடிவா இயேசு இன்று சுகம் தருவார்

3. ஆபிரகாம் சாராள் குழந்தைப்பெற
ஆற்றல் பெற்றது நம்பிக்கையினால்
வாக்குதத்தம் செய்தவர் நம்பதக்கவர்
ஏக்கமெல்லாம் எப்படியும் நிறைவேற்றுவார்

4. கட்டாந்தரையிலே நடப்பது போல்
கடலைக் கடந்தனர் நம்பிக்கையினால்
எரிகோ மதில்கள் விழுந்தனவே
ஏழுநாள் ஊர்வலம் வந்ததினால்

5. உலகிலே இருக்கும் அவனை விட
உனக்குள் இருப்பவர் பெரியவரே
துணை நின்று உனக்காய் யுத்தம் செய்வார்
துரிதமாய் வெற்றி காணச் செய்வார்

6. மலையைப் பார்த்து கடலில் விழு
என்று சொன்னால் நடந்திடுமே
உன்னாலே கூடாதது ஒன்றுமில்லையே
நம்பினால் எல்லாம் நடந்திடுமே

Tamil Hymns

1532. நம்பிக்கையும் நீர் தானே நங்கூரமும்

நம்பிக்கையும் நீர் தானே நங்கூரமும்
நீர் தானே நாங்கள் நம்பும்
தெய்வம் நீர் தானே நீர் தானே

நம்பிக்கை நங்கூரம்
நான் நம்பும் தெய்வம்
நம்பினோரைக் காக்கும் இயேசுவே
பரம பரிசுத்த தேவனை பரலோக ராஜனை
பாடல் பாடி கொண்டாடிடுவோம்

1. பார்வோனை வென்றவரை துதிப்போம்
எகிப்தியரை வென்றவரை துதிப்போம்
ஆயிரம் பார்வோன்கள் வந்தாலும்
எகிப்தியர் வந்தாலும்
பாடல் பாடி முன்னேறிடுவோம்

2. கன்மலையைப் பிளந்தவரை துதிப்போம்
நீரூற்றைத் தந்தவரை துதிப்போம்
பஞ்சம் பட்டினியே வந்தாலும்
வறட்சிகள் என்றாலும்
பாடல் பாடி முன்னேறிடுவோம்

3. கல்லறையை பிளந்தவரைத் துதிப்போம்
மரணத்தை வென்றவரைத் துதிப்போம்
மரண இருளுள்ள பள்ளத்தாக்கின்
சூழ்நிலைகள் வந்தாலும்
பயமின்றி முன்னேறிடுவோம்

1533. நம்பி வந்த மனிதர்க்கெல்லாம்

நம்பி வந்த மனிதர்க்கெல்லாம்
நன்மைகள் ஏராளம்

நம்புகிறேன் நம்புகிறேன்
நம்பத்தக்க தகப்பனே

1. மனிதரின் சூழ்ச்சியினின்று
மறைத்துக் காத்துக் கொள்வீர்
நாவுகளின் சண்டைகள் அவதூறு பேச்சுக்கள்
அணுகாமல் காப்பாற்றுவீர்

2. என் பெலன் நீர்தானே
என் கேடகம் நீர்தானே
சகாயம் பெற்றேன் உதவி பெற்றேன்
பாட்டினால் உம்மைத் துதிப்பேன் - நான்

3. கானானியப் பெண் ஒருத்தி
கத்திக் கொண்டே பின்தொடர்ந்தாள்
அம்மா உன் நம்பிக்கை பெரியது என்று
பாராட்டிப் புதுமை செய்தீர்

4. கிருபை சூழ்ந்து கொள்ளும்
உம் பேரன்பு பின்தொடரும்
கர்த்தருக்குள் இதயம் களிகூர்ந்து தினமும்
காலமெல்லாம் புகழ் பாடும்

5. குருடன் பர்திமேயு
கூப்பிட்டான் நம்பிக்கையோடு
தாவீதின் மகனே எனக்கு இரங்கும் என்று
ஜெபித்து பார்வை பெற்றான்

6. நம்பி வந்த குஷ்டரோகியை
நலமாக்கி அனுப்பினீரே
மரித்த மகளையே உயிர்பெறச் செய்தீர்
யவீர் உம்மை நம்பினதால்

7. இக்கட்டு துன்ப வேலையில்
காக்கும் அரணானீர்
பூரண சமாதானம் பூரண அமைதி
தினம் தினம் நிரப்புகிறீர்

Tamil Hymns

1534. நம்பி வந்தேன் இயேசுவே என்னை

நம்பி வந்தேன் இயேசுவே
என்னை குணப்படுத்தும்

வாழ்வும் வழியும் வளமும் நலமும் நீரெ என்னும் உண்மையே
நம்பி வந்தேன் இயேசுவே என்னை குணப்படுத்தும்
எனது நலமே எண்ணி வாழ்ந்து பாவம் செய்தேன் இரங்குவீர்
நம்பி வந்தேன் இயேசுவே என்னை குணப்படுத்தும்
உள்ளத்தாலும் உடலினாலும் உடைந்து போனேன் பாருமே
நம்பி வந்தேன் இயேசுவே என்னை குணப்படுத்தும்

தான் வாழ பிறரை கெடுத்த பாவி என்னை மன்னியும்
நம்பி வந்தேன் இயேசுவே என்னை குணப்படுத்தும்
மனிதரிடையே உம்மை காணும் பார்வை எனக்கு தாருமே
நம்பி வந்தேன் இயேசுவே என்னை குணப்படுத்தும்
இரக்கம் காட்டி இரக்கம் அடையும் இதயம் எனக்கு அருளுமே
நம்பி வந்தேன் இயேசுவே என்னை குணப்படுத்தும்

வாழ்வுக்கான உந்தன் வாக்கை கேட்கும் செவியை தாருமே
நம்பி வந்தேன் இயேசுவே என்னை குணப்படுத்தும்
உண்மை உழைப்பில் உயர்ந்து வாழும் உணர்வு என்னில் ஊற்றுமே
நம்பி வந்தேன் இயேசுவே என்னை குணப்படுத்தும்
எனக்கு தீமை செய்த பேரை மன்னித்து மறக்க உதவுமே
நம்பி வந்தேன் இயேசுவே என்னை குணப்படுத்தும்

Tamil Hymns

1535. நம்பிவந்தேன் மேசியா நான்

நம்பிவந்தேன் மேசியா
நான் நம்பிவந்தேனே
திவ்ய சரணம்! சரணம்! சரணம்
ஐயா நான் நம்பிவந்தேனே

1. தம்பிரான் ஒருவனே, தஞ்சமே தருவனே
வரு தவிது குமர குரு பரமனுவேலே
நம்பிவந்தேனே --- நான்

2. நின்பாத தரிசனம் அன்பான தரிசனம்
நித நிதசரி தொழுவ திதம் எனவும்
உறுதியில் நம்பிவந்தேனே --- நான்

3. நாதனே கிருபைகூர் வேதனே சிறுமைதீர்
அதி நலம் மிகும் உனதிரு திருவடி
அருளே நம்பிவந்தேனே --- நான்

4. பாவியில் பாவியே கோவியில்
கோவியே - கனபரிவுடன் அருள்புரி
அகல விடாதே, நம்பிவந்தேனே --- நான்

5. ஆதி ஓலோலமே பாதுகா காலமே உன
தடிமைகள் படுதுயர் அவதிகள்
மெத்த நம்பிவந்தேனே --- நான்

Tamil Hymns

1536. நம்புவேன் இயேசுவை நம்புவேன்

நம்புவேன் இயேசுவை நம்புவேன் (2)
இயேசு என் பெலனும் மீட்புமானார்
இயேசு என் கன்மலை கோட்டையுமானார்

1. நேசிப்பேன் இயேசுவை நேசிப்பேன்
ஒப்பற்ற என் செல்வம் இயேசு தானே
ஓயாமல் அவர் புகழ் பாடிடுவேன்

2. வாழுவேன் இயேசுக்காகவே
ஆவியின் வல்லமையில் நிரம்பிடுவேன்
அல்லேலூயா துதி பாடி ஆர்ப்பரிப்பேன்

3. வெல்லுவேன் சாத்தானை வெல்லுவேன்
சாத்தானின் சேனைகளை வென்றிடுவேன்
வெற்றி கீதம் பாடி பாடி மகிழ்ந்திருப்பேன்

Tamil Hymns

1537. நரம்பு கூட இயேசுவுக்கு நன்றி சொல்லுது

நரம்பு கூட இயேசுவுக்கு
நன்றி சொல்லுது - என் எலும்பு
கூட இயேசுவுக்காய் நிமிர்ந்து நிற்குது
வயிறு கூட இயேசுவுக்காய் பசியை தாங்குது
என் உயிரே இயேசுவே என்று சொல்லுது

1. கண்ணீரோடு கண்கள்
அவரை நோக்கிப் பார்க்குது
என்றும் நன்மை செய்த
நல்லவர்க்கு நன்றி சொல்லுது
என் முழங்கால்கள் மண்டியிட்டு
தினமும் ஜெபிக்குது (2)
கண்ணீர் ஜெபம் தேவன்
கேட்பார் தேவன் நம்புது

2. ஜீவன் தந்த தேவனுக்கு நன்றி
சொல்லுவேன் - என் ஆவி ஆத்மா சரீரம்
முழுதும் அர்ப்பணிக்கிறேன்
இலக்கை நோக்கி ஜீவ பயணம்
தொடர்ந்து ஓடுவேன் - பரிசுத்தமாய்
வாழ்ந்து தேவ ஊழியம் செய்வேன்

3. கோடி கோடி நன்மை சொல்லி
பாடுவேன் - எனக்கு நன்மை செய்த
தேவனையே போற்றி பாடுவேன்
கோடி கோடி ஸ்தோத்திரங்கள்
சொல்லி பாடுவேன் - எனக்கு நன்மை
செய்த தேவனையே போற்றி பாடுவேன்

4. என் ஆத்துமா கர்த்தருக்காய் காத்திருக்குது
தினம் நேர்த்தியாக ஸ்தோத்திரங்கள்
சொல்லி மகிழுது - என் இருதயமோ இரவும்
பகலும் விழித்திருக்குது - என் உறவே
என் மறைவிடமே என்று சொல்லுது

Tamil Hymns

1538. நரர்க்காய் மாண்ட இயேசுவே

1. நரர்க்காய் மாண்ட இயேசுவே
மகத்துவ வேந்தாய் ஆளுவீர்;
உம் அன்பின் எட்டா ஆழத்தை
நாங்கள் ஆராயக் கற்பிப்பீர்.

2. உம் நேச நாமம் நிமித்தம்
எந்நோவு நேர்ந்தபோதிலும்
சிலுவை சுமந்தே நித்தம்
உம்மைப் பின்செல்ல அருளும்.

3. பிரயாணமாம் இவ்வாயுளில்
எப்பாதை நாங்கள் செல்லினும்
போர், ஓய்வு, வெய்யில், நிழலில்
நீர் வழித்துணையாயிரும்.

4. வெம் பாவக் குணத்தை வென்றே,
ஆசாபாசம் அடக்கலும்,
உம் அச்சடையாளம் என்றே
நாங்கள் நினைக்கச் செய்திடும்.

5. உம் குருசை இன்று தியானித்தே,
எவ்வேலையும் தூயதென்றும்
லௌகீக நஷ்டம் லாபமே
என்றெண்ணவும் துணைசெய்யும்.

6. உம் பாதம் சேரும் அளவும்
எம் சிலுவையைச் சுமந்தே,
உம் சிலுவையால் மன்னிப்பும்
பொற்கிரீடமும் பெறுவோமே.

Tamil Hymns

1539. நல் மீட்பரே இந்நேரத்தில்

1. நல் மீட்பரே இந்நேரத்தில்
வந்தாசீர்வாதம் கூறுமேன்
உம் வார்த்தை கேட்டோர் மனதில்
பேரன்பின் அனல் மூட்டுமேன்
வாழ்நாளிலும் சாங்காலத்தும்
ஆ இயேசுவே, பிரகாசியும்.

2. இன்றெங்கள் செய்கை யாவையும்
தயாபரா, நீர் நோக்கினீர்
எல்லாரின் பாவம் தவறும்
மா அற்பச் சீரும் அறிந்தீர்
வாழ்நாளிலும் சாங்காலத்தும்
ஆ இயேசுவே பிரகாசியும்.

3. எப்பாவத் தீங்கிலிருந்தும்
விமோசனத்தைத் தாருமேன்
உள்ளான சமாதானமும்
சுத்தாங்கமும் உண்டாக்குமேன்
வாழ்நாளிலும் சாங்காலத்தும்
ஆ இயேசுவே, பிரகாசியும்.

4. சந்தோஷம் பயபக்தியும்
நீர் நிறைவாக ஈயுமேன்
உமக்கொப்பாக ஆசிக்கும்
தூய்மையாம் உள்ளம் தாருமேன்
வாழ்நாளிலும் சாங்காலத்தும்
ஆ இயேசுவே, பிரகாசியும்

5. தரித்திரம் துன்பும் பாவத்தால்
இக்கட்டடைந்த யாரையும்
கண்ணோக்கும் மா கிருபையால்
நீர் மீட்பர், நீர் சமஸ்தமும்
வாழ்நாளிலும் சாங்காலத்தும்
ஆ இயேசுவே, பிரகாசியும்.

Tamil Hymns

1540. நல் மீட்பர் இயேசு நாமமே

1. நல் மீட்பர் இயேசு நாமமே
என் காதுக்கின்பமாம்
புண்பட்ட நெஞ்சை ஆற்றவே
ஊற்றுண்ட தைலமாம்

2. அந்நாமம் நைந்த ஆவியை
நன்றாகத் தேற்றுமே
துக்கத்தால் தொய்ந்த உள்ளத்தை
திடப்படுத்துமே

3. பசித்த ஆத்துமாவுக்கு
மன்னாவைப்போலாகும்
இளைத்துப்போன ஆவிக்கு
ஆரோக்கியம் தந்திடும்

4. என் ரட்சகா, என் கேடகம்
என் கோட்டையும் நீரே
நிறைந்த அருள் பொக்கிஷம்
அனைத்தும் நீர்தாமே

1541. நல் மீட்பர் பட்சம் நில்லும்

1. நல் மீட்பர் பட்சம் நில்லும்
ரட்சணிய வீரரே - ராஜாவின்
கொடியேற்றி போராட்டம் செய்யுமே
சேனாதிபதி இயேசு
மாற்றாரை மேற்கொள்வார் பின் வெற்றி
கிரீடம் சூடி செங்கோலும் ஓச்சுவார்

2. நல் மீட்பர் பட்சம் நில்லும்
எக்காளம் ஊதுங்கால் - போர்க்கோலத்தோடு
சென்று மெய் விசுவாசத்தால்
அஞ்சாமல் ஆண்மையோடே
போராடி வாருமேன் - பிசாசின்
திரள்சேனை நீர் வீழ்த்தி வெல்லுமேன்

3. நல் மீட்பர் பட்சம் நில்லும்
எவ்வீர சூரமும் - நம்பாமல்
திவ்விய சக்தி பெற்றே பிரயோகியும்
சர்வாயுதத்தை ஈயும்
கர்த்தாவை சாருவீர் - எம்மோசமும்
பாராமல் முன் தண்டில் செல்லுவீர்

4. நல் மீட்பர் பட்சம் நில்லும்
போராட்டம் ஓயுமே - வெம்போரின்
கோஷ்டம், வெற்றி பாட்டாக மாறுமே
மேற்கொள்ளும் வீரர் ஜீவ
பொற் கிரீடம் சூடுவார் - விண்லோக
நாதரோடே வீற்றரசாளுவார்

Tamil Hymns

1542. நல் மேய்ப்பன் இவரே இயேசு

நல் மேய்ப்பன் இவரே
இயேசு நல் மேய்ப்பன் இவரே
சொல்லொண்ணா அன்பினால்
தன்னுயிர் ஈந்த நல் மேய்ப்பன் இவரே

1. ஆடுகள் பெயரினை ஆயனே அறிவார்
அழியாமை ஜீவன் அளித்திட வந்தார்
ஆடுகள் முன்னே செல்லுகின்றார்
அவரின் பின்னே சென்றிடுவோம்

2. கள்வர் மந்தையை சாடிடும் போதும்
கயவரின் வஞ்சக வலை வீசும் போதும்
பிள்ளையைப் போல தோள்களிலே
கள்ளமில்லா துயில் கொண்டிடுமே

3. மேய்ப்பனின் குரலை அறிந்திடும் மந்தை
மேய்ப்பனின் சித்தம் செய்திடும் ஆடுகள்
குரலொலி கேட்டு தேடிடுமே
குயவனின் கையில் அடங்கிடுமே

4. இயேசுவே வாசல் இயேசுவே வழியாய்
அவர் வழி சென்றால் மேய்ச்சலை காண்பாய்
ஆண்டவர் இணைத்த மந்தையிலே
அனுதினம் நீயும் செயல்படுவாய்

5. பெரிய மேய்ப்பர் வெளிப்படும் போது
வெகுமதி யாவும் அளித்திடுவாரே
நீதியும் பரிசுத்தம் காத்திடுவோம்
புனிதரின் ராஜ்ஜியம் சேர்ந்திடுவோம்

Tamil Hymns

1543. நல்ல சமாரியன் இயேசு என்னைத்

நல்ல சமாரியன் இயேசு
என்னைத் தேடி வந்தாரே

1. என்னைக் கண்டாரே அணைத்துக் கொண்டாரே

2. அருகில் வந்தாரே மனது உருகினாரே

3. இரசத்தை வார்த்தாரே இரட்சிப்பைத் தந்தாரே

4. எண்ணெய் வார்த்தாரே அபிஷேகம் செய்தாரே

5. காயம் கட்டினாரே தோள்மேல் சுமந்தாரே

6. சபையில் சேர்த்தாரே வசனத்தால் காப்பாரே

7. மீண்டும் வருவாரே அழைத்துச் செல்வாரே

Tamil Hymns

1544. நல்ல செய்தி இயேசுவை

1. நல்ல செய்தி! இயேசுவை
நோக்கிப்பார்! இரட்சிப்பார்
நம்பி வந்து அவரை
நோக்கிப்பார்! இரட்சிப்பார்
எந்த பாவியாயினும்
தள்ளமாட்டேன் என்கிறார்
துரோகம் செய்த போதிலும்
நோக்கிப்பார்! இரட்சிப்பார்

2. எங்கும் செய்தி சொல்லுவோம்
நோக்கிப்பார்! இரட்சிப்பார்
தேசா தேசம் கூறுவோம்
நோக்கிப்பார்! இரட்சிப்பார்
எந்த நாடு தீவிலும்
இயேசு காத்து நிற்கிறார்
மூடன் நீசன் ஆயினும்
நோக்கிப்பார்! இரட்சிப்பார்

3. இன்னும் கேள்! மா நேசமாய்
இயேசுவே காக்கிறார்!
நம்பும் பக்தரை எல்லாம்
காக்கிறார்! காக்கிறார்!
சற்றும் தவறாமலும்
கையில் ஏந்திக் கொள்ளுவார்
கேடு பாடில்லாமலும்
காக்கிறார்! காக்கிறார்!

4. சுவிசேஷம் இதுவே!
காக்கிறார்! காக்கிறார்!
பாவம் நீக்கிப் பின்னுமே
காக்கிறார்! காக்கிறார்!
மோட்சம் சேருமளவும்
தாங்கிக் கொண்டே இருப்பார்
தீமையைச் செய்யாமலும்
காக்கிறார்! காக்கிறார்

Tamil Hymns

1545. நல்ல நண்பன் இயேசு என்னை

நல்ல நண்பன் இயேசு
என்னை என்றும் காப்பார்
கைவிடாமலே காத்து நடத்துவார்
கண்மணிபோல் காப்பார்
கண்ணீரெல்லாம் துடைப்பார்
கடந்ததெல்லாம் மறக்கச் செய்வார்

மாயையே இந்த உலகம் மாயையே
மாயையே உலகில் எல்லாம் மாயையே
போதுமே இயேசு ஒருவர் போதுமே
போதுமே இயேசு மட்டும் போதுமே

1. கண்ணீரோடு நடந்த நாட்கள்
மாயையானதே கவலையோடு
திரிஞ்ச நாட்கள் கடந்து போனதே -2
உலகப் பாடுகள் உலக வேதனை (2)
இயேசு வந்தால் தீருமே
இயேசு வந்தால் மாறுமே

2. ஒளிவீசும் சூரியனும் இருளாகுமே
சுவாசிக்கும் காற்றுக்கூட நின்று போகுமே
சேர்த்த ஆஸ்தியும் பாச ஜனங்களும்
உன்னை விட்டு போகுமே
உன்னை விட்டு விலகுமே

Tamil Hymns

1546. நல்ல தேவனே ஞான ஜீவனே

1. நல்ல தேவனே, ஞான ஜீவனே;
வல்ல உமது கருணை தன்னை
வாழ்த்திப் போற்றுவேன்.

2. போன ராவிலே பொல்லாங்கின்றியே
ஆன நல்ல அருளினாலே
அன்பாய்க் காத்தீரே.

3. காலையைக் கண்டேன், கர்த்தா உம்மையே
சாலவும் துதித்துப் போற்றிச்
சார்ந்து கொள்ளுவேன்.

4. சென்ற ராவதின் இருளைப் போலவே
என்றன் பாவ இருளைப் போக்கி,
இலங்கப் பண்ணுமே!

5. இன்று நானுமே இன்பமாகவே
உன்றன் வழியில் நடக்கக் கருணை
உதவவேணுமே!

6. ஒளியின் பிள்ளையாய் ஊக்கமாகவே
எளியன் இன்றும் நடக்க ஆவி
ஈந்தருளுமே!

7. கையைக் காவுமே, கண்ணைக் காவுமே!
மெய்யைக் காத்து என்றன் மனதை
மிகவும் காவுமே!

1547. நல்ல போர்ச் சேவகனாய்

நல்ல போர்ச் சேவகனாய் -வரும்
பாடுகளில் பங்கு பெறுவோம்

தேவன் தரும் பெலத்தால் வரும்
தீமைகளை தாங்கிடுவோம் -நல்ல

1. பக்தியோடு வாழ விரும்பும்
பக்தர்கள் யாவருக்கும்
பாடுகள் வரும் என்று
பவுல் அன்று சொல்லிவைத்தாரே - தேவன்

2. வேதனைகள் வழியாகத்தான்
இறையாட்சியில் நுழைய முடியும்
சிலுவை சுமந்தால்தான்
சீடனாக வாழ முடியும்

3. துன்பங்களை சுமக்கும் போதெல்லாம்
வெளிப்படுமே கிறிஸ்துவின் ஜீவன்
வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட
ஜீவகிரீடம் பெற்றுக் கொள்வோம்

4. இயேசுவின் நாமத்தினிமித்தம்
எல்லோராலும் பகைக்கப்படுவீர்கள்
என்று இயேசு சொல்லி வைத்தாரே
அதுதானே நடக்கிறது

Tamil Hymns

1548. நல்லதையே நான் சொல்லவும் செய்யவும்

நல்லதையே நான் சொல்லவும் செய்யவும்
உள்ளத்தை இன்று உறுதிப்படுத்தும் ஐயா

1. ஆதிமுதல் என்னைத் தெரிந்துகொண்டீர்
அப்பாவை நம்பி மீட்படைய
ஆவியினாலே தூய்மையாக்கி
அதிசயமாய் என்னை நடத்துகிறீர்
அப்பா…நன்றி…நன்றி - 2

2. பாவங்கள் செய்து மரித்துப் போயிருந்தேன்
கிறிஸ்துவோடே கூட உயிர்த்தெழ செய்தீர்
கிருபையினாலே என்னை இரட்சித்தீர்
உன்னதங்களிலே உட்காரச் செய்தீர்

3. ஆண்டவர் கிறிஸ்துவின் மகிமைடைந்திட
அழைத்தீரே நன்றி ஐயா
ஆறுதல் தந்தீர்; அன்பு கூர்ந்தீர்
பரலோகம் எதிர்நோக்கி வாழச்செய்தீர்

4. துதிக்கும் மகிமைக்கும் பாத்திரரே
பெருமையும் புகழ்ச்சியும் உமக்குத்தானே
ஞானமும் நன்றியும் வல்லமையும்
என்றென்றும் உமக்கே உரித்தாகட்டும்

5. ஆவியினாலே பெலப்படணும்
அன்பிலே வேரூன்றி திடம் பெறணும்
அப்பாவின் அன்பின் அகலம் ஆழம்
அறியும் ஆற்றல் நான் பெறணும்

6. எப்பொழுதும் நான் மகிழ்வுடன் இருந்து
இடைவிடாமல் ஜெபம் செய்யணும்
என்ன நேர்ந்தாலும் நன்றி சொல்லி
இயேசப்பா திருச்சித்தம் நிறைவேற்றணும்

Tamil Hymns

1549. நல்லவரே இயேசு தேவா

நல்லவரே இயேசு தேவா
நன்மையினால் முடிசூட்டி
கிருபைகளை பொழிந்திடுவீர்
என்றென்றுமாய் நடத்திடுவீர்

1. உம்முடைய பரிசுத்தமாம்
வீட்டின் நன்மையால்
திருப்தியாக்கியே தினம் நடத்துமேன்
தேவா உம்மை நான் என்றும் துதிப்பேன்

2. தடுமாறும் வேளையிலும்
சித்தம் செய்திட - பாதை
காட்டினீரே என்றும் ஸ்தோத்திரம்
தேவா உம்மை நான் என்றும் துதிப்பேன்

3. இதுவரையும் நடத்தி வந்த
உமது நன்மையை
என்றும் மறவேனே நன்றி இயேசுவே
தேவா உம்மை நான் என்றும் துதிப்பேன்

Tamil Hymns

1550. நல்லவரே என் இயேசுவே

நல்லவரே என் இயேசுவே
நான் பாடும் பாடலின் காரணரே
நன்மைகள் எதிர்பார்த்து உதவாதவர்
ஏழையாம் என்னையென்றும் மறவாதவர்

துதி உமக்கே கனம் உமக்கே
புகழும் மேன்மையும் ஒருவருக்கே

1. எத்தனை மனிதர்கள் பார்த்தேனையா
ஒருவரும் உம்மைப்போல இல்லையையா
நீரின்றி வாழ்வே இல்லை உணர்ந்தேனையா
உந்தனின் மாறா அன்பை மறவேனையா

2. என் மனம் ஆழம் என்ன நீர் அறிவீர்
என் மன விருப்பங்கள் பார்த்துக் கொள்வீர்
ஊழிய பாதைகளில் உடன் வருவீர்
சோர்ந்திட்ட நேரங்களில் பெலன் தருவீர்

உமக்கே துதி
உமக்கே கனம்
உமக்கே புகழ் என் இயேசுவே

Tamil Hymns

1551. நல்லாவி ஊற்றும் தேவா

நல்லாவி ஊற்றும் தேவா
நற்கனி நான் தர நித்தம் துதிபாட
நல்லாவி ஊற்றும் தேவா

1. பெந்தெகோஸ்தே நாளிலே
உந்தனாவி ஈந்தீரே
இந்த வேளையில் இறங்கிடுவீரே
விந்தை செய் விண் ஆவியே

2. மெத்த அசுத்தன் நானே
சுத்தாவி கொண்டெனையே
சித்தம் வைத்தென்றும் சுத்தம் செய்வீரே
சத்திய பரிசுத்தனே

3. ஆவியின் கனி ஒன்பதும்
மேவி நான் தந்திடவும்
ஜீவியமெல்லாம் புவி மீதிலே
சுவிசேஷ பணியாற்றவும்

4. பாவம் செய்யாதிருக்க
பாரில் சாட்சி பகர
பார் மீட்க வந்த பரமனையே
பாரோர்க்கு எடுத்துரைக்க

Tamil Hymns

1552. நள்ளிரவில் மா தெளிவாய்

1. நள்ளிரவில் மா தெளிவாய்
மாண் பூர்வ கீதமே
விண் தூதர் வந்தே பாடினார்
பொன் வீணை மீட்டியே
“மாந்தர்க்கு சாந்தம் நல் மனம்
ஸ்வாமி அருளாலே”
அமர்ந்தே பூமி கேட்டதாம்
விண் தூதர் கீதமே.

2. இன்றும் விண் விட்டுத் தூதர்கள்
தம் செட்டை விரித்தே
துன்புற்ற லோகம் எங்குமே
இசைப்பார் கீதமே;
பூலோகக் கஷ்டம் தாழ்விலும்
பாடுவார் பறந்தே
பாபேல் கோஷ்டத்தை அடக்கும்
விண் தூதர் கீதமே.

3. விண்ணோரின் கீதம் கேட்டுப் பின்
ஈராயிரம் ஆண்டும்,
மண்ணோரின் பாவம் பகை போர்
பூலோகத்தை இன்றும்
வருந்தும் ; மாந்தர் கோஷ்டத்தில்
கேளார் அக்கானமே
போர் ஓய்ந்தமர்ந்து கேட்டிடும்
விண் தூதர் கீதமே.

4. பார் வாழ்க்கையின் மா பாரத்தால்
நைந்து தவிப்போரே,
சோர்ந்தே போய்ப் பாதை நகர்ந்து
தள்ளாடிடுவோரே,
நோக்கும், இதோ உதித்ததே
மா நற் பொற் காலமே
நோவை மறந்து கேட்டிடும்
விண் தூதர் கீதமே.

5. தோன்றிடும் இதோ சீக்கிரம்
பேரின்ப காலமே
சான்றோராம் தீர்க்கர் ஆண்டாண்டும்
உரைத்த காலமே!

Tamil Hymns

1553. நள்ளி ராவினில் மாட்டுத் தொழுவமதில்

நள்ளி ராவினில் மாட்டுத் தொழுவமதில்
சின்ன இயேசு பாலகன் பூமியில் பிறந்தாரே

1. அதிசயமானவரே, ஆலோசனைக் கர்த்தரே
மந்தைகள் நடுவினிலே விந்தையாய் உதித்தாரே
இம்மானுவேல் தேவ இம்மானுவேல்
நம் பாவம் போக்க வந்த இம்மானுவேல்
- நள்ளிராவினில்

2. மாளிகை மஞ்சம் இல்லை, பொன்னும் பொருளும் இல்லை
செல்வம் வெறுத்த செல்வமே, இவர் உலகில் வந்த தெய்வமே
இம்மானுவேல் தேவ இம்மானுவேல்
நம் பாவம் போக்க வந்த இம்மானுவேல்
- நள்ளிராவினில

Tamil Hymns

போர் ஓய்ந்து பூமி செழிக்கும்
பூர்வ மாண்போடுமே
பாரெங்கும் பரந்தொலிக்கும்

1554. நற்கருணை நாதனே

நற்கருணை நாதனே
சற்குருவே அருள்வாய் பொறுமை (2)

1. கோதுமை கனிமணி போல்
தீ திலோர் குண நலன்கள்
யோக்கியமாய் சேர்ந்திடவே
தூயனே அருள் மழை பொழிவாய் (2)

2. திராட்சை கனி ரசமே
தெய்வீக பானமதாம்
பொருளினில் மாறுதல் போல்
புவிக்கு ஒரு புது முகம் நல்கிடுவார் (2)

3. சுவை மிகு தீங்கனியே
திகட்டாத தேன் சுவையே
தித்திக்கும் கிருபையினாலெ
எங்களை மார்பினில் அணைத்து கொள்வார் (2)

4. தேடி வந்தவரே
தினம் உனதன்பாலே
தாய் மனம் போல் அருளி
தாரணி செழித்தோங்கிடவே (2)

Tamil Hymns

1555. நற்செய்தி மேசியா இதோ

1. நற்செய்தி மேசியா இதோ!
ஆவலாய் நோக்குவோம்
பற்றோடு ஏற்று ஆன்மாவில்
ஆனந்தம் பாடுவோம்.

2. வல்லோனால் சிறையானோரை
வல் சிறை நீக்குவார்
நில்லாதே எவ்விரோதமும்
பொல்லாங்கை மேற்கொள்வார்.

3. நருங்குண்டோரை ஆற்றியே
நலிவை நீக்குவார்
பரத்தின் பாக்கியசெல்வத்தால்
இரவோர் வாழ்விப்பார்.

4. ஓசன்னா! ஆர்க்கும் ஓசன்னா!
சாந்த இவ்வேந்தர்க்கும்;
இயேசுவின் இன்ப நாமமே
பாடுவார் விண்ணோரும்.

Tamil Hymns

1556. நன்மைகள் செய்த நல்லவரே இயேசு

நன்மைகள் செய்த நல்லவரே இயேசு தெய்வமே -
என் இயேசு தெய்வமே

இயேசுவே உமக்கு நன்றி - (2)
உயிருள்ள நாளெல்லாம் - என் - (2)

1. பாலைவனம் போல் வறண்ட வாழ்வை
பயிர் நிலமாக்கினீர்
பாவ கறைகள் நிறைந்த என்னை
பரிசுத்தமாக்கினீர்

2. எளியவன் என்னை குப்பையில் இருந்து
துக்கி நிறுத்தினீர்
என்னை எதிர்த்த ஜானிகளை நீ
வெட்கப்படுத்தினீர்

3. மகிமையின் தேவன் மாசற்ற அன்பால்
மறுருபமாக்கினீர்
உலகமெங்கும் நற்செய்தி சொல்ல
வல்லமை தருகின்றீர்
நன்மைகள் செய்த நல்லவரே இயேசு தெய்வமே -
என் இயேசு தெய்வமே

Tamil Hymns

1557. நன்மைகளின் நாயகனே

நன்மைகளின் நாயகனே
நன்றி சொல்லி மகிழ்கிறேன்
உண்மையுள்ள தெய்வமே
உயிரோடு கலந்தவரே

1. கடந்த ஆண்டெல்லாம்
கண்மணி போல் காத்தீரே
புதிய (ஆண்டு) நாள் தந்து
புதியன (புதுமைகள்) செய்பவரே

2. உமக்காய் காத்திருந்து
புதுபெலன் அடைகின்றேன்
உம்மையே பற்றிக் கொண்டு
புதிய மனுஷனானேன்

3. கர்த்தர் கரம் என்னோடு
இருப்பதை உணர வைத்தீர்
அநேகர் அறிக்கையிட
அப்பா நீர் கிருபை செய்தீர்

4. எனக்கு எதிரானோர்
என் சார்பில் வரவைத்தீர்
சமாதானம் செய்ய வைத்தீர் சர்வ வல்லவரே

5. எப்சிபா என்றழைத்து
என்மேலே பிரியமானீர்
பியூலா என்றழைத்து
மணமகளாக்கிவிட்டீர்

6. ஏசேக்கு, சித்னா இன்றோடு முடிந்தது
ரெகோபோத் தொடங்கியது தடைகளும் விலகியது

Tamil Hymns

1558. நன்றி என்று சொல்லுகிறோம் நாதா

நன்றி என்று சொல்லுகிறோம் நாதா
நாவாலே துதிக்கிறோம் நாதா

நன்றி இயேசு ராஜா
நன்றி இயேசு ராஜா

1. கடந்த நாட்கள் காத்தீரே நன்றி ராஜா
புதிய நாளை தந்தீரே நன்றி ராஜா

2. ஆபத்திலே காத்தீரே நன்றி ராஜா
அதிசயம் செய்தீரே நன்றி ராஜா

3. வாழ்க்கையிலே ஒளி விளக்காய் வந்தீரையா
வார்த்தை என்ற மன்னாவை தந்தீரையா

4. அடைக்கலமே கேடயமே நன்றி ராஜா
அன்பே என் ஆறுதலே நன்றி ராஜா

5. தனிமையிலே துணை நின்றீர் நன்றி ராஜா
தாயைப் போல தேற்றினீர் நன்றி ராஜா

6. சோர்ந்து போன நேரமெல்லாம் தூக்கினீரே
சுகம் தந்து இதுவரை தாங்கினீரே

7. புது வாழ்வு தந்தீரே நன்றி ராஜா
புதுபெலன் தந்தீரே நன்றி ராஜா

8. ஊழியம் தந்தீரே நன்றி ராஜா
உடனிருந்து நடத்தினீரே நன்றி ராஜா

Tamil Hymns

1559. நன்றி என்று சொல்லுவோம்

நன்றி என்று சொல்லுவோம்
நல்ல தேவன் கிருபை செய்தார் (2)
நன்மைகளை நினைத்துக் கொண்டு
நன்றியுள்ள துதியுடன்

நன்றி நன்றி ஐயா
நன்றி இயேசையா -2

1. உங்க ஜீவனைத் தந்தீர்
உமக்கு நன்றியப்பா
என் பாவத்தை சுமந்தீர்
உமக்கு நன்றியப்பா
சாப நேய்களை எல்லாம் முறியடித்தீரே
புது வாழ்க்கை தந்து என்னில்
சந்தோஷம் கொண்டீர்

2. என்னை பெயர் சொல்லி அழைத்தீர்
உமக்கு நன்றியப்பா - உங்க அன்பை
அள்ளி தந்தீர் உமக்கு நன்றியப்பா
என்னை வாலாக்காமல் தலையாக்கினீர்
என்னை கீழாக்காமல்
என்னை மேலாக்கினீர்

3. வெண்கல கதவுகள் உடைத்துவிட்டீரே
இரும்பு தாழ்ப்பாள்கள் முறித்துவிட்டீரே
நல்ல பொக்கிஷங்களை
நல்ல ஆசிர்வாதத்தை
எனக்கு தந்தீரே அநாதி பாசத்தால்

4. பரலோகில் என்னையும்
நீர் கொண்டு செல்லுவீர்
பிதாவின் மகிமையில் என்னை
உட்கார வைப்பீர்
நோய்களும் இல்லை
சாப பேயும் அங்கில்லை
பரிசுத்த ஆவி என்னை வழி நடத்திடுவார்

Tamil Hymns

1560. நன்றி சொல்லாமல் இருக்கவே முடியாது

நன்றி சொல்லாமல் இருக்கவே முடியாது
பல நன்மை செய்த இயேசுவுக்கே
நன்றி நன்றி நன்றி என்று சொல்லி நான் துதிப்பேன்
நாள்தோறும் போற்றுவேன் - 2

1. எத்தனையோ நன்மைகளை
என் வாழ்வில் செய்தாரே
ஏராளமாய் நன்றி சொல்வேன்
அத்தனையும் நினைத்து நினைத்து - நான்
துதிப்பேன் ஆண்டவரை போற்றுவேன்

2. மரண பள்ளத்தாக்கில் நான் நடக்கும்
போதெல்லாம் பாதுகாத்தீரைய்யா
மீண்டும் ஜீவனை கொடுத்து
நீர் என்னை வாழ வைத்தீரையா

3. தேவன் அருளிய சொல்லி முடியாத
ஈவுகளுக்காய் ஸ்தோத்திரம்
அளவில்லா அவரின் கிருபைகளுக்காய்
ஆயுள் முழுதும் ஸ்தோத்திரம்

Tamil Hymns

1561. நன்றி சொல்லி பாடுவேன்

நன்றி சொல்லி பாடுவேன்
நாதன் இயேசு நாமத்தையே
நன்றியால் என் உள்ளம் நிறைந்தே
நாதன் இயேசுவை போற்றுவேன்
நல்லவரே வல்லவரே
நன்மைகள் என் வாழ்வில் செய்பவரே

1. கடந்த நாட்கள் முழுவதும் என்னை
கண்ணின் மனிபோல் காத்தாரே
கரத்தை பிடித்து கைவிடாமல்
கனிவாய் என்னை நடத்தினாரே

2. துன்பங்கள் எந்தன் வாழ்வினிலே
சூழ்ந்து என்னை நெருக்கினாலும்
கண்மலை தேவன் என்னோடு இருக்க
கலக்கம் இல்லை என் வாழ்விலே

3. மேகங்கள் மீது மன்னவன் இயேசு
வேகம் வருவார் ஆனந்தமே
கண்ணீர் துடைத்து பலனை கொடுக்க
கர்த்தாதி கர்த்தர் வருகிறாரே

4. எரிகோ போன்ற எதிர்ப்புகள்
எதிராய் வந்து எழும்பினாலும்
சேனையின் கர்த்தர் என் முன்னே
செல்கிறார் என்று பயப்படேனே

1562. நன்றி சொல்லி உம்மை பாட வந்தோம்

நன்றி சொல்லி உம்மை பாட வந்தோம்
உம் காருண்யத்தை எண்ணி போற்ற வந்தோம்

வார்த்தையினால் நீர் சொன்னதெல்லாம்
கரங்களினால் இன்று நிறைவேற்றினீர்

நன்றி -2 சொல்வோம் உயிர் உள்ளவரை
ஒன்றும் குறையாமல் காத்திடும் நல்லவரை

காற்றுமில்ல மழையுமில்ல
ஆனாலும் வாய்க்காலை நிரப்பினீரே

உடன்படிக்கை செய்து நடத்தி வந்தீர்
மாறாமல் எப்போதும் காத்துக் கொண்டீர்

கைவிடாமல் விட்டு விலகிடாமல்
நெருங்கின பாதையிலும் கூட வந்தீர்

வெட்கப்பட்ட தேசத்திலே
கீர்த்தியும் புகழ்ச்சியுமாக்கினீரே

Tamil Hymns

1563. நன்றி சொல்லிட வேண்டும்

நன்றி சொல்லிட வேண்டும்
இயேசு அப்பாவுக்கு நன்றி சொல்லிட வேண்டும்
நன்மை செய்ததினாலே (2)
நன்றி சொல்லிட வேண்டும்
இயேசு அப்பாவுக்கு நன்றி சொல்லிட வேண்டும்

உண்மை பேசிட வேண்டும் உயர்வை அடைவதற்கு
உதவி செய்திட வேண்டும் தினம் கஷ்டப்படுபவர்க்கு
அன்பு செலுத்திட வேண்டும் என்றும் அயலவர்க்கு
நன்மை செய்திட வேண்டும் ஏழை எளியவர்க்கு

தூய்மை நீ அடைய வேண்டும் தூய வாழ்விற்கு
தீமை அகற்ற வேண்டும் திருந்தி வாழ்வதற்கு
மாசு நீக்கிட வேண்டும் நல்லவராவதற்கு
நெஞ்சில் இயேசு இல்லையென்றால் வாழ்வு என்னத்திற்கு

Tamil Hymns

1564. நன்றி சொல்லுகிறோம் நாதா

நன்றி சொல்லுகிறோம் நாதா
நாவாலே துதிக்கிறோம் நாதா
நன்றி இயேசு ராஜா (2)

1. கடந்த நாட்கள் காத்தீரே நன்றி ராஜா
புதிய நாளை தந்திரே நன்றி ராஜா

2. ஆபத்திலே காத்தீரே நன்றி ராஜா
அதிசயம் செய்தீரே நன்றி ராஜா

3. வாழ்க்கையிலே ஒளிவிளக்காய் வந்தீரையா
வார்த்தை என்ற மன்னாவை தந்தீரையா

4. அடைக்கலமே கேடயமே நன்றி ராஜா
அன்பே என் ஆறுதலே நன்றி ராஜா

5. தனிமையிலே துணை நின்றீர் நன்றிராஜா
தாயைப் போல் தேற்றினீர் நன்றிராஜா

6. சோர்ந்துபோன நேரமெல்லாம் தூக்கினீரே
சுகம் தந்து இதுவரை தாங்கினீரே

7. புதுவாழ்வு தந்தீரே நன்றி ராஜா
புதுபெலன் தந்தீரே நன்றி ராஜா

8. ஊழியம் தந்தீரே நன்றி ராஜா
உடனிருந்து நடத்தினீரே நன்றி ராஜா

Tamil Hymns

1565. நன்றி சொல்லி பாடுவேன் துதி

நன்றி சொல்லி பாடுவேன்
துதி சொல்லி பாடுவேன்
நீங்க செய்த நன்மைகளை
சொல்லி சொல்லி பாடுவேன்

நன்றி இயேசு ராஜா

1. என் ஜீவன் உமக்கு
அருமையாய் இருந்ததினால்
தீங்கு நாளில் என்னை காத்துக் கொண்டீர்

2. ஒரு வழியாய் வந்த எந்தன் எதிரிகளை
ஏழு வழியாய் என் முன்ஓட செய்தீர்

3. என் சமூகம் உனக்கு
முன்பாக செல்லும் என்றீர்
போக்கிலும் வரத்திலும் என் கூட நீர் இருந்தீர்

4. இம்மட்டும் காத்தீர் இனியும் காத்திடுவீர்
இன்னல்கள் நீக்கி இன்பமாய் வாழ வைப்பீர்

Tamil Hymns

1566. நன்றி நன்றி இயேசு ராஜா

நன்றி நன்றி இயேசு ராஜா
உந்தன் நாமம் ஸ்தோத்தரிப்பேன்

1. உன்னத ராஜா உயர்ந்த தேவா
உந்தன் நாமம் ஸ்தோத்தரிப்பேன்
உலகின் இரட்சகா உண்மை நாதா
உந்தன் நாமம் ஸ்தோத்தரிப்பேன்

2. எனக்காய் மரித்தீர் எனக்காய் உயிர்த்தீர்
உந்தன் நாமம் ஸ்தோத்தரிப்பேன்
என்னை பரலோகம் சேர்த்திட வருவார்
உந்தன் நாமம் ஸ்தோத்தரிப்பேன்

3. பரலோக தேவா பரிசுத்த ராஜா
உந்தன் நாமம் ஸ்தோத்தரிப்பேன்
நீதி நிறைந்தவர் நித்திய ராஜா
உந்தன் நாமம் ஸ்தோத்தரிப்பேன்

4. மகிமையின் தேவா ராஜாதி ராஜா
உந்தன் நாமம் ஸ்தோத்தரிப்பேன்
மாட்சிமை நிறைந்தவர் மாறாத நேசர்
உந்தன் நாமம் ஸ்தோத்தரிப்பேன்

1567. நன்றி நன்றி இயேசுவே

நன்றி நன்றி இயேசுவே (2)
இரத்தமே சிந்தி
எனக்காக மரித்து
சாத்தானை முறியடித்தீர்

ஆஹா..ஹா..ஹா..ஒஹோ..ஹோ..ஹோ
லலா..லா..லா
அல்லேலுயா.. ஆமேன்

உறக்கம் தெளிவோம்
உற்சாகம் கொள்வோம்
ஓட்டம் முடியும் வரை
கலப்பையில் கையை
வைத்த பிறகு
திரும்பி பார்க்கமாட்டோம்

1568. நன்றி நன்றி என்று நன்றி நன்றி என்று

நன்றி நன்றி என்று (2)
நன்றி நன்றி என்று
நாள்முழுதும் துதிப்பேன்

1. காலையிலும் துதிப்பேன்
மாலையிலும் துதிப்பேன்
மத்தியத்திலும் துதிப்பேன்
இரவினிலும் துதிப்பேன்

2. உண்ணும்போதும் துதிப்பேன்
உறங்கும் போதும் துதிப்பேன்
அமரும்போதும் துதிப்பேன்
நடக்கும் போதும் துதிப்பேன்

3. வாழ்த்தும் போதும் துதிப்பேன்
தாழ்த்தும்போதும் துதிப்பேன்
நெருக்கத்திலே துதிப்பேன்
பிறர் வெறுக்கும் போதும் துதிப்பேன்

4. சகாயரே தயாபரரே
சிநேகிதரே என் சிருஷ்டிகரே

5. சத்தியமே என் நித்தியமே
என் ஜீவனே நல் ஆயனே

6. உன்னதரே உயர்ந்தவரே
என் பரிகாரியே பலியானீரே

Tamil Hymns

1569. நன்றி நன்றி நன்றி என்று துதிக்கிறேன்

நன்றி நன்றி நன்றி என்று துதிக்கிறேன்
நல்லவரே உன் நன்மைகளை நினைக்கிறேன்
நன்றி ஐயா நன்றி ஐயா - இயேசையா

1. தகுதியில்லா அடிமை
என்னை அணைக்கின்றீர்
தாங்கி தாங்கி வழி நடத்தி மகிழ்கின்றீர்
அதிசயங்கள் ஆயிரம்
அன்பரே உம் கரங்களிலே

2. பெலவீனம் நீக்கி தினம் காக்கின்றீர்
பெரும் பெரும் காரியங்கள் செய்கின்றீர்
தீமையான அனைத்தையும்
நன்மையாக மாற்றுகிறீர்

3. உணவு உடை தினம் தந்து மகிழ்கின்றீர்
உண்மையான நண்பர்களை தருகின்றீர்
கண்மணிபோல் காப்பவரே
கைவிடாமல் மேய்ப்பவரே

Tamil Hymns

1570. நன்றி நன்றி நன்றி என்று நாள்தோறும்

நன்றி நன்றி நன்றி என்று
நாள்தோறும் பாடிடுவோம்

1. வல்லவரே நல்லவரே

2. காண்பவரே காப்பவரே

3. பாவங்களைப் போக்கிவிட்டீர்

4. நோய்களெல்லாம் சுமந்து கொண்டீர்

5. ஆவியினால் அபிஷேகம் செய்தீர்

6. புதுவாழ்வு எனக்குத் தந்தீர்
அல்லேலூயா (2) ஆமென்

Tamil Hymns

1571. நன்றி நன்றி நன்றி ஐயா

நன்றி நன்றி நன்றி ஐயா - (8)

1. யேகோவாயிரே பார்த்துக் கொள்வீரே
குறைவேல்லாம் நிறைவாக்குவீர் - எந்தன்
நன்றி நன்றி நன்றி ஐயா - (6)

2. யேகோவா ராஃவா சுகம் தரும் தெய்வம்
வியாதிகள் எனக்கில்லையே - இனி

3. யேகோவா ஷம்மா கூடவே இருப்பீர்
தனியாக விடமாட்டீர் - என்னை

நன்றி நன்றி நன்றி ஐயா - (8)
நன்றி சொல்வேனே என் யேசுவே
நன்மை செய்தீரே என் வாழ்விலே - (3)
நன்றி நன்றி நன்றி ஐயா - (8)

Tamil Hymns

1572. நன்றி நன்றி நன்றி சொல்லி பாடுவேன்

நன்றி நன்றி நன்றி சொல்லி பாடுவேன்
இயேசு நாதன் செய்த நன்மைகளை பாடுவேன்

நன்றி நன்றி நன்றி என் இயேசுவுக்கே
நன்றி நன்றி நன்றி என் இராஜனுக்கே

ஜீவன் தந்த இயேசுவுக்கு நன்றி
கிருபை தந்த இயேசுவுக்கு நன்றி - எனக்கு
மீட்பு தந்த இயேசுவுக்கு நன்றி
ஜெயம் தந்த இயேசுவுக்கு நன்றி

என்னை பெலப்படுத்திய இயேசுவுக்கு நன்றி
என்னை சுகப்படுத்திய இயேசுவுக்கு நன்றி
என்னை போஷித்த இயேசுவுக்கு நன்றி
என்னை பாதுகாத்த இயேசுவுக்கு நன்றி

என்னை காத்த இயேசுவுக்கு நன்றி
இனியும் காக்கும் இயேசுவுக்கு நன்றி
வரப்போகும் இயேசுவுக்கு நன்றி
என்னை சேர்த்துக் கொள்ள போவதாலே நன்றி

Tamil Hymns

1573. நன்றி நன்றி நன்றி என்று சொல்லி

நன்றி நன்றி நன்றி (2) என்று சொல்லி
உம்மை நாள்தோறும் துதிப்பேன்
நீர் செய்த நன்மைகள் என் வாழ்வில் ஏராளம் (2)

1. ஒருவழி அடைத்த போது
புது வழியைத்ரே நன்றி
எதிராய் வந்த ஆயுதங்கள்
செயலற்றுப் போனதால் நன்றி (2)

2. தேடி வந்தபோது என்னைத்
தேற்றி அணைத்தீரே நன்றி
சேதம் ஒன்றும் அணுகாமல்
காத்துக் கொண்டீரே நன்றி (2)

3. சோர்ந்து போன நேரம் எல்லாம்
தூக்கநீரே நன்றி
வார்த்தை என்னும் மன்னாவால்
போஷித்தீரே நன்றி (2)

Tamil Hymns

1574. நன்றி நிறைந்த இதயத்தோடு

நன்றி நிறைந்த இதயத்தோடு
நாதன் இயேசுவை பாடிடுவேன்
நன்றி பலிகள் செலுத்தியே நான்
வாழ் நாளெல்லாம் உம்மை ஆராதிப்பேன் - 2

என் இயேசு நல்லவர் என் இயேசு வல்லவர்
என் இயேசு பெரியவர் என் இயேசு பரிசுத்தர்

1. நான் நடந்து வந்த பாதைகள்
கரடு முரடானவை
என்னை தோளில் தூக்கி சுமந்தார்
அவர் அன்பை மறப்பேனோ

2. என் போக்கிலும் எந்தன் வரத்திலும்
என் இயேசுவே பாதுகாப்பு
என் கால்கள் சறுக்கிடும் நேரம்
அவர் கிருபை தாங்குமே

3. என் கரத்தை பிடித்த நாள் முதல்
என்னை கைவிடவே இல்லை
அவரின் நேசம் எனது இன்பம்
அவர் நாமம் உயர்த்துவேன்

Tamil Hymns

1575. நன்றி நிறைந்த உள்ளத்தோடு

நன்றி நிறைந்த உள்ளத்தோடு
நாதன் இயேசுவை நான் பாடுவேன்

அல்லேலூயா அல்லேலூயா

1. ஊதாரி மைந்தனாய் உலகினில் அலைந்தேன்
உண்மையாய் தேடி வந்தீர்
உந்தன் மகனாக மாற்றி விட்டீர்

2. உளையான சேற்றில் உருமாறி கிடந்தேன்
உண்மையாய் தூக்கி விட்டீர்
என்னை உம்மோடு அமரச் செய்தீர்

3. மண்ணான எனக்கு மகிமையின் வாழ்வு
மன்னா நீர் கொடுத்தீரே
என்னை மார்போடு அணைத்தீரே

Tamil Hymns

1576. நன்றி பலி நன்றி பலி

நன்றி பலி, நன்றி பலி
நல்லவரே உமக்குத்தான்
அதிகாலை ஆனந்தமே
அப்பா உம் திருப்பாதமே - என்

1. நேற்றைய துயரமெல்லாம்
இன்று மறைந்ததையா
நிம்மதி பிறந்ததையா
அது நிரந்தரமானதையா

கோடி கோடி நன்றி டாடி (3)

2. இரவெல்லாம் காத்தீர்
இன்னும் ஓர் நாள் தந்தீர்
மறவாத என் நேசரே
இன்று உறவாடி மகிழ்ந்திடுவேன்

3. ஊழியப் பாதையிலே
உற்சாகம் தந்தீரையா
ஓடி ஓடி உழைப்பதற்கு
உடல் சுகம் தந்தீரையா

4. வேதனை துன்பமெல்லாம்
ஒரு நாளும் பிரிக்காதையா
நாதனே உம் நிழலில்
நாள்தோறும் வாழ்வேனையா

5. ஜெபத்தைக் கேட்டீரையா
ஜெயத்தைத் தந்தீரையா
பாவம் அணுகாமலே
பாதுகாத்து வந்தீரையா

6. புதிய நாள் தந்தீரையா
புது கிருபை தந்தீரையா
அதிசயமானவரே
ஆறுதல் நாயகனே

7. என் நாவில் உள்ளதெல்லாம்
உந்தன் புகழ்தானே
நான் பேசி மகிழ்வதெல்லாம்

Tamil Hymns

உந்தன் பெருமை தானே

Tamil Hymns

1577. நன்றிபலி நன்றிபலி நல்லவரே

நன்றி பலி நன்றி பலி
நல்லவரே உமக்குத்தான்
ஆனந்தம் (அதிகாலை) ஆனந்தமே
அப்பா உம் திருப்பாதமே - என்

1. நேற்றைய துயரமெல்லாம்
இன்று மறைந்ததையா
நிம்மதி பிறந்ததையா - அது
நிரந்தரமானதையா
கோடி கோடி நன்றி டாடி (3)

2. இரவெல்லாம் காத்தீர்
இன்னும் ஓர் நாள் தந்தீர்
மறவாத என் நேசரே - இன்று
உறவாடி மகிழ்ந்திடுவேன்

3. ஊழியப் பாதையிலே
உற்சாகம் தந்தீரையா
ஓடி ஓடி உழைப்பதற்கு
உடல் சுகம் தந்தீரையா

4. வேதனை துன்பமெல்லாம்
ஒரு நாளும் பிரிக்காதையா
நாதனே உம் நிழலில்
நாள்தோறும் வாழ்வேனையா

5. ஜெபத்தைக் கேட்டீரையா
ஜெயத்தைத் தந்தீரையா
பாவம் அணுகாமலே
பாதுகாத்து வந்தீரையா

6. என் நாவில் உள்ளதெல்லாம்
உந்தன் புகழ்தானே
நான் பேசி மகிழ்வதெல்லாம்
உந்தன் பெருமை தானே

7. புதிய நாள் தந்தீரையா
புது கிருபை தந்தீரையா
அதிசயமானவரே
ஆறுதல் நாயகனே

Tamil Hymns

1578. நன்றிப்பலிபீடம் கட்டுவோம்

நன்றிப்பலிபீடம் கட்டுவோம்
நல்ல தெய்வம் நன்மை செய்தார்
செய்த நன்மை ஆயிரங்கள்
சொல்லிச் சொல்லி பாடுவேன்

நன்றி தகப்பனே நன்மை செய்தீரே

1. ஜீவன் தந்து நீர் அன்புகூர்ந்தீர்
பாவம் நீங்கிட கழுவி விட்டீர்
உமக்கென்று வாழ பிரித்தெடுத்து
உமது ஊழியம் செய்ய வைத்தீர்

2. சிறந்த முறையிலே குரல் எழுப்பும்
சிலுவை இரத்தம் நீர் சிந்தினீரே
இரத்தக் கோட்டைக்குள் வைத்துக் கொண்டு
எதிரி நுழையாமல் காத்துக்கொண்டீர்

3. இருளின் அதிகாரம் அகற்றிவிட்டீர்
இயேசு அரசுக்குள் சேர்த்துவிட்டீர்
உமக்கு சொந்தமாய் வாங்கிக் கொண்டு
உரிமைச் சொத்தாக வைத்துக் கொண்டீர்

4. புதிய உடன்பாட்டின் அடையாளமாய்
புனித இரத்தம் ஊற்றினீரே
சத்திய ஜீவ வார்த்தையாலே
மரித்த வாழ்வையே மாற்றினீரே

5. பார்க்கும் கண்களை தந்தீரய்யா
பாடும் உதடுகள் தந்தீரய்யா
உழைக்கும் கரங்களை தந்தீரய்யா
ஓடும் கால்களைத் தந்தீரய்யா

6. இருக்க நல்ல ஒரு வீடு தந்தீர்
வாழத் தேவையான வசதி தந்தீர்
கடுமையாக தினம் உழைக்க வைத்தீர்
கடனே இல்லாமல் வாழ வைத்தீர்

7. எதிராய் வாழ்ந்து வந்த இவ்வுலகை
ஒப்புரவாக்கினீர் உம் இரத்தத்தால்
தூரம் வாழ்ந்து வந்த எங்களையே

Tamil Hymns

அருகில் கொண்டுவந்தீர் ஆவியினால்

8. குற்றம் செய்ததால் மரித்திருந்தோம்
இயேசுவோடே கூட எழச்செய்தீர்
கிருபையினாலே இரட்சித்தீரே
உன்னதங்களிலே உட்காரச் செய்தீர்

9. இதய பெலவீனம் நீக்கினீரே
சுகர் வியாதிகள் போக்கினீரே
அல்சர் இல்லாமல் காத்தீரே
ஆஸ்மா முற்றிலும் நீக்கியதே

10. நல்ல குடும்பம் நீர் தந்தீரய்யா
செல்ல பிள்ளைகள் தந்தீரய்யா
அணைக்கும் கணவனை தந்தீரய்யா
அன்பு மனைவியை தந்தீரய்யா

Tamil Hymns

1579. நன்றியால் துதி பாடு

நன்றியால் துதி பாடு
உன் யேசுவை உள்ளத்தால் என்றும் பாடு
வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மையுள்ளவர்

1. எரிகோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு உந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்து விழும்

2. செங்கடல் நம்மை சூழ்ந்து கொண்டாலும்
சிலுவையின் நிழல் உண்டு
பாடிடுவோம் துதித்திடுவோம்
பாதைகள் கிடைத்து விடும்

3. கோலியாத் நம்மை எதிர்த்து வந்தாலும்
கொஞ்சமும் பயம் வேண்டாம்
இயேசு என்னும் நாமம் உண்டு
இன்றே ஜெயித்திடுவோம்

4. துன்மார்க்கத்திற் கேதுவான வெறி கொள்ளாமல்
தெய்வ பயத்தோடு என்றுமே
ஆவியினால் என்றும் நிறைந்தே
சங்கீத கீர்த்தனம் பாடு

5. சரீரம், ஆத்துமா, ஆவியினாலும்
சோர்ந்து போகும் வேளையில் எல்லாம்
துதி சத்தத்தால் உள்ளம் நிறைந்தால்
தூயரின் பெலன் கிடைக்கும்

Tamil Hymns

1580. நன்றியால் பாடிடுவோம்

நன்றியால் பாடிடுவோம்
நல்லவர் இயேசு நல்கிய எல்லா
நன்மைகளை நினைத்தே

1. செங்கடல் தனை நடுவாய்ப் பிரித்த
எங்கள் தேவனின் கரமே
தாங்கியே இந்நாள் வரையும்
தயவாய் மாதயவாய்

2. உயிர்ப்பித்தே உயத்தினார் உன்னதம் வரை
உடன் சுதந்திரராய் இருக்க
கிருபையின் மகா தானமது வருங்
காலங்களில் விளங்க

3. ஜீவனை தியாகமாய் வைத்த பலர் கடும்
சேவையில் மரித்தார்
சேர்ந்து வந்து சேவை புரிந்து
சோர்ந்திடாது நிற்போம்

4. மித்ருக்கலான பலர் நன்றியிழந்தே
சத்துருக்களாயினாரே
சத்தியத்தை சார்ந்து தேவ
சித்தம் செய்திடுவோம்

5. அழைக்கப் பட்டோரே நீர் உன்னத அழைப்பினை
அறிந்தே வந்திடுவீர்
அளவில்லா திரு ஆக்கமிதனை
அவனியோர்க்களிப்பீர்

6. சீயோனை பணிந்துமே கிறிஸ்தேசு இராஜனாய்
சீக்கிரம் வருவார்
சிந்தை வைப்போம் சந்திக்கவே
சீயோனின் இராஜனையே

Tamil Hymns

1581. நாங்கள் பாவப் பாரத்தால்

1. நாங்கள் பாவப் பாரத்தால்
கஸ்தியுற்றுச் சோருங்கால்
தாழ்மையாக உம்மையே
நோக்கி, கண்ணீருடனே
ஊக்கத்தோடு வாஞ்சையாய்
கெஞ்சும்போது, தயவாய்
சிந்தை வைத்து, இயேசுவே
எங்கள் வேண்டல் கேளுமே.

2. மோட்சத்தை நீர் விட்டதும்,
மாந்தனாய்ப் பிறந்ததும்
ஏழையாய் வளர்ந்ததும்,
உற்ற பசி தாகமும்,
சாத்தான் வன்மை வென்றதும்
லோகம் மீட்ட நேசமும்
சிந்தை வைத்து, இயேசுவே,
எங்கள் வேண்டல் கேளுமே.

3. லாசருவின் கல்லறை
அண்டை பட்ட துக்கத்தை
சீயோன் அழிவுக்காய் நீர்
விட்ட சஞ்சலக் கண்ணீர்
யூதாஸ் துரோகி எனவும்
துக்கத்தோடுரைத்ததும்
சிந்தை வைத்து, இயேசுவே
எங்கள் வேண்டல் கேளுமே.

4. காவில் பட்ட கஸ்தியும்
ரத்த சோரி வேர்வையும்
முள்ளின் கிரீடம், நிந்தனை
ஆணி, ஈட்டி, வேதனை,
மெய்யில் ஐந்து காயமும்,
சாவின் நோவும், வாதையும்
சிந்தை வைத்து, இயேசுவே
எங்கள் வேண்டல் கேளுமே.

5. பிரேத சேமம், கல்லறை,
காத்த காவல், முத்திரை
சாவை வென்ற சத்துவம்
பரமேறும் அற்புதம்,
நம்பினோர்க்கு ரட்சிப்பை

Tamil Hymns

ஈயும் அன்பின் வல்லமை
சிந்தை வைத்து, இயேசுவே,
எங்கள் வேண்டல் கேளுமே.

Tamil Hymns

1582. நன்றியோடு அவர் வாசல் நுழைவோம்

1. நன்றியோடு அவர் வாசல் நுழைவோம்
துதியோடு பிரகாரம் வருவோம்
சமுகம் மகிழ்ந்து கொண்டாடுவோம்
அவர் நாமம் நல்லதென்று பாடுவோம்

கர்த்தர் நல்லவர் (3) - அவர்
கிருபை என்றென்றும் உள்ளது

2. எக்காளத்தோடும் அவரைத் துதிப்போம்
கின்னரம் தம்புரோடும் துதிப்போம்
வான் புவியிலுள்ள சிருஷ்டிகளும்
துதியின் தொனியுயர்த்தி பாடுவோம்

3. இயேசு தேவகுமாரன் உன்னதர்
சர்வ சிருஷ்டிக்கும் காரணர்
அவர் முன்பாக வந்து தொழுவோம்
கைகள் உயர்த்தி அவரைப் பாடுவோம்

Tamil Hymns

1583. நன்றியோடு நல்ல தேவா

நன்றியோடு நல்ல தேவா
நன்மைகளெல்லாம் நினைக்கின்றேன்
நல்லவரே உம்மைத் துதிக்கின்றேன்

குறைவில்லாமல் நடத்தினீரே
தடை எல்லாம் நீர் அகற்றினீரே
என்னை தாழ்த்தி உம்மை உயர்த்திடுவேன்
என் வாழ்வின் நாயகன் நீரே

2. உயர்விலும் தாழ்விலும்-என்
துணையாக வந்தீரே நிறைவிலும்
என் குறைவிலும் என் நம்பிக்கையானவரே
எல்லா நட்சத்திரங்கள் பெயர் அறிந்தவரே
என் முகத்தை உம் கையில் வரைந்தவரே
என்னை மறவாமல் நினைப்பவரே

3. சோதனையில் வேதனையில்
என் பக்கமாய் நின்றவரே
முன்னும் பின்னும் பாதுகாக்கும்
நல் கோட்டையாய் இருப்பவரே
எல்லா வியாதி பெலவீன நேரங்களில்
உன் பரிகாரி நானென்று சொன்னவரே
எனக்கும் ஜீவன் தந்தவரே

Tamil Hymns

1584. நாங்கள் ஆராதிக்கும் எங்கள் தேவன்

நாங்கள் ஆராதிக்கும் எங்கள் தேவன்
ஜீவிக்கிறார் என்றும் ஜீவிக்கிறார்
சத்துருவின் தந்திரங்கள் எல்லாம்
அழித்திடுவார் அவர் அழித்திடுவார்

சர்வ வல்ல தேவனையே ஆராதிக்கிறோம்
அதிசயம் செய்பவரை ஆராதிக்கிறோம் - நாங்கள்

1. எரிகிற அக்கினி சூளையிலும்
விடுதலை அக்கினியாய் வந்திடுவார்
சேதம் வராமல் காத்திடவே -2
தேவக்குமாரனாய் வெளிப்படுவார்

2. நிகரே இல்லா பட்டயம் அவர்
நீதியின் கரத்தினால் நடத்திடுவார்
உத்தமனே உனக்கு கர்த்தர் துணையே- 2
உயிரோடு எழுந்தவர் உதவி செய்வார்

3. மகிமையாய் எங்கும் வாசம் செய்கிறீர்
மகிமையின் தேவா உம்மை ஆராதிக்கிறோம்
துக்கங்கள் எல்லாம் மறைந்திடுமே - 2
தூதரின் கூட்டமோ ஆர்ப்பரிக்குமே

4. சிங்கத்தின் வாயை அடைத்திடுவார்
எரிகோவின் கோட்டையை அழித்திடுவார்
இராஜாதி இராஜா வருகின்றாரே - 2
மேகங்களுடனே வருகின்றாரே

Tamil Hymns

1585. நாடும் துறைமுகம் சேர்ந்து மகிழ

நாடும் துறைமுகம்   சேர்ந்து மகிழ
நாதன் இயேசு வழியாவார்

1. வல்லவர் இயேசுவை முன்வைத்து
அவர் சித்தம் செய்திடுவோம்
அமைதல் அருளி அனுதினமும்
மகிழ்வை இயேசு அளித்திடுவார்

2. கடலின் சீறும் அலைகள் அமர்த்தியுமே
அதன் அமளியை அடக்குகின்றார்
நாதன் இயேசுவை ஸ்தோத்திரித்து
நாடி ஏகியே சேர்ந்திடுவோம்

3. இதய தாகம் நிறைந்த அனைவரையும்
அவர் திருப்தியடையச் செய்வார்
தவனமுள்ள யாவரையும்
நன்மை அளித்து சேர்த்திடுவார்

4. இக்கட்டு நாளில் தேடும் யாவருக்கும்
அவர் பதிலை அளித்திடுவார்
சகல கட்டுகள் அறுத்திடுவார்
அன்பர் இயேசு நடத்திடுவார்

Tamil Hymns

1586. நாதா நாதா நாத இந்த ஜீவியமே

நாதா.. நாதா.. நாதா…
இந்த ஜீவியமே வெறும் மாயையோ
இது சஞ்சலம் நிறைந்ததோ

1. காரிருள் சூழும் நேரமதில்- என்
கரம் பிடித்தென்னை நடத்திய நாதன்
மாராவின் மதுரமாம் இருளில் வெளிச்சமாம்
ஆதரவே என் தேற்றரவாளனே
உம் கிருபையன்றி யாதொன்றுமியலேன்
வனாந்திரப் பாதையில் ஆருயிர் நாதா

2. நிந்தைகள் பழிகள் பெருகிடும் போது
வாக்குத்தத்தம் தந்து நடத்திடும் நாதன்
என் கன்மைலையே என் அடைக்கலமே
தகர்ந்த என் ஜீவியம் வனைந்த என் பரனே
நீர் அல்லால் ஆசை இப்பூவினில் இல்லை
உம்மில் நான் சாருவேன் என்றென்றும் நாதா

Tamil Hymns

1587. நாமே திருச்சபை கிறிஸ்துவின் திருஉடல்

நாமே திருச்சபை கிறிஸ்துவின் திருஉடல்
ஒவ்வொருவரும் அதன்
தனித்தனி உறுப்புகள்

1. ஒரு உறுப்பு துன்பப்பட்டால் துன்பப்பட்டால்
மற்ற அனைத்தும் துன்பப்படும்
கூடவே துன்பப்படும்

உணர்ந்திடுவோம் இணைந்திடுவோம்
ஓர் உடலாய் செயல்படுவோம்

2. ஒரு உறுப்பு புகழ் அடைந்தால்
மற்ற அனைத்தும் மகிழ்ச்சியுறும்
சேர்ந்து மகிழ்ச்சியுறும்

3. இயேசுகிறிஸ்து பாடுபட்டு
பகையை ஒழித்தார்
கடவுளோடு ஒப்புரவாக ஒரு உடலாக்கிவிட்டார்

4. பொழுது இன்று சாய்வதற்குள் சினம் தணியட்டும்
அலகைக்கு இனி இடம் வேண்டாம்
இடமே கொடுக்க வேண்டாம்

Tamil Hymns

1588. நாம் ஆராதிக்கும் தேவன் நல்லவர்

நாம் ஆராதிக்கும் தேவன் நல்லவர்
விடுவிக்க வல்லவரே
எரிகின்ற அக்கினிக்கும் ராஜாவுக்கும்
விடுவிக்க வல்லவரே

1. நம்மை காக்கின்றவர்
தூதரை அனுப்பிடுவார்
அக்கினி ஜீவாலை நம்மை
அவியாமல் காத்திடுவார்

இடைவிடாமல் ஆராதிப்போம்
நம் வாழ்வில் என்றும் ஜெயமே

2. நம்மை அழைத்தவரோ
கைவிடவே மாட்டார்
கலங்காமல் முன் சென்றிட
கரம் பற்றி நடத்திடுவார்

3. சத்துருவின் கோட்டைகளை தகர்த்திட
உதவி செய்வார்
தயங்காமல் உன் சென்றிட
தாங்கியே நடத்திடுவார்

Tamil Hymns

1589. நாம் ஆராதிக்கும் தேவன் அவர்

நாம் ஆராதிக்கும் தேவன்
அவர் ஜீவனுள்ள தேவன்
ஆபிரகாமின் தேவன் ஈசாக்கின் தேவன்
யாக்கோபின் தேவன் நம் தேவன் - அவர்

1. ஆபிரகாம் விசுவாசித்தான்
நீதிமானின் ஆசிகள் பெற்றான்
விசுவாச மார்க்கத்தாலே
ஆபிரகாமின் பிள்ளைகளாய்
ஆசிகளை சுதந்தரிப்போம்

2. ஈசாக்கு விதை விதைத்தான்
நூறத்தனை ஆசிகள் பெற்றான்
பரலோக பலங்களை மகிமையாய் அடைந்திட
மகிழ்வுடன் பிழைத்திடுவோம்

3. யாக்கோபு வேண்டுதல் செய்தான்
உயிர் பிழைத்திட ஆசிகள் பெற்றான்
விசுவாச ஜெபத்தினால் உன்னதரின் திருமுக
ஆசிகளை அடைந்திடுவோம்

Tamil Hymns

1590. நாம் இடைவிடாமல் ஆராதிக்கும்

நாம் இடைவிடாமல் ஆராதிக்கும்
தேவன் நல்லவரே - நாம் இடைவிடாமல்
ஆராதிக்கும் தேவன் பெரியவரே
தப்புவிக்க வல்லவர் தவறாமல் காப்பவர்
அவர் கிருபை என்றுமுள்ளது
அவர் தயவு என்றுமுள்ளது

1. உன்னதத்தில் அமர்ந்திடும் இயேசுவே
அதிகாரம் நிறைந்தவரே
உம்மை உயர்த்தியே மகிழ்கின்றோம்

2. யுத்தத்திலே வெற்றியின் இயேசுவே
பராக்கிரமம் உடையவரே
உம்மை பணிந்தே தொழுகிறோம்

3. சிங்காசனத்தை அசைத்திடும் இயேசுவே
நினைத்ததை செய்பவரே
உம்மைத் தடுப்பவர் இல்லையே

4. இருதயத்தை உருக்கிடும் இயேசுவே
கல்வாரி நாயகரே
உம் அன்பிற்கே அடிமையே

1591. நாம் நித்திரை செய்து விழித்தோம்

1. நாம் நித்திரை செய்து விழித்தோம்
நற்சுகம் பலம் அடைந்தோம்
நாள்தோறும் தெய்வ அன்பையே
உணர்ந்து ஸ்துதி செய்வோமே.

2. தீங்கை விலக்கிப் பாவத்தை
மன்னித்து, மோட்ச நம்பிக்கை
மென்மேலும் ஓங்க நாதனார்
கடாட்சம் செய்து காக்கிறார்.

3. அன்றன்று வரும் வேலையை
நாம் செய்கின்ற பணிவிடை
என்றெண்ணியே, ஒவ்வொன்றையும்
படைப்போம் பலியாகவும்.

4. நம்மை வெறுத்து, கர்த்தரின்
சமீபம் சேர விரும்பின்,
அன்றாடக கடமையும்
ஓர் ஏதுவாக விளங்கும்.

5. ஜெபிக்கும் வண்ணம் உய்யவும்,
கர்த்தாவே, பலம் ஈந்திடும்;
உம்மண்டை நாங்கள் வாழவும்
தகுந்தோர் ஆக்கியருளும்.

1592. நாதா உம்திருக் கரத்தில்

நாதா உம்திருக் கரத்தில் இசைக்கருவி நான்
நாள்தோறும் பயன்படுத்தும் உந்தன் சித்தம் போல்

1. ஐயா உம் பாதம் என் தஞ்சமே
அனுதினம் ஓடி வந்தேன்
ஆனந்தமே ஆனந்தமே – 2

2. எங்கே நான் போக உம் சித்தமோ
அங்கே நான் சென்றிடுவேன்
உம் நாமத்தில் ஜெயம் எடுப்பேன்

3. புதுப்பாடல் தந்து ஆசீர்வதியும்
பரவசமாகிடுவேன்
எக்காளம் நான் ஊதிடுவேன்

4. நிந்தைகள் நெருக்கம் துன்பங்களில்
துதி பாடி மகிழ்ந்திருப்பேன்
கிருபை ஒன்றே போதுமைய்யா

5. ஊரெல்லாம் செல்வேன் பறைசாற்றுவேன்
உம் நாமம் உயர்த்திடுவேன்
சாத்தான் கோட்டை தகர்த்திடுவேன்

Tamil Hymns

1593. நாதா ஜீவன் சுகம் தந்தீர்

1. நாதா, ஜீவன் சுகம் தந்தீர்
நாடி வந்த மாந்தர்க்கு
இன்றும் ஜீவன் சுகம் ஈவீர்
நோயால் வாடுவோருக்கு,
நாதா, உம்மைப் பணிவோம்
பாதம் வீழ்ந்து கெஞ்சுவோம்.

2. ஆவலாய் சிகிச்சை நாடி
சாவோர் பிணியாளிகள்
வைத்தியர் சகாயர் தேடி
வருவாரே ஏழைகள்
நாதா, சுகம் அருள்வீர்,
பாதம் வீழ்ந்தோர் ரட்சிப்பீர்.

3. ஐயா! தொண்டர் ஆணும் பெண்ணும்,
கையால் உள்ளத்தாலுமே
பாசம் அநுதாபத்தோடும்
பாரம் நீக்கச் செய்யுமே;
நாதா, ஜெபம் படைப்போம்,
பாதம் வீழ்ந்து கெஞ்சுவோம்.

4. பாவம் நோயும் சாவும் நீங்கும்
யாவும் செய் உம் தயவால்
பாடுற்றோராம் மாந்தர் யாரும்
பக்த கோடி ஆவதால்
நாதர் ஆசனம் முன்னாய்
பாதம் வீழ்வார் பக்தியாய்.

Tamil Hymns

1594. நாளைய தினத்தைக் குறித்து

நாளைய தினத்தைக் குறித்து பயமில்லை
நாதன் இயேசு எல்லாம் பார்த்துக் கொள்வார்

1. ஆண்டவர் எனது வெளிச்சமும் மீட்புமானார்
எதற்கும் பயப்படேன்
அவரே எனது வாழ்வின் பெலனானார்
யாருக்கும் அஞ்சிடேன் - அல்லேலூயா

2. கேடுவரும் நாளில் கூடார மறைவினிலே
ஒளித்து வைத்திடுவார்
கன்மலையின் மேல் உயர்த்தி நிறுத்திடுவார்
கலக்கம் எனக்கில்லை - அல்லேலூயா

3. தகப்பனும் தாயும் என்னை கைவிட்டாலும்
கர்த்தர் சேர்த்துக் கொள்வார்
கர்த்தருக்காய் நான் தினமும் காத்திருப்பேன்
புதுபெலன் பெற்றிடுவேன் - அல்லேலூயா

4. கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்பேன்
அதையே நாடுவேன்
வாழ்நாளெல்லாம் அவரின் பிரசன்னத்தில்
வல்லமை பெற்றிடுவேன் - அல்லேலூயா

5. சிங்கக்குட்டிகள் பட்டினி கிடந்தாலும்
எனக்கோ குறையில்லை
குறைகளையெல்லாம் நிறைவாக்கித் தந்திடுவார்
கொஞ்சமும் பயமில்லை - அல்லேலூயா

Tamil Hymns

1595. நாற்பது நாள் ராப் பகல்

1. நாற்பது நாள் ராப் பகல்
வனவாசம் பண்ணினீர்;
நாற்பது நாள் ராப் பகல்
சோதிக்கப்பட்டும் வென்றீர்.

2. ஏற்றீர் வெயில் குளிரை
காட்டு மிருகத் துணை;
மஞ்சம் உமக்குத் தரை,
கல் உமக்குப் பஞ்சணை.

3. உம்மைப்போல நாங்களும்
லோகத்தை வெறுக்கவும்,
உபவாசம் பண்ணவும்
ஜெபிக்கவும் கற்பியும்.

4. சாத்தான் சீறி எதிர்க்கும்
போதெம் தேகம் ஆவியை
சோர்ந்திடாமல் காத்திடும்,
வென்றீரே நீர் அவனை.

5. அப்போதெங்கள் ஆவிக்கும்
மா சமாதானம் உண்டாம்;
தூதர் கூட்டம் சேவிக்கும்
பாக்கியவான்கள் ஆகுவோம்.

Tamil Hymns

1596. நானும் என் வீட்டாரும் உம்மையே

நானும் என் வீட்டாரும்
உம்மையே நேசிப்போம்
உமக்காய் ஓடுவோம்
உந்தன் நாமம் சொல்லுவோம்

1. கைவிடா தெய்வமே கருணையின் சிகரமே
மெய்யான தீபமே என்வாழ்வின் பாக்கியமே

முழந்தாழ்படியிட்டு
முழுவதும் தருகிறேன் - நான்

2. எபிநேசர் எபிநேசர் இதுவரை உதவினீர்
யேகோவா ஈரே எல்லாம் பார்த்துக் கொள்வீர்;

3. எல்ஷடாய் எல்ஷடாய் எல்லாம் வல்லவரே
எல்ரோயீ எல்ரோயீ என்னைக் காண்பவரே

4. யேகோவாஷம்மா கூடவே இருக்கிறீர்
யேகோவா ஷாலோம் சமாதானம் தருகிறிர்

5. யேகோவா ரூவா என் நல்ல மேய்ப்பரே
யேகோவா ரஃப்பா சுகம்தரும் தெய்வமே

6. பரிசுத்தர் பரிசுத்தர் பரலோக ராஜாவே
எப்போதும் இருப்பவரே இனிமேல் வருபவரே

Tamil Hymns

1597. நானும் என் வீட்டாருமோவென்றால்

நானும் என் வீட்டாருமோவென்றால்
கர்த்தரையே சேவிப்போம்
நீயும் சேவிப்பாயா - நீயும் சேவிப்பாயா

1. கர்த்தரையே சேவிப்பது
ஆகாத தென்று கண்டால்
யாரை நீ சேவிப்பாய் யென்பதை
இன்றே தீர்மானம் செய்வாய்

2. அடிமையான நம்மையுமே
தேவாதி தேவன் மீட்டார்
மாபெரும் அடையாளங்கள் செய்திட்ட
கர்த்தரை சேவிப்பாயா

3. நம் பாதையில் காப்பாற்றியே
கர்த்தர் நடத்தினாரே
கர்த்தர் தந்த ஆசீர் யாவும் கண்டு
நன்றியாய் சேவிப்பாயா

4. நன்மையான ஈவுகளை
தேவாதி தேவன் தந்தார்
கீழ்படிந்தே அவர் சப்தம் கேட்டு
சாட்சியாய் ஜீவிப்பாயா

1598. நானே வழி நானே சத்தியம்

நானே வழி நானே சத்தியம்
நானே ஜீவன் மகனே(ளே) -உனக்கு
என்னாலன்றி உனக்கு விடுதலை இல்லை
என்னாலன்றி உனக்கு நிம்மதி இல்லை

1. நான் தருவேன் உனக்கு சமாதானம்
நான் தருவேன் உனக்கு சந்தோஷம்
கலங்காதே என் மகனே
கண்மணி போல் உன்னைக் காத்திடுவேன்

2. உனக்காக சிலுவையில் நான் மரித்தேன்
உனக்காக திருஇரத்தம் நான் சிந்தினேன்
என் மகனே வருவாயா
இதயத்தில் இடம் தருவாயா

3. உனக்காகவே நான் ஜீவிக்கின்றேன்
உன் உள்ளத்தில் வாழ துடிக்கின்றேன்
வருவாயா என் மகனே
இதயத்திலே இடம் தருவாயா

4. நீ நம்பும் மனிதர் கைவிடலாம்
ஆனால் நான் ஒருபோதும் கைவிடமாட்டேன்
கலங்காதே என் மகனே கண்மணிபோல
உன்னைக் காத்திடுவேன்

Tamil Hymns

1599. நான் அனாதை என்று அழுதேன்

நான் அனாதை என்று அழுதேன்
நீ அனாதையில்லை எந்தன்
சொந்தம் என்றீர் ஐயா
அனாதை என்று அழுதேன்

1. காணாமற் போன ஆடாய் அலைந்தேன்
கர்த்தாவே உந்தன் கண்கள் கண்டது
மார்போடு அணைத்தீர் மந்தையில் சேர்த்தீர்
மகிமை செலுத்திடுவேன்

2. கண்ணீரின் பள்ளத்தாக்கில் கிடந்தேன்
நான் கதறி முறையிட்டு அழுதேன்
கருத்தாய் விசாரித்தீர் கண்ணீரை மாற்றினீர்
மகிமை செலுத்திடுவேன்

3. மாராவின் தண்ணீர் போன்ற வாழ்க்கை
அது மதுரமாக மாறாதென்று மலைத்தேன்
மாராவின் தண்ணீரை மதுரமாய் மாற்றினீர்
மகிமை செலுத்திடுவேன்

Tamil Hymns

1600. நான் ஆராதிக்க வேறொரு

நான் ஆராதிக்க
வேறொரு தெய்வமில்லை
நான் உம்மையே
ஆராதிப்பேன் இயேசுவே

நான் ஆராதிக்கும் தெய்வம்
என்னை நேசிக்கும் தெய்வம்
நான் ஆராதிக்கும் தெய்வம்
என்னை விசாரிக்கும் தெய்வம்
நான் ஆராதிக்கும் தெய்வம்
என்னை வனைத்திடும் தெய்வம்
நான் ஆராதிக்கும் தெய்வம்
என்னை உயர்த்திடும் தெய்வம்

1. இயற்கையின் மேல் அதிகாரம் உள்ளவர்
இரையாதே என்று கட்டளை கொடுத்தவர்
காற்றையும் கடலையும் அடக்க வல்லவர்
கடினமானதென்று ஒன்றுமில்லாதவர்

நான் துதித்திட வேறொரு தெய்வமில்லை
நான் உம்மையே துதிக்கின்றேன் இயேசுவே

2. மனிதர்கள்மேல் மனதுருக்கும் கொண்டவர்
மரித்தோரை எழுப்பி அற்புதம் செய்தவர்
மாறாத அன்பினை தந்த மன்னவர்
மாந்தர்கள் பணிந்திட என்றும் தகுந்தவர்

நான் பணிந்திடவேறொரு தெய்வமில்லை
நான் உம்மையே பணிகின்றேன் இயேசுவே

3. ஊழியத்தில் அபிஷேகம் தந்தவர்
கிருபைகள் தந்து உயர்த்தி வைத்தவர்
பரிசுத்த வல்லமை பெருகச் செய்தவர்
ஆவியின் வரங்களால் இன்றும் நிறைப்பவர்

நான் உயர்த்திட வேறொரு தெய்வமில்லை
நான் உம்மையே உயர்த்துவேன் இயேசுவே

Tamil Hymns

1601. நான் ஆராதிக்கும் இயேசு நல்லவர்

நான் ஆராதிக்கும் இயேசு நல்லவர்
நம்பிடுவாய் நீ நம்பிடுவாய்

1. கலங்கிபோன நேரத்திலும்
கரம் பிடித்து நடத்துவார்
தம் சிரகாலே உன்னை மூடி
பாதுகாத்து நடத்துவார்

2. பொல்லாத வார்த்தைகள் வந்தனவோ
பொறுமையாக நீ சகித்தாயோ
இயேசுவின் அன்பு தேற்றிடுமே நீ
அவரின் மார்பில் சாய்ந்திடுவாய்

3. மனிதர் உன்னை வெறுத்தாலும்
மாராத இயேசு இருக்கிறார்
தனிமையான நேரத்திலும் உன்
தந்தையாய் வந்து தேற்றிடுவார்

Tamil Hymns

1602. நான் இயேசுவின் படையில் யுத்த

நான் இயேசுவின் படையில் யுத்த வீரன்
யாருக்கும் அஞ்சமாட்டேன்
இவ்வுலகமே எதிர்ப்பினும் சற்றும் பயமின்றி
துணிந்தே செயல்படுவேன்
உள்ளத்தில் நிறைந்த உன்னதர் இயேசுவை
ஓயாமல் பாடிடுவேன்
வாக்கும் ஞானமும் வல்லவர் தருவதால்
எதிர்ப்போரை வென்றிடுவேன்

1. எனக்கு பெலன்தரும் கிறிஸ்துவினாலே
எல்லாம் செய்திடுவேன் - என்
தேவனால் கூடாத காரியமில்லை
உத்தமர் துணை அவரே

இக்கல்லில் மோதுபவன்
அவன் நொறுங்கி போய் விடுவான்
இது எவன் மேல் விழுந்திடுமேர்
அவன் நசுங்கி அழிந்திடுவான்

2. அவர் தரும் பெலத்தால் சேனைக்குள் பாய்வேன்
அதனை முறியடிப்பேத்
தேவனால் பெரிய மதிலைத் தாண்டுவேன்
தீங்கென்னைத் தொடராதே

3. மான் கால்களாக என் கால்கள் மாற்றுவார்
உயர்ந்த ஸ்தலமளிப்பார்
யுத்தம் செய்ய என் கைகள் பழக்குவார்
வெற்றி எனதல்லவோ

4. இயேசு இரட்சகர் என் பக்கம் இருக்க
என்னை எதிர்ப்பவன் யார்
கிறிஸ்து என் ஜீவன் சாவு ஆதாயம்
என்றே கூறிடுவேன்

Tamil Hymns

1603. நான் இயேசுவின் பிள்ளை பயமே

நான் இயேசுவின் பிள்ளை
பயமே இல்லை எந்நாளும் சந்தோஷமே

1. தெரிந்து கொண்டார் தெரிந்து கொண்டார்
மகனாக மகளாக தெரிந்து கொண்டார்

2. கழுவப்பட்டேன் கழுவப்பட்டேன்
இயேசுவின் இரத்தத்தாலே கழுவப்பட்டேன்

3. வென்று விட்டேன் வென்று விட்டேன்
எதிரியின் தடைகளை வென்று விட்டேன்

4. நிரப்பப்பட்டேன் நிரப்பப்பட்டேன்
ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட்டேன்

5. சுகமானேன் சுகமானேன்
இயேசுவின் காயங்களால் சுகமானேன்

6. முறியடிப்பேன் முறியடிப்பேன்
எதிரான ஆயுதத்தை முறியடிப்பேன்

Tamil Hymns

1604. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்

1. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
இராப்பகலை ஒழுங்காய் கடக்கிறேன்
என்றும் நடக்கிறேன் பின் திரும்பேனே
இயேசு ரட்சகர் பின்னே

நடக்கிறேனே இரட்சகருடனே
கடக்கிறேனே கரம் பிடித்தே
விழிப்பாயிருந்து ஜெயங்காண்பேனே
ஒளியில் நடக்கிறேன்

2. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
வான் காரிருள் மூடினும் பயப்படேன்
சீயோன் கீதம் பாடிச் செல்வேனே
ஆயன் இயேசுவின் பின்னே

3. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
வான் ஆசீர்வாதங்கள் அடைகிறேன்
வீண் பாரங்களை விடுகிறேனே
என் இயேசுவின் பின்னே

4. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
மேய்ப்பன் அவர் சத்தம் அறிகிறேன்
நோய் வாய்ப்பட்டாலும் நடப்பேனே
தூயன் இயேசுவின் பின்னே

5. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
முன்னோடின அவரை நோக்குகிறேன்
என் சிலுவை எடுத்துச் செல்வேனே
என் இயேசுவின் பின்னே

Tamil Hymns

1605. நான் உம்மை உறுதியாக

நான் உம்மை உறுதியாக
என்றென்றும் பற்றிடுவேன்
சமாதானம் பூரணமாய்
அளித்து என்றும் நடத்திடுவீர்

1. என் ஆத்துமாவின் வாஞ்சை நீர்
என் ஆவி உம்மைத் தேடும்
உந்தனின் பாதையில்
செம்மையாய் நடத்துவீர்

2. என் வாசல்கள் திறந்திட
உம் தாசர் உள்ளே செல்வார்
சத்தியம் காத்திட
கர்த்தரே அருள் செய்வார்

3. உம் நியாயங்கள் நிறைவேறும்
உம் வேளைக்காக வந்தோம்
தேவனே இராஜனே
ஜெயமதைத் தந்திடுவீர்

4. என் கிரியைகள் அனைத்துமே
நீர் ஏற்று என்றும் காப்பீர்
நடத்தியே தாங்குவீர்
சமாதானம் அருளுவீர்

5. உம் கைகள் எமக்காய் ஓங்கிட
உம்வல்லமை விளங்கும்
உம்மையே சார்ந்துமே
உம் புகழ் சாற்றிடுவோம்

Tamil Hymns

1606. நான் உம்மை மறந்தாலும்

நான் உம்மை மறந்தாலும்
நீர் என்னை மறப்பதில்லை
என் நேசர் இயேசுவே
நீர் எனக்கு போதுமே

1. தாய் மறந்தாலும் நீர் மறப்பதில்லை
தந்தை வெறுத்தாலும்
நீர் என்னை விடுவதில்லை
உம் உள்ளங்கையிலே
என்னை வரைந்து வைத்தீரே
உம்மை என்றுமே நான் பாடி போற்றுவேன்

2. பாவ சேற்றினில் வீழ்ந்து கிடந்தேனே
தூக்கி எடுத்து உம் மார்பில் அணைத்தீரே
வேத வசனமே என் பாதைக்கு தீபமே
முடிவு பரியந்தம் வழி நடத்துமே

3. உலகம் வெறுக்கலாம் உதறித் தள்ளலாம்
உன்னதர் நிழலிலே
நான் சாய்ந்து உறங்குவேன்
உந்தன் கிருபையே எனக்கு போதுமே
என்னை என்றுமே நடத்திச் செல்லவே

Tamil Hymns

1607. நான் உம்மைப் பற்றி இரட்சகா

1. நான் உம்மைப் பற்றி இரட்சகா!
வீண் வெட்கம் அடையேன்
பேரன்பைக் குறித்தாண்டவா
நான் சாட்சி கூறுவேன்

சிலுவையண்டையில்
நம்பிவந்து நிற்கையில்
பாவப்பாரம் நீங்கி வாழ்வடைந்தேன்
எந்த நேரமும் என துள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்

2. ஆ! உந்தன் நல்ல நாமத்தை
நான் நம்பிச் சார்வதால்
நீர் கைவிடீர் இவ்வேழையைக்
காப்பீர் தேவாவியால்

3. மா வல்ல வாக்கின் உண்மையை
கண்டுணரச் செய்தீர்
நான் ஒப்புவித்த பொருளை
விடாமல் காக்கிறீர்

4. நீர் மாட்சியோடு வருவீர்
அப்போது களிப்பேன்
ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர்
மெய்ப் பாக்கியம் அடைவேன்

Tamil Hymns

1608. நான் உயிரோடிருக்கும் நாளெல்லாம்

நான் உயிரோடிருக்கும் நாளெல்லாம்
உம்மை புகழ்ந்து பாடுவேன்
நான் உள்ளளவும் என் தேவனை
கீர்த்தனம் பண்ணுவேன்

எனக்காய் மரித்த என் தேவன் நீரே
உந்தன் அன்பை விட்டு விலகி நான் எங்கே போவேன்
எந்தன் வாழ்நாளெல்லாம் உம்மை புகழ்ந்து பாடுவேன்
கடைசி மூச்சிலும் சொல்வேன் இயேசு நல்லவர் என்று

நல்லவர் நீர் மிகவும் நல்லவர் நீர்
நல்லவர் நீர் நன்மைகள் செய்பவர் நீர்

என்னை வாழவைக்க ஒப்புக் கொடுத்தீர் உம்மையே
வாதிக்க கொடுத்தீரே திருவுடலை எனக்காய்

உந்தன் அன்பு பெரியதே - (4)
ஈடு இணையற்றதே
உந்தன் கிருபை பெரியதே - (4)
கிருபையான இயேசுவே --- நல்லவர் நீர்

பாவத்தின் முழு உருவமாய் நீர் பாவமானீரே
பறிக்கபட்டீரே என்னை இணைத்திடவே --- உந்தன்

சாபமுள் முடியை உம் சிரசினில் சுமந்தீரே
சாபமாய் தொங்கினீரே என்னை ஆசீர்வதிக்கவே --- உந்தன்

Tamil Hymns

1609. நான் உனக்கு துணை நிற்கிறேன்

நான் உனக்கு துணை நிற்கிறேன்
என்றவரே ஸ்தோத்திரம்
வலக்கரம் பிடித்து துணையாய் நிற்பவரே
வல்ல தேவனே ஸ்தோத்திரம்

1. பாவத்தை ஜெயிக்க பரிசுத்தமாய் வாழ
துணை நிற்பவரே ஸ்தோத்திரம்
இரத்தத்தால் கழுவி ஆவியினால் நிரப்பி
அரவணைத்தவரே ஸ்தோத்திரம்

2. பாடுகள் ஜெயிக்க மகிழ்ச்சியாய் நான் வாழ
துணை நிற்பவரே ஸ்தோத்திரம்
வார்த்தையால் தேற்றி வல்லமையால் நிரப்பி
நடத்துபவரே என்றும் ஸ்தோத்திரம்

3. சாத்தானை ஜெயிக்க வெற்றியாய் என்றும் வாழ
துணை நிற்பவரே ஸ்தோத்திரம்
அன்பினால் அணைத்து அபிஷேகத்தால் நிரப்பி
ஆதரிப்பவரே என்றும் ஸ்தோத்திரம்

1610. நான் உனக்கு போதித்து

நான் உனக்கு போதித்து
நடக்கும் பாதையை
நாள்தோறும் காட்டுவேன் பயப்படாதே
உன்மேல் கண் வைத்து
ஆலோசனை சொல்லுவேன்
அறிவுரை நான் கூறுவேன் - உனக்கு

1. ஈசாக்கு விதை விதைத்து
நூறுமடங்கு அறுவடை செய்தான்
உன்னையும் ஆசீர்வதிப்பேன் - அதுபோல

2. ஏசேக்கு சித்னா இன்றோடு முடிந்தது மகனே(ளே)
ரெகோபோத் தொடங்கிவிட்டது -உனக்கு

3. தேசத்தில் பலுகும்படி
உனக்கு இடம் உண்டாக்கினேன்
ரெகோபோத் உனக்கு உண்டு - இதுமுதல்

4. கர்த்தர் நிச்சயமாய்
உன்னோடு இருக்கிறார் என்று
அநேகர் அறிந்து கொள்வார்கள்-இதுமுதல்
(அறிக்கை செய்வார்கள்)

5. கலங்காதே நான்
உன்னோடு இருக்கிறேன் மகனே
பலுகிப் பெருகிடுவார் - தேசத்தில்

6. உனக்கு எதிரானோர்
உன் சார்பில் வருவார்கள்
சமாதானம் செய்வார்கள்

Tamil Hymns

1611. நான் உன்னைவிட்டு விலகுவதில்லை

நான் உன்னைவிட்டு விலகுவதில்லை
நான் உன்னை என்றும் கைவிடுவதில்லை
நான் உன்னைக் காண்கின்ற தேவன்
கண்மணி போல் உன்னைக் காண்பேன்(2)

1. பயப்படாதே நீ மனமே – நான்
காத்திடுவேன் உன்னை தினமே
அற்புதங்கள் நான் செய்திடுவேன்
உன்னை அதிசயமாய் நான் நடத்திடுவேன்

2. திகையாதே கலங்காதே மனமே – நான்
உன்னுடனிருக்க பயமேன்
கண்ணீர் யாவையும் துடைத்திடுவேன்
கவலைகள் யாவையும் போக்கிடுவேன்

3. அனுதினம் என்னைத் தேடிடுவாய்-நான்
அளித்திடும் பெலனைப் பெற்றிடுவாய்
அத்திமரம் போல் செழித்திடுவாய் நான்
ஆசையாய் உண்ண கனி கொடுப்பாய்

4. நீதியின் வலக்கரத்தாலே உன்னை
தாங்குவேன் நான் அன்பினாலே
ஆவியில் உண்மையாய் ஜெபித்திடுவாய்
தினம் அல்லேலூயா என்றே ஆர்ப்பரிப்பாய்

1612. நான் எதற்காக பிடிக்கபட்டேனோ

நான் எதற்காக பிடிக்கபட்டேனோ
அதை பிடித்துக் கொள்ளும்படி
ஆசையாய் தொடருகிறேன் - நான்

பாடுகள் வந்தாலும் நஷ்டங்கள் வந்தாலும்
தொடர்ந்து ஓடுகிறேன் - நான்

1. பின்னானவை மறந்து
முன்னானவை நோக்கி
ஆசையாய் தொடருகிறேன்

2. நல்ல போராட்டம் போராடி
ஓட்டத்தை முடித்திடுவேன்
விசுவாசம் காத்துக் கொள்வேன்

3. நான் விசுவாசிக்கும் தேவன்
இன்னாரென்று அறிவேன்
ஆசையாய் தொடருகிறேன்

Tamil Hymns

1613. நான் என் நேசருடையவன் என் நேசர்

நான் என் நேசருடையவன்
என் நேசர் என்னுடையவர் (2)
சாரோனின் ரோஜா பள்ளத்தாக்கின் லீலி
இவரே என் நேசர் இவரே என் சிநேகிதர்
இவரே என் பிரியமானவர் (2)

1. பாவியான என்னையும்
அவர் தேடி வந்தாரே
மணவாளனும் என் தோழனும்
எனக்கெல்லாமானாரே -2
அவர் சேவை செய்வேன்
அவர்க்காகவே வாழ்வேன்-2

2. தனிமையான நேரத்தில்
என் துணையாய் வந்தாரே
பெலவீனமான நேரத்தில்
தம் கிருபை தந்தாரே
அவர் நாமம் உயர்த்துவேன்
அவர் சாட்சியாய் வாழ்வேன்

3. எனக்காகவே யாவையும்
அவர் செய்து முடித்தாரே
ஏற்ற நேரத்தில் என் தேவைகள்
யாவும் சந்தித்தார்
உயிருள்ள நாளெல்லாம்
அவர் நாமம் பாடுவேன்

4. என்னையும் அவருடன்
அழைத்துச் சென்றிட
மேகங்கள் மீதிலே வேகம் வருவாரே
அவரோடு வாழ்வேன்
நான் நித்ய நித்தியமாய்

Tamil Hymns

1614. நான் என்னைத் தந்தேனே இன்று

நான் என்னைத் தந்தேனே இன்று தந்தேனே
அன்பரின் சேவைக்கென்றே
அர்பணித்தேன் என்னை இன்றே
அன்பரின் சேவைக்கென்றே

1. ஆவி ஆத்மா சரீரம் எல்லாம் ஆண்டவர்
பாதத்தில் அர்ப்பணித்தேன்

2. என் பட்டங்கள் படிப்புகள் பதவி எல்லாம்
ஆண்டவர் பாதத்தில் அர்ப்பணித்தேன்

3. என் எண்ணங்கள் ஏக்கங்கள் நோக்கம்
எல்லாம் ஆண்டவர் ஆளுகை செய்திடுமே

1615. நான் ஒரு பாவி நான் ஒரு பாவி

நான் ஒரு பாவி நான் ஒரு பாவி
நான் செய்த பாவங்கள் பல்லாயிரம்
நான் ஒரு பாவி நான் ஒரு பாவி
நான் செய்த பாவத்துக்கு நான் காரணம்

1. பாவத்தில் பாவத்தில் நான் விழுந்து விட்டேன்
என்னை நான் என்னை நான் வெறுத்து விட்டேன்
உமது ஆலோசனை பாரம் என்றேன்
உம்மை நான் தள்ளிவிட்டு தூரம் சென்றேன்

2. சந்தர்பங்கள் என்றும் சூழ்நிலைகள் என்றும்
பாவம் செய்த பின்னாலே பழி சுமத்தி
தூண்டிவிட்டார் என்றும் மாற்றிவிட்டார் என்றும்
மற்றவரை எந்நாளும் குற்றப்படுத்தி
நான் செய்த பாவத்துக்கு நியாயங்கள் சொன்னேன்
இரட்சித்த தேவனிடம் காரணம் சொன்னேன்
குற்றங்கள் ஒப்புக்கொள்ளும் மனமுமில்லை
என்னில் நல்லதோர் குணமுமில்லை

3. எண்ணங்களுக்குள்ளே எக்கச்சக்க பாவம்
வேஷம்போட்டு திரிவதால் தெரிவதில்லை
சொல்லில் ஒரு வாழ்க்கை சொல்லாமல் ஓர் வாழ்க்கை
மற்றவர்கள் எந்தன் நிலை அறிவதில்லை
கட்டளை மீறுகின்றேன் அனுதினமும் - ஒரு
கல்லைப்போல் மாறினது எந்தன் மனமும்
என்னைப்போல் பாவி இந்த உலகில் உண்டா
எனக்கு மன்னிப்பு உண்டா

4. மன்னிக்கத்தானே மண்ணுக்கு வந்தேன்
மன்றாடும் உன்னை என் மகனாக்கினேன்
மன்னிக்கத்தானே மண்ணுக்கு வந்தேன்
மன்றாடும் உன்னை என் மகளாக்கினேன்

5. புதிய இதயத்தை கொடுத்திடுவேன்
பாவங்கள் நீங்க உன்னை கழுவிடுவேன்
எனது ஆவியினால் நிரப்பிடுவேன்
உன்னை நான் என்னோடு சேர்த்துக்கொள்வேன்

Tamil Hymns

1616. நான் ஒருபோதும் உன்னை

நான் ஒரு போதும்
உன்னை கைவிடுவதுமில்லை
என்றுறை செய்தேனன்றோ
கடல் ஆழத்திலும் அக்கினி சூளையிலும்
உன்னை காத்திடும் பெலவானன்றோ
விஷ சர்பங்களோ சிங்க கூட்டங்களோ
பயம் வேண்டாம் உன் அருகில் நான்

என்றுறை செய்தவரை ஆராதிப்போம்
ஆவியில் ஆராதனை - 2

1. ஆறுதல் தர ஒரு வார்த்தை இல்லை
என்ன வந்தாலும் பயமே இல்லை
மாறாத இயேசு உண்டெனக்கு
மனது ஒருபோதும் கலங்கவில்லையே
ஏழை எனக்கு அடைக்கலமே
அவர் புயலில் என் கன்மலையே

2. நிந்தைகள் உன்னை சூழ்கின்றதோ
தம் கரங்கள் என்றும் உயர்ந்திடுமே
நல் வசனத்தின் வல்லமையாய்
வல்லவரின் சமுகம் நிறைந்திடுமே
எலியாவின் தேவன் எங்கே
என்ற அற்புதம் நடந்திடுமே

1617. நான் சுகமானேன்

நான் சுகமானேன் நான் சுகமானேன்
புண்ணியரின் காயங்களால் - 2

ஆ... அல்லேலூயா (3) ஆனந்தமே
ஆ... அல்லேலூயா (3) ஆரோக்கியமே

1. பிள்ளையின் அப்பம் (2)
பிள்ளையான எனக்கல்லோ

2. என் நோய்கள் தீர்த்தார்
சாபமான சிலுவையில்

3. நான் ஏன் சுமப்பேன்
எந்தன் இயேசு சுமந்த பின்

4. யேகோவா தேவன்
எந்தன் நல்ல பரிகாரி

5. பரிபூரண ஜீவன்
பரனீந்த ஜீவனிது

6. இயேசுவின் இரத்தம்
பிணி போக்கும் நல் மருந்து

7. பலவீனன் அல்ல
பலவான் நான் தேவன் சொன்னார்

8. ஆயத்தமானேன்
இயேசு ராஜன் வருகைக்கு

1618. நான் நடந்து வந்த பாதைகள்

நான் நடந்து வந்த பாதைகள் கரடு மேடுகள்
நான் கடந்து வந்த பாதைகள் முட்கள் வேலிகள்

நடக்க முடியல டாடி நடக்க முடியல - என்னை
தாங்கிக் கொள்ளுங்க
கரத்தில் ஏந்திக் கொள்ளுங்க

1. என் சுய பெலத்தால்
ஓடிப் பார்த்தேன் ஓட முடியல
என் மன பெலத்தால் நடந்து
பார்த்தேன் நடக்க முடியல
என் தோள் பெலத்தால் சுமந்து
பார்த்தேன் சுமக்க முடியல
என் கால் பெலத்தால் கடந்து
பார்த்தேன் கடக்க முடியல

2. என் ஆள் பெலத்தால் ஆளப்
பார்த்தேன் ஆள முடியல
என் பண பெலத்தால் படைக்கப்
பார்த்தேன் படைக்க முடியல
என் சொல் பலத்தால் சாதிக்கப்
பார்த்தேன் ஒன்றும் முடியல
என் வாய் பெலத்தால் வாழ
பார்த்தேன் வாழ முடியல

Tamil Hymns

1619. நான் நானாகவே வந்திருக்கிறேன்

நான் நானாகவே வந்திருக்கிறேன்
உம் பிரசன்னத்தில் வந்து நிற்கிறேன்
நீர் இன்று என்னை ஏற்றுக் கொள்வீரா
உம் ராஜ்ஜியத்தில் சேர்த்துக் கொள்வீரா

1. யோசேப்பை போல் நான்
ஒழுங்கில்லையே - நோவாவைப்
போல் நீதிமானும் இல்லையே
ஆப்ரகாமைப் போல் விசுவாசியில்லையே
தானியேலைப் போல்
உம்மை வேண்டவில்லையே
நான் நானாக நானாக வந்திருக்கிறேன்

2. மார்த்தாளைப் போல் உம்மை
சேவிக்கலையே - மரியாளைப்
போல் உம்மை நேசிக்கலையே
எஸ்தரை போல் எதையும்
செய்யவில்லையே
எலிசபெத்தின் நற்குணங்கள்
என்னில் இல்லையே
நான் வீணாகி பாழாகி வந்திருக்கிறேன்

Tamil Hymns

1620. நான் நிற்பதும் நிர்முலமாகாததும்

நான் நிற்பதும் நிர்முலமாகாததும்
தேவ கிருபையே
நான் உயிருடன் வாழ்வதும்
சுகமுடன் இருப்பதும் கிருபையே

கிருபையே தேவ கிருபையே
தேவ கிருபையே தேவ கிருபையே

1. காலையில் எழுவதும்
கர்த்தரை துதிப்பதும்
மாலையில் காப்புடன் இல்லம்
வருவதும் கிருபையே
போக்கிலும் வரத்திலும்
தொலைதூர பயணத்திலும்
பாதம் கல்லிலே இடறாமல்
காப்பதும் கிருபையே

2. அக்கினி நடுவினிலே என்னை
எரித்திட நேர்ந்தாலும்
தூதனாக நின்று என்னை
காப்பதும் கிருபையே ஆழியின் நடுவிலும்
சீறிடும் புயலினிலும்
நீர்மேல் நடந்து வந்து
என்னைக் காப்பதும் கிருபையே

3. கண்ணீர் கவலைகளில்
கஷ்ட நஷ்டங்களில் துஷ்டனின் கைக்கு
விலக்கி காப்பதும் கிருபையே
ஆற்றித் தேற்றியே அரவணைத்திடும்
மாபெரும் கிருபையே
எங்கள் தேவ கிருபையே

Tamil Hymns

1621. நான் நினைப்பதற்கும் வேண்டுவதற்கும்

நான் நினைப்பதற்கும் வேண்டுவதற்கும்
மிகவும் அதிகமாய்
கிரியை செய்திட வல்லவரே
உமக்கே மகிமை

1. அன்னாள் கேட்டாள் ஒரு ஆண் குழந்தை
ஆறு பிள்ளைகள் தேவன் கொடுத்தீர்
மகன் சாமுவேல் தீர்க்கதரிசியானார் - நான்

2. ஞானம் கேட்டார் சாலமோன் ராஜா
செல்வமும் புகழும் சேர்த்துக் கொடுத்தீர்
மிகவும் உயர்த்தினீர் நிகரில்லா அரசனாய்

3. வாலிபன் சிறையிலே ஏங்கினார் விடுதலை
வந்தது உயர்வு ஆளுநர் பதவி
எகிப்து முழுவதும் ஆட்சி செய்தாரே

4. கூலிக்காரனாய் உணவு தேடி வந்தான்
வீட்டுப்பிள்ளையாய் ஏற்றுக் கொண்டீரே
ஓடி அணைத்துப் பாடி மகிழ்ந்தீர்

Tamil Hymns

1622. நான் நேசிக்கும் தேவன் இயேசு

நான் நேசிக்கும் தேவன்
இயேசு என்றும் ஜீவிக்கிறார்
அவர் நேற்றும் இன்றும் நாளை
என்றும் மாறாதவர் (2)

நான் பாடி மகிழ்ந்திடுவேன் என்
இயேசுவைத் துதித்திடுவேன்
என் ஜீவிய காலமெல்லாம் அவர்
பாதத்தில் அமர்ந்திருப்பேன் (2)

1. கடலாம் துன்பத்தில் தவிக்கும்
வேளையில்
படகாய் வந்திடுவார்
இருள்தனிலே பகலவனாய்
இயேசுவே ஒளி தருவார்

2. பாவ நோயாலே வாடும் நேரத்தில்
மருத்துவராகிடுவார்
மயங்கி விழும் பசிதனிலே
மன்னாவைத் தந்திடுவார் (2)

3. தூற்றும் மாந்தரின் நடுவில் எந்தனைத்
தேற்றிட வந்திடுவார்
கால் தளர ஊன்று கோலாய்
காத்திட வந்திடுவார் (2)

4. நேசர் என்னோடு துணையாய் ஜீவிக்க
நான் இனிக் கலங்கிடேனே
எந்தனுக்குக் காவல் அவர்
நான் உடல் அவர் உயிரே (2)

1623. நான் பயப்படும் நாளினிலே கர்த்தரை

நான் பயப்படும் நாளினிலே
கர்த்தரை நம்பிடுவேன்
என் கோட்டையும் அரணுமாயிருக்க
நான் அடைக்கலம் புகுந்திடுவேன்

1. உங்களில் இருப்பவர் பெரியவரே
பரிசுத்தமானவரே
அவர் காத்திடுவார் என்றும் நடத்திடுவார்
நித்திய காலமெல்லாம் நம்மையே

2. நம்மைக் காப்பவர் அயர்வதில்லை
உறங்குவதும் இல்லை
அவர் ஆலயத்தில் நான் அபயமிட்டேன்
என் கூப்பிடுதல் அவர் செவியினிலே

Tamil Hymns

1624. நான் பாட வருவீர் ஐயா

நான் பாட வருவீர் ஐயா
நான் போற்ற மகிழ்வீர் ஐயா
என் வாழ்விலே வந்தீர் ஐயா
புது வாழ்வு தந்தீர் ஐயா

1. தாய் தன் பாலனை மறந்தாலும்
நான் உன்னை மறவேன் என்றவரே
உள்ளங்கையில் என்னை வரைந்தீரே -2
எந்தன் மதில்கள் உமக்கு முன்னே

2. இமைப் பொழுதும் என்னை மறந்தாலும்
இரக்கத்தாலே என்னை சேர்த்து கொள்வீர்
உந்தன் அன்பை நான் மறப்பேனோ -2
ஜீவ நாளெல்லாம் பாடிடுவேன்

3. மலைகள் பர்வதங்கள் விலகினாலும்
உம் கிருபை என்னை விட்டு விலகாது
நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் -2
உந்தன் வாக்குகள் மாறாதது

Tamil Hymns

1625. நான் பாடும் கானங்களால்

நான் பாடும் கானங்களால்
நான் பாடும் கானங்களால்
என் இயேசுவைப் புகழ்வேன்
எந்தன் ஜீவிய காலம் வரை
அவர் மாறாத சந்தோஷமே

1. பாவ ரோகங்கள் மாற்றியே
எந்தன் கண்ணீரைத் துடைப்பவரே
உலகம் வெறுத்தென்னைத் தள்ள
பாவியம் என்னை மீட்டெடுத்தீர்

2. இளமைப் பிராய வீழ்ச்சிகள் இல்லை
யாதொரு பயமுமில்லை
அவர் ஸ்நேக தீபத்தின் வழியில்
தம் கரங்களால் தாங்கிடுவார்

3. நல்ல போராட்டம் போராடி
எந்தன் ஓட்டத்தை முடித்திடுவேன்
விலையேறிய திருவசனம்
எந்தன் பாதைக்குத் தீபமாகும்

Tamil Hymns

1626. நான் பாடி மகிழும் நேரம்

நான் பாடி மகிழும் நேரம்
ஆராதனை நேரம்
நான் பலி செலுத்தும்
நேரம் ஆராதனை நேரம்

இது ஆராதனை நேரம்
துதி ஆராதனை நேரம்

1. முழு உள்ளத்தோடு அன்புக்கூரும் நேரம்
ஆராதனை நேரம்
முழு பெலத்தோடு கூப்பிடும் நேரம்
ஆராதனை நேரம்

2. நம் சரீரத்தை ஜீவபலியாக கொடுக்கும்
ஆராதனை நேரம்
நல் கனிகள் கொடுத்து துதிக்கின்ற நேரம்
ஆராதனை நேரம்

3. நம் உடமையை கொடுத்து
மகிழ்கின்ற நேரம் ஆராதனை நேரம்
நாம் ஒருமனதோடு கூடிடும் நேரம்
ஆராதனை நேரம்

Tamil Hymns

1627. நான் பாவச் சேற்றினிலே

1. நான் பாவச் சேற்றினிலே வாழ்ந்தேன்
நான் சாபத்திலே மாண்டேன்
எண்ணிலடங்கா பாவங்கள் போக்கி
ஏசென்னை மீட்டாரே

என் நாவிலே புதுப் பாட்டுகள்
என்றென்றும் கவி தங்கிடும்
மா சந்தோஷம் மறு பிறப்பித்து
மன இருள் நீக்கினார்

2. என் ஆத்துமா மீட்பை அருமையாய்
இயேசாண்டவர் எண்ணினதால்
சொந்தம் தம் ஜீவனாம் இரத்தம் எனக்காய்ச்
சிந்தி இரட்சித்தாரே

3. கார்மேகம் போல் என்பாவங்கள்
கர்த்தர் அகற்றினாரே
மூழ்கியே தள்ளும் சமுத்திர ஆழம்
தூக்கி எறிந்தாரே

4. என் ஜென்ம கரும பாவங்கள்
எல்லாம் தொலைத்தாரே
மன்னித்து என்றும் மறந்து விட்டாரே
மா பரமானந்தம்

5. இரத்தாம்பரம் போல் சிவப்பான
இதய பாவங்களை
பஞ்சையும் போலவே வெண்மையுமாக்கி
தஞ்சம் எனக்கீந்தார்

6. மேற்குத் திசைக்கும் கிழக்குக்கும்
மா எண்ணிலா தூரம்
எந்தன் பாவங்கள் அத்தனை தூரம்
இயேசு விலக்கினார்

7. நான் ஜலத்தினால் நல் ஆவியினால்
நான் மறுபடியும் பிறந்தேன்
தேவனின் இராஜ்யம் சேர்வதற்காக
தேடிக் கொண்டேன் பாக்கியம்

Tamil Hymns

அங்கேயும் சீயோன் மலை மீதே
ஆனந்தக் கீதங்கள்
ஆயிரம் ஆயிரம் தூதர்கள் சூழ
அன்பரைப் பாடிடுவேன்

Tamil Hymns

1628. நான் பாவிதான் ஆனாலும் நீர்

1. நான் பாவிதான் - ஆனாலும் நீர்
மாசற்ற இரத்தம் சிந்தினீர்
வா என்று என்னை அழைத்தீர்
என் மீட்பரே வந்தேன் - வந்தேன்

2. நான் பாவிதான் - என் நெஞ்சிலே
கறைபிடித்துக் கெட்டேனே
என் கறை நீங்க இப்போதே
என் மீட்பரே வந்தேன்

3. நான் பாவி தான் பயத்தால்
திகைத்து பாவபாரத்தால்
அமிழ்ந்து மாண்டு போவதால்
என் மீட்பரே வந்தேன்

4. நான் பாவிதான் மெய்யாயினும்
சீர் நேர்மை செல்வம் மோட்சமும்
அடைவதற்கு உம்மிடம்
என் மீட்பரே வந்தேன்

5. நான் பாவிதான் இரங்குவீர்
அணைத்து காத்து இரட்சிப்பீர்
அருளாம் செல்வம் அளிப்பீர்
என் மீட்பரே வந்தேன்

6. நான் பாவிதான் அன்பாக நீர்
நீங்கா தடைகள் நீக்கினீர்
உமக்கு சொந்தம் ஆக்கினீர்
என் மீட்பரே வந்தேன்

Tamil Hymns

1629. நான் பிரமித்து நின்று பேரன்பின்

1. நான் பிரம்மித்து நின்று பேரன்பின்
பிரவாகத்தை நோக்கிப் பார்த்தேன்
என் உள்ளத்தில் மெய்ச் சமாதானம்
சம்பூரணமாய் அடைந்தேன்

மா தூய உதிரத்தால்
என் பாவம் நீங்கக் கண்டேன்
இயேசையரின் இரட்சிப்பினால்
நான் ஆறுதல் கண்டடைந்தேன்

2. முன்னாளில் இவ்வாறுதல் காண
ஓயாமல் பிரயாசப்பட்டேன்
வீண் முயற்சி நீங்கின போதோ
என் மீட்பரால் அருள் பெற்றேன்

3. தம் கரத்தை என் மீதில் வைத்து
நீ சொஸ்தமாவாய் என்றனர்
நான் அவரின் வஸ்திரம் தொட
ஆரோக்கியம் அருளினார்

4. எந்நேரமும் புண்ணிய நாதர்
என் பக்கத்தில் விளங்குவார்
தம் முகத்தின் அருள் பிரகாசம்
என் பேரிலே வீசச் செய்வார்

1630. நான் மன்னிப்படைய நீர் தண்டிக்கப்பட்டீர்

நான் மன்னிப்படைய நீர் தண்டிக்கப்பட்டீர்
மீட்படைய நொறுக்கப்பட்டீர்
நீதிமானாக்க பலியானீர்
நித்திய ஜீவன் தந்தீர்

அன்பே, பேரன்பே அன்பே, பேரன்பே

1. காயப்பட்டீர் நான் சுகமாக
என் நோய்கள் நீங்கியதே
சுமந்து கொண்டீர் என் பாடுகள்
சுகமானேன் தழும்புகளால்

இம்மானுவேல் இயேசு ராஜா
இவ்வளவாய் அன்புகூர்ந்தீர்

2. சாபமானீர் என் சாபம் நீங்க
மீட்டீரே சாபத்தினின்று
ஆபிரக்காமின் ஆசிர்வாதங்கள்
பெற்றுக்கொண்டேன் சிலுவையினால்

3. ஏழ்மையானீர் சிலுவையிலே
செல்வந்தனாய் நான் வாழ
பிதா என்னை ஏற்றுக்கொள்ள
புறக்கணிக்கப்பட்டீரையா

4. மகிமையிலே நான் பங்கு பெற
அவமானம் அடைந்தீரையா
ஜீவன் பெற சாவை அடைந்தீரையா
முடிவில்லா வாழ்வு தந்தீர்

Tamil Hymns

1631. நான் வித்தியாசமானவன்

நான் வித்தியாசமானவன் -2
இயேசு என்னை இரட்சித்தார்
ஓ...ஓ....ஓ....ஓ...
என் பாவங்கள் எல்லாம் மன்னித்தார்
ஓ...ஓ.....ஓ......ஓ.....
இனி வாழ்வது நானல்ல
இயேசு எனக்குள் வாழ்கிறார்

1. ஜெபம் பண்ணாமல் இருக்க முடியாது
வேதம் வாசிக்காமல் இருக்க முடியாது
பாவம் செய்ய முடியாது
பொய் பேச முடியாது

2. இயேசுவை சொல்லாமல் இருக்க முடியாது
ஊழியம் செய்யாமல் இருக்க முடியாது
எனக்காக வாழ முடியாது
சும்மா இருக்கவும் முடியாது

3. பரிசுத்தமாய் நான் வாழ்ந்திடுவேன்
இயேசுவை உலகிற்கு காட்டிடுவேன்
இயேசுவுக்காக வாழ்ந்திடுவேன்
இயேசுவை உயர்த்தி பாடிடுவேன்

Tamil Hymns

1632. நிகரே இல்லாத சர்வேசா

நிகரே இல்லாத சர்வேசா
திகழும் ஒளி பிரகாசா
துதிபாடிட இயேசு நாதா
பதினாயிரம் நாவுகள் போதா

1. துங்கன் ஏசு மெய் பரிசுத்தரே
எங்கள் தேவனைத் தரிசிக்கவே
துதிகளுடன் கவிகளுடன்
தூய தூயனை நெருங்கிடுவோம்

2. கல்லும் மண்ணும் எம் கடவுளல்ல
கையின் சித்திரம் தெய்வமல்ல
ஆவியோடும் உண்மையோடும்
ஆதி தேவனை வணங்கிடுவோம்

3. பொன் பொருள்களும் அழிந்திடுமே
மண்ணும் மாயையும் மறைந்திடுமே
இதினும் விலை பெரும் பொருளே
இயேசு ஆண்டவர் திருவருளே

4. தேவ மைந்தனாய் அவதரித்தார்
பாவ சோதனை மடங்கடித்தார்
மனிதனுக்காய் உயிர் கொடுத்தார்
மாளும் மாந்தரை மீட்டெடுத்தார்

5. கொந்தளிக்கும் அலைகளையும்
கால் மிதிக்கும் கர்த்தரவர்
அடங்கிடுமே அதற்றிடவே
அக்கரை நாமும் சேர்ந்திடவே

6. ஜீவன் தந்தவர் மரித்தெழுந்தார்
ஜீவ தேவனே உயிர்த்தெழுந்தார்
மறுபடியும் வருவேனென்றார்
மாசந்தோஷ நாள் நெருங்கிடுதே

1633. நிச்சயமாகவே முடிவு உண்டு

நிச்சயமாகவே முடிவு உண்டு
நம்பிக்கை வீண் போகாது

1. கர்த்தரையே பற்றிக் கொள்
திருவசனம் கற்றுக் கொள்
அவரே பாதை காட்டுவார்
அதிலே நீ நடந்திடு
சோர்ந்து போகாதே
தளர்ந்து விட்டுவிடாதே
துணிந்து நீ ஒடு
துதித்து தினம் பாடு

2. ஏரிச்சலை விட்டுவிடு
பொறமை கொள்ளாதே
அன்பு உன் ஆடையாகணும்
வம்புகள் மறைந்து போகணும்

3. நாவு நல்லதையே
நாள்தோறும் பேசினால்
கர்த்தரின் திரு இருதயம்
களிகூருமே உன்னாலே

Tamil Hymns

1634. நிமிஷங்கள் வாழ்க்கையின் நிமிஷங்கள்

நிமிஷங்கள் (2) வாழ்க்கையின் நிமிஷங்கள்
ஒவ்வொன்றாய் ஓடி மறைந்துவிடும்
கனவுகள் ஆயிரம் மனதார கண்டு நீ
நினைவுகள் ஆகியே மறைந்திடுமே
………. நிமிஷங்கள்

துளிதுளி சாரலும் பெரு வெள்ளமாகும்
தனிதனியாகவே சேர்ந்துவிடும்
இளைப்பாறும் நாட்களும் விரைவாக வந்திடும்
கரைசேரும் முன்னே நினைத்திடுவாய்
………. நிமிஷங்கள்

இருளினில் ஒளிகாட்டும் பெருவாழ்வு ஈட்டும்
மறுமையில் உன்னையும் சேர்த்துவிடும்
இனிதான நேசரை கரம் கூப்பி சாற்றுவாய்
கனிவாக உன்னையே அழைக்கிறாரே
………. நிமிஷங்கள்

Tamil Hymns

1635. நித்தம் நித்தம் உம்மை நான்

நித்தம் நித்தம் உம்மை நான்
நினைத்து நினைத்துப் பார்க்கிறேன்
நீர் செய்த நன்மை எண்ணி
ஓயாமல் துதிக்கிறேன்

நன்றி நன்றி (2)

1. தாயைப் போல தேற்றி என்னை
அரவணைத்து மகிழ்கிறீர்
தந்தையைப் போல தோள்களிலே
அனுதினமும் சுமக்கிறீர்

2. கடந்து வந்த பாதைகளை
நினைத்து நினைத்து பார்க்கிறேன்
கண்ணீரோடு நன்றி சொல்லி
ஓயாமல் துதிக்கிறேன்

3. தாயின் கருவில் தோன்றும் முன்னே
முன் குறித்த தெய்வமே
நினைப்பதற்கும் மேலாய் என்னை
ஆசீர்வதித்த தெய்வமே

Tamil Hymns

1636. நித்தம் முயல் மனமே

நித்தம் முயல் மனமே! பரி
சுத்த ஜீவியத்தில் மெத்த வளர நீ

1. அத்தன் யேசுவினில் பத்தியாய் அமர்ந்து
சத்திய் வேதத்தால் நித்தம் உன்னைப் போஷி! -நித்

2. அல்பகல் யேசுவோ டதிக நேரத்தை
ஆசையாய்க் கழி நீ, அவரைப் போலாவாய், - நித்

3. தேவன்றன் பிள்ளைகள் யாவரையும் நேசி!
ஆவலாய் எளியோர்க் கன்பாலுதவி செய்,-நித்

4. யேசுவே உன்றனை என்றும் நடத்துவார்
இன்ப துன்பத்திலும் அன்பாய் நீ பின் செல்லு, - நித்

5. எந்த எண்ணத்தையும் இயேசுவின் கீழ் ஆக்கி
உன்றன் உள்ளத்தில் அமர்ந்திரு சாந்தமாய், - நித்

6. மேவும் அன்பினுக்குள் தேவாவி நடத்த
மேலான வாழ்வுக்கு தக்கவனாகுவாய், - நித்

Tamil Hymns

1637. நித்திய இராஜா நிர்மல நாதா

நித்திய இராஜா நிர்மல நாதா
நின் பாதம் பணிந்தேன் இக்காலையிலே
நின் பாதம் பணிந்தேன் இவ்வேளையிலே

என் மன ராஜ்யத்தில்
என்றும் அரசாளுகின்ற
ராஜாதி ராஜாவுக்கே ஸ்தோத்திரம்
இயேசு மகா ராஜாவுக்கே ஸ்தோத்திரம்

1. கண்ணயர்ந்த வேளையிலும்
கணிமைப்போல் காத்தவரே
கற்பகமே உமக்கு ஸ்தோத்திரம்
கண் விழித்த வேளையிலும்
கண் மேல் உம் கண் வைத்து
கருத்தாய் போதித்தவாய் ஸ்தோத்திரம்

2. இப்பகல் வேளையிலும்
எப்பக்கம் சூழ்ந்து நிற்கும்
இம்மானுவேலனே ஸ்தோத்திரம்
உம்முடனே நான் இணைய
என்னுடனே நீர் பிணைய
வாழ்ந்திடும் வாழ்வுக்காய் ஸ்தோத்திரம்

Tamil Hymns

1638. நித்திய நித்தியமாய் உம் நேம்

1. நித்திய நித்தியமாய்
உம் நேம் நிலைத்திருக்கும்
தலைமுறை தலைமுறைக்கும்
உம் பேம் பேசப்படும்

நித்தியமே என் சத்தியமே
நிரந்தரம் நீர்தானையா

1. யாக்கோபை உமக்கென்று தெரிந்தெடுத்தீரே
இஸ்ரவேலை பிரித்தெடுத்து துதிக்கச் செய்தீர்

வல்லவர் நீர்தானே
நல்லவர் நீர்தானே
நான் பாடும் பாடல் நீர்தானே
தினம் தேடும் தேடல் நீர்தானே - நித்தியமே

2. வானத்திலும் பூமியிலும் உம் விருப்பம் செய்கின்றீர்
மேகங்கள் எழச்செய்து மழை பொழிகின்றீர்

பெரியவர் நீர்தானே -என்
பிரியமும் நீர்தானே - நான் பாடும்

3. வார்த்தையினால் வானங்கள் தோன்றச் செய்தீரே -உம்
சுவாசத்தினால் விண்மீன்கள் மிளிரச் செய்தீரே

சகலமும் படைத்தவரே
சர்வ வல்லவரே -நான் பாடும்

4. வருடத்தை நன்மையினால் முடிசூட்டுகிறீர்
பாதையெல்லாம் நெய்யாகப் பொழியச் செய்கின்றீர்

காண்பவர் நீர் தானே
தினம் காப்பவர் நீர்தானே - நான் பாடும்

5. மண்ணுலகை விசாரித்து மகிழச் செய்கின்றீர்
தானியங்கள் விளையச் செய்ய தண்ணீர் பாய்ச்சுகிறீர்

மீட்பர் நீர்தானே என்
மேய்ப்பர் நீர்தானே - நான் பாடும்

Tamil Hymns

1639. நிரப்புங்கப்பா நிரப்புங்கப்பா என்

நிரப்புங்கப்பா நிரப்புங்கப்பா - என்
பாத்திரத்தை தண்ணீரால் நிரப்புங்கப்பா
நிரப்புங்கப்பா நிரப்புங்கப்பா - உம்
பரிசுத்த ஆவியால் நிரப்புங்கப்பா

1. இரவெல்லாம் கண்விழித்து ஜெபிக்கணும்
எதை நினைத்தும் கலங்காம துதிக்கணும்

2. ஆறாக பெருக்கெடுத்து ஓடணும்
ஆயிரங்கள் உம்மண்டை நடத்தணும்

3. தூய வாழ்வு தினம் வாழணும்
தாய்நாடு உம்பாதம் திரும்பணும்-என்

4. அப்பா உம் ஏக்கங்கள் அறியணும்
தப்பாமல் உம் வழியில் நடக்கணும்

5. பாவங்கள் சாபங்கள் நீக்கணும்
பரிசுத்த வாழ்க்கை இன்று வாழணும்

1640. நிரப்பும் என்னைத் துதியால்

1. நிரப்பும் என்னைத் துதியால்
முற்றாகக் கர்த்தரே
என் தேகம் மனம் ஆன்மாவும்
உம்மையே கூறவே

2. துதிக்கும் நாவும் உள்ளமும்
போதாதென் ஸ்வாமியே
என் வாழ்க்கை முற்றும் யாவுமாய்
துதியதாகவே.

3. சாமானிய சம்பவங்களும்
என் போக்கும் வரத்தும்
மா அற்ப செய்கை வேலையும்
துதியதாகவும்.

4. நிரப்பும் என்னை முற்றுமாய்
சமூலம் போற்றவும்
உம்மை உம் அன்பை ஏழையேன்
துதித்திடச் செய்யும்.

5. பெறுவீரே நீர் மகிமை
என்னாலும் என்னிலும்
இம்மையிலே துடங்குவேன்
சதா விண் பாடலும்.

6. கவலை கோபம் பயமும்
கீதமாய் மாறிடும்
என் ஜீவ பாதை யாவிலும்
கீதம் தொனித்திடும்.

7. இராப் பகல் விநாடியும்
விளங்கும் தூய்மையாய்
என் வாழ்க்கை முற்றும் சேர்ந்திடும்
உம்மோடு ஐக்கியமாய்.

1641. நிர்ப்பந்தமான பாவியாய்

1. நிர்ப்பந்தமான பாவியாய்
நான் இங்கே தேவரீருக்கே
முன்பாக மா கலக்கமாய்
நடுங்கி வந்தேன், கர்த்தரே;
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

2. ஆ! என் குரூர பாவத்தால்
மிகுந்த துக்கம் அடைந்தேன்;
ஆ ஸ்வாமீ, துயரத்தினால்
நிறைந்த ஏழை அடியேன்,
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

3. என் குற்றத்துக்குத் தக்கதாய்
செய்யாமல் தயவாய் இரும்;
பிதாவே, என்னைப் பிள்ளையாய்
இரங்கி நோக்கியருளும்;
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

4. என் நெஞ்சின் திகில் தணித்து,
என்மேல் இரங்கி ரட்சியும்;
திவ்விய சந்தோஷம் அளித்து
எப்போதும் கூடவே இரும்;
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

Tamil Hymns

1642. நிலையானவர் மறவாதவர் வார்த்தை

நிலையானவர் மறவாதவர்
வார்த்தை என்றும் மாறாதவர்
உலகங்களெல்லாம் வெறுக்கும் போது
என்னை ஒருபோதும் வெறுக்காதவர்

1. உலக அன்பு பொய் தான் ஐயா
உந்தன் அன்பொன்றே மெய் ஐயா
முள்ளுக்குள் மலரும் நீர்தான் ஐயா
எந்தன் துணை என்றும் நீர்தான் ஐயா

2. கோபத்தால் அல்ல அன்பினால் அணைத்தீர்
தாயைப்போல் தேற்றினீர்
பணத்தால் என்னை மீட்கவில்லை
உயிர் கொடுத்து என்னை மீட்டீர் ஐயா

Tamil Hymns

1643. நிலையில்லா உலகம் இது

நிலையில்லா உலகம் இது நினைவினில் எழுதி விடு
நிலையான நகரம் உண்டு நித்திய சந்தோஷம் நமக்கு உண்டு
நீயும் சிந்திப்பாயா? நீயும் சிந்திப்பாயா?
இயேசுவை சந்திப்பாயா?

1. மலரை போன்ற மனித வாழ்வு உலர்ந்து வாடிடுமே
மனதில் தோன்றும் வழியினில் சென்று
வேதனை அடையாதே
பாவத்தின் சம்பளம் மரணம் என்று நீ அறியாமல் வாழுவதேன்
பரிசுத்த தேவனின் கரங்களில் வந்தால் பாக்கியம் நிச்சயமே
நீயும் சிந்திப்பாயா? நீயும் சிந்திப்பாயா?
இயேசுவை சந்திப்பாயா?

2. நிழலை போன்ற உலகின் வாழ்வு கடந்து போய் விடுமே
நிஜங்கள் என்ன என்பதை அறிந்து வாழ்ந்திட அவசியமே
வல்லவர் இயேசுவின் வருகை ஒரு நாள்
விரைவினில் வந்திடுமே
மனதினில் அவரை ஏற்றவர் மட்டும் மறுரூபம் அடைவாரே
நீயும் சிந்திப்பாயா? நீயும் சிந்திப்பாயா?
இயேசுவை சந்திப்பாயா?

Tamil Hymns

1644. நிலையில்லா உலகு நிஜமில்லா உறவு

நிலையில்லா உலகு நிஜமில்லா உறவு
நிலையானதொன்றும் இங்கில்லை
நேற்றும் இன்றும் என்றும் மாறாத தெய்வம்
நீ மட்டும் போதும் எப்போதும்
நீ மட்டும் போதும் நீ மட்டும் போதும்
நீ மட்டும் போதும் எப்போதும்

1. ஆசையிலே பிறந்து ஆணவத்தில் தொடர்ந்து
ஆடி இங்கு அடங்குது வாழ்க்கை
வாழ்வுதரும் வார்த்தை வாழ்க்கைதனை வளர்த்தால்
வசந்தம் வந்து நம்மில் என்றும் தங்கும்
நீ மட்டும் போதும் என் வாழ்வு மாறும்
நீ மட்டும் போதும் எப்போதும் --- நிலையில்லா

2. பொய்மையிலே விழுந்து போலியாக நடந்து
பொழுதிங்கு போகுது கழிந்து
உண்மைதனை உணர்ந்து உறுதியுடன் எழுந்தால்
ஊதியங்கள் தேவையில்லை நமக்கு
நீ மட்டும் போதும் என் வாழ்வு மாறும்
நீ மட்டும் போதும் எப்போதும் --- நிலையில்லா

Tamil Hymns

1645. நிறைவான ஆவியானவரே

1. நிறைவான ஆவியானவரே
நீர் வரும்போது குறைவுகள் மாறுமே

நீர் வந்தால் சூழ்நிலை மாறுமே
முடியாததும் சாத்தியமாகுமே
நிறைவே நீர் வாருமே
நிறைவே நீர் வேண்டுமே
நிறைவே நீர் போதுமே
ஆவியானவரே

2. வனாந்திரம் வயல் வெளி ஆகுமே
பாழானது பயிர் நிலம் ஆகுமே

3. பெலவீனம் பெலனாய் மாறுமே
சுகவீனம் சுகமாய் மாறுமே

Tamil Hymns

1646. நினைவு கூறும் தெய்வமே நன்றி

நினைவு கூறும் தெய்வமே நன்றி
நிம்மதி தருபவரே நன்றி

நன்றி இயேசு ராஜா (4)

1. நோவாவை நினைவு கூர்ந்ததால்
பெருங்காற்று வீசச் செய்தீரே - அன்று
தண்ணீர் வற்றியதைய்யா
விடுதலையும் வந்ததைய்யா

2. ஆபிரகாமை நினைவு கூர்ந்ததால்
லோத்துவை காப்பாற்றினீரே
எங்களையும் நினைவு கூர்ந்து
எங்கள் சொந்தங்களை இரட்சியுமைய்யா

3. அன்னாளை நினைவு கூர்ந்ததால்
ஆண்குழந்தை பெற்றெடுத்தாளே
மலட்டு வாழ்க்கையெல்லாம்
மாற்றுகிறீர் நன்றி ஐயா - (எங்கள்)

4. கொர்நெலியு தான தர்மங்கள்
ஒரு தூதனைக் கொண்டு வந்தது
குடும்பத்தையும் நண்பர்களையும்
இரட்சித்து அபிஷேகித்தீரே - அவன்

5. ராகேலை நினைவு கூர்ந்ததால்
யோசேப்பை பரிசாய் தந்தீரே
இன்னுமொரு மகனைத் தருவீர்
என்று சொல்லி துதிக்கச் செய்தீரே

6. எக்காளம் ஊதும் போதெல்லாம்
எங்களை நினைக்கின்றீர்
எதிரிகளின் கையிலிருந்து
இரட்சித்து காப்பாற்றுகிறீர்

Tamil Hymns

1647. நீ இல்லாத நாளெல்லாம்

நீ இல்லாத நாளெல்லாம் நாளாகுமா?
நீ இல்லாத வாழ்வெல்லாம் வாழ்வாகுமா?

உயிரின் ஊற்றே நீ ஆவாய்
உண்மையின் வழியே நீ ஆவாய்
உறவின் பிறப்பே நீ ஆவாய்
உள்ளத்தின் மகிழ்வே நீ ஆவாய்

எனது ஆற்றலும் நீ ஆவாய்
எனது வலிமையும் நீ ஆவாய்
எனது அரணும் நீ ஆவாய்
எனது கோட்டையும் நீ ஆவாய்

எனது நினைவும் நீ ஆவாய்
எனது மொழியும் நீ ஆவாய்
எனது மீட்பும் நீ ஆவாய்
எனது உயிர்ப்பும் நீ ஆவாய்

Tamil Hymns

1648. நீ குருசில் மாண்ட கிறிஸ்துவை

1. நீ குருசில் மாண்ட கிறிஸ்துவை
அறிக்கை பண்ணவும்
அஞ்சாவண்ணம், உன்நெற்றிமேல்
சிலுவை வரைந்தோம்

2. கிறிஸ்துவின் மாண்பைக் கூறவே
வெட்காத படிக்கும்
அவரின் நிந்தைக் குறிப்பை
உன்பேரில் தீட்டினோம்

3. நீ கிறிஸ்துவின் செங்கொடிக்கீழ்
துணிந்து நிற்கவும்
சாமட்டும் நற்போராட்டத்தை
நடத்தும் படிக்கும்

4. நீ கிறிஸ்து சென்ற பாதையில்
நேராகச் செல்லவும்
நிந்தை எண்ணாமல் சிலுவை
சகித்தீடேறவும்

5. கிறிஸ்துவின் அடையாளத்தை
சபைமுன்னே பெற்றாய்
நீ அவர் குருசைச் சுமந்ததால்
பொற்கீரிடம் பூணுவாய்

1649. நீ ஒளியாகும் என் பாதைக்கு

நீ ஒளியாகும் என் பாதைக்கு விளக்காகும்
நீ வழியாகும் என் வாழ்வுக்கு துணையாகும்
அரணும் நீயே கோட்டையும் நீயே
அன்பனும் நீயே நண்பனும் நீயே
இறைவனும் நீயே

1. நீ வரும் நாளில் உன் அமைதி வரும் - உன்
நீதியும் அருளும் சுமந்து வரும்
இரவின் இருளிலும் பயம்விலகும் - உன்
கரத்தின் வலிமையில் உயர்வு வரும்
கால்களும் இடறி வீழ்வதில்லை
தோள்களும் சுமையாய் சாய்வதில்லை
என் ஆற்றலும் வலிமையும் நீயாவாய் - 2

2. விடியலைத் தேடிடும் விழிகளிலே புது
விளக்கினை ஏற்றிடும் பேரொளி நீ
பால்நினைந்தூட்டும் தாயும் என்
பால்வழி பயணத்தின் பாதையும் நீ
அருவிக்கு நடத்திடும் ஆயனும் நீ
அகமனம் அமர்ந்தென்னை ஆள்பவன் நீ
என் மீட்பரும் நேசரும் நீயாகும் -2

Tamil Hymns

1650. நீ செஞ்ச நன்மையெல்லாம்

நீ செஞ்ச நன்மையெல்லாம்
உலகோர்க்குச் சொல்லிடுவேன்
நீ கண்ட கனவெல்லாம்
நனவாக நானுழைப்பேன்
இயேசுவே ஒன் நெனவாக
எந்நாளும் வாழுவேன் (2)

1. ஏழையின்னு வெறுக்கவில்ல
பாவியின்னு ஒதுக்கவில்ல
பொண்ணுன்னு மிதிக்கவில்ல
தாழ்ந்தவன்னு பழிக்கவில்ல (2)
ஒன் மனசா என் மனசு ஆகணும்
ஒன் வாழ்வா என் வாழ்வு மாறணும்
இயேசுவே இயேசுவே
அதனால ஒன் கனவு பலிக்கணும்

2. துன்பங்கண்டு துடிதுடிச்ச
இன்பங்கண்டு மகிழ்ந்து நின்ன
பசிகண்டு பரிதவிச்ச
தாகங்கண்டு தவிச்சு நின்ன (2)
ஒன்னப் போல நானும் இங்கு ஆகணும்
அதனால் நான் பிறர் துன்பம் ஏற்கணும்
இயேசுவே இயேசுவே
அதனால ஒன் கனவு பலிக்கணும்

Tamil Hymns

1651. நீ மலைமேல் உள்ள பட்டணம்

நீ மலைமேல் உள்ள பட்டணம்
மறைந்து வாழாதே
நீ மறைந்திருக்கும் காலமல்ல
எழும்பிப் பிரகாசி - 2

1. உலகின் ஒளியாய் வாழ
தேவன் உன்னை அழைத்தார்
அவர்க்காய் சாட்சியாய் வாழ
தேவன் உன்னை அழைத்தார்

2. அழிகின்ற ஜனங்களை மீட்க
தேவன் உன்னை அழைத்தார்
திறப்பின் வாசலில் நிற்க
தேவன் உன்னை அழைத்தார்

3. இருளின் அதிகாரம் உடைக்க
வல்லமை உனக்களித்தார்
பூமியில் அக்கினியை இறக்க
வரங்களை உனக்களித்தார்
பாதாளத்தை வெறுமையாக்கி
பரலோகத்தை நிரப்ப
திறவுகோல் உனக்களித்தார்

Tamil Hymns

1652. நீங்க போதும் இயேசப்பா

நீங்க போதும் இயேசப்பா
உங்க சமூகம் எனக்கப்பா

1. எத்தனை இன்பமே உந்தன் சமூகமே
உள்ளமும் உடலுமே உமக்காய் ஏங்குதே

2. புதுபெலன் தருகிறீர்
புது எண்ணேய் பொழிகிறீர்
கனிதரும் மரங்களாய்
செழித்தோங்கச் செய்கிறீர்

3. அப்பா உம் சந்நிதியில்
எப்போ நான் வந்து நிற்பேன்
திருமுகம் கண்டு நான்
திருப்தியில் மூழ்குவேன்

4. தேனிலும் இனிமையே
தெவிட்டாத அமுதமே
தேடியும் கிடைக்காத
ஒப்பற்ற செல்வமே

Tamil Hymns

1653. நீங்க மட்டும் இல்லாதிருந்தால்

நீங்க மட்டும் இல்லாதிருந்தால் - என்
துக்கத்தில் நான் அழிந்திருப்பேன்
உங்க வார்த்தை மட்டும் தேற்றாதிருந்தா
மன சஞ்சலத்தில் மரித்திருப்பேன் (2)
நேசரே உம் கிருபை போதுமே (2)

1. தண்ணீர்கள் மத்தியில் நடந்தபோது
மூழ்காமல் காத்தது உம் கிருபையப்பா (2)
அக்கினியில் நடந்த போது (2)
எனை மீட்டது உம் கிருபையப்பா (2)

2. நிந்தைகள் அவமானம் சூழ்ந்த போது
ஆற்றியே அணைத்தது உம் கிருபையப்பா (2)
விக்கினங்கள் சூழ்ந்த போது (2)
எனை மீட்டது உம் கிருபையப்பா (2)

3. அன்னையின் கருவிலே தெரிந்துகொண்டு
இம்மட்டும் காத்தது உம் கிருபையப்பா
வழிதப்பி அலைந்த போது
மீட்டு இரட்சித்தது உம் கிருபையப்பா

Tamil Hymns

1654. நீங்க மட்டும் போதும் இயேசப்பா

நீங்க மட்டும் போதும் இயேசப்பா
வேறொன்றும் இங்கு வேண்டாமைய்யா
ஆயிரம் கோடி செல்வம் என்றாலும்
உந்தனின் மதிப்பிற்கு ஈடாகிடுமோ

1. அழியும் உலக செல்வத்துக்காக
அழியா செல்வத்தை விட்டு விடுவேனோ
நீங்க மட்டும் போதும் இயேசப்பா
ஆயிரம் கோடி செல்வம் என்றாலும்
உந்தனின் மதிப்பிற்கு ஈடாகிடுமோ

2. சிந்தனையை கெடுக்கும் மோகங்கள் வேண்டாம்
தந்தயே உந்தன் அன்பே போதுமே
நீங்க மட்டும் போதும் இயேசப்பா
சிற்றின்ப மோகம் வேண்டவே வேண்டாம்
மகிமையின் மேகம் ஒன்றே போதுமே

Tamil Hymns

1655. நீங்கிற்றே நீங்கிற்றே நீங்கிற்றே

நீங்கிற்றே நீங்கிற்றே நீங்கிற்றே
என் பாவப் பாரமெல்லாம் நீங்கிற்றே
சர்வ பாவங்களையும் சுத்தி செய்யும் இரத்தத்தால்
நீங்கிற்றே நீங்கிற்றே நீங்கிற்றே
என் பாவப் பாரமெல்லாம் நீங்கிற்றே

Tamil Hymns

1656. நீங்காத என் நேசரே உம் நாமம்

நீங்காத என் நேசரே
உம் நாமம் இன்பமே
என்றென்றும் பாடி மகிழ்ந்து
எந்நாளும் ஸ்தோத்திரிப்பேன்

1. பெருவெள்ளம் மதிலை மோதுகையில்
பெருங்காற்றிலிருந்து பேசினீரே
எலியாவின் தேவனே என் தேவன்
எந்நாளும் உம்மை பின்றறுவேன்

2. துனபங்கள் துயரங்கள் சூழ்ந்த வேளை
தூய நல் ஆவியால் தேற்றினீரே
ஆவியின் வரங்கள் தந்தீரே
அல்லேலூயா என்று பாடிடுவேன்

3. ஆத்தும நேசரே உம் சாயலாய்
ஆவியில் என்றும் நான் வளர
ஆவியின் கனிகள் நிறைவாக

Tamil Hymns

1657. நீங்காத பாவம் நீங்காததேனோ

நீங்காத பாவம் நீங்காததேனோ
நீங்கிடும் நாள் தான் இதோ
பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று அழைக்கிறார்

1. காணாத ஆட்டை தேடிடும் மேய்ப்பர்
கண்டுன்னைச் சேர்த்திடுவார்
பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று அழைக்கிறார்

2. நினையாத நேரம் மரணம் சந்தித்தால்
எங்கு நீ சென்றிடுவாய்
பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று அழைக்கிறார்

Tamil Hymns

1658. நீதிமான் நான் நீதிமான் நான்

நீதிமான் நான் நீதிமான் நான்
இரத்தத்தாலே கழுவப்பட்ட நீதிமான் - இயேசுவின்

1. பனைமரம்போல் நான் செழிதோங்குவேன்
கேதுரு மரம்போல் வளர்ந்திடுவேன்
கர்த்தரின் இல்லத்தில் நாட்டப்பட்டு
முதிர்வயதிலும் நான் கனிதருவேன்

2. காலயிலே உம் கிருபையையும்
இரவினிலே உம் சத்தியத்தையும்
பத்துநரம்புகள் இசையோடு
பாடிப்பாடி மகிழ்ந்திருப்பேன்

3. ஆண்டவனே என் கற்பாறை
அவரிடம் அநீதியே இல்லை
என்றே முழக்கம் செய்திடுவேன்
செழுமையும் பசுமையுமாய் வளர்வேன்

4. கர்த்தரின் கண்கள் என் மேலே
என் வேண்டுதல் கேட்கின்றார்
மன்றாடும் போது செவிசாய்த்து
மாபெரும் விடுதலை தருகின்றார்

5. ராஜாவின் ஆட்சி வருகையிலே
கதிரவனைப் போல் பிரகாசிப்பேன்
ஆகாயமண்டல விண்மீனாய்
முடிவில்லா காலமும் ஒளி வீசுவேன்

6. எதிரியின் வலிமையை மேற்கொள்ள
அதிகாரம் எனக்குத் தந்துள்ளார்
புது எண்ணை அபிஷேகம் என்தலை மேல்
பொழிந்து பொழிந்து மகிழ்கின்றீர்

Tamil Hymns

1659. நீதியாமோ நீர் சொல்லும் ஓய்

நீதியாமோ நீர் சொல்லும் ஓய்
நெறியுளோரே அறம் செய்யாதிருந்திடில்

1. ஆதுலர்க் கீவதே பாக்கியம் பிறரை
ஆதரித்திடுவதே யோக்கியம் ஓகோ
பாதகம் செய்யில் நிர்ப்பாக்கியம் மோட்ச
பாதை நடக்கில் சிலாக்யம் - நீதி

2. தரித்திரக் கிரங்குவோன் உடனே இடுவான்
தற்பரனுக் கவன் கடனே என்று
கருத்துடன் கருதியில் திடனே உரைத்தார்
கடுநெஞ் சகல் மானிடனே - நீதி

3. அன்புடன் விதவையும் போட்ட காசை
அதி வியப்பாய் யேசு காட்டப் புகழ்
இன்புடன் அவள் மிசை சூட்ட அதை
எவர்களும் அகத்தினில் நாட்ட - நீதி

4. பிறர் புகழும்படி இன்றே செய்தால்
பிரயோசனமிலை என்றே பரன்
மறையதில் விளம்பினார் நன்றே அம்
மாதிரி விலகாது நின்றே - நீதி

5. பரிதானம் வாங்குதல் தீது - அதைப்
பறித்தறம் செய்தல் தகாது உமக்
குரியதில் ஈவேது போதம் இதில்
ஊன்றி இருப்பதே நீதம் - நீதி

6. ஏழைகட் கீயாது ஆஸ்தி ஐயே
ஈண்டு சேர்ந்திடில் என்ன கீர்த்தி இதோ
வாழுல கடைந்திடில் நேர்த்தி என்றும்
வாழலாம் அதுவே மா பூர்த்தி - நீதி

Tamil Hymns

1660. நீதியில் நிலைத்திருந்து உம்

நீதியில் நிலைத்திருந்து - உம்
திருமுகம் நான் காண்பேன்
உயிர்தெழும் போது -உம்
சாயலால் திருப்தியாவேன் -நீதியில்

1. தேவனே நீர் என் தேவன்
அதிகாலமே தேடி வந்தேன்
நீரின்றி வறண்ட நிலம்போல்
ஏங்குகிறேன் தினம் உமக்காய்
அல்லேலூயா ஓசான்னா (4)

2. ஜீவனை விட உம் அன்பு
அது எத்தனை நல்லது
புகழ்ந்திடுமே என் உதடு
மகிழ்ந்திடுமே என் உள்ளம்

3. உயிர் வாழும் நாட்களெல்லாம்
உம் நாமம் சொல்லி துதிப்பேன்
அறுசுவை உண்பது போல
திருப்தியாகும் என் ஆன்மா

4. படுக்கையிலே உம்மை நினைப்பேன்
இராச்சாமத்தில் தியானம் செய்வேன்
துணையாளரே உம் நிழலை
தொடர்ந்து, நடந்து வளர்வேன்

Tamil Hymns

1661. நீதியின் சூரியனே என்னில்

நீதியின் சூரியனே
என்னில் பிரகசியும் நீரே
இருள் அகன்றிடவே
யேசுவே என்னில் வாருமே

1. காலுக்கு தீபம் உம் வசனங்கள்
பாதைக்கு வெளிச்சமும் ஆனதே
ஜீவ தன்னெர் உள்ள நதிகளும்
என்னில் பொங்கி செழீப்பாக்குதே

2. யேசுவே நீர் எந்தன் நல்ல பங்கு
யேசுவே நீர் எந்தன் நம்பிக்கை
ஞானமும் நீதியும் மீட்பும் என்
பரிசுத்தமும் யேசுவே

1662. நீயுனக்குச் சொந்தமல்லவே

நீயுனக்குச் சொந்தமல்லவே மீட்கப்பட்ட
பாவி நீயுனக்கு சொந்தமல்லவே

நீயுனக்குச் சொந்தமல்லவே
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம்

1. சிலுவை மரத்தில் தொங்கி மரித்தாரே- திரு
ரத்தம், ரத்தம் திரு விலாவில் வடியுது பாரே
வலிய பரிசத்தால் கொண்டாரே
வான மகிமை யுனக்கீவாரே

2. இந்த நன்றியை மறந்து போனாயோ?
யேசுவைவிட்டு எங்கேயாகிலும் மறைந்து
திரிவாயோ? -சந்த தமுனதிதயங் காயமும்
சாமி கிறிஸ்தினுடைய தல்லவோ?

3. பழைய பாவத்தாசை வருகுதோ- பசாசின்
மேலே பட்சமுனக்குத் திரும்ப வருகுதோ?
அழியும் நிமிஷத் தாசை காட்டியே
அக்கினிக்கடல் தள்ளுவானேன்?

4. பிழைக்கினும் அவர்க்கே
பிழைப்பாயே உலகைவிட்டுப்
பிரியினும் அவர்க்கே மரிப்பாயே,
உழைத்து மரித்தும் உயிர்த்த நாதரின்
உயர்பதவியில் என்றும் நிலைப்பாய்

1663. நீயின்றி வேறேது சொந்தம் உன்

நீயின்றி வேறேது சொந்தம்
உன் நினைவின்றி எனிலேது இன்பம்
நிலையான நீயே பந்தம் - உன்
நிறைவாழ்வு ஒன்றே செல்வம்

1. விளக்கின் கீழ் இருளுண்டு நிலவின் உள் கறையுண்டு
குறையுண்டு என் வாழ்விலே ஓ நிறையுண்டு என் வாழ்விலே
நிறம் மாறும் பூவுண்டு நிலை மாறும் உறவுண்டு
அகழ்வோரை நிலம் தாங்குமே ஓ ஆகாயம் மழை தூவுமே
கரை சேரா அலையுண்டு கரை சேரா படகுண்டு
கடல் மீது நீர் வாருமே ஓ உடல் யாவும் நீர் மேவுமே
அலைபாயும் ஆன்மாவின் நிலைமாறும் நிலை கண்டு
எனையாளும் என் தெய்வமே ஓ அருள் வீசும் ஓர் தென்றலே

2. சந்தங்கள் ஏழும் என் சொந்தங்கள் ஆனாலும்
சங்கீதம் நீயல்லவா ஓ சந்தோஷம் நீயல்லவா
சோகங்கள் சூழும் என் பாதங்கள் மீளும் - என்
பயணங்கள் நீயல்லவா ஓ பாதைகள் நீயல்லவா
அழுகின்ற நல்லார்க்கும் தொழுகின்ற தீயோர்க்கும்
ஆகாரம் நீயல்லவா ஓ ஆதாரம் நீயல்லவா
பாரங்கள் சுமப்போர்க்கும் பாவங்கள் சுமப்போர்க்கும்
சுமைதாங்கி நீயல்லவா நீ தோள் தாங்கும் தாயல்லவா

Tamil Hymns

1664. நீயே நிரந்தரம்

நீயே நிரந்தரம்.... இயேசுவே....
என் வாழ்வில்.... நீயே நிரந்தரம்... ஆ...ஆ...ஆ...ஆ...ஆ...ஆ...

அம்மையப்பன் உந்தன் அன்பே நிரந்தரம்
மாறும் உலகில் மாறா உன் உறவே நிரந்தரம்
இம்மை வாழ்வில் மறுமை இருப்பது நிரந்தரம் - (2)
நான் மாண்ட பின்பும் உன்னில்
உயிர்ப்பது நிரந்தரம்

நிரந்தரம் நிரந்தரம் நீயே நிரந்தரம், நீயே நிரந்தரம்
நிரந்தரம், நிரந்தரம், நீயே நிரந்தரம் ஆ...ஆ... --- அம்மையப்பன்

1. தாயின் அன்பு சேய்க்கு இங்கே நிரந்தரம்
தாயும் தந்தையும் எமக்கு நீயே நிரந்தரம்
தேயும் வாழ்வில் நம்பிக்கை நீயே நிரந்தரம்
நான் சாயும் போது காப்பது நீயே நிரந்தரம்

2. செல்வங்கள் கொணரும் இன்பத்தில்
இல்லை நிரந்தரம் -பதவியும் புகழும்
தருவது இல்லை நிரந்தரம்
நிலை வாழ்வு என்னும் நிஜமான
நீயே நிரந்தரம் - அதன் விலையாக எனை
நீ உன்னில் இணைப்பாய் நிரந்தரம்

Tamil Hymns

1665. நீயே எனது ஒளி

நீயே எனது ஒளி நீயே எனது வழி
நீயே எனது வாழ்வு இயேசையா - (2)

1. நான்கு திசையும் பாதைகள்
சந்திக்கின்ற வேளைகள்
நன்மை என்ன தீமை என்ன
அழியாத கோலங்கள் - (2)
நீயே எங்கள் வழியாவாய்
நீதியின் பாதையில் பொருளாவாய் - (2)
உமது பாதப்பதிவுகள் எமது
வாழ்வின் தெளிவுகள் - அவற்றில்
நான் நடந்தால் வெற்றியின் கனிகள்

2. துன்ப துயர நிகழ்வுகள்
இருளின் ஆட்சிக் கோலங்கள்
தட்டுத் தடுமாறி விழத் தகுமான சூழல்கள்
நீயே எங்கள் ஒளியாவாய்
நீதியின் பாதையின் சுடராவாய்
உம்மை நாங்கள் போற்றிட
பொய்மை எங்கும் போக்கிட
உண்மையின் இறைவா உனதருள் தாரும்

Tamil Hymns

1666. நீரன்றி வேறில்லை ஐயா எல்லாமே

நீரன்றி வேறில்லை ஐயா
எல்லாமே நீர் தானே
உடலும் உள்ளமெல்லாம் உயிரெல்லாம் நீர் தானே

உம்மை நாடி நாடி தினம்
பாடி பாடி மகிழ்வேன் - உந்தன் பாதம்
தேடி தினம் ஓடி ஓடி வருவேன்

1. துன்பவேளையில் வேண்டிடும் போது
நல்ல துணை நீரே
தாங்கா துயரில் தவித்துடும் போது
தாங்கும் பெலன் நீரே
எந்தக் காலத்திலும் உம்மை ஸ்தோத்தரிப்பேன்
எந்த வேளையிலும் நினைப்பேன்
ஒருஇமைப்பொழுதும் உம்மை மறந்திடாமல்
என் வாழ்வினில் இனி

2. பாவ பாதையில் பாரினில்
அலைய தேடி வந்தவரே
பாவி எனக்காய் சிலுவையில்
தொங்கி வாழ்வு தந்தவரே
உயிருள்ளவரை என் உன்னதரை
உயிரோடு கலந்திடுவேன்
இரவும் பகலும் இதயம் நிறுத்தி
இசை கானம் பாட

Tamil Hymns

1667. நீரின்றி வாழ்வேது இறைவா

நீரின்றி வாழ்வேது இறைவா
உம் நினைவின்றி மகிழ்வேது தேவா
உலகத்தில் நூறாண்டு நான் வாழ்ந்த போதும்
உம் இல்லத்தில் வாழும் ஒரு நாளே போதும்

1. பல கோடி வார்த்தைகள்
நான் கேட்ட போதும் - இயேசுவே
நீர் பேசும் ஒரு வார்த்தை போதும்
ஓராயிரம் ஜீவன் உயிர் வாழுமே -2
உம் வார்த்தையிலே உண்டு அற்புதமே -2

2. கல்லுக்குள் தேரையை வைத்தவர் நீர்
அதற்குள் உம் ஜீவனை தந்தவர் நீர்
உம்மையன்றி அணுவேதும் அசையாதையா
உம் துணையின்றி
உயிர் வாழ முடியாதைய்யா

3. எத்தனை நன்மைகள் செய்தீரையா -அதில்
எதற்கென்று நன்றி சொல்லி துதிப்பேன் ஐயா
அத்தனையும் சொல்ல வேண்டும் என்றால்
ஆயிரம் ஆண்டுகள் போதாதையா

Tamil Hymns

1668. நீரே எந்தன் கன்மலை நான்

நீரே எந்தன் கன்மலை
நான் உம்மை நம்புவேன்
நீரே எந்தன் மறைவிடம்
என்றும் உம்மில் தங்குவேன்

1. துன்பமான நேரமோ - இன்பமான
காலமோ தோல்வியின் மத்தியில்
புகழ்ச்சியின் உச்சத்தில்
எல்லா சூழ்நிலையிலும் மாறாத
தேவனே
உம்மையே நம்புவேன்
உம்மை விசுவாசிப்பேன்
அசைக்கப்படுவதில்லை

2. மனுஷரை நம்பிடேன்
பிரபுக்களையும் நம்பிடேன் பணம்
பதவி நம்பிடேன் என் பெலனையும்
நான் நம்பிடேன்
நான் உம்மை
மறந்தாலும் என்னை மறவா தேவனே
உம்மையே நம்புவேன் - உம்மை
விசுவாசிப்பேன் அசைக்கப்படுவதில்லை

எந்தன் வாழ்வில் ஒளியும் நீரே
வழியும் நீரே வழுவாமல் காப்பவரே
எந்தன் தாயும் தகப்பன் நீரே
எந்தன் நண்பன் நீரே எல்லாமுமானவரே

Tamil Hymns

1669. நீரே எல்லாம் நீரே எல்லாம் நீரே

நீரே எல்லாம் நீரே எல்லாம்
நீரே எல்லாம் இயேசுவே-2
உயர்வோ தாழ்வோ
மரணமோ ஜீவனோ

1. நீரே எல்லாம் இயேசுவே -2
ஆராதிப்பேன் ஆராதிப்பேன்
ஆராதிப்பேன் இயேசுவே -2
இன்பமோ துன்பமோ
சுகமோ வியாதியோ
ஆராதிப்பேன் இயேசுவே -2

2. நேசிப்பேன் நேசிப்பேன்
நேசிப்பேன் இயேசுவே -2
நன்மையோ தீமையோ
செல்வமோ வறுமையோ
நேசிப்பேன் இயேசுவே -2

3. பின்தொடர்வேன் பின்தொடர்வேன்
பின்தொடர்வேன் இயேசுவே -2
வெற்றியோ தோல்வியோ
நிந்தையோ புகழ்ச்சியோ
பின்தொடர்வேன் இயேசுவே

Tamil Hymns

1670. நீரே என் தஞ்சம்

நீரே என் தஞ்சம் நீரே என் கோட்டை
நீரே என் இரட்சகர் நீரே ராஜா (2)
நான் உம்மை தேடுவேன் நாள் முழுதும்
நான் உம்மை சேவிப்பேன்
வாழ்நாள் எல்லாம் எனது எல்லாவற்றிலும்
நான் உம்மை நேசிப்பேன் இயேசுவே...

இயேசுவே ராஜா... இயேசுவே தேவன்.....
இயேசுவே மீட்பர்... இயேசுவே (2)

நான் உம்மை தேடுவேன் நாள் முழுதும்
நான் உம்மை சேவிப்பேன் வாழ்நாள் எல்லாம்
எனது எல்லாவற்றிலும்
நான் உம்மை நேசிப்பேன், இயேசுவே (2)

Tamil Hymns

1671. நீரே என் வழி நீரே என் சத்தியம்

1. நீரே என் வழி நீரே என் சத்தியம்
நீரே என் ஜீவனன்றோ

2. அப்பாவும் நீரே அம்மாவும் நீரே
நான் உந்தன் பிள்ளையன்றோ

3. நல்ல மேய்ப்பன் நீர் தானே
நான் உந்தன் ஆட்டுக்குட்டி

4. ஜீவ நீருற்று நீர் தானே
உந்தன்மேல் தாகம் கொண்டேன்

1672. நீரே போதும் நீரே போதும் நீரே

நீரே போதும் நீரே போதும்
நீரே போதும் இயேசுவே

1. கழுகை போல என்னை எழும்ப செய்தீர்
உயரங்களில் என்னை பறக்க செய்தீர்

2. சிங்கத்தின் பிள்ளையாய் எனை மாற்றினீர்
சாத்தனை ஜெயித்திடும் பெலன் அளித்தீர்

3. பனையை போல என்னை செழிக்க செய்தீர்
கேதுரு போல் என்னை வளர செய்தீர்

4. இயேசுவே நீரே நீரே போதும்
நீரே போதும் இயேசுவே -2

Tamil Hymns

1673. நீரேயல்லாமல் என் வாழ்வில் யாருண்டு

நீரேயல்லாமல் என் வாழ்வில் யாருண்டு
உம்மையல்லாமல் என் துணை யாருண்டு

1. நேசிப்பார் யாருமில்லை - அன்பாய்
உதவிடுவார் ஒருவருமில்லை
கண்ணீர் சிந்தி கதறிடும் வேளை
ஆறுதல் அளிப்பார் இல்லை

2. சோகங்கள் சூழும் நேரம் - கடும்
பாரங்கள் நெருக்கும் போதும்
பாரினில் என்னை தேற்றிட தேவா
உம்மைப் போல் யாருமில்லை

3. நிந்தைகள் நெருக்கங்களோ
வியாகுலங்கள் வருத்தங்களோ
கிறிஸ்துவின் அன்பை என்னிடமிருந்து
பிரிந்திட முடியாதய்யா

1674. நீரோடையை மான் வாஞ்சித்து

1. நீரோடையை மான் வாஞ்சித்து
கதறும் வண்ணமாய்
என் ஆண்டவா என் ஆத்துமம்
தவிக்கும் உமக்காய்.

2. தயாள கர்த்தா, உமக்காய்
என் உள்ளம் ஏங்காதோ?
உம் மாட்சியுள்ள முகத்தை
எப்போது காண்பேனோ?

3. என் உள்ளமே, விசாரம் ஏன்?
நம்பிக்கை கொண்டு நீ
சதா உன் ஜீவ ஊற்றேயாம்
கர்த்தாவை ஸ்தோத்திரி

4. நாம் வாழ்த்தும் கர்த்தனார் பிதா
குமாரன், ஆவிக்கும்
ஆதிமுதலென்றென்றுமே
துதி உண்டாகவும்.

1675. நீர் எங்கள் மீட்பர் நீர் எங்கள் நேசர்

நீர் எங்கள் மீட்பர் நீர் எங்கள் நேசர்
நீர் எங்கள் மேய்ப்பர் பரிசுத்தர்
பரிசுத்தர் பரிசுத்தர்
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர்

1. நீர் எங்கள் நம்பிக்கை நீர் எங்கள் வல்லமை
நீர் எங்கள் மகிமை ஒப்பற்றவர் ஒப்பற்றவர் ஒப்பற்றவர்
சேனைகளின் கர்த்தர் ஒப்பற்றவர்

2. நீர் எங்கள் அன்பர் நீர் எங்கள் நண்பர்
நீர் எங்கள் வாழ்வில் அன்புள்ளவர்
அன்புள்ளவர் அன்புள்ளவர்
சேனைகளின் கர்த்தர் அன்புள்ளவர்

Tamil Hymns

1676. நீர் எந்தன் இயேசு ராஜாவே

நீர் எந்தன் இயேசு ராஜாவே
என் வாழ்வில் பூத்த ரோஜாவே
என்னை நீர் தேடி வந்தீரே
நீரே எந்தன் தேவன்

சாரோனின் ரோஜா நீரே
பள்ளத்தாக்கின் லீலி நீரே
பூரண அழகுள்ளவரே
நீரே எந்தன் இயேசு

ஆதியும் அந்தமும் நீரே
அல்பாவும் ஒமேகா நீரே
முதலும் முடிவும் நீரே
நீரே எந்தன் தெய்வம்

என் தேவனே என் ராஜனே
உம்மை நான் பாடி போற்றுவேன்
என் வாழ்வினை உமக்காகவே
இன்று நான் ஒப்புக் கொடுத்தேன்

Tamil Hymns

1677. நீர் எந்தன் மறைவிடம்

நீர் எந்தன் மறைவிடம்
நீர் எந்தன் புகலிடம்
நான் அஞ்சும் நேரத்தில் - என்னை
விடுவிக்கும் பாடலை நீர் தருகிறீர்

உம்மை நம்புவேன்
பெலவீன வேளையில் எந்தன் பெலனும் நீரே
உம்மை நம்புவேன் - நான் நம்புவேன்
பெலவீன வேளையில் எந்தன் பெலனும் நீரே

நீர் எந்தன் ஆண்டவர்
நீர் எந்தன் இரட்சகர்
துயரான வேளையில் நான் வாழ
நம்பிக்கை நீர் தருகிறீர்

Tamil Hymns

1678. நீர் எனக்கு போதும்

நீர் எனக்கு போதும் - (4)
எந்நாளும் எப்போதும்
நீரே எந்தன் சொந்தம் - (2)
இயேசுவே நீர் எனக்கு போதும் - (2)

1. என் தாயும் தந்தையும் நீர்தானே
தாங்கிடும் துருகமும் நீர்தானே (2)
சுற்றமும் நட்பும் நீர்தானே
சுமந்திடும் சுமைதாங்கி நீர்தானே (2)

2. தேற்றிடும் சினேகிதன் நீர் தானே
ஆறுதல் தேறுதல் நீர்தானே
ஞானமும் அறிவும் நீர்தானே
என் சுகம் பெலனும் நீர்தானே

1679. நீர் என் சொந்தம் நீர் என் பக்கம்

நீர் என் சொந்தம் நீர் என் பக்கம்
துன்பவேளைகளில் - ஆழியின்
ஆழங்களில் ஆனந்தமே எனக்கு

சூறைச்செடியின் கீழிலும்
உம் சமுகம் என்னை தேற்றுமே

1. வறண்ட பாலைவன வாழ்க்கையில்
தாகத்தால் என் நாவு வறண்டாலும்
ஆகாரின் குழந்தையின் அழுகையை கேட்டவர்
என் தாகம் தீர்க்க வல்லவர்

2. நெறிந்த நாணலை முறிக்காதவர்
மங்கி எரியும் திரியை அணையார்
புலம்பலை களிப்பாய் மாற்றுபவர்
விடுதலை தெய்வம் யேசுபரன்

Tamil Hymns

1680. நீர் என்னை காண்கின்ற தேவனே

நீர் என்னை காண்கின்ற தேவனே
நான் உம்மை காண வாஞ்சையே
தேவாதி தேவனே துதிக்கு பாத்திரரே
தூய மனதுடன் மகிழ்ந்து பாடிடுவேன்

1. திக்கற்ற மக்களை கைவிடேன் என்றீர்
தேவா உமக்கு ஸ்தோத்திரம்
என்னோடென்றும் இருப்பதால்
ஸ்தோத்திரமே இயேசு நாதா

2. என்னையே நோக்கி கூப்பிடு என்றீர்
நாதா உமக்கு ஸ்தோத்திரம்
உம் பாதத்தை தேடி வந்தேன்
ஏற்றருளும் இயேசு நாதா

Tamil Hymns

1681. நீர் என்னோடு இருக்கும்போது

நீர் என்னோடு இருக்கும்போது
எந்நாளும் வெற்றி வெற்றியே
தோல்வி எனக்கில்லையே
நான் தோற்றுப்போவதில்லையே

1. மலைகளைத் தாண்டிடுவேன்
கடும் பள்ளங்களைக் கடந்திடுவேன்
சதிகளை முறியடிப்பேன்
சாத்தானை ஜெயித்திடுவேன்

2. சிறைச்சாலை கதவுகளும்
என் துதியினால் உடைந்திடுமே
அபிஷேகம் எனக்குள்ளே - நான்
ஆடிப் பாடி மகிழ்ந்திடுவேன்

3. மரணமே கூர் எங்கே
பாதாளம் உன் ஜெயம் எங்கே
கிறிஸ்து எனக்கு ஜீவன்
சாவு எனக்கு ஆதாயமே

Tamil Hymns

1682. நீர் ஒருவர் மட்டும் இயேசுவே

நீர் ... ஒருவர் மட்டும் இயேசுவே
என்னை விட்டு நீங்காதிருப்பது ஏனோ?
தெய்வீக அன்பால் தானோ? - 2

1. என்னைப் பாடி மகிழ்வித்த புள்ளினங்கள்
தங்கள் கூடுகள் தேடிப் பறந்தபின்னும் - 2
நான் வாழ்ந்த காலத்து நண்பர் எல்லாம்
நான் தாழ்ந்த காலத்தில் பிரிந்த பின்னும்

2. எந்தன் மேனி தழுவிய இளந்தென்றல்
சொந்த தாய் கடலோடு கலந்த பின்னும் - 2
எந்தன் பாதையின் விளக்காம் பகலவனும்
வந்த காரிருள் மாயையால் மறைந்த பின்னும்

1683. நீர் செய்த நன்மைகளை நினைக்கிறேன்

(நீர் செய்த நன்மைகளை நினைக்கிறேன்
கருத்தோடு நன்றி சொல்கிறேன்)

1. என் தாயின் கருவிலே நான் உருவான
நாள் முதல் நாள்தோறும் காத்து வந்தீரே
என் நாசியாலே நான் சுவாசித்த நாள் முதல்
நாள்தோறும் காத்து வந்தீரே

நன்றி நன்றி பலி செலுத்தியே
நாதன் இயேசுவையே பாடுவேன்
கோடி நன்றி பலி செலுத்தியே
ஜீவன் தந்தவரைப் பாடுவேன்

2. பாவியாக நான் வாழ்ந்து
பாவஞ்செய்த நாட்களிலும்
நாள்தோறும் காத்து வந்தீரே
நான் உம்மை விட்டு தூரம் சென்று
துரோகம் செய்த நாட்களிலும்
நாள்தோறும் காத்து வந்தீரே

3. நான் திக்கற்று துணையின்றி
திகைத்திட்ட நேரத்தில்
துணையாக தேடிவந்தீரே
நான் துக்கத்தால் - மனம் நொந்து
மடிகின்ற நேரத்தில் -உம்
மகன் என்னை தேடி வந்தீரே

4. நான் மனதார நேசித்த
மனிதர்கள் மறந்தாலும்
மறவாத நேசர் நீரையா
சூழ்நிலைகள் மாறிட்டாலும்
மாறிடா உம் கிருபையாலே
நாள்தோறும் தாங்கினீரையா

Tamil Hymns

1684. நீர் சொன்னதை செய்பவர் சொல்லாததை

நீர் சொன்னதை செய்பவர்
சொல்லாததை தருபவர்
என் தேவைகள் அறிந்தவர்
முன்குறித்து வைத்தவர்

உமக்கே என் வாழ்க்கையில் முதலிடமே
நீரே நான் நம்பும் நல்ல மறைவிடமே

1. எதைக்குறித்தும் கலக்கமில்லை
கைவிட நீர் ஒரு மனிதனில்லை
யெகோவா நீர் பார்த்துக்கொள்வீர்
அழைத்தவர் நீர் என்னை நடத்திடுவீர்

2. ஆதரவாய் எனக்கிருந்தீர்
என் விளக்கை ஏற்றி வைத்தீர்
எபிநேசராய் உடனிருந்தீர்
இதுவரை உதவிகள் செய்து வந்தீர்

3. ஏற்ற வேளை எனக்கும் உண்டு
காலங்கள் எல்லாம் உந்தன் கரத்தில் உண்டு
அமர்ந்திருப்பேன் உம் கரத்தில்
உயர்த்திடுவீர் என்னை உன்னதத்தில்

Tamil Hymns

1685. நீர் சொன்னால் போதும் செய்வேன்

நீர் சொன்னால் போதும் செய்வேன்
நீர் காட்டும் வழியில் நடப்பேன்
உம் பாதம் ஒன்றே பிடிப்பேன்
என் அன்பு இயேசுவே - 2

ஆராதனை இயேசுவுக்கே! (4)

1. கடலின் மீது நடந்திட்ட
உம் அற்புத பாதங்கள்
எனக்கு முன்னே செல்வதால்
எனக்கில்ல கவலை
காற்றையும் கடலையும் அதட்டிய
உம் அற்புத வார்த்தைகள்
என்தன் துணையாய் நிற்பதால்
எனக்கு ஏது கவலை

2. பாதை எல்லாம் அந்தகாரம்
சூழ்ந்து கொண்டாலும்
பாதை காட்ட நேசர் உண்டு
பயமே இல்லையே
பார்வோன் சேனை தொடர்ந்து
வந்து சூழ்ந்து கொண்டாலும்
பாதுகாக்க கர்த்தர் உண்டு
பயமே இல்லையே

Tamil Hymns

1686. நீர் தந்த இந்த வாழ்வை

நீர் தந்த இந்த வாழ்வை
உமக்கென்றும் அர்ப்பணிப்பேன்
இயேசு தேவா கிறிஸ்து நாதா
உம்மை என்றும் மறவேனே

1. இரு கைகள் உம்மை வணங்கி
என்றும் தொழுகை செய்திடுமே
இரு கால்கள் சுவிஷேசம்
என்றும் பரப்ப செய்திடுமே

2. எந்தன் ஆஸ்தி எந்தன் செல்வம்
யாவும் உமக்கே தந்திடுவேன்
எந்தன் உள்ளம் எனதாவி யாவும்
உமக்கே ஈந்திடுவேன்

Tamil Hymns

1687. நீர் தந்த நன்மை யாவையும்

1. நீர் தந்த நன்மை யாவையும்
நினைத்து, கர்த்தரே,
மகிழ்ச்சியோடு என்றைக்கும்
நான் துதி செய்வேனே.

2. குழந்தைப் பருவமுதல்
குறைவில்லாமலே
எனக்களித்த நன்மைகள்
ஏராளமானதே.

3. என்னோடு வாலிபத்திலும்
இருந்தீர் தேவரீர்;
இக்கட்டுண்டான காலத்தும்
விழாமல் தாங்கினீர்.

4. அநேகமான தீமைகள்
அண்டாமல் தடுத்தீர்;
கைம்மாறில்லாத நன்மைகள்
கர்த்தாவே, பொழிந்தீர்.

5. இம்மையில் என்றும் தாழ்மையாய்
தெய்வன்பை நினைப்பேன்;
மறுமையில் வணக்கமாய்
உம்மையே போற்றுவேன்.

6. புகழ்ச்சி, துதி, தோத்திரம்,
ஒன்றான உமக்கே
இகத்திலும் பரத்திலும்
எழும்பத் தகுமே.

Tamil Hymns

1688. நீர் தந்த நாளும் ஓய்ந்ததே

1. நீர் தந்த நாளும் ஓய்ந்ததே
கர்த்தாவே ராவும் வந்ததே;
பகலில் உம்மைப் போற்றினோம்
துதித்து இளைப்பாறுவோம்.

2. பகலோன் ஜோதி தோன்றவே
உம் சபை ஓய்வில்லாமலே
பூவெங்கும் பகல் ராவிலும்
தூங்காமல் உம்மைப் போற்றிடும்.

3. நாற்றிசையும் பூகோளத்தில்
ஓர் நாளின் அதிகாலையில்
துடங்கும் ஜெபம் ஸ்தோத்ரமே
ஓர் நேரம் ஓய்வில்லாததே.

4. கீழ்கோளத்தோர் இளைப்பாற,
மேல்கோளத்தோர் எழும்பிட,
உம் துதி சதா நேரமும்
பல் கோடி நாவால் எழும்பும்.

5. ஆம், என்றும் ஆண்டவரே நீர்,
மாறாமல் ஆட்சி செய்குவீர்;
உம் ராஜ்யம் என்றும் ஓங்கிடும்,
சமஸ்த சிருஷ்டி சேர்ந்திடும்.

Tamil Hymns

1689. நீர் திறந்தால் அடைப்பவன் இல்லை

நீர் திறந்தால் அடைப்பவன் இல்லை
நீர் கட்டினால் அதை இடிப்பவன் இல்லை
இல்லை இல்லை இல்லை
என் வாசலை அடைப்பவன் இல்லை
இல்லை இல்லை இல்லை
என்னை எதிர்ப்பவன் பூமியில் இல்லை

1. கர்த்தரை போல பரிசுத்தம் உள்ளவர்
பூமியில் இல்லையே
கர்த்தரை போல வல்லமை உள்ளவர்
பூமியில் இல்லையே
பலவானின் வில்லை உடைத்து
கீழே தள்ளுகிறார்
தள்ளாடும் யாவரையும்
உயரத்தில் நிறுத்துகிறார்

2. நாசியின் சுவாசத்தால் செங்கடலை
அவர் இரண்டாய் பிளந்தவராம்
பார்வோன் சேனையை தப்பவிடாமல்
கடலில் அழித்தவராம்
மரண இருள் சூழ்ந்திடும் வேளையில்
பஸ்கா ஆட்டுக்குட்டி
வாதை எங்கள் கூடாரத்தை
என்றும் அணுகாது

3. தேவனை துதிக்கும் துதியாலே
எரிக்கோ விழுந்தது-பவுலும் சீலாவும்
துதித்த போது சிறையும் அதிர்ந்தது
துதியாலே சாத்தானை கீழே தள்ளிவிடுவோம்
திறந்த வாசல் நம் முன்னே
கொடியை ஏற்றிடுவோம்

Tamil Hymns

1690. நீர் நல்லவர் என்பதில் சந்தேகமில்லை

நீர் நல்லவர் என்பதில் சந்தேகமில்லை
பெரியவர் என்பதில் மாற்றமேயில்லை
உயர்ந்தவர் என்பதில் மாற்றமில்லை
கல்லறை திறந்தது உண்மை தான்
உயிருடன் எழுந்ததும் உண்மை தான்
பரலோகம் சென்றது உண்மை தான்
மீண்டும் வருவது உண்மை தான்
உண்மை தானே உண்மை தானே

1. எனக்காக சிலுவையில் மரித்ததும் உண்மை
காலாலே சாத்தானை மிதித்தது உன்மை
இரத்தத்தால் என்னை மீட்டதும் உண்மை
இரட்சிப்பை எனக்கு கொடுத்தது உண்மை
உண்மை தானே உண்மை தானே

2. ஆதியில் வார்த்தையாய் இருந்தவர் நீரே
மாம்சத்தில் உலகில் வந்தவர் நீரே
தேசங்கள் தேடிடும் பிரபலமும் நீரே
ராஜாக்கள் நடுங்கிடும் ராஜனும் நீரே
ஈடற்றவரே, இனையற்றவரே

Tamil Hymns

1691. நீர் நீரே பெரியவர் நீர் ஒருவர் நீரே

நீர் நீரே பெரியவர்
நீர் ஒருவர் நீரே பெரியவர்
மிகவும் மிகவும் பெரியவர்
நீர் மிகவும் பெரியவர்

1. ஏல்ரொயி என்னைக் காண்பவரே
ஏல்ஷடாய் சர்வ வல்லவரே
ஏலோகிம் எங்கும் உள்ளவரே
யெஷீவா ஆட்டுக் குட்டியானவரே

கரங்களை உயர்த்தி துதிபலி செலுத்தி
புது ஒலியெழுப்பி ஆராதிக்கின்றோம்
பாடல்கள் பாடி ஆட்டங்கள் ஆடி
கூட்டங்கள் கூடி ஆராதிக்கின்றோம்

2. மலைகளை பெயர்த்து தரையாக்குவீர்
பள்ளத்தை நினைத்து சமமாக்குவீர்
கரடுகள் முரடுகள் நேராக்குவீர்
செம்மையான பாதையிலே நடத்துவீர்

3. வீசும் புயல் காற்றை படைத்தவரே
தூதர் துதிக்குள்ளே இருப்பவரே
மொத்த உலகத்தை ஆள்பவரே
எங்கள் இதயத்தில் வாழ்பவரே

Tamil Hymns

1692. நீர் மாத்ரம் இல்லையென்றால்

நீர் மாத்ரம் இல்லையென்றால்
மண்ணாய் போயிருப்பேன்
நீர் மாத்ரம் இல்லையென்றால்
வேரற்று போயிருப்பேன்

என் மீது கிருபை வைத்ததினால்
உயிரோடு இருக்கச் செய்தீரே
என் மீது கிருபை வைத்ததினால்
உயரத்தில் ஏறச் செய்தீரே

என் தகப்பனே என் இயேசுவே-உம்மை
தொழுகிறோம் உந்தன் நாமத்தை
இம்மைக்கும் மறுமைக்கும் தகப்பனே
என்றென்றும் கைவிடாத நேசரே

1. காணாமல் போன ஆட்டினைப் போல
திசை தெரியாமல் அலைந்தேனே
போனேனே - என்னையும் தேடி
வந்தீரையா ஜீவனை கொடுத்து மீட்டீரே

2. துடைத்துப் போட்ட கந்தையைப் போல
குப்பையில் நானும் கிடந்தேனே
நாற்றமெல்லாம் நீக்கினீரே
வாசனையாய் மாற்றினீரே
ராஜாக்களோடு அமரச் செய்து
பிரபுக்கள் மத்தியில் உயர்த்தினீரே

3. உடைந்து சிதைந்த பாத்திரம் போல
விரும்புவாரற்று கிடந்தேனே
சிதைந்த என்னையும் தூக்கினீரே
கன்மலை மேலே நிறுத்தினீரே
உமது காருண்யம் பெரியவனாய்
உமது கிருபையால் உயர்த்தினீரே

Tamil Hymns

1693. நீர் மாத்ரம் எனக்கு

நீர் மாத்ரம் எனக்கு நீர் மாத்ரம் எனக்கு (2)
நீரல்லால் உலகில் யாருண்டு எனக்கு
மாயையான உலகில் நீர் மாத்ரம் எனக்கு
மாறிடும் உலகில் நீர் மாத்ரம் எனக்கு

1. அரணும் என் கோட்டையும்
நீர் மாத்ரம் எனக்கு - கோட்டையும்
என் துருகமும் நீர் மாத்ரம் எனக்கு
துருகமும் கேடகமும் நீர் மாத்ரம் எனக்கு
கேடகமும் கன்மலையும்
நீர் மாத்ரம் எனக்கு

2. ஆசை வேறு உம்மையன்றி
யாருமில்லை எனக்கு - ஆதரவு
உம்மையன்றி யாருமில்லை எனக்கு
ஆனந்தம் உம்மையன்றி
ஒன்றுமில்லை எனக்கு - எண்ணங்களில்
உம்மையன்றி யாருமில்லை எனக்கு

Tamil Hymns

1694. நீர் வல்லவர் மா வல்லவர்

1. என் ஆண்டவா ! உம் கர வல்ல கிரியை
உலகெங்கும் நான் கண்டு வியந்தேன்;
விண்மீன்களும் பேரிடி முழக்கமும்
உம் வல்லமை எடுத்துரைக்குதே.

என் ஆத்துமா மகிழ்ந்து பாடுதே!
நீர் வல்லவர் ! மா வல்லவர் !
போற்றிடுவேன் என் அன்பின் ரட்சகா !
நீர் வல்லவர் ! மா வல்லவர் !

2. காடுகளின் பசும் மரங்கள் மீது
கானம் பாடும் பறவைக் கூட்டங்கள்;
உயர் மலை உன்னத காட்சி கண்டேன்,
தென்றல் காற்றும் தெளிநீரோடையும் --- என்

3. தேவ பிதா தம் ஏக மைந்தனையும்
மரிக்கவே அனுப்பி வைத்தாரே;
சிலுவையில் என் பாவ பாரமேற்று
ரத்தம் சிந்தி பாவ பலியானார் --- என்

4. மகிமையாய் தூதர் ஆர்ப்பரிப்போடு
என்னைச் சேர்க்க இயேசு வருவாரே
உள்ளம் பொங்கி மகிழ்ச்சியோடு நானும்
வல்லவரை வணங்கித் தொழுவேன் --- என்

Tamil Hymns

1695. நீர் வாரும் கர்த்தாவே

1. நீர் வாரும் கர்த்தாவே
ராக்காலம் சென்று போம்
மா அருணோதயம் காணவே
ஆனந்தம் ஆகுவோம்.

2. நீர் வாரும் பக்தர்கள்
களைத்துச் சோர்கின்றார்
நல்லாவி மணவாட்டியும்
நீர் வாரும் என்கிறார்

3. நீர் வாரும் சிஷ்டியும்
தான் படும் துன்பத்தால்
ஏகோபித்தேங்கி ஆவலாய்
தவித்து நிற்பதால்

4. நீர் வாரும் ஆண்டவா
மாற்றாரைச் சந்திப்பீர்
இருப்புக்கோலால் தண்டித்து
கீழாக்கிப் போடுவீர்

5. நீர் வாரும் இயேசுவே
பயிர் முதிர்ந்ததே
உம் அரிவாளை நீட்டுமேன்
மா நீதிபரரே

6. நீர் வாரும் வையத்தில்
பேர் வாழ்வை நாட்டுவீர்
பாழான பூமி முற்றிலும்
நீர் புதிதாக்குவீர்

7. நீர் வாரும் ராஜாவே
பூலோகம் ஆளுவீர்
நீங்காத சமாதானத்தின்
செங்கோல் செலுத்துவீர்.

1696. நீர் வாழ்கவே இயேசுவே நேசரே

1. நேசரே உம்திரு பாதம் அமர்ந்தேன்
நிம்மதி நிம்மதியே
ஆர்வமுடனே பாடித் துதிப்பேன்
ஆனந்தம் ஆனந்தமே

அடைக்கலமே அதிசயமே
ஆராதனை ஆராதனை

2. உம் வல்ல செயல்கள் நினைத்து நினைத்து
உள்ளமே பொங்குதய்யா
நல்லவரே நன்மை செய்தவரே
நன்றி நன்றி ஐயா

வல்லவரே நல்லவரே
ஆராதனை ஆராதனை

3. பலியான செம்மறி பாவங்களெல்லாம்
சுமந்து தீர்த்தவரே
பரிசுத்த இரத்தம் எனக்காக அல்லோ
பாக்கியம் பாக்கியமே

பரிசுத்தரே படைத்தவரே
ஆராதனை ஆராதனை

4. எத்தனை இன்னல்கள் என் வாழ்வில் வந்தாலும்
உம்மை பிரியேன் ஐயா
சித்தமே செய்து சாட்சியாய் வாழ்வேன்
நிச்சயம் நிச்சயமே

இரட்சகரே இயேசு நாதா
ஆராதனை ஆராதனை

Tamil Hymns

1697. நீர் ஜீவ அப்பம் பஞ்சத்தில்

1. நீர் ஜீவ அப்பம்; பஞ்சத்தில்
உம்மால் என் பசி ஆறும்;
நான் போம் வனாந்தரங்களில்
என் உள்ளம் உம்மை நாடும்;
பிதாவின் ஈவாம் மன்னாவே
நீர் என்னை பாவ இச்சைக்கே
விலக்கிக் காத்துக் கொள்ளும்.

2. நீர் ஜீவ ஊற்று; உம்மாலே
என் ஆத்மத் தாகம் தீரும்.
நீர் தரும் ஈவு நித்தமே
சுரக்கும் தண்ணீராகும்.
நீரூற்றாய் என்னில் ஊறுமேன்,
நிறைவாய் நித்தம் தாருமேன்
ஆரோக்கியமும் சீரும்.

3. நீர் என்னை ஜோடிக்கும் உடை,
நீர் என் அலங்கரிப்பு;
நாம் உம்முடைய நீதியை
அணிவதென் விருப்பு;
பூலோகத்தின் சிங்காரமாம்
விநோத சம்பிரமம் எல்லாம்
என் ஆவிக்கு வெறுப்பு.

4. நீர் நான் சுகித்து தங்கிடும்
அரண்மனையும் வீடும்;
புயல் அடித்தும் விருதா,
பேய் வீணாய் என்னைச் சீறும்;
நான் உம்மில் நிற்பேன் ஆகையால்
கெடேன்; பொல்லார் எழும்பினால்
நீர் என் வழக்கைத் தீரும்.

5. என் மேய்ப்பராய் இருக்கிறீர்,
என் மேய்ச்சலும் நீர்தாமே;
காணாமல் போன என்னை நீர்
அன்பாக மீட்போராமே;
இவ்வேழை ஆட்டை என்றைக்கும்
நீர் விலக விடாதேயும்
நான் உம்முடையோனாமே.

6. நீரே நான் என்றும் வாஞ்சிக்கும்
மா நேசமுள்ள நாதர்;

Tamil Hymns

நீரே என் ஆசாரியரும்
பலியுமான கர்த்தர்;
நீர் என்னை ஆளும் ராஜாவும்
உம்மோடே எந்தப் போரிலும்
ஜெயிப்பேன், மா சமர்த்தர்.

1698. நீர்தான் என் தஞ்சமே நீர்தான் என்

1. நீர்தான் என் தஞ்சமே
நீர்தான் என் கோட்டையே
துன்ப வேளை தூக்கி என்னை
தோளில் சுமந்தவரே

உமக்கே ஆராதனை
உமக்கே ஆராதனை
இயேசையா உமக்கே ஆராதனை
உமக்கே ஆராதனை

2. நீர்தான் என் பெலனே
நீர்தான் என் சுகமே
கண்ணீர் துடைத்து
கவலை போக்கி ஆறுதல் அளிப்பவரே

3. நீரே என் ஆதாரமே
நீரே என் துணையாளரே
சோர்ந்திடும் நேரம் சார்ந்திட உந்தன்
கிருபை ஈந்தவரே

4. இயேசுவே உம்மை உயர்த்திடுவேன்
என் நேசரே உம்மை பாடிடுவேன்
நீர் செய்த எல்லா நன்மைகட்காக
உமக்கே ஆராதனை

Tamil Hymns

1699. நீயேகோவாயீரே தந்தையாம்

1. நீ யேகோவா யீரே தந்தையாம் தெய்வம்
நீர் மாத்ரம் போதும் எனக்கு
யேகோவா ரப்பா சுகம் தரும் தெய்வம்
உம் தழும்புகளால் சுகமானோம்

கோவா ஷம்மா என்கூட இருப்பீர்
என் தேவை எல்லாம் சந்திப்பீர்
நீர் மாத்ரம் போதும், நீர் மாத்ரம் போதும்
நீர் மாத்ரம் போதும் எனக்கு (3)

2. யேகோவா ஏலோயீம் சிருஷ்டிப்பின் தேவனே
உம் வார்த்தையால் உருவாக்கினீர்
யேகோவா பரிசுத்தர் உன்னதர் நீரே
உம்மைப் போல் வேறு தேவனில்லை

யேகோவா ஷாலோம் உம் சமாதானம்
தந்தீர் என் உள்ளத்தினில்

3. இயேசுவே நீரே என் ஆத்ம நேசர்
என் மேல் எவ்வள வன்பு கூர்ந்தீர்
என்னையே மீட்க உம்மையே தந்தீர்
உம் அன்பிற்கு இணையில்லையே

என் வாழ்நாள் முழுதும் உமக்காக
வாழ்வேன் நீரே என்றென்றும் போதும்

Tamil Hymns

1700. நிலவும் தூங்கும் மலரும் தூங்கும்

நிலவும் தூங்கும் மலரும் தூங்கும் வேளையில்
கண்ணுறக்கம் இல்லாமல் ஏங்கித் தவிப்பதேன்
இதயமே இதயமே - காத்திடக்
கடவுள் உண்டு கலங்கிட வேண்டாம்
உன்னைத் தாங்கும் இறைவன்
என்றும் கைநெகிழ்வதில்லையே
உன்னைப் பார்க்கும் இறைவன்
அன்பு கண்ணுறங்கவில்லையே

இதயமே இதயமே காத்திடக்
கடவுள் உண்டு கலங்கிட வேண்டாம்

1. சொந்தமில்லை பந்தமில்லை
என்று நாளும் ஏன் கலக்கம் - இருளிலும்
புயலிலும் வாழ்ந்துவிட ஏன் தயக்கம் --2
கண்களை இழந்தவரும்
கால்களைப் பிரிந்தவரும் - மண்ணினில்
நடப்பது பார் நம்பிக்கைக் கால்களினால்
வானத்துப் பறவையைப் பார்
விதைப்பதில்லை அறுப்பதில்லை
வயல்வெளி மலர்களைப் பார்
உழைப்பதில்லை நூற்பதில்லை
இறைவன் உனைக் காப்பார் நீ கலங்காதே --2

2. வருத்தும் சுமைகளெல்லாம்
சுமந்திடக் காத்திருப்பான்
வாழ்வு தரும் வார்த்தைகளால்
ஆறுதல் அளித்திடுவான் --2
நல்லவர்க்கும் தீயவர்க்கும்
அருள்மழை பொழிந்திடுவான்
வாழ்வின் வைகறையில்
விடியலாய் எழுந்திடுவான்
வயல்வெளி மலர்களைப் போல்
வாடிவிடும் வாழ்க்கை இது
நன்னெறி வாழ்க்கை ஒன்றே
கூடிவரும் செல்வமது - இறைவன்
உனைக் காப்பார் நீ கலங்காதே

Tamil Hymns

1701. நெஞ்சத்திலே தூய்மையுண்டோ

நெஞ்சத்திலே தூய்மையுண்டோ
இயேசு வருகிறார்
நொறுங்குண்ட நெஞ்சத்தையே
இயேசு அழைக்கிறார்

1. வருந்தி சுமக்கும் பாவம் - உன்னைக்
கொடிய இருளில் சேர்க்கும்
செய்த பாவம் இனி போதும்
அவர் பாதம் வந்து சேரும்

2. குருதி சிந்தும் நெஞ்சம் - உன்னைக்
கூர்ந்து நோக்கும் கண்கள்
செய்த பாவம் இனி போதும்
அவர் பாதம் வந்து சேரும்

Tamil Hymns

1702. நெஞ்சமே கெத்சேமனேக்கு

1. நெஞ்சமே, கெத்சேமனேக்கு நீ நடந்து வந்திடாயோ?
சஞ்சலத்தால் நெஞ்சுருகித் தயங்குகின்றார் ஆண்டவனார்.

2. ஆத்துமத்தில் வாதை மிஞ்சி, அங்கலாய்த்து வாடுகின்றார்,
தேற்றுவார் இங்காருமின்றித், தியங்குகின்றார் ஆண்டவனார்.

3. தேவ கோபத் தீச்சூளையில் சிந்தை நொந்து வெந்துருகி
ஆவலாய்த் தரையில் வீழ்ந்து அழுது ஜெபம் செய்கின்றாரே.

4. அப்பா பிதாவே, இப்பாத்ரம் அகலச்செய்யும் சித்தமானால்,
எப்படியும் நின் சித்தம்போல் எனக்காகட்டும் என்கின்றாரே.

5. இரத்த வேர்வையால் தேகம் மெத்த நனைந்திருக்குதே.
குற்றம் ஒன்றும் செய்திடாத கொற்றவர்க்கிவ் வாதை ஏனோ?

6. வானத்திலிருந்தோர் துதன் வந்தவரைப் பலப்படுத்தத்
தான் சஞ்சலத்தோடு முழந்தாள் நின்று வேண்டுகின்றார்.

7. தாங்கொணா நித்திரைகொண்டு தன்சீஷர்கள் உறங்கிவிழ
ஆங்கவர் தனித்திருந்து அங்கலாய்த்து வாடுகின்றார்.

Tamil Hymns

1703. நெஞ்சமே தள்ளாடி நொந்து

நெஞ்சமே தள்ளாடி நொந்து
நீ கலங்காதே - கிறிஸ்தேசுவே
உனக்கு நல்ல நேச துணையே

1. தஞ்சமான தோழர்களும்
வஞ்சகமாக - உன்னை
தாககியே பகைஞராக நின்ற போதிலும்

2. அன்னை தந்தை ஆனவரும் பின்ன
பேதமாய் - உனை அங்கலாய்க்க
விட்டெளிஞன் ஆன போதிலும்

3. ஜீவனம் இழந்து துன்பம்
மேவினாலும், - மா சிறுமையாய்ச்
சகிக்கொணா வறுமை கொண்டாலும்

4. பஞ்சமும் பசியும் வந்து
கெஞ்ச வைத்தாலும் - மிகுபாரமாய்ச்
சுமை உன்மேலே பற்றி நின்றாலும்

5. கெட்ட நோயிலும் நீ அகப்
பட்டுழன்றாலும் - எந்தக் கேடுகள்
உன்மேலே வந்து மூடினாலும்

6. ஆன வீடு தானும் கொள்ளை
ஆன போதிலும் - கிறிஸ்
தண்ணலே உனக்கெல்லாம்
என்றெண்ணி நிறைவாய்

Tamil Hymns

1704. நெஞ்சமே வீணாய் சோர்ந்து போகாதே

நெஞ்சமே வீணாய் சோர்ந்து போகாதே
தஞ்சம் இயேசு இருக்கையில்
தளர்ந்து விடாதே
வஞ்சகன் வீசும் வலையில் விழாதே
பஞ்சகாயன் உன்னை பாதுகாப்பாரே

1. சோதனை பலவும் சூழ்ந்திடும் நேரம்
வேதனை விதம் விதம் வந்திடுங்காலம்
தீதனைத்தும் திருச்சிலுவையில் தொங்கும்
நாதனை நினைத்திடில் நாசமாய் போகும்

2. பெற்றவரும் பெண்டு பிள்ளைகளும் மிக
உற்றவரும் உயிர் தோழர்களானோரும்
பற்றற்றவராய்ப் பழகிடும் போதும்
மற்றவர் செய்கையால் மனங்கலங்காதே

3. கஷ்டங்கள் வருங்கால் களிப்பாக எண்ணு
இஷ்டமுடன் ஜெபம் எந்நேரம் பண்ணு
நஷ்டங்கள் வந்தாலும் நலமென்று சொல்லு
துஷ்டனின் சூட்சியை தூயநாள் வெல்லு

4. நியாயமில்லாமல் குற்றம் காண்போர்கள்
நியாயத் தீர்ப்பின் நாள் வெட்கங் கொள்வார்கள்
தூயவன் முன் உன் சிறு இருதயம்
மாயமும் மாசுமில்லானதால் போதும்

5. செய்ததும் சொன்னதும் இல்லென்று மறுப்பார்
செய்யாததும் சொல்லாததும் ஆம் என்று உரைப்பார்
பொய்யிலும் புரட்டிலும் புதைந்தது உலகம்
மெய்யுடை யான் இயேசு மீது வைபாரம்

6. இயேசுவின் சிந்தை இருந்திட வேண்டும்
இயேசுவின் ஆவியில் இயங்கிட வேண்டும்
இயேசுவைப் போல் எல்லாம் சகித்திட வேண்டும்
இயேசுவின் கிருபையைப் பெற்றிட வேண்டும்

Tamil Hymns

1705. நெஞ்சமே நீ ஏன் கலங்குகிறாய்

நெஞ்சமே நீ ஏன் கலங்குகிறாய்
தேவனை நோக்கி அமர்ந்திரு

நீ எதிர்பார்க்கும் நன்மைகள்
விரைவில் வருமே வந்திடுமே

1. உனக்குள் வாழ்பவர் உருவாக்கி மகிழ்பவர்
உன்னோடு பேசுகிறார்
பயப்படாதே உன்னை மீட்டுக்கொண்டேன்
பெயர் சொல்லி நான் அழைத்தேன்
எனக்கே நீ சொந்தம்

2. எனது பார்வையில்
விலையேறப் பெற்றவன் நீ
மதிப்பிற்குரியவன் நீ
பேரன்பினால் இழுத்துக் கொண்டேன்
அன்பிற்கு எல்லை இல்லை
கிருபை தொடர்கின்றது

3. உன் ஜீவனுக்கீடாய் மக்களினங்கள்
ஜனங்கள் தந்திடுவேன்
கிழக்கு மேற்கு திசைகளில் இருந்து
திரள்கூட்டம் வந்திடுமே

4. வடபுறம் நோக்கி விட்டுவிடு என்று
கட்டளையிடு மகனே (மகளே)
தென்புறம் நோக்கி கொடு கொடு என்று
ஆணையிடு மகனே (மகளே)

5. என்னைக் கேளும் நாடுகளை நான்
சொந்தமாக்கிடுவேன்
பூவுலகம் அதன் எல்லைகள் எல்லாம்
உனது உடைமையாகும்

Tamil Hymns

1706. நெஞ்சே நீ கலங்காதே

நெஞ்சே நீ கலங்காதே - சீயோன்
மலையின் இரட்சகனை மறவாதே
நான் என் செய்வேனென்று

வஞ்சர் பகை செய்தாலும்
வாரா வினை பெய்தாலும்

1. பட்டயம் பஞ்சம் வந்தாலும்
அதிகமான பாடு நோவு மிகுந்தாலும்
மட்டிலா வறுமைப் பட்டாலும்
மனுஷர் எல்லாம் கைவிட்டாலும்

2. சின்னத்தனம் எண்ணினாலும்
நீ நன்மை செய்யத் தீமை பிறர் பண்ணினாலும்
பின்னபேதகம் சொன்னாலும்
வந்தணாப் பினாலும்

3. கள்ளன் என்று பிடித்தாலும் - விலங்கு
போட்டுக் காவலில் வைத் தடித்தாலும்,
வெள்ளம் புரண்டு தலை
மீதில் அலைமொதினாலும்

Tamil Hymns

1707. நெருக்கடி வேலைளில் பதிலளித்து

நெருக்கடி வேலைளில் பதிலளித்து
பாதுகாத்து நடத்திடுவார்
உன்னோடு இருந்து ஆதரித்து
தினமும் உதவிடுவார்

1. நீ செலுத்தும் காணிக்கைகள்
நினைவு கூர்ந்திடுவார்
நன்றி பலி அனைத்தையுமே
பிரியமாய் ஏற்றுக்கொள்வார்

2. உன் மனம் விரும்புவதை
உனக்குத் தந்திடுவார்
உனது திட்டங்களெல்லாம்
நிறைவேற்றி முடித்திடுவார்

3. உனக்கு வரும் வெற்றியைக் கண்டு
மகிழ்ச்சியில் ஆர்ப்பரிப்போம்
நம் தேவன் நாமத்திலே
வெற்றிக் கொடி நாட்டிடுவோம்

4. இரதங்களை நம்பும் மனிதர்
இடறிவிழுந்தார்கள்
தேவனை நம்பும் நாமோ
நிமிர்ந்து நின்றிடுவோம்

Tamil Hymns

1708. நேசரின் பாதம் அமர்ந்து நான்

நேசரின் பாதம் அமர்ந்து நான்
ஜெபிக்கையிலே துன்பம் மறைந்து போகும்
என் வாழ்வில் இன்பம் கலந்து வரும்
அற்புதம் நடக்கும் என் வாழ்வில்
அதிசயம் பிறக்கும் என் வாழ்வில் -2

1. யோபை போல புடமிட்டாலும்
இயேசுவே நீர் தான் என் தெய்வம்
அன்னாளைப் போல நிந்தனை வந்தாலும்
இயேசுவே நீர் தான் என் தெய்வம்

2. சிங்கத்தின் குகை என் தங்கும் வீடானாலும்
இயேசுவே நீர் தான் என் தெய்வம்
என் அங்ககத்தின் உறுப்புகள் உருவிழந்தாலும்
இயேசுவே நீர் தான் என் தெய்வம்

3. வனாந்திர பாதை வறண்ட என் ஆத்மா
ஆனாலும் நீர் தான் என் தெய்வம்
இனிய கானம் இசை தனை தந்து
பாட வைக்கும் என் தெய்வம்

1709. நேசரே உம் திருபாதம்

1. நேசரே உம்திரு பாதம் அமர்ந்தேன்
நிம்மதி நிம்மதியே
ஆர்வமுடனே பாடித் துதிப்பேன்
ஆனந்தம் ஆனந்தமே

அடைக்கலமே அதிசயமே
ஆராதனை ஆராதனை

2. உம் வல்ல செயல்கள் நினைத்து நினைத்து
உள்ளமே பொங்குதய்யா
நல்லவரே நன்மை செய்தவரே
நன்றி நன்றி ஐயா

வல்லவரே நல்லவரே ஆராதனை ஆராதனை

3. பலியான செம்மறி பாவங்களெல்லாம்
சுமந்து தீர்த்தவரே
பரிசுத்த இரத்தம் எனக்காக அல்லோ
பாக்கியம் பாக்கியமே

பரிசுத்தரே படைத்தவரே ஆராதனை ஆராதனை

4. எத்தனை இன்னல்கள் என் வாழ்வில்
வந்தாலும் உம்மை பிரியேன் ஐயா
சித்தமே செய்து சாட்சியாய் வாழ்வேன்
நிச்சயம் நிச்சயமே

இரட்சகரே இயேசு நாதா ஆராதனை ஆராதனை

Tamil Hymns

1710. நேசிக்கிறேன் உம்மைத்தானே ஐயா

நேசிக்கிறேன் உம்மைத்தானே ஐயா
நிலையில்லாத இந்த உலகத்திலே
நேசிக்கிறேன் உம்மைத்தானே ஐயா
உம்மைத்தானே இயேசையா

1. ஒவ்வொரு நாளும் எனது கண் முன்
உம்மைத்தான் நிறுத்தியுள்ளேன்
வலப்பக்கத்தில் இருப்பதனால் - என்(2)
அசைக்கப்படுவதில்லை

2. உம்மை அல்லாமல் வேறே விருப்பம்
உள்ளத்தில் இல்லையே
நிம்மதியே நிரந்தரமே
நினைவெல்லாம் ஆள்பவரே

3. ஐயா உம் தாகம் எனது ஏக்கம்
அடிமை நான் கதறுகிறேன்
என் ஜனங்கள் அறியணுமே
இரட்சகர் உம்மை தேடணுமே

4. உமது வேதம் எனது மகிழ்ச்சி
ஓய்வின்றி தியானிக்கின்றேன்
ஆற்றங்கரை மரமாக
அயராமல் கனி கொடுப்பேன்

1711. நேசிக்கும் நேசர் இயேசு உன்னை

நேசிக்கும் நேசர் இயேசு உன்னை
காத்து நடத்திடுவார்
கலங்காதே திகையாதே
கர்த்தர் இயேசு உண்டு

1. உன்னதங்களிலே வாசம் செய்யும்
உன்னதமான தேவன் உண்டு
உந்தன் கவலையை அவரிடம் சொன்னால்
உடனே பதிலளிப்பார்-உனக்கு

2. பாரினில் உழலும் பாவியாம் உனக்கு
பரிந்து பேசும் இயேசு உண்டு
பரன் பாதம் தேடியே வந்தால்
பரிவாய் பதிலளிப்பார்

3. அன்பாக உன்னை நன்றாக நடத்தும்
இன்ப தேவ ஆவி உண்டு
துன்ப சுமைதனை அவர் பாதம் வைத்தால்
கனிவாய் பதிலளிப்பார்

4. வானமும் பூமியும் நிலைமாறினாலும்
என்றும் மாறா வார்த்தை உண்டு
அதிகாலையில் அவர் முகம் கண்டால்
அன்பாய் பதிலளிப்பார்

Tamil Hymns

1712. நேற்றும் இன்றும் நாளை என்றும்

நேற்றும் இன்றும் நாளை என்றும் மாறாதவர்
நம்பினோரை என்றும் அவர் கைவிடாதவர் - 2

நம்பத்தக்கவர் உண்மையுள்ளவர்
சொன்னதை செய்பவர் - 2

1. பொய் சொல்ல ஒரு மனுசன் அல்ல
மனமாற மனுபுத்திரரமல்ல - நம்பத்தக்கவர்

2. விசுவாசத்தை துவக்கினவர்
இறுதிவரை வழி நடத்தி செல்வார் - நம்பத்தக்கவர்

3 கரம்பிடித்து அவர் என்னை கடைசி வரை
கறை சேர்த்து மகிழ்ந்திடுவார்

Tamil Hymns

1713. நோக்காதே நீ நோக்காதே

நோக்காதே நீ நோக்காதே
உந்தன் பாரம் அதிகரிக்குமே
நோக்காதே நீ நோக்காதே
உன்னை பலவினப்படுத்துமையா-2

1. சோகமான நினைவுகள்
பிறர் செய்த தீமைகள் திரும்பி பார்க்காதே
சோகமான நினைவுகள்
பிறர் செய்த தீமைகள் திரும்பி பார்க்காதே
நன்மையாகவே நான் மாற்றிடுவேன் -2

2. செய்த கடந்த நாள் தவறுகள்
மன்னித்து மறந்ததால்
திரும்பவும் நினையாதே
மன்னித்து மறந்ததால்
திரும்பவும் நினையாதே

Tamil Hymns

1714. பகலோன் கதிர்போலுமே இயேசுவின்

1. பகலோன் கதிர்போலுமே
இயேசுவின் ராஜரீகமே
பூலோகத்தில் வியாபிக்கும்
நீடூழி காலம் வர்த்திக்கும்

2. பற்பல ஜாதி தேசத்தார்
அற்புத அன்பைப் போற்றுவார்
பாலரும் இன்ப ஓசையாய்
ஆராதிப்பார் சந்தோஷமாய்

3. நல் மீட்பர் ராஜ்யம் எங்குமே
சிரேஷ்ட பாக்கியம் தங்குமே;
துன்புற்றோர் ஆறித் தேறுவார்,
திக்கற்றோர் வாழ்ந்து பூரிப்பார்

4. பூலோக மாந்தர் யாவரும்
வானோரின் சேனைத் திரளும்
சாஷ்டாங்கம் செய்து போற்றுவார்,
"நீர் வாழ்க, ராயரே" என்பர்

1715. பகல் நேரப் பாடல் நீரே இரவெல்லாம்

பகல் நேரப் பாடல் நீரே
இரவெல்லாம் கனவு நீரே
மேலான சந்தோஷம் நீரே
நாளெல்லாம் உன்மைப்பாடுவேன்

1.எருசலேமே உனை மறந்தால்
வலக்கரம் செயல் இழக்கும்
மகிழ்ச்சியின் மகுடமாய் கருதாவிடில் என்
நாவு ஒட்டிக்கொள்ளும்
மகிழ்ச்சியின் மகுடம் நீர்தானய்யா
மணவாளரே உமை மறவேன் (2)

2.கவலைகள் பெருகி கலங்கும்போது
மகிழ்வித்தீர் உம் அன்பினால்
கால்கள் சறுக்கி தடுமாறும்போது
தாங்கினீர் கிருபையினால் - மகிழ்ச்சி

3.தாய்மடி தவழும் குழந்தைபோல
மகிழ்ச்சியாய் இருக்கின்றேன்
இப்போதும் எப்போதும் நம்பியுள்ளேன்
உம்மையே நம்பியுள்ளேன் - மகிழ்ச்சி

4.பார்வையில் செருக்கு எனக்கில்லை
இறுமாப்பு உள்ளத்தில் என்றுமில்லை
பயனற்ற உலகத்தின் செயல்களிலே
பங்கு பெறுவதில்லை

Tamil Hymns

1716. பக்தருடன் பாடுவேன்

பக்தருடன் பாடுவேன் பரம சபை
முக்தர்குழாம் கூடுவேன்

அன்பால் அணைக்கும்
அருள்நாதன் மார்பினில்
இன்பம் நுகர்ந்
திளைப்பாறுவோர் கூட நான்

1. அன்பு அழியாதல்லோ அவ்வண்ணமே
அன்பர் என் இன்பர்களும் - பொன்னடிப்
பூமானின் புத்துயிர் பெற்றதால்
என்னுடன் தங்குவார் எண்ணூழி காலமாய்

2. இகமும் பரமும் ஒன்றே இவ்வடியார்க்கு
அகமும் ஆண்டவன் அடியே
சுகமும் நற்செல்வமும் சுற்றமும் உற்றமும்,
இகலில்லா ரட்சகன் இன்பப் பொற்பாதமே

3. தாயின் தயவுடையதாய்த் தமியன் நின்
சேயன் கண் மூடுகையில் - பாயொளிப்
பசும் பொன்னே பக்தர் சிந்தாமணி
தூயா திருப்பாதத் தரிசனம் தந்தருள்

Tamil Hymns

1717. பக்தரே வாரும்

1. பக்தரே வாரும் ஆசை ஆவலோடும்
நீர் பாரும், நீர் பாரும் இப்பாலனை
வானோரின் ராஜன் கிறிஸ்து பிறந்தாரே

சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும் இயேசுவை

2. மேலோகத்தாரே மா கெம்பீரத்தோடு
ஜென்ம நற்செய்தி பாடிப்போற்றுமேன்
விண்ணில் கர்த்தா நீர் மா மகிமை ஏற்பீர்

3. தேவாதி தேவா ஜோதியில் ஜோதி
மானிட தன்மை நீர் வெறுத்திலீர்
தெய்வ குமாரன் ஒப்பில்லாத மைந்தன்

4. இயேசுவே வாழ்க இன்று ஜென்மித்தீரே
புகழும் ஸ்துதியும் உண்டாகவும்
தந்தையின் வார்த்தை மாம்சம் ஆனார் பாரும்

Tamil Hymns

1718. பசுமையான புல்வெளியில் படுக்க

பசுமையான புல்வெளியில் படுக்க வைப்பவரே
அமைதியான தண்ணீரண்டை அழைத்துச் செல்பவரே
நோயில்லாத சுகவாழ்வு எனக்கு தந்தவரே
கரம்பிடித்து கடனில்லாமல் நடத்திச் செல்பவரே
என் மேய்ப்பவரே…நல் ஆயனே
எனக்கொன்றும் குறையில்லப்பா

1. கரங்களாலே அணைத்துக் கொண்டு
சுமந்து செல்கிறீர்
மறந்திடாமல் உணவு கொடுத்து
பெலன் தருகிறீர்

2. புதிய உயிர் தினம் தினம் எனக்குத் தருகிறீர்
உம் பெயருக்கேற்ப பரிசுத்தமாய் நடத்தி செல்கிறீர்

3. மரண இருள் பள்ளத்தாக்கில் நடக்க நேர்ந்தாலும்
அப்பா நீங்க இருப்பதாலே எனக்கு பயமில்ல

4. ஜீவனுள்ள நாட்களெல்லாம் நன்மை தொடருமே
தேவன் வீட்டில் தினம் தினம் தங்கி மகிழ்வேனே

5. எனது உள்ளம் அபிஷேகத்தால் நிரம்பி வழியுதே
எல்லா நாளும் நன்றிப் பாடல் பாடி மகிழுதே

7. எதிரிகளின் கண் முன்னே விருந்து தருகின்றீர்
எனது தலையில் நறுமணத் தைலம் பூசுகிறீர்

Tamil Hymns

1719. பண்டிகை நாள் மகிழ் கொண்டாடுவோம்

1. பண்டிகை நாள் மகிழ் கொண்டாடுவோம்
வென்றுயிர்த்தோரைப் போற்றிப் பாடுவோம்
பண்டிகை நாள் மகிழ் கொண்டாடுவோம்

2. அருளாம் நாதர் உயிர்த்தெழும் காலம்
மரம் துளிர் விடும் நல் வசந்தம்

3. பூலோகெங்கும் நறுமலர் மணம்
மேலோகெங்கும் மின் ஜோதியின் மயம்

4. முளைத்துப் பூக்கும் பூண்டு புல்களும்
களிப்பாய் கர்த்தர் ஜெயித்தார் என்னும்

5. சாத்தான் தொலைந்ததால் விண்மன், ஜலம்
கீர்த்தனம் பாடிக் களி கூர்ந்திடும்

6. குருசினில் தொங்கினோர் நம் கடவுள்
சிருஷ்டி நாம் தொழுவோம் வாருங்கள்

7. அநாதி நித்திய தெய்வ மைந்தனார்
மனுக்குலத்தை மீட்டு ரட்சித்தார்

8. நரரை மீட்க நரனாய் வந்தார்
நரகம் சாவு பேயையும் வென்றார்

9. பிதா சுதன் சுத்தாவிக்கென்றும்
துதி புகழ் கனமும் ஏறிடும்

Tamil Hymns

1720. பசுத்தோல் போர்த்திய புலியா நீ

பசுத்தோல் போர்த்திய புலியா நீ
பயிரை மேயும் வேலியா
வெளியில் ஒரு குணம் கோயிலில் ஒரு குணம்
இதுதான் உந்தன் வாழ்க்கையா

1. அனலும் இல்லாமல், குளிரும் இல்லாமல்
வாழும் வாழ்க்கையில் பயனில்லை
தேவன்மேல் அன்பும் பிறன்மேல் அன்பும்
வாழ்க்கையில் இருந்தால் பயமில்லை

2. குடியை தேடி புகையை ஊதி
வாழ்நாள் முழுவதும் களியாட்டம்
ஆலயத்தில் மட்டும் மகா பரிசுத்தம்
பயங்கரமான பாவ குற்றம் - இது

3. வாயின் வஞ்சகம் வீண் வாக்குவாதம்
மனதில் முழுவதும் மாய்மாலம்
உன்னால் கெட்டுப்போகும் தேவனது நாமம்
கிறிஸ்துவுக்குன்னால் அவமானம்

4. ஆவியில் நிரம்பி பாஷைகள் பேசி
ஞாயிற்றுக்கிழமையில் ஆராதனை
அடுத்த நாளே பாவத்துக்கு அடிமை
தேவனுக்குன்னால் மனவேதனை

5. கண்கள் திறந்தால் வெளிச்சமுண்டாகும்
இருளிலிருந்து வெளியே வா
அத்துமா ரட்சிப்பு மிகவும் அவசியம்
இதயத்தை இன்று தேவனுக்கு தா

Tamil Hymns

1721. படகோ படகு கடலிலே படகு

படகோ படகு கடலிலே படகு
கர்த்தர் இயேசு இல்லா படகு
கவிழ்ந்து போகுது பாரு கதறுராங்க கேளு
காத்திடவோ யாருமில்லையே

1. வாலிபப்படகே உல்லாசப்படகே
தன் பெலன் நம்பும் தன்னலப்படகே
காலம் வரும் முன் உன் கோலம் மாறுமே
கர்த்தரையே தேடியே வருவாய் இன்றே

2. குடிப்பழக்கத்தினால் குழம்பும் படகே
குடும்பத்தையே அழிக்கும் படகே
சடுதியினிலேச் சாய்ந்து போவாயே
அழைக்கும் அன்பர் இயேசுவையே
நாடி வருவாயே

Tamil Hymns

1722. படைத்தவர் உன்னை கைவிடமாட்டார்

படைத்தவர் உன்னை கைவிடமாட்டார்
பதறாதே மனமே
அழைத்தவர் உன்னை நடத்திடுவாரே
அனுதின வாழ்க்கையிலே

நாம் ஆராதிக்கும் இயேசு நல்லவர்
நாம் போற்றிடும் இயேசு பெரியவர்

1. பெயர் சொல்லி அழைத்த உன்னத தேவன்
ஒருபோதும் உன்னை மறவார்
காரிருளில் நீ நடந்திடும் வேளை
ஒளியாய் வந்திடுவார்

2. கடந்ததை நினைத்து அழுதிட வேண்டாம்
கலங்கிடவும் வேண்டாம்
தீமைகள் யாவும் நன்மையாய் மாறும்
நம் இயேசு ஜீவிப்பதால்

3. வறண்ட நிலங்கள் வயல்வெளியாகும்
பள்ளங்கள் நிரப்பப்படும்
தேவனால் கூடும் எல்லமே கூடும்
கூடாத்தொன்றுமில்லையே

4. அகிலம் ஆளும் ராஜாதி ராஜா
நம் துணையானாரே
யெகோவாயீரே போதும் அவரே
என்றும் நம் வாழ்வினிலே

Tamil Hymns

1723. பட்டைய கௌப்புவேன் பாய்ந்து

பட்டைய கௌப்புவேன்
பாய்ந்து செல்லுவேன்
பரிசுத்த தேவனுக்காய்
பம்பரமாய் சுத்துவேன்

சிங்கம் போல சீறிடுவேன்
படைகள் கடந்து சென்றிடுவேன்

இயேசுவினாலே எல்லா நாளும்
எல்லாவற்றிலும் ஜெயம் எடுப்பேன்
நான் அட்டகாசமாக ஆடுவேன்
பட்டப்பகலைப் போல வாழுவேன்

2. மானைப் போல துள்ளிடுவேன்
மதில்கள் கடந்து சென்றிடுவேன்

3. கழுகைப் போல காத்திருப்பேன்
உயர பறந்து சென்றிடுவேன்

Tamil Hymns

1724. பயத்தோடும் பக்தியோடும்

1. பயத்தோடும் பக்தியோடும் தூய சிந்தையுள்ளோராய்
சபையார் அமர்ந்து நிற்க, ஆசீர்வாத வள்ளலாம்
தெய்வ சுதன் கிறிஸ்து நாதர் ராஜனாய் விளங்குவார்.

2. வேந்தர்க்கெல்லாம் வேந்தர் முன்னே கன்னிமரிமைந்தனாய்
பாரில் வந்து நின்றார்; இதோ சர்வ வல்ல கர்த்தராய்
வானாகாரமான தம்மால் பக்தரைப் போஷிப்பார்.

3. தூதர்க்கணங்கள் முன்சென்று பாதை செவ்வை பண்ணவே,
விண்ணினின்று அவர்தோன்ற ஜோதியில் மா ஜோதியாய்,
வெய்யோன் கண்ட இருள் எனத் தீயோன் ஆட்சி மாயுமே.

4. ஆறு செட்டையுள்ள சேராப், கண்வளரா கேரூபின்
செட்டையால் வதனம் மூடி, என்றும் ஆரவாரித்து
அல்லேலூயா, அல்லேலூயா, கர்த்தா, என்று போற்றுவார்.

Tamil Hymns

1725. பயந்து கர்த்தரின் பக்தி வழியில்

பயந்து கர்த்தரின் பக்தி வழியில்
பணிந்து நடப்போன் பாக்கியவான்
முயன்று உழைத்தே பலனை உண்பான்
முடிவில் பாக்கியம் மேன்மை காண்பான் - 2

1. உண்ணுதற்கினிய கனிகளைத் தரும்
தண்ணிழல் திராட்சைக்கொடிபோல் வளரும்
கண்ணிய மனைவி மகிழ்ந்து இருப்பாள் (2)
எண்ணரும் நலங்கள் இல்லத்தில் புரிவாள்

2. ஒலிவ மரத்தைச் சூழ்ந்து மேலே
உயரும் பச்சிளங் கன்றுகள் போல
மெலிவிலா நல்ல பாலகருன்பாலே
மிகவும் களித்து வாழ்வர் அன்பாலே (2)

3. கர்த்தருன் வீட்டைக் கட்டாவிடில் அதை
கட்டுவோர் முயற்சி வீணாம் அறி இதை
கர்த்தரால் வரும் சுதந்திரம் பிள்ளைகள்
கர்ப்பத்தின் கனியும் கர்த்தரின் கிருபை (2)

Tamil Hymns

1726. பயப்படமாட்டேன் நான் பயப்படமாட்டேன்

பயப்படமாட்டேன் நான் பயப்படமாட்டேன்
இயேசு என்னோடு இருப்பதனால்
ஏலேலோ ஐலசா

1. உதவி செய்கிறார், பெலன் தருகிறார்
ஒவ்வொரு நாளும் கூட வருகிறார்

2. காற்று வீசட்டும் கடல் பொங்கட்டும்
எனது நங்கூரம் இயேசு இருக்கிறார்

3. வலைகள் வீசுவோம், மீன்களைப் பிடிப்போம்
ஆத்துமாக்களை அறுவடை செய்வோம்

4. பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே
எல்லாவற்றையும் செய்ய பெலன் உண்டு

5. பரம அழைத்தலின் பந்தய பொருளுக்காய்
இலக்கை நோக்கி நாம் படகை ஓட்டுவோம்

6. உலகில் இருக்கிற அலகையைவிட
என்னில் இருப்பவர் மிகவும் பெரியவர்

Tamil Hymns

1727. பயப்படாதே சிறு மந்தையே

பயப்படாதே சிறு மந்தையே
பரலோக இராஜ்ஜியம் உனக்குள்ளதே
தேடுங்கள் தேவனின் இராஜ்ஜியத்தை
கூடயாவும் கொடுப்பாரே பயப்படாதே

1. புசிப்பும் அல்ல குடிப்பும் அல்ல
தேவனின் இராஜ்ஜியமே
நீதி சமாதானம் நித்தியா சந்தோசம்
நிர்மலன் ஆவியாலே

2. ஐசுவரியமுள்ளோர் அடைவது அரிது
ஆண்டவர் இராஜ்ஜியத்தில்
ஆசை எல்லாம் தியாகம் செய்தோர்
ஆளுவார் இயேசுவோடு

3. கர்த்தாவே என்றும் கனியற்ற மனிதன்
காணான் இராஜ்ஜியத்தை
பிதாவின் சித்தம் நித்தமும் செய்தால்
சேரலாம் இராஜ்ஜியத்தில்

Tamil Hymns

1728. பயப்படாதே பாரிலிப்போதே

பயப்படாதே பாரிலிப்போதே
திகையாதே கலங்காதே
தெரிந்து கொண்டேன் பேர்
சொல்லி அழைத்தேன்
அறிந்து கொண்டேன் நீ என்னுடையவன்

1. தண்ணீரை நீ கடக்கும் போது
உன்னோடு கூட நானிருப்பேன்
ஆறுகளை நீ கடக்கும் போது
அவைகள் உன்மேல் புரளுவதில்லை - பயப்படாதே

2. இஸ்ரவேலின் பரிசுத்தர் நானே
இரட்சகராம் தேவனும் நானே
உன்னை மீட்க நான் வந்தேனே
கண்மணி போல் அருமையானவனே - பயப்படாதே

3. உன்னை நானே உருவாக்கினேனே
அன்னை போலவும் ஆதரிப்பேனே
கண்மூடாமலும் காத்திடுவேனே
சொன்னதை நிறைவேற்றிடுவேனே - பயப்படாதே

4. முந்தினதை நினைக்க வேண்டாம்
பூர்வமானத்தை சிந்திக்க வேண்டாம்
எந்த துன்பத்தில் சோர்ந்திட வேண்டாம்
வாக்குகளையும் விட்டிட வேண்டாம் - பயப்படாதே

5. ஒன்றுக்கும் நீ கவலைப்படாதே
என்றும் ஜெபத்தையும் தவறவிடாதே
கடந்த தோல்வியை எண்ணி விடாதே
நடந்திடும் வழிகளையும் விடாதே - பயப்படாதே

6. அல்லேலூயாவுக் கருகனும் நானே
அல்லும் பகலும் ஆதரிப்பேனே
அல்லேலூயா பாடிடுவாயே
வல்ல கரத்தால் நடந்திடுவேனே

Tamil Hymns

1729. பயமில்லை பயமில்லையே ஜெயம்

பயமில்லை பயமில்லையே
ஜெயம் ஜெயம் தானே -எனக்கு
ஜெபத்திற்கு பதில் உண்டு
இயேசு நாமத்தில் ஜெயம் உண்டு -என்

1. ஆபிரகாமின் தேவன்
என்னோடே இருக்கின்றார்
ஆசீர்வதிக்கின்றார்
பெருகச் செய்திடுவார்

ஜெயம் எடுப்பேன் இயேசு நாமத்தில்
தோல்வி எனக்கில்லையே-நான்
தோற்றுப் போவதில்லையே
ஜெயமுண்டு இயேசு நாமத்தில்

2. இதயம் விரும்புவதை
எனக்குத் தந்திடுவார்
என் ஏக்கம் எல்லாமே
எப்படியும் நிறைவேற்றுவார்

3. எதிராய் செயல்படுவோர்
என் பக்கம் வருவார்கள்
என் இரட்சகர் எனக்குள்ளே
இதை இவ்வுலகம் அறியும்

4. வேண்டுதல் விண்ணப்பங்கள்
பிரியமாய் ஏற்றுக் கொண்டார்
நாம் செலுத்தும் துதிபலியை
மறவாமல் நினைக்கின்றார்

5. அரண்களை தகர்த்தெரியும்
ஆற்றல் எனக்குள்ளே
மலைகளை நொறுக்கிடுவேன்
பதராக்கிப் பறக்கச் செய்வேன்

Tamil Hymns

1730. பயமில்லையே பயமில்லையே

பயமில்லையே…பயமில்லையே
பயமே எனக்கு இல்ல – இனி

1. அநாதி தேவன் அடைக்கலமானாரே
அவரது புயங்கள் ஆதாரமாயிற்றே

2. இரட்சிக்கப்பட்ட பாக்கியவான் நானே
எனக்கு ஒப்பான மனிதன் யாருண்டு

3. சகாயம் செய்யும் கேடகமானாரே
வெற்றி தருகின்ற பட்டணம் ஆனாரே

4. பாதுகாப்புடன் சுகமாய் வாழ்ந்திடுவேன்
திராட்சை ரசமும் தானியமும் உண்டு

5. எனது வானம் பனியைப் பெய்திடுமே
மழையைப் பொழிந்து தேசத்தை
நிரப்பிடுமே

6. எதிரி என்முன் கூனிக் குறுகிடுவான்
அவன் தலை மேலே ஏறி மிதித்திடுவேன்

Tamil Hymns

1731. பரத்திலேயிருந்துதான்

1. பரத்திலே யிருந்துதான்
அனுப்பப்பட்ட தூதன் நான்
நற்செய்தி அறிவிக்கிறேன்
பயப்படாதிருங்களேன்.

2. இதோ எல்லா ஜனத்துக்கும்
பெரிய நன்மையாய் வரும்
சந்தோஷத்தைக் களிப்புடன்
நான் கூறும் சுவிசேஷகன்

3. இன்றுங்கள் கர்த்தரானவர்
மேசியா உங்கள் ரட்சகர்
தாவீதின் ஊரில் திக்கில்லார்
ரட்சிப்புக்காக ஜென்மித்தார்

4. பரத்திலே நாம் ஏகமாய்
இனி இருக்கத்தக்கதாய்
இக்கட்டும் பாவமுமெல்லாம்
இம்மீட்பரால் நிவிர்த்தியாம்

5. குறிப்பைச் சொல்வேன் ஏழையாய்
துணியில் சுற்றப்பட்டதாய்
இப்பிள்ளை முன்னணையிலே
கிடக்கும் ஆர் கர்த்தர் தாமே.

Tamil Hymns

1732. பரத்தின் ஜோதியே

1. பரத்தின் ஜோதியே
என்மேல் இறங்கிடும்
பிரகாசத்துடனே
உள்ளத்தில் விளங்கும்
நீர் ஜீவ ஜோதி, தேவரீர்
நற் கதிர் வீசக்கடவீர்.

2. நிறைந்த அருளால்
லௌகீக ஆசையை
அகற்றி, ஆவியால்
பேரின்ப வாஞ்சையை
வளர்த்து நித்தம் பலமாய்
வேரூன்றச் செய்யும் தயவாய்.

3. நீர் என்னை ஆளுகில்
நான் வாழ்ந்து பூரிப்பேன்
நீர் என்னை மறக்கில்
நான் தாழ்ந்து மாளுவேன்
என் ஊக்கம் ஜீவனும் நீரே
கடாட்சம் செய்யும், கர்த்தரே.

4. தெய்வன்பும் தயவும்
உம்மாலேயே உண்டாம்
நற் குணம் யாவுக்கும்
நீர் ஜீவ ஊற்றேயாம்
நான் வாழும்படி என்றைக்கும்
என்னை நிரப்பியருளும்.

Tamil Hymns

1733. பரத்துக்கேறு முன்னமே

1. பரத்துக்கேறு முன்னமே
பேரருள் நாதனார்
தேற்றரவாளன் ஆவியை
வாக்களித்தார்

2. விருந்து போலத் தேற்றவும்
அவ்வாவி சேருவார்
எத்தாழ்மையான நெஞ்சிலும்
சஞ்சரிப்பார்

3. அமர்ந்த மென்மை சத்தத்தை
போல் நெஞ்சில் பேசுவார்
வீண்பயம் நீக்கிக் குணத்தை
சீராக்குவார்

4. நற்சிந்தை தூய விருப்பம்
தீயோன் மேல் வெற்றியும்
எல்லாம் அவரால் மாத்திரம்
உண்டாகி விடும்

5. ஆ நேச தூய ஆவியே
உம் பெலன் ஈந்திடும்
சுத்தாங்கம் ஈந்து நெஞ்சிலே
நீர் தங்கிடும்

Tamil Hymns

1734. பரம அழைப்பின் பந்தய பொருளுக்காய்

1. பரம அழைப்பின் பந்தய பொருளுக்காய்
நான் இலக்கை நோக்கி ஓடுகிறேன் -2
ஓடுகிறேன் நான் ஓடுகிறேன்
இயேசுவுக்காய் நான் ஓடுகிறேன்

அல்லேலுயா அல்லேலுயா -2

2. இலாபமான அனைத்தையுமே
நான் நஷ்டமென்று கருதுகிறேன்
இயேசு ராஜவின் இந்த வேலைக்காக
மகிழ்ச்சியுடன் நான் ஓடுகிறேன்

3. எத்தனை தான் இடர்கள் வந்தாலும்
விசுவாசத்திலே நிலைத்திருப்பேன்
எனக்காக இயேசு நியமித்த
இந்த பாதையிலே நான் ஓடுகிறேன்

4. என் மணவாளன் இயேசு ராஜாவை
நான் காணவே வாஞ்சிக்கிறேன்
என் ஆசை எல்லாம் என் இயேசு தானே
அவர் பொன்முகம் தான் நான் பார்க்கணுமே

5. என் ஆவி ஆத்மா சரீரமெல்லாம்
என் இயேசுவுக்காய் அர்ப்பணிக்கிறேன்
நான் உயிர் வாழும் இந்த நாட்கள் எல்லாம்
இயேசுவுக்காய் நான் ஓடுகிறேன்

Tamil Hymns

1735. பரம குயவனே என்னை வனையுமே

பரம குயவனே என்னை வனையுமே
உம் சித்தம் போல் என்னை வனையுமே (2)
உமக்காக என்னை வனையுமே
களிமண்ணான என்னை வனைந்திடுமே

1. உம் கரத்தாலே மண்ணை பிசைந்து
மனிதனை உருவாக்கினீர் (2)
எந்தனையும் தொட்டு உம் சாயலாக வனையும்
உம்மை போல மாற்றிடுமே - என்னை --- பரம

2. உமக்குகந்ததாய் உடைத்து என்னை
உம்முடைமை ஆக்கிடுமே (2)
விருப்பம் போல என்னை உந்தன் கரத்தால்
அருமையாக வனைந்திடுமே - உமக்கு --- பரம

3. உமது சித்தத்தின் மையத்தில் என்னை
வைத்து என்றும் வழி நடத்திடும் (2)
உந்தன் சித்தம் செய்ய என்னை தத்தம் செய்தேன்
முழுமையாக அர்ப்பணம் செய்தேன் - என்னை --- பரம

Tamil Hymns

1736. பரமண்டலத்திலுள்ள

பரமண்டலத்திலுள்ள
வானோர் நீங்கள் பக்தியாய்
இந்தப் பூமி எங்குமுள்ள
மண்ணோர் நீங்கள் களிப்பாய்
துதியுங்கள் துதியுங்கள்
பிதா சுதன் ஆவியை

1737. பரம எருசலேமே

பரம எருசலேமே
பரலோகம் விட்டிறங்குதே
அலங்கார மணவாட்டியாய்
அழகாக ஜொலித்திடுதே

ஆமென் அல்லேலூயா - (4)

1. எருசலேமே கோழி தன் குஞ்சுகளை
ஏற்றணைக்கும் ஏக்கத்தின் குரல் கேட்டேன்
தாய்ப்பறவை துடித்திடும் பாசம் கண்டேன்
தாபரமாய் சிறகினில் தஞ்சமானேன்
கனிவான எருசலேமே (2)

2. ஜீவ தேவன் நகரினில் குடிபுகுந்தேன்
சீயோன் மலைச் சீருக்குச் சொந்தமானேன்
நீதி தேவன் நீளடி சிரம் புதைத்தேன்
நீதிமான்கள் ஆவியில் மருவி நின்றேன்
மேலான எருசலேமே (2)

3. சர்வ சங்க சபையின் அங்கமானேன்
சர்வலோக நடுவரின் அருகில் வந்தேன்
பரிந்துரைக்கும் இரத்தத்தில் மூழ்கி நின்றேன்
பரிவாரமாய் தூதர்கள் ஆடி நின்றார்
ஆஹா என் எருசலேமே (2)

4. விடுதலையே விடுதலை விடுதலையே
லோகமதின் மோகத்தில் விடுதலையே
நானேயெனும் சுய வாழ்வில் விடுதலையே
நாதர் தனில் வாழ்வதால் விடுதலையே
சுயாதீன எருசலேமே (2)

5. கண்ணீர் யாவும் கனிவோடு துடைத்திடுவார்
எண்ணமதின் ஏக்கங்கள் தீர்த்திடுவார்
மரணமில்லை மனநோயின் துயரமில்லை
அலறலில்லை அழுகையின் சோகமில்லை
தலைநகராம் எருசலேமே (2)

Tamil Hymns

1738. பரலோக தந்தையே பரலோக தந்தையே

பரலோக தந்தையே பரலோக தந்தையே
பரிசுத்த தெய்வம் நீரே - பலகோடி
தேவர்களில் உயர்ந்தவர் உன்னதர்
பரிசுத்த தெய்வம் நீரே
பூமிக்கெல்லாம் ஆண்டவரும் நீரே
பரலோகத்தில் உயர்ந்தவர் நீரே -2
ஒரு மனதோடு கூடி வந்தோம்
உன்னத தேவனை தொழுதிடவே - 2

ஓயாத புகழ்ச்சி ஓயாத கனமும்
நிறைந்த எம் தேவன
தொழுக வந்தோம் (2)

1. அப்பத்த கேட்டா கல்ல கொடுப்பானா
மீன கேட்டா பாம்ப கொடுப்பானா
முட்டைய கேட்டா தேளை கொடுப்பானா
பொல்லாத தகப்பனே
நல்ல ஈவை அறியும் போது
இம்மைக்கும் மறுமைக்கும்
பரம தகப்பன் நீர் தானே (2)

2. பறந்து காக்கும் பட்சியைப் போலே
தேவன் தினமும் காத்திடுவாரே
தகப்பன் பிள்ளையை சுமப்பது போலே
தேவன் தினமும் சுமந்திடுவாரே
தாயைப் போல் தேற்றுவார்
தகப்பனை போல் சுமந்திடுவார் (2)

3. புள்ளுள்ள இடங்களில் மேய்த்திடுவாரே
அமர்ந்த தண்ணீரைன்டை நடத்திடுவரே
கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கின்ற போது
தாழ்ச்சியென்பது வாழ்வினில் இல்லை
நன்மையும் கிருபையும்
வாழ்நாளெல்லாம் தொடர செய்வார்

Tamil Hymns

1739. பரலோக தேவனே உம்மை ஆராதனை

1. பரலோக தேவனே உம்மை ஆராதனை செய்கிறோம்
பரலோக ராஜனே உம்மை ஆராதனை செய்கிறோம்

உமது அன்பின் கரங்களை
நான் கண்டேனே நான் கண்டேனே
நான் கண்டேனே

2. மோசேயின் தேவனே
என்னை வழி நடத்திடுவீர்

3. யோசுவாவின் தேவனே
எங்கள் மதில்களை நொறுக்குவீர்

4. தேவாதி தேவனை
உம்மை ஆராதனை செய்கிறோம்

5.ராஜாதி தேவனை
உம்மை ஆராதனை செய்கிறோம்

Tamil Hymns

1740. பரலோக தேவனே

பரலோக தேவனே
பராக்கிரமம் உள்ளவரே (2)
(இந்த) அகிலத்தை ஆள்பவரே
உம்மால் ஆகாதது எதுவுமில்லை

1. எல்ஷடாய் எல்ஷடாய்
சர்வ வல்ல தெய்வமே (2)

உயர்த்துகிறோம் வாழ்த்துகிறோம்
வணங்குகிறோம் - உம்மை

2. யெஹோவா நிசியே
வெற்றி தந்த தெய்வமே

3. யெஹோவா ராஃப்பா
சுகம் தந்த தெய்வமே

4. எல்ரோயீ எல்ரோயீ
என்னை கண்ட தெய்வமே

Tamil Hymns

1741. பரலோகத்தின் பிதாவே உமது

பரலோகத்தின் பிதாவே
உமது நாமமே பரிசுத்தப்படுவதாக
உம இராஜ்யம் வருவதாக (2)

1. உமது சித்தம் பரத்தில்
செய்யப்படுவது போல
பூமியிலேயும் அதுவே செய்யப்படுவதாக

2. அன்றன்று வேண்டிய அப்பம்
இன்றும் எங்கட்கு தாரும்
ஜீவ அப்பம் நீரே
அதுவே எங்கட்கு போதும்

3. எங்கள் கடனாட்களை
நாங்கள் மன்னிப்பதுபோல
எங்கள் கடன்களையெல்லாம்
தயவாய் மன்னியும் தேவா

4. எங்களை தீமையினின்றும்
எல்லா சோதனையினின்றும்
என்றுமே இரட்சித்துக் கொள்ளும்
எங்கள் இரட்சகன் நீரே

5. கனமும் மகிமையும்
இராஜ்யமும் வல்லமையும்
என்றென்றும் உம்முடையதே ஆமென்

Tamil Hymns

1742. பரலோகத்திலிருந்து வந்திடுவார்

பரலோகத்திலிருந்து வந்திடுவார்
பரிசுத்த ஆவி என்னில் நிறைத்திடுவார்
பரிவாய் என்னை என்றும் காத்திடுவார்
என் மனதில் நிறைந்து அருள் புரிவார்

1. பரனே மனதை காத்திடுவார்
குறையை நீக்கி அருள் புரிவார்
நெருப்பாய் என்னில் எரிந்திடுவார்
புதிய ஜீவன் தந்திடுவார்

2. கருணை கடலே காத்திடுவார்
என் கலக்கம் தீர்த்து அணைத்திடுவார்
ஜீவ ஊற்றாய் வந்திடுவார்
ஆவி அபிஷேகம் தந்திடுவார்

3. அருகில் இருந்து ஆண்டிடுவார்
அருளை தினமும் பொழிந்திடுவார்
காலம் கடந்தும் நின்றிடுவார்
இரட்சிப்பின் பாதை காட்டிடுவார்

Tamil Hymns

1743. பரலோகந்தான் என் பேச்சு

பரலோகந்தான் என் பேச்சு
பரிசுத்தம் தான் என் மூச்சு
கொஞ்சக்காலம் இந்த பூமியிலே
இயேசுவுக்காய் சுவிஷேத்திற்காய்

தானான தனனா தானானனா
தானான தனனா தானானனா

1. என் இயேசு வருவார் மேகங்கள் நடுவே
தன்னோடு சேர்த்துக் கொள்வார்
கூடவே வைத்துக் கொள்வார் -என்னை

2. உருமாற்றம் அடைந்து
முகமுகமாக என் நேசரக் காண்பேன்
தொட்டு தொட்டுப் பார்ப்பேன் - இயேசுவை

3. சங்கீதக்காரன் தாவீதை காண்பேன்
பாடச் சொல்லி கேட்பேன் - சேர்ந்து
பாடிடுவேன் -நான் நடனமாடிடுவேன்

4. என் சொந்த தேசம் பரலோகமே
எப்போது நான் காண்பேன்
ஏங்குகிறேன் தினமும் - நான்

5. கண்ணிர்கள் யாவும் துடைக்கப்படும்
கவலைகள் மறைந்து விடும்
எல்லாமே புதிதாகும்

6. என்னோடு கூட கோடான கோடி
ஆன்மாக்கள் சேர்த்துக் கொள்வேன்
கூட்டிச் சென்றிடுவேன்

1744. பரலோகமே உம்மைத் துதிப்பதால்

பரலோகமே உம்மைத் துதிப்பதால்
கர்த்தாவே அங்கே வாழ்கிறீர்
உம் ஆலயத்தில் உம்மைத் துதிக்கிறோம்
கர்த்தாவே எழுந்தருளும்

துதிக்கிறோம் துதிக்கிறோம்
ஒன்றாக கூடித் துதிக்கிறோம் (2) - அல்லேலூயா

1. உந்தன் நாமம் உயர்த்தும் இடத்தில்
அங்கே வாசம் செய்வீர்

2. உம்மைப்போல் ஒரு தெய்வமில்லை
சர்வ சிருஷ்டிகரே

3. துதியும் கனமும் மகிமையெல்லாம்
உமக்கே செலுத்துகிறோம்

Tamil Hymns

1745. பரலோகமே என் சொந்தமே

பரலோகமே என் சொந்தமே
என்று காண்பேனோ
என் இன்ப இயேசுவை
என்று காண்பேனோ

1. வருத்தம் பசி தாகம் மனத்துயரம்
அங்கே இல்லை - விண் கிரீடம்
வாஞ்சிப்பேன் விண்ணவர் பாதம் சேர்வேன்

2. சிலுவையில் அறையுண்டேன்
இனி நானல்ல இயேசுவே அவரின்
மகிமையே எனது இலட்சியமே

3. இயேசு என் நம்பிக்கையாம்
இந்த பூமியும் சொந்தமல்ல - பரிசுத்த
சிந்தையுடன் இயேசுவைப் பின்பற்றுவேன்

4. ஓட்டத்தை ஜெயமுடன் நானும்
ஓடிட அருள் செய்வார் - விசுவாச
பாதையில் சோராது ஓடிடுவேன்

5. பரம சுகம் காண்பேன்
பரன் தேசம் அதில் சேர்வேன் - இராப்பகல்
இல்லையே இரட்சகர் வெளிச்சமே

6. அழைப்பின் சத்தம் கேட்டு நானும்
ஆயத்தமாகிடுவேன் - நாட்களும்
நெருங்குதே வாஞ்சையும் பெருகுதே

7. பளிங்கு நதியோரம் சுத்தர் தாகம்
தீர்த்திடுவார் - தூதர்கள்
பாடிட தூயனை தரிசிப்பேன்

Tamil Hymns

1746. பரலோக எம் தந்தையே உந்தனின் நாமமே

பரலோக எம் தந்தையே உந்தனின் நாமமே
பரிசுத்தமானதால் பரிசுத்தமாக்கிடுமே (2)
பரலோக எம் தந்தையே.......

பரலோகில் செய்யும் உம் சித்தம்
பூமியில் என்றும் நிறைவேறவே (2)
பரனே உம் இ ராஜ்ஜியமே புவிதனில்
வந்திடவே பக்தியாய் வாழ்ந்திடவே
போதித்து நடத்திடுமே பரலோக எம் தந்தையே.......

அன்றன்று வேண்டிய ஆகாரமும் இன்றும் எமக்கே நீர் தந்திடுமே (2)
ஆவியின் ஆகாரமும் ஆண்டவா அருள் தாருமே
ஆத்துமா வாழ்ந்திடவே ஆவியின் கனி தாருமே பரலோக எம் தந்தையே.......

குற்றம் செய்வோர்க்கு மன்னிக்கவே
குறைவில்லா அன்புள்ளம் தாருமே (2)

எம் குற்றம் மன்னிப்பீரே இயேசுவே போற்றுகின்றோம்
எங்களின் ஜெபம் கேட்பீரே ஏற்றுக்கொள்ளும் எங்களை
(பரலோக எம் தந்தையே.......)

Tamil Hymns

1747. பரலோகம் என்னை அழைக்கின்றது

பரலோகம் என்னை அழைக்கின்றது
பயணம் போகும் நேரமல்லோ
(பரலோகம் என்னை.......)

பரிசுத்தவான்களின் மத்தியிலே நான்
பாங்காய் கீதங்கள் பாடிடுவேன் (2)
பொன்னாலான வீதிகளில் நான்
பாங்காய் கீதங்கள் பாடிடுவேன் (2)
(பரலோகம் என்னை.......)

பாவங்கள் தீர்த்தார் பரிகாரி
பாவங்கள் மன்னித்தார்;
நொடிப்பொழுதில் (2)
பளிங்கு போன்ற மாளிகை சேர்ந்து
பலகாலம் அங்கே வாழ்ந்திடுவேன் (2)
(பரலோகம் என்னை.......)

Tamil Hymns

1748. பரலோக கார்மேகமே பரிசுத்த

பரலோக கார்மேகமே
பரிசுத்த மெய் தீபமே
உயிராய் வந்தீரைய்யா
உணர்வே நீர்தானைய்யா - என்
ஆவியானவரே என் ஆற்றலானவரே -பரலோக

1. அறிவு புகட்டுகின்ற
நல் ஆவியாய் வந்தீரே
இறுதிவரை என்றென்றைக்கும்
எனக்குள்ளே வாழ்பவரே - ஆவியானவரே

2. மேன்மையாய் உயரத்தினீரே
இன்பமாய் பாடுகிறேன்
இறைவாக்கு என் நாவிலே
என் வழியாய் பேசுகிறீர்

3. மறுரூப மலை நீரே
மகிமையின் சிகரம் நீரே
உருமாற்றம் அடைக்கின்றேன்
உம்மேக நிழல்தனிலே

4. விண்ணக பனித்துளியாய்
மண்ணகம் வந்தீரே
புதிதாக்கும் பரிசுத்தரே
உருவாக்கும் உன்னதரே

5. தகப்பனை அறிந்துகொள்ள
வெளிப்பாடு தருகின்றீர்
அவர் விருப்பம் நிறைவேற்ற
ஞானம் தந்து நடத்துகின்றீர்

6. அக்கினி ஸ்தம்பமாக
மேக நிழலாக
தவறாமல் நடத்துகிறீர்
விலகாமல் முன் செல்கிறீர்

7. அப்பா பிதாவே என்று
கூப்பிடச் செய்தீரே
பிள்ளையானேன் உம் பிரசன்னத்தால்
பெலனடைந்தேன் உம் வரவால்

Tamil Hymns

1749. பரனே உம் திருமுகம் காண

பரனே உம் திருமுகம் காண
திரு சமூகம் வந்திடுவேன்
துயரங்களில் யாப்போக்கின் கரையில்
உந்தன் பாதத்தை பிடித்துக் கொள்வேன்
எந்தன் அடைக்கலம் நீர்
எந்தன் மறைவிடம் நீர்
என் உள்ளம் உம்மைத் துதிக்கும் – 2

1.எந்தன் தோல்விகள் ஜெயமாய் மாற்றும்
வெற்றி வேந்தன் நீரல்லவோ-2
எந்தன் நஷ்டங்கள் லாபமாய் மாறும்
திரு நாமத்தின் மகிமையினால் – 2

2. சொந்தமாக நீர் எந்தன் கூட
உறவினர்கள் மறு கரையில்
ஆசீர்வாதத்தின் கரத்தை அறிந்தேன்
அதிசயமான பாதை திறந்தீர்

1750. பரனே திருக்கடைக்கண் பாராயோ

பரனே திருக்கடைக்கண் பாராயோ? - என்றன்
பாவத்துயர் அனைத்தும் தீராயோ?

1. திறம் இலாத எனை முனியாமல் - யான்
செய்த குற்றம் ஒன்றும் நினையாமல் --- பரனே

2. மாய வலையில் பட்டுச் சிக்காமல் - லோக
வாழ்வில் மயங்கி மனம் புக்காமல் --- பரனே

3. அடியேனுக் கருள் செய் இப்போது - உன
தடிமைக் குன்னை அன்றிக் கதி ஏது? --- பரனே

4. வஞ்சகக் கவலை கெடுத் தோட்டாயோ? - என்றன்
மனது களிக்க வர மாட்டாயோ? --- பரனே

5. ஏசுவின் முகத்துக் காய் மாத்ரம் - எனக்
கிரக்கம் செய்யும்; உமக்கே தோத்ரம்! --- பரனே

Tamil Hymns

1751. பரிசுத்த ஆவியே பக்தர்கள் துணையாளரே

பரிசுத்த ஆவியே பக்தர்கள் துணையாளரே
கூட இருப்பவரே கறைகள் தீர்ப்பவரே

1. தேற்றிடும் தெய்வமே திடம் தருபவரே
ஊற்றுத் தண்ணீரே உள்ளத்தின் ஆறுதலே

2. பயங்கள் நீக்கிவிட்டீர்
பாவங்கள் போக்கிவிட்டீர்
ஜெயமே உம் வரவால்
ஜெபமே உம் தயவால் - தினம்

3. அபிஷேக நாதரே
அச்சாரமானவரே
மீட்பின் நாளுக்கென்று
முத்திரையானவரே - எங்கள்

4. விடுதலை தருபவரே
விண்ணப்பம் செய்பவரே
சாட்சியாய் நிறுத்துகிறீர்
சத்தியம் போதிக்கிறீர் - தினம்

5. அயல் மொழி பேசுகிறோம்
அதிசயம் காண்கிறோம்
வரங்கள் பெறுகிறோம்
வளமாய் வாழ்கிறோம்

6. சத்துரு வரும் போது
எதிராய் கொடி பிடிப்பீர்
எக்காளம் ஊதுகிறோம்
எதிரியை வென்று விட்டோம்

Tamil Hymns

1752. பரிசுத்த தேவன் நீரே

பரிசுத்த தேவன் நீரே
வல்லமை தேவன் நீரே
என்றென்றும் தொழுதிடுவோம் நாம்
இயேசுவே உம் நாமத்தை
என்றென்றும் தொழுதிடுவோம் நாம்
நீர் தேவன் நீர் இராஜா என்றும்

1. கேருபீன் சேராபீன்கள்
உந்தனை தொழுதிடுதே
வல்லமை இறங்கிடவே
உந்தனை தொழுதிடுவோம்

2. உம்மை போல் தேவன் இல்லை
பூமியில் பணிந்திடவே
அற்புத தேவன் நீரே
என்றென்றும் தொழுதிடுவோம் (2)

3. மேலான தேவன் நீரே
மேலான நாமமிதே
மாந்தர்கள் பணிகின்றாரே
உம்மையே தொழுதிடுவோம்

4. சத்திய பாதைகளில்
நித்தமும் நடந்திடவே
உத்தமர் தேவன் நீரே
உம்மையே தொழுதிடுவோம்

1753. பரிசுத்த பூமியில் நாம் நிற்கிறோம்

பரிசுத்த பூமியில் நாம் நிற்கிறோம்
பரத்தின் தூதர் படை சூழக்காண்கிறோம்
துதிப்போம் நம் இயேசுவை
பரிசுத்தரின் பிரசன்னத்தில் (2)
நாம் நிற்கிறோம்

We are standing on holy ground
And I know that there
Are angels all around
Let us praise Jesus now
We are standing in His presence (2)
On holy ground

1754. பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா

1. பரிசுத்தம் பெற வந்திட்டீர்கள
ஒப்பில்லா திருஸ்நானத்தினால்
பாவதோஷம் நீங்க நம்பினீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

மாசில்லா - சுத்தமா
திருப்புண்ணிய தீர்த்தத்தினால்
குற்றம் நீங்கிவிட குணமாறிற்றா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

2. பரலோக சிந்தை அணிந்தீர்களா
வல்ல மீட்பர் தயாளத்தினால்
மறு ஜன்ம குணமடைந்தீர்களா
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

3. மணவாளன் வரக் களிப்பீர்களா
தூய நதியின் ஸ்நானத்தினால்
மோட்ச கரை ஏறிச் சுகிப்பீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

4. மாசு கறை நீங்கும் நீசப்பாவியே
சுத்த இரத்தத்தின் சக்தியினால்
முக்திப் பேறுண்டாம் குற்றவாளியே
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

1755. பரிசுத்தராம் தேவமைந்தன் பிறந்த

1. பரிசுத்தராம் தேவமைந்தன் பிறந்த நன்னாள் இன்று
மரிமடியில் குழந்தையாக தவழ்ந்து வந்தார் அன்று
நாசரேத்தில் வளர்ந்து வந்தார் பெற்றோருடன் நன்று
சுவிசேஷம் சொல்லி வந்தார் பல இடங்கள் சென்று

மகிழ் கொண்டாடுவோம் நாம் மகிழ் கொண்டாடுவோம்
பாவபாரம் நம்மை விட்டு மறைந்து போனதே
மகிழ் கொண்டாடுவோம் நாம் மகிழ் கொண்டாடுவோம்
கர்த்தர் இயேசு கிறிஸ்து நமது உள்ளில் பிறந்ததால்

2. வானில் வெள்ளி வழி நடத்த ராயர்களும் விரைந்தனர்
தொழுவத்திலே புல்லணையில் பாலகனைக் கண்டனர்
யூதர் ராஜா இயேசு எனக் கண்டு மனம் மகிழ்ந்தனர்
பொன் போளம் தூபம் தனை காணிக்கையாய் படைத்தனர்
- மகிழ்

3. பாவிகளை மீட்பதற்காய் கர்த்தர் இயேசு உதித்தார்
பாவங்களைத் தோளின் மேலே சிலுவையாக சுமந்தார்
தேவ அன்பை உலகம் உணர ஜீவ பலியாக தந்தார்
சாவை வென்று தேவ சுதன் மூன்றாம் நாளில் உயிர்த்தார்
- மகிழ்

4. குதூகலமாய் தேவனை மனம் ஸ்தோத்தரித்து பாடுதே
களிப்புடனே எந்தன் கால்கள் குதித்து நடனம் ஆடுதே
இரட்சிப்பினை நல்க வந்த இயேசுவை மனம் தேடுதே
ஜெய கிறிஸ்து மீண்டும் வரும் நாளை உலகம் நாடுதே
- மகிழ்

Tamil Hymns

1756. பரிசுத்தர் கூட்டம் நடுவில் ஜொலித்திடும்

பரிசுத்தர் கூட்டம் நடுவில்
ஜொலித்திடும் சுத்த ஜோதியே
அரூபியே இவ்வேளையில்
அடியார் நெஞ்சம் வாரீரோ

1. மீன் கேட்டால் பாம்பை அருள்வார் உண்டோ
கல் தின்ன கொடுக்கும் பெற்றோர் உண்டோ
பொல்லாதோர் கூட செய்திடார்
நற்பிதா நலம் அருள்வார்

2. சுத்தம் விரும்பும் சுத்த ஜோதியே
விரும்பா அசுத்தம் யாவும் நீக்குமே
பாவி நீச பாவி நான் ஐயா
தேவா இரக்கம் செய்ய மாட்டீரோ

3. பாரும் தந்தையே எந்தன் உள்ளத்தை
யாரும் காணா உல் அலங்கோலத்தை
மனம் நொந்து மருளுகிறேன்
பரிசுத்தம் கெஞ்சுகிறேன்

4. துணை வேண்டும் தகப்பனே உலகிலே
என்னை எதிர்க்கும் சக்திகள் பல உண்டே
என் ஜீவன் எல்லை எங்கிலும்
பரிசுத்தம் என எழுதும்

Tamil Hymns

1757. பரிசுத்தர் பரிசுத்தர் இயேசுவே

1. பரிசுத்தர் பரிசுத்தர் இயேசுவே
வல்லமையுடையவரே
வான் புவி உந்தன்
மகிமையால் நிறைந்தனவே

ஓசன்னா ஓசன்னா
வானில் ஓசன்னா

2. கர்த்தர் செய்த நன்மைக்காய்
என்னத்தை செலுத்திடுவோம்
இரட்சிப்பின் பாத்திரம் எடுத்து
நாம் தொழுதிடுவோம்

3. மகிமை மாட்சிமை நிறைந்தவர்
ஆண்டவர் பெரியவர்
அவரது மகிமை அடைந்திட
தொழுதிடுவோம்

4. அன்பு உருக்கம் அடையவர்
அன்பால் நிறைந்தவரே
அவரது அன்பை அடைந்திட
பணிந்திடுவோம்

5. தாழ்மை இரக்கம் நிறைந்தவர்
தயவால் நிறைந்தவரே
இராஜாதி இராஜன் இயேசுவை
போற்றிடுவோம்

6. நாவுகள் உம்மை துதித்திடும்
முழங்கால் மடங்கிடுமே
கர்த்தாதி கர்த்தர் இயேசுவை
உயர்த்திடுவோம்

Tamil Hymns

1758. பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே

பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே
பரலோக ராஜாவை பணிகின்றேனே

1. பாவியம் என்னையும் நேசித்தீர்
பாசமாய் பாவங்கள் மன்னித்தீரே
பரிசுத்த சாதியாய் மாற்றிநீரே
பாடைகின்றேன் உம் பாதம் எந்தனையே

2. பரிசுத்த ஆவியால் தேற்றிநீரே
பரிசுத்த பாதையை காட்டிநீரே
பரமனின் சித்தத்தை செய்திடவே
பரலோக ஆவியை தந்தவரே

Tamil Hymns

1759. பரிசுத்தரே உம்மை ஆராதிப்பேன்

பரிசுத்தரே உம்மை ஆராதிப்பேன்
இன்றும் என்றென்றுமாய்
பலிபீடத்தில் என்னை படைக்கின்றேன்
உகந்த ஜீவ பலியாய்

1. யேகோவா ரஃப்பா நீரே சுகம் தருபவரே
யேகோவா ஷம்மா -நீரே
கூடவே இருப்பவரே

ஆராதனை உமக்கே
ஆராதனை என்றுமே

2. யேகோவாயீரே நீரே
தேவையெல்லாம் சந்திப்பீர்
யேகோவா ஷாலோம் நீரே
சமாதானம் தருபவரே

3. யேகோவாநிசி நீரே
ஜெயம் தருபவரே
யேகோவா ரோஹி நீரே
எந்தன் மேய்ப்பர் நீரே

Tamil Hymns

1760. பரிசுத்தரே எங்கள் இயேசு தேவா

பரிசுத்தரே எங்கள் இயேசு தேவா
நானிலத்தில் நீ என்றும் ராஜா
உம்மைப் பாடுவதால் என்னில் தோல்வியில்லை
உம்மைத் துதிப்பதினால் என்னில் குறைவேயில்லை

அல்லேலூயா அல்லேலூயா
உம்மை உயர்த்துவதே - எங்கள்
நோக்கமையா - உம்மை பாடுவதே
எங்கள் மேன்மையையா

1. நான் கொண்ட திட்டங்கள் சிறிதாயினும்
ஐயா! எனக்காய் உம்
திட்டங்கள் பெரிதல்லவோ
புழுதியிலிருந்தென்னை உயர்த்தினீரே
ராஜாக்களோடு அமர்த்தினீரே

உந்தன் கிருபைகளை எண்ணி
நான் பாடுவேன்
உந்தன் மகிமைதனை
தினம் நான் ருசிப்பேன்

2. ஊழிய எல்லைகள் பெரிதாக்கினீர்
அதில் இராஜாக்கள் உதிக்கவும்
உதவிசெய்தீர்
அறியாத ஜாதியை வரவழைத்தீர்
நீர் தந்த வாக்கினை நிறைவேற்றினீர்

3. வருத்தங்கள் பசிதாகம் ஏற்ப்பட்டாலும்
எங்கள் விசுவாச கேடகம் வீழ்ந்திடாதே
நம்பினோர் நட்டாத்தில் கைவிட்டாலும்
என்னை காப்பற்ற நீர்
உண்டு பயமில்லையே

Tamil Hymns

1761. பரிசுத்தரே பரிசுத்தரே பரலோக ராஜாவே

பரிசுத்தரே பரிசுத்தரே
பரலோக ராஜாவே
கேருபீன்கள் சேராபீன்கள்
போற்றிடும் பரிசுத்த
ஆராதனை ஆராதனை
பரிசுத்தர் பரிசுத்தர்க்கே - 4

பரிசுத்தர் பரிசுத்தர் -3 பாத்திரரே
வணக்கமாய் விழுகின்றோம்
நீரே பாத்திரரே -4

Tamil Hymns

1762. பரிசுத்தாவி எங்கள் மீதிலே பொழியும்

பரிசுத்தாவி எங்கள் மீதிலே
பொழியும் இந்த வேளையிலே
பிரசன்னத்தால் நிரப்பி எம்மை
புது சக்தியை அளித்திடுமே

1. இம்மண்டலம் முழுவதையும்
உம் ஆவியால் நிரப்பி விடும்
அனுப்பியே தாரும் - பரிசுத்த அக்கினி
அந்தகாரத்தை நீக்கிவிடும்

2. தேவ செய்தி அளிக்க விருக்கும்
தேவ பிள்ளையைப் பெலப்படுத்தும்
தேவலோகத்தின் - இரகசியங்களை
தேவா எங்கட்கும் வெளிப்படுத்தும்

3. பேயின் சக்தி தகர்ந்திடவே
நோயின் சாபம் அகற்றிடவே
வல்லமை தாரும் - பெலமும் அருளும்
வரம் தந்தெம்மை அபிஷேகியும்

4. பரலோகத்தின் அதிபதியே
பரலோகத்தின் பல கனிகள்
திறந்தே கொட்டியும் - கிருபை சொரியும்
திருப்திப் படுத்தி அனுப்பும்

1763. பரிசுத்தர் அவர் நாமம்

பரிசுத்தர் அவர் நாமம்
பரிசுத்தர் அவர் நாமம் (2)
பரிசுத்தர் அவர் நாமம் உன்னதரே

தேவனின் நாமம் பலத்த கோட்டை
நீதிமான் வாழ்வின் சுகம் அங்கே (2)

தேவனின் நாமத்திற்கே மகிமை உண்டாகட்டுமே
தேவனின் நாமத்திற்கே உன்னதரே

தேவனின் நாமத்திற்கே துதி உண்டாகட்டுமே
தேவனின் நாமத்திற்கே உன்னதரே

Tamil Hymns

1764. பரிசுத்தாவி நீர் வாரும்

பரிசுத்தாவி நீர் வாரும் - திடப்
படுத்தல் பெறுவோர் கருள் தாரும் இன்று

அருளினைப் பெருக்கும் அக்கினி மயமே
ஆவியின் நற்கனிநல்குமா தூயாமே - பரி

1. செயல்குண வசனத் தீதுகள் போக
திருச்சபை யதிலிவர் பூரணராக
ஜெயமொடு பேயை எதிர்த்துக் கொண்டேக
ஜெபதப தியானஞ் செய்வதற்காக - பரி

2. நற்கருணைதனை நலமுடன் வாங்க
நாளொரு மேனியாய் ஆவியிலோங்க
சற்குணராய் இவர் சபையைக் கை தாங்க
சகல தீதான பேதங்களும் நீங்க - பரி

3. அஞ்ஞானங்க ளோடிவர் சமர் புரிய
அருண்மறை யதினாழங் களையறிய
நெஞ்சினில் அன்பு கொழுந்துவிட் டெரிய
நின்னடியாரிவ ரென்பது தெரிய- பரி

4. புத்தியுந் தாழ்மையுமாயிவர் உய்ய
பரிசுத்தமான ஜீவியஞ் செய்ய
நித்தமுங் கிருபையின் கனி கொய்ய
நிலைவரமாய் இவராவியில் துய்ய - பரி

5. தினமறை யோதி ஜெபித்து மன்றாட
திருச்சபை யதின்ஐக்கியத்தினிற் கூட
உணர்வொடு தொழுது கீதங்கள் பாட
உள்ளத் திருந்து ஜீவாறு களோட – பரி

Tamil Hymns

1765. பரிதி தூங்கிட பாதிரா நேரத்தில்

பரிதி தூங்கிட பாதிரா நேரத்தில்
பாரிடை பிறந்தவரே…
பாவங்கள் போக்கவும் சாபங்கள் நீக்கவும்
தரணியில் பிறந்தவரே… (2)

1. மயில்கள் ஆடட்டும் குயில்கள் பாடட்டும்
வானவர் வாயார வாழ்த்திடட்டும்… (2)
தேவ குமாரா தாவீதின் மைந்தா
தாழ்மையின் திருவுருவே – தியாகத்தின் திருவடிவே
- பரிதி

2. கனிகள் கனியட்டும் மலர்கள் மலரட்டும்
பரமன் நின் பெருமை புகழ்ந்திடட்டும் (2)
மாட்டுக்கொட்டிலில் மாபெரும் தேவன்
மானிடன் ஆனாரே – மாந்தரை மீட்டிடவே
- பரிதி

Tamil Hymns

1766. பார் முன்னணை ஒன்றில்

1. பார், முன்னணை ஒன்றில் தொட்டில் இன்றியே
பாலனாம் நம் இயேசு கிடந்தனரே;
வெளியில் புல்மீது தூங்கும்பாலன் தாம்
காண மின்னிட்டதே வான்வெள்ளிகள்தாம்.

2. மா, மா, எனும் சத்தம் கேட்டு விழிப்பார்,
ஆயின் பாலன் இயேசு அழவேமாட்டார்;
நான் நேசிக்கும் நாதா, நீர் நோக்கிப் பார்ப்பீர்,
தூக்கத்தில் நீர் தங்கி ராவெல்லாம் காப்பீர்.

3. என் நாதா, என்றும் நீர் என்னை நேசிப்பீர்,
என்னோடு தரித்தே அன்பாய் அணைப்பீர்;
உம் பாலர்தம்மை நீர் ஆசீர்வதித்தே
சேர்த்திடும் விண் வீட்டில் தூயோராக்கியே.

1. Away in a manger, no crib for a bed,
The little Lord Jesus laid down His sweet head.
The stars in the sky looked down where He lay,
The little Lord Jesus, asleep on the hay.

2. The cattle are lowing, the Baby awakes,
But little Lord Jesus, no crying He makes;
I love Thee, Lord Jesus, look down from the sky
And stay by my cradle till morning is nigh.

3. Be near me, Lord Jesus, I ask Thee to stay
Close by me forever, and love me, I pray;
Bless all the dear children in Thy tender care,
And fit us for Heaven to live with Thee there.

Tamil Hymns

1767. பார் முன்னணையில்

1. பார் முன்னணையில் தேவகுமாரன் விண் ஆளும்
நாதர் பாலகனாய் நம்பாவம் யாவும் தம்மீது
ஏற்கும் தேவாட்டுக் குட்டித் தோன்றினார்

2. மாதூய பாலன் மீட்பின் நல்ல வேந்தன் மாசற்றோ
ராகப் பூவில் வாழ்ந்தார் தீயோனை வென்று நம் பாவம்
போக்கி மகிமை மீட்பர் ஆளுகின்றார்

3. தீர்க்கர் முன்கூற, விண்தூதர் பாட விந்தையின்
பாலன் வந்துதித்தார் பூலோக மீட்பர் பாதாரம்
சேர்வோர் அழியா வாழ்வைக் கண்டடைவார்

Tamil Hymns

1768. பலமும் அல்ல பராக்கிரமும் அல்ல

பலமும் அல்ல பராக்கிரமும் அல்ல
ஆவியனாலாகும் - தேவ ஆவியினாலாகும்

1. பெரியப் பர்வதமே நீ எம்மாத்திரம்
தேவப் பிள்ளையின் முன் சமபூமியாவாய்
தலைக் கல்லைக் கொண்டு வந்திடுவேன்
கிருபை உண்டாவதாக

2. சிறியப் பிசாசே நீ எம்மாத்திரம்
தேவப் பிள்ளை முன் நிர்மூலமாவாய்
இயேசுவைக் கொண்டு வந்திடுவேன்
கிருபை உண்டாவதாக

3. பரிசுத்த தேவன் நீர் என் தேவன்
வானிலும் பூமிலும் பெரியவர் பெரியவர்
இயேசுவின் நாமத்தில் வென்றிடுவேன்
கிருபை உண்டாவதாக

Tamil Hymns

1769. பலன் கொடுப்பீர் நல்ல பலன் கொடுப்பீர்

பலன் கொடுப்பீர் நல்ல பலன் கொடுப்பீர்
பண்பட்ட நிலம் போல பலன் கொடுப்பீர்
வழியோரமா? (நான்) கற்பாறையா?
முள் புதரா? நான் நல்ல நிலமா?

1. இயேசுவின் வார்த்தை விதையாகும்
அறியா உள்ளம் வழியோரம்
பறவைகள் விரைந்தே தின்பது போல்
பகைவனாம் தீயோன் பறித்திடுவான் - பலன்

2. மண்ணிலா பாறை நிலமாகும்
மனதில் நிறையற்ற மனிதர்களே
வேரற்ற வாழ்க்கை வாழ்வதினால்
வெயிலால் வசனம் கருகி விடும் - பலன்

3. முட் செடி புதராம் மனுவுள்ளம்
முளைத்திடும் வசனம் நெறிந்திடவே
இறைவனின் வார்த்தை வளரவில்லை
இறுகியே ஆசைகள் கொன்றதினால் - பலன்

4. இயேசுவின் வார்த்தை உணர்ந்திடுவோர்
குறையில்லா பண்பட்ட நிலமாவார்
அறுபது முப்பது நூறு என்றே
அறுவடை எடுப்பார் வாழ்வினிலே

Tamil Hymns

1770. பலிபீடத்தில் என்னைப் பரனே

1. பலிபீடத்தில் என்னைப் பரனே
படைக்கிறேனே இந்த வேளை
அடியேனை திருச்சித்தம் போல
ஆண்டு நடத்திடுமே

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந்தோடி வந்தேன்
கழுவும் உம் திரு இரத்தத்தாலே
கரை நீங்க இருதயத்தை

2. நீரன்றி என்னாலே பாரில்
ஏதும் நான் செய்திட இயலேன்
சேர்ப்பீரே வழுவாது என்னைக்
காத்துமக்காய் நிறுத்தி

3. ஆவியோடாத்மா சரீரம்
அன்பரே உமக்கென்றும் ஈந்தேன்
ஆலய மாக்கியே இப்போது
ஆசீர்வதித்தருளும்

4. சுயம்மென்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம் மாய
தேவா அருள் செய்குவீர்

5. பொன்னையும் பொருளையும் விரும்பேன்
மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்
மன்னவன் இயேசுவின் சாயல்
இந்நிலத்தில் கண்டதால்

Tamil Hymns

1771. பலிபீடத்தில் வைத்தேன் என்னை

பலிபீடத்தில் வைத்தேன் என்னை
பாவி என்னை ஏற்றுக் கொள்ளும்

1. வாலிப நாட்களில் வாஞ்சையுடன்
வந்தேன் உன் திருப்பாதம் - (2)
வாருமய்யா வந்து என்னை - (2)
வல்லமையால் நிரப்பும் - (2)

2. நிலையில்லா இந்த பூவுலகில்
நித்தம் உன் பாதையிலே - (2)
நின் சித்தம் போல் உம் கரத்தால் -(2)
நித்தம் வழிநடத்தும் - (2)

3. பரிசுத்தம் இல்லா இவ்வுலகில்
பரிசுத்தமாய் ஜீவிக்க - (2)
பரிசுத்தமான உம் இரத்தத்தால் - (2)
பரிசுத்தமாக்கி விடும் - (2)

Tamil Hymns

1772. பலியிடு துதி பலியிடு வலி

பலியிடு துதி பலியிடு
வலி விலகும் வாழ வழி பிறக்கும்

துதி பலி அது சுகந்த வாசனை
நன்றி பலி அது உகந்த காணிக்கை

1. துதி பலி செலுத்திட பொருத்தனை செய்ததும்
மீன் அன்று கக்கியது கரையிலே
யோனாவை கக்கியது கரையிலே - அன்று

2. நோவாவின் பலிதனை நுகர்ந்தார் நம் கர்த்தர்
சுகந்த வாசனையாய்
பலுகிப் பெருகச் செய்தார் - அன்று

3. நல்லவர் கர்த்தர் என்று எல்லாரும் துதிக்கையில்
ஆலயத்தை மேகம் மூடியது
கண்டார்கள் கர்த்தர் மகிமையை

4. சீலாவும் பவுலும் சிறையிலே துதித்ததால்
கட்டுக்கள் கழன்று போயின
ஜெயிலர் இரட்சிக்கப்பட்டான்
அந்த அதிகாரி இரட்சிக்கப்பட்டான்

5. துதி செய்யாத் தொடங்கினதும்
எதிரிகள் தங்களுக்குள்
வெட்டுண்டு மடிந்து போயினர்
எல்லாரும் பிரேதமானார்கள்

Tamil Hymns

1773. பவனி செல்கின்றார் ராசா

பவனி செல்கின்றார் ராசா
பாடிப் புகழ்வோம் நேசா
அவனிதனிலே மறிமேல் ஏறி
ஆனந்தம் பரமானந்தம்

1. எருசலேமின் பதியே
சுரர் கரிசனையுள்ள நிதியே!
அருகில் நின்ற அனைவர் போற்றும்
அரசே எங்கள் சிரசே

2. பன்னிரண்டு சீடர் சென்று
நின்று பாங்காய் வஸ்திரம் விரிக்க
நன்னயம் சேர் மனுவின் சேனை
நாதம் கீதம் ஓத

3. குருத்தோலைகள் பிடிக்க
பாலர் கும்புகும்பாகவே நடிக்க
பெருத்த தொனியாய் ஓசன்னாவென்று
போற்ற மனம் தேற்ற

1774. பள்ளங்களெல்லாம் நிரம்பிட வேண்டும்

பள்ளங்களெல்லாம் நிரம்பிட வேண்டும்
மலைகள் குன்றுகள்தகர்ந்திட வேண்டும்
கோணலானவை நேராகணும்
கரடானவை சமமாகணும்

ராஜா வருகிறார் ஆயத்தமாவோம் (2)
இயேசு வருகிறார் எதிர்
கொண்டு செல்வோம்

1. நல்ல கனிகொடா மரங்களெல்லாம்
வெட்டுண்டு அக்கினியல் போடப்படும்

2. கோதுமையைப் பிரித்து களஞ்சியத்தில் சேர்த்து
பதரையோ அக்கினியில் சுட்டெரிப்பாரே

3. அந்நாளில் வானம் வெந்து அழியும்
பூமியெல்லாம் எரிந்து உருகிப்போகும்

4. கரையில்லாமலே குற்றமில்லாமலே
காத்தருக்காய் வாழ்ந்து முன்னேறுவோம்

5. அநுதினமும் ஜெபத்தில் விழித்தீருப்போம்
அபிஷேக எண்ணெய்யால் நிரம்பிடுவோம்

Tamil Hymns

1775. பனித்துளி போல் பொழிகிறதே

பனித்துளி போல் பொழிகிறதே
தேவனின் அபிஷேகம் பின்மாரியின்
மழை பொழியும் காலம் வந்ததே

ஒருமனதோடு சபையாரெல்லாம்
ஊழியரெல்லாம் ஒன்று கூடுங்கள்
கர்த்தர் பெரிய காரியம் செய்யும்
வேளை வந்ததே வேளை வந்ததே

1. தலை குனிந்து வாழ்ந்தது போதும்
தலையை உயர்த்திடு
சிங்கத்தை போல கெர்ச்சித்து
எதிரியை துரத்திடு
எங்கும் தேவனை தொழுது
கொள்ளும் காலம் வந்ததே
எழுப்புதலடைந்து இயேசுவின்
நாமத்தை எங்கும் உயர்த்துவோம்

அல்லேலூயா (3)
ஆமென் அல்லேலூயா

2. கோலியாத்தின் சத்தம் கேட்டு
பயந்து போகாதே
உனக்குள் இருக்கும் தேவனை
நீ மறந்து போகாதே
விசுவாசமென்னும் கேடகத்தாலே
ஜெயத்தை பெற்றிடு
சத்துருவை உன் காலின் கீழே
மிதித்து எறிந்திடு

3. உலகத்தை கலக்கும் தேவ மனிதராய்
தெரிந்து கொண்டாரே
இருபுறமும் கருக்குள்ள பட்டயம்
நமக்கு தந்தாரே
சிங்கத்தின் மேலும் பாம்பின் மேலும்
நடந்து செல்லுவோம்
சத்துரு மேலே கொடியை ஏற்றி
தேசத்தை சுதந்தரிப்போம்

Tamil Hymns

1776. பனி தூவிடும் இரவில்

பனி தூவிடும் இரவில்
கன்னி மைந்தனாய் புவிமீதினில்
இயேசு பாலன் அவதரித்தார்

அல்லேலூயா (4) வார்த்தை மாம்சம் ஆனாரே

1. அவர் நாமமே மிக அதிசயமாமே!
ஆலோசனையின் கர்த்தர்
என்றும் இவர் தானே

2. ராஜன் தாவீதின் இன்ப சிங்காசனமே
இவர்தாகுமே நித்திய ஆட்சி செய்வாரே

3. அவர் பெரியவர் அவர் உலக இரட்சகரே
அன்பு தேவனை நாமும் போற்றி துதிப்போமே

Tamil Hymns

1777. பனி போல பெய்யும் பரிசுத்தரே

பனி போல பெய்யும் பரிசுத்தரே
மழையாக பொழியும் ஆவியே

ஆவியே.. ஆவியே..
மழையாக பொழியும் ஆவியே

1. மென்மை (வெண்மை) யானவரே
மேகஸ்தம்பமே
ஊற்றுத் தண்ணீர் ஜீவநதி
ஆனந்த தைலமே

2. யுத்தங்கள் செய்பவரே
யோர்தானைப் பிளந்தவரே
பெருமழையாய் பிரவேசித்த
உள்ளங்கை மேகமே

3. வறண்ட நிலங்களிலே
வாய்க்கால்கள் அமைப்பவரே
கனிதரும் மரமாக
காப்பாற்றி வளர்ப்பவரே

Tamil Hymns

1778. பாக்கியமே பெரும் சிலாக்கியமே

பாக்கியமே பெரும் சிலாக்கியமே
இயேசுவின் சேவை பாக்கியமே
எண்ணில்லா மாந்தர் இயேசுவைக் காண
எங்கும் நற்செய்தி சாற்றிடுவோம்

1. எட்டுத் திக்கும் இயேசுவை அறித்திடவே
எழும்பியே சேவை புரிந்திடுவோம்
எதிர்த்து நிற்கும் சேனை வென்று
இயேசுவால் ஜெயமே ஏகிடுவோம்

2. ஆத்தும தரிசனம் கண்டிடுவீர்
ஆண்டவர் வார்த்தையை உணர்ந்திடுவீர்
திறந்த வாசல் அடைபடுதே
அதிக வேகம் சேவை செய்வோம்

3. அழுகையும் புலம்பலும் தொனிக்கின்றதே
அன்பரே தீவிரம் வருகின்றாரே
வேதம் நிறைவேறும் காலமிதே
சேவை புரிந்தே ஏகிடுவோம்

4. சபைதனில் ஒரு மனம் காத்திடுவோம்
பலமுள்ள தூண்களாய் விளங்கிடுவோம்
அழிந்திடும் மாந்தரின் சேவைக்கென்றே
அன்பரின் பாதம் படைத்திடுவோம்

Tamil Hymns

1779. பாடாத ராகங்கள் பாடும்

பாடாத ராகங்கள் பாடும்
மீளாத இன்பங்கள் ஆடும்
கேளாத கீதங்கள் கேட்கும்
மேய்ப்பன் வருகை கூறும்
எந்தன் மீட்பர் வருகின்றார் - (3)

1. உதிர்ந்திடும் மழலை மலர்ந்திடும் சோலை
தெய்வம் தந்த அழகன்றோ
அன்பு மொழி பேசி அருள் மொழி கூறும்
இறைவனின் அழகன்றோ
ஏங்குதென் நெஞ்சமே தாங்கிடும் தஞ்சமே

2. எனக்காய் வந்த இன்பத்தின் நிழலே
இளைப்பை ஆற்றிடுமே
தாகத்தை தீர்க்கும் பேரின்ப ஊற்றே
தாகத்தை தீர்த்திடுமே
அன்பரை காணவே கண்களும் ஏங்குதே

Tamil Hymns

1780. பாடல்களால் உம்மை நான் துதிக்க

பாடல்களால் உம்மை நான் துதிக்க
கிருபை தர வேண்டுமே
இசையோடு உம்மை நான் பாட
பாடல் தரவேண்டுமே

1. அசைவும் நீரே ஆதாரம்
நீரே - இயேசைய்யா

உம்மையன்றி வேறொரு
தெய்வம் இல்லை - கண்டு கொண்டேன்

2. இன்பமும் இசையும் என் ஈர்ப்பும் நீரே
இயேசைய்யா

3. உயர்வும் நீரே ஊக்கமும் நீரே
இயேசைய்யா

4. எண்ணமும் நீரே ஏக்கமும் நீரே
இயேசைய்யா

5. ஐஸ்வர்யம் நீரே ஒருவராம் தெய்வமே
இயேசைய்யா

6. ஓய்வின்றி துதிக்க தகுந்த்வர் நீரே
இயேசைய்யா

7. ஔஷதம் நீரே எனக்கெல்லாம் நீரே
இயேசைய்யா

1781. பாடித் துதி மனமே பரனைக்

பாடித் துதி மனமே பரனைக்
கொண்டாடித் துதி தினமே
நீடித்த காலமதாகப் பரன் எமை
நேசித்த பட்சத்தை வாசித்து வாசித்து

1. தீர்க்கதரிசிகளைக் கொண்டு முன்னுறச்
செப்பின் தேவபரன் இந்தக் காலத்தில்
மார்க்கமதாகக் குமாரனைக் கொண்டு
விளக்கின அன்பை விழைந்து தியானித்துப்

2. சொந்த ஜனமாக யூதர் இருந்திட
தொலையில் கிடந்த புறமாந்தராம் எமை
மந்தையில் சேர்த்துப் பராபரன் தம்முடை
மைந்தர்களாக்கின சந்தோஷத்துக்காகப்

3. எத்தனை தீர்க்கர் அநேக அப்போஸ்தலர்
எத்தனை போதகர்கள் இரத்தச் சாட்சிகள்
எத்தனை வேண்டுமோ அத்தனையும் தந்திங்கு
இத்தனையாய்க் கிருபை வைத்த நம் கர்த்தனை

1782. பாடி புகழ்வேன் நான் ஆடி மகிழ்வேன்

பாடி புகழ்வேன் நான் ஆடி மகிழ்வேன்
அவர் நன்மைகளை எங்கும் சொல்லுவேன்
அப்பா சமுகத்தில் ஆடி பாடி மகிழ்ந்திருப்பேன்
அவர் இஸ்ரவேலின் வல்லவரே

பாடுவேன் அல்லோயா
துதி அல்லோயா (2)
கிருபையை புகழ்ந்திடுவேன்

1. எளியவனை நீர் உயர்த்திடுவீர்
ஆயிரமாக பெருக செய்வீர்

2. கூப்பிட்ட நேரத்தில் பதில் அளித்து
குறைகள் தீர்த்திட வருபவரே

3. பகைகும் ஜனங்களின் நடுவிலே
பந்தியை கொடுத்து உயர்த்திடுவீர்

Tamil Hymns

1783. பாடினால் பாடுவேன் இயேசு பாலனை

பாடினால் பாடுவேன் இயேசு பாலனை
உன்னைப் பாடினால் துன்பம் நீங்கிடும்
தேடினால் தேடுவேன் இயேசு தேவனை
உன்னருள் நான் தேடுவேன் தேடுவேன்

1. பன்னிரு வயதினில் பாலகன் நீரே
என்னரும் போதனை இயம்பி நின்றிரே
கோடையில் கிடைத்த குளிர் இளநீரே
கடையர் களித்திட கதி தருவீரே

2. பாவை உம்மை தொட்டதினாலே
பறந்து போனதே அவள் தன் நோயும்
பாவி எந்தன் பாவ வினைகள்
பறந்து போகுமே உன்னை நினைத்தால்

Tamil Hymns

1784. பாடும் பாடல் இயேசுவுக்காக

பாடும் பாடல் இயேசுவுக்காக
பாடுவேன் நான் எந்த நாளுமே
என் ராஜா வண்ண ரோஜா
பள்ளத்தாக்கின் லீலி அவரே

1. அழகென்றால் அவர் போலே
யார்தான் உண்டு இந்த லோகத்தில்
வண்ண மேனியோனே எண்ணிப் பாடிடவே
என் உள்ளம் மகிழ்வாகுதே

2. அன்பினிலே என் நேசர்க்கே
என்றென்றுமே இணையில்லையே
என்னை மீட்டிடவே தம் ஜீவன் தந்தார்
என் நேசர் அன்பில் மகிழ்வேன்

3. தெய்வம் என்றால் இயேசுதானே
சாவை வென்று உயிர்த்தெழுந்தாரே
என் பொன் நெசரின் மார்பில் சாய்தோனாக
நான் பாடுவேன் பாமாலைகள்

Tamil Hymns

1785. பாடுவேன் என்றும் என் இயேசுவின்

1. பாடுவேன் என்றும்
என் இயேசுவின் புகழ்
என் ஜீவிய காலமெல்லாம்
நான் உம்மைப் பாடுவேன்

நான் உம்மைப் பாடாமல்
என்ன செய்வேன் ஜீவனும் ஆனவரே
நான் உம்மைத் தேடாமல் - வேறெங்கு
செல்வேன் என் வாழ்வின் நாயகனே
இயேசுவே என் உறைவிடம்
இவ்வுலகிலே எந்தன் நம்பிக்கை
தொடருவேன் அவர் அடிச்சுவடை
இனி வரும் நாளெல்லாம்

2. பாவசேற்றில் நின்று
என்னை தூக்கியெடுத்தவரே
சாபங்கள் போக்கி புது வாழ்வு தந்தவரே

Tamil Hymns

1786. பாடுவேன் பரவசமாகுவேன்

பாடுவேன் பரவசமாகுவேன்
பறந்தோடும் இன்னலே

1. அலையலையாய் துன்பம் சூழ்ந்து
நிலை கலங்கி ஆழ்த்துகையில்
அலை கடல் தடுத்து நடுவழி விடுத்து
கடத்தியே சென்ற கர்த்தனை

2. என்று மாறும் எந்தன் துயரம்
என்றே மனமும் ஏங்குகையில்
மாராவின் கசப்பை மதுரமாக்கி
மகிழ்வித்த மகிபனையே

3. ஒன்றுமில்லா வெறுமை நிலையில்
உதவுவாரற்றுப் போகையில்
கன்மலை பிளந்து தண்ணீரைச் சுரந்து
தாகம் தீர்த்த தயவை

4. வனாந்திரமாய் வாழ்க்கை மாறி
பட்டினி சஞ்சலம் நேர்கையில்
வான மன்னாவால் ஞானமாய் போஷித்த
காணாத மன்னா இயேசுவே

5. எண்ணிறந்து எதிர்ப்பினூடே
ஏளனமும் சேர்ந்து தாக்கையில்
துன்ப பெருக்கிலும் இன்பமுகம் காட்டி
ஜெயகீதம் ஈந்தவரை

Tamil Hymns

1787. பாடுவோம் நம் தேவனே புதுப்பாடல்

பாடுவோம் நம் தேவனே
புதுப்பாடல் பாடியே - அவர்
நல்லவர் நன்மை செய்பவர்
சர்வ வல்லவர் அவர் அதிசயமானவர்

1. சகல ஜனமே கைகொட்டி கர்த்தரை
கெம்பீரமாய் பாடுவோம்
சுரமண்டலம் மேளதாளங்கள்
முழங்கியே துதித்திடுவோம்
தாழ்வில் நம்மை நினைத்தாரே
பேர் சொல்லியே அழைத்தாரே

2. கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றும்
உள்ளதென்றே சொல்லுவோம்
அவர் கிருபை மாறாதது
என்றென்றும் நிலையானது
காலைதோறும் புதிதானது
நம்மை விட்டு விலகாதது

3. அப்பா பிதாவே என்றே அழைக்கும்
பாக்கியம் கொடுத்தாரே
கிருபையும் பொழிந்தாரே
பாவங்களை மன்னித்தாரே

1788. பாடுவோம் மகிழ்வோம் கொண்டாடுவோம்

பாடுவோம் மகிழ்வோம்
கொண்டாடுவோம்
அப்பா சமூகத்தில் பாடி
மகிழ்ந்து கொண்டாடுவோம்

1. அக்கினி மதில் நீரே
ஆறுதல் மழை நீரே
இக்கட்டில் துணை நீரே
இருளில் வெளிச்சம் நீரே
நன்றி நன்றி நன்றி

2. துயர்நீக்கும் மருத்துவரே
என் துதிக்குப் பாத்திரரே
பெலனெல்லாம் நீர்தானையா
என் பிரியமும் நீர்தானையா

3. கல்வாரி சிலுவையினால்
என் சாபங்கள் உடைந்ததையா
ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள்
இந்த அடிமைக்கு கிடைத்ததையா

4. இயேசுவே உம் இரதத்ததால்
என்னை நீதிமானாய் மாற்றினீரே
பரிசுத்த ஆவி தந்து
உம் அன்பை ஊற்றுனீரே

5. உம்மையே நம்பி வாழ்வதால்
உமக்கே சொந்தமானேன்
என் உயிரான கிறிஸ்து வந்ததால்
உம் உறவுக்குள் வந்துவிட்டேன்

6. இவ்வுலகப் போக்கின்படி
நான் வாழ்ந்தேன் பலநாட்கள்
உம்மோடு இணைத்தீரைய்யா
உம் மிகுந்த இரக்கத்தினால்

7. வாழ்வு தரும் ஊற்று நீரே
வழிகாட்டும் தீபம் நீரே
புயலில் புகலிடமே
கடும் வெயிலில் குளிர் நிழலே

Tamil Hymns

8. பேரின்ப நீரோடையில்
என் தாகம் தணிப்பவரே
உமது பேரன்பு
அது எத்தனை மேலானது

Tamil Hymns

1789. பாதகன் என் வினைதீர்

பாதகன் என் வினைதீர் ஐயா கிருபாகரா
நின் பாடு நினைந் தெனைச் சேர் ஐயா
தீதகற்றவே சிறந்த சேண் உலகினிமை விட்டு
பூதலத் துகந்து வந்த புண்ணியனே யேசு தேவா

1. வந்துறும் எப்பாவிகளையும்
அங்கீகரிக்கும் மாசில்லாத யேசு நாதனே
உந்தன் இடம் வந்துளமே உருகி
அழுத மாது முந்திமிகச் செய்த பாவம்
முழுதும் பொறுத்தாய் அன்றோ

2. சிந்தின உன் உதிரம் அதே தீயோன்
மறத்தைச் சின்னபின்னம் செய்ய வல்லதே
பந்தம் உற உன்றன் வலப் பாகா முற்ற
கள்வனையே விந்தையுற
வேரட்சித்த வேதனே அவ்விதமாயே

3. அற்பவிசுவாசமுளன் ஆம் - அடியேனை
இனி ஆதரிப்பதார் உன் தஞ்சமே
தற்பரா உனைத் தரிசித் தன்றி நம்பிடேன்
எனவே செப்பின தோமாவுக்குப்போல்
திரு உருக்காட்சி தந்து

Tamil Hymns

1790. பாதம் ஒன்றே வேண்டும்

பாதம் ஒன்றே வேண்டும் இந்தப் பாரில்
எனக்கு மற்றேதும் வேண்டாம் - உன்

1. நாதனே துங்கமெய் வேதனே பொங்குநற்
காதலுடன் துய்ய தூதர் தொழுஞ்செய்ய

2. சீறும் புயலினால் வாரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல் நீர்மேல் நடந்தஉன்

3. வீசும் கமழ் கொண்ட வாசனைத் தைலத்தை
ஆசையுடன் மரி பூசிப் பணிந்த பொற்

4. போக்கிடமற்ற எம் ஆக்கினை யாவையும்
நீக்கிடவே மரந் தூக்கி நடந்த நற்

5. நானிலத்தோர் உயர் வான் நிலத் தேற வல்
ஆணி துளைத்திடத் தானே கொடுத்த உன்

6. பாதம் அடைந்தவர்க் காதரவாய்ப் பிர
சாதம் அருள் யேசு நாதனே என்றும் உன்

Tamil Hymns

1791. பாதம் பணிகின்றோம் உந்தன்

பாதம் பணிகின்றோம் உந்தன் (2)
சர்வ பூமியின் ஆண்டவரே (2)
சகலமும் செய்ய வல்லவரே (2)
செய்ய நினைத்தது ஒரு போதும் (2)
என்றென்றும் தடைபடுவதில்லை (2)

1. நீதியின் சூரியனானவரே (2)
செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் (2)
தீமையை பாரா சுத்தர் நீர் (2)
பாவத்தை பாரா பரிசுத்தரே (2)

2. ஒருவரும் சேரா ஒளியினிலே
வாசம் செய்யும் தேவன் நீரே
கர்த்தரே மகா தேவன் நீரே
எல்லா தேவர்க்கும் ராஜன் நீரே

3. நித்திய மகிமை உடையவரே
நித்தியத்தின் ராஜாவே
நித்திய ராஜாவே
நித்திய ஜீவன் அளிப்பவரே
நித்திய எங்களை காப்பவரே

Tamil Hymns

1792. பாதம் போற்றியே பணிந்திடுவேன்

பாதம் போற்றியே பணிந்திடுவேன் - இயேசுவின்
பாதம் போற்றியே பணிந்திடுவேன்

1. முன்னணைப் புல்லினை மிதித்திட்ட பாதம்
மன்னவர் முவர் பணிந்திட்ட பாதம்
வண்ணமாய் மேய்ப்பர்கள் வணங்கிய பாதம்
எண்ணிலாத் தூதர்கள் சுமந்திட்ட பாதம்

2. நோய்களைத் தீர்த்திட விரைந்திட்ட
பேய்களைத் துரத்திட சென்றிட்ட பாதம்
மாய்ந்திடும் பாவியை ஈட்டிடும் பாதம்
தூய்மையின் ஊற்றாம் இயேசுவின் பாதம்

3. பொங்கிடும் ஆழியின் அலைகளின் வேகம்
மங்கிய இருளும் சூழ்ந்திடும் நேரம்
ஏங்கிடும் சீஷரை மீட்டிடும் வண்ணம்
பாங்குடன் கடல் மேல் நடந்திட்ட பாதம்

4. பரிசேயன் வீட்டிற்கு சென்ற நற்பாதம்
உரிமையாய் பாவி வந்தவன் இல்லம்
பரிமள தைலத்தைப் பூசிய பாதம்
பரிவுடன் மன்னித்த இயேசுவின் பாதம்

5. கொல்கதா மலைபேல் நடந்திட்ட பாதம்
நல்லவர் இயேசுவின் மென்மையாம் பாதம்
வெள்ளமாய்க் குருதி ஒடிடும் வண்ணம்
அறைந்திடத்தானே கொடுத்த நற்பாதம்

Tamil Hymns

1793. பாதம் வந்தனமே வரப்பிர

பாதம் வந்தனமே - வரப்பிர
சாதம் எந்தனமே

1.ஆதரவொடு வேதமே விடுத்
தாளும் அற்புதனே, திவ்விய சுதனே,
கிருபைப் பதனே, சுசிகர - பாதம்

2.பேசுதற்கரிதான ஸ்துத்திய
பெருமைக் கோமானே மெய்ச் சீமானே
அருள் கோனே, , சுசிகர - பாதம்

3.ஞானமாய் நரர் கான ஜீவனை
நல்கிய சீலா, மனுவேலா
துரை பாலா, சுசிகர - பாதம்

4.தீவினை தொலைத் தாவியே மிகுத்
தேவும் இங்கிதமே, என் ரஞ்சிதமே
நீ சந்ததமே, சுசிகர - பாதம்

5.தாசரை விசுவாசமாய்க் கையில்
தாங்குபகரா, அதிகாரா
கன தீரா, சுசிகர - பாதம்

Tamil Hymns

1794. பாதை காட்டும் மா யெகோவா

1. பாதை காட்டும் மாயெகோவா
பரதேசியான நான் - பலவீனன்
அறிவீனன் இவ்வுலகம் காடு தான்
வானாகாரம் வானாகாரம்
தந்து என்னைப் போஷியும்

2. ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றை
நீர் திறந்து தாருமேன்
தீப மேக ஸ்தம்பம் காட்டும்
வழியில் நடத்துமேன்
வல்ல மீட்பர் வல்ல மீட்பர்
என்னைத் தாங்கும், இயேசுவே.

3. சாவின் அந்தகாரம் வந்து
என்னை மூடும் நேரத்தில்
சாவின் மேலும் வெற்றி தந்து
என்னைச் சேர்ப்பீர் மோட்சத்தில்
கீத வாழ்த்தல் கீத வாழ்த்தல்
உமக்கென்றும் பாடுவேன்

Tamil Hymns

1795. பாதை தெரியாத ஆட்டைப் போல

பாதை தெரியாத ஆட்டைப் போல
அலைந்தேன் உலகிலே
நல்ல நேசராக வந்து என்னை மீட்டீரே

1. கலங்கினேன் நீர் என்னைக் கண்டீர்
பதறினேன் நீர் என்னைப் பார்த்தீர்
கல்வாரியினண்டை வந்தேன்
பாவம் தீர நான் அழுதேன்

2. என் காயம் பார்த்திடு என்றீர்
உன் காயம் ஆறிடும் என்றீர்
நம்பிக்கையோடே நீ வந்தால்
துணையாக இருப்பேனே என்றீர்

Tamil Hymns

1796. பாதைக்கு தீபமாமே

பாதைக்கு தீபமாமே
பரிசுத்த ஆகமம் -மா நல்ல

1. பாதைக்கு தீபமாமே , பாவிக்கு லாபமே ,
பேதைக்கு திரவியமே , பரிசுத்த ஆகமம்.-மா நல்ல

2. தேனின் மதுரமே , திவ்ய அமுதமே ,
வான பிதாவின் வாக்கே பரிசுத்த ஆகமம்- மா நல்ல

3. நீதியி னாதாரமே நெறியுள்ளோர் செல்வமே,
ஓதரும் மேன்மையாமே பரிசுத்த ஆகமம் .- மா நல்ல

4. ஞான சமுத்திரமே , நல்ல சுமுத்திரையே ,
ஈனர்க்கும் ஆதரவே பரிசுத்ட ஆகமம் .- மா நல்ல

5. உலகோர்க் குயிர் துணை , உண்டோ அதற்கினை ?
அலகையை வெல்லுங்கணை பரிசுத்த ஆகமம் - மா நல்ல

6. எல்லையில்லா விஸ்தாரம் ,எவர்க்கும் பர மாகரம் ,
வல்ல பரனின் வேதம் ஆகமம்

1797. பாரத தேசத்தின் ராஜா நீரே

பாரத தேசத்தின் ராஜா நீரே
ஆ.. அல்லேலுயா பார் போற்றும்
எங்கள் தெய்வம் நீரே ஆ.. அல்லேலுயா
இந்திய தேசத்தின் இரட்சகரே
அல்லே அல்லேலுயா இந்தியர்
எங்களை காப்பவரே அல்லேலுயா

ஹா... லே... லு... யா... (3)

1. பெருமழையின் சத்தம் கேட்டிடுதே
எழுப்புதல் எங்கும் பற்றிடுதே
இரட்சிப்பு பெருகிட சபை நிரம்பியது
அல்லே.. அல்லேலுயா

2. சாத்தானின் முகத்திரை கிழிந்திட்டதே
சாபங்கள் யாவும் தொலைந்திட்டதே
கர்த்தரே தெய்வம் என்று தேசம் கண்டது
அல்லே.. அல்லேலுயா

3. செவிடர்கள் யாவரும் கேட்கின்றாரே
குருடர்கள் யாவரும் பார்க்கின்றாரே
இயேசுவின் நாமத்தில் அற்புதம் நடக்குது
அல்லே... அல்லேலுயா

இயேசுவே வெற்றி பெற்றாரே
சாத்தான் சேனை தோற்றுப் போனதே
சிலுவைக் கொடி வெற்றி பெற்றதே
இயேசு நாமம் மகிமைப்பட்டதே
அக்கினியின் ஆவி ஊற்றப்பட்டதே
எழுப்புதலின் தீ பற்றிக் கொண்டதே

Tamil Hymns

1798. பாரச் சிலுவையினை தோளில் சுமக்கும்

பாரச் சிலுவையினை தோளில் சுமக்கும் அந்தப்
பாதம் என் தெய்வம் அல்லவோ!
தாகமாய் இருக்கிறேன் என்று சொல்லும் அவர்
ஞாபகம் நான் அல்லவோ!
அவர் ஞாபகம் நான் அல்லவோ!

1. ஈராறு சீடருடன் வாழ்ந்த அவருக்கு
இருபக்கம் கள்வர் அல்லவோ!
பாவம் அறியா அவர் பாதத்தில்
பணிந்திடும் பாக்கியம் தந்தாரல்லோ!
சுப பாக்கியம் தந்தாரல்லோ!

2. கண்களில் கண்ணீரால் பார்வையில் ஒளி மங்க
பார்த்திபன் சாவதன்றோ!
தன்னலமாகச் சென்ற பாதகன்
எனை வெல்லப் பொற்பாதம் ஆணி அல்லோ
அவர் பொற்பாதம் ஆணி அல்லோ!

3. கல்வாரி மலையினில் நின்றிடும் சிலுவையே
மாபாவி நானும் வந்தேன்!
தொங்கிடும் என் தெய்வம்
தங்கிட என் உள்ளம் தந்திட இதோ வந்தேன்!
நேசர் தங்கிட இதோ வந்தேன்!

Tamil Hymns

1799. பாரீர் அருணோதயம் போல்

1. பாரீர் அருணோதயம் போல்
உதித்து வரும் இவர் யாரோ
முகம் சூரியன் போல் பிரகாசம்
சத்தம் பெருவெள்ள இரைச்சல் போலே

இயேசுவே ஆத்ம நேசரே
சாரோனின் ரோஜாவும் லீலி புஷ்பமுமாம்
பதினாயிரங்களில் சிறந்தோர்

2. காட்டு மரங்களில் கிச்சிலி போல்
எந்தன் நேசர் அதோ நிற்கிறார்
நாமம் ஊற்றுண்ட பரிமளமே
இன்பம் ரசத்திலும் அதி மதிரம்

3. அவர் இடது கை என் தலை கீழ்
வலக்கரத்தாலே தாங்குகிறார்
அவர் நேசத்தால் சோகமானேன்
என் மேல் பறந்த கொடி நேசமே

4. என் பிரியமே ரூபவதி
என அழைத்திடும் இன்ப சத்தம்
கேட்டு அவர் பின்னே ஓடிடுவேன்
அவர் சமூகத்தில் மகிழ்ந்திடுவேன்

5. என் நேசர் என்னுடையவரே
அவர் மார்பினின் சாய்ந்திடுவேன்
மணவாளியே வா என்பாரே
நான் செல்வேன் அந்நேரமே

6. நாம் மகிழ்ந்து துதித்திடுவோம்
ஆட்டுக்குட்டியின் மண நாளிலே
சுத்த பிரகாச ஆடையோடே
பறந்திடுவோம் நாம் மேகத்தில்

Tamil Hymns

1800. பாரீர் கெத்சமனே

பாரீர் கெத்சமனே
பூங்காவில் என் நேசரையே
பாவி எனக்காய் வேண்டுதல்
செய்திடும் சத்தம் தொனித்திடுதே

1. தேகமெல்லாம் வருந்தி
சோகமடைந்தவராய்
தேவாதி தேவன் ஏகசுதன்
படும்பாடு எனக்காகவே

2. அப்பா என் பாத்திரமே
நீக்கும் நின் சித்தமானால்
எப்படியாயினும் சித்தம் செய்ய - என்னை
தத்தம் செய்வேன் என்றாரே

3. ரத்தத்தின் வேர்வையாலே
மெத்தவும் நனைந்ததே
இம்மானுவேல் உள்ளம் உருகியே
வேண்டுதல் செய்தாரே

4. மும்முறை தரைமீது
தாங்கொணா வேதனையால்
உன்னதன் தாமே வீழ்ந்து ஜெபித்தாரே
பாதகன் மீட்புறவே

5. அன்பின் அருள்மொழியால்
ஆறுதல் அளிப்பவர் - துன்ப
வேளையில் தேற்றுவாரின்றியே
நெந்து அலறுகின்றார்

6. என்னையும் தம்மைப் போல
மாற்றும் இம்மாநேசத்தை
எண்ணியெண்ணியே உள்ளங்கனிந்து நான்
என்றும் புகழ்ந்திடுவேன்

Tamil Hymns

1801. பார் போற்றும் வேந்தன்

1. பார் போற்றும் வேந்தன் இப்பாழ் உள்ளம் வந்தார்
பூரிப்பால் உள்ளம் யாவும் மூடினார்
பரிசுத்தவான்களோடு இணைத்தார்
இந்த வாழ்க்கை என்றும் இன்ப வாழ்க்கையே

அல்லேலூயா கீதம் நான் என்றும் பாடுவேன்
ஆர்ப்பரித்து உள்ளம் மகிழ்ந்து பூரிப்பேன்
ஜீவனுள்ள மட்டும் என்றும் கூறுவேன்
அல்லேலூயா! அல்லேலூயா!

2. பாவ மேகம் யாவும் கலைந்து சென்றதே
பரிசுத்த ஜூவாலை கவர்ந்து கொண்டதே
உடல் பொருள் ஆவி ஆன்மா யாவுமே
இயேசுவின் சிலுவை அடிவாரமே!

3. தாழ்மை உள்ளம் கொண்டு பின் செல்வேன் நானே
சுந்தல் அல்லவோ என் நற்செயல் எல்லாம்
உள்ளத்தில் கிறிஸ்து வந்து தங்கலே
வல்ல தேவன் காட்டும் சுத்தக் கிருபையே!

4. நாள்தோறும் நாதன் வழியை ஆசிப்பேன்
விட்டு வந்த பாவக் கிடங்கிற்குச் செல்லேன்
என் முன்னே அநேக சுத்தர் செல்கின்றார்
இப்பாதையே எந்தன் ஜீவ பாதையே!

Tamil Hymns

1802. பாலரே ஓர் நேசர் உண்டு

1. பாலரே, ஓர் நேசர் உண்டு விண் மோட்ச வீட்டிலே;
நீங்கா இந்நேசர் அன்பு ஓர் நாளும் குன்றாதே;
உற்றாரின் நேசம் யாவும் நாள் செல்ல மாறினும்,
இவ்வன்பர் திவ்விய நேசம் மாறாமல் நிலைக்கும்.

2. பாலரே, ஓர் வீடு உண்டு விண் மோட்ச நாட்டிலே;
பேர் வாழ்வுண்டாக இயேசு அங்கரசாள்வாரே;
ஒப்பற்ற அந்த வீட்டை நாம் நாட வேண்டாமோ?
அங்குள்ளோர் இன்ப வாழ்வில் ஓர் தாழ்ச்சிதானுண்டோ!

3. பாலரே, ஓர் கிரீடம் உண்டு விண் மோட்ச வீட்டில், நீர்
நல் மீட்பரின் பேரன்பால் பொற் கிரீடம் அணிவீர்;
இப்போது மீட்பைப் பெற்று மா நேசர் பின்சென்றார்,
இவ்வாடா ஜீவ கிரீடம் அப்போது சூடுவார்.

4. பாலரே, ஓர் கீதம் உண்டு விண் மோட்ச வீட்டிலே;
மா ஜெய கீதம் பாட ஓர் வீணையும் உண்டே;
அந்நாட்டின் இன்பம் எல்லாம் நம் மீட்பர்க்குரிமை;
நீர் அவரிடம் வாரும், ஈவார் அவ்வின்பத்தை.

Tamil Hymns

1803. பாலர் ஞாயிறிது பாசமாய் வாரும்

பாலர் ஞாயிறிது, பாசமாய் வாரும்,
பாடி இயேசு நாமம் பணிந்து போற்றும்.
தாலந்தை புதைத்திடாமல் தாமதமே பண்ணிடாமல்
ஞாலமீதிறங்கி வந்த சுவாமி இயேசு அன்பாய் எண்ணிப்

1. பாலர் சங்கத்தாலே மாட்சிமை பெற்றோம்,
பாலர் நேசர் பதம் பணியக் கற்றோம்,
பாரில் ஜோதி வீசுகின்ற பரிசுத்த வேதம் கற்றோம்,
ஊரில் எங்கும் நம் பஞ்சாங்கம் ஓதும் பாலியர் நேசன் கண்டோம் --- பாலர்

2. தேடி வந்தலையும் தேசிகருண்டு,
பாடி ஆர்ப்பரிக்க பாலர் பாட்டுண்டு,
கூடி வந்து ஆனந்திக்கக் கூட்டப்பண்டிகையுமுண்டு
நாடி மீட்பர் பாதம் பாலர் தேட எல்லா ஏதுமுண்டு. --- பாலர்

3. இன்று மட்டும் நம்மை ஏந்தி வந்தாரே,
இன்னும் நித்யமும் பாதுகாப்பாரே,
அன்பின் சங்கம் இதைக்கொண்டு ஆத்ம நேசர் செய்து வரும்
எண்ணி முடியா நன்மையை ஏகமாக எண்ணிக்கொண்டு --- பாலர்

Tamil Hymns

1804. பாலைவனமாய் இருந்த எங்களை

பாலைவனமாய் இருந்த எங்களை
சோலைவனமாய் மாற்றினீரய்யா

1. அறுந்த கொடியைப் போலிருந்தோமே
எங்களை செடியோடே இணைத்துவிட்டீரே

2. கண்ணீரிலே மூழ்கியிருந்தோமே
எங்களை களிப்பாக மாற்றினீரையா

3. வறண்ட நிலத்தைப் போலிருந்தோமே
எங்களை வயல்வெளியாய்
மாற்றினீரையா

1805. பாவ சஞ்சலத்தை நீக்க

1. பாவ சஞ்சலத்தை நீக்க
பிராண நண்பர்தான் உண்டே
பாவ பாரம் தீர்ந்து போக
மீட்பர் பாதம் தஞ்சமே
சால துக்க துன்பத்தாலே
நெஞ்சம் நொந்து சோருங்கால்
துன்பம் இன்பமாக மாறும்
ஊக்கமான ஜெபத்தால்

2. கஷ்ட நஷ்டம் உண்டானாலும்
இயேசுவண்டை சேருவோம்
மோச நாசம் நேரிட்டாலும்
ஜெப தூபம் காட்டுவோம்
நீக்குவாரே நெஞ்சின் நோவை
பெலவீனம் தாங்குவார்
நீக்குவாரே மனச் சோர்பை
தீய குணம் மாற்றுவார்

3. பெலவீனமான போதும்
கிருபாசனமுண்டே
பந்து ஜனம் சாகும் போதும்
புகலிடம் இதுவே
ஒப்பில்லாத பிராண நேசா
உம்மை நம்பி நேசிப்போம்
அளவற்ற அருள் நாதா
உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்

Tamil Hymns

1806. பாவ நாசர் பட்ட காயம்

1. பாவ நாசர் பட்ட காயம் நோக்கி தியானம் செய்வது
ஜீவன், சுகம், நற்சகாயம், ஆறுதலும் உள்ளது

2. இரத்த வெள்ளம் பாய்ந்ததாலே அன்பின் வெள்ளம் ஆயிற்று
தெய்வ நேசம் அதினாலே மானிடர்க்குத் தோன்றிற்று.

3. ஆணி பாய்ந்த மீட்பர் பாதம் தஞ்சம் என்று பற்றினேன்
அவர் திவ்விய நேச முகம் அருள் வீசக் காண்கிறேன்

4. பாசத்தால் என் நெஞ்சம் பொங்கி துக்கத்தால் கலங்குவேன்
அவர் சாவால் துக்கம் மாறி சாகா ஜீவன் அடைவேன்

5. சிலுவையை நோக்கி நிற்க, உமதருள் உணர்வேன்
தீர்த்த ரத்தம் நெஞ்சில் பட, சமாதானம் பெறுவேன்

6. அவர் சிலுவை அடியில் நிற்பதே மா பாக்கியம்
சோர்ந்த திரு முகத்தினில் காண்பேன் திவ்விய உருக்கம்

7. உம்மை நான் கண்ணாரக் காண விண்ணில் சேரும் அளவும்
உம்மை ஓயா தியானம் செய்ய என்னை ஏவியருளும்

Tamil Hymns

1807. பாவ தோஷம் நீக்கிட

1. பாவ தோஷம் நீக்கிட
மீட்பரின் இரத்தம் தானே
தீயகுணம் மாற்றிட
மீட்பரின் இரத்தம் தானே

மெய்யாம் ஜீவநதி
பாவம் போக்கும் நதி
வேறே நதியை அறியேன்
மீட்பரின் இரத்தம் தானே

2. என்னைச் சுத்தமாக்கிட
மீட்பரின் இரத்தம் தானே
மன்னிப்பை நான் பெற்றிட
மீட்பரின் இரத்தம் தானே

3. வேறே இரட்சிப்பில்லையே
மீட்பரின் இரத்தம் தானே
புண்ணியக் கிரியை செல்லாதே
மீட்பரின் இரத்தம் தானே

4. மோட்ச மார்க்கம் இதுவே
மீட்பரின் இரத்தம் தானே
இயேசு சுத்த தீர்த்தமே
மீட்பரின் இரத்தம் தானே

Tamil Hymns

1808. பாவங்கள் போக்கவே சாபங்கள் நீக்கவே

1. பாவங்கள் போக்கவே சாபங்கள்
நீக்கவே பூலோகம் வந்தாரைய்யா
மனிதனை மீட்கவே பரலோகம்
திறக்கவே சிலுவையை சுமந்தோரையா
கண்ணீரை துடைத்தாரைய்யா
சந்தோஷம் தந்தாரைய்யா

எந்தன் இயேசுவே - (4)

2. தங்கத்தை கேட்கவில்லை வைரத்தை
கேட்கவில்லை உள்ளத்தை கேட்டாரைய்யா
ஆஸ்தியை கேட்கவில்லை அந்தஸ்தை
கேட்கவில்லை உள்ளத்தை கேட்டாரைய்யா
நான் தேடி போகவில்லை
என்னைத் தேடி வந்தாரைய்யா

3. தாய் உன்னை மறந்தாலும்
தந்தை உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்கமாட்டார்
நண்பர் உன்னை மறந்தாலும்
உற்றார் உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்கமாட்டார்
கரம் பிடித்து நடத்திடுவார்
கன்மலை மேல் நிறுத்திடுவார்

Tamil Hymns

1809. பாவ மன்னிப்பின் நிச்சயத்தை

பாவமன்னிப்பின் நிச்சயத்தை
பெற்றுக் கொள்ள வேண்டும்
பரலோகத்தில் ஓர் இடம் நீ பெறவேண்டும்

இயேசு தருகிறார் இன்று தருகிறார்
அதற்காகத் தான் சிலுவையிலே
இரத்தம் சிந்தி விட்டார்

1. முதன்முதலாய் தேவனுக்கு உதந்தைத் தேடு
பின் எல்லாமே உனக்கு சேர்த்துத் தந்திடுவார்

2. நீ தேடும் நிம்மதி இயேசு தருகிறார்
நீ நாடும் விடுதலை அவரிடம் உண்டு

3. வருத்தப்பட்டு பாரங்கள் சுமக்கின்ற மகனே
நீ வருவாயா இயேசு இன்று வாழ்வு தந்திடுவார்

4. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பில்லை
இயேசு ராஜா நாமமில்லாமல் இரட்சிப்பும் இல்லை

Tamil Hymns

1810. பாவத்தின் பலன் நரகம் நரகம்

1. பாவத்தின் பலன் நரகம் நரகம்
ஓ பாவி நடுங்கிடாயோ
கண் காண்பதெல்லாம் அழியும் அழியும்
காணாததல்லோ நித்தியம்

இயேசு இராஜா வருவார்
இன்னுங் கொஞ்ச காலந்தான்
மோட்சலோகம் சேர்ந்திடுவோம்

2. உலக இன்பம் நம்பாதே நம்பாதே
அதின் இச்சை யாவும் ஒழியும்
உன் ஜீவன் போகும் நாளிலே நாளிலே
ஓர் காசும்கூட வராதே

3. உன் காலமெல்லாம் போகுதே போகுதே
உலக மாய்கையிலே,
ஓ தேவகோபம் வருமுன் வருமுன்
உன் மீட்பரண்டை வாராயோ

4. தேவன்பின் வெள்ளம் ஓடுதே ஓடுதே
கல்வாரி மலை தனிலே
உன் பாவம் யாவும் நீங்கிப்போம் நீங்கிப்போம்
அதில்ஸ்நானம்செய்வதாலே.

5. மாபாவியான என்னையும்
என் நேசர் ஏற்றுக் கொண்டாரே
ஓபாவி நீயும் ஓடிவா ஓடிவா
தேவாசீர்வாதம் பெறுவாய்

Tamil Hymns

1811. பாவத்தின் பாரத்தினால் தவித்திடும்

பாவத்தின் பாரத்தினால்
தவித்திடும் பாவி என்னை
நின் கிருபை பிரவாகத்தால்
ஏற்றிடும் இயேசுநாதா

1. கெட்ட குமாரனைப் போல்
துஷ்டன் நான் அலைந்தேனப்பா
நின் அன்பை உணராமல்
துரோகம் நான் செய்தேனே

2. தந்தையை விட்ட பின்பு
தவிடுதான் ஆகாரமோ
மனங்கசிந்து நொந்தேன்
கண்ணீரைத் துடைத்திடுமே

3. கள்ளானாயினும் நான்
நீ பெற்ற பிள்ளையல்லோ
கள்ளனுக்கருள் செய்த நீ
தள்ளாதே சிலுவை நாதா

4. தாய் தந்தை தமரெல்லாம்
என்னைக் கைவிடுவார்கள்
சாகும் நாளென்னைத் தாங்குவார்
நீரல்லால் யாருமில்லை

Tamil Hymns

1812. பாவம் பிரவேசியாய்

1. பாவம் பிரவேசியாய் பொன்னகரம் உண்டே
தீட்டானதொன்றும், தீட்டானதொன்றும்
ஓர்காலும் சேராதே

2. இதோ நல் மீட்பரே உம்மண்டையில் வந்தேன்
என் பாவம் நீக்கி, என் பாவம் நீக்கி
நீர் சுத்தமாக்குமேன்

3. உம் நேசப் பிள்ளையாய் நீர் சேர்த்துக்கொள்ளுவீர்
தீமை செய்யாமல், தீமை செய்யாமல்
என்னைக் காப்பாற்றுவீர்

4. பின் மோட்ச தேசத்தில் வெண் வஸ்திரம் தரிப்பேன்
குற்றமில்லாமல், குற்றமில்லாமல்
இன்பமாய் வாழுவேன்

Tamil Hymns

1813. பாவங்கள் போக்கவே சாபங்கள்

1. பாவங்கள் போக்கவே சாபங்கள்
நீக்கவே பூலோகம் வந்தாரய்யா
மனிதனை மீட்கவே பரலோகம் சேர்க்கவே
சிலுவையை சுமந்தாரய்யா - கண்ணீரை
துடைத்தாரய்யா சந்தோஷம் தந்தாரய்யா

எந்தன் இயேசுவே - 4

2. தங்கத்தை கேட்கவில்லை வைரத்தை
கேட்கவில்லை உள்ளத்தை கேட்டாரய்யா
ஆஸ்தியை கேட்கவில்லை அந்தஸ்தை
கேட்கவில்லை உள்ளத்தை கேட்டாரய்யா
நான் தேடிபோகவில்லை
என்னை தேடி வந்தாரய்யா

3. தாய் உன்னை மறந்தாலும்
தந்தை உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்க மாட்டார்
நண்பர் உன்னை மறந்தாலும்
உற்றார் உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்க மாட்டார்
கரம் பிடித்து நடத்திடுவார்
கன்மலை மேல் நிறுத்திடுவார்

Tamil Hymns

1814. பாவம் பெருகுதே பாரும் பரன்

பாவம் பெருகுதே!
பாரும் பரன் இயேசுவே!
அழியும் மனுக்குலம்
அதையும் இரட்சிப்பீரே!

1. ஆத்துமா இரட்சிப்பிழந்தவர்
ஆயிரம் ஆயிரமாய்
அன்றாடகம் இந்த மண்ணடியில்
அழிந்து சாகின்றாரே - பாவம்

2. இரட்சிப்பின் நற்செய்தி கேட்டவர்
எச்சரிப்பை வெறுத்து
இரட்சகர் இயேசுவை இழந்தோராய்
இன்றும் கெட்டழிகின்றார் - பாவம்

3. தானியேல் போல ஜெபித்திடும்
தாசர் பலர் மறைந்தார்
திறப்பின் வாசலில் நிற்கும் பலர்
தூங்கிக் களைத்துப் போனார் - பாவம்

4. எமது காரியமாகவே
யாரை அனுப்பிடுவேன்
என்றவர் அழைக்கும் இன்ப சத்தம்
என்னுள்ளம் தொனிக்குதே - பாவம்

5. ஜீவனை வெறுத்துத் தியாகமாய்
சேவையும் செய்திடுவேன்
ஜீவனுக்கீடாக ஜனங்களை
ஜீவ தேவன் தருவார் - பாவம்

6. வெறுங் கையாய் பரலோகத்தில்
வந்திடேன் இயேசு நாதா
ஆத்துமா ஆதாயம் செய்திடவே
ஆசீர் பொழிந்தனுப்பும்

Tamil Hymns

1815. பாவி நீ ஓடி வா

பாவி நீ ஓடி வா - அன்பர்;
இயேசு அழைக்கிறார்;
பாவம் நீக்கிட வா - உந்தன்
பாரம் போக்கிட வா

உந்தனின் பாவத்தினால்
சிந்திய இரத்தத்தைப் பார்; (2)
தந்தை தம் அன்பினாலே
உன்னைப் பந்தமாய்ப் பாதுகாப்பார்; (2)
(பாவி நீ ஓடி வா.......)

வெண்ணங்கி நீ தரிக்க முள்முடி சூட்டினாரே (2)
தீராத பாவம் தீர்க்க - நீயும்
நேராக இன்றே வாராய் (2)
(பாவி நீ ஓடி வா.......)

ஆத்தும தாகம் தீர்க்க ஆண்டவர் கூறுகின்றார்; (2)
தாகம் அடைந்தேன் என்று - நீயும்
தீர்ப்பாயோ அவர்; தாகத்தை (2)
(பாவி நீ ஓடி வா.......)

Tamil Hymns

1816. பாவி உன் மீட்பர் கரிசனையாய்

1. பாவி உன் மீட்பர் கரிசனையாய்
அழைக்கிறார்! அழைக்கிறார்!
அலைந்து திரிந்து ஏன் கெடுவாய்?
இயேசுவின் இரட்சிப்பைப் பார்

அழைக்கிறார்! அழைக்கிறார்!
விரும்பி வருந்தி உந்தனை அழைக்கிறார்!

2. இளைத்தும் தவித்தும் போனவனை
அழைக்கிறார்! அழைக்கிறார்!
நம்பிக்கையோ டவர் பாதம் தனை
சேருவாய் தள்ளமாட்டார் - அழைக்கிறார்

3. தாமதமின்றி இந்நேரத்தினில்
வந்திடுவாய்! வந்திடுவாய்
பாவம் அறவே உம் நெஞ்சத்தினில்
வாழ்வையும் பெற்றிடுவாய் - அழைக்கிறார்

4. விரும்பி வருந்தி அழைக்கிறார்!
ஓடியே வா! ஓடியே வா!
வந்திடுவோரைச் சந்தோஷிப்பிப்பார்!
உடனே உடனே வா! - அழைக்கிறார்

Tamil Hymns

1817. பாவிக்கு புகலிடம் இயேசு இரட்சகர்

பாவிக்கு புகலிடம் இயேசு இரட்சகர்
பாரினில் பலியாக மாண்டாரே

பரிசுத்தரே பாவமானாரே
பாரமான சிலுவை சுமந்தவரே

1. காட்டிக் கொடுத்தான் முப்பது வெள்ளிக்
காசுக்காகவே கர்த்தன் இயேசுவை
கொலை செய்யவே கொண்டு போனாரே
கொல் கொதா மலைக்கு இயேசுவை

2. கள்ளர் மத்தியில் ஒரு கள்ளன் போல்
குற்றமற்ற கிறிஸ்தேசு தொங்கினார்
பரிகாசமும் பசி தாகமும்
படுகாயமும் அடைந்தாரே

3. கால்கள் கைகளில் ஆணி பாய்ந்திட
கிரீடம் முள்களில் பின்னி சூடிட
இரத்த வெள்ளத்தில் கர்த்தர் தொங்கினார்
இதைக் காணும் உள்ளம் தாங்குமோ

4. உலகத்தின் இரட்சகர் இயேசுவே
உயிர் கொடுத்தார் உயிர்த்தெழுந்தார்
தம்மை நம்பினால் உன்னைக் கைவிடார்
தளராமல் நம்பி ஓடி வா

5. பாவ சாபங்கள் தீரா வியாதிகள்
பல தோல்விகள் உந்தன் வாழ்க்கையில்
கண்டு நீ மனம் கலங்குவதேன்
கர்த்தன் இயேசுவண்டை ஓடிவா

6. வருத்தப்பட்டு பாரம் சுமப்போரே
வாருங்கள் என்னண்டையில் என்கிறார்
இளைப்பாறுதல் தரும் இயேசுவை
இன்று தேடி நாடி நம்பி வா

Tamil Hymns

1818. பாவி நான் உந்தன் கிருபை தான்

பாவி நான் உந்தன் கிருபை தான்
என்னை இரட்சித்ததே
என்னை இரட்சித்ததே
என் தேவனே இயேசுவே
பாவியை என்றும் தள்ளா நேசரே

கல்லெறியும் மனிதர் என்னை
சூழ்ந்து நின்றார்கள்
பாவி இவன் மறிக்க வேண்டும்
என்று சொன்னார்கள்
படைத்தவரே உந்தன்
நியாயதீர்ப்பு வேறன்றோ
பாவியாம் என்மேல் கிருபை
காட்டினீர் அன்றோ

Tamil Hymns

1819. பாவி நான் என்ன செய்வேன் கோவே

பாவி நான் என்ன செய்வேன் கோவே
ஜீவன் நீர் விட்டதற்காய்

தேவ கோபத்தினால் மேவிச் சிலுவையில்
தாவி உயிர்விட்டு ஜீவித்த தென்கொலோ

1. நாடி எனைத் தயவாய் மணஞ்செய்ய தேடிவந்தீர் அரசே
ஆடுகளுக்காக நீடி உயிர் தர
பாடு பட்டுக் குரு சூடிறந்தீர் அன்றோ

2. பொன்னுல காதிபனே தேவீர் என்ன செய்தீர் ஐயனே
சின்னப் படுத்தவும் கன்னத்தடிக்கவும்
சென்னியில் முண்முடி தன்னை அழுத்தவும்

3. வாரால் அடிக்கப்பட்டு குட்டுண்டு வாதைபட்டெண்ணம் அற்றீர்
சீரா மனுடவதாரா சருவாதி
காரா பரம குமாரா ஓலோலமே

4. வாதை உமக்கெதினால் உண்டாயிற்று பாதகிபாவத்தினால்
வேதம் நிறைவுற ஆதி பவம் அற
நீதி தரும் யேசு நாத சுவாமியே

5. குற்றமற்ற மீட்பர் பவக்கடன் முற்றும் அறத்தீர்ப்பார்
கொற்ற வர்க்கும் கல்வி கற்றவர்க்கும் சுரர்
மற்ற வர்க்கும் அளவற்ற கிருபையே

Tamil Hymns

1820. பாவி நான் கிருபை காட்டும்

பாவி நான் கிருபை காட்டும்
மீண்டும் ஓர் தருணம் தாரும்
சுயத்தை முற்றும் வெறுத்துவிட்டு
உண்மையாய் உந்தன் வழிநடக்க

1. பாதை தோறும் வேதம் ஏந்தி
பரிசுத்தன் என்று காட்டுகின்றேன்
வேதம் காட்டும் பாதை செல்ல
உள்ளமே இன்றி வாழ்கின்றேன்

2. கள்ளர் அடித்து மடியும் மனிதன்
பாதை ஓரம் கிடக்கும்போது
என்னைக் காத்தால் போதும் என்று
ஒதுங்கி ஒதுங்கி ஓடுகின்றேன்

3. ஆயிரம் ஆயிரம் ஜாதிகள் வாழும்
இந்திய தேசம் மீட்பைக் காண
நித்தம் உந்தன் சத்தம் கேட்டும்
பித்தன் போல வாழ்ந்துவிட்டேன்

Tamil Hymns

1821. பாவிக்காய் மரித்த இயேசு

1. பாவிக்காய் மரித்த இயேசு
மேகமீதிறங்குவார்;
கோடித் தூதர் அவரோடு
வந்து ஆரவாரிப்பார்
அல்லேலூயா
கர்த்தர் பூமி ஆளுவார்.

2. தூய வெண் சிங்காசனத்தில்
வீற்று வெளிப்படுவார்
துன்புறுத்திச் சிலுவையில்
கொன்றோர் இயேசுவைக் காண்பார்
திகிலோடு
மேசியா என்றறிவார்.

3. அவர் தேகம் காயத்தோடு
அன்று காணப்படுமே
பக்தர்கள் மகிழ்ச்சியோடு
நோக்குவார்கள் அப்போதே
அவர் காயம்
தரும் நித்திய ரட்சிப்பை.

4. உம்மை நித்திய ராஜனாக
மாந்தர் போற்றச் செய்திடும்
ராஜரீகத்தை அன்பாக
தாங்கி செங்கோல் செலுத்தும்
அல்லேலூயா
வல்ல வேந்தே, வந்திடும்.

Tamil Hymns

1822. பாவிக்கு நேசராரே

பாவிக்கு நேசராரே!
இரட்சண்ய மூர்த்தியாரே! - ஆ இவர்!

1. மாசற்ற தேவனார் மனு அவதாரரே!
பாவியின் பிராண நாதரே!
இரட்சண்ய மூர்த்தியாரே! - ஆ இவர் - பாவிக்கு

2. நெரிந்த நாணல் முறியார், பொரிந்த திரி அவியார்,
நிர்ப்பந்தரைத் தள்ளாரே!
இரட்சண்ய மூர்த்தியாரே! - ஆ இவர் - பாவிக்கு

3. பிரயாசத்தோடே பாரஞ்சுமப்பாரே;
வாரும் இரட்சை ஈவாரே!
இரட்சண்ய மூர்த்தியாரே! - ஆ இவர் - பாவிக்கு

Tamil Hymns

1823. பாவியாகவே வாறேன் பாவம் போக்கும்

பாவியாகவே வாறேன் பாவம் போக்கும்
பலியாம் என் யேசுவே, வாறேன்

1. பாவக்கறை போமோ என்
பாடால் உன் பாடாலன்றிப்
போவதில்லை என்றே
பொல்லாத பாவியே நான்

2. நீ வா, உன் பாவம் என்னால் நீங்கும்
என்று சொன்னீரே - தேவா உன்
வாக்கை நம்பி, சீர்கேடன் நீசனும் நான்

3. பேய்மருள் உலகுடல் பேராசையால்
மயங்கிப் போயும் அவற்றோடு
போரில் அயர்ச்சியாய் நான்

4. ஜீவ செல்வ ஞான சீல சுகங்கள்
அற்றேன் - தாவென்று வேண்டிய
சாவில் சஞ்சரித்த நான்

5. துன்பங்கள் நீக்கி உன்னை
தூக்கி அணைப்பேன் என்றீர்
இன்ப வாக்குத்தத்தத்தை
இன்றைக்கே நம்பியே நான்

6. உன்னைச் சேர ஒட்டாமல்
ஊன்றிய தடை யாவும்
உன்னன்பால் நீங்கி நல்
உயிர் அடைந்தோங்கவே நான்

Tamil Hymns

1824. பாவீ கேள் உன் ஆண்டவர்

1. பாவீ, கேள்! உன் ஆண்டவர்,
அறையுண்ட ரஷகர்
கேட்கிறார், என் மகனே
அன்புண்டோ என்பேரிலே!

2. நீக்கினேன் உன் குற்றத்தை,
கட்டினேன் உன் காயத்தை,
தேடிப் பார்த்து ரஷித்தேன்,
ஒளி வீசப்பண்ணினேன்.

3. தாயின் மிக்க பாசமும்,
ஆபத்தாலே குன்றினும்,
குன்றமாட்டாதென்றுமே
ஒப்பில்லா என் நேசமே.

4. எனதன்பின் பெருக்கும்
ஆழம் நீளம் உயரமும்
சொல்லி முடியாது, பார்;
என்னைப் போன்ற நேசனார்!

5. திவ்விய ரூபம் தரிப்பாய்,
என்னோடரசாளுவாய்;
ஆதலால் சொல், மகனே,
அன்புண்டோ என்பேரிலே!

6. இயேசுவே, என் பக்தியும்
அன்பும் சொற்பமாயினும்,
உம்மையே நான் பற்றினேன்,
அன்பின் ஸ்வாலை ஏற்றுமேன்!

Tamil Hymns

1825. பிசாசனவன் தோற்றுப்போனவன்

பிசாசனவன் தோற்றுப்போனவன்
சிலுவையில் அவன் தலை நசுங்கினதே
வல்லமையின் அதிகாரம் நம் கையிலே
சிலுவையிலே இயேசு நமக்கு தந்தார்

1. பிசாசனவன் நம் காலின் கீழே
தேவ பிள்ளை மேல்
அவனுக்கு அதிகாரம் இல்லை
ஒன்று சேர்ந்து நாம் இயேசுவை
துதிக்கும்போது
அவன் கிரியைகளை
நாம் அழித்திடலாம்

2. பிசாசனவன் பொய்யன் தானே
அவனின் வார்த்தைகள் நம்பவேண்டாம்
சத்திய ஆவி நமக்குள்ளே
சகலமும் போதித்து நடத்திடுவார்

3. ஆவியானவர் என் மேலே இருக்கிறார்
அனுதினமும் என்னை நடத்துகிறார்
பரிசுத்த அக்கினி எனக்குள்ளே
அணைத்திட யாராலும் முடியாது

Tamil Hymns

1826. பிதா சுதன் ஆவியே

1. பிதா சுதன் ஆவியே
ஏகரான ஸ்வாமியே
கேளும் நெஞ்சின் வேண்டலை
தாரும் சமாதானத்தை
அன்புக்கேற்ற உணர்வும்
அன்னியோன்னிய ஐக்கியமும்
ஈந்து ஆசீர்வதியும்
திவ்விய நேசம் ஊற்றிடும்.

2. உந்தன் அடியாரை நீர்
ஒரே மந்தையாக்குவீர்
ஒரே ஆவியும் உண்டே
விசுவாசமும் ஒன்றே
ஒன்றே எங்கள் நம்பிக்கை
ஐக்கியமாக்கி எங்களை
ஆண்டுகொள்ளும் கர்த்தரே
ஏக சிந்தை தாருமே.

3. மீட்டுக்கொண்ட ஆண்டவா
அன்னியோன்னிய காரணா
ஜீவ நேசா தேவரீர்
வேண்டல் கேட்டிரங்குவீர்
பிதா சுதன் ஆவியே
ஏகரான ஸ்வாமியே
உந்தன் திவ்விய ஐக்கியமும்
தந்து ஆட்கொண்டருளும்

Tamil Hymns

1827. பிதாவின் ஆவியானவரே என்னை

பிதாவின் ஆவியானவரே
என்னை நடத்தும் (2)
ஆவியானவரே, ஆவியானவரே
ஆவியானவரே, ஆவியானவரே (2)

1. உந்தன் பிரசன்னத்திற்காய் உள்ளம்
ஏக்கத்தோடு காத்திருக்குறோம், என் தெய்வமே

2. ஆவியானவரே உந்தன் மகிமைகளை
இங்கு விளங்க செய்திடுமே

3. ஆவியானவரே எங்கள் உள்ளங்களை
ஆளுகை செய்திடுமே

Tamil Hymns

1828. பிதாவே ஆராதிக்கின்றோம்

பிதாவே ஆராதிக்கின்றோம்
இயேசுவே ஆர்ப்பரிக்கின்றோம்
ஆவியானவரே அன்பு செய்கின்றோம்

ஆராதிக்கின்றோம் ஆர்ப்பரிக்கின்றோம்
அன்பு செய்கின்றோம் - உம்மை

1. மகனாக (மகளாக) தெரிந்து கொண்டீர்
மறுபடி பிறக்க வைத்தீர்
ராஜாக்களும் நாங்களே
ஆசாரியர்களும் நாங்களே

2. சகலமும் படைத்தவரே
சர்வ வல்லவரே
மகிமைக்கு பாத்திரரே
மங்காத பிரகாசமே

3. ஸ்தோத்திரமும் கனமும்
வல்லமையும் பெலனும்
மாட்சிமையும் துதியும்
எப்போதும் உண்டாகட்டும்

4. பரிசுத்தர் பரிசுத்தரே
பரலோக ராஜாவே
எப்போதும் இருப்பவரே
இனிமேலும் வருபவரே

5. உமது செயல்களெல்லாம்
அதிசயமானவைகள் - உமது
வழிகளெல்லாம் சத்தியமானவைகள்

Tamil Hymns

1829. பிதாவே எங்களை கல்வாரியில்

1. பிதாவே, எங்களை கல்வாரியில்
நீர் மீட்ட அன்பை நாங்கள் உணர்ந்தே,
தரர்க்காய் விண்ணில் உம் சமுகத்தில்
பரிந்து பேசும் கிறிஸ்துவுடனே
ஒரே மெய்யான பலி படைப்போம்
இங்கே அதை உம்முன் பாராட்டுவோம்.

2. ஆ, எங்கள் குற்றம் கறை யாவையும்
பாராமல் கிறிஸ்து முகம் நோக்குமே;
விஸ்வாஸம் மங்கி, ஜெபம் குன்றியும்;
உம் பேரருளைப் போக்கடித்தோமே;
என்றாலும், எங்கள் பாவம் ஆக்கினை
இடையில் வைத்தோம் மீட்பர் புண்ணியத்தை.

3. இவ்வேளை எங்கள் நண்பர்க்காகவும்
உம் சன்னிதானம் வேண்டல் செய்வோமே;
சிறந்த நன்மை யாவும் அளியும்;
உம் மார்பினில் அணைத்துக் காருமே;
எத்தீங்கும் அனுகாமல் விலக்கும்;
உம்மில் நிலைக்க பெலன் அருளும்.

4. இவ்வாறு அண்டினோம் உம் சரணம்
மா சாந்தமுள்ள மீட்பரான நீர்
பேரின்பம் தருந் திவ்விய போஜனம்
கொடுப்பதாலும் தீமை நீக்குவீர்
உற்சாகத்தோடு உம்மை என்றைக்கும்
சேவித்துப் பற்றத் துணை புரியும்.

Tamil Hymns

1830. பிதாவே பலம் ஈந்திடும்

1. பிதாவே பலம் ஈந்திடும்
என் வாழ்க்கை கஷ்டமாயினும்
மெய் ஊற்றத் தோடு பாடவும்
உம் சித்தமே

2. என் கோழை நெஞ்சைத் தேற்றிடும்
எச்சக்தி சார்பு சாயினும்
உம் அன்பு வன்மை மேற்கொள்ளும்
உம் சித்தமே.

3. பணிவாய் உம்மைப் பற்றுவேன்
கதவாய் சேவை ஆற்றுவேன்
எவ்வேலை தன்னில் சாற்றுவேன்
உம் சித்தமே.

4. நீர் ஏவி பாதுகாத்திட
உம் ஞானம் பாதை காட்டிட
கூடும் எச்செய்கை
ஆற்றிட
உம் சித்தமே.

5. நான் அல்ல நீர்தாம் என்றுமே
உம் சர்வ சக்தி என்னிலே
உம் ஆணை ஆஞ்சை எனக்கே
உம் சித்தமே

6. என் ஆயுள் மகிழ் பொங்கிடும்
சா, நோவு பாவம் ஓய்ந்திடும்
விஸ்வாசம் அன்பு வென்றிடும்
உம் சித்தமே

Tamil Hymns

1831. பிதாவே நன்றி சொல்கிறோம்

பிதாவே நன்றி சொல்கிறோம்
இயேசுவே நன்றி சொல்கிறோம்
தூய ஆவியே எங்கள் தெய்வமே
நன்றி சொல்கிறோம்
துதி ஆராதனை செய்கிறோம்

1. தேவன் அருளிய சொல்லி முடியா
ஈவுக்காய் ஸ்தோத்திரம்
நீர் செய்த எல்லா நன்மைக்கும்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
எண்ணி முடியா அதிசயங்கள்
செய்தவரே ஸ்தோத்திரம்

2. கடந்த நாட்கள் கண்மணி
போல பாதுகாத்தீரே
சோதனையில் என்னைத் தேற்றியே
தைரியப்படுத்தினீரே
தீராத நோய்களெல்லாம்
தழும்புகளால் சுகப்படுத்தினீரே

3. சகல ஆசீர்வாதங்களாலே
ஆசீர்வதித்தீரே
குறைகளெல்லாம் நிறைவாக்கினீர்
செழிப்பாய் என்னை மாற்றினீர்
மனக்கவலை தீர்த்தீரே
மகிழ்ச்சியினால் நிரப்பினீரே

Tamil Hymns

1832. பிதாவே போற்றி குமாரன் போற்றி

பிதாவே போற்றி, குமாரன் போற்றி
ஆவியே போற்றி, போற்றி, போற்றி

போற்றி, போற்றி - (4)

1. யெகோவாயீரே போற்றி, போற்றி
எல்லாமே பார்த்துக் கொள்வீர் (2)

2. யெகோவா நிசியே போற்றி போற்றி
எங்களுக்கு வெற்றி தருவீர்

3.யெகோவா ஷாலோம் போற்றி போற்றி
சமாதானம் தருகின்றீர்

4. யெகோவா ராவ்ப்பா போற்றி, போற்றி
எங்களுக்கு சுகம் தருவீர்

5. யெகோவா ஷம்மா போற்றி போற்றி
கூடவே இருக்கின்றீர்

1833. பிரதான தூதன் எக்காளம் முழங்க

பிரதான தூதன் எக்காளம் முழங்க
பரமன் இயேசு வருவார்

சாயங்காலத்திலோ நடுராவினிலோ
சேவல் கூவிடும் நேரத்திலோ
அதிகாலையிலோ எந்த வேளையிலோ
பரமன் இயேசு வருவார்

1. இருவர் வயலில் இருப்பார்
இரண்டு ஸ்திரிகள் எந்திரம் அரைப்பார்
ஒருவர் கைவிடப்படுவார்
ஏற்றுக்கொள்ளப்படுவார் ஒருவர்

2. நோவா காலத்தின் சம்பவம்போல்
நடந்திடும் அந்த நாட்களிலே
புசித்தும் குடித்தும் பெண்கொண்டும்
பலர் அசந்து வெறித்திருப்பார்

3. லௌகிகக் கவலைகளினாலும்
இலட்சை மிகுந்த வெறியினாலும்
எம் இதயம் பாரமடையாமல்
எச்சரிக்கையுடன் காத்திருப்போம்

4. இரவும் பகலும் விழிப்பாய்
இருதயம் நொருங்கி ஜெபிப்போம்
கற்புள்ள கன்னிகையாக நாமும்
கர்த்தர் வருகைக்குக் காத்திருப்போம்

5. தவிக்கும் உலகம் அந்த நாளில்
தலைகளை உயர்த்தி நடப்போம்
வருகை நெருங்க கர்த்தர் இயேசு
வாசற்படியில் வந்து நிற்கிறார்

Tamil Hymns

1834. பிரசன்னம் தாரும் தேவனே

பிரசன்னம் தாரும் தேவனே
உந்தன் சமூகம் தாருமே
இயேசுவே உந்தன் நாமத்தில்
இந்நேரம் நாங்கள் கூடி வந்தோம் - 2
பிரசன்னம் தாரும் தேவனே

1. பக்தர்கள் போற்றும் நாதா
பரிசுத்த தேவன் நீரே
கேருபீன்கள் சேராபீன்கள் துதி பாடிடும்
பரனே நின் பாதம் பணிகின்றோம்

2. நீரல்லால் இந்த பாரில்
தஞ்சம் வேறாருமில்லை
உந்தனின் சமூகத்தில் இளைப்பாறிட
சந்ததம் உம் அருள் ஈந்திடும்

3. நல்மேய்ப்பர் இயேசு தேவா
துன்பங்கள் நீக்கிடுமே
ஆதி அன்பு என்னில் குன்றிடாமல்
நிலைக்க நல் அருள் ஈந்திடுமே

4. தேவா உந்தன் சமூகம்
முன் செல்ல வேண்டுகிறேன்
பேரின்பம் எந்நாளும் பொங்கிடவே
உம்மில் மகிழ்ந்து நான் ஆனந்திப்பேன்

5. வானத்தில் தோன்றும் நாளில்
உம்மைப் போல் மாறிடவே
ஆவி ஆத்மா தேகம் மாசற்றதாய்
காத்திட கர்த்தரே கெஞ்சுகிறேன்

Tamil Hymns

1835. பிரசன்னம் தாரும் பிரசன்னம்

பிரசன்னம் தாரும் பிரசன்னம்
பிரசன்னம் தேவ பிரசன்னம்

1. இன்பப் பிரசன்னம்
இன்னல் போக்கும் பிரசன்னம்
நேற்றும் இன்றும் என்றும் மாறா
தேவ பிரசன்னம் - பிரசன்னம்

2. வல்லப் பிரசன்னம்
வழிகாட்டும் பிரசன்னம்
வாழ்க்கை எங்கும் ஒளி வீசும்
தேவ பிரசன்னம் - பிரசன்னம்

3. ஜீவப் பிரசன்னம்
தாகம் தீர்க்கும் பிரசன்னம்
ஜீவத் தண்ணீர் பொங்கி வரும்
தேவ பிரசன்னம்

Tamil Hymns

1836. பிராண நாதா என்னில் வைத்ததாம்

1. பிராண நாதா என்னில் வைத்ததாம் அன்பினை
தியானிக்கும் போதெல்லாம் கண்ணீர் பெருகுதே
அன்பின் சொரூபனாய் ஆருயிர் நேசனாய்
நீச தூசி என்னை நேசிக்கலானிரே

என் இயேசுவே நான் உம்முடையவன்
நீர் என் சொந்தம் என்றென்றுமாய்
ஆவி ஆத்மா சரீரம் பலியாய்
படைத்திட்டேன் ஏற்றுக் கொள்வீர்

2. தாயின் வயிற்றினில் பிரித்ததாம் நாள் முதல்
பற்பல பாதையில் பரிவுடன் காத்தீரே
வஞ்சக சாத்தானின் சூழ்ச்சியினின்றுமே
பறித்திழுத்தெந்தனை உம் சொந்தமாக்கினீர்

3. குயவனின் கையிலே களிமண்ணைப் போலவே
என்னை உம் கையிலே வைத்திட்டேன் நாயகா
என் சொந்த இஷ்டமோ ஏதும் வேண்டாம் நாதா
உம் நோக்கம் என்னிலே பூரணமாகட்டும்

4. நேசர் கரத்தினில் தீமை ஏதுமுண்டோ
யாதும் என் நன்மைக்கே என்பதை அறிகுவேன்
ஜுவாலிக்கும் அக்கினியோ பெருக்கான வெள்ளமோ
பட்சிக்க விட்டிடீர் அமிழ்த்தவும் பார்த்திடீர்

5. என்னையும் எந்தனுக்குள்ளதாம் யாவையும்
நேசர் கரத்தினில் முற்றுமாய் வைத்திட்டேன்
ஜீவனோ மரணமோ பிராண நாதன் என்னில்
வாஞ்சிப்பதெதுவோ சம்பூரணமாகட்டும்

6. மரண இருள் பள்ளம் தாண்டியும் நேரத்தில்
இயேசு என் நேசரின் கரமதைக் காண்பதால்
மகிழ்வுடன் ஏகுவேன் அக்கறை யோர்தானில்
நித்தியம் நித்தியம் ஆனந்தம் கொள்ளுவேன்

Tamil Hymns

1837. பிரவேசிப்பேன்

பிரவேசிப்பேன் அவர் பிரகாரங்களில் நான்
பிரவேசிப்பேன் துதிகளுடன்

கர்த்தர் உண்டு பண்ணின தினம் இதுவே என்பேன்
அவர் என்னை சந்தோஷிக்கச் செய்தார் - (2)
சந்தோஷிக்கச் செய்தார் - (2)
அவர் என்னை சந்தோஷிக்கச் செய்தார் - (2)

1838. பிரியமானவனே உன் ஆத்துமா

பிரியமானவனே உன்
ஆத்துமா வாழ்வது போல் -நீ
எல்லாவற்றிலும் வாழ்ந்து
சுகமாய் இரு மகனே (மகளே)

1. வாழ்க்கை என்பது போராட்டமே
நல்லதொரு போராட்டமே
ஆவிதரும் பட்டயத்தை
எடுத்து போராடி வெற்றி பெறு

2. பிரயாணத்தில் மேடு உண்டு
பள்ளங்களும் உண்டு
மிதித்திடுவாய் தாண்டிடுவாய்
மான்கால்கள் உனக்குண்டு மறவாதே

3. ஓட்டப்பந்தயம் நீ ஓடுகிறாய்
ஒழுங்கின்படி ஓட மகனே
நெருங்கிவரும் பாவங்களை
உதறித் தள்ளிவிட்டு ஓடு மகனே

Tamil Hymns

1839. பிறந்தார் ஓர் பாலகன்

1. பிறந்தார் ஓர் பாலகன்
படைப்பின் கர்த்தாவே;
வந்தார் பாழாம் பூமிக்கு
எத்தேசம் ஆளும் கோவே.

2. ஆடும் மாடும் அருகில்
அவரைக் கண்ணோக்கும்;
ஆண்டவர் என்றறியும்
ஆவோடிருந்த பாலன்.

3. பயந்தான் ஏரோதுவும்
பாலன் ராஜன் என்றே;
பசும் பெத்லேம் பாலரை
பதைபதைக்கக் கொன்றே.

4. கன்னி பாலா வாழ்க நீர்!
நன்னலமாம் அன்பே!
பண்புடன் தந்தருள்வீர்
விண் வாழ்வில் நித்திய இன்பே.

5. ஆதி அந்தம் அவரே,
ஆர்ப்பரிப்போம் நாமே;
வான் கிழியப் பாடுவோம்
விண் வேந்தர் ஸ்தோத்ரம் இன்றே.

Tamil Hymns

1840. பிறந்தார் பிறந்தார் கிறிஸ்து பிறந்தார்

பிறந்தார் பிறந்தார் கிறிஸ்து பிறந்தார்
வின்னிலும் மன்னிலும் வெற்றி முழங்க
பிறந்தார் பிறந்தார் கிறிஸ்து பிறந்தார்
வின்னிலும் மன்னிலும் வெற்றி முழங்க

1. மன்னில் சமாதானம் வின்னில் மகிழ்ச்சி
என்றென்றும் தொனிக்க நம் மன்னன் பிறந்தார்
மன்னில் சமாதானம் வின்னில் மகிழ்ச்சி
என்றென்றும் தொனிக்க நம் மன்னன் பிறந்தார்

2. தூதர் சேனைகள் எக்காளம் முழங்க
என்னாளும் அதிர நம் இயேசு பிறந்தார்
தூதர் சேனைகள் எக்காளம் முழங்க
என்னாளும் அதிர நம் இயேசு பிறந்தார்

2. மாந்தர் யாவரும் போற்றிப்பாடுங்கள்
இராஜன் இயேசுவை வாழ்திப்பாடுங்கள்
மாந்தர் யாவரும் போற்றிப்பாடுங்கள்
இராஜன் இயேசுவை வாழ்திப்பாடுங்கள்

1841. பிறந்தார் பிறந்தார் வானவர்

பிறந்தார், பிறந்தார் வானவர் புவி
மானிடர் புகழ் பாடிட பிறந்தார்

1. மாட்டுத் தொழுவம் தெரிந்தெடுத்தார்
மா தேவ தேவனே - மேன்மை
வெறுத்தார் தாழ்மை தரித்தார்
மா தியாகியாய் வளர்ந்தார் -2

2. பாவ உலக மானிடர் மேல்
பாசம் அடைந்தவரே - மனக்
காரிருளை எம்மில் நீக்கிடும் - மெய்
மா ஜோதியாய்த் திகழ்ந்தார்

3. பொறுமை தாழ்மை அன்புருக்கம்
பெருந்தன்மை உள்ளவரே
மரணம் வரையும் தன்னைத் தாழ்த்தினதால்
மேலான நாமம் பெற்றோர்

4. கந்தைத் துணியோ கர்த்தருக்கு
கடும் ஏழ்மைக் கோலமதோ
விலையேறப்பெற்ற உடை அலங்கரிப்பும்
வீண் ஆசையும் நமக்கேன் - 2

5. குருவைத் தொடரும் சீஷர்களும்
குருபோல மாறிடுவார்
அவர் நாமம் தரித்தவர் யாவருமே
அவர் பாதையில் நடப்போம்

6. இயேசு பிறந்தார் உள்ளமதில்
இதை எங்கும் சாற்றிடுவோம்
புசிப்பும் குடிப்பும் தேவ ராஜ்யமல்ல
பரன் ஆவியில் மகிழ்வோம் -2

Tamil Hymns

1842. பிறந்தார் பிறந்தார் பிறந்தார்

பிறந்தார் பிறந்தார் பிறந்தார்
பிறந்தார் பிறந்தார் பிறந்தார்

பாரினை மீட்டிட பரமன் இயேசு
பரிசுத்தராய் பிறந்தார் (2)

1. நமக்கொரு பாலகன் பிறந்திட்டார் நன்மைகள் பெருகிடவே
நமக்கொரு குமாரன் ஈவானார் நீதியாய் ஆகிடவே
யாக்கோபில் ஓர் வெள்ளி உதித்திடவே இப்பூமியில் ஒளிதரவே - இன்று
- பிறந்தார்

2. சாத்தானின் சேனை வீழவே சத்தியம் நிலைத்திடவே
காரிருள் பாவங்கள் நீக்கவே கிருபையும் பெருகிடவே
தேவ குமாரன் ஜெயமனுவேலன் தாழ்மையின் ரூபமானார் - இன்று
- பிறந்தார்

Tamil Hymns

1843. பிளவுண்ட மலையே

1. பிளவுண்ட மலையே புகலிடம் ஈயுமே
பக்கம் பட்ட காயமும்
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவதோஷம் யாவையும்
நீக்கும்படி அருளும்

2. எந்தக் கிரியை செய்துமே
உந்தன் நீதி கிட்டாதே
கண்ணீர் நித்தம் சொரிந்தும்
கஷ்ட தவம் புரிந்தும்
பாவம் நீங்க மாட்டாதே
நீரே மீட்பர் இயேசுவே

3. யாதுமற்ற ஏழை நான்
நாதியற்ற நீசன் தான்
உம் சிலுவை தஞ்சமே
உந்தன் நீதி ஆடையே
தூய ஊற்றை அண்டினேன்
தூய்மையாக்கேல் மாளுவேன்

4. நிழல் போன்ற வாழ்விலே
கண்ணை மூடும் சாவிலே
கண்ணுக்கெட்டா லோகத்தில்
நடுத்தீர்வை தினத்தில்,
பிளவுண்ட மலையே புகலிடம் ஈயுமே

Tamil Hymns

1844. பின்மாரி பெய்யட்டும் பின்மாரி

பின்மாரி பெய்யட்டும் பின்மாரி பெய்யட்டும்
பின்மாரி பெய்யட்டுமே இயேசுவே
கல்வாரி அன்பினை எல்லோரும் கண்டிட
பின்மாரி பெய்யட்டுமே இயேசுவே

1. ஆதிநாட்கள் தொட்டு ஆவியானவரின்
அற்புத சக்திகளை இயேசுவே
பாவிகளாயினும் நாங்களும் கண்டிட
ஊற்றியருளணுமே இயேசுவே

2. உள்ளம் உடல் பொருள் பங்கம் பதர் இன்றி
சுட்டெரித்தாகணுமே இயேசுவே
ஏசாயா நாவினைத் தொட்டத் தழலுடன்
மேசியா நீர் வாருமே இயேசுவே

3. எண்ணற்ற தேவைகள் எனைச்சூழ நிற்கையில்
எந்தன் நிலை பாருமே இயேசுவே
எத்தனை வீழ்ச்சிகள் எத்தனை தோல்விகள்
எந்தன் நிலை மாற்றுமே இயேசுவே

4. தேசம் எங்கும் தேவ செய்தி முழங்கிட
ஊக்கம் அருளணுமே இயேசுவே
மரணபரியந்தம் உண்மையாய் விளங்க
இயேசு என்னில் வாருமே இயேசுவே

1845. பின்மாரி முன்மாரி ஊற்றுமே தேவா

பின்மாரி முன்மாரி ஊற்றுமே தேவா
அருள்மாரி இந்நேரம் தாருமே தேவா
ஊற்றிடும் தேவா ஊற்றிடும்
எங்கள் மீது இப்போதே ஊற்றிடுமே

1. இரட்சிப்பின் ஊற்றுகள் சுரக்கட்டும்
அபிஷேகத்தின் ஆறுதல் ஓடட்டுமே
குருவிகள் பாடிடும் காலமல்லவா
காட்டுப்புறா சத்தமும் கேட்குதல்லவா

2. கல்லான உள்ளங்கள் உருகட்டுமே
கற்பாறைகள் ஆட்டைப்போல் துள்ளட்டுமே
தேசத்தில் எழுப்புதல் தாரும் இயேசுவே
அற்புதங்கள் அடையாளங்கள்
செய்யும் இயேசுவே

3. வருகைக்காய் தேசத்தை சீர்ப்படுத்திட
தேசமதில் நேசரை சந்தித்திட
ஆயத்தமாக்கிடும் எந்தன் இயேசுவே
பரலோகத்தின் மகிமையை வீசச் செய்யுமே

1846. பின் செல்வேன் என் மீட்பரே

பின் செல்வேன் என் மீட்பரே - நானும்மைப்
பின் செல்வேன் என் மீட்பரே

நான் செய்த பாவங்கள் நின் தயவால் தீர
நாதா ஜீவன் விட்டாய் வன் குருசில் அதால்

1. என் சிலுவையை எடுத்தேன் - எல்லாம் விட்டு
என்றும் நின்னையே அடுத்தேன்
நின் திருப்பாதத் தடங்களை நோக்கி நான்
நித்தமும் சென்று உம் சித்தம் என்றும் செய்து - பின்

2. சிங்கம்போல கெர்ச்சித்தே - எந்தன் நேசரே
சீறி மிக வெதிர்த்தே
கங்குல் பகலும் தீ அம்பு என்மேல் எய்யும்
கடியின்மேல் ஜெயம் பெற்று அடியேன் நின்னருள் பெற்று - பின்

3. நெருக்கஞ் செய்தால் மனுஷர் - அதென்னை உன்
நெஞ்சண்டை யோட்டுவதாம்;
கருக்கான சோதனை கடினமாய் வதைத்தாலும்
உருக்கமுள்ளோனே! உனை ஒருபோதுமே விடேன் - பின்

1847. புகழும் வேண்டாமே பெயரும் வேண்டாமே

புகழும் வேண்டாமே
பெயரும் வேண்டாமே - (2)
ஆத்துமாக்களை தாருமே
இந்தியாவை தாருமே

1. உந்தன் வல்லமையை என் மேல்
ஊற்றும் - அபிஷேகத்தால்
என்னை ஆட்கொள்ளும்

2. கோடி கோடி மக்களுண்டு
இந்த தேசம் இயேசுவை காணட்டும்

Tamil Hymns

1848. புகழ்கின்றோம் உம்மையே புகழ்கின்றோம்

புகழ்கின்றோம் உம்மையே புகழ்கின்றோம்
போற்றிப் புகழ்ந்து பாடுகின்றோம்

உயர்த்துகிறோம் உன்னதரே
உயர்த்தி மகிழ்கின்றோம்
புகழ்கின்றோம் புண்ணியரே
புகழ்ந்து பாடுகின்றோம் - உம்மை

1. நூற்றுவத் தலைவனை தேற்றினீரே
வார்த்தையை அனுப்பி வாழ வைத்தீர்
விசுவாசம் பெரிதென்று பாராட்டினீர்
விண்ணக விருந்தில் இடம் கொடுத்தீர்

2. கல்லறை லேகியோனை தேடிச்சென்றீர்
ஆறாயிரம் பேய்களை ஓடச்செய்தீர்
ஆடை அணிந்து அமரச் செய்தீர்
ஆர்வமாய் சாட்சி பகரச்செய்தீர்

3. பெதஸ்தா குளத்து முடவனையே
படுக்கை எடுத்து நடக்கச் செய்தீர்
இனியும் பாவம் செய்யாதே என்று
எச்சரித்தீரே தேடிச் சென்று

4. தோல்வியில் துவண்ட பேதுருவின்
படகில் ஏறி போதித்தீரே
படகு நிறைய மீன்கள் தந்தீர்
பாவநிலையை உணர வைத்தீர்

5. மரத்தில் அமர்ந்த சகேயுவை
மனமிரங்கி நோக்கினீரே
இறங்கி வாரும் என்று அழைத்து
இரட்சிப்பு தந்து மகிழச் செய்தீர்

6. பர்த்திமேயு குருடனை பார்த்தீரே
பரிசுத்தர் உம்மையே பார்க்க வைத்தீர்
உந்தன் பின்னே நடக்க வைத்தீர்
உம்மை போற்றி புகழச்செய்தீர்

Tamil Hymns

1849. புதிய கிருபை அளித்திடுமே அனுதின

புதிய கிருபை அளித்திடுமே
அனுதின ஜீவியத்தில்
கிருபை மேல் கிருபை அருளிச் செய்து
கிருபையில் பூரணமாகச் செய்யும்

1. ஆத்துமமே என் முழு உள்ளமே
ஆண்டவரை நீ ஸ்தோத்தரிப்பாய்
தினம் அதிகாலையில் புது கிருபை
அளித்து நீர் வழி நடத்தும்

2. கர்த்தரின் மகிமையை வெளிப்படுத்த
கிருபையின் பாத்திரமாக்கிடுமே
கிருபையினால் உள்ளம் ஸ்திரப்படவே
கிருபைகள் ஈந்திடுமே

3. சோதனை வியாதி நேரங்களில்
தாங்கிட உமது கிருபை தாரும்
கிருபையில் என்றும் பெலனடைந்து
கிறிஸ்துவில் வளரச் செய்யும்

4. சோர்ந்திடாமல் நல சேவை செய்ய
கிருபையின் ஆவியை ஊற்றிடுமே
நல்ல போராட்டத்தைப் போராட
கிருபைகள் அளித்திடுமே

5. பக்தியோடு நம் தேவனையே
பயத்துடனே நிதம் தொழுதிடுவோம்
அசைவில்லா ராஜ்ஜியம் அடைந்திடவே
கிருபையைக் காத்துக்கொள்வோம்

Tamil Hymns

1850. புதிய நாளுக்குள் என்னை நடத்தும்

புதிய நாளுக்குள் என்னை நடத்தும்
புதிய கிருபையால் என்னை நிரப்பும்
புது கிருபை தாரும் தேவா
புது பெலனை தாரும் தேவா

1. ஆரம்பம் அற்பமானாலும்
என் முடிவு சம்பூரணமாம்
குறைவுகள் நிறைவாகட்டும் (எல்லா)
வறட்சி செழிப்பாகட்டும் (என்)

2. வெட்கத்திற்கு பதிலாக
(இரட்டிப்பு) நன்மை தாரும் தேவா
கண்ணீருக்கு பதிலாக - (என்)
களிப்பைத் தாரும் தேவா- (ஆனந்த)

3. சவால்கள் சந்தித்திட
(இன்று) உலகத்தில் ஜெயமெடுக்க
உறவுகள் சீர்பொருந்த - குடும்ப
சமாதானம் நான் பெற்றிட - மனதில்

Tamil Hymns

1851. புதிய பாடல் பாடி பாடி இயேசு

புதிய பாடல் பாடி பாடி இயேசு
ராஜாவைக் கொண்டாடுவோம்
புகழ்ந்து பாடல் பாடி பாடி இயேசு
ராஜாவைக் கொண்டாடுவோம்

1. கழுவினார் இரத்தத்தாலே
சுகம் தந்தார் காயத்தாலே
தேற்றினார் வசனத்தாலே
திடன் தந்தார் ஆவியாலே - எனக்கு

2. உறுதியாய் பற்றிக் கொண்டோம்
உம்மையே நம்பி உள்ளோம்
பூரண சமாதானம்
புவிதனில் தருபவரே - தினமும்

3. அதிசயமானவரே
ஆலோசனைக் கர்த்தரே
வல்லமை உள்ள தேவா
வரங்களின் மன்னவனே - எல்லா

4. கூப்பிட்டேன் பதில் வந்தது
குறைவெல்லாம் நிறைவானது
மகிமையின் ராஜா அவர்
மகத்துவமானவரே - இயேசு

5. மாலையில் அழுகை என்றால்
காலையில் அக்களிப்பு
கோபமோ ஒரு நிமிடம்
கிருபையோ நித்தம் நித்தம்

Tamil Hymns

1852. புதிய வாழ்வு தரும் புனித ஆவியே

புதிய வாழ்வு தரும் புனித ஆவியே
பரிசுத்த தெய்வமே பரலோக தீபமே

1. இருள் நிறைந்த உலகத்திலே
வெளிச்சமாய் வாருமையா
பாவ இருள் நீக்கி பரிசுத்தமாக்கும்
பரமனே வாருமையா

வரவேண்டும் வல்லவரே
வரவேண்டும் நல்லவரே

2. தடைகள் நீக்கும் தயாபரரே
உடையாய் வாருமையா
ஒடுங்கிப் போன எங்கள் ஆவியை
விரட்டிஉற்சாகம் தாருமையா

3. எண்ணெய் அபிஷேகம் எங்கள் மேலே
நிரம்பி வழியணுமே
மண்ணான உடலை வெறுத்து வெறுத்து
என்றும் பண்பாடி மகிழணுமே

4. உலகம் எங்கிலும் சுவைத் தரும்
வெண்ணிற உப்பாய் மாறணுமே
இலைகள் உதிராமல் கனிகள் தந்திடும்
மரமாய் வளரணுமே

5. துரயம் நீக்கி ஆறுதல் அளிக்கும்
துயவர் வரவேணுமே
புலம்பல் மாற்றி மகிழ்ச்சியூட்டும்
புனிதரே வரவேணுமே

Tamil Hymns

1853. புது கிருபை அளித்திடுமே புகலிடமும்

புது கிருபை அளித்திடுமே
புகலிடமும் தந்திடுமே
புது ஜீவன் புது பெலனும்
எந்தன் இயேசுவே தந்திடுமே

1. பரதேசியாக திரிந்தேனய்யா
பாசமாய் தேடினீரே
இது காறும் காத்தீர் இனியும் நடத்தும்
இயேசுவே இரட்சகனே

2. ஆண்டாண்டு காலங்கள்
அறியாமல் போனேன்
ஆண்டவர் அன்பினையே
வேண்டாதவைகளை விலக்கிடவே
உன்தன் வழிதனை போதியுமே

3. உம் சித்தம் செய்ய உம்மை போல மாற
வல்லமை தந்திடுமே
இம்மட்டும் காத்த இம்மானுவேலே
இனியும் நடத்திடுமே

Tamil Hymns

1854. புத்தம் புதிய பாடல் தந்தார் நித்தம்

புத்தம் புதிய பாடல் தந்தார்
நித்தம் அவரைத் துதித்திடவே

1. காலையில் கூவிடும் பறவைகளும்
மாலையில் கூப்பிடும் விலங்குகளும்
இன்பமாய் இயேசுவை துதிக்கின்றன
என்னையும் துதித்திட அழைக்கின்றன

2. மரங்களில் மோதிடும் தென்றல் காற்றும்
பாறையில் மோதிடும் கடலலையும்
துள்ளியே களிப்புடன் துதிக்கின்றன
என்னையும் துதித்திட அழைக்கின்றன

3. காகங்கள் கரைந்திடும் குரலைக்கேட்டு
படைத்தவர் மகிழ்ந்திடும் வேளையிலே
பாவி என் பாடலில் துதி கேட்டு
என் தேவனை களித்திட மகிழுவேன் நான்

4. உள்ளத்தில் பாவங்கள் இருக்கும் வரை
உண்மையாய் துதித்திட முடியவில்லை
கல்வாரி இரத்தத்தால் கழுவப் பெற்றேன்
இன்பமாய் இயேசுவை துதித்து வாழ்வேன்

Tamil Hymns

1855. புத்திக் கெட்டாத அன்பின்

1. புத்திக் கெட்டாத அன்பின் வாரீ பாரும்
உம் பாதம் அண்டினோமே தேவரீர்
விவாகத்தால் இணைக்கும் இருபேரும்
ஒன்றாக வாழும் அன்பை ஈகுவீர்

2. ஆ! ஜீவ ஊற்றே இவரில் உம்நேசம்
நல் நம்பிக்கையும் நோவு சாவிலும்
உம்பேரில் சாரும் ஊக்க விசுவாசம்
குன்றாத தீரமும் தந்தருளும்

3. பூலோகத் துன்பம் இன்பமாக மாற்றி
மெய்ச் சமாதானம் தந்து தேற்றுவீர்;
வாழ்நாளின் ஈற்றில் மோட்ச கரையேற்றி
நிறைந்த ஜீவன் அன்பும் நல்குவீர்

Tamil Hymns

1856. புத்தியாய் நடந்து வாருங்கள்

புத்தியாய் நடந்து வாருங்கள் – திரு வசனப்
பூட்டைத் திறந்து பாருங்கள்

சத்தியத்தைப் பற்றிக்கொண்டு,
தன்னைச் சுத்தி பண்ணிக்கொண்டு
நித்தமும் ஜெபம், தருமம், நீதி செய்து,
பாடிக்கொண்டு

1. ஆருடைய பிள்ளைகள் நீங்கள்? – திரு உரையில்
அறிந்து உணர்ந்து பாருங்கள்,
சீருடைய தெய்வப் பிள்ளைகள் -நீங்கள்; ஏதிந்த
தித்தரிப்பு செய்யும் வகைகள்?
கூருடன் மெய்த் திருமறை குறித்துச் சொல்வதைத் தினம்
நேருடன் ஆராய்ந்துபார்த்துநித்தியஒளியில்தானே

2. ஆவியை அடக்காதிருங்கள்- நான் சொல்லுவதை
அசட்டை செய்யாமல் இருங்கள்
ஜீவனை அடையத் தேடுங்கள் –யேசுக் கிறிஸ்தின்
சிந்தையைத் தரித்துக் கொள்ளுங்கள் மேவியே ஜெபம்,
மன்றாட்டு , விண்ணப்பம், வேண்டுதலோடு தாவி,
யேசுவைப் பிடித்து, தளரா நடையோ டுன்னிப்,

3. ஏசுக் கிறிஸ்தையன் பதத்தைத் - துதித்துப் போற்றி,
இன்பமாய்ச் சத்திய வேதத்தை வாசித்து ஆராய்ந்து, நலத்தைப்
பிடித்துளத்தில் வைத்துக்கொண்டு, இவ்வுலகத்தை
நேசியாமல் பகைத்துங்கள் நித்திய
ரட்சிப்பைத் தினம் ஆசையோடு தேடி, நீங்கள்
அடையும்படி முற்றிலும்,

4. பரிசுத்த கூட்டம் அல்லவோ? – நீங்கள் எல்லாரும்
பரன் மகன் தேட்டம் அல்லவோ?
தரிசிக்க நாட்டம் அல்லவோ? - கிறிஸ்தின் உள்ளம்
தன்னிலே கொண்டாட்டம் அல்லவோ? பரிசனை செய்தவர்
பொற் பாதத்தை மனதில் உன்னிக், கரிசனை யோடு தேடிக்,
காணத் தீயோன் நாணப் பாடிப்

Tamil Hymns

1857. பூமிக்கொரு புனிதம்

பூமிக்கொரு புனிதம் வந்ததிப்போ!
மன்னவனின் பிறப்பால்
பூவுக்கொரு இரட்சிப்பும் வந்ததிப்போ!
மன்னவனின் வரவால்

பாவமில்லை, இனி சாபமில்லை
இன்பத்திற்கும் இனி எல்லையில்லை
இறைவன் பிறந்ததால்

1. வானங்களும் வந்து வாழ்த்திடுதே
வசந்தத்தின் துவக்க நாள்
கானங்களும் காதில் கேட்டிடுதே
காரிருள் அகன்ற நாள்
இரவினில் தோன்றும் உதயமே
நம் இயேசுவின் பிறந்தநாள்
பாதகர் நம்மில் பாவத்தை மீட்க
பாலனாய் வந்தநாள்

2. தூதர்களின் கானம் ஒலிக்குதே
தூயவர் தோன்றும் நாள்
உயிர்களில் புத்துயிர் தோன்றுதே
உன்னதர் வந்தநாள்
பாலையில் வந்த சோலையே
நம் பாலகன் பிறந்த நாள்
பாதகர் நம்மில் பாவத்தை மீட்க
பாலனாய் வந்தநாள்

Tamil Hymns

1858. பூமிமீது ஊர்கள் தம்மில்

1. பூமிமீது ஊர்கள் தம்மில்
பெத்லெகேமே, சீர் பெற்றாய்,
உன்னில் நின்று விண்ணின் நாதர்
ஆள வந்தார் ராஜனாய்.

2. கர்த்தன் மனுடாவதாரம்
ஆன செய்தி பூமிக்கு
தெரிவித்த விண் நட்சத்திரம்
வெய்யோனிலும் அழகு.

3. சாஸ்திரிமார் புல் முன்னணையில்
காணிக்கை படைக்கிறார்;
வெள்ளைப்போளம், தூபவர்க்கம்,
பொன்னும் சமர்ப்பிக்கப் பார்;

4. தூபவர்க்கம் தெய்வம் காட்டும்,
பொன் நம் ராஜன் பகரும்;
வெள்ளைப்போளம் அவர் சாவை
தெரிவிக்கும் ரகசியம்.

5. புறஜாதியாரும் உம்மை
பணிந்தார்; அவ்வண்ணமே
இன்று உம் பிரசன்னம் நாங்கள்
ஆசரிப்போம், இயேசுவே

Tamil Hymns

1859. பூமியின் குடிகளே எல்லோரும் பாடுங்கள்

பூமியின் குடிகளே எல்லோரும் பாடுங்கள்
கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்
மகிழ்வோடு ஆராதித்துப் பாடுங்கள்
கர்த்தரை மகிழ்ச்சியோடே பாடுங்கள்

1. கீர்த்தனம் பண்ணுங்கள் இயேசுவுக்குப் பிரியம்
நியாயமாய் நடவுங்கள் இயேசுவுக்குப் பிரியம்
ஏழைக்கு இரங்குங்கள் இயேசுவுக்குப் பிரியம்
தாழ்மையாய் வாழுங்கள் இயேசுவுக்குப் பிரியம்

2. ஆனந்த பலிகள் கர்த்தருக்குப் பிரியம்
வாசலில் துதிகள் கர்த்தருக்குப் பிரியம்
துதி கனம் புகழ்ச்சியும் கர்த்தருக்குப் பிரியம்
எந்நேரம் ஸ்தோத்திரம் கர்த்தருக்குப் பிரியம்

3. உத்தமனாய் வாழ்வது தேவனுக்குப் பிரியம்
நன்மையைச் செய்வது தேவனுக்குப் பிரியம்
பாவத்தை வெறுப்பது தேவனுக்குப் பிரியம்
பரிசுத்தம் காப்பது தேவனுக்குப் பிரியம்

Tamil Hymns

1860. பூமியின் குடிகளே

பூமியின் குடிகளே எல்லோரும் கர்த்தரை
கெம்பீரமாகவே பாடுங்களே

1. சாரோனின் ரோஜா அவர்
பள்ளத்தாக்கின் லீலியே
பரிசுத்தர் என் நேசரவர்
பதினாயிரங்களில் சிறந்தோர்

2. வார்த்தையில் உண்மையுள்ளோர்
வாக்குத்தத்தம் செய்திட்டார்
கலங்காதே திகையாதே
ஜெயமீந்து உன்னைக் காத்திடுவார்

Tamil Hymns

1861. பூமியின் குடிகளே கர்த்தரை கெம்பீரமாய்

1. பூமியின் குடிகளே கர்த்தரை
கெம்பீரமாய் பாடுங்கள் போற்றுங்கள்
நடனமாடி துதித்திடுங்கள்

அல்லேலூயா தேவனே
அல்லேலூயா ராஜனே
அல்லேலூயா (4) அல்லேலூயா

2. மகிழ்ச்சியின் தொனியோடெ
கர்த்தரை ஆராதித்து
ஆனந்தக் களிப்புடனே
அவர் சமூகம் வாருங்களேன்

3. வாசல்களில் துதிகளோடும்
ஆலயத்தில் புகழ்ச்சியோடும்
அவர் நாமத்தை உயர்த்திடவே
ஆர்ப்பரித்து முழங்கிடுவோம்

4. கர்த்தர் நல்லவர் அவர் கிருபை
என்னென்றும் நித்தியமாய்
அது உன்னை தலைமுறைக்கும்
நிச்சயமாய் வழிநடத்தும்

1862. பூமியின் குடிகளே வாருங்கள் கர்த்தரை

பூமியின் குடிகளே வாருங்கள்
கர்த்தரை கெம்பீரமாய் பாடுங்கள்

1. மகிழ்வுடனே கர்த்தருக்கு
ஆராதனை செய்யுங்கள்
ஆனந்த சப்தத்தோடே
திருமுன் வாருங்கள் - அவர்

2. கர்த்தரே நம் தேவனென்று
என்றும் அறிந்திடுங்கள்
அவரே நம்மை உண்டாக்கினார்
அவரின் ஆடுகள் நாம்

3. துதியோடும் புகழ்ச்சியோடும்
வாசலில் நுழையுங்கள்
அவர் நாமம் துதித்திடுங்கள்
ஸ்தோத்திர பலியிடுங்கள்

4. நம் கர்த்தரோ நல்லவரே
கிருபை உள்ளவரே
அவர் வசனம் தலைமுறைக்கும்
தலைமுறைக்கும் உள்ளது

Tamil Hymns

1863. பூமியின் மனிதர்களே மன்னவனை

பூமியின் மனிதர்களே மன்னவனை துதியுங்கள்
பறவைகளே பரிசுத்தராம் பரமனை துதியுங்கள்

1. வானாதி வானங்களே வானவரை துதியுங்கள்
மழையின் மேகங்களே மேலோனை துதியுங்கள்
ராஜாதி ராஜாவை கர்த்தாதி கர்த்தாவை
கருத்துடன் துதியுங்கள் --- பூமியின்

2. தென்றல் காற்றுகளே தேவனை துதியுங்கள்
தாரணி மனிதர்களே தம்பிரானை துதியுங்கள்
தாசர்கள் போற்றும் தன்னிகர் அற்றவனை
என்றென்றும் துதியுங்கள் --- பூமியின்

3. கர்த்தரின் ஜனங்களே கர்த்தாவை துதியுங்கள்
கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து துதியுங்கள்
கண்களை கவர்ந்திடும் இயற்கை காட்சிகளை
படைத்தோனை துதியுங்கள் --- பூமியின்

Tamil Hymns

1864. பூரண அழகுள்ளவரே

பூரண அழகுள்ளவரே என் இயேசுவே
பூரண அழகுள்ளவரே
சாரோனின் ரோஜாவே லீலி புஷ்பமே
பதினாயிரம் பேரிலும் சிறந்த நேசரே
போற்றுவேன் வணங்குவேன்
துதி பாடி மகிழ்வேன்

1. பாவமதை போக்க வந்த தேவாட்டுக்குட்டியே
பரிசுத்த இரத்தம் ஈன்ற ஜீவாதிபதியே (2)
மருதோன்றி பூங்கொத்து கிச்சிலிப் பழமே
ஒருவராய் மாபெரும் காரியம் செய்பவரே

2. மனுக்குல இருள் நீக்கும் நீதியின் சூரியனே
ஒருவரும் சேராத ஒளியில் இருப்பவரே
ஏக சக்ராதிபதி விடிவெள்ளி நட்சத்திரமே
அல்பாவும் ஒமெகாவும் ஆதியும் அந்தமுமே

3. அழகினை இழந்தே அந்தே கேடடைந்தீரே
முள்முடி சூடியே ஐங்காயம் ஏற்றவரே (2)
என் பாவம் போக்க உம்மை பாழாக்க
உம் ஜீவன் தந்தே ஈசனான எனக்காய்

Tamil Hymns

1865. பூரண வாழ்க்கையே

1. பூரண வாழ்க்கையே!
தெய்வாசனம் விட்டு,
தாம் வந்த நோக்கம் யாவுமே
இதோ முடிந்தது!

2. பிதாவின் சித்தத்தை
கோதற முடித்தார்
தொல் வேத உரைப்படியே
கஸ்தியைச் சகித்தார்.

3. அவர் படாத் துக்கம்
நரர்க்கு இல்லையே:
உருகும் அவர் நெஞ்சிலும்
நம்துன்பம் பாய்ந்ததே.

1866. பூர்வ பிரமாணத்தை

1. பூர்வ பிரமாணத்தை
அகற்றி, நாதனார்
சிறந்த புது ஏற்பாட்டை
பக்தர்க்கு ஈகிறார்.

2. ஜோதியில் ஜோதியாம்
மாசற்ற பாலனார்,
பூலோகப் பாவத்தால் உண்டாம்
நிந்தை சுமக்கிறார்.

3. தம் பாலிய மாம்சத்தில்
கூர் நோவுணர்கிறார்;
தாம் பலியென்று ரத்தத்தில்
முத்திரை பெறுகிறார்.

4. தெய்வீக பாலனே,
இயேசு என்றுமே நீர்
மெய் மீட்பராய் இந்நாளிலே
சீர் நாமம் ஏற்கிறீர்.

5. அநாதி மைந்தனாய்,
விண் மாட்சிமையில் நீர்
பிதா நல்லாவியோடொன்றாய்
புகழ்ச்சி பெறுவீர்.

Tamil Hymns

1867. பூலோகத்தாரே யாவரும்

1. பூலோகத்தாரே, யாவரும்
கர்த்தாவில் களிகூருங்கள்;
ஆனந்தத்தோடே ஸ்தோத்திரம்
செலுத்தி பாட வாருங்கள்.

2. பராபரன் மெய்த் தெய்வமே;
நாம் அல்ல அவர் சிஷ்டித்தார்;
நாம் ஜனம் அவர் ராஜனே;
நாம் மந்தை, அவர் மேய்ப்பனார்.

3. கெம்பீரித்தவர் வாசலை க
டந்து உள்ளே செல்லுங்கள்;
சிறந்த அவர் நாமத்தை
கொண்டாடி, துதிசெய்யுங்கள்.

4. கர்த்தர் தயாளர், இரக்கம்
அவர்க்கு என்றும் உள்ளதே;
அவர் அநாதி சத்தியம்
மாறாமல் என்றும் நிற்குமே

5. பின் மண்ணில் ஆட்சி செய்கிற
திரியேக தெய்வமாகிய
பிதா குமாரன் ஆவிக்கும்
சதா ஸ்துதி உண்டாகவும்

Tamil Hymns

1868. பூவின் நற்கந்தம்

1. பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும்
நல்ல தண்ணீர் ஓடும் பள்ளத்தாக்கிலேயும்
இயேசு நாதர் பின் சென்றேகி
மோட்சம் நாடுவேன் - விண்ணில்
சூடும் கிரீடம் நோக்கி ஓடுவேன்

பின் செல்வேனே மீட்பர் பின் செல்வேனே
எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்
பின் செல்வேனே மீட்பர் பின் செல்வேனே
இயேசு காட்டும் பாதையெல்லாம் செல்லுவேன்

2. கார்மேகம் மேலே மூடும் பள்ளமென்கிலும்
காற்று கோரமாக மோதும் ஸ்தானத்திலும்
இயேசு பாதை காட்டச் சற்றும்
அஞ்சவே மாட்டேன் - இரட்சகர்
கைதாங்கத் தைரியம் கொள்ளுவேன்

3. நாள் தோறும் இயேசு நாதர் கிட்டிச் சேருவேன்
மேடானாலும் காடானாலும் பின் செல்லுவேன்
மீட்பர் என்னை மோசமின்றிச் சுகமே காப்பார்
விண்ணில் தாசரோடு சேர்ந்து வாழ்விப்பார்

Tamil Hymns

1869. பெத்தலையில் பிறந்தவரை

பெத்தலையில் பிறந்தவரைப்
போற்றித் துதி, மனமே - இன்னும்

1. சருவத்தையும் படைத்தாண்ட
சருவ வல்லவர் - இங்கு தாழ்மையுள்ள
தாய் மடியில் தலை சாய்க்கலானார்

2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவ மைந்தனார்
இங்கு பங்கமுற்றப் பசுத் தொட்டிலில்
படுத்திருக்கிறார்

3. முன்னம் அவர் சொன்னபடி முடிப்பதற்காக
இங்கு மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள
முன்னணையிலே

4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்
கொண்டோர் - இங்கு ஆக்களுட
சத்தத்துக்கள் அழுது பிறந்தார்

5. இந்தடைவாய் அன்பு வைத்த
எம்பெருமானை - நாம் எண்ணமுடன்
போய்த் துதிக்க ஏகிடுவோமே

Tamil Hymns

1870. பெத்லகேம் ஊரோரம் சத்திரத்தை நாடி

பெத்லகேம் ஊரோரம் சத்திரத்தை நாடி
கர்த்தன் இயேசு பாலனுக்கு
துத்தியங்கள் பாடி
பக்தியுடன் இத்தினம் வா ஓடி... ஓடி....

1. எல்லையில்லா ஞானபரன் வெல்லை
மலையோரம் புல்லணையிலே
பிறந்தார் இல்லமெங்குமீரம்
தொல்லை மிகும் அவ்விருட்டு நேரம்... நேரம்...

4. வான் புவி வாழ் ராஜனுக்கு
மாட்டகந்தான் வீடோ வானவர்க்கு வாய்த்த
மெத்தை வாடின புல்பூண்டோ
ஈனக் கோலமிது விந்தையல்லோ

5. அந்தரத்தில் பாடுகின்றார் தூதர்
சேனை கூடி - மந்தை ஆயர்
ஓடுகின்றார் பாடல் கேட்கத் தேடி
இன்றிரவில் என்ன இந்த மோடி... மோடி...

6. ஆட்டிடையர் அஞ்சுகின்றார் அவர்
மகிமை கண்டு - அட்டியின்றி
காபிரியேல் சொன்ன செய்தி கொண்டு
நாட்டமுடன் ரட்சகரைக் கண்டு.... கண்டு...

7. இந்திரியுடு கண்டரசர் மூவர்
நடந்தாரே சந்திரத் தூபப் போளம்
வைத்துச் சுதனைப் பணிந்தாரே
விந்தையது பார்க்கலாம் வா நேரே

Tamil Hymns

1871. பெத்லகேம் நட்சத்திரம் மின்னுதே

பெத்லகேம் நட்சத்திரம் மின்னுதே
பிறந்தார் வளர்ந்தார் இயேசு பாலகனே
பரன் தாழ்மை சொரூபி தேவசுதன்
பெத்லகேம் நட்சத்திரம் மின்னுதே

1. தன் தலை சாய்த்திட ஸ்தலமில்லையே
முன்னணை மீதினிலே தவழ்ந்தார்
தேகத்தின் வஸ்திரம் கந்தையோ
துணி மூடிட பசுமை புல்லோ

2. மா சுடர் ஜோதியைக் கண்டனரே
மன இருள் போக்கிட சென்றனரே
ஏழைகள் மேய்ப்பர்கள் தேடிடும்
எனதாண்டவர் பிறப்பே விந்தை

3. தாழ்த்தின் ஞானிகள் வணங்கினரே
தேடி அலைந்தங்கு சேர்ந்தனரே
ஏரோதின் வன் கண்கள் தேடுதே - இயேசு
பாலனைக் கொலை செய்யும் நினைவே

4. ஆத்தும இரட்சண்ய அதிபதியை
ஆரிவராரோ என்றனரே
உன் வினைக்காய் பலியானாரே
உனக்காகவே அவதரித்தாரே

5. வந்த முதல் அவர் வதைக்கப்பட்டார்
சொந்த ஜனங்களால் நொறுக்கப்பட்டார்
முள்முடி சூடின இயேசுவை - மின்னும்
பொன் முடியோடன்று காண்போம்

Tamil Hymns

1872. பெத்லகேம் யாத்திரை சென்றே

பெத்லகேம் யாத்திரை சென்றே
பாலகன் இயேசுவைக் கண்டே
ஆனந்தம் அடைந்தே மூவர்
கூறும் அற்புத சாட்சியிதே
அவர் பாதம் நாம் பணிவோம்

1. நமக்கொரு பாலகன் பிறந்தார்
தேவ குமாரன் கொடுக்கப்பட்டாரே
கர்த்தத்துவம் அவர் தோளின் மேல்
இருக்கும் கிறிஸ்து மேலானவரே

2. மேலோக மாளிகையை - விட்டு
பூலோக மண்மனையில்
தூதர் துதி துறந்தே
பசுத்தொட்டில் அவர் படுத்தார்

3. மன்னுயிர் வாழ்வதற்கே
இயேசு தன்னுயிர் தானம் செய்தார்
மானிடமே மகிழ்வாய் -உன்
மனத்துயர் தீர்த்திடுவார்

4. பாவ சந்தோஷங்களோ
உன்னைபாதாளம் தள்ளிடுமே
இயேசுவின் திருமுகமே - கண்டு
இரட்சிப்பை தேடி நீ வா

5. வான பிதாவிடமே - உன்னை
விண்ணேசு சேர்த்திடுவார்
ஜீவன் வழி சத்தியம்
நித்ய ஜோதியை பின்பற்றி வா

Tamil Hymns

1873. பெந்தெகொஸ்தே அனுபவம் தாருமே

பெந்தெகொஸ்தே அனுபவம் தாருமே
பின்மாரி ஆவியை ஊற்றுமே
மேலான வல்லமை மேலான தரிசனம்
மேலான வரங்களைத் தாருமே

என்னை நிரப்புமே -2
நிரப்பியே அனுப்புமே
என் பாத்திரம் நிரம்பி வழிந்திட
உம் ஆவியை ஊற்றுமே

1. அனலான ஊழியம் தாருமே
அக்கினி ஜீவாலையாய் மாற்றுமே

2. நிழல்பட்டு மரித்தோர்கள் எழும்பிட
அற்புதத்தின் அபிஷேகம் தாருமே

3. அக்கினி நாவுகள் தாருமே எனக்கு
அதிகார நாவுகள் தாருமே

1874. பெராக்காவில் கூடுவோம்

பெராக்காவில் கூடுவோம்
கர்த்தர் நல்லவர்
என்று பாடுவோம் பாடுவோம்

1. எதிரியை முறியடித்தார் பாடுவோம்
இதுவரை உதவி செய்கிறார் பாடுவோம்

2. நமக்காய் யுத்தம் செய்தார் பாடுவோம்
நாளெல்லாம் பாதுகாத்தார் பாடுவோம்

3. இளைப்பாறுதல் தந்தார் பாடுவோம்
இதயம் மகிழச் செய்தார் பாடுவோம்

4. சமாதானம் தந்தாரே பாடுவோம்
சந்தோஷம் தந்தாரே பாடுவோம்

5. யெகோவா மெக்காதீஸ் ஸ்தோத்திரம்
பரிசுத்தம் தருகிறீர் ஸ்தோத்திரம்

6. யெகோவா ஸிட்கேனு ஸ்தோத்;திரம்
எங்கள் நீதியே ஸ்தோத்திரம்

7. யெகோவா ஓசேனு ஸ்தோத்திரம்
உருவாக்கும் தெய்வமே ஸ்தோத்*தி*ரம்

Tamil Hymns

1875. பெரிய காரியம் செய்திடுவாய்

பெரிய காரியம் செய்திடுவாய் நீ - 4

1. யோசுவா எழும்பி வா
எரிகோக்களை தகர்க்க வா

2. தெபோராளே எழும்பி வா
தேசத்திற்காய் ஜெபிக்க வா

3. பேதுருவே எழும்பி வா
மனுஷர்களை பிடிக்க வா

1876. பெரியவர் எனக்குள்ளே மிகவும்

பெரியவர் எனக்குள்ளே மிகவும்
பெரியவர் எனக்குள்ளே
ஒருவராய் பெரிய அதிசயங்கள் செய்த
பெரியவர் எனக்குள்ளே…
இயேசு பெரியவரே, இயேசு பெரியவரே
இன்றும் என்றும் ஜீவிக்கின்ற இயேசு பெரியவரே

(வல்லவர் எனக்குள்ளே, நல்லவர்
எனக்குள்ளே)

1877. பெரியவரே ஆராதனை உயர்ந்தவரே

பெரியவரே ஆராதனை
உயர்ந்தவரே ஆராதனை

1.நல்லதையே போதிக்கின்ற
போதகரே ஆராதனை
போதிப்பதில் யோனாவிலும்
பெரியவரே ஆராதனை

2. யோசனையில் பெரியவரே
சிறந்தவரே ஆராதனை
ஞானத்திலே சாலொமோனிலும்
பெரியவரே ஆராதனை

3. விசுவாசத்தை தொடங்கினீரே
முடிப்பவரே ஆராதனை
விசுவாசத்தில் ஆபிரகாமிலும்
பெரியவரே ஆராதனை

4. பயபக்திக்கு உரியவரே
பாத்திரரே ஆராதனை
பயபக்தியில் ஆலயத்திலும்
பெரியவரே ஆராதனை

5. சகலவித வல்லமையும்
உடையவரே ஆராதனை
வல்லமையில் சாத்தானிலும்
பெரியவரே ஆராதனை

Tamil Hymns

1878. பெருகப்பண்ணுவேன் என்று

பெருகப்பண்ணுவேன் என்று வாக்குரைத்தவர்
மிகவும் திரளாய் பெருகச் செய்திடுவார்
வலப்புறத்திலும் இடப்புறத்திலும்
இடங்கொண்டு நீ பெருகுவாய்

1. ஆபிரகாமை பெருகச் செய்தவர்
உன்னையும் திராளாய் பெருகச் செய்திடுவார்

நீ மடிந்து போவதில்லை
நீ குறைந்து போவதில்லை

2. ஆத்துமாக்களை ஆயிரமாயிரமாய்
சபைகளில் திரளாய் பெருகச் செய்திடுவார்

3. நிச்சயமாய் உன்னை ஆசீர்வதித்து
பெருகவே பெருகச் செய்திடுவார்

4. மனிதரை ஜனங்களை மிருகஜீவங்களை
கர்ப்பத்தின் கனியை பெருகச் செய்திடுவார்

1879. பெற்றோர் உன்னை மறந்தாலும்

பெற்றோர் உன்னை மறந்தாலும்
உற்றார் உன்னை துறந்தாலும்
தேசமே உன்னைப் பகைத்துத் தள்ளினாலும்
இயேசு உன்னை ஏற்றுக்கொள்வார்

1. குற்றம் பல புரிந்தாலும்
நீ சற்றும் தயங்காமலே
இயேசுவிடம் வந்துவிட்டாலுன்னை
நேசமாய் மன்னித்தருள்வார்

2. காசு ஒன்றும் கேட்பதில்லை
இந்த இயேசு உன்னை மீட்பதர்க்கு
நெஞ்சம் மட்டும் தந்துவிட்டால் நானே
தஞ்சம் என காத்துக்கொள்வார்

Tamil Hymns

1880. பெலமுள்ள நகரமாம் இயேசுவண்டை

பெலமுள்ள நகரமாம் இயேசு வண்டை
பயமின்றி ஓடி நீ வந்திடுவாய்
சஞ்சலத்தில் வேறு வழியில்லை
சந்ததம் அவர் நம்மைக் காத்துக் கொள்வார்

1. நிலையில்லா உலகத்தின் அலைகளாலே
அலைந்திடும் பயனென்ன புதல்வனே நீ
விசுவாசக் கப்பலில் சேமமாக
யாத்திரை செய்பவர்க்கு லோகம் வேண்டாம்

2. கழுகைப் போல பறந்து நீ உன்னதத்தில்
வாழ்கின்ற வாழ்வையே வாஞ்சித்துக் கொள்
காத்திருந்தால் அவர் ஈந்திடுவார்
பெருக்கமுள்ள பலன் மக்களுக்கு

3. மரணம் தான் வருகினும் பயப்படாதே
விரைந்துன்னைக் கர்த்தர் தாம் காத்திடுவார்
யாதொன்றும் உன்னைப் பயப்படுத்த
எங்குமில்லை யென்று விசுவாசிப்பாய்

4. ஆறுதலடையு மாநாடு சென்று
இயேசுவின் மார்பில் நாம் ஆனந்திப்போம்
பரம சுகம் தரும் ஊற்றுகளில்
பரனோடு நித்தியம் வாழ்ந்திடுவோம்

Tamil Hymns

1881. பெலனில்லா நேரத்தில் புதுபெலன்

பெலனில்லா நேரத்தில் புது பெலன்
தந்து என்னை நீர் தாங்கிடுமே
திடனில்லா நேரத்தில் திடமனம்
தந்து என்னை நீர் நடத்திடுமே

பெலன் தாருமே பெலன் தாருமே
உம் பெலத்தால் என்னை நடத்திடுமே

1. எலியாவைப்போல் வனாந்திரத்தில்
களைத்து போய் நிற்கின்றேனே
மன்னாவை தந்து மறுபடி நடக்க செய்யும்

2. மனிதர்களின் நிந்தனையால்
மனம் நொந்து நிற்கின்றேனே - மன்னித்து
மறக்க உந்தனின் பெலன் தாருமே

3. போராட்டங்கள் சூழ்ந்ததாலே
சோர்ந்து போய் நிற்கின்றேனே
சோராமல் ஓட திடமனம் அளித்திடுமே

4. மாம்சம் என்னில் மேற்கொள்வதால்
அடிக்கடி தவறுகிறேன் - பரிசுத்த
வாழ்வு வாழ பெலன் தாருமே

Tamil Hymns

1882. பெலன் ஒன்றும் இல்லை தேவா

பெலன் ஒன்றும் இல்லை தேவா
ஆவியால் பலப்படுத்தும்
சத்துவம் இல்லாத எனக்கு
சத்துவம் தந்தருளும்

1. மானின் கால்களைப் போல
என் கால்களை பெலப்படுத்தும்(2)
நூனின் குமாரனைப் போல
என்னையும் திடப்படுத்தும் --- பெலன்

2. சாத்தானை எதிர்க்க பெலன் தாரும்
சோதனை ஜெயிக்க பெலன் தாரும்
மாய உலகினை வெறுக்க
என்னையும் பெலப்படுத்தும் --- பெலன்

Tamil Hymns

1883. பெலவீனத்தில் பெலன் நீரே

பெலவீனத்தில் பெலன் நீரே
நான் தேடும் பொக்கிஷம் நீரே எனக்கெல்லாம் நீரே
உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு
உம்மையே என்றும் பற்றிடுவேன் எனக்கெல்லாம் நீரே

இயேசுவே என் ரட்சகரே பாத்திரர் நீரே
எந்தன் இயேசுவே என் இரட்சகரே பாத்திரர் நீரே

பாவங்கள் அனைத்தையும் சுமந்தீரே
உந்தன் நாமத்தை உயர்த்திடுவேன்
எனக்கெல்லாம் நீரே
உம் கரத்தால் என்னை தூக்கினீர்
உலர்ந்த என்னை உயிர்ப்பித்தீர் எனக்கெல்லாம் நீரே

Tamil Hymns

1884. பெலனே ஆயனே

பெலனே ஆயனே
உம்மையே நம்பினேன் உதவி செய்தீரே - என்

இதயம் மகிழ்ச்சியால் களிகூர்கின்றதே -என்
இன்னிசைப் பாடியே நன்றி கூருவேன்

ஆசீர்வதியுமே பாரத தேசத்தை
விடுதலை தர வேண்டும் உமது ஜனத்திற்கு

நல்மேய்ப்பர் நீர்தானே நடத்தும் உம் பாதையில்
சுமந்து காத்திடும் சுகம் தரும் தெய்வமே

1885. பேசு சபையே பேசு

(பேசு சபையே பேசு, பேசு சபையே பேச)
இது உலர்ந்த எலும்புகள்
உயிர்பெற்று எழும்பிடும் நாட்கள்
இது தள்ளாடும் முழங்கால்கள்
புது பெலன் பெற்றுக்கொள்ளும் நாட்கள்

இது கோணல்கள் யாவும்
நேராக மாறிடும் நாட்கள்
இது கரடான பாதைகள்
செவ்வையாக மாறிடும் நாட்கள்

1. நரம்புகள் உருவாகும்
எலும்புகள் ஒன்றுசேரும்
தசைகளும் புதிதாகத் தோன்றும்
ஆவியின் அசைவாலும்
கர்த்தரின் வார்த்தையாலும்
புதுஜீவன் உனக்குள்ளாய் தோன்றும்

2. மேகங்கள் சூழ்ந்திடவே
இரைச்சலும் பெருகிடவே
பெருமழை தேசத்தில் பெய்யும்
கல்வாரி இரத்தத்தாலே
ஜாதிகள் மீட்கப்பட்டு - கர்த்தரை
தெய்வமாக வாழ்த்தும் - அதனால்

3. ஜாதிகள் நடுங்கிடவும்
தேசங்கள் உயர்ந்திடவும்
கர்த்தரின் கிரியைகள் தோன்றும்
மரித்தோர் பள்ளத்தாக்கில்
துதிக்கின்ற சேனையொன்று
கர்த்தரின் ஜீவன் பெற்று எழும்பும்

ஜீவனை பேசு, இரட்சிப்பை பேசு
சுவாசத்தை பேசு, அற்புதத்தை பேசு (2)
சபையே நீ எழும்பிடு, காற்றே நீ வீசிடு
போற்று சபையே போற்று - இயேசுவை
போற்று சபையே போற்று --- பேசு

Tamil Hymns

1886. பேசும் பேசும் ஜெபம் செய்யும்

பேசும் பேசும் ஜெபம் செய்யும் போது
ஆண்டவா பிரியமானதை இப்போ காட்டும் செய்ய ஆயத்தம்

1. என் ஆத்தும நேச மேய்ப்பரே என் உள்ளத்தின் ஆனந்தமே
இன்னும் உம்மை கிட்டிச் சேர நான் வாஞ்சையோடு சமீபிக்கிறேன்

2. மெய் மீட்பருக்கு கீழ்ப்படிவோர் தம் ஆத்துமத்தைத் தேற்றும் இடம்
அடியேனும் பெற அருள்வீர் அப்பனே விண்ணப்பம் கேட்டிடும்

3. பாவிகட்கு உமது அன்பை என் வாழ்க்கையில் காட்டச் செய்யும்
கல்வாரி தியாகத்தால் உள்ளத்தைப் போரில் வெல்ல நிரப்பிடும்

4. என்ஜீவிய நாட்களெல்லாம் நீர் சென்ற பாதையே செல்லுவேன்
ஆசித்துத் தாரேன் எனதெல்லாம் மீட்பரே வல்லமை தந்திடும்

1887. பேசும் தெய்வம் நீர் பேசாத

பேசும் தெய்வம் நீர்
பேசாத கல்லோ மரமோ நீர் அல்ல

1. என்னைப் படைத்தவர் நீர்
என்னை வளர்த்தவர் நீர்
என் பாவம் நீக்கி என்னைக் குணமாக்கி
என்னோடிருப்பவர் நீர்

இயேசுவே இயேசுவே -2

2. என் பாரம் சுமப்பவர் நீர்
என் தகம் தீர்ப்பவர் நீர்
என்னைப் போஷித்து என்னை உடுத்தி
என்னோடிருப்பவர் நீர்

3. என் குடும்ப வைத்தியர் நீர்
ஏற்ற நல் ஔஷதம் நீர்
எந்தன் வியாதி பெலவீனங்களில்
என்னோடிருப்பவர் நீர்

4. என்னை அழைத்தவர் நீர்
என்றும் நடத்துபவர் நீர்
என்மேல் கண்வைத்து ஆலோசனை தந்து
என்னோடிருப்பவர் நீர்

5. எனக்காய் வருபவர் நீர்
என் கண்ணீர் துடைப்பவர் நீர்
எல்லாம் முடித்து சீயோனில் சேர்த்து
என்னோடிருப்பவர் நீர்

Tamil Hymns

1888. பேரன்பர் இயேசு நிற்கிறார்

1. பேரன்பர் இயேசு நிற்கிறார்
மகா வைத்தியனாக
கடாட்சமாகப் பார்க்கிறார்
நல் நாமம் போற்றுவோமே

விண்ணில் மேன்மை பெற்றதே
மண்ணோர்க் கின்பமாகவே
பாடிப்போற்றும் நாமமே
இயேசு என்னும் நாமம்

2. உன் பாவம் யாவும் மன்னிப்பேன்
அஞ்சாதே என்கிறாரே;
சந்தேகங் கொண்டு சோர்வதேன்?
மெய்ப் பாக்கியம் ஈகிறாரே

3. உயிர்த்த ஆட்டுக்குட்டிக்கே
மேன்மை உண்டாவதாக!
நேசிக்கிறேன் இயேசு நாமம்
நம்பிடுவேன் என்றென்றும்

4. குற்றம் பயம் நீக்கும் நாமம்
வேறில்லை இயேசுவே தான்!
என் ஆத்மா பூரிப்படையும்
அந்நாமம் கேட்கும்போது

Tamil Hymns

1889. பேரின்பம் பேரின்பம் உண்டாம்

பேரின்பம் பேரின்பம் உண்டாம்
பேரானந்தம் அங்கே உண்டாம்
அன்பர் என் வல பாரிசத்தில்
அல்லேலூயா துதி பாடிடுவோம்

1. மேலோக இன்ப நாட்டினிலே
ராவில்லா வீட்டினிய்லே
தூயவன் அங்கு தரித்திடுவோம்
துன்பங்கல் நீங்கி துதித்திடுவோம்

2. எவர் எனக்கெதிரியாய் எழும்பினாலும்
எனக்குள்ளதெல்லாம் மாறினாலும்
இயேசு என் கிருபை நங்கூரமே
அவர் என் தீயோன் துறைமுகமே

3. இயேசுவின் சாயல் அணிந்திடுவேன்
அவரின் ஆவியில் இயங்கிடுவேன்
நல்லா என் இயேசுவின் மந்தையிலே
அல்லேலூயா துதி பாடிடுவேன்

4. மாறாத அன்பின் சுருதி அவர்
மாவாதையால் என்னை வென்றார்
கொல்கதா கொன்றார் அவர்
கல்வாரிக்கே மா அல்லேலூயா

Tamil Hymns

1890. பேரின்ப நதியே தாகத்தைத் தீர்த்திட

பேரின்ப நதியே தாகத்தைத் தீர்த்திட
பின்மாரியாக பொழிந்திடுமே

1. எலியாவின் தேவன் எங்கே என்றானே
சலியாமல் ஓடி சால்வை பெற்றாளே
பரலோக ராஜ்யம் பரிசுத்தவான்கள்
பலவந்த மாக்கும் காலம் இதுவே - பேரின்ப

2. மங்கும் திரிகள் நெரிந்த நாணல்
தேங்கும் தண்ணீர்கள் போன்ற அநேகர்
அனலுமில்லாத குளிருமில்லாத
அனுபவத்தோடே ஜீவிக்கின்றாரே - பேரின்ப

3. சவுலைப்பவுலாய் மாற்றும் தேவா
சடுதி ஒளியால் சந்திக்கும் மூவா
உலரும் எழும்பும் உயிரை அடையும்
உயிர் மீட்சி தாரும் என் இயேசு நாதா - பேரின்ப

4. பரிசுத்த ஆவிபெற்றிட வாரீர்
பரிசுத்த தேவ அழிப்பை பாரீர்
தேடுங்கள் கிடைக்கும் கேளுங்கள் தருவேன்
தட்டுங்கள் திறப்பேன் என்றுரைத்தாரே - பேரின்ப

5. ஊனர் குருடர் தீரா நோயாளர்
ஊமை செவிடர் பேயால் வாடுவார்
அற்புத செயலால் ஆரோக்கியமடைய
ஆண்டவரிடமே வேண்டுவோமே - பேரின்ப

6. சத்திய பரனை பக்தியுடனே
நித்திய யுகமாய்ப் பாடிடுவேனே
ஏதேனில் ஜீவ ஊற்றுகளருகே
ஏழை என் தாகம் தீர்த்திடுவேனே

Tamil Hymns

1891. பேயின் கோஷ்டம் ஊரின் தீழ்ப்பு

1. பேயின் கோஷ்டம் ஊரின் தீழ்ப்பு
ராவின் கோர கனாவால்
மாய்ந்த பாவி மரியாளை
மீட்பர் மீட்டார் அன்பினால்
மாதை மீட்ட நாதா எம்மின்
பாவம் கோஷ்டம் நீக்கியே
தீதாம் இருள் தேங்கும் நெஞ்சில்
ஞான ஜோதி தாருமே

2. தூய்மையான மரியாளே
நாதர் பாதம் நீங்காது
வாய்மையோடு சேவை ஆற்றி
சென்றாள் எங்கும் ஓயாது
நாதா, நாங்கள் தாழ்மையோடும்
ஊக்கத்தோடும் மகிழ்வாய்
யாதும் சேவை செய்ய உந்தன்
ஆவி தாரும் தயவாய்

3. மீட்பர் சிலுவையில் தொங்கி
ஜீவன் விடக் கண்டனன்
மீண்ட நாதர் பாதம் வீழ்ந்து
யார்க்கும் முன்னர் கண்டனன்
நாதா, வாழ்வின் இன்பம் நண்பா
அற்றே நாங்கள் சோர்கையில்
பாதம் சேர்த்து ஈறில்லாத
இன்பம் தாரும் நெஞ்சினில்

Tamil Hymns

1892. பொங்கிவரும் அருள் மனிதரை மாற்றிடுதே

பொங்கிவரும் அருள் மனிதரை
மாற்றிடுதே - மங்கிப்போன மனம்
புதுவாழ்வில் மலர்ந்திடுதே

1. தீயவர் திருடரும் கொடியவர் கொலைஞரும்
இயேசுவில் மாற்றம் பெற்றார்
மாறிய மனதுடன் மங்கள வாழ்விற்கு
அழைக்கிறார் ஓடியே வா

2. தேவனின் ஆவியால் விடுதலை
வாழ்வினைப பெற்றவர் பலருமுண்டு
இயேசு மகா இராஜன் உன்னைத்தான்
அழைக்கிறார் நம்பி நீ ஓடியே வா

3. கிருபையின் நாட்களைத் தயவுடன் ஏற்றிடக்
கனிவுடன் வேண்டுகிறோம்
வருகையின் நாளினில் வருந்திட
வேண்டாம் நீ அழைக்கிறார் ஓடியே வா

Tamil Hymns

1893. பொங்கி வழியும் தேவ கிருபை

பொங்கி வழியும் தேவ கிருபை
மண்ணில் வந்தது - 2
இந்த மண்ணில் மறையும் மறைகள்
காக்க தன்னை ஈந்தது

1. கருவில் உதித்த தூய கனியே
கவலை தீர்க்கும் கண்ணின் மணியே - 2
உளமெலாம் பூரிக்கும்
தூய்மையே உந்தன் வரவே - 2

2. விழிகள் திறந்த விந்தை தெய்வம்
பழிகள் சுமந்து வந்த தெய்வம்
உலகெலாம் தொழுதிடும்
உன்னதம் உந்தன் நாமம்

Tamil Hymns

1894. பொருட்கள் மேல கண்ணு போச்சுனா

பொருட்கள் மேல கண்ணு போச்சுனா
போச்சய்யா உன் அபிஷேகம்
ஆட்கள் மேல கண்ணு போச்சுன்னான
அப்போதான் உன் அபிஷேகம்

காத்துக் கொள் காத்துக் கொள்
பெற்றுக் கொண்ட அபிஷேகத்தை
காத்துக்கொள்

1. பெருமை என்ற வலையில் விழாதே
அது வறுமையைக் கொண்டு வந்திடும்
பணத்திலே மயங்கி விடாதே -உன்னைப்
பாதாளம் கொண்டு போய்விடும்

2. அழிந்து போகும் உலகப்பொருட்களால்
நண்பர்களை சம்பாதித்துக் கொள்
நீ மரித்தால் நித்திய வீட்டில் (உன்னை)
நிரந்தரமாய் ஏற்றுக் கொள்வார்கள்

3. அழைத்த அழைப்பில் நிலைத்திருந்தால்
அபிஷேகத்தைக் காத்துக் கொள்ளலாம்
அழைத்தவர் உண்மையுள்ளவர்
அநுதினமும் நடத்திச் செல்வாரே

Tamil Hymns

1895. பொன்னகர் இன்பத்தைப் பெற்றிடுவோம்

1. பொன்னகர் இன்பத்தைப் பெற்றிடுவோம்
துன்பமும் துக்கமும் மாறியே போம்
நன்மைச் சொரூபியை தரிசிப்போம்
நீடூழி காலம் பேரின்பமுண்டாம்.

பேரின்பமாம், பூரிப்புண்டாம்
பேரின்பமாம், பூரிப்புண்டாம்
மேலுலகில் அவர் சந்நிதியில்
மேலான வாழ்வு பேரின்பமுண்டாம்

2. மாட்சிமையான காருணியத்தால்
மோட்ச ஆனந்தத்தை அடையுங்கால்
சாட்சாத் நல் மீட்பரை நோக்குவதால்
நீடூழி காலம் பேரின்பமுண்டாம்.

3. அன்பராம் இஷ்டரைக் கண்டுகொள்வோம்,
இன்ப மா வாரியில் மூழ்கிடுவோம்
என்றைக்கும் இயேசுவை ஸ்தோத்திரிப்போம்
நீடூழி காலம் பேரின்பமுண்டாம்.

1896. பொன்னான இயேசுவை புண்ணிய

பொன்னான இயேசுவை புண்ணிய நல் நேசரை
கொண்டு செல்வோம் பூலோகமெங்கும் - அவர்
ஒன்றே வழி என்றே கூறுவோம்

தேவனே வந்து நம்மை நடத்திடுவார்
தேவையறிந்து பயன்படுத்திடுவார் - 2

1. அவர் எந்நாளும் நம்மோடு இருப்பதனால்
அலைகள் புயல்கள் நம்மை அசைப்பதில்லை
அஞ்சாமல் செல்வோம் வஞ்சகனை வெல்வோம் - 2
அரணான கொட்டைகளை பிடித்திடுவோம் - 2

2. எலியா எலிசா மூலம் அற்புதம் செய்தார்
இந்நாளில் எங்கள் மூலம் நிச்சயம் செய்வார் - அவர்
எத்தனையோ நோய்கள் அத்தனையும் போக்கும்
இயேசுவின் இரத்தத்தாலே ஜெயம் பெறுவோம்

3. காலமும் கடலலையும் காத்திருக்காது - இந்த
காலத்திலே உலகைக் கலக்கிடுவோம்
கல்லான நெஞ்சம் கரைந்திட செய்யும்
கனிவான கர்த்தர் பணி செய்திடுவோம்

Tamil Hymns

1897. பொன்னகர் பயணம் போகும்

பொன்னகர் பயணம் போகும் புண்ணியர்களே - மகிமை
என்னவென்றுரைக்க வல்லோர் யாருமில்லையே

1. உன்னத சுதனுக் கேதும் ஒப்புமை யுண்டோ அவர்
தன்னுதிரந் தந்து கொண்ட தன்மை யருமை - பொன்

2. லாசருக் கழுத கண்ணீர் நம்முடையதே அவர்
நேசமார்பில் சாய்ந்து கொள்ளும் நித்திரையிதே - பொன்

3. வந்தழைத்துப் போயென்னொடு வைப்பே னென்றவர் - இன்று
வந்தழைத்துப் போகுமேன்மை மாந்தருக் குண்டோ - பொன்

4. மண்ணினா லுண்டான வுடல் மண்ணேயாயினும் - யேசு
தன்னுரு வோடே எழுப்பும் சத்தியம் இதே - பொன்

5. கண்ணீர் துடைத்தெம்மை யாற்றும் கர்த்தரருகில் சென்றார்
நண்ணியே ஜீவகனி யுண் டின்னல் நீங்குவார் - பொன்

6. ஆட்டுக்குட்டியானவர் சிங்காசனங் கண்டு - புதுப்
பாட்டுக்கள் பாடும் சுத்தர் கூட்டமடைந்தார் - பொன்

7. கர்த்தருக் குள்ளே மரிப்போர் பாக்கிய ரென்று சொல்லும்
உத்தம வேதத்தின் உண்மை உன்னத மல்லோ - பொன்

Tamil Hymns

1898. பொன்னான நேரம் வெண் பனி தூவும்

பொன்னான நேரம் வெண் பனி தூவும் நேரம்
தொழுவத்தில் வந்துதித்தார் இயேசு பாலன்

1. பாவத்தின் சஞ்சலம் பறந்தோடி போக
பேரின்ப இரட்சிப்பை புவி எங்கும் சேர்க்க
பிறந்து வந்தார் உலகை ஜெயிக்க வந்தார்

அல்லேலுயா பாடுவோம்
மீட்பரை வாழ்த்துவோம்

2. உண்மையின் ஊழியம் செய்திடவே
வானவர் இயேசு பூவில் வந்தார்
வல்லவர் வருகிறார் நம் மீட்பர் வருகிறார்

3. வானமும் பூமியும் அண்டமும் படைத்து
வேதத்தின் ஒளியை பரப்பினாரே
இருளை அகற்றுவார்
நம்மை இரட்சித்து நடத்துவார்

1899. போதகர் வந்து விட்டார்

போதகர் வந்து விட்டார்
உன்னைத் தான் அழைக்கிறார்
எழுந்து வா - (4)

1. கண்ணீர் கடலில் மூழ்கி
கலங்கி தவிக்கிறாயோ
கலங்காதே கலங்காதே
கர்த்தர் உன் அடைக்கலம்

2. பாவச்சேற்றில் மூழ்கி
பயந்து சாகிறாயோ
தேவ மைந்தன் தேடுகிறார்
தேற்றிட அழைக்கிறார் மகளே

3. கல்வாரி சிலுவையைப் பார்
கதறும் இயேசுவைப் பார்
உன் பாடுகள் ஏற்றுக் கொண்டார்
உன் துக்கம் சுமந்துக் கொண்டார்

4. துன்பம் துயரம் உன்னை
சோர்வுக்குள் ஆக்கியதோ
அன்பர் இயேசு அழைக்கிறார்
அணைக்கத் துடிக்கிறார்

Tamil Hymns

1900. போதுமானவரே புதுமையானவரே

போதுமானவரே புதுமையானவரே
பாதுகாப்பவரே என் பாவம் தீர்த்தவரே

ஆராதனை ஆராதனை
ஆயுளெல்லாம் ஆராதனை

1. எனக்காக தண்டிக்கப்பட்டீரே
அதனால் நான் மன்னிக்கப்பட்டேன்
எனக்காக காயப்பட்டீரே
அதனால் நான் சுகம் பெற்றுக்கொண்டேன்

2. பாவங்கள் சுமந்ததனால் - நான்
நீதிமானாய் மாற்றப்பட்டேன்
மரணத்தை ஏற்றுக் கொண்டதால்-நித்திய
ஜீவனை பெற்றுக் கொண்டேன் ஐயா

3. எனக்காக புறக்கணிக்கப்பட்டீர்
அதனால் நான் ஏற்றுக்கொள்ளப்பட்டேன்
எனக்காக அவமானமடைந்து - உம்
மகிமையிலே பங்குபெறச் செய்தீர்

4. சிலுவையிலே ஏழ்மையானதால் - என்னை
செல்வந்தனாய் மாற்றிவிட்டீரே-நீர்
சாபங்களை சுமந்து கொண்டதால்-நான்
ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டேன்

Tamil Hymns

1901. போராடும் என் நெஞ்சமே புகலிடம்

போராடும் என் நெஞ்சமே
புகலிடம் மறந்தாயோ - பாராளுமம்
இயேசு உண்டு பதறாதே மனமே

1. அயலகடல் நடுவினிலே
அமிழ்ந்து போகின்றாயோ
கரம் நீட்டும் இயேசுவைப் பார்
கரை சேர்க்கும் துணை அவரே..

ஆ.. ஆனந்தம் பேரானந்தம்
என் அருள்நாதர் சமூகத்திலே (2)

2. கடந்ததை நினைத்து தினம்
கண்ணிர் வடிக்கின்றாயோ
நடந்ததெல்லாம் நன்மைக்கே
நன்றி..நன்றி..சொல்லு

3. வருங்கால பயங்களெல்லாம்
வாட்டுதோ அனுதினமும்
அருள்நாதர் இயேசுவிடம்
அனைத்தையும் கொடுத்துவிடு

4. நண்பன் கைவிட்டானோ
நம்பினோர் எதிர்த்தனரோ
கைவிடா நம் தேவனின்
கரம் பற்றி நடந்திடு

Tamil Hymns

1902. போவாஸ் போவாஸ்

போவாஸ் போவாஸ்
போர்வையால் என்னை மூடுமையா
இயேசையா இயேசையா உம்
அன்பினால் என்னை மூடுமையா

1. உந்தன் அடிமை நான் ஐயா-என்னைக்
காப்பாற்றும் கடமை உமக்கையா

2. நிறைவான பரிசுத நீர்தானையா – உம்
நிழல் தானே தங்கும் சொர்க்கமையா

3. வேதனையோ வேறு சோதனையோ
எதுவும் என்னை பிரிக்காதையா

4. ஓய்வின்றி கதிர்கள் பொறுக்கிடுவேன்
வேறொரு வயல் நான் போவதில்லை

5. கற்றுத்தாரும் நான் கடைபிடிப்பேன்
சொல்வதை செய்து முடித்திடுவேன்

6. போர்வை விரித்தேன் போடுமையா
கோதுமையால் என்னை நிரப்புமையா

7. திருப்தியாக்கும் என் திரு உணவே
தாகம் தீர்க்கும் ஜீவத்தண்ணீரே

Tamil Hymns

1903. போற்றிடு ஆன்மமே

1. போற்றிடு ஆன்மமே
சிஷ்டி கர்த்தாவாம் வல்லோரை - ஏற்றிடு
உனக்கு ரட்சிப்பு சுகமானோரை
கூடிடுவோம் பாடிடுவோம் பரனை
மாண்பாய் சபையாரெல்லோரும்.

2. போற்றிடு யாவையும் ஞானமாய்
ஆளும் பிரானை - ஆற்றலாய்க் காப்பரே
தம் செட்டை மறைவில் நம்மை
ஈந்திடுவார் ஈண்டு நாம் வேண்டும் எல்லாம்
யாவும் அவர் அருள் ஈவாம்

3. போற்றிடு காத்துனை
ஆசீர்வதிக்கும் பிரானை - தேற்றியே
தயவால் நிரப்புவார் உன் வாணாளை
பேரன்பராம் பராபரன் தயவை
சிந்திப்பாய் இப்போதெப்போதும்

4. போற்றிடு ஆன்மமே
என் முழு உள்ளமே நீயும் -ஏற்றிடும்
கர்த்தரை ஜீவ இராசிகள் யாவும்
சபையாரே சேர்ந்தென்றும் சொல்லுவீரே
வணங்கி மகிழ்வாய் ஆமேன்

Tamil Hymns

1904. போற்றிடுவேன் என் இயேசுவையே

போற்றிடுவேன் என் இயேசுவையே
புகழ்ந்து பாடிடுவேன்
இதயத்தின் தெய்வமாம் இயேசு
என் வாழ்க்கையின் ஆரம்பம் இயேசு

1. மனுவாக வந்தவர் இயேசு
மனப்பாரங்கள் நீக்குவார் இயேசு
ஜீவனின் அதிபதி இயேசு
பரிசுத்தம் அளிப்பவர் இயேசு

2. தம்மிடம் வருவோரை இயேசு
தயங்காமல் அணைப்பவர் இயேசு
மறுவாழ்வு அளிப்பவர் இயேசு
மகிமையில் சேர்ப்பவர் இயேசு

3. சமாதானம் நல்கிடும் இயேசு
மன மகிழ்ச்சி காரணர் இயேசு
சாந்தியும் அளிப்பவர் இயேசு
வாழ்வுக்கு துணையாளர் இயேசு

Tamil Hymns

1905. போற்றித் துதிப்போம்

1. போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனை
புனித இதயமுடனே - நேற்றும்
இன்றும் என்றும் மாறா இயேசுவை
நாமென்றும் பாடித்துதிப்போம்

இயேசு என்னும் நாமமே
என் ஆத்துமாவின் கீதமே
என் நேசரேசுவை நான் என்றும்
ஏற்றி மகிழ்ந்திடுவேன்

2. கோர பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில் - காக்குங்
கரங்கொண்டு மார்பில் சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன்

3. யோர்தான் நதி போன்ற சோதனையிலும்
சோர்ந்தமிழ்ந்து மாளாதே
ஆர்க்கும் ஜெயதொனியோடே
பாதுகாத்த அன்பை என்றும் பாடுவேன்

4. தாய் தன் பாலகனையே மறப்பினும்
நான் மறவேன் என்று சொன்னதால்
தாழ்த்தி என்னையவர் கையில் தந்து
ஜீவ பாதை என்றும் ஓடுவேன்

5. பூமியகிலமும் சாட்சியாகவே
போங்களென்ற கட்டளையதால்
ஆவி ஆத்துமாவும் தேகம் யாவுமின்று
தந்து தொண்டு செய்குவேன்

Tamil Hymns

1906. போற்றும் போற்றும்

1. போற்றும் போற்றும் புண்ணிய நாதரைப் போற்றும்
வானோர் கூடிப் பாடவும் இன்பமாய்
பாரிலேயும் நாம சங்கீர்த்தனம் செய்ய
மாந்தர் யாரும் வாரும் ஆனந்தமாய்
நேச மேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு
இயேசு நாதர் நம்மையும் தாங்குவார்
போற்றும் போற்றும் தெய்வ குமாரனைப் போற்றும்
பாதுகாத்து நித்தமும் போஷிப்பார்

2. போற்றும் போற்றும் புண்ணிய நாதரைப் போற்றும்
பாவம் போக்கப் பாரினில் ஜென்மித்தார்
பாடுபட்டுப் பிராணத் தியாகமும் செய்து
வானலோக வாசலைத் திறந்தார்
மா கர்த்தாவே ஸ்தோத்திரம் என்றும் என்றும்
வாழ்க வாழ்க ஜெகத்து ரட்சகா
அருள் நாதா மாசணுகா பரஞ்சோதி
வல்லநாதா கருணை நாயகா

3. போற்றும் போற்றும் புண்ணிய நாதரைப் போற்றும்
விண்ணும் மண்ணும் இசைந்து பாடவும்
போற்றும் போற்றும் மீட்பர் மகத்துவமாக
ஆட்சிசெய்வார் நித்திய காலமும்
ஏக ராஜா மாட்சிமையோடு வந்து,
இயேசு ஸ்வாமி பூமியில் ஆளுமேன்
லோகம் எங்கும் நீதியின் செங்கோலை ஓச்சி
ஜோதியாகப் பாலனம் பண்ணுமேன்

Tamil Hymns

1907. போற்றுவோம் போற்றுவோம்

போற்றுவோம் போற்றுவோம்
இயேசுவையே போற்றுவோம்
துதி சாற்றுவோம் சாற்றுவோம்
கர்த்தருக்கே சாற்றுவோம்

நமக்காய் மண்ணில் வந்து பிறந்தவரை
போற்றுவோம்
நம்மையும் மீட்க வந்த
மீட்பரையே போற்றுவோம்
இயேசுவின் நாமமே நமது மேன்மையே

1. விண்ணுலக ரோஜாவோ மண்ணில்
வந்து பூத்ததோ
விண்தூத சேனையெல்லாம் வாழ்த்து பாட
வந்ததோ
விண்மீங்கள் கூட்டத்தில் இவர்
விடிவுகால வெள்ளியோ
ராஜாக்கள் கூட்டத்தில் இவர் ராஜாதி ராஜாவோ
இவரும் நம்மை மேய்க்கும்
நல்ல மேய்ப்பர் என்பதாலோ
இவரையுமே மேய்ப்பர்களும்
தேடியே வந்தார்களோ
நம் இதயம் கூட இன்று
ஒரு மாட்டுத் தொழுவந்தானே
இதில் பிறந்திடவே ராஜா இயேசுவே வந்தாரே

2. உலகத்தின் ஒளியே மங்கிடாத மகிமையே
எந்த மனிதனையும் பிரகாசிக்கின்ற ஒளியே
இருளை போக்க வந்த விடியற்கால வெளிச்சமே
இன்னல்கள் போக்க எந்தன் உள்ளம் வந்த இயேசுவே
பாவங்கள் போக்கிடவே மண்ணில் பிறந்தாரே
பரலோகில் சேர்த்திடவே என்னில் பிறந்தாரே
இவரே மெய்யான தேவன்
நம்மை தேடி வந்த தெய்வம்
உயிருள்ள நாளெல்லாம் அவரையே பாடுவோம்

Tamil Hymns

1908. போற்றுவோமே போற்றுவோமே

போற்றுவோமே போற்றுவோமே
எம் தேவரீரை இவ்வேளையிலே
நன்றியுடனே நன்றியுடனே போற்றுவோமே

1. துங்கன் யேசுவே தூயா உமக்கே
துதிகள் சாற்றிடுவேன்
மங்கா புகழும் மகிழ்ந்துபோற்றி
எங்கும் துதித்திடுவேன்
கங்குல் அற எங்குமே ஒளி
மங்கிடாமலே தங்கிட வேணும்

2. ஆழ்ந்த சேற்றினில் அமிழ்ந்த எம்மையே
அணைத்து எடுத்தோனே
ஆழிதனிலெம்பாவ மெறிந்த
அன்னை உத்தமனே
அன்றும் என்றும் என்றும் துதிப்பேன்
மன்னவனையே மனதினிலே

3. பாவம் போக்கியே கோபம் மாற்றியே
ரோகம் தொலைத்தோனே - துரோகி
என்னையே சுத்திகரித்த தூய வேந்தனே
தூயா நேயா காய மாற்றியே
கருணாநிதியே பரிகாரியே

4. பாரிலென்னையே பிரித்தெடுத்தோனே
தாவிவந்தோனே - அகமதினிலே
ஆவி ஈந்திட அருள் நிறைந்தவனே
தரிசனம் தந்த தேவனே
பரிசுத்தமாய் பாரில் ஜீவிக்க

5. பூரணர் ஆகவே பூவில் வாழ்ந்திட
கிருபை அளித்தோனே
புகழை விரும்பேன் மகிழ்வேன் தினமே
மகிமை செலுத்திடுவேன்
கோனே தேனே கோதில்லாதோனே
கானம் பாடியே துதித்திடுவேன்

Tamil Hymns

1909. போஷிப்பவர் நீரே பாதுகாப்பு நீரே

போஷிப்பவர் நீரே பாதுகாப்பு நீரே
பரிகாரி நீரே என் இரட்சகரும் நீரே

1. சோர்ந்துபோனாயோ கவலைப்படாதே - 2
இயேசு உன்னை சுமப்பார் மகிழ்ச்சியாக்குவார்-2

2. இயேசு நீர் பெரியவர் எல்ஷடாய் நீர் வல்லவர் - 2
உலகம் வனாந்திரம் பரலோகம் மகிழ்ச்சியே

3. தண்ணீர் மேல் நடந்தார் அற்புதங்கள் செய்திட்டார்
உன் பிரச்சினை எம்மாத்திரம் எண்ணிப்பார் ஓர் நிமிடம் - 2

அல்லேலூயா பாடுவோம்
தேவனை துதிப்போம்

Tamil Hymns

1910. மகளே சீயோன் மகிழ்ச்சியாலே ஆரிப்பரி

மகளே சீயோன் மகிழ்ச்சியாலே ஆரிப்பரி
இஸ்ராயேலே ஆரவாரம் செய்திடு (2)
முழு உள்ளத்தோடு அகமகிழ்ந்து களிகூறு
கெம்பீரித்து பாடி பாடி மகிழ்ந்திடு

அகமகிழ்ந்து களிகூறு
ஆரவாரம் செய்திடு - (2)

1. தள்ளிவிட்டார் உன் தண்டனையை
அகற்றிவிட்டார் உன் பகைவர்களை
வந்துவிட்டார் அவர் உன் நடுவில்
இனி நீ தீங்கைக்காணமாட்டாய்

2. உன் பொருட்டு அவர் மகிழ்கின்றார்
உன்னைக்குறித்து அவர் பாடுகின்றார்
அனுதினமும் அவர் அன்பினாலே
புது உயிர் உனக்குத் தருகின்றார்

3. தளரவிடாதே உன் கைகளை
பயப்படாதே நீ அஞ்சாதே
இனி நீ இழிவு அடையமாட்டாய்
உனது துன்பம் நீக்கிவிட்டார்

4. உலகெங்கும் பெயர் புகழ்பெற்ச்செய்வேன்
அவமானம் நீக்கி ஆசீர்வதிப்பேன்
ஒதுக்கப்பட்ட உன்னைச் சேர்த்துக் கொள்வேன்
ஊனமுற்ற உன்னைக் காப்பாற்றுவேன்

Tamil Hymns

1911. மகனே உன் நெஞ்செனக்குத் தாராயோ

மகனே உன் நெஞ்செனக்குத் தாராயோ
மோட்ச வாழ்வைத் தருவேன் இது பாராயோ

1. அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே
பாவ அழுக்கை நீக்கி அருள் கொடுப்பேனே

2. உன் பாவம் முற்றும் பரி கரிப்பேனே - அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே

3. பாவம் அனைத்துமே விட்டோடாயோ
நித்ய பரகதி வாழ்வை இன்றே தேடாயோ

4. உலக வாழ்வினை விட்டகல்வாயே
மகா உவப்பாய்க் கதி ஈவேன் மகிழ்வாயே

5. உன்றன் ஆத்துமத்தை நீ படைப்பாயே
அதில் உன்னதன் வசிக்க இடம் கொடுப்பாயே

Tamil Hymns

1912. மகா மேன்மையும் அருமையுமான

மகா மேன்மையும் அருமையுமான
வாக்குத்தத்தங்களை கொடுத்து
உந்தன் அளவில்லா ஆசீர் என்மேல்
தாங்க செய்தீரே - இயேசையா (2)
உந்தன் அன்பை பாடி உந்தன் பண்மை புகழ்ந்து
உம் பாதம் பணிந்து தொழுதுpடுவேன் - 2

ஆராதிக்கின்றேன் (2)
என் அன்பின் (இராஜனை) ஆராதிக்கிறேன் (2)

1. சென்ற இடமெல்லாம் என் கூட வந்தீரே
செய்த எல்லாவற்றிலும் பலன் தந்தீரே - 2
ஜெபங்களுக்கெல்லாம் பதில் தந்தீரே
ஜெயமதை ஈந்து மகிழ செய்தீரே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
எங்கள் எபிநேசருக்கு ஸ்தோத்திரம்

2. பாவம் போக்கினீர் என்னை தூய்மையாக்கினீர்
புத்தம் புதிய வாழ்வளித்து புது சிருஷ்டியாக்கினீர்-2
புது புது கிருபை தினம் தினம் தந்தீரே...
புதிய எண்ணெயால் அபிஷேகித்தீரே...
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
எங்கள் அபிஷேக நாதருக்கு ஸ்தோத்திரம்

3. வருஷத்தை நன்மையினால் முடிசூட்டி தந்தீரே
பாதைககளெல்லாம் நெய்யாய்
பொழிந்திட கிருபை செய்தீரே-2
சாட்சியாய் வாழ்ந்து சத்தியம் பேசிடுமே
சாத்தானை ஜெயித்து சபைகள் நிரம்பிட செய்யுமே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
எங்கள் இராஜாதி இராஜாவே ஸ்தோத்திரம்

Tamil Hymns

1913. மகிபனையே அனுதினமே

மகிபனையே அனுதினமே
மகிழ்வுடனே துதித்திடுவேன் - தினம்

1. என்னை அன்பில் இணைத்திடவே
கண்டிப்பா உருவாகு முன்னே
ஜோதியாய் தேவ மகிமையை பெறவே
தேவன் என்னை தெரிந்தெடுத்ததினால் --- 2

2. தூதராலும் செய்யவொண்ணா
தூய பணியை அற்புதமாய்
தோசியாலும் செய்திட கிருபை
தூயன் கிறிஸ்து தந்தனரே

3. அழைத்தாரே சுவிஷேசத்தினால்
அடைய தேவ சாயலதை
பயத்துடனே பரிசுத்தமதையே
பாரினில் பூரணமாக்கிடுவோம்

4. ஆவலுடனே காத்திருந்தேன்
சேவை புரிவோம் இயேசுவுக்காய்
ஆசை இயேசு மணவாளன் வருவார்
சீயோனில் என்னை சேர்த்திடவே

Tamil Hymns

1914. மகிமை உமக்கன்றோ

மகிமை உமக்கன்றோ
மாட்சிமை உமக்கன்றோ
துதியும் புகழும் ஸ்தோத்திரமும்
தூயவர் உமக்கன்றோ

ஆராதனை - ஆராதனை
என் அன்பர் இயேசுவுக்கே

1. விலையேறப் பெற்ற உம் இரத்தத்தால்
விடுதலை கொடுத்தீர்
இராஜாக்களாக லேவியராக
உமக்கென தெரிந்து கொண்டீர்

2. வழிகாட்டும் தீபம் துணையாளரே
தேற்றும் தெய்வமே
அன்பால் பெலத்தால்
அனல்மூட்டும் ஐயா அபிஷேக நாதரே

3. எப்போதும் இருக்கின்ற
இனிமேலும் வருகின்ற எங்கள் ராஜாவே
உம் நாமம் வாழ்க உம் அரசு வருக
உம் சித்தம் நிறைவேறுக

4. உம் வல்ல செயல்கள்
மிகவும் பெரிய அதிசமயன்றோ
உம் தூய வழிகள் நேர்மையான
சத்திய தீபமன்றோ

Tamil Hymns

1915. மகிமைக்கும் கனத்திற்கும் பாத்திரரே

1. மகிமைக்கும் கனத்திற்கும் பாத்திரரே
மங்காத புகழை உடையவரே
நிரந்தர அதிகாரம் உள்ளவரே
நித்தியமாய் எங்களை ஆள்பபவரே

ராஜா இயேசு ராஜா ராஜா இயேசு ராஜா
நீரே ராஜாதி ராஜா

2. பெருமைக்கும் புகழ்ச்சிக்கும் உரியவரே
பெரிய காரியங்கள் செய்பவரே
சகல அதிகாரம் உள்ளவரே
சர்வத்தையும் படைத்த சிருஷ்டிகரே

3. தொழுகைக்கும் துதிக்கும் அதிபதியே
மகத்துவம் மாட்சிமை உம் கதியே
கிருபையின் ஐசுவரிய சம்பன்னரே
மரணத்தை ஜெயித்த மன்னவரே

Tamil Hymns

1916 மகிமை தேசமே எந்தனின் சொந்தமே

மகிமை தேசமே எந்தனின் சொந்தமே
விண்ணக குடிபோய் என்றும் ஜீவிப்பேன்

1. என்னையும் தேடி அன்பாக வந்தவர்
தன்னையும் பூவில் அன்பாக தந்தவர்
எந்நாளும் அஞ்சிடேன் என்றென்றும் வெல்லுவேன்
ஓயாமல் ஜெயமதைப் பிடித்திடுவேன்

2. தேவனின் வார்த்தை எந்நாளும் ஏற்றுமே
தேவனின் சேவை எந்நாளும் செய்திட
தூதர்கள் போலவே பிரமாணம் ஏற்றுமே
தேவாதி தேவனை என்றும் சேவிப்பேன்

3. உண்மையும் நேர்மையும் எந்நாளும் காத்துமே
என்னையே தந்து என்றென்றும் ஜீவிப்பேன்
தேவாதி தேவனை பின்பற்றி செல்லுவேன்
எந்நாளும் மகிழ்ச்சியை அடைந்திடுவேன்

Tamil Hymns

1917. மகிமை மாட்சிமை நிறைந்தவரே

மகிமை மாட்சிமை நிறைந்தவரே
மகிழ்வுடன் தொழுதிடுவோம்
பரிசுத்த தேவனாம் இயேசுவை
பணிந்தே தொழுகுவோம்

1. உன்னத தேவன் நீரே
ஞானம் நிறைந்தவரே
முழங்கால் யாவுமே
பாரினில் மடங்கிடுதே
உயர்ந்தவரே சிறந்தவரே
என்றும் தொழுதிடுவோம்

2. ஒருவரும் சேரா ஒளியில்
வாசம் செய்பவரே
ஒளியினை தந்துமே
இதயத்தில் வாசம் செய்யும்
ஒளி நிறைவே அருள் நிறைவே
என்றும் தொழுதிடுவோம்

3. பரிசுத்த தேவன் நீரே
பாதம் பணிந்திடுவோம்
கழுவியே நிறுத்தினீரே
சத்திய தேவன் நீரே
கனம் மகிமை செலுத்தியே நாம்
இன்றும் தொழுதிடுவோம்

4. நித்திய தேவனும் நீரே
நீதி நிறைந்தவரே
அடைக்கலமானவரே
அன்பு நிறைந்தவரே
நல்லவரே வல்லவரே
என்றும் தொழுதிடுவோம்

Tamil Hymns

1918. மகிமை மேல் மகிமை அடைந்திடுவேன்

மகிமை மேல் மகிமை அடைந்திடுவேன்
மறுரூபமாவேன் மனமதிலே
மகிழ்ந்திடவே தரிசிக்கவே பரன் மகமே

1. உந்தன் பாதம் என்னை பலியாய்
உண்மை மனதுடன் ஒப்படைத்தேன்
ஏற்றுக் கொண்டருளும்
தேவ பெலன் விளங்கும் -தேற்றி
உயிர்ப்பித்திடும் தம் ஆவியினால்

2. தேவ சாயல் தேவ சமுகம் பிள்ளைகள்
அடையும் பாக்கியம் - எந்தன்
வாஞ்சையிதே என்று சேர்ந்திடுவேன்
என்னை நிரப்பிடுமே தம் ஆவியினால்

3. ஜீவ ஜலமே பொங்கி வருதே
ஜீவ ஊற்றுகள் திறந்தனவே - தம்
கரம் பிடித்தேன் அங்கு வழி நடத்தும்
தாகம் தீர்த்திடுவேன் தம் ஆவியினால்

4. பாதம் ஒன்றே போதும் என்றேன்
பேசும் ஆண்டவர் தொனியும் கேட்டேன்
இன்ப வாக்குகளே எந்தன் போஜனமே
என்னை பெலப்படுத்தும் தம் ஆவியினால்

5. திவ்ய குணங்கள் நாடி ஜெபித்தேன்
தூய வாழ்க்கையின் தேவை அதுவே
தேவ சேவையிலே பாடு சகித்திடவே
தாரும் பொறுமை பெலன் தம் ஆவியினால்

6. ஆவி ஆத்மா தேகம் முழுதும்
அன்பர் இயேசுவின் சொந்தமாமே
பூரணம் அருளும் ஆயத்தபடுத்தும்
பாடிப் பறந்திடுவேன் தம் ஆவியினால்

Tamil Hymns

1919. மகிமையடையும் இயேசு ராஜனே

மகிமையடையும் இயேசு ராஜனே
மாறாத நல்ல மேய்ப்பனே
உந்தன் திருநாமம் வாழ்க
உலகெங்கும் உம் அரசு வருக வருக

1. உலகமெல்லாம் மீட்படைய
உம் ஜீவன் தந்தீரையா

2. பாவமெல்லாம் கழுவிடவே
உம் இரத்தம் சிந்தினீரே

3. சாபமெல்லாம் போக்கிடவே
முள்முடி தாங்கினீரே

4. என் பாடுகள் ஏற்றுக் கொண்டார்
என் துக்கம் சுமந்தீரையா

5. கசையடிகள் உனக்காக
காயங்கள் உனக்காக

6. நோய்களெல்லாம் நீக்கிடவே
காயங்கள் பட்டீரையா

1920. மகிமையான பரலோகம் இருக்கையிலே நீ

மகிமையான பரலோகம்
இருக்கையிலே-நீ
மனம் உடைந்து போவதும் ஏனோ
ஆற்றித் தேற்ற அன்பர்
இயேசு இருக்கையிலே - நீ
அஞ்சி, அஞ்சி வாழ்வதும் ஏனோ

திடன் கொள், பெலன் கொள்
சோர்ந்திடாமல் தொடர்ந்து ஓடு

மகிமையான பரலோகம் இருப்பதனால்
நான் மனம் உடைந்து
போகவே மாட்டேன்
ஆற்றித் தேற்ற அன்பர்
இயேசு இருப்பதனால்
அஞ்சி, அஞ்சி வாழ்ந்திட மாட்டேன்

திடன் கொண்டேன்,
பெலன் கொண்டேன்,
சோர்ந்திடாமல் தொடர்ந்து ஓடுவேன்

Tamil Hymns

1921. மகிமையின் தேவனே

மகிமையின் தேவனே - எந்தன்
மகத்துவ ராஜனே - உம்மை நான்
வாழ்த்துவேன் உம் நாமம் போற்றுவேன்
எந்தன் உயிரான இயேசுவே

1. வல்லமையின் நாமமே
என் இயேசுவின் உயர் நாமமே
விடுதலையின் நாமமே
என் இயேசு நாமம் உயர் நாமமே - 2

2. மரணத்தை வென்றவர்
இன்றும் உயிரோடிருப்பவர்
தூய ஆவியினால் என்னை நிரப்பியவர்
இன்றும் அற்புதங்கள் செய்கிறவர்

Tamil Hymns

1922. மகிமையின் நம்பிக்கையே

மகிமையின் நம்பிக்கையே
மாறிடாத என் இயேசையா
உம்மையல்லோ பற்றிக் கொண்டேன்
உலகத்தில் வெற்றிக் கொண்டேன்

துதித்து துதித்து மகிழ்ந்து புகழ்ந்து
தூயவர் உம்மை நான் பாடுவேன்

1. ஆத்துமாவின் நங்கூரமே
அழிவில்லா பெட்டகமே
நேற்றும் இன்றும் ஜீவிக்கின்ற
நிம்மதியின் கன்மலையே

2. நல் மேய்ப்பரே நம்பிக்கையே
நானும் உந்தன் ஆட்டுக்குட்டி
உம்மைத் தானே பின் தொடர்ந்தேன்
உம் தோளில் தான் நானிருப்பேன்

3. பள்ளத்தாக்கில் நடந்தாலும்
பயமில்லை பாதிப்பில்லை
உம் குரலோ கேட்குதையா
உள்ளமெல்லாம் அன்பால் பொங்குதையா

4. பிரகாசிக்கும் பேரொளியே
விடிவெள்ளி நட்சத்திரமே
உம் வசனம் ஏந்திக் கொண்டு
உலகெங்கும் சுடர்விடுவேன்

Tamil Hymns

1923. மகிமையின் ராஜனே மகத்துவ

மகிமையின் ராஜனே மகத்துவ
தேவனே உலகத்தை மீட்டோனே
உமக்கே ஆராதனை உமக்கே ஆராதனை (3)
மகிமையின் ராஜனே மகத்துவ தேவனே.......

இறையெங்கும் அரசே இயேசு பெருமானே
இறையெங்கும் அரசே இயேசு பெருமானே
உன்னத பெருங்குருவே உமக்கே
ஆராதனை உமக்கே ஆராதனை
(மகிமையின் ராஜனே.......)

சிலுவைக் கொடியேந்தி ஜெயமே முடிதாங்கி
சிலுவைக் கொடியேந்தி ஜெயமே முடிதாங்கி
வானகம் திறந்தோனே
உமக்கே ஆராதனை உமக்கே ஆராதனை
(மகிமையின் ராஜனே.......)

ஜகத்தில் விதி முழங்க ஜகத்தலம்
போய் மகிழ ஜகத்தில் விதி முழங்க
ஜகத்தலம் போய் மகிழ பூவுலகம் பணிய
உமக்கே ஆராதனை உமக்கே ஆராதனை
(மகிமையின் ராஜனே.......)

Tamil Hymns

1924. மகிமையின் ராஜா மகிமையோடு

மகிமையின் ராஜா மகிமையோடு வருகின்றார்
மேகமீதில் ஆ··· ஆ··· ஆனந்தமே
ஆனந்தமே ஆனந்தமே பேரானந்தமே

1. பூமி அதிசயிக்க வானோர் ஆர்ப்பரிக்க
தூதர் தொனியுடனே மேகமீதில் வருவார்
அன்பர்கள் நாங்கள் இயேசுவை சந்திப்போம்
ஆனந்தம் ஆனந்தமே – மகிமை

2. ஆசை மகிபனவர் பிதாவின் மகிமையோடு
நேச மணவாட்டியை மறுரூபமாக்க வருவார்
ஆவலா நாமும் இயேசுவை சந்திப்போம்
ஆனந்தம் ஆனந்தமே – மகிமை

3. சுத்த பிரகாசமாச் சித்திரத் தையலாடை
தூய நீதியுடனே வெண்வஸ்திரம் தரிப்போம்
விண்ணவர் சாயலில் இயேசுவை சந்திப்போம்
ஆனந்தம் ஆனந்தமே – மகிமை

4. ஆவியில் மணவாட்டியும் அழைத்திடும் நேரமல்லோ
ஆயத்த விழிப்புடனே பூராணமடைந்திடுவோம்
காலமும் சென்றது நேரமும் வந்தது
ஆனந்தம் ஆனந்தமே – மகிமை

Tamil Hymns

1925. மகிழ் கர்த்தாவின் மந்தையே

1. மகிழ், கர்த்தாவின் மந்தையே ,
இதோ, கெம்பீரத்துடனே
பரத்துக்குள் அதிபதி
எழுந்துபோனதால் துதி.

2. விண்ணோர் குழாம் மகிழ்ச்சியாய்
கொண்டாடி , மா வணக்கமாய்
பணிந்து , இயேசு ஸ்வாமிக்கு
ஆராதனை செலுத்திற்று .

3. கர்த்தாதி கர்த்தர் நமக்கு
தலைவரானார் என்பது
பரத்தின் தூதருக்கெல்லாம்
விசேஷித்த சந்தோஷமாம் .

4. ஆ, இயேசு தெய்வ மைந்தனே ,
கர்த்தா , பார்த்தா, முதல்வரே .
அடியார் நெஞ்சு உமக்கு
என்றும் ஆதீனம் ஆனது .

5. விண்ணோரைப் போல் மண்ணோர்களே ,
நம் ஆண்டவரை என்றுமே
அன்பாகக் கூடிப்பாடுங்கள் .
அவரின் மேன்மை கூறுங்கள் .

Tamil Hymns

1926. மகிழ் மகிழ் மந்தையே

மகிழ் மகிழ் மந்தையே, நீ; அல்லேலுயா! பரன்
மைந்தன் பரமேறினார், அல்லேலுயா !

மகிழ், மகிழ்; பரம மைந்தன் மகத்துவ பரமேறினார் ;
நிகழ திருச் சேனை பாடும் அல்லேலுயா ,இன்று - மகிழ்

1. வானமெல்லாம் நிரப்ப மனுஷ மைந்தன் எல்லா
வானங்கள் மேலறினார் அல்லேலுயா!
தீனதயாளு நம்மைச் சேர்ந்த தலைவராயினார் ,
ஞானமுடன் பாடுங்கள் , அல்லேலுயா , இன்று -மகிழ்

2. தந்தை வளபாகத்தில் சத்திய கிறிஸ்து எங்கள்
சத்துருக்கள் மேற்சிறந்தார், அல்லேலுயா !
சொந்தக் காயங்கள் காட்டிச் சுகிர்தமுடன் ஜெபிப்பார் ;
மந்தையே , உந்தனுக்காய் அல்லேலுயா , இன்று- மகிழ்

3. மோட்ச சுதந்தரர் நாம் வானோருக்கும் ஒப்பர் ,
முடிவில்லாப் பாக்கியர் நாம், அல்லேலுயா !
பாழ்ஜெகம் நிலையல்ல ,பரம சஞ்சாரிகள் நாம்
சூட்சுமக் கர்த்தனுக்கே அல்லேலுயா , இன்று -மகிழ்

4. பூதலமந்தமட்டும் உங்களுடனே நித்தம்
புனிதன் இருப்பேனென்றார்; அல்லேலுயா !
ஏதேமக்குக் குறைச்சல் ஏசெங்களோடிருந்தால்,
யாதுமோசந்தொடரும்? அல்லேலுயா , இன்று

Tamil Hymns

1927. மகிழ்ச்சி பண்டிகை கண்டோம்

1. மகிழ்ச்சி பண்டிகை கண்டோம்,
அகத்தில் பாலனைப் பெற்றோம்;
விண் செய்தி மேய்ப்பர் கேட்டனர்,
விண் எட்டும் மகிழ் பெற்றனர்.

2. மா தாழ்வாய் மீட்பர் கிடந்தார்,
ஆ! வான மாட்சி துறந்தார்;
சிரசில் கிரீடம் காணோமே,
அரசின் செல்வம் யாதுமே.

3. பார் மாந்தர் தங்கம் மாட்சியும்
ஆ! மைந்தா இல்லை உம்மிலும்;
விண்ணோரின் வாழ்த்துப்பெற்ற நீர்
புல்லணை கந்தை போர்த்தினீர்.

4. ஆ! இயேசு பாலன் கொட்டிலின்
மா தேசு விண் மண் தேக்கவே,
நள்ளிருள் நடுப் பகலாம்,
வள்ளல்முன் சூரியன் தோற்குமாம்.

5. ஆ! ஆதி பக்தர் தேட்டமே!
ஆ! ஜோதி வாழ்வின் விடிவே!
ஆ! ஈசன் திரு வார்த்தை நீர்!
தாவீதின் மைந்தன் கர்த்தன் நீர்.

6. பண்டிகை இன்றே வருவீர்,
திண்ணமாய் நெஞ்சில் தங்குவீர்;
ஓய்ந்த எம் கானம் மீண்டிடும்,
ஓய்வின்றி பூரித்தார்த்திடும்.

Tamil Hymns

1928. மகிழ்ச்சியோடு துதிக்கிறோம் மனம்

மகிழ்ச்சியோடு துதிக்கிறோம்
மனம் மகிழ்ந்து துதிக்கிறோம்
மன்னவனே இயேசு ராஜா
மனதில் பூத்து மணம் வீசும் ரோஜா
இயேசு ராஜா சாரோன் ரோஜா

1. நாற்றமாக இருந்த என்னை
வாசமாக மாற்றினீரே (2)
பாவியாக இருந்த என்னை
பரிசுத்தமாய் மாற்றினீரே (2)
நல்லவரே வல்லவரே (2)
எங்களை வாழவைக்கும் அன்பு தெய்வம் நீரே

2. நெருக்கத்திலே இருந்த என்னை
விசாலத்தில் வைத்தீரே
சேற்றிலிருந்து தூக்கி எடுத்து
கன்மலைமேல் நிறுத்தினீரே
அற்புதரே அதிசயமே
எங்களை வாழவைக்கும்
அன்பு தெய்வம் நீரே

3. அடுப்புக்கரி போலிருந்தேன்
பொன் சிறகாய் மாற்றினீரே
திரு இரத்தத்தாலே கழுவி
என்னை சுத்தமாக ஆக்கினீரே
உன்னதரே உயர்ந்தவரே இருள்
நீக்கும் நல்ல ஒளிவிளக்கே-உள்ளத்தின்

4. தாயைப்போல என்னை அவர்
சோர்த்தணைத்துக் கொண்டாரே
நல்ல தந்தை போல என்னை அவர்
தோளில் தூக்கிச் சுமந்தாரே
அப்பாவல்லோ அப்பாவல்லோ
பிள்ளையல்லோ செல்லப் பிள்ளையல்லோ

Tamil Hymns

1929. மகிழ்ந்து களிகூறுங்கள்

மகிழ்ந்து களிகூறுங்கள் - 2
இயேசு இராஜன் பிறந்ததினால்
மகிழ்ந்து களிகூறுங்கள்

1. விண்ணுலகம் துறந்து மண்ணுலகம் உதித்து
தம்மைத் தாமே வெறுத்து அவர் நம்மை மீட்க வந்தார்

2. பாவமறியா அவரே ஜீவன் தந்திடவே
நித்திய வாழ்வு நமக்களிக்க இயேசு இராஜன் பிறந்தார்

3. வாழ்ந்து காட்டிய வழியை மகிழ்ந்து பின்பற்றியே
வேறுபலரை அவர் மந்தையில் இணைத்து பலன் அடைவோம்

Tamil Hymns

1930. மகிழ்ந்து களிகூரு மகனே(ளே)

மகிழ்ந்து களிகூரு மகனே (ளே)
பயம் வேண்டாம்
மன்னவன் இயேசு உன் (நம்) நடுவில்
பெரியகாரியம் செய்திடுவார்

1. தேவையை நினைத்து கலங்காதே
தெய்வத்தைப் பார்த்து நன்றிசொல்லு
கொஞ்சத்தைக் கண்டு புலம்பாதே
கொடுப்பவர் உண்டு கொண்டாடு

2. அப்பாவின் புகழை நீ பாடு
அதுவே உனக்கு ளுயகநபரயசன
தப்பாமல் மகிழ்ந்து உறவாடு
எப்போதும் வாழ்வாய் சுகத்தோடு

3. மீனின் வயிற்றில் யோனா போல்
கூனி குறுகி போனாயோ
பலியிடு துதியை சப்தத்தோடு
விலகிடும் எல்லாம் வெட்கத்தோடு

4. நிலையான நகரம் நமக்கில்லை
வரப்போகும் நகரையே நாடுகிறோம்
இயேசுவை உயர்த்தும் ஸ்தோத்திரபலி
இப்போதும் எப்போதும் செலுத்திடுவோம்

5. துதிக்கும் போது நம் நடுவில்
உட்கார நாற்காலி போடுகிறோம்
துதிகளை அரியணைக்கிடுவார்
வந்து அமர்ந்து மகிழ்ந்திடுவார்

Tamil Hymns

1931. மகிழ்வோம் மகிழ்வோம்

1. மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அகமகிழ்வோம்
இயேசு இராஜன் நம் சொந்தமாயினார்
இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார்

ஆ ஆனந்தமே பரமானந்தமே
இது மாபெரும் பாக்கியமே - இந்த

2. சின்னஞ்சிறு வயதில்
என்னைக் குறித்து விட்டார்
தூரம் போயினும் கண்டுக்கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக்கொள் என்றுரைத்தார்

3. எந்தச் சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னைப் பிரிக்காது காத்துக்கொள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும் வரைக் காத்துக் கொள்வேன்

4. அவர் வரும் நாளினில்
என்னைக் கரம் அசைத்து
அன்பாய்க் கூப்பிட்டுச் சேர்த்துக்கொள்வார்
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
ஆடிப்பாடியே மகிழ்ந்திடுவேன்

1932. மங்கள கீதங்கள் பாடிடுவோம்

1. மங்கள கீதங்கள் பாடிடுவோம்
மணவாளன் இயேசு மனமகிழ
கறை திரை, நீக்கி திருச்சபையாக்கி
கர்த்தனர் கற்புள்ள கன்னிகையாய்

கோத்திரமே! யூதா கூட்டமே
தோத்திரமே! துதி சாற்றிடுவோம்
புழுதியினின்றெம்மை உயர்த்தினாரே
புகழ்ந்தவர் நாமத்தைப் போற்றிடுவோம்

2. இராஜா குமாரத்தி ஸ்தானத்திலே
இராஜாதி ராஜன் இயேசுவோடே
இன, ஜன நாடு, தகப்பனின் வீடு
இன்பம் மறந்து சென்றிடுவோம்

3. சித்திரை தையலுடை அணிந்தே
சிறந்த உள்ளான மகிமையிலே
பழுதொன்றுமில்லா பரிசுத்தமான
பாவைகளாகப் பறந்திடுவோம்

4. ஆரங்கள் பூட்டி அலங்கரித்தே
அவர் மணவாட்டி ஆக்கினாரே
விருந்தரை நேச கொடி ஒளி வீச
வீற்றிருப்போம் சிங்காசனத்தில்

5. தந்தத்தினால் செய்த மாளிகையில்
தயாபரன் ஏசு புறப்படுவார்
மகிழ் கமழ வீச மகத்துவ நேசர்
மன்னன் மணாளன் வந்திடுவார்

Tamil Hymns

1933. மங்களம் செழிக்க கிருபை அருளும்

மங்களம் செழிக்க கிருபை அருளும்
மங்கள நாதனே…

1. மங்கள நித்திய மங்கள நீ
மங்கள முத்தியும் நாதனும் நீ
எங்கள் புங்கவ நீ எங்கள் துங்கவ நீ
உத்தம சத்திய நித்திய தத்துவ
மெத்த மகத்துவ அத்தனுக்கத்தனாம்
ஆபிராம் தேவ நீ

2. மணமகன் …………………………
மணமகள் ……………………………
மானுவேலர்க்கும் மகானுபவர்க்கும்
பக்தியுடன் புத்தி முத்தியளித்திடும்
நித்தியனே உனைத் துத்தியம்
செய்திடும் சத்திய வேதர்க்கும்

3. சங்கை நித்திய நாதனும் நீ
பங்கமில் சத்திய போதனும் நீ
மங்கா மாட்சிமை நீ தங்கக் காசியும் நீ
இத்தரை இத் திருமணத்தின் இருவர்
ஒத்து நல் இன்பம்
உற்றவர் வாழ நடத்தியருளுமே

1934. மங்களம் மங்களம் மங்களமே

மங்களம் மங்களம் மங்களமே
மங்களம் மங்களம் மங்களமே (2)

1. ஆதாமும் ஏவாளோடும்
ஆபிரகாம் சாராளோடும்
ஆதியில் ஆண்டவன்
அனாதி திட்டம்போல்
ஆண்பெண்ணும் சேர்ந்திடவே
ஆ..ஆ..ஆ..

2. இல்லறம் நிலங்கிடவே
நல்லறம் தொலங்கிடவே
வல்லவன் வான்பதன்
வழிகாட்டும் வார்த்தையில்
பல்லாண்டு வாழ்ந்திடவே
ஆ..ஆ..ஆ..

Tamil Hymns

1935. மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு

மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மங்கள வாழ்வு வாழ்வினில் வாழ்வு
மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மருவிய சோபன சுப வாழ்வு

1. துணை பிரியாது தோகையிம்மாது
துப மண மகளிவர் இதுபோது
மனமுறை யோது வசனம் விடாது
வந்தன ருமதருள் பெறவேது - நல்ல

2. ஜீவதயாகரா சிருஷ்டியதிகாரா
தெய்வீக மாமண வலங்காரா
தேவகுமாரா திருவெல்லையூரா
சேர்ந்தவர்க்கருள் தரா திருப்பீரா- நல்ல

3. குடித்தன வீரம் குணமுள்ள தாரம்
கொடுத்துக் கொண்டாலது சமுசாரம்
அடக்கமாசாரம், அன்பு, உதாரம்
அம்புவி தனில் மனைக்கலங்காரம்

4. மன்றல் செய் தேவி, மணாளனுக்காவி
மந்திரம் அவர் குறையுமே தாவி
மன்றியிப் புவி யமர்ந்த சஞ்சீவி
அவளையில்லாதவ னொரு பாவி

1936. மணவாளன் கர்த்தர் இயேசு

மணவாளன் கர்த்தர் இயேசு வருகின்றாரே
மணவாட்டி சந்திக்க ஆயத்தம்தானா
பிரியமே நீ ரூபவதி
எழுந்து வா உன் நேசரைச் சந்திக்கவே

1. குருவிகள் பாடும் சத்தம் எங்கும் கேட்குதே
காட்டுப்புறா சப்தம் நம் தேசம் நிறையுதே
அத்திமரம் காய்காய்க்க காலம் வந்ததே
திராட்சைக் கோடி பூ பூத்து வாசம் பெருகுதே

2. மாரிக்காலம் சென்றது மழையும் வந்தது
பூமியிலே புஷ்பங்கள் பூத்துக் குலுங்குதே
கன்மலையின் சிகரங்களில் தங்கும் புறாவே
கர்த்தர் இயேசு வரும் நாளை சொல்லிப் பாடிடு

3. சாரோனின் ரோஜாவாம் கர்த்தர் இயேசு
பள்ளத்தாக்கின் லீலியாம் பரமன் இயேசு
தாகம் தீர்க்கும் ஜீவ நதி கர்த்தர் இயேசு
பாவம் போக்கும் பரிகாரி பரமன் இயேசு

Tamil Hymns

1937. மண்ணோரை மீட்டிடவே பாரில்

மண்ணோரை மீட்டிடவே பாரில்
விண் வேந்தன் மைந்தனாகினார் (2)

1. தீர்க்கர் உறைத்த வாக்கின்படியே
மார்க்கம் திறக்க மனிதனானார்
வாக்கு மாறா தேவ மைந்தன்
ஏழைக் கன்னி மடியில் உதித்தார்
மாபுகழ் பாடுவோமே துதி சாற்றுவோமே
தூதரோடு நாமும் பாடுவோம்

2. மண்ணில் கொடிய இருள் நீங்க
மன்னன் ஜீவ ஒளியாய் தோன்றினார்
விண்ணில் மா ஒளிவிளங்க
மன்னர் மூவர் தேடி வந்தார்
மாபுகழ் பாடுவோமே துதி சாற்றுவோமே
தூதரோடு நாமும் பாடுவோம்

1938. மதுரகீதம் பாடிடுவோம்

மதுரகீதம் பாடிடுவோம்
மன்னன் இயேசுவின் நாமத்தைப் போற்றிடுவோம்
ஆனந்தமாக கீதங்கள் பாடி
ஆண்டவர் நாமத்தை உயர்த்திடுவோம்

1. வானங்கள் மேலாக உயர்ந்தவரை
வாழ்த்திப் புகழ்ந்து துதித்திடுவோம்
இயேசுவே வாரும் வாஞ்சை தீரும்
வார்த்தையைப் பேசும் வல்லமை தாரும்

2. தூதர்கள் போற்றும் தேவன் நீரே
தீங்கொன்றும் செய்யா ராஜன் நீரே
தாகம் தீர்க்கும் ஜீவஊற்று
தம்மிடம் வருவோரை தள்ளாத நேசர்

3. மாந்தர்கள் போற்றும் ராஜன் நீரே
மரணத்தை ஜெயமாக வென்றவரே
மன்னிப்பை அளிப்பீர் மாந்தரை மீட்பீர்
மறுரூபமாக்கி மகிமையில் சேர்ப்பீர்

1939. மந்தையில் சேரா ஆடுகளே

மந்தையில் சேரா ஆடுகளே
எங்கிலும் கோடி கோடி உண்டே
சிந்தையில் ஆன்ம பாரம் கொண்டே
தேடுவோம் வாரீர் திருச்சபையே - மந்தையில்

அழைக்கிறார் இயேசு
அவரிடம் பேசு நடத்திடுவார்

1. காடுகளில் பல நாடுகளில்
என் ஜனம் சிதறுண்டு சாகுவதா?
பாடுபட்டேன் அதற்காகவுமே
தேடுவோர் யார் என் ஆடுகளை?

2. சொல்லப்பட்டிராத இடங்கள் உண்டு
என்னை அங்கு சொல்ல இங்கு ஆட்கள் உண்டு
அழைப்புப் பெற்றோர் யாரும் புறப்படுவீர்
இது ஆண்டவர் கட்டளை கீழ்ப்படிவீர்

3. எனக்காய்ப் பேசிட நாவு வேண்டும்
என்னைப்போல் அலைந்திட கால்கள் வேண்டும்
என்னில் அன்புகூர ஆட்கள் வேண்டும்
அதை உன்னிடம் கேட்கிறேன் தரவேண்டும்

Tamil Hymns

1940. மரணமே உன் கூர் எங்கே

மரணமே உன் கூர்; எங்கே ?
பாதாளமே உன் ஜெயம் எங்கே?
மரணத்தை ஜெயித்த மன்னவன் இயேசு
எனக்குள் வந்துவிட்டர்
சாவை அழித்து அழியா வாழ்வை
எனக்குத் தந்துவிட்டார்

1. சாவுக்கு அதிபதி சாத்தானை-இயேசு
சாவாலே வென்றுவிட்டார்
மரண பயத்தினால் வாடும் மனிதரை
விடுவித்து மீட்டுக் கொண்டார்

பயமில்லையே மரணபயமில்லையே
ஜெயம் எடுத்தார் இயேசு ஜெயம் எடுத்தார்

2. அழிவுக்குரிய இவ்வுடல் ஒரு நாள்
அழியாமை அணிந்து கொள்ளும்
சாவுக்குரிய இவ்வுடல் ஒரு நாள்
சாவாமை அணிந்து கொள்ளும்

3. இறந்தோர் மேலும் வாழ்வோர் மேலும்
ஆளுகை செய்திடவே
இயேசு மரித்து உயிர்த்து எழுந்தார்
இன்றைக்கும் ஜீவிக்கிறார்

4. கட்டளை பிறக்க தூதன் குரல் ஒலிக்க
கர்த்தர் இயேசு வந்திடுவார்
கிறிஸ்துவுக்கள் வாழ்வோர் (மரித்தோர்)
எதிர் கொண்டு சென்றிடுவோம்

5. பூமிக்குரிய கூடாரமான இவ்வீடு அழிந்தாலும்
பரமன் கட்டிய நிலையான வீடு
பரலோகத்தில் உண்டு

Tamil Hymns

1941. மரித்தாரே என் ஆண்டவர்

1. மரித்தாரே என் ஆண்டவர்
சிலுவையில்தானே
மரித்தாரே என் ரட்சகர்
ஆ எனக்காகவே

2. சிலுவைமீது ஜீவனை
என் மீட்பர் விட்டாரே
எனக்குத்தான் இப்பலியை
செலுத்தி மாண்டாரே

3. நான் எண்ணி எண்ணி வருகில்
என் நேசம் ஊக்கமாய்
கொழுந்து விட்டேன் நெஞ்சத்தில்
எரியும் பக்தியாய்

4. என் மீட்பர் இயேசு கிறிஸ்துதாம்
இவ்வருள் செய்தாரே
நான் என்ன பதில் செய்யலாம்?
ஈடொன்றுமில்லையே

5. என் தேகம், செல்வம், சுகமும்
என் ஜீவன் யாவுமே
சுகந்த பலியாகவும்
படைப்பேன் இயேசுவே

1942. மரித்த இயேசு உயிர்த்து விட்டார்

மரித்த இயேசு உயிர்த்து விட்டார் அல்லேலூயா
மன்னன் இயேசு ஜீவிக்கிறார் அல்லேலூயா

அல்லேலூயா ஜீவிக்கிறார்
அல்லேலூயா அல்லேலூயா ஜீவிக்கிறார் - 2

1. மரணம் அவரைத் தடுத்து நிறுத்த முடியவில்லையே
கல்லறையோ கட்டிக்காக்க முடியவில்லையே
யுதசிங்கம் கிறிஸ்துராஜா வெற்றி பெற்றாரே
சோர்ந்து போன மகனே நீ துள்ளிப் பாடிடு

2. கண்ணீரோடு மரியாள் போல அவரைத் தேடுவோம்
கர்த்தர் இயேசு நமக்கும் இன்று காட்சி தருவார்
கனிவோடு பெயர்சொல்லி அழைத்திடுவார்
கலக்கமின்றி காலமெல்லாம் சாட்சி பகர்வோம்

3. எம்மாவூர் சீடரோடு நடந்து சென்றார்
இறைவார்த்தை போதித்து ஆறுதல் தந்தார்
அப்பம்பிட்டு கண்களையே திறந்து வைத்தார்
அந்த இயேசு நம்மோடு நடக்கின்றார்

4. அஞ்சாதே முதலும் முடிவும் இயேசுதானே
இறந்தாலும் எந்நாளும் வாழ்கின்றவர்
நாவினாலே அறிக்கை செய்து மீட்படைவோம்
நாள்தோறும் புதுபெலானால் நிரம்பிடுவோம்

1943. மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்

மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்
வானெக்காளத் தொனி முழங்க

எரி புகை மேக ரத மேறி
ஏசு மகா ராஜன் வருங்கால்

1. தூதர் மின் னாற்றிசை துலங்க,
ஜோதி வான் பறை இடி முழங்க
பாதகர் நெஞ்சம் நடுநடுங்க
பரிசுத் தோர் திரள் மனதிலங்க

2. வானம் புவியும் வையகமும்
மட மட வென்று நிலை பெயர
ஆன பொருளெல்லாம் அகன் றோட
அவரவர் தம் தம் வரிசையிலே

3. அழிவுள் ளோராய் விதைக்கப்பட்டோர்
அழியா மேனியை அணிந்திடுவார்
எளிய ரூபமாய் விதைக்கப்பட்டோர்
என்றும் வாழும் ஜோதிகளாய்

1944. மரிப்பாயே ஒரு நாள்

மரிப்பாயே ஒரு நாள்..... மனிதா
மரணம் வரும் ஒருநாள்
மனதில் நீ செய்த கற்ப்பனை எல்லாம்
அழிந்தே போய்விடுமே - (2)

1. ஒருநாள் தேவன் உன்னக்காய் மரணமும்
நியாயத் தீர்ப்பும் வைத்தாரே (2)
அவர் முன்னால் நீ நிற்கும் போது யாவுக்கும்
பதில் சொல்ல வேண்டும் - (2) -> மரிப்பாயே

2. உயிர்த்தெழுதலும் ஜீவனுமான
இயேசு வில் விசுவாசித்து (2)
நித்திய ஜீவனை உம் சொந்தமாக்கிட
உன்னை நீ சமர்ப்பிப்பாயா

Tamil Hymns

1945. மலரே மலரே

மலரே மலரே வெள்ளி மலரே பொன் மந்தாரப்பொழுது - இம்
மண்ணில் பூத்த மலரே - உயர் விண்ணின் வேந்தர் வரவு

1. வானிலே மந்தாப்பு விண் தூதர் மனதில் சிரிப்பு
உலகில் அமைதி வாழும் மகிழ்ச்சி நாளும் நிலவும்

நீர் வாழ்க நிதம் வாழ்க வேந்தே - 2 நீடூழி காலம் வாழ்க

2. வாழ்விலே வந்தாலும் என்னைமாற்றி அமைக்க வாருமே
உலகம் உம்மைக் காணும் உவகை கொள்ளும் நாளும்

நீர் வாழ்க நிதம் வாழ்க வேந்தே - 2 நீடூழி காலம் வாழ்க

1946. மலைகளெல்லாம் வழிகளாக்குவார்

மலைகளெல்லாம் வழிகளாக்குவார்
நம் பாதையெல்லாம் செவ்வையாக்குவார்
கலங்காதே திகையாதே
நிச்சயமாகவே முடிவுண்டு

ஆபிரகாமின் தேவன் - அவர்
ஈசாக்கின் தேவன்
யாக்கோபின் தேவன் - அவர்
நம்முடைய தேவன்

1. பெரிய பர்வதமே எம்மாத்திரம்
செருபாபேல் முன்னே சமமாகுவாய்
முத்திரை மோதிரமாய் தெரிந்து கொண்டாரே
இயேசுவின் நாமத்தாலே ஜெயம் பெறுவோம்

2. பூமி அனைத்திற்கும் ராஜாதி ராஜன்
உன்னதமானவரே துதியாலே உயர்த்திடுவோம்
வெண்கல கதவெல்லாம் உடைத்திடுவாரே (2)
இரும்பு தாழ்பாளை முறித்திடுவாரே

3. தடைகளை உடைப்பவர் நம்முன்னே போவார்
ஓசன்னா ஜெயமென்று ஆர்ப்பரிப்போமே
வில்லை உடைத்திடுவார் ஈட்டியை முறித்திடுவார் (2)
இரதங்களை அக்கினியால் சுட்டெரிப்பாரே

1947. மலைமா நதியோ

மலைமா நதியோ மிகு ஆழ் கடலோ
மருள் சூழும் கானக வனமோ - எங்கும்
மீட்பர் சிலுவை சுமப்பேனே

1. பள்ளம் மேடு தடை தாண்டியே
பசாசின் கண்ணிக்கு நீங்கியே
உள்ளார்வமுடன் விண் பார்வையுடன் - நான்
மெள்ள மெள்ள நடந்தே எனின்
மீட்பர் சிலுவை சுமப்பேனே --- மலைமா

2. இன்னல் துயர் பிணி வாதையில்
ஈனரெனைத் தாக்கும் வேளையில்
துன்பம் களைந்தே துயரம் ஒழிந்தே - நான்
தூயன் பாதையில் ஊர்ந்தே அவர்
தூயச் சிலுவை சுமப்பேனே --- மலைமா

3. பூலோக மேன்மை நாடிடேன்
புவிமேவும் செல்வம் தேடிடேன்
சீலன் சிலுவை சிறியேன் மேன்மை - என்
ஜீவன் வழி மறை இயேசுவே - அவர்
ஜீவ சிலுவை சுமப்பேனே --- மலைமா

Tamil Hymns

1948. மலைமேல் ஏறி வந்தேன் தகப்பனே

மலைமேல் ஏறி வந்தேன் தகப்பனே
மறுரூபம் ஆகணுமே தகப்பனே - ஜெ
உலகை மறக்கணுமே தகப்பனே
உம்குரல் கேட்கணும் நாள்முழுதும்

1. காலையும் மாலையும் மதிய வேளையும்
கைகள் உமை நோக்கி உயரணுமே
அழியும் உலகத்திற்காய் கதறணுமே
அறுத்துக் களஞ்சியத்தில் சேர்க்கணுமே

2. உமது வார்த்தைகள் உணவாண் மாறணும்
ஒவ்வொரு நாளும் தியானிக்கணும்
வேதத்தின் வெளிச்சத்திலே நடக்கணும்
வெற்றிக் கீதங்கள் நான் பாடணும்

3. ஞானத்தைப் போதித்து அறிவை உணர்த்தி
தீர்க்கதரிசனம் சொல்லணும்
ஆவிகள் பகுத்திறயும் வரம் வேண்டும்
வியாதிகள் நீக்கும் ஆற்றல் வேண்டும்

4. ஆவியில் நிரம்பணும் அயல்மொழி பேசணும்
அதிசயம் காணணுமே தகப்பனே
ஊழியம் செய்யணுமே தகப்பனே
ஓடி ஓடி உழைக்கணுமே

Tamil Hymns

1949. மலைமேல் ஏறுவோம் மரங்களை

மலைமேல் ஏறுவோம் மரங்களை வெட்டுவோம்
ஆலயம் கட்டுவோம் அவர்பணி செய்திடுவோம்
நாடெங்கும் சென்றிடுவோம்
நற்செய்தி சொல்லிடுவோம்
சபைகளை நிரப்பிடுவோம்
சாட்சியாய் வாழ்ந்திடுவோம்

1. தேவனின் வீடு பாழாய்க்கிடக்குதே
நாமோ நமக்காய் வாழ்வது நியாயமா

2. திரளாய் விதைத்தும் கொஞ்சமாய்
அறுப்பதேன் வருகின்ற பணமெல்லாம்
வீணாய்ப் போவதேன்

3. மனந்தளராமல் பணியைத் தொடருங்கள்
படைத்தவர் நம்மோடு பயமே வேண்டாம்;

4. தேவன் தந்த ஆரம்ப ஊழியத்தை
அற்பமாய் எண்ணாதே அசட்டைபண்ணாதே

5. சாப்பிட்டும் திருப்தியில்லை
குடித்தும் நிறைவில்லை
ஆடை அணிகின்றோம்
குளிரோ போகவில்லை

Tamil Hymns

1950. மறந்திடாதே நீ

மறந்திடாதே நீ, மன்னவன் இயேசுவின்
மாண்பினைக் கூற, மறந்திடாதே நீ

1. பாலைவனமதில் வாழுகின்றார் - சிலர்
பட்டண வீதியில் அலைகின்றார்
பார் புகழும்படி நடக்கின்றார் - சிலர்
பகலிர வெதிலும் உழைக்கின்றார்

2. வான மெட்டும் வண்ண மாளிகையில் - சிலர்
வானரம் வாழ்ந்திடும் கானகத்தில்
வற்றா நதிகளில் மீன் பிடிப்பார் - சிலர்
வயல் வெளிகளில் பயிரிடுகின்றார்

3. பற்பல தேசத்தில் வாழுபவர் - பலர்
அற்புத அன்பினை அறியாரே
அத்தனை பேருமே அறிந்திடவே - தினம்
அறிவிக்க இயேசுன்னை அழைக்கின்றார்

Tamil Hymns

1951. மறவாதே மனமே தேவ சுதனை

மறவாதே மனமே,- தேவ சுதனை
மறவாதே மனமே,- ஒருபொழுதும்

1. திறமதாக உனைத் தேடித் புவியில் வந்து ,
அறமதாகச் செய்த ஆதி சுதன் தயவை-மற

2. விண்ணின் வாழ்வும் அதன் மேன்மை அனைத்தும் விட்டு
மண்ணில் ஏழையாக வந்த மானுவேலை- மற

3. கெட்ட மாந்தர் பின்னும் கிருபை பெற்று வாழ ,
மட்டில்லாத பரன் மானிடனான தயவை -மற

4. நீண்ட தீமை யாவும் நீக்கிச் சுகம் அள்ளிதிவ்
வாண்டு முழுதும் காத்த ஆண்டவனை எந்நாளும் -மற

5. நிததம் நித்தம் செய்த நிந்தனை பாவங்கள்
அத்தனையும் பொறுத்த அருமை ரட்சகனை -மற

6. வருடம் வருடம் தோறும் மாறப் தமதிரக்கம்
பெருகப் பெருகச் செய்யும் பிதாவின் அனுக்ரகத்தை- மற

Tamil Hymns

1952. மறவார் இயேசு மறவார்

மறவார் இயேசு மறவார்
உன்னை மறவார் ஒரு இமைப் பொழுதிலும்
மறவார் இயேசு மறவார்
உன்னை உருவாக்கின இயேசு மறவார்

1. அழைத்தவர் உன்னை மறவார்
அபிஷேகம் செய்தவர் மறவார்
மனிதனின் அன்பு நிலைமாறினாலும்
மகிமையின் தேவன் உன்னை மறவார்

2. தரிசனம் தந்தவர் மறவார்
தாங்கி நடத்திட மறவார்
எப்பக்கம் நெருக்கங்கள் உனை சூழ்ந்த போதும்
எலியாவின் தேவன் உன்னை மறவார்

3. வாக்குத்தத்தம் தந்தவர் மறவார்
உனக்கு வழிகாட்டி நடத்திட மறவார்
வானமும் பூமியும் நிலைமாறினாலும்
வார்த்தையை நிறைவேற்ற மறவார்

Tamil Hymns

1953. மனதுருகும் தெய்வமே இயேசையா

மனதுருகும் தெய்வமே இயேசையா
மனதாரத் துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்
நீர் நல்லவர் சர்வ வல்லவர்
உம் இரக்கத்திற்கு முடிவே இல்லை
உம் அன்பிற்கு அளவே இல்லை
அவை காலைதோறும் புதிதாயிருக்கும்

1. மெய்யாக எங்களது
பாடுகளை ஏற்றுக் கொண்டு
துக்கங்களை சுமந்து கொண்டீர் - ஐயா

2. எங்களுக்கு சமாதானம்
உண்டுபண்ணும் தண்டனையோ
உம்மேலே விழுந்ததையா - ஐயா

3. சாபமான முள்முடியை
தலைமேலே சுமந்து கொண்டு
சிலுவையிலே வெற்றி சிறந்தீர் - ஐயா

4. எங்களது மீறுதலால்
காயப்பட்டீர் நொறுக்கப்பட்டீர்
தழும்புகளால் சுகமானோம் - உந்தன்

5. தேடிவந்த மனிதர்களின்
தேவைகளை அறிந்தவராய்
தினம் தினம் அற்புதம் செய்தீர் - ஐயா

Tamil Hymns

1954. மனமிரங்கும் தெய்வம் இயேசு

மனமிரங்கும் தெய்வம் இயேசு
சுகம் தந்து நடத்திச் செல்வார்

யேகோவா ரஃப்பா இன்றும் வாழ்கின்றார்
சுகம் தரும் தெய்வம் இயேசு
சுகம் இன்று தருகிறார்

1. பேதுரு வீட்டுக்குள் நுழைந்தார்
மாமி கரத்தைபிடித்துதூக்கினார்
காய்ச்சல் உடனே அன்று நீங்கிற்று
கர்த்தர் தொண்டுசெய்து மகிழ்ந்தாள்

2. குஷ்டரோகியை கண்டார்
இயேசு கரங்கள் நீட்டித் தொட்டார்
சித்தமுண்டு சுத்தமாகு
என்று சொல்லி சுகத்தைத் தந்தார்

3. நிமிர முடியாத கூனி
அன்று இயேசு அவளைக் கண்டார்
கைகள் அவள்மேலே வைத்தார்
உடன் நிமிர்ந்து துதிக்கச் செய்தார்

4. பிறவிக்குருடன் பர்திமேயு அன்று
இயேசுவே இரங்கும் என்றான்
பார்வையடைந்து மகிழ்ந்தான்
உடன் இயேசு பின்னே நடந்தான்

Tamil Hymns

1955. மனமே மகிழ்ந்திடு தினமே ஆர்ப்பரி

மனமே மகிழ்ந்திடு தினமே ஆர்ப்பரி
பரனை நம்பிடு அனுதினமும் பாடிடு

1. மா தேவனின் மகிமை வார்த்தையால்
நிறைந்து வளர்ந்துமே - தொடர்ந்து
என்றுமாய் ஆர்ப்பரிப்பாய்

2. என்றென்றுமாய் பெருகி உயர்ந்திட
பரனின் நீதியால் - மகிழ்ந்து
தினமே ஆர்ப்பரிப்பாய்

3. ஆ அன்பதின் அகலம் ஆழமும்
உயரம் அறிந்துமே - அவரின்
செயலில் ஆர்ப்பரிப்பாய்

4. உன் தேவனே உனக்காய் யாவையும்
சிறப்பாய் செய்கின்றார் - அவரைத்
துதித்து ஆர்ப்பரிப்பாய்

1956. மனம் சுத்தி சுத்தி வருதே தானா

மனம் சுத்தி சுத்தி வருதே தானா
இயேசு ராஜாவ - 3
நான் உம்மை விட்டு தூரம் போனா
மனம் நல்லால்லே - 3 (என்)
மனம் சுத்தி சுத்தி சுத்தி...
சுத்தி சுத்தி சுத்தி... மனம் சுத்தி சுத்தி...

1. இயேசு தானே ஜீவன் பெலனும்
யாருக்கு நான் இனி
அஞ்சி அஞ்சி வாழணும் - 2

2. உந்தன் வேதம் உடலுக்கு ஜீவன்
அதுவே எனக்கு
அனுதின கீதம் - 2

3. அற்புதர் இயேசு எனக்குள் இருக்க
அனுதின தேவையின்
பயமெனக்கில்ல - 2

4. தேனை போல பாவம் வந்தாலும்
இயேசு திருப்தியில் எட்டி எட்டி உதைப்பேன்

Tamil Hymns

1957. மனம் மகிழ்ந்து தினம் புகழ்ந்து

1. மனம் மகிழ்ந்து தினம் புகழ்ந்து
ஆவியில் ஆர்ப்பரிப்போம்
ஆத்துமா நேசர் அன்பர் இயேசு
வேகம் வருகின்றாரே

ஆயத்தமாகிடுவோம் நாமே
அயராது உழைத்திடுவோம்
அல்லேலூயா ஆனந்தமே
அவர் துதி பாடிடுவோம்

2. விசுவாசம் அன்பு நம்பிக்கை கொண்டு
உலகினை ஜெயித்திடுவோம்
மகிமையை நோக்கி உலகினை மறந்து
ஓட்டத்தில் ஜெயம் பெறுவோம்

3. வசனங்கள் நிறைவேறும் கடைசி காலம்
கருத்தினில் கொண்டிடுவோம்
ஜீவ சுடரொளி பட்டயம் ஏந்தி
சாத்தானை ஜெயித்திடுவோம்

4. ஆவியின் வரங்கள் யாவுமே பெற்று
ஜோதியாய் விளங்கிடுவோம்
தேவ குமாரன் இராஜாதி இராஜா
வேகம் வருகின்றாரே

Tamil Hymns

1958. மன்னவா மீட்க வந்த ஜோதியே

மன்னவா மீட்க வந்த ஜோதியே
எனக்காய் மரித்த நாயகா
இயேசுவே எந்தன் ஆத்ம நேசரே
என் உள்ளம் தங்கிடும் ஜீவனே
மன்னவா மீட்க வந்த ஜோதியே

1. புல்லுள்ள இடங்களில் என்னையும் நடத்தி
அமர்ந்த தண்ணீரண்டை கொண்டு செல்லுமே
செல்லும் தேவா செல்லும் தேவா

2. மரண இருளின் பள்ளத்தாக்கிலே
நடந்தாலுமே நான் பயப்படேனே
தேற்றும் தேவா என்னை தேற்றும் தேவா

3. உந்தன் வீட்டில் நான் களிப்புடனே
நித்திய காலம் எல்லாம் ஜீவித்திருக்க
சேரும் தேவா சேரும் தேவா

Tamil Hymns

1959. மன்னிப்பு அருளும் மாபெரும் அரசே

1. மன்னிப்பு அருளும் மாபெரும் அரசே
உனதுள்ளம் சமுத்திரமோ என்னைத் தண்டிக்க
மறுத்த தரணியின் அரசே
உனதுள்ளம் கருணை ஊற்றோ

இது எங்கும் உண்டோ -2 எந்தன்
சிந்தைக்கு மேலான விந்தையல்லோ
என்னைத் தண்டிக்க மறுத்த

2. கைகளும் கால்களும் செய்தவற்றை
அந்த ஆணிகள் துளைத்ததால் நீக்கினீரோ
பல வகைகளில் சிக்கிய பாவியென்னை
இந்த வாதைகள் ஏற்று நீர் மீட்டதேனோ

3. பவுல் போன்ற தூயவர் செய்த வேலை
இந்த பாவியின் பொறுப்பினில் தந்ததேனோ
உந்தன் பரலோக தூதரும் விரும்பும் வேலை
இந்த தரணியில் எம்மிடம் வைத்ததேனோ

Tamil Hymns

1960. மன்னுயிர்க்காகத் தன்னுயிர் விடுக்க

மன்னுயிர்க்காகத் தன்னுயிர் விடுக்க
வல்ல பராபரன் வந்தார் வந்தார்

1. இந்நிலம் புரக்க உன்னதத் திருந்தே
ஏகபராபரன் வந்தார் வந்தார்

2. வானவர் பணியுஞ் சேனையின் கருத்தர்
மகிமைப் பராபரன் வந்தார் வந்தார்

3. நித்திய பிதாவின் நேய குமாரன்
நேமி அனைத்தும் வாழ வந்தார் வந்தார்

4. மெய்யான தேவன் மெய்யான மனுடன்
மேசியா ஏசையா வந்தார் வந்தார்

5. தீவினை நாசர் பாவிகள் நேசர்
தேவ கிறிஸ்தையா வந்தார் வந்தார்

6. ஜெய அனுகூலர் திவ்விய பாலர்
திரு மனுவேலனே வந்தார் வந்தார்

1961. மாசில்லாத் தேவ புத்திரன்

மாசில்லாத் தேவ புத்திரன்
மானிடனானார், ஜெய ஜெய
ஜெய மாசில்லாத் தேவ புத்திரன்
மானிடனானாரே - ஜெய, ஜெய

1. ஆசீர்வாதமே கன தேசார் நீதமே
ஒளிர் காசினி மீததி நேசப் பிரகாச
விண் வாச கிருபாசன

2. சத்திய வாசகர் சதா நித்திய தேசிகர்
வளர் பெத்லகேம் ஊர்தனிலே கரிசித்துக்
கன்னியாஸ்திரி வித்தினில்

3. அந்தரம் பூமியும் அதி சுந்தர நேமியும்
தினம் ஐந்தொரு நாளினிலே திரு
முந்தின மூன்றிலொன்றாகிய - ஜெய, ஜெய

Tamil Hymns

1962. மாட்சிமையே தொழுகிறோம்

மாட்சிமையே தொழுகிறோம்
மங்காத ஒளி விளக்கே - எங்கள்

எங்கள் மாட்சிமையே தொழுகிறோம்
கனத்திற்கு உரியவரே
உம்மையே ஆராதிப்பேன்

நல்லவரே, வல்லவரே
பரிசுத்தரே, படைத்தவரே
உயர்ந்தவரே, உன்னதரே
பரிகாரியே, பரிசுத்தரே
உந்தன் நாமத்திற்கே
மகிமை செலுத்துகிறோம்
மகிமையே மகிமையே
மாட்சிமை உமக்குத்தானே
துதியும் கனமும்
வல்லமை என்றென்றுமே

Tamil Hymns

1963. மாட்சி போரை போரின் ஓய்வை

1. மாட்சி போரை போரின் ஓய்வை
பாடு என்தன் உள்ளமே;
மாட்சி வெற்றி சின்னம் போற்றி
பாடு வெற்றி கீதமே;
மாந்தர் மீட்பர் கிறிஸ்து நாதர்
மாண்டு பெற்றார் வெற்றியே.
4
2. காலம் நிறைவேற, வந்தார்
தந்தை வார்த்தை மைந்தனாய்;
ஞாலம் வந்தார், வானம் நீத்தே
கன்னித் தாயார் மைந்தனாய்;
வாழ்ந்தார் தெய்வ மாந்தனாக
இருள் நீக்கும் ஜோதியாய்.

3. மூன்று பத்து ஆண்டின் ஈற்றில்
விட்டார் வீடு சேவைக்காய்!
தந்தை சித்தம் நிறைவேற்றி
வாழ்ந்தார்; தந்தை சித்தமாய்
சிலுவையில் தம்மை ஈந்தார்
தூய ஏக பலியாய்.

4. வெற்றி சின்ன சிலுவையே,
இலை மலர் கனியில்
ஒப்புயர்வு அற்றாய் நீயே!
மேலாம் தரு பாரினில்!
மீட்பின் சின்னம் ஆனாய்; மீட்பர்
தொங்கி மாண்டனர் உன்னில்.

5. பிதா சுதன் ஆவியான
தூயராம் திரியேகரே,
இன்றும் என்றும் சதா காலம்
மாட்சி ஸ்தோத்ரம் ஏற்பீரே;
மாட்சி ஸ்தோத்ரம் நித்திய காலம்
உன்னதத்தில் உமக்கே.

1964. மாட்சிமை நிறைந்தவரே

மாட்சிமை நிறைந்தவரே எல்லா துதிக்கும் பாத்திரரே
மாறிடாத என் இயேசுவே துதிக்குப் பாத்திரரே

உம்மை ஆராதிக்கின்றோம் உம்மை ஆராதிக்கின்றோம்
இரட்சகா தேவா உம்மை ஆராதிக்கின்றோம்

1. ஊழிய பாதையிலே எனக்குதவின மாதயவே
மாறிடாத என் இயேசுவே துதிக்குப் பாத்திரரே --- உம்மை

2. என் பெலவீன நேரங்களில் எனக்குயதவிய மா தயவே
மாறிடாத என் நேசரே துதிக்குப் பாத்திரரே --- உம்மை

1965. மாட்டுத் தொழுவில் கந்தை பொதிந்து

மாட்டுத் தொழுவில் கந்தை பொதிந்து
தேவ மைந்தன் உறங்குகின்றார்
ஆரிரோ பாடியே தூதர்கள் யாவரும்
மகிழ்வாய் சுதனை பணிந்தனரே

1. சத்திரம் தேடியே தந்தையும் தாயுமாய்
காடுமேடாய் ஓடி அலைந்தன்ரே
பிஞ்சு உருவம் மஞ்சம் கொள்ளவே
கொஞ்சம் இடமும் தருவாரில்லை

2. ஏழ்மையின் கோலமாய் தாழ்மையின் உருவாய்
மரியின் மகனாய் பிறந்தனரே
ஏசு என்னும் ஓர் நாமத்திற்கிணையாய்
வேறோரு நாமம் இவ்வுலகில் இல்லை

3. பாவியாய் எம்பாவம் போக்கவே பாரினில்
பாலகன் இப்புவி வந்தனரே
மரித்து உயிர்த்து ஜெயித்த இரட்சகர்
ஏசுவே உம்பாதம் தஞ்சமென்போம்.

Tamil Hymns

1966. மா தயவே தேவ தயவே

மா தயவே தேவ தயவே
மானிலத்தில் தேவை எனக்கே

1. வாக்களித்த வானபரன்
வாக்கு மாறார் நம்பிடுவேன்
நம்பினோரைக் கைவிடாரே
நர்பாதமே சரணடைந்தேன்

2. ஏசுவின் பொன் நாமத்தினால்
ஏதென்கிலும் கேட்டிடினும்
தம் சித்தம் போல் தந்திடுவார்
தந்தையிவர் எந்தனுக்கே

3. சத்துருக்கள் தூஷித்தாலும்
சக்தியீந்தென பட்சம் தந்திடுவார்
ஆதரவே அளித்திடுவார்
ஆறுதலாய் வாழ்ந்திடுவேன்

4. என்னில் ஏதும் பெலனில்லையே
எந்தனுக்காய் இராப்பகலாய்
நீதியுள்ள நேசர் இயேசு
நித்தியமாய் பரிந்துரைப்பார்

5. தாய் வயிற்றில் இருந்த முதல்
தமக்கே என்னை தெரிந்தெடுத்தார்
என் அழைப்பும் நிறைவேற
எப்படியும் கிரியை செய்வார்

6. தம் வருகை தரணியிலே
தாமதமாய் நடந்தினும்
சார்ந்தவரை அனுதினமும்
சோர்ந்திடாமல் ஜெபித்திடுவேன்

Tamil Hymns

1967. மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம்

1. மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம் செய்வோம்
வல்லவர் அன்பர் பாடிப் போற்றுவோம்
நம் கேடகம் காவல் அனாதியானோர்
மகிமையில் வீற்றுத் துதி அணிந்தோர்

2. சர்வ வல்லமை தயை போற்றுவோம்
ஒளி தரித்தோர் வானம் சூழ்ந்தோராம்
குமுறும் மின்மேகம் கோபரதமே
கொடும் கொண்டல் காற்றிருள் சூழ்பாதையே

3. மா நீச மண்ணோர் நாணல் போன்றோர் நாம்
என்றும் கைவிடீர் உம்மை நம்புவோம்
ஆ, உருக்க தயை! முற்றும் நிற்குமே
மீட்பர் நண்பர் காவலர் சிருஷ்டிகரே

4. ஆ, சர்வ சக்தி! சொல்லொன்னா அன்பே!
மகிழ்வாய் விண்ணில் தூதர் போற்றவே
போற்றிடுவோம் தாழ்ந்தோர் நாம் அற்பர் என்றும்
மெய் வணக்கமாய் துதி பாடலோடும்

1968. மா தூய ஆவி

மா தூய ஆவி! இறங்கும்
விண் தீபம் நெஞ்சில் ஏற்றிடும்
ஞானாபிஷேக தைலம் நீர்
நல் வரம் ஏழும் ஈகிறீர். ஆமேன்.

1969. மாமலை மீதினில் போதகம் கூறும்

மாமலை மீதினில் போதகம் கூறும்
மாமேதை இயேசுவின் கனிமொழி கேட்பாய்
சிந்திய முத்துக்கள் சிந்தனை செய்வாய்
புண்ணியர் போதனை உள்ளத்தில் ஏற்பாய்

1. ஆவியில் எளியவன் பாக்கியவான்
ஆண்டவர் ராஜ்ஜியம் அடைந்திடுவார்
துயரப்படுவோர் பாக்கியவான்
தேவனின் ஆறுதல் அடைத்திடுவார்

2. பொறுத்திடும் மாந்தர்கள் பாக்கியவான்
பூமியை என்றும் சுதந்தரிப்பார்
நீதியை காப்பவர் பாக்கியவான்
கர்த்தரின் திருப்தியை அடைந்திடுவார்

3. கர்த்தரின் நிந்தனை ஏற்பவர்கள்
கர்த்தரின் மகிழ்ச்சி அடைந்திடுவார்
பலன்கள் மிகுதி பெற்றிடுவான்
பரமனின் ராஜ்ஜியம் அடைந்திடுவார்

Tamil Hymns

1970. மாயையான இந்த உலகினிலே

மாயையான இந்த உலகினிலே
பாவியான என்னைத் தேடி வந்தீரே
நீர் இல்லா வாழ்க்கை
இனி வாழ்க்கை இல்லை
நிலையில்லாத இந்த உலகினிலே
கால்களை உறுதியாக்கினீரே
உம்மை விட்டு நானும் எங்கே செல்வேன்
எங்கே செல்வேன்

தேனிலும் இனிமையானவரே
பாடலில் ராகமுமானவரே
உம் நாமம் உயர வேண்டும்
பூவிலே நாங்கள் பாடவே

எளிமையான எந்தன் வாழ்வினிலே
மகிமையைத் தந்த மகத்துவரே
நீர் இல்லா வாழ்க்கை
இனி வாழ்க்கை இல்லை
தூய்மையாய் என்னை மாற்றுகிறீர்
செம்மையான வழியில் நடத்துகிறீர்
உம்மைவிட்டு நானும் எங்கே
செல்வேன் செல்வேன்
நீர் இல்லா வாழ்க்கை
வாழ்க்கையே இல்லை
அங்கும் இங்கும் அலைந்தபோதும்
நிம்மதி இல்ல
உம்மையே நானும் பற்றிடுவேனே
இன்பத்திலும் துன்பத்திலும்
நம்பிடுவேனே

1971. மாரநாதா இயேசு நாதா

மாரநாதா இயேசு நாதா
சீக்கிரம் வாரும் ஐயா

வாரும் நாதா இயேசு நாதா (2)

1. மன்னவன் உம்மைக் கண்டு
மறுரூபம் ஆகணுமே - விண்ணவர்
கூட்டத்தோடு எந்நாளும் பாடணுமே

2. குடிவெறி களியாட்டம் அடியோடு
அகற்றிவிட்டேன் - சண்டைகள்
பொறாமைகள் என்றோ வெறுத்து விட்டேன்

3. பெருமை பாராட்டுகள் ஒருநாளும்
வேண்டாம் ஐயா - சிற்றின்பம்
பணமயக்கம் சிறிதளவும் வேண்டாம் ஐயா

4. நியமித்த ஓட்டத்திலே நித்தம்
நான் ஓடிடுவேன் நித்திய கிரீடம்
தனை நிச்சயமாய் பெற்றுக்கொள்வேன்

5. ஆவியில் நிரம்பிடுவேன்
அயராது ஜெபித்திடுவேன் - அப்பாவின்
சுவிசேஷம் எப்போதும் முழங்கிடுவேன்

6. உம் முகம் பார்க்கணுமே
உம் அருகில் இருக்கணுமே உம்பாதம்
அமரணுமே உம்குரல் கேட்கணுமே

Tamil Hymns

1972. மாலையில் துதிப்போம் மகிழ்வுடனே

மாலையில் துதிப்போம்
மகிழ்வுடனே மனக் களிப்புடனே
மாண்புகழ் ஏசுவை வானவரோடே

1. காலை மாலை உறங்காரே நம்
காவலனாய் இருப்பாரே
ஆவலுடன் துதி சாற்றிடுவீரே

2. கிருபையின் வாக்கு தந்தாரே - அதை
அருமையாய் நிறைவேற்றினாரே
உரிமையுடன் புகழ் சாற்றிடுவீரே

3. சோதனை வந்திட்ட நேரம் அவர்
போதனை செய்தார் அந்நேரம்
சாதனையாகவே நிற்கச் செய்தாரே

4. அழைத்த மெய் அழைப்பிலே தானே - நாம்
உழைத்திட பெலன் தந்ததேனே
பிழைத்திட ஜீவன் கிறிஸ்துவில் தானே

5. வயல் நிலம் ஏராளம் காட்டி - அதின்
அறுவடை தாராளம் ஏற்றி
அறிக்கட்டோடே வர கிருபை செய்தாரே

6. ஆணி துளைத்திடதானே தன்னை
தியாகமாய் கொடுத்திட்ட தேனே
ஏகமாய் ஏசுவின் நாமத்தைத்தானே

7. ஆயிரம் நாவிருந்தாலும் அவர்
அன்பைத் துதிக்கப்போதாது
பதினாயிரம் பேரில் சிறந்தவரை நாம்

8. உன்னதருக்கு மகிமை இந்தப்
பூமியிலே சமாதானம்
மனுஷரில் பிரியம் உண்டாகச் செய்தாரே

Tamil Hymns

1973. மாறாத நல் விசுவாசம் பரன்

மாறாத நல் விசுவாசம் பரன்
நம் இயேசு தேவனில் வைத்திடுவோம்
அகன்றிடும் மலைகளும்
அதிசயம் வெளிப்படும்

1. விசுவாச வார்த்தையினால்
இதயம் நிரம்பி அழிந்திடுமே
அகமதினில் விசுவாசம்
என்றும் ஜெயம் தாரும் -2

2. கிரியை இல்லா விசுவாசம்
ஏதும் செய்திட உதவாது
செயல்படுமே விசுவாசம்
என்றும் ஜெயம் தாரும் -2

3. லோகமதின் இன்பங்களை
விரும்பி மனதில் தொடராமல்
விசுவாசத்தால் பெலன் அடைவோம்
நல் தேவன் தாங்குவார் -2

1974. மாறிடாதோர் நேச மீட்பர்

1. மாறிடாதோர் நேச மீட்பர்
மாற்றுவார் உன் வேதனை
பாவத்தாலும் நோயினாலும்
வருந்துவானேன் நம்பிவா

நம்பி வா நீ நம்பி வா
இயேசு உன்னை அழைக்கிறார்

2. லோக மாந்தர் கைவிடுவார்
துரோகம் கூறி தூற்றுவார்
தூய இயேசு மெய் நேசமாய்
துன்பம் தீர்ப்பார் நம்பி வா

3. வல்ல மீட்பர் கண்ணீர் யாவும்
வற்றிப் போகச் செய்குவார்
வற்றா ஜீவ ஊற்றாய் உன்மேல்
என்றும் ஊறும் நம்பி வா

Tamil Hymns

1975. மாறிடா எம் மா நேசரே

1. மாறிடா எம் மா நேசரே
ஆ மாறாதவர் அன்பெந்நாளுமே
கல்வாரி சிலுவை மீதிலே
காணுதே இம்மா அன்பிதே

ஆ! இயேசுவின் மகா அன்பிதே
அதன் ஆழம் அறியலாகுமோ
இதற்கிணையேதும் வேறில்லையே

2. பாவியாக இருக்கையிலே - அன்பால்
பாரில் உன்னைத் தேடி வந்தாரே
நீசன் என்றுன்னைத் தள்ளாமலே
நேசனாக மாற்றிடவே

3. உள்ளத்தால் அவரைத் தள்ளினும்
தம் உள்ளம் போல் நேசித்ததினால்
அல்லல் யாவும் அகற்றிடவே
ஆதி தேவன் பலியானாரே

4. ஆவியால் அன்பைப் பகிர்ந்திட
தேவனின் விண் சாயல் அணிய
ஆவியாலே அன்பைச் சொரிந்தார்
ஆவலாய் அவரைச் சந்திக்க

5. நியாய விதி தினமதிலே
நீயும் நிலையாகும் தைரியம் பெறவே
பூரணமாய் அன்பு பெருக
புண்ணியரின் அன்பு வல்லதே

6. பயமதை நீக்கிடுமே
யாவும் பாரினிலே சகித்திடுமே
அது விசுவாசம் நாடிடுமே
அன்பு ஒருக்காலும் ஒழியாதே

Tamil Hymns

1976. மாறிடும் எல்லாம் மாறிடும்

மாறிடும் எல்லாம் மாறிடும்
என் இயேசுவாலே எல்லாம் மாறிடும்

1. அவர் ஆடையை தொட்ட மாத்திரத்தில்
பெரும் பாடு மாறிற்றே - ஆதியும்
அந்தமமுமானவராலே அந்தகாரம் நீங்கிற்றே
கட்டுகள் உடைந்ததே கவலைகள் நீங்கிற்றே

2. இரையாதே என்று சொன்னாரே
திரைகடல் அடங்கிற்றே - அமைதலாய் இரு
என்றாரே அலைகளும் ஓய்ந்ததே
பயங்கள் பறந்ததே நம்பிக்கை பிறந்ததே

3. லாசருவே நீ எழுந்து வா என்று
சொன்னாரே மரித்த லாசரு
கல்லறை விட்டு எழுந்து வந்தானே
அழுகுறல் நின்றதே ஆனந்தம் வந்ததே

4. மாறுதே எல்லாம் மாறுதே என்
இயேசுவால் எல்லாம் மாறுதே - மாறுதே
(துக்கம்/கஷ்டம்/கடன்/வறுமை/வியாதி) மாறுதே
என் இயேசுவாலே (துக்கம்/கஷ்டம்/கடன்/வறுமை/வியாதி) மாறுதே

மாறிற்றே எல்லாம் மாறிற்றே
என் இயேசுவாலே எல்லாம் மாறிற்றே

1977. மாற்றும் என்னை உந்தன் சாயலாய்

மாற்றும் என்னை உந்தன் சாயலாய்
ஊற்றும் உந்தன் ஆவியை என்னில்
சாற்றுவேன் உந்தன் நாமத்தை என்றும்
நேற்றும் இன்றும் மாறா இயேசுவையே

1. யாக்கோபை இஸ்ரவேலாய் மாற்றினவர்
சவுலைப் பவுலாய் மாற்றினீரே
எந்தன் பாவச் செயல் நினையாமல்
என்னை நேசித்த உந்தன் அன்பு

2. சுத்த இதயத்தை என்னில் சிருஷ்டியும்
நிலைவர ஆவியே என்னில் தந்திடும்
இரட்சண்ய சந்தோஷத்தை திரும்ப தாரும்
உற்சாக ஆவி என்னை தாங்க செய்திடும்

3. தண்ணீரை ரசமாக மாற்றினீரே
தாழ்ந்தவனை நீர் உயர்த்தினீரே
தற்பரா உந்தன் பொற்பாதத்தை நான்
தாழ்ந்து பணிந்து வருகின்றேன்

4. கல்வாரி சிலுவையின் தேவ அன்பு
கல்லான என்னுள்ளத்தை மாற்றினதே
தூரமாய் இருந்து என்னைத் தம் கரத்தால்
தூக்கி அணைத்த தேவ அன்பு

Tamil Hymns

1978. மாற்றீர் என் கவலை

மாற்றீர் என் கவலை அருள்பெற
மாற்றீர் என் கவலை – மிக
மாற்றியே கலி தீர்த்தீர் உமது
மகிமையை நிறைவேற்றி.

1. சமனவரசே நீர் தந்தை
சமனவரசே நீர் ஒரு
சந்திர பதம் போல் சுடரே விடுவித்தீர்
தாசனுரு வெடுத்தீர். - மாற்

2. சூதலகையை நீக்கி அழலின்
சூதலகையை நீக்கி – என் கை
தூக்கி உலகிடர் போக்கி எமையே
துதிக்கவும் மயலாக்கி. – மாற்

3. சடலமுலகம் சூது பொல்லாச்
சடலமுகம் சூது - இது
தகாததின் மடவாது கொடியது
சஞ்சலம் இனி யேது? - மாற்

4. நலங்கடமை வழுவி சுகிர்தன்
நலங்கடனை வழுவி – வழி
நழுவி விழுமெனக் கழுவி அழகாய்
நலமாக்கவே வருவீர். – மாற்

1979. மானிட உருவில் அவதரித்த

மானிட உருவில் அவதரித்த
மாசுடர் ஒளியே கிறிஸ்தேசுவே

1. ஆத்தும மீட்பையும் ஏற்படுத்த
அவனியிலே உனக்காய் உதித்தார்
அண்டி வருவாய் வேண்டி அடைவாய்
அண்ணலே ஆத்தும வினை நீக்குவார்

2. கூவி அழைப்பது தேவ சத்தம்
குருசில் வடிவது தூய ரத்தம்
பாவ மன்னிப்பு ஆத்ம இரட்சிப்பு
பாக்கியம் நல்கிட அவரே வழி

3. இயேசுவின் நாமத்தில் வல்லமையே
இதை நாடுவோர்க்கு விடுதலையே
துன்ப கட்டுகள் காவல் சிறைகள்
இன்று அகற்றுவார் நீயும் நம்பி வா

4. அற்புதங்கள் கர்த்தர் செய்திடுவார்
அதிசயங்கள் அவர் காட்டிடுவார்
உண்மை நிறைந்த உள்ளம் திறந்து
உன் கர்த்தர் இயேசுவை விசுவாசிப்பாய்

5. கர்த்தர் உன்னை இனி கைவிடாரே
கடைசி வரை தளராதே நம்பு
என்றும் நல்லவர் கர்த்தர் வல்லவர்
இயேசுவிடம் வந்தால் புறம்பே தள்ளார்

1980. மானிடரே போற்றுங்களே

மானிடரே போற்றுங்களே!
மாநிலத்தில் பறைசாற்றுங்களே!

மேலானவர் இயேசு மேலானவர்
ஆகாயம் பூமிக்கும் மேலானவர் - 2

1. இருளில் ஒளியும் இயேசு - நம்
இதய விளக்கும் இயேசு
மருள்வோர் வழியும் இயேசு - அவர்
மனதின் உறுதி இயேசு
அருளின் சுனையும் இயேசு - உயர்
அன்பின் பொருளும் இயேசு

2. உலகம் அவரால் வாழும் - அதில்
உயிர்கள் புனிதம் ஆகும்
பலரின் வாழ்வு மாறும் - பாவப்
பழிகள் யாவும் தீரும்
நிலவும் மகிழ்ச்சி நாளும் - இனி
நிறையக் குடும்பம் தோறும்

3. அலைகள் வாழ்வில் மோதும் - பலர்
அழிவைக் காண நேரும்
மலைகள் பெயர்ந்து போகும் - பலர்
மனங்கள் பயந்து சாகும்
நிலையாய்க் கரங்கள் கோர்ப்பார் - நம்மை
நிஜமாய்க் கரையில் சேர்ப்பார்

1981. மாநில ஜோதியிவர் கிறிஸ்தேசுவே

மாநில ஜோதியிவர் கிறிஸ்தேசுவே
மனுக் குளத்தின் விளக்கே - இந்த

1. மங்கிடா தீபமே மறைபொருள் ஞானமே
எங்கும் நிறைந்திடும் என தானும் செல்வமே
மன இருள் நீக்கிடும் மகிமை நிறைந்திடும்
எனதகம் தகிடும் கருணை வேந்தா

2. பாவமில்லா தூயா பரிசுத்த வாழ்வே
தேவ குமாரனே அருளின ஈவே
குருசினில் தொங்கிடும் கிறிஸ்துவை தேடுவோர்
குறைகள் அகன்றிடும் பாக்கியமிதே

3. ஆயிரம் ஆயிரம் துதிகளை ஏற்பார்
அன்பர்களின் ஜெப வேண்டுதல் கேட்பார்
கவலைகள் தீர்ந்திடும் கண்ணீர் துடைத்திடும்
கிருபைகள் ஈந்திடும் பரமபிதாவே

4. மேகத்தில் இயேசுவே தோன்றிடும் நாளே
வேகம் நெருங்கிட விரைந்திடுவோமே
ஜெபித்திடும் பக்தர்கள் பறந்து மறைந்திடும்
சுபதினம் வந்திடும் முடிவிதுவே

Tamil Hymns

1982. மான்கள் நீரோடை வாஞ்சித்து

மான்கள் நீரோடை வாஞ்சித்து
கதறும் போல் தேவனே
எந்தன் ஆத்துமா உம்மையே
வாஞ்சித்து கதறுதே

தஞ்சமே நீர் அடைக்கலம் நீர்
கோட்டையும் நீர் என்றும் காப்பீர்

1. தேவன் மேல் ஆத்துமாவே
தாகமாயிருக்கிறதே
தேவனின் சந்நிதியில் நின்றிட
ஆத்துமா வாஞ்சிக்குதே

2. ஆத்துமா கலங்குவதேன்
நேசரை நினைத்திடுவாய்
அன்பரின் இரட்சிப்பினால் தினமும்
துதித்து போற்றிடுவோம்

3. யோர்தான் தேசத்திலும்
எர்மோன் மலைகளிலும்
சிறுமலைகளிலிருந்தும் உம்மை
தினமும் நினைக்கின்றேன்

4. தேவரீர் பகற் காலத்தில்
கிருபையைத் தருகின்றீர்
இரவில் பாடும் பாட்டு என்தன்
வாயிலிருக்கிறதே

5. கன்மலையாம் தேவன்
நீர் என்னை ஏன் மறந்தீர்
எதிரிகளால் ஏங்கி அடியேன்
துக்கத்தால் திரிவதேனோ

Tamil Hymns

1983. மான்கள் நீரோடை வாஞ்சிப்பது

மான்கள் நீரோடை வாஞ்சிப்பது போலே
என் ஆத்மா வாஞ்சிக்குதே
நீர் மாத்திரம் எந்தன் ஆத்ம நேசர்
உம்மை ஆராதிக்கிறேன்

நீர் என் பெலனும் என் கேடகமாம்
என்னாவி என்றும் உமக்கடிபணியும்
நீர் மாத்திரம் எந்தன் ஆத்ம நேசர்
உம்மை ஆராதிக்கிறேன்

Tamil Hymns

1984. மின்னும் வெள்ளங்கி பூண்டு

1. மின்னும் வெள்ளங்கி பூண்டு
மீட்புற்ற கூட்டத்தார்
பொன்னகர் செல்லும் பாதையில்
பல் கோடியாய்ச் செல்வார்
வெம் பாவம் சாவை இவர்
வென்றார் போர் ஓய்ந்ததே
செம்பொன்னாம் வாசல் திறவும்
செல்வார் இவர் உள்ளே.

2. முழங்கும் அல்லேலூயா
மண் விண்ணை நிரப்பும்
விளங்கும் கோடி வீணைகள்
விஜயம் சாற்றிடும்,
சராசரங்கள் யாவும்
சுகிக்கும் நாள் இதே;
இராவின் துன்பம் நோவுக்கு
ஈடாம் பேரின்பமே.

3. அன்பான நண்பர் கூடி
ஆனந்தம் அடைவார்;
மாண்பான நேசம் நீங்காதே
ஒன்றாக வாழுவார்;
கண்ணீர் வடித்த கண்கள்
களித்திலங்கிடும்
மண்ணில் பிரிந்த உயிர்கள்
மீளவும் சேர்ந்திடும்

4. சிறந்த உந்தன் மீட்பை
சமீபமாக்குமே
தெரிந்து கொள்ளப்பட்டவர்
தொகை நிரப்புமே;
உரைத்த உந்தன் காட்சி
உம்பரில் காட்டுவீர்
இறைவா, ஏங்கும் தாசர்க்கு
இறங்கி வருவீர்.

Tamil Hymns

1985. மீட்பர் இயேசு குருசில் தொங்கினாரே

மீட்பர் இயேசு குருசில் தொங்கினாரே
மூன்றாணி மீதில் காயம் அடைந்தே - 2

1. லோகப்பாவம் தீர்க்க பலியான
தேவ ஆட்டுக்குட்டியானவர்
சொந்தமான இரத்தம் சிந்தி மீட்டு
இந்தளவாய் அன்பு கூர்ந்தவர் எம்மில் - 2

2. இயேசுவே கல்வாரி சிலுவையில்
ஏறி ஜீவன் தந்திரா விடில்
ஏழையான் என் பாவ பாரங்களை - எங்கு
சென்று தீர்த்துக் கொள்ளுவேன் பூவில்

3. தேவனே என்னை ஏன் கை விட்டீரோ
என்று இயேசு கதறினாரே
பாவத்தால் பிதாவின் முகத்தையும்
பார்க்கவும் முடியவில்லையே - அவர்

4. அன்னை தந்தை யாவரிலும் மேலாய்
அன்பு கூர்ந்தார் அண்ணல் இயேசுவே
ஆச்சரிய தேவ அன்பைப்பாட
ஆயிரம் நாவுகள் போதுமோ - பதி

5. பாவ பாரம் லோகக் கவலைகள்
தாவி உன்னைச் சூழ்ந்த போதிலும்
தேடி நாடி ஓடி வந்தால் உன்னைத்
தேற்றி ஆற்றித் தாங்குவார் அவர் - இப்போ

6. கோரமாம் சிலுவைக் காட்சி கண்டால்
கல்மனமும் உருகிடுமே
மாயலோக ஆசை வஞ்சிக்குமே
மாறிடாத இயேசு போதுமே - என்றும்

Tamil Hymns

1986. மீட்பரே உம்மைப் பின் செல்ல

1. மீட்பரே! உம்மைப் பின் செல்ல
சிலுவையை எடுத்தேன்;
ஏழை நான் பெரியோனல்ல
நீரே எல்லாம் நான் வந்தேன்

உம்மைப் பின்செல்வேன் என் சுவாமி
எனக்காக நீர் மரித்தீர் - எல்லாரும்
ஓடினாலும் உமதன்பால் நான் நிற்பேன்

2. பெற்றார் உற்றார் ஆஸ்தி கல்வி
மேன்மை லோகம் அனைத்தும்
அற்பக் குப்பை என்று எண்ணி,
வெறுத்தேனே முற்றிலும்

3. மெய்தான் லோகத்தார் பகைப்பார்
உம்மை முன் பகைத்தாரே;
லோக ஞானிகள் நகைப்பார்
பயமேன் நீர் விடீரே!

4. சர்வ வல்ல தேவன் அன்பாய்
திடன் செய்வார் முன்செல்வேன்;
தேவ துரோகிகள் மா வம்பாய்
சீறினாலும் நான் வெல்வேன்

Tamil Hymns

1987. முகமலர்ந்து கொடுப்பவரை கர்த்தர்

முகமலர்ந்து கொடுப்பவரை
கர்த்தர் நேசிக்கிறார் - உற்சாக
மனதுடனே கொடுத்திடுவோம்

வருத்தத்தோடல்ல கட்டாத்தாலல்ல
இருப்பதை விருப்பமுடன் கொடுத்திடுவோம்
விதை விதைத்திடுவோம் அறுவடைசெய்வோம்

1. அதிகமாய் விதைத்தால் அதிக அறுவடை
ஏழ்மை நிலையிலிருந்து இன்றே விடுதலை
அளவின்றி கொடுத்து செல்வர்களாவோம்
அமுக்கி குலுக்கி மடியில் அளந்து போடுவார்

2. ஏழைக்கு இரங்கி கொடுக்கும் போதெல்லாம்
கர்த்தருக்கு கடன் கொடுத்து
திரும்ப பெற்றிடுவோம் - எந்த
நிலையிலும் தேவையானதெல்லாம்
எப்போதும் நமக்கு தந்திடுவாரே

3. நற்செயல் செய்ய வேண்டிய அனைத்தும்
மிகுதியாகவே தந்திடுவாரே
எல்லா நன்மைகளால் நிரப்ப வல்லவர்
குறைகளை நிறைவாக்கி நடத்திடுவார்

Tamil Hymns

1988. முடிவில்லா நித்திய ஜீவனை

முடிவில்லா நித்திய ஜீவனை
முடிவில்லாதவர் உனக்களிப்பார்

சத்திய பாதையில் அவருடன் நடந்தால்
நித்திய ஜீவனை நீ பெறுவாயே

கண்டிடுவாய் நீயும் இன்பக் கானானை
சேர்ந்திடுவாய் அங்கு இயேசுவுடன்
கீதங்கள் பாடி மகிழ்வுடன் ஆடி
நாதனை நிதம் துதி செய்திடுவாய்

பரமனின் பாதம் பற்றியே நடந்தால்
வரங்களின் ஆசீர் அளித்திடுவார்
கரங்களினால் உன்னை அணைத்திடுத்தே
பரன் அவர் என்றென்றும் வாழ வைப்பார்

1989. முடியாது முடியாது

முடியாது முடியாது
உம்மைப் பிரிந்து எதையும் செய்ய
முடியாது முடியாது
என்னால் (இயேசையா)

1. திராட்சை செடியே உம் கொடி நான்
உம்மோடு இணைந்து
உமக்காய் படர்ந்து
உலகெங்கும் கனி தருவேன்

2. மண்ணோடு நான் ஒட்டி உள்ளேன்
உமது வார்த்தையால்
இந்நாளில் என்னை
உயிர்ப்பியும் என் தெய்வமே

3. பெலப்படுத்தும் என் கிறிஸ்துவினால்
விருப்பம் போல் வனைந்துக் கொண்டு
உலகெங்கும் பயன்படுத்தும்

4. பெலப்படுத்தும் என் கிறிஸ்துவினால்
எதையும் செய்திட பெலனுண்டு
எல்லாம் நான் செய்திடுவேன்
எல்லாம் நான் செய்திடுவேன்
உம் துணையால், உம் கரத்தால்
எல்லாம் நான் செய்திடுவேன் -இயேசையா

5. பூமியிலே பரதேசி நான் -உமது
வார்த்தையை ஒருபோதும் எனக்கு
மறைத்து விடாதேயும்

Tamil Hymns

1990. முடியாதென்று மனம் தளராதே

முடியாதென்று மனம் தளராதே
நம்பினால் எல்லாம் ஆகுமே (கூடுமே)
முடியாதென்று நினையாதே
நம்பினால் எல்லாம் ஆகுமே
முடியாதென்று மனம் தளராதே-2

புழுதியிலிருந்த சிறியவனை
குப்பையிலிருந்த எளியவனை
பிரபுக்கள் மத்தியில் நிறுத்தி
மகிமை படுத்துவார் - வறண்ட
வாழ்வு தனை செழிப்பாய் மாற்றுவார்
நண்பா மனம் தளறாதே

1991. முதலாவது தேவ இராஜ்யம்

முதலாவது தேவ ராஜ்யத்தையும்
நீதியையும் தேடுங்கள்
அப்பொழுது யாவும் கூடக் கிடைக்கும்
அல்லேலூ, அல்லேலூயா
அல்லேலூ, அல்லேலூயா - (2)
அல்லேலூ, அல்லேலூயா

Tamil Hymns

1992. முழங்காலில் நின்று ஜெபிக்க ஆசை

முழங்காலில் நின்று ஜெபிக்க ஆசை
முழு உள்ளத்தோடு ஆராதிக்க ஆசை
முற்றிலுமாய் ஒப்புக் கொடுக்க ஆசை
எனக்கு முழுமையாய் மனம் திரும்ப ஆசை

1. கவலைகள் யாவும் மறந்திட ஆசை
கர்த்தரின் கருணையில் களிகூர ஆசை
பாவத்தை விட்டுவிட ஆசை
சிலுவையின் நிழலில் வாழ ஆசை

ஆசை ஆசை ஆசை
எனக்கு ஆசை ஆசை ஆசை

2. புதுப் புது பாடல்கள் பாடிட ஆசை
புதுப் புது தரிசனம் கண்டிட ஆசை
உம் சத்தம் கேட்க ஆசை
தேவனே உம்மோடு பேச ஆசை

3. அபிஷேக மழையில் நனைந்திட ஆசை
அந்நிய பாஷையில் துதித்திட ஆசை
உம் பாதையில் நடக்க ஆசை
உம்மோடு சேர்ந்து வாழ ஆசை

Tamil Hymns

1993. முள்முடி சூடிய ஆண்டவர்

முள்முடி சூடிய ஆண்டவர்
நமக்காய் மரித்தார்
கொல்கொதா மலையிலே
இயேசு பாடுகள் சுமந்தார்

1. நம் பாவம் தீர்க்க பலியானார்
இரத்தம் சிந்தி மீட்டார்
கள்ளனைப் போல கட்டுண்டாரே
உந்தனை மீட்டிடவே

2. வாரினாலே அடிக்கப்பட்டார்
பாவி எனக்காக
ஆபத்திலே துணையாக
எம்மைக் காரும் தேவா

3. கால் கைகளிலே ஆணிபாய
முட்கிரீடம் பின்னி சூட
தாசர்களை காத்த இயேசு
பலியாக மாண்டாரே

1994. முள்முடி பாரமோ தேவனே

முள்முடி பாரமோ தேவனே
இரத்தமும் வடியுதோ சிரசினில்
இவை யாவும் எனக்காக தேவனே
முழங்காலில் நிற்கிறேன் நாதரே

1. தோளிலே சிலுவையை சுமக்கிறீர்
தோள்களும் தாங்குதோ அப்பனே
முட்களும் கால்களில் குத்துதோ
முட்களைப் படைத்தவர் நீர் அன்றோ

2. கைகளில் ஆணியா குத்தினர்
களைக்குதோ கைகளும் இயேசுவே
சாட்டையால் முதுகினில் அடித்தனர்
சாட்டையும் ராஜனை அடித்ததோ

3. காடியா தாகத்துக்கு தந்தனர்
தண்ணீரைப் படைத்தவர் நீரன்றோ
கண்ணீரும் கண்களில் கொட்டுதோ
துடைப்பவர் யாருமே இல்லையோ

1995. முள்ளுள்ள புதர்

முள்ளுள்ள புதர்களின் மத்தியில் ஒரு
ரோஜாப் புஷ்பம் போலவே மா சௌந்தர்ய மானவரே
இயேசு நாதனே எம் தேவனே (2)

வாழ்த்துவோம் எங்கள் தேவனை
ஜிவ நாட்களிலும் மறு யாத்திரையிலும்
நன்றியோடே நாம் பாடிடுவோம் (1)

இதயம் வெம்பி கசந்து நொந்து மனக்கிலேசம்
அடைந்திடுங்கால் மனப் புண்ணில் எண்ணெய்
தடவி மன ஆறுதல் தந்திடுவார்; (2)
(வாழ்த்துவோம் எங்கள்.......)

தந்தை தாயும் என் சொந்தமானோரும்
கைவிட்டாலும் அவர் மாறிடார்;
துன்பத்தில் எம்மைத் தாங்கிடுவார்;
இன்பங்கள் எமக் ஈந்திடுவார்; (2)
(வாழ்த்துவோம் எங்கள்.......)

1996. முள்ளுகளுக்குள் ரோஜா மலர் நீரே

முள்ளுகளுக்குள் ரோஜா மலர் நீரே
காட்டு புஷ்பத்துக்குள் லீலி மலர் நீரே
உம்மை ஆராதித்து துதித்துப் பாடுவேன்
என்றும் ஆடிப்பாடி நடனம் ஆடுவேன்

1. எத்தனை எத்தனை குறைகள்
எந்தன் வாழ்விலே - அத்தனையும்
நீர் மன்னித்தீரே மறந்தும் போனீரே

2. வாடி வறண்ட வாழ்வில்
ஜீவன் தந்தீரே - வாசம்
வீசும் மலராக மலரச் செய்தீரே

Tamil Hymns

1997. முன்னோரின் தெய்வமாம்

1. முன்னோரின் தெய்வமாம்
உன்னத ராஜராம்
அநாதியானோர் அன்பராம்
மா யெகோவா
சர்வ சிருஷ்டியும்
உம் பேர் நாமம் சாற்றும்
பணிந்து போற்றுவோம் என்றும்
உம் நாமமே

2. உன்னத பரனை
தூய தூதர் சேனை
நீர் தூயர் தூயர் தூயரே
என்றிசைப்பார்
நேற்றும் இன்றும் என்றும்
இருக்கும் கர்த்தரும்
மா யெகோவா நம் பிதாவும்
துதி ஏற்பார்

3. மீட்புற்ற கூட்டமே
மா நாதர் போற்றுமே
பிதா சுதன் சுத்தாவிக்கே
துதி என்றும்
முன்னோர்க்கும் நமக்கும்
தெய்வம் ஆனோர்க்கென்றும்
வல்லமை மகத்துவமும்
உண்டாகவும்.

Tamil Hymns

1998. மூலைக் கல் கிறிஸ்துவே

1. மூலைக் கல் கிறிஸ்துவே
அவர்மேல் கட்டுவோம்
அவர் மெய் பக்தரே
விண்ணில் வசிப்போராம்
அவரின் அன்பை நம்புவோம்,
தயை பேரின்பம் பெறுவோம்

2. எம் ஸ்தோத்ரப் பாடலால்
ஆலயம் முழங்கும்
ஏறிடும் எம் நாவால்
திரியேகர் துதியும்
மா நாமம் மிக்கப் போற்றுவோம்,
ஆனந்தம் ஆர்க்கப் பாடுவோம்

3. கிருபாகரா, இங்கே
தங்கியே கேட்டிடும்
மா ஊக்க ஜெபமே
பக்தியாம் வேண்டலும்
வணங்கும் அனைவோருமே
பெற்றிட ஆசி மாரியே

Tamil Hymns

1999. மெய் பக்தரே நீர் விழித்தெழும்பும்

1. மெய் பக்தரே, நீர் விழித்தெழும்பும்
சந்தோஷமாய் இந்நாள் வாழ்த்திடும்
இன்றைக்கு லோக மீட்பர் ஜென்மித்தார்
விண்ணோர் இவ்விந்தையைக் கொண்டாடினார்
கர்த்தாதி கர்த்தர் மானிடனானார்
ரட்சணிய கர்த்தாவகத் தோன்றினார்

2. இதோ! நற்செய்தி கேளும்; இன்றைக்கே
இம்மானுவேல் தாவீதின் ஊரிலே
பூலோக மீட்பராகப் பிறந்தார்
எல்லாருக்கும் சந்தோஷம் நல்குவார்
என்றே ஓர் தூதன் பெத்லேம் மேய்ப்பர்க்கே
இராவில் தோன்றி மொழிந்திட்டானே

3. அந்நேரம் வானோர் கூட்டம் மகிழ்ந்து
ஆனந்தப் பாட்டைப் பாடியும், இசைந்து
விண்ணில் கர்த்தாவுக்கு மா துதியும்
மண்ணில் நல்லோர்க்குச் சமாதானமும்
என்றல்லேலூயா பாடி வாழ்த்தினார்
தெய்வீக அன்பின் மாண்பைப் போற்றினார்

4. இச்செய்தி கேட்ட மேய்ப்பர் ஊருக்கு
அற்புதக் காட்சி காண விரைந்து
யோசேப்புடன் தாய் மரியாளையும்
முன்னனைமீது தெய்வ சேயையும்
கண்டேää தெய்வன்பை எண்ணிப்போற்றினார்
ஆனந்தமாய் தம் மந்தைக்கேகினார்

5. கெட்டுப்போனோரை மீட்ட நேசமாம்
உன்னத அன்பைச் சிந்தை செய்வோம் நாம்
தம் ஜென்மமுதல் சாவுமட்டுக்கும்
அப்பாலன் செய்த தெய்வ வாழ்க்கையும்
அன்போடு தியானம் செய்துவருவோம்
நம்மீட்பர் பின்னே செல்ல நாடுவோம்

6. அப்போது வான சேனைபோல் நாமும்
சங்கீதம் பாடலாம் எக்காலமும்
இந்தக் கெம்பீர நாள் பிறந்தவர்
அந்நாள் நம்மேல் தம் ஜோதி வீசுவார்
நம் ராயன் அன்பால் இரட்சிப்படைந்தோம்

Tamil Hymns

அவரின் நித்திய துதி பாடுவோம்

2000. மெய் ஜோதியாம் நல் மீட்பரே

1. மெய் ஜோதியாம் நல் மீட்பரே
நீர் தங்கினால் ராவில்லையே;
என் நெஞ்சுக் கும்மை மறைக்கும்
மேகம் வராமல் காத்திடும்.

2. என்றைக்கும் மீட்பர் மார்பிலே
நான் சாய்வது பேரின்பமே
என்றாவலாய் நான் ராவிலும்,
சிந்தித்துத் தூங்க அருளும்.

3. என்னோடு தங்கும் பகலில்,
சுகியேன் நீர் இராவிடில்;
என்னோடே தங்கும் ராவிலும்
உம்மாலே அஞ்சேன் சாவிலும்.

4. இன்றைக்கு திவ்ய அழைப்பை,
அசட்டை செய்த பாவியைத்
தள்ளாமல், வல்ல மீட்பரே,
உம்மிடம் சேர்த்துக் கொள்ளுமே.

5. வியாதியஸ்தர், வறியோர்,
ஆதரவற்ற சிறியோர்,
பலம்புவோர் எல்லாரையும்
அன்பாய் விசாரித்தருளும்.

6. பேரன்பின் சாகரத்திலும்
நான் மூழ்கி வாழுமளவும்,
என் ஆயுள்காலம் முழுதும்
உம் அருள் தந்து காத்திடும்

2001. மெய்த்தேவனைத் துதி பெருநன்மை

மெய்த்தேவனைத் துதி பெருநன்மை செய்தார்
குமாரனைத் தந்துன்னையே நேசித்தார்.
உன் பாவத்திற்காய் இயேசுவே மரித்தார்
நீ மோட்சத்தில் சேர ஆருயிர் தந்தார்

போற்றுவோம்! போற்றுவோம்! ஜ "வ நாயகரை
நம்புவோம்! நம்புவோம் லோக இரட்சகரை
இம்மீட்பரின் மூலம் நற்கதியுண்டாம்
பிதாவின் சமூகம் கண்டடையலாம்.

சம்பூரண மீட்பைச் சம்பாதித்தனர்
நல்லாசை உள்ளோருக்கு ஈவேன் என்றனர்
எப்பாவியானாலும் விசுவாசம் வைத்தால்
அந்நேரமே மன்னிப்புண்டாம் இயேசுவால்.
- போற்றுவோம்

பேரன்பின் சொரூபி! மெய்த்தாசருக்கே
ஒப்பற்ற சந்தோஷத்தை அளித்தீரே!
ஆனாலும் பேரின்பத்தில் சேரும்போதோ
உண்டாகும் சந்துஷ்டிக்கு வரம்புண்டோ?
- போற்றுவோம்

2002. மேக மீதினில் வேகமுடன்

மேக மீதினில் வேகமுடன்
மேசியா ஏசுவே வந்திடுவார்

1. மின்னலைப் போன்ற பேரொளியில்
மத்திய வானில் தோன்றிடுவார்
எண்ணிலடங்கா பக்தர்களும்
விண் தூதசேனை சூழ்ந்திடவே

2. யூதர்கள் கூடி சேர்ந்தனரே
வேதமும் நிறை வேறிடுதே
இவ்வடையாளம் நோக்கிடுவோம்
இயேசுவின் நாளை சந்திக்கவே

3. தாமதம் ஏனோ தம் வருகை
தீவிரம் வந்தால் நம் நிலைமை
கானக சத்தம் கேட்டிடுமோ
கர்த்தரைக் காண ஆயத்தமா

4. காலம் இனியும் சென்றிடாதே
காலையோ மாலை இராவினிலோ
நாம் நினையாத நேரத்திலே
நம்மையும் கர்த்தர் தாம் அழைப்பார்

5. இந்த கடைசி காலத்திலே
இப்புவி இன்பம் தள்ளிடுவோம்
பாரங்கள் யாவும் நீக்கிடுவோம்
பேரின்ப இராஜ்யம் சேர்ந்திடுவோம்

6. கண் விழிப்போடு நாம் ஜெபிப்போம்
கர்த்தருக்காகக் காத்திருப்போம்
ஆனந்தமான நாள் நெருங்க
ஆர்ப்பரிப்போடு சென்றிடுவோம்

Tamil Hymns

2003. மேகங்கள் நடுவே வழிபிறக்கும்

1. மேகங்கள் நடுவே வழி பிறக்கும்
பூதங்கள் கடந்து கடந்து வரும்
தூதர்கள் கூட்டங்கள் சூழ்ந்து நிற்கும்
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்

வானத்தில் வானத்தில் நடுவானத்தில்
இயேசுவின் கைகளில் நான் இருப்பேன்
பரமன் இயேசுவின் புன்னகை முகம் - என்
கண்களில் உள்ளத்தில் நிறைந்து நிற்கும்

2.நாற்றிசையினின்றும் கூடிடுவார்
நாதனின் இரத்தத்தால் கழுவப்பட்டோர்
தோத்திரக் கீதமே தொனித்து நிற்கும்
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்

3.கண்ணீரும் துன்பமும் கடந்துபோகும்
கண்ணிமைப் பொழுதில் நடந்துவிடும்
கர்த்தரின் வருகை நாளின்போது
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்

4.திருடன் வருகை போலிருக்கும்
தீவிரம் அவர் நாள் வெகு சமீபம்
காலையோ மாலையோ நள்ளிரவோ
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்

Tamil Hymns

2004. மேகமே மகிமையின் மேகமே

மேகமே மகிமையின் மேகமே
இந்த நாளிலே இறங்கி வாருமே
மேகமே மகிமையின் மேகமே
வந்தால் போதுமே எல்லாம் நடக்குமே

1. ஏகமாய் துதிக்கும் போது இறங்கின மேகமே
ஆலயம் முழுவதும் மகிமையால் நிரப்புமே

2. வானம் திறக்கணும் தெய்வம் பேசணும்
நேச மகனென்று (மகளென்று) நித்தம் சொல்லணும்

3. மறுரூபமாக்கிடும் மகிமையின் மேகமே
முகங்கள் மாறணுமேஒளிமயமாகணுமே

4. வாழ்க்கைப் பயணத்திலே முனசென்ற மேகமே
நடக்கும் பாதைதனை நாள்தோறும் காட்டுமே

5. கையளவு மேகம் தான் பெருமழை பொழிந்தது
என் தேச எல்லையெங்கும் பெருமழை (அருள்மழை) வேண்டுமே

Tamil Hymns

2005. மேசியா இயேசு ராஜா

மேசியா இயேசு ராஜா
அவர் மீண்டும் வருகிறார - எந்தன்
ஆவல் தீர்க்க அவர் சீக்கிரம் வருகிறார்
அவர் முகமே நான் கண்டிடுவேன்
அவரோடு நானும் சென்றிடுவேன்
மகிமை மகிமை அந்த நாள் மகிமை

1. தேவனின் வருகையில் என் துக்கமெல்லாம்
சந்தோஷமாகவே மாறியே போகும்
தேவனுக்காய் பட்ட பாடுகளெல்லாம்
மகிமையாய் அன்று மாறிடுமே
இன்று காணும் பாடுகள் - இனிமேல்
வருகின்ற மகிமைக்கு ஈடாய் ஆகுமோ

2. இயேசுவுக்காய் நான் காத்திருக்கின்றேன்
ஆயத்தமாய் எதிர் பார்த்திருக்கின்றேன்
இனியும் தாமதம் செய்யாரே அவர்
சொன்னபடியே வந்திடுவார்
அந்த நாளில் அவரை கண்டு நானும்
ஆடுவேன் பாடுவேன் துள்ளுவேன்

3. எனக்காகவே இரத்தம் சிந்தின கரத்தை
கண்டு ஆயிரம் முத்தங்களிடனும்
சிலுவை சுமந்து நடந்த பாதம்
விழுந்து நன்றி சொல்லிடணும்
இந்த தியாகம் செய்த அன்பு முகமே
காண ஏங்குகின்றேன்

Tamil Hymns

2006. மேசியாதான் பொறந்தாச்சு

மேசியாதான் பொறந்தாச்சு
மானிடரே மகிழ்ந்திடுங்கள் - 2
மனிதர் நம்மை மீட்க
மேன்மை யாவும் துறந்தார் - 2
மகிழ்ச்சியின் பண்டிகையை
ஆனந்தமாய்க் கொண்டாடுவோம் - 2

Happy Christmas O...O...O...
Happy Christmas O...O...O...
Happy Christmas Ah...Ah... Ah..
Happy Christmas

1. பசியைப் போக்கி நன்மையால் நிரப்பிடவே
பெலவானை ஆசனம் விட்டுத் தள்ளி விடவே
தாழ்வில் உள்ள நம்மையே
உயர்த்திட வந்தாரே
தரணியின் பாவம் போக்க
தாழ்த்தினாரே தன்னையே
டும் டும் டும் டும் மேளத்தோடு பாட்டுப்பாடி
ஆட்டம் ஆடு

2. பகைமை நீங்கி அன்பினாலே
ஒன்றாய் இணைவோம்
பாலன் பிறந்த நோக்கம் தனை
வாழ்வில் காட்டுவோம்
பரிசுத்தம் பெற்றிடாத
ஆன்மாக்கள் அழியாமல்
பாலன் பிறந்த நல்ல செய்தி
பாரெங்கும் கூறுவோம்
டும் டும் டும் டும் மேளத்தோடு
பாட்டுப்பாடி ஆட்டம் ஆடு

Tamil Hymns

2007. மேசியாவே மேசியாவே

மேசியாவே மேசியாவே
பூலோகம் வந்தீரே
நாங்களுந்தான் பாடணும்
நாங்களுந்தான் ஆடணும்
உம்முடைய பிறப்பைக் கொண்டாடணும்

1. பெத்தலகேம் என்னும் ஊரினிலே
இரட்சகர் மனுவாக மலர்ந்ததாலே
வானவர்கள் வாழ்த்திடவே
வையகமும் மகிழ்ந்திடவே
கொண்டாட்டம் கொண்டாட்டம்
கொண்டாட்டமே

Happy Christmas
Merry Christmas
Happy Christmas --- மேசியாவே

2. பூலோக மாந்தர்க்கு நற்செய்தியே
சந்தோஷம் சமாதானம் பெருகிடவே
கந்தைத்துணி முன்னணையில்
இறைமைந்தன் உறங்கிடவே
அன்னை மரி தாலாட்டி மகிழ்ந்தாளே

Happy Christmas
Merry Christmas
Happy Christmas --- மேசியாவே

3. மன்னிப்பில் மாட்சிமை உண்டெனவே
உரைத்திட்ட திரு மைந்தன் பிறந்ததாலே
எண்ணில்லா நன்மைகள்
என்றென்றும் கிடைத்திடவே
மன்னிப்போம் மகிழ்வோடு தவறுகளை

Happy Christmas
Merry Christmas
Happy Christmas --- மேசியாவே

Tamil Hymns

2008. மேய்ப்பரை வெட்ட ஓனாய்

1. மேய்ப்பரை வெட்ட ஓனாய்
ஆட்டைப் பட்சிக்கவே
சிதறடிக்கப்பட்ட
மந்தைமேல் பாய்ந்ததே

2. சவுல் சீசரைக் கட்ட
மா மூர்க்கமாய்ச் சென்றான்
விண் ஜோதி க்ஷணம் கண்டு
தரையில் விழுந்தான்

3. ஏன் என்னைத் துன்பம் செய்
என்றே காதுற்றுதும் (வாய்)
கர்த்தாவே, யாது செய்வேன்
என்றான் நடுங்கியும்

4. கிறிஸ்துவின் சத்துரு நல்ல
போர்ச் சேவகனானேன்
கொல் ஓனாய்ப்போன்றோன் ஆட்டு
குட்டிக்கொப்பாயினான்

5. நல் மேய்ப்பர் இயேசு சுவாமி
மந்தையைக் காருமே
அலையும் ஆட்டை உம்பால்
நீர் கொண்டுவாருமே

Tamil Hymns

2009. மேலோக வெற்றி சபையும்

1. மேலோக வெற்றி சபையும்
பூலோக யுத்த சபையும்
ஒன்றாகக் கூடி சுதனை
துதித்துப் பாடும் கீர்த்தனை.

2. ராஜாக்களுக்கு ராஜாவே,
கிருபாதார பலியே,
மரித்தெழுந்த தேவரீர்
செங்கோல் செலுத்தி ஆளுவீர்.

3. பூமியில் உள்ள தேசத்தோர்,
பற்பல பாஷை பேசுவோர்
எல்லாரையும் ஒன்றாகவே
இழுத்துக்கொள்வேன் என்றீரே.

4. கிரேக்கர், யூதர், தீவார்கள்;
ராஜாக்கள், குடி ஜனங்கள்,
கற்றோர், கல்லாதோர், யாவரும்
வந்தும்மைப் போற்றச் செய்திடும்.

5. பொன், வெள்ளி, முத்து, ரத்னமும்
எல்லாப் பூலோக மேன்மையும்
காணிக்கையாக உமக்கே
செலுத்தப்படும் இயேசுவே.

2010. மோட்ச யாத்திரை செல்கின்றோம்

1. மோட்ச யாத்திரை செல்கின்றோம்
மேலோகவாசிகள் - இம்மாய
லோகம் தாண்டியே எம் வீடு தோன்றுதே
கடந்து செல்கின்றோம் கரையின் ஓரமே
காத்திருந்த ராஜ்ஜியம் கண்டடைவோம்

ஆனந்தமே ஆ ஆனந்தமே
ஆண்டவருடன் நாம் என்றும் ஆளுவோம்
ஆதி முற்பிதாக்களோடு தூதருமாய்
ஆர்ப்பரிப்புடன் கூடி வாழுவோம்

2. சத்திய சுவிசேஷம் எடுத்துரைத்துமே - தம்
நித்திய இராஜ்ஜியம் மக்களை ஆயத்தமாக்கவே
தேசமெங்குமே அலைந்து செல்கிறோம்
நேசர் இயேசு வாக்குரைகள் நம்பியே

3. அள்ளித் தூவிடும்விதை சுமந்து செல்கின்றோம்
தம் அண்ணல் இயேசுவின்
சமூகம் முன்னே செல்லுதே
கண்ணீர் யாவுமே கடைசி நாளிலே
கர்த்தரே துடைத்து எம்மைத் தேற்றுவார்

4. கர்த்தர் எம் அடைக்கலம் கவலை இல்லையே
இக்கட்டு துன்ப நேரமோ கலக்கமில்லையே
கஷ்டம் நீக்குவார் கவலை போக்குவார்
கைவிடாமல் நித்தமும் நடத்துவார்

5. ஆரவாரத்தோடெம்மை அழைத்துச் சென்றிட தம்
ஆவலோடு வானிலே தூதர்கள் சூழ்ந்திட
காக்க வல்லவர் நல் வாக்குரைத்தவர்
எக்காள தொனியுடன் வருகிறார்

Tamil Hymns

2011. யாக்கோபென்னும் சிறு பூச்சியே

யாக்கோபென்னும் சிறு பூச்சியே
நீ ஒன்றுக்கும் கலங்கி விடாதே
இஸ்ரவேலின் சிறு கூட்டமே
நீ எதற்கும் பயந்து விடாதே

உன்னை உண்டாக்கினவர்
உன்னை சிருஷ்டித்தவர்
உன் முன்னே நடந்து செல்கிறார்
தீங்கு உன்னை ஒன்றும் செய்யாதே

1. அழைத்தவர் கைவிடுவாரோ
இல்லை இல்லை இல்லை
தெரிந்தவர் விட்டிடுவாரோ
இல்லை இல்லை இல்லை
பெயர் சொல்லி அழைத்த தேவன்
உன்னை மகிமை படுத்திடுவார்

2. பலவீனன் ஆவதில்லை
இல்லை இல்லை இல்லை
சுகவீனம் தொடர்வதில்லை
இல்லை இல்லை இல்லை
சாத்தான் உன்னை ஜெயிப்பதில்லை
சாபம் உன்னை அணுகுவதில்லை

3. வியாதிகள் வருவதில்லை
இல்லை இல்லை இல்லை
வாதிகள் தொடர்வதில்லை
இல்லை இல்லை இல்லை
ஆண்டுகள் முடிவதில்லை
அவர் கிருபையும் விலகுவதில்லை

Tamil Hymns

2012. யாக்கோபென்னும் சிறுபூச்சியே பயப்படாதே

யாக்கோபென்னும் சிறுபூச்சியே
பயப்படாதே நான் துணை நிற்கிறேன்
இஸ்ரவேலின் சிறுகூட்டமே பயப்படாதே
நான் துணை நிற்கிறேன்

என் யாக்கோபே என் யாக்கோபே
பயப்படாதே நான் துணை நிற்கிறேன்

1. உனது கூடாரம் அழகாய் மாற்றிடுவேன்
நீ பரவிப் போகின்ற ஆறாய் மாற்றிடுவேன்
உன்னை வாசனை வீசும்
சந்தன மரமாய் நாட்டுவேன்

2. உனது முகம் இனி வெட்கம் ஆவதில்லை
உனது முகம் இனி செத்துப்போவதில்லை
நீ என்னால் என்றும் மறக்கப்படுவதில்லை

3. உனது வேரை பரவச் செய்திடுவேன்
நீ பூத்து காய்த்து பூமியை நிரப்பிடுவாய்
உன் தூளை எண்ணத்தக்கவர் யாருண்டு

4. உனக்கு எதிரான மந்திரமில்லையே
உனக்கு எதிரான குறியும் சொல்வதில்லை
நீ துஷ்ட சிங்கமாய் எழும்பி நிற்பாய்

Tamil Hymns

2013. யாக்கோபே நீ வேரூன்றுவாய்

யாக்கோபே நீ வேரூன்றுவாய் - 2
பூத்து குலுங்கிடுவாய்
காய்த்து கனி தருவாய்
பூமியெல்லாம் நிரப்பிடுவாய் - இந்த

1. நானே காப்பாற்றுவேன்
நாள்தோறும் நீர் பாய்ச்சுவேன் - இரவும்
பகலும் காத்துக்கொள்வேன்
எவரும் தீங்கிழைக்க விடமாட்டேன் - 2

2. அருமையான மகன் அல்லவோ
பிரியமான பிள்ளையல்லவோ - நீ
உன்னை நான் இன்னும் நினைக்கின்றேன்
உனக்காக என் இதயம் ஏங்குகின்றது

3. நுகங்களை முறித்துவிட்டேன்
கட்டுகளை அறுத்துவிட்டேன்
இனிமேல் நீ அடிமை ஆவதில்லை
எனக்கே ஊழியம் செய்திடுவாய்

4. புதிய கூர்மையான போரடிக்கும்
கருவியாக்குவேன் -
மலைகளை மிதித்து நொறுக்கிடுவாய்
குன்றுகளை தவிடு பொடியாக்குவாய்

5. உன்னோடு நான் இருந்து
உனக்காக வழக்காடுவேன்
அச்சுறுத்துவோர் எவருமின்றி
அமைதியிலே நீ இளைப்பாறுவாய்

6 மேடுகளை பிளந்து
ஆறுகள் தோன்ற செய்வேன்
பள்ளத்தாக்கின் நடுவினிலே
ஊற்றுகள் புறப்பட்டு ஓடச் செய்வேன்

7. நானே உங்கள் தேவன்
நீங்கள் என் பிள்ளைகள்
பாழான மண்மேடு கட்டப்படும்
பாடலும் ஆடலும் மீண்டும் கேட்கும்

Tamil Hymns

2014. யாக்கோபை போல நான்

யாக்கோபை போல நான் போராடுவேன்
எலியாவை போல நான் ஜெபித்திடுவேன்
விடமாட்டேன் விடமாட்டேன்
யாக்கோபை போல நான் விடவே மாட்டேன்

1. அன்னாளை போல ஆலயத்தில்
அழுது நான் ஜெபித்திடுவேன்
என் துக்கம் சந்தோஷமாய்
மாறும் வரை ஜெபித்திடுவேன்

2. கர்மேல் பர்வதத்தில் நின்றிடுவேன்
அக்கினி இறங்கும் வரை ஜெபித்திடுவேன்
எலியாவின் தேவனே
இரங்கி வாரும் ஐயா

3. தாவீதை போல அனுதினமும்
துதித்து நான் மகிழ்ந்திடுவேன்
கோலியாத்து வந்தாலும்
இயேசுவின் நாமத்திலே முறியடிப்பேன்

Tamil Hymns

2015. யாரிலும் மேலான அன்பர்

1. யாரிலும் மேலான அன்பர், மா நேசரே;
தாய்க்கும் மேலாம் நல்ல நண்பர், மா நேசரே;
மற்ற நேசர் விட்டுப் போவார்
நேசித்தாலும் கோபம் கொள்வார்
இயேசுவோ என்றென்றும் விடார், மா நேசரே!

2. என்னைத்தேடி சுத்தஞ்செய்தார, மா நேசரே;
பற்றிக்கொண்ட என்னை விடார், மா நேசரே!
இன்றும் என்றும் பாதுகாப்பார்,
பற்றினோரை மீட்டுக்கொள்வார்,
துன்ப நாளில் தேற்றல் செய்வார், மா நேசரே!

3. நெஞ்சமே நீ தியானம் பண்ணு, மா நேசரை;
என்றுமே விடாமல் எண்ணு, மா நேசரை;
எந்தத் துன்பம் வந்தும் நில்லு;
நேரே மோட்ச பாதைச் செல்லு,
இயேசுவாலே யாவும் வெல்லு, மா நேசரே!

4. என்றென்றைக்கும் கீர்த்தி சொல்வோம், மாநேசரே
சோர்வுற்றாலும் வீரங் கொள்வோம் , மா நேசரே
கொண்ட நோக்கம் சித்தி செய்வார் ,
நம்மை அவர் சேர்த்துக்கொள்வார்

Tamil Hymns

2016. யாருக்காய் வாழ்கிறாய் நீ

யாருக்காய் வாழ்கிறாய் நீ
இந்த வையகம் தனிலே நீ
வாழ்ந்திடும் நாட்களெல்லாம்
யாருக்காய் வாழ்கிறாய் நீ

1. மாமிச ஆசையில் சிக்கலுண்டு
இந்தப் புவியினிலே இந்தப் புவியினிலே
சிற்றின்பப் பிரியராய் வாழ்வாருண்டு
இந்தப் புவியினிலே இந்தப் புவியினிலே
இவர் நாளெல்லாம்
தீழ்ப்பான நோக்கம் கொண்டோர்
இவர் வாழ்வெல்லாம் பாவமும் சாபமுமே

2. பணம் பணம் என்றிடும் பலருமுண்டு
இந்தப் புவியினிலே, இந்தப் புவியினிலே
மனமெல்லாம் செல்வத்தைச் சேர்த்திடவே
இந்தப் புவியினிலே, இந்தப் புவியினிலே
இவர் மூச்செல்லாம் ஆஸ்திக்காய் அலறி நிற்கும் (2)
ஆனால் வாழ்வெல்லாம்
வறட்சியும் தாழ்ச்சியுமே

3. கொள்கைக்காய் வாழ்பவர் பலருமுண்டு
இந்தப் புவியினிலே, இந்தப் புவியினிலே
வீண் பெருமைக்கு விலையாகிப் போனார் உண்டு
இந்தப் புவியினிலே இந்தப் புவியினிலே
இவர் நாளெல்லாம்
விரிவில்லா மனதுடையோர் - இவர்
வாழ்வெல்லாம் சாதனை இழந்து நிற்போர்

4. உடைபட்ட அப்பமாய் திகழ்வாருண்டு
இந்தப் புவியினிலே இந்தப் புவியினிலே
கரைந்திடும் உப்பாய் நிற்பாருண்டு
இந்தப் புவியினிலே இந்தப் புவியினிலே
இவர் நாளெல்லாம்
இயேசுவுக்காய் மறைந்து நிற்பார்
வெறும் கூப்பிடும் சத்தமாய் பணிபுரிவார்

Tamil Hymns

2017. யாருக்குத் தெரியும் உந்தனின் அழைப்பு

யாருக்குத் தெரியும் உந்தனின் அழைப்பு
அன்பரின் பாதம் வந்திடுவாய்
அழைத்தவர் உன்னை அருமையாய் நடத்தி
அனுதினம் ஊழியம் அளித்திடுவார்

1. யோனாவைப் போல போனாயோ நீயும்
நினிவேயின் பாரம் உனக்கில்லையோ
யாருக்குத் தெரியும் மன்னிப்பார் தேவன் என்று
நினிவேயின் மக்களும் மனம் மாறினார் - யாருக்கு

2. எஸ்தரைப் போல உயர்த்தினாரோ உன்னை
இஸ்ரவேல் ஜனத்தை மீட்டிடவே
யாருக்குத் தெரியும் உந்தனின் மேன்மை
உன்னத ஊழியம் செய்திடவே - யாருக்கு

3. திகைத்திடும் போது தயங்கிடாதே நீ
தானியேல் ஜெபம் கேட்ட தேவன் உண்டே
திருகரம் அணைத்து புகலிடம் அளிப்பார்
திறப்பின் வாசலில் நின்றிடுவாயோ

Tamil Hymns

2018. யாருண்டு நாதா என்னை விசாரிக்க

யாருண்டு நாதா என்னை விசாரிக்க
உறவுகள் இல்லையே
நீரின்றி யாருண்டு நாதா
நீரே என் தஞ்சமல்லோ

1. தனிமையில் கதறிய
ஆகாரின் குரலைக் கேட்டீர்
மனம் கசந்து கலங்கி நின்ற
அன்னாளின் ஜெபத்தை கேட்டீர்
நீரே நல்ல மேய்ப்பன்
வேண்டுதல் கேட்பவரே

2. கண்ணீரின் பாதையிலே
நடந்திடும் வேளையிலே
கரம் பிடித்தீர் எனை அணைத்தீர்
தேற்றுதே உம் கரமே
நீரே நல்ல சமாரியனே
என்னைத் தேற்றிடுவீர்

3. அடைக்கலம் தேடி வந்தேன்
உம் சிறகால் என்னை மூடும்
கொள்ளை நோய்க்கும் பொல்லாப்புக்கும்
விலக்கி காருமையா
பாரத்தை உம் மேல் வைத்து
விட்டேன் நீரே ஆதரித்தீர்

2019. யாரை நான் புகழுவேன்

1. யாரை நான் புகழுவேன், யாரை நான் அறிகிறேன்?
என் கதியும் பங்கும் யார், நான் பாராட்டும் மேன்மை யார்?
தெய்வ ஆட்டுக்குட்டிதான்.

2. யார் நான் நிற்கும் கன்மலை, யார் என் திட நம்பிக்கை?
குற்றத்தைச் சுமந்தோர் யார்? தெய்வ நேசம் தந்தோர் யார்?
தெய்வ ஆட்டுக்குட்டிதான்.

3. என்தன் பிராண பெலன் யார், ஆத்துமத்தின் சாரம் யார்?
யாரால் பாவி நீதிமான், யாரால் தெய்வ பிள்ளை நான்?
தெய்வ ஆட்டுக்குட்டியால்.

4. கஸ்தியில் சகாயர் யார், சாவின் சாவு ஆனோர் யார்?
என்னைத் தூதர் கூட்டத்தில், சேர்ப்போர் யார் நான் சாகையில்?
தெய்வ ஆட்டுக்குட்டிதான்.

5. இயேசுதான் என் ஞானமே, அவர் என் சங்கீதமே;
நீங்களும் புகழுங்கள், அவரைப் பின் செல்லுங்கள்,
தெய்வ ஆட்டுக்குட்டியை.

Tamil Hymns

2020. யார் உன்னை மறந்தாலும்

யார் உன்னை மறந்தாலும்
யார் உன்னை மறந்தாலும்
இயேசு உன்னை மறப்பதில்லை
உன் தந்தை தாயும் மறந்தாலும்
இயேசு உன்னை மறப்பதில்லை (2)

1. துன்ப யரங்கள் வாழ்வில் வந்தாலும்
துளியும் பயமில்லையே
நிந்தை நாள்தோறும் நெருங்கி வந்தாலும்
இதயத்தில் கலக்கமில்லை
உன் கண்ணீர் களிப்பாக மாறுமே
உன் கவலை எல்லாமே தீருமே (2)

2. பாடு பலவீனம் எதுவும் வந்தாலும்
விடுதலை தந்திடுவார்
மனது பாரங்கள் நெருக்கும் வேலையில்
வேண்டுதல் கேட்டிடுவார்
உன் தோல்வி ஜெயமாக மாறுமே
உன் வாழ்வு சந்தோசம் ஆகுமே (2)

3. நமது எதிர் காலம் நேசர் இயேசுவின்
கரங்களில் இருகின்றது
மனது தேவனின் தூய ஆவியால்
மகிழ்ந்தே துதிகின்றது
இனி வாதை நம் வாழ்வில் இல்லையே
நாம் பயந்து வாழ்வதும் இல்லையே

Tamil Hymns

2021. யார் என்னை பிரிக்க கூடும்

யார் என்னை பிரிக்க கூடும் (2)
பொன்னோ பொருளோ
உயர்வோ தாழ்வோ
பசியோ பட்டினியோ
எது தான் பிரிக்க கூடும்(2)

1. உந்தன் அன்பை ருசிக்கும் முன்னே
உலக அன்புக்காய் ஏங்கினேன்
உந்தன் அன்பை ருசித்த பிறகு
உமக்காய் பைத்தியமாய் மாறினேன் (3)

2. சிலுவை சுமந்து சுயத்தை வெறுத்து
உமக்காய் ஊழியம் செய்திடுவேன்
என்ன ஆனாலும் எது நடந்தாலும்
உமக்காய் என்றும் நான் வாழுவேன் (3)

Tamil Hymns

2022. யார் என்னை கைவிட்டாலும்

யார் என்னை கைவிட்டாலும்
இயேசு கைவிட மாட்டார்

1. தாயும் அவரே தந்தையும் அவரே
தாலாட்டுவார் சீராட்டுவார்

2. வேதனை துன்பம் நெருக்கும்போதெல்லாம்
வேண்டிடுவேனே காத்திடுவாரே

3. எனக்காகவே மனிதனானார்
எனக்காகவே பாடுபட்டார்

4. இரத்தத்தாலே கழுவிவிட்டாரே
இரட்சிப்பின் சந்தோஷம் எனக்குத் தந்தாரே

5. ஆவியினாலே அபிஷேகம் செய்து
அன்பு வசனத்தால் நடத்துகின்றாரே

6. எனக்காகவே காயப்பட்டார்
என் நோய்கள் சுமந்து கொண்டார்

2023. யார் பிடிக்க முடியும் என்

யார் பிடிக்க முடியும்
என் இயேசுவின் அன்பிலிருந்து
எதுதான் பிரிக்க முடியும்
என் நேசரின் அன்பிலிருந்து

1. வேதனையோ நெருக்கடியோ
சோதனையோ பிரித்திடுமோ

2. வியாதிகளோ வியாகுலமோ
கடன் தொல்லையோ பிரித்திடுமோ

3. கவலைகளோ கஷ்டங்களோ
நஷ்டங்களோ பிரித்திடுமோ

4. பழிச்சொல்லோ பகைமைகளோ
பொறாமைகளோ பிரித்திடுமோ

5. சாத்தானோ செய்வினையோ
பில்லி சூனியமோ பிரித்திடுமோ

6. உறவுகளோ உணர்வுகளோ
எதிர்ப்புகளோ பிரித்திடுமோ

Tamil Hymns

2024. யார் பிரிக்க முடியும் நாதா

யார் பிரிக்க முடியும் நாதா
உந்தன் அன்பிலிருந்து தேவா

1. என் சார்பில் நீர் இருக்க
எனக்கெதிராய் யார் இருப்பார்
மகனையே நீர் தந்தீரய்யா
மற்ற அனைத்தும் தருவீர் ஐயா

2. தெரிந்து கொண்ட உம் மகன்(கள்)
குற்றம் சாட்ட யார் இயலும்
நீதிமானாய் ஆக்கிவிட்டீர்
தண்டனை தீர்ப்பு எனக்கில்லையே

3. நிகழ்வனவோ வருவனவோ
வாழ்வோ சாவோ பிரித்திடுமோ
அன்பு கூர்ந்த கிறிஸ்துவினால்
அனைத்திலும் நான் வெற்றி பெறுவேன்

4. வேதனையோ நெருக்கடியோ
சோதனையோ பிரித்திடுமோ
பகைமைகளோ பழிச்சொல்லோ
பொறாமைகளோ பிரித்திடுமோ

2025. யார் யாரோ வாழ்விலே

யார் யாரோ வாழ்விலே
சிலுவையைக் கண்டீரோ
சிலுவைக்காய் பணி செய்ய வாரீரோ? (2)

1. தேசங்கள் சந்திக்க தேவையை நிரப்ப
பாசம் கொண்டு பின்னே வருவோன் யார்? (2)
என்னைப்போல் தன்னையும் நித்தமும் வெறுத்து
சிலுவையை எடுத்து வருவோன் யார்? (2)

2. பாவம் உலகைப் பலமாக மூடுது
பக்தர் பலர்கூட சோர்புற்றார் (2)
தீர்க்க தரிசனம் கூறியவர்கூட
பின் வாங்கி இந்நாளில் போய்விட்டார் (2)

3. உலகைப் பகைத்து, பாவத்தை வெறுத்து
பரிசுத்தப் போர் செய்யச் செல்வோன் யார் (2)
சிலுவையின் மேன்மைக்காய் சிறுமை அடைவோரை
ஆசீர்வதிப்பதென் கடன் அல்லோ! (2)

Tamil Hymns

2026. யார் வேண்டும் நாதா நீரல்லவோ

யார் வேண்டும் நாதா நீரல்லவோ
எது வேண்டும் நாதா உம் அன்பல்லவோ
பாழாகும் லோகம் வேண்டாமையா
வீணான வாழ்க்கை வெறுத்தேனையா

1. உலகத்தின் செல்வம்நிலையாகுமோ
பேர் புகழ் கல்வி அழியாததோ
பின் ஏன் நீர் கேட்டீர் இக்கேள்வியை
பதில் என்ன சொல்வேன் நீரே போதும்

2. சிற்றின்ப மோகம் சீக்கிரம் போகும்
பேரின்ப நாதா நீர் போதாதா
யார் வேண்டும் என்று ஏன் கேட்டீரோ
எங்கே நான் போவேன் உம்மையல்லால்

3. என்னைத் தள்ளினால் நான் எங்கே போவேன்
அடைக்கலம் ஏது உம்மையல்லால்
கல்வாரி இன்றி கதியில்லையே
கர்த்தர் நின்பாதம் சரணடைந்தேன்

Tamil Hymns

2027. யுத்தம் செய்வோம் வாரும் கிறிஸ்து

1. யுத்தம் செய்வோம் வாரும் கிறிஸ்து வீரரே!
இயேசு சேனைக் கர்த்தர் பின்னே செல்வோமே!
வெற்றி வேந்தராக முன்னே போகிறார்ää
ஜெயக்கொடி ஏற்றி போர் நடத்துவார்

யுத்தம் செய்வோம் வாரும்
கிறிஸ்து வீரரே!
இயேசு சேனைக் கர்த்தர்
பின்னே செல்வோமே!

2. கிறிஸ்து வீரர்காள் நீர் வெல்ல முயலும்ää
பின்னிடாமல் நின்று ஆரவாரியும்!
சாத்தான் கூட்டம் அந்த தொனிக்கதிரும்
நரகாஸ்திவாரம் அஞ்சி அசையும்

3. கிறிஸ்து சபை வல்ல சேனை போன்றதாம்
பக்தர் சென்ற பாதை செல்கின்றோமே நாம்!
கிறிஸ்து தாசர் யாரும் ஓர் சரீரமே
விசுவாசம் அன்பு நம்பிக்கை ஒன்றே!

4. கிரீடம் இராஜ மேன்மை யாவும் சிதையும்
கிறிஸ்து சபைதானே என்றும் நிலைக்கும்!
நரகத்தின் வாசல் ஜெயங் கொள்ளாதே
என்ற திவ்விய வாக்கு வீணாய்ப் போகாதே!

5. பக்தரே ஒன்றாக கூட்டம் கூடுமேன்
எங்களோடு சேர்ந்து ஆர்ப்பரியுமேன்!
விண்ணோர் மண்ணோர் கூட்டம் இயேசு ராயர்க்கே!
கீர்த்தி புகழ் மேன்மை என்றும் பாடுமே!

Tamil Hymns

2028. யூத ராஜசிங்கம் உயிர்த்தெழுந்தார்

யூத ராஜசிங்கம் உயிர்த்தெழுந்தார்
உயிர்த்தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார்

1. வேதாளக் கணங்கள் ஓடிடவே
ஓடிடவே, உருகி வாடிடவே

2. வானத்தின் சேனைகள் துதித்திடவே
துதித்திடவே, பரனைத் துதித்திடவே

3. மரணத்தின் சங்கிலிகள் தெறிபட்டன
தெறிபட்டன, நொடியில் முறிபட்டன

4. எழுந்தார் என்றதொனி எங்குங் கேட்குதே
எங்குங் கேட்குதே, பயத்தை என்றும் நீக்குதே

5. மாதர் தூதரைக் கண்டகமகிழ்ந்தார்
அகமகிழ்ந்தார், பரனை அவர் புகழ்ந்தார்

6. உயிர்த்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை
மரிப்பதில்லை, இனி மரிப்பதில்லை

7. கிறிஸ்தோரே நாமவர் பாதம் பணிவோம்
பாதம் பணிவோம், பதத்தைச் சிரமணிவோம்

2029. யூதாவின் இராஜசிங்கம் நீரே

1. யூதாவின் இராஜசிங்கம் நீரே
அல்ஃபாவும் ஓமெகாவும் நீரே
வல்லமை கனம் ஞானம் மகிமையையும்
துதியையும் பெற்றுக் கொள்ள பாத்திரர் நீரே

பாவமானீரே என்னை நீதியாக்கிட
சாபமானீரே எந்தன் சாபம் போக்கிட
காயமானீரே எந்தன் நோய்கள் தீர்த்திட
ஏழையானீரே எந்தன் ஏழ்மை நீக்கிட

2. நீர் என்றும் எந்தன் நல்ல மேய்ப்பர்
எந்நாளும் தாழ்ச்சி அடையேனே
அமர்ந்த தண்ணீர் பசும்புல்
வெளியில் என்னை மேய்த்து
நித்தம் காக்கும் நல்ல தேவனே

பகைவர் முன்பாக பந்தி
ஆயத்தம் செய்தீர் - தலையை
எண்ணெயால் அபிஷேகமும் செய்தீர்
ஜீவ நாளெல்லாம் நன்மை
கிருபை தொடருமே - கர்த்தர்
வீட்டினில் நீடித்து வாழ்வேனே

3. என் நாவு உந்தன் நீதியையும்
நாளெல்லாம் உந்தன் துதியையும்
ஓயாமல் போற்றிப்பாடும் குறைவையெல்லாம் நீக்கிப்போடும்
கைவிடாத நல்ல தேவன் நீர்

உமது மகிமையின் ஐசுவரியத்தின்படி
குறைவுகளெல்லாம் நிறைவாக்கும்
தேவனே - யெஹோவா யீரே நீர்
எந்தன் எல்ஷடாய் போதுமானவரிலும்
மிகவும் அதிகமானவர்

Tamil Hymns

2030. யெஷீவா யெஷீவா என்ற நாமம்

யெஷீவா யெஷீவா என்ற நாமம்
உனக்கும் எனக்கும் போதும் போதும்
இனிமையான நாமம்-ஒரு
இணையில்லாத நாமம்
முழங்க்கால்கள் மடங்கிடும் நாவுகள்
சொல்லிடும் அனைவரும் தொழுதிடும்

1. நீதியின் சூரியனே நீரே நாயகனே
ஏழையின் காவலனே யெஷீவா யெஷீவா
பரமனின் பிள்ளைகளை காணவே
சிலுவையில் மரித்தவரே
உயிரோடு எழுந்தவர் ஆதலால்
மரணத்தை ஜெயித்தவரே

2. கிருபையில் பூரணரே சிருஷ்டிப்பின் காரணரே
மூன்றில் ஒன்றானவரே யெஷீவா யெஷீவா
பாரங்களை சுமந்திடும் சிநேகிதன்
பரமனின் தவ புதல்வன்
பாவங்களை அகற்றிடும் நாயகனே
மகிமையிலே முதல்வன்

3. ஆதியில் இருந்தவரே
ஆவியில் நிறைந்தவரே
ஆத்தும இரட்சகரே யெஷீவா யெஷீவா
ஒப்புரவை உண்டு பண்ணும்
வேலையை திப்புரவாய் முடித்தவரே
முன் குறிக்கப்பட்ட வரை மீட்கவே
ஜீவனை கொடுத்தவரே

Tamil Hymns

2031. யேகோவா தேவனே யேகோவா

யேகோவா தேவனே யேகோவா கர்த்தரே
யேகோவா மீட்பரே யேகோவா ராஜனே

1. எல்ஷடை (2) எல்ஷடை எல்லாம் வல்லவரே
எல்ஷடை (2) எல்ஷடை எல்லாம் வல்லவரே

2. எல்ரோகி (2) எல்ரோகி என்னை காண்பவரே
எல்ரோகி (2) எல்ரோகி என்னை காண்பவரே

3. எபினேசர் (2) எபினேசர் இதுவரை உதவினீர்
எபினேசர் (2) எபினேசர் இதுவரை உதவினீர்

Tamil Hymns

2032. யேகோவா தேவனுக்கு ஆயிரம் நாமங்கள்

யேகோவா தேவனுக்கு ஆயிரம் நாமங்கள்
எதை சொல்லி பாடிடுவேன்
என் கர்த்தாதி கர்த்தர் செய்த நன்மைகள் ஆயிரம்
கரம் தட்டி பாடிடுவேன் - 2

யேகோவா ஷாலோம் யேகோவா ஷம்மா
யேகோவா ரூவா யேகோவா ரவ்ப்பா - 2

1. எல்லோரிக்கு அல்லேலூயா
என்னை நீரே கண்டீரையா
ஏக்கமெல்லாம் தீர்த்தீரையா
நான் தாகத்தோடு வந்த போது
ஜீவ தண்ணீர் எனக்கு தந்து
தாகமெல்லாம் தீர்த்தீரையா

2. எல்ஷடாயும் நீங்க தாங்க
சர்வ வல்ல தேவனாக
என்னை என்றும் நடத்துவீங்க
எபினேசரும் நீங்க தாங்க
உதவி செய்யும் தேவனாக
என்னை என்றும் தாங்குவீங்க - 2

3. எல்லோகியும் நீங்க தாங்க
என்றும் உள்ள தேவனாக
எந்த நாளும் பாடுவீங்க
இம்மானுவேல் நீங்க தாங்க
மண்ணில் வந்த தேவன் நீங்க
இன்றும் என்றும் பாடுவீங்க - 2

Tamil Hymns

2033. யேகோவா ரூவா என் நல்ல மேய்ப்பன்

யேகோவா ரூவா என் நல்ல மேய்ப்பன்
தாழ்ச்சி எனக்கில்லையே
யேகோவா தேவன் என் நல்ல ஆயன்
குறைவொன்றும் எனக்கில்லையே

ஆராதனை ஓ ஆராதனை துதி
ஆராதனை உமக்கே
ஆராதனை ஓ ஆராதனை துதி
ஆராதனை உமக்கே -2

1. புல்லுள்ள இடங்களில் மேய்த்து சென்று
என்னை போஷிக்கிறீர்
அமர்ந்த த்ண்ணீர் அண்டை என்னை நடத்தி
தாகம் தீர்க்கின்றீர்
உம் நாமத்தின் நிமித்தம் நீதியின் பாதையில்
நாள்தோரும் நடத்துகிறீர்

2. எதிரிகள் முன்பே எனக்கொரு பந்தியை ஆயத்தப்படுத்துகிறீர்
பாத்திரம் நிரம்பிட எண்ணெயினாலே
அபிஷேகம் செய்கின்றீர்
என் வாழ் நாட்கள் எல்லாம் நன்மையும் கிருபையும்
தொடர்ந்திட செய்திடுவீர்

3. கதரின நேரம் என்னவென்று கேட்க வந்தீர்
எனை காணும் எல்ரோயியே
கூப்பிட்ட நேரம் உதவிட வந்தீர்
எனை கேட்கும் எபினேரசரே
தனிமையில் நடந்தேன் துணையாக வந்தீர்
யேகோவா ஷம்மா நீரே

Tamil Hymns

2034. யேகோவா ஷாலோம் அல்லேலூயா

அல்லேலூயா அல்லேலூயா (2)

1. யேகோவா ஷாலோம் அல்லேலூயா
யேகோவா நிசியே அல்லேலூயா
யேகோவாயீரே அல்லேலூயா
பரிசுத்த பிதாவே அல்லேலூயா

அல்லேலூயா அல்லேலூயா (2)

2. சாரோனின் ரோஜாவே அல்லேலூயா
லீலி புஷ்பமே அல்லேலூயா
அழகில் சிறந்தவரே அல்லேலூயா
இயேசு கிறிஸ்துவே அல்லேலூயா

3. தேற்றரவாளனே அல்லேலூயா
பெலத்தின் ஆவியே அல்லேலூயா
சத்திய ஆவியே அல்லேலூயா
பரிசுத்த ஆவியே அல்லேலூயா

Tamil Hymns

2035. யெகோவா நிசியே எங்கள் ஜெயக்

யெகோவா நிசியே எங்கள்
ஜெயக் கொடியே உமக்கே ஆராதனை
யெகோவா யீரே தேவைகளை சந்தீப்பீர்
உமக்கே ஆராதனை

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலு - 2 அல்லேலூயா

1. ஜெபத்தின் காரணரே ஆராதனை
ஜெபிக்க வைப்பவரே ஆராதனை
ஜெபமே சுவாசமே ஜெபமே தூபமே
ஜெபத்தின் வீரரே ஆராதனை

2. அழகில் சிறந்தவரே ஆராதனை
அணைக்கும் ஆறுதலே ஆராதனை
அன்பின் இராஜனே ஆத்ம நேசரே
சரோனின் ரோஜாவே ஆராதனை

2036. யெகோவாயீரே தந்தையாம் தெய்வம்

1. யெகோவாயீரே தந்தையாம் தெய்வம்
நீர் மாத்திரம் போதும் எனக்கு
யெகோவா ரஃப்பா சுகம் தரும் தெய்வம்
உம் தழும்புகளால் சுகமானோம்

யெகோவா ஷம்மா என் கூட இருப்பீர்
என் தேவையெல்லாம் சந்திப்பீர்
நீர் மாத்ரம் போதும் - (3) எனக்கு

2. யெகோவா ஏலோஹிம்
சிருஷ்டிப்பின் தேவனே
உம் வார்த்தையால் உருவாக்கினீர்
யெகோவா பரிசுத்தர் உன்னதர் நீரே
உம்மைப்போல் வேறு தேவன் இல்லை
யெகோவா ஷாலோம் உம் சமாதானம்
தந்தீர் என் உள்ளத்தினில்

3. இயேசுவே நீரே என் ஆத்ம நேசர்
என்மேல் எவ்வளவன்பு கூர்ந்தீர்
என்னையே மீட்க உம்மையே தந்தீர்
உம் அன்பிற்கு இணையில்லையே
என் வாழ்நாள் முழுவதும்
உமக்காக வாழ்வேன்
நீரே என்றென்றும் போதும்

Tamil Hymns

2037. யெகோவாயீரே நீர் என் தேவனாம்

1. யெகோவாயீரே நீர் என் தேவனாம்
இனி என்னுள்ளில் கலக்கம் இல்லை

ஆராதனை ஆராதனை

இனி என்னுள்ளில் கலக்கம் இல்லை
நீர் எல்லாமே பார்த்துக் கொள்வீர்

2. யெகோவா ரஃபா நீர் என் தேவனாம்
நீர் என் நோய்கள் சுமந்து கொண்டீர்

ஆராதனை ஆராதனை

நீர் என் நோய்கள் சுமந்து கொண்டீர்
நீர் எந்தன் மருத்துவரே

3. யெகோவா ரூவா நீர் என் தேவனாம்
என் தேவைகள் நீர் அறிவீர்

ஆராதனை ஆராதனை

என் தேவைகள் நீர் அறிவீர்
நீர் எந்தன் நல் மேய்ப்பரே

Tamil Hymns

2038. யேசு நசரையினதிபதியே

யேசு நசரையி னதிபதியே
பவ நரர்பினை யென வரும்.

தேசுறு பரதல வாசப் பிரகாசனே
ஜீவனே, அமரர் பாவனே மகத்துவ. --- யேசு

1. இந்த உலகு சுவை தந்து போராடுதே,
எனதுடலும் அதுவோ டிசைந்து சீராடுதே;
தந்தர அலகை சூழ நின்று வாதாடுதே;
சாமி, பாவியகம் நோயினில் வாடுதே. --- யேசு

2. நின் சுய பெலனல்லாமல் என் பெலன் ஏது
நினைவு, செயல், வசனம், முழுதும் பொல்லாது;
தஞ்சம் உனை அடைந்தேன், தவற விடாது;
தாங்கி ஆள் கருணை ஓங்கி எப்போதும். --- யேசு

3. கிருபையுடன் என் இருதயந்தனில் வாரும்;
கேடுபாடுகள் யாவையும் தீரும்;
பொறுமை, நம்பிக்கை, அன்பு போதவே தாரும்;
பொன்னு லோகமதில் என்னையே சேரும். --- யேசு

2039. யேசுவே என்னுடன் நீ பேசு

யேசுவே என்னுடன் நீ பேசு
என்னிதயம் கூறுவதைக் கேளு
நான் ஒரு பாவி ஆறுதல் நீ கூறு
நாள் முழுதும் என்னை வழி நடத்து

1. உன் திருப் பெயர் நான் பாடிடும் கீதம்
உம் திரு இதயம் பேரானந்தம் (2)
உம் திரு வாழ்வெனக்கருளும்
இறைவா இறைவா
உம் திரு வாழ்வெனக்கருளும்
உம் திரு நிழலில் நான் குடி கொள்ள
என்றும் என்னுடன் இருப்பாய்

2. யேசுவின் பெயருக்கு மூவுலகெங்கும்
இணையடி பணிந்து தலை வணங்கிடுமே(2)
யேசுவே உம் புகழ் வாழ்க வாழ்க வாழ்க
யேசுவே உம் புகழ் வாழ்க
யேசுவே நீ என் இதயத்தின் வேந்தன்
என்னைத் தள்ளி விடாதீர்

2040. யோசனையில் பெரியவரே

1. யோசனையில் பெரியவரே
ஆராதனை ஆராதனை
செயல்களிலே வல்லவரே
ஆராதனை ஆராதனை

ஓசன்னா உன்னத தேவனே
ஓசன்னா ஓசன்னா ஓசன்னா

1. கண்மணி போல் காப்பவரே ஆராதனை ஆராதனை
கழுகு போல் சுமப்பவரே ஆராதனை ஆராதனை

2. சிலுவையினால் மீட்டவரே ஆராதனை ஆராதனை
சிறகுகளால் மூடுபவரே ஆராதனை ஆராதனை

3. வழி நடத்தும் விண்மீனே ஆராதனை ஆராதனை
ஒளி வீசும் விடிவெள்ளியே ஆராதனை ஆராதனை

4. தேடி என்னை காண்பவரே ஆராதனை ஆராதனை
தினந்தோறும் தேற்றுபவரே ஆராதனை ஆராதனை

5. பரிசுத்தரே படைத்தவரே ஆராதனை ஆராதனை
பாவங்களை மன்னித்தவரே ஆராதனை ஆராதனை

6. உறுதியான அடித்தளமே ஆராதனை ஆராதனை
விலை உயர்ந்த மூலைக்கல்லே ஆராதனை ஆராதனை

Tamil Hymns

2041. யோர்தான் நதியோரம் திகையாதே

யோர்தான் நதியோரம் திகையாதே மனமே
யோசனை யாலுன்னைக் கலக்காதே உள்ளமே

1. வெள்ளம் பெருகினும் வல்லமைக் குன்றாதே
வல்லவர் வாக்கொன்றும் மாரிப்போகாதே - யோர்தான்

2. வைப்பாயுன் காலடி தற்பரன் சொற்படி
வானவன் இயேசு தம் வாக்கு மாறாரே - யோர்தான்

3. உன்னத மன்னனே உண்டு முன்னணியில்
துன்பமணுகாமல் துணையருள்வாரே - யோர்தான்

4. கானானினோரமே காவலன் நாடதே
காணுவேன் தேசம் ஆ! என்ன இன்பம் - யோர்தான்

5. பால்தேனு மோடுதே பூரண அன்பதே
பாட்டினாலே அதைப் பகரலாகாதே - யோர்தான்

6. ஜெபத்தினால் வல்லமை ஜெயம் பெற்றோர் நாடதே
ஜோதியின் வஸ்திரம் தரித்திடலாமே

Tamil Hymns

2042. யோர்தான் விட்டேறி மனுஷ

1. யோர்தான் விட்டேறி, மனுஷ
குமாரன் ஜெபித்தார்;
வானின்றப்போதிறங்கின
புறா உருக் கண்டார்.

2. நல்லாவி அபிஷேகமாய்
அவர்மேல் தங்கினார்
’ என் நேச மைந்தன்’ என்பதாய்
பிதா விளம்பினார்.

3. அவ்வாறு, ஸ்நானத்தால் புது
பிறப்பை அடைந்தார்
மெய்த் தெய்வ புத்திரர் என்று
விஸ்வாசத்தால் காண்பார்.

4. கபடில்லாப் புறாத் தன்மை
தரிக்கப்படுவார்
நல்லாவி தங்கள் உள்ளத்தை
நடத்தப் பெறுவார்.

5. உம் ரத்த ஊற்றால் பாவத்தை
நீக்கின கிறிஸ்துவே
தூய்மையோரான தாசரை
தற்காத்துக் கொள்ளுமே.

6. சீர்கெட்ட, லோகம் மீட்டோரே,
பிதா, ஆவியையும்
உம்மோடு ஏகராகவே
என்றென்றும் துதிப்போம்.

2043. ரட்சா பெருமானே பாரும்

1. ரட்சா பெருமானே, பாரும்,
புண்ணிய பாதம் அண்டினோம்
சுத்தமாக்கி சீரைத் தாரும்,
தேடிவந்து நிற்கிறோம்!
இயேசு நாதா, இயேசு நாதா
உந்தன் சொந்தமாயினோம்

2. மேய்ப்பன் போல முந்திச் சென்றும்
பாதுகாத்தும் வருவீர்;
ஜீவ தண்ணீரண்டை என்றும்
இளைப்பாறச் செய்குவீர்;
இயேசு நாதா, இயேசு நாதா
உந்தன் சொந்தமாயினோம்

3. நீதி பாதை தவறாமல்
நேசமாய் நடத்துவீர்;
மோசம் பயமுமில்லாமல்
தங்கச் செய்து தாங்குவீர்;
இயேசு நாதா, இயேசு நாதா
உந்தன் சொந்தமாயினோம்

4. ஜீவ கால பரியந்தம்
மேய்த்தும் காத்தும் வருவீர்;
பின்பு மோட்ச பேரானந்தம்
தந்து வாழச் செய்குவீர்;
இயேசு நாதா, இயேசு நாதா
உந்தன் சொந்தமாயினோம்

Tamil Hymns

2044. ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்

1. ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்
தம் மந்தை காத்தனர்
கர்த்தாவின் தூதன் இறங்க
விண் ஜோதி கண்டனர்

2. அவர்கள் அச்சங்கொள்ளவும்
விண் தூதன் திகில் ஏன்?
எல்லாருக்கும் சந்தோஷமாம்
நற்செய்தி கூறுவேன்

3. தாவீதின் வம்சம் ஊரிலும்
மெய் கிறிஸ்து நாதனார்
பூலோகத்தார்க்கு ரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்

4. இதுங்கள் அடையாளமாம்
முன்னணைமீது நீர்
கந்தை பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்

5.என்றுரைத்தான் அக்ஷணமே
விண்ணோராம் கூட்டத்தார்
அத்தூதனோடு தோன்றியே
கர்த்தாவைப் போற்றினார்

6. மா உன்னதத்தில் ஆண்டவா
நீர் மேன்மை அடைவீர்
பூமியில் சமாதானமும்
நல்லோர்க்கு ஈகுவீர்

Tamil Hymns

2045. ராச ராச பிதா

ராச ராச பிதா மைந்த தேசுலாவுசதா நந்த
யேசு நாயகனார் சொந்த மேசியா நந்தனே!
ஜெகதீசு ரேசுரன் சுக நேச மீசுரன் -- மக

1. மாசிலா மணியே! மந்த்ர ஆசிலா அணியே
சுந்தர நேசமே பணியே - தந்திர
மோசமே தணியே - நிறைவான
காந்தனே இறையான சாந்தனே - மறை

2. ஆதியந்த மில்லான் - அந்த
மாதினுந்தியிலே முந்த - வேத
பந்தனமாய் வந்த பாதம் வந்தனமே
பத ஆமனாமனா! சுதனாமனாமனா - சித

3. மேன்மையா சனனே - நன்மை
மேவுபோசனனே தொன்மை
பான்மை வாசனனே புன்மை
பாவ மோசனனே - கிருபாகரா
நரா சருவேசுரா பரா - திரு

4. வீடு தேடவுமே தந்தை நாடு கூடவுமே
மைந்தர் கேடு மூடவுமே
விந்தையோடு பாடவுமே - நர வேட
மேவினான் சுரராடு கோவினான் - பர

2046. ராசாதி ராசன் யேசு யேசு மகா ராசன்

ராசாதி ராசன் யேசு, யேசு மகா ராசன்! - அவர்
ராஜ்யம் புவியெங்கு மகா மாட்சியாய் விளங்க
அவர் திருநாமமே விளங்க, - அவர் திருநாமமே விளங்க,
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலுயாவே!
அல்பா, ஒமேகா, அவர்க்கே அல்லேலுயாவே!

1. உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக் கூடுங்கள்
மன்னன் யேசுநாதருக்கே வான்முடி சூட்டுங்கள்!

2. நாலாதேசத் திலுள்ளோரே, நடந்து வாருங்கள்,
மேலோனேசு நாதருக்கே மெய்முடி சூட்டுங்கள்!

3. நல்மனதோடு சொல்கிறேன், நாட்டார்களே, நீங்கள்
புன்னகையொடு நிற்பானேன்? பூமுடி சூட்டுங்கள்!

4. இந்தநல் தேசத்தார்களே, ஏகமாய்க் கூடுங்கள்,
சிந்தையில் மகிழ்வடைந்தே செம்முடி சூட்டுங்கள்!

5. யேசுவென்ற நாமத்தையே எல்லாரும் பாடுங்கள்,
ராசாதிராசன் தலைக்கு நன்முடி சூட்டுங்கள்!

6. சகல கூட்டத்தார்களே, சாஷ்டாங்கம் செய்யுங்கள்,
மகத்வ ராசரிவரே, மாமுடி சூட்டுங்கள்!

Tamil Hymns

2047. ராயர் மூவர் கீழ்தேசம்

1. ராயர் மூவர் கீழ்தேசம்
விட்டு வந்தோம் வெகு தூரம்
கையில் காணிக்கைகள் கொண்டு
பின் செல்வோம் நட்சத்திரம்

ஓ... ஓ... இராவின் ஜோதி நட்சத்திரம்
ஆச்சரிய நட்சத்திரம்
நித்தம் வழி காட்டிச் செல்லும்
உந்தன் மங்கா வெளிச்சம்

2. பெத்லகேம் வந்த இராஜாவே
உம்மை நித்திய வேந்தன் என்றேன்
க்ரீடம் சூடும் நற்பொன்னை நான்
வைத்தேன் உம் முன்னமே --- ஓ...

3. வெள்ளை போளம் நான் ஈவேன்
கொண்டு வந்தேன் கடவுளே
துஷ்ட பாவ பாரம் தாங்கி
மரிப்பார் தேவனே --- ஓ...

4. தூப வர்க்கம் நான் ஈவேன்
தெய்வம் என்று தெரிவிப்பேன்
ஜெப தூபம் ஏறெடுப்பேன்
உம் பாதம் பணிவேன் --- ஓ...

Tamil Hymns

2048. ராஜ ராஜனே தேவ தேவனே

ராஜ ராஜனே தேவ தேவனே
எங்கள் ராஜனே இயேசுவே -2
உம்மை உயர்த்தி உயர்த்தி
உம்மை வாழ்த்தி வாழ்த்தி
உம்மை போற்றி போற்றி துதிப்பேன் -2
இயேசுவே ஆராதிப்பேன்
போற்றுவேன் உம்மையே -2

1. கலங்கின வேளைகளில் காத்திட்டீர் -2
கண்ணீரின் வேளையிலே கண்டீர் -2
உன்னதரே உயர்ந்தவரே
என் இயேசு நீரே -2

2. கைவிட்ட நேரத்திலே தூக்கினீர்
கண்ணின் மணி போல காத்திட்டீர்
துணையாளரே என்னைக்
கண்டீரே என் இயேசுவே நீரே

2049. ராஜன் தாவீதூரிலுள்ள

1.ராஜன் தாவீதூரிலுள்ள
மாட்டுக் கொட்டில் ஒன்றிலே
கன்னி மாதா பாலன் தன்னை
முன்னணையில் வைத்தாரே,
மாதா, மரியம்மாள்தான்;
பாலன் இயேசு கிறிஸ்துதான்.

2.வானம் விட்டுப் பூமி வந்தார்
மா கர்த்தாதி கர்த்தரே;
அவர் வீடோ மாட்டுக் கொட்டில்,
தொட்டிலோ முன்னணையே,
ஏழையோடு ஏழையாய்
வாழ்ந்தார் பூவில் தாழ்மையாய்.

3.ஏழையான மாதாவுக்கு
பாலனாய்க் கீழ்ப்படிந்தார்;
பாலிய பருவம் எல்லாம் அன்பாய்
பெற்றோருக்கு அடங்கினார்,
அவர்போல் கீழ்ப்படிவோம்,
சாந்தத்தோடு நடப்போம்.

4.பாலர்க்கேற்ற பாதை காட்ட
பாலனாக வளர்ந்தார்;
பலவீன மாந்தன் போல
துன்பம் துக்கம் சகித்தார்
இன்ப துன்ப நாளிலும்
துணை செய்வார் நமக்கும்.

5. மாட்டுத் தொழுவத்திலல்ல
தெய்வ ஆசனத்திலும்
ஏழைக் கோலமாக அல்ல
ராஜ கிரீடம் சூடியும்,
மீட்பர் வீற்றிருக்கின்றார்
பாலர் சூழ்ந்து போற்றுவார்

Tamil Hymns

2050. ராஜன் தாவீதின் ஊரினிலே

ராஜன் தாவீதின் ஊரினிலே
ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்
மந்தையைக் காக்க
விண்தூதர்கள் இறங்க
விண் ஜோதி கண்டவரே

1. திகையாதே கலங்காதே
மகிழ்விக்கும் செய்தியுண்டு
ராஜாதி ராஜன் வல்லமைத் தேவன்
மானிடனாய் உதித்தார்

2. ஒரு மாட்டுத் தொழுவத்தினில்
அன்னை மரியின் மடியினில்
புல்லணை மீதினிலே
கடுங்குளிர் நேரத்தில்
பாலகனாய் பிறந்தார்

3. நட்சத்திரத்தின் ஒளியிலே
மூன்று ஞானியர் வந்தனரே
பொன் வெள்ளைத் தூபம்
காணிக்கையேந்தி
பாதம் பணிந்தனரே

Tamil Hymns

2051. ராஜன் பாலன் பிறந்தனரே

ராஜன் பாலன் பிறந்தனரே
தாழ்மையான தரணியிலே

ஆதிபன் பிறந்தார் அமலாதிபன் பிறந்தனரே
ஏழ்மையானதொரு மாட்டுக்கொட்டில்தனில்
தாழ்மையாய் அவதரித்தார் --- ராஜன்

1. அன்னை மரியின் கர்ப்பத்தில் உதித்தார்
அன்னல் ஏழையாய் வந்தார்
அவர் வாழ்வினில் மானிடரை
காக்க என்னிலே அவதரித்தார்
அன்னல் ஏழையாய் வந்தார்

2. பாரினில் பாவம் போக்கவே பாங்குடன்
மானிட ஜென்மம் எடுத்தார்
அவர் பாதம் பணிந்திடுவோம்
பாலனின் அன்புக்கு எல்லை உண்டோ
மானிட ஜென்மம் எடுத்தார்

2052. ராஜா உம் பிரச்னனம் போதுமையா

ராஜா உம் பிரச்னனம் போதுமையா
எப்போதும் எனக்குப் போதுமையா

பிரசன்னம் பிரசன்னம் தேவ பிரசன்னம்

1. அதிகாலமே தேடுகிறேன்
ஆர்வமாய் நாடுகிறேன்

2. உலகமெல்லாம் மாயையையா
உம் அன்பொன்றே போதுமையா

3. இன்னும் உம்மை அறியணுமே
இன்னும் கிட்டி சேரணுமே

4. கரம் பிடித்த நாயகரே
கைவிடாத தூயவரே

5. ஆட்கொண்ட அதிசயமே
ஆறுதலே அடைக்கலமே

6. துதியினிலே வாழ்பவரே
துணையாளரே என் மணவாளரே

7. அநாதி தேவன் அடைக்கலமே
அவர் புயங்கள் ஆதாரமே

8. சகாயம் செய்யும் கேடகமே
மகிமை நிறை பட்டயமெ

9. சீர்படுத்தும் சிருஷ்டிகரே
ஸ்திரப்படுத்தும் துணையாளரே

10. பெலப்படுத்தும் போதகரே
நிலைநிறுத்தும் நாயகரே

Tamil Hymns

2053. ராஜாதி ராஜாவாக அரசாளும் தெய்வமே

ராஜாதி ராஜாவாக அரசாளும் தெய்வமே
உம்மை போன்ற தெய்வம் இல்லை
உம்மை போன்ற கர்த்தர் இல்லை
ராஜ்யம் வல்லமை மாட்சிமை உமதே(2)

1. உலகிலுள்ள யாவற்றிற்கும் சொந்தகாரரே
நதிகள் கூட கைகள் தட்டி உம்மைப் பாடுதே

2. நீதியுள்ள ராஜாவாக ஆளும் தெய்வமே
இரக்கம் உருக்கம் தயவு எல்லாம்
உம்மில் தான் உண்டே

3. பாவம் போக்க பாலனாக
மண்ணில் வந்தவரே உலகை ஆளும்
ராஜாவாக மீண்டும் வருவீரே

4. கண்ணீர் கவலை கஷ்டம் யாவும்
நீக்கிப் போட்டீரே - சந்தோஷமும்
சமாதானமும் நிறைவாய்த் தந்தீரே

ஆட்சி மாறா அரசாங்கத்தை
ஆளும் எங்கள் ஆளுநரே
சிலுவைக்கட்சி உமது கட்சி
என்றும் அதுவே ஆளுங்கட்சி
ராஜாதி ராஜா இயேசுவே
கர்த்தாதி கர்த்தர் இயேசுவே
தேவாதி தேவன் இயேசுவே
மன்னாதி மன்னன் இயேசுவே
மரணத்தை வென்றவர் இயேசுவே
பரலோகம் சென்றவர் இயேசுவே
மீண்டும் வருவாரே இயேசுவே

Tamil Hymns

20574. ராஜாதி ராஜாவைக் கொண்டாடுவோம்

ராஜாதி ராஜாவைக் கொண்டாடுவோம்
நாள்தோறும் துதிபாடி கொண்டாடுவோம்

1. வந்தாரே தேடி வந்தாரே
தன் ஜீவன் எனக்காய் தந்தாரே - என்னை
வாழவைக்கும் தெய்வம்தான் இயேசு
என்னை வழிநடத்தும் தீபம்தானே இயேசு

2. கலக்கம் இல்லே எனக்கு கவலை இல்லே
கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்
என்னை பசும்புல் மேய்ச்சலுக்கு நடத்துவார்
நான் பசியாற உணவு ஊட்டி மகிழுவார்

3. வென்றாரே சாத்தானை வென்றாரே
வல்லமைகள் அனைத்தையும் உரிந்தாரே
அந்த சாத்தான் மேலே அதிகாரம் தந்தாரே
என் இயேசு நாமம் சொல்லச் சொல்லி
முறியடிப்பேன்

4. கரங்களிலே என்னை பொறித்து உள்ளார்
கண்முன்னே தினம் என்னை நிறுத்தியுள்ளார்
ஏற்ற காலத்திலே உயர்த்துவார் - அவர்
கரங்களுக்குள் அடங்கி நான் காத்திருப்பேன்

5. முடிவில்லாத தம் மகிமையிலே
பங்கு பெற என்னை தெரிந்து கொண்டார்
என்னை சீர்படுத்தி ஸ்திரப்படுத்தி நடத்துவார்
பெலப்படுத்தி நிலைநிறுத்தி மகிழுவார்

Tamil Hymns

2055. ராஜா வருகிறார் எந்தன் நேசர் வருகிறார்

ராஜா வருகிறார் எந்தன் நேசர் வருகிறார்
மேகமீதினில் என்னை
சேர்த்துக் கொள்ளுவார் -2

ஆனந்த சத்தத்தோடு செல்லுவேன்
ஆர்ப்பரித்து சாத்தானை வெல்லுவேன்
துன்பங்கள் நீங்கியே இன்பங்கள் நல்கியே
விண்ணவர் மார்பினில் சாய்ந்துகொள்ளுவேன்

1. இரட்சண்ய தலைச்சீராவை தந்தவர்
ஆவியின் பட்டயத்தை அளித்தவர்
சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக்கொண்டு நாளுமே
சாத்தானை வெல்ல பெலன் நாளும் தந்தவர்

2. கிருபையின் நாட்களில் வாழ்ந்திடும்
கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளா மாந்தரே
காலமும் செல்லுதே தாமதம் செய்யாதீர்
இரட்சகராம் இயேசுவின் பாதம் சேருவீர்

Tamil Hymns

2056. ரொம்ப ரொம்ப நல்லவரு எங்கள்

ரொம்ப ரொம்ப நல்லவரு எங்கள் இயேசு
நம்பி வந்த ஜனத்துக்கு நல்ல இயேசு - 2
எங்கள் இயேசு நல்ல இயேசு
நம்பி வந்த ஜனத்துக்கு நல்ல இயேசு - 2

1. கண்ணீரை துடைத்து
கவலையை போக்குவார்
அருகிலே வந்து ஆறுதல் தருவார் - 2

2. காயப்பட்ட இதயத்தை கரம் நீட்டி தொட்டு
கலங்காதே என்று அணைத்திட வருவார்

3. சத்திய வெளிச்சம் அவர் தான் அன்றோ
உம் துக்க நாட்கள் முடிந்தனவன்றோ

4. வெள்ளம் போல் சத்தியம் வந்திடும் போது
வெற்றிக்கொடி ஏந்தும் வல்லவர் அவரே

5. முழுமனதோடு அவரிடம் ஓடி வா
மன்னிப்பு வழங்கும் வள்ளலை தேடி வா

6. பணம் பொருளின்றி இலவசமாக
அவரன்பை சுவைத்திட வேகமாய் வாங்க

Tamil Hymns

2057. ரோஜாப்பூ வாசமலர்கள் நாம்

ரோஜாப்பூ வாசமலர்கள் நாம்
இப்போ நேச மணாளர்மேல் தூவிடுவோம்

1. மல்லிகை முல்லை சிவந்தி பிச்சி
மெல்லியர் சேர்ந்து அள்ளியே வீசி
நல் மணமக்கள் மீது நாம்
எல்லா மலரும் தூவிடுவோம்

2. மன்னனாம் மாப்பிள்ளை பண்புள்ள பெண்ணுடன்
அன்றிலும் சேறும்போல் ஒன்றித்து வாழ
ஆண்டவர் ஆசீர்வதிக்க நம்
வேண்டுதலோடு தூவிடுவோம்

3. புத்திர பாக்யம் புகழும் நல் வாழ்வும்
சத்திய மார்க்கம் சுத்த நல் இதயம்
நித்திய ஜீவனும் பெற்றிவர் என்றும்
பக்தியாய் வாழ்ந்திடத் தூவிடுவோம்

4. கறைதிறையற்ற மணவாட்டி சபையை
இறைவனாம் இயேசு தன்னுடன் சேர்க்கும்
மங்கள நாளை எண்ணியே இப்போ
நேச மணாளர் மேல் தூவிடுவோம்

Tamil Hymns

2058. லேசான காரியம் உமக்கது லேசான

லேசான காரியம் உமக்கது
லேசான காரியம்

பெலமுள்ளவன் பெலனற்றவன்
பெலமுள்ளவன் பெலனற்றவன்
யாராயிருந்தாலும் உதவிகள் செய்வது
லேசான காரியம்

1. மண்ணை பிசைந்து மனிதனை படைத்தது
லேசான காரியம்
மண்ணான மனிதனுக்கு மன்னாவை அளித்தது
லேசான காரியம்

2. கற்பாறை போல் கடல் மேல் நடப்பது
லேசான காரியம்
கற்சாடி நீரை கனிரசமாக்குதல்
லேசான காரியம்

3. கூழாங்கல்லாலே கோலியாத் வீழ்ந்தது
லேசான காரியம்
ஆழ்கடல் மீனத்தில் வரிப்பணம் காண்பது
லேசான காரியம்

4. பெருமழை பெய்தும் பேழையை காப்பது
லேசான காரியம்
பெருங்கடல் பிளந்துமே பாதையை வகுப்பதும்
லேசான காரியம்

Tamil Hymns

2059. லேவியரே ஆசாரியரே ஆனந்தமாய்

லேவியரே ஆசாரியரே
ஆனந்தமாய் நாம் கூடி வந்தோமே

இயேசுவின் பாதத்தில் பரவசமாய்
பாரத மீட்புக்காய் கிருபை பெறுவோம்

1. எட்டுத் திசைக்கும் யேசு புகழ் பரவ
நித்திய சுவிசேஷம் ஏந்திச் செல்லுவோம்
சாத்தானின் கட்டுகளை அறுத்திடுவோம்
சத்திய சபை கட்டி எழுப்பிடுவோம்

2. விசுவாச வீரர்களாய் எழுபிடுவோம்
வெளிப்பாடு வரங்களை உபயோகிப்போம்
பாதாளக் கட்டுகளை அறுத்திடுவோம்
பரலோக பலன்களை சேர்த்துக்குவிப்போம்

3. நம்பிக்கை நங்கூரமாய் நடந்திடுவோம்
தாழ்மையின் ரூபங்களால் வளர்ந்திடுவோம்
பாவத்தின் கட்டுகளை அறுத்திடுவோம்
காரிய சமர்த்தர்களாய் நின்றிடுவோம் - லேவியரே

4. ஜெபத்தின் ஜெயங்களால் முன் செல்லுவோம்
தியான ஊற்றுகளில் தூது பெறுவோம்
மாமிசத்தின் கட்டுகளை அறுத்திடுவோம்
கண்ணீரின் பள்ளத்தாக்கில் கர்த்தரைக் காண்போம்

5. பேச்சின் தூதர்களாய் பறந்திடுவோம்
நடக்கையின் நகல்களாய் விரைந்திடுவோம்
சமுதாயக் கட்டுகளை அறுத்திடுவோம்
நன்மையின் வாசல்களாய் விழித்திடுவோம்

6. இயேசுவின் காயங்களின் கனிகளே நாம்
களிகூர்ந்து மகிழ்ந்து ஆடிப்பாடுவோம்
அப்போஸ்தல ஊழியத்தில் ஆர்ப்பரிப்போம்
ஆசீர்வாத மழைக்கு மேகங்களாவோம்

Tamil Hymns

2060. வதியை தேடி ஓடாதே அது

வதியை தேடி ஓடாதே
வதியை தேடி ஓடாதே - அது
தொடு வானம்
வசதிகள் நிறைவு தருவதில்லை
வானத் தை எவரும் தொடுவதில்லை

1. வசதி வந்தால் பயன்படுத்து
சுவிசேஷம் சொல்வதற்கு
ஆளுகை செய்ய NO NO
அடிமைப்படுத்த NO NO

2. அழகெல்லாம் அற்றுப்போகும்
எழில் ஏமாற்றும்
கவர்ச்சி எல்லாம் கானல் நீர்
கரைந்து போகும் சீக்கிரத்தில்

3. வெட்டுக்கிளி காட்டுத்தேன்
உண்டு வந்தார் யோவான்
உலகத்தை கலக்கிய மனிதர் அவர்
உடுத்தியதோ ஒரு ஒட்டகத்தோல்

4. பணமயக்கம் எல்லாவித
தீமைகளின் தொடக்கம்
சிற்றின்பம் எச்சரிக்கை
உன்னை நடைபிணமாக்கிவிடும

Tamil Hymns

2061. வந்தருளும் தூய ஆவியே

1. வந்தருளும் தூய ஆவியே
தந்தருளும் தேவ மகிமையே

ஆவியே தூய ஆவியே
ஆவியே தூய ஆவியே

2. அபிஷேகியும் தூய ஆவியே
அனல் மூட்டும் தூய ஆவியே

3. ஆட்கொள்ளும் தூய ஆவியே
அரவணைக்கும் தூய ஆவியே

4. ஊற்றிடுமே தூய ஆவியே
உணர்திடுமே தூய ஆவியே

5. வழிகாட்டும் தூய ஆவியே
வழிநடத்தும் தூய ஆவியே

Tamil Hymns

2062. வந்தருள் இவ்வாலயத்தில்

1. வந்தருள் இவ்வாலயத்தில் மகிமை ஏகோவாவே-உனை
வாழ்த்தும் அடியார்க்கு நிதம் வாய்த்த பெரு வாழ்வே
அந்தி பகல் இங்குனை வந்தடையும் அடியார்க் கிரங்கி
ஆதரவாய் ஆண்டு கொள்வாய் ஆதி பராபரன் குமாரா

2. திருக் கருணை மொழியால் மனத் திருக்கறுக்கும் பொருட்டெழுந்து
தீய வினை மிதித் தழிப்பாய் தேவர் பெருமானே
பெருக்கமுள்ள உன் வசனம் பேதையருக்கே பலிக்க
உருக்கமுடன் இரங்கும் ஐயா உன் பதமே தஞ்சம் என்றும்

3. சஞ்சலம் மிஞ்சும் மனதால் சரணம் உனக்கென்றும் வரும்
தமியர் தமக்காறுதலாய்த் தயைசெய் ஆதிசேயா
செஞ் சொல் மலிந்த புலவர் செப்பு தமிழ்க் குகந்த உன்றன்
சீரடிக்கண் சேர்பவர்க்கே ஆருயிர் உண்டாவதற்கே

4. பூவுலகை ஆளும் மன்னர் போதம் உணர் வேதியர் உன்
பொற்பதத்தை அர்ச்சிக்கவே நற்பதம் தா தேவே
மூவுலகிலும் துதியும் முக்யம் மகத்வம் கனமும்
மா பலமுமே உமக்கே மங்களம் உண்டாவதாக

2063. வந்தனம் வந்தனமே

வந்தனம், வந்தனமே!
தேவ துந்துமி கொண்டிதமே! - இது
வரையில் எமையே வளமாய்க் காத்த
எம்துரையே, மிகத் தந்தனம்

1. சந்ததஞ்ச சந்ததமே எங்கள்
தகுநன்றிக் கடையாளமே
நாங்கள் தாழ்ந்து வீழ்ந்து சரணஞ்
செய்கையில் தயைகூர், சுரர்பதியே

2. சருவ வியாபகமும் எமைச்
சார்ந்து தற்காத்ததுவே
எங்கள் சாமி பணிவாய் நேமி
துதி புகழ் தந்தனமே நிதமே!

3. சருவ வல்லபமதும் எமைத்
தாங்கினதும் பெரிதே
சத்ய சருவேசுரனே கிருபாகரனே
உன் சருவத்துக்குந் துதியே

4. மாறாப் பூரணனே, எல்லா
வருடங்களிலும் எத்தனை
உன்றன் வாக்குத் தவறா தருளிப் பொழிந்திட்ட
வல்லாவிக்குந் துதியே

5. உந்தன் சர்வ ஞானமும்
எங்களுள்ளிந்திரியம் யாவையும்
பார்த்தால் ஒப்பே தருங் காவலே
உன்னருளுக்கோ தரும் புகழ் துதி துதியே

Tamil Hymns

2064. வந்தாளுமே எந்நாளுமே

வந்தாளுமே எந்நாளுமே,
உன் நாமமே என் தாபமே
இந்நேரமே கண்பாருமே

1. என் மேசையா உன் ஆசையைக்
கொண்டோசையாய் நான் பேசவே
நின்னாசி தா நந் நேசமாய்

2. தேவாவியே வரந்தாரும்
இப்பாவியின் பாவம் தீரும்
உம் ஜோதியின் ஒளிவீசும்

3. இப்பாரிலே நின்பேரையே
தப்பாமலே யான் பாடியே
எப்போதுமே கொண்டாடுவேன்

4. சத்துருக்கள் சதி செய்ய
நித்தம் என்னை நெருக்குகிறார்
அத்தனே நீர் அடைக்கலம்

5. நாதனுன்னை எந்நேரமும்
ஓதும் ஏழைப் பாவியேனை
ஆதரித்தே ஆண்டருள்வாய்

2065. வரவேணும் எனதரசே

வரவேணும் எனதரசே
மனுவேல், இஸ்ரேல் சிரசே

அருணோதயம் ஒளிர் பிரகாசா
அசரீரி ஒரே சரு வேசா

1. வேதா கருணாகரா மெய்யான பராபரா
ஆதார நிராதரா அன்பான சகோதரா
தாதாவும் தாய் சகலமும் நீயே
நாதா, உன் தாபரம் நல்குவாயே

2. படியோர் பவ மோசனா, பரலோக
சிம்மாசனா முடியாதருள் போசனா
முதன் மாமறை வாசனா
இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்
இமையவர் அடி தொழு மேன்மையின் எந்தாய்

3. வானோர் தொழும் நாதனே, மறையாகம
போதனே கானாவின் அதீதனே, கலிலேய
வினோதனே ஞானாகரமே, நடு நிலை யோவா
நண்பா உனத நன்மையின் மகா தேவா!

Tamil Hymns

2066. வரவேண்டும் தேவ ஆவியே

வரவேண்டும் தேவ ஆவியே
எங்கள் மத்தியிலே
வரவேண்டும் தேவ ஆவியே
எங்கள் உள்ளத்திலே

ஆட்கொள்ளும் ஐயா
அபிஷேகியும்
அனல் மூட்டி
எரிய விடும்

தூய ஆவியே அன்பின் ஆவியே
துணையாளரே தேற்றும் தெய்வமே
ஊற்றுத் தண்ணீரே உள்ளம் ஏங்குதையா
வரவேண்டும் நல்லவரே வல்லவரே

Tamil Hymns

2067. வருத்தப்பட்டு பாரம் சுமக்கும் நண்பனே

வருத்தப்பட்டு பாரம் சுமக்கும் நண்பனே
வந்திடு என் இயேசு உன்னை அழைக்கின்றார்
மனிதன் உன்னைக் கைவிடுவான் - இயேசு கைவிடார்
மனிதன் மனம் மாறிடுவான் - இயேசு மாறிடார்

1. வாழ்கின்ற நாட்களெல்லாம்
வீணாக கழித்துவிட்டாய் - வருத்தங்கள்
வேதனைகள் எல்லாம் தாங்கிவிட்டாய்
வேதனையில் வாழ்ந்தது போதும்
சோதனையை சகித்தது போதும் - வாழ
வைக்கும் தேவன் உன்னை அழைக்கின்றார்
வந்துவிடு இயேசு உன்னை நேசிக்கிறார்

2 .மாடி மனை வீடு கட்டி
வாழ்ந்து பார்த்துவிட்டாய் - மனசுக்கு
நிம்மதியைத் தேடி அலைந்து விட்டாய்
கூடுவிட்டு ஆவிபோனால்

கூட ஒன்றும் வருவதுமில்லை
சேர்ந்த வைத்த பொன்னும் பொருளும்
உன்னோடு புதைப்பதுமில்லை - காதறுந்த
ஊசியும் கூட வருவதில்லை
கடைசிவரை இயேசுவைத் தவிர யாருமில்லை

Tamil Hymns

2068. வருவாய் தருணமிதுவே

வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே
வல்ல ஆண்டவர் இயேசுவண்டை

1. வாழ் நாளெல்லாம் வீண் நாளாய்
வருத்தத்தோடே கழிப்பது ஏன்
வந்தவர் பாதம் சரணடைந்தால்
வாழ்வித்து உன்னைச் சேர்த்துக்கொள்வார்

2. கட்டின வீடும் நிலம் பொருளும்
கண்டிடும் உற்றார் உறவினரும்
கூடுவிட்டு உன் ஆவி போனால்
கூட உன்னோடு வருவதில்லை

3. அழகும் மாயை நிலைத்திடாதே
அதை நம்பாதே மயக்கிடுமே
மரணம் ஓர் நாள் சந்திக்குமே
மறவாதே உன் ஆண்டவரை

4. வானத்தின் கீழே பூமிமேலே
வானவர் இயேசு நாமம் அல்லால்
இரட்சிப்படைய வழியில்லையே
இரட்சகர் இயேசு வழி அவரே

5. தீராத பாவம் வியாதியையும்
மாறாத உந்தன் பெலவீனமும்
கோரக் குருசில் சுமந்து தீர்த்தார்
காயங்களால் நீ குணமடைய

6. சத்திய வாக்கை நம்பியே வா
நித்திய ஜீவன் உனக்களிப்பார்
உன் பெயரை ஜீவா புஸ்தகத்தில்
உண்மையாய் இன்று எழுதிடுவார்

Tamil Hymns

2069. வருவார் விழித்திருங்கள்

வருவார் விழித்திருங்கள், இயேசுநாதர்
வருவார் விழித்திருங்கள்

பெரியவர் சிறியவர் பேதையர் மேதையர்
சருவர்க்கும் நடுத்தீர்த்துத் தகு பலன் அளித்திட - வரு

1.பேரிகையால் அண்டபித்திகளும் குலுங்க
பேர் எக்காளத் தொனியால் பேய்க் கணங்கள் கலங்க
தாரணியோர் மலங்க, தமைப் பற்றினோர்களும்
சீர்நிறை தூதரும் சேர்ந்து சூழ்ந்திட - வரு

2.வானம் மடமடென்க, வையம் கிடுகிடென்க
ஈனப் பேயைச் சேர்ந்த எவரும் நடுநடுங்க
மானம் இன்றி வாழ்ந்த மா பாதகர் அடங்க
ஞான கானம் பாடநல்லோர் சபை தொடங்க - வரு

3.விசுவாசிகள் தமை மெச்சிப் புகழுதற்கும்
மேலா மோட்ச தலத்தோர் சால மகிழுதற்கும்
விசுவாச ஈனரை வியவா திகழுதற்கும்
விண்ணோர் குழாங்கள் சூழ, அண்ணல் கிறிஸ்தரசர் - வரு

Tamil Hymns

2070. வருஷப் பிறப்பாம் இன்று

1. வருஷப் பிறப்பாம் இன்று
புது பக்தியுடனே
தேவரீரிடத்தில் வந்து
வாழ்த்தல் செய்ய இயேசுவே
உந்தன் ஆவியை அளித்து
என்னைப் பலப்படுத்தும்
அடியேனை ஆதரித்து
வழிகாட்டியாய் இரும்

2. இது கிருபை பொழியும்
வருஷம் ஆகட்டுமேன்
என்னில் ஒளி வீசச்செய்யும்
என் அழுக்கை அடியேன்
முழுவதும் கண்டறிந்து
அருவருக்கச் செய்யும்
பாவம் யாவையும் மன்னித்து
நற்குணத்தை அளியும்

3. நீர் என் அழுகையைக் கண்டு
துக்கத்தாலே கலங்கும்
அடியேனைத் தேற்றல் செய்து
திடன் அளித்தருளும்
இந்த புது வருஷத்தில்
பாவத்துக்கும் கேட்டுக்கும்
தப்புவித்து என்னிடத்தில்
கிருபை கூர்ந்தருளும்

4. மாயமற்ற கிறிஸ்தோனாக
இந்த வருஷத்திலே
நான் நடக்கத்தக்கதாக
ஈவளியும் கர்த்தரே
யாவர்மேலும் அன்பின் சிந்தை
வைத்து தெய்வ பக்தியை
எனக்கு ரட்சிப்புண்டாக
காண்பித்திருப்பேனாக

5. பூரிப்பாய் இவ்வருஷத்தை
நான் முடிக்க என்னை நீர்
தாங்கி உந்தன் திருக் கையை
என்மேல் வைக்கக்கடவீர்
வருத்தம் வந்தாலும் உம்மை

Tamil Hymns

நம்பிப் பற்றிக்கொள்ளுவேன்
மரித்தாலும் பேரின்பத்தை
நான் அடைந்து வாழுவேன்.

Tamil Hymns

2071. வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை

வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை
இயேசுவின் இரத்தத்தில்
வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால்

2072. வல்லமை தாருமே பெலவீனன்

வல்லமை தாருமே
பெலவீனன் நானல்லோ
பெலவீன நேரத்தில் உம்
பெலனைத் தாருமே

1. வாழ்க்கையின் பாரங்கள்
என்னை நெருக்குதே - 2
உலகத்தின் ஈர்ப்புகள்
என்னை இழுக்குதே - 2

2. ஆவியின் வல்லமை
என் மேல் ஊற்றுமே
முழுமையாய் என்னையும்
மறுரூபமாக்குமே

3. பரிசுத்த வாழ்க்கையை
வாழ நினைக்கிறேன்
பாவத்தின் பிடியிலே
சிக்கித் தவிக்கிறேன்

Tamil Hymns

2073. வல்லமை தாரும் தேவா

வல்லமை தாரும் தேவா - வரங்கள்
தாரும் தேவா இன்றே தாருமே

1. மேல் வீட்டறையில் வேகமாக வந்தவரே
அக்கினியாக இன்றே வாருமே
வரங்கள் நிறைந்த வாழ்வை தந்திடவே
உந்தன் வல்லமையாலே என்னை நிரப்புமே

2. ஆதி சபையில் அச்சாரமாக வந்தவரே
அனுதினமும் என்னை நடத்துமே
ஆயிரமாய் வளர்ந்து பெருகவே
எங்கள் சபைதனிலே எழுந்தருளுமே

3. சீனாய் மலையில் மகிமையாக வந்தவரே
கனிகள் நிறைந்த வாழ்வை தாருமே
அபிஷேகத்தால் என்னை நிரப்பியே
ஆத்தும அறுவடையால் திருப்தியாக்குமே

Tamil Hymns

2074. வல்லமை தேவனே சர்வ சிருஷ்டியின்

வல்லமை தேவனே
சர்வ சிருஷ்டியின் கர்த்தரே
ஆராதிப்போம் உம் நாமத்தை
எங்கள் இயேசுவே

1. யேகோவா ஷம்மா அல்லேலூயா
யேகோவா ஷாலோம் அல்லேலூயா
என்றும் நம்மோடு இருப்பவரே
சமாதான காரணர் நீரே

2. யேகோவா சிட்கேனு அல்லேலூயா
யேகோவா காதேஷ் அல்லேலூயா
எங்கள் நீதியாய் இருப்பவரே
பரிசுத்தம் செய்பவர் நீரே

3. யேகோவாயீரே அல்லேலூயா
யேகோவா நிசியே அல்லேலூயா
எல்லா தேவையும் சந்திப்பீர்
ஜெயம் தரும் தேவன் நீரே

4. யேகோவா ரா்ஃப்பா அல்லேலூயா
யேகோவா எல்ஷடாய் அல்லேலூயா
அற்புத சுகத்தை தருபவரே
சர்வ வல்லவர் நீரே

Tamil Hymns

2075. வல்லமை தேவா வந்திறங்க

வல்லமை தேவா வந்திறங்க
உந்தனின் பாதமே பணிவோம்
வேண்டி நிற்கும் எங்கள் மீதே
வல்ல உம் ஆவியை பொழிவீர்

1. தாகமே தீர்த்திட தேவனே வாரும்
தாசர்கள் மத்தியிலே
கருணை கரத்தால் அபிஷேகிப்பீர்
பரிசுத்த ஆவியில் மகிழ்வோம்

2. ஊற்றிடும் தேவனே உன்னத ஆவி
உள்ளமே ஆனந்திக்கும்
கிருபை தயவால் இறங்கிடுமே
மகிமையின் ஆவியில் மகிழ்வோம்

3. அற்புத வல்லமை ஆவியில் தாரும்
ஆவலுடன் ஜெபிக்க
கறைகள் திரைகள் கழுவிடுமே
கிறிஸ்துவின் ஆவியில் மகிழ்வோம்

4. கற்களும் முட்களும் கிறைந்த இப்பாரில்
சீயோன் வித்தை விதைத்து
ஏற்ற விதமாய் பலன் கொடுக்க
ஆவியின் மாரியால் நிறைப்பீர்

2076. வல்லமை தேவை தேவா

வல்லமை தேவை தேவா
வல்லமை தாரும் தேவா
இன்றே தேவை தேவா
இப்போ தாரும் தேவா

பொழிந்திடும் வல்லமை
உன்னதத்தின் வல்லமை
ஆவியின் வல்லமை
அக்கினியின் வல்லமை

1. மாம்சமான யாவர் மேலும்
ஆவியை ஊற்றுவேன் என்றீர்
மூப்பர் வாலிபர் யாவரும்
தீர்க்க தரிசனம் சொல்வாரே

2. பெந்தே கோஸ்தே நாளின் போது
பெரிதான முழக்கத்தோடு
வல்லமையாக இறங்கி
வரங்களினாலே நிரப்பும்

3.மீட்கப்படும் நாளுக்கென்று
முத்திரையான ஆவியைத்தாரும்
பிதாவே என்று அழைக்க
புத்ர சுவிகாரம் ஈந்திடும்

Tamil Hymns

2077. வல்லமை வல்லமை ஆவியே

வல்லமை வல்லமை ஆவியே
என்னை அனலாக்கிடும்
வல்லமை வல்லமை ஆவியே
என்னை அபிஷேகியும

1. சாத்தானின் கோட்டையை முறியடிக்க
வல்லமை தாருமே -2
தேவனின் இராஜியம் எழும்பி கட்ட
வல்லமை தாருமே -2

2. ஆவியின் வரங்களினால்
என்னை நிரப்பிடும் -2
கனிகளைக் கொடுத்து சாட்சியாய்
வாழ்ந்தும்மை மகிமைப்படுத்துவேன் - 2

Tamil Hymns

2078. வல்லமையின் ஆவியானவர்

வல்லமையின் ஆவியானவர்
என்னுள் வந்துவிட்ட காரணத்தினால்
பொல்லாத சாத்தானை
ஒரு சொல்லாலே விரட்டி விட்டேன்

1. Power ஆவி எனக்குள்ளே
பய ஆவி அணுகுவதில்லை
அன்பின் ஆவி எனக்குள்ளே
அகற்றிவிட்டேன் கசப்புகளை

2. கட்டுப்பாட்டின் ஆவியானவர்
என்னை ஊழவெசழட பண்ணி நடத்துகிறார்
இஷ்டம் போல அலைவதில்லை
அவர் சித்தம் செய்து வாழ்பவன்நான்

3. கிறிஸ்துவுக்குள் நறுமணம் நான்
தெருத்தெருவா மணம் வீசுவேன்
மீட்பு பெறும் அனைவருக்கும்
நான் வாழ்வளிக்கும் வாசனையாவேன்

4. உலகத்திற்கு வெளிச்சம் நான்
இந்த ஊரெல்லாம் டார்ச் அடிப்பேன்
உப்பாக பரவிடுவேன்
நான் எப்போதும் சுவை தருவேன்

5. கர்த்தரின் முத்திரை என் மேல்
நான் முற்றிலும் அவருக்குச் சொந்தம்
அச்சாரமாய் ஆவியானவர்
நான் நிச்சயமாய் மீட்பு பெறுவேன்

6. தேவனாலே பிறந்தவன் நான்
எந்த பாவமும் செய்வதில்லை
கர்த்தரே பாதுகாக்கிறார்
தீயோன் என்னை தீண்டுவதில்லை

Tamil Hymns

2079. வழி சொன்னவர் வழியுமானவர்

வழி சொன்னவர் வழியுமானவர்
வழி சத்தியம் ஜீவனுமாய் வந்தவர்
வார்த்தை என்றவர் வார்த்தையானவர்
உலகினிலே ஒளியாக உதித்தவர் - இவரே

மண்ணோர் போற்றும் மன்னாதி மன்னன்
விண்ணோர் போற்றும் தேவாதி தேவன்
சான்றோர் போற்றும் தூயாதி தூயன்
ராஜாதி ராஜனவர் - இயேசு(4)

1. இயேசுவே தெய்வம் ஒரே ஒரு தெய்வம்
இயேசுவே தேவன் மெய்யான தேவன்
இயேசுவே தெய்வம் தேடி வந்த தெய்வம்
இயேசுவே தேவன் மீட்க வந்த தேவன்

2. இயேசுவே இரட்சகர் உயிர் தந்த இரட்சகர்
இயேசுவே ஆண்டவர்
உயிர்த்தெழுந்த ஆண்டவர்
இயேசுவே கர்த்தனாம் கர்த்தாதி கர்த்தனாம்
இயேசுவே ராஜனாம் ராஜாதி ராஜனாம்
இயேசுவே ராஜா ராஜாதி ராஜா

Tamil Hymns

2080. வழி நடத்தும் வல்ல தேவன்

வழி நடத்தும் வல்ல தேவன்
வாழ்வில் நாயகனே வாழ்வில் நாயகனே
நம் தாழ்வில் நாயகனே

1. பரதேசப் பிரயாணிகளே நாம்
வாழும் பாரினிலே - பரமானந்தத்தோடே
செல்வோம் - பரமன் நாட்டிற்கே
இயேசு பரன் தம் வீட்டினிற்கே

2. போகும் வழியைக் காட்டி நல்ல
போதனை செய்வார் - ஏகும் சுத்தர்
மீது கண்கள் இருத்தி நடத்துவார்
இயேசு திருத்தி நடத்துவார்

3. அந்தகார சக்திகள் எம்மை
அணுகிடாமலே - சொந்தமான
தம் ஜனத்தை சூழ்ந்து காப்பாரே
இயேசு துணையாய் நிற்பாரே

4. வாதை நோய்கள் வன்துன்பங்கள்
வருத்திய போதும் - பாதையில்
நாம் சோர்ந்திடாமல் பலப்படுத்திடுவார்
இயேசு திடப்படுத்திடுவார்

5. காடானாலும் மேடானாலும் கடந்து
சென்றிடுவோம் - பாடானாலும்
பாடிச் செல்வோம் பரவசமுடனே
இயேசு பரன் தான் நம்முடனே

6. அன்றன்றுள்ள தேவை தந்து
ஆதரிப்பாரே - என்றென்றும்
துதிகனமும் மகிமையவர்க்கே
இயேசு மகிபனாமவர்க்கே

Tamil Hymns

2081. வழியும் நீரே ஒளியும் நீரே ஜீவனும்

வழியும் நீரே ஒளியும் நீரே
ஜீவனும் நீரே தேவனும் நீரே
நம்பி வந்தேன் நாயகன் இயேசுவே
என்றும் எந்தனின் துணை நீரே

நானே வழியும் சத்தியும் ஜீவன்
என்று உரைத்த எந்தன் இயேசுவே
மனதின் இருளை போக்கிட வந்த
மகிமை நிறைந்த தேவ தேவனே

நானிலம் போற்றும் மங்கிடா ஜோதி
மன்னவர் இயேசுவே மறைபொருள் ஞானமே
எங்கும் நிறைந்த என் அரும் செல்வமே
எந்தன் மேன்மை இயேசு தேவனே

உந்தன் வாக்கு எந்தனின் தீபம்
என்னை தந்துமே உம்மை சாருவேன்
உந்தனின் பாதை என்றும் செல்லுவேன்
நித்திய ராஜனை இயேசு தேவனே

மகிமை தங்கும் உந்தன் சமுகம்
என்றும் என்னை தேற்றி ஆற்றுதே
கலங்காமல் பதறாமல்
உந்தன் பாதை என்றும் செல்லுவேன்

2082. வழியைக் கர்த்தருக்குக் கொடுத்துவிடு

வழியைக் கர்த்தருக்குக் கொடுத்துவிடு
அவரையே நம்பியிரு - உன்
காரியத்தை வாய்க்கச் செய்வார்
உன் சார்பில் செயலாற்றுவார்
காத்திரு பொறுத்திரு
கர்த்தரையே நம்பியிரு
காரியத்தையே வாய்க்கச் செய்வார்
உன் சார்பில் செயலாற்றுவார்

1. தீயவன் செயல் குறித்து மனம் பதறாதே
புல்லைப் போல் உலர்ந்து
பூவைப் போல் உதிர்ந்து
இல்லாமல் போய்விடும் -காத்திரு

2. மகிழ்ந்து களிகூரு தொடர்ந்து துதிபாடு
உன் இதயத்தின் வாஞ்சை
விருப்பங்கள் எல்லாம்
விரைவில் நிறைவேற்றுவார்

3. நீதிமான் அனைவருக்கும்
வெற்றி உண்டு வெகு விரைவில்
துணைநின்று கர்த்தரோ நடத்திச் செல்வார்
துரிதமாய் ஜெயம் தருவார்

4. உனது நேர்மையெல்லாம்
அதிகாலை வெளிச்சமாகும்
நண்பகல் போலாகும்
உன் நீதி நியாயம்
நண்பா கலங்காதே

5. கோபத்தை விட்டுவிடு
சினம் நீ கொள்ளாதே
பொறாமை எரிச்சல் ஒருபோதும் வேண்டாம்
அது தீமைக்கு வழிநடத்தும்

Tamil Hymns

2083. வழிப்போக்கர் எங்கே போறீர்

1. வழிப்போக்கர் எங்கே போறீர்?
கையிலே கோல் பிடித்தே?
பிரயாணம் போறோம் எங்கள்
ராஜாவின் சொற்படிக்கே
காடு மேடு ஓடை தாண்டி
எங்கள் ராஜன் நகர் நோக்கி
எங்கள் ராஜன் நகர் நோக்கி
போறோம் இன்ப நாட்டுக்கே

2. வழிப்போக்கர் யாது நாடி
போகிறீர் மேலோகத்தில்?
வெள்ளை அங்கி வாடா க்ரீடம்
பெறுவோம் அத்தேசத்தில்
ஜீவ ஆற்றில் தாகம் தீர்ப்போம்
தேவனோடென்றென்றும் வாழ்வோம்
தேவனோடென்றென்றும் வாழ்வோம்
இன்ப மோட்ச லோகத்தில்

3. வழிப்போக்கர் உங்களோடே
வரலாமா நாங்களும்?
வாரும்! வாரும்! கூடவாரும்
மனமுள்ளோர் யாவரும்
வல்ல மீட்பர் நம்மைக் காப்பார்
பின்பு வாழ்த்தி நம்மைச் சேர்ப்பார்
பின்பு வாழ்த்தி நம்மைச் சேர்ப்பார்
மோட்ச வாழ்வைத் தரவும்

Tamil Hymns

2084. வறண்ட நிலம் தண்ணீருக்காய்

வறண்ட நிலம் தண்ணீருக்காய்
ஏங்குவது போல
என் ஆத்துமா உமக்காய் ஏங்கிடுதே
மான்கள் நீரோடை வாஞ்சித்து
கதறுவது போல
என் ஆத்துமா உமக்காய் ஏங்கிடுதே
மனிதர் குரல் கேட்டது போதும்
உம் குரல் கேட்கணுமே
உந்தன் மகிமை காண வேண்டுமே

வாரும் உம் பிரசன்னம்
வேண்டும் வேண்டும்
தேற்றிடும் உம் சமுகம்
வேண்டும் வேண்டும்

இந்த உலகத்திலே மனிதர்கள்
கேட்கும் கேள்விகள்
உன் தேவன் எங்கே எங்கே என்றார்கள்
அது கேட்டிடும் வேளையிலே
என் உள்ளம் நொறுங்கினதே
இரவும் பகலும் என் கண்ணீரே
என் போஜனம்
உம்மை நோக்கிக் காத்திருப்பேன்
உம்மை இன்னமும் துதித்திடுவேன்
உமது மகிமையை இந்த உலகம் அறிந்திட
வேண்டும் வேண்டும்

Tamil Hymns

2085. வற்றாத நீரூற்று பொலிருப்பாய்

வற்றாத நீரூற்று பொலிருப்பாய்
வளமிக்க தோட்டத்தைப் போலிருப்பாய்
கர்த்தரை நம்பி வாழ்ந்திருப்பாய்
காலமெல்லாம் நீ செழித்திருப்பாய்

1. வாய்க்கால்கள் ஓரம் நடப்பட்ட மரமாய்
எப்போதும் கனி கொடுப்பாய்
தப்பாமல் கனி கொடுப்பாய்

2. ஓடும் நதி நீர் பாயும் இடத்தில்
உயிரரெல்லாம் பிழைத்திடுமே
சுகமாக வாழ்ந்திடுமே

3. பலநாட்டு மக்கள் உன் நிழல் கண்டு
ஓடி வருவார்கள் பாடி மகிழ்வார்கள்

4. பஞ்ச காலத்தில் உன் ஆத்துமாவை
திருப்தியாக்கிடுவார் தினமும் நடத்திடுவார்

5. கோடைக் காலத்தில் வறட்சிக் காலத்தில்
அச்சமின்றி இருப்பாய் - நீ
ஆறுதலாய் இருப்பாய்

Tamil Hymns

2086. வனாந்திர யாத்திரையில் களைத்து நான்

வனாந்திர யாத்திரையில் களைத்து நான்
சோர்ந்து போகும் நேரங்களில்
நேசரின் சத்தம் என்னைத் தேற்றிடும்
என் வாழ்வு செழித்திடுமே

1. செங்கடல் எதிர்த்து வந்தும்
பங்கம் வந்திடாமல் அங்கு
பாதை ஒன்று கண்ணில் தெரியுதே
விடுவிப்பார் ஆண்டவர் நல்குவார் புதுபெலன்
தடுத்திடும் சத்துருக்கள் அழிந்து மாளவார்

2. தேவனை மறக்கச் செய்யும்
வேதனை நிறைந்த வாழ்வை
சத்துரு விதைத்திடும் போது
மாராவின் கசந்த நீர் மதுரமாக மாறிடும்
காரிருள் நீங்கிட வெளிச்சம் தோன்றுமே

3. இனிமையற்ற வாழ்வினில் நான்
தனிமையென்று எண்ணும்போது
மகிமை தேவன் தாங்கிடுவாரே
இனிமையாம் மன்னாவை வருஷிக்கப் பண்ணுவார்
இனியெனக் கொன்றுமே குறைவு இல்லையே

Tamil Hymns

2087. வா என்றழைக்கும் தெய்வ சத்தம்

வா என்றழைக்கும் தெய்வ சத்தம்
கேட்குதா நீ திரும்ப மாட்டாயா
உன்னை தேடி பார்க்கிறார்

1. உன் நொறுங்குண்ட இதயத்தை
அவரிடம் கொடுத்தால்
அதை சரி செய்து மறுபடியும்
உன்னிடம் கொடுப்பார்
உன் மன வேதனைகளை
நீ சொல்லி அழுதால்
அவ்வேதனைகளை தீர்த்து
ஆறுதல் அளிப்பார்
உன் கஷ்டங்கள் அறிவார்
உன் கண்ணீரை அறிவார் - உன்னை
பார்ப்பார் உன்னை மீட்பார் உனை காப்பார்

2. உன் மனபாரம் யாவையும்
அவரிடம் சொல்லு
உனை வழிகாட்டும் இறைவனிடம்
முழங்காலில் நில்லு
உன் உறவுகள் கைவிட்டால் உறவாக இருப்பார்
உன் உடலுன்னை கைவிட்டால் உயிராக இருப்பார்
உன் தேவனை தேடு அவர் பாதங்கள் நாடு
முழுதான மனதோடு துதியோடு

3. உன் சோர்வினை தீர்ப்பது மனிதர்கள் இல்லை
உன் நோய்களை தீர்ப்பது மருந்துகள் இல்லை
நீ பிழைத்திட ஒரு வழி உன் கிறிஸ்து தானே
உன் பாவங்கள் மறைவதும் அவரிடம்தானே
வேறு வழியை தேடாதே நீ தூரம் செல்லாதே
பதறாதே தயங்காதே மயங்காதே

Tamil Hymns

2088. வா பாவீ மலைத்து நில்லாதே வா

வா பாவீ மலைத்து நில்லாதே வா
வா பாவீ மலைத்து நில்லாதே வா

1. என்னிடத்தில் ஒரு நன்மையுமில்லை
யென்றெண்ணித் திகையாதே
உன்னிடத்தில் ஒன்றுமில்லை
அறிவேனே உள்ளபடி வாவேன்

2. உன்றனுக்காகவே நானேயடிபட்டேன்
உன் பாவத்தைச் சுமந்தேன்
சிந்திய என் திரு ரத்தத்தால் உன் பாவம்
தீர்த்து விட்டேன் பாவி வா

3. கொடிய பாவத்தழலில் விழுந்து
குன்றிப் போனாயோ
ஒடுங்கி வருந்தும் பாவிகள் தஞ்சம் நான்
ஒன்றுக்கும் அஞ்சாதே வா

4. விலக யாதொரு கதியில்லாதவன்
உலகை நம்பலாமோ
சிலுவை பாவிகளடைக் கலமல்லோ
சீக்கிரம் ஓடி வாவேன்

5. என்னிடத்தில் வரும் பாவி
யெவரையும் இகழ்ந்து தள்ளேனே
மன்னிய மேலோக வாழ்வை
அருள்வேனே வாராயோ பாவி

Tamil Hymns

2089. வா எங்கள் ஸ்வாமி வா இந்த நேரத்திலே

உம் பாதம் சேவிக்க இவ்வேளை
சுத்தரே அடிபணிந்தோம்
(வா எங்கள் ஸ்வாமி.......)

வா எங்கள் தேவனே வந்தெம்மைக்
காத்திடுமே தேடியே உம் பாதம் அண்டினோம்
தெய்வமே அருள் தாரும்
(வா எங்கள் தேவனே.......)

வா எங்கள் கர்த்தரே வந்தெம்மைக்
காருமையா கருணையின் வடிவான
கடவுளே காத்தெனக் கருள் தாரும்
(வா எங்கள் கர்;த்தரே......)

வா எங்கள் நாதனே நாடி வந்தோதே
நித்திய ஜீவ ராஜனே நமோ நமோ நாதா
(வா எங்கள் நாதனே.......)

Tamil Hymns

2090. வாக்களித்த அனைத்தையும் என்

வாக்களித்த அனைத்தையும்
என் வாழ்வில் நிறைவேற்றுவீர்

என் தேவையெல்லாம் நீர்தானையா
ஜீவனுள்ள நாட்களெல்லாம்
இயேசையா இயேசையா

1. எதிர்கால ஏக்கமெல்லாம்
உம்மிடம் ஒப்படைத்தேன் நான்
என் சார்பில் செயலாற்றுகிறீர்
எல்லாமே செய்து முடிப்பீர்

2. பட்டப்பகல் போல
என் நீதியை விளங்கச் செய்வீர்
நோக்கி அமர்ந்திருப்பேன்
உமக்காய் காத்திருப்பேன்

3. பாதத்தில் வைத்துவிட்டேன்
என் பாரங்கள் கவலைகள் - உம்
தள்ளாட விடமாட்டீர்
தாங்கியே நடத்தி செல்வீர்

4. கோபங்கள் எரிச்சல்கள்
அகற்றி எரிந்து விட்டேன்
நம்பியுள்ளேன் உம்மையே
நன்மைகள் செய்திடுவேன்

Tamil Hymns

2091. வாக்குப்பண்ணினவர் மாறிடார்

வாக்குப்பண்ணினவர் மாறிடார்
வாக்குத்தத்தம் நிறைவேற்றுவார்

சோர்ந்து போகாதே - நீ
சோர்ந்து போகாதே
சோர்ந்து போகாதே
உன்னை அழைத்தவர்
உண்மையுள்ளவர்

1. காலங்கள் கடந்ததோ
தாமதம் ஆனதோ
வாக்குத்தத்தங்கள்
உன் வாழ்வினில் தொலைந்ததோ

வாக்குத்தந்தவர் சிறந்தவர்
சிறந்ததை தருபவர்
ஏமாற்றங்கள் இல்லையே

2. அவர் மனிதன் அல்லவே
பொய் சொல்வதில்லையே
அவர் உண்மையுள்ளவர்
வாக்குமறப்பதில்லையே

2092. வாக்குறைத்தவரே நீர் உண்மையுள்ளவரே

வாக்குறைத்தவரே நீர் உண்மையுள்ளவரே
நீர் வாக்கு மாறாதவர்

காலங்கள் மாறலாம்
சூழ்நிலை மாறலாம்
மனிதர்கள் மாறலாம்
நீரோ என்றும் மாறாதவர்

பொய் சொல்லவோ மனம் மாறவோ
நீர் மனிதன் அல்லவே (2) - நீர்
நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்
நீர் சொன்னதை செய்து முடிக்க வல்லவர்

Tamil Hymns

2093. வாசலண்டை நின்று ஆசையாய் தட்டும்

வாசலண்டை நின்று ஆசையாய் தட்டும்
நேசர் இயேசுவுக்குன்னுள்ளம் திறவாயோ
பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று உன்னை அழைக்கிறாரே

1. ஆதரிப்பார் ஆருமில்லை யென்றெண்ணி
ஆதரை மீதினில் அலைந்திடுவாயே
காணாத ஆட்டைத் தேடி வந்த மேய்ப்பர்
கண்டுன்னை மந்தையில் சேர்த்திடுவார்

2. அற்ப வாழ்வை நித்திய வாழ்வு என்றெண்ணி
தற்பரன் தயவை தள்ளிடலாமா
நினையாத நேரம் மரணம் சந்தித்தால்
நித்தியத்தை எங்கு நீ கழிப்பாய்

3. பாவத்தினால் சாப ரோகத்தால் தொய்ந்து
மாயையில் ஆழ்ந்து மடிந்திடுவானேன்
பாவத்தைப் போக்கிடும் தூய உதிரத்தின்
ஜீவ ஊற்றில் மூழ்கி மீட்புறாயோ

4. மனம் மாறி மறுபடி பிறந்திடாயாகில்
மகிபரின் இராஜ்ஜியம் காணக் கூடுமோ
பிறந்தாலோ ஜலத்தாலும் ஆவியாலும்
மெய்யாய் பிரவேசிப்பாய் தேவ இராஜ்ஜியத்தில்

5. வழியும் சத்தியமும் ஜீவனும் இயேசு
வாசலும் மேய்ப்பனும் நாதனும் இயேசு
இயேசுவல்லால் வேறு இரட்சிப்பு இல்லையே
இரட்சண்ய நாள் இன்றே வந்திடாயோ

Tamil Hymns

2094. வாஞ்சைப்பட்ட இயேசுவே அல்லேலூயா

1. வாஞ்சைப்பட்ட இயேசுவே அல்லேலூயா
இந்த பூதலத்திலே அல்லேலூயா
கொஞ்ச நாள் தங்கினீர் அல்லேலூயா
பின்பு மோட்சம் ஏகினீர் அல்லேலூயா

2. வான் ஆசனத்திலே அல்லேலூயா
வீற்றிருந்து நித்தமே அல்லேலூயா
துதி பெறும் தேவரீர் அல்லேலூயா
பூதலத்தை மறவீர் அல்லேலூயா

3. திருக்கரம் குவித்து அல்லேலூயா
திருக்காயம் காண்பித்து அல்லேலூயா
திருவாய் மலர்ந்து நீர் அல்லேலூயா
மாந்தர்க்காய் மன்றாடுவீர் அல்லேலூயா

4. மண்ணைவிட்டுப் பிரிந்தும் அல்லேலூயா
வான லோகம் போயினும் அல்லேலூயா
எங்கள் ஜெபம் கேளுமே அல்லேலூயா
எங்கள் நெஞ்சில் தங்குமே அல்லேலூயா

Tamil Hymns

2095. வாதையுற்ற மீட்பரே

1. வாதையுற்ற மீட்பரே,
என் அடைக்கலம் நீரே;
நான் என் பாவப் பாரத்தால்
தொய்ந்து போய்க் கலங்கினால்,
என் அடைக்கலம் நீரே,
வாதையுற்ற மீட்பரே.

2. நியாயத் தீர்ப்பில் என் எல்லா
புண்ணியமும் விருதா;
தளரா முயற்சியால்,
மனஸ்தாபக் கண்ணீரால்
குற்றம் நீங்காதென்றைக்கும்;
கிருபைதான் ரட்சிக்கும்.

3. உள்ளவண்ணம் அண்டினேன்,
அன்பாய் என்னை நோக்குமேன்;
திக்கற்றோன் நான், ரட்சியும்;
அசுத்தன் நான், கழுவும்.
மூடும் என் நிர்வாணத்தை;
எழைக்கீயும் செல்வத்தை.

4. வாதையுற்ற மீட்பரே,
என் அடைக்கலம் நீரே,
என் இக்கட்டனைத்திலும்,
சாகும் தருணத்திலும்
என் அடைக்கலம் நீரே,
வாதையுற்ற மீட்பரே.

Tamil Hymns

2096. வாதை உந்தன் கூடாரத்தை

வாதை உந்தன் கூடாரத்தை
அணுகாது மகனே
பொல்லாப்பு நேரிடாது நேரிடாது மகளே

1. உன்னதமான கர்த்தரையே
உறைவிடமாக்கிக் கொண்டாய்
அடைக்கலமாம் ஆண்டவனை
ஆதாயமாக்கிக் கொண்டாய்

2 ஆட்டுக்குட்டி இரத்தத்தினால்
சாத்தானை ஜெயித்து விட்டோம்
ஆவி உண்டு வசனம் உண்டு
அன்றாடம் வெற்றி உண்டு

3. கர்த்தருக்குள் நம் பாடுகள்
ஒரு நாளும் வீணாகாது
அசையாமல் உறுதியுடன்
அதிகமாய் செயல்படுவோம்

4. அழைத்தவரோ உண்மையுள்ளவர்
பரிசுத்தமாக்கிடுவார்
ஆவி ஆத்துமா சரீரமெல்லாம்
குற்றமின்றி காத்திடுவார்

5. நம்முடைய குடியிருப்பு
பரலோகத்தில் உண்டு
வரப்போகும் இரட்சகரை
எதிர்நோக்கி காத்திருப்போம்

6. அற்பமான ஆரம்பத்தை
அசட்டை பண்ணாதே
தொடங்கினவர் முடித்திடுவார்
சொன்னதை செய்திடுவார்

7. ஆற்றல் அல்ல சக்தி அல்ல
ஆவியினால் ஆகும்
சோர்ந்திடாமல் நன்மை செய்வோம்
துணையாளர் முன் செல்கிறார்

Tamil Hymns

2097. வாரா வினை வந்தாலும்

வாரா வினை வந்தாலும் சோராதே மனமே
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே

1. அலகை சதித்துன் மீது வலை வீசினாலும்,
அஞ்சாதே, ஏசுபரன் தஞ்சம் விடாதே

2. உலகம் எதிர்த்துனக்கு மலைவுசெய்தாலும்
உறுதி விட்டயராதே நெறி தவறாதே

3. பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணாரே;
பிள்ளை ஆகில் அவர் தள்ளிவிடாரே

4. தன் உயிர் ஈந்திட்ட உன் யேசுநாதர்
தள்ளுவரோ? அன்பு கொள்ளவர் மீதே

5. மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்
மருள விழாதே, நல் அருளை விடாதே

6. வையகமே உனக்குய்ய ஓர் நிலையோ
வானவனை முற்றும் தான் அடைவாயே!

Tamil Hymns

2098. வாருங்கள் என் நேசரே

வாருங்கள் என் நேசரே
வயல் வெளிக்குப் போவோம்
அங்கே என் நேசத்தின் உச்சிதங்களை
உமக்கு கனியாய்க் கொடுப்பேன்

1. ஆராதனையில் கலந்து கொள்வேன்
அபிஷேகத்தால் நிறைந்திடுவேன்
உம்மை துதித்து துதித்து தினம் பாடி பாடி
தினம் நடனமாடி மகிழ்வேன் - 2

2. நேசத்தால் சோகமானேன்
உம்(உங்க) பாசத்தால் நெகிழ்ந்து போனேன்
உங்க அன்புக் கடலிலே தினமும் மூழ்கியே
நீந்தி நீந்தி மகிழ்வேன்

3. நீர் செய்த நன்மைகட்காய்
என்ன நான் செலுத்திடுவேன்
என் இரட்சிப்பின் பாத்திரத்தை
என் கையில் ஏந்தி
இரட்சகா உம்மை தொழுவேன்

Tamil Hymns

2099. வாரும் தூய ஆவியே

வாரும் தூய ஆவியே
உம் பிரசன்னத்தை வாஞ்சிக்கிறேன்
உம் வல்லமையால் என்னை நிறைத்து
நீர் ஆளுகை செய்யும் - (2)

1. ஜீவ தண்ணீர் நீரே தாகம் தீர்க்கும் ஊற்றே
ஆலோசனை கர்த்தரே
ஆளுகை செய்யும் (2)

2. அக்கினியும் நீரே பெருங்காற்றும் நீரே
பெருமழை போலவே
ஆவியை ஊற்றும்

Tamil Hymns

2100. வாரும் தெய்வ ஆவி வாரும்

1. வாரும் தெய்வ ஆவி வாரும்,
எங்கள் ஆத்துமத்திலே
எங்களுக்குயிரைத் தாரும்,
வாரும், தூய ஆவியே,
உம்முடன் வெளிச்சமும்
சீருஞ் ஜீவனும் வரும்.

2. எங்கள் நெஞ்சிலே நற்புத்தி
தெய்வ பயமும் வர
அதை நீர் குணப்படுத்தி,
தப்பு நினைவாகிய
யாவையும் அதில் நீரே
நீக்கும், தேவ ஆவியே.

3. மோட்சத்தின் வழியைக்காட்டி
சகல தடையையும்
நீக்கி, எங்களைக் காப்பாற்றி,
நல்லோராக்கியரும்.
கால் இடறிற்றேயாகில்,
துக்கம் தாரும் மனத்தில்

4. நாங்கள் தெய்வமைந்த்ரென்று
நீரே தீங்கு நாளிலும்
சாட்சிதந்து தீயோன் வென்று,
நெஞ்சைத் தேற்றியருளும்,
தெய்வ அன்பின் தண்டிப்பு
எங்களுக்கு நல்லது.

5. எங்களைப் பிதாவிடத்தில்
முழுப் பக்தியோடேயும்
சேரப்பண்ணி ஆத்துமத்தில்
நீருங் கூப்பிட்டேயிரும்;
அப்போ கேட்டது வரும்,
நம்பிப்பையும் பெருகும்.

6. மனமெங்களில் கலங்கி
ஸ்வாமி எந்த மட்டுக்கும்
என்று கெஞ்சும் போதிரங்கி,
அதை ஆற்றிக்கொண்டிரும்.
நிற்கவுந் தரிக்கவும்
நீர் சகாயராயிரும்.

Tamil Hymns

7. ஆ, நிலைவரத்துக்கான
சத்துவத்தின் ஆவியே
பேயின் சூதுக்கெதிரான
ஆயுதங்களை நீரே
தந்து நாங்கள் நித்தமும்
வெல்லக் கட்டளையிடும்.

8. விசுவாசத்தை அவிக்க
சத்துருக்கள் பார்க்கவே
அதை நீர் அதிகரிக்கப்
பண்ணும், தேவ ஆவியே,
நாங்கள் பொய்யைப் பார்க்கிலும்
தெய்வ்வாக்கை நம்பவும்.

9. சாகுங்காலம் வந்தால்,
நாங்கள் நித்திய மகிழ்சிசியாய்
வாழப்போகும் மோட்சவான்கள்
என்றப்போ விசேடமாய்
நிச்சயத்தை நெஞ்சிலே
தாரும், நல்ல ஆவியே.

Tamil Hymns

2101. வாரும் நாம் எல்லோரும் கூடி

வாரும் நாம் எல்லோரும் கூடி,
மகிழ் கொண்டாடுவோம்; - சற்றும்
மாசிலா நம் யேசு நாதரை
வாழ்த்திப் பாடுவோம். ஆ!

1. தாரகம் அற்ற ஏழைகள் தழைக்க நாயனார் - இந்தத்
தாரணி யிலே மனுடவ தாரம் ஆயினார் --- வாரும்

2. மா பதவியை இழந்து வறியர் ஆன நாம் - அங்கே
மாட்சி உற வேண்டியே அவர் தாழ்ச்சி ஆயினார் --- வாரும்

3. ஞாலமதில் அவர்க்கிணை நண்பர் யாருளர் - பாரும்
நம் உயிரை மீட்கவே அவர் தம் உயிர் விட்டார் --- வாரும்

4. மா கொடிய சாவதின் வலிமை நீக்கியே - இந்த
மண்டலத்தி னின்றுயிர்த் தவர் விண்டலஞ் சென்றார் --- வாரும்

5. பாவிகட் காய்ப் பரனிடம் பரிந்து வேண்டியே - அவர்
பட்சம் வைத் துறும் தொழும்பரை ரட்சை செய்கிறார் --- வாரும்

2102. வாரும் தேவா வான சேனைகளுடனே

வாரும் தேவா வான சேனைகளுடனே
வந்து வரமருள் அளித்துடுமே

பாவம் அகற்றினீரே - உந்தன்
பாதம் பணிந்திடுவேன் எந்தன்
பரிசுத்தர் போற்றிடுமே பரம தேவா
தரிசிக்கத் திருமுகமே

ஆதி அன்பிழந்தே மிக
வாடித் தவித்திடுதே - ஜனம்
மாமிசமானவர் யாவரிலும்
மாரியைப் பொழிந்திடுமே

அற்புத அடையாளங்கள் இப்போ
அணைந்தே குறைந்திடுதே வல்ல
ஆதி அப்போஸ்தலர் காலங்களின்
அதிசயம் நடத்திடுமே

கறைகள் நீக்கிடுமே திருச்
சபையும் வளர்ந்திடவே எம்மில்
விழிப்புடன் ஜெபித்திடும் வீரர்களை
விரைந்தெங்கும் எழுப்பிடுமே

கிருபை பெருகிடவே உம்
வருகை நெருங்கிடதே மிக
ஆத்ம மணவாளனைச் சந்திக்கவே
ஆயத்தம் அளித்திடுமே

2103. வாரும் வாரும் மகத்துவ தேவனே

வாரும் வாரும் மகத்துவ தேவனே
வல்லமையாக இப்போ வந்திடும்

1. மகிமைச் சொருபனே! மாவல்ல தேவனே
மன்னா! வந்தாசீர்வாதம் தாருமே

2. தாய் தந்தை நீர் தாமே! தற்பரா! எங்கட்கு
தரணியில் வேறோர் துணை இல்லையே

3. பாவத்தை வெறுத்து பாவியை நேசிக்கும்
பரிசுத்த ராஜனே! நீர் வாருமே

4. பக்தரும் முக்தரும் பாடித் துதிக்கின்ற
பரலோக ராஜனே! நீர் வாருமே

5. காருண்ய தேவனே! கதியும்மை யண்டினோம்
கடைசிவரையும் காத்து இரட்சியும்

6. மன்னா! உம் வரவை எண்ணி யாம் ஜீவிக்க
ஏவுதல் தினம் தாரும் ஏகனே

7. விழிப்புள்ள ஜீவியம் விமலா! நீர் ஈந்துமே
வெற்றியடையக் கிருபை தாருமே

8. இவ்வித பாக்கியம் ஏழைகளெங்கட்கு
ஈந்ததாலுமக்கென்றும் ஸ்தோத்திரம்

Tamil Hymns

2104. வாருமையா போதகரே

வாருமையா போதகரே, வந்தெம்மிடம்
தங்கியிரும் - சேருமையா பந்தியினில்
சிறியவராம் எங்களிடம்

1. ஒளி மங்கி இருளாச்சே
உத்தமரே வாருமையா
களித்திரவு காத்திருப்போம்
காருண்யரே வாருமையா

2. நானிருப்பேன் நடுவிலென்றீர்
நாதா உன் நாமம் நமஸ்கரிக்க
தாமதமேன் தயை புரிய
தற்பரனே நலம் புரிவீர்

3. மனக்கண்கள் மறைக்குதையோ
மன்னவனார் சமூகமதை
இமைப்பொழுதில் மறந்தீரே
ஏகுபரா வாருமையா

4. உந்தன் மனை திருச்சபையை
உலகமெங்கும் வளர்த்திடுவீர்
பந்தமற பரிகரித்தே
பாக்கிய மளித்தெம்மை ஆண்டருள்வீர்

Tamil Hymns

2105. வாலிபன் தன் வழியை எதனால்

வாலிபன் தன் வழியை எதனால் சுத்தம் பண்ணுவான்
வசனத்தின்படி தன்னை காத்துக் கொள்வதால் தானே

வசனத்தின்படி நடக்கும் உத்தம இதயம் உள்ளவன்
பாக்கியவான் (3)

பிரமாணங்களின் படியே நடக்கும் மனிதன் பாக்கியவான்
பாக்கியவான் (3)

உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடி
வார்த்தையில் இதயத்தில் வைப்போன் பாக்கியவான்

Tamil Hymns

2106. வாலிபர்தமக்கூண் அதுவாகும்

1. வாலிபர்தமக்கூண் அதுவாகும்;
வயோதியர்க்கும் அதுணவாகும்;
பாலகர்க்கினிய பாலும் அதாம்;
படிமீ தாத்மபசி தணிக்கும்.

2. சத்துருப் பேயுடன் அமர்புரியும்
தருணம் அது நல் ஆயுதமாகும்;
புத்திரர் மித்திரரோடு மகிழும்
பொழுதும் அதுநல் உறவாகும்.

3. புலைமேவிய மானிட
ரிதயம் பெறுதற்கதுமருந்தாய்;
நிலையா நரர்வாணாள் நிலைக்க
நேயகாய கற்பம் அதாம்.

4. கதியின் வழிகாணாதவர்கள்
கண்ணுக்கரிய கலிக்கம் அது;
புதிய எருசாலேம்பதிக்குப் போகும்
பயணத்துணையும் அது

2107. வாழ்க எம் தேசமே

1. வாழ்க எம் தேசமே
ஊழியாய் ஓங்கியே
வாழ்ந்திடுவாய்
பூர்வீக தேசமே
கூறொண்ணா கீர்த்தியே
பார் போற்றும் மேன்மையே
நீ பெறுவாய்.

2. உன் வயல் வெளிகள்
உன்னத காட்சிகள்
ஒப்பற்றதே
வான் எட்டும் பர்வதம்
கான்யாறு காற்றுகள்
போன்றே மா மாட்சியாய்
நீ ஓங்குவாய்.

3. கர்த்தாவின் கரமே
நித்தியம் எம் தேசமே
உன் மேலுமே
உன் நாதர் கிறிஸ்துவே
உன் அன்பர் வாக்கையே
அன்போடு பற்றியே
நீ ஓங்குவாய்.

Tamil Hymns

2108. வாழ்த்துகிறேன் இயேசு ராஜா

வாழ்த்துகிறேன் இயேசு ராஜா
வாழ்த்துகிறேன் இக்காலையிலே
அற்புதமாய் இரா முழுவதும்
அடியேனைக் காத்தீரே

1. உமது சேட்டை நிழலதிலே
படுத்திருந்தேன் இரா முழுவதும் - உமது கரம்
அணைத்திடவே ஆறுதலாம் நித்திரையும்

2. நித்திரையை இன்பமாக்கிப்
பத்திரமாய் இருதயத்தைச் - சுத்தமான
இரத்தத்திற்குள் சுத்தமாக வைத்திருக்கிறீர்

3. பலவிதமாம் சோதனைகள்
எமைச்சூழ வந்திருக்கும் ஒன்றும எமை
அணுகாமல் அன்புடனே பாதுகாத்தீர்

4. சந்திப்பீரே இக்காளைதனில்
தந்திடவே திருவரங்கள் சந்தோஷமாய்ப்
பகல் முழுவதும் ஆவிக்குள் யான் பிழைக்க

5. தந்திடுவீர் அபிஷேகம்
புதிதாக இப்புதுநாளில் நடத்திடுவீர்
ஆவியினால் உமது திருசித்தமதில்

6. பாவமொன்றும் அணுகிடாமல்
பைசுத்தமாய்ப் பாதை செல்லத் தேவையான
சர்வாயுதங்கள் தாரும் ஜெப ஆவியுடன்

7. படைக்கிறேன் என் இருதயத்தைப்
பலிபீடத்தில் முற்றுமாக கண்களுடன்
செவியோடு வாயும் கையும் காலுமாக

8. செய்வேன் யான் எப்போதும் உம
சித்தமே ஆசையுடன் ஒழித்திடுவேன்
வீண் வார்த்தை பேசிடுவேன் உம்

9. என்னைக்கான்போர் உம்மைக்கான உம்
சாயல் எனில் வேண்டும் தந்திடுவீர்
தாழ்மையையும் பொறுமையுடன் அன்புமாக

Tamil Hymns

10. நேசரே உம் திரு வருகை
இந்நாளில் இருந்திடினும் ஆசையுடன்
சந்திக்கவே ஆயத்தமாய் வைத்துக் கொள்ளும்

Tamil Hymns

2109. வாழ்த்துகிறோம் வணங்குகிறோம்

வாழ்த்துகிறோம் வணங்குகிறோம்
போற்றுகிறோம் தேவா….. ஆ …. ஆ ….

1. இலவசமாய் கிருபையினால்
நீதிமானாக்கிவிட்டீர் - ஐயா

2. ஆவியினால் வார்த்தையினால்
மறுபடி பிறக்கச் செய்தீர் - என்னை

3. உம் இரத்தத்தால் தெளிக்கப்பட்டோம்
ஒப்புரவாக்கப்பட்டோம் - ஐயா

4. உம்மை நோக்கிப் பார்க்கின்றோம்
பிரகாசம் அடைகின்றோம் - ஐயா

5. அற்புதமே அதிசயமே
ஆலோசனைக் கர்த்தரே - என்றும்

6. உம்மையன்றி யாரிடம் செல்வோம்
ஜீவனுள்ள வார்த்தை நீரே- ஐயா

2110. வாழ்ந்தாலும் உம்மோடு தான்

வாழ்ந்தாலும் உம்மோடு தான் (இயேசுவே)
மரித்தாலும் உம்மோடு தான் - நான்

1. உமக்காகத் தானே உயிர்வாழ்கிறேன்
உம்மை தானே நேசிக்கிறேன்

2. ஆத்தும பாரம் தாருமையா
அபிஷேகத்தால் என்னை நிரப்புமையா

3. உம்மைப் போல என்னை மாற்றுமையா
உமக்காகவே என்னைத் தந்தேனையா

Tamil Hymns

2111. வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி

வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி
திருப்தியாக்கும் உம் கிருபையினால்
(காலைதோறும் களிகூர்ந்து மகிழும்படி)
திருப்தியாக்கும் உம் கிருபையினால்

1. புகலிடம் நீரே பூமியிலே
அடைக்கலம் நீரே தலைமுறை தோறும்

நல்லவரே வல்லவரே
நன்றி ஐயா நாள் முழுதும்

2. உலகமும் பூமியும் தோன்று முன்னே
என்றென்றும் இருக்கின்ற என் தெய்வமே

3. துன்பத்தைக் கண்ட நாட்களுக்கு
ஈடாக என்னை மகிழச் செய்யும்

4. அற்புத செயல்கள் காணச் செய்யும்
மகிமை மாட்சிமை விளங்கச் செய்யும்

5. செய்யும் செயல்களை செம்மைப் படுத்தும்
செயல்கள் அனைத்திலும் வெற்றி தாரும்

6. நாட்களை எண்ணும் அறிவைத் தாரும்
ஞானம் நிறைந்த அறிவைத் தாரும்

7. ஆயுள் நாட்கள் எழுபது தான்
வலிமை மிகுந்தோர்க்கு எண்பது தான் (2)

8. ஆயிரம் ஆண்டுகள் உம் பார்வையில்
கடந்து போன ஓர் நாள் போல (2)

Tamil Hymns

2112. வாழ்வின் முதன்மை இயேசுவுக்கே

வாழ்வின் முதன்மை இயேசுவுக்கே
வாழ்வின் முழுமையும் இயேசுவுக்கே

நானும் என் எல்லாமும்
இயேசுவுக்கு, சுவிசேஷத்திற்கே

1. உயிருள்ளளவும் உண்மை ஆள
மரணம் வரினும் மலையாய் நிற்க

2. எண்ணற்ற ஜனங்கட்கு மேய்ப்பனில்லை
அறிந்தோர் அவரை சொல்லவில்லை

3. இயேசுவை அறியாதார் மனம்மாற
சகல ஜாதியும் அடிபணிய

4. சபைகள் பெருகி வளர்ந்தோங்க
மீட்கப்பட்டோர் இணைந்து வாழ

5. தோய்ந்த ஜனங்கள் மேய்ப்பனில்லை
அறிந்தோர் அவரை சொல்லவில்லை

2113. வானங்களே மகிழ்ந்து பாடுங்கள்

வானங்களே மகிழ்ந்து பாடுங்கள்
மண்ணுலகே, புகழ்ந்து துதிபாடு
சர்வ வல்லவர் தம் ஜனத்திற்கு
ஆறுதல் தருகிறார்
சிறுமைப்பட்ட தம் மக்கள் மீது
இரக்கம் காட்டுகிறார்

1. கைவிட்டாரே மறந்தாரே என்று நீ சொல்வானேன்
பால் குடிக்கும் பாலகனை தாய் மறப்பாளோ?
மறந்து போவாளோ?
கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காதிருப்பாளோ?
இரங்காதிருப்பாளோ? -2
தாய் மறந்தாலும்
தகப்பன் உன்னை மறக்கவே மாட்டார்
உள்ளங்கையிலே
அவர் உன்னை பொறித்து வைத்துள்ளார்

2. கண்களை நீ ஏறெடுத்துப் பார்
சுற்றிலும் பார் மகளே (மகனே)
உன்னைப் பாழாக்கினவர்கள்
புறப்பட்டுப் போகிறார்கள்
பெருங்கூட்டம் சபையைத் தேடி வருகின்றது
பாடி மகிழ்கின்றது
பாழடைந்த இடங்களெல்லாம் துதியால் நிரம்பிடுதே
அணிகலன் போல் நம் தேசத்தை
சபை நீ அணிந்து கொள்வாய்

Tamil Hymns

2114. வானத்தின் வாசலும் திறந்திட

வானத்தின் வாசலும் திறந்திட
வான்புறா வாழ்த்திட வந்திறங்க!

1.வானமும் வையகமும் வந்தினைய
வான்பிதா வாழ்த்துதல் வந்தொலிக்க
வான்மகன் இயேசுவும் யோர்தானிலே
வளைந்து குனிந்து மூழ்கியெழ!

2.யெகோவா தேவன் எழுந்தருள
ஆவியாம் தேவனும் அசைவாடிட
தேவ குமாரனும் நீதி செய்ய
திரியேக தேவனை தரிசனம் பார்!

3.நல் மன சாட்சியின் உடன்படிக்கை!
நன்மை பயக்கும் தேவாலோசனை
நேசத்தின் சின்னமாம் கீழ்படிதல்!
நேசிக்கும் பிள்ளையின் புதுசாட்சி!

4.விசுவாசம் வந்தபின் திருமுழுக்கு
விடுதலை பெற்றபின் வரும் ஒழுங்கு
முழு இதயத்துடன் விசுவாசித்தால்
முழுக்கினை பெற்றிட தடையுமில்லை!

5.தாமதிப்பதற்கும் தருணமில்லை
ஆமோதிப்போம் அவர்தாள் பணிந்து
ஞானமடைந்து ஸ்நானம் பெற்றிடுவோம்
நானிலத்தில் அவர் வழி நடப்போம்!

Tamil Hymns

2115. வான தூதர் சேனைகள்

வான தூதர் சேனைகள்
கீதங்களைப் பாடியே
ஓய்வின்றி துதித்துப் பாலனை வாழ்த்தினர் (2)

1. ராவேளை மேய்ப்பர்கள் மந்தை காக்கையில்
தோன்றினர் தூதர்கள் அட்சணமே
அச்சத்தை நீக்கியே மேய்ப்பரிடம்
நற்செய்தி கூறியே மகிழ்வித்தனர்
சேர்ந்து நாமும் சென்றங்கு
காண்போம் நம் பாலனை
- வானதூதர்

2. பொன் தூபம் வெள்ளைப் போளம் ஏற்றிடுவோம்
சென்றனர் பாலனை தரிசிக்க
வான் நட்சத்திரத்தின் ஒளியிலே
மாட்டுத் தொழுவத்தை அடைந்தனர்
சேர்ந்து நாமும் சென்றங்கு
காண்போம் நம் பாலனை
- வானதூதர்

Tamil Hymns

2116. வான பராபரனே

வான பராபரனே இப்போ
வாரும் எம்மத்தியிலே
வந்து நின் திருக்கரத்தால்
எம்மை ஆசீர்வதியுமையா
எல்லா மகிமை கனமும்
துதியும் ஏற்றிட வாருமையா

1. பக்தரின் மறைவிடமே
ஏழை மக்களின் அதிபதியே
பாதமே கூடும் பாலகர் எமக்கும்
பரிசுத்த மீயுமையா
வாக்கு மாறா தேவா வாரும்
வல்லமையால் நிறைக்க

2. கிருபாசனப் பதியே
நின் கிருபையால் நிலைத்திடவே
கஷ்டமதிலும் நஷ்டமதிலும்
நின் கருணையால் நின்றிடவே
நின் சக்தியோடும் பக்தியில்
யாம் பூரணராகிடவே

3. தாய் என்னை மறந்தாலும்
ஐயா நீர் மறவாதிருக்க
ஆவியினால் எம் உள்ள மீதினில்
அக்கினி பற்றிடவே
யெகோவாவே எங்களின் ராஜா
எழுந்து வாருமையா

4. நினைத்திடா தினமதினில்
எம் கர்த்தரே வருவீரே
ஆவி ஆத்மா சரீரம் முற்றும்
மகிமையில் சேர்த்திடவே
மாசிலாப் பரிசுத்தராக
மண்மீது துலங்கிடவே

5. வாதை பிணி தீர எம்
வாய்த்த மருந்தே நீர்
பாவ சாப ரோக முற்றும்
மாற்றிடும் திரு ரத்தமே
கல்வாரி அன்பைப் பெற்றிட நாம்

Tamil Hymns

விரைந்து ஏகிடவே

6. ஆகாய மேகமீதில்
எக்காளம் தொனித்திடவே
அன்பின் தயாளன் ஆனந்த பூமான்
வரவே இரண்டாம் முறையே
ஆசையோடு காத்திருந்து
ஜெபித்திட வல்லமையாய்

Tamil Hymns

2117. வான மண்டல பொல்லாத சேனைகள்

வான மண்டல பொல்லாத சேனைகள்
எரிந்து சாம்பலாகிடும் நேரமே
ஜெபத்தின் வல்லமை ஜெபத்தின் வல்லமை
பூதங்களை எரித்து சாம்பலாக்கிடும்

ஆ அல்லேலூயா ஓ அல்லேலூயா

1. நுகங்களை முறித்திடும் வல்லமை
கட்டுகளை அறுத்திடும் வல்லமை
நோய்களை விரட்டும் பேய்களைத் துரத்தும்
தெய்வீக வல்லமை இறங்கட்டுமே

2. சாத்தானை துரத்திடும் வல்லமை
அவனை மின்னலைப்போல விழச்செய்யும் வல்லமை
பாவங்களை போக்கி சாபங்களை நீக்கும்
பரலோக வல்லமை இறங்கட்டுமே

3. சிங்கத்தின்மேல் நடந்திடும் வல்லமை
வலுசர்ப்பங்களை மிதித்திடும் வல்லமை
எத்தனான என்னையே உத்தமனாய் மாற்றி
உம் சித்தம் செய்யும் வல்லமை இறங்கட்டுமே

Tamil Hymns

2118. வானம் திறந்து வல்லமையாக

வானம் திறந்து வல்லமையாக
ஆவியானவரே வாரும் வாரும் (2)

தாகம் தீர்க்க வாரும்
அக்கினி ஊற்ற வாரும்- 2
வாரும் தேவா வாரும் (2)

1. உயிர்ப்பிக்க மாட்டீரோ
உலர்ந்த எம்மையுமே
உள்ளான காயங்களை
ஆற்றியே தேற்றிடுமே
தாகம் தீர்க்க வாரும்
அக்கினி ஊற்ற வாரும்- 2
வாரும் தேவா வாரும் (2)

2. பரிசுத்த ஆவியினால்
பரிசுத்தம் ஈந்திடுமே (2)
கரைதிறை அற்றவனா உம்
சமுகத்தில் நின்றிடவே (2)
தாகம் தீர்க்க வாரும்
அக்கினி ஊற்ற வாரும்- 2
வாரும் தேவா வாரும் (2)

3. அக்கினி அபிஷேகத்தால்
அக்கினி ஜுவாலையாக்கும்
எரிந்து ஒளிவீசிட
எண்ணெயால் அபிஷேகியும்
தாகம் தீர்க்க வாரும்
அக்கினி ஊற்ற வாரும்- 2
வாரும் தேவா வாரும் (2)

2119. வானம் மீதிலே என் மன்னன் வருவார்

வானம் மீதிலே என் மன்னன் வருவார்
மகிமையோடு என்னை ஏற்றுக் கொள்ளுவார்
நான் அங்கே போவேன் ஆர்ப்பரிப்பேன் – என்
ஆண்டவரின் துதியை சொல்லி மகிழ்வேன்

1. துன்பமில்லை அங்கே தொல்லைகளில்லை
பஞ்சம் இல்லை அங்கே பசியும் இல்லை
தூதர்கள் போல நான் கானம் பாடுவேன்
என் தூயவரை தரிசித்து தொழுதிடுவேன்
நான் நடக்கும் இடமோ தங்க மயமாம்

2. நான் தங்கும் ஸ்தலமோ தேவனின் இல்லம்
தூதர்கள் போல நானும் இருப்பேன் – என்
தூயவரின் கட்டளையை செய்து முடிப்பேன்
...வானம் மீதிலே

3. என் நேசர் என்றும் என்னோடிருப்பார்
நானும் என்றும் அவரோடிருப்பேன்
தூதர்கள் போல அவர் அருகினிலே
என் பரிசுத்தர் பாதம் பணிந்திடுவேன்

2120. வானம் போற்றும் உயிர்த்தெழுந்த கர்த்தரை

வானம் போற்றும் உயிர்த்தெழுந்த கர்த்தரை
ஈடற்றவர் அழகில் மேன்மையுள்ளவர்

சிங்காசனத்திலே வீற்றாளும் இராஜனை
வணங்கி போற்றியே உம்மை ஆராதிப்பேன்

நான் பாடுவேன் உயிர்த்தெழுந்த கர்த்தரை
ஜீவன் ஈந்தார் பிதாவோடென்னை சேர்த்திட்டார்

Tamil Hymns

2121. வானமும் பூமியும் மாறிடினும்

வானமும் பூமியும் மாறிடினும்
வாக்குமாறாத நல்ல தேவனவர்
காத்திடுவார் தம் கிருபையியென்றும்
கர்த்தனேசு உந்தன் மீட்பராமே

1. கல்வாரி ரத்தம் பாய்ந்திடுதே
கன்மலை கிறிஸ்துவின் ஊற்றதுவே
பாவங்கள் நீக்க சாபங்கள் போக்க
தாகங்கள் தீர்த்திட அழைக்கின்றாரே

2. கல்வாரி மலைமேல் தொங்குகின்றார்
காயங்கள் கண்டிட வந்திடாயோ
ராகங்கள் மாற்றிடும் ஔஷதமே
தாயினும் மேலவர் தயையிதே

3. கிருபையின் காலம் முடித்திடுமுன் (2)
நொறுங்குண்ட மனதாய் வந்திடுவாய்
பூரணனே உன்னை மாற்றிடவே
புதுமையாம் ஜீவனால் நிறைத்திடுவார்

4. கிறிஸ்துவின் மரணசாயலிலே (2)
இணைந்திட இன்றே வந்திடுவாய்
நித்திய அபிஷேகமும் தந்து
நீதியின் பாதை நடத்திடுவார்

5. வருகையின் நாள் நெருங்கிடுதே (2)
வாஞ்சையுடன் இன்றே வந்திடாயோ
வானவரின் பாதம் தாழ்ந்திடுவாய்
பாரங்கள் யாவையும் ஏற்றிடுவார்

Tamil Hymns

2122. வான ஜோதியாய் இலங்கி

1. வான ஜோதியாய் இலங்கி
மாண்பாய்ப் பொன்முடி தாங்கி
தெய்வ ஆசனமுன் நிற்பார்
மாட்சியாம் இவ்வானோர் யார்?
அல்லேலூயா! முழங்கும்
விண்ணின் வேந்தர் துதியும்.

2. பகலோனின் ஜோதியோடு
தெய்வ நீதி அணிந்து
தூய வெண்மையான அங்கி
என்றும் தூய்மை விளங்கி
தூயோராய்த் தரித்தனர்
எங்கிருந்து வந்தனர்?

3. ஜீவ காலம் முற்றும் மீட்பர்
மேன்மைக்காய்ப் போராடினர்
லோகத்தாரின் சேர்க்கை நீக்கி
சாவு மட்டும் போராடி
போரில் முற்றும் நின்றனர்
மீட்பராலே வென்றனர்.

4. வேதனை தம் நெஞ்சைப் பீற
ஓங்கு துன்பம் சூழ்ந்திட
பணிந்து தம் தெய்வம் நோக்கி
வேண்டலோடு போராடி
இப்போ போர் முடித்திட்டார்
ஸ்வாமி கண்ணீர் நீக்கினார்.

5. சர்வ வல்லோர் சந்நிதியில்
திவ்விய ஊழியத்தினில்
நின்று, தேகம் ஆவியோடு
கட்டளை கீழ்ப்படிந்து
உன்னதத்தில் சேர்ந்திட்டார்
என்றும் தெய்வம் நோக்குவார்.

Tamil Hymns

2123. வானம் பூமியோ பராபரன்

வானம் பூமியோ பராபரன்
மானிடன் ஆனாரோ என்ன இது
ஞானவான்களே நிதானவான்களே

1. பொன்னகரத்தாளும் உன்னதமே நீளும்
பொறுமைக் கிருபாசனத்துரை
பூபதி வந்ததே அதிசயம் - ஆ என்ன இது!

2. மந்தைக் காட்டிலே மாட்டுக் கொட்டிலிலே
கந்தைத் துணியைப் பொதிந்த சூட்சி
நிந்தைப் பாவிகள் சொந்தக் கண் காட்சி - ஆ என்ன இது!

3. வேறே பேரல்ல சுரர் விண்ணவர் யாருமல்லர்
மாறில்லாத ஈறில்லாத
வல்லமை தேவனே புல்லில் கிடக்கிறார் - ஆ என்ன இது!

4. சீயோன் மாதே இனி கணம் தரியாதே
மாயமென்னவோ உனக்குச் சொல்லவோ
வந்தவர் மணவாளனல்லவோ - ஆ
என்ன இது!

2124. வானம் வாழ்த்தட்டும் வையம்

வானம் வாழ்த்தட்டும் வையம் போற்றட்டும்
பூமி மகிழட்டும் பூதலம் பணியட்டும்
பாடுங்கள் (2) பாலன் இயேசு இன்று பிறந்தார் (2)
Merry (4) Christmas (4)

1. காலம் சிந்தும் கானம் தாலாட்டு பாடிடுதே
மேகம் சிந்தது வானம் தேனாக மாறிடுதே
குளிரும் பணியும் வாட்டிட
குளிரில் கோமகன் தூங்கிட
விண்மீன்கள் கூட்டமே ஒளிருங்கள்
விண் பாலனோடு விளையாடவே
வா வா வா வானத்து வெண்ணிலவே

2. ஏதேன் தந்த பாவம் சாபங்கள் நீங்கிடவே
ஏழை கோலம் கொண்டார் இயேசு பாலனின்றே
அன்னை மரியின் மடியிலே
அன்பின் ரூபம் ஆனாரே
இனி மீட்க வந்த தேவ மைந்தனே
இனி பாடவைத்த இயேசு பாலனே
வா வா வா வாழ்த்து பாடுகிறேன்

Tamil Hymns

2125. வானாதி வானங்களில்

வானாதி வானங்களில்
காணாத விண்ணொளியில்
வெள்ளிரத பவனியிலே
கள்ளமின்றி வந்தாயோ கண்ணே

1. தாலாட்டும் புல்லணையில்
கண் தேடும் அழகன்றோ
என்றும் நீங்காத பனிமழையில்
நீர் தாங்காத குளிரன்றோ

2. தூக்காத வன் சிலுவை
நீர் தூக்கி சுமப்பாயோ
கறை காணாத திருரத்தத்தால்
எம்மை கழுவிட வந்தாயோ

3. உலகோரின் பாவத்திற்காய்
நீ மரிக்க துடிப்பாயோ
உந்தன் பிதாவின் சித்தத்தினால்
மீண்டும் உயிர்ப்பித்து எழுவாயோ

Tamil Hymns

2126. வானாதி வானவர் நம் இயேசுவை

வானாதி வானவர் நம் இயேசுவை
வாத்தியங்கள் முழுங்கிட பாடுவோம்
தேவாதி தேவன் நம் இயேசுவை
நாட்டியங்கள் ஆடி கொண்டாடுவோம்

அல்லேலூயா அல்லேலூயா-8

1. பாவச்சேற்றில் வாழ்ந்து வந்த என்னையே
பாசக்கரம் நீட்டி என்னை தூக்கினார்

2. பாரில் வந்த பரலோக நாயகன்
பலியாகி என்னை மீட்டுக் கொண்டாரே

3. வானங்களை விரித்தவரை பாடுவோம்
வானபரன் இயேசுவைக் கொண்டாடுவோம்

4. வாக்குத்தத்தம் தந்தவரை பாடுவோம்
வாக்குமாறா தேவனைக் கொண்டாடுவோம்

Tamil Hymns

2127. வானில் காகளம் முழங்கிடவே

1. வானில் காகளம் முழங்கிடவே
வாஞ்சையோடு பறந்திடுவோம்
இப்புவித் துன்பங்கள் மறைந்திடுமே
இயேசுவின் இராஜ்ஜியம் நெருங்கிடுதே

ஆ ஆமென் அல்லேலூயா
ஆமென் வாரும் இயேசுவே

2. கன்மலை வெடிப்பினில் உத்தமியாய்
கறைகள் திறைகள் அகற்றிடுவோம்
கற்புள்ள கன்னியாய் விழிப்புடனே
அவர் வரும் வேளைக்காய் காத்திருப்போம் - ஆ ஆமென்

3. மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்த
மகிபன் உரைத்த வாக்கின்படி
மாசற்ற மணவாட்டி சபையதனை
மகிமையில் சேர்க்கவே வந்திடுவார் - ஆ ஆமென்

4. பாரில் பலியாய் ஜீவன் வைத்தோர்
பாடுகள் பாதையில் ஏற்றதினால்
தியாகத்தின் மேன்மையைக் காத்துக் கொண்டோர்
அவர் போல் மாறியே பறந்திடுவார் - ஆ ஆமென்

5. மகிமையின் நாளும் நெருங்கிடுதே
மணவாளன் சத்தம் கேட்டிடுதே
மகிழ்ச்சியின் நிறைவை அனுபவிக்க
ஆயத்தம் தீவிரம் அடைந்திடுவோம்

Tamil Hymns

2128. வான் புகழ் வல்ல

வான் புகழ் வல்ல தேவனையே நித்தம்
வாழ்த்தியே துத்தியம் செய்திடுவோமே
காத்திடும் கரகதின் வல்லமையை என்றும்
கனிவுடன் பாடியே போற்றிடுவோமே

1. யாக்கோபின் ஏணியின் முன் நின்றவர் தாம்
யாக்கோபின் தேவனின் சேனை அவர் தாம்
யாத்திரையில் நம்மை சூழ்ந்திடும் கர்த்தர்
நேத்திரம் போல் பாதுகாத்திடுவாரே

2. பட்சிக்கும் சிங்கங்கள் வாயிலிருந்து
இரட்சித்தாரே வீர தானியேலின் தேவன்
அற்புத அடையாளம் நிகழ்த்தியே நித்தம்
கர்த்தன் தன் சேனைகொண்டு காத்திடுவாரே

3. உக்கிரமாய் எரியும் அக்கினி நடுவில்
சுற்றி உலாவின நித்திய தேவன்
மகிமையின் சாயலாய் திகழ்ந்திடும் கர்த்தர்
முற்றும் தம் தாசரைக் காத்திடுவாரே

4. சிறைச்சாலைக் கதவுகள் அதிர்ந்து நொறுங்க
சீஷரை சிறை மீட்டார் சத்திய தேவன்
சத்துருவின் எண்ணங்கள் சிதறுண்டு மாள
சேனைகளின் கர்த்தர் காத்திடுவாரே

5. அழைத்தனரே தம் மகிமைக்கென்றே எம்மை
தெரிந்தெடுத்தாரே தம் சாயலை அணிய
வழுவ விடாமலே காத்திடும் தேவன்
மாசற்றோராய் தம்முன் நிறுத்திடுவாரே

6. மகத்துவ தேவன் வானில் ஆயத்தமாக
மகிமையாய் நிற்கிறார் சடுதியாய் இறங்க
மணவாளன் வரும்வேளை அறியலாகாதே
மணவாட்டி சபையே நீர் விழிப்புடனிருப்பீர்

Tamil Hymns

2129. வான் புறாவே எங்கள் மீது வந்தமர்ந்திடும்

வான் புறாவே எங்கள் மீது வந்தமர்ந்திடும்
வன் செட்டைகள் விரித்தே
எம் அச்சமெல்லாம் அகல
வன் செயலாய் வந்திறங்கிடும் எம்மில்

1. ஆவியின் அக்கினியால் தரிசித்திட
அனலுள்ள இருதயம் அளித்திடவே
அன்பினால் அனைத்தோடும் கனலடைய
அனுதினம் அருள்மாரி சொரிந்திடுமே

ஊற்றிடுமே உமதாவியை
மாற்றிடுமே உம்மைப் போலவே

2. சோர்ந்திடும் உள்ளங்கள் உணர்வடைய
மாய்ந்திடும் சரீரங்கள் உயிரடைய
ஆண்டிடும் சக்திகள் அகன்றோடவே
அண்டி வரும் எமக்கு நின் ஜெயம்தாருமே

3. பற்பல பாஷைகள் மகிழ்ந்துரைக்க
அற்புத திருவன்பை புகழ்ந்துரைக்க
நற்செய்கையாம் நவ சிருஷ்டியதில்
பொற்பரனே வளர்ந்திட பொழிந்திடுவீர்

4. நேசரே நினைத்திடா வேளை வருவீர்
சேர்த்திட தூயவரை உமதுடனே
வேளையும் காலமும் சாயுமுன்னே
வேளையிது தீர கனிந்திறங்கிடுமே

Tamil Hymns

2130. வான் வெள்ளி பிரகாசிக்குதே

வான் வெள்ளி பிரகாசிக்குதே
உலகில் ஒளி வீசிடுமே - யேசு
பரன் வரும் வேளை மனமே மகிழ்வாகிடுமே (2)

1. பசும் புல்லணை மஞ்சத்திலே
திருப்பாலகன் துயில்கின்றான்
அவர் கண் அயரார் நம்மை கண்டிடுவார்
நல் ஆசிகள் கூறிடுவார்

2. இகமீதினில் அன்புடனே
இந்த செய்தியை கூறிடுவோம்
மகிழ்வோடு தினம் புகழ் பாடிடுவோம்
அவர் பாதம் பணிந்திடுவோம்

2131. வான் நிலவே நீ வா வா

வான் நிலவே நீ வா வா, பாலனை பாராட்ட வா
வீசும் தென்றலே வா வா, விண்மணி மகிழ்ந்திட வா
மரியன்னை மடியில் மகிமையின் தேவன் மானிடன் ஆனாரே
பாடுவோம் போற்றுவோம் புகழுவோம்
வான் நிலவே நீ வா வா, வா வா

1. வாடை வீசும் நேரம், பெத்தலை சத்திர ஓரம்
கண்மணி அவதாரம் (2)
கந்தை ஆடை தானோ, பசும்புல்லணை மேடை தானோ (2)
என் பாவம் நீக்க இன்று என் இயேசு மண்ணில் வந்தார்
- வான் நிலவே

2. வானில் தவழும் மேகம், மேகங்கள் நடுவில் இராகம்
தூதரின் பண் கேட்குதே (2)
வானம் தேன் சிந்துதே, புது கானம் தாலாட்டுதே (2)
என் பாவம் நீக்க இன்று என் இயேசு மண்ணில் வந்தார்
- வான் நிலவே

Tamil Hymns

2132. வானோர் ராஜன் பிறந்தார் பிறந்தார்

வானோர் ராஜன் பிறந்தார் பிறந்தார் (2)

1. பூவினை மீட்கப் பரலோகப் பூமான் பூதலந்தனில் பிறந்தார்
பூட்டிய வீட்டுயர் வாசலைத் திறக்கப் பூலோகத்தில் பிறந்தார் (2)
வாசல்களே உயருங்கள் கதவுகளே திறவுங்கள் (2)
வானாதி ராஜன் வல்லமை தேவனை வாழ வழிவிடுங்கள் (2)

2. ஆக்கினைத் தீர்ப்பை அடையாதவாறு அடைக்கலந்தரப் பிறந்தார்
ஆருயிரீந்து அன்பினைக் காட்ட ஆண்டவரே பிறந்தார் (2)
ஆத்துமமே ஸ்தோத்தரி அல்லேலுயா ஆர்ப்பரி (2)
ஆண்டவரான அருளுள்ள வள்ளல் ஆள ஆசைப்படுங்கள் (2)

Tamil Hymns

2133. விசுவாச கப்பல் ஒன்று செல்கின்றது

விசுவாச கப்பல் ஒன்று செல்கின்றது
புயல் வந்த போதும் தென்றல் வீசும் போதும்
அசைந்தாடி செல்கின்றது
அக்கரை நோக்கி - 2

1. பரந்த சமுத்திரத்தில் செல்கின்றது
பார சுமையோடு செல்கின்றது
பரப் பரப்போடு செல்கின்றது
பரமன் வாழும் பரம் நோக்கி

2. ஆழம் நிறை கடலில் செல்கின்றது
அலை வந்து மோதியும் செல்கின்றது
ஆர்ப்பரிப்போடு செல்கின்றது
ஆண்டவர் அதற்கு மாலுமியாம்

3. நீடிய பொறுமையோடு செல்கின்றது
நீண்ட பயணமாக செல்கின்றது
நிலை பலமாக செல்கின்றது
நிரந்தரமான இடத்தை காண

Tamil Hymns

2134. விசுவாசத்தாலே நாமும் பிழைப்போம்

விசுவாசத்தாலே நாமும் பிழைப்போம்
பசுமை செழிப்புடன் வாழ்வோம்
இயேசு தேவனை நம்பினோரே

விஸ்வாசம் எம்மில் கடுகளவிருந்தால்
வீழ்த்திடுவோம் மலையைக் கடலிலே
உலகை ஜெயித்திடுமே விஸ்வாசம்
உத்தம இருதயத்தில் தாங்கும் விசுவாசத்தாலே

1. கர்த்தரைக் கண்டு விசுவாசிப்பதிலும்
காணாமல் நம்பினால் பாக்கியமே
தரிசித்தல்ல விசுவாசத்தாலே
தங்கி நம்மில் வசிக்கும் கர்த்தருக்குள்
பரிசுத் தாவியினாலே மகிழ்ந்து நாம்
பூரண மகிமை அடைவோம் - விசுவாசத்தாலே

2. வீரர்களாக நின்றிடுவோமே
விசுவாச சோதனை நேர்ந்திடினும்
பொன்னைப் போல நெருப்பில் புடமிட்டபோதும்
பொன்னாக நம் விசுவாசம் விளங்க
புகழ்ச்சி கணம் மகிமை கிடைக்குமே
பரமன் வெளிப்படும் நாளில் - விசுவாசத்தாலே

3. ஆபிரகாமின் விசுவாச மார்க்கம்
அந்த அடிச்சுவட்டில் நடப்போர்
வாழ்வினில் நீதி கிறிஸ்துவின் மூலம்
வாக்குத்தத்த ஆசீர்வாத நன்மைகள்
ஜெயத்தின் மேல் ஜெயங் கொண்டு பக்தர்கள்
சந்ததம் சுதந்தரிப்போம் - விசுவாசத்தாலே

4. தேவ குமாரன் வந்திடும் நாளில்
தூய விசுவாசத்தோடு பறப்போம்
மூலைக்கல் இயேசு திட அஸ்திபாரம்
மாளிகையாய் அவர் மேல் இணைந்து நாம்
பரம அழைப்புடன் சேர்ந்து சீயோனில்
பிதாவின் முகம் கண்டு வாழ்வோம்

Tamil Hymns

2135. விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்

விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்
மெய் விசுவாசமுள்ளவன் தான் தழைப்பான்.

1. நிசமாக நாம் பாவத்தினில் பிறந்தோர்; - முழு
விஷமான பாவத்தினால் இறந்தோர். --- விசு

2. உய்யும் வகையறியோம்; பெலனேயில்லை; - நரர்
செய்யும் கிரியைகளில் நலனேயில்லை. --- விசு

3. பாவக் கடனொழிக்கப் பலமே யற்றோம்; - எச்
சாபம் அழிவினுக்கம் தகைமை யுற்றோம். --- விசு

4. தேவன் கிருபையொன்றே நமைப் பார்க்கும்
அவர் மாவன்பே பாவிகளின் கடன் தீர்க்கும்

5. நீதிமானைக் குற்றஞ்சாட்ட யாராலேயாகும்
அவன் பாதகம் பழிமரணம், யாவுமே போகும்

6. தேவனின் பிள்ளை நானென்றே அவன் துள்ளுவான்
பாவ வழிதனைப் பகைத்தே தள்ளுவான்

Tamil Hymns

2136. விசுவாசியின் காதில்பட

விசுவாசியின் காதில்பட
யேசுவென்ற நாமம் - விருப்பாயவர்
செவியில் தொனி இனிப்பாகுது பாசம்

1. பசித்த ஆத்துமாவைப்
பசியாற்று மன்னாவதுவே;
முசிப்பாறுதல், இளைத்தோர்க்கெல்லாம்
முற்றும் அந்தப் பெயரே

2. துயரையது நீக்கிக் காயமாற்றிக்
குணப்படுத்தும்
பயங்கள் யாவும் யேசுவென்றால்
பறந்தோடியே போகும

3. காயப்பட்ட இருதயத்தைக்
கழுவிச் சுத்தப்படுத்தும்,
மாயைகொண்ட நெஞ்சையது
மயக்கமின்றிவிடுக்கம்

4. எல்லை இல்லாக் கிருபைத்திரள்
ஏற்றுநிறைந்திருக்கும்
எல்லா நாளும் மாறாச்செல்வம்
யேசுவென்ற பெயரே

5. என்னாண்டவா, என் ஜீவனே
என் மார்க்கமே, முடிவே,
என்னால் வருந்துதியை
நீரே ஏற்றுக்கொள்ளும், தேவே

Tamil Hymns

2137. விடியற்காலத்து வெள்ளியே தோன்றி

1. விடியற்காலத்து வெள்ளியே தோன்றி
கார் இருள் நீங்கத் துணைபுரிவாய்
உதய நக்ஷத்திரமே ஒளி காட்டி
பாலக மீட்பர்பால் சேர்த்திடுவாய்

2. தண் பனித் துளிகள் இலங்கும் போது
முன்னணையில் அவர் தூங்குகின்றார்
வேந்தர் சிருஷ்டிகர் நல் மீட்பர் என்று
தூதர்கள் வணங்கிப் பாடுகின்றார்

3. ஏதோமின் சுகந்தம் கடலின் முத்து
மலையின் மாணிக்கம் உச்சிதமோ?
நற்சோலையின் வெள்ளைப்போளம் எடுத்து
தங்கமுடன் படைத்தல் தகுமோ?

4. எத்தனை காணிக்கைதான் அளித்தாலும்
மீட்பர் கடாக்ஷம் பெறல் அரிதே
நெஞ்சின் துதியே நல் காணிக்கையாகும்
ஏழையின் ஜெபம் அவர்க்கருமை.

5. விடியற்காலத்து வெள்ளியே தோன்றி
கார் இருள் நீங்கத் துணைபுரிவாய்
உதய நக்ஷத்திரமே ஒளி காட்டி
பாலக மீட்பர்பால் சேர்த்திடுவாய்

Tamil Hymns

2138. விடுதலை நாயகன் வெற்றியைத் தருகிறார்

விடுதலை நாயகன் வெற்றியைத் தருகிறார்
எனக்குள்ளே இருக்கிறார் என்னே ஆனந்தம்

1. நான் பாடி பாடி மகிழ்வேன்
தினம் ஆடி ஆடி துதிப்பேன்
எங்கும் ஓடி ஓடி சொல்லுவேன்
என் இயேசு ஜீவிக்கிறார்

2. அவர் தேடி ஓடி வந்தார்
என்னை தேற்றி அணைத்துக்கொண்டார்
என் பாவம் அனைத்தும் மன்னித்தார்
புது மனிதனாக மாற்றினார்

3. அவர் அன்பின அபிஷேகத்தால்
என்னை நிரப்பி நடத்துகின்றார்
சாத்தானின் வலிமை வெல்ல
அதிகாரம் எனக்கு தந்தார்

Tamil Hymns

2139. விடுதலை விடுதலை விடுதலை எனக்கு

விடுதலை விடுதலை விடுதலை - எனக்கு
விடுதலை விடுதலை விடுதலை

1. நோயிலிருந்து விடுதலை
பேயிலிருந்து விடுதலை

2. பாவத்திலிருந்து விடுதலை
சாபத்திலிருந்து விடுதலை

3. ஆவியினால் விடுதலை
இரத்தத்தினால் விடுதலை

4. வார்த்தையினால் விடுதலை
துதியினாலே விடுதலை

5. கவலையிலிருந்து விடுதலை
கண்ணரிலிருந்து விடுதலை

Tamil Hymns

2140. விடுதலை விடுதலை விடுதலை பெற்றேன்

விடுதலை விடுதலை விடுதலை பெற்றேன்
வித விதமாய் பாவத்திலே ஜீவித்த நானே
இந்த நாளில் எந்தன் இயேசு சொந்த
இரத்தத்தால் தந்திட்டாரே எந்தன்
ஆத்ம மீட்பின் விடுதலை

1. தடுக்கும் பாவத் தளைகளில் விடுதலை
கொடுக்கும் தீய பழக்கத்தில விடுதலை - 2
என்ன சந்தோஷம் இந்த - விடுதலை
எந்தன் இயேசு இலவசமாய் தந்த சந்தோஷம்

2. எரிக்கும் கோபப் பிடியினில் - விடுதலை
விதைக்கும் தீய பொறாமையில் - விடுதலை
அன்பர் இயேசுவே தந்த விடுதலை
இன்பக் கானான் சென்றிடும் வரை உண்டே

3. அடுக்காய் பேசும் பொய்யினில் - விடுதலை
மிடுக்காய் வீசும் பெருமையில் - விடுதலை
ஏழ்மை ரூபமே கொண்ட இயேசுவே
தாழ்மை கொள்ள உண்மை பேச ஈந்தார் என்னிலே

4. மாறிட்ட எந்தன் உள்ளத்தில் விடுதலை
மாறிடா அன்பர் அடிமையாய் மாற்றிடுதே
என்ன சந்தோஷம் இந்த அடிமைக்கு
மீட்கும் அன்பை ருசித்திடவே ஆவலில்லையோ

Tamil Hymns

2141. விண் தூதர் வானில் தோன்றியே

விண் தூதர் வானில் தோன்றியே தோன்றியே
நற்செய்தி ஒன்று கூறினார்
இருள் நீக்கும் மெய் இயேசு பாலகன்
இன்று பெத்லகேமில் பிறந்திருக்கிறார்
துன்பம் இன்பமாக மாறிட
மாந்தர் உள்ளம் மகிழ்ந்தாடுதோ!

1. சருவாதிலோக தேவனே
மானிடனாகத் தோன்றினார்
சந்திக்க வந்த உந்தனின்
சாபம் தனைப் போக்கினார்

2. பரலோக மேன்மை நீங்கியே
தன்னைத் தாழ்த்தி பூமியில் வந்தார்
மாந்தர் பாவம் யாவும் போக்கவே
பலியாகவே மாறினார்

3. தேவன் மாந்தர் உறவை ஏற்கவே
பாலமாக இயேசு பிறந்தார்
பாவிகள் மேல் கொண்ட அன்பினால்
தேவாதி தேவன் உதித்தார்

2142. விண் போகும் பாதை தூரமாம்

1. விண் போகும் பாதை தூரமாம்
என்றே நாம் என்னுவோம்
பகைஞரின் கொடுரமாம்
வன்மையை உணர்வோம்

2. ஆனால் எப்பாடும் பாவமும்
இல்லா அவ்விண்ணையே
நாம் கண்டிலோம், நாம் காணவும்
இம்மையில் கூடாதே

3. சிற்றின்பத்தை வெறுத்தலும்
உள்ளத்தை முற்றும் நாம்
கர்த்தாவுக்கு கொப்பிவித்தலும்
அரிதென் றெண்ணலாம்

4. ஆனாலோ, பாவம் நீக்கிட
அகோர வேதனை
மீட்பர் அடைந்து மாண்டதும்
நாம் காணக்கூடாதே

5. பக்தன் தோமாவே, உன் போலும்
கண்ணால் காணாமலே
விஸ்வாசம் தக்கதாயினும்
சந்தேகம் கொள்வோமே

6. என்றாலும் காணாதிருந்தும்
விஸ்வாசித்தோர் பாக்கியர்
என்றே நீ பெற்ற வாக்கையும்
நாங்களும் சார்ந்தவர்

Tamil Hymns

2143. விண் மண்ணை ஆளும் கர்த்தரே

1. விண் மண்ணை ஆளும் கர்த்தரே,
எவ்வாறு உம்மை நேசித்தே
துதிப்போம்? நன்மை யாவுமே
நீர் ஈகிறீர்.

2. உம் அன்பைக் கூறும் மாறியும்,
வெய்யோனின் செம்பொனின் காந்தியும்,
பூ, கனி, விளை பயிரும்,
எல்லாம் ஈந்தீர்.

3. எம் ஜீவன், சுகம், பெலனும்,
இல்வாழ்க்கை, சமாதானமும்,
பூலோக ஆசீர்வாதமும்,
எல்லாம் ஈந்தீர்.

4. சீர்கெட்ட மாந்தர் மீள நீர்
உம் ஏக மைந்தனை ஈந்தீர்,
மேலும் தயாள தேவரீர்
எல்லாம் ஈந்தீர்.

5. தம் ஜீவன், அன்பு, பெலனை,
ஏழாம் மா நல் வரங்களைப்
பொழியும் தூய ஆவியை
அருள்கிறீர்.

6. மன்னிப்பும் மீட்பும் அடைந்தோம்;
மேலான நம்பிக்கை பெற்றோம்;
பிதாவே பதில் என் செய்வோம்?
எல்லாம் ஈந்தீர்.

8. தர்மத்தைக் கடன் என்பதாய்
பதில் ஈவீர் பன்மடங்காய்;
இக்காணிக்கையைத் தயவாய்
ஏற்றுக்கொள்வீர்.

9. உம்மாலே பெற்றோம் யாவையும்,
தர்மத்தைச் செய்ய ஆசையும்;
உம்மோடு நாங்களும் வாழவும்
அருள் செய்வீர்.

Tamil Hymns

2144. விண் வாசஸ்தலமாம்

1. விண் வாசஸ்தலமாம்
பேரின்ப வீடுண்டே;
கிலேசம் பாடெல்லாம்
இல்லாமல் போகுமே
விஸ்வாசம் காட்சி ஆம்
நம்பிக்கை சித்திக்கும்
மா ஜோதியால் எல்லாம்
என்றும் பிரகாசிக்கும்.

2. தூதர் ஆராதிக்கும்
மெய்ப் பாக்கியமாம் ஸ்தலம்
அங்கே ஒலித்திடும்
சந்தோஷக் கீர்த்தனம்
தெய்வாசனம் முன்னே
பல்லாயிரம் பக்தர்
திரியேக நாதரை
வணங்கிப் போற்றுவர்

3. தெய்வாட்டுக்குட்டியின்
கை கால், விலாவிலே
ஐங்காயம் நோக்கிடின்
ஒப்பற்ற இன்பமே!
சீர் வெற்றி ஈந்ததால்
அன்போடு சேவிப்போம்!
பேரருள் பெற்றதால்
என்றைக்கும் போற்றுவோம்

4. துன்புற்ற பக்தரே
விண் வீட்டை நாடுங்கள்
தொய்யாமல் நித்தமே
முன் சென்று ஏகுங்கள்
இத்துன்பம் மாறுமே
மேலோக நாதனார்
நல் வார்த்தை சொல்லியே
பேரின்பம் ஈகுவார்.

2145. விண்தூதர் போற்றும் வேந்தனே

விண்தூதர் போற்றும் வேந்தனே
விண்மகிமை துறந்தே

கன்னி மாதா பாலனாக
மண்ணிலே தோன்றினீர்;
(விண்தூதர் போற்றும்.......)

மாமகிமை பேரின்பமே
மாந்தர் மேல் பெருகவே (2)

மாட்டுக் கொட்டிலில்
மாராஜன் மாஏழை ஆனிரோ

ஆயருடன் தூதர்களும்
நேயமாய் வணங்கிட
(மாமகிமை பேரின்பமே.......)

எக்காளத்துடனே வருகின்றார்
ஏழையின் மாளிகைக்கு எந்நாளுமே
போற்றிடுவேன் என்றென்றும் பாடுவேன்
(மாமகிமை பேரின்பமே.......)
(விண்தூதர் போற்றும்.......)

Tamil Hymns

2146. விண்ணக மேகம் இறங்கணும்

விண்ணக மேகம் இறங்கணும்
வல்லமை மழையாய் பொழியணும்

குளங்கள் நிரம்பணும்
நதியாய் பாயணும் - எல்லாக்

1. இடங்கோள்ளாமல் போகுமட்டும்
இறங்கி வரணும் பெருமழையாய்
எழுப்புதல் தேசத்தில் காண வேண்டும்
கண்கள் காண வேண்டும் - இராஜா

2. தூதர்கள் கூட்டம் இறங்கி ஏறணும்
பரலோக ஏணிப் படிகளிலே
யாக்கோபின் தேவன் சப்தம் கேட்கணும்
சபைகள் கேட்கணுமே - இராஜா

3. ஆதி திருச்சபை அற்புதங்கள் நடக்கணும்
எங்கள் சபைகளிலே
குருடர் பார்க்கணும் செவிடர் கேட்கணும்
முடவர் நடக்கணும் - இராஜா

Tamil Hymns

2147. விண்ணக காற்றே நீ என்னை

விண்ணக காற்றே நீ
என்னை நோக்கி வீசிடும்
வெண் புறா வைப் போல
என் மேல் வந்தமர்ந்திடும்

1. ஜலத்தின் மேல் அசைவாடிய
தூய தேவ ஆவியே
பெலத்தின் மேல் பெலனடைய
என் மேல் அசைவாடுமே

2. முழங்கால் முடக்கியது
முழங்கால் அளவு அல்ல
நீச்சல் ஆழம் வேண்டுமே
இழுத்துச் செல்லும் என்னையே

3. அக்கினி அபிஷேகம் இன்று
வேண்டும் தெய்வமே
எந்நாளும் என் பாத்திரம்
நிரம்பி வழியச் செய்யுமே

4. அக்கினி இரதத்தின் மேல் என்னை
கொண்டு செல்லுமே
பரலோகத் தூதருடன்
ஆராதிக்க செய்யுமே

Tamil Hymns

2148. விண்ணப்பத்தைக் கேட்பவரே என்

விண்ணப்பத்தைக் கேட்பவரே
என் கண்ணீரைக் காண்பவரே - சுகம்
தருபவரே ஸ்தோத்திரம் இயேசையா

1. உம்மால் கூடும் எல்லாம் கூடும்
ஒரு வார்த்தை சொன்னால் போதும்

2. மனதுருகி கரம் நீட்டி
அதிசயம் செய்பவரே

3. சித்தம் உண்டு சுத்தமாகு
என்று சொல்லி சுகமாக்கினீர்

4. என் நோய்களை சிலுவையிலே
சுமந்து தீர்த்தீரைய்யா

5. உம் காயத்தால் சுகமானேன்
ஒரு கோடி ஸ்தோத்திரம்

6. குருடர்களை பார்க்கச் செய்தீர்
முடவர்கள் நடக்கச் செய்தீர்

Tamil Hymns

2148. விண்ணிலும் மண்ணிலும் உம்மைத்தவிர

விண்ணிலும் மண்ணிலும்
உம்மைத்தவிர எனக்கு யாருண்டு
இந்த மண்ணுலகில் உம்மையன்றி
வேற விருப்பம் எதுவுண்டு

நீர்தானே என் வாஞ்சையெல்லாம்
உம்மைத்தானே பற்றிக்கொண்டேன்

1. உம்மோடு தான் எப்போதும்
நான் வாழ்கிறேன்
அப்பா என் வலக்கரம்
பிடித்து தாங்குகிறீர்

நன்றி ஐயா நாள் முழுதும்
நல்லவரே, வல்லவரே

2. உம் சித்தம் போல்
என்னை நீர் நடத்துகிறீர்
முடிவிலே என்னை
மகிமையில் ஏற்றுக்கொள்வீர்

3. என் உள்ளத்தின்
பெலனே நீர்தானய்யா
எனக்குரிய பங்கும்
என்றும் நீர்தானய்யா

4. உம்மைத் தானே நான்
அடைக்கலமாய் கொண்டுள்ளேன்
உம்மோடு தான்
வாழ்வது என் பாக்கியமே

5. எனக்குள்ளே நீர்
செயலாற்றி மகிழ்கின்றீர்
உம் சித்தம் செய்ய
ஆற்றல் தருகின்றீர்

Tamil Hymns

2150. விண்ணிலும் மண்ணிலும்

விண்ணிலும் மண்ணிலும்
உம்மையல்லாமல்
ஆசைகள் இல்லையய்யா
தண்ணீரைத் தேடும் மான்கள் போல
உம்மையே வாஞ்சிக்கிறேன்

ஆசையெல்லாம் நீர்தானே
வாஞ்சையெல்லாம் நீர்தானே

1. உலகத் தோற்றம் முன்னே
என்னைக் கண்டீரய்யா
உம் அன்பு ஆச்சர்யம் உம் அன்பு அதிசயம்
உம் அன்பு உயர்ந்ததய்யா - ராஜா

2. பிறந்தநாள் முதலாய்
பாது காத்தீரய்யா
மறந்திடவில்லை கைவிடவில்லை
என்னை விட்டு விலகவில்லை - நீ

3. ஆயுள் காலமெல்லாம்
இயேசுவே நீர் போதுமே
மண்ணில் வாழ்ந்திடும் காலங்களெல்லாம்
உம்மை மறப்பதில்லை
நான் உம்மை பிரிவதில்லை

Tamil Hymns

2151. விண்ணில் ஓர் நட்சத்திரம்

விண்ணில் ஓர் நட்சத்திரம் தோன்றிடவே
தூதர்கள் பாடல்கள் பாடிடவே
தாவீதின் மரபினில் தோன்றினாரே
மரியன்னை புதல்வனாய் அவதரித்தார்

ஆனந்தம் பரமானந்தம்
இயேசு பாலனை போற்றிடுவோம்
ஆர்ப்பரிப்போம் நாம் அகமகிழ்வோம்
இச்சந்தோஷ செய்தியை எங்கும் கூறுவோம்

1. மந்தையை காக்கும் ஆயர்களும்
சாஸ்திரியர் மூவரும் வந்தனரே
முன்னணை பாலனை கண்டனரே
பொன் போளம் தூபம் படைத்தனரே --- ஆனந்தம்

2. பெத்லேகேம் ஊரில் ஏழைக்கோலமாய்
மானிடர் வாழவே வந்துதித்தார்
இந்நிலம் நலம் பெற இறைவன் வந்தார்
மன்னாதி மன்னனாம் மனுவேலனே --- ஆனந்தம்

Tamil Hymns

2152. விண்ணோர் மகிழ்ந்து பாடும் பாடல்

விண்ணோர் மகிழ்ந்து பாடும் பாடல்
உன்னைத் தாலாட்ட
மண்ணோர் உவந்து பாடும் பாடல்
உன்னை வரவேற்க ஆ…

1. தந்தை நெஞ்சில் மஞ்சம் கொண்ட
வார்த்தை நீயன்றோ
தேவ வாழ்வின் தூய மேன்மை
ஏன் துறந்தாயோ
எம் தாழ்ந்த உள்ளம் தன்னில்
நீ வந்தருள்வாயோ

2. மாபெரும் மகிழ்வை வழங்கும் செய்தி
வானவன் அறிவித்தான்
தாவீதின் நகரில் மாமரி மடியில்
மாபரன் பிறந்துள்ளார்
நின் பாதம் தொழுதிட வந்தோம்
எம் தாகம் தீர்ப்பாயோ

3. கன்னித்தாயும் அவளது மடியில்
உன்னைத் தாலாட்ட
பன்னிரு நாளாய் காத்து
நிற்கும் உவலயம் உனை வணங்க
எம் வாழ்வின் இன்பம் பொழிய
நின் வாழ்வை ஈந்தாயோ

Tamil Hymns

2153. விண்ணோர்கள் போற்றும் ஆண்டவா

1. விண்ணோர்கள் போற்றும் ஆண்டவா,
உம் மேன்மை அற்புதம் - பளிங்கு
போலத் தோன்றுமே உம் கிருபாசனம்!

2. நித்தியானந்த தயாபரா,
அல்பா ஒமேகாவே - மா தூயர்
போற்றும் ஆண்டவா ராஜாதி ராஜாவே!

3. உம் ஞானம்
வல்லமை அளவிறந்ததே - நீர் தூயர்,
தூயர்; உந்தனை துதித்தல் இன்பமே!

4. அன்பின் சொரூபி தேவரீர்
நான் பாவியாயினும் - என் நீச
நெஞ்சைக் கேட்கிறீர், உம் சொந்தமாகவும்

5. உம்மைப்போல் தயை மிகுந்த
ஓர் தந்தையும் உண்டோ? - உம்மைப்போல்
அன்பு நிறைந்த தாய்தானும் ஈண்டுண்டோ?

6. என் பாவமெல்லாம் மன்னித்தீர்
சுத்தாங்கம் நல்கினீர் - என் குற்றமெல்லாம்
தாங்கினீர் அன்பின் பிரவாகம் நீர்!

7. மேலோக நித்திய பாக்கியத்தை
நான் பெற்று வாழுவேன் - உம் திவ்விய
இன்ப முகத்தை கண்ணுற்றுப் பூரிப்பேன

Tamil Hymns

2154. விண்மணி பொன்மணி வித்தக மணியே

விண்மணி பொன்மணி வித்தக மணியே
விட்புலம் பூவிற்கு விழைத்திடுங் கனியே
சொன்மணி மாலை தொகுத்த நல்மணியே
சோதியாய் இங்கெழந் தருள் சூடாமணி

2. பன்மணி கோத்தொளிர் பாவலர் மணியே
பாக்கியம் தருஞ் சீவ காருண்ய மணியே
கண்மணி பொன்றினோர் கண்மணி ய்ருளக்
கண்டனர் உரை கேட்டக் கண்ணருள் மணியே

3. மங்கை சீயோன் மகள் பூண்ட வான மணியே
மாசிலார் உளமதில் ஒளிரும் அமமணியே
நங்கை மரிகன்னி யீன்ற கண்மணியே
நரர் சுரர் போற்றிடு நாயக மணியே

Tamil Hymns

2155. விதைப்பும் அறுப்புமே

1. விதைப்பும் அறுப்புமே பூமியின்
மீதினிலே மாறி மாறி வருமே
பகலும் இரவுமாய் வருடங்கள்
மாயமாய் நழுவியே சென்றிடுமே

சிந்திப்பீர் சிந்திப்பீர் காலங்களைச் சிந்திப்பீர்
இயேசு கிறிஸ்துவின்
வேலை ஒன்றே இன்று பிரதானம்

2. ஒன்று இரண்டென எத்தனை
வருடங்கள் கனவெனக் கழிந்தது பார்
எஞ்சிய நாட்களை வஞ்சிக்காது
தேவப் போரினில் ஈடுபடு

3. நாடுகள் நடுவினில் வாய்ப்புகள்
உனக்காக எத்தனை நாட்கள் உண்டு
சாதகமானதோர் வாசல் இங்கு
கண்டு வந்து பயன்படுத்து

4. ஆழக்கடல்களில் படகைச் செலுத்திட
கடல்போன்ற தேவையல்லோ
பாவக் கடலினில் மூழ்கிடும் யாவர்க்கும்
படகு உன் சாட்சியல்லோ?

Tamil Hymns

2156. விந்தை கிறிஸ்தேசு ராசா

விந்தை கிறிஸ்தேசு ராசா!
உந்தஞ் சிலுவை என் மேன்மை

சுந்தரம் மிகும் இந்தப் பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும் --- விந்தை

1. திரண்ட செல்வம் , உயர்ந்த கல்வி ,
செல்வாக்குகள் மிக விருந்தாலும் ,
குருசை நோக்கிப் பார்க்க எனக்கு
உரிய பெருமை யாவும் அற்பமே --- விந்தை

2. உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றாம் , வற்றா ஜீவநதியாம்;
துங்க இரத்த ஊற்றில் மூழ்கித்
தூய்மையடைந்து மேன்மையாகினேன் --- விந்தை

3. சென்னி , விலா , கை கானின்று
சிந்துததோ! துயரோடன்பு;
மன்னா , இதைப் போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்கும் காணேன் --- விந்தை

4. இந்த விந்தை அன்புக் கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்;
எந்த அரும் பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன் --- விந்தை

Tamil Hymns

2157. விந்தை கிறிஸ்தேசு ராஜா

விந்தை கிறிஸ்தேசு ராஜா!
உந்தன் சிலுவையென் மேன்மை (2)

சுந்தரமிகும் இந்த பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும்

1. திரண்ட ஆஸ்தி, உயர்ந்த கல்வி
செல்வாக்குகள் எனக்கிருப்பினும்
குருசை நோக்கிப் பார்க்க எனக்கு
உரிய பெருமைகள் யாவும் அற்பமே

2. உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றாம் வற்றா ஜீவ நதியாம்
துங்க ரத்த ஊற்றில் மூழ்கித்
தூய்மையடைந்தே மேன்மையாகினேன்

3. சென்னி, விலா, கை, கானின்று
சிந்துதோ துயரோடன்பு,
மன்னா இதைப் போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்கும் காணேன்

4. இந்த விந்தை அன்புக்கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்
எந்த அரும் பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன்

Tamil Hymns

2158. விருந்து வைப்போமே நல்ல விருந்து

விருந்து வைப்போமே நல்ல விருந்து
அல்-லே-லுயா அல்லேலுயா (2)

விருந்து வைப்போமே நல்ல விருந்து வைப்போமே
ஜாதிமதம் பேதமின்றி அனைவருக்கும் நல்லதொரு
கிறிஸ்மஸ் விருந்து வைப்போமே - அல்-லே-லுயா

1. பெத்தலையில் பிறந்தாரே அல்லேலுயா
மாட்டுக்கொட்டிலில் பிறந்தாரே அல்லேலுயா
பெத்தலையில் பிறந்தவரை போற்றி துதிமனமே
மாட்டுக்கொட்டில் பிறந்தவரை போற்றி துதிமனமே
மாட்டுக்கொட்டில் ஏழ்மை கோலம்
தாழ்மையுள்ள முன்னணையில் நீர் பிறந்தீரே
விண்ணுலகம் துறந்தீரே மண்ணுலகம் மீட்டீரே (2)
பாவம் போக்கிடவே நீர் பிறந்தீரே - விருந்து

2. ஆயர் பாலர் தேடினர் அல்லேலுயா
பாலன் இயேசு தோன்றினார் அல்லேலுயா
கன்னி மகவாய் பிறந்தவரை போற்றி துதிமனமே
ஏழ்மை கோலம் ஏற்றவரை போற்றி துதிமனமே
மேய்ப்பர்களும் ஞானியரும்
வந்தும்மை பணிந்து தொழுதனரே
அன்று சொன்ன தீர்க்கனின் மொழி நிறைவேறுதே (2)
பாவம் போக்கவே நீர் பிறந்தீரே - விருந்து

3. ஆடுவதும் பாடுவதும் கிறிஸ்மஸ் ஆகுமோ
உண்டு உடுத்தி மகிழ்ந்து விட்டால் கடமை தீருமோ
இயேசுவை போல் கிறிஸ்தவர்கள் அன்புகாட்டனும்
கிறிஸ்தவரின் தாழ்மை இந்த உலகம் போற்றனும்
உன்னைப்பார்த்து உலகில் வாழும் மக்கள் திருந்தனும்
உனது உருவில் இயேசு இந்த உலகம் பார்க்கனும் - விருந்து

Tamil Hymns

2159. விருந்தைச் சேருமேன்

1.விருந்தைச் சேருமேன்,
அழைக்கிறார்
ஆகாரம் பாருமேன், போஷிப்பிப்பார்
தாகத்தைத் தீர்க்கவும்
இயேசுவின் மார்பிலும்
சாய்ந்திளைப்பாறவும்
வா, பாவி, வா.

2. ஊற்றண்டை சேரவும் ஜீவனுண்டாம்
பாடும் விசாரமும் நீங்கும் எல்லாம்
நம்பி வந்தோருக்கு
திருப்தி உண்டாயிற்று
ஜீவாற்றின் அண்டைக்கு
வா, பாவி, வா.

3. மீட்பரின் பாதமும் சேராவிடில்
தோல்வியே நேரிடும் போராட்டத்தில்
இயேசுவே வல்லவர்,
இயேசுவே நல்லவர்,
இயேசுவே ஆண்டவர்
வா, பாவி, வா.

4. மோட்சதிதின் பாதையில் முன்செல்லுவாய்
சிற்றின்ப வாழ்வினில் ஏன் உழல்வாய்?
வாடாத கிரீடமும்
ஆனந்த களிப்பும்
பேர் வாழ்வும் பெறவும்
வா, பாவி, வா.

5. சேருவேன், இயேசுவே, ஏற்றுக்கொள்வீர்
பாவமும் அறவே சுத்தம்செய்வீர்
அப்பாலே மோட்சத்தில்
ஆனந்நக் கடலில்
மூழ்கிப் பேரின்பத்தில்
கெம்பீரிப்பேன்.

Tamil Hymns

2160. விழுகுது விழுகுது எரிகோ கோட்டை

விழுகுது விழுகுது எரிகோ கோட்டை
எழும்புது எழும்புது இயேசுவின் படை
துதிப்போம் சாத்தானை ஜெயிப்போம்
துதிப்போம் தேசத்தைச் சொந்தமாக்குவோம்

1. யோசுவாவின் சந்ததி நாமே
தேசத்தைச் சுதந்தரிப்போமே
உடன்படிக்கை பெட்டி நம்மோடு
ஊர் ஊராய் வலம் வருவோமே - துதிப்போம்

2. கால் மிதிக்கும் எவ்விடத்தையும்
கர்த்தர் தந்திடுவாரே
எதிர்த்து நிற்க எவராலுமே
முடியாதென்று வாக்குரைத்தாரே

3. மோசேயோடு இருந்ததுபோல
சேனைகளின் கர்த்தர் நம்மோடு
தளபதியாய் முன் செல்கிறார்
தளர்ந்திடாமல் பின் தொடர்வேம்

4. அச்சமின்றி துணிந்து செல்வோமே
அறிக்கை செய்து ஆர்ப்பரிப்போமே
கர்த்தர் வார்த்தை நம் வாயிலே
நிச்சயமாய் வெற்றி பெறுவோம்

5. தேசத்து எதிரிகளெல்லாம்
திகில் பிடித்து நடுங்குகின்றனர்
கர்த்தர் செய்யும் அற்புதங்களை
கேள்விப்பட்டு கலங்குகின்றனர்

6. செங்கடலை வற்றச் செய்தவர்
சீக்கிரத்தில் வெற்றி தருவார்
யோர்தானை நிற்கச் செய்தவர்
நம் பாரதத்தை ஆளுகை செய்வார்

Tamil Hymns

2161. விளைந்த பலனை அறுப்பாரில்லை

விளைந்த பலனை அறுப்பாரில்லை
விளைவின் நற்பலன் வாடிடுதே
அறுவடை மிகுதி ஆளோ இல்லை
அந்தோ! மனிதர் அழிகின்றாரே

1. அவர் போல் பேசிட நாவு இல்லை
அவர் போல் அலைந்திட கால்கள் இல்லை
எண்ணிலடங்கா மாந்தர் சத்தம்
உந்தன் செவியினில் தொனிக்கலையோ

2. ஆத்ம இரட்சண்யம் அடையாதவர்
ஆயிரம் ஆயிரம் அழிகின்றாரே
திறப்பின் வாசலில் நிற்பவர் யார்
தினமும் அவர் குரல் கேட்கலையோ

3. ஆத்தும தரிசனம் கண்டிடுவாய்
ஆண்டவர் வாக்கினை ஏற்றிடுவாய்
விரைந்து சென்று சேவை செய்வாய்
விளைவின் பலனை அறுத்திடுவாய்

4. ஒரு மனம் ஒற்றுமை ஏக சிந்தை
சபைதனில் விளங்கிட செயல்படுவாய்
நிமிர்ந்து நிற்கும் தூண்களைப் போல்
நிலைவரமாய் என்றும் தாங்கி நிற்பாய்

5. ஆவியின் வரங்கள் ஒன்பதனை
ஆவலுடன் நீயும் பெற்றிடுவாய்
சபையின் நன்மைக்காய் உபயோகிப்பாய்
சந்ததம் சபையினில் நிலைத்திருப்பாய்

6. தேவனின் சேவையில் பொறுப்பெடுப்பாய்
உந்தனின் பங்கினை ஏற்றிடுவாய்
கர்த்தர் நாட்டின தோட்டத்திலே
கடைசிவரை நீயும் கனி கொடுப்பாய்

Tamil Hymns

2162. வினை சூழா திந்த இரவினில்

வினை சூழா திந்த இரவினில் காத்தாள்
விமலா கிறிஸ்து நாதா
கனகாபி ஷேகனே, அவனியர்க் கொளிர்
பிரகாசனே, பவ நாசனே, ஸ்வாமி

1. சென்ற பகல் முழுதும் எனை கண் பார்த்தாய்
செய் கருமங்களில் கருணைகள் பூத்தாய்
பொன்றா தாத்ம சரீரம் பிழைக்க
ஊண் பாத்தாய் - பொல்லாப் பேயின்
மோசம் நின்றெனைக் காத்தாய்

2. சூரியன் அஸ்தமித் தோடிச் சென்றானே
ஜோதி நட்சத்திரம் எழுந்தன வானே
சேரும் விலங்கு பட்சி உறைபதி தானே
சென்றன அடியேனும் பள்ளி கொள்வேனே

3. ஜீவன் தந்தெனை மீட்டோய் சிறியேன்
உன் சொந்தம்; -ஜெகத் தின்பங்கள்
விழைந்து சேர்தல் நிர்ப்பந்தம்
பாவியேன் தொழுதேன் நின்
பாதார விந்தம் - பட்சம் வைத்தாள்
வையேல் அதுவே ஆனந்தம்

4. இன்றைப் பொழுதில் நான் செய்
பாவங்கள் தீராய் - இடர்கள் துன்பங்கள்
நீங்க என்னைக் கை சேராய் - உன்றன்
அடிமைக் கென்றும் உவந்தருள் கூராய்
உயிரை எடுப்பையேல், உன் முத்தி தாராய்

2163. விஸ்வாசத்தோடு சாட்சி பாகர்ந்தே

1. விஸ்வாசத்தோடு சாட்சி பகர்ந்தே
தம் வேலை முடித்தோர் நிமித்தமே,
கர்த்தாவே உம்மைத் துதி செய்குவோம்.
அல்லேலூயா! அல்லேலூயா!

2. நீர் அவர் கோட்டை, வன்கன் மலையாம்;
நீர் யுத்தத்தில் சேனைத் தலைவராம்;
நீர் காரிருளில் பரஞ்சோதியாம்.
அல்லேலூயா! அல்லேலூயா!

3. முன் நாளில் பக்தர் நற்போராடியே
வென்றாற்போல் நாங்கள் வீரராகவே
பொன் க்ரீடம் பெற்றுக்கொள்வோமாகவே
அல்லேலூயா! அல்லேலூயா!

4. இங்கே போராடி நாங்கள் களைத்தும்,
உம் பக்தர் மேன்மையில் விளங்கினும்;
யாவரும் உம்மில் ஓர் சபை என்றும்,
அல்லேலூயா! அல்லேலூயா!

5. போர் நீண்டு மா கடூரமாகவே,
கெம்பீரக் கீதம் விண்ணில் கேட்குமே,
நாம் அதைக்கேட்டு தைரியம் கொள்வோமே.
அல்லேலூயா! அல்லேலூயா!

6. செவ்வானம் மேற்கில் தோன்றி ஒளிரும்;
மெய் வீரருக்கு ஓய்வு வாய்த்திடும்;
சீர் பரதீசில் பாக்யம் அமையும்.
அல்லேலூயா! அல்லேலூயா!

7. மேலான பகல் பின் விடியும், பார்!
வென்றோர் கெம்பீரமாய் எழும்புவார்;
மாண்புறும் ராஜா முன்னே செல்லுவார்.
அல்லேலூயா! அல்லேலூயா!

8. அந்தக் கூட்டம் நாற்றிசை நின்றும்
த்ரியேகருக்குத் துதி பாடியும்
விண் மாட்சி வாசலுள் ப்ரவேசிக்கும்.
அல்லேலூயா! அல்லேலூயா!

Tamil Hymns

2164. வீராதி வீரர் இயேசு சேனை நாங்கள்

1. வீராதி வீரர் இயேசு சேனை நாங்கள்,
சேனை நாங்கள், இயேசுவின் சேனை நாங்கள்

2. திரு வசனத்தை எங்கும் திரிந்து சொல்வோம்,
திரிந்து சொல்வோம், அதை அறிந்து சொல்வோம்

3. அறிவீன மென்னும் காட்டை அதமாக்குவோம்
அதமாக்குவோம்; ஞானமதால் தாக்குவோம்

4. சிலுவை கொடியைச் சேரத் தேடிப் பிடிப்போம்
தேடிப் பிடிப்போம், அன்பு கூர்ந்து பிடிப்போம்

5. ரட்சண்ய சீராவுடன் நீதிக் கவசம்
நீதிக் கவசம் கையாடுவோம் வாசம்

6. விசுவாசக் கேடகத்தை மேலுயர்த்துவோம்
மேலுயர்த்துவோம் அதை மேலுயர்த்துவோம்

7. பாவச் சோதனைத் தடைகள் பாசம் நீக்குவோம்
பாசம் நீக்குவோம்; ஆசாபாசம் போக்குவோம்

2165. வீணையே ஒலித்திடு

வீணையே ஒலித்திடு
விண்ணவர் பிறந்தார்
கவிதையே மலர்ந்திடு
கர்த்தர் பிறந்தார் (2)

தேவன் சாரோனின் வண்ண ரோஜா
பள்ளத்தாக்கின் அழகு லீலி (2)
- வீணையே

1. பூந்தென்றலே பார் வெண்ணிலவே
விண் மீன்களே மகிழ்ந்து பாடுங்கள் - தேவன்

2. பூங்குயில்களே ஆடும் மயில்களே
தேன் மலர்களே மகிழ்ந்து போற்றுங்கள் - தேவன்

3. இன்பாடல்கள் உம் கிருபைகள்
என்றும் பாடுவேன் ஏசு பாலனே - வீணையே

Tamil Hymns

2166. வெட்கப்பட்டுப் போவதில்லை

வெட்கப்பட்டுப் போவதில்லை - என்
மகனே நீ வெட்கப்பட்டுப் போவதில்லை - 2

1. கஷ்டங்கள் வந்தாலும்
இழப்புகள் நேர்ந்தாலும்
நிந்தைகள் சூழ்ந்தாலும்
இழந்ததை திரும்பவும் தருவேன் நான்
நீ இழந்ததை திரும்பவும் தருவேன் நான்

2. குடும்பமே இகழ்ந்தாலும்
உறவுகள் பழித்தாலும்
உலகமே எதிர்த்தாலும் - உன்னோடு
என்றுமே இருப்பேன் நான்

3. என் ஜனம் ஒருபோதும்
வெட்கப்பட்டுப் போவதில்லை
வெட்கத்திற்குப் பதிலாக
இரட்டிப்பான நன்மைகளைத்
தருவேன் நான்

Tamil Hymns

2167. வெள்ளங்கி பூண்டு மாட்சியாய்

1. வெள்ளங்கி பூண்டு மாட்சியாய்
நிற்கும் இப்பாக்கியர் யார்?
சதா சந்தோஷ ஸ்தலத்தை
எவ்வாறு அடைந்தார்?

2. மிகுந்த துன்பத்தினின்றே
இவர்கள் மீண்டவர்,
தம் அங்கி கிறிஸ்து ரத்தத்தில்
தூய்மையாய்த் தோய்த்தவர்

3. குருத்தோலை பிடித்தோராய்
விண் ஆசனமுன்னர்
செம்ஜோதியில் தம் நாதரை
இப்போது சேவிப்பர்

4. வெம் பசி, தாகம் வெய்யிலும்
சற்றேனும் அறியார்;
பகலோனாக ஸ்வாமிதாம்
நற்காந்தி வீசுவார்

5. சிங்காசனத்தின் மத்தியில்
விண் ஆட்டுக்குட்டிதாம்
மெய் அமிர்தத்தால் பக்தரை
போஷித்துக் காப்பாராம்

6. நல் மேய்ச்சல், ஜீவ தண்ணீர்க்கும்
அவர் நடத்துவார்;
இவர்கள் கண்ணீர் யாவையும்
கர்த்தர்தாம் துடைப்பார்

7. நாம் வாழ்த்தும் ஸ்வாமியாம் பிதா,
குமாரன் ஆவிக்கும்,
நீடூழி காலமாகவே
துதி உண்டாகவும்

Tamil Hymns

2168. வெள்ளை அங்கிகள் தரித்த

வெள்ளை அங்கிகள் தரித்த
விமல முத்தர் இவர் யார்

கள்ள மில்லா ஆட்டுக்குட்டிக்
கருணைவள்ளல் முன்நிற்கும் - வெள்ளை

1. நானாதிக்கிலுமிருந்து
நயந்து வந்தவர் இவர்
கோணாது துன்பக் கடலில்
குளித்து வந்தவர் இவர் - வெள்ளை

2. குருத் தோலைகள் பிடித்துக்
கொற்றவனைச் சூழ்நிற்கும்
பெருத்த கூட்டத்தார் இவர்
பேரன்பின் அடியார்களாம் - வெள்ளை

3. ஆட்டுக் குட்டியாலே மீட்பை
அடைந்த உத்தமர் இவர்
தேட்டமுடனே நாயனைச்
சேவித்து நிற்கின்றார் நித்தம் - வெள்ளை

4. பசிதாகம் யாவுமுற்றார்
பாக்கிய நிலைமை பெற்றார்
உசித மோட்சத்தில் கண்ணீர்
உகுக்கா வாழ்வினை யுற்றார் - வெள்ளை

Tamil Hymns

2169. வெற்றிக்கொடி பிடித்திடுவோம்

வெற்றிக்கொடி பிடித்திடுவோம்
நாம் வீரநடை நடந்திடுவோம்

1. வெள்ளம் போல சாத்தான் வந்தாலும்
ஆவி தாமே கொடி பிடிப்பார்
அஞ்சாதே என் மகனே
நீ அஞ்சாதே என் மகளே

2. ஆயிரம் தான் துன்பம் வந்தாலும்
அணுகாது அணுகாது
ஆவியின் பட்டயம் உண்டு
நாம் அலகையை வென்று விட்டோம்

3. காடானாலும் மேடானாலும்
கர்த்தருக்கு பின் நடப்போம்
கலப்பையில் கை வைத்திட்டோம்
நாம் திருப்பி பார்க்க மாட்டோம்

4. கோலியாத்தை முறியடிப்போம்
இயேசுவின் நாமத்தினால்
விசுவாச கேடயத்தினால்
பிசாசை வென்றிடுவோம்

Tamil Hymns

2170. வென்றனரே நம் இயேசு பரன்

வென்றனரே நம் இயேசு பரன்
என்றென்றும் ஜெயித்தெழுந்தார்
ஜெயமே அடைந்துமே
இரட்சகரில் வளருவோம்

1. சேதமேதும் நெருங்கிடா
தேவ தேவன் தாங்குவார்
துன்பம் யாவும் நீங்கிடும்
இன்பம் என்றும் தங்கிடும்

2. தீங்கு நாளில் மறைத்துமே
சுகமாய் காத்து மூடுவார்
தகுந்த வேளை கரத்தினில்
உயர்த்தி ஜெயமே நல்குவார்

3. தேவனோடு செல்லுவேன்
மதிலைத் தாண்டி பாயுவேன்
உலகை ஜெயிக்கும் தேவனால்
யாவும் ஜெயித்து செல்லுவேன்

4. நீதிமானை உயர்த்துவார்
நீதிபரனாம் இயேசுவே
சத்துரு வீழ்ந்து அழிந்திட
தேவன் ஜெயமே தந்திடுவார்

Tamil Hymns

2171. வேத புத்தகமே

வேத புத்தகமே, வேத புத்தகமே - வேத
புத்தகமே விலை பெற்ற செல்வம் நீயே.

1. பேதைகளின் ஞானமே
பெரிய திரவியமே
பாதைக்கு நல்தீபமே
பாக்யர் விரும்புந் தேனே

2. என்னை எனக்குக் காட்டி
என் நிலைமையை மாற்றிப்
பொன்னுலகத்தைக் காட்டிப்
போகும் வழி சொல்வாயே

3. துன்ப காலம் ஆறுதல்
உன்னால்வரும் நிசமே
இன்பமாகுஞ் சாவென்றாய்
என்றும் நம்பின பேர்க்கே

4. பன்னிரு மாதங்களும்
பறித்துண்ணலாம் உன் கனி
உன்னைத் தியானிப்பவர்
உயர்கதி சேர்ந்திடுவார்

Tamil Hymns

2172. வேலைக்காரன் கண்கள்

வேலைக்காரன் கண்கள் -தன்
எஜமான் கரம் நோக்கும்
தேவா எனக்காய் எல்லம் செய்யும்
உம் கரத்தை என்றும் நோக்குவேன்

1. நீதியின் வலது கரம்
நீதிமானை என்றும் தாங்கிடுமே
விழுகையில் வியாதியின் நேரங்களில்
வழுவாது உம் கரம் தாங்கிடுமே

2. கடலும் ஆறும் தடையில்லை
ஆண்டவர் கரம் என்னோடிருந்தால்
தடைகளை அகற்றும் நீர் முன்னே செல்ல
ஜெயவீரனாய் நானும் உம் பின் வருவேன்

3. சத்துவமுள்ள உந்தன் கரம்
நித்தம் காத்து வழி நடத்திடுமே
உம் கரம் பற்றியே என்றுமே நான்
பத்திரமாய் இப்பூவில் நடப்பேனே

2173. வேறு ஒரு ஆசை இல்ல இயேசு ராஜா

வேறு ஒரு ஆசை இல்ல இயேசு ராஜா
உம்மைத் தவிர உம்மைத் தவிர

1. உம் பாதம் பணிந்து நான்
உம்மையே தழுவினேன் - 2

2. இருள் நீக்கும் வெளிச்சமே
எனை காக்கும் தெய்வமே

3. மனம் இரங்கினீரே மறுவாழ்வு தந்தீரே

4. சுகம் தந்தீரையா பெலன் தந்தீரையா

5. இரக்கத்தின் சிகரமே இதயத்தின் தீபமே

6. செய்த நன்மை நினைத்து
துதித்துப் பாடி மகிழ்வேன்

Tamil Hymns

2174. வேறு ஜென்மம் வேணும்

வேறு ஜென்மம் வேணும், - மனம்
மாறுதலாகிய உள்ளத் தூய்மை என்னும்.

1. கூறு பரிசுத்தர் மாறிலா தேவனின்
தேறுதலான விண்பேறு பெற இங்கே; - வேறு

2. பாவசுபாவமும் ஜீவியமும் மாறத்
தேவனின் சாயலை மேவுவதாகிய; - வேறு

3. மானிடரின் அபிமானத்தினாலல்ல,
வானவரின் அருள் தானமாக வரும்; - வேறு

4. ஒன்றான ரட்சகர் வென்றியதை நம்பி,
மன்றாடுவோருக்கு ஒன்றுவதாகிய; - வேறு

5. மைந்தர் கெடாமல் உகந்து ஈடேறவே,
சொந்த மகன்தனைத் தந்த பிதா அருள்; - வேறு

6. மண்ணினில் பத்தராய் நண்ணி நடக்கவும்,
விண்ணினில் தூயராய் தண்ணளி கொள்ளவும்; - வேறு

Tamil Hymns

2175. வைகரையில் (காலை நேரம்) உமக்காக

வைகரையில் (காலை நேரம்) உமக்காக
வழிமேல் விழிவைத்து
காத்திருக்கின்றேன் இறைவா

என் ஜெபம் கேட்டு பதில் தாரும்
பெருமூச்சைப் பார்த்து மனமிரங்கும்

1. உம் இல்லம் வந்தேன் உம் கிருபையினால்
பயபக்தியோடு பணிந்து கொண்டேன்
நிறைவான மகிழ்ச்சி உம்சமூகத்தில்
குறைவில்லாத பேரின்பம் உம்பாதத்தில்

2. ஆட்சி செய்யும் ஆளுநர் நீர்தானய்யா
உம்மையன்றி வேறுஒரு செல்வம இல்லையே
நீர்தானே எனது உரிமைச் சொத்து
எனக்குரிய பங்கு நீர்தானய்யா

3. படுகுழியில் பாதாளத்தில் விடமாட்டீர்
அழிந்துபோக அனுமதியும் தரமாட்டீர்
என்இதயம் பூரித்து துள்ளுகின்றது
என்உடலும் பாதுகாப்பில் இளைப்பாறுது

4. உம் கிருபையால் காலைதோறும் திருப்தியாக்கும்
நாளெல்லாம் களிகூர்ந்து மகிழ்ந்திருப்பேன்
எப்போதும் என்முன்னே நீர்தானய்யா
ஒருபோதும் அசைவுற விடமாட்டீர்

Tamil Hymns

2176. வையகந்தன்னை நடுத்தீர்க்க இயேசு

வையகந்தன்னை நடுத்தீர்க்க இயேசு
வல்லவர் வருகிறார் திருமறைக்கேற்க

பொய் யுலகோர்களின் கண்களும் பார்க்க,
போற்பதிதநிர் பரண் சேயரைச் சேர்க்க - வைய

1. வான்கள் மடமடபோ டொழிந்திடவே,
மகிதலம் அதிர்ச்சியாய்த் தானடுங்கிடவே,
பானுவும் மதி அனைத்து மங்கிடவே
பஞ்ச பூதியங்களுந் தானழிந்திடவே. --வைய

2. முக்கிய தூதநெக்காளமே தொனிக்க
முன் மரித்தொரெலாந் தாமெழுந்திரிக்க
அக்கண முயிருள்ளோர் மறு உருத்தரிக்க,
அக்கண முயிருள்ளோர் மறு உருத்தரிக்க
ஆண்டவர் வருகிறார், பக்தர்கள் களிக்க - வைய

3. யாவரின் சிந்தை செய்கையும் வெளிபடற்-கு
இரண்டு புத்தகங்களுந் திறந்த்தரவர்க்கு ப்
பூவுலகினிலவர் நடந்து வந்ததற்குப்
புண்ணியனளவுடன் பலனளிப்பதற்கு -வைய

4. அடைக்கலன் இயேசுவை அறிந்தவர் நாமம்
அழிந்திடாதவர்களின் வாழ்வது ஷேமம்;
படைத்திடுவாயிந்தக் கனமுனை. ஷாமம்
பற்றிடக் கூடுமே திடுக்கெனவே, நம் -வைய

Tamil Hymns

2177. ஸ்தோத்திரபலி ஸ்தோத்திர பலி

ஸ்தோத்திரபலி ஸ்தோத்திர பலி அப்பாவுக்கு
துதியும் கனமும் மகிமையும் என் அப்பாவுக்கு

1. சுகம் தந்தீரே நன்றி ஐயா
பெலன் தந்தீரே நன்றி ஐயா

2. உணவு தந்தீர் நன்றி ஐயா
உடையும் தந்தீர் நன்றி ஐயா

3. அன்பு கூர்ந்தீர் நன்றி ஐயா
அரவணைத்தீர் நன்றி ஐயா

4. கூடவைத்தீர் நன்றி ஐயா
பாட வைத்தீர் நன்றி ஐயா

5. அபிஷேகித்தீர் நன்றி ஐயா
அனலாக்கினீர் நன்றி ஐயா

6. இரத்தம் சிந்தினீர் நன்றி ஐயா
இரட்சிப்பு நன்றி ஐயா

Tamil Hymns

2178. ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே அப்பா

ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே அப்பா அப்பா
உம் கிருபை எனக்கு போது அப்பா அப்பா
நல்லவரே வல்லவரே

1. கர்த்தரே என் கன்மலையும் கோட்டையுமானார்
ரட்சகரும் தேவனுமானார் - நான்
நம்பின என் துருகமும் கேடகமானார்
ரட்சணிய கொம்புமானார்

2. தேவரீர் என் இருளையெல்லாம் வெளிச்சமாக்கினீர்
எனது விளக்கை ஏற்றி வைத்தீர் - ஒரு
சேனைக்குள்ளே பாயச்செய்து போரிடச் செய்தீர்
மதிலையெல்லாம் தாண்டிடச் செய்தீர்

3. உம்முடைய வலக்கரத்தால் என்னை தாங்கினீர் - உம்
காருணியத்தால் பெரியவனானேன்
நான் செல்லுகின்ற பாதையெல்லாம் அகலமாக்கினீர்
வழுவாமல் நடந்து செல்கிறேன்

Tamil Hymns

2179. ஸ்தோத்திரம் இயேசு நாதா உமக்கென்றும்

ஸ்தோத்திரம் இயேசு நாதா உமக்கென்றும்
ஸ்தோத்திரம் இயேசுநாதா
ஸ்தோத்திரம் செய்கிறோம் உம அடியார்திரு
நாமத்தி னாதரவில்

1. வான தூதர் சேனைகள் மனோகர
கீதங்களால் எப்போதும்
ஓய்வின்றிப் பாடித் துதிக்கபெரும்
மன்னவனே உமக்கு

2. நின் உதிரமதினால் திறந்த
நின் ஜீவ புது வழியாம்
நின் அடியார்க்கு பிதாவின் சன்னதி
சேரவுமே சந்ததம்

3. இன்றைத் தினமதிலும் ஒருமித்து
கூட உம நாமத்தினால்
தந்த நின் கிருபைக்காக உமக்கென்றும்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

4. இத்தனை மகத்வமுள்ள பதவி
ஈனர்கள் எங்களுக்கு
எத்தனை மாதயவு நின் கிருபை
எத்தனை ஆச்சரியம்

5. நீரல்லால் எங்களுக்குப் பரலோகில்
யாருண்டு ஜீவ நாதா
நீரேயன்றி இகத்தில் வேறொரு
தேற்றமில்லை பரனே

Tamil Hymns

2180. ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை

ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை
இன்றும் என்றும் துதித்திடுவேன்

காத்தீரே என்னைக் கருத்தாக
வழுவாமல் என்னை உமக்காக
எடுத்தீர் எனையும் உமக்காக
கொடுத்தீர் உமையும் எனக்காக

1. வல்ல வான ஞான வினோதா
துதியே துதியே துதித்திடுவேன்
எல்லாக் குறையும் தீர்த்தீரே
தொல்லை யாவும் தொலைத்தீரே
அல்லல் யாவும் அறுத்தீரே
அலையும் எனையும் மீட்டீரே

2. நம்பினோரைக் காக்கும் தேவா
துதியே துதியே துதித்திடுவேன்
அம்புவியாவும் படைத்தீரே
அம்பரா உந்தன் வாக்காலே
எம்பரா எல்லாம் ஈந்தீரே
நம்பினோர்க் குந்தன் தயவாலே

3. கண்ணின் மணிபோல் காத்தீரே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
அண்ணலே உந்தன் அருளாலே
அடியாரைக் கண் பார்த்தீரே
மன்னா எமக்கும் நீர் தாமே
எந்நாளும் எங்கள் துணை நீரே

4. தீயோன் அம்புகள் தாக்காதே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
தேவா நீர் உந்தன் சிறகாலே
தினமும் மூடிக் காத்தீரே
தீதணு காதும் மறைவினிலே
தேடியுமதடி தங்கிடுவேன்

5. அல்லேலூயா தோத்திரமே
துதியே துதியே துதித்திடுவேன்
அகில சிருஷ்டிகளும் துதிக்க
அடிமை துதியா திருப்பேனோ

Tamil Hymns

அல்லும் பகலும் நித்தியமாய்
அன்பே உமையும் துதித்திடுவேன்

Tamil Hymns

2181. ஸ்தோத்திரம் பாடிப் போற்றுவேன்

1. ஸ்தோத்திரம் பாடிப் போற்றுவேன்
ஸ்தோத்திரம் இயேசு ராஜனுக்கே
ஆதியுமந்தமும் இல்லோனே
அருபனே உமக்கென்றும் ஸ்தோத்திரம்

அல்லேலூயா அல்லேலூயா
பொற்கரனே ஓமேகாவே

2. பொன்னகர் மன்னர் பூவில் வந்தாரே
புல்லணை மீதிலே ஸ்தோத்திரம்
பட்சமுற்று எந்தன் பாரம் தீர்த்த
பெத்தலை வாசனே ஸ்தோத்திரம்

3. மாயமாம் உலகை மறந்து நானும்
மன்னவா உம்மன்பில் மகிழ்ந்திட
மயங்காமல் நீர் தாரணியில்
மனுவான அன்புக்காய் ஸ்தோத்திரம்

4. அமரர் போற்றும் அழகுள்ளோனே
அரூபியே சொரூபியே ஸ்தோத்திரம்
அளியும் ஆதி அன்பையே
வழியில் விரைந்து செல்லவே

Tamil Hymns

2182. ஸ்தோத்திரம் பாடியே போற்றிடுவேன்

ஸ்தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
ஸ்தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
தேவாதி தேவனை ராஜாதி ராஜனை
வாழ்த்தி வணங்கிடுவேன்

1. அற்புதமான அன்பே - என்னில்
பொற்பரன் பாராட்டும் தூய அன்பே
என்றும் மாறா தேவ அன்பே
என்னுள்ளம் தங்கும் அன்பே

2. ஜோதியாய் வந்த அன்பே - பூவில்
ஜீவன் தந்து என்னை மீட்ட அன்பே
தியாகமான தேவ அன்பே
திவ்ய மதுர அன்பே

3. மாய உலக அன்பை - நம்பி
மாண்ட என்னைக் கண்டழைத்த அன்பே
என்னை வென்ற தேவ அன்பே
என்னில் பொங்கும் பேரன்பே

4. ஆதரவான அன்பே - நிதம்
அன்னை போல் என்னையும் தாங்கும் அன்பே
உன்னதமான தேவ அன்பே
உள்ளம் கவரும் அன்பே

5. வாக்கு மாறாத அன்பே - நித்தம்
வார்த்தைதந் தென்னைத் தேற்றும் அன்பே
சர்வ வல்ல தேவ அன்பே
சந்ததம் ஓங்கும் அன்பே

Tamil Hymns

2183. ஸ்தோதிரம் செய்வேனே இரட்சகனை

ஸ்தோதிரம் செய்வேனே இரட்சகனை
பாத்திரமாக இம்மாத்திரம் கருணை வைத்த
பாத்திரனை யூத கோத்திரனை -என்றும்

1. அன்னை மரிசுதனை
புல்மீது அமிழ்ந்துக் கழுதவனை
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை
முன்னுரை நூற்படி இந்நிலத்துற்றோனை

2. கந்தை பொதிந்தவனை
வானோர்களும் வந்தடி பணிபவனை
மந்தையர்கானந்த மாட்சியளித் தோனை
வான பரன் என்னும் ஞான குருவானை

3. செம்பொன்னுருவானைத்
தேசிகர்கள் தேடும் குரவானை
அம்பரமேவிய உம்பர் கணத்தோடு
அன்பு பெற நின்று பைம்பொன் மலர் துவி

Tamil Hymns

2184. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் இயேசுவுக்கே

1. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் இயேசுவுக்கே
துதி சாற்றிடுவோம் என்றுமே
சேற்றிலிருந்தெம்மை மீட்டெடுத் தென்றும்
ஆற்றியே தேற்றுவதால்

இன்ப இயேசுவின் திவ்விய நாமத்தை
துன்பம் சூழும் எவ்வேளையிலும்
நன்றியோடு நாம் பாடிடுவோம்

2. தண்ணீரைக் கடந்திடும் வேளையிலும் அவர்
நம்மோடு இருப்பேன் என்றார் (2)
அக்கினி சூளையில் நடந்திடும் வேளையில்
விக்கினம் சூழா தென்றார் - இன்ப

3. கஷ்டங்கள் நஷ்டங்கள் சூழ்ந்திடும் வேளையில்
சோர்ந்திடா பெலன் அளிப்பார் (2)
நாளும் நம் குறைகள் யாவையும் கண்டு
நல்குவேன் கிருபை என்றார் - இன்ப

4. திகையாதே கலங்காதே என்றுரைத்தார் அவர்
திக்கற்றோராக விடார்
பயப்படாதே சிறுமந்தை என்றழைத்தார்
பாரில் நம் மேய்ப்பனவர் - இன்ப

5. சிங்கத்தின் குட்டிகள் தாழ்ச்சியடைந்தாலும்
பங்கம் வராது காப்பார்
நம்மையே மீட்க தம்மையே ஈந்து
தரணியில் மாண்டுயிர்த்தார் - இன்ப

6. சீயோனின் ராஜனாய் சீக்கிரம் வந்துமே
சீயோனில் சேர்த்திடுவார்
மன்னவன் இயேசுவை சந்திக்கும் அந்நாளில்
மகிமையின் சாயல் அணிவோம்

Tamil Hymns

2185. ஸ்தோத்தரிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்

1.ஸ்தோத்தரிப்பேன், ஸ்தோத்தரிப்பேன் இயேசு தேவனை
என் ஜீவனுள்ள நாட்களெல்லாம் ஸ்தோத்தரிப்பேனே

2.உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப் பலியை
இயேசுவின் நாமத்தினாலே செலுத்துகிறேன் யான்

3.பாவக்கறை நீங்க என்னை முற்றிலுமாக
உம் சுத்தமுள்ள இரத்தத்திற்குள் தோய்த்ததினாலே

4.என்னுடைய நோய்களை உம் காயங்களாலே
என்றைக்குமாய்த் தீர்த்ததினால் ஸ்தோத்தரிப்பேன் யான்

5.ஆகாயத்துப் பட்சிகளைப் போஷிக்கும் - தேவன்
தினமும் என்னைப் போஷிப்பதால் ஸ்தோத்தரிப்பேன் யான்

6.நாளைத்தினம் ஊன் உடைக்காய் என் சிந்தைகளை
கவலையற்றதாக்கினதால் ஸ்தோத்தரிப்பேன் யான்

7.சீக்கிரமாய் வந்திடுவேன் என்றுரைத்தோனைச்
சீக்கிரமாய்க் காண்பதினால் ஸ்தோத்தரிப்பேன் யான்

Tamil Hymns

2186. ஜகநாதா குருபரநாதா

ஜகநாதா குருபர நாதா திரு
அருள் நாதா ஏசு பிரசாதா நாதா
திகழுறுந் தாதா புகழுறும் பாதா
தீதறும் வேத போதா

1. முற்காலம் ஆதிமைந்தர் மோசப் பிசாசு தந்திர
மொய் கொண்டு கனியுண்ட பழியாலோ
நற்காலம் நீ தெரிந்து, நவின்ற வண்ணம் பரிந்து
நரதேவனாக வந்தாய் மொழியாலோ

2. எளிய கோலம் தரித்தே
இங்கவதிரித்தாலும்,
இமையோர் வந்திறைஞ்சிடத் தெரிந்தாயே
ஒளி செய்யும் பணிமுடி உயர் மன்னர் தொழும்படி
உடு வழி காட்டிடப் புரிந்தாயே

3. அருந் தவன் கையில் தங்கி
அன்பின்பக் கடல் பொங்கி,
ஆலயத்தில் துதிக்க களித்தாயே
வரும் தவ மதியால் முன் மற
மன்னன் தேடிட உன்
மலர் முகங் காட்டாமல் ஒளித்தாயே

4. மக்கள் உளக் களங்கம்
மாசற்றொளி விளங்க
மதுரபரசங்கம் யார்க்கும் உரைத்தாயே
சிக்கடர் துன் மனத்தைத் திருத்தி
அறத்தின் வித்தை - திருத்தயை
கூர்ந் தெவர்க்கும் விதைத்தாயே

5. தனையர் வல் நோயைக் கண்ட
தாயார் மருந்துட் கொண்ட
தகைமை எனப் பேரன்பு கூர்ந்தாயே
வினையர் வெம் பாவக் கேடு விலக
அரிய பாடு மேவி அனுபவிக்க நேர்ந்தாயே

6. அமரர் முற்றும் அறியார்
அடிகள் சற்றும் அறியார்
ஆர் உன் திறல் அறிவார் கர்த்தாவே
எமது பவம் பொறுத்தே

Tamil Hymns

இரக்கம் எம்மேல் உகுத்தே
எமைப் புரந்தாளும் மானப் பர்த்தாவே

Tamil Hymns

2187. ஜாதிகளே எல்லோரும் கர்த்தரை

ஜாதிகளே எல்லோரும் கர்த்தரை
ஏகமாய் துதித்தே போற்றிப்பாடுங்கள்
தேவன் அளித்த நன்மை பெரியதே
கர்த்தரின் உண்மை என்றும் மாறிடாதே

1. இன்றித் தினம் கூடி
உம்மைப் போற்றிப் பாட
ஈந்தளித்தீர் உந்தன் கிருபை
இயேசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்
என்றும் அவர் துதி பாடி மகிழ்வோம்

2. ஜீவன் சுகம் பெலன் யாவும் இயேசு தந்தார்
சேதமின்றி என்னைக் காத்தாரே
ஜீவியப் பாதையில் தேவை தந்து
ஜெயக்கீதம் பாட ஜெயமளிப்பார்

3. பாவ சாப ரோகம் முற்றும் என்னில் நீக்கி
சாவு பயம் யாவும் போக்கினார்
சோதனை வேதனை சூழ்கையில்
சோர்ந்திடாமல் தாங்கி பெலனளிப்பார்

4. எந்தன் பாவம் யாவும் மன்னித்து மறந்தார்
சொந்த பிள்ளைகளாக மாற்றினார்
நாடியே வந்தென்னை ஆதரித்து
வாக்களித்தார் நித்திய ஜீவன் ஈந்திட

5. வானம் பூமியாவும் மாறிப்போகும் ஓர் நாள்
வானவரின் வாக்கு மாறாதே
நீதியின் சூரியன் தோன்றிடும் நாள்
சேர்த்திடுவார் ஆவலாய் காத்திருப்போரை

Tamil Hymns

2188. ஜீவத் தண்ணீர் ஊறும் ஊற்றிலே

ஜீவத் தண்ணீர் ஊறும் ஊற்றிலே
இயேசு நெஞ்சம் உன்னை அழைக்கிறார்
ஜீவ காலம் ஊறும் ஊற்றிலே (2)

1. சமாரியாவின் கிணற்றினருகிலே
இயேசு கண்டார் அந்த ஸ்தீரியையே
தாகம் தீர்க்க தண்ணீர் கேட்டார் (2)
மார்க்கம் இல்லை கிணறும் ஆழம்
தாகம் தீர்க்க என்ன செய்வேன்
மார்க்கம் இல்லை கிணறும் ஆழம்
தாகம் தீர்க்க என்ன செய்வேன்
தாகம் தீர்க்க எங்கு செல்வேன்

2. நான் கொடுக்கும் தண்ணீரல்லவோ
தாகம் தீர்க்கும் ஜீவ தண்ணீராம்
ஜீவ காலம் என்றும் நித்தியம் (2)
நீரூற்றாய் ஊறும் என்றும்
அவனுக்குள்ளே ஊறும் என்றும்

Tamil Hymns

2189. ஜீவ கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்

1. ஜீவ கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்
தேவ குமாரன் மரித்தெழுந்தார்
பாவங்கள் போக்க பாவியை மீட்க
பலியான இயேசு உயிர்த்தெழுந்தார்

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா கிறிஸ்து உயிர்த்தார்
அல்லேலூயா கல்லறைக் காட்சி
அற்புத சாட்சியே -ஆண்டவர்
இயேசு உயிர்த்தெழுந்தார்

2. பாதாளம் யாவும் மேற்கொண்டவர்
வேதாள கூட்டம் நடுங்கிடவே
அன்றதிகாலை மா இருள் வேளை
மன்னாதி மன்னன் உயிர்த்தெழுந்தார்

3. நாம் தொழும் தேவன் உயிருள்ளவர்
நம் கிறிஸ்தேசு பரிசுத்தரே
சாவை ஜெயித்து காட்சி அளித்து
சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்

4. பூரிப்புடன் நாம் பாடிடுவோம்
பூலோக மெங்கும் சாற்றிடுவோம்
என் மன ஜோதி தம் அருள் ஆவி
என் உள்ளம் ஊற்ற உயிர்த்தெழுந்தார்

5. நல் விசுவாசம் தந்திடுவார்
நம்பிடுவோரை எழுப்பிடுவார்
எக்காள சத்தம் கேட்டிட நாமும்
ஏகுவோம் மேலே ஜெயித்தெழுந்தே

Tamil Hymns

2190. ஜீவத்தண்ணீரே ஆவியானவரே

ஜீவத்தண்ணீரே ஆவியானவரே
வற்றாத நதியாக வாரும் போதகரே
வாருமையா போதகரே
வற்றாத ஜீவ நதியாக (2)

1. கணுக்கால் அளவு போதாதையா
முழங்கால் அளவு போதாதையா
நீந்தி நீந்தி மூழ்கணுமே (2)
மிதந்து மிதந்து மகிழணுமே (2)

2. போகும் இடமெல்லாம் ஆரோக்கியமே
பாயும் இடமெல்லாம் பரிசுத்தமே
சேருமிடமெல்லாம் ஆறுதலே
செல்லமிடமெல்லாம் செழிப்புதானே

3. கோடி கோடி மீனவர் கூட்டம்
ஓடி ஓடி வலை வீசணும்
பாடி பாடி மீன் பிடிக்கணும்
பரலோக தேவனுக்கு ஆள் சேர்க்கணும்

4. கரையோர மரங்கள் ஏராளமாய்
கனி தர வேண்டும் தாராளமாய்
இலைகள் எல்லாம் மருந்தாகணும்
கனிகள் எல்லாம் உணவாகணும்

Tamil Hymns

2191. ஜீவ தேவன் வல்லவர் அதிசயம்

ஜீவ தேவன் வல்லவர்
அதிசயம் செய்பவர்
கூடாது மனிதரால்
தேவனால் யாவுமே கூடிடுமே

1. செயலினில் வல்லவர்
யோசனை கர்த்தராம்
கர்த்தர் நாமம் வல்ல தேவன்
அதிசயம் செய்திடுவார்

2. ஓங்கிய புயத்தினால்
ஜனமதை நடத்தினார்
தேவன் நம்மை தம் புயத்தினால்
என்றும் காத்து நடத்திடுவார்

3. மனிதனின் வழிகளை
நோக்கிடும் கர்த்தராம்
நமது செய்கை அறிந்து தேவன்
பலன் தனை அளித்திடுவார்

4. மேகத்தில் தோன்றிடும்
இயேசுவை சந்திக்க
ஆவி ஆத்மா தேகம் காத்து
ஆயத்தமாய் சென்றிடுவோம்

Tamil Hymns

2192. ஜீவ வசனங் கூறுவோம்

ஜீவ வசனங் கூறுவோம்; - சகோதரரே
சேர்ந்தே எக்காளம் ஊதுவோம்
பாவிகள் மேலுருகிப் பாடுபட்டு மரித்த
ஜீவாதி பதி யேசு சிந்தை மகிழ்ந்திடவே

1. பாதகப் பேயின் வலையில், - ஐயோ! திரள்பேர்
பட்டு மடியும் வேளையில்
பேதைமை யோடு பிடிவாத மருள் மிகுந்து
வேதனை தானடையப் போவோர் கதி பெறவே

2. காடுதனில் அலைந்தே, - கிறிஸ்தேசு
கர்த்தன் சேவையில் அமர்ந்தே;
நாடு, நகர், கிராமந் தேடி நாம் பெற்றடைந்த
நல்ல ஈவு வரங்கள் எல்லாருங் கண்டடைய

3. விண்ணின் மகிமை துறந்தார், - கிறிஸ்து நமை
மீட்கக் குருசில் இறந்தார்;
மண்ணின் புகழ், பெருமை எல்லாம் தூசுகுப்பை என்
றெண்ணிச் சிலுவைதனை எடுத்து மகிழ்ச்சியோடு

4. பூலோகம் எங்கும் நமையே, - கிறிஸ்து நாதர்
போகச் சொல்லி விதித்தாரே;
காலமெல்லாம் உம்மோடு கூடயிருப்பேன் என்ற
கர்த்தன் வாக்கை நினைத்து எத்தேசமுந் திரிந்து

Tamil Hymns

2193. ஜீவ நதியே எந்தன் உள்ளத்தில்

ஜீவ நதியே எந்தன் உள்ளத்தில்
பாய்ந்து செல்லட்டுமே

1. மாம்சத்தின் எண்ணங்களெல்லாம்
என்னில் மறைந்து போகட்டுமே-2

2. உலர்ந்த எலும்புகளெல்லாம்
என்னில் உயிர் பெற்று எழும்பட்டுமே

3. பெலவீனப் பகுதியெல்லாம்
என்னில் பெலமாக மாறட்டுமே

4. கனி கொடா மரங்களெல்லாம்
என்னில் கனிகள் கொடுக்கட்டுமே

5. ஆவியின் வரங்களினால்
என்னை அபிஷேகம் செய்திடுமே

Tamil Hymns

2194. ஜீவனின் ஊற்றாமே இயேசு பரன்

1. ஜீவனின் ஊற்றாமே இயேசு பரன்
தீர்த்திடுவார் உந்தன் தாகமதை
பாவங்கள், ரோகங்கள், சாபங்கள், போக்கிட
பரிவாய் அழைக்கிறார்

வல்லவரே இயேசு நல்லவரே
மிக அன்பு மிகுந்தவரே
இயேசு வல்லவரே அவர் நல்லவரே
உனக்காக ஜீவிக்கிறார்

2. ஆரு மற்றவனை நீ அலைந்தே
பாவ உளைதனிலே அமிழ்ந்தே
மாய்ந்திடாது உன்னை தூக்கி எடுத்தவர்
மந்தையில் சேர்த்திடுவார்

3. வியாதியினால் நொந்து வாடுவதேனோ
நேயன் கிறிஸ்து சுமந்ததனை
சிலுவையின் மீதினில் தீர்த்ததாலே - இனி
சுகமடைந்திடுவாய்

4. பரனின் அன்பதை அகமதிலே
சொரிந்து தன திரு ஆலயமாய்
மாற்றியே தம்மைப் போல் தேவசாயலாக்கி
மகிமை சேர்த்திடுவார்

5. வானமும் பூமியும் மாறிப் போயினும்
வாக்கு மாறாதவர் ஓர் வல்ல மீட்பர்
காப்பார் வழுவாது உள்ளங்கையில் வைத்தே
கலங்கிடாதே நீ வா

Tamil Hymns

2195. ஜீவனின் பெலனே

ஜீவனின் பெலனே, ஜீவாதிபதியே
ஜீவனுள்ளோராய் இன்றும் இருக்கின்றீர்
நேற்றும் இன்றும் நாளை என்றும் மாறிடாத தேவனே
அல்லேலூயா ஸ்தோத்திரம் பாடிடுவோம்
அன்பரே உம்மைத் துதித்துடுவேன்

1. நீ என் தாசன் என்று சொன்னீர் என்னால் மறக்கப்படுவதில்லை
பார் இதோ, நான் உந்தன் பக்கம்
என்றும் உன்னுடன் நான் இருக்கிறேன்

2. நீ என் தாசன் என்று சொன்னீர் உன்னிலே நான் மகிமைப்படுவேன்
உன்னை நானே தெரிந்து கொண்டேன்
உனக்கு நானே துணை நிற்பேன்

3. நீ என் தாசன் என்று சொன்னீர் நானே உன்னை உருவாக்கினேன்
உள்ளங்கையில் உன்னை வரைந்தேன்
ஒருவனும் உன்னைப் பறித்திடானே

4. நீ என் தாசன் என்று சொன்னீர் திகையாதே நான் உந்தன் தேவன்
பெலப்படுத்தி சாகயஞ் செய்வேன்
நீதியின் வலது கரத்தால் தாங்குவேன்

Tamil Hymns

2196. ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும்

ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும்
ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும் (2)
நொறுக்கும், உருக்கும், உருவாக்கி நிரப்பும்
ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும்.

Spirit of the living God fall afresh on me (2)
Break me, melt me, mould me and fill me
Spirit of the living God fall afresh on me.

2197. ஜீவனுள்ள தேவனே உம்மைத்

1. ஜீவனுள்ள தேவனே
உம்மைத் தொழுகிறோம் -2
என் வாழ்வில் நீர் செய்த நன்மைகள் - அவை
எண்ணி முடியாதவை -2

உம்மையே ஆராதிப்போம்
உண்மையாய் ஆராதிப்போம்
ஆவியோடும் உண்மையோடும்
என்றென்றும் ஆராதிப்போம்

2. பகலில் மேக ஸ்தம்பமாய்
இரவில் அக்கினி ஸ்தம்பமாய்
பாதுகாத்து நடத்தி வந்தீர்
இனியும் நடத்திடுவீர்

3. உந்தன் வலது கரத்தினால்
என்னையும் தாங்கி நடத்தினீர்
உமது கிருபையை அனுதினமும்
தந்து நடத்திடுவீர்

4. நேசரே உந்தன் நேசத்தால்
என்னையும் இழுத்துக் கொண்டீர்
உம்மை விட்டு விலகிடேன் நான்
உமக்காய் வாழ்ந்திடுவேன்

5. தேவனே உந்தன் வருகைக்காய்
ஆசையாய் காத்து நிற்கிறேன்
என்னை உம்முடன் அழைத்துச் செல்ல
தீவிரம் வந்திடுவீர்

Tamil Hymns

2198. ஜீவனுள்ள தேவனே வாரும்

1. ஜீவனுள்ள தேவனே வாரும்
ஜீவ பாதையிலே நடத்தும்
ஜீவத்தண்ணீர் ஊறும் ஊற்றிலே
ஜீவன் பெற என்னை நடத்தும்

இயேசுவே நீர் பெரியவர்
இயேசுவே நீர் பரிசுத்தர்
இயேசுவே நீர் நல்லவர்
இயேசுவே நீர் வல்லவர்

2. பாவிகள் துரோகிகள் ஐயா
பாவ ஆதாம் மக்களே தூயா
பாதகர் எம் பாவம் போக்கவே
பாதகன் போல் தொங்கினீரல்லோ

3. ஐந்து கண்ட மக்களுக்காக
ஐந்து காயமேற்ற நேசரே
நொந்துருகி வந்த மக்கள் மேல்
நேச ஆவி வீசச் செய்குவீர்

4. வாக்குத்தத்தம் செய்த கர்த்தரே
வாக்கு மாறா உண்மை நாதனே
வாக்கை நம்பி வந்து நிற்கிறோம்
வல்ல ஆவி மாரி ஊற்றுவீர்

5. நியாயத்தீர்ப்பின் நாள் நெருங்குதே
நேசர் வர காலமாகுதே
மாய லோகம் நம்பி மாண்டிடும்
மானிடரை மீட்க மாட்டீரோ

Tamil Hymns

2199. ஜீவனுள்ள நாட்களெல்லாம்

ஜீவனுள்ள நாட்களெல்லாம்
இயேசுவுக்காய் வாழ்வோம்
இருப்பதுவோ ஒரு வாழ்வு
அதை அவருக்கு கொடுத்திடுவோம்

வாழ்ந்திடுவோம் நாம் வாழ்ந்திடுவோம்
இயேசுவுக்காக வாழ்ந்திடுவோம்

1. இயேசுவும் தனக்காய் வாழாமல்
அவர் நமக்காய்த் தானே வாழ்ந்தாரே
உயிரையும் கூட நமக்குத் தந்தாரே
இதற்குப் பதிலாய் என்ன செய்வோமே
நாமும் வாழ்ந்திடுவோம் இயேசுக்காய்

2. ஊழியம் செய்வது பாக்கியமே
அதின் பலனோ இன்று நாம் அறியோமே
கர்த்தர் ஓர்நாள் வந்திடுவாரே
அன்று இதன் பலன் கொண்டு வருவாரே
கண்டு மகிழ்ந்திடுவோம் - துள்ளிடுவோம்

3. யாரோ செய்யட்டும் எனக்கென்ன
நான் நலமாய் இருந்தால் அதுபோதும்
என்றே சுமாய் வாழ்வதினாலே
பின்னால் நீயும் வருந்திடுவாயே
என்றே உணர்ந்தாயோ, இன்றே வா

4. உலகத்தையே சொந்தமாக்கினாலும்
அதினாலே லாபம் ஒன்றுமில்லையே
இயேசுவுக்காய் நீ எதை செய்தாயோ
அதுவே உனக்கு உதவிடும் என்று
ஓயாது உழைத்திடுவோம் இயேசுவுக்காய்

Tamil Hymns

2200. ஜீவனை விட தேவனை நேசிக்கணும்

ஜீவனை விட தேவனை நேசிக்கணும் - இந்த
செல்வத்தை விட கர்த்தரை நேசிக்கணும்
அப்போ சாத்தானை ஓட ஓட தொரத்தலாம்
அவன் சேனைகளை அடியோட அகற்றலாம்

போராடு… தைரியமாய் போராடு…
வெற்றி நிச்சயம் விடுதலை சத்தியம்

ஜீவனை விட தேவனை நேசிக்கிறேன்
இந்த செல்வத்தை விட
கர்த்தரை நேசிக்கிறேன் நான் - அதனால்
சாத்தானை ஓட ஓட தொரத்துவேன்
அவன் சேனைகளை அடியோட அகற்றுவேன்

Tamil Hymns

2201. ஜீவனை பார்க்கிலும் உம் கிருபை

1. ஜீவனை பார்க்கிலும்
உம் கிருபை மேலானதே
இவ்வாழ்க்கையைப் பார்க்கிலும்
உம் கிருபை மேலானதே

கிருபை மேலானதே
கிருபை மேலானதே

2. போக்கிலும் வரத்திலும்
என்னைக் காத்தது கிருபையே
கால்கள் இடறாமல் என்னைக்
காத்தது கிருபையே

3. பெலவீன நேரங்களில்- உம்
கிருபை என் பெலனானதே
சோர்வுற்ற வேளைகளில் - உம்
கிருபை எனை தாங்கிற்றே

4. கஷ்டத்தின் நேரங்களில்- உம்
கிருபை எனைக் காத்ததே
கண்ணீரின் மத்தியிலும்-உம்
கிருபை எனைத் தேற்றுதே

Tamil Hymns

2202. ஜீவன் தந்தீர் உம்மை ஆராதிக்க

1. ஜீவன் தந்தீர் உம்மை ஆராதிக்க
வாழ வைத்தீர் உம்மை ஆராதிக்க
தெரிந்துகொண்டீர் உம்மை ஆராதிக்க
உம்மை எந்நாளும் ஆராதிப்பேன்

ஆராதனை - 3 ஓ..... நித்தியமானவரே
நீரே நிரந்தமானவர்
நீரே கனத்திற்கு பாத்திரர்
நீரே மகிமையுடையவர்
உம்மை என்றும் ஆராதிப்பேன்

2. கிருபை தந்தீர் உம்மை ஆராதிக்க
பெலனை தந்தீர் உம்மை ஆராதிக்க
ஊழியம் தந்தீர் உம்மை ஆராதிக்க
உம்மை எந்நாளும் ஆராதிப்பேன்

3. வரங்கள் தந்தீர் உம்மை ஆராதிக்க
மேன்மை தந்தீர் உம்மை ஆராதிக்க
ஞானம் தந்தீர் உம்மை ஆராதிக்க
உம்மை எந்நாளும் ஆராதிப்பேன்

Tamil Hymns

2203. ஜீவன் பெலன் சுகம் பாரில்

ஜீவன் பெலன் சுகம் பாரில்
நலன் யாவும் வாழ்வில்
ஒளி நீரே வழியும் இனி நீரே

1. தேடினேன் ஓடினேன்
இரட்சிப்பின் நல்நாதா என்றேன் நான்
நாடினேன் வந்திட்டேன்
பாதம் பணிந்தும்மைப் போற்றவே

2. தந்தை போல் மன்னித்து
என்னை ஏற்று அன்பு கொண்டீரே
மந்தையில் சேர்த்திட்டு
சொந்தமாக்கி என்னை மீட்டீரே

3. மனம் போல் நடந்தேன்
துரோகிபோல் நான் உம்மை மறந்தேன்
என்னையா தேடினீர்
பாவியான என்னை போஷித்தார்

Tamil Hymns

2204. ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்

ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்
என்னுள்ளத்தில் அவர் ஜீவிக்கிறார்
துன்பத்தில் என் நல் துணை அவரே
என்றென்றும் ஜீவிக்கிறார்

1. செங்கடல் அவர் சொல்ல இரண்டாய் நின்றது
பெருங்கோட்டை ஒன்று தரைமட்டமானது
அவர் சொல்லக் குருடனின் கண் திறந்தது
அவர் தொடக் குஷ்டரோகி சுத்தமாயினான்

2. உம்மை என்றும் விடாமல் நான் தொடரவே
என்னை என்றும் விடாமல் நீர் பிடிக்கவே
நான் மரிக்கும் நேரத்தில் பரலோகத்தில்
உம் வீட்டைக் காட்டும் நல்ல மேய்ப்பரே

Tamil Hymns

2205. ஜெப ஆவி ஊற்றி ஜெபிக்க செய்யும்

ஜெப ஆவி ஊற்றி ஜெபிக்க செய்யும்
விண்ணப்பத்தின் ஆவி வந்திறங்கட்டும்

ஜெப ஆவி ஊற்றுமே
விண்ணப்பத்தின் ஆவியை ஊற்றிடுமே

1. **இரவுகள் எல்லாம் ஜெப நேரமாய்**
மாறானுமே நாம் ஜெபிக்கணுமே

2. **எதிர்ப்பின் நடுவிலும் தானியேல் போல**
வைராக்கியமாய் நாம் ஜெபிக்கணுமே

3. **உணவை தவிர்த்து உபவாசித்து**
தேசத்திற்காய் நாம் கதறணுமே

Tamil Hymns

2206. ஜெப ஆவி ஊற்றுமையா

ஜெப ஆவி ஊற்றுமையா
ஜெபிக்கணும்… ஜெபிக்கணுமே

1. ஸ்தோத்திர பலி, விண்ணப்ப ஜெபம்
எந்நேரமும் நான் ஏறெடுக்கணும்…

2. உபவாசித்து உடலை ஒறுத்து
ஒவ்வொரு நாளும் ஜெபிக்கணுமே….

3. திறப்பின் வாசலில் நிற்கணுமே
தேசத்திற்காய் கதறனுமே…

4. முழங்கால்கள் முடங்கணுமே
கண்கள் எல்லாம் குளமாகணும் - என்

5. தானியேல் போல மூன்று வேளையும்
தவறாமல் நான் ஜெபிக்கணுமே….

6. உலகை மறந்து சுயம் வெறுத்து
உம் பாதத்தில் கிடக்கணுமே…

Tamil Hymns

2207. ஜெப ஆவி என்னில் ஊற்றும் தேவா

ஜெப ஆவி என்னில் ஊற்றும் தேவா
ஜெப சிந்தை என்னில் தாரும் தேவா

1. அக்கினியாய் நான் எரிய வேண்டும்
அனல் மூட்டிடும்
அழுது புலம்பி ஜெபித்திட
ஜெப ஆவியால் நிரப்புமே

2. உலகம் மாமிசம் பிசாசினால்
அழியும் மாந்தர்க்காய்
திறப்பின் வாசலில் நின்றிட
ஜெப ஆவியால் நிரப்புமே

3. இரத்தமும் வேர்வையும் சிந்தியே
ஜெபித்த நேசரே
வாழ்நாளெல்லாம் உம்மைப் போலவே
ஜெப ஆவியால் நிரப்புமே...

2208. ஜெப சிந்தை எனில் தாரும்

ஜெப சிந்தை எனில் தாரும், தேவா
என்னை அபயமென்றுனக் குக்கை
அளித்தேன் பொற்பாதா

1. உண்மை மனதோ டுன்னைக் கெஞ்ச
உல கெண்ண மெல்லாம்
அகற்றி உரிமையே மிஞ்ச,
தொன்மை ஆயக்காரன் போலஞ்ச - பவ
தோஷமகலத் திருரத்தம் உள்ளிஞ்ச

2. இடைவிடாமல் செய்யும் எண்ணம் - என்
இதயத்தில் உதயமாய் இலங்கிடப் பண்ணும்
சடமுலகப் பேயை வெல்லும் - நற்
சாதக முண்டாகத் தயைசெய் என்னுள்ளம்

3. ஊக்கமுடன் ஜெபம் செய்ய - தகா
நோக்க மெல்லாம் கெட்டு நொறுங்கியே
நய பேய்க்கண மோடுபோர் செய்ய - நல்
ஆக்கம் எனில் தந்து ஏக்கம் தீர்ந்துய்ய

Tamil Hymns

2209. ஜெபத்தின் ஆவலை

1. ஜெபத்தின் ஆவலை
என் நெஞ்சில் அருளும்;
தெய்வாவீ, லோக நேசத்தை
என்னை விட்டகற்றும்.

2. பூலோக சிந்தையை
வெறுத்துத் தள்ளுவேன்;
மேலான நித்திய இன்பத்தை
நான் தேட ஏவுமேன்.

3. எனக்குத் துணையாய்
என் பக்கத்தில் இரும்;
நான் நிலைநிற்கும்படியாய்
கிருபை அளியும்.

4. தெய்வன்பின் பாசத்தால்
கட்டுண்டு, என்றைக்கும்
உம்மை என் முழு மனதால்
பின்பற்றச்செய்திடும்.

Tamil Hymns

2210. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா

1. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்யும்

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்

2. ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்ததைப் பற்றிக்கொண்டு
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்யும்

3. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சைவிட்டு
வாகான தாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடே வேண்டிக் கொள்வோம்

4. இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கிவிடும்
சலிப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசி மட்டும் கத்திருப்போம்

Tamil Hymns

2211. ஜெபமே ஜெயம் ஜெபம் ஜெயம்

ஜெபமே ஜெயம் ஜெபம் ஜெயம்
ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜெபித்திட ஜெபித்திட ஜெயம் வருமே (2)
ஜெயம் ஜெயம் ஜெயம் அல்லேலூயா (2)

1. சத்துரு கோட்டையை தகர்த்திடவே
நம் ஜெபமே போராயுதம்
நித்திய வழியில் வெற்றி சிறந்திட
ஜெபமே போராயுதம்
போராயுதம் போராயுதம் ஜெபமே சர்வாயுதம்

2. அக்கினிச் சூளையில் அழியாமல் காத்தது
அனுதினம் ஜெப ஜீவியம்
ஆண்டவர் சமூகத்தில் வல்லமை பெற்றிட
ஜெபமே போராயுதம்
போராயுதம் போராயுதம் ஜெபமே சர்வாயுதம்

3. அற்புதம் அடையாளம் நடந்திடவே
நம் ஜெபமே போராயுதம்
ஆண்டவர் வருகையில் நாமும் பறந்திட
ஜெபமே போராயுதம்
போராயுதம் போராயுதம் ஜெபமே சர்வாயுதம்

Tamil Hymns

2212. ஜெபமே என் வாழ்வில் செயலாக மாற

ஜெபமே என் வாழ்வில் செயலாக மாற
ஜெப ஆவியால் என்னை நிறைத்திடுமே
ஜெபமின்றியே ஜெயமில்லையே
ஜெப சிந்தை எனில் தாருமே

1. இரவெல்லாம் ஜெபித்த என் தேவனே உம்
இதயத்தின் பாரம் என்னிலும் தாரும்
பொறுமையுடன் காத்திருந்தே
போராடி ஜெபித்திடவே

2. சோதனையணுகா விழிப்புடன் ஜெபிக்க
சோதனையதிலும் சோர்ந்திடா ஜெபிக்க
என் மாம்சத்தின் பெலவீனத்தில்
ஆவியின் பெலன் தாருமே

3. எந்த சமயமும் எல்லா மனிதர்க்கும்
பரிசுத்தவான்கள் பணிகள் பலனுக்கும்
துதி ஸ்தோத்திரம் ஜெபம் வேண்டுதல்
உபவாசம் எனில் தாருமே

4. முழங்காலில் நின்றே முழு மனதுடனே
விசுவாசம் உறுதியில் உண்மையாய் ஜெபிக்க
உம் வருகை நாளதிலே
உம்முடன் சேர்ந்திடவே

Tamil Hymns

2213. ஜெபம் கேட்டீரையா

1. ஜெபம் கேட்டீரையா ஜெயம் தந்தீரையா
தள்ளாட விடவில்லையே
தாங்கியே நடத்தினீரே

புகழ்கின்றேன் பாட்டுப்பாடி
புயல் இன்று ஓய்ந்தது புதுராகம் பிறந்தது
நன்றி அப்பா நல்லவரே
இன்றும் என்றும் வல்லவரே -2

2. கண்ணீரைக் கண்டீரையா
கரம் பிடித்தீரையா
விண்ணப்பம் கேட்டீரையா
விடுதலை தந்தீரையா

3. எபிநேசர் நீர்தானையா
இதுவரை உதவினீரே
எல்ரோயீ நீர்தானையா
என்னையும் கண்டீரையா

4. உறுதியாய் பற்றிக் கொண்டேன்
உம்மையே நம்பி உள்ளேன்
பூரண சமாதானரே
போதுமே உம் சமூகமே

Tamil Hymns

2214. ஜெபம் கேளும் பதில் தாரும்

ஜெபம் கேளும் பதில் தாரும்
அதிசயம் செய்யும் ஐயா

1. நூறு கோடி என் ஜனங்கள்
ஏழு லட்சம் கிராமங்கள்
இயேசுவை காண வேண்டும்

2. உமக்கெதிராய் செயல்படுவோர்
உம் பாதம் வர வேண்டும்
உமக்காய் வாழ வேண்டும்

3. இந்தியாவை பாழாக்கும்
அந்தகார வல்லமைகள்
அகன்று போக வேண்டும்

4. நாடாளும் தலைவர்களை
நாள்தோறும் பாதுகாத்து
ஞானத்தால் நிரப்ப வேண்டும்

5. மரித்துப் போன மனிதரெல்லாம்
உம் குரலைக் கேட்டு இன்று
மறுவாழ்வு பெற வேண்டும்

6. மிஷினரி ஊழியங்கள்
மென்மேலும் பெருக வேண்டும்
உண்மையாய் உழைக்க வேண்டும்

7. சிலைகள் வழிபாடு
செயலற்றுப் போக வேண்டும்
நற்செய்தி பரவ வேண்டும்

8. ஆளும் தலைவர்கள் கூட்டம்
உம் நாமம் சொல்ல வேண்டும்
உமக்கே அஞ்ச வேண்டும்

Tamil Hymns

2215. ஜெபம் செய்திடுவோம் கண்ணீர்

ஜெபம் செய்திடுவோம்
கண்ணீர் சிந்திடுவோம்
தேசத்தின் ஷேமத்திற்காய்
ஜெபிப்போம் ஜெயம் பெறுவோம்

அதிகாலையில்.... இராச்சாமத்தில்....
பகலில்.... இரவில்....
இடைவிடாமல் எப்பொழுதுமே

1. ஜெபத்தினால் சாத்தான் ஓடிப்போவான்
ஜெபத்தினால் எதிர்ப்புகள் மறைகின்றன
ஜெபத்தினால் ஜெபத்தினால்
ஜெபிப்போம் கொடுப்போம்
விரைந்து செயல்படுவோம்

2. பெலத்தின்மேல் பெலன் பெருகிடும்
கிருபையின்மேல் கிருபை பெருகிடும்
ஜெபத்தினால் ஜெபத்தினால்
காத்திருந்து சுதந்தரிப்போம்

3. கங்கை நதியினிலே
மூழ்கிடும் மக்களைப் பார்
புண்ணிய ஷேத்திரங்களில்
கும்பிடும் ஜனங்களைப் பார்
கவலைப்படுவார் யார்?
கண்ணீர் சிந்துவார் யார்?
நம்மில் திறப்பிலே யார், யார் யாரோ?

4. சிதருண்டலைகின்ற இந்துக்கள்
முஸ்லீம்கள் மேய்ப்பனற்றவராய்
ஜைனர்கள் பௌத்தர்கள் ஆயிரம்
பதினாயிரம் லட்சம் கோடி உண்டே
கெத்சமனேக்கு விரைந்து சென்றிடுவோம்
கண்ணீர் சிந்தி கதறி ஜெபித்திடுவோம்

Tamil Hymns

2216. ஜெபிக்கும் வாஞ்சை எனக்குத் தாரும்

ஜெபிக்கும் வாஞ்சை எனக்குத் தாரும் தேவா
விண்ணப்ப ஆவியால் என்னை நிரப்பும் தேவா

1. கருத்துடன் கண்ணீருடன் ஜெபிக்க
கர்த்தரே எனக்கு இன்று கிருபை தாரும்
காலம் நேரம் மறந்து உந்தன்
சமூகத்தில் ஜெபிக்க
கிருபை தாருமே -2

2. பாவத்தில் அழியும் ஜனங்களுக்காய்
திறப்பின் வாசலில் நிற்க கிருபை தாரும்
தலை தண்ணீராய் கண்கள் கண்ணீராய்
பாரத்தோடு ஜெபிக்க
கிருபை தாருமே -2

3. உருக்கமாய் உம்மைப்போல் ஜெபித்திடவே
உன்னதரே உம் ஆவியால் நிரப்பிடுமே
இதயம் நொறுங்கி பெருமூச்சோடு
ஊக்கமாய் ஜெபிக்க
கிருபை தாருமே -2

Tamil Hymns

2217. ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு

ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு
கோடி கோடி ஸ்தோத்திரம்
வாழ்வளிக்கும் இயேசு ராஜாவுக்கு
வாழ் நாளெல்லாம் ஸ்தோத்திரம்

அல்லேலூயா அல்லேலூயா பாடுவேன்
ஆனந்த தொனியால் உயர்த்துவேன்

1. நீதியின் கரத்தினால் தாங்கி நடத்துவார்
கர்த்தரே என் பெலன் எதற்குமே அஞ்சிடேன்

2. அற்புதம் செய்பவர் அகிலம் படைத்தவர்
யுத்தத்தில் வல்லவர் மீட்பர் ஜெயிக்கிறார்

3. நம்பிக்கை தேவனே நன்மை
தருபவர் - வார்த்தையை
அனுப்பியே மகிமைப் படுத்துவார்

4. உண்மை தேவன் உருக்கம் நிறைந்தவர்
என்னை காப்பவர் உறங்குவதில்லையே

Tamil Hymns

2218. ஜெயம் ஜெயம் அல்லேலூயா

ஜெயம் ஜெயம் அல்லேலூயா
ஜெயம் ஜெயம் எப்போதும்
யேசுநாதர் நாமத்திற்கு
ஜெயம் ஜெயம் எப்போதும்.

1. உம்மைப் பின்செல்வேன் என் சுவாமி
எனக்காக நீர் மரித்தீர் எல்லோரும்
ஓடினாலும் உமதன்பால் நானிருப்பேன்

2. பாவி பாவி பாவி பாவி
பரலோகம் சேரவா பிராணநாதர்
பாதத்தண்டை தாவியே ஓடிவா

3. பாவ சஞ்சலத்தை விட
நாளை வரக் காத்திராதே ரட்சகரே
அழைக்கிறார் பாவியே ஓடிவா

4. நானே வழி நானே சத்தியம்
நானே ஜீவன் என்றாரே - நாதன்
கிறிஸ்துவண்டை பாவியே ஓடிவா

Tamil Hymns

2219. ஜெயம் உண்டு என்றும் ஜெயம் உண்டு

ஜெயம் உண்டு என்றும் ஜெயம் உண்டு
இயேசுவின் நாமத்தில் ஜெயம் உண்டு
ஜெயம் உண்டு என்றும் ஜெயம் உண்டு
இயேசுவின் இரத்தத்தால் ஜெயம் உண்டு

அல்லேலுயா என்று ஸ்தோத்தரிப்பேன்
அல்லேலுயா என்று போற்றிடுவேன்
அல்லேலுயா என்று ஆராதிப்பேன்
அல்லேலுயா என்று ஆர்பரிப்பேன்

1. யோசபாத்தின் சேனையின் முன் சென்றவர்
துதியினால் என்றும் ஜெயம் தருவார்
தேவ சமுகம் முன் செல்வதால்
தோல்வி என்றும் நமக்கில்லையே

2. யாவே ஷம்மா நம்மோடிருப்பார்
யாவே எல்ஷடாய் சர்வவல்லவர்
யாவே ரஃப்பா சுகம் தருவார்
யாவே ஜெய்ரா கூட இருப்பார்

3. எரிகோவின் கோட்டைகள் இடிந்துவிழும்
சாத்தானின் தடைகள் தகர்ந்து விழும்
இராஜாதி இராஜா நம் இயேசு
வெற்றியின் பாதையில் நடத்தி செல்வார்

2220. ஜெயம் ஜெயம் ஜெயம் ஜெயம்

ஜெயம் ஜெயம் ஜெயம் ஜெயம் ஜெயம் நமக்கு
இயேசு இருக்கையில் பயம் எதற்கு

1.மலைகள் விலகினாலும் பர்வதங்கள் பெயர்ந்தாலும்
உன்னை விட்டு விலகாதவர்
உடன்படிக்கையின் தேவன்! வல்லமையின் ராஜா!
அவர் சேனைகளின் கர்த்தர்!

2.அக்கினி இறங்கிடும் அந்தகாரம் அழிந்திடும்
ஆவியின் பெலன் கூடும்
பெலத்தினால் அல்ல பராக்கிரமம் அல்ல
தேவனாலே ஆகும் என் தேவனாலே ஆகும்

3.சாத்தானை ஜெயிக்க சாபத்தை அழிக்க
வல்லமை இறங்கிடுதே
சிலுவையில் இரத்தம் சிந்திய இயேசு
எனக்காய் யுத்தம் செய்குவார் அவர்
எனக்காய் யுத்தம் செய்குவார்

2221. ஜெயித்தாரே ஜெயித்தாரே இயேசு

ஜெயித்தாரே ஜெயித்தாரே இயேசு
சாத்தானை ஜெயித்தாரே
ஜெயித்தாரே ஜெயித்தாரே இயேசு
மரணத்தை ஜெயித்தாரே

வானலத்தோர் பூதலத்தோர்
எல்லா முழக்க முழக்கிடுமே
வானலத்தோர் பூதலத்தோர்
எல்லா நாவும் அறிக்கையிடும்

1. நமக்கு எதிராய் எழுதப்பட்ட
கையெழுத்தை குளைத்தாரே
சத்துருவின் கையிலிருந்து
நம்மை விடுதலையாக்கினாரே (2)
கைத்தட்டி பாடிடுவோம்
இயேசு இராஜாதி இராஜாவ
நன்றி சொல்லி பாடிடுவோம்
இயேசு இராஜாதி இராஜாவ

2. எல்லா இடங்களில் நம்மைக் கொண்டு
வெற்றி சிறக்க பண்ணுகிறார்
மரண வாசனை எடுத்துவிட்டு
ஜீவ வாசனை கொடுத்துவிட்டார்

3. ஜீவனுள்ள கல்லாய் மாற்றி
மகிமையின் ஆலயம் கட்டுகிறார்
இந்த கல்லின் மேல் மோதுகிறவன்
நொறுங்கி நொறுங்கி போவானே

4. மரண பயத்தில் இருந்த நம்மை
முற்றிலும் விடுதலையாக்கினாரே
மரணத்தின் கூரை சிலுவையிலே
உடைத்து ஜெயித்து எழுந்தாரே

Tamil Hymns

2222. ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு

1. ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு
விசுவாசக் கண்ணால் காண்கிறோம்
நம்பிதா அழைக்கும்பொழுது
நாமங்கே வசிக்கச் செல்லுவோம்

இன்பராய் ஈற்றிலே - மோட்ச
கரையில் நாம் சந்திப்போம்
இன்பராய் ஈற்றிலே - மோட்ச
கரையில் நாம் சந்திப்போம்

2. அந்தவான் கரையில் நாம் நின்று
விண்ணோர் கீதங்களை பாடுவோம்
துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து
சுத்தரில் ஆறுதல் அடைவோம்

3. நம் பிதாவின் அன்பை நினைத்து
அவரில் மகிழ்ந்து பூரிப்போம்
மீட்பின் நன்மைகளை உணர்ந்து
அவரை வணங்கித் துதிப்போம்

4. அந்த மோட்சகரையடைந்து
வானசேனையுடன் களிப்போம்
நம் தொல்லை யாத்திரை முடித்து
விண் கிரீடத்தை நாம் தரிப்போம்

5. சாவற்றோர் பூரிக்கும் தேசத்தில்
சந்திப்போம் ஆடுவோம் பாடுவோம்
துக்கம் நோவழிந்த ஸ்தலத்தில்
சேமமாய் நாம் இளைப்பாறுவோம்

6. அங்கே நமது ரட்சகர் என்றென்றும்
ஆளுகை செய்து வீற்றிருப்பார்
துக்கம் நோய் சாவுகள் நீங்கிடும்
தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார்

7. என் உற்றார் போய்விட்டார் முன் அங்கே
ஆயினும் நான் மீளவும் சந்திப்பேன்
அவர் கூட்டத்தில் நான் விண்ணிலே
ஒப்பற்ற பேரின்பம் கொள்ளுவேன்

Tamil Hymns

8. ஏழைக்கும் மாளிகை அங்குண்டு
என்று நல் மீட்பர் அழைக்கிறார்
மாந்தர் யாவருக்கும் இடமுண்டு
எல்லோரும் வாருங்கள் என்கிறார்

9. தூதர் சூழ்ந்து நின்று பாடுவோர்
கேட்டு நாம் யாவரும் மகிழ்வோம்
பக்தர் அங்கே முடி சூட்டுவார்
ஓர் முடி அங்குண்டு எனக்கும்

An eBook of Tamil Hymns

TAMIL HYMNS